


# விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயநகரப் பேரரசும்
# கலாசார மறுமலர்ச்சியும்

பதிப்பாசிரியர்கள்
பேராசிரியர் சி. பத்மநாதன்
க. இரகுபரன்
ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும் |
| பதிப்பாசிரியர்கள் | : | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| | | க.இரகுபரன் |
| | | ஸ்ரீ. பிரசாந்தன் |
| முதற் பதிப்பு | : | 2010 |
| வெளியீடு | : | இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| | | 248 1/1. காலி வீதி, கொழும்பு 4. இலங்கை. |
| அச்சு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட். 48B, புளுமெண்டால் வீதி. கொழும்பு 13. |
| பக்கங்கள் | : | XXVIII + 684 + 32 கலர் படங்கள் |
| பிரதிகள் | : | 1000 |
| அளவு | : | 1/8 |
| கடதாசி | : | 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள் |
| விலை | : | 500/= |

ISBN :978-955-9233-17-6

| | | |
|---|---|---|
| Title | : | Vijayanagara Peerarasum Kalasara Marumalarchchiyum |
| Editors | : | Prof. S. Pathmanathan |
| | | K. Raguparan |
| | | Sri. Prasanthan |
| First Edition | : | 2010 |
| Published by | : | Dept. of Hindu Religious & Cultural Affairs |
| | | 248, 1/1, Galle Road, Colombo 4. |
| Printers | : | Unie Arts (Pvt) Ltd., 48B, Bloemendhal Road, Colombo 13, Sri Lanka. |
| | | Tel: +94 11 2330195 |
| No. of Pages | : | XXVIII + 684 + 32 Colour Photos |
| No. of Copies | : | 1000 |
| Size | : | 1/8 |
| Paper Used | : | 80 Gsm White Paper |
| Price | : | 500/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message*

## Hon. M. K. A. D. S. Gunawardana,
**Deputy Minister For Buddhasasana and Religious Affairs**

I have the pleasure in forwarding this message for the publication of the Research articles submitted during the Seminar on ***"The Vijayanagar Empire and the Hindu Cultural Renaissance"*** which was held in the year 2009, conducted by the Department of Hindu Religious and Cultural Affairs.

The Department of Hindu Religious and Cultural Affairs comes under the Ministry of Buddhasasana and Religious Affairs has been conducting Annual Research Seminars for more than a decade with the participation of Sri Lankan and Indian Scholars for four days in Colombo on themes relevant of Hinduism, Hindu Culture and multi culturalism and the scholars are making valuable contributions at this seminar.

The presentations made by these Scholars are revised and edited and published as a book and distributed to schools, libraries and colleges all over the Island. This publication contains the research articles which are very useful to the students and teachers.

As a Deputy Minister for Buddhasasana and Religious Affairs, I congratulate the Director and the members of Staff of this Department for preserving these publications for the use of future generation as well.



**M. K. A. D. S. Gunawardana,**
Deputy Minister for Buddhasasana
& Religious Affairs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message*

## Secretary, Ministry of Buddhasasana & Religious Affairs

I have the pleasure in forwarding this message for the publication of Research Articles submitted during the Seminar held in 2009.

The Research Seminars on various themes were organized annually by the Department of Hindu Religious & Cultural Affairs. Eminent Scholars and Professors from Indian and Sri Lankan Universities were invited to present Research Papers in the Seminar and these Research Papers are compiled and published in the form of books.

I hope that the articles contains in this book of 'The Vijayanagar Empire and The Hindu Cultural Renaissance' will be very useful to the researchers and the students of the universities and colleges.

I wish all success for the efforts and the endeavors carried out by the Department of Hindu Religious and Cultural Affairs of the Ministry of Buddhasasana and Religious Affairs.

**H. P. Cashian Herath**
*Secretary,*
*Ministry of Buddhasasana & Religious Affairs*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 1992 ஆம் ஆண்டுமுதல் வருடாந்தம் நடாத்திவரும் ஆய்வரங்குகளின் வரிசையில் சென்ற ஆண்டு "விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்" என்னும் தலைப்பில் நடாத்திய ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் செம்மைப்படுத்தப்பட்டு நூல்வடிவம் பெறுவதையிட்டு பெருமகிழ்வெய்துகிறேன்.

ஓர் ஆய்வரங்கை வெற்றிகரமாக நடாத்துவது என்பது மிகவும் சிரமமான பணி; அதைவிடச் சிரமமானது அந்த ஆய்வரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளை முறைப்படி வெளியிடுவது. அவ்வகையில் திணைக்களம் தனது ஆய்வுப் பணியில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவது குறித்துப் பெருமை கொள்கின்றேன்.

சென்ற ஆண்டு ஆய்வரங்கு விஜயநகர நாயக்கர்காலம் பற்றியதாக அமைந்தது. அக்காலப்பகுதி இந்து மதத்தைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான காலப்பகுதியாகும். வரலாற்றில் என்றுமில்லாதவாறு இந்து சமயத்திற்கும் இந்தியப் பண்பாட்டுக்கும் பேரபாயம் ஏற்பட்ட சூழ்நிலையில், வர இருந்த அழிவைத் தடுத்து நிறுத்தி இந்து சமயத்தையும் இந்துப் பண்பாட்டையும் புதுவேகம் பெற வைத்த ஒரு இந்து சாம்ராச்சியம் தோற்றம் பெற்ற காலம். அக்காலத்து நிலைமைகள் யாவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆய்வரங்காக குறித்த ஆய்வரங்கு அமைந்தது. அவ்வகையில் சென்ற ஆண்டு கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்திலே தமிழகத்திலிருந்தும் நம் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலிருந்தும் வருகைதந்திருந்த ஆய்வாளர்கள், ஆய்வரங்கிற் சமர்ப்பித்த கட்டுரைகள் பலவும் பலராலும் பாராட்டப்பட்டன. பயன்மிக்க ஆய்வு செய்து சமர்ப்பித்த அந்த அறிஞர்கள் திணைக்களத்தாற் பாராட்டப்பட்ட வேண்டியவர்கள். இக்கட்டுரைகளைத் தாங்கி வரும் இந்நூல் முன்னைய ஆய்வரங்கு கட்டுரைத்தொகுப்பு நூல்கள் எத்தகைய வரவேற்பினை பல்கலைக்கழக அறிஞர்கள், மாணவர்களிடையே பெற்றிருந்தனவோ இதே போன்ற வரவேற்பினைப் பெற்றுக்கொள்ளும் என்பது எமது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்டுரைகளை உரிய முறையிலே செம்மைப்படுத்தி வெளியிடும் பணியிலே எங்கள் பெருமதிப்புக்குரிய பேராசிரியர் சி. பத்மநாதன் உள்ளிட்ட பதிப்பாசிரியர்களும், திருமதி. தேவகுமாரி உள்ளிட்ட எமது திணைக்கள உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்புணர்வோடு ஈடுபட்டார்கள். இந்நூலின் பிரதி ஒப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட சைவப்புலவர் சு. செல்லத்துரை, வித்துவான் கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோருக்கும், இந்நூலின் பதிப்புப் பணியில் ஈடுபட்ட யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. பொன். விமலேந்திரன் மற்றும் அவர் தம் ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
248 1/1, காலி வீதி,
கொழும்பு - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

## I

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பல வருடங்களாக இந்து சமயம், இந்து நாகரிகம், தமிழிலக்கியம், தமிழர் பண்பாடு என்னும் விடயங்கள் தொடர்பாக வருடாந்த மாநாடுகளை நடத்திவருகின்றது. இத்திணைக்களம் ஒரு சர்வதேச மட்டத்திலான ஆய்வு நிறுவனமாகவும் இயங்க வேண்டும் என்பது இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பாக முதன்முதலாக நியமிக்கப்பட்ட அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களின் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தை ஓரளவுக்கேனும் நிறைவேற்றக் கூடிய வகையில் இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, இடைவிடாது ஆண்டு தோறும் ஆய்வு பூர்வமான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றமை ஒரு பெருமைக்குரிய சாதனையாகும். அக்காலத்திற் பெரும்பகுதி போர்க்காலம். வீதித் தடைகளும் பிரயாணத் தடைகளும் ஏற்பட்டிருந்த காலம், பிரயாணங்களில் எறிகணை வீச்சுகளிலும் குண்டுவீச்சுகளிலுமிருந்து எவ்வாறு தப்பிக்கொள்ளலாம் என்று பொதுவாகப் பலரும் அஞ்சிய காலம். நாட்டின் வட பகுதியிலிருந்து கொழும்புக்கு வருவதற்குப் புகையிரத சேவை இருக்கவில்லை, ஆனையிறவின் மூலமான வாகனப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுவிட்டது. இக்காலப் பகுதியில் விமானம் மூலமே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரலாம். விமானம் மூலமான பிரயாணத்திற்கான கட்டணமோ மிகப் பெருந்தொகை. இங்கிருந்து சென்னைக்குப் போவதற்குரிய கட்டணத்திற்குச் சமமானது. பிரயாணஞ் செய்வதற்கும் அங்கிருந்து அனுமதிச் சீட்டுப் பெறவேண்டும். அதற்குரிய நிபந்தனைகளும் கடினமானவை. மனிதாபிமானம் எல்லாம் மறைந்துபோய்விட்ட, அவலங்கள் நிரம்பிய ஒரு காலத்திலும் பெருமளவிலான பல்கலைக்கழக ஆசிரியர்கள் இவ்வாய்வரங்குகளிலே பங்குபற்றினார்கள். அவர்களுடைய ஆர்வமும் துணிவும் அசாதாரணமானவை. அரசியல் காரணமான தடைகளும் போக்குவரத்துத் தடைகளும் நீங்கிவிட்ட காலத்தில் அந்த ஆர்வத்திலும் துணிவிலும் ஒரு தொய்வு ஏற்பட்டுள்ளதுபோலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுகின்றது. அது ஆய்வாளர்கள் பணி புரிகின்ற களநிலையோடு தொடர்புடையது என்ற சிந்தனையும் ஏற்படுகின்றது. அவ்வாறான பிரச்சினைகளுக்கு ஆய்வாளர் அடங்கிய உயர்கல்வியாளர் சமூகமே பரிகாரந் தேடவேண்டும். ஆய்வாளரின் ஆர்வமும் ஒத்துழைப்பும் கிடைக்கின்றமையால் இந்த ஆய்வரங்குகள் சிறப்பாக நடைபெறுகின்றன. அவர்கள் எல்லோரும் பயன் பெற வேண்டும், முன்னேற்றம் காண வேண்டும்; அவர்களோடு பல்கலைக்கழக மாணவரும் அவற்றாற் பயன் பெற வேண்டும் என்ற பொது நோக்கத்திற்காகத் தான் இந்த ஆய்வரங்குகள் நடைபெறுகின்றன. எல்லா வேறுபாடுகளையும் கடந்த நிலையில் உயர் கல்வியாளரிடையிலே தங்கள் அறிவினையும் ஆய்வுகளின் மூலமாகக் கிடைக்கின்ற அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதே இவற்றின் நோக்கமாகும்.

ஆய்வரங்குகளிலே ஈழ நாட்டுப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களிற் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பலர் பங்கு கொள்வது வழமை. அத்துடன் இந்தியாவிலிருந்தும் குறிப்பாக தமிழ் நாட்டிலிருந்தும் பல அறிஞர்கள் இவ்வாய்வரங்குகளிற் பங்குபற்றி அவற்றைச் சிறப்பிக்கின்றார்கள். அவர்களிற் பலர் பிரசித்தமானவர்கள்; இந்தியாவில் முதன்மையான அறிஞராகவும் ஆய்வாளராகவும் பாராட்டுப் பெற்றவர்கள். அவர்கள் ஆய்வு நூல்கள் பலவற்றின் ஆசிரியர்கள்; பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றவர்கள். கள ஆய்வுகள் பலவற்றை நடத்தியவர்கள். வாசிப்பதற்கு கடினமான பல ஆவணங்களைப் படித்து, அவற்றின் வாசகங்களை வெளியிட்டவர்கள்; தொல்லியல், சாசனவியல், தமிழிலக்கியம், வரலாறு, கட்டட, சிற்ப, ஓவியக்கலைகள், பக்தி இலக்கியம் வைணவ இலக்கியம், எனப் பல துறைகளிற் புலமை கொண்டவர்கள். அவர்களிற் பலர் எமது நண்பர்கள்; எம்மீது அனுதாபம் கொண்டவர்கள். கொழும்பு நகரிலும் குண்டு வெடிப்புகளும்கொலைகளும் இடம்பெற்ற காலங்களிலும் உறவினரினதும் நண்பர்களினதும் எச்சரிக்கைகளை உதாசீனம் பண்ணிவிட்டு எம்மவர் மீது கொண்ட உறுதியான பாசத்தினால், இங்கு வந்து எம்மோடு இணைந்து, எமக்குப் பக்கபலமாக இருந்தவர்கள். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்கு வாழும் மக்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வமிருந்தும் அங்குள்ள சூழ்நிலையால் அங்கெல்லாம் போக முடியாது அவர்களிற் பலர் மிகுந்த விரக்தியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்புவதுண்டு. திணைக்கழகத்தாரின் அழைப்பினை ஏற்று ஆய்வரங்குகளிலே பங்குகொள்ளும் இந்திய அறிஞர்களின் பங்கு ஆய்வரங்குகள் சிறப்புற்றமைக்குப் பெருமளவிற்கு ஆதாரமாகவிருந்தது. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடாந்தோறும் நடத்துகின்ற ஆய்வரங்குகள் பன்னாட்டு ஆய்வரங்குகள் என்ற பரிமாணத்தைப் பெறுவதற்கும் ஏதுவாயிருந்தது.

முன்னாட்களில் ஆலய விழாக்களிலும் உற்சவங்களிலும் அரசாங்கத் தரப்பினர் சார்பிலே தைப்பொங்கல், புதுவருடம், நவராத்திரி என்பன தொடர்பான விடயங்களிலே காலத்தைக் கழித்த இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் காலப்போக்கில் உயர்கல்வி வளர்ச்சியிலும் ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபடுகின்ற ஒரு முதன்மை நிறுவனமாக வளர்ச்சி பெற்றுள்ளது. ஈழத்து இந்துப் பண்பாட்டு பாரம்பரியம் தொடர்பான பல நூல்களை அது வெளியிடுகின்றது. இந்து சமயம், இந்து நாகரிகம் தொடர்பாகப் பல ஆய்வரங்குகளையும் வேறு சில பணிகளையும் நடத்தி வருகின்றது. இந்து நாகரிகத்தைக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் படிக்கும் மாணவர்களுக்கு வேண்டிய நூல்கள் இல்லையென்ற பெருங்குறை முன்னொரு காலத்தில் இருந்தது. அந்தக் குறையினைப் போக்குமளவிற்கு இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. அரசாங்கத்தினால் வழங்கப்படும் சொற்பமான மானியங்களை ஆதாரமாகக் கொண்டு இந்து சமயம், நாகரிகம் என்பன தொடர்பான உயர்கல்வி பற்றிய பல பணிகளை இத்திணைக்களம் நிறைவேற்றி வருகின்றது. இதனால் அதற்கு அரசாங்கத் துறையினரிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் பாராட்டுகள் கிடைத்துள்ளன. அண்மைக் காலங்களிலே பல்கலைக்கழக மாணவர்களின் பாராட்டுகளைப் பெறுமளவிற்கு அதன் புகழ் மோலோங்கி வருகின்றது. திணைக்களத்தின் பணிப்பாளரின் அணுகுமுறையும் அவரின் ஊக்கமும் பலரையுங் கவர்ந்துள்ளது. அத்திணைக்களத்திலே பணிபுரிகின்ற அலுவலர்கள் சகலரும் கல்விசார் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் உணர்ச்சி பூர்வமாகவும் மிகுந்த ஆர்வத்தோடும் செயற்படுவது இங்கு குறிப்பிடற்குரியது. அத்தகைய உணர்ச்சிபூர்வமான சேவைகளே இத்திணைக்களம் அண்மைக் காலங்களில் வலுப்பெற்று, ஒரு முன்னுதாரணமாகத் திகழ்வதற்கு ஆதாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த ஆய்வரங்குகள் தொடங்கும் பொழுது சிறப்பு மலர்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றில் வெளிவருங் கட்டுரைகள் அனைத்தும் வித்துவபூர்மானவை. வருடாந்த ஆய்வாரங்குகளிற் சமர்ப்பிக்கப்படும். கட்டுரைகள் பின்பு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன. அதனால் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு இந்நாட்களிலே கணிசமான அளவு தரமான நூல்கள் தமிழிற் கிடைக்கின்றன. அவற்றை மாணவரும் பிறரும் ஆர்வத்தோடு படிக்கின்றார்கள். தமிழ் மொழி தமிழர் சமுதாயம் பற்றிய பல விடயங்களும் இவற்றிலே விளக்கப்படுகின்றன.

II

சென்ற வருடம் செப்றெம்பர் மாதம் மூன்றாம் திகதி முதல் நான்கு நாட்கள் நடைபெற்ற ஆய்வரங்கு விஜய நகர – நாயக்கர் காலம் பற்றியது. அந்தக் காலம் 14ஆம் நூற்றாண்டு முதல் 450 ஆண்டுகளை உள்ளடக்கிய நெடுங்காலப் பகுதி. அக்காலம் கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றில் அரசியல், சமுதாய நிலை, பொருளாதாரம், சமய பண்பாட்டு நெறிகள் ஆகிய துறைகளிற் பெரு வளர்ச்சிகளும் மாற்றங்களும் ஏற்பட்ட காலம். அக்காலம் விஜயநகரப் பேரரசர் காலம், நாயக்கர் காலம் என இரு பகுதிகளைக் கொண்டது. விஜயநகரம் கி. பி. 1365 ஒரு சுதந்திர இராச்சியமாக உருவாக்கப்பட்டது. கர்நாடகத்திலும் ஆந்திர தேசத்திலும் தில்லி சுல்தானியத்திற்கு எதிராக நடைபெற்ற கிளர்ச்சிகளின் பயனாக விஜயநகரம் உருவாகியது. மூன்றாம் வல்லானதேவனின் மரணத்தின்பின் சீர்குலைந்த, கர்நாடகத்திலுள்ள ஹோய்சள இராச்சியத்தை விஜயநகர மன்னர் கைப்பற்றிவிட்டனர். இரண்டாவது அரசனாகிய புக்கராயரின் குமாரனாகிய கம்பணன் தெற்குநோக்கிப் படையெடுத்துச் சென்று கி. பி. 1365ஆம் ஆண்டளவிலே தொண்டை மண்டலத்தையும் பின்பு பாண்டி நாட்டையும் கைப்பற்றினான். அவனது சாதனைகளைக் கம்பராய சரிதம் என்னும் காவிய நூல் இலக்கிய நயத்துடன் வர்ணிக்கின்றது. அது அவனது தேவியான கங்காதேவியினாற் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. மதுரை சுல்தானின் கொடுமையான ஆட்சியில் அல்லற்பட்ட தென்னாட்டு இந்துக்களை விடுதலை செய்த பெருவீரனாகக் குமாரகம்பணனை அந்நூல் போற்றுகின்றது. அவன் சில காலம் மதுரையில் இராசப்பிரதிநிதியாக நியமனம் பெற்று ஆட்சி புரிந்தான். குமாரகம்பணன் காலம் முதலாக விஜயநகர அரசரின் சாசனங்கள் தமிழ்நாட்டிற் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவிலே தோன்றி, நிலைபெற்ற இராச்சியங்களில் விஜயநகர இராச்சியம் அளவிலே பெரியது. முன்னே குறிப்பிட்டவாறு அது கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பேரரசாகும். அதன் இராசதானி விஜயநகரத்தில் அமைந்திருந்தமையால் இராச்சியமும் அதன் பெயரால் விளங்கியது. வித்யாரண்ய மகரிஷியின் ஆலோசனைப்படி விஜயநகரம் அரண்செய்யப்பட்டு இராசதானியாக அமைக்கப்பட்டது. இந்திய துணைக் கண்டத்திலே விந்தியமலைக்குத் தென்பால் அமைந்த நகரகங்களில் விஜயநகரமே மிகப் பெரியது; சாலவுஞ் சிறந்தது. விஜயநகரத்திற்குச் சென்று, அதனை நேரிலே பார்த்து அவதானித்த இத்தாலியர், போர்த்துக்கேயர், அராபியர் முதலான வெளிநாட்டவர்கள் அதன் சிறப்புகளை வியந்து பாராட்டியுள்ளனர். கீழைத்தேய உரோமாபுரி என்று அதனை ஐரோப்பியர் சிலர் வர்ணித்துள்ளதை விஜயநகரத்திலும் அதன் புறநகர்பகுதிகளிலும் அரண்மனைகள், அரண்கள், மாளிகைகள், ஆலயங்கள், அங்காடித்தெருக்கள் என்பன வனப்பு மிகுந்த கோலத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தன. நீர்பாசனவசதிகளை ஏற்படுத்துவதற்கும் கோட்டைகளை பலமுடையனவாக நிர்மாணிப்பதற்கும் விஜயநகரராயர்கள் போர்த்துக்கேய பொறியியலாளரின் உதவிகளைப் பெற்றனர். இந்திய மன்னரில் விஜயநகர ராயர்களே முதன்முதலாக ஐரோப்பியருடன் நிலையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியவர்கள். அந்த உறவுகள் வர்த்தக நலன்களையும் பாதுகாப்புத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. அவர்களின் ஆட்சிக் காலத்திலே தென்னிந்தியாவில் உற்பத்தியான பொருட்களிற் கணிசமான பகுதி ஐரோப்பிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகியது.

விஜயநகர மன்னர்கள் ஏற்படுத்திய நிர்வாகப் பிரிவுகளும் அவற்றின் நிர்வாக முறையும் முன்னைய காலங்களில் இருந்தனவற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. நிர்வாகத்தின் பொருட்டு தங்கள் பேரரசை **இராஜ்யம்** என்னும் பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். முள்வாயி இராஜ்யம், படைவீடு ராஜ்யம், ராஜகம்பீர ராஜ்யம் முதலியன அப்பிரிவுகளாகும். அவற்றை நிர்வாகம் செய்வதற்கு இராச குமாரர்களையும் வேறு பிரதானிகளையும் அரசர்கள் நியமித்தனர். தமிழகத்தின் சில பகுதிகளில் உசாவடி என்னும் பெரும் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. அவை ராஜ்யங்களுக்கு நிகரானவை, கர்நாடகத்தில் இராஜ்யங்கள் நாடு, ஸ்தல, சீமை என்னும் பிரிவுகளைக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலே இராஜ்யம் அல்லது உசாவடி என்னும் பெரும் பிரிவுகளின் பகுதிகள் முற்கால வழமைப்படியே மண்டலம், வழநாடு, நாடு, ஊர் என்பவற்றைக் குறிப்பிட்டு வர்ணிக்கப்பட்டன. விஜயநகர ஆட்சிக்காலத்தில் நகரம், பிரம்மதேயம், ஊர் ஆகியவற்றின் மரபுவழியான ஆட்சி முறைகள் சீர்குலைந்தன. பிரதானமான நிர்வாகப் பதவிகளைப் பெரும்பாலும் கன்னடருக்கும், தெலுங்கருக்கும், ராயர்கள் வழங்கினார்கள். தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்கு ராயர்கள் பொழிகர்களைப் பெருமளவிலே நியமித்தார்கள். அதனால் மரபு வழியான படையமைப்புச் சீர்குலைந்தது. வன்னியர், செங்குத்தர் முதலானோர் வேறு தொழில்களை நாடிச் சென்றனர்.

இக்காலத்திலே தமிழகத்துச் சமுதாய அமைப்பிலே மாற்றங்கள் ஏற்பட்டன. கர்நாடகம், தெலுங்கு தேசம் ஆகியவற்றிருந்து பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கணிசமான அளவிலே தமிழகத்திற்குச் சென்று அங்கு குடிகளாகிவிட்டனர். நெசவாளர், பிராமணர், வணிகர், கம்மாளர் என்போர் அவர்களிற் பிரதானமானவர்கள். கரையோரப் பட்டினங்களில் இஸ்லாமிய வணிகரின் செல்வாக்கு மேலோங்கியது. பொருளாதார நிலைகளிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழகத்திலிருந்து கூடுதலான பொருட்கள் பிற தேசங்களுக்கு ஏற்றுமதியாகின. ஏற்றுமதிப் பொருட்களில் குடிசைக் கைத்தொழில் மூலம் உற்பத்தியான பொருட்கள் முதலிடம் பெற்றன. புடவைகளின் உற்பத்தி முன்னைய காலங்களைக் காட்டிலும் அதிகமான வளர்ச்சியினை அடைந்தது. ஐரோப்பிய தேசங்களுக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பருத்தித் துணிகள் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. தானியங்கள் இலங்கை, சாவகம் போன்றவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டாலும் காலகாலம் பற்றாக்குறை ஏற்பட்டது. சனப்பெருக்கமும் நீர்பாசனத்திலே போதியளவு கவனஞ் செலுத்தப்படாதமையும் அதற்கான காரணங்கள் போலத் தோன்றும். இது ஆய்விற்குரிய விடயமாகும்.

இலங்கையின் வடபகுதியிலிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது விஜயநகர அரசர்கள் சில சமயங்களிலே தமது மேலாதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். பதினான்காம் நூற்றாண்டின் நான்காவது சகாப்தத்திலே, தமிழகத்தின் ஒரு பகுதியில் இராசப்பிரதிநிதியாக விளங்கிய லக்கண்ண தண்ணாயக்கன் யாழ்ப்பாண பட்டினம், ஈழம் ஆகியவற்றின் மீது படையெடுத்துச் சென்றானென்று திருமாணிக்குழி சாசனம் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயநகர ராயர்கள் சிலரைப் பற்றிய சாசனக் குறிப்புக்கள் சிலவற்றில் *ஈழம் திறைகொண்ட* என்னும் அடைமொழி காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியது. விஜயநகர ராயர்கள் வெளியிட்டவராகன் என்னும் காசு நெடுங்காலமாக யாழ்ப்பாணத்திலே புழக்கத்திலிருந்தது.

தென்னிந்தியாவில் நிலைபெற்ற இந்து சமுதாயத்தையும் அவர்களின் வழிபாட்டு முறைகளையும் சமய நிறுவனங்களையும் சின்னங்களையும் பேரழிவிலிருந்து பாதுகாத்தமையே விஜயநகரப் பேரரசின் சாதனையாகும். வட இந்தியாவிலும் தக்கணத்தின் பல பகுதிகளிலும் துருக்கியரின் ஆதிக்கப்படர்ச்சியால் இந்து சமுதாயத்திற்கு ஏற்பட்ட கேடுகளை நோக்குமிடத்து இது புலனாகும். அங்கு உருவாக்கப்பட்டிருந்த வனப்பு மிகுந்த பல்லாயிரக்கணக்கான வைச, வைணவக் கோயில்களும் சமண பஸ்திகளும் இடிபாடுகளாகி விட்டன. விஜயநகர ராயர்களின் ஆட்சியின் கீழமைந்த கர்நாடகப் பகுதிகள், தமிழகம் ஆகியவற்றிலும் கலிங்கதேசமான ஒறிஸ்ஸாவிலும் மட்டுமே இந்திய நாகரிகத்தின் உன்னதமான அம்சங்களைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுச் சின்னங்கள் அழிவுறாது பாதுகாக்கப்பட்டுள்ளன.

விஜயநகர காலத்து இலக்கிய வளர்ச்சிகளையும் பண்பாட்டு அபிவிருத்திகளையும் பழமையிற் புதுமை என்ற அடைமொழி கொண்டு வர்ணிப்பது ஒரு வகையிற் பொருத்தமாகும். இந்து சமயத்தையும் அதற்கு ஆதாரமான இலக்கியங்களையும் ஆலயங்களையும் வைதீக மரபுகளையும் பேணுவது விஜயநகர காலத்து அரசரின் நோக்கமாகும். வேதம், புராணம், இதிகாசம் என்பன தொடர்பான கல்வியிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. வேதங்களிலும் இதிகாசங்களிலும் புலமை பெற்ற வித்தியாவிருத்தர்கள் பலர் இக்காலத்திலே தோன்றினர். வேதங்களுக்கு உரை எழுதிய சாயனுரும் மாதவரும் **சர்வசமயசங்கிரகம்** என்னும் நூலை எழுதிய மாதவாச்சாரியாரும் அவர்களிலே முதன்மையானவர்கள். துவைத வேதாந்தத்தின் போதகாசிரியரான மாத்வ ஆச்சாரியாரும் இக்காலத்தவர் என்பது குறிப்பிடற்குரியது. சமஸ்கிருத மொழியின் செல்வாக்கு முற்காலங்களிற் போலத் தென்னிந்தியாவிலே சிறப்புற்றிருந்தது. விஜயநகர மன்னர்கள் வழங்கிய சாசனங்கள் சில சமஸ்கிருத மொழியில் அமைந்தவை. தான சாசனங்கள் பலவற்றின் முடிவிலே சமஸ்கிருத சுலோகங்களை எழுதும் வழமை ஏற்பட்டது. சக வருடத்து ஆண்டினைக் குறித்துக் காலநேரம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களைப் பதிவு செய்யும் முறை வழமையாகியது. தென்னிந்தியச் செல்வாக்கினால் இலங்கையிலும் இந்த வழக்கம் ஏற்பட்டது. சமஸ்கிருதக் கலப்பினால் மணிப்பிரவாள நடையொன்று உருவாகியது. உரைநடையில் மட்டுமன்றிச் செய்யுள் இலக்கியத்திலும் அதனைக் காணமுடிகின்றது. அருணகிரிநாதரின் பாடல்கள் சில அதற்குச் சிறந்த உதாரணமாகும்.

விஜயநகர காலத்திலே கன்னடம் தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும் மிகுந்தளவில் இலக்கியங்கள் தோன்றின. விஜயநகர ராயர்கள் பாரபட்சமின்றித் தென்னிந்தியப் புலவர்களுக்கும் அறிஞருக்கும் ஆதரவு புரிந்தனர். இக்காலம் தெலுங்கு மொழி இலக்கியத்தின் பொற்காலமென்று போற்றப்படுகின்றது. அது தலைசிறந்த தெலுங்குப் புலவர்கள் வாழ்ந்த காலம். சமஸ்கிருத மொழியில் அமைந்த இதிகாச புராண நூல்களை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய மொழிகளிற் பல பேரிலக்கியங்கள் உருவாக்கப்பட்டன.

மகாபாரதம், இராமாயணம் என்பனவற்றின் செல்வாக்கு இக்காலத்திலே தென்னிந்திய மக்களிடையே மேலோங்கிவிட்டது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு கன்னடத்திலும் தெலுங்கிலும் புதிய நூல்கள் எழுதப்பட்டமை குறிப்பிடற்குரியது. வில்லிபுத்தூராழ்வாரின் பாரதம் தமிழர் அபிமானத்தோடு கற்கும் நூல்களில் ஒன்றாகியது.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே விஜயநகர நாயக்கர் காலம் மிகவும் முக்கியமான காலப்பகுதி தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களில் மிகக் கூடுதலானவை இக்காலத்திற்குரியவை. தமிழ் மொழியிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் மிகப் பெரும்பாலானவை இக்காலத்தவை. அவற்றிலே, குறவஞ்சி, அம்மானை, பிள்ளைத் தமிழ், பள்ளு என்பவை மிகவும் கவர்ச்சியானவை. திருத்தலங்கள் சமயவாழ்க்கையிலே சிறப்புப்பெற்ற ஒரு காலத்திலே அவற்றைப் பற்றிய தலபுராணங்கள் தோன்றுவது இயல்பானது. கடவுள் மாமுனிவர் முதலாகத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை வரையான பெரும்புலவர் பலர் அவற்றின் ஆசிரியர்கள். தலபுராணங்கள் மகாபுராணங்களின் மரபுகளையும் தேவார முதலிகளின் திருப்பதிகங்களினாற் சிறப்புப் பெற்ற திருத்தலங்கள் பற்றிய ஐதீகங்களையும் இணைத்துச் சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்புடையவை. தலங்களின் சுற்றாடல், இயற்கை வளம், சமூக வாழ்க்கை ஆகியன பற்றி நயம்பட வர்ணிக்கும் சிறப்பும் அவற்றிலுண்டு. திருச்செந்தூர்ப் புராணம், திருத்தணிகைப் புராணம் போன்றவை முருக வழிபாட்டுத் தலங்கள் பற்றியவை.

விஜயநகர – நாயக்கர் காலம் மடங்களும் ஆதினங்களும் பெருவளர்ச்சி பெற்ற காலம். திருவாவடுதுறை, தருமபுரம், மதுரை முதலிய ஆதினங்கள் இக்காலத்திலே தோன்றி வளர்ச்சி பெற்றன. விஜய நகர நாயக்கர்களும் நாயக்க மன்னரும் அவற்றுக்கு நிலமானியங்களைக் கொடுத்தும் சிறப்புரிமைகளை வழங்கியும் ஆதரவு புரிந்தனர். ஆதினங்களின் சமயப்பணியும் தமிழ்ப்பணியும் மகத்தானவை. ஏட்டுச்சுவடிகளை பெருமளவிலே தேடிப்பெற்று அவற்றை நூலகங்களிலே வைத்துப் பாதுகாத்தன. முறையான தமிழ்க் கல்வியினைப் பெற வேண்டுமானால் ஆதினங்களுக்குப் போகவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. சைவ சமயம், சைவ சித்தாந்தம் என்பன பற்றிய வித்துவ மரபினைப் பேணி வளர்த்தமையில் ஆதினங்களின் பங்கு அளப்பரியது. சிவப்பிரகாசர், தத்துவராயர், சிவஞான முனிவர் போன்ற மகா வித்துவான்கள் ஆதினங்களின் ஆதரவைப் பெற்றவர்கள். புலவர்கள், உரையாசிரியர்கள், இலக்கண வித்தகர் எனப் பலதுறை சார்ந்த அறிஞர்களை ஆதினங்கள் உருவாக்கியுள்ளன. இக்கால இலக்கிய வளர்ச்சியில் ஆதினங்களின் பங்கு முதன்மையானது.

உரையாசிரியர்களாகவும் தலைசிறந்த தமிழறிஞர்களாகவும் விளங்கிய சேனாவரையர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகியோர் இக்காலத்தவராவர்.

தென்னிந்திய சமய நிலைகளிலே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எற்பட்டன. சைவமும் வைணவமும் முன்புபோல முதன்மைச் சமயங்களாக விளங்கின. அவற்றிடையே சில புதிய வழிபாட்டு மரபுகள் செல்வாக்குப் பெற்றன. கர்நாடகத்தில் நரசிங்கர் வழிபாடும் மகாராஷ்டிரத்திலிருந்து பரவிய விட்டலர் வழிபாடும் பெருஞ்செல்வாக்குப் பெற்றன. சைவர்களிடையே வீரபத்திரர் வழிபாடு வழமையாகியது. கர்நாடகத்திலும் தமிழகத்திலும் வைதீக, ஆகம நெறிகளைச் சாராத நாட்டார் வழிபாட்டு முறைகளும் முனைப்புப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ, வைணவ சமயங்களில் உற்சவங்கள் முக்கியத்துவம் பெற்றமை இக்காலத்துக்குரிய ஒரு சிறப்பம்சமாகும். ஆலயங்களிலே திருக்கல்யாணம் ஒரு முக்கிய அம்சமாகியது. அதனாற் பெருங்கோயில்களிலே கல்யாண மண்டபங்களை அமைத்தனர். இக்காலத்துத் தான சாசனங்கள் சிறப்புகள் தொடர்பான நன்கொடைகளைப் பதிவு செய்கின்றமை குறிப்பிடற்குரியது.

விஜய நகர காலத்திலே முருக வழிபாடு மறுமலர்ச்சியுற்றது. அதனாற் சைவசமயம் புதுப்பொலிவினைப் பெற்றது. சாதி பேதங் கடந்த நிலையிலே தமிழர் சமுதாயம் முருகப் பெருமானை அபிமானத்திற்குரிய தெய்வமாகப் போற்றியது. புராதனமான பாடல்பெற்ற தலங்கள் பலவற்றிலே குமாரகோட்டம் புதிய பொலிவினைப் பெற்றது. அவற்றிலே முருக வழிபாடு தொடர்பான விழாக்களும் சடங்குகளும் சிறப்புப் பெற்றன. அருணகிரிநாதரின் பக்திப் பாடல்கள் சைவர்களைப் பெரிதுங் கவர்ந்தன. அவர் இரண்டாம் தேவராயரின் காலத்தவர் என்பர். அவர் ராயரின் பாராட்டுகளைப் பெற்றவர் என்பது ஐதிகம் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் முருக வழிபாட்டின் சிறப்புகளை வர்ணிக்கும் கந்தபுராணம் இக்காலத்தில் முற்பகுதிக்குரிய நூலாகும். இக்காலப்பகுதியிலே போர்த்துகேயர் மூலமாகவும் வேறு வழிகளிலும் தமிழகத்தின் சில பகுதிகளில் அறிமுகமாகிப் பரவத் தொடங்கியது.

திராவிட கலைப்பாணியில் அமைந்த கட்டுமானமுறை விஜய நகர காலத்திலே பூரணமான வளர்ச்சி நிலையை அடைந்தது. கி. பி. 1565 ஆம் ஆண்டிலே தலிக்கோட்டைப் போரில் இராமராயர் மடிந்த பின்பு விஜயநகரப் பேரரசு நிலை குலைந்தது. தெற்கிலே மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய சமஸ்தானங்களிலுள்ள நாயக்கர் சுதந்திரமாக ஆட்சி புரியத் தலைப்பட்டனர். அவர்களில் மதுரை நாயக்கரே பலமானவர்கள். அவர்களில் ஆட்சிப்புலமும் விசாலமானது. மதுரை நாயக்கரின் ஆலயத் திருப்பணிகள் குறிப்பிடத் தக்கவை.

விஜய நகர மன்னர் காலத்துக் கட்டுமானங்களை கர்நாடகத்தி லுள்ளவை. தமிழகத்திலுள்ளவை என இரு வகையினவாக நோக்குவதே பொருத்தமானது. கர்நாடகத்துக் கோயில்கள் ஹோய்சலர் காலத்து வேசர பாணியிலமைத்த கட்டிடங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய நகர மன்னர்கள் அமைத்த கோயில்களிலே பல புதிய அம்சங்கள் காணப்படுகின்றன. விஜய நகரத்திலுள்ள ஹஸாரராமர் கோயில், விட்டல சுவாமி கோயில், வீருபாக்ஷர் கோயில் ஆகியன அவற்றிலே முதன்மையானவை. அவை திராவிட கலைப்பாணிக்குரிய அம்சங்களைக் கணிசமான அளவிலேயே பெற்றுள்ளன. கோபுர வாயில்கள், கலப்புத் தூண்கள், கல்யாண மண்டபம் என்பன அவற்றிலே சிறப்பம்சங்களாகி விடுகின்றன.

தமிழ் நாட்டிலே பழைய கட்டுமானங்களை அடிப்படையாகக் கொண்டே கட்டடங்கள் வளர்ச்சி பெற்றன. பிற்காலச் சோழர்களின் திருப்பணிகள் மூலம் சிதம்பரத்திலே திராவிடக் கலைப்பாணியில் அம்சங்கள் முழுமையான கோலத்தைப் பெற்று விட்டன. அங்கு காமக்கோட்டம், சுற்றுப் பிரகாரங்கள், எழுநிலைக் கோபுரங்கள், திருச்சுற்றுமாளிகை, நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்பன அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான கட்டுமான முறை விஜய நகர காலத்திலே தமிழகமெங்கும் வழமையாகியது.

வேலூர் ஜலகண்டேஸ்வரம், தேவிகாபுரத்து அம்மன் கோயில் போன்றவை விஜய நகர காலத்திலே புதிதாக அமைக்கப்பட்ட ஆலயங்கள், தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் வளாகத்திலுள்ள திருக்காமக்கோட்டம் விஜயநகர காலத்துத் திருப்பணி என்பர். காஞ்சிபுரம், மதுரை, திருவரங்கம், திருவண்ணாமலை ஆகியவற்றிலே விஜயநகர நாயக்கர் காலத்திலே கோயில்வளாகம் சுற்றுப் பிரகாரங்களையும் உயரமான கோபுரங்களையும் கொண்ட பேரமைப்பாகியது. புராதனமான தலங்கள் பலவற்றிலே ஆயிரங்கால் மண்டபம், கல்யாண மண்டபம் என்பன வனப்பு மிக்க கோலத்தில் அமைக்கப்பட்டன.

இக்காலக் கட்டுமானங்களில் தூண்கள் மிகுந்த சிறப்பினைப் பெற்றன. அவை உருளைத் தூண்கள், கலப்புத் தூண்கள், பன்முகத் தூண்கள் எனப் பலவகைப்படும். தலைப்பாகத்திலே போதிகை பூமுனை நீண்டு தொங்கும் வண்ணமாக அமைந்திருக்கும். குதிரை வடிவங்களும் யாளி உருவங்களும் தேவர் படிமங்களும் ஆளுயரமான கோலத்தில் அமைந்திருப்பது அவற்றின் சிறப்பாகும். தூணின் கம்பத்தைப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகங்களாகப் பிரித்து, அவற்றிலே பல வகையான சிற்பங்களையும் கோபுரம், கோட்டம், விமானம் போன்ற அமைப்புகளையுஞ் சித்திரக்கோலமாக அமைப்பது வழமை.

விஜய நகர நாயக்கர் காலத்திலே மிகப்பெருந்தொகையான சிற்பங்களும் தேவர்படிமங்களும் உருவாக்கப்பட்டன. அவை பல வகைப்பட்டவை. சில உலகியல் சார்ந்தவை. வேறு சில அரசரது உருவச் சிற்பங்கள்; அவற்றிற் சில ஆளுயரமானவை. நாயக்கர் காலத்திலே கருமையான வைரக் கற்களிலே சிற்பங்களைச் செதுக்கினார்கள். அவை உயிரோட்டமான பாங்கில் வனப்புடன் அமைந்துள்ளன. சைவ, வைணவ சமயங்களைச் சார்ந்த தேவர் படிமங்களும் அடியார்களின் படிமங்களும் மிகுந்து காணப்படுகின்றன. உலோகப் படிமங்களும் பெருமளவிலே காணப்படுகின்றன. அவற்றுட் சில உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

தென்னிந்திய ஓவியக் கலை இக்காலத்திலே சிறப்புற்றிருந்தது. சைவ, வைணவ, சமணக் கோயில்களின் சுவர்களிலும் மண்டபங்களின் விதானத்திலும் அவை வரையப்பட்டுள்ளன. திரிபுராந்தகர், சிவன் பார்வதி திருக்கல்யாணம், சிவபெருமான் ரிஷிபத்தினிகளின் முன்னாற் பிக்ஷாடனர் வடிவிற் செல்லுங் காட்சி, இராமர் பட்டாபிஷேகம், இராமாயணக் காட்சிகளும் சில தலபுராணக் கதைகளும் சமணசமயக் கதைகளும் வனப்புடைய சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. பலவிடயங்களிலே காட்சிகளின் விளக்கமாக வாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. புராணக் கதைகளைப் பொருளாகக் கொண்டுள்ள போது ஓவியங்கள் சமகாலச் சமுதாயத்தையும் அதில் இடம்பெற்ற நடையுடை பாவனைகளையும் ஆடை அலங்காரங்களையும் விளக்கும் வண்ணமானவை. மைப்பூச்சிலும் வண்ணங்களை உருவாக்கும் முறையிலும் மொகலாய ஓவியங்களினதும் ஐரோப்பிய கலையினதும் செல்வாக்கினை அவற்றிலே காணலாம்.

**பதிப்பாசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## அரசும் சமூகமும்

✦ பதினைந்தாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டில் அரசும் குடிகளும் — 03
பேராசிரியர் ஏ. சுப்பராயலு

✦ விஜயநகரப் பேரரசுக் காலத்தில் ஊர்கள் — 19
பேராசிரியர் ப. சண்முகம்

✦ விஜயநகரப் பேரரசுக் காலத் தொழில்கள் — 30
பேராசிரியர் ப. சண்முகம்

✦ The Weavers, Society and the Vijayanagara State — 50
Prof. Vijaya Ramaswamy

✦ Production and Trade Under the Vijayanagar Empire — 83
Prof. Vijaya Ramaswamy

✦ விஜயநகர காலத்தில் இலங்கை தென்னிந்திய வணிக உறவு — 107
பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்

✦ விசயநகரவேந்தர் நாயக்கர் காலக் கல்வெட்டுகள் — 121
கலாநிதி வெ. வேதாசலம்

✦ செஞ்சி நாயக்கர் காலக் காசுகள் — 134
திரு. ஆறுமுகம் சீதாராமன்

✦ மதுரை நாயக்கர் காலக் காசுகள் — 142
திரு. ஆறுமுகம் சீதாராமன்

✦ தஞ்சாவூர் நாயக்கர் காசுகள் — 158
திரு. ஆறுமுகம் சீதாராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயமும் தத்துவமும்


✦ கந்தபுராணம் காட்டும் சிவவடிவங்கள் 177
கலாநிதி மா. வேதநாதன்

✦ விஜயநகர நாயக்கர் காலச் சைவசமயம் 185
திரு. சு. துஷ்யந்

✦ விசய நகரப் பேரரசு கால வைணவ ஆசாரியர் மரபு 204
பேராசிரியர் சு. வேங்கடராமன்

✦ விசய நகரப் பேரரசுகால வைணவ உரை மரபு 216
பேராசிரியர் சு. வேங்கடராமன்

✦ விஜயநகர - நாயக்கர் காலத்து அம்மன் வழிபாடு 231
முனைவர் கு. சேதுராமன்

✦ விஜயநகர நாயக்கர் காலத்தில்
முருக வழிபாட்டின் புத்தெழுச்சி 243
திரு. ஸ்ரீ. பிரசாந்தன்

✦ விஜயநகர - நாயக்கர் கால மடங்கள் 256
முனைவர் சு. இராசகோபால்

✦ அத்துவைத மரபிற் தத்துவராயர் 277
கலாநிதி எ. என். கிருஷ்ணவேணி

✦ "தத்துவார்த்த அகமுரண்பாடுகளின் வெளிப்பாடாக
சித்தர் சிவவாக்கியரின் பாடல்கள்" 289
திரு. ச. முகுந்தன்

✦ விஜயநகர கால சிறுதெய்வ வழிபாடு 301
திருமதி. விக்னேஸ்வரி பவநேசன்

✦ தாயுமானவர் 324
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழியும் இலக்கியமும்


✦ விஜயநகர - நாயக்க மன்னர் காலத்து
இலக்கண நூல்களின் போக்குகள் 351
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

✦ விஜயநகரப் பேரரசு நாயக்கர் கால சமஸ்கிருத இலக்கியம் 365
பேராசிரியர் வி. சிவசாமி

✦ விஜயநகர நாயக்கர் காலப் பண்பாட்டில்
சமஸ்கிருதமொழிச் செல்வாக்கு 387
திரு.ம. பாலகைலாசநாதசர்மா

✦ ஸ்ரீ குமர குருபரர் பிரபந்தங்கள் 401
வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன்

✦ விஜயநகர நாயக்கர்காலப் புராணங்களும் தலபுராணங்களும் 424
திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

✦ விசயநகர நாயக்கர் காலக் குறவஞ்சி 458
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

✦ பிள்ளைத்தமிழ் இலக்கியவளர்ச்சியில்
முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் 470
திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

✦ விஜயநகர நாயக்கர்காலச் சிற்றிலக்கியங்களின் சார்பு நிலை 490
கலாநிதி வ. மகேஸ்வரன்

✦ நாலாயிரத்திவ்விய பிரபந்த வியாக்கியானங்களின்
மொழிநடை - மணிப்பிரவாளம் 499
கலாநிதி சுபதினி ரமேஷ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ விஜயநகர, நாயக்கர்கால இலக்கியங்களில் பெண்கள் 510
கலாநிதி செ. யோகராசா

✦ விஜயநகர நாயக்கர் காலத் தனிப் பாடல்களில் பெண்மை 532
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

✦ விஜயநகர நாயக்கர்கால
நாட்டுப்புறக் கலை இலக்கியங்கள் 561
பேராசிரியர் இருளாண்டி முத்தையா

## கலையும் பண்பாடும்

✦ விசயநகர - நாயக்கர் காலக் கட்டடக்கலை 581
பேராசிரியர் கு. சேதுராமன்

✦ விசயநகர நாயக்கர் காலச் சிற்பக்கலை 608
கலாநிதி வெ. வேதாசலம்

✦ உலகப் புகழ்பெற்ற ஹம்பி நகரின் அழிபாடுகளும்,
நினைவுச் சின்னங்களும் 633
திருமதி. சாந்தி கேசவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டுரையாளர்கள்

- **பேராசிரியர் ஏ. சுப்பராயலு**
  இணைப்பாளர்,
  பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், பாண்டிச்சேரி

- **பேராசிரியர் ப. சண்முகம்**
  முன்னைநாட் பேராசிரியர்,
  தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழம்.

- **பேராசிரியர் விஜயா இராமசாமி**
  தலைவர், வரலாற்றுத்துறை,
  ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுடெல்லி.

- **பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்**
  தலைவர், வரலாற்றுத்துறை,
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்.

- **கலாநிதி வெ. வேதாசலம்**
  ஆய்வாளர்,
  தொல்பொருள் திணைக்களம், தமிழ்நாடு.

- **திரு. ஆறுமுகம் சீதாராமன்**
  நாணயவியல் ஆய்வாளர்,
  தஞ்சாவூர், தமிழ்நாடு.

- **டாக்டர் மா. வேதநாதன்**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- **திரு. சு. துஷ்யந்**
  ஆசிரியர், மட்டக்களப்பு.

- **பேராசிரியர் சு. வேங்கடராமன்**
  முன்னைநாட் தலைவர்,
  தமிழ்த்துறை, காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ பேராசிரியர் கு. சேதுராமன்
தலைவர், நுண்கலை வரலாற்றுத்துறை,
காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

✦ திரு. ஸ்ரீ. பிரசாந்தன்
விரிவுரையாளர், மொழித்துறை,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

✦ கலாநிதி சு. இராசகோபால்
ஆய்வாளர், தொல்பொருள் திணைக்களம், தமிழ்நாடு.

✦ கலாநிதி எ. என். கிருஷ்ணவேணி
தலைவர், நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

✦ திரு. ச. முகுந்தன்
விரிவுரையாளர்,
இந்து நாகரிகப்புலம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

✦ திருமதி விக்னேஸ்வரி பவநேசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

✦ பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தகைசார் பேராசிரியர் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

✦ பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தகைசார் பேராசிரியர் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

✦ பேராசிரியர் வி. சிவசாமி
தகைசார் பேராசிரியர் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

✦ திரு. ம. பாலகைலாசநாதசர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கலாபூஷணம், வித்துவான்
  **திருமதி. வசந்தா வைத்தியநாதன்**
  ஆன்மீக சொற்பொழிவாளர்

- **திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
  சிரேஷ்ட விரிவுரையாளர்,
  தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

- **கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**
  சிரேஷ்ட விரிவுரையாளர்,
  தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

- **திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
  தலைவர்,
  தமிழ்த்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

- **கலாநிதி வ. மகேஸ்வரன்**
  சிரேஷ்ட விரிவுரையாளர்,
  தமிழ்த்துறை, பேராதனைப்பல்கலைக்கழகம்.

- **கலாநிதி சுபதினி ரமேஷ்**
  தலைவர்,
  மொழியியற்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

- **கலாநிதி செ. யோகராசா**
  சிரேஷ்ட விரிவுரையாளர்,
  தமிழ்த்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

- **கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
  முன்னைநாட் ஆய்வாளர், கச்சூயின் பல்கலைக்கழகம், ஜப்பான்.

- **பேராசிரியர் இருளாண்டி முத்தையா**
  தலைவர், நாட்டுப்புறவியல்துறை, காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

- **திருமதி சாந்தி கேசவன்**
  இணைப்பாளர், இந்து நாகரிகப்புலம், கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசும் சமூகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதினைந்தாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டில் அரசும் குடிகளும்

எ. சுப்பராயலு

தமிழ்நாட்டுச் சமூக வரலாற்றில் நில உடைமை தொடர்பான சில நிகழ்வுகள் கல்வெட்டுகளில் நன்கு பதிவாகியுள்ளன. அவற்றில் 1426இல் ஏற்பட்ட ஓர் உழவர் கிளர்ச்சி குறிப்பிடத்தக்கது. இக்கிளர்ச்சியின் வரலாறு அக்கால விஜயநகர ஆட்சி மற்றும் சமூகக் கட்டமைப்பை பற்றி அறிய உதவும்.

முதன் முதலில் இந்தக் கிளர்ச்சியினைப் பற்றி மார்க்சிய கண்ணோட்டத்தில் ஆராய்ந்தவர் காலஞ்சென்ற பேராசிரியர். நா. வானமாமலையாவார். ஆனால் அவர் தான் பயன்படுத்திய ஆடுதுறைக் கல்வெட்டை, பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் (1955, ப, 522) கருத்தையொட்டி, சோழர்காலக் கல்வெட்டு என்று கொண்டு அதை 13ஆம் நூற்றாண்டில் நிலமானிய முறைக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த கிளர்ச்சிக்கு ஒரு சான்றாகக் குறிப்பிட்டார். மேலும் கல்வெட்டு மூலத்தைப் பார்க்காததால், இக்கிளர்ச்சியில் இடங்கை வகுப்பினர் மட்டும் பங்கேற்றதாகக் கூறியுள்ளார். உண்மையில் இக்கல்வெட்டும் இதனோடு தொடர்புடைய வேறு சில கல்வெட்டுகளும் கி. பி. 1429ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. இவை பழைய தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பத்துக்கு மேற்பட்ட ஊர்களில் உள்ளன. அவை தொடர்பான விவரப் பட்டியல் வருமாறு:

| | |
|---|---|
| 1. ஆடுதுறை (இக. 1913: எண் 34) | 1429, ஏப்ரல் 11 |
| 2. கீழப்பழுவூர் (இக. 1926:253) | 1429, மார்ச்சு 27–ஏப்ரல் 26 |
| 3. விருத்தாசலம் (இக. 1918: எண் 92) | 1429, ஏப்ரல் 24 |
| 4. பெண்ணாகடம் (இக. 1928–29, எந். 246) | 1429, ஏப்ரல் 11 |
| 5. எலவானாசூர் (இக. 1938, எண், 490) | 1429, மே 4 |
| 6. கொருக்கை (இக 1917, எண். 216) | 1429, நவம்பர் 12 |
| 7. திருப்பனந்தாள் (இக. 1932, எண் 78) | 1429, நவம்பர் ? |
| 8. திருவைகாவூர் (இக. 1914. எண், 59) | 1429, நவம்பர் 21 |
| 9. திருவையாறு (தெக. 5. எண், 554) | 1429, டிசம்பர் 12 |
| 10. அசூர் (ஆவணம் 2, பக்கம் 33) | 1429, டிசம்பர் 24 |
| 11. உடையவர் தீயனூர் (ஆவணம், 2, பக்கம் 31) | 1429, டிசம்பர் 18 |

(இக –– இந்திய கல்வெட்டியல் ஆண்டறிக்கை
தெக –– தென்னிந்திய கல்வெட்டுகள்)

இக்கல்வெட்டுகள் யாவும் விஜயநகர மன்னனான இரண்டாம் தேவராயன் காலத்தில் எழுதப்பட்டவை. முதலில் குறிப்பிட்ட நான்கு கல்வெட்டுகள் சவுமிய ஆண்டு சித்திரை மாதத்தில், அதாவது கி. பி 1429 மார்ச், ஏப்ரல் மாதங்களில், சில நாட்கள் இடைவெளியில் எழுந்தவை. நான்கும் ஏறக்குறைய ஒரே செய்தியைப் பற்றித் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு கல்வெட்டிலும் சில பகுதிகள் சிதைந்திருப்பதால் நான்கு கல்வெட்டுகளையும் ஒப்பு நோக்கி மேல்வரும் பாடப்பகுதி பெறப்பட்டது.

*...வழுதிலம்பட்டு உசாவடியில் வலங்கை தொண்ணூற்றெட்டும் இடங்கை தொண்ணூற்றெட்டும் நிறைவறநிறைந்து குறைவறக் கூடி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இருந்து கல்வெட்டின் படி. இந்த மண்டலத்தில் உசாவடிப் பிரதானி, வன்னியர், சீவிதகாறர் நெருக்கம் பண்ணினாலும், காணியாளரான பிராமணர், வெள்ளார் இப்படிக்கொத்த மனித்தர் இராசகரத் தாரைக் கொண்டு நமக்கு ஒரு தாழ்வு நினைத்தாலும், நம்மிலொருத்தர் வாரவர்க்கு இடங்குடுக்தல் கோட் சொல்லுதல், சிக்கரசர் பட்டயத்தை அழிக்குதல், கோபினாதன் காலால் இருபத்து நாலு அடியும் விலக்கடியையும் அழித்தால் இவ்வனைவரும் இன்று போலே கூடி இருந்து கேட்டுக் கொள்ளக் கடவோமாகவும், இந்த மண்டலத்துக்குள்ளே யாதொருத்தர் நாட்டுத் துரோகம் பண்ணுகுதல், காரியம் செய்குதல், கணக்கு எழுதுகுதல், செவிக்குதல் செய்யக் கடவதல்லவாகவும், இப்படிகொத்த காரியஞ் செய்தவர்களை மேற்படக் குத்தி கீழ்ப்பட இழுத்துப்போடக் கடவோமாகவும்....*

உசாவடி அல்லது சாவடி விஜயநகர ஆட்சிப் பிரிவுகளில் முக்கியமானது. இது ராஜ்யம் அல்லது இராச்சியம் என்றும் அழைக்கப்பட்டது. வழுதிலம் பட்டு சாவடி தோராயமாக தென்பெண்ணைக்கும் கொள்ளிடத்துக்கும் நடுப்பட்ட நிலப்பகுதியாகும். இக்கல்வெட்டிலிருந்து கீழ்கண்ட செய்திகள் தெளிவாகின்றன.

(1) இதுவழுதிலம்பட்டு உசாவடியைச் சேர்ந்த வலங்கை – 98, இடங்கை – 98 ஆகிய இருபிரிவினரும் ஒருங்கிணைந்து எடுத்த முடிவாகும்.

(2) விஜயநகர ஆட்சியில் உசாவடி ஆளுநரான பிரதானி, படையாளர் ஆன வன்னியர், சீவிதக்காறர் அதாவது ஊழிய மானியம் பெற்ற அரச அலுவலர் ஆகியோர் சேர்ந்து வலங்கை இடங்கையினரை நசுக்கினர்.

(3) காணியாளராக இருந்த பிராமணர், வெள்ளாளர் ஆகியோரும் அதிகாரவர்க்கத்துக்கு உடந்தையாக இருந்தனர்.

(4) வலங்கை இடங்கையினர் ஒருமித்து அடக்குமுறைக்கு இனிமேல் பணிவதில்லை. தங்கள் உரிமைக்காகப் போராடவேண்டும் என்று உறுதிபூண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) இப்பொழுது உள்ள நில அளவுகோலை யாரும் மாற்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(6) ஏற்கனவே சிக்கரசாரல் (இவர் அப்போதைய இளவரசர் ஆகலாம்) தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைப் பட்டயத்தை யாரும் புறக்கணிக்கக்கூடாது.

(7) அடக்குமுறைக்குப் பணிந்து அதிகாரவர்க்கத்துக்கு உடந்தை யானவர்கள் சமூக விரோதிகளாகக் கருதப்பட்டு சமூகத்தில் அவர்களுக்கு உரிய இடத்திலிருந்து தூக்கி எறியப்படுவார்கள்.

அடுத்து ஒரு மாதம் கடந்து, அதாவது வைகாசி மாதத்தில், எழுதப்பட்ட எலவானாசூர் கல்வெட்டு (இக. 1937–38, எண், 490) கிளர்ச்சியின் அடுத்த கட்டத்தைத் தெரிவிக்கிறது. இதில் வலங்கை இடங்கைப் பிரிவினரோடு காணியாளரான சபையாரும், தானத்தாரும் சேர்ந்து ஒப்பந்தம் செய்வதாக உள்ளது. இரு சாராரும் இராசகரத்தாரர் (அரண்மனையைச் சேர்ந்தவர்), அதாவது அரசு அலுவலர், சீவிதக்காறர் ஆகியோரின் உபத்திரோகத்தால் நேராக நலங்கினடியால் இந்த முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது. செய்து கொண்ட ஒப்பந்தம் இனிமேல் அரசுக்கு இறை இறுக்கும் முறை எப்படி யென்பதைப் பற்றியது. நெல்லாகச் செலுத்த வேண்டிய வரிக்கு நெல்லும் பணமாகச் செலுத்த வேண்டிய வரிக்குப் பணமும் ஆக இனிமேல் இறுக்க வேண்டும். நியாயமற்ற வரிகளைச் செலுத்தக்கூடாது. பிராமணரும் வெள்ளாளரும் அதிகாரவர்க்கத்தோடு சேர்ந்து இந்த ஒப்பந்தத்துக்குத் துரோகம் செய்யக்கூடாது. ஒருவர் தன் காணியாட்சியைத் தவிர வேறு ஒருவர் காணியாட்சிகளை மானியம் ஆகவும், சீவிதம் ஆகவும் பெற்றுக்கொள்ளக் கூடாது. சீவிதக்காறர்கள் தங்கள் உரிமையான ஊரில் ஊரவரை (காணியாளரை) அவர்கள் சம்மதமில்லாத நிலத்தை எழுது பயிரிட வற்புறுத்தக்கூடாது.

இக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சபையார் பிராமண நிலக் கிழார்களைக் கொண்ட பிராமண ஊர் மன்றம் ஆகும். தானத்தார் பூசாரிகள் முதலிய கோயில் நிர்வாகிகளைக் கொண்டதாகும். பெரும்பாலும் இவர்கள் பிராமணர்களாகவே இருப்பார்கள். எலவானாசூர் (பழைய பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையானறையூர்) பிரமதேயம் (பிராமணர்களுக்கு உரிய ஊர்) ஆனதாலும், அவ்வூர்க் கோயிலும் நிறைய நிலங்களை தனது உடைமையாகக் கொண்டிருந்தாலும் இங்கு பிரமாணக் காணியாளர் மட்டும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறார்கள். வலங்கை இடங்கையில் தொழிலாளச் சாதிகளும் அடங்கியிருந்தன. என்பது கைக்கோளார் (நெய்வோர்) முதலியோரின் பட்டடை அல்லது தொழிற்கூடத்துக்கு எவ்வளவு வரி செலுத்துவது என்ற தீர்மானமும் இக்கல்வெட்டில் இருப்பதிலிருந்து அறியலாம். ஆகவே கிளர்ச்சி துவங்கி சிறிது காலத்திலேயே உழவர், தொழிலாளிகள் முதலியவரோடு இணைந்து அரசை எதிர்க்க காணியாளர் முன் வந்தனர் என்பதை இக் கல்வெட்டு உணர்த்துகிறது.

மூன்றாங் கட்டத்தில் இக்கிளர்ச்சி தெற்கு நோக்கி, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடத்துக்கும் காவிரிக்கும் நடுப்பட்ட பகுதிக்குப் பரவியுள்ளது. கொருக்கை, திருவைகாவூர், திருப்பனந்தாள், திருவையாறு ஆகிய ஊர்க் கல்வெட்டுக்கள் இதனைப்பற்றிய செய்திகளைத் தருகின்றன. கொருக்கை, திருவைகாவூர்க் கல்வெட்டுகள் கார்த்திகை மாதத்திலும், திருவையாறு கல்வெட்டு மார்கழி மாதத்திலும் எழுதப்பட்டுள்ளன. திருப்பனந்தாள் கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. எஞ்சிய பகுதியிலிருந்து இதுவும் கார்த்திகை மாதத்தில் அல்லது சிறிது முன்பாக எழுதப்பட்டதாகக் கொள்ளலாம். திருவைகாவூர், திருவையாறு கல்வெட்டுகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள சபையார் (பிரமாண ஊர் மன்றம்) ஒரு பக்கமும் வலங்கை இடங்கையினர் இன்னொரு பக்கமும் இருந்து ஒரிமை (ஒருமை) ஒத்து செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றியன. கொருக்கைக் கல்வெட்டில் குறிப்பிட்ட பகுதி சிதைந்திருப்பதால் ஒப்பந்ததாரர் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனால் இந்த நான்கு கல்வெட்டுகளும் ஏறக்குறைய ஒரே பொருளைப் பற்றியன என்பதில் ஐயமில்லை.

திருவைகாவூர் கல்வெட்டிலிருந்து (இக. 1914, எண், 597) அறிய வருவன பின்வருமாறு:

(1) இப்பகுதி மக்கள், அதாவது காணியாளரும், குடிகளும் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை, ஏற்கனவே வழுதிலம்பட்டு சாவடியைச் சேர்ந்த பல நாடுகளிலும் முடிவான ஒப்பந்தத்தைப் பின்பற்றிச் செலுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தங்கள் பகுதி, கன்னடியர் (விஜயநகர மன்னர்) ஆளுகைக்குள் வந்ததிலிருந்து சீவிதக்காறர் ஆதிக்கம் ஏற்பட்டு பலரும் பலவாறு வரிகளை வசூலித்ததன் காரணமாக குடிகள் பாழாயினர். அதனால் இனிமேல் தங்கள் நிலங்கள் இறையிலிப்பற்று, பண்டாரவாடை, சீவிதப்பற்று என்று எந்த வகையைச் சேர்ந்ததென்றாலும் அவைகளை அடைப்பு நிபத்தி, குத்தகை, சேர்வை என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் கொள்ளுவதற்கு ஒத்துக் கொள்ளக் கூடாது.

(3) வரிகளைத் தாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்ட அளவுக்கு மேல் செலுத்தக் கூடாது. இந்த நிபந்தனைகளோடு உழுகுடிகளும் பிறதொழில் புரிவோரும் எவ்வெவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதையும் கல்வெட்டின் பெரும்பகுதி விவரிக்கிறது.

கொருக்கை கல்வெட்டு உழுகுடிகள், தொழிலாளிகள் ஆகியோரிடம் முதலில் இருந்த மன உளைச்சலையும் பின்பு ஏற்பட்ட துணிச்சலையும் தெளிவாகச் சித்தரிக்கிறது. வரிக் கொடுமையால் மிகவும் நசுங்கிய இப்பகுதிக் குடிகள் தங்கள் மண்டலத்தை (சோழ மண்டலம்) விட்டு ஓடிப்போகும் அளவுக்கு மன உறுதியை இழந்தார்கள். ஆனால் அந்த நிலையில் வழும்திலம்பட்டு உசாவடியில் எழுந்த கிளர்ச்சி இவர்களுக்குத் தெம்பைத் தந்தது. நாம் மண்டலம் சேர இனம் ஒத்து இராதபடியாலே அல்லோ இப்படி நம்மை அநியாயம் செய்கிறார்கள் என்று விழிப்படைந்து திருவைகாவூர்ப் பகுதியில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைப் போன்று தாங்களும் செய்து கொள்ள முன் வந்தார்கள். ஏற்கனவே திருப்பனந்தாளில் இது போன்ற ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது என்பதையும் இக்கல்வெட்டு சுட்டிகாட்டுகிறது.

மேற் குறிப்பிட்ட அனைத்துக் கல்வெட்டுகளையும் ஒருசேர வைத்துப் பார்த்தால் கிளர்ச்சியின் தன்மையைப் புரிந்துகொள்ளலாம். கிளர்ச்சி வழுதிலம்பட்டு உசாவடியில் அதாவது தென் ஆற்காடு மாவட்டத்தில் தொடங்கி ஓர் ஆண்டிற்குள் தஞ்சை மாவட்டத்தின் வடபகுதிக்குள் பரவியது. ஏறக்குறைய 5,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவு நிலப்பகுதியில் இருந்த குடிகள் கிளர்தெழுந்தார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் எல்லா இடங்களிலும் இருந்த வரிப்பளுவாகும். அதோடு சமூகத்தில் வர்க்க முரண்பாடுகளும் தெளிவாக இருந்தன. முதல் வர்க்கமான அதிகார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தில் பெரும்பாலும் தமிழ் நாட்டுக்கு வெளியேயிருந்து வந்த படைத்தலைவர்களான கன்னடிய நாயக்கர்களும், அவரை அண்டியிருந்த உள்நாட்டுப் படைக் கூட்டத்தினரும் இருந்தார்கள். இரண்டாம் வர்க்கம் காணியாளர்களைக் கொண்டது. மூன்றாம் வர்க்கத்தில் வலங்கை, இடங்கைப் பிரிவினர் இருந்தார்கள். வலங்கை இடங்கையினரைக் காணியாளர் நசுக்கினர். இந்த இரு வர்க்கங்களையும் அதிகார வர்க்கத்தினர் நசுக்கினர்.

முதல் வர்க்கத்தில் இராசகரத்தார், வன்னியர், சீவிதக்காறர் இருந்தார்கள் எனப் பார்த்தோம். ஆடுதுறை, கீழப்பழுவூர் முதலிய கல்வெட்டுகளைச் சேர்த்துப் பார்த்தால் உசாவடிப் பிராதானி உள்ளிட்ட அரண்மனைக்கு மிக அண்டியவர்களை இராசகரத்தார் என்ற சொல் குறித்தது எனலாம். வன்னியர் உள்நாட்டு மற்றும் வெளியிலிருந்து வந்த படைப்பிரிவினர். சீவிதக்காறர் (ஜீவிக்காறர்) அரசில் ஏதாவது ஒரு பணி செய்பவர். தம் வாழ்க்கைச் செலவுக்காக ஒரு நிலப்பகுதியின் அரச வருவாயை அரசிடமிருந்து பெற்றவர்கள் ஆவார்கள். பெரும்பாலும் அரசின் உயரதிகாரிகள் இத்தொகுதியில் இருந்தார்கள். என்பது சில கல்வெட்டுக்களிலிருந்து விளக்கமாகிறது.

இரண்டாம் வர்க்கத்தில் உள்ள காணியாளர் நிலக்கிழார் ஆவார்கள். காணியார் என்றால் காணியாட்சி உடையவர் என்று பொருள். காணியாட்சி ஒரு பொருள் அல்லது தொழில் மீது ஒருவருக்குள்ள பரம்பரை உரிமையைக் குறிக்கும். ஆனால் இச்சொல் கி. பி. 13ஆம் நூற்றாண்டுச் சோழர் கல்வெட்டுகளிலும், அதற்குப் பிந்திய விஜயநகர காலக் கல்வெட்டுகளிலும் பெரும்பாலும் நில உடைமையையும், நில உற்பத்தியையும் அனுபவிக்கும் உரிமையையும் குறித்தது. (பார்க்க கரஷிம, 1984, ப. 26–27) இதனால் காணியாளர் என்பது நில உடைமையாளர் அல்லது நிலக்கிழார்களைக் குறித்தது எனலாம். 13–15 ஆம் நூற்றாண்டுகளில் பல பிராமணர்களும் வெள்ளாளர்களும் பல வழிகளில் பெரும் நிலக்கிழார்களாக ஆயினர். பெரும்பாலும் இவர்கள் பயிர்த்தொழிலில் நேரடியாக ஈடுபடவில்லை. உழுகுடிகளைக் கொண்டு தம் நிலங்களைப் பயிரிட்டனர்.

மூன்றாம் நிலையில் இருந்த வலங்கை இடங்கைப் பிரிவினர் பற்றி இன்னும் தென்னிந்திய வரலாற்றாசிரியர்களிடம் ஓர் இசைந்த கருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. (பார்க்க ஸ்பெடய்ன், 1980, ப. 173–215) பொதுவாக வலங்கைப் பிரிவு நிலத்தை நம்பி வாழும் பலசாதிகளின் தொகுதி என்றும், இந்த இரு பிரிவுகளும் தங்களுக்குள்ளாக எப்போதும் பிணங்கி வந்தன என்றும் கருத்து நிலவுகிறது. இந்தக்கருத்து சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயர் தாங்கள் சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயர் தாங்கள் சென்னை முதலிய சில நகரங்களில் கண்ட சமூகப் பிணக்குகளைப் பற்றி எழுதிய குறிப்புகளின் அடிப்படையில் எழுந்தது. இந்த நிலைமை ஓரளவு உண்மையானாலும் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பும் இப்படிப்பட்ட நிலைமை இருந்தது என்பது வரலாற்றுக்குப் புறம்பானது. நிச்சயமாக 15ஆம் நூற்றாண்டில் வலங்கை சாதிகளும் இடங்கை சாதிகளும் தங்களுக்குள்ளாகப் பூசலிடவில்லை. அவைகள் பெரும்பாலும் அந்த நூற்றாண்டுச் சமூகத்தில் கீழ்தட்டிலிருந்து நேரடியாக உணவையும் பொருள்களையும் உற்பத்தி பண்ணின மக்கள் தொகுதிகளாக இருந்தன என்ற செய்தி, திருவைகாவூர், கொருக்கைக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுள்ள சாதிகளைப் பார்த்தால் புரியும். மேல்வரும் சாதிகள் பெரும்பாலும் தொழில் அடிப்படையில் அமைந்தவை என்பது வெளிப்படை:

| | |
|---|---|
| நாட்டார் | கொல்லர் |
| தந்தரிமார் (வன்னியர்) | தச்சர் |
| செட்டிகள் | தட்டார் |
| கைக்கோளர் | வண்ணத்தார் |
| சேனைக் கடையார் | குசவர் |
| சாலிகர் நியாயத்தார் | நாவிதர் |
| சேணியர் | வண்ணார் |
| மன்றாடி அல்லது இடையர் | காவல்காறர் |
| கோயிலங்காடிகள் | உழமைப் பறையர் |
| சிவன் படவர் | கைவினைப் பறையர் |
| வாணியர் | சார்வ்வகாறர் |
| செக்கு வாணியர் | ஈழம் புஞ்சை (ஈழவர்) |
| கம்மாளர் | |

பல இடங்களில் கல்வெட்டு சிதைந்துள்ளதால் எல்லாச் சாதிப் பெயர்களும் கிடைத்துள்ளன. என்று சொல்ல முடியாது. இந்தப் பட்டியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நாட்டார் மற்றும் தந்திரிமார் முதலில் இடங்கை வலங்கையினரால் எதிரிகளாகக் கருதப்பட்டார்கள். ஆகவே அவர்களைக் கணக்கிலே கொள்ளக்கூடாது.

இந்த மூன்று வர்க்கங்களில் மிகவும் நசுக்கப்பட்ட வர்க்கம் மூன்றாம் வர்க்கமான வலங்கை இடங்கையைச் சேர்ந்த உழுகுடிகளும் கைவினைத் தொழிலாளிகளும் ஆவார்கள். ஆகவே இவர்கள் முதலில் ஒருங்கிணைந்து மற்ற இரு வர்க்கங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். வெகு விரைவில் இரண்டாம் வர்க்கத்தினரான காணியாளர் இவர்களுக்குப் பணிந்தது மல்லாமல் இவர்களோடு சேர்ந்து அதிகார வர்க்கத்தை எதிர்க்க முன்வந்தார்கள். சிறிது காலத்தில் கிளர்ச்சி ஓர் எதிர்ப்பு இயக்கமாகவே மாறியது எனலாம்.

இக்கிளர்ச்சி ஏற்பட்டதற்குப் பின்னணி என்ன என்பதை அறிய சில கல்வெட்டுக்கள் துணைபுரிகின்றன. நாகபட்டினம் வட்டம் தேவூர் என்ற ஊரில் உள்ள கல்வெட்டு 11 (தெக. 17, எண். 562) கி. பி. 1426இல் திருவாரூர் உசாவடியைச் சேர்ந்த நாட்டவருக்கு பெரிய சிருப்பரசர் என்ற உயர் அதிகாரி கொடுத்த ஓர் உத்தரவு பற்றியது. திருவாரூர் உசாவடி (பழைய) தஞ்சாவூர் மாவட்டத்தின் பெரும்பகுதியை உட்கொண்டிருந்தது. இக்கல்வெட்டு சிறிது சிதைந்தும் முழுமையடையாமலும் உள்ளது. ஆயினும் மையக்கருத்தை ஓரளவு ஊகித்தறியலாம். இந்த உசாவடியைச் சேர்ந்த குடிகளிடமிருந்து மல்லாயி அவ்வையார் மகமை எனப்பட்ட வலங்கை இடங்கை வரியை வசூல் செய்வதை அதிகாரிகள் குத்தகைக்கு எடுத்தாகவும், குத்தகைக்கு எடுத்த அதிகாரிகள் முதலில் அரசு நிர்ணயித்த தொகையான 200 பொன் வசூலித்ததாகவும், ஒரு சில ஆண்டுகளில் தங்களுக்குள் ஏலத்தில் போட்டியிடும் அத்தொகையை 2000 பொன்னாக உயர்த்தி விட்டார்கள். என்றும் அறிகிறோம். இவ்வளவு பெரிய தொகையைச் செலுத்தி மிகவும் அவதிப்பட்ட குடிகள் அரசுக்கு விண்ணப்பம் செய்தார்கள். அப்போது சிக்கதேவர் (மன்னனின் தம்பி) இந்தக் குடிகளின் குறையைக் கேட்டு வரியைக் குறைத்தாகத் தெரிகிறது. ஆடுதுறை முதலிய கல்வெட்டுகளில் பட்டயம் ஒன்றை வழங்கியதாகக் குறிப்பிடப்படும் சிக்கரசர் இந்த சிக்க தேவர் ஆகலாம். தேவூர்க் கல்வெட்டு கி. பி. 1421இல் (நந்தவன வருஷம்) இருந்தே இந்த வரித்தொல்லை தொடங்கியதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துகிறது. கி. பி. 1414ஆம் ஆண்டைச் சேர்ந்த கூகையூர் கல்வெட்டு ஒன்று (இக. 1918:109) நாயக்கன் ஒருவன் அவ்விடத்தில் சிறிது காலத்திற்கு முன்னால் விதிக்கப்பட்ட காணிக்கை என்ற வரியை அப்பகுதி நாட்டவர் (நிலக்கிழார்) கேட்டு கொண்டதன் பேரில் நீக்கியதாகக் குறிக்கிறது. இக்கல்வெட்டும் ஏறிக்கொண்டு சென்ற வரிப்பளுவைச் சுட்டிக்காட்டுகிறது.

தேவூர்க் கல்வெட்டை அடுத்து அதன் தொடர்ச்சியாக 1427–28ஆம் ஆண்டில் எழுதிய ஆறு கல்வெட்டுகள் திருவொற்றியூர் (இக. 1912, எண், 226) தக்கோலம் (இக. 1921, எண், 270), திருப்பாசூர் (இக. 1930, எண், 152), திருமுல்லைவாயில் (தெக. 17, எண், 736), சிதம்பரம் (இக. 1913, எண், 376), திருவானைக்கா (இக. 1937, எண். 113) ஆகிய இடங்களில் உள்ளன. இவை செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் குடிகள் வரிப்பளுவினால் தொல்லையுற்றதைத் தெரிவிக்கின்றன. இதில் நான்கு கல்வெட்டுகள் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சேர்ந்த சந்திரகிரி இராச்சியத்தில் இருந்த கோயில்களில் நிலங்களை உழுத குடிகள் இரண்டு காரணங்களால் தொல்லையுற்று ஊர்களைவிட்டு வெளியேறியதாகத் தெரிவிக்கின்றன. இதில் ஒரு காரணம், அதிகாரிகள் வற்புறுத்திக் கேட்ட பல அநியாய வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தமை. இரண்டாவது காரணம் கோயில் நிலங்களை சீவிதக்காறர், அதிகாரிகள், ஊரவர், தானத்தார் ஆகிய பலரும் குத்தகைக்கு எடுத்துக் கொண்டதாகும். இந்த நிலைமையைச் சில பெயரியவர்கள் விஜயநகரத்துக்குச் சென்று மன்னனிடம் நேரில் எடுத்துக்கூறி முறையிட்டதாகவும், மன்னனும் வரிகளைக் குறைக்கவும், குத்தகை முறையை நீக்கவும் கட்டளை பிறப்பித்தான் எனவும் அறிகிறோம். எஞ்சிய இரண்டு கல்வெட்டுகள் சிதம்பரம், திருவானைக்கா ஆகிய கோயில்களைச் சேர்ந்தவை. இவை சந்திரகிரி இராச்சியத்தைப் போலவே வழுதிலம்பட்டு, திருச்சிராப்பள்ளி, சோழ மண்டலம் ஆகிய இராச்சியங்களிலும் இந்நிலைமை இருந்தது என்பதைத் தெரிவிக்கின்றன. இந்த ஆறு கல்வெட்டுகளும் கோயில் நிலங்களைப் பற்றியதாக இருந்தாலும் மற்ற கல்வெட்டுகளைப் போல ஒரேவகையான சமூகப் பிரச்சினையைச் சித்தரிக்கின்றன.

இவ்விடத்தில் மேலே கண்ட கல்வெட்டுகளில் கையாளப்பட்ட சில சொற்களை ஊன்றிப் பார்ப்பது இம்முரண்பாடுகள் வளர்ந்ததற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களை நமக்கு ஓரளவு உணர்த்தும், குத்தகை அல்லது குத்தொகை என்ற சொல் இவைகளில் முக்கியமானது. பொதுவாக குத்தகை என்பது ஒருவர் நிலத்தை இன்னொருவர் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்கு தன் உடைமையாக்கி அதை உழுது பயிரிட்டு நிலத்துடைமையாளருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையோ தானியமோ கொடுத்துவரச் செய்து கொள்ளும் ஒப்பந்தமாகும். ஏறக்குறைய இதே பொருளில் அடைப்பு நிபத்தி, சேர்வை என்ற சொற்களும் கையாளப்பட்டதாகத் தெரிகிறது. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் இருந்த சூழ்நிலையில் மேல்தட்டிலிருந்தவர்களும், அதிகாரிகளும் மட்டுமே கோயில் நிலங்களையும். வேறு சில மானிய நிலங்களையும் குத்தகைக்கு எடுக்க வாய்ப்புப் பெற்றனர். இதனால் இவர்கள் பெரிய நிலக்கிழார்கள் ஆவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அதனால் இக்குத்தகைக்கு முறை அதிகார வர்க்கத்தினர் உழுகுடிகளை சுரண்டுவதற்கும் நசுக்குவதற்கும் ஒரு சிறந்த வழியாக இருந்தது. நிலம் மட்டுமல்ல, வரிவசூல் செய்வதையும் அதிகாரிகள் குத்தகைக்கு எடுத்தார்கள் என்பதைத் தேவூர் கல்வெட்டில் பார்த்தோம்.

மேற்கண்ட செய்திகளின் போக்கைக் கீழ்வருமாறு தொகுக்கலாம். விஜயநகர ஆட்சி தமிழ் நாட்டில் வேரூன்றித் தொடங்கிய ஐம்பது ஆண்டுகளுக்குள் வரிப்பளு பொதுவாக அதிகரித்தது. பரம்பரைக் காணியாளர்களும் புதிதாக வந்த அதிகார வர்க்கத்தினரும் பலவகையில் நில உடைமைகளைப் பெருக்கிக் கொண்டு உழுகுடிகளையும் கைவினைத் தொழிலாளிகளையும் சுரண்டத் தலைப்பட்டார்கள். இத்தொல்லை மிகவும் வளர்ந்த நிலையில் விஜயநகர மன்னன் குடிகளின் புலம்பலுக்கு ஒரு சிறிது செவி கொடுத்தான். அதனால் சிறிது ஊக்கம் அடைந்த மக்கள் காணியாளரையும் அதிகார வர்க்கத்தையும் எதிர்க்கத் துணிவு பெற்று கிளர்ந்தெழுந்தனர். இதற்குக் காணியாளர் உடனடியாகப் பணிந்தனர். அதிகாரவர்க்கமும் அப்போதைக்குப் பணிந்திருக்கலாம். ஆனால் கிளர்ச்சி குறுகியகால வெற்றியே கண்டது எனலாம். இதே போன்ற வரித்தொல்லை மீண்டும் சில ஆண்டுகளில் தலை காட்டியது என்பதை 1446ஆம் ஆண்டைச் சேர்ந்த திருவெண்ணை நல்லூர்க் கல்வெட்டு (இக. 1921, எண், 476) ஒன்றும் குத்தகைத் தொல்லை நீடித்தது என்பதை 1464ஆம் ஆண்டைச் சேர்ந்த சீரங்கம் கல்வெட்டு (தெக. 24, எண். 506) ஒன்றும் தெரிவிக்கின்றன. இது போன்ற கல்வெட்டுகள் இன்னும் பல இடங்களிலும் (இக. 1918. எண். 96, 97 103: இக. 1913, எண், 422, 423) கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE RAJYAS OF VIJAYANAGAR EMPIRE






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலங்கை இடங்கைக் கிளர்ச்சி

கீழ்வரும் இரு கல்வெட்டுகளும் 1429 இறுதியில் நடுவில் நாட்டிலும் சோழ மண்டலத்திலும் வரிப்பளுவைச் சுமத்திய நிலக்கிழார்களுக்கும் விஜயநகர அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த வலங்கை இடங்கை அமைப்புக்களின் நடவடிக்கைகள் பற்றியன. இக்கிளர்ச்சி தொடர்பாக தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சை மாவட்டங்களில் பல கல்வெட்டுகள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான செய்திகள் அறிய பார்க்க: கராஷிமா, சுப்பராயலு கட்டுரை.

I) இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், உடையவர் தீயனூர் ஜமதக்னீ சுவரர் கோயில் வினாயகர் திருமுன் மேற்கு மற்றும் தெற்குச் சுவர்.

காலம் : விஜயநகர அரசர் இரண்டாம் தேவராயர். கி. பி. 1429 டிசம்பர் 18, (கிழமை ஞாயிறு; வெள்ளியில்லை)

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. மன்மஹாமண்டலீ
3. ச்0வரந்த ஹரிஹர
4. ராயவிபாடந் பா
5. ஷைக்குத் தப்பும்
6. ராயப் கண்டந்மூ
7. வராயர் கண்டன்
8. பச்சிம தக்ஷிண
9. உத்தர ஸமுத்ரா
10. திபன் கண்டநாடு கொண்டு
11. கொண்டநாடு கொடாதா
12. ன் திருபுவசவீரதேவ
13. ராஜமஹாராயர் ப்ருதி
14. விராஜ்யம் பண்ணி
15. அருளாநின்ற ச0கா

---

* Valangai Idangai Kaniyalar and Irajagaratter : Social Confict in Tamil Nadu in the 1st Century Socio-Cultural Change in Villages in Triuchirapalli Destrict ...... (ILCCA, Tokyo, 1983) pp 133-59.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. த்தம் 1315–ன் மேல் செல்லா நின்ற
17. ஸவுமிய ஸம்வத்ஸரத்து
18. தநு நாயற்று
19. அபர பக்ஷ
20. த்த ஸப்தமியும்
21. வெள்ளிக்கிழமை
22. யும் பெற்ற உத்திர
23. த்துநாள் வடகரை
24. விக்கிரமசோழ வள
25. நாட்டுக்கு கிடராங்
26. கொண்ட சோழவள நா
27. ட்டுக் கட்டளைநாட்
28. டு தீயனூரான மனு
29. குகேசரிநல்லூர்
30. உடையார் திருவக்
31. கினீச்வரமுடைய
32. நாயனார் திருக்கோயி
33. ல் திருக்கட்டளை
34. யில் இன்னாட்டு வ
35. லங்கை தொண்
36. ணூற்றெட்டும் இட
37. ங்கை தொண்ணூற்றெட்டும் கூட்ட
38. ம் நிறைவற நிறைந்து
39. குறைவறக் கூடி ஒரு
40. மித்துக் கல்லு வெ
41. ட்டினபடி இன்னாட்
42. டுக்குப் பூறுவம் அற்ற ம
43. ரிஆதி சிக்கரசர் பட்டை
44. யப்படி ஒழிந்து சீவிதம்
45. உடையவர்கள் நெருக்
46. கம் பண்ணி பிறவரி
47. யாலே நாடு நல
48. ங்கி பிறம
49. ண்டலங்குடியா
50. கி ஒடிப்போகையில்
51. மண்டலம் அற்றி மரி
52. யாதி கோபிநாதன் கா
53. லால் இருபத்து நாலு
54. அடியும் விலக்கடியு
55. ம் கோலால் (நாட்ட)
56. ளவு கோலால் அளந்து
57. குடிபயிர் பாத்து
58. ப் பயிர் பூண்ட
59. லத்துக்கு சிக்கரசர்
60. பட்டையப்படி
61. யால் உள்ள மரியா
62. தி(ப்படியே) இறு .
63. க்கக் கடவோம் ஆகவு
64. ம் இம்மரியாதி
65. ஒழிந்து சீவிதங்
66. களை ஒ
67. ழித்து புறவ
68. ரி குடுக்கக் கட
69. வோம் அல்ல
70. வாகவு ம்நம்
71. மில் ஒவ்வாமல் புற
72. வரிக்கு இடங்குடு
73. த்தார் உண்டாகி
74. ல் மேற்படக் குத்தி
75. கீழ்பட இழுக்கக்
76. கடவது ஆக
77. வும்

II) இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் அசூர் சொக்கநாதர் கோயில் மகாமண்டபத் தென்சுவர்.

காலம் : சகம் 1350 (1428 டிசம்பர் 24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1350–தின் மேல் செல்லா நின்ற செளம்ய வருஷம் மார்கழி மாதம் 27 உத்ரயோதஸியும் சனிக்கிழமையும் பெற்ற மூலத்து நாள் திருச்சிராப்பள்ளி உசாவடியில் கரிகாலன்ன வளநாடு ஆன வன்னாட்டு வெண்பாற் நாட்டில் அசுகூரில் வலங்கை தொண்ணூற்று எட்டும் இடங்கை தொண்ணூற்று எட்டும்.

2. நிறைவற நிறைந்து குறைவறக்கூடி உடையார் சொக்கனாத நயினார்க் கோயிலில் திருக்கட்டளையில் கல்வெட்டினபடி இந்த நாட்டுக்கு பூறுவம்மற்ற மரியாதி பயிர் வழி கடமை இறுக்கும் போது நஞ்செய்க்கு பாழ்சாவி கழித்து பயிர்கூடின நிலத்துக்கு வேலி ஒன்றுக்கு அன்பது பணமும் புன்செய் வரகு கேழ்வரகுக்கு பாழ்சாவி கழித்து பயிர்கூடிய நிலத்திலே

3. பத்திலொன்று கழித்துப் பயிர் கூடின நிலத்துக்கு வேலி ஒன்றுக்கு இருபத்து அஞ்சு பணமும் இளவரிசை ஆன பல பயிருக்கும் இள வரிசைத் துண்டம் கால்வாசி கழித்து பயிர்கூடின நிலத்திலே பத்தில் ஒன்று கழித்து பயிர் கூடின நிலத்துக்கு வேலி ஒன்றுக்கு இருபத்து அஞ்சு பணணமும் வான்பயிர் ஆன செங்கழுநீர் கரும்பு கொழுந்துக்கு நூறு குழிக்கு

4. அஞ்சு பணமும் வாழை மஞ்சள் இஞ்சி நூறு குழிக்கு இரண்டரை பணமும் கமுகு தென்னமரத்துக்கு தலை கூடின முதலிலே மரம் ஒன்றுக்கு அரைக்கால் பணமும் ஆட்டைக் காணிக்கைக்கு இருநூற்று இருபது பொன்னும் மகமை தலையாரிக்கத்துக்கு எண்பது பொன்னும் பட்டடைக்குடி ஆன செட்டிகள் கைக்கோளர் சேனை கடையார் வா.

5. ணியர் பேர்க்கு பேர் ஒன்றுக்கு இரண்டரைப் பணமும் இடையர் வலையர் கண்மாளர் குடிமக்கள்......... பறையர் பேற்க்கு பேர் ஒன்றுக்கு இரண்டு பணமும் புன்பயிற் செய்தால் புனத்துக்கு ஒரு பணமும் இம்மரியாதி இம்முதல் குடுக்க கடவோமாகவும் இது ஒழித்து வேறு புறமுதல் புதுவரி என்று குடுக்கக் கடவோம் அல்லவாகவும்.

6. இப்படிக்கு இக்கல்வெட்டின் படி செய்யாமல் இருந்தோர்க்கு உடன்பட்டு கல்வெட்டை அழித்து செய்வார்கள் உண்டானால் அவர்களைத் தீர விளங்கி மேற்படக் குத்தி கீழ்பட இழுத்துப் போடக்கடவோம் ஆகவும் இந்த கல்வெட்டை அழித்தவர்கள் கெங்கைக் கரையிலே கபிலையைக் கொன்ற பாவத்திலே போகக் கடவர்கள் ஆகவும் சுபஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகரப் பேரரசுக் காலத்தில் ஊர்கள்

பேராசிரியர் ப. சண்முகம்

மக்கள் குடியிருப்புப் பகுதிகள் கிராமம், ஊர், நகரம் எனப் பலவாக அழைக்கப்படுகிறது. கிராமம் என்ற வடமொழிச் சொல் பொதுவாக ஒரு பகுதியில் உள்ள மிகச்சிறிய குடியிப்புப் பகுதியைக் குறிக்கும் இடைக்காலக் கல்வெட்டுக்களை இக் குடியிருப்பு பகுதியைக் குறிக்கப் பயன்படுகிறது. ஆயினும் தமிழகத்தின் தொன்மையான வழக்குப்படி ஊர் என்ற சொல்லே அச்சிறிய குடியிருப்புப் பகுதியைக் குறிக்கும் இடைக்காலக் கல்வெட்டுக்கள் இக்குடியிருப்புப் பகுதியைக் குறிக்க ஊர் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளன. ஊர்பகுதியில் முக்கியமாக மக்கள் குடியிருப்பதற்கான குடிசைகள், வீடுகள் அல்லது பிற கட்டுமானங்கள் உள்ளன. குடியிருப்பில் உள்ள கட்டுமானங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கைக்கு ஏற்றாற் போல் சிறிய ஊர் / கிராமம் அல்லது பெரிய ஊர் / கிராமம் என அழைக்கப்படுகிறது. மேலும் பிராமணர்கள் குடியிருப்பு பிரம்மதேயம், சதுர்வேதிமங்கலம், அக்ரகாரம் என்றும், வணிகர்கள் குடியிருப்பு புரம், நகரம் என்றும் குறிக்கப்படுகிறது.

தமிழகத்தின் மிகத்தொன்மையான குடியிருப்புகள் புதியகற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாகக் கருதுகின்றனர். ஆயினும் இக்காலகட்டத்தைச் சார்ந்த முழுமையான குடியிருப்புக்கள் அகழாய்வு செய்யப்படவில்லை. இதனால் இக்காலத்தைச் சார்ந்த ஊர்களின் தன்மையை அறியமுடியவில்லை. இரும்பு காலத்திலும், ஆரம்ப வரலாற்றுக் காலத்திலும் ஏற்படுத்தப்பட்ட ஊர்களின் சில தன்மைகளை அறிய அகழாய்வுச் சான்றுகளோடு, கல்வெட்டு, இலக்கியச் சான்றுகள் துணை புரிகின்றன. பல்லவர், பாண்டியர், பேரரசுச் சோழர் கால ஊர்கள் பற்றிப் பல ஆய்வுகள் நடத்தப்பெற்றுள்ளன. இதனால் இக்கால ஊர்களின் பல பரிமாணங்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

இவ்வகையில் விஜயநகரக் காலத் தமிழகத்தில் நிலவிய முக்கிய ஊர்கள், நகரங்கள் ஆகியன இதுவரை ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை, தெ. வே. மகாலிங்கம் தம்முடைய நூலில் விஜயநகரகாலக் கிராமங்கள் ஊர்கள் பற்றிய ஆய்வு முடிவுகளைத் தந்துள்ளார்.[1] விஜயநகரக் கிராமங்களில் அமைந்துள்ள உழவு நிலங்களின் தன்மைகள், குளங்கள், இக்கிராமத்திற்குச் சேர்ந்த பிடாகைகள் ஆகியனவற்றைக் குறித்துள்ளார். மேலும் அக்காலக் கிராமங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டன என்றும் இதன் அடையாளமாக எல்லைக்கற்கள் நடப்பட்டிருந்ததையும் பதிவு செய்துள்ளார். இக்கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புக் கட்டுமானங்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். அக்காலக் கிராமங்களின் மக்கள் தொகையை மதிப்பீடு செய்யவும் அவர் முயன்றுள்ளார். விஜயநகரப் பேரரசில் இருந்த சில முக்கிய ஊர்கள், நகரங்கள் ஆகியவற்றையும் அவர் குறிப்பிட்டுள்ளார். விஜயநகரப் பேரரசின் பெரும்பகுதியை ஆய்வுக் களனாக எடுத்துக் கொண்டதால் இவராய்வில் தமிழ்நாட்டுப்பகுதிகள் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே உள்ளன.

தக்காணத்தை உள்ளடக்கிய விஜயநகரப் பேரரசின் முக்கிய ஊர்கள் மிகப் பலவாகும். இவ்வூர்கள் பற்றிய ஆய்வுக்கு கல்வெட்டுகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களுமே முக்கிய சான்றுகளைத் தருகின்றன. தொல்லியல் சான்றுகள் மிகப் பெரிய ஊர்கள், நகரங்கள், தலைநகரங்கள் ஆகியவற்றை அறியத்துணைபுரியலாம். இவ்வூர்களின் அமைப்பு, உட்கட்டமைப்பு, கட்டுமானங்கள் ஆகியன பற்றியும் மிகக் குறைவான ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேரரசின் தலைநகரான ஹம்பியின் அமைப்பு, கட்டுமானங்கள், மற்றும் விரிவாக்கம் ஆகியன பற்றி அண்மைக் காலங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[2] இங்கே பல ஆண்டுகள் அகழாய்வுகளும் கள மேற்பரப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு முடிவுகளும் வெளியிடப் பட்டுள்ளன. இதனால் தலைநகரமான ஹம்பியின் தோற்றம், அதன் வளர்ச்சி நிலைகள் ஆகியன பற்றியும் அறிகிறோம். நகரத்தைச் சூழ்ந்துள்ள மதில்கள், அதன் வாயில்கள், அதற்கு அக்காலத்தில் இடப்பட்ட பெயர்கள் ஆகியன பற்றியும் அறிய முடிகிறது. முக்கியமாக கிழக்கில் அமையப்பெற்ற வாயில் (பாகிலு) சிங்காரத ஹெப்பகிலு என அழைக்கப்பட்டது. அரசர்களும் பெருமக்களும் வாழ்ந்த வாழ்விடங்கள் அகழாய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அக்காலக் கட்டுமானங்கள் பலவற்றையும் அகழ்வாராய்ச்சியாளர்கள் நன்கு ஆய்ந்துள்ளனர். தலைநகரிலுள்ள சாலைகள், கோவில்கள், மற்றும் அவை சார்ந்த கட்டுமானங்கள் பலவற்றைப் பற்றி கல்வெட்டுகளிலிருந்து அறியவரும் செய்திகளையும் தொகுத்து அளித்துள்ளனர். தலைநகருக்குத் தேவையான நீராதாரங்கள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் இவை சார்ந்த கட்டுமானங்கள் யாவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் விஜயநகர காலத்தில் நிலவிய ஊர்கள், நகரங்கள், பெருநகரங்கள் இவ்வகை ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. காஞ்சிபுரம், படவேடு, திருவண்ணாமலை, மதுரை, சிதம்பரம் போன்ற ஊர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போதும் இவை வரலாற்று முனைப்பில் ஆராயப்பட்டுள்ளன. நகராக்கம், அல்லது வணிகப்பெருக்கம் என்ற தன்மைகளை முன்வைத்தே இவ் ஆய்வுகள் நடத்தப்பெற்றுள்ளன. இவ்வூர்களின் பகுதிகள், மற்றும் இவை சார்ந்த கட்டுமானங்கள், வளர்ச்சி போன்ற நிலைகளில் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தில் விஜயநகரப் பேரரசு நிலை கொள்ளுவதற்கு முன்பிருந்த ஊர்களின் கட்டுமானங்கள், விளைநிலங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகள் மற்றும் நீராதாரங்கள், காடுகள் போன்றவற்றைச் சில ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஊர் என்ற அமைப்பின் தோற்றம் அவற்றை ஆட்சி செய்த நிருவாகசபைகளின் தோற்றம் ஆகியன பற்றியும் ஆய்வுகள் நடத்தப் பெற்றுள்ளன. இருப்பினும் ஊர்களின் வளர்ச்சி குறித்த வரலாற்று ஆய்வுகள் திருப்திகரமாக அமையவில்லை. எனவே, விஜயநகர ஆட்சிகாலத்தில் தமிழகத்தில் நிலவிய ஊர்கள் பற்றிய முன்னோடி ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

மக்கள் குடியிருப்புக்கள் உள்ள பகுதி பொதுவாக ஊர் என அறியப்பட்டாலும், குடியிருப்பு அல்லாத பகுதிகள் பலவற்றை உள்ளடக்கியதே ஊர் ஆகும். இவற்றில் விளைநிலங்கள், சாலைகள், குளம், ஏரி, வாய்க்கால்கள் போன்றவையும் அடக்கும், கோவில்கள், மற்றும் இன்ன பிற பொதுக்கட்டு மானங்களையும் சேர்க்கலாம்.

விஜயநகர ஆட்சிக்கு முன் வழக்கிலிருந்த பெரும்பாலான ஊர்கள் இக்காலத்திலும் நிறைபெற்றுள்ளன. அக்கால மக்கள் வாழ்விடங்களில் ஏற்பட்ட வரலாற்றுத் தொடர்ச்சியினால் இந்நிலை ஏற்பட்டதாகக் கருதலாம். ஆயினும் இக்காலக் கல்வெட்டுக்கள் ஊரைக் குறிக்க கிராமம் என்ற சொல்லையே அதிகம் பயன்படுத்தியுள்ளன. இவ்வூர்களில் விவசாயக் குடிமக்கள் பெரும்பாலானவர்களாக இருந்துள்ளனர். சில ஊர்களில் தெலுங்கு மொழிபேசும் விவசாயிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஊர்களில் அமைந்துள்ள பகுதிகளைக் கல்வெட்டுக்களில் சில குறிப்பிடுகின்றன. வரிவிலக்களிக்கப்படும் ஊர்களை விவரிக்கும்போது இவ்விவரங்கள் தரப்பட்டுள்ளன. வெண்பாநாட்டிலுள்ள காட்டுவரி கிராமத்தின்மீது வருவாய் நிர்ணயம் செய்யப்பட்ட விவரங்களைப் பதிவு செய்யும் ஒரு கல்வெட்டில்[3] நத்தம், படுகை என்ற ஊர்ப்பகுதிகளைக் குறிக்கின்றன. இதனால் இவ்வூர்களில் குடியிருப்பு மனைகள் உள்ள பகுதியான நத்தம், மற்றும் ஆற்றை ஒட்டிய படுகை நிலங்கள் இருந்தன என்பது புலனாகும். மேலும் இவ்வூரில் மகமை வசூலிக்கப்பட்டுள்ளதால், வணிகர்களும் இதர வணிகப் பொருள் உற்பத்தியாளர்களும் வாழ்ந்திருக்கலாம். பொதுவாக மகமை வசூலிப்பதும் கொடுப்பதும் வணிகர்களிடம் உள்ள வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தம் எனக் குறிக்கப்படும் பகுதியே மக்கள் குடியிருப்புகளைக் கொண்ட ஊர்ப்பகுதியாகும். பிற கல்வெட்டுக்கள் ஊர் நத்தத்தில் குடியமர்த்தப்பட வேண்டிய குடிகளைக் குறிப்பிடும். பொதுவாக இப்பகுதி விளைநிலங்களைவிட சற்று மேட்டுப்பாங்கான இடத்தில் அமையப் பெற்றிருக்கும். ஊரில் உள்ள விளைநிலங்கள் பலவாறு இருந்தபோதும் முக்கியமான இரண்டு வகையான நிலங்களே அதிகமாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. நஞ்சை நிலம், புஞ்சை நிலம் ஆகிய இவ்விரண்டு நிலங்கள் அவ்வவ் ஊரின் நிலத்தன்மைக்கு ஏற்றாற்போல் அமையப்பெற்றுள்ளன. செய்த்தலைத் திடல்[4], படுகைத்திடர்[5], ஆகிய விளைச்சல் குறைந்த நிலங்கள் உள்ள கிராமங்களைப் பற்றிச் சில கல்வெட்டுக்கள் உரைக்கின்றன. சில ஊர்களில் குளம் போன்ற நீராதாரங்களும் அவற்றின் ஒரு பகுதியான குளப்பரப்பும் இருந்துள்ளன[6].

கிராமங்களின் எல்லைகள் ஒழுங்காக வரையறுக்கப்பட்டுள்ளன. எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுக்கள் 'நாற்பாற் கெல்லைகளுள்பட்ட' என்ற சொற்றொடரால் சுட்டுகின்றன[7]. மற்ற இடங்களில் 'ஆக இசைந்த பொருநான்கெல்லைக்குட்பட்ட'[8], 'இந்த ஊர்களில் நான்கு எல்லைக்கு உள்பட்ட'[9] என்ற சொற்றொடர்களால் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றன. இவ்வெல்லைகள் வரையறுக்கப்படுவதால் ஒரு கிராமத்தின் மொத்தப் பரப்பளவை துல்லியமாக அறியலாம். இதன் மூலம் அவ்வூர் நிலங்கள் மீது சரியான வருவாய் நிர்ணயம் செய்ய இயலும்.

இக்காலத் தமிழகத்தில் பிராமணர் குடியிருப்புகளும் தொடர்ந்து நிலைபெற்றுள்ளன. இவற்றில் பல சதுர்வேதிமங்கலங்கள் அடங்கும். கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1517) விழும்புரம் ஒரு சதுர்வேதிமங்கலமாக இருந்துள்ளது. இச் சதுர்வேதிமங்கலம் சர்வமானிய இறையிலியாகக் கோவிலிக்குத் தரப்பட்டது. சோழர்காலப் பெயரான ஜநநாதச் சோழச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயராலேயே அவ்வூர் அழைக்கப்பட்டுவந்துள்ளது.[10]

புதிய ஊர்கள் ஏற்படுத்தப்பட்டு பிராமணங்களுக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளதையும் இக்காலத்திற் காண்கிறோம். இவ்வூர்களில் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் வழங்கப்படாமல் "புரம்" என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளன. புரம் என்ற சொல் பொதுவாக வணிகர் குடியிருப்புக்களுக்குத் தரப்பட்ட அடைமொழியாகும். ஆயினும் இக்காலத்தில் இம்மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். மாவண்டூர் என்ற பழமையான ஊர் ராஜசேகர கம்பராயபுரம் என்று 1618இல் பெயர் மாற்றம் பெற்று பிராமணர்கள் (மஹாஜநம்) வசம் விடப்பட்டுள்ளது.[11] வணிகர்களும் குடியிருப்பில் வசித்துள்ளதாகத் தெரிகிறது. கிருண்ஷதேவராயர் காலத்தில் (1519) விட்டலாபுரம் என்ற கிராமம் உருவாக்கப்பட்டது. இவ்வூரின் பகுதிகளில் தொழில் வகுப்பாரான நெசவளார்கள், எண்ணை ஆட்டும் செக்கார் குடியமர்த்தப்பட்டனர்[12]. இக்குடியிருப்புகளில் விளைநிலங்கள், வீடுகள், குளங்கள், பயிரிடப்படாத நிலங்கள் போன்ற பகுதிகள் இருந்துள்ளன.

சங்ககாலம் முதல் சிறப்புற்று விளங்கிவந்த நகரம் காஞ்சிபுரம் ஆகும். விஜயநகரப் பேரரசுக்காலத்திலும் இந்நகரத்தின் பெருமை குன்றவில்லை. சோழர் காலத்தின் இறுதிப்பகுதியில் கிழக்கே அமைந்த அத்தியூரை இணைத்துக்கொண்டு தன் பரப்பளவைப் பெருக்கிக்கொண்டது. பல்லவர், சோழர்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பகுதிகள் பலவும் விஜயநகர காலத்தில் நிலவியுள்ளன. கல்வெட்டுக்கள் பல தெருக்களையும் பகுதிகளையும் குறிப்பிடுகின்றன. திருவேகம்பம் பெருந்தெரு, மேலைத்தெரு, கீழைத்தெரு ஆகியன காஞ்சிப்புரத்தில் மேற்குப் பகுதியில் உள்ள பிள்ளைபாளையத்தில் அமைந்துள்ளன. காஞ்சிபுரத்தில் உள்ள மற்றொரு தெருவான நல்லகம்பக் பெருந்தெருவை மற்றொரு கல்வெட்டுக் குறிக்கிறது. இவ்வூரில் பொகசுரன் பேட்டை அமையைப் பெற்றிருந்தது. விஜயநகர காலத்தில் கோவில்கள் பெரிதாக்கப்பட்டன. இதன் விளைவாக அக்கோவில்களை ஒட்டிய பல பகுதிகள் மறைந்து, கோவில் வளாகமாயின. மேலும் இக்கோவில்களை ஒட்டிய சாலைகளும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகையான ஊர்ப்பகுதி மாற்றங்கள் திருவண்ணாமலை, மதுரை, சிதம்பரம் ஆகிய ஊர்களிலும் ஏற்பட்டுள்ளன.

தமிழகத்தின் வடபகுதியில் அமைந்த படைவீடு (படவேடு), சம்புவராயர்களின் தலைநகராக இருந்துள்ளது. விஜயநகரப்பேரரசு ஏற்படுத்தப்பட்ட பின்னர், படவேடு ராஜ்யத்தின் தலைநகராக்கப்பட்டது. பெருமக்கள் குடியிருப்பதற்கான கட்டுமானங்கள், கோட்டைப்பகுதிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புக்காக மதில்களும் கட்டப்பட்டன. கோவில்களும், பொதுமக்கள் குடியிருப்புக்கான கட்டுமானங்களும் கட்டப்பட்டன. இவைபற்றி கல்வெட்டுக்கள் சில செய்திகளைத் தருகின்றன. இவ்வூரில் தமிழக அரசின் தொல்பொருள் துறை அகழாய்வு செய்தது. இச்சிறு அகழாய்வின் மூலம் சில செய்திகள் தெரியவந்துள்ளன என்றாலும் இன்னம் பெரிய அளவில் அகழாய்வு நடத்தப்பெற்றால் முக்கிய தடயங்கள் கிடைக்கலாம். இதே போன்ற முக்கிய ஊர்களான சேந்தமங்கலம், மதுரை, தஞ்சாவூர் ஆகிய ஊர்கள் பற்றிய முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதேபோல நாயக்கர்களின் தலைநகரங்களில் வெஞ்சி, வேலூர் பகுதிகளும், கட்டுமானங்களும், கோட்டை கொத்தளங்களும், அதன் பகுதிகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

விஜயநகர பேரரசில் 15ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் புதிய வணிக நகரங்கள் உருவாக்கப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தைப் பெருக்குவதற்கு இந்நகரங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் பாளையம், மற்றும் பேட்டை என்ற இரண்டு அமைப்புகள் முக்கியமானவை. இவ்விரண்டு ஊர்களும் விஜயநகர காலத் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டன. புதிய குடியிருப்புக்கள் பலவும் இக்காலத்தில் உருவாக்கப்பட்டன.

தமிழ்க் கல்வெட்டுக்கள் பாளையம் என்பதை ஊர் குடியிருப்புகளில் ஒன்றெனக் காட்டுகின்றன. ஆயினும் பாளையம் என்ற சொல், அணிவகுப்பு அல்லது ஒழுங்குமுறை என்ற பொருள்களைத் தரும். இதனால் பாளையம் என்பதை படைப்பிரிவாகக் கருதினர். பாளையத்தின் உரிமையாளர் பாளையக்காரர் எனப்பட்டனர். இவர்கள் ஒரு படைப்பிரிவுக்குத் தலைவராகக் கருதப்பட்டனர். ஆயினும் ஆரம்பகால விஜயநகரக் கல்வெட்டுக்கள் இப்பொருளில் வழங்கப்படாமல் மக்கள் குடியிருப்பு அல்லது உற்பத்தியாளர் குடியிருப்பு என்ற பொருளிலேயே வழங்கிவந்துள்ளன.

இப்பாளையங்கள் யாவும் விஜயநகர அரசின் ஆதரவால் ஏற்படுத்தப்பட்டன. இங்கெல்லாம் வணிக சமூகத்தவர் குடியேற்றப்பட்டனர். இவ்வூர்களில் குடியானவர்களும் கூகுடியேற அனுமதிக்கப்பட்டனர். பழம் ஊர்களில் சிலவற்றைப் பாளையங்களாக மாற்றியமைத்துள்ளனர். வடிவுடையமங்கைபுரம் என்ற வணிகநகரம், தகடபாதி பாளையம் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுதராயர் காலத்தில் (1530) மாற்றப்பட்டது[13]. இவ்வூர் கொக்கராயன் பேட்டையில் (சேலம் மாவட்டம்) உள்ள பிரம்மீஸ்வரமுடைய தம்பிரானார் கோவிலுக்கு வழங்கப்பட்டது.

வேளனேந்தல் (திருவண்ணாமலை மாவட்டம்) என்ற ஊர் ஒபளராஜரால் விலைக்கு வாங்கப்பட்டு கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்டது14. ஆயினும் பலகாலம் இப்பகுதியில் மக்கள் குடியேறவில்லை. இதனால் 1552 இல் இப்பகுதி தேவராய பாளையமாக மாற்றப்பட்டது. இதனால் பல பகுதியைச் சார்ந்த குடிமக்கள் இப்பாளையத்தில் வந்து குடியேறும் நிலை உருவாக்கப்பட்டது. குடியானவர்களும் வணிகப்பொருள் உற்பத்தியாளர்களும் இப்பாளையத்தில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கு 5 ஆண்டுகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

நரசிங்கபுரத்தில் 1560இல் எக்கப்ப நாயக்கர் பேரால் ஒரு பாளையம் நிறுவப்பட்டது (திருவண்ணாமலை மாவட்டம்). இங்கு நானாதேசி வியாபாரிகள் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. சூரப்பநாயக்கர் அய்யனுக்காக, கனகப்ப நாயக்கரால், 1560 இல் மணலூர்ப்பேட்டையில் (திருகோயிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்) ஒரு பாளையம் அமைக்கப்பெற்றது[15]. மணலூர் தெருந்த பிள்ளையார் என்பவருக்கு இப்பாளையம் தரப்பட்டது.

பேட்டை எனப்படும் ஊர் மிகப்பழங்காலம் முதல் தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. முக்கியமாக சோழர் ஆட்சியில் பேட்டைகள் இருந்துள்ளன. இப்பேட்டைகளும் விஜயநகர ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்தும் வழக்கில் இருந்துள்ளன. வீரராஜேந்திரசோழப் பேட்டை[16]. சோழர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு விஜயநகரப் பேரசுக் காலத்திலும் வழக்கில் இருந்த ஒன்றாகும். பழங்காலத்தில் பேட்டையின் பரிமாணங்களை அறிய இயலவில்லை. ஆயினும் குடியிருப்புப்பகுதியாக இருந்தபோதும், வணிகர் குடியிருப்புகளையும் அவர்கள் தொழிற்கூடங்களையும் உள்ளடக்கியதாக இருந்திருக்கலாம். விஜயநகரப்பேரரசுக் காலத்தில் இப்பேட்டைகள் தொழிற்கூடங்களோடு உள்ளூர் அங்காடிகள், சந்தை ஆகியவற்றோடு இருந்துள்ளன. இக்காலத்தில் அரசின் அனுமதியோடு பல புதிய பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஊர்களில் தனிப் பேட்டைகள் காணப்படுகின்றன. ஆயினும் சில ஊர்களில் அவ்வூரின் ஒருபகுதியாக பேட்டை அமையைப் பெற்றுள்ளது. பேட்டைகளில் மொத்தப் பரப்பளவு பற்றிச் சான்றுகள் சரியான தகவல்களைத் தரவில்லை. ஆயினும் சிதம்பரத்தில் உள்ள ஒரு கல்வெட்டு மூலம் 6 மா பரப்பளவு நிலத்தில் பேட்டை அமையைப் பெற்றிருந்ததை அறியலாம். இப்பேட்டை 1596இல் சிதம்பரத்தில் ஏற்படுத்தப்பட்டது. இப்பேட்டையின் வருமானத்திலிருந்து பூரம் திருவிழா நடத்தப்படவேண்டும் என விதிக்கப்பட்டது.[17]

விஜயநகரப் பேரசில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ப பல பேட்டைகள் உருவாக்கப்பட்டன. இரண்டாம் தேவராயர் காலத்தில் மூன்று பேட்டைகள் உருவாக்கப்பெற்றன. திருத்துரையூர் தனியூராக அமையப் பெற்றிருந்தது. பலகாலம் இவ் ஊரில் மக்கள் குடியிருப்பு இல்லாமல் இருந்தது. புப்பரசரால் 1442 இல் இவ்வூர் பேட்டையாக மாற்றப்பட்டு பேரரசர் பேரால் தேவராயன் பேட்டை என அழைக்கப்பட்டது.[18] இப்பேட்டையில் கைக்கோள நெசவாளர்கள் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் இருபிரிவாகக் கருதப்பட்டனர். முதல் பிரிவில் அவ்வூரில் நிலையாக வாழும் நெசவாளர்கள் மற்ற பிரிவினர் பரதேசிகள் என அழைக்கப்பட்ட நெசவாளர்கள். இவ்விரண்டாம் வகை நெசவாளர்கள் தொழில் நிமிர்த்தம் அவ்வப்போது வந்து செல்லும் நெசவாளர்களாகக் கருதலாம். அல்லது வேற்றூரிலிருந்து வந்த நெசவாளர்கள். இவர்களுடன் பட்டடைக்குடி எனப்படும் தொழில் வகுப்பாரும் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் ஆறகளூருக்கு வடக்கே இம்மடிதுலுக்கண நாயக்கன் பேட்டை ஏற்படுத்தப்பட்டது.[19] இப்பேட்டை நெசவாளர்களைக் குடியமர்த்த இம்மடிதுலுக்கண நாயக்கனால் அமைக்கப்பட்டது. இங்கு குடியேறும் கைக்கோள நெசவாளர்கள் எச்சோறு, பழவரி, புதுவரி ஆகிய வரிகளைச் செலுத்தவேண்டும். இவ்வரிகள் இவர்களுக்காகக் குறைக்கப்பட்டன. ஆண்டொன்றுக்கு மலையான் கட்டுகுத்தகையாகச் ஒரு தறிக்கு 3 பணமும், ஒரு ஏருக்கு 3 பணமும் செலுத்த வேண்டும். இப்பேட்டையில் குடிபுகுந்த கைக்கோளர்கள் நில உடைமையாளர்களாக ஆக்கப்பட்டு, நெசவுத்தொழிலோடு விவசாயத்தையும் மேற்கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையப்பநாயக்கர் அரண்டநல்லூரின் வையப்பநாயக்கரய்யன் பேட்டையை ஏற்படுத்தினார்.[20] இப்பேட்டை, அரகண்டநல்லூர் கோவிலுக்குச் சொந்தமான வெச்சநாயக்கர்நல்லூரியின் பிடாகை ஒன்றில் அமையைப் பெற்று. பாலூரில் இங்கப்ப அய்யன், ஏகாம்பரநாதன் பேட்டையை ஏற்படுத்தினார். இங்கே தறிகள் ஏற்படுத்தப்பட்டு நெசவாளர்கள் குடியமர்த்தப்பட்டனர்.[21]

சில பேட்டைகளில் அங்காடிகள் அமைக்கப் பெற்று பொருள் விற்பனை நடைபெற்று. கூகையூரில் உள்ள திருப்பணிப்பேட்டையில் உரத்தபாப்பு நாயக்கரால் ஒரு சந்தை ஏற்படுத்தப்பட்டது. இச்சந்தையில் வசூலிக்கப்பட்ட வருமானம் கோவிலில் பூசை செய்வதற்குத் தானமாக அளிக்கப்பட்டது. இப்பகுதியின் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. கூகையூரில் இரண்டு சந்தைகள் இருந்தன.[22] திண்டிவனம் பேட்டையில் புதன்கிழமைகளில் சந்தை கூடவேண்டும்.[23] இந்த சந்தையில் உள்ளூர் வணிகர்களோடு 56 தேச வணிர்களும் வியாபாரத்தில் கலந்து கொண்டனர். இங்கு வசூலிக்கப்படும் மகமை கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்டது.

விஜயநகர காலத்தில் தமிழகப்பகுதிகளில் இருந்துள்ள ஊர்களில் பல, முற்காலங்களில் சிறப்போடு திகழ்ந்தவையாகும். அவ்வூர்களின் சில பகுதிகள் இக்காலத்தில் மாற்றம் பெற்றுள்ளன. சில ஊர்களின் பரிமாணங்கள் மாறுப்பட்டுள்ளன. சில ஊர்கள் புதியனவாக உருவாக்கப்பெற்றுள்ளன. இப் புதிய ஊர்கள் தமிழ்நாட்டின் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. முக்கியமாக ராஜ்யங்களின் தலைமை இடங்களான படவேடு, வழுதிலம்பட்டு போன்ற சிறிய ஊர்கள் தற்போது முக்கியத்துவம் பெறலாயின. இவை அக்கால அரசுகளின் கொள்கையின் வெளிப்பாடாக இருக்கலாம். மக்கள் பெருக்கத்தின் விளைவாகவும் புதிய ஊர்கள் சில உருவாக்கப்பட்டிருக்கலாம். சில ஊர்களில் வேற்றும்புலமக்கள் அரசின் துணையோடு குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் தெலுங்கு, கன்னட மொழிக் குடும்பத்தாரும் அடங்குவர். தமிழகத்தின் பல பகுதிகளில் இவர்கள் குடியமர்த்தப்பட்டனர். காஞ்சிபுரம் போன்ற பெருநகரங்களும் இக்காலகட்டத்தில் மாறுதலுக்குள்ளாயின. புதிய பகுதிகள் இவ்வூர்களோடு சேர்க்கப்பட்டு உள்கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்களால் முந்தைய ஊர்களில் சில பகுதிகள் மறைந்தன. தொழில் செய்வேருக்கென சில புதிய ஊர்கள் உருவாக்கப்பட்டன. இதனால் ஒட்டுமொத்த சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்படலாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்:**

1. T. V. Mahalingam. Administration and Social *Life Under Vijayanagar*, Vol, II University of Madras, Chennai, 1975, pp. 1-10
2. P. Shanmugam and Srinivasan Srinivasan, *Recent Advances in Vijayanagar* Studies, Nea Era Publicatoin, 2006 pp, 75-199.
3. SII, 24, 464.
4. IPS, 754; SII. 23, 148.
5. SII, 24, 411
6. IPS, 737
7. SII, 24, 377; SII, 6, 71;
8. IPS, 746.
9. SII, 24, 409.
10. SII, 6, 70.
11. *ARE, 1964-179.*
12. *ARE, 1933-117*
13. *ARE, 1913-465.*
14. *ARE, 1943-88.*
15. *ARE, 1938-470.*
16. *ARE, 1914-170.*
17. *ARE, 1913-360.*
18. *ARE, 1925-429.*
19. *ARE, 1913-409*
20. *ARE, 1935-164.*
21. *ARE, 1933-41.*
22. *ARE, 1918-112.*
23. *ARE, 1905-30.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகரப் பேரரசுக் காலத் தொழில்கள்

பேராசிரியர் ப. சண்முகம்

விஜய நகரப் பேரரசு ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் பொருளாதார நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. இப்பொருளியல் மாற்றங்களின் ஒரு முக்கிய தன்மையாகத் தொழில்கள் வளர்ச்சி யுற்றதைக் கருதலாம். பழங் காலத்திலிருந்து நடைபெற்றுவந்த தொழில்கள் யாவும் இக்காலத்திலும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின. என்றாலும் விசயநகரப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட ஆந்திரம், கருநாடகம் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் சில பண்புகளையும் இக்காலத் தமிழகம் பெற்றது. இத்துடன் வணிகப்பொருள்கள் உற்பத்தியும் அதிகரித்தது. இவ்வுற்பத்திப் பெருக்கத்தின் விளைவாக உள்நாட்டு, அயல் நாட்டு வணிக வளர்ச்சியேற்பட்டு அக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்கள், நகரங்கள் மற்றும் துறைமுக நகரங்கள் செழித்தன. இவ்வளர்ச்சியாற் சில சமுதாய மாற்றங்களும் ஏற்பட்டன.

இக்காலத்தில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி பற்றி வரலாற்றறிஞர்கள் பலர் சென்ற நூற்றாண்டிலேயே ஆய்வுகள் நடத்தியுள்ளனர். பி.ஏ.சலதோர்[1], ஏ.அப்பாதுரை[2], தெ.வெ.மகாலிங்கம்[3], விஜயாராமசாமி[4] போன்றோர் தம் நூல்களில் இதுபற்றி ஆய்ந்துள்ளனர். அக்காலத்தில் நிலவிய தொழில்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றின் முக்கிய தன்மைகளை விவரித்துள்ள இம்முன்னோடி ஆய்வுகள் ஒருவகைப்பட்டவை. கருநாடகம், ஆந்திரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய விசயநகரப் பேரரசின் தொழில்வளர்ச்சியோடு தமிழகப் பகுதிகளில் நிலவிய தன்மைகளையும் விவரித்துள்ளனர். இதனால் மேற்கண்ட ஆசிரியர்களின் நூல்களில் தமிழகத்தொழில் வளர்ச்சிபற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

தமிழகத்தில் விசயநகரப் பேரரசுக் காலத்தில் ஏற்பட்ட தொழிற்பெருக்கத்திற்கு பல காரணங்கள் தூண்டுதலாயிருந்தன. விசயநகர அரசர்கள் தொழில்கள் முன்னேற்றத்திற்காகத் தொழிற்கூடங்களை ஏற்படுத்துவதற்கும், அங்காடிகள் அமைப்பதற்கும் சில சலுகைகளை வழங்கினர். இதனால் உள்ளூர் வணிகர்கள் தம் வணிகத்தைப் பெருக்க முற்பட்டனர். இதேகாலகட்டத்தில் அயல்நாட்டு வாணிகர்கள் பலர் தென்னிந்தியாவிற்கு வந்தனர். தமிழகத்துடனான அரேபியர்களின் குதிரை வணிகம் பல நூற்றாண்டுகளாக வெகு சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே ஐரோப்பியர்களும் ஆங்கிலேயர்களும் முறையான வணிகத்தில் ஈடுபட்டனர். இவர்கள் முக்கியமாக மிளகு, பருத்தி ஆடைகள், கனிப்பொருள்கள் மற்றும் முத்துக்கள் ஆகிய வணிகத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாகத் தென்னிந்தியப் பகுதிகளில் அதிகமான பொருள் உற்பத்தி செய்யப்பட்டது.

## தொழில்கள்

இக்காலத்தில் பல தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. வேளாண் தொழிலோடு, வணிகப்பொருள் உற்பத்தித் தொழில்களும் இக்காலத்தில் நடைபெற்றுள்ளன. மிளகு போன்ற வேளாண்பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகமுக்கியத்துவம் வாய்ந்த பொருள்களாகும். பருத்தி, கரும்பு போன்ற வேளாண்பொருள்கள், துணி, வெல்லம் போன்ற பொருள்களாக மாற்றம் பெற்ற பின்னர் இலாபம் தரும் வணிகப்பொருள்களாகக் கருதப்பட்டன. பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களில் பொருள்கள் ஆக்கப்பட்டபின்னர் அவையும் வணிகமுக்கியத்துவம் பெற்றன. இவ்வாறு வணிகமுக்கியத்துவம் பெற்ற பொருள்களை பயனீட்டாளரிடம் கொண்டுசெல்லும் வணிகர்கள், கடைவைத்து விற்பனை செய்வோர் ஆகியோரையும் தொழில் செய்வோராகக் கருதலாம்.

இத்தொழில்களில் முதன்மைத் தொழிலாகக் கருதவேண்டியது, மிகப் பழங்காலம் முதல் வழக்கிலிருந்துள்ள வேளாண்மையாகும். பல குறுந்தொழில்களின் துணையோடும் தொன்மை மரபுப் பண்புகளோடும் இத்தொழில் நடைபெற்றுள்ளது. அக்காலத்தில் பயன்படுத்திய விவசாயக் கருவிகள், நிலத்தைப் பண்படுத்தும் முறைகள் ஆகியனவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி அறிய இயலவில்லை. விசயநகரப்பேரரசு தமிழகத்தில் கால்கொள்ளுவதற்கு முன்பு வழக்கிலிருந்த தொழில்நுட்பங்கள் பலவும் இக்காலத்திலும் பின்பற்றப்பட்டன. புதிய தொழில் நுணுக்கங்களைப்பற்றி விரிவாக அறிய இக்காலக் கல்வெட்டுச் சான்றுகள் துணைபுரியவில்லை. நிலங்கள் பண்படுத்தப்படுவதுடன், வேளாண்மைக்கு ஏற்ற நிலங்களாக மாற்றப்பெற்றன. குடியானவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டு விவசாய உற்பத்தி பெருக்கப்பட்டது. விவசாய நிலம் பொதுவாக நன்செய், புன்செய், தோட்ட நிலம் என மூவகையாகப் பகுக்கப்பட்டிருந்தது.

கார், பாசனம் என்ற முறையில் இரு சாகுபடிகள் செய்தனர். முக்கிய பயிராக நெல் பயிரிடப்பட்டது. வரகு, தினை, பயறு அவரை வகைகள் பயிரிடப்பட்டன. கரும்பு, பருத்தி, எண்ணைவித்துக்கள் ஆகியனவும் பயிரிடப்பட்டன. தமிழகத்தின் பெரும்பாலான ஊர்களில் உள்ள பயிரிடக்கூடிய நிலங்களில் விவசாயம் செய்யப்பெற்றது.

மிகப் பழங்காலமுதல் வளர்ச்சிபெற்ற தொழில்களில் முக்கியமான மற்றொரு தொழில் மண்பாண்டங்கள் வனையும் தொழிலாகும். விஜயநகரப் பேரரசுகால ஊர்களில் முக்கியமான ஊர்களில் அகழாய்வுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்பெறவில்லை. படைவீடு, சேந்தமங்கலம், திருக்கோயிலூர் போன்ற சில ஊர்களில் நடைபெற்ற சிறு அகழாய்வுகளில் விஜயநகரக் காலத்தைச் சார்ந்த மண்பாண்டங்களும், மண்பொருள்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவை பற்றிய விரிவான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. எனவே மண்பொருள்களின் முக்கிய இயல்புகளை நம்மால் அறிய முடியவில்லை. வீடுகள் கட்டுவதற்கான செங்கற்கள், தள ஓடுகள், மற்றும் வீட்டில் பயன்படுத்தும் மண்பாண்டங்கள் ஆகியவற்றை இவ் ஆய்வுகள் வெளிக்கொணர்ந்துள்ளன.

மண்பாண்டம் வனையும் குயவர்கள்மீது விலக்களிக்கப்பட்ட திரிகை ஆயம் (1405), குசவர் ஊழியம் (1497), குசத்துறை (1494) ஆகிய வரிகளைப்பற்றிச் சில கல்வெட்டுகள்[5] குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகள் மூலம், இலுப்பப்பட்டு, திருமழபாடி, திருச்செங்காட்டங்குடி, லால்குடி, எலவானாசூர், பெண்ணாடம், ஸ்ரீமுஷ்ணம், கொருக்கை ஆகிய பல ஊர்களில் இத்தொழில் சிறப்பாக நடைபெற்றுள்ளது என அறியலாம். ஆயினும் இவர்களின் தொழில்முறை பற்றியும், விற்பனைக்குட்படுத்தப்பட்ட மண்கலங்கள் ஆகியன பற்றியும் விவரங்களை அறிய இயலவில்லை. இப்பாண்டங்களை உள்ளூர் அங்காடிகளிலோ, தொலைதூரங்களுக்கு எடுத்துச் சென்றோ விற்பனை செய்ததைப் பற்றிய கல்வெட்டுகளில் அதிக விவரங்கள் இல்லை. ஆயினும் கோவில்களுக்குத் தேவையான மண்பாண்டங்களைச் செய்து தந்துள்ளமை பற்றிச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவற்றைச் செய்தளிக்கும் தொழிலாளர்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. இக்குயவர்கள் திரிகை ஆயம் எனப்பட்ட வரி செலுத்தியுள்ளனர். இவ்வரி மண்கலன்கள் செய்யப்பயன்படும் திரிகை எனப்பட்ட வட்டச் சக்கரத்தின் மீது விதிக்கப்பட்டதாகும். எனவே இவர்களாற் செய்யப்பட்ட மண்கலன்கள் மற்றவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு அதன்மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வரி செலுத்தியிருக்கலாம். சில ஊர்களில் இவர்கள் பணி ஊழியமாகக் கருதப்பட்டிருக்கலாம். இவ்வூழியத்திற்காக ஊர்மக்கள் மானியம் அளித்திருக்கலாம்.

இக்காலத்தில் வணிகநோக்கில் சிறப்பான தொழில் துணி உற்பத்தியாகும். நெசவாளர்கள் இத்தொழிலைச் செய்தனர். தமிழகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யப்பட்ட ஆடைகள் மிக முக்கியமான வணிகப்பொருளாகக் கருதப்பட்டன. பழங்காலமுதல் தமிழ்நாட்டு ஆடைகள் இந்தியாவின் பல பகுதிகளுக்கும், கடல் கடந்த நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. விஜயநகரப் பேரரசு காலத்திலும் தமிழகத்துணிகளுக்கு மற்ற பகுதிகளில் நல்ல வரவேற்பு இருந்திருக்கலாம். நெசவாளர்களில் சாலியர், கைக்கோளர், ஆகிய இரு பிரிவினர் முக்கியமானவர்கள். சேணியர், நியாயத்தார், சேடர், கோலியர் ஆகிய பிரிவினர்களும் துணி நெய்வதில் ஈடுபட்ட நெசவாளர்கள். இவர்களால் நெய்யப்பட்ட சில துணிவகைகளைப்பற்றிக் கல்வெட்டுக்கள் குறிப்பிட்டாலும் அதன் முக்கிய விவரங்கள் புலப்படவில்லை. இவர்கள் பல ஊர்களில் குடியிருந்து துணிகளை உற்பத்தி செய்துள்ளனர். முக்கியமாக காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, தேவிகாபுரம், திருவாமத்தூர், மடம், புலிப்பர்கோவில், பிரம்மதேசம், எலவானாசூர், விரிஞ்சிபுரம், ஸ்ரீமுஷ்ணம், வாலிகண்டபுரம் ஆகிய பல ஊர்களில் குடியிருந்து தம்தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர்களால் நெய்யப்பட்ட ஆடைகள் தமிழகத்தின் பல சந்தைகளில் முக்கிய விற்பனைப் பொருளாக இருந்துள்ளது. பருத்திப் புடைவைகள் சாமளாபுரம், தணாயக்கன்கோட்டை, துவரங்குறிச்சி, தாரமங்கலம் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டன.[6] பல ஊர்களிலிருந்து இப்புடைவைகள் விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டன. இவற்றின் மீது பெறப்பட்ட வரிப்பணம் சில கோவில்களுக்குத் தானமாகத் தரப்பட்டுள்ளது. நெசவுத்தொழில் முன்னேற்றத்திற்கு அக்கால அரசும், கோவில்களும் துணைபுரிந்துள்ளன. இவர்கள் புதிய நெசவாளர் குடியிருப்புகளை ஏற்படுத்த சலுகைகளை வழங்கினர். இக்குடியிருப்புகளில் குடியேறும் நெசவாளர்களுக்கு வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது.

உலோகப் பொருள் உற்பத்தித் தொழில் இக்காலத்தில் நடைபெற்ற மற்றுமொரு சிறப்பான தொழிலாகக் கருதலாம். தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களில் பொருள்களைச் செய்தபோதும் அப்பொருள்களின் விவரங்கள் சரியாகத் தெரியவில்லை. மேலும் இப்பொருள்கள் விற்பனை செய்யப்பட்டதற்கு சான்றுகள் மிகக்குறைவே. இரும்புப் பொருள்கள் தம்மம்பட்டி, தேவனாம்பட்டினம், துவரங்குறிச்சி ஆகிய ஊர்ச்சந்தைகளில் விற்கப்பட்டன. சல்லி, சவரம், ஆகிய இரும்பு (?) பொருள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரமங்கலத்தில் விற்கப்பட்டன. பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய உலோகங்கள் திருவாரூரில் விற்பனை செய்யப்பட்டன.[7] விவசாயம், வீட்டு உபயோகம், மற்றும் பல்வகைப் பணிகளுக்குத் தேவையான உலோகப் பொருட்கள் இவர்களால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கலாம். உலோகப்பொருட்களை ஆக்குபவர்களாகக் கம்மாளர்கள் கருதப்பட்டனர். இவர்களில் கொல்லர், தச்சர், தட்டார், சில்பாசாரி, கன்னார் ஆகிய ஐந்து வகைத் தொழில்வகுப்பார் அடங்குவர். இதனால் இவர்கள் பஞ்சாளத்தார் எனவும், மூன்றுகுடிக் கண்மாளர் எனவும் அழைக்கப்பட்டனர். திருவடி, திருக்காட்டுப்பள்ளி, எலவானாசூர், திருமாவத்தூர் திருவைகாவூர் போன்ற ஊர்களில் இத்தொழில் சிறப்புற்றிருந்தது. சில ஊர்களில் ஒரு பகுதியில் கம்மாளர்கள் வசித்து தம் தொழிலை நடத்தியுள்ளனர். அங்கெல்லாம் அப்பகுதிகள் கம்மாளதெரு என அழைக்கப்பட்டுள்ளன.

நாணயங்களும் இக்காலத்தில் பெருமளவு அச்சிடப்பட்டன. தங்கம், வெள்ளி, செம்பு, ஆகிய உலோகங்களில் நாணயங்கள் அச்சிடப்பட்டாலும் மிக அதிக அளவில் வெளியிடப்பட்டவை செம்பு நாணயங்களே. இவற்றோடு நாணய அச்சுக்களைச் செய்யும் கலைத்தொழிலும் நடைபெற்றது. நாணயம் அச்சிடும் தொழில் முக்கியமாக அரசின் மேற்பார்வையில் நடைபெற்றது. திருவாரூரில் ஒரு நாணய சாலை செயல்பட்டுள்ளது.

வியாபாரநோக்கில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தொழில் எண்ணெய் ஆட்டுதலாகும். எள் விதைகள், தேங்காய் ஆகியவற்றைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுத்தனர். இத்தொழில் மிகப் பழங்காலத்திலிருந்தே சிறப்பாக நடைபெற்றுவந்துள்ளது. வாணியர் என்ற வகுப்பார் இத்தொழிலைச் செய்தனர். இவர்கள் ரிஷிவந்தியம், திருவொற்றியூர், தெள்ளார், சித்தலிங்கமடம், எலவானாசூர், கூகையூர், ஆகிய ஊர்களில் சிறப்பாக வாழ்ந்து தொழில் நடத்தினர். இவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட எண்ணை சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. எள்ளு விதைகள் துவரங்குறிச்சியிலும், ஆமணக்கு விதைகள் துவரங்குறிச்சி, தாரமங்கலம், சார்ந்த பகுதிகளிலும் விளைவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிநெய்தலோடு தொடர்புடைய பல தொழில்கள் இக்காலகட்டத்தில் சிறப்பாக நடைபெற்றிருக்க வேண்டும். அவை பற்றிய நேரடிச் செய்திகள் மிகச் சிலவே. இத்தொழில்களில், பருத்தியைப் பண்படுத்தி நூலாக நூற்பதுவும், இவற்றைச் சாயம் ஏற்றுதலும் சிறப்பான தொழில்களாகக் கருதவேண்டும். இத்தொழிலில் முக்கிய பரிமாணங்களைச் சரியாக அறிய இயலவில்லை. இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களைப் பற்றியும் ஏதொன்றும் அறியக்கூடவில்லை. கொருக்கை, திருப்பனந்தாள் ஆகிய ஊர்களில் பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளது.[8] விரிஞ்சிபுரம், ஓமலூர் ஆகிய சந்தைகளில், பருத்தி பொதிகளாகக் கட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.[9] பருத்தியிலிருந்து பஞ்சைப் பிரிப்பது, அதனை நூலாக நூற்பதற்கேற்ப பண்படுத்துவது போன்ற பணிகளைச் செய்துள்ளனர். வில் எனப்பட்ட உபகரணத்தின் மூலம் பஞ்சினைப் பதப்படுத்தியுள்ளனர். சில சந்தைகளில் சாயம் தோய்க்கும் பொருள்களையும் விற்பனை செய்துள்ளனர். அப்பொருள்களின் உற்பத்தி மையங்கள் பற்றி நம்மால் அறிய இயலவில்லை.

கனிப் பொருட்களை வெட்டியெடுத்தல் மற்றுமொரு சிறப்பான தொழில் ஆகும். தமிழகத்தில் இத்தொழிலின் தன்மைகளை அறிய இயலவில்லை. ஆயினும் மணிக்கற்கள் இறக்குமதி செய்யப்பட்டு மெருகேற்றும் தொழில் நன்கு நடைபெற்றுள்ளது. ஆயினும் தமிழகப்பகுதிகள் சிலவற்றிலிருந்தும் மணிகள், எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருக்கலாம்.

முத்துக்குளித்தல் பாண்டிநாடுக் கடற் பகுதிகளில் நடைபெற்ற சிறப்பான தொழிலாகும். பாண்டிநாட்டுக் கடற் பகுதிகளில் மிகச்சிறந்த முத்துக்கள் விளைவதற்கான இயற்கைப் பண்புகள் உள்ளன என அறிவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வியற்கைப் பண்பால் மிகப் பழையகாலம் முதல் முத்துக்குளித்தல் சிறப்பாக இப்பகுதிகளில் நடைபெற்று வந்துள்ளது. முத்துக்குளித்தல் பற்றி மார்க்கோபோலோ தாம் பார்த்தவற்றையெல்லாம் விவரித்துள்ளார். கடற்கரைகளில் வாழும் பரதவர், மீனவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். கண்டெடுத்த முத்துக்கள் யாவும் விற்பனைப் பொருளாக மதிக்கப்பட்டு வியாபாரிகளுக்கு விற்கப்பட்டன. சதிரவாசகன் பட்டினத்துத் துறைமுகத்தில் (சதுரங்கப்பட்டினம்) முத்துக்கள் ஒரு முக்கிய வியாபாரப் பொருளாக மதிக்கப்பட்டு அதன் மீது வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்பட்டுள்ளது.[10] முத்து, பவளம் ஆகிய பொருள்கள் ஒமலூரில் விற்கப்பட்டுள்ளன.[11]

வெல்லம் காய்ச்சுதல் இக்காலத்திய முக்கிய தொழில்களில் ஒன்றாகும். பல ஊர்களில் இத்தொழில் சிறப்பாக நடைபெற்றது. கரும்பாலைகளில் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி வெல்லம் எடுத்தனர். ஒரு காலகட்டத்தில் ஒரு ஊரில் உள்ள கரும்பாலைகள் அவ்வவ் ஊரில் விளைவிக்கப்பெறும் கரும்பையே பயன்படுத்தவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக கரும்பாலைத்தொழில் அப்பகுதிகளில் நசிந்தது. குடிகள் குலைந்து, தொழில் நசித்த நிலையைத் தென்கரை நாட்டார் அப்பகுதி நாயக்கருக்குத் தெரியப்படுத்தினர். இதன் விளைவாக கரும்பாலைகளில் எல்லா ஊர்க் கரும்புகளையும் பயன்படுத்திட அப்பகுதி நாயக்கர் 1482இல் ஆணை பிறப்பித்து இந்நிலையைச் சீராக்கினார்.[12]

செட்டிகள் எனப்பட்ட வியாபாரிகளையும் தொழில் வகுப்பிற் சேர்க்கலாம். இவர்கள் பொதுவாக பொருள் உற்பத்தியில் ஈடுபட்டதாகச் சான்றுகள் குறிப்பிடவில்லையென்றாலும் சிலவிடங்களில் பொருளுற்பத்திக்கான மூலதனத்தை இவர்கள் அளித்து பொருளுற்பத்திக்கு தூண்டுதலாக இருந்திருக்கலாம். ஆயினும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைப் பயனீட்டாளர்களிடம் கொண்டு சேர்ப்பதில் இவர்கள் பங்கு மிக முக்கியமானது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவர்களை உள்ளூர் வியாபாரிகள், தொலைதூர வியாபாரிகள் என இருபிரிவினராகப் பிரிக்கலாம். இவ்வியாபாரிகள் சந்தை மற்றும் அங்காடிகளுக்குப் பொருள்களை எடுத்துச்சென்று விற்பனை செய்தனர். இவர்களின் விற்பனை முறைபற்றியெல்லாம் சான்றுகள் ஏதும் உரைத்திடவில்லை. ஒரே வணிகர் எல்லாப் பொருள்களையும் விற்பதற்கான சூழ்நிலை இக்காலகட்டத்தில் இல்லையென்றே தோன்றுகிறது. பெரும்பாலான வணிகர்கள் ஒரே பொருளில் வியாபாரம் செய்துள்ளனர். அதாவது, துணி வகைகளை விற்கும் வணிகர்கள் மற்றப் பொருள்களை விற்பதற்கான சூழ்நிலை மிகக்குறைவு. செட்டி வணிகர்களில் கடைவைத்து வியாபாரம் செய்தவர்களும் உண்டு. இவர்கள் கோயிலங்காடிகள், சச்சவட வாணியர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் தம் கடையில் பல பொருள்களை வைத்து விற்பனை செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு பெரிய ஊர்களில் செட்டிகள் வாழ்ந்துள்ளனர். ரிஷிவந்தியம், புலிப்பர்கோயில், வெங்கனூர், மரக்காணம், திருக்கழுகுன்றம், விரிஞ்சிபுரம் போன்ற ஊர்களில் வாழ்ந்த செட்டிகள் பற்றிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கோமுட்டிகள், தெலுங்குபேசும் வணிக வகுப்பார். இவர்கள் நெடுங்குன்றம், வெங்கனூர், ஆகிய ஊர்களில் தொழில் செய்துள்ளனர். சிங்களாந்தகபுரத்தில் ஐயபொழில் எனப்பட்ட வணிகக்குழுமத்தார் வாழ்ந்துள்ளனர். வணிகக்குழுவினராக இருந்துள்ள செட்டிகளில் ஒரு பிரிவினர் கடல்கடந்து பல நாடுகளுக்குச் சென்று தொழில் நடத்தியுள்ளனர்.

## தொழில் முனைவோர்

பொருள் உற்பத்தி செய்த தொழில்வகுப்பார் பல கிராமங்களில் பிரிந்து வாழ்ந்துள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் பல தொழில் செய்வோர் இருந்துள்ளனர். சில கிராமங்களில் ஒரே தொழிலைச் செய்வோர் பெரும்பான்மையாக இருந்துள்ளனர். இவர்களுக்கென்று தனியான குடியிருப்புக்களும், தொழில் செய்வதற்கான பகுதிகளும் இருந்துள்ளன. இவற்றைத் தெரு என்று அழைத்தனர். இக்காலத்தில் தொழில் செய்யும் மக்களை உழுகுடி, காசாயக்குடி என இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். அவர்களில் உழுக்குடி எனப்பட்டவர் விவசாயிகளாவர். நில உடைமையாளர்கள், குடியானவர் ஆகியோரை இப்பிரிவில் சேர்க்கலாம். இவர்கள் நிலவிளைச்சலில் முழுமையாக ஈடுபட்டவர்கள். இவர்களின் ஒரே தொழில் வேளாண்மையாகும். தமிழகச் சமுதாயத்தில் இக்குடியானவர்கள் வெள்ளாளர்கள் என்றும் பிற பெயர்களிலும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாம் பிரிவான, கசாயக்குடிகளில் ஒரு பகுதியினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள போதும், மற்ற உற்பத்தித் தொழில்களிலும் ஈடுபட்டனர். இவர்கள் அரசுக்கு வரி செலுத்தும்போது பொருளாகச் செலுத்தாமல், காசாகச் செலுத்துவர். இதனாலேயே இவர்கள் காசாயக்குடி எனப்பட்டனர். நில விளைச்சலில் ஈடுபட்ட குடியானவர்களில் புன்சைப் பயிர்களை விளைவித்தவர்களும் காசாயக்குடி பிரிவில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். இவர்கள் யாவரும் அரசுக்குச் செலுத்தும் வரிகளில் பெரும்பகுதியைக் காசாகச் செலுத்தினர். காசாயக் குடிகளில் ஒரு பிரிவினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தில் ஈடுபடாமல் வணிகப்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டனர். இவ்வகைக்குடிகள் பட்டடைக் குடி என அழைக்கப்பட்டனர். பட்டடை எனப்பட்ட தொழிற்கூடங்களில் இவர்கள் பணியாற்றியதால் இவ்வாறு அழைக்கப்பட்டனர். தொழில் உற்பத்தியாளர்களில் காணப்படும் இவ்வகைப் பிரிவினை விசயநகரப் பேரரசு தமிழகத்தில் நிலைகொள்ளுதற்கு முன்பாகவே தமிழகப் பகுதிகளிற் காணலாம். முக்கியமாக, 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுக்கள் இவ்வகைபாட்டைப் புலப்படுத்துகின்றன.[13]

உற்பத்தியாளர்களிடையே காணப்படும் பிரிவுகள் 1405 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆடுதுறையில் காணப்படும் கல்வெட்டில்[14] உழுகுடிகள் எனப்பட்டவர்கள் திருநாமத்துக்காணி நிலத்தை உழுகின்றவர்கள் எனவும், பட்டடைக்குடிகள் திருமடைவிளாகத்தில் குடியிருப்பவர்கள் எனவும் பிரித்துச் சொல்லப்பட்டுள்ளது.[15] குடியானவர்கள் பிரிவில் கீழ்க்கண்ட வகுப்பார் சேர்க்கப்பட்டுள்ளனர்; ரட்டியள், வெள்ளாளர், கொடிகாற்காரர், காசாயவர்க்கத்தார் பிரிவில் கோமுட்டியள், செட்டி வர்த்தகர், கைக்கோளர், சேணியர், செக்கார், எருத்துக்காரர். இவ்விரண்டு பிரிவுகளில் உள்ளவர்கள் வேளாண்மையைச் செய்தொழிலாகக் கொண்டவர்களில் ரட்டியர் தெலுங்கு மொழி பேசும் விவசாயிகள், வேளாளர், கொடிக்காற்காரர் ஆகியோர் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்ட தமிழ்நாட்டு விவசாயிகள். இரண்டாம் வகையில் உள்ள காசாயக்குடிகளில் யாரும் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள் அல்ல. கோமுட்டிகள், செட்டிகள் ஆகியோர் உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள். கைக்கோளர், சேணியர் ஆகியோர் தறியில் ஆடை நெய்பவர்கள். செக்காட்டி எண்ணை எடுத்து வியாபாரம் செய்பவர்கள் செக்கார். எருதுகளை வளர்த்து, போக்குவரத்துக்குத் துணையாக இருப்பவர்கள் எருத்துக்காரர். எனவே இவ்விரண்டு பிரிவுகளும் தனித்தன்மை வாய்ந்த வகுப்பாரை உள்ளடக்கியுள்ளன என்பது புலப்படும்.

## பட்டடை

தொழிற்கூடங்கள் பட்டடை என அழைக்கப்பட்டன. சம்புவராயர்கள் கல்வெட்டுக்களில் இச்சொல் தொழிற்கூடங்களைக் குறிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இச்சொல் பட்டாடை எனத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. தி.ந. சுப்பிரமணியன் தம்முடைய சாசனச் சொல் அகராதியில்,[16] பட்டடை என்ற சொல்லை "பட்டாடை" எனத்திரித்துப் பயன்படுத்தியுள்ளார். இதனால், பட்டடை ஆயம், பட்டடை நூலாயம் ஆகிய சொற்களை"பட்டாடை ஆயம்", "பட்டாடை நூலாயம்" என்று கருதி "பட்டுத்துணியின் மீது இறுக்கும் வரி", "பட்டுநூலின் மீது இறுக்கும் வரி" என்று இச்சொற்களுக்குத் தவறான பொருள் விளக்கமும் அளித்துள்ளார். மேலும் இவரது அகராதியில் "பட்டடை வரி" என்ற சரியான சொல்லுக்கு "நெல் அடிக்கும் களத்துக்காக இறுக்கும் வரி" என்று பொருள் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் ஓரளவு சரியானது என்றாலும் பட்டடை என்ற சொல் பொதுவாக எல்லாத் தொழிற்கூடங்களையும் குறித்தது. தி. ந. சுப்பிரமணியனைப் பின்பற்றி தெ. வெ. மகாலிங்கம், இச்சொல்லை இரண்டுவிதமாகவும் விளக்கியுள்ளார். பட்டடை ஆயம் என்ற சொல்லை "பட்டாடை ஆயம்" எனத்தவறாகக் குறித்து, "பட்டுத்துணியின் மீது விதிக்கப்பட்ட வரி" என்று பொருள் தந்துள்ளார்.[17] அடுத்து, பட்டடை வரி என்ற சொல்லைச் சரியாகத் தந்து, "கருமார் தொழிற்கூடங்கள் மீது விதிக்கப்பட்ட வரி" எனப் பொருள் அளித்துள்ளார்.[18] பின்னர் விஜயா ராமசாமியும் பட்டு நூல்மேல் விதிக்கப்பட்ட வரி எனத் தவறாகவே குறிப்பிட்டுள்ளார்.[19] இவை பட்டடை என்ற சொல்லைப் பட்டாடை எனத் தவறாகப் புரிந்துகொண்டதால் ஏற்பட்டதன் விளைவாகும்.

தொழிலாளர்கள் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களே பட்டடையாகும் என்ற கருத்தை எ. சுப்பராயலு 1983இல் ஒரு கட்டுரையில் தெளிவாக்கியுள்ளார்.[20] தமிழ், மற்றும் கன்னட மொழி அகராதிகளும் பட்டடை என்ற சொல்லுக்கு, தொழிலாளர் பணிசெய்யும் தொழிற்கூடம் என்றே பொருள் தந்துள்ளனர்.[21] பட்டடை என்ற சொல்லின் திரிபாக "பட்டறை/ பட்டரை" என்ற சொல்லும் தற்கால வழக்கில் உள்ளமை இங்கு கருதத்தக்கது.[22]

தமிழகத்தில் விசயநகரப் பேரரசுக் காலத்தில் வழக்கில் இருந்த பட்டடைகள் பலவாகும். பாடியில் (திருவலிதாயம்) காணப்படும் 1397 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, பதினெட்டுப் பட்டடைகள் இருந்த செய்தியைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகிறது. இப்பதினெட்டுப் பட்டடைகளின் வருமானத்தின் ஒருபகுதி பாடி கோவிலுக்கு அளிக்கக்கப்பட்டது. இப்பட்டடைகளின் விவரங்களை அக்கல்வெட்டு அளிக்கவில்லை.[23] என்றாலும் செட்டிகள், கைக்கோளர், எண்ணெய் வாணியர் ஆகிய மூன்று முக்கிய வகுப்பாரைக் குறிக்கிறது. மற்றய கல்வெட்டுக்களும் பொதுவாக பட்டடைகளைக் குறிக்கின்றன. பலபட்டடை[24], சில்லறைப் பட்டடை[25] என்று சில கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. செக்கிட்டு எண்ணெயாட்டும் பகுதி செக்குப் பட்டடை எனப்பட்டது.[26] தோல் தொழிலாளர் பணிசெய்யும் கூடம் சக்கிலிப் பட்டடை என அழைக்கப்பட்டது.[27]

விஜயநகர் கல்வெட்டுக்களில் பட்டடைகள் பலவற்றின் விவரங்களைக் காணலாம். பல தொழில்களில் ஈடுபட்டவர்களைப் பற்றிச் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பட்டடை வைத்துத் தொழில் செய்வோரைப் பட்டடைக் குடி கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஒரு கல்வெட்டில்[28] "கைக்கோளர் சேடர் சேணியர் வியாபாரியள் செக்குவாணியர் கோலியர் மற்றும் பல பட்டடையார்" எனக் குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டு "கைக்கோளர் சேனையங்காடியர் பல பட்டடைக்குடி" எனக் குறிப்பிடுகிறது.[29] இவற்றிலிருந்து கைக்கோளர், சேடர், சேணியர், வியாபாரியள், செக்குவாணியர், கோலியர், சேனையங்காடியர் ஆகிய தொழில்செய்யும் குடிகளைப் பட்டடைக்குடிகளாக மதித்தனர் எனக் கருதலாம்.

இப்பட்டடைகளை ஏற்படுத்தித் தொழில் உற்பத்தி செய்த குடிகளைக் கீழ்க்கண்டவாறு ஏழாக வகைப்படுத்தலாம்.[30] வியாபாரிகள், நெசவாளர்கள், கைவினையாளர்கள், எண்ணெயாட்டுவோர், இடையர், மீனவர், மற்றும் பிறவகைத் தொழில் செய்வோர். இவர்களில் வியாபாரிகளில் செட்டிகள், மனைக்கடையர், சேனைக்கடையர், கோயிலங்காடிகள் ஆகியோரைச் சேர்க்கலாம். இரண்டாவது வகுப்பாரில் கீழ்கண்ட நெசவாளர் வகுப்பாரைச் சேர்க்கலாம்: கைக்கோளர், சாலியர், நியாயத்தார், சேடர், சேணியர், கோலியர். கைவினையாளர்கள் வகுப்பில் கொல்லர், தச்சர், தட்டார், சில்பாசாரி, கன்னார், குசவர் ஆகியோரைச் சேர்க்கலாம். பிறவகைத் தொழில் செய்வோரில் கைவினைப்பறையர் எனப்படும் நாவிதர், வண்ணார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கிலி போன்றோரைச் சேர்க்கலாம். மீனவர்கள் வலைக்காரர் என அழைக்கப்பட்டனர்.

ஒவ்வொரு தொழிலுக்கும் தனிப்பட்டடைகள் ஏற்படுத்தப்பட்டன. எல்லாப் பட்டடைகளும் ஒரே இடத்தில் செயற்பட்டன எனக்குறிப்பிடுவதற்குத் தக்க சான்றுகள் கிட்டவில்லை. அதேபோல் இப்பட்டடைகளில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகள், உபகரணங்களின் எண்ணிக்கை போன்றவற்றையெல்லாம் அறிய சான்றுகள் இல்லை. இப்பட்டடைகள் எங்கு செயல்பட்டன என்பதனைச் சரியாக அறிய இயலவில்லை. ஊர்ப்பகுதி, கோயிலுக்கு உரிமையுள்ள பகுதி (கோயில் பற்று), பிராமணர்களுக்கு உரிமையுள்ள பகுதி (அகரப்பற்று) ஆகிய பகுதிகளில் பட்டடைக்குடிகள் தம் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம் என வளவனூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[31] ஊர்களில் இப்பட்டடைகள் அமைந்திருந்தன என்று ஊகித்தாலும், எப்பகுதியில் அமையப்பெற்றன என அறிய இயலவில்லை. நெடுங்குன்றத்தில் ஊரினுள் இப்பட்டடை அமைந்திருந்தாகக் கருதலாம். இதனாலேயே அப்பட்டடை ஊர்ப்பட்டடை என்று அழைக்கப்பட்டது.[32] திருவொத்தூரில் ஊரினுள் அமைக்கப்பெற்ற பட்டடையோடு திருமடைவிளாகத்தில் அமைந்த பட்டடையும் குறிப்பிடப்பெற்றுள்ளது.[33]

சில ஊர்களில் இப்பட்டடைகள் கோவில் நிலங்களில் அல்லது கோவில்களுக்கு அருகே அமைந்திருந்தன எனக் கருதலாம். பொதுவாக கோவிலைச் சார்ந்த திருமடைவிளாகத்தில் இப் பட்டடைகள் அமைந்திருந்தன எனச் சில கல்வெட்டுகள் மூலம் அறியலாம். திருவொத்தூர் கோவிலுக்குச் சொந்தமான திருமடைவிளாகத்தில் பட்டடைக் குடிகள் குடியேறுவதற்கு பதினெட்டுப்பற்று நாட்டவர்களும், தந்திரிமார்களும் அனுமதியளித்துள்ளனர். இக்குடிகளுக்கு வரிவிலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இதேபோல் பெண்ணாடத்தில், திருமடைவிளாகத்தில் பட்டடைக் குடிகள் குடியேற பதினெட்டுப்பற்று நாட்டவர்கள் அனுமதி அளித்துள்ளனர். இவர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.[34] இக்குடிகள் தம் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டு பொருளுற்பத்தியில் ஈடுபட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம். வரிவிலக்கு அளிக்கப்பட்டதைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகையாகக் கருதவேண்டும். உற்பத்தில் ஈடுபட்ட தொழில்வகுப்பாரை ஊக்குவிக்க இவ்வித வரிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கலாம்.

## தொழில் மையங்கள்

தொழில்வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தில், விசயநகரப் பேரரசு பல இடங்களில் புதிய தொழில் மையங்களை ஏற்படுத்தின. இம்மையங்கள் பேட்டை, பாளையம், என அழைக்கப்பட்டன.[35] இவ்விரண்டு மையங்களில் தொழில் நடத்தவரும் குடிகளுக்கு விசயநகரப் பேரரசு பல சலுகைகளை அளித்து தொழில் உற்பத்தியை ஊக்குவித்துள்ளது. இவ்வூர்களில் விவசாயம் உள்ளிட்ட எல்லாத்தொழில்களும் நடைபெறுவதற்கான அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாம் தேவராயர் காலத்தில் மூன்று பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றில் ஒன்று தேவராயர் மஹாராயர் பேட்டை என்ற பெயரில் திருத்துறையூரில் 1442இல் ஏற்படுத்தப்பட்டது.[36] தொழில்செய்வோர் யாரும் பல ஆண்டுகளாக இவ்வூரில் தொழில் உற்பத்தியில் ஈடுபடாமல் இருந்துள்ளனர். தொழில்கள் முன்னைப்போல் இவ்வூரில் நடை பெறவேண்டும் என்ற நோக்கில் இப்பேட்டை ஏற்படுத்தப்பட்டது. கைக்கோளர்கள் இப்பேட்டையில் நிலையாகக் குடியேறி தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர். நிலையாகக் குடியேறாது அவ்வப்போது வந்துபோகும் (பரதேசி) நெசவாளர்களும் இப்பேட்டையில் நெசவுத்தொழில் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டனர். இவர்களுக்கு வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது. பேட்டையில் குடியேறி தொழில் செய்வோரில் சிலர் அவ்வூரில் நிலஉடைமையாளர்களாகவும் இருந்துள்ளனர். உற்பத்தியான பொருள்களை விற்பதற்காகச் சிலபேட்டைகளில் அங்காடியும் அமையப்பெற்றிருந்தது. திண்டிவனம் பேட்டையில் புதன்கிழமைகளில் சந்தை கூடியது. இச்சந்தையில் உள்ளூர் வணிகர்களோடு 56 நாடுகள், 18 பூமிகளிலிருந்து வந்த வணிகர்கள் தம் பொருள்களை விற்றனர்.[37]

மற்றொரு உற்பத்தி மையமான பாளையம் விசயநகரப் பேரரசு காலத்தில் வணிக வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டது. பாளையக்காரர்களின் முக்கிய ஊராக இப்பாளையங்கள் நிலவின என்ற போதும் ஆரம்பகாலங்களில் இவை வணிக உற்பத்திமையங்களாகவே இருந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாளையங்களில் விவசாயத் தொழிலோடு, கைக்கோளர் நெசவுத் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர். விசயநகர நாயக்கர்களும் பாளையங்கள் ஏற்படுத்த துணைபுரிந்தனர். ஒபளராஜரால் வேளனேந்தலில், தேவராய பாளையம், 1530இல் ஏற்படுத்தப்பட்டது. இப்பாளையத்தில் குடியேறி தொழில் செய்வோருக்கு ஐந்தாண்டுகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.[38]

## தொழிற் கருவிகள்

இக்காலத் தொழில்வகுப்பார் பயன்படுத்திய முக்கிய கருவிகளைப் பற்றி சிற்சில செய்திகளைக் கல்வெட்டுக்கள் தருகின்றன. தொழில்வகுப்பாரில் சிலர் பயன்படுத்திய சாதனங்களைப்பற்றிய விவரங்கள் உள்ளன என்றாலும் பலரது தொழிற்கருவிகளைப் பற்றி முழுமையாக அறிய இச்சான்றுகள் துணைபுரியவில்லை. இக்கருவிகளில் நெசவாளர்கள், தட்டார் ஆகியோர் பயன்படுத்திய கருவிகள் பற்றி ஓரளவு அறியமுடியும்.

நெசவாளர்கள் துணிநெய்யப் பயன்படுத்திய முக்கிய சாதனம் தறி ஆகும். கல்வெட்டுகள் பொதுவாக தறி என்ற பொதுச்சொல்லையே கையாண்டபோதும் கைக்கோளத்தறி, சேணியத்தறி, பறைத்தறி, சாலியர் அச்சதறி, சாலிகர் நிலைத்தறி போன்ற தறிவகைகளைக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இத் தறிகளின் வடிவத்தையோ அதன் பகுதிகளையோ நம்மால் அறிய இயலவில்லை. அக்கால இலக்கியங்களும் இவைபற்றிய செய்திகளை விளக்கவில்லை. தொல்லியற் சான்றுகளும் நமக்குத் துணை புரியவில்லை. ஆயினும் தறிகள் மீது விதிக்கப்பட்ட வரிவீதத்தின் அடிப்படையில் சில ஊகங்களை அளிக்க முடியும். சாலியர்கள் பயன்படுத்திய தறி நிலைத்தறி எனப்பட்டது. அதாவது எளிதில் எடுத்துச்செல்ல இயலாமல் ஓரிடத்தில் நிலையாக அமைக்கப்பெற்ற தறி எனக் கொள்ளலாம். இதன் மீது அதிக அளவு வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தறி மூலம் நெய்யப்பட்ட துணிகள் ஓரளவு விலையுயர்ந்தனவாகக் கருதலாம். மேலும் இத்தறியில் பட்டுத்துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கலாம். இத்தறி சாதாரணத் தறியிலிருந்து சற்று மாறுபட்டு தொழில்நுணுக்கம் மேம்பட்டுள்ள தறியாக இருக்கலாம். ஆயினும் இதன் தொழில் நுணுக்கத்தன்மைகள் பற்றி யாதொரு கருத்தையும் இக்காலச் சான்றுகள் மூலம் அறிய இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைதவிர கொம்புத்தறி, சட்டித்தறி எனப்படும் இரண்டு வகைத்தறிகளைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவற்றின் தன்மைகளைப்பற்றி அறிய முடியலவில்லை.

நெசவாளர்கள் பயன்படுத்திய பிற உபகரணங்களைப்பற்றி கல்வெட்டுக்களில் சில குறிப்புகளே உள்ளன. முக்கியமாக எவ்விடத்திலிருந்து பருத்திநூல் அல்லது பட்டு நூலைப் பெற்றார்கள் என்பது தெரிந்திலது. சில சந்தைகளில் பஞ்சு, பருத்தி, நூல் ஆகியன விற்பனைப் பொருள்களாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது கொண்டு அருகமைந்த பகுதிகளில் பருத்தி, நூல் ஆகியன உற்பத்திசெய்யப்பட்டன எனக் கருதலாம். கொருக்கை, வீராச்சிலை, ஆவூர் ஆகிய ஊர்களில் பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளதைச் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பருத்தியிலிருந்து பஞ்சையும் விதையைப் பிரித்தெடுத்தல், அதனைப் பதம் செய்தல், பஞ்சிலிருந்து நூலாக நூற்கும் முறைகள், இச்செயல்களுக்கு பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியன பற்றி மிகச் சில செய்திகளே கிடைக்கின்றன. இவற்றுள் பஞ்சை, நூலாக நூற்பதற்கான பக்குவத்தை உருவாக்குதற்காக உபகரணங்கள் பயன்படுத்தியுள்ளமை சில கல்வெட்டுக்களில் சொல்லப்பட்டுள்ளது. இக்கருவி வில் என்று அழைக்கப்பட்டுள்ளது. வீரர்களால் பயன்படுத்தப்படும் வில் போன்ற அமைப்புடையது இக்கருவி என இதன் பெயரிலிருந்து அறியலாம். இவ் உபகரணத்தினைப் பயன்படுத்துவதற்காக விஜயநகரக் காலத்தில் வில்பணம் எனப்பட்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.[39] இதே வரி, வில்வரி, விற்பிடி என்றும், பஞ்சுபீலி என்றும் விஜயநகரகாலக் கல்வெட்டுக்களில்[40] வழங்கப்பட்டுள்ளன.

மற்ற தொழில் வகுப்பாரின் கம்மாளர்களின் உலையும், வாணியர்களின் செக்கும், குயவர்களின் திரிகையும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

## மூலதனம், மூலப்பொருள்கள்

தொழில்செய்வதற்குத் தேவையான மூலதனம், கருவிகள், மூலப்பொருள்கள் ஆகியவற்றை யாரிடமிருந்து எப்படிப் பெற்றனர் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலச் சான்றுகள் தெளிவாக உணர்த்தவில்லை. துணி உற்பத்தியில் ஈடுபட்ட நெசவாளர்களுக்குத் தேவையான மூலதனம், மற்றும் மூலப்பொருள்களைத் துணி வியாபாரிகள் தந்திருக்கலாம். நெசவாளர்களில் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட தறிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்துள்ளனர். எலவானாசூர் கல்வெட்டில் சூரியதேவன் என்ற கைக்கோளனுக்கு இரண்டு தறிகள்மீது வரிவிலக்கு தரப்பட்டுள்ளதால் இவர் இரண்டு தறிகளுக்கு உரிமையாளராக இருந்துள்ளார் எனக் கருதலாம்.[41] ஒன்றுக்கு மேற்பட்ட தறி உடைமையாளராக கைக்கோள முதலிகளில் பலர் இருந்துள்ளனர். இவர்கள் தங்களுடைய மூலதனம், மற்றும் மூலப்பொருள்களைக் கொண்டு துணி நெய்து வணிகர்களுக்கு விற்றிருக்கலாம். மற்ற தொழில்களில் மூலதனம் மற்றும் மூலப்பொருள்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பதை ஊகிக்கமட்டுமே முடியும். சான்றுகள் நமக்கு எவ்விதத்திலும் உதவவில்லை.

சில கோவில்களும் தொழிலாளர்களுக்குச் சில சலுகைகளை வழங்கியுள்ளன. சேர்க்காட்டுத் திருமடைவிளாகத்தில் காசாயக்குடிகள் குடியிருப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு 1361 இல் அவ்வூர்க் கோவில் அனுமதி வழங்கியுள்ளது.[42] இதேபோல் 1402 இல் வழுவூரில், கம்பங்குடையார் ஏற்படுத்திய புதிய குடியிருப்பில் தொழில் வகுப்பாரும் குடியேறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.[43] விருத்தாசலம் திருமடைவிளாகத்தில் குடியேறும் தொழில் வகுப்பாருக்கு எல்லாவகையான வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது (சர்வமானியம்).[44] திருவாடுதுறையில் நாட்டாரும் தந்திரிமாரும் இணைந்து திருமடைவிளாகத்தில் தொழில்வகுப்பார் குடியேற அனுமதி அளித்துள்ளனர்.[45] படைவீட்டில் 1471இல் பல பட்டடைக்குடிகள் குடியேற அனுமதி அளிக்கப்பட்டது. இவர்களுக்கு வரிவிலக்குகளும் அளிக்கப்பட்டன.[46]

திருவடியில் புதிய தொழில் குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டது.[47] அவ்வூர் நிலங்களைப் பண்படுத்தி கைக்கோளர், செட்டிகள், வாணியர், சேனையங்காடியர், கோயிலங்காடியர் ஆகிய தொழில் வகுப்பார் தம் குடியிருப்புக்களை ஏற்படுத்தி தொழில் நடத்திட உதவியுள்ளனர். இந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தொழில் குடியிருப்பில் கட்டப்படும் வீடுகள் அவற்றைக் கட்டிய தொழில் முனைவோர்களுக்கே உரிமையுடையன. இக்கல்வெட்டில் தொழில் செய்வோருக்கு தேவையான மூலக்கருவிகள், உபகரணங்கள் மற்றும் மூலதனம் ஆகியன பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இதனால், அத்தொழில் செய்வோரே மூலதனம் இட்டு கருவிகள் யாவற்றையும் சேர்த்து தொழில் நடத்த வேண்டும் என்று ஊகிக்கலாம். செட்டிகளுக்கு, மூலதனத்தைத் தவிர கருவிகள் ஏதொன்றும் வேண்டியதில்லை. ஆனால், கைக்கோளர்கள், நெசவுத்தொழிலைத் தறியின்றி மேற்கொள்ளுதல் இயலாது. இதனுடன் சில சில்லறை உபகரணங்களும் தேவை. வாணியர்களுக்கு செக்கு முக்கியமானது.

கைக்கோளர் போன்ற சில தொழில் வகுப்பாருடன் கோவில்கள் நல்ல தொடர்புகளை மேற்கொண்டிருந்ததால் கோவில்களே கருவிகள் வாங்குவதற்கும் மூலதனத்திற்கும் உதவி செய்திருக்கலாம். இவ்வகை மூலதன உதவி சில ஊர்களில் தரப்பட்டாலும் பெரும்பாலான ஊர்களில் இடப்பட்ட மூலதனம் எவ்வகையில் பெறப்பட்டது என்பதைச் சரியாக அறிய இயலவில்லை. ஆயினும் தொழில்வகுப்பாரில் முதலிகள் எனப்படும் தலைவர்கள் மூலதனம், மூலப்பொருள்கள் ஆகியனவற்றை அளித்திருக்கலாம். இவர்கள் தங்களுடைய தொழிற் சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் சேர்த்து மூலதனம், மூலப்பொருள்கள், கருவிகள் ஆகியனவற்றை வழங்கியிருக்கலாம்.

**சான்றுகள்**


1. B. A. Saletore, Social and Political Life in the Vijayanagara Empire (A.D. 1346- A.D. 1646), Chennai, 1934.
2. A. Appadorai, Economic Conditions of Southern India. 1000 - 1500 A.D., University of Madras, Chennai, 1936, vol. II. pp, 444 - 482
3. T. V. Mahalingam, Administration and Social Life under the Vijayanagar, University of Madras, Chennai, 1975, vol. II. pp, 113-132
4. Vijaya Ramaswamy, Textiles and Weavers in Medieval South India, Oxford University Press, 1985, pp. 63-93.
5. Annual Report on Epigrphy (ARE), year.1927, no. 135; 1920-54;1913-74




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ARE.1978-237; SII.,22, 442; ARE.1965-296; South Indian Inscriptions (SII), vol.7, no.21.
7. ARE.1946-47,cp 19.
8. ARE.1917-216; 1932-78.
9. ARE.1940-193; SII.,7,21.
10. ARE.1973-33.
11. II.,7,21.
12. ARE.1908-103.
13. ARE.1935-218; 1934-59; 1921-454.
14. ARE.1913-25.
15. ARE.1913-2.
16. T. N. Subramaniam, South Indian Temple Inscriptions, vol.III, pt.2, சாசனச் சொல் அகராதி, p.1459
17. T. V. Mahalingam, South Indian Polity, II ed., University of Madras, Chennai, 1967, Glossary, / 436.
18. மேல்குறித்த நூல்.
19. Vijaya Ramaswamy, Textiles and Weavers in Medieval South India, Oxford University Press, 1985, pp.86,88,104
20. Y. Subbarayalu, 'The Peasantry of Tiruchirapalli District from the 13th to 17th Centuries', N. Karashima, Ed. Socia, - Cultural Change in Villages in Tiruchirapalli District, Tamilnadu, India, part I, Institute for the Study of Languages and Cultures of Asia and Africa, Tokyo, 1983, p.128.
21. J. P. Fabricus's Tamil and English Dictionary, pp. 651-652; Tamil Lexicon, University of Madras, pp. 2419-2420; Kittel's Kannada Dictionary, University of Madras, Madras, Vol. III, p.980.
22. கவிஞர் ப. முருகையா, நெல்லை வட்டார வழக்குச் சொல்லகராதி, சென்னை, 2004, பக். 209.
23. ARE.1910-221
24. SII.,22,240; 4,47; ARE.1923-367
25. SII., 4, 524.
26. ARE.1923-367
27. ARE.1934-35,A11.
28. ARE.1939-243
29. ARE.1929-212.
30. P. Shanmugam, "Pattadai and Industries in the Tamil Country under the Vijayanagar Rule", Journal of Asian and African Studies, No 37, 1989, p.p.32-33.
31. ARE.1912-422
32. ARE.1924-112.
33. ARE.1929-215
34. ARE.1929-250.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. P. Shanmugam, "Centres of Production and Market System in Tamil Country", Recent Advances in Vijayanagara Studies, eds. P. Shanmugam and Srinivasan Srinivasan, New Era publications, 2006, pp. 127-130.
36. ARE.1925-429.
37. ARE.1905-30.
38. ARE.1943-88.
39. ARE.1940-157.
40. ARE.1911-324; SII .,8,276; Inscriptions of Padukkottai State, no.682.
41. ARE.1965-303.
42. ARE.1921-203.
43. ARE.1912-422.
44. ARE.1929-250.
45. ARE.1929-215.
46. ARE.1921-120.
47. ARE.1921-403.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The Weavers, Society and the Vijayanagara State

Prof. Vijaya Ramaswamy

The period of the Vijayangar empire is regarded as a landmark in terms of the changes in the conception and organization of the state. Scholars have tended to look upon the Chola period as 'the golden age' of local self-government while conversely characterizing the Vijayanagar empire as a 'warrior state[1]' with powerful feudatories and officials who left no room for the functioning of local assemblies as well as more or less autonomous caste and professional organizations. To view the Vijayanagar empire as a watershed in these terms is to create an artificial break in the process of social history. Local institutions continued well into the sixteenth century


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and the guilds continued to function and did not decline or decay. In fact instead of imposing a new officialdom at every level and disrupting the existing political and social order, the Vijayanagar kings attempted a rapproachement with local elements, and this was done through royal influence and patronage. Alliances were forged between caste and sectarian leaders on the one hand and the ruling class on the other.

Hence in order to understand the position of weavers in contemporary Vijayanagar society it is essential first to place them first, in the context of the general functioning of village assemblies in relation to overall state policy, second, to view the interaction between weavers and other social groups (especially as reflected in left-hand right-hand conflicts), third, to understand the extension of state patronage to them thrugh the grant of privileges, and finally, to study their ritual role in temples and their participation in the heterodox movements of the time.

## Weavers and the Ayagar System

It would be essential to discuss the nature of the *ayagar* system if the actual position of caste and local assemblies in the Vijayanagar period is to be properly understood. *Ayagars* were village functionaries who were remunerated for their services t the village community either in terms of tax free lands *(manyam)*[2] or a share of the grain heap The term *ayam* itself means fee or remuneration. These functionaries were generally twelve in number[3]. But this was *not* a rigid figure and the composition of the *ayagars* and their number in every village depended on the exigencies of that particular village, the *ayagars* usually included a watchman, a barber, an astrologer, a potter, a washerman and possibly the smiths, though not every village had a goldsmith. The weavers only rarely formed a part of the village functionaries[4]. The chief of the village functionaries was the headman, called *Gauda* in the Andhra and *Pidaran* in the Tamil country.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The village headman was sometimes appointed by the representative of the king[5] and sometimes by the collective village assembly itself.[6] With regard to other officials, the only instances where the state is mentioned in connection with the appointment of local functionaries seem most often to be when particular office was an object of dispute between two parties[7]. an instance of the appointment of a village astrologer by the royal representative is available but from a much later period (1631), [8] by which time of course the entire conception of the functioning of village assemblies on account of a variety off actors. But by and large it does appear as if the state put its stamp of approval on the choice of village functionaries rather than that it actively appointed them, except in the case of the headman whose position was important-he would not only be the village head but also the repetitive of the state in the village[9]. The *ayagars* functioned duing the Vijayanagar period as village officials rather than as servants of the government[10]. Hence the theory of the decline of village assembly would be true not so much of the heyday of the Vijayanagar empire but of the late sixteenth century when it had ceased to be a powerful political factor.

## Weaver Corporate Organization

It has been clarified that the continued existence of powerful caste organizatios of the weaversrests n the continued functioning of village assemblies and other local caste bodies in the Vijayanagar period. Evidence of the continued activity of weaver guilds right upto the sixteenth century is available from epigraphic and literary sources. The reference to a grant at the *Devanga Pallalamatam* (Devanga weavers' meeting place) in Kapistalam (Papanasam taluq, Tanjavur district) in 1542 shows the continued functioning of the Devanga weavers' craft organization[11]. In 1554 the Kaikkolas of Jambai (South Arcot district) made an agreement among themselves to contribute to the maintenance of a *matam* (corporate organization or guild)[12]. Similary in 1584 at Tirupati some activity (not specified) seems to


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have taken place at the Kaikkola mantapam[13]. A late sixteenth century record from Pattanmadai (hamlet of Seramadevi in Tirunelveli) refers to a temple donation by Sattam Tondan, one of the Nattu-Saliyar[14]. It appears that the donor was a local head of the Saliya guild organizatin[15]. Contemporary literature also refers to the guilds. A reference to the guilds of weavers (weaver of ordinary cloth) and the weavers of silk cloth is "found in the Amuktamaryala of Krishnadeva Raya[16].

I have earlier mentioned that the weaver organizations had their own code of conduct and that any violation of this code was severely punished. Not only did the weaver guilds have their own code o conduct and settle disputes arising within their guild, they also arbitrated in temple disputes in the capacity of Sthanathars. During the region of Vir a Sayans Udaiyar, in the Muktisvara temple at Attur (Chingleput), a gift ofland, free of taxes was resumed by the temple authorities. Taxes were assessed thereon "and as the tenants could not pay them, a meeting –of the Kaikkolas and *Kaikklamudalis* was called".[17] It appears that the Kaikkolas held a position of considerable importance in the temple and were hence asked to arbitrate to settle the issue. Similarly, during the period of Kumara Kampana Udaiyar (fourteenth century), in the Vadagirisvara temple at Tirukkalukkunram, a sum of 850 *pon* (gold) was found to be missing from the temple. The thief was captured and the Kaikkolar, *Kaikkola-mudalis* and Ponnambalakkuttar arbitrated in the case, imposing heavy fmes on the offender[18]. These are interesting instances of the judicial powers enjoyed by weavers outside their own guild organization.

## Temple Donations

The size and nature of temple donations was throughout the medieval period an index of the economie prosperity and social status of any community Donations continued to be both individual 19 as well as collective, 20 though instances of individual donations were rare. As already discussed, during the Chola and late-Chola periods



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

donation to the temples seem to have been chiefly *for* the setting up of perpetual lamps *(nonda-vilakku)* by the gifting of money or sheep to the temple. During the Vijayanagar period the *form* of donation was essentially in the nature of food offering *(prasadam)* and large-scale feeding of the disciples, apart from grants of money and lands to the temple which continued throughout.

During the reign of Ariyana Udaiyar (fourteenth century) the Kaikkolar living in the Tirumadaivilagam of Brahmapurisvara temple at Perunagar (Chingleput) are said to have made a collective gift (not specitled) to the deity.[21] In 1366 the Kaikkolaru of Madivala (Bangalore District) attached to the 'fme temple' (Name not given) combined with the Mahajanas and temple trustees in making a collective gift of paddy to Sri Rudra Mahesvara f Chitramtli Parukalan-Dirukkavanam, residing in the temple Tamaraikkirai in Rajendra Chola Valanadu.[22] Similarly in 1425 (in the reign of Devaraya II) the Kaikkolar Valuvur (Wandiwash, North Arcot) made a collective gift of money for a lamp to the temple of Tiruvayanisuramudaiya Nayanar.[23] These records are a further proof of the fact that the weaver caste and craft organizations continued to flourish during the Vijayanagar period and co-operated in social matters. A record from Kallidaikurichchi (Tirunelveli district) dated 1597[24] states that a contribution of 10 *panams* per loom was levied by the Kaikkola Mudali Nayanars of the village and similar contributions were levied by other village professionals for conducting festivals in the temple of Nandiyappar. In the sixteenth century at the Sitaramasvami temple in Dharmavaram (Ongole, Guntur district), the spinners made a collective contribution of 2 *dha* (?) on every *ratam* (Spinning wheel) and the weavers I *vam* (?) on Sella (inferior, very low quality muslin). [25] Some records also refer to joint constructions of temples by the weaver communities. Thus the Kaikkolar of Ambasamudram constructed a temple in 1507 *for* Annivinodisuramudaiya Nayanar and Bhutalavira Rama Pillaiyar, and


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

were in return granted the hereditary right of receiving a garland and endowed with many incidental privileges.[26]

There is one striking difference in the nature of the donations between the Chola and the Vijayanagar periods. While in the Chola period nominal donations of money or sheep by individual weavers are innumerable, there is hardly any reference to nominal individual donations in the Vijayanagar period. The only instances of individual donations which occur in the Vijayanagar period are major donations like the gift of land, the setting up of deities or the construction of temples and in every case the donation was reciprocated by high honours and privileges conferred on the donor. In 1398, at the time of Virupaksha I, Venaudaiyar, one of the Kaikkola Mudalis of the temple of Tiruvannakkoyiludaiya Nayanar is said to have made a gift of land in the hamlet of Uttamasolavilagam to the deity. It is said that Uttamasolavilagam was originally granted to the temple for worship and repairs by Vira Kampana Udaiyar. It is thus possible to infer that the land was bought up by the Kaikola Mudalis and subsequently a part of it gifted to the temple. The donor was apparently wealthy and powerful, for he was a landowner and the title Mudalis enjoyed by him reflects his social status. At Ponnur (Wandiwash, North Arcot) in 1383 Magadarayar, a Kaikkola, reconstructed with stone the Maha-mantapa of the temple of Parasarisvaram Udaiya-ayanar, in recognition of which he was given land and privileges by the trustees of the temple.

In another instance from Kunnattur (also in the Chingleput district) Narpattenayira-Solakumaran, a Kaikkola who had set up an image of Chokka-Nyanar in the Tirunagesvara temple, was given the privilege of parivattam (the head-dress put for the god) and a site with the stipulation that he should pay 4 panams on every loom set up therein.[29] The same privileges were also accorded to his descendants. The donor was again clearly a man of considerable wealth since he seems to have owned several looms and probably employed workers



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

under him. In 1506 at Melacheval (Tiunelveli district) the Kaikkolan Keralan Martandan (this shows the migratory pattern of the community and the presence of the Kaikolar in Kerala) reconsecrated the temple of Udaiyavar which had been deserted during Muslim occupation. Presumably as a recognition of his service he was made the accountant of the temple and given 4 *nali* of cooked rice every day from the *prasadam*.[30] In an instance of individual dnation from Aragal (Salem district) during the period of Achutaraya (1532) Kannan, a Kakkola of Kaliyur who had instituted a car festival *(ter utsavam)* in the temple, was granted a house, a loom, a piece of land and certain specific privileges in the temple by the temple trustees. These same privileges were also guaranteed to his descendants.[31]

As all these instances of individual donations prove, the donors in every instance enjoyed a lot of power. This is clear from the size of the donation or temple service performed, which invariably resulted in social and ritual privileges being. conferred on the donor. This further makes clear one very significant fact-that differentiation among the weavers was increasing. While a few wealthy weavers seem to have made major donations to temples, donations of nominal amounts by ordinary weavers were entirely absent. Secondly the evidence shows a shift in the form of donations from money for perpetual lamp and the donation of sheep in the Chola period to the institution of festivals and disbursement of *prasadam* in the Vijayanagar period. This can especially be perceived in the donations made to Tirupati,[32] for instance, though there are a few earlier instances of donations being made in terms of food offering even in the thirteenth century.[33]

The donations made by weavers during the Vijayanagar period are once again to be contrasted with the donations made by other communities. The merchants were of course the largest donors, though their donations were as usual essentially in the form of *magannai* or contribution of the profits on their items oftrade.[34] The Pancalar or


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kammalar (i.e. the smiths) are another community mentioned frequently in the records of this period in connection with donations to temples. The smiths of Udayagiri, Nellore, Koratur, Gandavaram, Allur, Kovur and several other regions are said to have endowed to the deity Kamatesvara of Dharamkota the *palayan-payindi* of Amaravaram in the year 1490.[35] This was probably a communal cess levied upon members of the community. Elsewhere the smiths are said to have made a collective gift of land to an individual, Buddhasane. Apart from the considerable size of the donation, equally significant is the fact of corporate ownership in land.[36]

## Standard of Living

It would be appropriate to attempt at this point an understanding of the standard of living of weavers and other artisan groups. Some indication of this has already been provided by the nature and size of the donations made by them. This shows the merchants as the most prosperous group, followed by the weavers and the smiths.

Since most of these professionals paid their taxes in cash it is clear that the flow of money was not low, although the peasantry paid their tax more often in kind than in cash. Besides money, paddy also constituted a standard of value. Artisans like weavers and smiths seem to have come within the middle strata of society, as distinct from the rural poor or low-caste artisans like potters and leather workers on the one hand and merchants and the bureaucracy on the other hand. It is possible to form only the most tentative conclusions regarding the consumption pattern and life-style of the weavers. According to a popular oral tradition the fourteenth-century weaver-poet Tiruvalluvar accidentally discovered the efficacy of starching yarn while consuming rice gruel. While the weavers seem to have been able to afford rice, it appears that the poorer sections could afford to eat only rye or *ragi.* This interesting fact is brought out by the Kannada saint and poet of


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the early sixteenth century, Kanakadasa, who wrote the *Ramadhanya Charitre* in the form of a conversation between *ragi* and rice. While at the beginning rice is proud and haughty because it is the tood of the upper classes, it is eventually humbled by *ragi* which torms the staple good of the majority off the people. In fact *ragi* is respectfully addressed as 'Sudranna', literally 'Sudra elder brother'. Since Kanakadasa himself belonged to the Klu:uba or shepherd caste it is clear that rye was the food of the poor.[37] However according to Vasco da Gama rice appeared to be in abundance. Con, according to him, was very cheap and bread which sold at 3 *reais* at Calicut, was sufficient for a man's daily sustenance.[38] Manchana's *Keyurabhirama* composed in the fourteenth century indicates that barter was quite common. It narrates the story of an oil-monger's son who was willing to sell his oil for an equal measure of rice, although the prevailing rate was seven measures of rice for one measure of oil.[39]

Vallabharaya's *Kreedabhiramamu* of the fifteenth century describes the same region as Manchana's work, i.e. the eastern Deccan. The work is about the travels of a rich merchant and his Brahmin friend in Ekasilanagaram (modem Warangal). The author says that the two friends ate a meal comprising high quality rice, ghee, pulses, curds, fruits and sweet dishes for one *ruka,* a *ruka* being equal to a *panam* (very roughly 0.15 or 0.16 of the seventeenth-century rupee)This seems fairly expensive if seen in terms of the salaries paid to the lowest professionals in the temples. This was one or two *panams* annually, besides a share of the *prasadam* and sometimes a *vetti* or *pudavai.* Although hardly any regular figures are available to determine the income of weavers during this period, it is possible to arrive at a very rough estimate of the weavers' income from a reference found in Vasco da Gama's account. Commenting on the cheapness of commodities at Calicut he says that a 'very fine shirt' which in Portugal fetched 300 *reis* was worth only 2 *panams,* equivalent to 30 *reis.* Now, assuming the cost of stitching and transportation to be equal to the cost of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

weaving, the weaver can be said to have produced half a fine shirt per day, or one *panam* worth of labour, since roughly three to four yards can be woven in a day on an ordinary loom. Assuming that the weaver weaves about three yards per day or the equivalent of one shirt; working 276 days a year he would produce 138 fine shirts a year, or 276 *panams* worth of labour. This would be his gross annual income. From this must be deducted the cost of yam, the cost of bleaching and dyeing, and the cost of transportation. If the cloth is not sold directly in the market but through a middleman, his commission has to be deducted. It is being assumed that the weaver did not have to incur any expense on the spinning of thread because this was done by his household, as also on associated processes like carding, combing, twisting and winding the yan. A further reduction has to be made from gross sales revenue of a depreciation charge on the loom, and finally of the tax paid by the weaver. From the Tax Table it seems unlikely that the weaver paid more than five *panams* per year as loom tax (besides other taxes) not exceeding three to four per cent of the gross sales revenue. If all the items mentioned above were to amount to sixty per cent on a very rough estimate, the weaver must have made at least eight *panams* per month. This was the position for the weaver of fine cloth, and it is likely that the income of the coarse-cloth weaver was much less. So far as the ordinary weaver was concerned, although he was better-off than the poorer sections of society, it is quite clear that a single meal costing one *ruka* such as that described in the *Kreedabhiramamu* would have been beyond his means.

## Weavers and Land

Weavers continued to have connections with land in the Vijayanagar period. In the Chola period services to the temple were reciprocated by the grant of lands. In 1383 at Ponnur, Magadarayar, a Kaikkola was given land with certain privileges by the temple in appreciation of his construction of a *mantapam* in the temple[19]. In 1532 a weaver who instituted the car *(ratha)* festival at the


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Karivaradaraja Peru mal temple in Aragal (Salem district) was given land, a loom and certain ritual privileges by the temple authorities.[43] There are also numerous references to weavers acquiring land as *kaniyatchi*. Thus two Kaikkolar, Kuttadundevar and Puluginapperumal, the sons of Kalingarayar, were conferred land as *kani* in Kariyandal (Tiruvannamalai, North Arcot district).[44] In another record from the same area the statement regarding confirmation of *kaniyatchi* is followed by the remark that 15 *panams* was the *chandesvarapperuvilai*. Both these records appear to be instances of long lease or purchase of land by the weavers.[45] During the period of Bukkana Udaiyar twenty *ma* of land in the *tirumadaivilagam* which had been lying waste since the days of Sambuvaraya was sold to the weavers for settlement.[46] Two points in this record are noteworthy: that the land was cultivable waste land and that it was collectively purchased by the weaver community. In 1428 the Kaikkolar ot:Nerkunram (South Arcot district) are said to have been given the *kaniyatchi* right of the village Vadagarai-Tayanur in return for the amount of thirty *panams* given by them to the Uravar.[47] This again appears to be an instance of the conferment of supervisory rights in land rather than the actual conferment of land upon the Kaikkolar. However, one inscription from Tirukkoilur is very ambiguous on this point. The record, dating around 1550's[48] registers an order of the king (the ruler of Travancore, Udayamartanda Varman) granting land belonging to the temple as *kaniyatchi* to Marttandan, a Kaikkola. Perhaps the king exercised some control over the temple land because the record says that it had originally been granted by him the temple in 1531. Collective purchase of house sites by the Kaikkolar is referred to from Kanchipuram in 1364. The record states that with the sanction of Koppannangal, the executive officer of Kampana 'Udaiyar at Kanchipuram, the authorities of the Rajasimhesvara temple at Kanchipuram sold some houses in the north row of the *sannidhi* street to the Kaikkolar and the Kaikkola Mudalis against payment of 150 *panams* made by them, which was deposited in the treasury. It further


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

states: 'These houses and gardens attached to the house may be sold or mortgaged by them.,[49] In 1536, during the period of Achyutaraya, Nami Chetti is said to have constructed a *mantapa* in the Govindarajaswami temple in Tirupati (Chitoor district) on the land which he purchased from the Kaikkolar.[50] The land was apparently held collectively by the Kaikkolar because no individual owner is mentioned. In another significant record *from* Puliyur dated 1563 (Sadasiva Raya),[51] the Sthanathar of the Brahmapurisvara temple made an agreement that they would cultivate certain lands of the Kaikkola Mudalis of Puliyur and pay taxes on them to the temple treasury. Ownership of land by the weavers is also indicated by the records which refer to donation of land by the weavers to the temple. Thus in 1398, at the time of Virupaksha I, Vena Udaiyar,[52] a Kaikkola Mudali, made a gift of all lands in the hamlet of Uttamasola-vilagam to the temple of Tiruvanakoyiludaiya Nayanar. Another record dated 1404 refers to the purchase ofland at Pulippakkam by the same Venaudaiyar.[53] A similar gift of land was made by a Kaikkola of Madurai in *1478.*[54] In yet another instance a gift was made by a section of the Kaikkolar of a share of' their lands to another section for the services the latter had to render in the temple.[55] A sixteenth century record from South Arcot mentions Kaikkola tenant cultivators. The managers of the Ramalingesvara temple and Kudama Nayaka, the agent of Surappa Nayaka, issued an order to the Kaikkolar giving lands in Marangiyur (Tirukkoyilur, South Arcot).[56]

## Privileges-Economic, Social and Ritual

The economic prosperity of the weavers, evidenced by their ownership of land and the numerous donations made by them to the temples, led to the conferment of economic and social privileges by the state in recognition of their enhanced importance in society. To this was added ritual recognition by the temples. Economic privileges took the form of appointment as temple managers or trustees, accountants and treasurers of the temple. As temple trustees they even seem to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have had considerable right over the sale and purchase of temple house sites and land. In 1410, during the period of Bhupati Udaiyar, the Sthanathar and Kaikkolar of Valuvur (Wandiwash, North Arcot district) purchased land for the Brahmapurisvara temple at Valuvur.[57] At Tirupparkadal (Walajapet, North Arcot) in 1469, the period of Kampana Udaiyar, the Maharudrar, Sri Mahesvaras and Kaikkola Mudalis who were the trustees of the Tirupparkadal Udaiya Nayanar are said to have sold a number of houses belonging to the temple to meet the expense of taking the deity in procession. [58] In another instance from Devakipuram (Arani) in the same district, the Kaikkola Mudalis as trustees of the temple made a gift ofland and a house in the temple *(devadana)* to an individual in 1523.[59] In 1533 in the same region the Kaikkola Mudalis acting as trustees of the Brihadamba temple granted the right of supervision of temple lands to an individual. [60] The more affluent members of the weaver community not only functioned as temple trustees but also as temple managers[61] and also held the responsible position of accountants in several temples, especially in the Tirunelveli area (a highly productive cotton tract). For example Keralan Martandan was appointed as the accountant of the temple he renovated. Another instance of the appointment of a weaver as accountant comes from Kallidaikurichchi in 1525. At Giriyambapuram in 1566 the same man, Kaikkolan Perrapan, was put in charge of the accounts of three temples.[62] The appointment of a weaver as the headman *(pidaran)* of a village comes from Eliwanasur (Tirukkoyillur, South Arcot) in 1555. Vengappayan, *the pradhani* of Surappa Nayak, is said to have made the Kaikkola Mudali Gangarayan the *Pidaran* of the village and he was also allowed to own a tax free loom.[63]

Tax reduction or tax exemptions on the weavers were sometimes in the nature of an economic privilege conferred on them. For instance the Kaikkolar of Tirukkalukkunram were exempted from a number of taxes like *karpura kanikkai* (price paid for cultivation rights over temple lands), *Adhikara chodi* (dues paid to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*officers),pattadai nulayam* (tax on silk thread) *attai sammadam* (annual contribution), etc., while during the reign of Saluva Narasimha, the Kaikkolas of Kunnattur were exempted from all taxes.[64] In another interesting instance from Velpamadugu (Gooty taluq, Anantapur) in 1526, during the reign of Krishnadevaraya, it was decreed that at Velpamadugu the rate of tax was to be 3 *panams* per loom and if ten looms were kept by one single family, only nine were to be taxed. [65] This is clearly an instance of an economic privilege being conferred on a wealthy master-weaver. Tax exemption as a privilege was also enjoyed by the Pancalar and in a greater degree by the barbers in the Andra country. Here they were frequently exempted from tax and also had privileges conferred on them during the Vijayanagar period, especially in the time of Sadasiva Raya.[66] But tax exemption was not always indicative of an economic privilege. Very often it was granted in new settlements and served as an inducement to attract weavers[67] and other artisans, or constituted tax reduction in the face of economic protests[68] by the

**weavers**

Social privileges essentially meant the conferment of *sangu* and *tandu* or *dandu* (the right to blow the conch shell and the right to ride the palanquin on all important occasions). It could also mean the right to whitewash homes or have a double storied house, to sport their own insignia or even to wear certain types of clothes. Among the Kaikkola caste of weavers the Kaikkolar of Kanchipuram were apparently the first to secure the privileges of the use of *sangu* and *tandu* on all good and bad occasions because all inscriptions from other regions state that the weavers in these areas obtained these privileges on the pattern of the weavers in Kanchipuram, or that the head of the guild at Kanchipuram by the name of Aramvalartta Nayanar accorded them these privileges. Thus the Kaikkola weavers of Tirvennainallur, Tiruttalur, Tirukkoyilur and Brahmadesa[69] (all in South Arcot district) are said to have got similar privileges on the model of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Kaikkolar of Kanchipuram as per the decision taken by the Aramvalartta Nayanar[70] in consultation with Kongurayar and Kachchirayar.[71] Another professional caste that held privileges equal to the weavers was that of the smiths. A record of the reign of Harihararaya (1336-57) refers to the conferring of social privileges on the smiths.[72] A record from Amaravati dated 1437 says that they were entitled to the various royal insignia like a leather musical instrument, a golden musical instrument, *sangu*- and *tandu, garudadvaja* (banner), etc.[73] The almost equal social importance enjoyed by the smiths as well as the weavers was perhaps one reason for such frequent conflict and rivalry between these two groups.[74]

Ritual privileges were an even more important aspect of social acceptance and recognition for the professional castes, including the weavers. At Kunnattur during the period of Harihararaya (end of fourteenth century) a weaver, - Narpattennayira Solakumaran, who had set up the image of a deity in the temple was given a weaving site and also *parivattam* (head-dress of the god).[75] In 1433, during the reign of Devaraya Maharaya, a Kaikkola, Kulandai Andar Amarakonar, was given - the *tirumukhakani* at the temple of Tiruvagisvaram-udaya-Mahadeva in Tiruvagisvaramadam (Wandiwash, North Arcot). It is said that Aramvalartta Nachchiyarmishta Kandamanikkam, the temple dancer and sister of the Kaikkola, personally interviewed King Devaraya on behalf of the temple and procured a copper plate grant from him, making the *sarvamanya* gift of the village. In return for her services the temple conferred some privilege on her brother and granted her one Padakku of grain every day and two *panams* per month.[76] This record shows the continued association between the Kaikkolar and the Devaradiyar and incidentally confirms the very interesting observation made by Domingo Paes that the Devaradiyar or temple dancers were the only women to have direct access to the king.[77] In 1506, when the Kaikkolar of Ambasamudram constructed a temple for Bhutalavira Rama



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pillaiyar, they were given the hereditary right of receiving a garland from the temple.[78] Elsewhere, especially at Tirupati, a weaver, in return for his donation, was given the privilege of a share in the temple *prasadam.*[79] While these are ritual privileges conferred in recognition of a donation or service, in certain temples the weavers held a position of such importance that they themselves determined the ritual ranking of others. Thus at the Adipurisvara temple at Tiruvorriyur it was the Kaikkolar themselves who, along with the Nattar and the temple trustee, re-examined the old dispute which began in 1265 about the order of precedence and temple duties of the Ishabattaliyar, Devaradiyar and the Padiyilar.[80] In 1368, during the reign of Kampana Udaiyar,[81] certain disputes about ritual precedence regarding these three categories of women engaged temple service were deter mined by the Kaikkolar and, at the beginning of the fifteenth century,[82] in the reign of Harihararaya, the final decision over the dispute was given. That the Kaikkolar should have arbitrated in an issue of such importance is indicative of their ritual status in that temple. At Kanchipuram the Kaikkolar, as in the Chola period, held positions of ritual significance. Kopanna, the minister of Kampana Udaiyar '(fourteenth century), gave the Kaikkolar and Kaikkola *mudalis* of the Kailasanatha temple in Kanchipuram the right to mortgage and sell their honours-their precedence *(mudalmai)* in the receipt of betel nut honour *(adaippam),* their service to the deity *(tevar-atimai)* and their proper place in temple ranking *(ataivu.)*[83] The Kaikkolar also held a position of equal importance at Tirupati. In 1337, the task of conducting the celebration of an important festival (not specified) at theAlamelumangamma's temple at Tiruchchanur was vested in the Kaikkolar and the Emperuman Adiyar (temple dancers).[84] The Kaikkolar figure as the temple servants in innumerable inscriptions from Tirupati and as such they were entitled not only to remuneration but also a share in the prasadam.

The remuneration to the Kaikkolar in the Tirupati temple between 1400-1500 ranged from one *panam* per service to three *panams* per



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

major service.[85] To this was added a share of the *prasadam.* Their role in the Tirupati temple was enhanced when, in the fourteenth and flfteenth centuries, the Tamil or Prabhandic school oNaishnavism began to gravitate towards Tirupati while the Bhasya or orthodox school became concentrated at Varadaraja temple in Kanchipuram.[86]

It is noteworthy that the Saliyar, the dominant weaving community under the Cholas, hardly flgure in the records of the Vijayanagar period. Whether it is with reference to the weaving profession or the acquisition of social and ritual honours it is only the Kaikkolar who find mention. This makes it quite clear that by the Vijayanagar period the Kaikkolar had replaced the Saliyar as the dominant weaving community in the Tamil Nadu region. In the Andhra Karnataka regions, however, the Sale and the Devanga continue to find mention, though the references to Devanga are more numerous from 1500 onwards.

## Weavers and the Idangai- Valangai

From the evidence of the various privileges conferred on weavers, especial1y the Kaikkolar, it becomes very clear that there was an upward movement among them, for the social privileges accorded to them, such as *sangu, tandu,* etc. are more numerous in the Vijayanagar period than in the Chola period. It is essential to note that this upward mobility was not an isolated phenomenon among just one narrow section of South Indian society but comprised several of the influential professional groups: the tanner, the oilmen and, more especially, the Kammalar or Pancalar (the groups of five smiths). These groups aspired for social and ritual recognition and this reflected in their large-scale participation in the Vira-Saiva or Lingayat movement and in the Tengalai-Vaishnavite movement. It is also reflected in an equal degree in the right-hand left-hand ferment in society, in their acts of co-operation as well as in their conflicts and schisms.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

During the period of the Vijayanagar empire further dimensions were added to the *idangai-valangai* classification. Sociologists have tended to describe the categorization as a root paradigm which had varied application at different points of time in different regions. It is quite clear that in the Vijayanagar period the left-hand right-hand divisions had nothing to do with the army since the Muslim invasions and the rise of the Sangama dynasty had resulted in the disbanding of the Chola army. In the fourteenth century the categorization is said to be based on economic grounds. According to Abbe Dubois[87] the classification was based on the struggle for precedence between the followers of the old established handicrafts and innovators who came from outside. Thus it is held that in the Kanchipuram area the Saliyar, the predominant weaving community under the Cholas, were classified as *valangai* while the Kaikkolar, whose professional importance arose only during the Vijayanagar period, are classified as *idangai.* But this explanation is not feasible because even as soldiers in the Chola regiments the Kaikkolar were still classified as *idangai.* Another explanation is that the division of society into *idangai* and *valangai* represented the struggle between landed, stable, agricultural groups on the one hand and the rapidly increasing, mobile urban and artisan groups on the other.[88] But even if the Vellalar are considered as *valangai* (although most often they do not figure in these categories at all) other agricultural castes like the Pallis were included in the *idangai* category. Nor would it be true to say that all the artisan classes belonged to the *idangai* as the Padmasale (weavers), Rangare (dyers) and Kumbhara (Potters) figure as *valangai* in the Karnataka region. That there was no logical basis for the division of castes into *idangai* and *valangai* is proved by the fact that while the men of the Chakkiliyan and Palli castes belonged to the left-hand, the women of their caste were classified as right-hand. The most plausible explanation is that the *idangai-valangai* schisms during the Vijayanagar period were due to the desire for higher status among the lower castes (comprising all the Sudra castes) and the attempts by the higher category of non-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brahmins ~sometimes referred to as the Sat-Sudras) to preserve their status. This had been achieved through the process of Sanskritization, by assiduously keeping others out. A certain social mobility is always present in any society but there is no doubt that the upward movement of professional castes, the clamour for privileges among them and the resultant conflicts were much more intense and violent during the Vijayanagar period than during the Chola period. But, following the analogy implicit in the terms, the left-hand right-hand constitutes a vertical division of the human body, just as the caste system is supposed to symbolize a horizontal division of the human body; since what is divided is a single and complete. Human body, the metaphor expresses conflicts as well as underlying unity.[89] Thus the issue of the *idangai-valangai* castes has to be studied from different facets. The position of the weavers within the major *idangai-valangai* contradiction[90] has to be studied in terms of, first, the elements of co-operation and conflict within the *idangai* and the *valangai* categories separately; second, the elements of conflict between certain elements of the *idangai* and *valangai* categories; and third, instances of co-operation among the *idangai* and *valangai* categories in opposition to other elements like the landlords or the tax officials. The last aspect of course would make the *valangai-idangai* categories themselves part of a broader contradiction within society. To take up the first proposition, i.e. the position of the Kaikkola weavers[91] as a part of the large communal organization of the *idangai* castes, the weavers were bound not only by the rules of their own caste and craft organization but by the broader code of the *idangai* category. Thus in 1399 the *idangai* community of Tiruppukkuli (Chingleput) made a *sarvamanya* gift of *the idangai vari* to maintain a lamp in the temple and in their record the Kaikkolar are specifically stated to be *idangai.*[92] A record from Chandragiri (Chittoor district), states that the *idangai* community of the region met in the *ldangainayaka mantapa* and made a *sarvamanya 'a* gift of a village to their deity.[93] Similarly in 1434 the village off irumangalam in Sangattukkottam was given as *sarvamanya* to meet the expense incurred for the blowing of trumpets



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

by the *Idangaiyar* on the occasion of the Tiruppuram festival in the shrine of the goddess Kamakshiamman in Kanchipuram.[94] In 1457, during the reign of Mallika Ijuna, certain dues like *idangai vari* and *jati kanikkai* collected from the residents of Tirupparambur and its hamlets by the *idangai* Nattavar and Vanniyar were assigned as *sarvamaya) 'a* for lighting a lamp to the goddess Kamakshiamman in the temple mentioned above.[95] But another record, also of the period of Mallikarjuna, gives a different idea regarding the tax *idangaivari.* This records the remission of the *idangai* taxes on a new settlement of the Kaikkolar at Kunnathur (Chingleput) by Mahamandalesvara Saluva Narasimha and the communication of this ordet to the Kaikkolar through the officers of the king. [96]

Inspite of these instances of co-operation' among the left-hand castes there are examples of conflict between two or more of the elements constituting the *idangai* category. The origin of the conflict was always over privileges. In 1503, during the reign of Saluva Narasimha, Ambikamakkilavan Aramvalartta Nayanar of Kanchipuram), agent of Narasa Nayaka, bestowed on. The weavers of Tribhuvanamadeviparru, Naduvukaraiparru and Nenmaliparru (Tiruvandarkoyil, Pondicherry State), certain privileges like the use of *sangu* and *tandu* on all good and bad occasions 'as the weavers of the country situated on the bank of the Pennai river (Tondaimandalam) were privileged to have.' The record significantly adds that those who objected to this right should undergo the punishment fixed for it as per the records at Seliyanganallur.[97] More explicit evidence of the conflict over privileges comes from Vriddachalam (South Arcot) during the reign of Sri rang a (1572-85).[98] The record registers an agreement entered into by the Vasal-mudali of Kongarayar, Nayanar Kachchirayar and the Nattavar of Idaiyaru, denying the privilege of using *pavadai, parivattam,* etc. to the artisans *(kammalar)* i.e. the smiths, which was enjoyed by the Kaikkolar of Padaivldu, Senji and Tiruvannamalai. The conflict over privileges at another level was between the *idangai* and *valangai* castes. Conflicts usually arose


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

over issues such as the ritual ranking in temples, the allocation of symbols and honours, etc. To quote Abbe Dubois "Perhaps the sole cause of the conflict is the right to wear slippers or to ride through the streets in a palanquin *(tandu)* or on horse-back during marriage festivals. Sometimes, it is the privilege of being escorted on certain occasions by armed retainers, sometimes that of having a trumpet sounded in front of the procession, or being accompanied by native musicians at public ceremonies. Perhaps it is simply the particular kind of musical instrument suitable to such occasions that is in dispute, or it may be the right of carrying flags of certain colours or of certain devices during these ceremonies."[99] During the reign of Vijaya Bhupati Raya at Tiruvamiamalai, an order stated that all distinctions between the *idangai* and *valangai* were to be obliterated and that in future the Kaikkolar of the *idangai* were to enjoy all the privileges such as *sangu, tandu, aanai* (right to ride an elephant) *chamaram* (the fans), etc. enjoyed by the *valangai* in the region.[100] One *valangai-idangai* conflict in South Arcot during the reign of Ariyana Udaiyar lasted over four years. Though its origin is shrouded in mystery. At Malayampattu in North Arcot one such conflict led to loss of lives on both sides. [102] In a rare instance at Tiruppukkuli in Chingleput in 1399, the *idangai* community made a collective gift to the deity with a special stipulation by the Kaikkolar that the Sanketi Samayakkarar may not interfere. This is one of the few instances where opposition was directed against the Brahmins. [103] More often the *idangai-valangai* disputes over privileges took place between professional castes among the Sudras with a somewhat similar status in society. A signifrcant case in point are two records pertaining to the periods of Achyutaraya (dated 1549) and Sadasiva Raya (who ruled between 1542-76, but the record is not dated) from Tiruvamattur, South Arcot. The first record states that the Ilaivanigar, i.e. the betel-leaf merchants (they must have belonged to the *valangai* like all the merchant communities) had erased an inscription on the wall of the Tirukkamisvara temple relating to certain social honours and privileges


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

enjoyed by the Kaikkolar. As a protest the Kaikkolar and the Devanga left the village. The matter was enquired into and the issue decided in favour of the Kaikkolar, so that a fresh copy of the inscription was made, based on the copper plate kept in Kanchipuram.[104] The follow-up record pertaining to the period of Sadasiva Raya says that in the time of Surappa Nayaka the Ilaivanigar agreed to accord the same privileges and rights to the Kaikkolar which they had enjoyed earlier before the inscription granting them the privileges was effaced by a group of the Ilaivanigar. The order was now re-engraved on the temple walls. [105] The record is also significant on several grounds. It shows that the weaver castes. acted in solidarity in certain altercations over privileges and, probably, the spirit of co-operation between the Kaikkolar and the Devangas was also enhanced by the fact that they both belonged to the *idangai* community. Secondly the Kanchipuram copper plate preserved at Kanchipuram is stated to be the ultimate authority for the bestowal of privileges on the Kaikkolar. It substantiates the point that the headquarters of the Kaikkola community was at Kanchipuram. The *valangai-idangai* conflicts continued right into the seventeenth and eighteenth centuries and was in fact exploited by the Dutch and the British to gain control over the textile industry and trade. As stated earlier, the *idangai-valangai* is a vertical division of the human body, just as the caste system is supposed to be a horizontal division, and since what is divided is a single and complete human body the metaphor expresses conflict as well as underlying unity. Throughout the Vijayanagar period one comes across various examples of co-operation among the *idangai* and *valangai*, especially against oppressive taxation. A record from Jambai, South Arcot, afte referring to ninety-eight *valangai* and ninety-eight *idangai* groups states that the weavers made a voluntary contribution for the construction of a *matam* (guild meeting place) for their community. [106] In another record the ninety-eight sects each of the *valangai* and *idangai* are said to have met at Korkai (Mayavaram, Tanjavur district) during the reign of Devaraya II (1427) and declared, 'they did not tax us according to


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the yield of the crop but levied the taxes ... unjustly .. . . We were about to run away. Then we realized that because we of the whole country *(mandalam)* were not united in a body, we are unjustly dealt with. Hereafter we shall but pay what is just.' They go on to fix the rates of taxes on different sections.[107] Two records dated 1429 from Elavanasur[108] and Vriddachalam (South Arcot District)[109] give in detail the agreement among the *idangai* and *valangai* to resist unjust taxation and to socially ostracize those who violated this agreement. This is followed by a detailed list of taxes to be paid by the various professional castes.

## Weavers and Heterodox Movements

The clamour for privileges, the claiming of mythological origins and the *idangai valangai* schisms and conflicts represent only particular dimensions of a complex social situation in which an attempt at upward mobility and Sanskritization was taking place, not only among the weaver castes but also among other leading professional castes like the Kammalar or the Pancalar (the smiths) the Teliki (oil-pressers) and others. The cause for this is to be found in the renewed vigour of the urbanization process,[110] the growth in exports and the state patronage to crafts, as evidenced by the *Amuktamalyada.*[111] Thus a situation had developed where certain professional- castes 'exerted a profound influence upon medieval society, enjoying a rank and social power which was far greater than that accorded to them by the legal and social texts of the period.'[112] These castes sought ritual recognition not only by exalting their own caste and acquiring social privileges but by large-scale participation in the Lingayat or Virra-Saivaite and the Tengalai-Vaishnavite movements, and in fact certain southern school Brahmins (Tengalai Srivaishnavas) can be identified as former Sudras from their manners and customs.[113]

The largely *non-dvija* or non-Brahmin composition of Tengalai Vaishnavism can be seen by the number of sectarian leaders in it who


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

belonged to the Sudra caste. The movement which began in the post-Ramanuja period had Srirangam and Tirupati as its nuclei in the fourteenth-fifteenth centuries while the Bhasya or the orthodox Sanskrit school to vaishnavism shifted its centre from Tirupati to the Varadaraja Perumal temple at Kanchipuram. The first Jiyar at Srirangam, Kuranarayana, and later Pillai Lokacarya and Alagiya Manavala, strengthened the Tengalai movement, i.e. the Prabhan- tha or Tamil school of Vaishnavism, by offering discipleships to the Sudra servants of the temple. There were several non-Brahmin disciples of Ramanuja like Pillai Uranga villi Dasar, who was a *malla* by caste (professional wrestlers), or Pattina Perumal. Ramanuja Dasar, another disciple, was a sculptor belonging to the Kammalar caste, while Nambi Eru Tiruvudaiya Dasar was a *shanar* (toddy tapper)[114] It is even believed that Kandadai Ramanuja Dasar, the *non-dvija* (Sudra) Vaishnavite saint of the fifteenth century who held a position of great importance and patronage at Srirangam and Tirupati, was a brother of Saluva Narasimha. Though relationship may or may not be true, it is a fact that Saluva Narasimha extended greatest patronage to these two temples. [115]

The Kaikkola weavers held a position of considerable importance at Srirangam. The Koyil Kanakkan was a Vellalar while the ritual of offering a coconut to the deity was done by the Kaikkolar. Sudra functionaries called Sattada Mudalis (holy men who do not wear the sacred thread) performed important ritual functions at both Srirangam and Tirupati.[116] The Kaikkolar are mentioned as important functionaries of the Tirupati temple along with the Kammalar or Pancalar in a record dated 1544.[117] The Kaikkola weavers were in charge of the *matangi* and *perantalu vesham*. In the *matangi vesham* a Kaikkola worked himself into a state of divine intoxication and then a metal wire was passed through the middle of his tongue without causing any harm. [118] In the *perantalu vesham* a Kaikkola dressed up as a woman and rode around the town on a horse, distributing the


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*prcsadam, kumkum,* saffron-paste and flowers. In view of the fact that in Tirupati, during the Vijayanagar period, the emphasis seems to 'have shifted from mere grants or burning of perpetual lamps to food offerings, the distribution of *prasadam* had a crucial significance, and it is noteworthy that this important task was given to the Kaikkola caste. Tengalai Vaishnavism also had a large following among the Padmasale caste of weavers of the Andhra-Karnataka region. Their guru was the Tatacharyar.[119] The Saurashtrar or Pattunulkaran. Weavers who virtually replaced the Kaikkolar as the dominant weaver community of Tamil Nadu in the seventeenth century, they were predominantly Vaishnavites and, right into the nineteenth century, were involved in litigation in law courts claiming *dvija* status. The large-scale incorporation of Sudra professionals in the Vaishnavite movement can be seen by the creation of *ramanujakutam* (free feeding house) [120] by Saluva Narasimha. This was mainly managed by the Sudra disciples of Ramanuja. Although Kanchipuram was gradually becoming a stronghold of Vadagalai (orthodox) Vaishnavism, even here *nondvijas* continued to hold a position of importance in certain temples. They also continued to play an important part on the occasion of *Sura Samhara.*

Professional castes like the Palli and the Kammalar performed equally significant ritual roles. The Palli caste has an important role to play in the annual function of the Parthasarathi temple in Triplicane. At Sriperumbudur in Chingleput, they enjoy the privilege of accompanying the idol during procession on the ground that they once sheltered the idol from a Muslim raid. They are also allowed to draw the car of the idol at Kanchipuram, Kumbakonam and Srivilliputtur in Ramanathapuram. The Kammalar or smiths enjoyed many such privileges. A sixteenth-century inscription from Udayagiri states that one Kontayyadeva Maharaja, a chief of Udayagiri, performed the *ratha* or car festival of the idol Raghunatha Nayakalu and prescribed the ceremonies to be followed. According to this, dancing girls were


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to accompany the deity in the *ratha* while a member of the Panchanamuvaru (smiths) wearing a head gear and a cloth loosely wrapped around the waist went in front of the car with a chisel, a nail and a sickle in his hands. [121.]

The rising social importance of Sudra professionals and their quest for ritual recognition is also reflected in the proliferation of *amman* temples between 1300 and 1750. In this context the temple statistics worked out by Stein become very interesting. Stein cites the section on Sudras in the Baramahal records, which make it clear that the religious activity of the Sudra castes, both agricultural and artisan, pertained to clan and place tutelaries, mainly goddesses called *amman.* He uses the 1861 census and other sources of information to arrive at the conclusion that the priests in these *amman* shrines were mostly Sudra called *Pandarams,* recruited from the Vellala and Palli castes.[122] At Kanchipuram, the *ratha* (car) festival in honour of Kamakshiamman was arranged by the Kaikkolar. Thurston, giving a descriptive account of the festival, says that some of the car pullers had two cords drawn through their flesh, about twelve inches apart} [123]

In conclusion, certain very significant points emerge from the mass of evidence presented heve. Society during the period of the Vijayanagar empire was in a state of flux. This was because of the renewal of urbanization and temple activity under the patronage of the Vijayanagar kings, and on account of the overall prosperity of the empire. As a result there was an upward movement among most of the Sudra professional groups such as the smiths, the weavers and the oil-pressers. But the economic power and social privileges gained by the weavers and other leading professionals was hardly in accord with the low place allotted to them in the ritual hierarchy in medieval South India The battle against caste took the form not of caste negation but of caste exaltation. Like the Rajput in the north who claimed to be Suryavamshis and Chandravamshis, the Kaikkola weavers ascribed


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

their origin to Virabahu, the mythological lieutenant of Lord Kartikeya. Similarly the Devanga weavers of the Andhra-Kanataka region claimed descent from Manu and Narada. They also laid claim to the Brahmanical status and wore the holy thread. Thus what was happening among the weaver communities and other professionals like the Kammalar in medieval South India was to an extent the reverse of the Bhakti movement in the North. The leaders of the Bhakti movement in the North during the thirteenth-fifteenth centuries, like Kabir (weaver), Dadu (a cotton carder), Namdev (a calico painter), Raidas (a barber) and Nanak (a petty grocer), all belonged to the artisan community. They spearheaded the movement for equality with the upper castes not by seeking mythological origins or claiming ritual privileges but by a total negation of caste.[124] Ramanand, the teacher of Kabir, said' Let no man ask a man's caste or with whom he eats. If the shows love to Hari, he is Hari's son'. Kabir himself rejected caste in several of his devotional verses ' it is. needless to ask of a saint, the caste to which he belongs. For, the priest, the warrior, the tradesmen, all the thirty-six castes alike, are on a search for God" The barber has sought God, the washerman and the carpenttr. Even Raidas was a seeker after God'.[125] In an even more thought-provoking verse Kabir, after proclaiming his weaving profession, says, 'of the earth and the sky the Lord hath made a loom. And the sun and the moon, the warp and the woof.' ,And I, the weaver realized the Lord within my own home. Sayeth Kabir, when the loom breaks; then the thread merges in the thread of the world. They who wear *dhoties* of 1/2 yards and 3 fold sacred cords, and display rosaries on their necks ... they are the cheats of Banaras, not the saints of the world.'[126] The verses of Nanak and Dadu express similar sentiments. Thus the process of caste exaltation and the assumption of a brahmanical or suprabrahmanical status is absent in the north. Unlike the Lingayats or the Tengalai Vaishnavites, most of the leaders of the Bhakti movement in the north reject the entire idea of caste. But in the south, while Basava the Vira-Saivite saint and Ramanuja the Vaishnavite leader expressed ideas of


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

caste negation, their followers adopted techniques of caste exaltation. The Lingayats claimed superiority over Brahmins and, to emphasize the. point, adopted peculiar practices like the burial of their dead in a sitting posture, while the Tengalai Vaishnavites contended with the Vadagalai for caste superiority and ritual recognition.

## Reference


1. Burton Stein's article John Parker, ed.., *Merchants and scholars*. Also in Frykenburg, ed.., *and Control and Social Structure*. T.V Mahalingam, though he does not state it in such conclusive terms, seems to hold the same idea for he says, "The real fact is that from about the Vijayanagar period in the history of South India, the Government which came to be organized partly on fedal and partly on military basis was not conductive to the active functioning of the village republics'. *South Indian Poli* JI (Madras, 1967), p. 382.
2. The efforts taken by the Vijayanagar rulers to forge links with the local elements, especially the temples and sectarian leaders, is dealt with in a thought-provoking article by Arjun Appadorai, 'Kings, Sects and Temples in South India', in Burton Stein, ed.., *South Indian Temples* (New Delhi, 1978), pp. 47-75.
3. A record from Nakkarahalu in Hadagallu taluq dated 1562 records that the *adhikari* officers granted *manya* lands to *senabova* (accountant) *tirumallara*, the *gaunda* (headman), *talari (watchman)*, *jyotisa* (astrologer) etc. S.I.I., Vol. 9, pt. 2, no.676 E.C., Vol. 12, ch. 2 also refers to manya being granted to a jyotisa.
4. Mark Wilkes, *Historical Sketches of South India*, 3 vols. (London, 1820), Vol. 1, p.73.
5. Ibid. A detailed reference to the Ayagar system is also to be found in the *Attavanavyavaharatantram*. This is citied at some length in *Further Sources of Vijayanagar History*, ed W. Venkataramanayya and K. A. Nilakanta Sastry (Madras, 1946), p. 285.
6. A.R.E 16 C. P. of 1925-6. no.21 of 1910-11, E.C., Vol.12, Tm. 54, etc
7. *M.A.R.*, 1928, p. 48.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. *E.G.*, Vol. 7, ch. 62, dated 1565 from Channagiri, Shimoga, for instance, refers to a dispute between two local parties regarding the office of *senabova, jyotisha* and *purohit.*

9. M.A.R 1916, para 105.

10. A.V Venkataratnam, *Local Government in the Vijayanagar Empire* (Prasaranga, University of Mysore, 1972),p. 30.

11. Ibid., p.37 Saletore's view, that the Vijayanagar kings did not introduce measures by which the powers of the local bodies were curtailed, is quoted with approval by Venkataratnam. To quote Saletore, 'as promoters of the Purvadamaryade (ancient constitutional usage) it was their endeavour to preserve the old order of things, and to allow the ancient officers to continue under the new government .... They showed their discretion by placing over the local bodies, officers of the Central Government'. B.A Saletore, *Social and Political Life in the Vijayanagar Empire,* vol. I. p. 342.

12. V. Rangacharya, *Inscriptions of the Madras Presidency*, Vol. 2, np. 996 A.

13. *A.R.E.*, 103 of 1906.

14. *T.T*, vol 6, pt. I no.6.

15. *A.R.E* 538 of 1916-17.

16. .

17. *A.R.E* 298 of 1921-2 the inscription gives no clue as to the date *nor* is it. possible to plac Vira Sayana Udaiyar, though in the report he is listed as a ruler of Vijayanagar.

18. *S.I.I.*, vol. v, no. 479.

19. *A.R.E.*, 353 of 1911 from Chingleput; *A.R.E.*, 221 of 1929-30, etc.

20. *A.R.E.*, 366 of 1923; A.R.E., 318 of 1916-17 etc.

21. *A.R.E.*, 366 of 1923.

22. *E.C.*, Bn. 66 , p. 14.

23. *A.R.E.*, 63 of 1908.

24. *A.R.E.*, 318 of 1916-17.

25. Rangacharya, *Inscription of the Madras Presidency*, no. 362.

26. *A.R.E.* 313 of 1916-17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. *A.R.E.* 353 of 1911.

28. *A.R.E* 407 of 1928-9.

29. *A.R.E* 221 of 1929-30.

30. *A.R.E* 407 of 1928-9

31. *A.R.E.* 453 of 1913-14.

32. *For* a discussions of the shift in the nature of donations from perpetual lamps to *prasadam*, see Arjun Appadoral's article 'Kings, Sects and Temples in South India', Pp. 66-7, and IT., also T.T., Introductory Report, p. 129.

33. 1254, the region of Vijayaganda Gopaladeva, T.T., vol. I no Kulotunga III, virtually the last of the Cholas. A.R.E 418 of 1909-10.

34. S.I.I vol. 7, no. 21; A.R.E., 200 of 1937-8, etc..

35. S.I.I., vol. 6, nos, 219 and 220 from Amaravati; also N.D.I vol. 3, no. 21 from Udayagiri.

36. S.I.I., vol. 6, no. 666.

37. K.S.S.Shivanna, 'Kanakadasa's Ramadhanya Charitra its Socio – Economic Significance', a paper presented at the 40th session of the Indian History Congress, Waltair, 1979.

38. Citied in T.V. Mahalingam, *Administration and Social Life*, p. 178.

39. Keyurabhirama of Manchana, cited in A. Vaidehi Krishnamoorthy, Social and Economic Conditions in Eastern Deccan (Secunderabad, 1970), p. 92.

40. *Kreedabhiramanu* of Vallabharaya, ed. Vetturi Prabhakara Sastri (Muktiyala, 1952), verses 54-5.

41. T.T inscriptions. The majority of the records in this series make some reference to the payment to professionals and menials in the temple. See vol. 3, no. 29 dated 1535, etc.

42.A.R.E. 407 of 1928-9.

43. A.R.E 452of 1913-14.

44. A.R.E 188 of 1963-4.

45. A.R.E. 189 of 1963-4.

46. A.R.E. 368 of 1923. 214 Textiles and Weavers in South India

47. A.R.E. 209 of 1934-5

48. A.R.E. 720 of 1962-3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. S.I.I., vol. I no. 87.

50. T.T., vol. 4, nos. 140 and 258.

51. A.R.E., 34-6 of 1923.

52. A.R.E., 365 of 1911.

53. A.R.E. 356 of 1912-13

55. A.R.E. S.I.I., vol. 12, no. 758.

56. A.R.E. 99 of 1935-6

57. A.R.E., 62 of 1908-9

58. S.I.I., vol. xvii, no. 758.

59. A.R.E., 365 of 1912-13

60. A.R.E., 356 of 1912-13

61. A.R.E., 4-82 of 1909 from Cholapuram, Kovilpatti, Tirunelveli district.

62. A.R.E., 602, 603 and 606 of 1916-17; 320 of 1916-17 and 4-73 of 1916-17, etc.

63. A.R.E., 4-86 of 1937-8

64. A.R.E., 17.0 of 1933

65. S.I.I., vol. ix. pt 2, no. 516.

66. A.R.E., 87 of 1951-2; 318 of 1905-6, 4-72 and 514- of 1906-7, etc. E. G., vol. vi. Tk. 13, etc

67. A.R.E., 4-29 of 1925-6 from South Arcot of the period of Devaraya.

68. A.R.E., 356 of 1923.

69. A.R.E., 4-73 of 1921-2 of the period of Mallikaljuna, dated 14-85.
A.R.E., 4-22 of 1925, of the same period.
A.R.E., 291 of 1928-9
A.R.E., 162 of 1918-19

70. The exact status of Aramvalartta Nayanar is not very t-lear. It appears that Kachchirayar was the Head of the Kanchipuram guild and Aramvalartta Nayanar was the overall head.

71. A.R.E., 291 Of 1928-9.

72. A.R.E., 804- of 1917.

73. S.I.I., vol. vi, no 209.

74. The clash between the weavers and the smiths over privileges is referred to in various *inscriptions*- A.R.E., 293 of 1928-9 for instance. Several instances are sitied by Aljun Appadorai in his monograph *Left-hand Right-hand Castes in South Indian History.*

75. A.R.E., 221 of 1929-30

76. A.R.E., 229 of 1919-20

77. The Accountant of Domingo Paes in Sewell, pp. 234-, 259.

78. A.R.E. 313 of 1916-17.

79. A.R.E., 602, 603 and 606 of 1916-17. Also T.T. inscriptions passim.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. A.R.E., 196 of 1912-13.
81. A.R.E., 208 of 1912-13
82. A.R.E., 196, Appendix B, 1912-13
83. S.I.I., vol. i, p. 22.
84. T.T., vol. I no. 108
85. The wages of temple servants are given in several inscriptions pertaining to the Tirumalai-Tirupati temples. T.T., vol. ii, no. 135; T.T., vol. iii no. 105, no. 29; T.T., vol. iv, no. 3, etc. There is not much difference in the wages paid to the temple personnel which ranged between 1 to 5 *pal Ulms,* but the Sthanathar were paid higher.
86. T.T. vol. ii, no. 85; T.T., vol. iii, no. 7 etc.
87. Abbe Dubois, Hindu Manners, Cusroms and Ceremonies of the People of India (1879; rpt. London, (978).
88. This opinion is expressed among others by Lewis Rice; Mysore Gaeteer, pp. 52-3ff. Also see Hamilton Buchanan's A Journey from Madaras through tlu countries of Mysore, Cal Ulra and Malabar, 3 vols, (London, (807). Also refer to Burton Stein, Peasant, State and Society for his theory of a Brahmin- Vellala alliance against the. Artisan groups.
89. Aljun Appadorai, 'Left-Hand Right-Hand castes in South India', I.E.S.H.R. vol. xi, nos. 2 and 3, 1974, p. 219.
90. This is what Burton Stein has described as 'opposition which is complementary. 'See Stein's article in Richard Fox, ed., Relam and Region in India. (New Delhi, (1977), pp. 35-6.
91. Only the Kaikkola weavers are specifically mentioned because some weaver castes like the Saliyar of the Tamil countrty and the Padmasale of the Andhra – Karnatak regions belonged to the valangai.
92. A.R.E., 217 of 1916 (Kanchipuram Taluq, Chingleput district).
93. A.R.E., 24 of 1944-5.
94. A.R.E., 308 of 1954-5.
95. A.R.E., 315 of 1954-5.
96. A.R.E., 207 of 1929-30
97. A.R.E., 368 of 1917-18
98. A.RE., 293 of 1928-9.
99. Abbe Dubois, p. 26.
100. S.I.I., vol. 8, no. 155.
101. A.R.E., 217 of 1916, for details on the Sanketi Brahmins see Thurston, vol. i.two other examples of idangai-valangai opposition to Brahmins occur in A.R.E., 246 and 254 of 1928-9, though here the issue was not privileges but tax oppression.
102. A.R.E., 422 of 1905.
103. A.R.E. 185 of 1921.
104. A.R.E. 201 of 1936-7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. A.R.E., 41 of 1922-3
106. A.R.E., 103 of 1906-7
107. A.R.E., 216 of 1917-18
108. A.R.E., 489 of 1937-8
109. A.R.E., 92 of 1918-19, para 68.
110. For the growth of urban centres and They links with the Bhakti movement, see A.N. Nandini's artcle on the 'Origins of the Vira-Saiva movement,' I.H.R., vol. 2, no. i, July 1975. Also see Burton Stein's article on 'Social Mobility and Medieval South Indian Hindu Sects' in Silverburg, ed., Scocial Mobilitry in The Caste System of India (Hague. 1968), p. 78 and passim. Stein'is attributing the importance of the Sudras to the existence of large contingents of caste armies in the Vijayanagar period is not correct since most of the caste armies were disbanded after Rajaraja Chola III.
111. *Amuktamalyada:* canto iv, verse 35, p. 230.
112. Stein's Article in Silverburg, p. 81.
113. Ibid., p. 90.
114. N. Jagadeesan, History of Sri Vaishnavism in the Tamil Country (Madura., 1977), pp. 86, 91-2, 94-5.
115. This aspect is discussed by Stein in Silverburg, pp. 88-9. Also Arjun Appadorai's article in Stein, ed., South Indian Temples, p. 59.
116. T.T. vol. ii, nos. 23, 31 and 50 etc.
117. T.T. vol. ii, no. 396, 397.
118. Edgar Thurston, vol. iii, p. 42.
119. H. Buchanan, vol. i, pp. 256-7.
120. Arjun Appadorai in Stein, p. 67.
121. N.D.I., vol. ii. no. 20
122. Burton Stein 'Temples in the Tamil Country, 1300-1500', in Stein, ed., South Indian Temples. Pp. 27-8.
123. Thurston, vol. iii, p. 42.
124. The nature of participation of the professional and artisan classes in the Bhakti movement in northern India has been discussed at some length by Irfan Habib in his article 'The Historical background of the monotheistic movements of the 15th – 17th Centuries.' Seminar on ideas- Medieval India, Univ. of Delhi, 1965, mimeo.
125. Hundred Poems of Kabir, tr. By Rabindranath Tagore, ed. Evelyn Underhill (London, 1970), p. 41.
126. Translated by Sereberiakov in 'The Poetry of Weavers and Tanners', I.S.P.P., vol., viii, 1966-7, p. 194.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Production and Trade Under the Vijayanagar Empire

Prof. Vijaya Ramaswamy

The fall of any great empire has invariably led to disruption of the social order and disruption of crafts and trade. This was what happened in the twelfth-thirteenth centuries when the Chola Empire declined. This period was also one of general conflict between the Hoysalas, Pandyas and Cholas. As a result of constant political tensions, traffic in trade and goods became difficult and major seaports like Mottpalli in Andhra which had been so important in the early medieval period, fell into a state of decay.

For about a hundred years following the decline of the Cholas in the thirteenth century, there was a power vaccum in South India. The place of The vast Chola empire was taken by four



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mutually-warring kingdoms and dynasties-Yadavas of Devagiri, Kakatiyas of Warangal, Hoysalas of Dwarasamudra and the Pandyas of Madurai. It was in the middle of the fourteenth century that important political changes began to take place in South India. While Muhammad bin Tughlaq ruled over the Delhi Sultanate in Northern India, rebellions by subordinate chiefs broke out in many parts of the Deccan. As a result of these challenges to the Sultanate rule, independent kingdoms came up in the South. Two of them-the Maabar Sultanate under Jalaluddin Ahasan Shah and the Bahmani kindom under Hasan Gangu were both Muslim Sultanates while the kingdom of Vijayanagar which was founded in 1336 was proclaimed as a Hindu kingdom although the Deccani Sultanates and Vijayanagar formed alliances with each other when political exigencies arose.

The cultural renaissance during the Vijayanagar period was possible because of a strong resource base. The financial and economic strength of the empire derived from a number of factors including a strong polity, expanding agrarian base and above all a flourishing state of production and commerce.

## State Patronage to Commerce

To a certain extent the prosperity of craftsmen and merchants in the Vijayanagar empire and the flourishing state of its production and commerce in the fifteenth-sixteenth centuries, was due to active royal patronage. In the Amuktamalyada, literally garland of pearls, said to have been authored by the greatest king of the Vijayanagar Empire, Krishnadeva Raya, and active encouragement of commerce is clearly spelt out as the major aim of state policy. The text states:

*"A king should improve the harbours of his country and so encourage its commerce that horses, elephants, precious gems, sandalwood, pearls and other articles of commerce are freely imported into his country. He should arrange that the foreign sailors who land in*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*his country on account of storms, illnesses and exhaustion, are well looked after. "*

A number of foreign chroniclers also testify to the state patronage offered to merchants. For example Barbosa observes that as soon as a merchant landed on Vijayanagara soil, he was provided with a Nayar (a caste found in the Malabar region) to serve him, and a clerk and a broker to arrange for him to obtain such merchandise as he had need of and to assist him in all matters.

## Revival of Urbanisation

Another factor that led to the revival and growth of trade and commerce in medieval South India, was the process of renewed urbanization from the fourteenth century onwards These urban centers usually developed around the temple complex. The temples were self-supporting economically and hence all categories of artisans and professionals lived within the temple premises. Thus developed what are known as 'temple-towns'. These towns also acted as the regional market centers and the venue of local fairs called sante/sandai . The towns which acted predominantly in the capacity of mercantile centres were called nagarams.

## Expanding Foreign Market

With the establishment of a stable political power under the Sangama, Saluva, Tuluva and Aravidu dynasties of Vijayanagar, foreign trade contacts began to flourish. There was a steady stream of visitors to Vijayanagar and Brahmani and later on the Sultanates of Bijapur and Golconda. These merchants and officials have left behind glowing accounts of the prosperity of the kingdoms and the flourishing trade in textiles and other commodities. Notable among these chroniclers are Nicolo Conti, the Italian (1414-19); Abdur Razzaq the Arab merchant, Ma Huan the Chinese traveller (circa1451) and Portuguese chroniclers alike Domingo paes and Fernao Nuniz (1520-22 and 1535-37) apart from


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the invaluable account of Duarte Barbosa. All their accounts testify to the growing volume of trade between the Vijayanagara empire and West Asia as well as Europe. These records use the generic term of 'Moors' for all Muslim traders whether they were Arabs, Persians or Turks while indigenous Hindu merchants were usually given the nomenclature of 'chettis'. Very important commercial treaties were concluded with the Portuguese during the period of King Sadasiva Raya.

## Crafts and Industries in the Vijayanagar Empire

### Textile Production

Textiles constituted one of the major products of South India. There were two types of textile production operating side by side. One was the domestic industry which produced for the domestic market. The coarse cloth needed for mass consumption was sold at the sante or local fairs directly by the weavers or by petty intermediaries at the nagaram or small market towns. The emergence of a new bureaucratic class during the Vijayanagar period- The Amaranayakas, the Palayakkarars for the royal officials who represented the authority of the Vijayanagar empire in the villages and townships, however, generated a demand for certain varieties of luxury cloth.[2]

Apart from the internal market, the textile centres especially in the coastal regions, catered to a very wide export market, dealing in a variety of textiles. Muslins, chintz and different ypes of silks were woven. The European traders introduced new demand for chintz, broadcloth, calico and fine muslin. Sella or salemporees referred to in the company records was a principal item of barter in the triangular spice trade and later on was exported to England and France and began to substitute the textiles from Flanders. Inscriptions refer to varieties called 'Pattavali pattu", the patola or 'ikat' variety which became the hallmark of products from the Gujarat region and areas


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

like Pochcampalli in the Andhra region. Tie and dye fabrics from Madurai were known as 'chungdi'. Tassore was a well known variety of silk produced in the Karnataka region. In the fifteenth century while complex weaves would be produced on patterned horizontal looms, Streynsham Masters, the Dutch chronicler, observes that at Elluru in Andhra regions, carpets were produced on vertical looms. One reason for the popularity of Coromandel textiles in the foreign markets was the enduring brightness of the vegetable dyes like indigo and the red sapan wood. Red dyes were also produced from the cochineal worms.

## Oil, Sugar and Salt

Oil production was an important domestic industry and the fifteenth century text *Kreedabhiramamu* of Vallabharaya[3] refers to both production of oil, the profession of oil mongers and the sale of oil by women. This text also refers to a variety of oils such as that produced from the seeds of gingelly, linseed and castor oil. Records refer to different kinds of oil mills such as kallugana i.e. manually operated stone press, ettugana or press worked by oxen and muttugana or the treadmill oil. The Teliki or oil mongers are identified as a very important professional and commercial group in the Vijayanagar period. They refer to themselves in the inscriptions as 'Teliki Thousand' and claim Bezawada as their caste headquarters.

Manufacture of sugar, jaggery and salt production were other important domestic crafts. Processed sugar was known as sarkarai and jaggery as vellam (bella in Kannada). Surprisingly, a twelfth century work *Mitakshara* of Vijnanesvara states that setting up machines for crushing sugarcane or even oil would amount to a secondary sin. Since the *Mitakshara* is a legal text, this injunction suggests that these two industries were treated as state monopolies. Sugar which was exported was expensive and Barbosa says that an *arroba* of sugar (roughly 28 lbs) was worth 340 reis (Reis was a Portuguese currency roughly equivalent to 5 shilling 7 pence in the sixteenth century). Production of


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

salt was a common domestic industry along the sea coasts. The *Manasollasa*[4] of the Chalukyan king Someshvara, written in the 11th century, alludes to the fact that every home along the coast enjoyed the rich bounty of the sea in the form of salt. Inscriptions refer to the tax on sale of salt.

## Metal Craftsmen and the Kammala Smiths

The change in the fortunes of the weavers and the smiths with the advent of the Vijayanagar Empire is a striking one. Commercial expansion under the active patronage of the Vijayanagar kings was reinforced by the opening up of new markets with the establishment of the East India companies. Cloth, for example, was no longer a primary item of barter for spices or Arab horses as in the Chola period, but a commercial product in its own right The new found economic prosperity of the weavers and smiths is reflected in the nature and quality of the donations made by them to the temples, temple donation being a primary index of social status in the medieval period. The temples responded by conferring important ritual privileges on these groups and it is significant that while in the Chola period there is not a single instance of the conferring of sangu and tandu (conch shell and palanquin) honours on the weavers and smiths, there are more than a dozen such inscriptions in the Vijayanagar period for the Tondaimandalam region alone between the fifteenth and sixteenth centuries. The process of 'Urbanisation'[5] as Perlin terms it, in the fifteenth century, especially in the nuclei of the temple-towns, led to artisan concentration in such areas. The growth of temple-towns was due partly to the active patronage of Vijayanagar kings. These temples were huge architectural complexes with numerous small shrines and enclosures, and gradually these temple-towns became the centers of large-scale artisan activity as evident from the various streets assigned to different artisans in these towns. Burton Stein advances the very interesting notion that the great walled temples which arose during the medieval period were on the same pattern as the military forts, and


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cites and that temples were in fact used as fortifications[6]. Even if one does not accept this hypothesis, there can be no doubt about the role of temple-towns in the process of urbanisation and imperial integration[7]. Tirupati, Srirangam, Chidambaram and Kanchipuram are some leading examples of these temple-towns.

Besides temple servants, such as, the priests, dancers and musicians, various categories of artisans were settled in the tirumadaivilagam," that is, the area around the temple. It must, however, be made clear that the settling of craftsmen around the temple was not by itself indicative of any new development since this was the practice even in the Chola period around the tenth and the eleventh centuries or even earlier. The long copperplate from Kanchipuram pertaining to the period of Uttama Chola (tenth century) gives, for instance, the details of the four cheris or streets assigned to the Saliya weavers and their powers of supervision, along with the merchants, over the other artisan castes of the region in the context of temple service and revenue collections. Reference to the Kaikkola-teru, or the street of the Kaikkola weavers in the temple-towns, comes from numerous inscriptions of the Vijayanagar period[9]. The principle of assigning cheris, or separate streets, was not confined to the temple-towns. A sixteenth century record belonging to the period of Krishnadeva Raya is located in the Kaikkola-tent at Tiruchchengodu, itself a very important weaving centre in the Salem district[10].-- A Nellore record mentions the street of the Anjuvannattar (the smiths) in the town- of Krishnapatnam, a port[11] Interestingly, this pattern was followed even in the designing of the Black Towns by the East India Company and in the settling of caste disputes by assigning different streets to different castes for their residence and for taking out processions.

These towns began to take on the character of commercial towns in the Vijayanagar period as a result of expanding trade and commerce. The artisans settled in the temple-towns did not cater only


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to the temple or the court but also to a wider market. The most striking instance of this is an inscription from Tirupati (Andhra) dated 1538. It registers an agreement among the cloth and yam merchants of Tondaimandalam, Puramandalam and Ulmandalam," imposing certain weaving specifications. The inscription concludes by stating that this order is to be communicated 'to every Hindu and Muslim dwelling [of the weavers], every cloth merchant and agent for strict observance and application in Tirupati, Kanchipuram and other parts of the South.[12] This record from Tirupati demonstrates, among other things, the wide extent of the influence of specialised and powerful merchant corporations and makes it clear that the weavers' products formed part of a very wide trade network.

The spurt in the textile industry was the result of growing demand, especially for better varieties of cloth, from a newly emerging stratum consisting of the Nayaks, Poligars and other functionaries, as also from the Vijayanagar court itself. This demand was to some extent the result of the influence of Muslim fashions. The Muslim influence on the costumes of the Vijayanagar nobility can be preceived in the painting of this period. It is possible that this demand was met not merely through the expansion of looms or the utilisation of the idle capacity of looms, but also by making certain innovations in the loom, and probably the invention of the draw loom. The Tirupati inscription cited above seems to refer to a draw loom. It describes in detail the square frame (sadisarakkudam) and the bunch of cords (achchukattu) and even specifies the number of punjams or threads to be used in weaving upon the new loom. Probably this invention owed something to Muslim influence (whether it be Arabian or Persian) because it was the Muslim weavers who were given the exclusive privilege of weaving upon this loom[13]. As regards metal work, gold jewellery and other ornaments were in great demand in the temples and the court, as also generally among the upper classes. Besides jewellery, gold and silver vessels as well as other ceremonial symbols were in demand in the temples and


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the royal court[14]. However gold ornaments were also worn by the common people, except the very poor. To quote Abdur Razzaq: 'All the inhabitants of the country, whether high or low, even down to the artificers of the bazaar, wear jewels and gilt ornaments in their ears and around their necks, arms, wrists and fingers[15].

The blacksmith, or Kollan, was vital to every village community because he made the ploughshares, hoes and axes[16], but iron also appears to have been an export commodity. Barbosa says that at Bathekala (Bhatkal in Kamataka), ships bound for Ormuz loaded cargoes of iron.[17] In fact, iron-ore was mined to a considerble extent in Kamataka and it is said that there was an ancient iron factory at Kuditini (Bellary district).[18] Iron was also mined at Kalaghat in Andhra and iron swords, daggers and lances were manufactured here and at Indalwai, very near Nizambad, and exported primarily to West Asia.

Brassware as well as copper pots and pans were in use in less affluent homes. This class of people also appears to have used cots which, much like the modem 'charpais,' were constructed with wood and bamboo laced with cords. In fact the medieval poet Srinath refers to 'soiled clothes, a broken down cot laced with cords and a dark, unlit house' as hallmarks of poverty[19]. The rich people, on the other hand, used highly ornamental cots. Paes, commenting on the opulent life style of the nobles of the Bahmani kingdom says that they were wont to be carried on their silver cots[20]. Brass was especially in demand for making kannandi or mirrors. In fact, right till the seventeenth century mirrors were made of polished brass, as attested by a seventeenth century commentary on Yajnavalkya Smriti, Viramitrodaya, composed by Mitramisra[21]. The armour industry provided a major source of demand for the services of the smiths. Their products included metal shields, swords, battle-axes and javelins. In fact one inscription of the twelfth century from Tiruvarur describes the smiths as salyoddara or makers of weapons[22]. In the sixteenth century, Domingo Paes


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

describes the swords and shields of the nobles encrusted with gems and designs of beaten gold and silver[23]. Tavernier, in a mid-seventeenth century account of Golconda, also refers to bows and arrows, swords, bucklers, axes, helmets, jackets of mail, and muskets[24]. Asad Beg's account of Bijapur, written around the same time, describes shops of armourers, cloth sellers and jewellers[25]. The increasing references to the manufacture of muskets and cannons in contemporary literature from the sixteenth century onwards suggests that their greater use in medieval warfare must have given a spurt to the armour industry. From the very limited evidence available on the life style of the people and their articles of consumption it can be deduced that while the court and the temple continued to be the main consumers for the very expensive types of metalware and luxury products, the demand for copper and brassware may have gone up as a result of the growing prosperity of certain sections of society, especially the bureaucracy, lower officials, merchants and some of the artisan groups who were the main beneficiaries of a system of expanding commerce and administration under the Vijayanagar kings. On the other hand, the demand for leather goods continued to be limited. Thus the growing economic prosperity of the weavers and a section of the smiths as a result of the expanding market for their goods is shown by the fact that they made their donations to the temples in kind or cash and not in the form of service[26]. Second, it became a consistent practice in the Vijayanagar period for artisans to pay their taxes in cash.

## Craft and Trade Corporations

The craftsmen as well as the mercantile groups in medieval South India were organised in corporations. Appadorai has used the term 'caste-guilds' to describe such corporations[27]. The artisans of a corporation were bound by the caste ties and, unlike the European guilds, they did not attempt to standardise prices or products. The only economic function of the South Indian craft organisations was collective bargaing and protest against enhanced taxation. Various


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

examples of such protest against enhanced taxation are provided by the corporate organisations of the weavers. In the time of Harihara II (1377-1404) the weavers of the Agastyesvara temple at Olakkur struck work[28]. The loom tax during the reign of Virupana Udaiyar (1465-85) was rather high, that is, five panams, and as a result there were repeated strikes and desertions by the weavers." In 1513, in the reign of Krishnadeva Raya, an attempt to increase the loom tax led to desertion by weavers en masse and in ordeı to conciliate them the tax increase had to be withdrawn[29]. The smiths also resorted to such collective protests, and in this context, the seventeenth century traveller, Abbe Carre, remarked: 'Among the Karnmalar artisans-goldsmiths, blacksmiths and carpenters, there was a firmly established custom that if one of them is offended or wronged, all the others shut their shops and abandon all their work[3o].In some very rare instances, these organisations also succeeded in ensuring uniform wages for the artisans. In a record from Kanakahalli in Bangalore district dated 1306, it is stated by Asari Karvoa, the chief of the smiths: "Granted to those of Visvakarmakula, to the Hiri Karnmata and Biti Kammata of the city of Dwarasamudra as the chief (centre) and all blacksmiths, goldsmiths, and all Vira Panchalar of the four quarters ... within the kingdom we are ruling, in all the sacred places and in all places granted to ministers, favourites, Nayakavadis and in the great houses of Sivipura-in all these all members of the Vira Panchala will obtain pay according to their vadippana mariyadi of pancha kurukahalla [the customary amount payable to the Panchala community but here the figure is not mentioned] for Chokkappa's tank and receive at that rate. This we have granted of our favour as dharma for the Panchalar[31].

It appears that this wage was obtained by the smiths under the seal of official authority as a result of the collective decision of the corporation represented by the chief of the smiths, Asari Karvoa. The artisans also seem to have functioned as a collective body in the joint payment of taxes. But, by and large, the corporate body functioned as an



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

organisation for social purposes, like making joint donations to temples, joint celebration of festivals, etc. According to the inscriptions of the period, there were traditionally eighteen panas or samayas, that is, craft corporations. A mid-seventeenth century inscription from Adoni in Andhra gives the details of these panas in which, among others, weavers, tailors, potters, shoemakers and the smiths are listed[32]. An epigraph refers to artisans collectively as padinen bhumi samayattar[33].

## Caste and Crafts

Members of a craft usually belonged to the same caste and professions were theoretically supposed to be hereditary. Barbosa's statement in this regard is well known, that 'the washermen of Malabar wash the clothes of the Nayars and their sons must perforce follow the same trade.[34], however, this was not always true and there was sometimes an admixture of castes within a professional body. The position is best stated by the twelfth century authority, Vijnanesvara, in the Mitakshara. He defines a sreni as an organisation of persons earning their livelihood by the same kind of labour, and belonging either to the same caste or to different castes[35]. The influence of caste on the creativity of the artisans is an interesting question. Max Weber, it is well known, held caste to be the primary deterrent to progress[36]. Marx compared the Indian castes to the closed medieval guilds of Europe and said that where the division of labour is actually of 'several generations of labourers living at one time, working together at the manufacture of a given article ... the technical skill, the tricks of the trade thus acquired become established, and are accumulated and handed down.' The trades thus becoming hereditary, he says, the tendency was for them to 'either petrify into castes or ossify into guilds'. Commenting on the tremendous skill specialisation of the Indian weaver and the excellence of his textiles, Marx concludes: 'It is only the special skill accumulated from generation to generation and transmitted from father to son, that gives to the Hindu, as it does to the spider, this proficiency.[37]' This view of Indian crafts being circumscribed within



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the parameters of the caste system shows a theoretical understanding of the caste or jati system rather than a realistic one. Historically speaking, the crafts were not really deterred from adopting innovations in technique or in achieving economic and social mobility. Complex specialisations also developed, for instance, in the textile industry, but this again reflected itself in the proliferation of new jatis, like the Pattunulkarar, the Mooree or the Caingaloon weavers of the seventeenth century. In fact, textiles came to be named after the castes which specialised in weaving them, such as 'salampores', 'moorees,' and 'devangapattu'.

## Economic Protests by Craft Groups

During the period of Sadasiva Raya, i.e in the mid-sixteenth century, the Vijayanagara kings began to tax their professionals heavily because of the constant state of warfare with the Deccani Sultanates. The craft communities responded by striking work and forcing the state to reduce taxes. Harihara II for instance, was faced with a strike by the weavers of the Agastyesvara temple in Olakkur, which successfully paralysed all temple activity[38]. Consequently, the weavers had to be conciliated. In another major incident the entire idangai and valangai craft and trading communities of Srimushnam (South Arcot district) got together to resist enhanced taxation and proceeded to define what they considered just taxes on various professions[39]. In 1582, an inscription from Tiruchirapalli records the assurances given to the Panchala (Kammala) craftsmen from the villags of Melaimurai and Kizhaimurai that the grievances which had caused them to emigrate collectively, would be set right by the administration. The power of collective bargaining continued to be exercised by them even during the rule of the East India Company. Abbe Carre, the French chronicler writes in 1670's that among the Kammalar artisans-goldsmiths, blacksmiths and carpenters, there was a firmly established custom "that if one of them is offended or wronged, all the others shut their shops and abandon all their work."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To sum up the nature of craft production in the Vijayanagar Empire and the condition of craftsmen, the growing prosperity of craft groups like weavers and metal smiths during the fifteenth-sixteenth centuries can be traced to two important factors. Economically, they began to constitute the backbone of the Vijayanagar Empire. Renewed urbanization under the patronage of the new dynasty led the emergence of the temples as the hub of commercial life. The port towns like Sadirasakoodam and Honavar and Bhatkal testified to the thriving commerce of Vijayanagar. The expanding demand for commodities like textiles and metal crafts, came not only for indigenous groups like the amaranayakas or feudatories and new royal officials but also a rapidly expanding foreign market which now included the regions of the Malay Archipelago, West-Asia and many countries of Europe.

## Commercial Expansion under the Vijayanagar Empire

### Inland Trade

Goods within the country were sold mainly at the town fairs either by the artisans themselves or by merchant middlemen. A Belur inscription dated AD 1382 gives a list of 27 towns where these fairs were held. The list includes the names of important towns like Hastinavati, Dwarasamudra, Gooty, Penugonda, Sadras, Mularay, Padaividu and Honavuru. Among the main items of inland trade, the famous Kondavidu inscription of Nandla Gopa mentions trade in items like pulses, millets, ragi, wheat, vegetables, salt, tamarind, and spices like pepper, cloves and nutmeg. Articles of daily consumption like oil, jaggery, sugar, salt and betel leaves were also sold at these fairs. Commodities relating to the textile industry ranging from raw cotton (panju) to cotton yarn (nulu) to finished textiles (chilai) as also dyes like dammer and indigo were sold by the producers or by merchant middlemen. Specialisation in trade is indicated by reference to chilai chettis (cloth merchants) and kudirai chettis (horse merchants). Textiles from the Coromandel



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

coast was exchanged for Malabar spices especially pepper, as a part of the triangular spice trade. Duarte Barbosa refers to the popularity of Pulicat textiles in Gujarat and Malabar. Rice from the Coromandel Coast was also exported to the Kerala coast.

The principal means of transport in inland trade were the bullock carts, pack horses, asses, head loads called 'talai chumai' and 'kanchi-kavadi' i.e. a pole suspended over the shoulders with heavy balance on either side. These were carried by itinerant merchants or peddlers. The reference to head loads and kanchi-kavadi in the inscriptions proves the importance of itinerant trade in inland commerce. Ma-huan, the Chinese traveler of the fourteenth century refers to the kolings or klings of Cochin who carried their business like peddlers do in China.

### Foreign Trade

The Vijayanagara period saw the expansion of foreign trade on an unprecedented scale. The balance of trade was clearly in India's favour. Foreign trade was promoted by the conclusion of commercial treaties with the Portuguese. The treaty signed between the Portuguese and Sadasiva Raya in 1547 stipulated that all the primary items of trade of Vijayanagar would be sent to the ports of Honavur or Basrur and purchased there by the Portuguese Factors. In fact the Portuguese gained the most privileged status with regard to the purchase of extremely important commodities like salt-petre and iron. On their part the Factors promised to sell their copper, coral, vermilion, mercury and China silks (re-export item) only to Vijayanagara. It is noteworthy that the kingdoms of Golconda and Bijapur made similar commercial treaties with the other European trading power-the Dutch. In fact the constant struggle between the kingdom of Vijayanagar and the Deccani Sultanates was not only over the Raichur doab but also because of commercial rivalry.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Directions of Foreign Trade - Imports and Exports

The most important pattern of trade was the triangular slave trade and the triangular spice trade. In the first instance, Coromandel textiles were sent to Africa and the particular variety of cloth called 'Salemporees' came to be referred to as 'Slave Cloth'. In the triangular spice trade, Coromandel cloth was exchanged for spices in the Malay Archipelago and the spices were exported to Europe. This trade was initially in the hands of the Arabs and Hindu chettis till the major part of the trade was captured by the Portuguese in the second half of the 16$^{th}$ century. From the Coromandel coast either from the ports of Masulipatnam, San Thome (the Portuguese name for the ancient port-town of Mylapur/Mayilai) and Pulicat, textiles were shipped to Achin, Priamam in Sumatra, Bantam in Java and to Malacca. Malacca in the Spice Islands was an international extrepot of trade. From the account of Barbosa we know that the Coromandel textiles went right up to the Gulf of Siam that is, Patani, Singora, Tennaserim etc. the Coromandel also re-exported to the Malay Archipelago the cloths of Cambaya (in Gujarat), Mecca velvets and middle eastern scents. In their return trips from Malacca, the South Indian ships brought back lac, mace, cloves and pepper produced in Sumatra and brazil wood or sapanwood (an inferior red dye) and elephants from Pegu.

The other trade lay in the direction of Ormuz, Aden, Arabia Felix and Africa. The ships from the kingdoms of the Deccan and Vijayanagar went around the gulf of Ormuz, passing the ports of Calicut and Goa and touching Aden. Since a considerable volume of printed cloth was exported out of Calicut they came to be called calicoes. These were either woven in this area or in the neighborhood. The Vijayanagar kingdom important most of its horses either from Ormuz or from Aden. The Arabian horses imported from Aden were far superior to the Persian horses. The kingdom also imported dry fruits like reisins, opium, minerals like mercury (quick silver) and copper and textiles like Mecca velvets and Persian damasks. Tome Pires



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

says that there was usually no direct trade between the Coromandel Coast and West Asia and the textiles went from the Vijayanagar ports of Honavur, Bhatkal or the port of Goa via Gulf of Ormuz to Aden or around the Cape of Good Hope to the African coast[40]. After the Portuguese take over of Goa, Vijayanagar began to use Bhatkal more often getting their horses at this point. The balance of trade was generally in favour of Vijaynagar. Coromandel textiles and Malabar spices were extremely profitable items of export trade and the only drain on the resources of Vijayanagar was the import of horses. While horses from Ormuz cost around 150 Pounds in English money, Arab horses cost double the amount. It has been pointed out by Barbosa and other chroniclers that the frequency of horse imports was caused by the ignorance of Vijayanagar in their treatment and maintenance. While cavalry was a vital wing of the Vijayanagar army, mortality among horses was very high. Marco Polo says that the king of Vijayanagar imported nearly 2000 horses every year!

## Leading Ports of Vijayanagar

Abdur Razzaq, the Turkish chronicler of the 15th century, states that the kingdom of Vijayanagar had 300 functional ports. Pulicat in the vicinity of Mylapur (in modem Chennai) replaced the latter as an important port in medieval times perhaps because it was removed from the storm centre of battles between Vijayanagar and the Sulatanates. Tome Pires refers to it as a leading port on the eastern coast[41]. Barbosa says that it had many Moorish as well as heathen (Chettis) traders and was "a very fair sea-haven[42]".Mylapur had become a deserted port and Marco Polo calls it a "a little town having no great population ... tis a place where few traders go because there is very little merchandise to be got there.[43]" Barbosa in the beginning of the fifteenth century also calls Mylapur "a deserted sea port.[44]" But San Thome which was the new name of Mylapur became a flourishing port when Portuguese, Dutch and English traders congregated in this region. Caeser Frederick, writing in 1565 calls San Thome "one of the fairest ports in all that part of the Indies"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and refers to export of textiles from here to Pegu and Malacca. He also refers to the skill with which native handlers managed to load and download goods at a port in which water was very deep[45]. Nagore or Nagapattinam was an -other port which was in a state of comparative neglect till the beginning of the sixteenth century since Fredrick says that it was a 'country of small trade,[46] but leapt into prominence towards the end of the Vijayanagar period when the Portuguese established their presence at Nagapattinam.

Tome Pires refers to Kadalur, (Cuddalore of the English and Dutch companies) Puducherry, Tarangampadi (Tranquebar of the Dutch) Karaikkal and Adiramapattinam as other important ports during the Vijayanagar period. Interestingly, he also refers to Tirumullaivayil (outskirts of Chennai) as a port although it does not find mention in the subsequent period.

## Mercantile corporations

Much of the commerce in the Vijayanagar Empire till the end of the sixteenth century was largely in the hands of indigenous merchant groups. Although we do hear of individual merchants, such evidence is rare and the references are usually to huge mercantile corporations. These were different from the European guilds in that they were primarily bound by caste and social ties and were not a purely economic institution like their Western counterparts. Secondly, they did not control either the quality of the products or their pricing. Nevertheless, they banded together to exercise horizontal and vertical control over commerce. For example, the Ayyavole corporation also known as the 'Tisai-ayirattu Ainnutruvar' traded in every aspect of textiles, ranging from cotton to cotton yam, dyes and woven cloth. There were other similar corporations like the Padinen Vishayattar, Manigramattar and Nagarattar. An important inscription dated 1538 from the reign of Achyuta Raya from Tirupati[47], registers an agreement among the cloth and yam merchants of Tondaimandalam (the Chennai region),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Puramandalam and Ulmandalam. The merchants specify a particular type of cross-wise weaving and say that this kind of weaving should be done only by Muslim weavers and that the income of certain land should be set aside for these weavers. A fine of 12 gold Varahas (around forty-eight rupees in terms of the seventeenth century rupee) was to be imposed on any weaver violating this rule! The signatories include the Tisai ayirattu Ainnutruvar among other merchant groups. The inscriptions shows not only the wide spread nature of mercantile corporations but also their influence over production processes.

Till 1500, that is, till the coming of the Portuguese, the commerce of Peninsular India was in the hands of the Chettis (a generic term for Hindu merchants) and the 'Moors' a term which included the Arabs, Khorasani and Deccanis. Another very important trading group was the Armenian merchants. The Moors and Chettis constituted diasporic communities and were to be found in Malacca, Siam and even as far as Tennaserim. Barbosa describes them as prosperous merchants and refers to the challenge posed by the newly rising power of the Portuguese. Once the Portuguese had begun to establish trade monopolies and put into practice the Cartaz system in the Indian Ocean trade, these traditional mercantile communities began to lose ground. By the seventeenth century with the rival presence of the Dutch and the English, the chettis and other merchants were reduced to the level of intermediaries rather than functioning as independent risk-taking merchants.

## Reference

1. *Amuktamalayada* of Krishnadeva Raya ed. Vedam Venkataraya Sastry, Madras, 1969. Also see Saraswati, 'Political Maxims of Krishnadeva Raya, *Journal of Indian History*, vol.IV, part III.
2. A detailed account of the textile trade in the Vijayanagar empire is to be found in Vijaya Ramaswamy, *Textiles and Weavers in South India*, second edition, Oxford University Press, 2006, chapter III, pp.63-93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. *Keedabhiramamu* of Vallabharaya ed. Vetturi Prabhakara Sastry, Muktayala, 1952. A recent translation of this text is by Velucheru Narayana Rao and David Shulman titled a *Lover's guide to Warangal: The Kridabhramamu*, Permanent Black, New Delhi, 2002.
4. *Manasollasa* of Somesvara, ed. G.K. Srigondekar, Gaikwad Oriental Series, Baroda, 1939.
5. Proto-Industrialization in Pre-Colonial South Asia', Past and Present, no. 98, 1983.
6. Robert Orme,'A History of the Military Transactions of the British Nation in Indostan from the year MDCCXLV (London, 1803), vol.I, p.117 citied in Burton Stein, *Peasant Society in Medieval South India*, Oxford University Press, New Delhi, 1980., p.404.
7. In this context see Yasushi Ogura, 'The Changing Concept of Kingship in the Cola Period; Royal Temple Constructions, c. A. D. 850-1279 in Noboru Karashima edited Kingship in Indian History, Manohar, Delhi, 1999, pp. 119-142
8. *S.I.I.*, vol.III, Part III, No.94, The Madras Museum Copper Plates of Uttama Chola.
9. *A.R.E.* 140 of 1915-16(Salem District) of the period of Devaraya (1436 AD); inscriptions pertain to weaver concentration in the *tirumadaivilagam* also come from Pennadam, South Arcot in 1439 in *A.R.E*, 263 of 1928-29 and 294 of 1910-11 from Pulipparakkoyil, Chingleput district dated 1418.
10. *A.R.E.* 140 of 1915-16
11. Inscription of the Nellore District, vol.3, No.21 from Udayagiri. The record is not dated but can be roughly assigned to the sixteenth century.
12. *Tirumalai Tirupathi Devasthanam* Inscriptions, vol.IV, No.112.
13. Ibid.
14. Reference to gold and silver ornaments and vessels are scattered in the South Indian Inscriptions *(S.I.I)* but more specifically in the *Tirumalai-Tirupathi Devasthanam Inscription*, vol.45, No.112.
15. Abdur Razzaq's account quoted in M.M Elliot ed. *The History of India as told by its Own Historian,* Vol. 4, Calcutta, 1952-53, p.109.
16. Extensive reference to metal work, especially iron, in Andhra, are to be found the literary texts of the Vijayanagar period, eg. Vallabharaya's


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Kreedabhiramamu. A.I.Chicherow has discussed this point at length in his book *India: Economic Development in the Sixteenth –Eighteenth Centuries-Outline History of Crafts and Trade*, Nauka Publishing House, Moscow, 1971, pp.73-75.

17. Duarte Barbosa, op.cit, Book I, p.188.
18. Karnataka Darsana Pp.71-72, citied in S.Gururajachar, Some *Aspects of Economic and Social Life in Karnataka*, op.cit., p.82.
19. Srinatha is quoted in Dipala Pichayya Sastri ed. Chattupadyaratnakaram, p.10, citied in N.Venkataramanayya, *studies in the History of the Third Dynasty of Vijayanagar*, Madras, 1935 re-printed by Gyan Publishing House, Delhi, 1986, p.382 The relevant lines are, "mailnapuguddhu, nulukamanchapu gukku, jikatillunu…."
20. The description of a golden cot in the king's palace comes from Domingo Paes, *the Account of Domingo Paes*, Trans. By Robert Sewell in the Forgotten Empire, National Book Trust, New Delhi, 1962, p.275.
21. *Viramitrodaya,* a commentary on the *Smriti* of Yajnavalkya composed by Mitramisra, a seventeenth century scholar ed. By J.R. Gharpure as *Yajanavalkya smriti: Vyavaharadhyaya with the commentaries of the Mitakshara by Vijnanesvara Bhiksu, the viramitrodaya of Mitramisra and Dipakalika by Sulapani,* Vaibhav Press Bombay, 1936-42, p.1599.
22. S.I.I. Vol.17, No.603.
23. Domingo Paes in Sewell, op.cit. pp.266-67.
24. Tavernier, Travels in India, ed. By V.Ball, London, 1889, Reprint, New Delhi, 1977, p.127.
25. Asad Beg's Account in M.M. Elliot ed. Op. cit, Vol.6, pp.163-64
26. The nature of donations by weavers has been discussed in my article, 'Some Enquiries into the Conditions of Weavers in Medieval South India, *Indian Historical Review*. Vol.6, Nos.1-2, 1979, pp.132-133.
27. A.Appadorai, *Economic Conditions in Southern India – 1000 -1500 AD*, University of Madras, Madras, 1936, Vol.I. pp.357 ff
28. *A.R.E.* 354 of 1909-10.
29. *A.R.E.* 409 of 1913-14.
30. *The travels in India of Abbe Carre* ed. Charles Fawcett, London, 1948, Vol.2. pp.595-96


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. *Epigraphica Carnatica (E.C)* Vol.9 Kanakahali, No. 110 dated 1306 of the period of Hoysala king Vira Ballala Deva.
32. A.R.E. 18 of Appendic A, 1918 paras 84-85. Although only 14 of the 18 samaya are listed here the figure 18 must have been arrived at by counting the Kammalar craftsmen comprising five communities, individually.
33. *A.R.E.* 368 of 1914-15.
34. Duart Barbosa, op.cit. Book 2, pp.61 and 63.
35. *Mitakshara*, op. cit. pt 2. p. 162.
36. Max. Weber, General Economic History, trans By Frank H. Knight, New York, 1961, chap 9. 'The Craft Guilds', pp.110-16.
37. Karl Marx, *Das Capital*, tr. By Samuel Moore and Edward Aveling and ed. By Fredrich Engels, Moscow, 1958, Vol.I pp.339-40
38. *A.R.E.* 201 of 1923 from South Arcot district...
39. *A.R.E.* 490 of 1937-8
40. Tome Pires, *The Suma Oriental*, ed. A. Cortesao, Hakluyt Society, London, 1944, vol.I, p.58.
41. Pires, op. cit., Book II, p.271.
42. Duarte Barbosa. Book of Duarte Barbosa (1508-9) ed. M.L.Dames, Hakluyt Society, London, 1918, Book II, pp.129-132.
43. Marco Polo in Nilakanta Sastri ed. *Foreign Notices of South India: From Megasthenes to Ma Huan*, University of Madras, Madras 1971, p.172.
44. Barbosa, op.cit Book II, p126.
45. The account of Caesar Frederick in *Samuel Purchas, His Pilgrims*, Hakluyt Society, Glasgow, 1905, Vol.X, p. 109.
46. Caesar Fredrick in *Purchas: His Pilgrims*, op. cit., vol. X. p. 108.
47. Tirumalai Tirupati Devasthanam Inscriptions, Vol.IV, No.112.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Map 3. The Direction of East India Trade in the Seventeenth Century


Source: Vijaya Ramaswamy, Textiles and Weavers in South India (Oxford University Press, New Delhi, 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Source: Vijaya Ramaswamy, Textiles and Weavers in South India
Oxford University Press, New Delhi, 2006






Map 2. Seaports in Medieval South India



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர காலத்தில் இலங்கை தென்னிந்திய வணிக உறவு

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்

பண்டு தொட்டு இலங்கைப் பண்பாடு பாரதத்துடன் இணைந்து வளர்ச்சிய டைந்தாலும் அது பெருமளவுக்கு இந்தியா தீபகற்பத்துடன் அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவின் தென்பகுதிகளுடன் அதிக அளவில் நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்ந்தற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் அதில் இரு நாடுகளுக்கு இடையே இருந்துவந்த நெருக்கமான வணிக உறவு முக்கிய காரணம் எனலாம். அந்த வணிக உறவில் விஜயநகர மன்னர்களது ஆட்சி முக்கிய கால கட்டத்தைக் குறிக்கிறது.

தென்னிந்திய வரலாற்றில் கி. பி. 14 ஆம் நூற்றாண்டுக்கும் 16ஆம் நூற்றாண் டிற்கும் இடைப்பட்ட காலகட்டம் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியாகும். இஸ்லாம் மதத்தின், ஆதிகத்துக்கு எதிராக இந்துப் பண்பாட்டை முன்னிலைப்படுத்தி கர்நாடகத்தில் தோன்றிய விஜயநகர அரசு கர்நாடகத்தின் பெரும்பகுதியையும் கேரளம் தமிழகம் ஆந்திரப்பிரதேசத்தில் சில பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு பேரரசாக வளர்ச்சி பெற்றது. இது 15ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் உன்னத நிலையை அடைந்தது. இக்கால கட்டத்தில் விடுவிக்கப்படாத தக்கணத்தில் பழைய பண்பாடும் இஸ்லாமியரின் பண்பாடும் கலந்து அங்கு புதிய பண்பாடு உருவாகியபோது துங்கபத்திர நதிக்குத் தெற்கே பழைய பண்பாட்டுடன் ஒரு சில இஸ்லாமியப் பண்பாட்டு அம்சங்களும் கலந்து புதிய பண்பாடாக விஜயநகரப் பண்பாடு தோன்றியது.

தென்னிந்தியாவில் இந்த மாற்றங்கள் ஆரம்பித்த காலத்தில் இலங்கையிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. வடக்கில் தமிழ் இராசதானி தென்மேற்கே சிங்கள இராசதானி. முன்னர் சிங்கள இராசதானி தென்னிந்திய வம்சங்களால் தாக்கப்பட்டது. இப்போது வடஇலங்கைத் தமிழ் அரசு குறிப்பாக யாழ்ப்பாண அரசு. இதனால் சிங்கள இராசதானி அரசியல் பாதிப்பைவிட பண்பாட்டு, வணிக உறவால் திராவிடப்பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்தது.

விஜயநகரப் பேரரசு காலத்தில் இலங்கை அதன் அரசியல், பொருளாதார, பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்தற்கான நேரடி, மறைமுகச் சான்றுகள் காணப்படுகின்றன. பெரிஸ்ரா (Ferishta) என்ற ஆசிரியர் 1378இல் விஜயநகர அரசியல் பற்றிக் கூறுகையில் குமாரகம்பணன் அரச சபையில் மலபார், இலங்கை மற்றும்சில நாடுகளின் தூதுவர்கள் இருந்தாகவும் வருடாவருடம் அன்பளிப்பை அனுப்பி வைத்ததாகவும் கூறுகிறார்.

மதுராவிலாசம் குமாரகம்பணன் இலங்கையை வெற்றி கொண்டதாகக் கூறாவிட்டாலும் அதன் ஐந்தாம் அத்தியாம் ஒன்பதாவது பாட்டில் விஜயநகர மன்னனுக்கு வரி செலுத்தப் பல மன்னர்கள் வரிசையில் இருந்தாகவும் அதில் சிங்கள மன்னனும் ஒருவன் எனவும் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1383இற்குரிய ஆலம்பூண்டிச் சாசனம் விருபாஷன் என்ற இளவரசன் தொண்டைநாடு, சோழநாடு, பாண்டிநாடுகளை வென்று தனது தந்தையான இரண்டாம் ஹரிஹரனுக்கு பெருந்தொகை இரத்தினங்களைக் கொடுத்ததாகக் கூறுகிறது. நாராயணி விலாசமும், அரியூர்ச் செப்பேடும் இவன் சிங்களத்தீவில் வெற்றிதூண் நாட்டியதாகக் கூறுகின்றன.

இரண்டாம் ஹரிஹரன் மறைவை அடுத்து தென்பிராந்திய அரசர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டர். இதைப் பயன்படுத்தி இலங்கை மன்னர் குறிப்பாக யாழ்ப்பாண மன்னர் தம்மை விடுவித்துக் கொள்ள முற்பட்டனர். ஆனால் விருபாஷன் மன்னனானதும் தென்பிராந்தியங்களில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தியதுடன் முதலாம் தேவராஜன் காலத்தில் (1422–1446) அவன் பிரதிநிதியாக மதுரையில் இருந்த லக்கண்ண தண்டநாயக்கன் இலங்கை மீது படையெடுத்தான். இவன் தன் குதிரைப்படைகளை ஈழம், யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு எதிராக கடல் வழியாக அனுப்பி வைத்தான் என திருமாணிக்குழிக் கல்வெட்டுக் கூறுகிறது. 1441–2இற்குரிய கல்வெட்டு ஒன்று முதலாம் தேவராஜன் ஈழம்திறை கொண்டான் எனக் கூறுவதால் லக்கண தண்டநாயக்கன் படையெடுப்பால் யாழ்ப்பாண இராச்சியம் விஜயநகர மேலாதிக்கத்திற்கு உட்பட்டதெனக் கூறலாம்.

## வணிக உறவின் வரலாற்றுப் பின்னணி – வணிக கணங்கள்

விஜயநகர காலத்தில் பல்வேறு வணிகக் குழுக்கள் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கல்வெட்டுகளிலும், சமய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. 13ஆம் நூற்றாண்டின் இறுதிவரை வளஞ்சியர் மணிக்கிராமத்தார் முதலிய வணிக கணங்கள் ஈழத்து வர்த்தகத்தில் ஈடுபட்டன. அவை விஜயநகர காலத்தில் செல்வாக்கிழக்க செட்டிகள், பட்டினவர், முதலிகள், இளவாணியர் முதலான வணிக கணங்கள் முக்கியத்துவம் பெற்றன.

நாட்டுக்கோட்டைச் செட்டிகள், குதிரைச் செட்டிகள், காவேரிச் செட்டிகள், விஜயநகர காலத்தில் பலமான ஆளும் வர்க்கமாகத் திகழ்ந்தனர். அவர்களுள் காவேரி செட்டிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் 14–15ஆம் நூற்றாண்டில் ஆந்திரப்பிரதேசத்தில் இருந்து வந்து தமிழகத்தில் குடியேறியவர்கள் இக்காலத்தில் ஒவ்வொரு வணிக கணங்களும் குறிப்பிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பொருட்களை வாணிபம் செய்வதில் சிறப்புப் பெற்றிருந்ததை கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. உதாரணமாக காவேரிச் செட்டிகள் இரத்தினக் கல், வெள்ளி, செம்பு முதலான வியாபாரத்திலும் தமிழ் தெலுங்குச் செட்டிகள் உள்ளூர் மற்றும் பிறநாடுகளில் இருந்து கறுவா ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்திலும் ஈடுபட்டனர்.

## வணிகப் பொருட்கள்

விஜயநகர மன்னர் சோழரைக் காட்டிலும் பரந்த கடல் சார்ந்த வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இக்காலத்தில் மேற்கே போர்த்துக்கல், பபிலோனியா/ அரேபியா/ ஆகிய நாடுகளுடனும் கிழக்கே இலங்கை, தென்கிழக்காசியா, மாலைதீவு, சீனா போன்ற நாடுகளுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இக்காலத்தில் விஜயநகர அரசிற்கு விஜயம் செய்த பேசியன் தூதுவர் அப்தூர் றசாக், டி ஒற்றா, மார்க்கோபோலோ போன்றோர் விஜயநகர அரசு பற்றிக் கூறுகையில் அதன் நகரச்சிறப்பு வணிக மையங்கள், உற்பத்தியான பொருட்கள், ஏற்றுமதியான பொருட்கள், வணிகத்தில் ஈடுபட்ட உள்ளூர் வெளிநாட்டு வணிகர்கள், வணிகப் பொருட்களில் தன்மை என்பன பற்றியே சிறப்பகாகப் புகழ்ந்து பேசினர். கர்நாடகத்தில் பேலூர் என்ற இடத்தில் கிடைத்த (1382) கல்வெட்டு ஒன்று விஜயநகர அரசில் இருந்த 27 வணிகநகர் பற்றிக் கூறுகிறது. 1430இற்குரிய இரண்டாம் தேவராஜனுடைய கல்வெட்டு ஒன்று அக்கால வணிகத்தில் முதன்மை பெற்ற வணிகப் பொருள் பற்றிக் கூறுகிறது.

இக்காலத்தில் இலங்கைக்கும் விஜயநகர அரசிற்கும் இடையிலான உறவு பற்றியும் அந்த வணிகத்தில் இரு நாட்டு வணிகர்களிடையேயும் நடைபெற்ற வணிகப் பொருட்கள் பற்றியும் பல வகையான குறிப்புக்கள் காணப்படுகின்றன. 1566இல் விஜயநகர அரசிற்கு வந்த புர்டிபாசா என்பவர் பாண்டி நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற முத்துக்குளிப்பு பற்றிக் கூறுகையில் இலங்கையில் இருந்து பச்சை, சிவப்பு, மஞ்சள், நிறத்திலான முத்துக்கள் விஜயநகருக்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மேலும் தனது குறிப்பில் விஜயநகர கிளை நாடுகளுக்கு இடையே நடைபெற்ற வர்த்தகத்தில் வெள்ளியை முக்கிய வர்த்தகப் பொருளாகக் குறிப்பிடுகிறார். மேலும் வெள்ளியுடன் ஈயம், தகரம், இரும்பு, செப்பு முதலான பொருட்களும் இலங்கையுட்பட சுமாத்திரா மலாக்கா போன்ற நாடுகளில் இருந்து இவ்வரசிற்கு ஏற்றுமதியானதாகக் குறிப்பிடுகிறார். இப்பொருட்கள் இந்தியாவில் அதிக அளவில் உற்பத்தியானாலும் இவற்றை இறக்குமதி செய்யும் அளவிற்கு விஜயநகர அரசின் தேவை அதிகமாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார். மார்க்கோபோலோகூட தனது குறிப்பில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற முத்து வர்த்தகம் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறார்.

இவர் முத்து மட்டுமன்றி இலங்கை, சுமாத்திர, மலாக்கா போன்ற நாடுகளில் இருந்து விஜயநகர வணிகர்கள் ஏலம், கறுவா, காராம்பு போன்ற பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். இக்கூற்று ஐரோபியர் வருகைக்கு முன்னரே இவ்வாசனைத் திரவியங்களின் முக்கியத்துவத்தை விஜயநகர அரசு உணர்ந்திருந்ததை எடுத்துக் காட்டுகிறது.

பேராசிரியர் இராமசாமி தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் உற்பத்தியான தேங்காயும் இக்காலத்தின் முக்கிய வர்த்தகப் பொருளாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

விஜயநகர காலப் படை நடவடிக்கைகளில் குதிரை, யானை என்பன முக்கிய பங்கு வகித்ததால் அவர்களின் வர்த்தகத்தில் அவையே அதிக அளவில் முதன்மை பெற்றன. இக்கால இந்து இலக்கியங்களில் ஒன்றான கரிவிலாசம் விஜயநகர அரசு குறிப்பிட்ட நாடுகளில் இருந்தும் குறிப்பிட்ட சில பொருட்களை சிறப்பாக இறக்குமதி செய்ததாக கூறும் போது சீனாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் யானை விஜயநகர அரசிற்கு இறக்குமதியானதாகக் குறிப்பிடுகிறது. இவ்வாறு இலங்கையில் இருந்து விஜயநகருக்கு பல பொருட்கள் இறக்குமதியானபோது அதற்கு மாற்றீடாக இலங்கைக்கு குதிரை மற்றும் சிலவகை ஆடைகள் இறக்குமதி செய்யப்பட்ட விவரங்களும் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வர்த்தகத்தில் கேரள, கர்நாடகத் துறைமுகங்களை விட தமிழகத்தின் கிழக்குக் கரையில் உள்ள பழவேற்காடு, மைலாப்பூர், கோவளம், சதுரங்கப்பட்டினம், மரக்காணம், அரிக்கமேடு முதலான துறைமுகங் களுக்கும் இலங்கையில் வடபகுதியிலுள்ள ஊர்காவற்றுறை, மாந்தை, பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களுக்கும் இடையே இக்கால வர்த்தகம் நடந்ததாகத் தெரிகிறது.

## வட இலங்கையில் கிடைத்த விஜயநகர மன்னர் கால நாணயங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கையில் கிடைத்த
## விஜயநகர மன்னர் கால நாணயங்கள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் கிடைத்த
# விஜயநகர மன்னர் கால நாணயங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வட இலங்கையில் கிடைத்த நாயக்கர் கால நாணயங்கள்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கையில் கிடைத்த
## மதுரை குறுநில மன்னன் நாணயம் [1450– 1520]




சமரகொலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வட இலங்கையில் கிடைத்த வேணாடு சேரர் கால
## (கி. பி. 15—16 நூற்றாண்டு)
## நாணயங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் கிடைத்த ஆர்காடு நவாபுகளின் நாணயங்கள் [1710–1820]



வாலாஜா





மதிரை தினவெலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தென்னிந்தியாவில் கிடைத்த இலங்கை நாணயங்கள் (கி. பி. 14– 16)








இலங்கை நாணயங்கள் (கிடைத்த) யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள்





தென்னிலங்கை அரசு கால நாணயங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய செல்வாக்கிற்கு உட்பட்ட
## யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசயநகரவேந்தர் நாயக்கர் காலக் கல்வெட்டுகள்

கலாநிதி வெ. வேதாசலம்

தென்னிந்தியாவில் இந்துசமய கலாசார மறுமலர்ச்சிக்குத் துணைநின்ற அரசுகளில் விசயநகர நாயக்கர் கால அரசும் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் சைவ, வைணவ வளர்ச்சிக்கு கி.பி. 15,16,17ஆம் நூற்றாண்டுகளில் விசயநகர நாயக்க மன்னர்கள் பெரும்பாங்காற்றியுள்ளனர். கன்னடம், தெலுங்கு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட இம் மன்னர்களின் ஆட்சியாலும் இம்மொழிகள் பேசும் மக்களின் குடியேற்றத்தாலும் தமிழ்நாட்டு அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம் ஆகியவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் இக்காலத்துச் சாசனங்களிலும் புலப்படுகின்றன. விசயநகர நாயக்க மன்னர்களின் கல்வெட்டுகள் பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு வரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. மதுரை நாயக்க மன்னர்களது கல்வெட்டுகள் கி.பி. 1736 வரையிலும் கிடைக்கின்றன. விசயநகரவேந்தர்கள், மதுரை, தஞ்சை, வேலூர், செஞ்சி நாயக்கர்கள் கல்வெட்டுகளோடு அவர்கள் வெளியிட்ட ஏராளமான செப்பேட்டுச் சாசனங்களும் தமிழ்நாட்டிற் கிடைத்துள்ளன. இதுவரை தமிழ்நாட்டில் இவர்கள் காலத்தினைச் சார்ந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் எண்ணூறு வரையிலுள்ள கல்வெட்டுகளுக்கு மட்டுமே முழுவாசகம் வெளியிடப்பட்டுள்ளன.

விசயநகர வேந்தர்கள் மற்றும் நாயக்க மன்னர்களின் கல்வெட்டுகள் தொடக்கத்தில் சோழ, பிற்காலப் பாண்டிய மன்னர்களின் அமைப்பு முறையினைப் பின்பற்றினாலும், காலப்போக்கில் இவற்றின் அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் மாற்றங்களும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் இவர்கள் அரசு வேரூன்றத் தொடங்கிய பின்னர் கன்னடம், அதன்பின்பு தெலுங்கு மொழிகளிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் ஒரே செய்தி தெலுங்கு, தமிழ் என்று இருமொழிகளிலும் சொல்லும் முறை கல்வெட்டுகளிற் காணப்படுகின்றது. இதனால் இக்காலக் கல்வெட்டுகளில் தமிழோடு கன்னட தெலுங்கு எழுத்துகளையும் காணமுடிகிறது.

சமஸ்கிருத மொழியை எழுதுவதற்குப் பெரும்பாலும் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு இருந்துவந்த கிரந்த எழுத்துக்களும் பின்னர் மிக அருகிய அளவில் நாகரி எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டன. இக்கால மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகள் பல நந்திநாகரியில் எழுதப்பட்டுள்ளன. தமிழில் செப்பேடுகள் எழுதப்பட்டாலும் அவற்றில் முக்கிய கையொப்பம் தெலுங்கு மொழியில் பெரியதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. விசயநகர ஆட்சியின் தொடக்கத்தில் கன்னடமொழிக் கல்வெட்டை ஸ்ரீரங்கம் கோயிலிற் பொறிக்கும்போது கிரந்த எழுத்துக்களில் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.[1] பின்னர் இம்முறை மாறியுள்ளது. கன்னட எழுத்துக்களிலேயே கன்னடமொழிக் கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். நாகரி எழுத்தினைப் பயன்படுத்தி தமிழ்மொழியில் எழுதிய வழக்கமும் அக்காலத்தில் இருந்துள்ளது.[2]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலக் கல்வெட்டுகள் அதிகளவில் மக்கள் பேச்சு வழக்கிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இதனால் அக்கால மக்களின் பேச்சுவழக்கின் உயிர்துடிப்பையும் அலங்காரமின்றிச் செய்தியை நேரடியாகச் சொல்லுகின்ற முறையையும் இக்காலக் கல்வெட்டுகளிற் காணமுடிகிறது. பெரும்பாலும் இக்காலக் கல்வெட்டுகள் கோயில்களிற் காணப்பட்டாலும் மற்றொரு பகுதி பொது இடங்களில் தனிக்கற்களிற் பொறிக்கப்பட்டவையாய் உள்ளன. இவை இக்காலச் சமுதாயப் பண்பாட்டு வரலாற்றை அறியத் துணைநிற்கின்றன.

கல்வெட்டுகளின் தொடக்கம், காலக்குறிப்பு, செய்தி, முடிவு என்ற அமைப்பு முறையிலும் அவற்றை கூறுகின்ற முறையிலும் எழுதுகின்ற முறையிலும் இக்காலத்தில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. சோழர், பிற்காலப் பாண்டியர், சம்புவராயர் காலங்களில் சிறியதாக ஒரே சீரான முறையில் கல்வெட்டு எழுத்துக்கள் வெட்டப்பட்டன. ஆனால் விசயநகர நாயக்கர் காலக் கல்வெட்டு எழுத்துக்கள் அளவிற் பெரியனவாக ஒரே சீரற்ற முறையில் எழுத்துப் பிழைகளுடன் எழுதப்பட்டுள்ளன.

தொன்றுதொட்டு வந்த மரபைப் பின்பற்றி கல்வெட்டுகளின் தொடக்கமான 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லோடு 'சுபமஸ்து' என்று புதிய மங்கலச் சொல்லும் இக்காலத்துக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது. 'கணபதியே நம' என்ற சொல்லும் இக்கால வடமொழிக் கல்வெட்டுகளில் தொடக்கச் சொல்லாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[3] மங்கலச் சொல்லை அடுத்து மெய்க்கீர்த்தி வடிவம் வருகின்றது. ஆனால் அரசனின் பெருமையைத் தொகுத்துக் கூறும் இப்பகுதியில் வடமொழிச் சொற்களே அதிகம் காணப்படுகின்றன. இப்பகுதி கிரந்த எழுத்துக்களிலோ அல்லது தமிழ் எழுத்துக்களிலோ எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு மன்னனுக்கும் ஒரு தொடக்கச் சொல்லுடன் கூடிய தூய தமிழ்மொழியில் மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கம் இக்காலத்தில் மறைந்துவிட்டது. அதற்கு மாறாக எல்லா விசயநகர நாயக்க அரசர்களுக்கும் பொதுவாகப் பின்வரும் மெய்க்கீர்த்தி வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

> "ஸ்ரீமந் மகாமண்டலேசுவரன் ஹரியராயவிபாடன் பாசைக்குத் தப்புவராயகண்டன், சதுர்சமுத்திராதிபதி ஸ்ரீ வீரபொக்கண உடையார் குமாரர் கம்பணஉடையார் பிருதிவிராஜ்ஜியம் பண்ணியருளாநின்ற......"[4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் மஹாமண்டலேசுவரந் அரியராயவிபாடன் பாசைக்குத் தப்புவராயகண்டன் மூவராயகண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூர்வ தட்சிண பட்சிம உத்திர சதுர் சமுத்திராதிபதி ஸ்ரீமந் ராஜாதிராஜந் ராஜபரமேசுவரந் ஸ்ரீவீரபிரதாப ஸ்ரீகிருஷ்ணதேவராயர் பிருதிவிராஜ்ஜியம் பண்ணி அருளாநின்ற......"[5]

"இதில் பயின்று வரும் அரசனின் புகழைக் கூறும் சொற்கள் தமிழ்நாட்டுக் கல்வெட்டு மரபுக்குப் புதியவையாகும். இவற்றைப் பயன்படுத்தி எழுதப்பட்ட மெய்க்கீர்த்தியைக் கொண்டு விசயநகர நாயக்கர் காலக் கல்வெட்டு இது என்று எளிதில் அடையாளங் காணலாம். ஆனால் தமிழ்மன்னர் மெய்க்கீர்த்தியைப் போன்று எந்த மன்னனுக்குரிய கல்வெட்டு என்று கூற முடியாது."

மன்னனைப் புகழ்ந்து கூறும் மெய்க்கீர்த்தியை அடுத்து அரசனின் ஆட்சியாண்டைக் குறிப்பிடும் வழக்கம் இக்காலக் கல்வெட்டுகளில் மறைந்துவிட்டது. இதற்குப் பதிலாகக் காலத்தைத் தெளிவாகக் குறிப்பிடும் –சாலிவாகன சகாப்த ஆண்டு – குறிப்பிடும் வழக்கம் வந்து விட்டது. இதனால் மன்னனின் காலத்தையும் கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டையும் குழப்பமின்றித் தெளிவாக அறிந்துக்கொள்ளலாம். சக ஆண்டோடு சம்வற்சரம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படும் அறுபது ஆண்டு சுழற்சிமுறையில் வரும் ஆண்டுகளில் ஒன்றும் இக்காலக் கல்வெட்டில் குறிப்பிடும் வழக்கமும் இக்காலத்திற் காணப்படுகிறது.

சக ஆண்டு, சம்வற்சர ஆண்டு ஆகியவற்றுடன் மாதம், பட்சம் (வளர்பிறை – தேய்பிறை) திதி, நட்சத்திரம், வாரம் (கிழமை), அயனம், யோகம் போன்ற பஞ்சாங்கக் குறிப்புகளும் காலக்குறிப்பாகக் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றின் காலத்தினை அறிய மிகுந்த துணைபுரியும்.

காலக்குறிப்பினை அடுத்து கல்வெட்டின் செய்தி வருகிறது. இவற்றிலும் ஊர், நாட்டுப்பிரிவைக் குறிக்கும்போது பல மாற்றங்கள் இக்காலத்தில் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. தமிழ்நாட்டில் நிலவிவந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பிரிவுகள் சமூகத்தன்மை இழந்து வெறும் நிர்வாகப் பிரிவாக இக்காலத்தில் மாறின. வருவாயின் அடிப்படையில் பற்று எனப்பட்ட நிலப்பிரிவு இக்காலத்தில் பெருவழக்காகப் பயன்படுத்தப்பட்டது. மகதை மண்டலம் 12 பற்றுகளையும் இருங்கோளப்பாடி 18 பற்றுகளையும் கொண்டிருந்தன.[6] பற்றினைவிட பெரிய நிலப்பிரிவாக 'சீர்மை' என்ற சொல் வழக்கிற்கு வந்தது. தஞ்சாவூர் சீர்மை, திருச்சிராப்பள்ளிச் சீர்மை என்று இவை அழைக்கப்பட்டன. நாடு, பற்று, சீர்மை இவற்றையெல்லாம் உள்ளடக்கிய பெருநிலப்பிரிவு ராஜ்ஜியம் அல்லது உசாவடி என்று அழைக்கப்பட்டது. ராஜ்ஜியமும் உசாவடியும் பெரிய நிலப்பரப்பைக் குறிக்கும் சொல்லாக இருந்தாலும் உசாவடி என்பது வருவாயை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வருவாய் வட்டத்தினைக் குறிக்கும் சொல்லாகும். தமிழ்நாட்டின் வடபகுதியிலிருந்து தெற்காகச் சந்திரகிரி உசாவடி, படைவீட்டு உசாவடி, வழுதலம்பட்டு உசாவடி, திருச்சிராப்பள்ளி உசாவடி, தஞ்சாவூர் உசாவடி, இராஜராஜபுரம் உசாவடி என்ற ஆறு உசாவடிகள் இருந்துள்ளமையைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[7]

வருவாய்துறை நிர்வாகத்தில் உசாவடி முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு பகுதியின் வருவாய் அப்பகுதியில் உள்ள உசாவடிப் பெயரால் கணக்கிடப்பட்டு வாங்கப்பட்டது. இதனால் உசாவடியை அரசின் வருவாய் நிர்வாகப்பிரிவு எனக்கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் எ.சுப்பராயலு கருதுகின்றார்.[8] எனவே உசாவடி என்ற பெயர் விசயநகர நாயக்கர் காலக் கல்வெட்டுகளில் முக்கிய பொருண்மை உடையதாக வழங்கப்பட்டது எனலாம்.

இக்காலத்தில் நிலவிய கிராம நிர்வாக முறையும், படிப்படியாக பழைய நிர்வாக அமைப்பு முறையை இழந்தது. நாடு, நகரம், பிரமதேசம் போன்ற ஊர்களில் இருந்த ஊரவைகள் படிப்படியே தனது அதிகாரத்தினை இழந்து நாயக்கர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. கிராமங்கள் பண்டாரவாடை, அமரம், மானியம் என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. பண்டாரவாடை என்பது அரசுக்குச் செலுத்த வேண்டி வரிவிதிக்கப்பட்ட அரச வருவாய் கிராமங்களாகும். அமரம் என்பது குறிப்பிட்ட நாயக்கருக்கு அரசனால் வழங்கப்பட்ட 'நாயக்கத்தனம்' என்றழைக்கப்பட்ட கிராமமாகும்.[9] அரசரோடு நேரடித் தொடர்புடைய உறவினர்கள் அல்லது படைத்தலைவர்களுக்கு இக்கிராமங்கள் அளிக்கப்பட்டன. இக்கிராமங்களின் வரிகள் இவர்கள் மூலம் வசூலிக்கப்பட்டு அரசுக்குச் செலுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் கிராம நிர்வாக சபைகள் தங்கள் செல்வாக்கை இழந்து இக்காலத்தில் மறையத் தொடங்கின. நாட்டாண்மை, கர்ணம், தலையாரி என்போர் கிராம நிர்வாக அலுவலர்களாக மாறினர்.

கிராம நிர்வாகமும் 'ஆயக்காரர் முறை' என்றழைக்கப்பட்ட பல பேர் அடங்கிய புதிய கிராம நிர்வாகத்தினர் கைக்கு மாறியதையும் இக்காலக் கல்வெட்டுகள், செப்பேடுகள் உணர்த்துகின்றன. கிராமங்களின் ஆயக்காரர்களாக புரோகிதர், தச்சர், கொல்லர், தட்டார், வண்ணார், குயவர், நாவிதர், நீராணிக்கன், பறையர் ஆகிய பல்வேறு தொழில் செய்வோரோடு நாட்டாண்மை, தலையாரி, கர்ணம் (கணக்கர்) என்ற பன்னிருவர் இருந்துள்ளதை விசயநகர நாயக்கர் காலச் செப்பேடுகள், கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[10] இவர்களுக்காக விடப்பட்ட மானிய நிலங்களைப் பற்றி கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

மைய அரசு அலுவலர்களின் பதவிப் பெயர்களும், இக்காலத்தில் மாற்றமடைந்திருந்தன. புதிய பதவிப் பெயர்களாக மகாமண்டலேசுவரர், மகாசாமந்தாதிபதி, மகாபிரதானி/பிரதானி, தளவாய், வாசல், அடைப்பம், காரியத்துக்குக் கடவார், அவசரம், சேவகம், ஊழியம், பாதசேவை முகப்பாவாடை, பொக்கிசம், பல்லக்குச் சேவை, தண்டு, கட்டியம், கர்ணிகர், ராயசம் என்று பல பெயர்கள் கல்வெட்டுகள் செப்பேடுகளில் குறிப்பிடப்படுகின்றன.[11] சோழர், பாண்டியர் காலத்தில் தமிழ் மொழியில் இருந்த பதவிப் பெயர்கள் பெரும்பாலும் மறைந்து புதிய பதவிப் பெயர்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

அரசு வருவாய்துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பழைய வரி தொடர்பான சொற்களோடு புதிய வரிகளைக் குறிப்பிடும் சொற்களும் இக்காலக் கல்வெட்டுகள், செப்பேடுகளிற் குறிப்பிடப்படுகின்றன. வரிகளைக் குறிக்கும் ஒரு பொருள் குறித்த பல சொற்களாகக் காணிக்கை, ஜோடி, வந்தனை (வர்த்தனை), இரேகை, ஆயம், சாதம், பட்டடை என்ற சொற்கள் வழங்கப்பட்டன. இவற்றோடு பேறு, வினியோகம் போன்ற பழைய சொற்களும் வழங்கப்பட்டுள்ளன. ஏராளமான வரிகள் விதிக்கப்பட்டுள்ளமையை இக்காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் முன்பு இருந்ததைக் காட்டிலும் 635 வரிச்சொற்கள் இக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளமையை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தைவரி, நஞ்சைகாணிக்கை, உசாவடிக்காணிக்கை, வந்நியவரி, தலையாரிக்கம், நல்லெருது, கொணிகை, விரிமுட்டு, நற்பசு, ஆள்அமஞ்சி, அரிசிக்காணம், சூலவரி, வாசல், சோடி, கொற்றிலக்கை, கர்ணிக்கர், ஜோடி, கட்டியவர்த்தனை, அவசரவத்தனை, அதிகாரிகாணிக்கை, அரசுவிசேஷம், ஆசு பொதுமக்கள், பட்டடை நூலாயம், பொன்வரி, சாதக்கடமை, தறிக்கடமை, வாசல் காணம், முகப்பார்வை போன்ற பல வரிகள் இக்காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.[13] இறையிலியாக வரிநீக்கம் செய்யப்பட்ட நிலக்கொடைகள் இறையிலிதிறப்பு எனப்பட்டது.

## கல்வெட்டின் முடிவு

கல்வெட்டின் முடிவுச் சொற்றொடராக வரும் ஓம்படைக்கிளவியும் இக்காலத்திற்கு ஏற்றார்போல் மாறியுள்ளது. இக்காலக் கல்வெட்டு ஆவணங்களில் வழங்கப்பட்ட தர்மத்தினை அழிக்கக்கூடாது, காக்க வேண்டும் என்று வேண்டுகோளுடன் மட்டுமல்லாது அதனை அழித்தால் (அகிதம்) வரும் கேடும் பாவமும் விரிவாகவும் அச்சுறுத்தும் வகையிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட வாசகங்களை எடுத்துக் காட்டலாம்.

> "இந்த தர்மத்துக்கு அகிதம் நினைத்தவன் மாதாபிதாவையும் கோபி ராமணரையும் வாரணாசியில் கொன்ற பாவத்திலே போகக் கடவாராகவும்"[14]

> "யாதொருத்தர் அகிதம் பண்ணினால் கெங்கைக் கரையிலே காராம் பசுவையும் தன்மாதா பிதாவையும் தன் கையால் கொன்ற தோஷத்திலே போகக் கடவாராகவும்"[15]

> "கெங்கைக் கரையிலே குரால் பசுவையும் பிறாமணரையும் கொன்ற பாவத்திலே போகக் கடவாராகவும்"[16]

> "கங்கைக் கரையிலும் சேதுக்கரையிலும் கபிலையைக் கொன்றார் பண்ணின பாவமும் மாதா பிதாக்களைக் கொன்றார் பாவமும் இருபத்தொரு பிரகாரமும் பித்ருகள் நரகத்தில் இருந்து.......... பண்ணின பாவமும்.......[17]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டு ஆவணங்களை அழிப்போர் "சிவத்துரோகி குருத்துரோகியாய் சொல்ல சொல்லக் கடவாராகவும்" என்று ஆடுதுறை கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

ஆடுத்துறையிலுள்ள மற்றொரு கல்வெட்டு "இதனை அழித்தவனை மேற்படக்குத்தி கீழ்பட வாங்கிப் போடக் கடவோம் ஆகவும்" என்று கூறுகிறது. மேலும் "இதுக்கு அகிதம் பண்ணினவன் தாயைக் கொன்ற பாவத்திலே போவான்."[18] "ஏழாநரகத்து கீழாநரகம் புகுவான்"[19] என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இக்காலக் கல்வெட்டுகளில் காணும் மேற்கண்ட 'ஓம்படைகிளவி'யாய் வரும் கூற்றுக்கள் அக்காலச் சமுதாயத்தின் நிலையைக் காட்டுகின்றன. சமூக முரண்பாடுகளும் ஒழுக்கச் சீரழிவும், கட்டுப்பாடற்ற நிலையும் இக்காலத்தில் பெருகியதால் மேற்கண்ட முறையில் கடுமையான எச்சரிக்கை வாசகங்களைத் தானத்தினைச் செய்வித்தோர் கல்வெட்டுகளின் இறுதியில் கூறவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

## கல்வெட்டுச் செய்திகள்

விசயநகரக் கல்வெட்டுகள் அரசியல், சமுதாயம், பொருளியல், சமயம், கலை போன்ற பல செய்திகளைத் தருகின்றன. அன்றைய காலநிலையையும் மாற்றங்களையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. விசயநகர வேந்தர்களும், அவர்களுக்குக் கீழ் இருந்த மண்டலாதிபதிகள், அமர நாயக்கர்கள், மகா அமரநாயக்க மன்னர்கள் வைதீக சமயத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தினர். சமய நிறுவனங்களாக விளங்கிய கோயில்களைப் புதுப்பித்தனர்; விரிவுப்படுத்திக் கட்டினர்; வழிபாடுகள், திருவிழாக்கள் தடையின்றி நடைபெற உதவினர் என்பதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

புறச்சமயத்தினர் படையெடுப்பால் ஸ்ரீரங்கம் பெருமாள் திருமேனி அங்கிருந்து தமிழ்நாட்டின் தென்பகுதிக்குப் பின்னர் வடபகுதிக்கும் எடுத்துச் செல்லப்பட்டு இறுதியில் மீண்டும் ஸ்ரீரங்கம் வந்தது என்று கூறும் கோயிலொழுகு, பிரபன்னமித்ரம் ஆகியவற்றின் செய்தியை ஸ்ரீரங்கம் கல்வெட்டு ஒன்று உறுதிப்படுத்துகின்றது. கி.பி. 1371 ஆம் ஆண்டைச் சார்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டு கோபண்ணன் என்ற கம்பணின் அதிகாரி திருப்பதி, செஞ்சி முதலிய இடங்களுக்குத் திருவரங்கநாதர், ஸ்ரீதேவி திருமேனிகளை எடுத்துச் சென்று பாதுகாத்துப் பின்னர் இசுலாமியரை முறியடித்து ஸ்ரீரங்கத்தில் அத்திருமேனிகளை எழுந்தருளிவித்தான் என்று கூறுகின்றது.[20]

கிருஷ்ணதேவராயர் வெற்றிகளைத் தொகுத்துக் கூறும் திருத்தநகரி, புஞ்சை, திருஈங்கோய்மலைக் கல்வெட்டுகள் அவரது வெற்றிக்கு பிறகு சோழ மண்டலத்திலுள்ள முக்கிய வைணவ, சைவ தலங்களுக்குத் திருப்பணி வழிபாட்டுச் செலவிற்காக அரண்மனைக்குச் செலுத்தி வருகின்ற சோடி, சூலவரி, ஆயம் முதலிய வரிகள் மூலம் வந்த பதினாயிரம் பொன்னைத் தானமாக அளித்தார் என்று கூறுகின்றது.[21] விசயநகரவேந்தர் காலத்தில் திருப்பணிக்கும் மகாபூசைக்கும் தானங்கள் அளிக்கப்பட்டுள்ளதைப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[22] கோயில் பூசைக்குச் செலவினங்கள் மிகுதியாகி அவற்றிற்குப் பணம் இல்லாமல் வழிபாடு தடைப்பட்டு 'பாழாய்க் கிடந்தமை' யால் அவற்றிற்குரிய வரியை நீக்கி வழிபாடு தடையின்றி நடைபெற வழிவகுத்தமை குறித்தும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[23] இக்காலத்தில் விசயநகரத்தில் சிறப்பாகக் கொண்டாட மகாநவமி போன்ற திருவிழாக்கள் தமிழ்நாட்டுக் கோயில்களில் இக்காலத்திலிருந்து நடைபெற தானங்கள் வழங்கப்பட்டுள்ளதையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[24] மஹாநவமி உற்சவம் ஸ்ரீரங்கம் நாச்சியார் இரங்கநாயகியார் கோயிலில் ஒன்பது நாட்கள் நடைபெற்றுள்ளது. இக்காலத்தில் வழக்கில் இருந்த பல புதிய உணவுப் பலகாரங்களோடு தொன்றுதொட்டு இருந்து வந்த திருவமுதும் தெய்வங்களுக்குப் படைக்கப்பட்டுள்ளன. தோசை, இட்லி, உளுந்தம் வடை, அதிரசம், சுவியன், திருப்பண்ணியாரம், தேன்குழல், பருப்பமுது, நெய்யமுது, கருப்புக்கட்டி அமுது, சம்பாதளிகை, தேங்காயமுது, பொரியமுது, மிளகமுது, வெச்சமுதுகூன், பானகக்கூன், உளுந்து ஒகரம், புளிஞகரம், பாயசம் போன்ற பல நெய்வேத்தியங்கள் தெய்வங்களுக்குப் படைக்கப்பட்டுள்ளன.[25]

கோயில்களில் மரியாதை வழங்குவது, ஏற்பது என்பது இக்காலத்தில் முக்கியச் சடங்காகவும் சமூகத்திற் கிடைத்த உயர்ந்த மதிப்பாகவும் கருதப்பட்டது. இது தொடர்பாக உரிமைப் பூசல்கள் இக்காலத்தில் நடைபெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் எடுத்துக்கூறுகின்றன.[26] நாடெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நாயக்கர்களும் அதிகாரிகளும் தங்களுக்கு மேலிருந்தவர் மேலாண்மையை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாகவும் அவர்களைப் பெருமைப்படுத்தும் முறையிலும் கோயில்களில் தானங்கள் வழங்கப்பட்டன. அரச வருவாயாக வரும் வரிகள் நீக்கம் செய்யப்பட்டு மகா அமரநாயக்கர் அல்லது அரசருக்குப் புண்ணியமாகக் கோயில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.[27] கோயிலுக்கு வருகை தந்ததன் நினைவாக அனைத்துப் பிரிவினரும் என்றும் பக்தியுடன் நின்று வணங்குவது போன்ற சிலைகள் வடித்து அவற்றின் கீழே 'சதாசேவை' என்று கல்வெட்டுப் பொறித்து வைக்கும் வழக்கம் இக்காலத்தில் இருந்துள்ளது. மேலும் அவர்களின் பெயரோடு சதாசேவை என்று மட்டும் கல்வெட்டு பொறிக்கும் வழக்கமும் இக்காலத்தில் இருந்துள்ளது.

தமிழ்நாட்டுக் கோயில்களில் புதிய தெய்வமரபுகளுக்கு இக்காலத்தில் இடமளிக்கப்பட்டது. ஸ்ரீரங்கம் கோயில் வளாகத்தில் 1493–இல் வைணவர்களுக்கு மருத்துவக் கடவுளாக–திருமாலின் அம்சமாக–விளங்கிய தன்வந்திரிக்கென்று தனிக்கோயில் ஒன்று எடுப்பிக்கப்பட்டது. இதோடு மருத்துவமனை ஒன்று 'ஆரோக்கிய சாலை' என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டதையும் ஸ்ரீரங்கம் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[28]

விசயநகர நாயக்கர் காலத்தில் பல்வகைச் சாதிகள் பெருகின. குடிகளிடையே வேறுபாடுகள் ஏற்ற தாழ்வுகள் மிகுந்து சமூகமோதல்கள் நடைபெற்றன. அரசர், அதிகாரிகள், நிலவுடையாளர்களை எதிர்த்து கிளர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. இது குறித்து பல தகவல்கள் முந்திய கால கட்டத்தைவிட இக்காலத்தில் அதிக அளவில் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. பல்வகை சமூகத்தினர் வலங்கை இடங்கை என்ற இருபிரிவுகளாகப் பிரிந்து மோதிக் கொண்டதையும், பகையுணர்வுடன் நடந்து கொண்டதையும் கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன. சிலவேளைகளில் இருசமூகப் பிரிவினரும் விசயநகர ஆளுநர்கள், அதிகாரிகள் (இறைக்கரத்தார் ஜீவிதக்காரர்) வெள்ளாள, பிராமண நிலவுடைமையாளர்கள்(காணியாளர்) ஆகியோரை எதிர்த்து கிளர்ச்சி செய்ததையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக, கி.பி.15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒன்பது கல்வெட்டுகள் ஆடுதுறை, கீழப்பழுவூர், விருதாசலம், பெண்ணாடம், இலவானாசூர், கொருக்கை போன்ற இடங்களில் உள்ளன. இடங்கை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலங்கை பிரிவைச் சார்ந்த பல்வேறு சமூகத்தினர் தங்களைக் தொல்லைப்படுத்தி வேதனைக்குள்ளாக்கிய இராஜக்கரத்தாரையும் நிலவுடைமையாளரையும் ஒற்றுமையுடன் நின்று எதிர்க்க வேண்டும். அவர்களோடு ஒத்துப் போகக்கூடாது. ஏமாற்றும் முறையில் உள்ள அளவுகோல்களை அழிக்க வேண்டும் என்று இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.[29]

இக்கல்வெட்டுகளில் வெளியிருந்து வந்த இறைக்கரத்தார் என்றழைக்கப்பட்ட அரச சார்புடைய நாயக்கர் அதிகாரிகள் அதிகமான வரித்தொல்லையைப் பிராமண, வெள்ளாள காணியர்களுக்குக் கொடுத்தனர். அவர்கள் தங்களுக்குக் கீழிருந்த குடிகளைத் தொல்லைபடுத்தினர். இதனால் இறுதி நிலையிலிருந்த அனைவரும் ஒன்று திரண்டு கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சி சோழ மண்டலம், நடு மண்டலம் முழுவதற்கும் பரவியது. அதன் பின்னர் அடங்கியது என்று கல்வெட்டுகள் மூலமாக உணரமுடிகிறது. இடங்கை வலங்கை பிரிவுகளில் செட்டிகள், கைக்கோளர், சேணியக்கடையர், சாலிகர், நியாத்தார், மன்றாடி, கோயில் அங்காடிகள், சிவன்படவர், வாணியர், செக்கு வாணியர், கண்மாளர், கொல்லர், தச்சர், தட்டான், வன்னாட்டார், குசவர், நாவிதர், வண்ணார், காவல்காரன், கைவினைப் பறையர், ஈழம்புஞ்சை போன்ற பல சமூகத்தினர் இருந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கி.பி.15 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சி நாயக்கர் ஆட்சி இப்பகுதியில் ஏற்பட்டதும் அடங்கிப் போனது.[30]

பாசனக்குளங்கள் ஊரவைகள் இக்காலத்தில் வீழ்ச்சியுற்றமையால் பராமரிப்பின்றிப் பாதிக்கப்பட்டன. இவற்றை இக்காலத்தில் பராமரித்தது தொடர்பான செய்திகளும் இக்காலத்துக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.[31]

விஜயநகர நாயக்கர் காலக் கல்வெட்டுகள் கலை வரலாற்றிற்குத் துணை செய்யும் முறையில் கோயில் விமானங்கள், மண்டபங்கள், சிற்பங்கள், செய்வித்தமை பற்றிக் கூறுகின்றன. மேலும் அழகிய தமிழ்நடையில் அமைந்த பல பாடல் கல்வெட்டுகளும் இக்காலத்திற் கிடைத்துள்ளன. [32]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. SII.Vol.,XXIV. Nos. 309, 310.
2. மேலது, எண். 413.
3. SII.Vol. XVII. Nos. 3.
4. மேலது, எண். 179.
5. SII.Vol.XXIV, Nos. 362
6. Noboru Karashima, Towards a new formation, Oxford University Press, New Delhi, Reprint. 2000, P.P.43-45.
7. N.Karashima, Y.Subbarayalu, P.Shanmugam, Vijayanagar Rule in Tamil Country as revealed through a Statistical study of Revenue Terms in incriptions, Institute for the study of Languages and Cultures of Asia and Africa, 1988, PP 1-2
8. Y.Subbarayalu, "Chavadi an Administrative Division of the Vijayanagar Empire" Proceedings of South Indian Congress, III Annual Conference, Erode, 1982 PP.85-86
9. Towards a new formation, PP 205-208
10. A Krishnaswami, The Tamil Country under Vijayanagar, Annamalai University, 1964 PP. 104-105.
11. Noboru Karashima, A concordance of Nayaks, The Vijayanagar inscriptions in South India, Oxford University Press, New Delhi, 2001, .19
12. Vijeyanagar Rule in Tamil Country as revealed through a statistical study .......... முன்னர்கண்டது பக்.7.
13. மேலது எண். 40–84
14. SII.Vol.XVII, No.145.
15. மேலது எண். 581.
16. மேலது எண். 270.
17. SII.Vol.XVII, No.289.
18. SII.Vol.XXII, No.88.
19. மேலது எண். 93.
20. SII.Vol.XXIV, No. 286.
21. SII.Vol.XVII, No.145; E.I.XXV297.
22. SII Vol.XXII Nos. 127,174;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. மேலது எண். 194.

24. SII Vol.XXIV, No. 368.

25. மேலது எண். 388, 390, 400, 402, 406.

26. SII. Vol.XVII, No. 679.

27. மேலது எண். 581.

28. SII Vol. XXIV, No.353.

29. Towards New formation......... op.cit.P 141-155

30. மேலது.

31. TV.Mahalingam, Administration and Social life under Vijayanagar Part II Social life, University of Madras, 1975 PP.86-88.

32. SII.Vol.XXIV, Nos. 314,315,324.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சி நாயக்கர் காலக் காசுகள்

திரு. ஆறுமுகம் சீதாராமன்

## செஞ்சி நாயக்கர்கள்

விஜயநகர வேந்தர் காலத்தில் செஞ்சியை மையமாகக் கொண்டு ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்களின் நிர்வாகம், பொருளாதாரம், சமுதாயம், சமயம் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வகையில் நாயக்க மன்னர்களின் பலவகையான நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன. என் களப்பணியில் 500இற்கும் மேற்பட்ட செஞ்சி நாயக்கர் காசுகள் கிடைத்தன. இருந்தாலும் சில முக்கியமான காசுகளை மட்டும் ஒளிப்படங்களுடன் ஆய்வு செய்து கீழ்வரும் பக்கங்களில் வெளியிட்டுள்ளேன். செஞ்சி நாயக்கர்கள் மதுரை, தஞ்சை நாயக்கர்களோடும் சம அந்தஸ்து உடைய அரசு மரபினர். செஞ்சி நாயக்க மரபின் தோற்றம் பற்றி தெளிவாக ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. அவர்களின் காலவரையறையும் வரலாறும் பற்றிய பல பிரச்சனைகள் இன்னும் தீராத சிக்கலாகவே உள்ளன. இருந்தாலும் எனக்குக் கிடைத்த காசுகளைக் கொண்டு ஆய்வு செய்துள்ளேன்.

செஞ்சி நாயக்கர்களின் ஆட்சி எல்லை வடக்கே பாலாறு முதல் தெற்கே கொள்ளிடம் வரை கடற்கரை ஓரமாகப் பரவியிருந்தது. குமாரகம் பண்ணணின் கீழ் துண்டிர ராஜ்ஜியத்தின் (தொண்டை மண்டலம்) தலைநகரமாக செஞ்சி விளக்கியது. கிருஷ்ணதேவாரயன் நாயக்க மன்னனை நியமிக்கும்வரை பல மகாமண்டலேசுவரர்கள் பணியாற்றி வந்தனர். செஞ்சி, தஞ்சை, மதுரையில் நாயக்கர் ஆட்சியை நிறுவிய கிருஷ்ணதேவராயனால் முறையே துப்பாக்கி கிருஷ்ணப்பனும், சேவப்பனும், விஸ்வநாதனும், மாகாண மன்னர்களாக்கப்பட்டனர். நெல்லூர் முதல் கொள்ளிடம் வரையிலான பகுதி முழுவதும் செஞ்சி நாயக்கரின் ஆட்சியில் அடங்கும்.

செஞ்சியின் முதல் நாயக்கமன்னன் துப்பாக்கிகிருஷ்ணப்பன் என்று பேராசிரியர் C. S. சீனிவாசாச்சாரியாரும், ஹீராஸ் பாதிரியாரும் கருதுகின்றனர். ஆய்வினடிப்படையில் இம்மரபினை நிறுவியவன் வையப்ப நாயக்கனே என்கிறார் டாக்டர். A. கிருஷ்ணசாமிப்பிள்ளை, "செஞ்சி நாயக்கராட்சியைத் தொடங்கியவனாகக் கருத்தக்தக்கவன் வையப்பநாயக்க னேயோவான். இவன் மகன் பெத்தகிருஷ்ணப்பனே துப்பாக்கி கிருஷ்ணப்பனாகக் கருதப்பட வேண்டியவன்." வையப்ப நாயக்கன் மரபில் தொடங்கி செஞ்சி நாயக்கர் பரம்பரையை டாக்டர் A. கிருஷ்ணசாமிபிள்ளை கீழ்கண்டவாறு அமைக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையப்ப நாயக்கன் + கொண்ட ஜம்பா (கி. பி. 1526–41)

↓

பெத்த கிருஷ்ணப்ப நாயக்கன் (கி. பி. 1541–44)
(துப்பாக்கி கிருஷ்ணப்பன் அல்லது போத்த பூபலான்)

↓

லக்ஷமாம்பா — வெங்கலாம்பா

லக்ஷமாம்பா ↓ கிருஷ்ணப்ப நாயக்கன்

வெங்கலாம்பா → சூரப்ப நாயக்கன் | திவாகரன் | வைரவன்

கிருஷ்ணப்ப நாயக்கன் ↓

வைப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கன்
(இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கன்)

வையப்ப நாயக்கனைத் தொடர்ந்து துப்பாக்கி கிருஷ்ணப்பன் என்ற பெத்த கிருஷ்ணப்ப நாயக்கன் பட்டம் பெற்றான். போத்த பூபாலன் என்றும் இவன் அழைக்கப்பட்டான். சந்திரகிரி, ராஜகிரிக் கோட்டைகளை இவன் வலுப்படுத்தினான். ராஜகிரியிலுள்ள கல்யாணமண்டபமும், நெற்களஞ்சியமும் இவனால் கட்டப்பட்டவை. திருக்கோவிலூருக்கருகிலுள்ள 'ஸ்ரீமுஷ்ணம்' வராகசாமி கோவிலை இவன் கட்டியதாகத் தெரிகிறது. வெங்கலாம்பாவின் மகன் சூரப்ப நாயக்கன் இவனைத் தொடர்ந்து அரசுரிமையேற்றான். துப்பாக்கி கிருஷ்ணப்பனைத் தொடர்ந்து அச்சுத விஜயராமசந்திர நாயக்கன் பதவியேற்றதாகச் சிலர் கருதுகின்றனர். முன்னவன் சந்திரகிரியின் ஆளுநரே, செஞ்சி நாயக்கராட்சிக்கும், இவனுக்கும் தொடர்பில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் டாக்டர் A. கிருஷ்ணசாமிபிள்ளை. ரத்தினகேத ஸ்ரீநிவாச தீட்சதரின் புவனபுருஷோத்தன் என்ற நூலே இக்கருத்துக்கு ஆதாரம். சூரப்பனை நாயக்கனாக சதாசிவராயன் அங்கீகரித்தான். தலைக்கோட்டைப் போரில் பேரரசன் சார்பில் இவன் பங்கு பெற்றதாகத் தெரிகிறது. இவனது தகுதி மிக்க சேவையைப் பாராட்டி, இவனுக்கு 'கருநாடசிம்மாசன ப்ரதிஷ்டாபனச்சார்யா' என்ற விருது வழங்கப்பட்டதாகப் 'புவனபுருஷோத்தம' என்ற நூலில் காணப்படுகிறது. சூரப்பனைத் தொடர்ந்து அவனது ஒன்றுவிட்ட தம்பி (மாற்றாந்தாய் மகன், துப்பாக்கி லஷ்மாம்பாவின் மகன்) பதவி ஏற்றான். முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கனைத் தொடர்ந்து அவன் மகன் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கன் பதிவியேற்றான். பேரரசன் முதலாம் வெங்கடனை எதிர்த்து இரண்டாம் கிருஷ்ணப்ப கிளர்ச்சி செய்ததாகப் பேராசிரியர். C.S சீனிவாச்சாரியாரும், ஹீராஸ் பாதிரியாரும் கருதுகின்றனர். பேரரசுப்படை, கிருஷ்ணப்பனைக் கைது செய்யததாகவும் தஞ்சை ரகுநாதனின் முயற்சியால் கிருஷ்ணப்பன் விடுதலை செய்யப் பெற்றதாகவும் 'இரகுநாதப்புயுதம்'' கூறுகிறது.


வைணவனாகிய கிருஷ்ணப்பன், சிதம்பர நடராஜர் கோயிலினுள் இருக்கும் கோவிந்தராஜப்பெருமாள் கோயிலுக்குத் திருப்பணி செய்தான். பிமந்தா பாதிரியார் என்ற ஜெஸ்யிட் பயணி சிதம்பரத்தில் கிருஷ்ணப்பனின் அரசவைக்கு வருகை புரிந்து நாயக்க மன்னன் ஆட்சியின் சிறப்பினை வாயாரப் புகழ்கிறார். செஞ்சியை வர்ணிக்கும் இவர் அது "இந்தியாவில் கண்ட நகரங்களுள் மிகப் பெரியது. லிஸ்பன்தவிர பிற போர்ச்சுக்கல் நகரங்கள் எல்லாவற்றை விடவும் பெரியது" என்று கூறும் அவர், அது 'கிழக்கிந்திய டிராய் நகரம்' என்கிறார். வெள்ளாற்றின் முகத்துவாரத்தில் கிருஷ்ணப்பட்டினம் என்னும் ஊரைக் (பரங்கிபேட்டை) கிருஷ்ணப்பன் எழுப்பினான். கிறிஸ்தவர்கள் தொழுகையிடம் ஒன்றைக் கட்ட உதவி செய்தான். ஜக்கராயனுக்கும், யாசமநாயக்கனுக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரில் இவன் முன்னவனை ஆதரித்தான். 1617இற்குப் பிறகு இவனைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அதன்பின் செஞ்சியின் வலிமைகுன்றியது. மீர்ஜீம்லாவின் தலைமையில் அடில்ஷா செஞ்சிக்கு அனுப்பிய படைவென்றது. சையத் நாசிர்கான் என்பவர் செஞ்சியின் ஆளுநர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1649இல் பீஜப்பூர்ப்படை செஞ்சியை முற்றுகையிட்டுக் கைப்பற்றியதன் விளைவாக செஞ்சியில் நாயக்கர் ஆட்சி மறைந்தது. ரூபநாயக் என்ற செஞ்சியின் நாயக்கமன்னர் ஆடம்பரமான, ஆவணமான போக்கினால் செஞ்சியை இழந்தார் என்று பஸ்தானி சாலடின் என்ற பாரசீக நூல் குறிப்பிடுகிறது. கி. பி. 1678இல் சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றினார். 1698இல் மாராட்டியர் செஞ்சியில் அரசு செலுத்தினர். கி. பி. 1698இல் செஞ்சி முகலாயர் கைக்கு மாறியது. 1700இல் சொரூபசிங் என்ற ராசபுத்திரத் தளபதியிடம் ஒப்படைக்கப் பெற்றது. செஞ்சி முகலாயர் வசமானதும் 'நசுரத்கட்டா' என்று பெயர் பெற்றது. செஞ்சி நாயக்க மன்னர் வெளியிட்ட பின்வரும் காசுகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன.


## வையப்ப நாயக்கர் காசுகள்



காசின் முன்பக்கத்தில் வட்டத்தைச் சுற்றிலும் புள்ளிகள் உள்ளன. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் 'வையப்ப' என்று மூன்று வரிகளில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. 'வ' என்ற எழுத்து தலைக்கீழாக அச்சிடப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : செஞ்சி; உலோகம் : செம்பு ; எடை : 1.4 கிராம்.

## கிருஷ்ணப்ப நாயக்கர் காசுகள்

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் 'கிட்டிணப்ப நாயக்கர்' என்று நான்கு வரிகளில் தமிழில் பொறிக்கப் பட்டுள்ளது. 'ட்டி' கூட்டெழுத்தில் உள்ளது. கிடைத்த இடம் : போரூர்; உலோகம் : செம்பு; எடை : 3.2 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் ராமர் நின்ற நிலையில் வலது கையில் அம்பு, இடது கையில் வில்லுடன் காணப்படுகிறார். பின்பக்கத்தில் 'ஸ்ரீ கிருஷ்ண' என்று தெலுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களில் இரண்டு வரிகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருவண்ணாமலை; உலோகம் : செப்பு; எடை : 1.4 கிராம்.

## கொண்டம நாயக்கர் காசுகள்



காசின் முன்பக்கத்தில் பீடத்தின்மேல் கருடஸ்தம்பம் உள்ளது. இடதுபக்கத்தில் சங்கு, பிறை, சக்கரம் உள்ளன. பின்பக்கத்தில் **'கெ(ா)ண்டபப்ப'** என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது. கிடைத்த இடம் : செஞ்சி; உலோகம் : செம்பு; எடை : **1.750** கிராம்.


## வெங்கடப்ப நாயக்கர் காசுகள்

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் பெண் தெய்வம் (அம்மன்) அமர்ந்த நிலையில் உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் 'வெங்கடப' என்று தமிழில் பொறிக்கப்பட்டுள்ள பெயரின் கீழே 'வெ' என்று தெலுங்கு எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : கள்ளக்குறிச்சி; உலோகம் : செம்பு; எடை : **2.8** கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் நின்ற நிலையில் வேணுகோபாலர் (புல்லாங் குழலுடன்) உள்ளார். பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் **'வெங்கடப'** என்று நாகரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: திருக் கோவிலூர்; உலோகம் : செம்பு; எடை : **2.2** கிராம்.

**காசு — 3**




காசின் முன்பக்கத்தில் விஷ்ணு நின்ற நிலையிலும், விஷ்ணுவின் இடது கையின் கீழ், அனுமன் அமர்ந்த கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஷ்ணுவை வணங்கும் நிலையிலும் உள்ளனர். பின்பக்கத்தில் 'வெ(ங்)கடப' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு, நாகரி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. 'வெ' எழுத்து தெலுங்கிலும், 'க, ட' எழுத்துக்கள் நாகரியிலும், 'ப' எழுத்து தமிழிலும் உள்ளன. கிடைத்த இடம் : திருவண்ணாமலை; உலோகம் : செம்பு; எடை : 1.5 கிராம்.

**காசு — 4**



காசின் முன்பக்கத்தில் ராமர் கையில் வில், அம்புடன் நின்ற நிலையில் உள்ளார். பின் பக்கத்தில் நான்கு கட்டங்களில் 'வெ(ங்)கடப' என்று தெலுங்கு எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : கள்ளக்குறிச்சி; உலோகம் : செம்பு; எடை : 3.2 கிராம்.

**காசு — 5**



காசின் முன்பக்கத்தில் வேணு கோபாலர் நின்றநிலையில் உள்ளார். பின்பக்கத்தில் **'வெங்கடப'** என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருக்கோவிலூர்; உலோகம் : செம்பு; எடை : 2.8 கிராம்.

**காசு — 6**



காசின் முன்பக்கத்தில் நாராயணனும், லட்சுமியும் அமர்ந்த நிலையில் உள்ளனர். பின்பக்கத்தில் 'வெங்கடபநாயடு' என்று மூன்று வரிகளில் தெலுங்கில் உள்ளது. கிடைத்த இடம்: செஞ்சி; உலோகம் : செம்பு; எடை : 5 கிராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூற்பட்டியல்


1. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : தமிழகத் தொல்லியம் சான்றுகள், (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – I, தஞ்சை, 1994,
2. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : தமிழகத் தொல்லியம் சான்றுகள் (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – II, தஞ்சை, 2002,
3. ஆறுமுகசீதாராமன் : தமிழகத் தொல்லியம் சான்றுகள் (அண்மைக்கால கண்டுபிடிப்புகள்) தொகுதி – III, தஞ்சை, 2004,
4. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : தமிழகக் காசுகள் (அண்மைக்காலக் கண்டு பிடிப்புகள்) தஞ்சை, 2002.
5. சுப்பிரமணியம், ந. தமிழக வரலாறு (1565–1967) என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1980.
6. இராஜுகாளிதாஸ் : தமிழர் வரலாறும் பண்பாடும், (தொன்று தொட்டு இன்றுவரை) விஜய் பப்ளிகேஷன்ஸ், திண்டுக்கல், 1977.
7. A. Krishnaswami Pillai, The Tamil Country under Vijayanagar, Annamalai University, 1964.
8. Srinivasachari, C. S. The History of Gingee and its Rulers, Annamalai University, 1943.


## இதழ்கள் :


ஆவணம், (இதழ் – 9, 12), தமிழகத் தொல்லியம் கழகம், தஞ்சாவூர்

தினமணி 23–6–1992

Coinex - 1997, Madras Coni Society





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுரை நாயக்கர் காலக் காசுகள்

திரு. ஆறுமுகம் சீதாராமன்

விஜயநகர வேந்தரான கிருஷ்ண தேவராயர் காலத்தில் கி. பி. 1928இல் தோன்றிய மதுரை நாயக்க அரச மரபினால் வெளியிடப்பட்ட காசுகள் மதுரை நாயக்கர் கால அரசியல், பொருளியல், சமுதாயம், பண்பாடு, சமயம் போன்ற பல நிலைகளை அறிய உதவும். அரசு நிர்வாகம் எவ்வாறு இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளத் துணை செய்யும். மதுரை நாயக்க மன்னர்கள் தமிழ், தெலுங்கு, நாகரி எழுத்துக்களில் தங்கள் பெயர் பொறித்த செப்புக் காசுகளையே பெரும்பாலும் வெளியிட்டுள்ளனர். சில காசுகளில் தங்களது முழுப்பெயரையும், சில காசுகளில் தங்கள் பெயரின் முதல் எழுத்தினை மட்டும் பொறித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்க கால நாயக்க மன்னர் காசுகளை வெளியிடும் பொழுது தாங்கள் ஆளும் பகுதி பாண்டிய நாடு என்பதை நினைவில் கொண்டு அவற்றில் பாண்டியரின் சின்னமான இணைக்கயலைச் செண்டுடன் பொறித்து வெளியிட்டுள்ளனர். தங்களது உருவங்களைவிட அவர்கள் வழிபடும் தெய்வ உருவங்களுக்கு மதிப்பளித்து அவற்றை அதிக அளவில் காசில் வடித்துள்ளனர். இராணி மங்கம்மாள் நாற்பத்திற்கும் மேற்பட்ட வகையான காசுகளை வெளியிட்டுள்ளமை நாணயங்கள் வெளியிடுவதில் அவருக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

மதுரை நாயக்க அரசர்களின் சின்னமான திரிசூலத்துடன் அமர்ந்த, நின்ற நிலைகளிலுள்ள காளையின் உருவமும் மதுரை நாயக்கர் காசுகளில் முக்கிய இடத்தைக் காலப்போக்கில் பெற்றுள்ளது. பாண்டியரை அடுத்து மதுரையைச் சிறந்த கலை–பண்பாட்டு நகரமாக மாற்றிய பெருமை மதுரை நாயக்கர்களுக்கு உண்டு. இதனை நினைவுதரும் முறையில் 'மதுரை' என்று தெலுங்கிலும், தமிழிலும் பெயர் பொறித்த காசுகளை மதுரை நாயக்க மன்னர்கள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மதுரை நாயக்கர் வரலாறு

விஜயநகர பேரரசானது தலைக்கோட்டைப் போரில் (கி. பி. 1565) வீழ்ச்சியுற்றுச் சிதறுண்டு போயிற்று. விஜயநகரத்துச் செல்வங்களும் சீரழிந்து விட்டன. விஜயநகர பேரரசன் இராமராயர் போரில் வீர மரணத்தைத் தழுவினார். ஆனால் விஜயநகர அரசு மட்டும் மறையாமல் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இராமராயனின் தம்பி முதலாம் திருமலைராயன் (கி. பி. 1570–72) நகரத்துக்குப் புத்துயிரூட்ட முயன்றான். ஆனால் வெற்றி கிடைக்கவில்லை. விஜயநகரத்தை விட்டுப் பெனுகொண்டாவைத் தன் தலை நகரமாக்கிக் கொண்டான். அவ்வூரில் தங்கிப் படைகளைச் சீரமைக்கத் தொடங்கினான். உள்நாட்டுக் கிளர்ச்சிக்காரருடனும், கொள்ளைக் கூட்டத்தாருடனும், பாளையக்காரருடனும் அவன் ஆறாண்டுகள் போராட வேண்டியவனானான். அவனுடைய அவல நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மதுரை, தஞ்சாவூர், செஞ்சி முதலிய இடங்களில் பாளையங்கள் அமைத்து ஆண்டு வந்த நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசின் மேலாதிக்கத்தை உதறித்தள்ளிவிட்டு தாமே சுதந்திர மன்னர்களாக அரசாங்கம் நடத்தலானார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்வநாத நாயக்கர் காசுகள் [கி. பி. 1529–64]

கிருஷ்ணதேவராயரால் தோற்றுவிக்கப்பட்ட மதுரை நாயக்கராட்சியின் முதல் ஆட்சித் தலைவன் விஸ்வநாத நாயக்கன். கிருஷ்ணதேவராயரின் கீழே மதுரை மாகாணத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த நாகமநாயக்கனின் மகன் இவன், பாண்டிய நாட்டில் உள்நாட்டுக் கலகத்தை அடக்க அனுப்பப்பட்ட நாகமநாயக்கனிடமே தென்னகத்தின் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவன் அடங்காத் தன்மையறிந்து திரும்ப அழைக்கப்பட்டான். இதற்கு முன்பே, கிருஷ்ணதேவராயனின் நம்பிக்கைக்குரிய ஊழியனாகிய விஸ்வநாத நாயக்கன், மன்னனுடன் பல போர்களில் பங்கு பெற்றவன் இவனே, கி. பி. **1529** இல் மதுரையின் நாயக்கனாக கிருஷ்ணதேவராயரால் நியமிக்கப்பட்டு மதுரை நாயக்கர் ஆட்சி தொடங்கிற்று. விஸ்வநாதன் மிகுந்த வீரமும், சீரிய பண்பும் படைத்தவன். இவனது தளவாயும், பிரதானியுமான அரியநாத முதலியார் கருத்தின்படி, பாளையக்காரர்கள் முறை உருவாக்கப்பட்டது. பழைய இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமாரி, திருச்சி, கோயமுத்தூத், சேலம் மாவட்டங்களின் நிலப்பகுதிகள் மதுரை நாயக்கராட்சியில் அடங்கியிருந்தன. இந்த ஆட்சியில் வெளியிடப் பெற்ற காசுகள் பல கிடைக்கப்பெற்றுள்ளன.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் மேல் பகுதியில் **'பாண்டியன்'** என்று தமிழ் எழுத்துக்களில் பெயரும், எழுத்துக்களின் கீழே இரண்டு மீன்கள் செங்குத்தாகவும் உள்ளன. பின்பக்கத்தில் மேலே பிறை, பிறையின் கீழே மூன்று வரிகளில் **'விஸ்வநாதன்'** என்று தமிழில் எழுதப்பட்டுள்ள பெயரில் **'ஸ்வ'** என்ற கூட்டெழுத்து மட்டும் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2.5 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனிதனின் உருவமும், பின்பக்கத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மீன்கள் நடுவில் செண்டும், மேலே பிறையும் காணப்படுகின்றன. காசின் விளிம்பைச் சுற்றிலும் '**விஸ்வநாதன்**' என்ற தமிழ்ப் பெயரில் '**ஸ்வ**' என்ற கூட்டெழுத்து மட்டும் கிரந்த எழுத்துக்களில் உள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோக : செம்பு; எடை : **4.1** கிராம்.

காசு — 3



காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவம் காணப்படுகிறது. பின்பக்கத்தில் இடது பக்கம் கீழே செங்குத்தாக சூலம் ஒன்றும், சூலத்திற்குப் பக்கத்தில் நிற்கும் காளையின் மேல் '**விச்வநாத**' என்று மன்னரின் பெயர் தெலுங்கிலும், தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது. ச என்ற எழுத்து தமிழில் உள்ளது. இந்தக் காசில் உள்ள காளை, சூலம் மதுரை நாயக்கர்களின் அரச இலச்சினையாகும். கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செம்பு; எடை : **3.4** கிராம்.

## முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் காசு [கி. பி. 1564–72]

விஸ்வநாதனைத் தொடர்ந்து அவன் மகன் கிருஷ்ணப்பநாயக்கன் ஆட்சிப் பொறுப்பேற்றான். இவன் துணிவுமிக்க வீரனும், அறிவுமிக்க ஆட்சியாளனுமாவான். பரமக்குடியின் பாளையக்காரனாகிய தும்பிச்சி நாயக்கனது கிளர்ச்சியை இவன் அடக்கினான். இலங்கை அரசனைக் கிருஷ்ணப்பன் வென்றதாகத் தெரிகிறது. இவன் காலத்தில் தான் தலைக்கோட்டைப் போர் **(1565)** நிகழ்ந்தது. அரியநாதர் தலைமையில் கிருஷ்ணப்பன் ஒரு படையைப் பேரரசின் படைகளுக்குத் துணையாக அனுப்பினான். திருநெல்வேலிக்கு அருகில் கிருஷ்ணாபுரம் என்ற ஊரை ஏற்படுத்தினான். அங்கு ஒரு மண்டபத்தையும், தெப்பக்குளத்தோடு கூடிய திருவேங்கடநாதன் கோவிலையும் இவன் கட்டினான்.



காசின் முன்பக்கத்தில் பால கிருஷ்ணன் அமர்ந்த நிலையில் உள்ளார். பின்பக்கத்தில் 'கிட்டணபநாய(க்கர்) என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் பெயர் உள்து. கிடைத்த இடம் : கரூர்; உலோகம் : செப்பு; எடை : **3.2** கிராம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணதேவராயர் வெளியிட்ட தங்கக் காசுகளில் உள்ள பாலகிருஷ்ணன் உருவத்தையும் தற்போது கிடைத்துள்ள கிருஷ்ணப்ப நாயக்கர் செப்புக் காசில் உள்ள உருவத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மேலும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கல்வெட்டில் வடமொழி கலந்து கிருஷ்ணப்ப நாயக்கர் என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணப்ப நாயக்கர் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதைக் கிடைத்த காசிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

## வீரப்ப நாயக்கர் காசுகள் [கி. பி. 1572–95]

முதலாம் கிருஷ்ணப்பனைத் தொடர்ந்து அவன் மகன் வீரப்ப நாயக்கன் ஆட்சியேற்றான். மாவலிச்சக்கரவர்த்தியின் வழித்தோன்றல்கள் என்று கூறிக்கொள்ளும் வாணாதிராயர்கள் கலகத்தை வீரப்பன் அடக்கினான். வாணாதிராயர்கள் கி. பி. 14ஆம் நூற்றாண்டில் சோழப்பகுதியிலிருந்து பாண்டிய நாட்டில் புகுந்து சிற்றரசர்கள் ஆயினர். விஜயநகர ஆட்சிக்கு அடங்கிய சிற்றரசர்களாய் வாழ்ந்தனர். விஸ்வநாதன் காலத்தில் பாளையக்காரர்களாக அமர்த்தப்பெற்றனர். திருச்சிக் கோட்டைச் சீர்திருத்தமும், அருப்புக் கோட்டையில் அரண் அமைத்தலும் செய்த இவ்வீரப்பர் ஆட்சியிலேதான் மதுரை நாட்டில் ஏசு கழகத்துப் பாதிரிமார்கள் முதன் முதலாக 1529இல் சமயப் பணிக்கழகத்தைப் பெர்ணான்டசு என்ற போர்த்துக்கீசியப் பாதிரியாரின் தலைமையில் ஏற்படுத்தினார்.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனிதன் உருவமும், இடது பக்கத்தில் ஒரு சூலமும் உள்ளன. பின் பக்கத்தில் நின்ற நிலையில் காளையும், காளையின் மேல் பிறையும், காளையின் முன்காலில் முன்னால் 'வீ' என்று நாகரி எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளன. வீரப்ப நாயக்கர் என்ற பெயரின் சுருக்கமே 'வீ' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 3 கிராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காசு — 2



காசின் முன்பக்கத்தில் நிற்கும் நிற்கும் மனிதன் உருவம், பின்பக்கத்தில் நின்ற நிலையில் காளையும், காளை முகத்தின்முன் சக்கரமும் உள்ளன. சக்கரத்தின் கீழே ஒரு குத்துவாள். குத்துவாளின் கீழே 'வீ' என்று தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. வீரப்பநாயக்கர் என்ற பெயரின் சுருக்கமே 'வீ' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருநெல்வேலி; உலோகம்: செப்பு; எடை : 2.6 கிராம்.

## இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் காசு [கி. பி. 1595—1601]

இரண்டாம் கிருஷ்ணப்பர் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஏதுமில்லை. முதலாம் வேங்கடனுக்குத் திறை செலுத்துவதை இவன் நிறுத்தியதாகவும் அதனால் இவனையடக்க ஒரு படை அனுப்பப்பட்டது என்றும் ஹீராஸ் பாதிரியார் கருதுகின்றார். திறைப் பொருளைப் பெறவே படையனுப்பப்பட்டதாயும், எந்தக் கிளர்ச்சியும் அடக்கப்படவில்லையென்றும் வாதிடப்படுகிறது.



காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் யானை உள்ளது. பின்பக்கத்தில் 'ஸ்ரீ கிருஷ்ண' என்று மூன்று வரிகளில் தெலுங்கு எழுத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : அம்பாசமுத்திரம்; உலோகம் : செப்பு; எடை : 2 கிராம்.

சங்ககால முதல் கி. பி. 18—ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த பல தென்னிந்திய மன்னர்கள், காசுகளில் யானையின் உருவத்தைப் பொறித்து வெளியிட்டுள்ளதைக் காணலாம். இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் தெலுங்கு மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதைக் கிடைத்த காசிலிருந்து அறியலாம். இவன் காலத்தில் வெளியிட்ட காசு ஒன்றே ஒன்றுதான் கிடைத்துள்ளது. வருங் காலத்தில் பலவகைக் காசுகள் கிடைக்க வாய்ப்புள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் காசுகள் [கி. பி. 1601– 1609]


இரண்டாம் கிருஷ்ணப்பனைத் தொடர்ந்து முத்து கிருஷ்ணப்ப நாயக்கன் பட்டம் பெற்றான். கிருஷ்ணப்பனின் தம்பி விஸ்வப்பனின் மகன் இவன். முத்துக் கிருஷ்ணப்பன் ஆட்சியில் நடந்த மிக முக்கியமான நிகழ்ச்சி சேதுபதிகள் தலைமையில் மறவர் நாடு ஒழுங்காக அமைக்கப்பட்டதே ஆகும். சடைக்கத்தேவன் என்பவன் சேதுபதி ஆக்கப்பட்டான். இராமேஸ்வரம் போகும் யாத்திரிகர்களைக் காப்பதே இவனது தலையாய கடமை. இவன் காலத்தில் தத்துவ போதகர் என்றழைக்கப்பட்ட பாதிரியார் தமது சமயப்பிரச்சாரப் பணியை ஓரளவு வெற்றிகரமாக நடத்தி வந்தார்.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் '**முத்து கிருஷ்ண**' என்று தெலுங்கு எழுத்துகளில் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை உலோகம் : செப்பு; எடை : 3.4 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் '**முத்து கிருஷ்ண**' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்துக்களில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் சங்கு, சக்கரத்திற்குக் கீழே '**வராஹ**' என்று நாகரி எழுத்தில் பெயர் உள்ளது. ஒரே காசில் இருமொழி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. நாயக்கர் ஆட்சியில் செப்புக் காசிற்கும் '**வராஹ**' என்று பெயர் இருந்துள்ளதை அறியலாம். கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 5.2 கிராம்.

**காசு — 3**



காசின் முன்பக்கத்தில் 'முத்து கிருஷ்ண' என்று இரண்டு வரிகளில் தெலுங்கில் பெயர் உள்ளது. பின்பக்கத்தில் 'திருவேங்கட' என்று இரண்டு வரிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தெலுங்கில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 5.2 கிராம்.

முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் விஜயநகர மன்னர் இரண்டாம் வேங்கடரிடம் விசுவாசம் காட்டியேவந்தார். அதனால் இவர் வெளியிட்ட காசில் 'திருவேங்கட' என்று பெயர் பொறித்து வெளியிட்டுள்ளார். ஒரே காசில் இருமன்னர்களுடைய பெயரும் வந்திருப்பது வரலாற்று முக்கித்துவம் வாய்ந்ததாகும்.

முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் வெளியிட்ட காசுகளில் இதுவரை மூன்றுவகை மட்டுமே கிடைத்துள்ளது. அனைத்துக் காசுகளிலும் தெலுங்கு எழுதுத்துகளே உள்ளன. ஒரே காசில் மட்டும் இருமொழி பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். தமிழ்க் காசுகள் ஒன்று கூட கிடைக்கவில்லை.

## முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் காசு [கி. பி. 1609—1623]

முத்துக் கிருஷ்ணப்பனைத் தொடர்ந்து அவன் மூத்த மகன் முதலாம் முத்துவீரப்ப நாயக்கன் பதவியேற்றான். ஜக்கராயனுக்கும், இராமதேவனுக்கு மிடையிலான உள்நாட்டுப் போரில் இவன் முன்னவனை ஆதரித்தான். தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினான். தஞ்சை நாயக்கருடன் அக்காலத்தில் போர் நடந்து வந்தது. அதை வெற்றிகரமாக முடிக்கவே தலைநகரம் திருச்சிக்கு மாற்றப்பட்டது. இச்செயலில் மதுரை நாயகருக்குத் தென்காசிப் பாண்டியர் உதவிபுரிந்தனர்.



காசின் முன்பக்கத்தில் விஷ்ணு நின்ற நிலையில் பொறிக்கப்பட்டுள்ளார். பின் பக்கத்தில் 'வீ' என்ற தெலுங்கு எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. 'வீ' என்ற எழுத்தைச் சுற்றிலும் முத்துக்கள் போல் உள்ளன. வீரப்ப நாயக்கர் என்ற பெயரின் சுருக்கமே 'வீ' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 1 கிராம்.

## திருமலை நாயக்கர் காசுகள் [கி. பி. 1623—1659]

திருமலை நாயக்கர் முத்து கிருஷ்ணப்பரின் இரண்டாவது மகனாவார். மதுரைப் பெருநாடு இவர் ஆட்சிக் காலத்தில் கன்னியாகுமரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாவட்டத்தின் ஒரு பகுதி, திருநெல்வேலி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, சேலம், கோவை முதலிய மாவட்டங்களின் பகுதிகளைக் கொண்ட பெரும்பரப்புடைய நாடாக விளங்கியது. திருச்சியில் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் ஆட்சி செலுத்திய திருமலை அதன்பின் மதுரையைத் தம் தலைநகராகக் கொண்டார். மதுரை நாட்டைப் பாதுகாத்தற் பொருட்டு இரண்டு கோட்டைகளைக் கட்டினார். ஐந்து பெரும் போர்களை நிகழ்த்தினார். இவர் முதல் முதலில் நடத்திய போர் மைசூர் சாமராஜ உடையாருக்கு எதிரானது ஆகும். திருவாங்கூர் மீது திருமலை மேற்கொண்ட படையெடுப்பு இரண்டாவது படையெடுப்பாகும். கி. பி. 1637ல் திருமலை இராமநாதபுரம் சேதுபதியுடன் போர் புரிந்தார். விஜயநகர அரசர் மூன்றாம் வேங்கடரும் கி. பி. 1637இல் போர் செய்தார். மைசூருக்கு எதிராக மீண்டும் இவர் நிகழ்த்திய போர் மூக்கறுப்புப்போர் என வரலாற்றில் பேசப்படுகிறது. திருமலை மதுரைக் கோயிலைப் புதுபித்ததோடு, திருப்பரங்குன்றம் கோயில், அழகர் கோயில், திருவில்லிபுத்தூர், ஆண்டாள் கோயில், திருவரங்கம் பெரியகோயில் ஆகியவற்றிலும் திருப்பணிகள் பல செய்தார். ஆலயத்திருவிழாக்கள் நடத்தினார். மதுரையில் கலையழகு மிக்க திருமலைநாயக்கர் மகாலைக் கட்டினார். சமயப் பொறையுணர்வு உடையவராகத் திகழ்ந்தார்.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி அமர்ந்திருக்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் **'திருமலா'** என்று தெலுங்கு எழுத்துகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2.5 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் **'ஸ்ரீ வீர'** என்று தெலுங்கு எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளது. பின்பக்கத்தில் **'திருமல'** என்று தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2.5 கிராம்; இந்தக் காசில் இருமொழிகள் பொறிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

## சொக்கநாத நாயக்கர் காசு [கி. பி. 1659–1682]

முத்துவீரப்ப நாயக்கர் இறந்த பிறகு அவரது மகன் சொக்கநாதன் தனது பதினாறாவது வயதில் மதுரை மன்னராகி 24 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவர் ஆட்சிக்கு வந்த உடனேயே இவரது இளவயதைப் பயன்படுத்திக் கொண்டு, இவரது பிரதானியும், தளவாயும், இராயசமும் கூடி சதித்திட்டம் தீட்டி தங்கள் திட்டத்திற்குத் தடையாக இருப்பவர்களை ஒழித்துக் கட்டத் துணிந்தார்கள். தக்க சமயத்தில் இத்திட்டத்தை அறிந்த சொக்கநாதநாயக்கர் அதை முறியடித்தார்.

துரோகம் நினைத்த இராயசம் கொல்லப்பட்டார். பிரதானி பிராமணரானதால், கொல்லப்படாமல், அவரது கண்கள் குருடாக்கப்பட்டன. தளவாய் லிங்கமநாயக்கர் செஞ்சிக்குத் தப்பியோடி, செஞ்சி மன்னர் ஷாஜியுடனும், தஞ்சை மன்னர் விஜயராகவ நாயக்கருடனும் கூட்டுச் சேர்ந்து மதுரை நாயக்கரைத் தாக்க வந்தார். புதிதாக அமர்த்தப்பட்ட தளவாயும் நம்பிக்கைக்குரியவராக இல்லாததால், சொக்கநாத நாயக்கரே, மதுரைப் படைகளுக்குத் தலைமை தாங்கி திருச்சியைக் காக்கச் சென்றார். இவரது படையெடுப்பு வெற்றியாய் முடிந்தது. தஞ்சை மன்னர் விஜயராகவ நாயக்கர் சொக்கநாதநாயக்கரிடம் சரணடைந்தார். லிங்கமநாயக்கரும், ஷாஷியும் செஞ்சிக்குத் தப்பியோடினார்கள்.



காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவம் உள்ளது. பின்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. காளையின் முன் சங்கு உள்ளது. காளையின் முதுகின் மேல் 'சொ' என்று தெலுங்கு எழுத்து உள்ளது. சொக்கநாத நாயக்கர் என்ற பெயரின் சுருக்கமே 'சொ' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 3.350 கிராம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துவீரப்ப நாயக்கர் [ரங்க கிருஷ்ண] காசுகள் [கி. பி. 1682–89]


சொக்கநாத நாயக்கர் இறந்த பிறகு, அவரது மகன் முத்து வீரப்ப நாயக்கர் (இரங்ககிருஷ்ண) மதுரை மன்னரானார். சொக்கநாதநாயக்கரின் மனைவி மங்கம்மாள், முத்து வீரப்பநாயக்கரைப் பெற்றதாயா அல்லது மாற்றான்தாயா என்பதில் சிறிய குழப்பம் உள்ளது. முத்து வீரப்பநாயக்கர் ஏழு ஆண்டு அமைதியாக ஆட்சி செய்த பிறகு அம்மை நோய்க்கு ஆளாகி 1689இல் இறந்துவிட்டார். அது சமயம் தாய்மை அடைந்திருந்த இவரது மனைவி, முத்தம்மாள் 1690இல் விஜயரங்க சொக்கநாதர் என்னும் ஆண் மகவைப் பெற்றெடுத்த பிறகு மங்கம்மாள், தனது பேரக் குழந்தைக்குக் காப்பாளராக மாறி 18 ஆண்டுகள் மதுரையை ஆண்ட பெண்ணரசி ஆவார்.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் ஓடும் நிலையில் அனுமன் உள்ளார். அனுமனின் முன்னால் 'ம' என்ற தமிழ் எழுத்து உள்ளது. மங்கம்மாளின் முதல் எழுத்தான 'ம' சுருக்கமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் 'ஸ்ரீ ரங்க' என்று தெலுங்கு எழுத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு பேரும் சேர்ந்து ஆட்சி செய்தபோது இந்தக் காசை வெளியிட்டிருக்கலாம். கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2.05 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் தோரண வாயிலுக்குள் கருடன் நின்ற நிலையில் உள்ளார். பின் பக்கத்தில் 'ஸ்ரீரங்க' என்று தெலுங்கு எழுத்தில் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2 கிராம்.

## இராணி மங்கம்மாள் காசுகள் [கி. பி. 1689–1706]

மதுரையில் மங்கம்மாளின் பாதுகாவல் ஆட்சி நடைபெற்று வரும்பொழுது, தக்காணத்தில் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாண்மையை இந்தியாவின் தென்பகுதிகளிலும் விரிவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

மைசூர் மன்னரும், தஞ்சை மன்னரும் ஏற்கனவே மொகலாயர்களின் மேலாண்மையை ஏற்றிருந்தார்கள். எனவே இராணி மங்கம்மாளும், மொகலாயர் தளபதிகளிடம் பணிவாகப் பேசி, பல வெகுமதிகளால் அவர்களை மகிழ்வித்து, பேரரசர் ஔரங்கசீப்பிற்குக் கப்பமாகப் பெரும் பொருள் அனுப்பி வைத்தார். மொகலாயர்களிடம் எந்தளவிற்குத் திறமையோடு பணிந்து போனாரோ அந்தளவிற்கு, உள்நாட்டுச் சக்திகளிடம் மிகக் கடுமையாக, மங்கம்மாள் நடந்து கொண்டார்.

மதுரை வரலாற்றில், மக்கள் நலம் பேணிய பல பொதுத் தொண்டுகளால் இராணிமங்கம்மாள் மங்காத ஓர் இடத்தை பெற்றுத் திகழ்கிறார். இவரது திறமையும், செயல்வேகமும், மதுரை அரசிற்குப் புதிய வாழ்வைத் தந்தது. இவர் கிறித்தவ மதம், இசுலாமிய மதம் உள்பட அனைத்து மதங்களுக்கும் உரிய மதிப்பினைத் தந்தார். கோவில்களுக்கும், பொதுத் தர்மங்களுக்கும் பல மானியங்களை நல்கினார். பல சாலைகளையும், பல சத்திரங்களையும் அமைத்து மதுரை மக்களின் அதன்பிற்குப் பாத்திரமானார்.

காசு — 1



காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவம் உள்ளது. பின்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. முன் காலின் முன் 'ம' என்ற தெலுங்கு எழுத்தும், எழுத்தின் கீழே சங்கு ஒன்றும் உள்ளது. மங்கம்மா என்ற பெயரின் சுருக்கமே 'ம' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு;

காசு — 2



காசின் முன்பக்கத்தில் நின்ற நிலையில் இரண்டு கைகளுடன் சங்கு, சக்கரத்துடன் நரசிம்மர் உள்ளார். பின் பக்கத்தில் நான்கு சதுரக் கட்டத்துக்குள் 'ஸ்ரீ ம(ங்)ம்மா' என்று தெலுங்கு எழுத்துகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருநெல்வேலி; உலோகம் : செப்பு; எடை : 3 கிராம்.

காசு — 3



காசின் முன்பக்கத்தில் இரண்டு யானைகளுடன் லட்சுமி (கஜலட்சுமி) அமர்ந்த நிலையில் உள்ளாள். பின் பக்கத்தில் 'மங்கம்மா' என்று தெலுங்கு எழுத்துகளின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2.5 கிராம்.

காசு — 4



காசின் முன்பக்கத்தில் சரஸ்வதி கையில் வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி அழகாக உள்ளது. பின்பக்கத்தில் 'மங்கமா' என்று தெலுங்கு எழுத்துக்களில் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : திண்டுக்கல்; உலோகம் : செப்பு; எடை : 2.1 கிராம்.

## விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காசு [கி. பி. 1706–1732]

இவரது ஆட்சியில் மதுரை அரசின் வீழ்ச்சியும், துயரமுமே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. மன்னர் ஆட்சிப் பொறுப்பில் கவனம் செலுத்தாமல் வேறு அலுவல்களில் கவனம் கொண்டதினால், அமைச்சர்கள் தன்னிச்சையாகச் செயற்பட்டார்கள். இந்த அமைச்சர்கள் மக்கள் நலம் பேணாமல் அவர்களை அடக்கிக் கொடுமைப்படுத்தி வந்தார்கள். இவர்களில், தளவாய் கஸ்தூரி ரங்கையாவும், பிரதானி வெங்கட கிருஷ்ணய்யாவும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.



காசின் முன்பத்தில் அமர்ந்த நிலையில் ராமர், சீதை உள்ளனர். இவர்களுடைய காலின் கீழே அனுமன் அமர்ந்த நிலையில் உள்ளார். பின்பக்கத்தில் 'ஸ்ரீ ரங்கராய' என்று தெலுங்கு எழுத்துகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. விஜயரங்க சொக்கநாத நாயக்கன் என்று பெயர் பொறிக்காமல் சுருக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸ்ரீ ரங்கராய' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 3.1 கிராம்.

## மீனாட்சி காசு [கி. பி. 1732 – 1736]

ஆண் வாரிசு இன்றி கி. பி. 1731இல் மரணமடைந்த விஜயரங்க சொக்கநாத நாயக்கருக்குப்பின் அவரது மனைவி மீனாட்சி மதுரை அரசியானார். இவரது ஆட்சியில் உள்நாட்டுக் குழப்பமும், அதன் பயனாய் வெளியாரின் படையெடுப்பும் ஏற்பட்டு, மதுரை நாயக்கர் அரசு அழிந்து விட்டது. பேராசை பிடித்த மீனாட்சி, பங்காரு திருமலை என்பவர் மகன் விஜயகுமாரனைத் தத்து எடுத்து தனது வாரிசாக வளர்த்து வந்தார். பங்காரு திருமலை, திருமலைநாயக்கரின் தம்பி குமாரமுத்துவின் வழி வந்தவர். இந்நிலையில் பங்காரு திருமலை அவசரப்பட்டு, ஆட்சியை மீனாட்சியிடமிருந்து பறித்துக் கொள்ள கலகம் விளைவித்தார். இக்குழப்பத்தை அறிந்து ஆர்காடு நவாபு தனது மகன் சப்தர் அலியையும், மருமகன் சந்தா சாகிப்பையும் மதுரைக்கு அனுப்பி வைத்தார். கி. பி. 1738இல் சந்தாசாயபு தனது வாக்குறுதிகளால் மீனாட்சியைக் காப்பதாக நம்பவைத்து, மதுரை அரசின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். மீனாட்சியைச் சிறையில் அடைத்தார். மீனாட்சி விஷம் குடித்து உயிர் துறந்தார். மனம் உடைந்த பாங்காரு திருமலை சிவகங்கையில் தஞ்சம் புகுந்தார். இவ்வாறு மதுரை நாயக்கர் ஆட்சி முடிவிற்கு வந்தது.



காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நின்ற நிலையில் சிங்கம் ஒன்று உள்ளது. பின் பக்கத்தில் இரண்டு வரிகளில் **'மீனாட்சி'** என்று அரசியின் பெயர் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. மீனாட்சியால் வெளியிடப்பட்ட தமிழ்க் காசில் ஒருவகை மட்டும் தான் கிடைத்துள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : 2.6 கிராம்.

## ஸ்ரீவீர காசு




காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி அமர்ந்த நிலையில் காளை உள்ளது. காளையின் வயிற்றுப் பகுதிக்கு நேராக ஒரு சூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்குத்தாக உள்ளது. மதுரை நாயக்கர்களின் அரச இலச்சினையான காளையும், சூலமும் இடம் பெறுகின்றன. பின் பக்கத்தில் 'ஸ்ரீவீர' என்று தெலுங்கு எழுத்துகளில் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருநெல்வேலி; உலோகம் : செப்பு; எடை : 2.2 கிராம்.

ஸ்ரீவீர என்று பொறிக்கப்பட்ட 500க்கும் மேற்பட்ட பல வகைக் காசுகள் தமிழகத்திலே கிடைத்துள்ளன. காசுகளில் ஸ்ரீவீர என்று பொறிக்கக் காரணம்: விஜயநகரக் காசுகளில் மன்னனின் பெயரின் முன்னால் வீர, ஹரிஹர, என்றே ஆரம்பிக்கும். அதனால் மதுரை நாயக்கர்களும் காசுகளில் தமது பெயர் பொறிக்காமல் ஸ்ரீவீர என்று பொறித்ததே அதிக காசுகளை வெளியிட்டுள்ளனர்.

**மதுரைக் காசு**



காசின் முன்பக்கத்தில் 'மதுரா' என்று தெலுங்கு எழுத்துக்களில் இரண்டு வரிகளில் ஊரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பின் பக்கத்தில் '**மதுரை**' என்று தமிழ் எழுத்துகளில் இரண்டு வரிகளில் ஊரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருநெல்வேலி; உலோகம் : செப்பு; எடை : 1.8 கிராம்.

மதுரை என்று பொறிக்கப்பட்டுள்ள இந்தக் காசை எந்த நாயக்க மன்னர் வெளியிட்டார் என்பதை அறியமுடியவில்லை. இருமொழியில் பொறிக்கப்பட்டுள்ளதே இந்தக் காசின் சிறம்பம்சமாகும். இந்தக் காசை மதுரை அக்கசாலையில் அச்சடித்து மதுரை நாயக்கர்களின் ஆட்சிப் பரப்பில் புழக்கத்தில் வெளியிட்டிருக்கலாம்.

இந்தக் காசை தமிழர், தெலுங்கர் இரண்டு பேருமே பயன்படுத்த எளிதாக இருக்க வேண்டும் என்பதே இந்தக் காசு இருமொழிகளில் வெளியிடப்பட்டதன் நோக்கமாகக் கருதலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூற்கள்:


1. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : தமிழகத் தொல்லியம் சான்றுகள், (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – II, தஞ்சை, 2002,
2. கணபதி அ. : தமிழக வரலாறு (1565–1985), மல்லிகை பதிப்பகம், மதுரை, 1992.
3. சுப்பிரமணியன், ந. : தமிழக வரலாறு (1565–1967) என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை.
4. பரந்தாமனார், அ. கி. : மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1981.
5. பிள்ளை, கே. கே. : தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1981.
6. Desikachari, T., South Indian Coins, (Reprint). Asian Euducational Services, New Deili, 1984.
7. Elliont Walter, Conis of Southern India, (Reprint). The International Numismata Qrientalia, Cosmo publications, Delhi, 1975
8. Hultzsch, E. South Indian Copper Conis, The Indian Antiqury, 1898.
9. Loventhal, E. The Coins of Tinnevelly, Higginbotham and Co. Madras 1888
10. Michael Mitchiner, Coin Criculation in Southern most India, Indian Institution of Research in Numismatic Sudies, Nasik. 1995.
11. Nagasamy, R. Tamil Coins - a Sudy, Tamilnadu State Dept. of Archaeology, Govt. of Tamilnadu, Chennai. 1981.


## இதழ்கள் :


ஆவணம் (இதழ் – 9, 12) தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர் வரலாறு (இதழ் – 6, 7)

தினமணி 12–2–1998, 25–7–1990.

Coinex - 1997, 1998, 1999, 2000 Madras Coin Society




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தஞ்சாவூர் நாயக்கர் காசுகள்

திரு. ஆறுமுகம் சீதாராமன்

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு நிலையான அரசியலே தஞ்சையில் இல்லாமல் பாண்டியர்களும், ஹொய்சளர்களும் அதைக் கைப்பற்றினர். குமாரகம்பண்ணனின் படையெடுப்பு நிகழும் வரை மதுரை சுல்தான்களின் ஆட்சியில் தமிழகம் இருந்தது. கி. பி. 16 ஆம் நூற்றாண்லே தான் நாயக்கர் ஆட்சியின் கீழ் தஞ்சாவூர் மீண்டும் பெருமைமிகு நகராகத் திகழ்ந்தது. விஜயநகரப் பேரரசர்களின் ஆதிக்கம் தமிழகத்தில் வீசத் தொடங்கியதன் விளைவுகளில் ஒன்றுதான் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதினோழும் நூற்றாண்டின் மூன்றாம் கால் பகுதி வரை 143 ஆண்டுகள் தஞ்சை நாயக்கர்கள் ஆட்சி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொடக்கத்தில் விஜயநகரப் பேரரசின்கீழ் ஆட்சியைத் தொடங்கியவர்கள், இறுதியில் தஞ்சையைத் தனி உரிமை பெற்ற அரசர்களாய் ஆளத்தலைப்பட்டனர். எனினும் விஜயநகர அரசின் வேந்தருக்கு வேண்டிய நேரத்தில் உதவியாய் அமைந்தனர். கிருஷ்ணதேவராயருக்குத் திம்மப்ப நாயக்கர் என்னும் ஒரு வாயிற்காப்போர் இருந்தார். அவருக்கு உதவி செய்ய விரும்பி ராயர் அவரைத் தொண்டை மண்டலத்து அமர நாயக்கராக நியமித்தார். அத்திம்மப்பருடைய மகன் செவ்வப்ப நாயக்கர் என்பவர் பேரரசர் அச்சுதராருடைய அடப்பக்கரார் (தேவையான போது வெற்றிலை மடித்துத் தருபவர்) அவர் அச்சுதராயருடைய மைத்துணியான மூர்த்திமாம்பா என்பாளை மணந்தவர். ஆகவே பேரரசரும் அவரும் சகலர். பேரரசரிடம் அவருக்கிருந்த அன்பையும், நன்றியையும் காட்டும் முகத்தான் தனது மகனுக்கும் அச்சுதப்பன் என்று பெயரிட்டார். விசுவாசமுள்ள செவ்வ வெப்ப நாயக்கரை தஞ்சையில் ஒரு நாயக்கத்தை நிறுவி அதன் தலைவராக நியமித்துத் தனது மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டார். அதன் பேரரசர் தஞ்சை நாயக்கம் மூர்த்தியம்பாளின் சீதனமாக வந்தது என்பாரும், செவ்வப்பர் தஞ்சையை வென்று கைக்கொண்டு அந்நாயக்கத்தை நிறுவிக் கொண்டார் என்பாரும் உளர்.

## செவ்வப்ப நாயக்கர் காசு [கி. பி. 1532–1563]

தஞ்சை நாயக்க அரசை தோற்றுவித்த செவ்வப்ப நாயக்கர் ஆட்சி தஞ்சை, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு பகுதிகளில் உள்ள கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. கி. பி. 1532இலிருந்து 1563 வரை 31 ஆண்டுகள் ஆட்சி செலுத்திய செவ்வப்ப நாயக்கர் பின்பு தஞ்சை அரசைத் தனது மகன் அச்சுதப்ப நாயக்கனிடம் ஒப்படைத்துவிட்டு கி. பி. 1580இல் இறக்கும் வரை பல இறைதொண்டுகள் புரிந்தார். செவ்வப்ப நாயக்கர் மிகச் சிறந்த சைவ சமயப் பற்றுடையவர். திருவண்ணாமலை இராசகோபுரத்தை எடுப்பித்தார். பல புதிய கோபுரங்கள், தடாகங்கள், மண்டபங்கள் எடுத்ததையும், பல புதிய ஊர்களை உருவாக்கியதையும், இலக்கியங்களும், கல்வெட்டுச் சாசனங்களும் எடுத்தியம்புகின்றன. தஞ்சை நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீர் அளித்தது இவரது ஆட்சியில் தான். செவ்வப்ப நாயக்கனால் வெட்டப்பட்ட ஏரி 'செவ்வப்ப நாயக்கன் ஏரி' என்று அழைக்கப்பட்டு தற்போது மருவி 'சேப்பனவாரி' என்று அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காசின் முன்பக்கத்தில் வட்டத்தின் உள்ளே இடதுபக்கம் நோக்கி அமர்ந்த நிலையில் உள்ள காளையின் மேல் சந்திரனும், சூரியனும், காளையின் முன் குத்துவிளக்கும் உள்ளன. காசின் பின்பக்கத்தில் வட்டத்திற்குள் இரண்டு வரிகளில் 'சிவாபராய' என்று நாகரி எழுத்தில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் ; தஞ்சாவூர், உலோகம் ; செப்பு, எடை ; 3.5 கிராம்.

## அச்சுதப்ப நாயக்கர் காசுகள் [கி. பி. 1560--1660]

தஞ்சை நாயக்க மன்னர்களின் வரிசையில் இரண்டாவது மன்னனாகத் திகழ்ந்தவன் அச்சுதப்ப நாயக்கனாவான். இவன் தன் தந்தை செவ்வப்ப நாயக்கர் கி. பி. 1580 இல் இறந்த பிறகு மன்னனாக முடி சூடிக்கொண்டான். கி. பி. 1560 முதல் தன் தந்தையுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்புகளைக் கவனிக்கத் தொடங்கினான். விஜயநகரப் பேரரசுக்கும் மற்றும் தென்நாடுகளுக்கும் முகமதிய ஆட்சி பரவாவண்ணம் தடுத்த மன்னர்கள் வரிசையில் இவனது பங்கு குறிப்பிடத்தக்கதாகும். பேரரசின் ஒற்றுமையைக் காப்பதற்காக இவன் அரும்பணியாற்றினான். அச்சுதப்பநாயக்கர் திருவரங்கம் கோயிலுக்குப் பல அறக்கொடைகள் நல்கியதோடு, காவிரிக்கு அணைகட்டியதையும், துலாபாரதானம் கொடுத்ததையும் கல்வெட்டுகள் விவரிக்கின்றன. அச்சுதப்ப நாயக்கரின் சாதனைகளையும், புகழையும் கோவிந்த தீட்சிதரின் 'சங்கீதசுதா' இராமபத்ராம்பாவின் 'ரகுநாத நாயக்காப்புதயம்' ஆகிய நூல்கள் மிக விரிவாகக் குறிக்கப்படுகின்றன.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் காளையும், யானையும் உள்ளன. ஒரே உடலில் காளை முகமும், யானை முகமும் காட்டப்பட்டுள்ளன. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் இரண்டு வரிகளில் 'அச்சுரபரய' (அதாவது அச்சுப்பராய) என்று நாகரி எழுத்தில் பெயர் உள்ளது. யானையின் தலையை மறைத்தால் காளையின் முழு உருவமும் காளையின் தலையை மறைத்தால் யானையின் முழு உருவமும் தெரியும். இதே போன்ற சிற்ப உருவங்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோயில்களில் காணலாம். குறிப்பாக விஜயநகர நாயக்கர் காலக் கோயில்களில் உள்ள சிற்பத்தையும், காசில் உள்ள சிற்ப உருவத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். கிடைத்த இடம் ; கும்பகோணம்; உலோகம் ; செப்பு எடை ; 3 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் இரண்டு தலை உள்ள பறவை (கண்டபேருண்டபட்சி) உள்ளது. பின்பக்கத்தில் **'அச்த(ப)'** என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. 'த' விற்கு பக்கத்தில் சக்கரம் ஒன்று உள்ளது. 'ப' எழுத்து விளிம்பிற்கு வெளியே உள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : 3.1 கிராம்.

**காசு — 3**



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் கொக்கு ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் **'(அ)ச்சுப்ப'** என்று இரண்டு வரிகளில் தமிழ் எழுத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : 2.4 கிராம்.

## இரகுநாத நாயக்கர் காசுகள் [கி. பி. 1600– 1645]

தஞ்சை நாயக்கர்களின் வரிசையில் மிகச் சிறப்பித்துக் கூறப்படும் தகுதியைப் பெற்றவன் இரகுநாத நாயக்கனாவான். விஜயநரக சாம்ராஜ்யம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் அடைந்த சீரையும், சிறப்பையும் தஞ்சை இரகுநாதன் காலத்தில் பெற்றுத் திகழ்ந்தது. இவரது ஆட்சிக்காலமே தஞ்சையை ஆண்ட நாயக்கர்கள் ஆட்சியின் பொற்காலமாகும். அச்சுதப்ப நாயக்கன், மூர்த்தியம்மா தம்பதிகளுக்கு இராமனது அருளால் இரகுநாதன் பிறந்ததாக 'ரகுநாத நாயக்காப்புதயம்' எனும் நூல் கூறுகிறது. நெடுங்குன்றத்தில் (வட ஆற்காடு) உள்ள கல்வெட்டு நாயக்கரை 'விஜயரகுநாதர்' என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்தக் கல்வெட்டின் காலம் கி. பி. 1584 ஆகும். அதாவது இரகுநாதர் இளவரசராக இருக்கையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலிருந்தே கோவிந்ததீட்சிதரிடம் கல்வி பயின்று அச்சுதப்ப நாயக்கனின் ஆளுகையின் போதே இளவரசனாகப் பணியேற்றவன். கி. பி. 1600 முதல் 1645 வரையில் தஞ்சை அரசனாகத் திகழ்ந்தவன். அவனது திறமையை மெச்சி 'அபிநவபோஜன்' என்று விஜயவிலாசம் புகழ்கிறது.

இரகுநாதனைக் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்து சிறந்த வீரனாக, இசை வல்லுநனாக, பெரும்புலவனாகச் செய்த பெருமை கோவிந்த தீட்சதரையே சாரும். மாவீரனாகத் திகழ்ந்த இம்மன்னன் அச்சுதப்ப நாயக்கனின் வெற்றிகளுக்கெல்லாம் காரணமாய்த் திகழ்ந்ததுடன், தனது ஆட்சியிலும் மாபெரும் சாதனைகளைச் செய்தான். விஜயநகரப் பேரரசின் ஒற்றுமையைக் காப்பதற்காக இவன் அரும்பணியாற்றினான். இரகுநாத நாயக்கன் பங்குகொண்ட பெனுகொண்டா போர், தேவிக் கோட்டைப் போர், யாழ்ப்பாணத்துப் போர், தோப்பூர் போர் ஆகியவை அவன் வெற்றிகண்ட முக்கிய போர்க்களாகும். இரகுநாதனின் சமயப் பணிகள் முழுவதும் இராம வழிபாட்டை மையமாகக் கொண்ட அமைந்தன. இரகுநாதன் கடல் வாணிகத்தில் ஆர்வங்கொண்டு, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் வாணிக்கப்பட்டறையே நிறுவ அனுமதி வழங்கினான்.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் அமர்ந்த நிலையிலும் சிவனும், பார்வதியும் உள்ளனர். பின்பக்கத்தில் 'ரகுநாத' என்று நாகரி எழுத்தில் இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : கும்பகோணம்; உலோகம் : செப்பு; எடை : 3.2 கிராம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் அமர்ந்த நிலையில் இலக்குமி நாராயணன் உள்ளார். பின்பக்கத்தில் 'ரகுணாத' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்தில் பெயர் உள்ளது. கிடைத்த இடம்: தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : 3.5 கிராம்.

**காசு — 3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி அமர்ந்திருக்கும் காளையும், காளையின் மேலே சூரியன், சந்திரன் உருவங்களும் உள்ளன. பின்பக்கத்தில் 'ஸ்ரீரகுநாத' என்று மூன்று வரிகளில் தெலுங்கு எழுத்தில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : கும்பகோணம், உலோகம் : செப்பு, எடை : 2.7 கிராம்.




**காசு — 4**

காசின் முன்பக்கத்தில் வட்டத்திற்குள் சிவலிங்கம் உள்ளது. காசின் பின்பக்கத்தில் மூன்று வரிகளில் **'ராயரகுனாதன்'** என்று தமிழ் எழுத்தில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : கும்பகோணம்; உலோகம் : செப்பு; எடை : 3 கிராம்.



**காசு — 5**

காசின் முன்பக்கத்தில் திருமகள் நின்ற நிலையில் உள்ளாள். பின்பக்கத்தில் **'விசையரகுனாத'** என்று தமிழ் எழுத்துகளில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : அரியலூர்; உலோகம் : செப்பு; எடை : 2.7 கிராம்.



**காசு — 6**

காசின் முன்பக்கத்தில் ஆண்தெய்வம் அமர்ந்த நிலையில் பொறிக்கப்பட்டுள்ளது. பின் பக்கத்தில் 'ரகுபண்டிதர்' என்று நான்கு வரிகளில் தமிழில் பெயர் காணப்படுகிறது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : 2.7 கிராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் கிடைத்த நாயக்கர் காலத் தமிழ் காசுகளில் இந்தக் காசில் மட்டும் 'ண்' என்ற எழுத்திற்குப் புள்ளி வைத்து எழுதப்பட்டுள்ளது. இரகுநாதன் ஒரு மாமேதையாகவும், சிறந்த பண்டிதனாகவும் திகழ்ந்த காலத்தில் இந்தக் காசு ரகுநாத நாயக்கரால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

## அமைச்சர் கோவிந்த தீட்சிதர் காசு



காசின் முன்பக்கத்தில் திருவாசியுடன் நாயக்கமன்னரின் நின்ற நிலையில் உள்ள உருவமும், பின்பக்கத்தில் மூன்று வரிகளில் தமிழில் 'கொவிந்தய்யா' என்ற பெயரும் பொறிக்கப் பட்டுள்ளன. கிடைத்த இடம் : கும்பகோணம்; உலோகம் : செப்பு; எடை : 2.5 கிராம்.

இக்காசு தஞ்சை நாயக்க மன்னர்களின் அமைச்சராகத் திகழ்ந்த தீட்சிதர் பெயரால் வெளிவந்த முதற்காசாகும். எந்த தமிழ்நாட்டு மன்னரும் அமைச்சர் பெயரில் காசுகள் வெளியிட்டதாக இதுவரை தெரியவில்லை. ஆனால் தஞ்சை நாயக்கர், அமைச்சர் பெயரில் காசு வெளியிட்டிருப்பது தஞ்சை நாயக்கர் வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கிறது.

செவ்வப்ப நாயக்கன், அச்சுதப்ப நாயக்கன், இரகுநாத நாயக்கன் எனும் மூன்று தஞ்சை நாயக்க மன்னர்களுக்கு அமைச்சராகவும், ஆசிரியராகவும் திகழ்ந்தவர் கோவிந்த தீட்சிதராவார். இரகுநாதனைக் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்துச் சிறந்த வீரனாக, இசை வல்லுநனாக, பெரும்புலவனாகச் செய்த பெருமை கோவிந்த தீட்சிதரையே சாரும். இரகுநாதன் தான் அடைந்த வெற்றிக்குக் கோவிந்த தீட்சிதரே காரணம் என்று கருதி அவர் பெயரில் சிறப்பு வெளியீடாக காசை வெளியிட்டிருக்க வேண்டும். வடமொழி, தெலுங்குமொழிப் பற்றுள்ள நாயக்கர்களில் இரகுநாதன், தமிழ்ப்பற்றும் கொண்டிருந்ததால் 'கொவிந்தய்யா' என்று தமிழில் காசு வெளியிட்டுள்ளான். இந்தக் காசு இரகுநாதன் ஆட்சியின் போது கி. பி. 1600–1645ற்குள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் தீட்சிதர் பெயரால் கோவிந்தகுடி, கோவிந்தபுதூர், ஐயன்பேட்டை, ஐயங்கடை வீதி, ஐயன்குளம், ஐயன்வாய்க்கால் போன்ற இடங்கள் இன்றும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயராகவ நாயக்கர் காசுகள் [கி. பி. 1631– 1673]

தனது புகழ்பெற்ற தந்தையைத் தொடர்ந்து மன்னனாகத் திகழ்ந்தவன் விஜயராகவநாயக்கனாவன். இவன் கி. பி. 1673 வரை தஞ்சையை ஆண்டான். இயல்பாகவே விஜயராகவன் அமைதியை விரும்பும் மனம் படைத்தவன். அமைதிக் கலைகளை வளர்த்தான். தனது பழுத்த வயதுக் காலம் வரை இவன் ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. இவன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் மதுரை நாயக்கரோடு போர் மூண்டது. இதில் விஜயராகவன் கொல்லப்பட்டான். விஜயராகவன் சமய ஈடுபாடு மிகுந்தவன். மன்னார்குடி இராசகோபால சுவாமியைத் தம் குல தெய்வமாகப் போற்றிய விஜயராகவன் தான் வாழ்நாள் முழுவதையும் இத்திருக்கோயில் திருப்பணியிலேயே கழித்தான். இராஜகோபாலனின் மீது கொண்ட பக்தியின் காரணமாக 'மன்னாருதாசன்' என்ற பெயரினைத்' தனது சிறப்புப் பெயராகச் சூடிக்கொண்டான். விஜயராகவனின் ஆட்சியின் போது கி. பி. 1646ல் விஜயநகர மன்னர் ஸ்ரீரங்கனின் தோல்வி விஜயநகரப் பேரரசைச் சரியச் செய்தது. இதுவே தஞ்சை நாயக்க அரசும் வலிமை இழக்க காரணமாயிற்று, பீஜப்பூர் சுல்தானுக்கு விஜயராகவன் திறை செலுத்தும் நிலமை உருவாயிற்று. விஜயராகவனின் கீழ்க் கண்ட காசுகள் கிடைத்துள்ளன.

**காசு – 1**



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் மயிலின் வாயில் பாம்பு ஒன்று உள்ளது. மயிலின் மேல் மலை ஒன்று காணப்படுகிறது. காசின் பின்பக்கத்தில் 'விஜயராகவ' என்று வட்டத்தைச் சுற்றிலும் தெலுங்கு எழுத்துகளில் பெயர் எழுதப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : கும்பகோணம்; உலோகம் : செப்பு; எடை : 6.5 கிராம்.

**காசு – 2**



காசின் முன்பக்கத்தில் அமர்ந்த நிலையில் இலக்குமி நாராயணன் உள்ளார். பின் பக்கத்தில் **'விஜயராகவ'** என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு, எடை : 2.5 கிராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளகிரி நாயக்கர் காசுகள் [கி. பி. 1674]

கி. பி. 1674இல் அளகிரி நாயக்கர் தலைமையில் மதுரை சொக்கநாத நாயக்கன் ஒரு படையினைத் தஞ்சைக்கு எதிராக அனுப்பினான். போர்களத்தில் தோல்வியுற்ற விஜயராகவன் கொல்லப்பட்டான். சொக்கநாதனால் அளகிரி தஞ்சையின் நாயக்கனாக அமர்த்தப்பட்டான். சில நாட்களில் அளகிரி மதுரையோடு தொடர்பைத் துண்டித்துக் கொண்டான். அளகிரி நாயக்கனின் அடக்குமுறை ஆட்சி வெங்கோஜியால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஷாஜியின் மகனும் சிவாஜியின் மாற்றாந்தாய் மகனுமாகிய வெங்கோஜி கி. பி. 1675இல் விஜயராகவன் மகன் செங்கமலதாஸ் என்பவனை அரியணையில் அமர்த்த அடில்ஷாவினால் அனுப்பப்பட்டான். அடுத்த ஆண்டில் வெங்கோஜியே அரியணையைக் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு தஞ்சையில் நாயக்கராட்சி முடிவடைந்து மராட்டியர் தஞ்சையை ஆளத்தொடங்கினர்.

காசின் முன்பக்கத்தில் பார்வதியும், சிவனும் அமர்ந்த நிலையில் உள்ளார் பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் **'ஸ்ரீ அலகரி'** என்று தெலுங்கு–கன்னட எழுத்துகளில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர், உலோகம் : செப்பு எடை : 3.6 கிராம்.




மதுரை சொக்கநாத நாயக்கர் தனது வளர்ப்புச் சகோதரன் மகனான அளகிரி நாயக்கரைத் தஞ்சையில் தனது ஆளும் பிரதிநிதியாக நியமித்தார். அளகிரி தஞ்சையில் ஏறத்தாழ ஓராண்டு காலம், அதாவது கி. பி. 1674இல் ஆண்டார்.

சொக்கநாதர் அளகிரியைத் தனக்குக் கட்டுபட்ட ஆளுநராகத் தஞ்சையில் நியமித்தாராயினும் அளகிரி நாளடைவில் சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கினான். சொக்கநாதருக்குக் கட்ட வேண்டிய வரிப்பணத்தைக் கட்டுவதை முதற்கண் நிறுத்திவிட்டான். பிறகு தான் ஒரு சுதந்திர ஆட்சியாளன் என்னும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளத் தலைப்பட்ட போது தன் பெயரில் காசை தஞ்சையில் புழக்கத்தில் வெளியிட்டு உள்ளான். அளகிரி நாயக்கர் தஞ்சையில் ஆட்சி புரிந்தற்குக் கிடைத்த நாணய சான்று ஒன்றே இதற்குப் போதுமானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகக் காசு



காசின் முன்பக்கத்தில் வட்டத்தின் உள்ளே கப்பல் ஒன்று காணப்படுகிறது. பின் பக்கத்தில் வட்டத்தின் உள்ளே பூர்ண கும்பம் உள்ளது. கிடைத்த இடம் : தரங்கம்பாடி; உலோகம் : செப்பு; எடை : 2.7 கிராம்.

தஞ்சை நாயக்க மன்னர் இரகுநாதன் ஆட்சிக் காலத்தில் தான் சோழ மண்டலக் கரையில் ஐரோப்பிய வணிகர்கள் பெரிய எண்ணிக்கையில் வந்து இறங்கி, வணிகத் தலங்களை அமைத்துக்கொண்டு வியாபாரத்தில் ஈடுபடத் தொடங்கினர். இரகுநாதன் கடல் வணிகத்தில் ஆர்வங்கொண்டு, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் வணிகக் கூடத்தை நிறுவ அனுமதி வழங்கினான். கடல் வணிகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து இந்தக் காசை இரகுநாதன் சோழ மண்டலத்தில் வெளியிட்டிருக்கலாம். பல்லவர் காசுகளுக்குப் பிறகு கப்பல் உருவம் தஞ்சை நாயக்கர் காசில்தான் காணப்படுகிறது.

## ஆரூர் காசு




தஞ்சை நாயக்கர் காலத்தில் வெளியிட்ட ஒரு செப்புக் காசு திருவாரூரில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் கணபதியின் அமர்ந்த நிலை வடிவமும், பின் பக்கத்தில் சிவலிங்கமும், காணப்படுகின்றன. இலிங்கத்தின் கீழே 'ஆரூர்' என்ற ஊர்பெயர் கி. பி. 17ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை : 3.3 கிராம்.

திருவாரூருக்குப் பழைய பெயர் ஆரூர் ஆகும். ஆரூர்த் திருக்கோயில் திருமூலட்டானத்தில் உள்ள கணபதியின் செப்புத் திருமேனி சிறப்பானதாகும். இவரை, ஐங்கலங்காசு விநாயகர் என்று அழைக்கின்றார். "ஐங்கரங் காசு விநாயகர்' என்ற பெயர் நாளடைவில் மக்கள் அழைப்பில் ஐங்கலங்காசு விநாயகர் என மருவிற்று, காசில் உள்ள கணபதிக்கும், ஆரூர்க் கோயிலில் உள்ள கணபதித் திருமேனிக்கும் தொடர்பு இருக்கலாம். இந்தக் கோயிலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கணபதியின் நினைவாகத் தஞ்சாவூர் நாயக்க மன்னர்கள் இக்காசை வெளியிட்டிருக்கலாம்.

## 2. விஜயநகர மன்னர் பெயரில் மதுரை நாயக்கர் காசு



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் முன் சங்கு ஒன்றும், காளையின் மேல் பிறை ஒன்றும் உள்ளது. பின்பக்கத்தில் நிற்கும் மனித உருவத்தில் தலைக்கும், கழுத்திற்கும் நடுவே 'தேவராய' என்று நாகரி எழுத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மனித உருவத்தின் நடுவே குத்துவாள் ஒன்று உள்ளது. கிடைத்த இடம் : பவானி; உலோகம் : செப்பு; எடை : 3.4 கிராம்.

இந்தக் காசு ஆரவீடு வம்சத்தைச் சார்ந்த இராமதேவராயர் (கி. பி. 1615–1633) பெயரால், மதுரை திருமலை நாயக்கர் (கி. பி. 1623–59), விஜயநகர மன்னரிடம் விசுவாசம் காட்டவே அவர் பெயரில் சிறப்பு வெளியீடாக வெளியிட்டதாகக் கருதலாம்.

## 3. இராமராயன் பெயரில் தஞ்சை நாயக்கர் காசு



காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் காளை, காளையின் மேல் சூரியன், சந்திரன் உருவங்கள் உள்ளன. பின்பக்கத்தில் 'ராமராஜ' என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் உள்ளது. எழுத்துகளின் நடுவில் காம்பில் இலைகள், பூ காணப்படுகின்றன. தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாதன் விஜயநகர மன்னன் இரண்டாம் இராமராயனுக்குப் பகைவர்களால் ஏற்பட்ட இடையூறுகளை நீக்கிக் கும்பகோணத்தில் கி. பி. 1614 வாக்கில் முடிசூடினான். இதன் நினைவாக இந்தக் காசு வெளியிடப்பட்டது என்று கருதலாம். கிடைத்த இடம் : தஞ்சாவூர், உலோகம் : செம்பு; எடை : 3 கிராம்.


இராமராஜ என்று நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்ட செப்புக் காசுகள் பல வகைகளில் தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கின்றன. விஜயநகர மன்னன் இரண்டாம் இராமராயனுக்கும், தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கனுக்கும் அதிகத் தொடர்பு இருந்துள்ளதைக் காட்டுவதற்கு இக்காசுகளே மிகச் சிறந்த சான்றுகளாக உள்ளன.


### 4. வேலூர் நாயக்கர் காசு



காசின் முன்பக்கத்தில் ஐந்து கிளை உள்ள மரம் ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் 'ளீங்க(ம)ராய' என்று நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் தேய்ந்த நிலையில் உள்ளன. 'ள' நாகரியில் இல்லை. தமிழில் இந்த எழுத்து அதிக உபயோகத்தில் இருப்பதால் மராட்டியிலிருந்து இந்த எழுத்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : காஞ்சிபுரம்; உலோகம் : செப்பு; எடை : **3.3** கிராம்.

வேலூரில் குறுநிலத்தலைவராக இருந்த லிங்கம நாயக்கன் (கி. பி. **1595–1604**) கலகத்தில் இறங்கினான். செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய பாளையங்களின் துணையை நாடினான். லிங்கமன் காவேரியாற்றைக் கடந்து மதுரையின்மேல் தன் சினத்தைக் கொட்டினான். அவன் அடுத்தடுத்துப் பல வெற்றிகள் பெற்றான். கலகக்காரர்கள் அனைவரும் அவனுக்கு அடிபணிந்தனர். லிங்கமன் மட்டும் தன் வேலூர்க் கோட்டையின் படை வலிமையை நம்பி நிமிர்ந்து நின்றான்.

### 5. திம்மராஜ காசு




கிருஷ்ணதேவராயரின் ஆட்சியின் கீழ் தமிழகத்தின் வடபகுதியில் உள்ள நெடுங்குன்றம் பகுதிக்கு (தொண்டை மண்டலம்) பேரரசின் அதிகாரம் பெற்ற ஆட்சியாளராய்த் திகழ்ந்தார் திம்மப்பநாயக்கர். (கி. பி **16** ஆம் நூற்றாண்டு) இவர் செவ்வப்ப நாயக்கரின் தந்தையாவார். காசின் முன்பக்கத்தில் கருடன் உள்ளார். பின்பக்கத்தில் தெலுங்கில் இரண்டு வரிகளில் '**திமராஜ**' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : திருவண்ணாமலை; உலோகம் : செப்பு; எடை : **1.2** கிராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சேலம் நாயக்கர் காசுகள் [கி. பி. 17ஆம் நூற்றாண்டு]


**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் இலட்சுமி அமர்ந்த நிலையில் உள்ளாள். பின்பக்கத்தில் **'சென்னப்ப'** என்று இரண்டு வரிகளில் தெலுங்கில் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : கொடிமுடி; உலோகம் : செப்பு; எடை : **6.2** கிராம்

சென்னப்ப நாயக்கர் மன்னர் சேலத்திலிருந்து ஆட்சி செய்துள்ளார். இவரே தர்மபுரி மாவட்டத்திலுள்ள தென்கரைக் கோட்டையைக் கட்டியவர். சென்னை சமுத்திரம் என்ற ஊரைத் தானமாகக் கொடுத்துள்ளார்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் செங்குத்தாக ஒரு குத்துவாள் உள்ளது. இதன் இரண்டு பக்கங்களிலும் சூரியன், பிறை உள்ளன. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் **'சென்னராய'** என்று தெலுங்கு எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : கரூர், உலோகம் : செப்பு, எடை : **6.8** கிராம்.

## 7. சாளுவ திருமலைராஜன் காசு

விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாகத் திருமலைராஜன், காரைக்கால் மற்றும் தஞ்சை பிரதேசங்களை ஆட்சி செய்தான். இத்திருமலைராஜன், தலைநகரைக் காவிரியின் கிளை நதிபாயும் இடத்தில் அமைத்தான். இவன் ஆட்சி செய்த பட்டிணத்திற்குத் 'திருமலைராயன் பட்டிணம்' என்று பெயர் வழங்கப்படுகின்றது. இவ்வாறு இம்மன்னன் பெயராலேயே 'திருமலைராஜன் ஆறு' என்ற பெயரால் வழங்கப்படுகிறது. திருமலை ராஜனுடைய கல்வெட்டுகள் திருவானைக்காவல், தஞ்சை, பாபநாசம், பட்டீச்சுரம் முதலிய ஊர்களில் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டீச்சுவரம் (கும்பகோணம்) திருக்கோவிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று சாளுவ திருமலைராஜனைச் சோழமண்டலத்தின் மகாமண்டலேசுவரம் என்று குறிப்பிடுகிறது. (ARE 524 of 1920) பாபநாசத்தில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் சாளுவ திருமலைராஜனை விஜயநகர அரசின் சோழமண்டல ஆட்சியாளனாகக் குறிப்பிடுகின்றன (ARE 524 of 1920; 448 of 1922). இந்தக் கல்வெட்டுகள் கி. பி. 1452 மற்றும் 1458 ஆம் ஆண்டுகளுக்கு உரிய கல்வெட்டுகளாகும். இவனுடைய காலத்தை கி. பி. 1452 முதல் 1468 வரை என வரையறுக்கலாம். திருமலைராஜன் சாளுவ வம்சத்தைச் சேர்ந்தவன்.




காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் வராகம் உள்ளது. மேலே குத்துவாள். சூரியன், உருவங்கள் காணப்படுகின்றன. பின் பக்கத்தில் மூன்று வரிகளில் '**ஸாலவதிருமலராஜ**' என்று நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளது. 'ஜ' என்ற எழுத்து நந்திநாகரியில் எழுதப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : 3.8 கிராம்.

## 8. கோனேரிராயன் காசுகள்

கி. பி. 1486 முதல் கி. பி. 1495 வரை ஒன்பது ஆண்டு காலம் சோழ மண்டலத்தில் எந்தப் பேரரசுக்கும் கட்டுபடாத ஆட்சியாளனாக கோனேரிராயன் ஆண்டான். அந்த மன்னன் வெளியிட்ட நான்கு வகைக் காசுகளிலும் தமிழ் எழுத்துக்களில் அவனது பெயர் பொறித்து வெளியிட்டுள்ளான்.

**காசு — 1**



காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. காளையின் மேல் பரசு கட்டாரி உள்ளன. பின்பக்கத்தில் '**கொனெரிராயன்**' என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துகளுக்கு நடுவே குத்துவாள் ஒன்று உள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செம்பு; எடை : 1.4 கிராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு — 2



காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் முன் குத்துவாள் ஒன்று உள்ளது. பின் பக்கத்தில் 'கொனேரிராயன்' என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : 3.1 கிராம்.

## 9. விருபாட்சி பாளையப்பட்டுக் காசு

காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கிச் செல்லும் அனுமன் உள்ளான். பின்பக்கத்தில் காசின் விளிம்பைச் சுற்றி 'விருபாட்சி' என்று தமிழில் பொறிக்கப் பட்டுள்ளது. 'பாட' என்ற இரண்டு எழுத்துகளும் கூட்டெழுத்தில் உள்ளன. கிடைத்த இடம் : திண்டுக்கல்; உலோகம் : செப்பு; எடை : 1.750 ; கிராம்.



மதுரை நாயக்க மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட 72 பாளையப்பட்டுக்களில் விருப்பாட்சி பாளையப்பட்டு ஒன்றாகும். பாளையப்பட்டுக்காரர்களும் அவரவர்களுடைய பகுதிகளில் நீதி வழங்கும் முறையும், ஆட்சிப் பொறுப்பும் இருந்ததால், அப்பாளையப்பட்டுக்காரர்கள், சிற்றரசர்கள் போல் சிறந்து விளங்கினார்கள். பாளையப்பட்டு சிற்றரசர்களில் விருப்பாட்சி பாளையக்காரர் மட்டும் சுயேட்சை நிலையில் இருக்கும் போது காசுகளை வெளியிட்டு உள்ளனர். வேறு எந்த பாளையப்பட்டுக்காரரும் பெயருடன் காசுகள் வெளியிட்டதாகத் தெரியவில்லை. இந்தக் காசு கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம்.

## 10. மாவலி வாணாதிராயர் காசுகள்

இசுலாமியர் ஆட்சியை நீக்கிவிட்டு மாவலி வாணாதிராயர்களிடம் ஆட்சியை விஜயநகர அரசு ஒப்படைத்ததாகத் தெரிகிறது. குமாரகம்பணன் படையெடுப்பிற்குப் பிறகு இப்பகுதியில் மாவலிவாணாதிராயர்களின் கல்வெட்டுகளே பெரும்பாலும் கிடைக்கின்றன. இவ்வாணாதிராயர்கள் விஜயநகர வேந்தர்களைப் போன்றே வைணவ மதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்களாக விளங்கியிருக்கின்றனர். கருடக் கொடியைத் தங்களது அரசுக் கொடியாகப் பெற்றிருந்தனர். இம்மன்னர்களில் சிலர் மிகுந்த செல்வாக்கும், சுயாட்சியும் பெற்றவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். இவர்கள் காலத்தில் பல வகைச் செப்புக் காசுகளை வெளியிட்டிருக்கின்றனர்.

**காசு — 1**




காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கிச் செல்லும் கருடன் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. பின்பக்கத்தில் '**சமரகொலாகலன்**' என்று மூன்று வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : **3.2** கிராம். இந்தக் காசு கி. பி. **14, 15**ஆம் நூற்றாண்டில் சமர கோலாகலனால் வெளியிடப்பட்டதாகக் கருதலாம்.

**காசு — 2**



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி செல்லும் கருடன் உருவத்தின் மேல் குடை ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. பின் பக்கத்தில் '**புவனெகவீரன்**' என்று மூன்று வரிகளில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : மதுரை; உலோகம் : செப்பு; எடை : **2.8** கிராம். இந்தக் காசு கி. பி. **14, 15,** ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த சமர கோலாகலனால் வெளியிடப்பட்டதாகக் கருதலாம்.

## 11. பீஜப்பூர் அடில்ஷா தஞ்சையில் வெளியிட்ட காசு



காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் அனுமன் உருவம் உள்ளது. பின் பக்கத்தில் இலை போன்ற வடிவத்தில் ஒன்பது புள்ளிகள் உள்ளன. மேலே 'அடில்ஷா' என்று பாரசீக எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர்; உலோகம் : செப்பு; எடை : **3.4** கிராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை போன்ற வடிவத்தில் ஒன்பது புள்ளிகள் மட்டுமே காணப்படும் காசுகள், முகம்மது அடில்ஷாவினால் மட்டுமே தென்னிந்தியாவில் வெளியிடப்பட்டவை. தமிழகத்தின் பல பகுதிகளில் அவர் காசுகள் கிடைத்துள்ளன. முகம்மது அடில்ஷாவின் காலத்தில் (கி. பி. **1629–56)** அடில்ஷாஹி பேரரசு புகழின் உச்சநிலையை எட்டிற்று. கி. பி. **1646**இல் தஞ்சை நாயக்கர் விஜயராகவனின் ஆட்சியின் போது விஜயநகர மன்னன் ஸ்ரீரங்கனின் தோல்வி விஜயநகர பேரரசைச் சரியச் செய்தது. இதுவே, தஞ்சை நாயக்க அரசும் வலிமை இழக்க காரணமாயிற்று. பீஜப்பூர் சுல்தானுக்கு விஜயராகவன் கப்பம் கட்டும் நிலைமை உருவாயிற்று. இச்சமயத்தில்தான் அனுமன் காசை புழக்கத்துக்கு சுல்தான் வெளியிட்டிருக்க வேண்டும்.

## துணை நூல்கள்:


1. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : **தமிழகத் தொல்லியல் சான்றுகள்,** (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – I, தஞ்சை, 1994,
2. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : **தமிழகத் தொல்லியல் சான்றுகள்,** (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – II, தஞ்சை, 2002,
3. ஆறுமுகசீதாராமன் : **தமிழகத் தொல்லியம் சான்றுகள்,** (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – III, தஞ்சை, 2004,
4. ஆறுமுகசீதாராமன் : **தமிழகத் தொல்லியம் சான்றுகள்,** (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தொகுதி – IV, தஞ்சை, 2008,
5. அளக்குடி ஆறுமுகசீதாராமன் : **தமிழகக் காசுகள்,** (அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள்) தஞ்சை, 2002,
6. ஆறுமுகசீதாராமன் : **தமிழ் காசுகள்,** (சங்ககாலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை) தஞ்சை, 2005,
7. ஆறுமுகசீதாராமன் : **காசு இயல் கட்டுரைகள்,** தஞ்சை, 2005.
8. சுப்பிரமணியன், ந. : **தமிழக வரலாறு (1565–1967),** என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1980.
9. பாலசுப்பிரமணியன், குடவாயில், : **சோழ மண்டலத்து வரலாற்று நாயக்கர்களின் சிற்பங்களும், ஓவியங்களும்,** தமிழ்ப் பல்கலைக்கழகம்.
10. பாலசுப்பிரமணியன், குடவாயில் : **தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு,** சரசுவதி மகால் நூலகம், 1999.
11. Viddhagirisan, V : **The Nayaks of Tanjore,** Annamalai University, 1942


## இதழ்கள்:


ஆவணம் (இதழ் – 7, 9, 12), தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்

தினமணி, 24–01–1990

தினமணி சுடர், 20–08–1994

கரந்தைத் தமிழ்ச் சங்கச் செய்தி மலர், 19–01–1991, இதழ்–8

Conix-1994, 1998, 2000 Madras Coin Society



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமயமும் தத்துவமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தபுராணம் காட்டும் சிவவடிவங்கள்

டாக்டர் மா. வேதநாதன்

## அறிமுகம்

**சை**வப் பேரிலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் கந்தபுராணம் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியர் என்பவரால் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் அருளப்பட்டதாக அறிஞர் கருதுகின்றனர். கந்தபுராணம், முருகக் கடவுளது பரத்துவத்தினையும், மகத்துவத் தினையும், முருகனது திருக்கோலச் சிறப்பினையும் சிறப்பாகச் சித்திரிக்கும் தமிழ் இலக்கியமாக மட்டுமன்றி சிவபரத்து வத்தினையும் மற்றும் சிவவடிவங்கள் பற்றியும் குறிப்பிடும் நூலாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். கச்சியப்ப சிவாச்சாரியார், "சிவனே முருகன், முருகனே சிவன்" எனும் கருத்தை கந்த புராணத்தில் பல இடங்களில் குறிப் பிடுகின்றார். சிவனை பரம்பொருளாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சைவசித்தாந்த தத்துவஞானத்தை நிலைநிறுத்துவதே கச்சியப்ப சிவாச்சாரியாரின் உட்கிடை என்பதால், சிவனும் முருகனும் ஒருவரே என்று கூறவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளதெனலாம். இதனால் கந்தபுராணத்தில் முருகனின் பல்வேறு திருக்கோலங்கள் சித்தரிக்கப் பட்டிருப்பதுடன் சிவவடிவங்கள் பற்றியும் கூறப்பெற்றுள்ளது. சிவவடிவங்கள் ஒவ்வொன்றும் சிவனின் தெய்வீகச் செயல்களையும், உயரிய தத்துவப் பொருள்களையும் உணர்த்தி நிற்கின்றன. இக்கட்டுரையானது கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள சிவவடிவங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

## சதாசிவ வடிவம்

ஆகமங்கள் கூறும் அறுபத்திநான்கு சிவவடிவங்கள் ஐந்து முகங்களையும், பத்துத் திருக்கரங்களையும் கொண்டு விளங்குவது சதாசிவ வடிவமாகும். இவ்வடிவம் பெருந்தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது. இச்சதாசிவவடிவமே பிற சிவவடிவங்கள் தோன்றுவதற்கும் மூலமாக விளங்குகின்றது. உலகில் உள்ள பொருட்கள் அனைத்திற்கும் இவ்வடிவமே பிறப்பிடமாகும். இறுதியில் அனைத்தும் இவ்வடிவத்தினுள்ளேயே ஒடுங்கும். மகாபிரளய காலம் ஏற்படும் போது யாவும் மாயையில் ஒடுங்கும்மென்பதும் மாயை சக்தியில் ஒடுங்கும் மென்பதும் சிவம் மட்டுமே எதனுள்ளும் ஒடுங்காது ஒடுங்கியதாகக் தனித்து நிற்கும் என்பதும் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். சைவசித்தாந்தம் கூறும் இக்கருத்தினைச் சுட்டி நிற்கும் உயர் வடிவமே சதாசிவவடிவமாகும். இதனைக் கருத்தில் கொண்ட கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தின் முதற்பாட்டின் முதல் அடியில் இவ்வடிவத்தைச் சுட்டும் விதத்தில் **"திகட சக்கரச் செம்முக மைந்துளான்"**[1] என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இவ்வடிவம் கந்தபுராண உற்பத்தி காண்டத்தில் "ஐம்முகத்து ஒருவன்"[2] என்று சொல்லால் சுட்டப்பட்டுள்ளது. இங்கே இறை ஒன்று என்ற சைவசித்தாந்த தத்துவ நிலைப்பாட்டினையே 'ஒருவன்' என்ற சொல்லால் சிவாச்சாரியார் சுட்டியுள்ளார்.

## மகா சதாசிவ வடிவம்

இருபத்தைந்து தலைகளும், ஐம்பது கைகளும் உள்ள சிவவடிவம் மகாசதாசிவ வடிவமாகும். உயரிய தத்துவப்பொருள் கொண்ட இவ்வடிவத்தையே கந்தபுராணம், **"யாவலுமுய்ந்திடச் சதாசிவவுரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைந்துற்றறும்''**[3] என்று குறிப்பிடுகின்றதெனக் கொள்ளலாம். தமிழிலக்கியங்களில் கந்த புராணத்திலேயே மகா சதாசிவ வடிவம் குறிப்பைக் கண்டுகொள்ள முடிகின்றது.

## சோமாஸ்கந்த வடிவம்

சத்தாகிய சிவத்திற்கும், சித்தாகிய உமைக்கும் நடுவே ஆனந்தமே வடிவமாகிய கந்தக் கடவுளோடும் விளங்கும் சிவவடிவமே சோமாஸ்கந்த வடிவமாகும். சத்து சித்து ஆனந்தம் என்று இக்குணங்களின் குறியீடாகவே சோமாஸ்கந்த வடிவத்தைக் கொள்ளலாம். சிவனுக்கும் உமைக்கும் நடுவில் கந்தன் வீற்றிருக்கும் இவ்வடிவத்தினை இரவுக்கும் பகலுக்கும் நடுவே தோன்றும் மாலைப்பொழுதுடன் ஒப்பிட்டு அழகியல் உணர்வோடு சிறப்பாக விளங்குவது,

*''ஏலவார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்*
*பாலன் ஆகிய குமரவேள் நடுவுறும் பான்மை*
*ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்*
*மாலையான தொன்று அழிவின்றி வைகு மாறொக்கும்''*[4]

என வரும் கந்தபுராணத்தின் உற்பத்தி காண்டப் பாடலாகும். பல்லவர் காலம் முதலாகச் சோமாஸ்கந்த வடிவம் பற்றிய சிற்பங்கள் காணப்படுகின்ற போதும் தமிழ் இலக்கிய மரபில் சோமாஸ்கந்த வடிவத்தைச் சுட்டும் இது போன்றதொரு பாடல் இல்லையெனலாம்.

## இலிங்கோற்பவ வடிவம்

திருமாலும், நான்முகனும் தாம்தாம் பரம்பொருள் என நினைந்து ஆணவ வயப்பட்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட அகந்தையை அடக்கி, அவர்களுக்கு நல்லறிவு தோற்றுவிக்க சிவன் மண் முதல் விண்ணளவும் ஜோதிப் பிளம்பாய் நின்ற வடிவம் இலிங்கோற்பவ வடிவமாகும். ஆணவமுனைப்புடையவர்கள் ஆண்டவனை அணுகவோ அடையவோ முடியாதென்பதை இந்த வடிவம் சுட்டி நிற்கின்றது. நீலகண்டத்தையும், மான் மழு, வரதம், அபயம் ஆகியன பொருந்துகின்ற திருக்கரங்களையும், சர்ப்பங்களாலாகிய வளைவு பொருந்திய ஆபரணங்களையும் கொண்டு சந்திரனை அணிந்த சடைமுடியுடன் உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டு மூன்று திருக்கண்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மா, விஷ்ணு என்போருக்கு அருள்புரியும் இந்த வடிவத்தை அங்க அமைதியுடன் மிகவும் சிறப்பாக விளக்கி நிற்பது,

*"மைக்களமு மான்மழுவும் வரதமுடன் அபயமுறும்*
*மெய்க்கரமு நாற்புயமும் விளங்கு பணிக்கொடும் பூணுஞ்*
*செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழை யோர்பாகமுமாய்*
*முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள் புரிந்தான்"*[5]

என வரும் கந்தபுராணப் பாடலாகும். இலிங்கோற்பவ வடிவத்தின் திருவுருவச் சிறப்பைச் சித்தரிக்கும் இத்தகைய பிறிதொரு பாடலை தமிழிலக்கியங்களில் வேறெங்கும் காணமுடியாது. மேலும், இவ்வடிவத்தில் சிவனுடன் உமாதேவியாரும் வீற்றிருப்பதாகக் குறிப்பிடுவது வேறெங்கும் காணமுடியாத ஓர் அரிய செய்தியாகும்.

## தட்சிணாமூர்த்தி வடிவம்

சைவசித்தாந்தத்தில் குருவுக்கு உயர் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் கூறும் இக்குரு வடிவமே சிவவடிவங்களுள் தட்சிணாமூர்த்தி வடிவமாகச் சுட்டப்படுகின்றது. திருக்கைலாசமலையில் தென்கோட்டிடை நின்ற ஒரு கல் ஆல நிழலின் கீழ் இருந்து கொண்டு சனகர், சனந்தனர், சனாதனர், சனக்குமாரர் என்ற நால்வருக்கும் 'ஞானபோதகம்' உரைக்க அந்த நால்வரும் மௌனமாக இருந்து கொண்டு அதனைக் கேட்டுணர்ந்ததாகக் கூறும் கந்தபுராணக் குறிப்பும்[6] இவ்வடிவத்தை தெய்வீக வரலாற்றுடன் வெளிப்படுத்துவதாகவுள்ளது. சிவன் தட்சிணாமூர்த்தி எனும் குருவடிவில் இருந்து நால்வருக்கும் அறமுரைத்த செய்தி சைவ இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பினும் அந்த நால்வரும் எவரெவரென்ற குறிப்பு தமிழில் கந்தபுராணத்திலேயே முதன்முதலில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். கந்தபுராணம் கூறும் இவ்வடிவத்தை ஞான தட்சிணாமூர்த்தி வடிவம் அல்லது உபதேச தட்சிணாமூர்த்தி வடிவம் என்று கூறலாம். இவ்வடிவமே கந்தபுராணத்தில், '**ஆலமர் கடவுள்**'[7], '**ஆல்வரு கடவுள்**'[8] எனும் பெயர்களாலும் கூறப்பெற்றுள்ளது. இவ்வடிவத்தையே மெய்கண்ட தேவரும், 'கல்லால் மலையமர்' என்ற சிவஞான போதக் கடவுள் வாழ்த்தில் மொழிகின்றமை நோக்கற்பாலதாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆறுமுகச் சிவன் வடிவம்

சிவனுக்கு ஈசானம், தற்புருடன், அகோரம், வாமதேவம், சத்தியோயாதம் என்ற ஐந்து முகங்கள் உள்ளதாகவே கூறப்படும். ஆனாலும், ஆறுமுகங்களையுடைய சிவ வடிவம் பற்றிய செய்தி தமிழில் கந்தபுராணத்திலேயே முதன்முதல் காணப்படுகிறது. இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியார் "**....அறிஞர், சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறு**"[9] எனக் குறிப்பிடுவர்.

### காலாந்தகர் வடிவம்

சிவபெருமான் மார்கண்டேயனுக்காக யமனை உதைத்தருளிய சிவவடிவம் இதுவாகும். யமன் மார்கண்டேயன் மீது பாசத்தை எறிந்தபோது சிவலிங்கத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்த மார்கண்டேயனைக் காப்பாற்றுவதற்காக சிவன் தனது இடப்பாதத்தினால் யமனை உதைத்துப் கொன்றதாகவும், பின் யமன் தன் பிழை உணர்ந்து சிவனைத் தொழுவதாகவும் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.[10] இதுவே சிவனின் காலாந்தகர் வடிவமாகும். யமனை சிவன் தனது இடம் பாதத்தினால் உதைத்த செய்தி தமிழ் இலக்கியங்களில் கந்தபுராணத்திலேயே முதன் முதல் காணப்படுகின்றது.

### சரபேஸ்வரர் வடிவம்

சிவபெருமான் நரசிங்கத்தை அடக்குவதற்காக கொண்டது சரபேஸ்வரர் வடிவமாகும். பிரம்மா முதலிய தேவர்கள் அஞ்சும்படி சரபப் பறவை வடிவம் கொண்டு வந்து அருள்புரிந்த சரப வடிவத்தினை வீரபத்திரவுருத்திரன் எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. இதனைக் கந்தபுராணம்,

*"......சதுர்முகம் முதலோர்*
*ஆருமச் சுறச் சரபமாய் வந்தருள்புரிந்த வீர பத்திரவுருத்திரன்"*[11]

எனக் கூறும்.

### பிட்சாடனர் வடிவம்

தென்னாட்டுக்கேயுரிய சிறந்த சிவவடிவம் பிட்சாடனர் வடிவமாகும். சிவபெருமான் நரசிங்கத்தின் தோலுடையை நீக்கி, நிர்வாணியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலத்தினையும், பிக்ஷா பாத்திரத்தினையும் கையில் ஏந்திக் கொண்டு மோகினியாகிய திருமால் பக்கத்தில் வர தாருகாவனத்திற்குச் சென்றார் என்ற கந்தபுராணக் குறிப்பு இவ்வடிவத்தை நம் கண்முன்னே நிறுத்துகின்றது. இவ்வடிவத்தின் திருவுருவச் சிறப்பை விளக்குவது,

*"நராரியின் உரிவை நீத்து நக்கனேயாகி முக்கட்*
*பராபரன் சூலத்தோடு பலிகலன் அங்கைகொண்டு*
*முராரிதன் பாங்கர் செல்ல முனிவருக்கிருக்கையாகத்*
*தராதல மதிக்கநின்ற தாருகாவனத்திற் புக்கான்"*[12]

என வரும் கந்தபுராணப் பாடலாகும்.

## சலந்தராரி வடிவம்

சலந்திரன் என்பவனை அழித்த சிவவடிவம் இதுவாகும். இந்த வடிவத்தினை ஜலத்திரவதமூர்த்தி, சலந்தாரி, ஜலந்தரஹரமூர்த்தி எனப் பல பெயர்களினால் வழங்குவர். இவ்வடிவத்தின்போது சிவபெருமான், தூக்குகின்ற கமண்டலம் நரைத்த திருமேனி, ஊன்றிய கோல், ஓலைக் குடையினை ஏந்திய கை என்பவற்றுடன் முனிவர் வேடத்தில் தோன்றியதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.[13]

## சங்கர நாராயண வடிவம்

வலதுபாகம் சங்கரனாகவும், இடதுபாகம் நாராயணராகவும் ஒரே வடிவில் காட்சி தரும் சிவவடிவம் இதுவாகும். இந்த வடிவம் பற்றிய செய்தியினைத் திருமாலின் கூற்றாகவே "சங்கரன் பாதி நான்"[14] என்று கச்சியப்ப சிவாச்சாரியார் மொழிவர்.

## அர்த்தநாரீசுவரர் வடிவம்

வலது பாதி ஆணும் இடது பாதி பெண்ணுமாக ஒரே வடிவில் அமைந்த சிவவடிவம் இதுவாகும். பார்வதி கேதார திருத்தலத்தில் சிவனை பூசனை பண்ணியதன் பயனாகவே சிவனின் இடபாகத்தை பெற்றதாக கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.[15] மேலும் கந்தபுராணத்தில் வரும் 'பாதியோர் மாதர்' உமையொரு பாகர்' போன்ற தொடர்கள் அர்த்தநாரீசுவரர் வடிவத்தைச் சுட்டி நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்த வேதியர் வடிவம்

பார்வதி தேவி செய்த தவத்தின் பெருமையினையும், அவருடைய அன்பையும் உலகிற்கு வெளிப்படுத்த வேண்டி, சிவபெருமான் வேதங்களை ஓதுகின்ற ஒரு விருத்த வேதியரைப்போல வேடம் கொண்டார். இதனை விளக்குவது.

*"செறிதுவ ருடையாளன் சிகையினன் அணிநீற்றின்*
*குறியினன் ஒளிர்நூலன் குண்டிகை யசைகையன்*
*உறைபணி கதிர்போற்று மோலையன் உயர்கோலன்*
*மறைபயில் முதியோர் போல் வடிவிது கொடு போனான்"*[16]

என வரும் கந்தபுராணப் பாடலாகும்.

## நடராசர் வடிவங்கள்

சிவவடிவங்களுள் நடராசர் வடிவங்கள் தனிச்சிறப்புடையவை. நடராசர் ஐந்து சபைகளில் நடனம் செய்கின்ற சிறப்பான செய்தியை முதன் முதலில் கந்தபுராணமே குறிப்பிடுகின்றது. சிவன் இரத்தினசபை (திருவாலங்காடு), கனகசபை (தில்லை), வெள்ளிசபை (மதுரை), தாமிரசபை (திருநெல்வேலி), சித்திரசபை (திருக்குற்றாலம்) ஆகிய பஞ்ச சபைகளில் நிகழ்த்திய நடனங்களையே கந்தபுராணம், **'ஐவகை மன்று தொறாடிய வள்ளல்'**[17] எனக் குறிப்பிடுகின்றது.

## பிற சிவவடிவங்கள்

"நிறுத்திடுவன் நினைந்தவுரு நிமலன் றானே" என்ற சித்தாந்த சாத்திர கருத்துக்கமைவாகக் கந்தபுராணத்தில் சிவன் தனது மார்பில் பன்றியின்றி ஒரு கொம்பினை அணிந்து விளங்கும் வராகசம்ஹாரவடிவம், கூர்மவடிவம் எடுத்து திருமாலின் ஆமை ஓட்டினை அணிந்துள்ள கூர்மசம்ஹாரவடிவம், சிவனை மதிக்காது யாகம் செய்த தக்கன் என்பவனைத் தண்டித்த வீரபத்திரவடிவம், மன்மதனை எரித்த காமதகனவடிவம், திருமாலுக்குச் சுதர்சனம் என்ற சக்கரத்தை கொடுக்கும் சக்ரதானவடிவம், பிரம்மதேவனது தலையைக் கொய்த பைரவர்வடிவம், கங்கையை தலையில் சூடியுள்ள கங்காதரவடிவம், முப்புரம் எரித்த திரிபுராந்தகவடிவம், சிவன்நஞ்சுண்டவடிவம், முயலகனை அடக்கி மிதக்கும் சிவவடிவம், சிவகேசரியாரும், கண்ணப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனாரும் வணங்கும் சிவவடிவம், சிலந்தியும், யானையும் வழிபடும் சிவவடிவம் ஆகிய சிவவடிவங்கள் பற்றி அறிய உதவும் தெய்வீக வரலாற்று கதைகள் இடம்பெற்றுள்ளன.

## முடிவுரை

இவ்வாறாக சிவவடிவங்கள் பற்றிய செய்திகளைப் புலப்படுத்தும் சைவ இலக்கியமாக கந்தபுராணம் விளங்குவது தெரியவருகின்றது. மேலும், கந்தனின் மகத்துவத்தைக் கூறுவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட கந்தபுராணத்தில் சிவவடிவங்கள் பற்றிய பல செய்திகள் இடம் பெற்றிருப்பது கந்தபுராணத்திற்கே உரிய தனிச்சிறப்பாகக் கருதமுடிகின்றது. இத்தகைய சிவவடிவங்கள் பற்றிய செய்திகள் கந்தபுராணத்தில் இடம்பெறுவதை நோக்கும் போது அப்புராணம் தோன்றிய காலத்தில் சிவவழிபாடும் உயர்நிலையில் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புகள் விபரம்

1. கந்தபுராணம், பாயிரம், விநாயகர் காப்பு : ப.1
2. மேலது : உற்பத்திகாண்டம், துணைவர்வருபடலம், பா.7
3. மேலது : தக்ஷகாண்டம், உமைகயிலைநீங்குபடலம், பா.4
4. மேலது : உற்பத்திகாண்டம், சரவணபடலம், பா.26
5. மேலது : தக்ஷகாண்டம், அடிமுடிதேடுபடலம், பா.87
6. மேலது : உற்பத்திகாண்டம், மோனநீங்குபடலம், பா.31, 32
7. மேலது : யுத்தகாண்டம், இரணியன் யுத்தப்படலம், பா.7
8. மேலது : பாயிரப்படலம், பா.48
9. மேலது : உற்பத்திகாண்டம், திருவவதாரபடலம், பா.43
10. மேலது : அசுரகாண்டம், மார்க்கண்டேயபடலம், பா.251–253
11. மேலது : உற்பத்திகாண்டம், கணங்கள் செல்படலம், பா.17
12. மேலது : தக்ஷகாண்டம், ததீசியுத்தரபடலம், பா.7
13. மேலது : பா.253
14. மேலது : அடிமுடிதேடுபடலம். பா.38
15. மேலது : உற்பத்திகாண்டம், வழிநடைப்படலம், பா.3
16. மேலது : உற்பத்திகாண்டம், தவங்காண்படலம், பா.2
17. மேலது : கடவுள் வாழ்த்து, பா.16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர நாயக்கர் காலச் சைவசமயம்

சு.துஷ்யந்

## 01. முன்னுரை

தென்னிந்திய வரலாற்றிலே விஜயநகர, நாயக்கர் காலம் மகோன்னதமான பல சிறப்பம்சங்கள் பொருந்திய காலமாகும். பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலே கர்நாடக தேசத்தில் ஹம்பி எனும் இடத்தில் மலர்ந்த விஜயநகர சாம்ராச்சியம் கர்நாடகத்தின் பெரும்பகுதிகளையும், ஆந்திராவின் சில பகுதிகளையும், தமிழகத்தையும் உள்ளடக்கிய பேரரசாக விளங்கியது.

விஜயநகர இராச்சியம் துருக்கியரிடமிருந்து இந்து சமயத்தையும், இந்து சமூகத்தையும், கலாசாரத்தையும் பேரழிவிலிருந்து பாதுகாத்து வளர்ச்சி பெறச் செய்யும் நோக்கத்தோடு உருவாக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாகும். பதின்நான்காம் நூற்றாண்டின் நான்காவது தசாப்தத்திலே தெலுங்கு தேசத்து நாயக்கர்களும், கர்நாடக தேசத்து பிரதானிகளும் இணைந்து கிளர்ச்சி புரிந்து சுல்தானியர்களது ஆதிக்கத்தை அழித்தார்கள். அக்காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த வீரசைவக் குருமாரும் இந்த இயக்கத்திலே பெரும் பங்கினை வகித்தனர். இந்த நோக்கத்தினை அடைவதற்காக விஜயநகரப் பேரரசர்கள் ஒரு சுதந்திர இராட்சியத்தை உருவாக்கினார்கள். அது காலப்போக்கில் தென்னிந்தியாவில் விசாலமான, வளமான, வலிமை கொண்ட பேரரசாக விளங்கியது.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் விஜயநகரம் உன்னத நிலையில் இருந்தது. கி.பி. 1565 ஆம் ஆண்டு தாழிக்கோட்டைப் போரிலே இராமராயர் மாண்டதும் தக்கணத்து இஸ்லாமியப் படைகள் பெரும் வெற்றி பெற்றன. விஜயநகரத்தின் மீது படையெடுத்த சுல்தான்கள் அங்கே அரண்மனைகள்,அரண்கள், அக்கிரகாரங்கள், அங்காடிகள், தேவாலயங்கள், மனைகள், மாளிகைகள் முதலியவற்றையெல்லாம் இடித்தழித்தார்கள். **கீழைத்தேயரின் உரோமாபுரி**, என்று ஐரோப்பிய பிரதானிகளாலே புகழாரம் சூட்டப்பட்ட அப்பெரு நகரம், ஆறு நாட்களுக்குள் இடித்தளிக்கப்பட்டது.

அதன் பின்பு அரவீடு வம்சத்தவரின் ஆட்சியில் விஜயநகரப் பேரரசைச் சீரமைப்பதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகள் தமிழகத்தில் நாயக்கர் ஆட்சிக் காலமாகும். விஜயநகர ராயர்களின் இராசப்பிரதிநிதிகளான நாயக்கர்கள் காலப் போக்கில் தனி ஆட்சி புரியத் தலைப்பட்டனர். மதுரை, தஞ்சாவூர், செஞ்சி என்பவற்றில் நாயக்கர்களின் சமஸ்தானங்கள் அமைந்தன.

விஜயநகர ராயர்கள் பலர் வைணவர்களாக இருந்தார்கள். அது போல நாயக்கர்களும், தனிப்பட்ட முறையில் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சைவசமயத்தையும் பேணி ஆதரவு புரிந்தார்கள். இக்காலத்தில் சைவசமயத்தில் சிறப்பான சில அம்சங்களும் பிரதிபலித்தன. விஜயநகர காலத்தில் சமணம், பௌத்தம் போன்ற புறச்சமயங்கள் வீழ்ச்சிகண்டன. இதற்கு அரசர்கள் எந்த வகையிலும் பொறுப்பாக அமையவில்லை. இஸ்லாம் சமயமும், கிறிஸ்தவ சமயமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரப்பகுதிகளில் கணிசமான செல்வாக்கினைப் பெற்றிருந்தன. வாணிபத்தில் இஸ்லாமியரின் செல்வாக்கு மேலோங்கியிருந்ததனால் இஸ்லாம் சமயம் செல்வாக்கடைந்தது. நாயக்கர் காலத்தில் ஐரோப்பிய மிஷனறிமார்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதிலே ஈடுபாடு கொண்டிருந்தனர். அவர்களுடைய சமயப் பிரசங்கங்கள் எதுவித தடையுமின்றி சுதந்திரமாக நடைபெற்றன. இந்து சமயத்தை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட விஜயநகர இராட்சியத்தில் எல்லாச் சமய வழிபாடுகளுக்கும் சுதந்திரம் கிடைத்தது. சமூக விவகாரங்களிற்கூட அரசர்கள் பாரபட்சமின்றி நடந்து கொண்டனர்.

இவ்வாறானதொரு காலத்தில் சைவசமயம் எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 02. விஜயநகர நாயக்கர் காலச் சைவசமயம்

### 2.1 சைவசமயப் பிரிவுகள்

தமிழகத்தில் சைவசமயம் அரசகுலத்தவர்களின் பிரதான சமய நெறியாக வளர்ச்சியடைந்திருந்தது. தொடர்ந்து விஜயநகர நாயக்கர்காலத்தில் சைவத்தில் பல பிரிவுகள் வளர்ச்சி பெற்றன. குறிப்பாக சித்தாந்தசைவம், வீரசைவம், போன்ற சைவப்பிரிவுகள் வளர்ச்சி கண்டன. மேலும் அங்கு சுமார்த்தசைவம், பாசுபதம் போன்ற பிரிவுகளின் செல்வாக்கும் அங்கு காணப்பட்டது.

#### வீரசைவம்

கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் மத்தியிலே கர்நாடகத்தில் பசவர் என்ற சமயகுரு தோன்றி, வீரசைவம் என்ற புதிய பிரிவை உருவாக்கினார். அதனைத் தொடர்ந்து விஜயநகர நாயக்கர் காலத்தில் வீரசைவம் எழுச்சி பெற்றது. அது அக்காலத்துச் சமுதாயத்திலும் பாரிய செல்வாக்குச் செலுத்தியது. குறிப்பாகக் கன்னட நாட்டில் வீரசைவம் தழைத்தோங்கியது.

வீரசைவம் தொடர்பான பல இலக்கியங்களும் இக்காலத்தில் எழுதப்பட்டன. 14ஆம் நூற்றாண்டில் ஸ்ரீபதி பண்டிதாச்சாரியர் வேதாந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரத்திற்கு வீரசைவ அடிப்படையில் **ஸ்ரீகரபாஷ்யம்** என்னும் உரை எழுதினார். 15ஆம் நூற்றாண்டில் குப்பி மன்னண்ணார்யர் வீரசைவாமிர்தல புராணம் என்ற நூலை 7000 பாடல்களில் பாடினார். அந்நூல் வீரசைவதத்துவம், சிவலீலைகள், வீரசைவ அருளாளர்களின் கதைகள் என்பவற்றைக் கூறுகின்றது. இதே காலத்தில் வாழ்ந்த ஹரிஹரர் என்ற அருட்கவிஞர் வீரசைவ அருளாளர்களின் வாழ்க்கையை அருட்பாடல்களாகப் பாடி அருளியுள்ளார்.

17ஆம் நூற்றாண்டில் துறையூரில் வாழ்ந்த சிவப்பிரகாசரின் பணிகளாலும் வீரசைவம் மேலும் வளர்ச்சி பெற்றது. இவர் வீரசைவம் தொடர்பாகப் பிரபுலிங்கலீலை என்ற காவியத்தை அருளியதோடு, கணபாஷித இரத்தினமாலை, சதகத்திரயம் போன்ற நூல்களிலும் வீரசைவக் கொள்கைகளையும், மரபுகளையும் விளக்கிக் காட்டினார். மேலும் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்த சித்தாந்த சிகாமணி என்ற இவரது நூல் வீரசைவக் கோட்பாடுகளையும், அதனை வளர்த்த சிவாச்சாரியார்களையும் செம்மையுறச் செப்புகின்றது. இவ்வாறு செந்தமிழ் நாட்டில் வீரசைவத்தின் சிறப்பை அழகொழுக எழுதிப் பேணி வளர்த்தவர்களில் சிவப்பிரகாசரின் பணிகள் போற்றத்தக்கன.

வீரசைவம் பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், வர்ணாசிரமக் கோட்பாடுகளையும் இறுகப்பிடித்து வந்த மக்களிடையே புதியசிந்தனையை ஏற்படுத்தியது. சமூகத்தைப் புதிய பாதையில் ஈடுபடச் செய்வதற்குக் வழிகாட்டியது. சாதிஒழிப்பு, பெண்விடுதலை, சமத்துவம் போன்றவற்றைச் சமுதாயச் சீர்திருத்தத்தினுள் உள்வாங்கியது. இதன் பணிகள் மைசூர், துறையூர் போன்ற இடங்களில் உள்ள வீரசைவ மடங்களின் ஊடாகவும் பரப்பப்பட்டது.

### சித்தாந்த சைவம்

விஜயநகர ஆட்சிக் காலத்தில் சித்தாந்த சைவம் பெரும் வளர்ச்சி அடைந்து இக்காலத்தில் மெய்கண்ட தேவரின் சிவஞானபோதம் சைவசித்தாந்தத்தின் விளக்கமாக அமைந்தது. அவர் வழியில் தோன்றிய சைவஞானிகள் ஆகமங்களின் துணையுடன் பரம்பொருளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களுக்குமுள்ள தொடர்பை விளக்கிக் காட்டினர். அந்த ஞானமரபால் ஆதீனங்களும் தோற்றம் பெற்றன. அந்த ஆதீனமரபுகளால் பின்பு சித்தாந்த சைவம் தமிழ்நாடு முழுவதும் துலக்கப்பட்டது.

### சுமார்த்த சைவம்

சிவன் உட்பட அம்மன், கணபதி, முருகன் போன்ற தெய்வங்களை வழிபாடு செய்பவர்களைச் சுமார்த்தசைவர் என அழைப்பர். இவர்கள் சங்கரரின் அத்வைத ஞானத்தில் விருப்புடையவர்கள். காஞ்சியில் மடம் அமைத்து அத்வைத ஞானத்தைப் பரப்பியவர்கள். பெரும்பான்மையான மக்கள் இச்சமயத்தையே பின்பற்றினர்.

### பாசுபதம்

தமிழகத்தின் வடக்குப் பகுதியில் பாசுபதம் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர்கள் வேதங்களைப் போற்றி சைவ நியமங்களைப் பின்பற்றுபவர்களாக வாழ்ந்தனர். ஹரிஹரர், புக்கர் போன்ற விஜயநகர அரசர்களும் பாசுபத சமயத்தையே சார்ந்திருந்தனர். இருவரும் காசிவிலாச கிரியா சக்தி எனும் பாசுபத குருவின் சீடர்களாகவும் இருந்தனர்.

### காளாமுகம்

உருத்திரனை பரம் பொருளாகக் கருதி பதி, பசு, பாச சித்தாந்த கொள்கைகளை நம்பி வருணாசிரம முறைப்படி வாழ்க்கை நடத்துபவர்கள்.

## 2.2 சைவ இலக்கியங்கள்

14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 18 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் சைவ இலக்கியங்களின் வளர்ச்சியிலே ஓர் பொற்காலம் என்று கூறத்தக்கவகையில் புராணங்கள், ஆகம வியாக்கியானங்கள், சித்தர்பாடல்கள், தோத்திரப்பாடல்கள், சித்தாந்த நூல்கள், சைவ வழிபாட்டோடு தொடர்புடைய சிற்றிலக்கியங்கள் என வைதீக மரபினை அடிப்படையாக கொண்ட இலக்கியப் பண்பாட்டு மறுமலர்ச்சி இக்காலத்தில் ஏற்பட்டது. அவற்றுள் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் போன்ற வடமொழி இலக்கியச் செல்வாக்கும் மிகுந்து காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள்

15 ஆம் நூற்றாண்டில் ஞானவரோதயர் உபதேசகாண்டம் எனும் புராணத்தைப் பாடினார். 16 ஆம் நூற்றாண்டைப் புராணகாலம் என்று கூறுமளவுக்குப் புராண இலக்கியங்கள் பல தோற்றம் பெற்ற காலமாகும். இக்காலத்தில் ஏறத்தாழ 40 சைவ புராணங்கள் வெளிவந்தன. அவற்றுள் சிறப்பானவற்றை மட்டும் கவனிக்கும் போது, வரகுணராம பாண்டியரின் இலிங்கபுராணமும், வாயுசங்கிதையும், வரதுங்கராம பாண்டியரின் பிரமோத்திர காண்டமும், சிதம்பரநாதகவி பாடிய சங்கரவிலாசம், புராணத்திருமலைநாதர் பாடிய சரபபுராணம், தசீதிபுராணம் போன்றவையும் வடமொழிப் புராணங்களைத் தழுவி தமிழில் எழுந்தவைகளில் கூறத்தக்கவை. அத்துடன் சைவக் கோயில்களையும் அவற்றில் நடைபெறும் வழிபாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு சமய, தமிழ் இலக்கியத்திலே தல புராணங்கள் தோன்றிய காலம் என்றும் அக்காலத்தைக் கொள்ளலாம். 14ஆம் நூற்றாண்டிலே உமாபதி சிவாசாரியர் சிதம்பரக் கோயில் மீது கோயிற்புராணம் பாடியதைத் தொடர்ந்து கமலை ஞானப்பிரகாசரின் திருமழபாடிப்புராணம், திருவானைக்கா புராணம், நிரம்ப அழகிய தேசிகரின் திருப்பரங்கிரிப்புராணம், சேதுபுராணம், திருவையாற்றுப் புராணம், அளகைச் சம்பந்தமுனிவரின் திருவாரூர்ப்புராணம், ஞானப்பிரகாசரின் திருவொற்றியூர்ப்புராணம், ஆனந்தக்கூத்தரின் திருக்காளத்திப் புராணம், சைவஎல்லப்ப நாவலரின் அருணாசலபுராணம், திருவிரிஞ்சைப் புராணம், செவ்வந்திப் புராணம், திருவெண்காட்டுப்புராணம், ரேவணசித்தரின் திருபட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப்புராணம் போன்ற தலபுராணங்கள் கூறத்தக்கவையாக உள்ளன.

17 ஆம் நூற்றாண்லும் தலபுராண இலக்கியத்தின் செல்வாக்கு தொடர்கின்றது. ஞானக்கூத்தரின் விருத்தாசலபுராணம், திருவிடை மருதூர்ப்புராணம், களந்தை குமரனின் திருவாஞ்சியபுராணம், அகோரமுனிவரின் கும்பகோணப் புராணம், வேதாரண்ய புராணம், கந்தசாமிப்புலவரின் திருப்பூவணப்புராணம், கருணைப்பிரகாசரின் சீகாளத்திப்புராணம், முத்துதாசரின் திருவிரிஞ்சைப்புராணம், போன்ற தலபுராணங்கள் கூறத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 ஆம் நூற்றாண்டிலும் தல புராணங்கள் பல்கிப் பெருகின. சைவ இலக்கிய மும்மணிகளுள் ஒன்றான திருவிளையாடற்புராணம் எழுந்தது இந்நூற்றாண்டிலேயே சைவசமயக் கலைக்களஞ்சியம் எனப் போற்றத்தக்க காஞ்சிப் புராணத்தைப் சிவஞானமுனிவர் இக்காலத்திலேயே பாடினார். கச்சியப்ப முனிவரின் தணிகைப்புராணம், திருவனைக்கா புராணம், பூவாளுர்ப் புராணம், இலக்கணம் சிதம்பர முனிவரின் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், சாமிநாதமுனிவரின் திருவாவடுதுறைப் புராணம், வேலப்பதேசிகரின் திருப்பறியலூர்ப் புராணம் போன்ற புராணங்களும் இக்காலத்தவையே.

இஸ்லாமியரின் தாக்கத்தினால் மக்களிடையே எதிர்புணர்ச்சி பரவித் தத்தம் ஊர்களில் உள்ள கோயில்களைக் காக்கவும் போற்றவும் இத்தலபுராணங்கள் பாடப்பட்டன. அதுமட்டுமின்றி சைவசமயம் அடைந்த வளர்ச்சி பெருமிதம், வழிபாடு, சமயதத்துவம், சமுதாய ஒருமைப்பாடு, வித்துவம், கதைகளோடு கலந்து கதையின்பத்தை ஊட்டும் விதம் என்பனவற்றையும் தல புராணங்கள் எம்கண்முன் நிறுத்தியுள்ளன.

## ஆகம வியாக்கியானம்

இக்காலத்தில் சைவாகம இலக்கியத்தின் செல்வாக்கும் வளர்ச்சி பெற்றது. 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த மறைஞான சம்பந்தர் சிவதருமோத்திரம் எனும் ஆகம நூலை இயற்றியுள்ளார். இது உபாகமங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. சிவாக்கிரக யோகிகளின் சிவநெறிப்பிரகாசம் என்ற நூல் சிவாகம வழியில் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூலாக அமைந்துள்ளது. பௌஷ்கர ஆகம விருத்தி என்ற உரை நூலும் இக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. தேவிகாலோத்தர ஆகமம், சர்வஞானோத்திர ஆகமம் என்பனவும் இக்காலத்தில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இதனால் ஆகமப்பண்பாட்டு நெறிகளும் இக்காலத்துச் சைவசமயத்துடன் கலப்புற்று வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

## சித்தர் பாடல்கள்

இக்காலத்தில் சித்தர்கள் என்ற ஞானிகள் பலர் தோன்றி தம் சிவ அனுபவ உணர்வுகளை எளிய தமிழால் பாடிச் சைவத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியூட்டினார்கள். 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிவவாக்கியர் "**நட்ட கல்லும், பேசுமோ நாதனுள்ளிருக்கையில்**" என்றுபாடிப் "**புறப்பூசையைத் தவிர்த்துச் சிவனை அகப்பூசையில் நிறுத்திக்கொள்**" என்று அறை கூவினார். அவரைத்தொடர்ந்து பட்டினத்தார், அகப்பேய்ச்சித்தர், அழுகுணிச்சித்தர், இடைக்காட்டுச்சித்தர், கடுவெளிசித்தர் எனப்பல சித்தர்கள் தோன்றி சிவானுபூதி பெற்ற, சித்தாந்தக் கருத்தையொட்டிய பல பாடல்களைப்பாடி இக்காலச் சைவசமய வளர்ச்சிக்கு உரமூட்டினர்.

## தோத்திரப்பாடல்கள்

இக்காலத்தில் வாழ்ந்த பல சைவப்புலவர்களால் ஏராளமான தோத்திரப்பாடல்கள் சிவன்மீதும், அம்மன்மீதும், முருகன்மீதும் பாடப்பட்டன. குருஞானசம்பந்தர் சிவன்மீது பாடிய சொக்க நாதக்கலித்துறை வரதுங்கராமபாண்டியர் பாடிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருக்கருவை கலித்துறை அந்தாதி ஆகியவை சிறந்த தோத்திரப் பாடல்களாக விளங்கியுள்ளன. அவை திருவாசகம் போல நெஞ்சை உருக்கும் பாடல்கள் எனக் கூறப்படுகின்றன.

குரு நமசிவாயர் பாடிய அண்ணாமலைவெண்பா, சிதம்பரவெண்பா, பரமரகசியமாலை, நமசிவாயமாலை, சிவசேத்திரக்கோவை வெண்பா போன்றவைகளும் சிவ தோத்திரநூல்களாகக் கொள்ளப்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரர் பாடிய கயிலைக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட் கோவை போன்றவையும் சிறந்த பக்திபாடல்களாகக் கொள்ளப்படுகின்றன. சைவசமய வரலாற்றிலே தாயுமான சுவாமிகள் பாடிய தோத்திரத்திரட்டு அற்புதமானது. "**வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின் பரம்பொருளே நின் விளையாட்டு அன்றோ**" என்று அனைத்துச் சமயங்களிலும் இருக்கும் பரம்பொருள் ஒன்றே என்ற கருத்தைக் காலத்திற்கேற்றவாறு வழங்கி என்றும் உயிர்ப்புடன் இருக்கும் சைவசமயத்திற்கு மேலும் அழகு சேர்க்கின்றார்.

## சிற்றிலக்கியம்

புராணங்கள், காவியங்கள் போன்ற பேரிலக்கியங்கள் படிக்கும் தன்மையை மக்கள் இழந்த நிலையில் அவர்களை ஈர்க்க பிரபந்தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும் சிற்றிலக்கியங்கள் இக்காலத்தில் பல்கிப்பெருகின. எளிய நடையில் மக்களுக்குச் சென்று சேரும் வண்ணம் பாடப்பட்ட நூல்கள் இப்பிரபந்தங்களாகும். அதுவும் குறவஞ்சி, பள்ளு, என்று நாட்டுப்புற மக்களின் மொழியிலேயே சைவசமயச் செய்திகளை இந்நூல்கள் எடுத்தியம்புகின்றன.

திரிகூடராசப்ப கவிராயர் பாடிய திருக்குற்றாலக்குறவஞ்சி அழகான சைவ இலக்கியமாகும். இதைப் போல பள்ளு இலக்கியமும் சைவச் சார்புடன் தோன்றியமைக்கு மாரிமுத்துப்பிள்ளை பாடிய தில்லைப்பள்ளு, சிதம்பரநாதமுனிவர் பாடிய சீகாழிப்பள்ளு, இராமநாத கவிராயர்பாடிய சிவசயிலப்பள்ளு, குற்றாலப்பள்ளு போன்றவைகள் சிறந்த எடுத்துக்காட்டு. இறைவன் உலாவரும் பொழுது பாடப்படும் உலா இலக்கியமும் இக்காலத்தில் பல எழுந்தன. அந்தகக்கவி வீரராகவர் பாடிய திருக்கழுக்குன்ற உலா, திருவாரூர் உலா, திரிகூடராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலநாதர் உலா போன்றவை சைவக்கோயில்களில் எழுந்தளியிருக்கும் சிவபிரானை மையப்படுத்தி எழுந்தவைகள் ஆகும். குமரகுருபரர் பாடிய மதுரை சோமசுந்தரரின் திருவிளையாடல்களைக் கூறும் மதுரைக்கலம்பகம், கயிலைக் கலம்பகம், காசிக்கலம்பகம் வேறு வேறு பா மலர்களைக் கலந்து பாடிய இலக்கியமாகும். சிவஞான முனிவர் குளத்தூர் இறைவன் மீது பாடிய குளத்தூர் பதிற்றுப்பத்தந்தாதி. இளங்காட்டு இறைவன் மீது பாடிய இளசைபதிற்றுப் பத்தந்தாதி , திரிகூடராசப்ப கவியராசரின் குற்றால யமக அந்தாதி போன்ற அந்தாதி இலக்கியங்களும் தோன்றின. இதேபோல கோவை, சதகம், தூது, பிள்ளைத்தமிழ், அம்மானை போன்ற சிற்றிலக்கிய வடிவங்களும் சைவசார்புடன் எழுந்தன.

### சித்தாந்த நூல்கள்

சைவசித்தாந்த சமயத்தின் தத்துவத்தினை எடுத்தியம்பிய சைவசித்தாந்த நூல்களும் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றன. சோழர்காலத்தில் தோன்றிய சித்தாந்த பரம்பரையினரின் தாக்கம். இக்காலத்தில் தோற்றம் பெற்ற ஆதீனங்களில் பெரும் செல்வாக்கினைச் செலுத்தியது. திருவாவடுதுறை ஆதீனத்தால் பண்டாரா சாஸ்திரம் எனும் பதினான்கு சித்தாந்த நூல்கள் உருவாக்கம் பெற்றன. அவற்றுள் 10 நூல்களை அப்பலவாணர் இயற்றியுள்ளார். அவை முறையே அப்பலவாணர் தசகாரியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சிந்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி நிட்டை விளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை என்பனவாகும். 15ஆம் நூற்றாண்டில் ஞானப்பிரகாசர், தசகாரியம், சகலாகம சாரம், சந்தான அகவல், அளவை நூல்கள் உபநிட்டை வெண்பா போன்ற சித்தாந்த விளக்க நூல்களை எழுதினார். 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மறைஞான சம்பந்தர் பதிபசு பாசப் பனுவல், பதிபசு பாசத் தொகை, முக்தி நிலை போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இதே காலத்தில் வாழ்ந்த சிவார்க்கிரகயோகிகளும் சிவநெறிப்பிரகாசம், எனும் அருமையான சித்தாந்த நூலைப் பாடியுள்ளார்.

இக்காலத்தில் 14 மெய்கண்ட சாஸ்திர நூல்களுக்குப் பல உரைகளும் எழுதப்பட்டது என்பதும் குறிப்பிற்பாலது.

| | |
|---|---|
| திருக்களிற்றுப்படியார் உரை | – கண்ணுடையவள்ளல் |
| ஞானாமிர்த உரை | – பெயர் தெரியவில்லை |
| சிவஞானசித்தியார் சுபக்க உரை | – மறைஞான தேசிகர் |
| | – சிவாக்கிரக யோகிகள் |
| சிவஞான சித்தியார் பரபக்க உரை | – திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் , நிரம்ப அழகிய தேசிகர். |
| சிவப்பிரகாச உரை | – நந்தி சிவாக்கிரக யோகிகள், மதுரை ஞானப்பிரகாசர், மதுரை சிவப்பிரகாசர். |
| இருபா இபஃது உரை | – மதுரை சிவப்பிரகாசர். |

## 2.3 சைவ நாயன்மார் மரபு

பல்லவர் கால பத்தி இயக்கத்தின் தலைவர்களாக விளங்கிய நாயன்மார்கள். சோழர்காலத்தில் போற்றத்தக்கவர்களாகப் புனிதத்துவம் பெற்றனர். சுந்தர மூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகை நூலை அடியொற்றி சோழர் காலத்தில் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவந்தாதி பாட, தெய்வச் சேக்கிழார் அடியார்களின் சரிதத்தை பெரிய புராணமாக ஆக்கியதன் பின்பு சோழர்காலச் சைவசமய வளர்ச்சியில் நாயன்மார் வழிபாடு பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து சைவ நாயன்மார்களின் கதைமரபுகள் விஜயநகர நாயக்கர் காலத்து சைவசமய வளர்ச்சியிலும் பெரும் செல்வாக்கைப் பெற்றது.

இக்காலத்தில் வளர்ச்சி பெற்ற வீரசைவர்கள் சிவனைத் தவிர வேறு எந்தெய்வத்தையும் தொழாத அறுபத்து மூன்று நாயன்மார்களை வணங்கியும், அவர்களது அருட்பாடல்களைப் பக்தியோடு பாடியும் போற்றினர். அக்காலத்துச் சமுதாயத்திலும் வேதச் சடங்குகளிலும் சிறந்ததான பக்திமரபை நாயன்மார்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர் என்ற சிந்தனை ஆழமாகப்பதிந்தது. இதனால் வீரசைவர்கள் அறுபத்து மூன்று நாயன்மாரைப் **புராதனர்கள்** என்பர். அவர்களுக்குப் பின் மத்திய காலத்தில் தோன்றிய ஞானிகளை **நூதன புராதனர்கள்** என்று அழைப்பர்.

15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த கடவுள் மாமுனிவர் மாணிக்கவாசகரின் வரலாற்றைக் கூறும் **திருவாதவூரடிகள் புராணத்தைப்** பாடியுள்ளார். 17 ஆம் நூற்றாண்டில் எழுந்த **சோழ மண்டல சதகம்** எனும் நூல் சோழ நாட்டைப் பற்றிக் கூறினாலும் அதன் ஆசிரியர் அப்பர், சம்பந்தர், சண்டேசுவரரர், பூசலார், நீலநக்கர், இளையான் குடிமாறர், மானக்கஞ்சாறர், ஏயர்கோன், கலிக்காமர் போன்ற சிவனடியார்களைப் பற்றியும் கூறியுள்ளார். இதே காலத்தில் சிவப்பிரகாசர் சைவ நாயன்மார்கள் நால்வர் மீது **நால்வர் நான்மணிமாலை** பாடினார். 18ஆம் நூற்றாண்டிலே சிவஞான முனிவர்அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருநாமங்களைத் தொகுத்து **திருத்தொண்டர் திருநாமக் கோவை** என்ற நூலைப் பாடினார். இதேகாலத்தில் வாழ்ந்த சிதம்பரப் பாரதிகள் பெரிய புராணத்தைக் கதாகலாட்சேபத்துக்குரிய தெண்டி, ஸாகி, ஆர்யா, அபங்கு முதலிய மகாராஷ்டிர தாபுகள் அடங்கிய அழகிய மெட்டுக்களால் பெரிய புராணக் கீர்த்தனைக்கு உயிர் ஊட்டினார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் போது நாயன்மார் மரபில் சோழர்கள் தொட்ட விட்ட பணிகளை விஜயநகர நாயக்கர்கள் மேற்கொண்டு சைவ சமயத்தின் வளர்ச்சிப்பாதைக்கு வழிகோலினர் எனக் கூறமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 சைவசமய வழிபாடுகள்

விஜயநகர நாயக்கர் காலத்தில் சைவசமய வழிபாட்டு முறைகளும் சமுதாயத்தினரிடையே செல்வாக்குப் பெற்றிருந்ததது. குறிப்பாக கர்நாடக மக்களின் அன்றாட சமுதாய வாழ்வில் வீரசைவ சமய வழிபாடுகள் பின்னிப் பிணைந்துள்ளன. இவர்கள் லிங்கத்தை வழிபாடு செய்கின்ற லிங்காயத்துக்கள் என கர்நாடகத்தில் அழைக்கப்பட்டனர். அவர்கள் லிங்கத்தை தினமும் வழிபாடு செய்யும் லிங்காசாரம் உள்ளவர்கள். வீரசைவ தீட்சை பெற்று உடலில் லிங்கதாரணை செய்பவர்கள். குரு லிங்க சங்கம வழிபாடு, பாதோதகம், பிரசாதம், பஸ்மம், உருத்திராக்கம், நமசிவாய மந்திரம் எனும் அஷ்டாவரணங்களைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள். ஆடி, ஆவணி மாதங்களில் அவர்களின் மடங்களில் அருளாளர்கள் பற்றிய புராணக்கதைகளைப் படிப்பவர்கள். திருவிழாக்கள், ஊர்வலங்கள், வீடுகளில் வீரசைவ அருளாளர்களின் பாடல்களைப் பாடித் துதிப்பவர்கள்.

மதுரை, தஞ்சை நாயக்கர்கள் சிவன்மீதும் ஏனைய தெய்வங்கள் மீதும் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர் நாயக்கரின் முக்கிய நகரங்கள் சிலவற்றில் சைவத்திருவிழாக்கள் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மதுரையிலே சித்திரைத் திருவிழா, தெப்பத்திருவிழா சிறப்புற நடாத்தப்பட்டன. சுந்தரேசப் பெருமான் நடத்தியதாகக் கூறப்படும் திருவிளையாடல் நிகழ்ச்சிகளால் ஒவ்வொரு மாதமும் மதுரை விழாக் கோலம் பூண்டிருக்கும். இவ்வாறு மதுரை திருவிழா நகரமாக்கிய பெருமை திருமலை நாயக்கர்களையே சேரும். தஞ்சை, சிதம்பரம், திருவாரூர், கும்பகோணம் போன்ற கோயில்களிலும் பௌர்ணமி, பஞ்சபர்வங்கள், சிவராத்திரி, திருவாதிரை போன்ற விழாக்கள் கொண்டாடப்பட்டன.

## 2.5 சைவ சமயத்தில் சிறப்புற்ற அம்மன், முருகன் வழிபாடுகள்

மதுரை நாயக்கர் காலத்தில் சைவசமயத்தில் அம்மன் வழிபாடும் வளர்ச்சி அடைந்தது. குமரகுருபரர், அபிராமிப்பட்டர், போன்ற அம்மன் பக்தர்கள் பலர் தோன்றி அம்பாள் மீது பல பிரபந்தங்களைப் படையலிட்டுப் போற்றி பரவினர். அம்மன் வழிபாட்டுத் தலங்களும் உயர்வு பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் சைவத்தின் உயர்வைப் பறைசாற்றும் தலமாக மதுரை மீனாட்சியம்மன் கோயில் விளங்கியது. சிவனின் புகழையும், அம்மனின் புகழையும், ஒருங்கே சைவ உலகிற்குப் பறைச்சாற்றிய தலமாக அது விளங்குகின்றது. அரசர்களும் இக்கோயிலுக்கு கோபுரங்கள் எழுப்பி, தானங்கள் பலவும் வழங்கியுள்ளனர்.

விஜயநகர நாயக்கர் காலத்தை முருக வழிபாட்டின் மறுமலர்ச்சி காலம் என்று கூறுவோரும் உளர். இக்காலத்தில் கச்சியப்ப சிவாசாரியார் பாடிய கந்தபுராணம் சைவசமய வழிபாட்டில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அது சைவர்களுக்குப் பேரிதிகாசமாக விளங்கியது. திருமுருகன் சிவபிரானின் ஒரம்சமே என்பதும், சிவனாகவே போற்றப்பட வேண்டியவன் என்பதும் கந்தபுராணம் முழுவதிலும் விரவிக் காணப்படும் உட்பொருள்களாகும். அதில் சைவசித்தாந்தக் கருத்துக்களும் செறிந்துகாணப்படுகின்றன. கச்சியப்ப சிவாச்சாரியாரைத் தொடர்ந்து சிவயோக நெறியில் பெருஞ்சித்தி பெற்ற அருணகிரிநாதர் திருமுருகன் ஒருவனையே பாடும் நியமம் கொண்டு பரமபதி விரத நிலை இதுவே என உலகிற்கு உணர்த்தியவர். அவர் முருகப் பெருமான்மீது பாடிய திருப்புகழ் சைவ உலகிற்கு கிடைத்த அருட்கொடையாகும். விஜயநகர நாயக்கர் காலத்திலே ஒரு பக்தி இயக்கத்தை வழிநடாத்த இவருடைய திருப்புகழ்ச் சந்தப் பாடல்கள் வழிகாட்டியாக அமைந்தன. மக்களுக்கு வீரத்தை உணர்த்தும் வகையில் முருகனைப் போர்த் தெய்வமாகக் கொண்டும், சிவனின் தோற்றமாகக் கொண்டும் போற்றிப் பரவினார். மேலும் அவர் பாடிய கந்தர் அந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு. வேல்விருத்தம், மயில் விருத்தம் போன்ற பக்திப் பாடல்களும் முருக வழிபாட்டு எழுச்சி சைவசமயத்துடன் கலப்பதற்கு ஏதுவாக அமைந்தன.

## 2.6 சைவ ஆதீனங்கள்

சைவ சமய வளர்ச்சியில் அடியார்கள், அரசர்களின் பங்களிப்புக்குப் பின்பு சைவத்திருமடங்களின் பங்கு கணிசமானதாக அமைந்தது. விஜயநகர நாயக்கர் காலத்திலே இஸ்லாமியரின் ஆதிக்கத்தால் சமய உணர்வு குன்றிய நிலையில் சைவ ஆதீனங்கள் பல்கிப் பெருகி சைவசமயத்தை கண்ணும் கருத்துமாகக் காத்தன. அக்காலத்தில் தோன்றிய சைவ ஆதீனங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும் பெரிய ஆதீனங்களாகும். இவற்றில் முதலில் தோன்றிய திருவாவடுதுறை ஆதீனம் புலமையால் சிறந்தது. அடுத்துத் தோன்றிய தருமபுர ஆதீனம் தவத்தால் சிறந்தது என்பர். இவ்வாறு சைவ சமயத்தின் உயர்வையும், பெருமதிப்பையும், சைவ உலகறியச் செய்த பெருமை இந்த ஆதீனங்களையே சாரும்.

இக்காலத்தில் தோன்றிய ஆதீனங்கள் சைவத்தையும் அதன் தத்துவத்தையும், தமிழையும் பேணிப் பாதுகாக்கும் காப்பரண்களாக விளங்கின. அந்நியர்களின் ஆதிக்கத்தால் சிதைவடைந்த ஆலயங்களைப் புனரமைத்துக் குடமுழுக்கு கிரியைகள் செய்வதில் ஆதீனங்கள் மும்முரமாக இயங்கின. அவற்றின் வழிபாடுகளைப் பேணவும் சொத்துக்களைப் பாதுகாக்கவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டன. சைவசித்தாந்தத்தை வளர்த்துப் போற்றுவதிலும் ஆர்வம் செலுத்தின. மடங்களின் அதிபதிகள், புலவர்கள் உட்பட பலபேர் சித்தாந்த நூல்கள் பலவற்றை இயற்றினர். சித்தாந்த நூல்கள் பலவற்றுக்கு உரை செய்தனர். இதனால் சைவசித்தாந்தம் இக்காலத்தில் விரிவு நிலை எய்தியது. ஆதினங்கள் பழையநூல்களைக் காத்தல், புதிய நூல்களைப் படைத்தல், சைவப்புலவர்களைக் கௌரவித்தல் போன்ற தொண்டுகளையும் புரிந்து இக்காலத்தில் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியன.

## 2.7 அரசர்கள் வழங்கிய ஆதரவு

விஜயநகர அரசர்கள் சைவசமயத்தைப் பின்பற்றியவர்களாகத் திகழ்ந்தனர் விரூபாட்சர் பெருமானை அவர்கள் குல தெய்வமாகப் போற்றினர். அதே போல காளஹஸ்தி நாதரையும் போற்றினர். இக்காலத்தில் வித்தியாரண்யர் சிறந்த சமய குருவாகப் போற்றப்பட்டார். விஜயநகர இராட்சியம் தோன்றுவதற்கும் அதன் ஆரம்ப கட்ட வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்கினார். அவர் விரூபாட்சரை வழிபட்டார் என அக்கோயிற்ச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. ஹரிஹரர், புக்கர், ஆகிய சகோதரர்கள் இந்து சமயத்திற்து நெருக்கடியை ஏற்படுத்தும் இஸ்லாமிய படையெடுப்பைத் தடுப்பதற்குப் பல தொண்டுகளைப் புரிந்தனர். இவர்கள் இருவரும் பாசுபத சைவக் கொள்கைகளைப் பின்பற்றியவர்களாகவும் விளங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணதேவராயர் வைணவ சமயத்தைப் பின்பற்றினாலும் அவர் சைவசமயத்தை ஆதரிக்காமல் இல்லை. சோழ நாட்டுச் சிவன் கோயில்களுக்குப் பல கொடைகளும், திருப்பணிகளும் புரிந்தார் என சாசனம் சொல்கின்றது. கி.பி 1517 இல் சிதம்பரக் கோயிலின் வடக்குக் கோபுரத்தைக் கட்டியதோடு பொற்காசுகளும் நன்கொடையாக அளித்தார். அவருடைய அரசவையில் திம்மண்ணார், தூர்ஜதி, மல்லண்ணா போன்றவர்கள் சைவப்பிரதானிகளாக இருந்தனர் அவரது அரசசபையை அணிசெய்த ஹரிதாசர் என்பவர் வைணவப் புலவராக இருந்தாலும் சைவம் வைணவம் ஆகிய இரு சமய நெறிகளை விளக்கும் " இருசமய விளக்கம்" என்ற நூலை இயற்றினார் என அறிய முடிகின்றது.

விஜயநகர மன்னரின் அரசப்பிரதானிகளாக கடமை புரிந்த வீரூபண்ண, வீரண்ண என்னும் சகோதரர்களால் லெபாக்ஷியில் வீரபத்திரர் கோயில் நிர்மாணிக்கப்பட்டது. அங்கு சிவனுக்கும் ஓர் சந்நிதானம் அமைக்கப்பட்டது. இக்கோயில் மூலவராகச் சிவனார் விளங்கினார். வீரபத்திரர் தெலுங்கு தேசத்தவரின் வழிபடு தெய்வமாகப் போற்றப்பட்டார்.

விஜய நகர நாயக்கர் காலத்திலே சைவக் கோயில்களும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. அவற்றுள் வேலூர்க் கோட்டையினுள் உள்ள ஜலகண்டேஸ்வரம் தலைசிறந்த சைவக் கோயிலாகும். பாடல் பெற்று சோழ நாட்டில் அமையப் பெற்ற பெருங்கோயில்கள் இக்கால அரசர்களால் புனர் நிர்மாணமும் செய்யப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் அடைந்திருக்கும் பெரியநாயகி அம்மன் கோயிலும் இக்காலத்திலே அமைக்கப்பட்டது. திருப்பரங்குன்றம் எனும் முருகன் கோயிலிலும் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு விஜயநகர மன்னர்களின் பேராதரவுடன் சைவசமயம், ஆலய வழிபாடு, அது தொடர்பான இலக்கியங்கள் என்பன வளர்ச்சியடைந்துள்ளன.

விஜயநகர பேரரசர்களைப் போல் நாயக்கர்களும் சைவ சமய வளர்ச்சிக்குப் பல ஆதரவுகள் புரிந்துள்ளனர் என்பதைச் சாசனங்களும், இலக்கியங்களும் செப்புகின்றன. **திருவாலவாயுடையார் திருப்பணிமாலை** என்ற இலக்கியம் நாயக்க மன்னர்கள் திருவாலவாயுடையானுக்கு அளித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்களையும், எடுப்பித்த கட்டடங்களையும், அங்கு நடைப்பெற்ற வழிபாடுகளையும் பட்டியல் இட்டுக் காட்டுகின்றது. அப்பணிகளின் பகுதிகள் சில மேல்வருமாறு.

"கட்டடங்களாவன ஈசுவரம் (தளி, விமானம்) இந்திர விமானம், நந்திக்கு கோயில், தக்கணன் கோயில், கொடிமரம், கோபுரங்கள், திருத்தேர்கள், தந்தப்பல்லக்குப் போன்ற வாகனங்கள், திருமதிற்சுற்று, திருமதில், பல மண்டபங்கள் என்பனவாகும். நடராசர், உற்சவ மூர்த்திகள், அங்கயற்கண்ணி, அறுபத்து மூவர் நாயன்மார் ஆகியோருக்கும், விழாக்கள் (பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல், எழுகடல் அழைத்தமை, வசந்த விழா) எடுக்கப்பட்டன. ஏனைய மண்டபங்களான: பொற்றாமரைக் குளச்சுற்று, கொடிக்கம்பம், நூறுகால், ஆயிரங்கால், வீரவசந்தம் எனப் பலவாகும். "திருமலை நாயக்கன் சமுத்திரமெனும் தெப்பக்குளம் கண்டனன். அதில் மைய மண்டபமெனும் நீராழி மண்டபம் படைத்தனன்" (பாடல் 80–81) வேங்கடப்ப நாயக்கர் (1586 – 1629 ) , சிவப்பநாயக்கர் (1645 – 1660) போன்றவர்கள் சைவக் கோயில்களுக்குப் பல பணிபுரிந்தனர் என்று **சிவதத்துவரத்னாகரம்** என்ற இலக்கியம் குறிப்பிடுகின்றது. தஞ்சை அச்சுதநாயக்கர் ( 1564– 1590) சிதம்பரக் கோயிலுக்கு கிராமம் ஒன்றைத் தானமாகக் கொடுத்தான் என திருவேட்களச் சாசனம் சொல்கின்றது. நாயக்கரின் அரசவையில் இருந்த அமைச்சர்களும் சைவ இலக்கியங்களை இயற்றினார்கள். மதுரைத் திருமலை நாயக்கரின் அமைச்சரான நீலகண்ட தீட்சதர், சிவலீலார்ணவம், கங்காவதாரணம் என்ற இரு சைவ நூல்களைப் பாடினார். இவற்றில் முதலாவது நூல் சிவனுடைய 64 லீலைகளைப் பற்றி 22 காண்டங்களில் விளக்க, மற்றையது சிவன் மீது பகீதரன் கொண்ட தவக்காட்சியை 8 காண்டங்களில் விளக்குகின்றது.

## கோயில்களும் கலைகளும்

விஜயநகர நாயக்கர் காலத்தில் கோயிற் கலைகளிலும் குறிப்பிடத்தக்க பல வளர்ச்சிகள் ஏற்பட்டன. திராவிடக் கட்டுமானத்தின் பூரணத்துவத்தை இக்காலத்துக் கோயில்கள் காட்டி நிற்கின்றன. மதுரை, தஞ்சை நாயக்கரது ஆட்சிக் காலத்தில் கோயில்களின் கட்டுமானத்தில் புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டன. அவர்கள் புதிய கோயில்களை விரிவு படுத்துவதிலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு படுத்துவதிலும் ஆர்வம் கொண்டனர். மதுரை, சிதம்பரம் போன்ற சைவக் கோயில்கள் இவர்களுடைய காலத்தில் பிரமாண்டமானநிலையை எய்தின. ராசகோபுரங்கள், கலியாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக் கால் மண்டபம், திருச்சுற்றாலைகள், தெப்பக்குளம், யாளித்தூண்கள், குதிரைதூண்கள், கடவுள் படிமம் செதுக்கப்பட்ட தூண்கள் என புதிய கட்டட உறுப்புக்கள் பிரமிக்கும்படியாக நிற்கின்றன. திருமலை நாயக்கர் செய்த பணிகளில் அவனுடைய அரண்மனையும், அவன் வெட்டிய வன்டியூர் தெப்பக் குளமும் உன்னத வெளிப்பாட்டைக் காட்டி நிற்கின்றன.

நாயக்கர் காலத்தைப் பொறுத்தவரையில் கோயில் மண்டபங்கள் எல்லாம் சிற்பக்கலைக் கூடங்களாக விளங்குகின்றன. ஆயிரம்கால் மண்டபம், கலியாண மண்டபம், திருச்சுற்று மாளிகை முதலானவற்றில் அமைந்துள்ள தூண்களிலெல்லாம் பல்லாயிரக் கணக்கான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திருவிளையாடற் புராணம், சிவ புராணம் ஆகியவற்றில் கூறப்படும் கதைகளுக்கு விளக்கமாகப் பல சிற்பங்கள் சிதம்பரம், மதுரை, திருப்பரங்குன்றம், அழகர்மலை, குற்றாலம் முதலான கோயில்களில் கவர்ச்சி மிக்கதாகவும் உயிரோட்டமுள்ளதாகவும் வடிக்கப்பட்டுள்ளன. அத்தகைய சிற்பங்களில் திரிபுராந்தகர், உமாசகித மூர்த்தி, சுகாசனர், காலஹாரமூர்த்தி, நடராஜர், ரிஷபாந்திகர், இலிங்கோத்பவர், இராவண அனுக்கிரக மூர்த்தி, விருஷபவாகனர்,ஏகபாத மூர்த்தி, அர்த்த நாரீஸ்வரர், ஹரிஹர மூர்த்தி, தட்சிணாமூர்த்தி, பிச்சாடனர், உருத்திரன், கஜஹாரமூர்த்தி, கிராதார்ஜுனர். சோமாஸ்கந்தர், முதலிய சிவனுடைய திருவுருவங்கள் அங்கலஷணங்களுடன் மிகுந்த வனப்புடன் விளங்குகின்றன. குறிப்பாக வீரப்ப நாயக்கரும், திருமலை நாயக்கரும், மதுரை நாயக்கரும், சிற்பக்கலையை ஆதரிப்பதில் முன்னிலையில் நின்று உழைத்தவர்கள் ஆவர். இவர்களுடைய காலத்தில் கோயில்களில் சிற்பக்கலை மேன்மேலும் சிறப்புப் பெற்றது என்பது கூறத்தக்கது.

விஜய நகர நாயக்கர் காலத்தில் ஓவியக்கலை குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டது. சிதம்பரம், மதுரை, குற்றாலம் காளஹஸ்தி, திருவாரூர், திருவொற்றியூர், முதலான கோயில்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் கவர்ச்சி மிக்கவை, சிலதனிப்பண்புகளைக் கொண்டவை. புராண இதிகாசக் கதை மரபுகளை விளக்குபவை சிதம்பரத்தின் மகாமண்டபத்தின் முகட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானத்திலே நடராஜர், சிவகாமசுந்தரி, சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகள், சிவன் பிஷாடனர் கோலம் எடுத்த கதைகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. மதுரை, தஞ்சாவூர் கோயில்களில் நாயக்கர்களின் காலத்து ஓவியங்கள் பல காணப்படுகின்றன. குறிப்பாக விசயரங்கச் சொக்கநாதர், திருமலைநாயக்கர், இராணி மங்கம்மாள், முதலானோர் ஓவியக்கலையின் உயர்ச்சிக்குப் பாடுபட்டுள்ளனர்.

விஜய நகர பேரரசர்களைப் போல நாயக்க மன்னர்களும் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், ஆகிய கலைகளின் விருத்திக்கும் ஆதரவு புரிந்தார்கள் இவர்களுடைய காலத்தில் பல நடனங்கள் நிலவி வந்துள்ளன என்பதைப் பல மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியச் செய்திகள் மூலமாக அறிய முடிகின்றது. விஜயநகரத்து அரசனான குமாரகம்பணன் நடனமாதரை ஆதரித்தான் என்று அவனுடைய மனைவியாகிய கங்காதேவி எழுதிய மதுராவிஜயத்திலே கூறப்படுகின்றது. கோயில்களில் நடனமாந்தர் தங்கியிருந்து விழாக்கள், கிரியைகளின்போதும் நடனமாடி, நிலமானியங்களை இக்காலத்து அரசர்களிடமிருந்து பெற்றார்கள் என தகல் எனுமிடத்திலுள்ள சாசனம் ஒன்று குறிப்பிடுகின்றது. அது மட்டுமன்றி நாட்டிய சாஸ்திரங்களை எழுதியவர்களுக்கும், நடனக்கலை போதிக்கும் ஆசான்களுக்கும், அவர்களின் ஆதரவு கிடைத்தது. தஞ்சை மராட்டியரின் காலத்திலும் நாட்டிய கலைகள் தோற்றம் பெற்றன விஜயநகர ராயர்களும், நாயக்க மன்னர்களும் இந்து சமயத்திற்கும், தமிழ்மொழிக்கும், கோயில்களுக்கும், அவற்றோடு தொடர்புடைய கலைகளுக்கும் ஆதரவு நல்கி, சைவசமயத்தின் வளர்ச்சிக்கு, உறுதுணையாக விளங்கினர்.

## துணை நூல்கள்


இராசமாணிக்கனார். மா. — **சைவசமய வளர்ச்சி**
சென்னை பாரி நிலையம் 1972. பக். 180–197

தங்கவேலு—கோ — **இந்திய வரலாறு**
ஏஷியன் பிரிண்டர்ஸ் சென்னை– 2003
(மூன்றாம் பதிப்பு) பக்– 309– 414

சுப்பிரமணியன்.ந — **தமிழக வரலாறு**
என்னெசு பப்ளிகேசன்– மதுரை– 1987
பக் 67–130




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகாரே. க. வா — **சைவ தத்துவம்**
அல்லயன்ஸ் சென்னை– 2001
(இரண்டாம் பதிப்பு) பக். 119– 335

முருகேசமுதலியார். நல். — **வீரசைவமும் சைவமும்**
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்–
சென்னை 1987 பக். 30–47

சிவப்பிரகாச சுவாமி — **பிரிவுலிங்கலீலை**
தர்மகர்த்தத்துவ வெளியீடு– 1934

பரமசாமி.சோ — **வீரசைவமரபியல்**
திரு நெறிய தமிழ் மறைக்கழகம்–
இணுவில் – 1995

செல்வம்.வே.தி — **தமிழக வரலாறு பண்பாடும்**
சென்னை – 2000( மூன்றாம் பதிப்பு)
பக். 354–357

நீலகண்டசாஸ்திரிK.A — **தென்னிந்திய வரலாறு இலங்கை– 1996**
பக். 433–455

பூவை கல்யாண சுந்தரமுதலியார் — **தாயுமானவர்பாடல்கள் உரையுடன்**
சென்னை–18, 2001

இராஜ சேகரன்– இரா — **சைவப் பெருவெளியில் காலம்**
நர்மதா வெளியீடு– சென்னை– 2006
பக் 73–119

புலியூர்க் கேசிகன் — **திருக்குற்றாலக் குறவஞ்சி – 1960**

மாதவன். வே. இரா — **தமிழில் தல புராணங்கள்– 1995**

MahadevanT.M.P. — Outlines of Hinduism- 1956

Arunachalam.M — "The Saivagamas" - 1983

பேராசிரியர் பத்மநாதன்.சி — **இந்து கலாசாராம்**
**கோயில்களும் கலைகளும்** இந்து சமய
கலாசார அலுவல்கள் திணைக்களம்– 2001

சேதுராமன்.மு. — **தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டு கலை வரலாறு** மதுரை – து.து பப்பிளிகேஷன்ஸ் –
2001

Nilakanta Sastri. K.A — **A History of South India Madras:**
Oxford University Press - 1958




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசய நகரப் பேரரசு கால வைணவ ஆசாரியர் மரபு

பேராசிரியர். சு. வேங்கடராமன்

## முன்னுரை

விசய நகர நாயக்கர் பேரரசு கால வைணவ ஆசாரியர் மரபு பற்றி அறிவது இக்கட்டுரையின் நோக்கம். இப்பேரரசு காலத்தில் வாழ்ந்து, சமயப் பணிகள் செய்த வைணவ ஆசாரியர்களைப் பற்றி வைணவ உரைகள், குருபரம்பரை நூல்கள், பிற வரலாற்றுச் சான்றுகள் மூலம் நாம் அறிகிறோம். வரலாற்றுச் சான்றுகள் என்பதில் கல்வெட்டு, மெய்கீர்த்தி ஆகியன அடங்கும். குருபரம்பரை நூல் வைணவ ஆழ்வார்கள், ஆசாரியர்கள் ஆகியோர் வாழ்க்கை வரலாற்றை கூறுவன. இவை பெரும்பாலும் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள உரைநடையில் எழுதப்பட்டவை. ஒரு சில செய்யுள் நடையில் அமைந்தவை. திருவரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் நடைமுறைகளையும் பல்வேறு காலங்களில் அங்கு செய்யப்பட்ட திருப்பணிகளையும் கூறுவது கோயில் ஒழுகு நூல். வைணவத்தில் கோயில் என்பது திருவரங்கத்தைக் குறிக்கும். இதுபோலத் திருமலை ஒழுகு நூலும் உள்ளது. இவை இரண்டும் ஒரு வகையில் வரலாற்று நூல்கள். இவை தவிர வேறு சில இலக்கிய நூல்களிலும் வைணவ ஆசாரியர்கள் பற்றி நாம் அறிகிறோம். எனவே, இச்சான்றுகள் அனைத்தையும் அடிப்படைத் தரவுகளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

ஆசாரியர் என்ற சொல் வடமொழிச் சொல், சமயத் துறையில் குருவாக விளங்குபவரை இது குறிக்கும். மனித உயிரை இறைவனிடம் நெறிப்படுத்தும் பணியைச் செய்பவர் குரு. பொதுவாக வைணவம், சைவம் என்ற எல்லாச் சமயங்களும் குருவைத் தெய்வமாகப் போற்றுவன. குருவே தெய்வம் எனவும், இறைவனே குருவாக வந்து உயிர்களுக்கு அருளுகிறான் என்றும் இச்சமயங்கள் கூறுகின்றன. 'பீதக ஆடை பிரானார் பிரம குருவாக வந்து' என்று பெரியாழ்வார் பாடுகிறார் (பெரியாழ். திருமொழி 5.2.8). இவர் காலம் தொட்டுத் தமிழக வைணவ மரபில் இறைவனே குருவாக வருபவன் என்ற கருத்தாக்கம் இருந்து வருவதை அறியலாம். அதே போல, நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கொண்டு மதுரகவியாழ்வார் பாடல்கள் பாடினார். 'தேவு மற்றறியேன் தென் குரு கூர் நம்பி' என்பது அவர் பாடல் (மதுரகவி, கண்ணிநுண் சிறுத்தாம்பு, பாடல் 2). இந்த அடிப்படையில் தான் வைணவத்தில், கடவுளை விடவும் கடவுள் அடியாரான பாகவதன் – ஆசாரியன் மிக உயர்ந்தவன் என்று கொண்டாடும் மரபு ஏற்பட்டது.

இவ்வாறு வைணவத்தில் ஆசாரியனை மிக உயர்ந்த நிலையில் போற்றும் மரபு ஏற்பட்டது. மறுதலையில் ஆசாரியரும் தன் சீடர்கள், பிற மக்கள் நலனுக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்ததை வைணவ நூல்கள் வழி அறிகிறோம். வைணவ சமயத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பெரும் பணிக்காகத் தாங்கள் பிறவி எடுத்ததாக எண்ணி, அப்படியே இவர்கள் வாழ்ந்தனர். இந்த அடிப்படைகளைப் புரிந்து கொண்டால்தான் இந்த மரபை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசாரிய மரபின் தோற்றம்

ஆழ்வார்கள் பன்னிருவரும் கி.பி. 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு முடிய தமிழ் நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து, திருமாலைப் பரம்பொருளாகப் பாடிப் பாடல்களை இயற்றினர். பின்னர் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் நாதமுனிகள் இப்பாடல்களை நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத் தொகுத்தார். அனைத்தையும் ஒரு சேர முழுமையாகத் தொகுத்து, அவைகளைத் திருக்கோயில்களிற் பாடும் மரபை இவர் ஏற்படுத்தினார்.[1] எனவே இவரிடமிருந்து ஆசாரிய மரபு சமயப்பணி செய்யும் மரபு – அடுத்த தலைமுறைக்கு இவற்றை எடுத்துச் சொல்லும் மரபு உருவானது. ஆனால், நம்மாழ்வாரைத் தெய்வமாக – குருவாக – கொண்டாடும் மரபு மதுரகவியாழ்வாரால் தோற்றுவிக்கப்பட்டது. எனவே, வைணவ ஆசாரிய மரபு நம்மாழ்வார், நாதமுனி என்று பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது.

பொதுவாகச் சைவம், வைணவம் ஆகிய அனைத்துச் சமயங்களிலும் குரு மரபைத் தம்முடைய பரம்பொருளான கடவுளரிடமிருந்து தொடங்கி வழிவழியாகப் பூமியில் தோன்றிய அருளாளர், ஆசாரியர் மரபுகளோடு இணைத்துச் சொல்லுவர். இந்த அடிப்படையில் வைணவத்திலும் பரமபத நாதனான திருமாலிடமிருந்து தொடங்கி, நம்மாழ்வார், நாதமுனி என குரு பரம்பரையைக் கூறுவர். நம்மாழ்வார் விண்ணையும் மண்ணையும் இணைக்கும் ஆசாரியராக இதில் அமைகிறார். நாதமுனிகள் தொடங்கி ஆசாரிய மரபு அமைகிறது. அவருக்குப்பின் அவர் பேரரான ஆளவந்தார் (யாமுனாசாரியார்), இராமாநுசர் என இப்பரம்பரை அமைந்தது.

## நாதமுனிகள்

இவர் திவ்யப் பிரபந்த பாசுரங்களைத் தொகுத்து, பண்ணமைத்துப் பரவச் செய்தார். பண்ணோடு ஆழ்வார்களாற் பாடப்பட்டு, இடையில் சில காலம் தொடர்புவிட்டுப் போன பாடல்களை மீண்டும் அதே பண்முறையில் பாடும் மரபை இவர் ஏற்படுத்தினார். திருக்கோயில்களில் ஆழ்வார் பாடல்களைப் பாடும் மரபை இவர் உருவாக்கினார். வடமொழி வேதம் ஓதும் அதே மரபில் தமிழ் வேதமான இப்பாசுரங்களை ஓதும் மரபு இவரால் உருவாக்கப்பட்டது. இந்த மரபு, குழுப்பாடல் – கோஷ்டி சேவை (கோஷ்டி – குழு; கூட்டம்) எனப்பட்டது. இப்பாசுரங்களை இசையோடு பாடி அபிநயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து நடிக்கும் நிகழ்த்து கலை மரபான அரையர் சேவை இவரால் தோற்றுவிக்கப்பட்டது.[2] எனவே இயல், இசை, நாடக வடிவில் ஆழ்வார் பாசுரங்கள் நாடெங்கும் பரவ இவர் பணி செய்தார்.

## ஆளவந்தார்

இவர் காலம் 10 ஆம் நூற்றாண்டின் பின்பகுதி, 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் காலம் முதல் வைணவம் திருவரங்கத்தைத் தலைமை இடமாகக் கொண்டு செயற்பட்டது. இந்த மரபு விசய நகரப் பேரரசு காலத்தில் மணவாள மாமுனிகள் காலம் வரை மிகச் செழிப்பாக இருந்தது. இன்றும் அது தொடருகிறது. இவர் ஆசாரியப் பணியை முழுமையாகவும் திறம்படவும் செய்தார். இவர் உருவாக்கிய ஆறு சீடர்கள் பின்னர் ஆசாரியர்களாகி இராமநுசருக்குப் பாடம் சொன்னார்கள். ஆளவந்தார் தமிழ், வடமொழிப் புலமையாளர். நூல் எழுதுவது, மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவது, பொது மக்களுக்குப் பிரபந்த விளக்கம் கூறுவது, சமய வாழ்விற்கு ஆசாரியராக இருந்து சடங்குகள் நடத்துவது ஆகிய சமயப் பணிகளைச் செய்தார். இவர் காலத்தில், ஓரளவிற்குத் திட்டமிட்ட நிறுவன சமயமாக வைணவம் உருப்பெற்றது. எனவே, சரியான முறையில் பீடாதிபதியாக ஆசாரியராக இவர் மரபை உருவாக்கினார். விசிட்டாத்துவைதக் கோட்பாடுகளை அடிப்படை நிலையில் இவர் வெளிப்படுத்தினார். ஆனால், அப்பெயரையோ, அதை ஒரு கோட்பாடாகவோ, இவர் சொல்லவில்லை. இவர்தான் தமிழ் நாட்டு இலக்கிய மரபில் முதன்முதலாக வடமொழி பகவத் கீதைக்கு உரை எழுதினார். 'கீதார்த்த சங்கிரகம்' (கீதையின் பொருட் சுருக்கம் என்பது இதன் பொருள். சங்கிரகம் – சுருக்கம்) என்பது அவ்வுரையின் பெயர். இராமாநுசர் இவரைத் தொடர்ந்து கீதைப் பேருரை (கீதா பாஷ்யம்) எழுதினார்.

## இராமாநுசர்

இவருடைய காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. 120 ஆண்டுகள் வாழ்ந்து வைணவத்தை வளர்த்தவர். வைணவ ஆசாரியர்களுள் தலைமையானவர். விசிட்டாத்துவைதக் கோட்பாட்டை நெறிப்படுத்தி இந்தியா முழுவதிலும் பரப்பியவர். மிகச் சிறந்த கல்வியாளர். வடமொழியில் கீதைப் பேருரை, பிரம்ம சூத்திர உரை ஆகிய உரைகள் எழுதினார். கத்ய திரயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வடமொழி தோத்திர நூல்களையும் எழுதியவர். திவ்யப்பிரபந்த விளக்க உரைகள் நிகழ்த்தியவர். தம் மாணவர் திருக்குருகைப்பிரான் பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி உரை எழுதச் செய்தார். இதன் மூலம் வைணவ ஆசாரியர்கள் உரை எழுதும் மரபைத் தோற்றுவித்தார்.

திருவரங்கம் கோயில் நடைமுறைகளைத் திருத்தி அமைத்து, அனைத்துச் சாதியினரும் கோயிற் பணிகளில் பங்கேற்க வழி செய்தார். கோயில் விழாக்கள், வழிபாட்டு மரபுகளைத் திருத்தி அமைத்தார். திருக்கோயிலில் நாள்தோறும் வழிபாட்டில் கருவறையில் ஆழ்வார்களின் தமிழ்ப் பாசுரங்கள் பாடும் மரபை நடைமுறைப்படுத்தினார். இது 'நித்யானுசந்தானம்' (நாளும் பாடுவது) எனப்படும். மிகச் சிறந்த மாணவர்களான கூரத்தாழ்வார், எம்பார், பட்டர், முதலியாண்டான் ஆகியோரை உருவாக்கி அடுத்த தலைமுறையை மிகச் சிறந்த முறையில் விட்டுச் சென்றார். நாடெங்கும் 74 வைணவ பீடங்களை நிறுவி, தம் சீடர்களை அங்கு ஆசாரியர்கள் ஆக்கினார்.

மடம், பீடம் இவைகளுக்குக் கட்டுப்பட்டதாக வைணவத் திருக்கோயில்களைச் சீரமைத்து, ஆசாரியர்கள், கோயில் நிருவாகத்தைத் தலைமை ஏற்று நடத்த வழி செய்தார். கோயில்களில் பயணிகளுக்கும் பொது மக்களுக்கும் உணவளிக்கும் உணவுக் கூடங்கள் (இவருக்குப் பின்னால் இராமாநுசக் கூடங்கள் என இவர் பெயராலே வழங்கப்பட்டன), மருத்துவ சாலைகள் ஆகியவற்றை ஏற்படுத்தினார். ஆசைப்பட்டு வந்த அனைவருக்கும் சமயக் கல்வி கற்பித்தார். ஆக, சீடர்களுக்கும் பிறருக்கும் சமயக் கல்வி கற்பித்தல், உரை எழுதுதல், திவ்வியப்பிரபந்த விளக்க உரை சொல்லுதல், கோயில் நிருவாகம் செய்தல் என்பன வைணவ ஆசாரியர்களின் பணி என நெறிப்படுத்தி, தானே வாழ்ந்து காட்டினார்.[3]

இராமாநுசருக்குப் பிறகு எம்பார், கூரத்தாழ்வான், ஆகியோர் ஆசாரியர் ஆயினர். இராமாநுசர் காலத்திலேயே அவர் மாணவர் பலரும் பீடங்களின் தலைவர்களாயினர். இந்த வகையில் திருவரங்கத்தமுதனார் முதலியாண்டான், அனந்தாழ்வான் போன்ற பலர் அமைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாநுசருக்குப் பிறகு வந்த வைணவ ஆசாரியர்கள் பலரும் ஆழ்வார் பாசுரங்கள், ஆளவந்தார் இராமாநுசர் போன்றோர் பாடிய வடமொழி, தமிழ்ப் பாடல்கள், தத்துவ நூல்கள் ஆகியவைகளுக்கு உரை எழுதும் மரபை உருவாக்கினர்.[4] இந்த மரபு இராமாநுசரின் விருப்பப்படி, அவர் மாணவரால் முதன் முறையாகத் தொடங்கப்பட்டது என்று மேலே பார்த்தோம். திருக்குருகைப்பிரான் பிள்ளான், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர், பிள்ளை லோகாச்சாரியார், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், திருவாய்மொழிப் பிள்ளை, மணவாள மாமுனிகள் என்று வைணவ உரைநூல் செய்த ஆசாரியர் மரபு அமைகிறது. இவர்களில் திருவாய்மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள் ஆகிய இருவர் விசயநகர நாயக்கர் பேரரசு கால ஆசாரியர்கள். இவர்கள் இருவரின் பணி குறித்து இக்கட்டுரையில் விரிவாக அறிய உள்ளோம்.

## வைணவம் – வரலாற்றுப் பின்புலம்

தொல்காப்பியம், சங்க இலக்கிய காலத்தில் முல்லை நில இனக்குழு மக்களின் வழிபடு தெய்வமாகத் திருமால் போற்றப்பட்டான். பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகார காலத்தில் தமிழ் முல்லைநில மாயோன் மரபும் வடநாட்டுக் கண்ணன் – விஷ்ணு வழிபாட்டு மரபும் கலந்தன. தமிழ் மரபில் முதன் முதலாகப் பரிபாடலில்தான் உணர்ச்சிமயமான பக்தி மரபையும் குறிப்பிட்ட தலத்துக் கோயிலிலுள்ள திருமாலை வழிபடும் மரபையும் ஒன்றிணைத்துப் புதிய சமய நெறி உருவாவதைக் காண்கின்றோம். சிலப்பதிகாரம் இதை வளர்த்து, உருவாக்கியது. ஆழ்வார்கள் இதைப் பக்தி இயக்கமாக வளர்த்தனர். இந்த உணர்ச்சி மயமான பக்திப் பாடல் மரபை ஆளவந்தார், இராமாநுசர், பின்வந்த ஆசாரிய உரையாசிரியர்கள் ஆகியோர் நிறுவன சமய அடிப்படையில், விசிட்டாத்துவைத தத்துவ விளக்கமாக இவைகளுக்கு உரை எழுதினர். இவ்வாறு வைணவ சமயம் படிப்படியாக வளர்ச்சி பெற்றதில், ஆசாரியர்களின் பங்கு அளவிடற்கரியது.

தொடக்க நிலையில், ஆசாரிய பீடங்கள் உருவாகும் வரை, வைணவ சமய மரபுகள் மிக இறுக்கமாகச் சாதிக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. நம்மாழ்வார் பாடல்களை ஏற்றுக் கொள்ள மரபுவாதிகளுக்கு அவருடைய சாதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையாக இருந்தது.[5] அதேபோல, இராமாநுசர் திருவரங்கக் கோயிலில் அனைத்துச் சாதியினரையும் கோயிற் பணிகளில் பங்கு பெறச் செய்தபோது, அவர் கடும் எதிர்ப்பைச் சந்தித்தார். இதை அவர் வாழ்க்கை வரலாறு காட்டுகிறது.[6] மரபுவாதிகள் அவரை அன்றைய சோழப் பேரரசின் உதவியோடு சோழநாட்டை விட்டுத் துரத்தும் அளவிற்குச் சென்றது. சாதி அடிப்படையிலான இந்தப் பார்வை நீறுபூத்த நெருப்பாக இருந்து, 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகளாக வைணவம் பிரியும் அளவிற்குச் சென்றது. இக்கால கட்டத்தில் பிள்ளை லோகாச்சாரியார் தென்கலை மரபையும், வேதாந்ததேசிகர் வடகலை மரபையும் முதன்மைப்படுத்தி, கருத்துப் போர் புரிந்தனர்.

இரு மரபினரும் தத்தம் கருத்துக்களைத் தத்துவ விளக்கங்களோடு நூல்களாக எழுதினர். நம்மாழ்வாரின் சாதி, அவர் பாடிய அகப்பொருள் மரபு; தமிழ் ஆகியவற்றைக் குறைத்துப்பேசிய மரபுவாதிகளுக்கு விளக்கம் சொல்லுமாறு பிள்ளைலோகாச்சாரியரின் தம்பி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் **ஆசாரிய ஹிருதயம்** என்ற நூலை எழுதினார்.[7] மணவாள மாமுனிகள் இதற்கு உரை எழுதினார். தமிழ் வைணவ மரபையும் ஆசாரியர்களின் பணிகளையும் அறிந்து கொள்ளுதற்கு இந்த வரலாற்றுப் பின்புலம் துணை செய்யும்.

## விசயநகர, நாயக்கர் கால வைணவ ஆசாரியர்கள்

விசய நகரப் பேரரசு நேரடியாகவும், மதுரை, திருச்சி, தஞ்சை நாயக்கர் ஆட்சிக்காலமாகவும் தமிழகத்தை ஆண்டது. இம்மன்னர்கள் வைணவத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும் சைவம், வைணவம் இரண்டையும் அரசு சமயமாகப் பேணி ஆதரவு அளித்தனர். எனவே இவர்கள் காலத்தில், திருக்கோயில்களும் மடங்களும் அரசு நிதி உதவி பெற்றுச் செழித்தன. இக்காலத்தில் இருந்த வைணவ ஆசாரியர்களை இரு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கலாம். ஆசாரியர்களாகப் பீடங்களில் இருந்து உரை, மூலநூல் போன்ற நூல் எழுதும் பணி செய்தவர்கள் ஒரு வகையினர். இந்த மரபில் இக்கால கட்டத்தில், திருவாய்மொழிப் பிள்ளை, மணவாள மாமுனிகள், ஆகிய இருவர் அமைகின்றனர். மற்றொரு பிரிவினர் நூலாக்கம் எதுவும் செய்யாமல் சமயப்பணி செய்து வந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாய்மொழிப் பிள்ளை

இவர் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு. இவர் பெரியாழ்வாரின் திருமொழிக்கு உரை எழுதினார். மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் சமயக் கல்வி கற்பிப்பதை வாழ்நாள் பணியாகச் செய்து வந்தார். திவ்யப் பிரபந்த விளக்க உரைசொல்லுதல், தத்துவ நூல்களைக் கற்பித்தல், கோயில் நிருவாகம் செய்தல் ஆகிய சமயப் பணிகளை இவர் செய்தார்.

## மணவாள மாமுனிகள்

இவர் திருவாய்மொழிப் பிள்ளையின் மாணவர். ஆழ்வார் திருநகரியில் கி.பி. 1370–இல் பிறந்தவர். திருவரங்கத்தைத் தன்னுடைய வாழிடமாகக் கொண்டவர். திருவாய்மொழி உள்ளிட்ட ஆழ்வார் பாசுரங்களை ஆராய்ந்த வண்ணம் கோயிலில் (திருவரங்கத்தில்) நிலையாக வாழ வேண்டும் என்று இவருடைய ஆசாரியர் கூறியபடி வாழ்ந்தார்.[8] இதனை, 'முன்னை நம் குரவர் மொழி முழுதும் நமக்குப் பொழுது போக்காகப் பெற்றோம்... திருவரங்கத் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்' என்ற இவருடைய பாடலால் உறுதி செய்யலாம்.

திருவரங்க ஆசாரிய பீடத்தின் தலைவராக விளங்கினார். அன்றைய விசயநகர அரசின் உதவியோடு பல வைணவத் திருப்பதிகளைப் புதுப்பித்துத் திருப்பணி செய்தார் என அறிகிறோம். மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் சமய நூல்களைக் கற்பித்து வந்தார். நாலாயிரத் திவ்யப் பிரபந்த விளக்க உரை சொல்லுவதில் வல்லவர். திருவாய்மொழிக்கு நம்பிள்ளை எழுதிய ஈடு முப்பத்தாறாயிரப்படி உரையை ஓராண்டு முழுவதும் திருவரங்கக் கோயிலில் விளக்கமாகச் சொன்னார். நிறைவு நாளில் திருவரங்க இறைவனே, ஒரு சிறுவனாக வந்து இவர் பணியைப் பாராட்டித் 'தனியன்' ஒன்று சொல்லி (தனியன் – தனியாக இருப்பது, வடமொழி தமிழ் இரண்டிலும், நூலையோ, நூலாசிரியரையோ சிறப்பித்துப் பாடும் பாடல்) மறைந்தான் எனக் கூறுவர்.[9] இதனால் இவருக்கு 'ஈடு முப்பத்தாறாயிரப் பெருக்கர்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது.

திருமெய்யம் (திருமயம்) கோயிலிலும் இதே உரையை நிகழ்த்தினார் என அறிகிறோம். இவர் இராமநுசருக்குப் பிறகு பெரும் புகழ் பெற்ற ஆசாரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாநுசரைப் போல இவரும் பொருளாதார, சாதி, பால் வேறுபாடின்றி அனைவரையும் தம் பணிகளில் ஈடுபடுத்தி வைணவத்தை அனைவருக்கும் உரிய சமயமாக ஆக்கினார். அன்றைய சமூக அமைப்பில், சாதி வேறுபாடுகள் மிகுந்திருந்த சூழலில் அவருடைய இந்தச் செயற்பாடு அனைவருக்கும் உகப்பைத் தந்திருக்கும். அவர் உரையாசிரியராகவும் தமிழ், வடமொழி இரண்டிலும் நூல் செய்த படைப்பாளராகவும் விளங்கினார்.

இவர் பிள்ளை லோகாசாரியார் எழுதிய தத்துவ திரயம், முமூட்சுப்படி, ஸ்ரீவசனபூஷணம், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் எழுதிய ஆசாரிய ஹிருதயம் ஆகிய தத்துவ நூல்களுக்கு உரை எழுதினார். இராமாநுச நூற்றந்தாதி, ஞான சாரம், பிரமேயசாரம் ஆகிய நூல்களுக்கு விளக்க உரை எழுதினார். திருவாய்மொழி நூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை, ஆர்த்தி பிரபந்தம் ஆகிய கவிதை நூல்களை இயற்றினார். அடியார்கள் நாளும் வழிபாடு செய்யும் பூசைவிதிகளைக் கூறும் பகவதாராதன கிரமம் என்ற நூலை எழுதினார். தத்துவ திரய பிராமாணத் திரட்டு, ஈட்டு பிராமணத் திரட்டு ஆகிய இரண்டு தொகுப்பு நூல்களைச் செய்தார். எதிராஜ விம்சதி என்னும் வடமொழிக் கவிதை நூலை எழுதினார். இவர் காலத்தில், கிடைக்காமல் போன பெரியவாச்சான்பிள்ளையின் பெரியாழ்வார் திருமொழி முதல் நான்கு பத்துகளுக்கு இவர் புதிதாக உரை எழுதினார். இவை யாவும் இவருடைய எழுத்துப் பணிகள்.

கோயில் நிருவாகம், பிற கோயில் திருப்பணி, சமயக் கல்வி, விளக்க உரை சொல்லுதல், இராமாநுச கூடம் (அனைவருக்கும் உணவு தரும் இடம்), நந்தவனம் பராமரிப்பு என்று இவருடைய சமயப் பணிகள் அமைந்தன. இராமாநுசரிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். மிக எளிமையான துறவு வாழ்க்கை வாழ்ந்தவர். இவருடைய சிறப்புக்களை அறிந்து வைணவ உலகம் இவரை, 'மணவாள மாமுனியே இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்' என இன்றும் வாழ்த்துகிறது.

## பிற ஆசாரியர்கள்

இந்த இரண்டாம் வகை வைணவ ஆசாரியர்கள் எழுத்துப் பணியாக உரையோ மூல நூலோ எதுவும் செய்யாமல் சமயப்பணியாளர்களாக மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினர்.[10] இவர்கள், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர் போன்ற விசய நகர நாயக்கர் பேரரசு கால அளவில் வாழ்ந்து சமயப்பணி செய்தவர்கள். வியாச தீர்த்தர், நாராயண ஜீயர் (அகோபில மடம்), வண் சடகோப ஜீயர் (திருப்பதி) ஆகியோர் பற்றி வரலாற்றுச் சான்றுகளால் அறிகிறோம். கந்தாடை வேதாந்தாசாரியார், யதிராஜ ஜீயர், வேதாந்த சடகோப ஜீயர் ஆகியோர் வடகலை மரபு சார்ந்தவர்கள். திருமலை இராமாநுச கூட மேலாளராக நிருவாகப் பொறுப்பைப் பார்த்துவந்த கந்தாடை மாதவ ஐய்யங்கார் பற்றியும் அறிகிறோம். சதாசிவ ராயர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1537–1576) எதிராஜ ஜீயர் திருமலையில் இருந்தவர். இவரும் வானமாமலை ஜீயர் என்பவரும் திருமலையில் கோயில் நிருவாகத்தைச் செய்தனர். இவர்கள் இருவரும் முறையே பெரிய கேள்வி, சிறிய கேள்வி என அழைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் தென்கலை மரபு பீடாதிபதிகளாவர்.

வேதாந்த சடகோப ஜீயர் இக்காலத்தின் அகோபில மடத் தலைவராவார். இவர் வடகலை மரபினர். நாயக்கர் பேரரசின் நந்தியாலா மரபு அரசர்களுடைய குலகுருவாக இவர் விளங்கினார். இவர் அந்த வம்ச அரசர்களின் சமயப் பணிகளுக்கு வழிகாட்டி வந்தார். கி.பி. 19 ஆம் நூற்றாண்டு வரை இந்த மடம் அகோபிலத்தில் இருந்தது. பின்னர், ஆசாரியர்கள் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து சமயப்பணி செய்வதற்கு ஏற்றவாறு திருவள்ளூருக்கு இந்த மடம் இடம் பெயர்ந்தது.

கந்தாடையப்பன் (ஆளவந்தார் கந்தாடை அப்பகாரு எனவும் இவர் அறியப்படுகிறார்) தென்கலை மரபின் ஆசாரியர். இவரும் சதாசிவர் கால வரலாற்றில் அறியப்படுகிறார். வடமொழி வேத, உபநிடத, இராமாநுசர் எழுதிய ஸ்ரீபாஷ்ய உரை ஆகியவற்றைப் பாடஞ் சொல்லுவதில் இவர் வல்லவர். திவ்யப் பிரபந்த விளக்க உரை ஆகியவற்றைப் பாடஞ் சொல்லுவதில் இவர் வல்லவர். திவ்யப் பிரபந்த விளக்க உரை சொல்லுவதிலும் இவர் சிறந்து விளங்கினார். 'பாண்டுரங்க மகாத்மியம்' என்னும் தெலுங்குக் காப்பியம் எழுதிய தெனாலி இராமகிருஷ்ண கவி இவரைத் தன் குருவாக அதில் குறிப்பிடுகின்றார். அதேபோல 'விப்ர நாராயண சரித்திரமு' என்றும் தெலுங்குக் காப்பியம் எழுதிய சாரங்க தம்மையாவும் இவரைத் தம் குருவாக அந்த நூலில் குறிப்பிடுகிறார் (இந்த நூல் வைஜெயந்தி விலாசமு எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருடையது). இராமாநுசர் உருவாக்கிய 74 பீடாதிபதிகளில் ஒருவர் கோயில் கந்தாடையண்ணன். இந்த மரபில் வந்தவர்கள் தம் பெயரின் முன்னால் கந்தாடை என்பதைச் சேர்த்துக் கொண்டனர். கந்தலான உடை அணிந்தவர் – எளிமையான துறவி என்ற பொருளில் தொடக்க நிலையில் இது பயன்பட்டிருக்கும்.

அகோபில மடத்தின் குரு மரபு – ஆசாரிய பரம்பரை – பற்றிய குரு பரம்பரை நூல் ஒன்று ஏட்டுச் சுவடியாக இருந்ததை அறிகிறோம். ஆசாரிய வம்சாவளி, வாழ்க்கை வரலாறு கூறும் இந்த நூல் அச்சிடப்பட்டதா என்ற விவரம் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. மேலே குறிப்பிட்டபடி இந்த ஆசாரியர்கள் சமயப் பணி செய்தனர். அத்துடன் உணவுக்கூடம், நந்தவனம், மருத்துவ சாலை நிருவாகப்பணி மூலம் சமூகப் பணிகளும் செய்தனர். கோயில் நிருவாகத்தைச் செய்து அரசனுடைய கொடைகளை முறையாகக் கோயிற் பணிகளுக்குப் பயன்படுத்தினர். இவர்களுடைய எளிமையான துறவு வாழ்க்கை, இருமொழிப் புலமை, கண்டிப்பான நிருவாகம் காரணமாக அரசன் உள்ளிட்ட அனைவராலும் ஆசாரியராக மதிக்கப்பட்டனர். இவர்களுடைய மடங்களும் செல்வ வளமும் செல்வாக்கும் மிக்க அதிகார மையங்களாக விளங்கின. இராமாநுசர், சாதி, பொருளாதார, பால் வேறுபாடு இல்லாமல் அனைவரையும் கோயில் மடப் பணிகளில் ஈடுபடுத்தினார். இவருக்குப் பின், நாயக்கர் ஆட்சிக் காலத்தில் மணவாள மாமுனிகளும் இதே நிலைப்பாட்டில் வைணவத்தை அனைவருக்கும் உரித்தாக்கினார். பிற ஆசாரியர்கள் மிகக் கறாராக வருணாசிரம நெறிகளைப் போற்றி,இறுக்கமுடையதாக வைத்திருந்தனர்.

## குறிப்பு விளக்கம்

1. எஸ்.கிருஷ்ணசாமி ஐய்யங்கார் (ப.ஆ.), **ஆறாயிரப்படி குரு பரம்பரா ப்ராபாவம்,** திருச்சி, 1975.
2. சு.வேங்கடராமன், **அரையர் சேவை,** சென்னை, தமிழ் புத்தகாலயம், 1985.
3. பி.ஸ்ரீ.ஆசார்யா, **ஸ்ரீ இராமானுஜர்,** சென்னை, பாரி நிலையம்.
4. இம்மரபு பற்றி விரிவாக அறிய இதே நூலிலுள்ள சு.வேங்கடராமனின் விசய நகரப்பேரரசு கால வைணவ உரைமரபு என்ற கட்டுரை காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புருஷோத்தம நாயுடு, பு.ரா. (தமிழாக்கம்) **ஆசாரிய ஹிருதயம்,** சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம், 1965.

6. பி.ஸ்ரீ.ஆசார்யா, மு.நூ.

7. சு.வேங்கடராமன், **தமிழர் சமய மரபுகள்,** மதுரை மீனாட்சி புத்தக நிலையம், 2007, பக். 51–63.

8. கோயில் கந்தாடையண்ணன் அப்பங்கார், **பழநடை விளக்கம்,** சென்னை, 1891.

9. மேலது, ப.80.

10. இந்த ஆசாரிய மரபு பற்றி அறியப் பின்வரும் நூல் காண்க.
Sadhu Subramania Sastry, Report on the Inscriptions of the Devasthanam collection with illustrations, Tirumala Tirupathi Devasthanams, Tirupati,1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசய நகரப் பேரரசுகால வைணவ உரை மரபு

பேராசிரியர். சு. வேங்கடராமன்

## முன்னுரை

விசயநகர நாயக்க பேரரசு காலத்தில் வைணவ சமயம் அரச ஆதரவு பெற்ற சமயமாக இருந்தது. அப்பேரரசு காலத்தில் தமிழ் மரபில் காணப்பட்ட வைணவ உரைகள் பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம். இந்த உரைகள், தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள உரைநடையில் அமைந்தவை. இவை வைணவ ஆசாரியர்களால், தம் மாணவர்களுக்கும் பிறருக்கும் காலட்சேபமாக (காலட்சேபம் – விரி உரையாக அமைவது; ஆசிரியர் மாணவனுக்குச் சொல்லுவது), வழி வழியாக உரைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் வைணவ மடங்களிலும், ஆசாரியர் இருப்பிடங்களிலும், திருக்கோயில்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை வாய்மொழியாகச் சொல்லப்பட்டு வந்துள்ளன. முதலில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டுப் பின்னர் ஏடுகளில் இவை எழுதப்பட்டன; பின்னர் நூலாக வெளிவந்தன. வைணவ மரபில் இன்றளவும் இந்த உரைகளை ஆசாரியரிடம் காலட்சேபமாகப் பாடம் கேட்கும் மரபு உள்ளது. இது வைணவத்தின் தனிச்சிறப்புக்களில் ஒன்று.

## உரை அறிமுகம்

விசயநகரப் பேரரசு காலத்திற்கு முன்னர், பிற்காலச் சோழப் பேரரசு காலம் முதல் – கி.பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் வைணவ உரைகள் தோன்றின. இராமாநுசர் காலத்தில் முதல் வைணவ உரை எழுதப்பட்டது. எனவே, கி.பி 11 முதல் 13 முடிய தோன்றிய உரைகள் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரையின் முதல் பகுதி அமைகிறது. இந்த அடிப்படை அறிமுகம் தெரிந்துகொண்டு தான், விசய நகரப் பேரரசு கால வைணவ உரைகளை நாம் அறிய முடியும்.

ஆழ்வார் பாசுரங்கள் பாடப்பட்ட காலம் வேறு. அவை நாதமுனிகளால் தொகுக்கப்பட்டு, திருக்கோயில்களில் குழுப் பாடலாக (கோஷ்டி என்பது வைணவ மரபு) ஓதும் முறை, பண் இசையோடும் அபிநயங்களோடும் நடித்துக் காட்டப்படும் அரையர் சேவை நிகழ்த்து கலை முறை[1] ஆகிய இரண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் வேறு. பின்னர் இராமாநுசர் காலத்தில் உரைகள் எழுதப்பட்டன. இராமாநுசர் உருவாக்கிய விசிட்டாத்துவைதக் கோட்பாடு,[2] நிறுவன சமயமாக வைணவம் கட்டமைக்கப்பட்ட நிலை ஆகியவைகளுக்கு ஏற்ப உரைகள் எழுதப்பட்டன. எனவே உரைகளில் கால வளர்ச்சி, தத்துவ நிலைப்பாடு ஆகியவற்றைக் காண முடியும். வைணவ உரைகள் யாவும், தமிழும் வடமொழியும் அறிந்த இருமொழிப் புலமையாளர்களுக்கு மட்டுமே புரியும். அத்துடன் வைணவ அந்தணர்களிடையே வாய்மொழி வழக்கிலுள்ள கிளைமொழிப் பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெற்றிருக்கும்.

## மணிப்பிரவாளம் விளக்கம்

வைணவ உரைகள் தமிழும் வடமொழியும் கலந்த கலப்பு உரைநடையில் எழுதப்பட்டன. இக்கலப்பு நடை 'மணிப்பிரவாளம்' எனப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியும் முத்தும் (பிரவாளம் – முத்து) கலந்தது மணிப்பிரவாளம். தமிழ்ச் சொற்களும் வடமொழிச் சொற்களும் கலந்து, வேறுபாடில்லாமல் இந்த உரைநடை உருவாக்கப்பட்டது. வடசொற்கள், தமிழ் மொழி மரபிற்கேற்ப விகுதி, சாரியை, உருபு போன்ற பின் ஒட்டுக்கள் பெற்று, தொடர்களாக இடம் பெறும். சான்றாக, 'கிருபையாலே' என்ற சொல் காண்க. கிருபை என்பதோடு (கிருபா – வடச்சொல்; கிருபை – அதன் தமிழ் வடிவம்) ஆல், ஏ சேர்ந்து தமிழ் வடிவம் பெற்றுள்ளது. இப்படி அந்த நடை முழுவதும் அமையும். கி.பி. 837–இல் மணிப்பிரவாள நடை முதன் முதலாகச் சமணர்களால் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. 11ஆம் நூற்றாண்டில், அபிநவ குப்தர் பரதரின் நாட்டிய சாத்திர உரையில், மணிப்பிரவாளம் பற்றிக் குறிப்பிடுகிறார். மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய தென்னிந்திய மொழிகளில் இந்தக் கலப்பு நடை பயன்படுத்தப்பட்டது. தமிழில் உரைநடையில் மட்டுமே இந்தக் கலப்புநடை பயன்பட்டது. வீரசோழியம் (கி.பி.11 ஆம் நூற்றாண்டு) இந்த நடையைக் குறிப்பிட்டு, விளக்கம் செய்கிறது.[3] இராமாநுசர் காலந்தொடங்கி வைணவர்களால் இந்தக் கலப்பு மொழிநடை, உரைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. கி.பி.15 ஆம் நூற்றாண்டு வரை இது பயன்பாட்டில் இருந்தது.

படி

வைணவ உரைகள் யாவும் படி என்று பெயர் பெற்றன. மணிப்பிரவாள நடையில் அமைந்த உரைகள், எழுத்து அடிப்படையில் எண்ணிக்கை இடப்பட்டுப் படி என்று பெயர் பெற்றன. படி என்பது அளவை எனப்பொருள்படும். மெய்யெழுத்து நீக்கி, உயிரும் உயிர் மெய்யும் 32 கொண்டது ஒரு படி. படி என்பதைக் கிரந்தம் எனவும் கூறுவர். கிரந்தம் என்ற வடசொல்லுக்கு எழுத்து என்பது பொருள். "ஒரு கிரந்தமாவது ஒற்று ஒழித்து உயிரும் உயிர் மெய்யும் ஆகிய முப்பத்திரண்டு எழுத்து" என்று யாப்பருங்கலக் காரிகை[4] கூறும். எனவே மூவாயிரத்துப்படி என்ற திருப்பாவை உரை, மூவாயிரம் அளவு உடையது. 3000 x 32 எழுத்துக்களால் அந்த உரை அமைந்திருக்கும். ஒவ்வொரு உரையும் இவ்வாறு எழுத்தெண்ணிக் கணக்கிடப்பட்டுப் பெயர் பெறும். இந்த உரைகளை அப்படியே எழுத்து மாறாமல் மனப்பாடமாகப் பயிலுவர். எழுத்தெண்ணிப் படிப்பது என்பது இதுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர் அவரவருக்கு விருப்பமான நூலின் அடிப்படையில் உரைப்பெயரை – படியை – அமைப்பர். சான்றாக, பெரியவாச்சான் பிள்ளை என்ற உரையாசிரியர் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு 24,000 படி என்ற உரை எழுதினார். வடமொழி வால்மீகி இராமாயணம், 24,000 பாடல்களை (சுலோகங்களை) உடையது. இந்த உரையாசிரியருக்கு இந்த நூலிலுள்ள ஈடுபாடு காரணமாக 24,000 படி எனத் தன் உரையை அமைத்தார். அந்த உரை முழுவதையும் ஒற்றெழுத்து நீக்கி எண்ணிப் பார்த்தால் எண்ணிக்கை சரியாக இருக்கும்.

தொடக்க நிலையில் இராமாநுசரின் மாணவர், திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய் மொழிக்கு 6,000 படி உரை எழுதினார். இந்த உரைதான் முதன் முதலில் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட உரையாகும். தொடக்க காலத்தில் அளவில் சுருங்கியும், வடசொற்கள் மிகுந்தும் உரைகள் எழுதப்பட்டன. தமிழ்ச் சொற்கள் குறைவாக இடம் பெற்றன. பின்னர், பெரியவாச்சான் பிள்ளை, நம்பிள்ளை காலம் முதல் இந்தப் போக்கு மாறியது. தமிழ் மிகுதியாகவும், வடசொற்கள் குறைவாகவும் உரைகளில் இடம்பெற்றன. உரைகளின் அளவும் நீண்டது. 24,000, 36,000 எனப் படிகள் நீண்டன.

வைணவ உரையாசிரியர்கள் பெயர்களில் உள்ள பிள்ளை, முதலி என்பவை சாதிப் பெயரன்று. இவர்கள் அனைவரும் அந்தணர்கள். மகன் என்ற பொருளில் பிள்ளையும், முதலில் இருப்பவர் என்ற பொருளில் முதலி என்ற சொல்லும் இடம் பெற்றன. உரையாசிரியர் அனைவரும் தமிழ், வடமொழி இலக்கண இலக்கியங்களில் புலமை உடையவர். திருமாலிடமும், இராமாநுசரிடமும், ஆழ்ந்த பக்தி உடையவர். தாம் உரை எழுத எடுத்துக் கொண்ட நூலை பலமுறை கற்று தமக்கு முந்தைய உரையாசிரியர்களிடமிருந்து மாறுபடாமல் கூடுதலாக நயம் காணும் முயற்சியாக உரையை எழுதினர். எனவேதான் உரை அளவு நீண்டது.

இருமொழிக் கலப்பு நடையில் அமைந்த உரைகள் மட்டுமல்லாமல், முழுவதும் வடமொழியிலான உரைகளும் எழுதப்பட்டன. நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு இத்தகைய இரு உரைகள் எழுதப்பட்டன. தமிழில் பாடப்பட்ட நூலுக்கு முழுவதும் வடமொழியில் உரை எழுதப்பட்ட சிறப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாய்மொழிக்கு மட்டுமே உள்ளது. ஓர் உரைக்குக் கூடுதல் விளக்கமாக இரு உரைகள் எழுதப்பட்டதும் இக்காலத்தில் நிகழ்ந்தன. அவை அரும்பத உரை எனக் குறிப்பிடப்பட்டன.

## உரைகளின் இயல்புகள்

சோழப்பேரரசு காலம் முதல், விசய நகர நாயக்கர் பேரரசு காலம் வரை தோன்றிய வைணவ உரைகளில் சில பொது இயல்புகள் உள்ளன. அவற்றை இனி அறிவோம். உரைகள் வாய்மொழியாகக் கூறப்பட்டன. எனவே உரையாடல் தன்மையில், தேவையான விளக்கங்களோடு இருக்கும். ஒவ்வொரு உரை ஆசிரியரும் மரபு வழியாக அடுத்த தலைமுறையினருக்கு உரை வழியாகத் தன் கருத்துக்களைக் கூறுகிறோம் என்ற உணர்வோடு எழுதினர். எனவே உரை முழுவதிலும் மைய இழையாக இப்போக்கைக் காணலாம். இதனை, 'நம் பூர்வாசாரியர்கள் ஓராண் வழியாகக் கொண்டு போகும்' (ஓராண் வழி – ஆசிரியர் தம் மாணவனுக்கு, மாணவன் தம் மாணவனுக்கு என்று தலைமுறை தலைமுறையாக வருவது) என்று ஈட்டுரை இதை விளக்குவதால் அறியலாம்.

முன்னரே கூறியபடி, இந்த உரைகள் யாவும் பாடஞ் சொல்லும் முறையில் அமைந்தவை. எனவே தேவையான இடங்களில், கேட்பவருக்குச் சந்தேகம் தோன்றும் எனக் கருதும் இடங்களில் விளக்கம் கூறும் மரபு உரைகளில் உள்ளது. இந்த விளக்கம் மேற்கோள் காட்டுதல், சான்று மூலம் விளக்குதல் என அமையும். இலக்கிய நூல்களிலிருந்து சான்று காட்டுவது, தன் முன்னோர் வாய்மொழியாகக் கூறியதிலிருந்து சான்று காட்டுவது என இருவகையில் அவை அமையும். இன்னார் கூறியது என்று அவை தெளிவாகக் குறிப்பிடப்படும். சான்றாக, 'இறைவன் நிர்குணன் என்று கூறுவாரின் மிடற்றைப் பிடிப்பாரைப் போலே சுடரடி என்றார் என்று பிள்ளான் பணிக்கும்' என்று திருவாய் மொழி உரையில் (திருவாய் 1.1.1) இடம் பெறும். முதல் உரையாசிரியரான குருகைப் பிரான் பிள்ளான் கூறிய மேற்கோளைப் பின்வந்த உரையாசிரியர் இவ்வாறு தம் உரையில் மேற்கோளாகக் காட்டுகிறார்.

வைணவ உரைகள் யாவும் அழகியல் அனுபவமாக உள்ளன. ஆழ்வார் பாசுரங்கள் வழியே விளக்கிய இறை அனுபவத்தை உரையாசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையில் மீண்டும் அதே மனநிலையில் தம் அனுபவமாக, இன்னும் நயமாக விளக்குகின்றனர். எனவே, அனுபவ விளக்கம் என்ற மையம் உரை முழுவதிலும் காணலாம். பாடல்களுக்கான உரைகளில் மட்டுமல்லாது, தத்துவ நூல் உரைகளிலும் இப்போக்கை நாம் விரிவாகக் காணமுடியும். நயம், கருத்து விளக்கம், சொல் திறன், அடைமொழி விளக்கம், நுட்ப உரை, உரைக்கு உரை, மதிப்பீடு என்று பல்வகையான உரைத்திறன்களை வைணவ உரைகளிற் காணலாம். ஆழ்வார் பாடல் அடிகளை இணைத்து விளக்கம் தரும் முறையை இவர்களிடம் காண்கின்றோம். இது தனித்த போக்காக, நூலாக்க முறையாக வளர்ந்தது. சில சமயங்களில் விளக்க உரை, கவிதைக்கு எழுதப்பட்ட மற்றொரு கவிதை என்று சொல்லும்படி உரை அமைந்தது. அவர்கள் காலச் சமூக, அரசியல், வாழ்வியல் கருத்துக்களை எல்லாம் உரைகளில் இடையிடையே உவமை வழியே வெளிப்படுத்தினர். பெரும்பாலும் தமிழைத் திராவிட மொழி, தமிழ், திரமிள (திரமிட) என்று நுட்பமாகக் குறித்துள்ளனர். தமிழ் வேதம், தமிழ் மறை, திராவிட வேதம், திராவிட உபநிடதம் என்றெல்லாம் ஆழ்வார் பாசுரங்களைக் குறிப்பிட்டுக் கொண்டாடினர். பொதுவாக வேதம், மறை என்று சொல்லாமல், வடமொழி மறை, ஆரிய வேதம் என்று அடைமொழி சேர்த்துக் குறிப்பிடுவதே தமிழ் மறை, திராவிட வேதம் இருப்பதால்தான் என்று இந்த உரையாசிரியர்கள் மிக நுட்பமாக, தருக்க நெறியில் விளக்குவது தனிச்சிறப்பு.

## சோழப் பேரரசு கால உரையாசிரியர்கள்

ஆழ்வார் பாடல்களை நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத் தொகுத்த நாதமுனிகள் காலம் முதல் இராமாநுசர் காலம் வரை உள்ள ஆசிரியர்கள், தனியாக உரை எழுதவில்லை. ஆனால், அவ்வப்போது உரை சொல்லும் முறையில் தம் சீடர்களுக்குப் பாடல்களை விளக்கியுள்ளனர். எனவே இவர்களை உரை முன்னோடிகள் எனக் கொள்ள வேண்டும். இவர்கள் இவ்வாறு விளக்கிய உரை விளக்கங்கள் பின்வந்த உரைகளில் மேற்கோளாக இடம் பெற்றுள்ளதால் இதனை அறியலாம். எனவே, முதல் உரையாசிரியரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் காலத்திற்கு முற்பட்ட அனைவரும் உரை முன்னோடிகள் ஆவர். இவரைத் தொடர்ந்து வருபவர்களை உரையாசிரியர்கள் என நாம் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதமுனிகள், ஆளவந்தார், இராமாநுசர், எம்பார், கூரத்தாழ்வான், திருவரங்கத்தமுதனார், அனந்தாழ்வான், முதலியாண்டான் என இவர்கள் அமைவர். இவர்கள் தவிரச் சிறு விளக்கங்கள் தந்த வேறு சில முன்னோடிகளும் உள்ளனர். எனவே, பாடலுக்கு விளக்கம் கூற நினைத்த நாதமுனி காலந்தொட்டு உரை மரபு தோன்றிவிட்டது. ஆனால் உரை எழுதும் போக்கு, இராமாநுசர் காலத்தில்தான் தோன்றியது. அவர் விருப்பப்படி அவருடைய மாணவரும் வளர்ப்பு மகனுமான குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி உரை எழுதினார். இது தான் எழுத்து வடிவம் பெற்ற முதல் உரை.

இராமாநுசர் காலம் வரை, ஆழ்வார் பாடல்களுக்கு உரை எழுதக் கூடாது என்ற மரபு இருந்தது. உரை எழுதினால் பாடலின் கருத்து இவ்வளவுதான் என்ற வரையறை ஏற்பட்டுவிடும் என்பதால் உரை எழுதப்படவில்லை. ஆழ்வார் பாடல்களில் திளைத்த இராமாநுசர் உரை எழுதாததற்கு இதுவே காரணம். திருவாய் மொழிக்கு உரை எழுதத் தன் சீடரை அனுமதித்த போதிலும் ஆண்டாளின் திருப்பாவைக்கு உரை எழுதக் கூடாது; அது (திருப்பாவை) பெண் பெண்ணிடம் கூறும் அனுபவம். முதல் பாடலிலே 'ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்காள்' என்று பெண்களை விளித்து ஆண்டாள் பாடுவது (திருப்பாவை–1) இதற்குக் காரணம். இதைத் தான் இராமாநுசர், 'அது (திருப்பாவை) பெண் பேச்சு. பெண் கேட்கப் பெண் சொல்லியது. ஆண்கள் கேட்பதற்கு அதிகாரிகள் அல்லர்' என்று விளக்கியதாக திருப்பாவை முன்னுரையால் அறிகிறோம்.[5] எனவே, இராமாநுசர் மிகத் தெளிவாக இந்த மனநிலையில் பெண் பேச்சான திருப்பாவைக்கு உரை எழுதுவதற்குக் கூட அல்ல, கேட்பதற்கே ஆணுக்குத் தகுதி இல்லை; பெண் அனுபவம், பெண்ணுக்கு மட்டுமே தெரியும் என்ற நிலைப்பாட்டில் – இருந்தார் என அறிகிறோம். ஆனால் காலப்போக்கில் திருப்பாவை, நாச்சியார் திருமொழி இரண்டிற்கும் ஆண்கள் உரை எழுதினர். உலகம் முழுவதிலும், 'பெண் பேச்சு, பெண் அனுபவம்' என்ற பெண்ணியச் சிந்தனை தோன்றாத காலத்தில் கி.பி.11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இராமாநுசர் இவ்வளவு நுட்பமாக இதை விளக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குருகைப் பிரான் பிள்ளான்

இவர் வைணவ முதல் உரையாசிரியர். இவருடைய காலம் கி.பி. 1161. இவர் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி என்னும் உரை எழுதினார். இந்த ஒரு உரைதான் இவர் எழுதியது. இவர் இராமாநுசரின் வளர்ப்புப் பிள்ளையும் சீடரும் ஆவார். இராமாநுசரின் விருப்பப்படி இந்த உரையை எழுதினார். இவர் இந்த உரை தவிர, தன் வாழ்நாள் முழுவதிலும் திவ்யப் பிரபந்த விளக்கச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். அவை பிறருடைய உரைகளிலிருந்து தெரிய வருகிறது. இராமாநுசரின் விசிட்டாத்துவைதக் கோட்பாட்டை விளக்கும் வண்ணம் இவரது உரை உள்ளது.

## பட்டர்

பாரசரபட்டர் என்பது இவருடைய முழுப் பெயர். வைணவ உலகில் இவர் பட்டர் என அறியப்படுகிறார். இவர் கூரத்தாழ்வாரின் முதல் மகன். இராமானுசரால் இவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. கி.பி. 1122–இல் பிறந்தவர். இவர் திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்தில் உள்ள 'மைவண்ண நறுஞ்குஞ்சி' என்னும் ஒரு பாடலுக்கு நீண்ட உரை எழுதியுள்ளார். இவர் உரையில் சொல்லாற்றல், சிறிய கதைகள் சொல்லி விளக்குதல், நயம் காணல் என்பன உள்ளன. இவருடைய கூர்ந்த அறிவு பல இடங்களில் பிறர் உரைகளில் இடம் பெற்றுள்ளது.

## நஞ்சீயர்

இவருடைய காலம் கி.பி. 1182 – 1287. இவர் அத்வைத வேதாந்தியாக இருந்து பட்டரால் வைணவ நெறிக்கு மாற்றப்பட்டவர். திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி உரை எழுதியவர். ஆண்டாளின் திருப்பாவைக்கு இரண்டாயிரப் படி, பொய்கை, பூதம், பேய் ஆகிய முதல் மூவரின் மூன்று திருவந்தாதிகள், பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு, மதுரகவியின் கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகியவைகளுக்கு உரைகளை எழுதினார். பிள்ளானின் உரையில் காணப்பட்ட வடசொல் ஆட்சி இவர் உரையில் குறைந்து, தமிழ்ச் சொற்கள் மிகுந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிள்ளை

இவர் வைணவ உரை மரபில், 'உரைப்பெருக்கர்', பேருரையாளர் எனப் போற்றப்படுவர். இவருடைய காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு. இவர் திருவாய் மொழிக்கு முப்பத்தாறாயிரப்படி உரை எழுதினார். இந்த உரை 'ஈடு' என அழைக்கப்படுகின்றது. திருவாய் மொழிக்கு இது ஈடானது – இணையானது என்ற பொருளில் இப்பெயர் அமைந்தது. இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இருவருக்கும் ஆசிரியர். ஈட்டுரை இவர் சொல்லச் சொல்ல இவர் மாணவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை எழுதியது. எனவே, ஈடு இருவர் பெயராலும் வழங்கப்படுகின்றது. இந்த உரை நம்பிள்ளை ஈடு என்றே வழங்கப்படுகின்றது. நம்பிள்ளையின் நுட்பமான புலமையும் தமிழ் அறிவும் இவ்வுரையில் வெளிப்படுகின்றன. விசய நகரப் பேரரசு காலத்தில், மணவாள மாமுனிகள் இந்த ஈட்டுரையைத் திருவரங்கம் கோயிலில் ஓர் ஆண்டு முழுவதும் காலட்சேபமாக எடுத்துரைத்தார். திருவரங்கன் அதைக் கேட்டான். இதனால் இந்த உரை மிகுதியும் பரவியது.

## பெரியவாச்சான் பிள்ளை

இவர் வைணவ உரை உலகில் உரை வேந்தர் – வியாக்கியான சக்கரவர்த்தி எனப் போற்றப்படுபவர். இவர் நாலாயிரம் முழுவதற்கும் உரை எழுதியவர். கி.பி. 1228–இல் பிறந்தவர். நாலாயிரம் தவிர வைணவ தத்துவ நூல்கள் பலவற்றிற்கும் இவர் உரை எழுதினார். இவர் நாலாயிரத்திவ்யப் பிரபந்தப் பாடல்களில் வரும் இராமாயணக் கதை நிகழ்வுகளை ஒரு சேரத் தொகுத்து 'பாசுரப்படி இராமாயணம்' என்ற நூலைச் செய்தார். ஓர் எழுத்துக் கூட இவர் புதிதாகச் சேர்க்காமல் பாசுரத் தொடர்களையே கொண்டு, இராமாயணத்தை உருவாக்கிய இவருடைய நுட்பமான புலமை, நினைவாற்றல் இன்றும் வியப்பைத் தருவன. இவருடைய உரையில் தமிழ்ச் சொற்கள் மிகுதி. திருவாய் மொழிக்கு இருபத்தினாலாயிரப்படி உரை எழுதியவர்.

## வடக்குத் திருவீதிப் பிள்ளை

இவர் நம்பிள்ளையின் மாணவர். திருவரங்கத்தில் வடக்குத் தெருவில் வாழ்ந்ததால் இப்பெயர் பெற்றார். இவருடைய காலம் கி.பி. 1217–1312. இவர் நம்பிள்ளையின் ஈட்டுரையை அவர் சொல்லச் சொல்ல எழுதியவர். அத்துடன் நம்மாழ்வாரின் திருவிருத்தத்திற்கு உரை எழுதினார். இவருடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பிள்ளைகளான பிள்ளை லோகாச்சாரியாரும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் வைணவ உலகில் புகழ் பெற்ற இரு சிம்மங்கள்.

## வாதிகேசரி அழகிய மணவாள சீயர்

இவர் பெரியவாச்சான் பிள்ளையின் மாணவர். அவரிடம் சமையல்காரராகப் பணியாற்றி அவரால் கல்வி கற்பிக்கப்பட்டுப் பெரும் புலமையாளரானார். இவர் திருவாய் மொழிகளுக்கும் பன்னிரண்டாயிரப்படி உரை எழுதினார். இது தவிர தமிழிலும் வட மொழியிலும் பல நூல்களை எழுதினார். வெண்பா யாப்பில், விசிட்டாத்துவைதக் கொள்கைக்கு ஏற்ப பகவத் கீதையைத் தமிழில் தனி நூலாகப் பாடினார்.[6] இவர் தமிழ்ப் புலமை மிக்கவர் என்பது, திருவாய்மொழி உரையில், இறுதில் பாட்டின் யாப்பைப் பற்றிச் கூறும் விளக்கத்தால் புலனாகிறது. இந்த நுட்பம், திருவாய் மொழியின் பிற உரையாசிரியர்களிடம் காணப்படாதது. பிற உரைகளிலிருந்து மாறுபட்டுத் தம் கருத்தை இவர் கூறுவதைப் பல இடங்களிற் காணலாம்.

## பிள்ளை லோகாச்சாரியார்

இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் மூத்த மகன். இவர் காலம் கி.பி. 1264–1369. இவர் எண்ணற்ற வைணவ தத்துவ நூல்கள், உரைகள் எழுதியவர். மணிப்பிரவாள நடையில் விசிட்டாத்துவைத விளக்கமாக 18 நூல்களை எழுதியவர். இவர் காலத்திலே தான் வைணவம், தென்கலை, வடகலை என இரண்டாகப் பிரிந்தது. இவர் தென்கலை மரபிற்கு ஏற்றம் தந்தவர். முமுட்சுப்படி, ஸ்ரீவசன பூஷணம் ஆகிய இரண்டு நூல்கள் இவருடைய தலைசிறந்த படைப்புகள். ஸ்ரீவசன பூஷணம் 465 சூத்திரங்களால் ஆனது. பாசுரப்படி இராமாயணம் போல, தமிழ், வடமொழி நூல்களின் தொடர்களைக் கொண்டே இந்த நூல் செய்யப்பட்டது. வசனங்களால் ஆன அணிகலன் என்ற பொருளில் ஸ்ரீ வசன பூஷணம் என்ற பெயர் அமைந்தது. 'சிறை இருந்தாள் ஏற்றம் சொல்லியது இராமாயணம்; தூது நடந்தான் ஏற்றம் சொல்லியது பாரதம் என்பது அதிலுள்ள ஒரு நூற்பா. இவ்வாறு சிறிய நீண்ட நூற்பாக்களால் வைணவ சமய, தத்துவ, வாழ்வியலை இந்த நூல் விளக்குகிறது. இத்தகைய நூலாக்கம் வைணவம் தமிழுக்குத் தந்த புதுமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாந்த தேசிகர்

இவர் வடகலை வைணவத்தைத் தலைமையேற்று நடத்தியவர். இவர் காலம் கி.பி 1268 –1369. இவர் தமிழ், வடமொழி, மணிப்பிரவாள நடைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். 'கவிதார்கிக சிம்மம்' (கவிதையிலும் தர்க்கத்திலும் சிங்கம் என்பது பொருள்) எனப் பெயர் பெற்றவர். இவர் திருவாய் மொழிக்கு முழுவதும் வடமொழியில் அமைந்த உரை எழுதினார்.

## அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்

இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் இளைய மகன். பிள்ளை லோகாச்சாரியாரின் தம்பி. இவர் திருப்பாவைக்கு ஆறாயிரப்படி, அமலனாதி பிரான், கண்ணுநுண் சிறுதாம்பு ஆகியவைகளுக்கு உரைகளை எழுதினார். அத்துடன் இவருடைய தலைசிறந்த படைப்பு ஆசாரிய ஹிருதயம். இது நம்மாழ்வாரின் திருவுள்ளம் – மாறன் மனம் எனப்பொருள்படும். நம்மாழ்வாரின் திருவாய்மொழி உள்ளிட்ட நான்கு நூல்களுக்கு எழுதப்பட்ட திறனாய்வு இது. நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி வடமொழி வேதத்திற்கு இணையான, அதைவிட உயர்ந்த தமிழ் வேதம் எனவும், தமிழில் அப்பாடல்கள் இருப்பதால் குறை இல்லை எனவும் இந்த நூல் நிறுவுகிறது. நம்மாழ்வாரின் பிறப்பு – சாதி பற்றி எழுந்த விவாதங்களை மறுத்து நூலைத்தான் பார்க்க வேண்டும்; நூலாசிரியரின் சாதியை அல்ல என்று இந்த நூல் வாதிடுகிறது. தமிழ் மரபில் முதன் முதலாக அகப்பொருள் மரபு அமைந்த பாடல்களுக்குத் தத்துவ விளக்கம் – குறியீட்டுப் பொருள் – தருகிறது இந்த நூல். இந்த வகையில், தமிழில், தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குப் பிறகு, கவிதைத் திறனாய்வு கூறும் நூல் இது.[7] இவரோடு சோழப் பேரரசு கால வைணவ உரையாசிரியர்கள் பற்றிய விளக்கம் முடிகிறது.

வைணவ உரையாசிரியர்கள் அனைவரும் ஆசாரியர்களாக இருந்தவர்கள். இராமாநுசர் ஏற்படுத்திய வைணவ பீடங்களில் தலைவர்களாக இருந்து சமயப்பணி செய்தவர்கள். அதன் ஒரு பகுதியாகத் தம் சீடர்களுக்கும் பொதுமக்களுக்கும் நாலாயிர திவ்ய பிரபந்த விளக்கவுரை சொல்வதையும் உரை எழுதுவதையும் வாழ்க்கை ஒழுக்கமாகக் கொண்டிருந்தனர். ஆழ்வார் பாசுரங்களையும் உரைகளையும் ஆசிரியரிடமிருந்து சீடர் பாடங்கேட்பது சமயக் கல்வி முறையில் அடிப்படையானதாகும். ஆழ்வார்கள் இறைவனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு தாம் அனுபவித்ததை ஆன்மீக அனுபவமாகப் பாடல்களில் தந்தனர். ஆசாரியர்கள் தங்கள் அனுபவமாக அனுபவித்து உரைகளாகத் தந்தனர். எனவே, பாடல், உரை இரண்டுமே இறை அனுபவம் ஆகும்.

இந்த உரைகளைத் தம் வாழ்நாள் முழுவதும், விருப்பமுடைய அனைவருக்கும் சொல்லிச் சொல்லி, நாத்தழும்பேறி இறை அனுபவத்தில் திளைத்தனர்; அடுத்த தலைமுறையினரை அதே முறையில் திளைக்கச் செய்தனர். இந்த வகையில் ரசனை அனுபவமாக உரைகள் அமைந்தன. அவை, தம் காலச் சமய, சமூக, வாழ்க்கை அனுபவங்களாக உள்ளன.

## நாயக்கர் கால உரையாசிரியர்கள்

சோழப் பேரரசைத் தொடர்ந்து விசயநகர நாயக்கர் பேரரசு காலத்திலும் வைணவ ஆசாரியர்கள் உரை எழுதும் பணியைத் தொடர்ந்தனர். சோழப் பேரரசு காலத்திற்கு மாறாக, விசய நகரப் பேரரசு, அரசு சமயமாக வைணவத்தைப் பாதுகாத்தது. வைணவ ஆசாரியர்கள் சமயப்பணியின் ஒரு பகுதியாக வைணவ தத்துவ நூல்கள், இலக்கியங்கள் படைத்ததோடு உரைகளும் எழுதினர். பின்பழகிய பெருமாள் ஜீயர், வடிவழகிய நம்பிதாசர், கந்தாடையண்ணன் ஆகியோர் வைணவ குரும்பரை நூல்களை எழுதினர். திருவாய்மொழிப் பிள்ளை, மாணவாள மாமுனிகள் ஆகிய இருவர் இக்கால உரையாசிரியர்கள்.

## திருவாய்மொழிப் பிள்ளை

இவர் காலம் கி.பி. 1300– 1405, இவர் பெரியாழ்வாரின் திருமொழிக்கு உரை எழுதினார். பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரம் முழுவதற்கும் உரை எழுதினார் என்று முன்னர் பார்த்தோம். அவருடைய பெரியாழ்வார் திருமொழி உரை கிடைக்காமல் போயிற்று. எனவே திருவாய்மொழிப் பிள்ளை அதற்கு உரை எழுதினார். இவருடைய இந்த உரை மிகுந்த கற்பனை நயத்தோடு கூடியது. இயற்கை வருணனையும், சொல் நயமும் இவருடைய உரையின் தனிச்சிறப்புக்கள்.

## மணவாள மாமுனிகள்

இவர் வைணவ மரபின் கடைசி உரையாசிரியர். இவரோடு மணிப்பிரவாள உரைமரபு முழுமையடைகிறது. இவருக்குப் பின் வந்தவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றளவும் முன்னோர் உரைகளை விளக்கியும், எளிமைப் படுத்தியும் சொல்லி வருகின்றனர். மணவாள மாமுனி கி.பி. 1370 இல் பிறந்தவர். இவர் தம் வாழ்க்கை முழுவதையும் திருவரங்கத்தில் கழித்தவர். இவர் திருவாய்மொழிப் பிள்ளையின் மாணவர். இராமாநுசருக்குப் பிறகு வைணவ ஆசாரியர்களில் மிகுந்த புகழ் பெற்றவர். தென் கலை மரபிற்குப் பெரும் பணியாற்றினார். இவர் உரை விளக்கச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர்.

இவர் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும் விளங்கியவர். தமிழிலும் வடமொழியிலும் சிறந்த கவிஞர். இவர் திருவரங்கம், திரு மெய்யம் (திருமய்யம்) ஆகிய தலங்களில் ஓராண்டு முழுவதும் நம்பிள்ளையின் ஈடு முப்பத்தாறாயிரப்படி உரையை விரிவுரையாற்றினார். எனவே ஈடு முப்பதாறாயிரப் பெருக்கர் என்று போற்றுவர். இவர் பெரியாழ்வார் திருமாழி முதல் நான்கு பத்துகளுக்கு உரை எழுதினார். அத்துடன் ஆசாரிய ஹிருதயம், ஸ்ரீவசனபூஷணம், முமூட்சுப்படி போன்ற நூல்களுக்கு உரை எழுதினார். இராமாநுச நூற்றந்தாதிக்கு அருமையான உரை தந்தவர். திருவாய்மொழி நூற்றந்தாதி, உபதேச ரத்தின மாலை, ஆர்த்தி பிரபந்தம் ஆகிய நூல்களைப் பாடினார்.

இவருடைய உரைகள் மிக நுட்பமாகவும் எளிமையாகவும் அமைந்தவை. தன் காலச் சமய, சமூக, வாழ்வியல் நிலைகளை ஆங்காங்கே இவ்வுரைகளில் அவர் குறிப்பிடுகிறார். அவர் காலத்தில் முன்னும், 'வடமொழி வேதம் கற்றால் தான் வீடுபேறு கிட்டும்' எனவும், 'வேதம் கற்க முதல் மூன்று வருணத்து ஆண்களுக்கு மட்டுமே தகுதி உண்டு' எனவும் மரபுவாதிகள் கூறினர். ஆசாரிய ஹிருதய உரையில் மணவாள மாமுனி இதை மறுத்து, 'நம்மாழ்வார் திருவாய்மொழி கற்கும் சூத்திரர், பெண்கள் அனைவருக்கும் வீடு (மோட்சம்) கையிலங்கு கனியாயிற்று' என்று அறுதி இடுகிறார். தமிழ் வேதம் (திருவாய்மொழி) கற்கச் சாதி, பால் வேறுபாடு இல்லை என விளக்குகிறார். திருவாய்மொழியில், 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' எனவும், 'அதுவே வீடு அப்போதே வீடு' என்றும் வீடுபேற்றை அனைவருக்கும் உரியதாக, இறை அருளால் மிக எளிதாகக் கிடைக்கக் கூடியதாகக் கூறப்பட்டுள்ளமை இதற்கு அடிப்படையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாய்மொழி நூற்றந்தாதி இவர் எழுதிய கவிதை உரை. திருவாய்மொழி 1000 பாடல்கள் கருத்தையும் சொற்களையும் கொண்டு நூறு வெண்பாக்களில், அந்தாதி முறையில் இவர் பாடிய நூல் அது. எனவே கவிதைக்குக் கவிதையில் இவர் உரை செய்துள்ளார். இந்த மரபு தமிழுக்குப் புதியதன்று. திருஞானசம்பந்தரின், 'வாழ்க அந்தணர்' என்ற திருப்பாசுரம் 12 பாடல்களுக்குச் சேக்கிழார் பெரிய புராணத்தில் 23 பாடல்களில் உரை எழுதி உள்ளார். கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில் திருவாசகப் பதிகங்களுக்கு இவ்வாறு கவிதையில் உரை எழுதியுள்ளார். மணவாள மாமுனியின் சிறப்பு தம்முடைய சொல்லோ, கருத்தோ எதையும் சேர்க்காமல், திருவாய்மொழிச் சொற்களைக் கொண்டே கருத்து மாறாமல் நூற்றந்தாதி பாடியமையாகும்.

இராமாநுசருக்குப் பின்னர் வாழ்ந்த ஆசாரியர்களில் இவர் இராமாநுசரைப் போல வைணவ சமயத்தைப் பொருளாதார, சாதி, பால் வேறுபாடின்றி அனைவருக்கும் உரிய சமயமாகப் பரப்பியவராகக் காணப்படுகின்றார். இவர் காலச் சமூகத் தேவை இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

இவர் மிக எளிமையான, துறவு வாழ்க்கை வாழ்ந்தவர். தம்முடைய ஆசாரியர் திருவாய்மொழிப் பிள்ளையின் சொற்படி திருவரங்கத்திலே வாழ்ந்தவர். அதனால்தான் தம்பாடல் ஒன்றில், 'திருவரங்கத் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்' என்று பாடுகிறார். எந்த விதமான அரசியல் ஆதரவும் பாதுகாப்பும் இவர் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் அன்றையச் சமூகச் சூழலில், மக்களிடம் காணப்பட்ட சாதி, பொருளாதார வேறுபாடுகளுக்கு எதிராக, மரபுவாதிகளுக்கு மாற்றாக வைணவ சமயத்தை அனைவருக்கும் உரியதாக ஆக்கினார். பழுத்த ஆன்மீக அனுபவம் காரணமாக அவர் பிறருடைய செல்வம், ஏற்றம் கண்டு பொறாமைப் படாத சிறந்த மனநிலை உடையவராக வாழ்ந்தார். 'பிறர் மினுக்கம் கண்டு நெஞ்சு பெயராமை பெற்றோம்' (மினுக்கம் – செல்வம், ஏற்றம்) என்று அவர் பாடியுள்ள பாடலடி இதை விளக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவ உரையாசிரியர்கள் தம் சமயப் பணியில் ஒரு பகுதியாக உரை எழுதினர். ஆழ்வார்கள் கவிதையில் வெளிப்படுத்திய இறை அனுபவத்தை இவர்கள் உரையில் வெளிப்படுத்தினர். வாழ்நாள் முழுவதும் உரை எழுதுவதும் அதை மாணவருக்கும் பிறருக்கும் பாடஞ் சொல்லுவதுமாக வாழ்ந்தனர். பொதுவாக வைணவத்தில் ஆழ்வார் பாடல்கள் அழகியல் உணர்ச்சி மிகுந்து காணப்படும். அந்த நுட்பத்தை உணர்த்த இவ்வுரையாசிரியர்கள், உரைகளிலும் அழகியல் அனுபவத்தை வெளிப்படுத்தினர். அடுத்த தலைமுறையினருக்கு ஆழ்வார் பாசுரங்களைக் கொண்டு செல்வதைத் தலையாய நோக்கமாக இந்த உரைகள் கொண்டிருந்தன.

## அடிக்குறிப்பு

1. அரையர் சேவை பற்றி விரிவாக அறியப் பின்வரும் நூல் காண்க. டாக்டர் சு. வேங்கடராமன், **அரையர் சேவை,** சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1985
2. சங்கரரின் அத்துவைதக் கோட்பாட்டிற்கு மாற்றாக, இராமாநுசர் உருவாக்கிய கோட்பாடு, விசிட்டாத்துவைதம், விசேடணங்களோடு கூடிய (அடைமொழிகளோடு) அத்துவைதம் என இச்சொல் விரியும். ஈசுவரன், சித்து (அறிவுடையது), அசித்து (அறிவற்றது) ஆகிய மூன்றும் அடிப்படையானவை என்பது இக்கோட்பாட்டின் மையம்.
3. **வீர சோழியம்,** ப.283, சென்னை, கழகம்.
4. வேணுகோபாலப்பிள்ளை, மே.வீ.(ப.ஆ.), **யாப்பருங்கலக்காரிகை,** சென்னை, பாரி நிலையம், 1968.
5. எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் **திருப்பாவை, உரை,** திருச்சி, ஆசிரியர் வெளியீடு.
6. அழகிய மாணவாளச் சீயர், **பகவத் கீதை.** இந்த நூல் 723 வெண்பாக்களால் ஆனது. இந்த நூல் பற்றி விரிவாக அறியப் பின்வரும் நூல் காண்க. முனைவர் சு. வேங்கடராமன், அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 2004. (பக். 62–67).
7. பு. ரா. புருஷோத்தம நாயுடு (தமிழாக்கம்), **ஆசாரிய ஹிருதயம்,** சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம், 1965. மேலும் G. Damodaran, Acharya hridyam - A Critical Study, Tirupathi, S. V. University, 1977.

   முனைவர் சு. வேங்கடராமன், **தமிழ் வளர்த்த வைணவம்,** மதுரை, மீனா பதிப்பகம், 2002 (பக்.77–90).

   பொதுவாக வைணவ உரைகள் பற்றி அறிவதற்குக் கீழ்கண்ட இரு நூல்களைப் பார்க்கவும்.

   1. தெ. ஞானசுந்தரம், **வைணவ உரைவளம்,** சென்னை, தாயம்மை பதிப்பகம், 1989.
   2. K.K.A.Venkatachari, **The Manipravala Literature of the Srivaisnava Acaryas,** Bombay, Ananthacharya Research Institute, 1978.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர - நாயக்கர் காலத்து அம்மன் வழிபாடு

முனைவர் கு. சேதுராமன்

## தொடக்க காலம்

அம்மன் அல்லது தாய் தெய்வத் வழிபாடு உலகின் மிகப் பழமையான ஒன்றாகும். இயற்கையை வழிபட்ட மக்கள் அதற்கடுத்தபடியான வளர்ச்சியாகத் தாயை வணங்கத் தொடங்கினர். இதற்கு ஒரு முக்கிய காரணமாகக் குழந்தைப் பிறப்பு பற்றிய அக்கால மனிதனின் அதிசயத்தினைக் குறிப்பிடலாம். இத்தாய்த் தெய்வ வழிபாடு இந்தியாவில் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். வரலாற்றுக் காலத்திற்குச் சற்று முந்திய (Proto-historic period) சிந்து சமவெளி நாகரிக காலத்தில் அம்மன் வழிபாடு பிரபலமாயிருந்ததெனத் தெரிகிறது. இதற்கு ஆதாரமாக அமைவது அப்பகுதியில் பெரும்பான்மையான வீடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட அம்மன் பொம்மைகளாகும்.[1] தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் கொற்றவை வழிபாடு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்திற்கு பிறகு தாய்த் தெய்வத்திற்கென்று தனித்த நிலையில் பல கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இக்கோயில்கள் காமகோட்டங்கள் என்று அழைக்கப்பட்டன. இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்துச் சாத்தமங்கலம் கல்வெட்டு ஒன்றிலும் காமகோட்டம் பற்றிய செய்தி காணப்படுகிறது.[2] பல்லவர்களது கோயில்களில் கருவறையின் பின்சுவரில் லிங்கத்திற்குப் பின்பாக உமையும், சிவனும், முருகனுடன் சேர்ந்து விளங்கும் நிலையில் வடிக்கப்பட்ட சிற்பத் தொகுதி இக்காலத்தில் காணப்படுகின்றது. இது சிவனது கருவறையிலேயே அவரோடு சக்தியும், குழந்தை கந்தனும் சேர்ந்தமர்ந்துள்ள சோமஸ்கந்தர் வழிபாட்டைக் குறித்தது.

பல்லவருக்கு பின்னர் வந்த முற்காலச் சோழர் காலத்தில் உமையைப் போக சக்தி என்ற பெயரில் சிவனது கருவறையில் செப்புத் திருமேனியாக வைக்கின்ற வழக்கம் இருந்தது. கி.பி 11ஆம் நூற்றாண்டு வரை நீடித்த இம்முறை முதலாம் இராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் மாறியது. இம்மன்னன் காலத்தில் தான் சிவபெருமானின் கோயிலுக்குள்ளேயே அம்மனுக்கென்று தனிச் சன்னதி கட்டும் மரபு தோன்றியது. இதனை இவன் காலத்தில் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம் கோயிலில் காணலாம். இச்சன்னதியில் வீற்றிருந்த அம்மன் 'திருக்காமகோட்டமுடைய நாச்சியார்' என்றும். திருக்காமகோட்டமுடைய ஆளுடைய நாச்சியார்' என்றும் அழைக்கப்பட்டாள். விழுப்புரம் மாவட்டத்தில் எண்ணாயிரம் என்ற ஊரிலுள்ள முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டே திருக்காமகோட்டம் பற்றிய செய்தியை முதன் முதலில் தெரிவிக்கின்றது[3]. அம்மனுக்கென்று தனிச்சன்னதி கட்டும் இப்புதிய மரபு தமிழகத்தின் பிற்பகுதிகளுக்கும் பரவியது. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சிதம்பரம் நடராசர் கோயிலில் சிவகாமி அம்மனுக்குச் சன்னதி எழுப்பப்பட்டது. 12–13 நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுப் பகுதியில் கோனாட்டு மன்னர்கள் சிவன்கோயில் உட்புறத்தில் அம்மனுக்குத் தனிச்சன்னதிகள் கட்டியுள்ளனர்.

பாண்டிய நாட்டில் அம்மனுக்கென்று தொடக்கத்தில் தனிக்கோயில் அல்லது சன்னதி எடுப்பிக்கப்படவில்லை. எனினும் அவர்களது குடைவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் அம்மனுக்கு தனி சிற்றாலயங்கள் எடுக்கப்பட்டுள்ளன. உமையவளுக்கு என்று இல்லாமல் சக்தியின் பிற அம்சங்களான, துர்க்கை, அன்னபூரணி, கஜலட்சுமி, சப்தமாதர்கள், சேட்டை ஆகியோருக்கு கி.பி 773இல் திருப்பரங்குன்றம் குடைவரையில் தனிக்கோயில்கள் வெட்டப்பட்டன. அவர்களது கட்டட வகைக் கோயில்களில் அம்மனுக்குத் தனிச் சன்னதி கட்டப்பட்டது. கி.பி 11ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திற்குப் பின்புதான். இது சோழர்களின் ஆதிக்கத்தின் விளைவாக, அவர்களது தாக்கத்தால் ஏற்பட்டிருக்கக் கூடும். பாண்டியர் காலத்தில் அம்மன் சன்னதிகள் சிவன் கோயில்களில் மகாமண்டபத்தில் வடக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கியும் அல்லது நடராசர் சன்னதியை அடுத்துள்ள முன்மண்டபத்தினுள்ளும் கட்டப்பட்டன. சற்றுப் பிந்திய காலத்தில் சுவாமிக்கு வடக்குப்புறம் திருச்சுற்றில் தனியாக கிழக்கு நோக்கியவாறு அம்மனுக்கு சன்னதி அமைத்தனர். பெருமாள் கோயில்களில் மகாமண்டபத்தில் தெற்கு நோக்கி அம்மன் சன்னதிகள் கட்டப்பட்டன. பிற்காலத்தில் ஸ்ரீதேவிக்கு (மகாலட்சுமிக்கு) திருமால் சன்னதியின் வலதுபுறமும், பூமிதேவியின் அம்சமாகக் கருதப்பட்ட ஆண்டாளுக்கு இடதுபுறமும் கிழக்கு நோக்கியவாறு தனிச் சன்னதிகள் கட்டப்பட்டன.

## விஜயநகர — நாயக்கர் காலம்

விஜயநகர – நாயக்கர் ஆட்சிக்காலம் அம்மன் கோயில் வழிபாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலமாகும். இக்காலத்தில் சுவாமி கோயில் வளாகங்களில் தனிச் சன்னதிகள் கட்டப்பட்டதோடு தனிக்கோயில்களும் எழுப்பப்பட்டன. இக்காலத்தில் தான் பெரும்பாலான பழைய கோயில்களில் அம்மன் கோயில்கள் பெரிய அளவிற் கட்டப்பட்டன. அம்மன் கோயில்களின் எண்ணிக்கை முந்தைய காலங்களைவிடப் பெருகியது. விஜயநகர அரசின் தொடக்கத்திற்கும் தேவி அல்லது புவனேசுவரி வழிபாட்டிற்கும் தொடர்பு இருந்ததாகக் கருதப்படுகிறது. விஜயநகர அரசு தோன்றுவதற்குக் காரணமாயிருந்த வித்யாரண்யர் இத்தேவியை வணங்கியதாக நம்பப்படுகிறது[4]. இவர்கள் காலத்தில் அம்மன் கோயில்கள் பல்கிப் பெருகுவதற்கு இதுவும் ஒரு காரணமெனக் கொள்ளலாம். இக்காலத்தில் தமிழகத்தில் இருந்த சுமார் 2035 கோயில்களில் 21% அம்மன் கோயில்களாகும். சிவன்கோயில்கள் 29% விஷ்ணு கோயில்கள் 26% முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் 4% கணபதி கோயில்கள் 9% மற்றவை 10% ஆகும். கொங்கு மண்டலத்தில் மட்டும் அம்மன் கோயில்கள் 38% ஆகும்[5].

இக்காலத்து அம்மன் சன்னதிகள் சிவன் கோயில்களில் சுவாமி சன்னதிக்கு வலதுபுறம் அதாவது தெற்குப் பக்கத்தில், கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டன. இதற்கு உதாரணமாக மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தைக் குறிப்பிடலாம். இங்குள்ள மீனாட்சி அம்மன் சன்னதி இக்காலத்திய கட்டடக் கலைக் கூறுகளைக் கொண்டுள்ளது. இதன் மகாமண்டபமும், முதல் பிரகாரமும், பள்ளியறையும், கி.பி. 1452இல் திருமாலிருஞ்சோலை மாவலியால் கட்டப்பட்டதென **'திருப்பணி விவரமும்' 'திருப்பணி மாலையும்'** கூறுகின்றன[6]. எனவே மீனாட்சி அம்மன் சன்னதி விஜயநகர ஆட்சியின் முதல் பாதிக் காலத்திற்குள் கட்டப்பட்டிருக்க வேண்டும். **மதுரை கூடலழகர் கோயிலில்** பெருமாள் சன்னதிக்குத் தெற்கே உள்ள **மதுரவல்லித் தாயார்** சன்னதி இக்காலத்தில் கட்டப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்பு பெருமாள் சன்னதிக்கு வடக்கில் **ஆண்டாள் சன்னதி** கட்டப்பட்டது. விஷ்ணு கோயில்களில் சுவாமி சன்னதிக்கு வலப்புறமும் இடப்புறமும் தேவியாருக்குச் சன்னதிகள் கட்டும் மரபு இக்காலத்தில் தான் பெருமளவில் வளர்ந்திருக்க வேண்டும். அதுமட்டுமன்றி **ஸ்ரீ வைணவத்தின்** செல்வாக்குப் பெருகியது. அம்மன் மூலம் இறைவன் திருவடியடையலாம். என்ற நம்பிக்கை வளர்க்கப்பட்டது. வேதாந்ததேசிகரால் **ஸ்ரீஸ்துதி** மற்றும் **பூஸ்துதி** பாடல்கள் இயற்றப்பட்டன. **நாயக்கர்** காலத்தில் **தஞ்சைப் பெரிய** கோயிலில் அம்மன் சன்னதி ஒன்று தனியாகக் கட்டப்பட்டு அதற்கு அங்குள்ள பிரதான கடவுளின் பெயராலேயே **பிருகந்நாயகி** என்றும் பெயரிடப்பட்டது.[7] அது மட்டுமன்றி பிரதான கருவறைத் தெய்வமான பிருகதீசுவரரைப் போன்றே, அதாவது அவருக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைப் போன்றே, அம்மன் கோயிலிலும் பூசைகளும், சடங்குகளும் நடத்தப்பட வேண்டமென முறைமை செய்யப்பட்டது. மதுரை மாவட்டம் **மேலத்திருமாணிக்கத்தில்** உள்ள **மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில்** தென்மேற்கு மூலையில் அம்மன் சன்னதி இக்காலத்தில் எடுப்பிக்கப்பட்டது. சென்னையில், **திருவல்லிக்கேணி பார்த்தசாரதி** கோயிலில் **வேதவல்லித்** தாயார் கோயில் ஒன்று விஜயநகர மன்னர் **சதாசிவராயர்** காலத்தில் தனிநபர் ஒருவரால் கட்டப்பட்டது. **சமயபுரத்தில் மாரியம்மன்** கோயில் இவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் விரிவாகக் கட்டப்பட்டது. இவ்வூர் அக்காலத்தில் விக்ரமபுரம் என்று அழைக்கப்பட்டது.[8]

விஜயநகர – நாயக்கர் காலத்தில் அம்மன் வழிபாட்டின் உச்சக் கட்டமாகப் பல பெருங்கோயில்கள் அம்மன் பெயராலேயே அழைக்கப்படலாயின. இவ்வமைப்பு முன்னமே இருந்திருப்பினும் இது அதிகமாகப் பிரசித்தி பெற்றது இக்காலகட்டத்திலேதான். இதற்கு **மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, திருநெல்வேலி காந்திமதி, திருவில்லிபுத்தூர் ஆண்டாள்** போன்ற அம்மன் கோயில்களைக் குறிப்பிடலாம். காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் கோயிலின் வளர்ச்சிக்கு அனைத்து விஜயநகரப் பேரரசர்களும் தங்களது ஆதரவினைக் காட்டியுள்ளனர். இக்கோயிலின் **ஸ்ரீவிமானம்** செப்பினால் இரண்டாம் ஹரிஹரன் காலத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**மகாலட்சுமிக்கும், சரசுவதிக்கும்** தனிச் சிற்றாலயங்களைக் கோயில் பிரகாரச் சுவரை ஒட்டி அமைக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. இதற்கான உதாரணங்களை **திருநெல்வேலி நெல்லையப்பர்** கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆகியவற்றிலே காணலாம். செஞ்சி வெங்கட நாயக்கர் காசு ஒன்றில் அம்மன் உருவம் உள்ளது. இராணிமங்கம்மாளின் காசுகளில் மகாலட்சுமி, சரசுவதி உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தவிர, இக்காலத்தில் **பெரிய காளியின் சிற்பங்களைக் பல கோயில்களில்** வைத்துள்ளனர். குறிப்பாக சிவனும், காளியும் நடனப் போட்டியிடும் பாங்கில் உள்ள பெரிய சிற்பங்கள் இவர்கள் காலத்தில் உருவாயின. இதனை **மதுரைக் கோயிலிலும்,** பிற இடங்களிலும் காணலாம். **அஷ்டலட்சுமியின் வழிபாடும், அஷ்ட சக்திகளின்** வழிபாடும் பிரசித்தி பெற்று விளங்கியிருக்க வேண்டும். இராமேசுவரத்தில் இவர்கள் காலத்து அஷ்டலட்சுமியின் உருவச் சிலைகள் உள்ளன. மதுரை நாயக்கர்களால் **மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் அம்மன் சன்னதிக்கு முன்பாக அஷ்டசக்திகளின் ஆளுயரச் சிற்பங்களைக் கொண்ட அஷ்டசக்தி மண்டபம் உள்ளது.** இதுவே இவர்கள் காலத்தில் இக்கோயிலில் கட்டப்பட்ட இறுதியான கட்டடம் என்று கருதப்படுகிறது.

**மதுரை நாயக்கர்கள் தேவியின் சார்பாகவே தாங்கள்** நாட்டை ஆளுவதாக நம்பினர். அம்மன்னர்கள் மீனாட்சி **அம்மனிடமிருந்தே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செங்கோல் வாங்கி ஆட்சி செய்து வந்ததாக** ஒரு விழாவை ஆண்டுதோறும் நடத்தினர். இதனைக் காட்டும் **சமகால ஓவியம் ஒன்று** மதுரைக் கோயில் பொற்றாமரைக் **குளத்திற்கு மேற்கே உள்ள ஊஞ்சல் மண்டபத்தின் விதானத்தின் தீட்டப்பட்டுள்ளது. இதில் இராணி மங்கம்மாள் அருகில் இருக்க மீனாட்சி அம்மனிடமிருந்து பிரமாணர் ஒருவர் செங்கோல் வாங்கும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது.** திருமலை நாயக்கர் காலத்தில் மதுரையரசாளும் அன்னை மீனாட்சியிடம் ஆண்டுக்கு ஒருமுறை செங்கோல் பெற்று அந்த நாள் முழுவதும் **அரியணையில் செங்கோலை வைத்து** வணங்குகின்ற வழக்கம் தொடங்கப்பட்டது. இங்கு கண்ட ஓவியம் அது இராணி மங்கம்மாள் காலத்திலும் தொடர்ந்த என்பதைக் காட்டுகின்றது. குமரகுருபரர் **மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்** யாத்ததும் இக்காலத்தில்தான்.

இவர்களது ஆட்சிக்காலத்தில் **இராஜராஜேஸ்வரி வழிபாடு சிறப்பாகக்** காணப்பட்டது. அரண்மனைக்கு **உள்ளேயே இராஜராஜேஸ்வரிக்கு தனிக்கோயில்** அமைக்கப்பட்டது. மதுரை திருமலை **நாயக்கர் மஹாலிலும், இராமநாதபுரம் சேதுபதி அரண்மனையிலும் பிறஇடங்களிலும்** இவ்வம்மனுக்கு கோயில்கள் இருந்துள்ளன. செஞ்சி நாயக்கர்களால் **செஞ்சியில் வேங்கடரமணர்** கோயில் வளாகத்தில் தாயாருக்குத் தனிச் சன்னதி அமைக்கப்பட்டது.[10]

## திருவிழாக்கள்

விஜயநகர – நாயக்கர் ஆட்சிக் காலத்தில் அம்மன் திருவிழாக்கள் மிகப்பிரசித்தி பெற்றிருந்தன. உதாரணமாக விஜயநகரத்திலேயே அக்காலத்தில் மகாநவமி என்னும் திருவிழா ஒன்பதுநாள் (அக்டோபர் – நவம்பர்) நடைபெற்றதென அப்துர் ரசாக் கூறுகிறார்.[11] இவ்விழா பற்றிய சிற்பத் தொகுதி ஒன்று ஹம்பியில் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதுவே பின்னாளில் தமிழகத்தில் நவராத்திரி விழாவாக நாயக்க மன்னர்களால் கொண்டாடப்பட்டது. இப்போதும் இது தமிழகத்தில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. தனக்கு உதவிக்கரம் நீட்டியதற்காக இராமநாதபுரம் சேதுபதிகளுக்கு நவராத்திரி விழாக் கொண்டாடும் உரிமையும், இராஜராஜேஸ்வரியை வணங்கும் உரிமையும் திருமலை நாயக்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியதாகக் கூறப்படுகிறது.[12] இக்காலத்தில் பெரும்பாலான கோயில்களில் இறைவனுக்கும் இறைவிக்குமான கல்யாண உற்சவங்கள் நடைபெற்றன. இதற்கென தனிமண்டபங்கள் கட்டப்பட்டன. இறைவன் இறைவிக்குத் திருமணம் நடைபெறுவதைக் காட்டும் கல்யாணசுந்தரர் சிற்பத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. அவற்றின் மூலம் அன்றைய காலத் திருமண முறையைப் பற்றி அறியலாம். இத்தகைய சிற்பத் தொகுதிகளை மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் முன்புள்ள மண்டபத்திலும், புதுமண்டபத்திலும் திருப்பரங்குன்றம் கோயில் முன் மண்டபத்திலும் காணலாம். திருப்பரங்குன்றம் சிற்பத்தொகுதி முருகனுக்கும் தேவசேனாபதிக்கும் நடந்த திருமணக் கோலத்தைக் காட்டுகிறது.

## நாட்டுப்புற அம்மன் வழிபாடு

தமிழகத்தில் தொன்றுதொட்டு நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு இருந்து வந்துள்ளது. காலந்தோறும் குடும்ப தெய்வ வழிபாடும், குலதெய்வ வழிபாடும் வழக்கிலிருந்தன. சீலைக்காரியம்மன், ராக்காயி, பேச்சி போன்ற குடும்ப தெய்வங்களும், தீப்பாய்ந்தம்மன், கொண்டம்மாள், நல்லம்மாள், ரெங்கம்மாள் சிங்காரி போன்ற குலதெய்வங்களும் வணங்கப்பட்டன. பல நாட்டுப்புற அம்மன்கள் அனைத்து தர மக்களாலும் வழிபடக் கூடிய தெய்வங்களாக மாறின. முன்னமே வழக்கிலிருந்த நாட்டுப்புற அம்மன் தெய்வங்கள் போக பல தெய்வங்கள் புதிதாகவும், முன்னமே இருந்த தெய்வங்களின் வேறு பெயர்களைக் கொண்டும் விஜயநகர ஆட்சிக் காலத்தில் கர்நாடகத்தி லிருந்தும், ஆந்திராவிலிருந்தும் தமிழகத்திற்குள் வந்துள்ளன. உதாரணமாக சௌண்டம்மா அல்லது சௌடாம்பிகை, முத்தாலம்மன், அங்கம்மன் அல்லது அங்காளம்மன், எல்லையம்மன் அல்லது ரேணுகா தேவி, ஜக்கம்மா, திரௌபதியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களைக் குறிப்பிடலாம். ஏழு சகோதரிகள் வழிபாடு என்பது பழமையான ஒன்றாக அனைத்துக் கிராமங்களிலும் விளங்கி வந்துள்ளது. அது ஒரு காலகட்டத்தில் மேல்நிலையாக்கம் பெற்றது. இதற்கு உதாரணமாக குப்தர் காலத்தில் உதயகிரியில் அமைக்கப்பட்ட சப்தமாதர்களின் சிற்பங்களையும் சிலப்பதிகாரத்தில் கட்டப்பட்டுள்ள 'அறுவர்க்கு இளைய நங்கை' என்ற சொற்றொடரையும் குறிப்பிடலாம். இவ்வாறு இவ்வெழுவரின் வழிபாடு மேல்நிலையாக்கப்பட்டாலும் தொடர்ந்து நாட்டுப்புற மக்களாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. சோழர் காலத்தில் வேளச்சேரியிலும், ஆலம்பாக்கத்திலும் சப்தமார்களுக்கு (எழுவருக்கு) தனிக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.[13] பெருவழக்கில் சப்தமாதர் வழிபாடு கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குப்பின் வழக்கிழந்தது.[13] ஆனால் இன்றும் கிராமங்களில் இவ்வழிபாடு கன்னிமார் வழிபாடு என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இது, விஜயநகர – நாயக்கர் காலத்தில் கிராம மக்களிடையே பெருமளவில் வழக்கிலிருந்துள்ளது.

சௌடாம்பிகை கன்னடம் பேசுகின்ற தேவாங்கர் இனத்தவர்களால் மதுரை, அருப்புக்கோட்டை ஆகிய பகுதிகளில் இன்றும் வழிபடப்பட்டு வருகிறார். ஆண்டில் ஒரிரு நாட்கள் இவ்வழிபாடு மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இம்மக்கள் கரகம் எடுத்து தங்களது வேண்டுதலைப் பெறுவதற்காகத் தங்களது உடலில் கத்தியால் குத்திக் கொள்வர். காயம் ஏற்பட்டால் அதில் திருநீறிட்டு ஆற்றிக் கொள்வர். முத்தாலம்மன் வழிபாடு ஆந்திராவில் வழக்கிலிருந்த போலரம்மா வழிபாட்டை ஒத்ததாகும்.[14] இவ்வம்மன் வழிபாட்டின் போது தற்காலிகமாக சுடுமண் அம்மன் சிலை செய்து கோயிலில் வைத்து வணங்கப்படும். திருவிழா முடிந்ததும் அச்சுடுமண் சிலை ஊருக்கு வெளியே சென்று உடைக்கப்படும். இது மழையை வரவழைப்பதற்காகச் செய்யப்படுவதாக நம்பப்படுகிறது. இவ்வழிபாட்டிற்கான சுடுமண் சிலை தெலுங்கு பேசுவோர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் தெலுங்கு பேசும் குயவர்களாலும் பிறபகுதிகளில் தமிழ் பேசுகின்ற வேளாளர்களாலும் செய்யப்படும். இவ்வழிபாட்டின் போது ஏராளமான ஆடுகளும், சேவல்களும் வெட்டப்பட்டு அம்மனுக்குப் படைக்கப்படும். பெரும்பாலான ஊர்களில் இவ்வம்மன் கோயில்கள் உள்ளன. இது போன்றே அங்காளம்மன் கோயில்கள் மதுரை, சோழவந்தான் போன்ற பெரும் ஊர்களில் உள்ளன. இவ்வம்மன் தற்போது மேல்தட்டு மக்களால் அங்காள பரமேசுவரி என்று வணங்கப்படுகிறது. அங்காள பரமேசுவரி குருநாதர் கோயில்களில் அவருக்குத் தாயாராக வணங்கப்படுகிறார். அங்காளம்மன் வழிபாடு ஆண்டில் ஐந்து நாட்கள் அக்காலத்தில் நடைபெறும்.[15] தமிழகத்தில் இவ்வம்மன் வழிபாடு எவ்வாறு வந்தது. என்பது பற்றி ஒரு கருத்து நிலவுகிறது. மேல்மலையனூரில் படையாட்சிகளும் செம்படவர்களும் வாழ்ந்தனர். தங்களோடு சண்டையிட்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாட்சிகளை அழிக்க, செம்படவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வந்த தெய்வம் இது என்று நம்பப்படுகிறது.[16]

ரேணுகாதேவி தெலுங்கு பேசும் ரெட்டி இனத்தவர்களிடையே ஒரு பிரிவினரால் வழிபடப்படுகின்றாள். இவ்வம்மனே எல்லையம்மன் என்ற பெயரில் மதுரை, திருச்சி மாவட்டங்களில் உள்ள அவ்வின மக்களாலும் பிறராலும் குல தெய்வமாக வணங்கப்படுகிறாள். மதுரை மாவட்டம் குருவப்ப நாயக்கன்பட்டியிலும், திருச்சி மாவட்டம் தலைமலை என்ற இடத்திலும் இவ்வம்மனுக்கான கோயில்கள் உள்ளன. சிலர் இவ்வம்மனைப் பீடமாக வைத்தும், வேறு சிலர் அவரது தலை மட்டும் வைத்தும் வணங்கி வருகின்றனர். எல்லையம்மன் பெருவழிபாடு அல்லது மேல்தட்டு மக்களின் வழிபடுதெய்வமாக ரேணுகாதேவி என்ற பெயரில் ஒரு காலகட்டத்தில் மாற்றப்பட்டுள்ளாள். அதாவது. ரேணுகாதேவி மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றெனக் கருதப்படும் பரசுராமனின் தாயாராகக் கருதப்பட்டார். அவரோடு எல்லையம்மன் வழிபாடு எப்போது இணைக்கப்பட்டது. என்றறிவதற்கான சான்றுகள் இல்லை.

விஜயநகர – நாயக்கர் காலத்திலும் அதற்குப் பின்பும் வணங்கப்பட்ட பெண் தெய்வங்களில் ஒன்று **ஜக்கம்மா** ஆகும். இவ்வம்மனை வணங்கியவர்கள் **கம்பளத்து நாயக்கர்** பிரிவினைச் சேர்ந்தவராவர். பிற்காலத்தில் அதாவது பதினெட்டாம் நூற்றாண்டில் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் குலதெய்வமாக இவர் வணங்கப்பட்டுள்ளார். இக்காலத்தில் வழிபடப்பட்ட **திரெபதியம்மனுக்கு** இன்றும் மதுரை, உத்தமபாளையம் போன்ற இடங்களில் கோயில்கள் உள்ளன. **மாரியம்மன் கோயில்கள் தமிழகத்தில்** பெரும்பாலான கிராமங்களில் உள்ளன. மழைதரும் கடவுளாகவும், அம்மைநோய் தீர்க்கும் கடவுளாகவும் வணங்கப்படுவதால் இவ்வம்மனது கோயில்கள் பல்கிப் பெருகியுள்ளன. மாரியம்மன் வழிபாடு ஆரம்பகாலத்தில் தெலுங்கு மற்றும் கன்னடப் பகுதிகளிலேயே சிறப்புடன் விளங்கிருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னட மொழியிலமைந்த ஆதிபுராணத்தில் மாரி போரினால் ஏற்படும் மரணத்தினைக் கண்டு மனமகிழ்ந்து கொண்டாடும் இறப்புத் தெய்வமாகக் காட்டப்பெற்றுள்ளாள். கி.பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15ஆம் நூற்றாண்டிற்கு முன்பு நடைபெற்ற ஹொய்சாளர், விஜயநகர வேந்தர்கள் படையெடுப்புகளின் விளைவாக இத்தெய்வம் தமிழகத்திற்கு வந்து பலர் வணங்கும் தெய்வமாக மாறியிருக்க வேண்டும். இதனைத் தமிழ்நாட்டு நாட்டுப்புறப் பாடல்களும் வலியுறுத்துகின்றன.[17] முன்னமே குறிப்பிடப்பட்டது போல் விஜயநகர நாயக்க மன்னர்களும் மாரியம்மன் கோயில்களுக்கு கொடையளித்துள்ளார். இதற்கு உதாரணம் சமயபுரம் மாரியம்மன் கோயிலாகும். **விஜயநகர சிற்றரசர்களான வாணாதிராயர்கள் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் மானாமதுரை மாரியம்மன்** கோயில் வழிபாட்டுக்காக ஒரு கிராமத்தை சர்வமானியமாக அளித்துள்ளனர். மானாமதுரையில் கிடைத்த சுந்தரத்தோள் மாவிலிவாணாதி ராயனின் செப்பேடு மாரியம்மனுக்கு மண்டபம் கட்டியதையும், பூசைக்கு வேண்டியதைச் செய்ததையும், கிராமம் தானமாக வழங்கியதையும் குறிப்பிடுகிறது.[18] இக்காலத்தில் நெசவுத் தொழில் செய்து வந்த **கைக்கோளர்கள் காமாட்சியம்மனையும் கங்கம்மனையும் வழிபட்டுள்ளனர்.** காஞ்சிப்புரத்தில் நான்கு திசைநாடுகளையும் கட்டுக்குள் வைத்திருந்த மகாநாட்டின் (காஞ்சிபுரம்) கடவுளாக காமாட்சியம்மனை அவர்கள் கருதினார்கள். திருப்பதியில் நடைபெற்று வந்த **கங்கம்மன்** திருவிழாவில் அவர்கள் பங்கேற்றனர். அவர்கள் மாதங்கி வேசமிட்டு அம்மன் முன் நடனமாடினர் என்று தர்ஸ்டன் கூறுகிறார்.[19]

அடுத்தவகை நாட்டுப்புற தாய்த்தெய்வ வழிபாட்டில் குறிப்பிடத்தக்கது தீப்பாய்ந்தம்மன் வழிபாடு அல்லது மாலையீடு அல்லது மாலைக்கோயில் என்பதாகும். இவ்வம்மனைக் குற்றாலம் அரசு அருங்காட்சியகத்தில் உள்ள நாயக்கர் காலத்தைச் சேர்ந்த சதிக்கல்லில் உள்ள கல்வெட்டு **'கணவனைப் பிரியாதாள்'** என்று குறிப்பிடுகிறது. அதில் உள்ள சிற்பத்தில் பெண்ணொருத்தி, கணவனோடு கைபற்றி அமர்ந்துள்ளதைக் காணலாம். தீப்பாய்ந்தம்மன் தோற்ற வரலாறு பற்றிய நாட்டுப்புற மக்களின் கருத்துக்களை ஆறு. இராமநாதன் தனது 'தமிழர் வழிபாட்டு மரபுகள்' என்ற நூலில் தொகுத்துள்ளார்.[20] இது ஒரு இனத்தைச் சேர்ந்த பெண்ணின் வழிபாடாகக் கருதப்படுகிறது. அதாவது கி.பி 17 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் **கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் பூதக்குடியைச் சேர்ந்த** சேத்தியார் குலப் பெரியவர் ஒருவருடன் உடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையேறி உயிர்நீத்த நாயக்கர்குலப் பெண் கல்நடப்பட்டு சேத்தியார் குலத்தைச் சேர்ந்தோரின் குலதெய்வமாக வழிப்படப்பட்ட வரலாறு ஆகும்.[21] இதுபோன்ற பல்வேறு இனத்தைச் சேர்ந்த பெண்களும், பல்வேறு காரணங்களுக்காகத் தீப்பாய்ந்து அவ்வெவ்வின மக்களால் வணங்கப்பட்டு வருகின்றனர். இதற்கு ஆதாரமாக நினைவுத் தூண் சிற்பங்கள் சில மதுரை அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வகையிலேயே குலதெய்வ வழிபாடும் பல்கிப் பெருகியிருக்க வேண்டும்.

இவ்வாறு கி.பி. 16ஆம் நூற்றாண்டுவாக்கில், விஜயநகர ஆட்சிக்காலத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கிய அம்மன் வழிபாடு வளர்ச்சியடைந்து ஊர் தோறும் பெருகியது. சிவன் கோயில்களில் தனிச் சன்னதிகள் கட்டப்பட்டன. பல சிவன்கோயில்கள் அம்மன் பெயராலேயே அழைக்கப்படலாயின. வைணவக் கோயில்களில் அம்மனுக்குத் தனிச் சன்னதி இருந்த போதும் சைவக்கோயில் போன்று அம்மன் பெயரிட்டு அழைக்கப் படவில்லை. இக்காலத்தில் அம்மன் திருவிழாக்கள் பெருகின. நவராத்திரி திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டதோடு கல்யாண உற்சவங்களும், கோடை அல்லது வசந்த விழாக்களும் கொண்டாடப்பட்டன. இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றன. நாட்டுப்புற அம்மன் வழிபாடுகளும், குலதெய்வ வழிபாடுகளும் இக்காலத்திற் பல்கிப் பெருகியுள்ளன. சௌடாம்பிகை, முத்தாலம்மன், அங்காளம்மன், எல்லையம்மன், கன்னிமார், திரௌபதியம்மன், மாரியம்மன், தீப்பாய்ந்தம்மன் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்கள் வணங்கப்பட்டன. இன்றும் தொடர்ந்து வணங்கப்பட்டு வருகின்றன.

## குறிப்புகள்

1. A.L. Basham, The Wonder that was India, Delhi, Rep. 1989, p.21
2. மா. சந்திரமூர்த்தி, வெ. வேதாசலம், *பராக்கிரம பாண்டியபுரம்,* சென்னை, 2002, ப.72.
3. மேலது, ப.73
4. Burton Stein, Peasant State and Society in Medieval South India, Oxford, 1994, p.391.
5. மேலது, ப.464.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. D. Devakunjari, **Madurai Through the Ages**, Chennai, Rep. 2007, p.233.

7. K.R. Srinivasan, **Temples of South India,** Delhi, 1972, p.150.

8. Usharaja60@yahoomail.com

9. S.V. Subramanian & G Rajendren, e.d., **Heritage of the Tamil Temple Arts.**

10. Robert Sewell, **A Forgotten Empire,** Delhi, 1991, p.93.

11. K.R. Srinivasan, முன்னது, ப.186

12. R. Sathianatha Iyer, History of the Nayaks of Madura, Madras. Rep. 1980. p.93

13. G.. Sethuraman, Ramesvaraam Temple - History, Art and Architecture, Madurai, 1987, pp. 185-188.

13அ. K.V. Soundararajan, **Arts of South India - Tamil Nadu and Kerala,** Delhi, 1978 pp 72 and 176

14. W.T. Elmore, **Dravidian Gods in Modern Hinduism,** Delhi, Rep. 1995, p.19

15. மேலது, ப.18

16. ஆறு, இராமநாதன், *தமிழர் வழிபாட்டு மரபுகள்,* சென்னை, 2006, ப.85.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர நாயக்கர் காலத்தில் முருக வழிபாட்டின் புத்தெழுச்சி

ஸ்ரீ. பிரசாந்தன்

## 1. முன்னுரை

சங்ககாலத்தில் குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் கொள்ளப்பட்டுள்ளான் என்பதை "சேயோன் மேய மைவரை உலகம்" என்று குறிப்பிடுகிறது தொல்காப்பியம். அக்காலத்தில் செவ்வேள் வழிபாடு சிறந்திருந்தமைக்குச் சான்றாகப் பரிபாடல் விளங்குகின்றது. "பிணிமுகம் ஊர்ந்த வெல் போர் இறைவ" (பரி : 17:49) என்றும், "ஆறுமுகத்தாறிரு தோளால் வென்றி நறுமுகர் வண்ணப் பூவயந் தோயோ" (14: 21–22) என்றும் முருகனைப் பலப்பட, பரிபாடல் சுட்டுகின்றது. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை அனைவரையும் முருகனை நோக்கி ஆற்றுப்படுத்தும் தனித்துவம் மிக்க சங்க இலக்கிய நெடும்பாட்டாக விளங்குகின்றது. இவ்வாறு, சங்க காலத்தில் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செவ்வேள்' வழிபாடு, பின்பு, தமிழ் நாட்டைக் களப்பிரர் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில், முதன்மை நிலையை இழந்தது. வட பகுதியிலிருந்து வந்த பௌத்த தத்துவத்தின் செல்வாக்கினாலும், சமண சமயத்தின் செல்வாக்கினாலும் இம் முருக வழிபாட்டின் முதன்மை தளர்ச்சியடைந்தது எனக் கொள்ளலாம்.

பின்னர், பல்லவர் – பாண்டியர் ஆட்சிக் காலத்தில் சம்பந்தர் முதலிய சமய குரவர்களின், அற்புதச் செயல்களாலும், அருளிச் செயல்களாலும், தல யாத்திரைகளாலும், சைவசமயம் தமிழ்நாட்டிற் பேரெழுச்சி கண்டது. இதனால் சிவவழிபாடே பெரும் முதன்மையுற்றது. மறுபுறம், ஆழ்வார்களது சமய நடவடிக்கைகளால் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகத் துதிக்கும் வைணவ சமயமும் நன்னிலையில் விளங்கியது. இக்காலகட்டத்தில், இச் சைவ வழிபாட்டில் சிவாலயங்களில் பரிவார தெய்வ நிலையிலேயே முருகன் வழிபடப்பட்டு வந்ததைக் காணலாம்.

சோழராட்சிக் காலத்தின் நிறைவில், இந்நிலமை ஓரளவு மாற்றமுறத் தொடங்கிய போதும், விசயநகரப் பேரரசர்களது ஆட்சி தொடங்கியதற்குப் பின்பே, முருக வழிபாடு மீளவும் சிறப்பு நிலையை அடைந்தது. பரிவார தெய்வங்களுள் ஒன்றாகவே வழிபடப்பட்டு வந்த நிலை மாறி, முருகனையே முழுமுதற் கடவுளாக வழிபடும் மரபு மீளவும் எழுச்சியுற்றது. இவ்வாறு விசயநகர நாயக்கர் காலத்தில் முருகவழிபாடு பேரெழுச்சி கண்டமைக்கான காரணங்களை ஆராய்வது அவசியமாகும்.

## 2. முருகவழிபாட்டின் மீள் எழுச்சி

விசயநகர, நாயக்கர் காலத்தில் முருகவழிபாடு மீள் எழுச்சி கண்டதென்பதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டுமல்லாமல் தொல்லியற் சான்றுகளும் ஆதாரங்களாகவுள்ளன. சங்க காலத்துக்குப் பின்பு விஜயநகரர் ஆட்சிக் காலம் வரை, முருக வழிபாடு சிறக்கவோ, முருகனின் கோயில்கள் வளர்ச்சியுறவோ போதிய நடவடிக்கைகள் எடுக்கப் பெறவில்லை என்றே ஊகிக்க முடிகின்றது. இந்த நீண்ட காலத்தில், இரண்டாம் வர குண பாண்டியன் காலத்தைச் சார்ந்த திருச்செந்தூர்க் கல்வெட்டுப் போன்ற ஒரு சில வரலாற்றுச் சான்றுகள் தாம் முருகன் கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றதைக் கூறுகின்றன. மற்றப்படி இவ்விடைக் காலத்தில் சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களே பெருமளவிற் கட்டப்பெற்றன. சிவன் கோயிற்றிருப்பணிகளே பெரும்பாலும் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், தொடர்ச்சியாக முருகன் வழிபடப்பட்டு வந்தமையும், சிவன் உமை ஆகியோரோடு இணைந்த நிலையில் அதாவது, சோமாஸ்கந்த மூர்த்தமாக முருக வழிபாடு பேணப்பட்டு வந்தமையையும் சிற்பச்சான்றுகள் மூலமாக அறியமுடிகின்றது. காஞ்சிமாநகரத்தில் இராசசிம்மன் அமைத்த கைலாசநாதர் கோயிலின் பின்பக்கச் சுவரிலும், முதற் பாண்டியப் பேரரசர் காலத்திற் கட்டப் பெற்றதாகக் கருதப்பெறும் பரங்குன்றத்துச் சிவன்கோயிலிற் சுவரிலும் சோமாஸ்கந்தப்படிமங்கள் அமைக்கப் பெற்றுள்ளமை இதனைக் காட்டுகின்றது எனலாம்.

இவ்வாறு, முருகன் கோயிற்றிருப்பணிகள் குறைந்த அளவிலும், முருக வழிபாடு சோமாஸ்கந்த மூர்த்த வடிவிலும் இடம் பெற்றுவந்த நிலைமை மாறி, விசயநகர மற்றும் நாயக்கர் காலத்தில் மீளவும் முருகவழிபாடு தனித்துத் தழைத்தது என்பதற்குச் சான்றாக, முருகன் கோயில்களில் மேற்கொள்ளப் பெற்ற திருப்பணிகள் விளங்குகின்றன.

திருப்பரங்குன்றத்தின் அருகில், வடமேற்குத் திசையில் அமைந்துள்ள பழனியாண்டவர் கோயிலில் திருமலை நாயக்கர் காலத்தில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. இக்கோயில் மண்டபங்கள் நாயக்கர் கலைப்பாணியைக் கொண்டு விளங்குகின்றன. மேலும், நாயக்க அரசர்களுள் ஒருவரான சொக்கநாத நாயக்கர் காலத்தில், செஞ்சியை ஆட்சி செய்த வரதப்ப நாயக்கர், திருப்பரங்குன்றில் உறையும் முருகனுக்குத் தங்கப் பல்லக்கு வழங்கிய செய்தியும், காத்திகைப் பௌர்ணமியன்று அன்னதானம் வழங்குதற்காக நிலக்கொடை வழங்கிய செய்தியும் கல்வெட்டுகளிற் பொறிக்கப்பெற்றுள்ளன.[1]

### 3. மீள் எழுச்சிக்கான காரணங்கள்

மேலே காட்டப்பெற்றுள்ளவை போன்ற பல திருப்பணிகள் முருகன் கோயில்களில் மேற்கொள்ளப்பெற்றமைக்கும், முருகவழிபாடு மீள எழுச்சியுற்றமைக்குமான காரணங்கள் எவை என்பது குறித்து ஆய்வாளர்கள், பலரும் பலவிதமான கருத்துகளை முன்வைத்துள்ளனர். இக்கருத்துக்களுள் முதன்மை பெறும் சிலவற்றை இவ்விடம் நோக்குவது பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.1 பிற சமய ஆட்சியாளரால் சைவம் எதிர் கொண்ட பின்னடைவும் முருகனை முன்னிறுத்தி எழுச்சி பெறலும்

சோழர்கள் மற்றும் பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சிக்குப் பிறகு தமிழகம் சுல்தான்களின் ஆளுமைக்குக் கீழே சிலகாலம் வருகின்றது. இக்காலகட்டத்தில் சைவக் கோயில்கள் பலவும் இடிக்கப்பெற்றன. பல்லவர்காலம் மற்றும் சோழர்காலத்தில் எழுச்சியுற்ற சைவம் இக்காலகட்டத்தில் அடுத்த வளர்ச்சிக்கட்டத்தை எட்ட முடியாத நிலைக்கு வந்தது. அது மட்டுமல்லாமல், எழுச்சியுற்றிருந்த சைவத்திருக் கோயில்களையும் அவற்றின் சொத்துகளையும் வேற்றுச்சமய ஆட்சியாளர்கள் அழித்து வந்த பின்னடைவு நிலையும் காணப்பெற்றது. இந்நிலையிலே, முருகன் அவதரித்து சூரரை அழித்துத் தேவர்களைக் காத்த வரலாறு சைவர்களால் பெரிதும் விரும்பப்பட்டிருக்கும் எனலாம். இதையொத்தவாறு, புறச்சமயிகளை வென்று சைவத்தை மீளவும் தலைமை பெறச் செய்யவேண்டும் என்னும் விரும்பு, கந்தபுராணக் கதையின் பாலும், முருகவழிபாட்டின் பாலும் ஓர் ஈர்ப்பை வழங்கியிருக்கும் எனக்கொள்வதிலே தவறில்லை இதனை,

> "இஸ்லாமியர் படையெடுப்பின் தாக்கம் மறைமுகமாகத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறுகிறது. கந்தபுராணம், இஸ்லாமியர் படையெடுப்பின் பின்னே, இயற்றப்பட்டது எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை முதலிய தமிழறிஞர் கருதுவர், அது அவ்வாறாயின், சிவன் அருளினாலே, முருகன் தோன்றி அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றியது போல, இறைவனே இஸ்லாமியர் படையெடுப்பை முறியடித்துத் தம்மைக் காப்பாற்ற வேண்டும்மென்று, அக்கால மக்கள் விரும்பியதை, இந்நூலின் தோற்றம் சுட்டுகிறதென்று கொள்ளலாம்"[2]

என ஆ. வேலுப்பிள்ளை கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

சைவக் கோயில்கள் இடிக்கப்பெற்றமையாது, மக்கள் மத்தியில் முருகன் பற்றிய கிளர்ச்சி நினைவைத் தோற்றுவித்தமைக்கு மற்றுமொரு காரணத்தை ஆய்வாளர்கள் சுட்டுவதும் இவ்விடத்தில் நோக்கப்பெறுவது அவசியமாகும். கோயில் திருப்பணியில் சிறந்து நின்ற மன்னன் இராஜராஜ சோழனாவான், தஞ்சைப் பெருவுடையார் முதலிய கோயில்கள் அவனின் சைவத்திருக்கோயிற் பணிக்குச் சான்றாக இலங்குகின்றன. அவனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே, அவன் மகனாகிய இராசேந்திர சோழனும் சிறந்த சிவபக்தனாக விளங்கி, கங்கை கொண்ட சோழேச்சரம் முதலிய கோயில்களைக் கட்டினான். தந்தையை விடவும் பல இடங்களைப் கைப்பற்றி, சோழ எல்லையை விரிவு செய்தவன் இராசேந்திரன், இதனால், தந்தையை விடவும் பகைவர் பலரை வென்ற இராசேந்திரன்பால் வந்த ஈர்ப்புணர்ச்சியானது, சிவனை விடவும் சிவன் மைந்தனான முருகன் மேலான ஈடுபாட்டைப் பெருக்கியிருக்கும் எனச் ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

> "பிற மதத்தினரின் தாக்குதலால் சைவக்கோயில்கள் தகர்க்கப்பட்ட பொழுது, முற்காலத்தில் (நாயன்மார் காலத்தில்) தான் அற்புதங்கள் நிகழ்த்தியதுடன், தன் அடியவர்களையும் அற்புதங்கள் நிகழ்த்தச் செய்து சைவமக்களைக் காத்தருளிய சிவன், தன் புனிதக் கோயில்கள் பாழ்படுவதை பார்த்துக் கொண்டுள்ளனனே என்ற ஏக்க எண்ணம் சிவனை முதலாகக் கொண்ட சைவ உலகில் ஏற்பட்டிருக்கலாம். பேராற்றல் படைத்த இராசராசனைக் காட்டிலும் மேலும் உயர்ந்து பெரும்வெற்றியும், பெரும் புகழும் ஈட்டித்தந்து தமிழகத்தை உய்வித்த இராசேந்திரனை வரலாற்றுலகில் கண்டவர்கள் தமிழ்மக்கள். சைவசமயம் உலகில் இத்தருணத்தில் சிவகுமரனாம் முருகனை வழிபடுவதில் கருத்தைச் செலுத்தியிருக்க கூடும்"[3]

என்று திருப்பரங்குன்றங் குறித்து ஆய்வு செய்த நாச்சியப்பன் கூறுகின்றார். எவ்வாறெனினும், சைவத் திருக்கோயில்கள் இடிக்கப்பெற்று, தமிழர் வரலாற்றில் அச்சைவம் அடைந்த பின்னடைவிலிருந்து மீட்சிபெற, முருக வழிபாடு ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது என்பதிலே தவறில்லை.

## 3.2 தமிழ்நாட்டில் பிறமொழியினர் செல்வாக்கும் தமிழ்க் கடவுள் முதன்மைபெறலும்.

சோழர் காலத்தை அடுத்து வந்த காலப்பகுதியில், தமிழ்நாடானது வேற்றசர்கள் பலரதும் ஆளுகைக்குக் கீழே வந்தது. இதனால், தமிழ்நாட்டில் வேற்றுமொழிச் செல்வாக்கு மிகுந்தது. சுல்தான்கள், விசயநகரப் பேரரசர்கள், நாயக்க மன்னர்கள், மகாராஷ்டிரர், நவாப்கள் என்ற பலரும் இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்தினர். இவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்காலங்களில் இஸ்லாமியர், தெலுங்கர், கன்னடர் ஆகிய பலரும் குடியேறினர். இவர்களால், தெலுங்கு, கன்னடம், வடமொழி முதலிய மொழிகளின் செல்வாக்கு அதிகரிக்க, தமிழ்நாட்டில் தமிழின் செல்வாக்கும் முதன்மையும் தளர்ச்சியுற்றன. அரசியல் நிலையில் தமிழர் உரிமை பெற முடியாத சூழ்நிலையில் சமயம் முதலிய வேறு நிலையிலாவது முதன்மை பெறும் எண்ணம் அக்காலத் தமிழர்களிடம் விளைந்ததெனலாம்.

இதன் வெளிப்பாடே முருக வழிபாட்டின் மீள் எழுச்சி எனலாம். சமய நிலைப்பட்டு, சமய அடிப்படையிலாவது தமிழர் உரிமையைப் பேணுவதற்கு அக்கால மக்கள் கைக்கொண்ட வழிமுறையே முருக வழிபாட்டை மீளவும் முதன்மைப்படுத்தியது என்பதில் தவறில்லை.

> "தென்தமிழ் நாட்டில் ஏற்பட்ட தெலுங்குக் குடியேற்றங்கள் காரணமாகவும் நிர்வாகத்தில் தெலுங்கரின் முதன்மை காரணமாகவும் தமிழ் நிலைப்பட்ட தனித்துவத்தை வெளியிட முருக வணக்கம் உதவிற்று எனலாம். முருகனைத் தமிழோடு சேர்த்துப் பாடுவதற்கு இதுவே காரணமாகும்." [4]

என்கிறார் சிவத்தம்பி.

'சங்கத் தமிழின் தலைமைப் புலவன்' என்று குமரகுருபரன் தமிழோடு தொடர்புறுத்தி முருகனைப்பாட, இக்காலகட்டத்தில் முருக வழிபாடு செழிப்புறுதற்குப் பிரதான காரணர்களுள் ஒருவராக விளங்கிய அருணகிரியாரோ பலவிடயங்களிலும் இதனைப் பாடிச்செல்லக் காணலாம்.

*"மெய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்*
*வைதாரையும் அங்கு வாழ வைப்பபோன்.........' (கந். அலங். 22)*

*"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை செஞ்சுடர்வேல்*
*வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை........" (கந் அலங். 72)*

*"செந்தில் வாழ் செந்தமிழ் பெரியோனே"*
*"தண்டமிழ் மிகு ரேய முருகேசா"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அருணகிரியார் மீளமீளத் தமிழோடு முருகனைத் தொடர்பு படுத்துவதனை, களப்பிரர் காலத்தின்பின் தமிழோடு தன் பாடலைப் பெரிதும் தொடர்புபடுத்திய சம்பந்தர் தன்மையோடு ஒப்பிட்டு நோக்கலாம்.

## 3. 3 வைதிக சமயங்களிடையேயான பூசல் தணித்தல்

சோழர் ஆட்சிக் காலத்தில் சைவ, வைணவ சமயங்களிடையே பெரும்பாலும் இணக்கம் இருக்கவில்லை. வைதிக சமய நெறிகளாகவே இரண்டும் அமைந்திருப்பினும், இவ்விரண்டிற்குள்ளும் எது பெரியது சிறந்தது என்பது தொடர்பில் முரண்பாடு நிலவியது. களப்பிரர் காலத்தின் பின்பு, அவைதிக நெறிகளுக்கெதிரான சமயப் போராட்டம் இவ்விரு சமயங்களாலும் முன்னெடுக்கப்பட்டது. இரு சமயங்களும் சமுதாயத்தில் மேலோங்கிய நிலையில், இவற்றுக்கிடையிலான போட்டி மனோபாவம் சமய உலகில் பெரிதும் ஓங்கியது. வைசவக் கோயில்களைக் கண்டால், வைணவர்கள் பாவகாரியம் பண்ணியதாக உணர்ந்தனர். இவ்வாறே சைவர்களும், விஷ்ணு வழிபாட்டைத் தவிர்ந்தனர். 'கண்டு முட்டு கேட்டு முட்டு' எனும் நிலை காணப்பெற்றமையை அறியமுடிகின்றது. இந்நிலையில், வைதிக சமயப் பூசலுக்காக வருந்திய சமயப் பெரியார்களால், இப்பூசல் தணிப்புக்கான ஒரு உபாயமாக முருக வழிபாடு மீளவும் முக்கியத்துவப்படுத்தப்பெற்றது. சிவ வழிபாட்டையும், விஷ்ணு வழிபாட்டையும் இணக்கப்படுத்துவதற்கு, சிவனின் மகனாகவும் விஷ்ணுவின் மருகராகவும் விளங்குகின்ற முருகனின் வழிபாடு பொருத்தமான தேர்வாக அமைந்திருந்தது.

*"கவியால் கடல் அடைத்தோன் மருகனை கணபணக்கட்*
*செவியால் பணியணி கோமான் மகனை........"* (கந் அலங். 43)

என்று அருணகிரியார் அழைத்து மகிழ்வதைக் காணலாம். இங்கு, குரங்குக் கூட்டத்தின் துணையோடு கடல் கடந்த இராமரின் (விஷ்ணுவின்) மருமனாக, முருகன் பேசப்பட்ட கையோடு, சிவனின் மகனாகவும் சுட்டப்பெறும் நிலையைக் காணலாம். இவ்வாறே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மாலோன் மருகனை*

*மன்றாடி மைந்தன...."* *(கந் அலங் 90)*

என்று பலவிடங்களிலும் அவர் குறிப்பிட்டுச் செல்கின்றார். கந்தசஷ்டி தந்த தேவராய சுவாமிகள்,

*"திருமால் அயன் சிவன் சேர்வது மூலமும்*

*கௌரி லட்சுமி கலைமகளுடனே*

*அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல*

*அறுமுகத்துடன் அவதரித்தோனே!*

*(பழமுதிர் சோலை. கந்த சஷ்டி. வரி 43–46)*

என்று பாடிச் செல்லுகின்றார். இவ்வாறு பாடப் பெறுவதன் நோக்கத்தை அவர் வெளிப்படையாக உரைக்கும் கந்தசஷ்டிப் பகுதியும் இங்கு அவசிமாகக் குறிப்பிடப்பட வேண்டியது.

*"சைவம் வைணவம் சமரசமாக*

*தைவதமாய் வந்த தாட்டிகப் பெருமானே!"*

*(சுவாமிமலை, கந் சஷ்டி வரி 44–45)*

என்பதும் தேவராயர் வாக்கு.

*"முருகன் சிவபெருமானுடைய புதல்வன், திருமாலுடைய மருமகன் உமையின் புதல்வன், இலக்குமியின் மருமகன், வள்ளியின் கணவன் முதலிய கருத்துக்கள கௌமாரம் என்ற முருக வழிபாட்டை முக்கியமான பிற இந்து சமயப் பிரிவுகளோடு இணைக்க உதவியிருக்கும்"*[5]

என்ற ஆ. வேலுப்பிள்ளையின் கருத்தும் இதனையே வலியுறுத்துகின்றது.

### 3.4 சங்க இலக்கிய மீட்சி இயக்கம் – உரைகள்

சோழர் காலத்தின் நிறைவுப் பகுதி, மற்றும் விசயநகரர் காலத்தில் பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம் முதலிய நூல்களுக்குப் பலராலும் உரையெழுதப்பட்டது. இவ்வாறு, உரைகள் மூலமாக பழந்தமிழ் நூல்கள் மீளவும் நோக்கப்பெற்றதனால், பழந்தமிழர் பண்பாடு எது என அறிவது இயலுமானதாயிற்று. பாண்பாட்டின் கூறுகளுள் ஒன்றான சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு குறித்த செய்திகளும் வெளிவந்தன. இவ்வாறு, உரையாசிரியர்கள் மூலமாக, சங்கத் தமிழ்ப்பண்பாடு மீளவும் கண்டறியப்பட்ட நிலை விசயநகர நாயக்கர் காலத்திற் காணப்பட்டது. இவ்வுரையாசிரியர் செயற்பாட்டை சங்கத்தமிழ் மீட்சி இயக்கம் என்பார் எஸ். வையாபுரிப்பிள்ளை.

"தமிழின் பண்டை நிலையை உன்னியுன்னி அந்நிலையைத் திரும்ப எய்துதல் கூடுமா என்று கருதலாயினர். சங்கத் தமிழின் மீதும், அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின் மீதும் பொதுமக்கள் பற்றுக் கொண்டு கற்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணினர். அவற்றின் நல்லியல்புகள் தமிழில் மீண்டும் தழைக்க வேண்டுமென்று கருதினர். இந்நோக்கங்களைக் கொண்டு கல்வியில் தலைசிறந்தோர் சிலர் உழைத்து வந்தனர். சங்கத்தமிழுக்கு மீட்சியியக்கம் நிகழ்வதாயிற்று. இம்மீட்சி இயக்கத்திற்கு ஓர் அறிகுறியாகச் சங்க இலக்கியங்களுக்கும் அவற்றோடொத்த பெருமையுடைய குறள் போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன"[6]

என்பது வையாபுரிப்பிள்ளையின் கூற்று.

இவ்வாறு, சங்க மரபு மீள நோக்கப்பட்ட போது, விஜயநகர நாயக்கர் காலத் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் பெருவழக்கிலிருந்த சைவம், வைணவம் எனும் இரு சமயங்களும் சங்க மரபுச் செய்திகளை அறிந்து கொண்டன. வைணவத்துக்கு முதற்தெய்வமாகிய திருமால், பழந்தமிழர் பண்பாட்டில் முல்லை நிலத் தெய்வமாகக் கொள்ளப்பட்டார் எனும் செய்தி வைணவர்களுக்கு உவப்பானதாக இருந்தது. 'கறைமிடற்று அண்ணல்' என்றும், 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்றும் சங்க இலக்கியங்கள் சிவனைப் போற்றிய போதும், சங்க மரபில், சிவனுக்கு எனத் தனி நிலம் வகுத்து வணங்கப் பெற்ற மரபு இல்லை.

*"மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்*
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென்று*
*சொல்லிய முறையில் சொல்லவும் படுமே"* **(தொல். அக. 5)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனுந் தொல்காப்பியச் சூத்திரத்தின்வழி இதனை அறியலாம். எனவே, சிவன் ஒரு நிலத்தின் தெய்வமாகக் கொள்ளப்படாத நிலையில், இந் நிலத் தெய்வங்களுள் ஒருவரைத் தமது கடவுளாகக் கொள்ள வேண்டிய தேவை சைவர்களுக்கு ஏற்பட்டது எனலாம். எனவே, சிவகுமாரனாகிய முருகனை, சைவர்கள் பெரிதும் போற்றி, "சிவன் வேறு முருகன் வேறு அல்ல, சிவனே முருகன், முருகனே சிவன்" எனும் கருத்தைப் பெரிதும் வலியுறுத்தினர். இதனால், முருக வழிபாடு, அப்போதைய தமிழ் நாட்டில் பெரும்பான்மைச் சமயத்தினராக இருந்த சைவர்களால் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டது. இதனால், முருக வழிபாடு விஜயநகர நாயக்கர் காலத்தில் மீளவும் பேரெழுச்சி கண்டுகொண்டது எனலாம்.

*"ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்*
*பேதகம் அன்றால், நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்"*

என்றும்,

*"ஈசனே அவன் ஆதலால் மதலையாயினன் காண்*
*ஆசிலா அவன் அறுமுகத் துண்மையால் அறிநீ*
*பேசில் ஆங்கவன் பரனொடும் பேதகன் அல்லன்"*

என்றும்,

*"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி*
*கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே*
*ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"*

என்றும் அமையும் கந்தபுராணவரிகள், முருகனைச் சிவனாகவே கருதிப் போற்றிய பான்மையை எடுத்துரைகின்றன. இவ்வாறே, குமரகுருபரர் சிவனுக்குரிய இயல்புகளை முருகன் மேலேற்றி, கந்தர் கலிவெண்பாவில் பாட்டியுள்ளமையையும் காணலாம்.

### 3.5 சம்பந்தர் முருகன் எனப்படுத்தல்

பல்லவர் கால பக்தி இலக்க மூலவர் சம்பந்தர். இவருடைய தலைமையின் கீழேதான் சைவசமயம் ஓர் இயக்கமாகப் பேரெழுச்சி கண்டது. இவருடைய அற்புதங்கள் பிற சமயத்தை நாடிய சைவரை, மீளவும் சைவசமயிகளாக்கின. இவ்வாறாக மீளவும் சைவத்துக்குப் புத்துயிர்ப்புத் தந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தரைப் பிற்காலச் சைவர்கள் பலரும், அவதார புருஷராகவே பார்த்தார்கள். அவரை நாயகராகக் கொண்டு, பல இலக்கியங்கள் இயற்றப் பெற்றன. இவ்வாறு பிற சமயத்தினரை வெற்றி கொண்ட சம்பந்தரை, அசுரரை வென்ற முருகனாகவே காணும் போக்குத் தலையெடுத்தது. மேலும், உமையம்மையாரின் திருமுலைப் பாலை உண்டதான சம்பவமும், சம்பந்தரை முருகனாகவே கருதுதற்கு வழிகோலிற்று எனலாம். இவற்றின் பின்னணியில் சம்பந்தரை முருகனாகவே கருதிப் பின்னை அடியார்கள் பலரும் பாடிப் போற்றி வரலாயினர்.

*"மதுரை நாட்டினிலே வாழ்வாகிய*
*அருகர் வாக்கினிலே சார்வாகிய*
*வழுதிமேற்றிரு நீறே பூசி நிமிர்ந்து கூனும்,*
*மருவு மாற்றெதிர் வீறே டேறிட*
*அழகி போற்றிய மாறாலாகிய*
*மகிமையில் சமண் வேரோடேகெட வென்ற கோவே!"*

என்று வேலூர்த் திருப்புகழிலே அருணகிரிநாதர் போற்றியிருக்கக் காணலாம். இங்கு சம்பந்தரின் செயல், முருகனின் செயலாகவே கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு சம்பந்தரின் செல்வாக்கு மிக்கிருந்த காலத்தில், சம்பந்தர் முருகனின் அவதாரம் என்று கொள்ளப்பட்டதனால், முருக வழிபாடும் பெருவளர்ச்சி உற்றது எனக் கூறலாம்.

### 3.6 தனிமனித ஆளுமைகள்

இக்காரணங்கள் அனைத்துக்கும் புறம்பாக, இவ்வாறு முருகவழிபாடு பேரெழுச்சி கண்டமைக்குச் சில தனிமனித ஆளுமைகளும் காரணமாக இருந்தன என்பதனையுங் கருத்திற் கொள்ளவேண்டும். எவ்வாறு, பக்தி இயக்கக் காலத்தில், பல சமூகப் பின்னணிக் காரணங்கள் அடிப்படையாயிருந்த போதிலும், சம்பந்தர், நாவுக்கரசர் முதலிய தனிமனிதர்களின் உழைப்பு சைவ எழுச்சிக்குக் காரணமாயிருந்ததோ, அவ்வாறே இக் காலத்தில், முருக வழிபாட்டின் மீள் எழுச்சிக்குச் சில ஆளுமைகள் அடிப்படையாய் இருந்துள்ளன. இவ்வாறு ஆளுமை மிக்க உழைப்பு நல்கிய முருகன் அடியார்களுள் அருணகிரிநாதரும், கச்சியப்ப சிவாசாரியாரும் முதன்மை பெறத்தக்கவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநூபூதி, கந்தரந்தாதி, வேல்விருத்தம், மயில்விருத்தம், திருவகுப்பு முதலிய நூல்கள் பாடிய அருணகிரியார், பல அற்புதங்கள் செய்து, முருகவழிபாட்டில், நம்பிக்கையை ஏற்படுத்தினார். மூவர் முதலிகள் போன்று தலயாத்திரை செய்து, அடிமட்ட மக்களிடத்தும் சமய நம்பிக்கையை விதைத்தார். திருக்கோவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், திருவாமூர், வடுகூர், துறையூர், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருமாணிகுழி, திருத்தில்லை, திருவேட்களம், சீகாழி, திருவாரூர், சிக்கல், நாகப்பட்டினம், வேதாரணியம், கும்பகோணம், சுவாமிமலை முதலிய பல கோயில்களுக்கும் இவர் சென்று முருக வழிபாட்டை வளர்த்தார். தனியே சமைந்திருந்த முருகன் கோயில்களை மட்டும் பாடியதோடு அமையாமல், சிவன் கோயில்களில் பரிவாரத் தெய்வங்களுள் ஒன்றாக வீற்றிருந்த முருகப் பிரானையும் இவர் பாடியுள்ளார். இதனால், சைவர்களும் முருகனுடைய பாடல்களைத் தோத்திரங்களாக ஓதும் வழக்காறு ஏற்பட்டது. இதன் வளர்ச்சி நிலையாக, பஞ்ச புராணத்தோடு நிறைவில் திருப்புகழ் ஓதும் மரபு காணப்படுகின்றது எனலாம். மேலும், அருணகிரியார் சில வாதங்களிலும் ஈடுபட்டு முருகவழிபாட்டின் பெருமையை நிலை நாட்டினார் என்பர். இவ்வகையில், சம்பந்தாண்டான் என்றும் தேவி உபாசகனோடு அரச அவையில் வாதம் செய்து, கடவுளை வரவழைத்துக் காட்டி அருணகிரியார் வெற்றி பெற்றார் என்னும் சம்பவம் பலராலும் கூறப்பெறுகின்றது. [7]

அருணகிரியார் போல முருகவழிபாடு, விசயநகர நாயக்கர் காலகட்டத்தில் மீள் எழுச்சி கண்டமைக்கு, கச்சியப்ப சிவாசாரியாரும் ஒரு காரணர் ஆவார். சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என, இறைவன் அடியெடுத்துக் கொடுத்தது போல, கச்சியப்பருக்கு 'திகடசக்கர' என அடியெடுத்துக் கொடுத்தான் என்று வழங்கப்பெற்ற செய்தியும், அரங்கேற்றத்தின் போது முருகன் நேரில் வருகைதந்து இலக்கணங் குறித்த வினாவுக்கு விடையளித்தான் என்ற செய்தியும் முருக வழிபாட்டின்பால் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்தன

சிவனும் முருகனும் வேறல்லர் என்ற கருத்தைப் பலவிடங்களிலும் வற்புறுத்திச் சென்று முருகனது தலைமையும், முழுமுதற்றன்மையும் வெளிப்படும் வண்ணம் கந்தபுராணத்தைப் படைத்து, முருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பெருமை அக்காலத்தில் வாழ்ந்த கச்சியப்பருக்கு உரியது"[8]

என்று ஆய்வாளர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு, முருக வழிபாட்டின் புத்தொழுச்சிக்குத் தனிமனித ஆளுமைத்திறன் மிக்க அடியவர்களும் தலைமைக் காரணங்களாக இருந்தனர் என்பது சுட்டத்தக்கது.

## அடிக்குறிப்புகள்

1. நாகப்பா, நாச்சியப்பன், திருப்பரங்குன்றம் கோயில் – வேற்கோட்டம், ப. 105
2. வேலுப்பிள்ளை, ஆ. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக். 149, 150.
3. நாகப்பா நாச்சியப்பன், திருப்பரங்குன்றம் கோயில் – வேற்கோட்டம், ப. 101
4. சிவத்தம்பி கா. மதமும் கவிதையும் ப. 48."மெய்தார் அணிகுழால் வள்ளயை
5. வேலுப்பிள்ளை, ஆ. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக். 149, 150
6. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ்ச்சுடர்மணிகள், ப. 198.
7. பாலசுப்பிரமணியன், சி. (1985) முருகன்காட்சி, சென்னை: பாரி நிலையம், ப. 106.
8. நாகப்பாராச்சியப்பன், மு. கு. நூ. ப. 102.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர - நாயக்கர் கால மடங்கள்

முனைவர் சு. இராசகோபால்

தமிழகம் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில், கி.பி. 14 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், நிகழ்ந்த டெல்லி சுல்தானியர்களின் படையெடுப்புக்கள் காரணமாக அரசியல், சமயம் மற்றும் பொருளாதார நிலைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. செல்வமும் வழிபாடும் மிக்க திருக்கோயில்கள் தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டதால் சமய நிகழ்ச்சிகளும் வழிபாடுகளும் பெருமளவில் நின்றுபோயின. மதுரை மற்றும் பிற கோயில்களில் தெய்வச்சிலைகள் பாதுகாப்பிற்காகப் பூபதனம் செய்யப்பட்டன. திருவரங்கம் போன்ற கோயில்களிலிருந்து தெய்வச் சிலைகள் பாதுகாப்பிற்காகச் செஞ்சி போன்ற வெகுதொலைவில் உள்ள ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. துலுக்கர் படையெடுப்பு தங்கள் கோயில்களில் நிகழக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது என்று வேண்டிய பணியாளர்கள் திருப்பரங்குன்றம் போன்ற கோயிற் கோபுரங்களின் மீதேறி விழுந்து தன்னுயிர் மாய்த்துக்கொண்ட நிகழ்வுகளும் உண்டு. டெல்லி சுல்தானியர்களின் படையெடுப்புகள் ஓய்ந்த போது சமயச் சிறப்புக்களை மீட்டெடுக்கும் துடிப்பான எண்ண அலை வெகுவாக எங்கும் பரவியிருந்தது. இச்சூழல் விஜயநகர ஆட்சித் தோற்றத்திற்கும் பரவலுக்கும் வெகுவாகப் பயன்பட்டது. அதோடு இப்பேரரசின் தலையாய கடமையாகச் சமயப் பணிகள் அமைந்தன.

திருக்கோயில்களில் வேதபாராயணம் செய்தல், ஜபம் செய்தல், அத்யயனம் செய்தல், புராண இதிகாசக் கதைகளைப் படித்துச் சொல்லுதல், நீதிநூல்களைப் படித்து விளக்குதல், தெய்வதரிசனப் பயணிகளுக்கு உணவளித்தல், பிராமணர் – மாகேஸ்வரர்களுக்கு உணவூட்டுதல் ஆகியவை வழிபாடுகள், விழாக்கள் ஆகியவற்றுடன் கூடுதலாக நிகழ்த்தப்பட்டுச் சமய நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டன. இதன் பொருட்டு வேதவிற்பனர்கள்; வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்களுக்கு உரையெழுதி விளக்கம் தருவோர்; சிற்பம், கட்டடம், ஓவியம், நாடகம், நடனம் ஆகிய ஊடகங்கள் வழியாகச் சமயத் தொண்டர்களாக விளங்கும் கலைஞர்கள்; பொருளாதாரப் பின்புலம் தரும் வணிகர்கள்; அரசு மற்றும் அதிகாரிகளின் பங்களிப்பு வெகுவாகக் கூடின.

சமய நடவடிக்கைகளில் கோயில்களைப் போன்றே மடங்களின் பங்கும் இருந்தது. பௌத்த – சமண மதங்களுக்கு விகாரங்கள் மற்றும் பள்ளிகளின் பங்களிப்புக்கு ஒப்ப சைவ வைணவ மதங்களுக்கு மடங்கள் விளங்கின. மடங்கள் பற்றிய குறிப்புகள் கி. பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன.[1] சோழர் காலத் தொடக்கத்தில் முக்கியமான வழிபாட்டுத் தலங்களை ஒட்டிக் குறைவாகக் காணப்பட்ட மடங்கள் சோழர்களின் பிற்காலத்திலும் பிற்காலப் பாண்டியர் காலத்திலும் வெகுவாகப் பரவிப் பல இடங்களிலும் அமைந்த போக்கினைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.[2] சில நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மடங்கள் ஒரே ஊரில் இருந்துள்ளதையும் அறிகின்றோம்.[3]

சோழர் மற்றும் பிற்காலப் பாண்யடிரை அடுத்து வந்த விஜயநகரர் – நாயக்கர் காலத்திலும் தமிழகமெங்கும் பரவலாக மடங்கள் இருந்தன. விஜயநகரப் பேரரசர்கள்; தஞ்சை, செஞ்சி, மதுரை, வேலூர் நாயக்கர்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலக்கட்டத்தில் சிற்றரசுகளாக விளங்கிய வாணாதிராயர்கள்; தென்காசிப் பாண்டியர்கள், தொண்டைமான், சேதுபதி, சூரைக்குடி அரசு, அறந்தாங்கி அரசு மற்றும் மராட்டியர் ஆகியோரும் மடங்கள் அமையவும், அவற்றின் நடவடிக்கைகள் செவ்வனே நடைபெறவும் நிலங்கள், மனைகள், வரி வருவாய்கள் முதலியவை நல்கி ஆதரித்துள்ளனர். இக்கட்டுரைக்காக மேலோட்டமாகச் செய்யப்பட்ட ஆய்வில் தமிழகத்தில் பரவலாக அறுபதுக்கும் மேற்பட்ட தரவுகளும் தமிழகத்திற்கு வெளியே கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய பகுதிகளில் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட தரவுகளும் கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. இனி மேற்கொள்ளும் முழுமையான ஆய்வில் நிறையத் தரவுகள் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

விஜயநகரர் கால நிர்வாகம் மற்றும் சமூக வாழ்க்கை தொடர்பாக ஆய்வு செய்து நூல் வெளியிட்டுள்ள டி. வி. மகாலிங்கம்[4], தென்னிந்திய வரலாறு, சமூகம், சமயம் பற்றி ஆய்ந்து நூல்கள் வெளியிட்டுள்ள கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி[5] ஆகியோர் மடங்கள் குறித்துத் தகவல்கள் தந்துள்ளனர். சங்கரரின் அத்துவைத மரபிலான சிருங்கேரி, காஞ்சி மடங்கள்; பாசுபத மார்க்கத்தைப் பின்பற்றிய கோளகி மடங்கள், காளாமுக மடங்கள்; மாதவ மடங்கள், அகோபல மடங்கள்; சைவ மடங்களான திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மடங்கள் குறித்த செய்திகளையும் தந்துள்ளனர். மேலும் இவ்வாய்வில் நாயக்கர் காலத்தில் சமூக, சாதிகளுக்கான மடங்கள் திருக்கோயில்களைச் சார்ந்தமைந்து விளங்கியமையையும் நாம் காண்கின்றோம்.

மடம், சந்தானம், சத்திரம், முதலிய சொற்கள் ஏறத்தாழ ஒரு பொருள் தருவனவாக இக்கால கட்டத்திற் காணப்படுகின்றன. ஆசாரியர், மடபதி, முதலியார், பண்டாரம், தம்பிரான், முனிவர், சந்ததி, குரு முதலிய சொற்கள் மடத்தலைவர்களைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆதிசங்கரர் பரமாத்மா, ஜீவாத்மா என்ற இருமைக் கோட்பாட்டிற்கு (துவைதம்) மாறாக ஒருமைக் கோட்பாட்டை (அத்துவைதம்) முன் வைத்தவர். இவரது காலம் கி. பி. 8–9 ஆம் நூற்றாண்டு என்பர். இவர் வடக்கில் ஹரித்துவாரம், கிழக்கில் ஜகன்னாதம், தெற்கில் சிருங்கேரி, மேற்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாரகை ஆகிய இடங்களில் மடங்களை நிறுவினார் என்றும் வேதாந்தத் துறவிகளின் குழுக்கள் குறித்து இருந்த குழப்பத்தைச் சீர் செய்து தீர்த்தம், ஆஸ்ரமம், சரஸ்வதி, பாரதி, வனம், ஆரண்யம், பர்வதம், சாகரம், கிரி மற்றும் புரி என்று 10 பிரிவுகளை ஏற்படுத்தினார் என்று கூறுவர்[6]. சைவ மடங்கள் ஆலமர் செல்வரின் சிஷ்ய முனிவர்களான 1. சநகர் 2. சநற்குமாரர் 3. சநந்தனர் 4. சநாதனர் ஆகியோர் அடியொட்டி வந்தவை என புராண அடிப்படையில் குறிப்பர். [7]

## காஞ்சிபுரம் சங்கராச்சாரிய மடம்

காஞ்சிபுரத்தில் அமைந்த சங்கராச்சாரிய மடம் பற்றிய செப்பேடுகள் அவர்கள் தங்கள் பெயர்களை மகாதேவர், சந்திரசூடர், சந்திர சேகரர் என்று மாறிமாறி வைத்துக் கொண்டதையும் சரஸ்வதி என்ற பொதுப்பெயர் கொண்டிருந்ததையும் காட்டுகின்றன. இம்மடம் குறித்த செப்பேடுகள் இம்மடத்திலிருந்தே பெறப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

விஜயநகரர் காலத்திற்குச் சற்று முன்னதாக தமிழகம் ஆண்ட விஜயகண்ட கோபாலன் என்ற தெலுங்குச் சோழ மன்னன் காஞ்சிபுரம் அருகிலுள்ள அம்பிகாபுரம் என்ற ஊரினை கி. பி. 1291 இல் ஸ்ரீசங்கரார்யர்க்கு வழங்கியதை ஒரு செப்பேடு குறிப்பிடுகிறது. கிரந்த எழுத்தில் சமஸ்கிருத மொழியில் இச்செப்பேடு அமைந்துள்ளது. ஹஸ்தி சைலத்தின் (வரதராஜப் பெருமாள் கோயில்) மேற்குப்புறத்தில் அமைந்துள்ள மடத்தில் தினமும் அன்னதானம் வழங்கி பிராமணர்களுக்கு வேதாந்தத்தில் பொதிந்துள்ள கருத்துக்களை விளக்குபவரான ஸ்ரீசங்கரார்ய குருவினால் அம்மடத்தில் தினமும் 108 பிராமணர்களுக்கு உணவளித்தல் பொருட்டு சோலைகளும் பல வகை மரங்களும் நிறைந்ததும் வேகவதி நதிக்கரையில் அமைந்ததுமான அம்பிகாபுரத்தை மன்னன் நல்கினான் என்று இச்செப்பேட்டில் செய்தி சொல்லப்பட்டுள்ளது.[8]

கி. பி. 1506 இல் விஜயநகர மன்னன் வீரநரசிம்மனால் சதாசிவ சரஸ்வதியின் சீடரான மகாதேவ சரஸ்வதிக்கு குடியன்தாங்கல் என்ற ஊரும் ஏழுசுவி என்ற ஊரும் தானமாக வழங்கப்பட்டதை இரண்டாம் செப்பேட்டில் காண்கிறோம்.[9]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1521 மற்றும் கி.பி.1527 ஆகிய ஆண்டுகளில் கிருஷ்ணதேவராயர் இம்மடத்திற்கு முறையே கிருஷ்ணராயபுரம் மற்றும் உதயம்பாக்கம் ஆகிய ஊர்கள் வழங்கியதை மேலும் இரண்டு செப்பேடுகள் காட்டுகின்றன. கிருஷ்ணராயபுரம் வழங்கப்பட்டதைக் குறிக்கும் முதற் செப்பேடு[10] விஜயநகரரின் இலாஞ்சிச் சின்னங்களான பன்றி – சூரியன் – சந்திரன் ஆகியவை உள்ள முத்திரை வளையத்துடன் கூடியது. கிருஷ்ண தேவராயர் கிருஷ்ணாநதிக் கரையில் முகாமிட்டிருந்தபோது மகாதேவ சரஸ்வதியின் சிஷ்யரான காஞ்சிபுரவாசி சந்திரசூட சரஸ்வதிக்கு கிருஷ்ணராயபுரம் மற்றும் காடப்பட்டு ஆகிய ஊர்களை வழங்கியுள்ளார். இச்செப்பேட்டில் சந்திரசூட சரஸ்வதி மகாத்மா என்னும் மாயாவாதத்தில் சிறந்தவரென்றும் சாஸ்திரங்களுக்கு நல்ல பொருளுரைப்பவர் என்று சிவபக்தர் என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

கி. பி. 1527 இல் வழங்கப்பட்ட செப்பேடு நந்திநாகரி எழுத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு இறுதியில் கன்னடத்தில் 'ஸ்ரீவிருபாக்ஷ' என்று பெரிதாகக் கையொப்பம் பொறிக்கப்பட்டுள்ளது.[11] இச்செப்பேடு சந்திரசேகர சரஸ்வதியின் சிஷ்யரான சதாசிவசரஸ்வதிக்கு கிருஷ்ணதேவராயர் செங்கல்பட்டு வட்டம் திருக்கழுக்குன்றம் அருகில் உள்ள உதயம்பாக்கம் என்ற ஊரினை வழங்கியதைக் குறிப்பதாகும். சதாசிவசரஸ்வதி மகாத்மா என்றும் ஞானவைராக்யசாலி என்றும் ருத்ராக்ஷ மாலையும் விபூதியும் (பஸ்பம்) அணிந்தவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளார். வழங்கப்பட்ட ஊர் எதற்காக வழங்கப்பட்டது என்ற குறிப்பில்லை.

கி. பி. 1687 இல் சந்திரசேகர சுவாமியின் சீடரான மகாதேவசரஸ்வதி மடத்திற்கு கோல்கொண்டா அப்துல்லா குதுப்பின் அமைச்சர்களான அக்கன்னா, மாதன்னா ஆகியோர் தந்த செங்கல்பட்டு ஜாஹீரான மேல்பாக்கக் கிராம வருவாயை ராமசாஸ்திரி என்பவருக்கு வழங்கியதை மற்றொரு செப்பேடு குறிப்பிடுகின்றது.[12]

மேலும் ஒரு செப்பேடு கி. பி. 1701 இல் மதுரை நாயக்கர் விஜயரங்க சொக்கநாதரால் வழங்கப்பட்டதாகும்.[13] இது தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டதாகும். லோககுரு சங்கராச்சாரிய சுவாமி கஜாரண்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத்திரத்தில் (திருவானைக்காவல்) பொன்வாசி கொண்டான் தெருவில் பூர்வீக காலம் தொட்டுச் சொந்தமான மடத்தில் இருந்து வருவதாகக் குறிப்புள்ளது. அவருக்கு மகேந்திரமங்கலம், கோபாலசாமி தோட்டம், கிருஷ்ணாபுரம், காரக்காடு, கொண்டயம்பேட்டை, திருச்செந்துறையில் உள்ள மங்கமாம்பாபுரம், அரியூர், அரியமங்கலம் ஆகிய ஊர்களில் நஞ்சை, கொல்லை, நிலங்கள் கொடையளிக்கப்பட்டன. இவ்வூர்கள் காவிரியின் இருகரையிலும் கஜாரண்ய சேத்திரம் எனப்பட்ட திருவானைக்காவலுக்கு மேலும் கீழும் அமைந்தவையாகும். மேற்சொன்ன ஊர்களில் குறிப்பிடத்தக்க நிலங்கள் இன்றும் காஞ்சி மடத்திற்கு உரியவையாக உள்ளன. இந்நிலங்கள் இச்செப்பேட்டில் இம்மடத்தில் நிரந்தரமாக அன்னதானம் வழங்குதலுக்காகவும், தினமும் பூசைகள், நைவேத்தியங்கள் நடத்துவதற்காகவும் கொடுக்கப்பட்டுள்ளன. நைவேத்தியங்களான தளிகை, தோசை, அதிரசம், சுகியன் (இனிப்புப்பணியாரம்) ஆகியவற்றிற்காகவும் நெய்விளக்கு எரிப்பதற்காகவும் அரிசி வழங்கப்பட வேண்டியமையும் குறிக்கப்பட்டுள்ளது. இச்செப்பேட்டில் உள்ள பொன்வாசிகொண்டான் தெருவில் இம்மடம் பூர்வீகமாகச் சொந்தமாக அமைந்தது என்றுள்ள குறிப்பிற்கு செப்பேட்டின் பதிப்பாசிரியரால் ஐயம் எழுப்பப்பட்டுள்ளது. ஏனெனில் இன்று இம்மடம் உள்ள இடத்தில் இச்செப்பேட்டிற்கு முற்பட்ட பாண்டியரின் கி. பி. 14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளும் அவற்றில் நாற்பத்தெண்ணாயிரவன் மடம் ஆவூருடையான் சோழகோனால் எடுக்கப்பட்டமையும் குறிக்கப்படுவதாகும். மேலும், செப்பேட்டில் 'பூர்வீகம்', 'சொந்தம்' என்ற சொற்கள் வரிப்பிளப்புச் செய்து எழுதப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிடுகிறார். காஞ்சிபுரத்தில் இருந்த மடம் கி. பி. 1700ற்கு முன்னதாக நல்ல அரசியல் சூழல் இல்லாமையால் நாயக்க மன்னர்களிடம் மதிப்பும் ஆதரவும் இருந்தமையால் திருவானைக்காவலுக்கு வந்திருக்க வேண்டுமென்று கருத இடமுள்ளது.

பின்னர் காஞ்சிமடம் உடையார்பாளையத்திற்கு மாற்றப்பட்டுப் பிறகு தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாபசிங்கும் அவரது அமைச்சரும் தந்த ஆதரவு காரணமாக கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டதாகக் கூறுவர்[14]. ஆர்க்காட்டு நவாப்புகளின் ஆதரவு இன்மையால் இப்படி நிகழ்ந்தது என்றும் குறிப்பர். பலகாலம் கும்பகோணம் மடம் என்றே இம்மடம் அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் அறியப்பட்ட ஒரு நீதிமன்றக் கடித ஆவணம்[15] '*கும்பகோணத்திலிருக்கிற ஸ்ரீசங்கராசாரி சுவாமியாற் மடத்து வழியாய் மாமூலுக்கு விரோதமாய் வியாசராய சுவாமியார்*' பிரச்சனைகள் செய்வதாகவும் காவல்துறையினர் தக்க பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. இதற்கு முன்பின்னாக மீண்டும் காஞ்சிபுரத்திற்கு இம்மடம் மாற்றப்பட்டுள்ளது என்று கருதலாம்.

## பிக்ஷா மடங்கள் [கோளகி மடம்]

பாசுபத மார்க்கத்தைப் பின்பற்றிய சுத்த சைவர்கள் தொடர்பான இவ்வகை மடங்கள் பிற்காலப் பாண்டியர் காலம்முதல் தமிழகக் கல்வெட்டுகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இம்மடங்கள் பெல்லாரி, கோலார், வாரங்கல், அனந்தபூர், சித்தூர், கடப்பா, கர்னூல், குண்டூர், வடஆர்க்காடு, சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பரவியிருந்தமையையும் அறிய முடிகிறது.[16] தமிழகக் கல்வெட்டுகளில், பிக்ஷா மடம் என்று குறிப்பிடப்படுபவை இத் தலைப்பில் எடுத்துச் சொல்லப்படுகின்றன.[17] பிரான்மலைக் கல்வெட்டு ஒன்றில் பிக்ஷாமடம், கோளகிமடம் ஆகிய இரண்டும் குறிக்கப்படுவதிலிருந்து[18] இரண்டும் ஒன்றே என்று கருதலாம்.

கி. பி. 1440 மற்றும் 1448 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் திருநெல்வேலி மாவட்டம் மணப்படைவீடு என்ற ஊரில் கிடைத்துள்ளன[19]. அவற்றில் முதல் கல்வெட்டு மணப்படைவீட்டில் உடையார் கோயிலில் திருப்பாட்டு ஓதவும், இருநாட்களுக்கு ஒரு முறை (15 வட்டம்) பூக்கள் வழங்கவும் சிறப்பு வைபவங்கள் நடத்தவும் காணியாட்சியாக கோயில் வருவாயை நிர்வகித்துப் பெற (துரமுஞ் செய்து) பிக்ஷாமட சந்ததி ஆகமசீலதேவரது சிஷ்யருக்கு கோயிலார் ஆவணம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. ஆகமசீலதேவரின் மற்றொரு பெயர் உமையயொருபாகர் என்றும் சிஷ்யரின் பெயர் உய்யநெறிகொண்டார் வனத்துவாழ்வித்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டு கோயில் வழிபாடு, சாத்துப்படி, திருமாலை திருவிளக்குகளுக்காக கோயிலாருக்கு 25 மா நிலமும் மடப்புறமாக பிக்ஷாமட சந்ததி ஆகம (சீலதேவ) முதலியாருக்கு 5 மா நிலமும் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புனவாசல் மடங்கள்

புதுக்கோட்டை மாவட்டம் தேக்காட்டுர் (கி. பி. 1452)[20] கோவில்பட்டி (கி. பி. 1497)[21] திருவரங்குளம் (கி. பி. 1532)[22] சிவகங்கை மாவட்டம் கோவிலூர் (கி. பி. 1585) [23] ஆகிய ஊர்க் கல்வெட்டுகள் திருப்புனவாசலில் அமைந்த பிக்ஷாமடத்தினைக் குறிப்பிடுகின்றன. திருபுனவாசல் என்பது புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் வட்டத்தில் கடலோரம் அமைந்த ஊராகும். பொதுவாக இம்மடத் தலைவர்கள் முதலியார் என்ற மதிப்பு விளிப்புடன் குறிக்கப்பட்டுள்ளனர். ஒரு கல்வெட்டில் பரமசிவன் என்ற பெயர் உள்ளது. இக்கல்வெட்டுகளில் சில சூரைக்குடி அரசுகளின் பெயர்களுடனும் ஏனையவை மன்னர் பெயரில்லாமலும் உள்ளன. திருப்புனல்வாசல் முதலியாருக்கு சிதம்பரத்தில் (பெரும்பற்றப்புலியூர்) மேலைத் திருவீதியில் திருவெல்லைக்காவலன் திருமடம் ஒன்றும் திருவரங்குளத்தில் வல்லநாடன் பெருந்தெருவான தெற்குத் தெருவில் ஒரு மடமும் இருந்துள்ளன.

தேக்காட்டூரில் விஜயநகர மன்னர் மல்லிகார்ச்சுனரின் கீழ் சிற்றரசராக இருந்த சூரைக்கூடி அரசு, பராக்கிரமபாண்டிய விஜயாலய தேவர் சிறுவனூர் வயல், காட்டியவயல் ஆகியவற்றை மடப்புறமாக தந்த செய்தி உள்ளது. தேக்காட்டூர் ஊரார் அதை உழுது பயிரிட அரசாணைக்கிணங்க ஒப்புதல் வழங்கியுள்ளனர். அவர்கள் '*எங்கள் ஆசாரியரான திருப்புனவாசல் முதலியார்*' என்று இவரை மதிப்புடன் குறிப்பிடுகின்றனர்.

கோவில்பட்டி (கொட்டியூர்) கல்வெட்டு திருப்புனல்வாசல் முதலியாரால் அவ்வூரில் மனுகுலசேகர ஈஸ்வரமுடைய என்ற இறைவன் பிரதிட்டை செய்யப்பட்ட செய்தியைக் குறிப்பிட்டுள்ளது. அதற்காக அவருக்கு ஒரு மனையும் (வீடுகட்டுமிடம்) மடப்புற நிலமும் கொடுத்துள்ளனர். இக்கல்வெட்டில் மன்னர் பெயர், மன்னர் ஆணை ஏதுமில்லை.

திருவரங்குளம் கல்வெட்டு அவ்வூரார் தெற்குத் தெருவில் அமைந்த திருப்புனல்வாசல் முதலியார் மடத்தில் நிகழும் திருணவபூசை, குருபூசை, மாகேஸ்வரபூசை ஆகியவற்றிற்காக மடப்புற நிலம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. மடப்புற நிலத்தின் குடிகளை மாற்றவும் சேர்க்கவும் (குடி முட்டி உழுதுபோக) உரிமை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்குடி அடுத்துள்ள கோவிலூர் கல்வெட்டுகள் இரண்டு கல்வெட்டுகள் பிக்ஷாமட சந்தானமாகத் திருப்புனல்வாசல் முதலியாரைக் குறிப்பிட்டு அவருக்கு பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) மேலைத் திருவீதியில் மடமிருந்ததையும் அம்மடத்திற்காகக் கழனிவாசல் பற்றில் (கோவிலூர்) இலங்காட்டூரும், ஆனைமங்கலமும் மடப்புறமாக வழங்கப்பட்டதையும் குறிப்பிடுகின்றன. இரண்டு கல்வெட்டுக்கள் இவருக்குக் கோயிலே கொடையளித்ததாகக் (திருக்கைவழக்கம்) குறிக்கின்றன. மற்றொரு கல்வெட்டு சூரைக்கூடி அரசு வழங்கிய கொடையைக் குறிப்பிடுகின்றது. இன்று கோவிலூரில் 150 வருட வரலாறுடைய ஒரு பெரிய மடம் உள்ளது. சென்ற நூற்றாண்டில் இம் மடத் தலைவர்களால் சமஸ்கிருத நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் போதிக்கப்பட்டுள்ளன. இன்று அவை நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இம்மடத்தின் கிளைகள் இரண்டு இன்று சிதம்பரத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரான்மலையில் உள்ள கி.பி. 1500 மற்றும் கி. பி. 1530 ஆண்டுக் கல்வெட்டுகள் முறையே இம்மடி நரசிங்கராயர் மற்றும் வீரப்பிரதாப அச்சுததேவராயர் ஆகிய விஜயநகர மன்னர்கள் காலத்தயவை.[24] முதற் கல்வெட்டில் பிக்ஷாமட சந்தானமாகிய லக்ஷாயி சந்தானத்தைச் சேர்ந்த ஈசானசிவர் பாண்டிநாட்டு முதலியார் என்றும் பாண்டி மண்டலாதிபதி என்றும் சொல்லப்பட்டுள்ளார். இவர் திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) ஆன தக்ஷிண கைலாயத்தில் அமைந்த கல்லார் (கள்ளர்) மடத்தின் தலைவராகச் சுட்டப்பட்டுள்ளார். இரண்டாம் கல்வெட்டில் திருக்கொடுங்குன்ற அறுபத்துமூவன் திருமடத்து தலைவர் ஒருவர் சொல்லப்பட்டுள்ளார். கல்வெட்டுகளின் வாசகங்கள் வெளியாகாததால் பிரான்மலையிலேயே இரு பிக்ஷாமடங்கள் வெவ்வேறு பெயர்களில் விளங்கினவா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தேவிகாபுரத்தில் உள்ள நான்கு கல்வெட்டுகள்[25] இம்மடிராயர் (கி. பி. 1505), கிருஷ்ணதேவராயர் (கி. பி. 1513, 1520, 1523) காலத்தையவை. இவ்வூர் திருமலா உடைய நயினார் கோயில் பண்டாரத்தை (கருவூலத்தை) நிர்வகிப்பவராக பிக்ஷாமடத்தை சேர்ந்த விசுவேசுவர ஆசாரியர் குறிக்கப்பட்டுள்ளார். இவர் குரு என்றும் விளிக்கப்பட்டுள்ளார். இக்கல்வெட்டுகள் மல்லப்ப நாயக்கர் மகனார் நமச்சிவாய நாயக்கருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவுக் காணியாட்சியாக கோயில் நிலத்தைக் கொடுத்து வருடம் தோறும் 50 பணமும் 50 கல நெல்லும் பெற ஏற்பாடு செய்ததையும் (கி. பி. 1512, 1520) ஆற்றுவன்பாடி வித்வான்களில் திருவெங்கலநாதர் மகன் வடமலையாற்கு சொரப்பூண்டியில் வரி நீக்கிய நிலம் கொடுத்ததையும் (கி. பி. 1523) குறிப்பிடுகின்றன. காணி உரிமை கொடுத்த மற்றொரு கல்வெட்டில் '*விச்வேச்வர சிவாசாரிய லிபி*' என்று சமஸ்கிருத மொழியில் கையொப்பமிடப்பட்டுள்ளது. எனவே இவர் சமஸ்கிருதப் புலமையுடையவர் என்பது தெரிகிறது. இக்கல்வெட்டு ஆவணங்களில் கோயிலைச் சேர்ந்த பிற நிர்வாகிகள், கைக்கோளர்கள் கையொப்பமிட்டிருந்தாலும் முதல் கையொப்பம் பிக்ஷாமடத்து விஸ்வேஸ்வர சிவாசாரியாருடையதாக உள்ளது. பண்டிதர்களை ஆதரித்தமையும் தெரிகிறது. இன்று தேவிகாபுரத்தில் உள்ள மடத்தினை பேரிச்செட்டிகள் நிர்வகித்து வருகின்றனர்.[29]

தஞ்சை மாவட்டம் ஸ்ரீவாஞ்சியத்தில் உள்ள கி. பி. 1579 ஆம் ஆண்டுக் கல்வெட்டு[27] சிதம்பரத்தில் உள்ள அகோரசிவாசாரியாரின் சிஷ்யரான அச்சுற்றமங்கலத்து பெருமாள் நாயினார் பண்டாரம் என்பவர் மடத்திற்கு கூடுவாஞ்சேரியில் நிலம் வாங்கியதைக் குறிப்பிடுகிறது.

இதுவரை அறிந்த செய்திகளின் படி கோளகி மடங்கள் பிக்ஷா மடம் என்ற பெயரில் தமிழகத்தின் தென்பகுதி முதல் வடபகுதி வரை எல்லா இடங்களிலும் இருந்தமையையும் தனித்தனித் தலைவர்களின் கீழ் இயங்கியமையையும் அறிகின்றோம்.

## பிறமடங்கள்

விஜயநகரர் – நாயக்கர் கல்வெட்டுகளில் மேற்சொன்னபடி ஒரே பெயரில் அல்லாது தனித்தனிப் பெயர்களில் மடங்களும் அவற்றின் தவைர்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்களும் கிடைக்கின்றன. அவற்றை இனி காண்போம்.

## கீழைமடம்

இம்மடம் திருவொற்றியூரில் உள்ள ராஜநாராயண சம்புவராயர் (கி. பி. 1337 –67) கல்வெட்டால் அறியப்படுகிறது.[28] சம்புவராயரின்கீழ் ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த திக்கம்மநாயக்கர் கீழைமடத்து வாகீசுவரதேவ முதலியார் மரணப்படுக்கையில் இருந்தபோது அமுதபடி மற்றும் விழாக்களுக்காக வரி நீக்கி நிலம் தந்துள்ளார். இந்நிலம் வாங்கப்பட்டதற்கான கல்வெட்டாவணம் புழலில் உள்ள மூலத்தானமுடையார் கோயிலில் இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. வாகீசுவரதேவ முதலியாருக்குப் பின் இம்மடத் தலைவராக அழகிய திருச்சிற்றம்பலமுடையார் பொறுப்பேற்ற பிறகு மேலும் நிலம் வழங்கப்பட்டது என்ற குறிப்பும் இக்கல்வெட்டில் உள்ளது.

## திருத்தோன்றியப்பர் ஒற்றியப்பர் மடம்

ஆண்டுக் குறிப்புத் தவறாக (சகம் – 4461) குறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று செம்பாக்கத்தில் உள்ளது.[29] இதனை கி. பி. 1560 எனக் கருதலாம். விருபாக்ஷி நாயக்கரின் காரியதரிசியான பெத்து நாயக்கர் திருத்தோன்றியப்பர் ஒற்றியப்பர்க்கு மடப்புறமாகச் செம்பாக்கம் கைக்கோளர் தெருவில் மனையும் செம்பாக்கம் சீர்மையில் உள்ள செம்பாக்கம், மடையத்தூர் முதலிய 13 ஊர்களில் 1050 குழி நஞ்சை நிலமும் கொடுத்துள்ளதைக் குறிக்கிறது.

## காஞ்சிபுரம் பெருமாள் கோயில் மடம்

கி. பி. 1361 இல் குமார கம்பணர் ஆட்சியில் அவரது பிரதானி சோமப்பர் ஆணைப்படி கொப்பண்ணர் அச்சிறுப்பாக்கம் வயநல்லூரைக் காஞ்சிபுரத்து பெருமாள் கோயில் மடத்துக்கு மடப்புறமாகக் கொடுத்துள்ளார். பிக்ஷா விருத்தியாக இந்நிலம் கொடுக்கப்பட்டுள்ளதால் மடத்தில் உணவளிக்கப்பட்டது எனலாம்.[30]

## ஓதுகைக்கு மடம்

காஞ்சிபுரத்தில் உள்ள எடுத்தாயிரமுடைய நாயனார் கோயில் ஸ்ரீருத்ர மகேஸ்வரர்கள் திருமுதுகுன்றத்துச் (விருத்தாசலம்) சிவனடியாரான சிற்றாமூர் உடையார் பெண்ணாகிய பெருமானான காங்கயற்கு திருக்கையொட்டி திருமுன் (பிரசாதம் வழங்கு மண்டபம்) பாடல்கள் பாடக் காணி உரிமை கொடுத்து ஒரு மடமும் கொடுத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கம்பணரின் அமைச்சர் கொப்பணர் ஆணையாகும். காலம் கி. பி. 1369.[31]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பன் வேங்கடநாதன் மடம்

அழகர்கோயில் பகுதியில் புளியன்குளம் என்ற ஊரில் உள்ள கல்வெட்டு இம்மடத்தினைக் குறித்து அதற்கு திருமாலிருஞ்சோலை நின்றானான மாவலிராயர் கும்மங்குளம், புளியங்குளம் ஆகிய பகுதிகளில் மடப்புறம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. இம்மடத்தில் எழுந்தருளியிருக்கும் பூஷந கிருஹ சிஷ்ய பரிபாலன் ஸ்ரீயாத்பாத கோலாகலன் குறிக்கப்படுகிறார். சமஸ்கிருதத்தில் உள்ள பகுதி மிகவும் சிதைந்து பொருளறிய இயலாதவாறுள்ளது.[32] இதன் காலம் கி. பி. 1449 ஆகும்.

## திருவிடைகழி

தஞ்சை மாவட்டம் மாயூரம் வட்டம் திருவிடைகழியில் கி. பி. 1455ஐச் சேர்ந்த மல்லிகார்சுணராயரது கல்வெட்டு[33] ஒரு குறிப்பிட்ட மடத்திற்கு (பெயருள்ள பகுதி சிதைந்து விட்டது) இரு ஊர்களில் வரி நீக்கப்பட்டநிலங்கள் கொடுத்தமையைக் குறிப்பிடுகிறது.

## துட்டாயிரகண்டன் பெருந்தெருமடம்

தென்காசியில் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டு (கி. பி. 1486)[34] தென்காசிக் கோயில், கருவறை, கூத்த மண்டபம், பரிவார ஆலயங்கள், கோபுரம் ஆகியவை எடுத்து ஆபரணங்கள் கொடுத்து நடத்துதல் முதலியவற்றிற்கு மன்னன் ஏற்பாடு செய்தமையைக் குறிக்கும் போது தென்காசித் (தெ)ற்கு வீதியான துட்டாயிரகண்டன் பெருந்தெருவில் மடமொன்று 25 முழ அளவில் அமைந்ததைக் குறிப்பிடுகிறது. இம்மடம் கோயில் நிர்வாகத்தை (ரக்ஷிக்க) நடத்துவதற்காக அமர்த்தப்பட்ட (கற்பித்த) சந்நியாசிகளுக்கான மடம் ஆகும்.

## கொடும்பாளூர் மடம்

கொடும்பாளூரில் ஒரு தேவரடியார் வாரிசு இல்லாமையால் தனது உறவினர்களை கோயிலில் தேவடிமையாகப் பணி செய்ய அமர்த்தியுள்ளார். இதனை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு கூத்தன் வயக்காலில் 2 மா நிலம் இறையிலியாகக் கொடுக்கப்பட்ட ஆவணத்தில் கையொப்பமிட்டவர்களாகச் சிலர் குறிக்கப்படுகின்றனர். அவர்களில் ஒருவர் அக்கோயில் மாடபாத்தியம் கண்மதேவர் ஆவர். கோயிலுக்கென்று மடமும் மடத்தலைவருக்குக் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்தில் பொறுப்பும் இருந்ததைக் இக்கல்வெட்டுக் காட்டுகிறது. இக்கல்வெட்டு மல்லிகார்சுனர் காலத்தியக் கல்வெட்டாகும்[35]. காலம் கி. பி. 1498.

### சீகாழி வள்ளல் பண்டார சிஷ்யர் மடம்

திருநாமநல்லூர் அச்சுதராயர் (கி. பி. 1535) கல்வெட்டு[36] அப்பகுதியைச் சேர்ந்த நாயக்கர்கள் ஏழு பேருக்கான, குடை மானியம் 30 பொன் மற்றும் அரசர்க்கான பல்லக்கு (தண்டிகை) மானியம் 20 பொன் போக எஞ்சியதில் குறிப்பிட்ட அளவு நஞ்சை நிலம் சீகாழி வள்ளல் பண்டார சிஷ்யர் மெஞ்ஞான மாமுனிகளுக்கு நாட்டவர்கள் மட தன்மமாக் கொடுத்தமையைச் சொல்கிறது.

### மாமல்லபுரம்

மாமல்லபுரம் அருகே பாலவாக்கம் சத்திரம் என்ற பகுதியில் மாமல்லபுரத்து ஆதிவராகப் பெருமாள் கோயில் சார்ந்த ஒரு மடத்துக்கு நிலம் வழங்கப்பட்டமையை அந்த சத்திரத்தில் உள்ள கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இது அச்சுததேவராயர் காலக் (கி. பி. 1535) கல்வெட்டாகும்.[37]

### வணங்காமுடி மடம்

தாரமங்கலத்தில் 'வண்ணத்தடுக்கு, வாடாமாலை, வணங்காமுடி' எனச் சிறப்புகளுடைய விளங்கிய கட்டிமுதலியார், அச்சுதராயர் காலத்தில் (கி. பி. 1541) சிதம்பரம் கோயிலின் தெற்கு மூன்றாம் வீதியில் செங்கழுநீர் பிள்ளையார் கோயில் சன்னதி தென் வரிசையில் (சிறகு) 200 குழி நிலம் வாங்கி அங்கு வணங்காமுடி என்னும் மடம் கட்டியதைக் தாரமங்கலம் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலும் அம்மடத்தில் மாகேஸ்வர பூசை நடப்பதற்காக ஏழுகரைநாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதிச் சந்தைக்கு வரும் சரக்குகளின் மேல் தீர்வை விதித்து வழங்கியதைச் சொல்கிறது.[38]

இது போல இன்னும் பல மடங்கள் சொல்லப்படுகின்றன. அவை பட்டியலாகத் தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடம் | காலம்—மன்னர் | மடம்—தலைவர் | கொடை | குறிப்பு |
|---|---|---|---|---|
| சுவாமிமலை | கி.பி. 1573–74 செவ்வப்ப நாயக்கர் | வேலாயுதசிவர் மடம் | மடப்புறம் | தெ.இ.க.தொ. 23: 497 |
| பிரான்மலை | கி. பி. 1580 வேங்கபதிராயர் | மட்டியூர் திருநாவுக்கரசு பண்டாரம் | திருச்சிராப்பள்ளி மங்கைபொருபாகர் கோயிலுக்கு ஒருபெண்ணின் கொடை | இ.க.அ.:1924–199 |
| ஆளப்பிறந்தான் அறந்தாங்கி வட்டம் | கி. பி. 1583 அறந்தாங்கி அரசு | பூமியூர் மடம், பெரியநாயனார் (சைவசக்கரவர்த்தி) முதலியார் | மடப்புறம் | இ.க.அ.:1929–30–323 |
| விரிஞ்சிபுரம் வேலூர் | கி. பி. 1592 ஏரம நாயக்கர் | வண்டாராயன் திருவீதியில் மடம் | சிதம்பரம் குருநமச்சிவாய மூர்த்தி அடியார் ஆனந்த நமச்சி –வாய பண்டாரம் | தெ.இ.க.தொ 1:58 |
| திருவெண்ணெய் நல்லூர் | வீரநரனசிங்கராயர் (சுமார் கி. பி. 1700 | தடுத்தாட் கொண்டார் காளத்தி முதலியார் மடம் | மடப்புறம் | இ.க.ஆ.அ. 1921; 470 |
| வேலன்பட்டி நத்தம் | கி. பி. 1649 முத்துலிங்கர் நாயக்கர் | அன்னதான மடம் | பூதங்குடி கிராமம் பிரம்மதாயம் நீங்கலாக | தமிழகச் செப்பேடுகள் தொகுதி 1 |
| அரியலூர் | கி. பி. 1703 விசைய ஒப்பிலாமழவராயர் | சிதம்பரத்தில் பாதபூசை அம்மலத்தருமய்யர்க்கு மடம் | அரியலூர் பேட்டை வருவாய் குரு பூசை மகேசுவர பூசை | தமிழகச் செப்பேடுகள் தொகுதி 1 |
| மதுரை— சென்னை செப்பேடு | கி. பி. 1717 விஜயரங்க சொக்கநாதர் | திருக்கழுக்குன்றம் மடம் | --- | ரெங்காசாரி தொகுதி 1 |
| மதுரை | கி. பி. 1557 --- | ஞானக்கூத்தர் சத்தியஞான தேசிகசுவாமிகள் மடம் | --- | இ.க.ஆ.அ. 1915.5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதி – சமூக மடங்கள்

கோயில் நிர்வாகம், வழிபாடுகள், கல்வி புகட்டுதல், நூல்கள் எழுத ஆதரவு, உணவளித்தல் போன்ற பணிகளைச் செய்து வந்த மடங்கள், தெய்வ தரிசனத்திற்கு வருவோர் தங்கவும் உணவுண்ணவும் வேண்டிய வசதிகளைச் செய்பவையாக மாறின. பின்னர் வசதி மிக்க ஒவ்வொரு சமூக – சாதி அமைப்பும் திருத்தலங்களை ஒட்டி தங்களுக்கென மடங்களை ஏற்படுத்திக்கொள்ளத் தொடங்கின. கூடுதலாகத் தங்கள் தங்களது சமூக – சாதி ஒழுக்க வழக்கங்கள். நெறிமுறைகள் பாதுகாக்கப்படவும் அந்தந்தச் சமூக – சாதி அமைப்புகள் அதிகம் வழிபடும் கோயில்களை ஒட்டி மடங்களை அமைத்துக் கொண்டன. தங்கள் குடிப்பெருக்கத்தை அறிய திருமணங்கள் இங்கு பதிவு செய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொகை மடத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வகை மடங்கள் விஜயநகரர் காலத்தில் துளிர் விட்டு நாயக்கர் காலத்தில் கூடிப் பின்னர் பல்கிப் பெருகின. அவை பற்றிய கல்வெட்டுச் செப்பேட்டுக் குறிப்புகளை இங்கு காண்போம்.

## வீரமுடியாளர் மடம்

மதுரை திருமலை நாயக்கரின் கீழ் வைகாபுரிப் (பழனி) பகுதியில் நாயக்கராக கி. பி. 1483 ஆம் ஆண்டுச் செப்பேடு வீரமுடியாளர் மடம் பற்றிக் குறிப்பிடுகிறது.[39] சிவன் கோயிலைச் சார்ந்து விளங்கிய மடத்தில் அமாவாசை தோறும் 6 பேருக்கும் திங்கட்கிழமை தோறும் 12 பேருக்கும் உணவளிக்க நியதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுதுமுள்ள வீர முடியாளர்களின் ஒவ்வொரு குடும்பமும் இரண்டு பணமும், மணமகன் ஒருபணமும் மணமகள் ஒருபணமும் பிள்ளையார் நோன்புக்கு அரைப் பணமும் வழங்க வேண்டுமென்றும் நாயக்கர் ஆணை பெறப்பட்டமையை இது குறிப்பிடுகிறது.

## பெரியநாடு மடம்

கிருஷ்ணதேவராயர் காலத்திய (கி. பி. 1520)[40] செப்பேடு ஒன்று திருவண்ணாமலையில் 56 நாட்டவர்கள் ஒரு மடம் எடுப்பித்து ஒரு தம்பிரானாரை மடத்தலைவராக்கிய செய்தியைச் சொல்கிறது. மேலப்பழையர் என்ற ஊர் வழங்கப்பட்டுக் கோயில் வழிபாட்டுச் செலவுகளும் தம்பிரானானின் செலவுகளும் செய்யப்பட்டன. மேலும் 56 நாட்டார் குடும்பத் திருமணங்களுக்கு 6 பணமும், அரிசி மற்றும் துணியும் வழங்கப்பட வேண்டும் என்ற நெறிமுறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தவாசல் மடம்

கிருஷ்ணதேவராயர் காலச் செப்பேடு (கி. பி. 1526) திருப்பதி இறைவனுக்குப் பூசைச் செலவுகளுக்காக நிலம் விலைக்குப் பெறப்பட்டு அதன் வருவாய் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. மேலும் இச்சாதி மடத்துக்கு வருஷம்தோறும் ஐந்து பணம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. சாதி மடம் என்ற குறிப்பில் சாதியின் பெயர் சொல்லப்படவில்லை. விலைக்குப் பெற்றவரின் பெயரில் 'போயிண்டன்' (வசவ போயிண்டன்) என்றிருப்பது சாதிப்பெயராகலாம்.[41]

## கைக்கோளர் மடம்

ஜம்பை அச்சுததேவ மகாராயர் கல்வெட்டு[42] கி. பி. 1532 (சகம் 1554?) கைக்கோளர்கள் ஒரு மடத்தினை நிர்வகிக்கச் செய்துகொண்ட தீர்மானத்தைக் குறிப்பிடுகிறது. இதனில் இடங்கை வலங்கை 98 சாதியார் பற்றிய குறிப்பும் உள்ளது.

## இருபத்து நான்கு மனையர் தேசாங்க மடம்

திருவண்ணாமலையில் மேலும் ஒரு செப்பேடு 24 மனைச் செட்டிகள் (தெலுங்குச் செட்டிகள்) மடத்திற் கிடைத்துள்ளது.[43] இதன் காலம் கி. பி. 1636. இருபத்து நான்கு மனையார் தேசாங்க மடம் என்ற இம்மடத்திற்கு வசந்தராய பண்டாரம் என்பவரைத் தலைவராக நியமித்து நிர்வாகச் செலவுக்களுக்காகத் தலைக்கட்டுக்கு ஒரு பணம் திருமணத்திற்கு ஒரு பணம் வியாபாரச் சரக்குகளின் பொதிக்கு ஒரு பணம் கொடுக்கச் சம்மதித்து செப்பேடு எழுதி வழங்கியுள்ளனர். நந்தவனம் ஒன்றும் பராமரிக்கப்பட்டுள்ளது. சங்கீதக்காரன், மாணிக்கத்தாள் (நடன மகளிர்), விடுதி மாணிக்கத்தாள் ஆகியோர் குடும்பத் திருமணங்களுக்கும் ஒரு பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

## அவல்பூந்துறை நாடான் மடம்

ஸ்ரீரங்கராயரின் கி. பி. 1642 ஆம் ஆண்டுச் செப்பேடு, காஞ்சிபுரத்தில் 1. மாந்துளிர் மேனியன், 2. மகாதேவர் புத்திரன், 3. கொங்கன் நாடன், 4. மதுரையான், 5. கலியாணியன் ஆகின ஐந்து வகுப்பார் நாடு கூடி தங்களுக்கு சாமியார் வேண்டுமென்று பூந்துறை நாட்டிலிருந்து ஆண்ட குருசாமியாரை அழைத்து வந்து பட்டாபிஷேகம் செய்ததைச் சொல்கிறது. மேலும் தலைக்கட்டுக்கு கால் காசு, கலியாணத்துக்கு 2 சத்திரப் பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கத் தீர்மானம் செய்துள்ளனர். பல 'நாடான்'கள் கையொப்பமிட்டுள்ளனர்.[44]

## திருவிடைமருதூர் சாணார் மடம்

ஸ்ரீரங்கதேவ மகாராயரின் திருவிடைமருதூர்ச் செப்பேடு (கி. பி. 1644) திருவிடைமருதூர் மருதப்பர் சன்னதியில் வலங்கை இடங்கை 98 சாதிக்கான மடதன்ம முடிவு எடுக்கப்பட்டதைச் சொல்கிறது. சாணார் மடத்திற்கு இடம் வாங்கி மடம் கட்டி நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. மடத்திற்கு பஞ்சவண்ணவர்க்க குமாரசாமி பண்டாரம் தலைவராக அமர்த்தப்பட்டுள்ளார். மடத்திற்கு குடிக்க ஒரு பணம், திருமணங்களில் மணமகள் ஒரு பணம், மணமகன் ஒரு பணம் தரவும் குற்றம் தீர்த்த அபராதப் பணங்கள் சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.[45]

## பழனி திருநீலகண்டர் மடம்

கி.பி.1664 இல் எழுதப்பட்ட இச்செப்பேடு பழனி நகரத்தில் திருநீலகண்டர் மடம் என்றொரு மடம் கட்டப்பட்டு அதனை நிர்வகிக்கச் சில குறிப்பிட்ட வரி வருவாய்கள் தரப்பட்டதைச் சொல்கிறது. திருநீலகண்டர் என்ற பெயர் இம்மடம் குயவர் மடமாக இருக்குமோ என்று எண்ணச் செய்கிறது[46].

## சேடப்பட்டி அம்பலக்காரர் மடம்

சேடப்பட்டி, தாமரைக்குளம், வடுகர்பட்டி, மேல்மங்கலம், அழகிரநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள காத்தான் அம்பலம், தம்பான் அம்பலம், குஞ்சான் அம்பலம் ஆகியோர் வழிவந்தவர்கள் ஒன்று கூடி ஒரு மடம் ஏற்படுத்தியுள்ளனர். அம்மடத் தலைவராகப் பாணி பார்தீப அரையன் மகன் சங்கரமூர்த்தியை அமர்த்தி அவருக்கு வர்த்தனை தானியம் 7 கலம், கலியாணம் ஒன்றுக்கு 4 படி அரிசி, அன்னிக் குடிக்கு மூன்று பணம் ஆகியவை வருவாயாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது.

## கற்பூரச்செட்டிகள் மடம்

தெலுங்கில் உள்ள செப்பேடு (கி. பி. 1716) ஒன்று விஜயரங்கசொக்கநாத நாயக்கர், வாணவேடிக்கைகள் சிறப்பாகச் செய்த கற்பூரச்செட்டிகளுக்கு மடம் (சலிபந்தல்) ஒன்று ஸ்ரீரங்கத்தில் அமைய இடம் கொடுத்த செய்தியைச் சொல்கிறது. இவர்கள் 100 மணு எடை உள்ள வெடிஉப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைக்கும் 30 மனு எடை உள்ள வெடிஉப்பு மடம் மற்றும் நந்தவனப் பராமரிப்புக்கும் தரவேண்டுமென நியதி செய்யப்பட்டுள்ளது

## ஆதீனங்கள்

சைவ மடங்களான திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மடங்கள் இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர் மராட்டியர் காலத்தில் ஏற்பட்டவை. விஜயநகரர் நாயக்கர் கால மடங்களைப் போன்று எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுச் சிறப்புடன் விளங்குகின்றன.

## சேதுபதிகள் கால மடங்கள்

சேதுபதிகள் தங்கள் ஆட்சிப்பகுதியில் பல மடங்களுக்கு ஆதரவளித்து அறக்கொடைகள் அளித்துள்ளதை அவர்களது செப்பேட்டு ஆவணங்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் அறியப்படும் இருபத்திரண்டு மடங்களில் இருபத்தொரு மடங்கள் சைவ மடங்களாகும். பரமக்குடிப் பகுதியில் உள்ள பண்டரிநாதர் மடம் மட்டும் வைணவசமய மடமாகும்.[50] அவை பின்வருமாறு

| ஊர் | மடம் |
|---|---|
| இராமேசுவரம் | மாசிலாமணி பண்டாரமடம் |
| சித்தனேந்தல் | பண்டரிநாதமடம் |
| அழகன்குளம் | மூர்த்திமடம் |
| உத்தரவை | பண்டார மடம் |
| தளிர் மருங்கூர் | காசி மடம் |
| தளிர் மருங்கூர் | சொக்கநாத மடம் |
| பாப்பாகுடி | பாப்பாகுடி மடம் |
| வாகைக்குளம் | வாகைக்குளம் மடம் |
| நாகாட்சி | நாகாட்சி மடம் |
| முத்துராமலிங்கபுரம் | முத்துராமலிங்கபுர மடம் |
| தமோதர பட்டினம் | தமோதரபட்டின மடம் |
| .தமோதர பட்டினம் | அக்காள் மடம் |
| .தமோதர பட்டினம் | மாவூர் மடம் |
| தமோதர பட்டினம் | சித்துரெட்டியார் மடம் |
| பெருங்கரை | தெய்வராயன் மடம் |
| சாருவனேந்தல் | பள்ளி மடம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேதுபதிகள் கால சத்திரங்கள்

| | | |
|---|---|---|
| இராமேசுவரம் | பிள்ளை மடம் | கோட்டைபட்டினம் |
| கடுகுசந்தை | தங்கச்சிமடம் | மல்லாங்கிணறு |
| தனுஷ்கோடி | எண்மணங்கொண்டான் | |
| முத்துராமலிங்கபட்டினம் | | |
| அலங்கானூர் | புதுமடம் | போகலூர் |
| பாம்பன் | சேதுக்கு வாய்த்தான் | தேவிப்பட்டினம் |
| இதம்பாடல் | நாகநாதசமுத்திரம் | தோப்பூர் |
| மண்டபம் | குடியூர் | திருப்பாலைக்குடி |
| சிக்கல் | புதுமடம் | உப்பூர் |
| அக்காமடம் | பிடாரிச்சேரி | |
| இராமநாதபுரம் | | |

## குறிப்புகள்

1. தென்இந்தியக் கல்வெட்டு தொகுதி 12: 44,56,79,84 தொகுதி 7:370
2. பேராசிரியர் எ. சுப்பராயலு அவர்கள் சேகரித்துள்ள குறிப்புகளில் உள்ள மடங்கள்

| | |
|---|---|
| சிறுகுறுகூர் மடம் | சிவலோக நாயகன் மடம் |
| பரஞ்சோதி மடம் | நாற்பத்தென்னாயிரவன் மடம் |
| செந்தாமரை கண்ணன் மடம் | வாசீகன் மடம் |
| திருவடகுடி ஸ்தானத்தார் மடம் | பஞ்சநதிவாணன் மடம் |
| பக்தர்கள் பக்தர் மடம் | ஸ்ரீகலிநாடுடையான் மடம் |
| திருவீதிமடம் | பொத்தலி மடம் |
| மதுராந்தக தேவன் மடம் | தியாகவிநோதன் மடம் |
| மார்கண்டேயன் மடம் | ஐநூற்றுவன் மடம் |
| திருநீலகண்டன் மடம் | குலோத்துங்க சோழன் மடம் |
| திருநீல விடங்கர் மடம் | பரசமய கோளரி மடம் |
| நம்பி முருகன் மடம் | திருச்சிற்றம்பலமுடையான் மடம் |
| பரமவாசகன் மடம் | விக்கிரம சோழன் மடம் |
| எழுநூற்றுவன் மடம் | சாமிதேவர் மடம் |
| தில்லைவாழந்தணர் மடம் | திருமிழிசை ஆழ்வார் திருமாளிகை மடம் |
| கேரளாந்தகன் மடம் | திருநாவுக்கரசர்மடம் |
| ராசநாராயணன் மடம் | கோலகி மடம் |
| ஏழிசை மோகன் மடம் | மனுவிளங்கபிள்ளை பெற்றாள் மடம் |
| சித்திரமேழி மடம் | வாமசிவ மடம் |
| குகை | சுந்தர பாண்டியன் மடம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதஞ்சலிதேவன் திருமடம்
கோமடம்
ராஜ கெம்பீரன் மடம்
கற்பகவல்லி மடம்
பெலிசத்தழகியாள் குகை
திருவிராமீஸ்வரத்து மடம்
நாராயண அனுபவ சன்யாசி மடம்
திருஞானசம்பந்தன் மடம்
குலச்சிறை மடம்
திருமுறை தேவச் செல்வன் மடம்
திருவேதம் அழகியாள் மடம்
வடக்கில் மடம்
திருத்தொண்டத்தொகையான்மடம்
திருக்குடந்தை மடம்
ஆண்டார் தம்பிரானார் மடம்
காங்கும் நாயகன் மடம்
திருநோக்கழகியான் மடம்
தேவப் பெருமாள் மடம்
திருவாப் பெருமாள் மடம்
மண்டலத்தார் மடம்
ராஜேந்திர சோழகதைக்குடையான் மடம்
அழகிய திருச்சிற்றம்பலமுடையான் மடம்
அவணிவேந்தராமன் மடம்
அபிமுக்தன் மடம்
திருநாவுக்கரசு தென்திரு மடம்
சாவித்திரி மடம்
ஆலாலசுந்தரன் மடம்

3. திருக்கோயிலூர் : திருமழிசை ஆழ்வார் திருமாளிகை மடம் (கி. பி. 1133) சித்திரமேழி மடம் (கி. பி. 1182) சிதம்பரம் : திருநாவுக்கரசு மடம் (கி. பி. 1235), கோளகி மடம் (கி. பி. 1249) திருநோக்கழகியான் மடம் (கி. பி. 1258)


4. Administration and Social Life under Vijayanagar, part - II -T. V. Mahalingam, University of Madras. 1963
5. Development of Religion in South India, K. A. Nilakanta Sastri, Orient Longmans Madras.1975
6. மேலது
7. அபிதானசிந்தாமணி
8. Epigraphia Indica Vol XIII p:122
9. Epigraphia Indica Vol XIII p:12 pp. 194 - 198
10. Epigraphia Indica Vol XIII No:8 pp:122
11. Epigraphia Indica Vol XIV No:12 pp. 168-175
12. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1915
13. Epigraphia Indica Vol XVI No. 12 pp. 88-96
14. Topographical List of Inscriptions Madras Presidency Tr 62- C Notes
15. ஆவணம் 11:3 தமிழகத் தொல்லியல் கழகம் 2000
16. டி. வி. மகாலிங்கம் மேலது பக் 234–235
17. தெ. இ. க. தொ. 26; 466, 471, புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள்; 707, 746, 829, இ. க. ஆண்டறிக்கைகள் 1924: 213, 193, 1912: 354, 389,365 1911:79 1963 – 63: 524,525
18. இ. க. ஆ. அ. 1924 :13
19. மேலது 1909 : 443, 44
20. புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள் எண் 707
21. மேலது 829



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மேலது 749
23. இ. க. ஆ. அ 1962 – 63: 523, 524, 525
24. இ. க. ஆ. அ 1924; 213, 193
25. இ. க. ஆ. அ. 1912: 354, 354, 352, 389, 365. இக்கல்வெட்டுகளின் பாடக்குறிப்புகளைப் பேராசிரியர் எ. சுப்பராயலு அவரது தொகுப்பிலிருந்து தந்து உதவினார்.
26. இ. க. ஆ. அ. 1924 முன்னுரைப் பத்திகள் 42,50
27. இ. க. ஆ. அ. 1911:79
28. இ. க. ஆ. அ. 1912:207
29. இ. க. ஆ. அ. 1934:112
30. தெ. இ. க. தொகுதி 7:464
31. மேலது தொகுதி 1:88
32. மதுரை மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி I 194/2003
33. இ. க. ஆ. அ 1925:70
34. தெ. இ. க. தொகுதி 17:559
35. புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள் எண் 718
36. இ. க. ஆ. அ. 1939 – 40 : 266
37. தெ. இ. க. தொ. 4:379
38. இ. க. ஆ. அ. 1900:21 தெ. இ. க. தொகுதி
39. T. L. I. M. P - Rangacharya Mr 276
40. T. L. I. M. P - Rangacharya Mr 575
41. இ. க. ஆ. அ. 1943:104
42. மேலது 1906:103
43. ...தமிழகச் செப்பேடுகள் தொகுதி / தொல்லியல் துறை தமிழ் நாடு அரசு சென்னை
44. வலங்கைமாலை – சி. ராமசந்திரன் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
45. மேலது
46. இ. க. ஆ. அ. 1911: A15
47. த. செ. தொகுதி / சேடப்பட்டி செப்பேடு
48. மேலது நங்கவரம் செப்பேடு
49. இ. க. ஆ. அ. 1910:11, A4
50. சேதுபதி செப்பேடுகள், புலவர் செ. இராசு: இராமலிங்கவிலாசம் – கையேடு, வெ. வேதாசலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அத்துவைத மரபிற் தத்துவராயர்

கலாநிதி எ. என். கிருஷ்ணவேணி

## அறிமுகம்

அத்துவைதம் என்பது பொதுவாகச் சங்கரரது தத்துவத்தைக் குறிக்க வழங்கும் சொல்லாகும். அத்துவைதத்திற்குத் தமிழ் மொழியில் இலக்கியம் ஏற்படுத்திய மூலகாரணராகத் தத்துவராயரைக் கொள்ளலாம். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியைச் சேர்ந்த இவர் தமிழ் நாட்டு இலக்கியக் கலை வரலாற்றிலும் சமய வரலாற்றிலும், மிகவும் குறிப்பிடக்கூடிய இடத்தைப் பெறுகின்றார். தமிழ்நாட்டில் வடமொழியில் மட்டும் அறியப்பட்டிருந்த வேதாந்த தத்துவத்தைத் தமிழ் மொழியில் இலக்கியத்துக்குள் கொண்டுவந்த சிறப்பு இவருக்குரியது. தத்துவராயர் பத்தி மரபில் நின்று ஆதிசங்கரரின் அத்துவைத வேதாந்தத்தைப் பாடியுள்ளார். சிவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணன் என்ற இருவரும் ஒருவரே என்று அத்துவைதம் பேசுவதுடன் சாதிமேலாதிக்கமும் சாதிப்பூசல்களும் நிறைந்த அக்காலச் சமூக அமைப்பில் சாதிவேறுபாடின்றி அனைவரும் ஒன்று என்று அத்துவைதம் பேசி பொதுமக்கள் அத்துவைதத்திற்குத் தத்துவராயர் புதிய பரிமாணத்தைத் தந்துள்ளார். இக்கருத்துக்களை இவரது நூல்களின் அடிப்படையில் ஆய்வு செய்தல் வேண்டும். தத்துவராயர் பாடிய நூல்கள் பல்வேறு இலக்கிய வகைகளைச் சார்ந்தவை. அடங்கன் முறை என்பதில் மரபுவழியான 18 சிற்றிலக்கியங்கள் உள்ளன. பாடுதுறையில் 138 தலைப்புக்களில் 1140 பாடல்கள் உள்ளன. தத்துவாமிர்த்தம், சிவப்பிரகாச வெண்பா, ஈஸ்வர கீதை, பிரம்ம கீதை என்பன தனித்தனியே செய்த நூல்கள் ஆகும். பொதுவாக இந்நூல்களின் அடிப்படையில், சிறப்பாகப் பாடுதுறை அடிப்படையிலும் தத்துவராயரது அத்துவைதக் கொள்கையை வெளிக்கொணர்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தத்துவராயரது காலப் பின்னணி

தமிழக வரலாற்றில் கி.பி 1300– 1650 வரையுள்ள காலப்பகுதி விஜய நகர காலம் என்று அழைக்கப்படுகிறது. விஜய நகர நாயக்க மன்னர்களது ஆட்சியின் கீழ் மதுரை, செஞ்சி, தஞ்சாவூர் போன்ற இடங்களில் நாயக்க மன்னர்கள் சிற்றரசர்களாக இருந்தனர். இக்காலப் பகுதியில் டெல்கிச் சுல்த்தான்களின் படையெடுப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. மதங்களிடையே போட்டிகள் நிலவின. பல்வேறு பிளவுகளிற்கு உட்பட்டிருந்த இந்துமதத்தின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தி எழுச்சி பெற்றதே விஜயநகர பேரரசு ஆகும்.

1. விஜயநகர மன்னர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களாக இருந்தும், தமிழ் மொழியிற் பெருமளவு இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
2. தெலுங்கு மொழியை முதன்மைப் படுத்திய ஓர் ஆட்சி முறை தமிழ் நாட்டில் இடம்பெற்ற நிலையில் பெரும் தொகையாக தெலுங்கர்கள் தமிழ் நாட்டிற் குடியேறினார்கள்.
3. சமஸ்கிருதமயப்படுத்துகையே இக்காலப் பண்பாடாகின்றமையினைக் காணலாம்.
4. முதன்முதலாக தமிழ், அன்னியப் பண்பாடொன்றின் மொழியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சைவமரபில் மெய்கண்ட தேவரது சிவஞான போதத்தின் தோற்றம், அதனை ஒட்டிய ஏனைய சைவசித்தாந்த சாத்திரங்களின் தோற்றம் என்பன குறிப்பிடத்தக்கன.
6. சித்தர் பாடல்களின் தோற்றம்.
7. மடங்கள், ஆதீனங்களின் சமய சமூகத் தொண்டு.
8. ஸ்தலபுராணங்களின் தோற்றம்.
9. உரைநூல்கள் தோன்றிய காலம்.
10. முருக வழிபாட்டின் எழுச்சி .
11. கட்டட சிற்ப ஓவியங்களின் வளர்ச்சி.
12. தத்துவ நூல்களின் தோற்றம்.

விஜயநகர நாயக்கர் காலப் பகுதியைச் 'சைவ சமயத்தின் வெற்றிக் காலம்' என்று மூ.ஏ. நீலகண்டசாஸ்திரி தமது தென்னிந்திய வரலாறு என்ற நூலிற் (பக். 445) கூறுவதுடன், 1200–1650 வரை பரந்திருந்த தமிழ் இலக்கிய வரலாற்றில் தமது கவனத்தைக் கவரும் காலம் எனவும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. (பக் 443)

## சமய தத்துவ நூல்களின் தோற்றத்துக்கான பின்னணி

சங்ககாலம் தொட்டு வளர்ந்து வந்த சைவ, வைஷ்ணவ மதங்கள் பல்லவர் காலப் பக்தி இலக்கியத்தின் மூலம் எழுச்சி பெற்றதுடன், விஜயநகர நாயக்கர் காலப் பகுதிக்கு முன்னரே இரு மதங்களும் இணைந்து வளரத் தொடங்கின.

கி.பி. 788–820 காலப்பகுதியில் வடதிருவாங்கூரின் காலடி என்னும் இடத்திற் தோன்றிய சங்கராச்சாரிய சுவாமிகள் உபநிடதங்களின் சுருக்கமாகிய பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை முக்கியத்துவம் பெறுவதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு அத்துவைத தத்துவம் தோன்றியது. அத்துவைதம் என்றாலே அது சங்கரரது அத்துவைதத்தையே சிறப்பாகக் குறிக்கிறது. உபநிடதங்களில் முக்கியமான பத்து உபநிடதங்களிற்கு (தசோப நிடதத்திற்கு) சங்கரர் உரை எழுதியுள்ளார். சங்கரரின் மாணவரான சுரேஸ்வரர் (விஸ்வரூபர்) சங்கரரின் அடிப்படைக் கருத்துக்களை நைஸ்கர்மிய சித்தியில் (நிஸ்காமிய சித்தி) சுருக்கமாகக் கூறுகிறார். சங்கரரது தைத்திரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடத, பிருகதாரணிய உபநிடத பாஷ்யங்களுக்கு வார்த்திகமும், தெளிவுரையும் எழுதியுள்ளார். ஸ்ரீ இராமானுஜர் (1017–1137) பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை ஸ்ரீபாஷ்யம் எனப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டது இராமானுஜரது விசிஷ்டாத்துவைதம் ஆகும்.விசிஷ்டாத்துவைதம் இராமானுஜரது பாஷ்யத்தின் பிரதான உள்ளடக்கமாகப் போற்றப்படுவதாக ஆய்வாளார்கள் கூறுவர். மத்துவர் எழுதிய உரையில் அடிப்படையின் தோற்றம் பெற்றது மத்துவ வேதாந்தம் ஆகும். விஜயநகர நாயக்கர் காலத்தை ஆராய்கின்றபோது இத்தகைய தத்துவ நூல்கள் ஏற்கனவே தோற்றம் பெற்றிருந்ததனைக் காணலாம். இத் தத்துவங்களின் பின்னணியினை நோக்கும்போது சமூக அமைப்புப் பற்றியும் நாம் குறிபிட்டாக வேண்டும். விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் அத்துவைத சிந்தனையின் செல்நெறி பற்றிக் கவனிக்கும் போது சொருபானந்தர், தத்துவராயர், ஆவுடைஅக்காள் போன்றோரது நூல்களும் பாடல்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவர்களுள் தமிழ் அத்துவைதச் சிந்தனை மரபில் தத்துவராயர் முக்கியத்துவம் பெறுகிறார்.

## தத்துவராயரும் அவரது நூல்களும்

கி.பி 14ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராகக் கருதப்படும் சொருபானந்தரின் சீடராக விளங்கியவர் தத்துவராயர். இவர் தமிழ் நாட்டில் அத்துவைத மரபு தமிழ் மொழி மூலம் காலூன்றக் காரணமாய் இருந்தவர். இக்காலப் பகுதியில் தோன்றிய இரு தொகைநூல்கள் பற்றிச் சிறப்பாக கூறப்படுகின்றது. அவையாவன

1. சிவப்பிரகாசப் பெருந் திரட்டு (2824 செய்யுள்களைக் கொண்டது)
2. குறுந்திரட்டு (அதில் அரைவாசிச் செய்யுள்களைக் கொண்டது)

இவ்விரு நூல்களையும் அக்காலச் சமய தத்துவஞான இலக்கியங்களாகப் பாதுகாத்து வைத்துள்ளனர் என்பதே ஆய்வாளர்களின் கருத்து. பெருந்திரட்டில் 147 நூல்களில் பெயர்கள் காணப்படுகின்றன. மேலும் குருவைப்போன்று தத்துவராயரும் சாதரண மக்களும் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் பாடல்களைச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுதுறை, மோகவதைப்பரணி (அதன் நடுப்பகுதியாக சசிவர்ண போதம்) என்ற வேதாந்தச் சாத்திரத்தைப் பாடி குருவின் திருவடியில் வைத்து வணங்கி நின்றபோது தத்துவராயரது திறமையை எண்ணி அவரைத் தம் சீடராக சொருபானந்தர் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் தத்துவராயரால் முதலிலிற் பாடப்பட்ட சிவப்பிரகாச வெண்பா தமது குருவின் குருவாகிய சிவப்பிரகாசரைத் துதித்துப் பாடியது ஆகும். தத்துவாமிர்தம் எனும் நூல் 137 பாடல்களைக் கொண்டது. இது குருவைத் தேடி பாவம் அறுத்து ஞானம் பெற முயலும் செய்தியைக் கூறுவதன் மூலம் தம் குருவின் வரலாற்றைக் கூறுவதாகவுள்ளது. ஈஸ்வரகீதை என்பது சிவனையே பரம் பொருளாகக் கொண்டு பாடப்பட்ட வேதாந்த நூலாகக் கூறப்படுகிறது. தத்துவராயர் பாடுதுறையில் இடையிடையே தமது முன்னோர்களது நூற்பாடல்களையும் சேர்த்துள்ளார். சைவசித்தாந்தப் பிரமாண நூலாகிய '**சிவானந்தமாலை**' இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளது. தாலாட்டு முதல் அமிர்தசாசர வெண்பாவரையுள்ள 18 நூல்கள் அடங்கிய அடங்கன் முறையெனும் தொகுதியையும் தத்துவராயர் இயற்றினார்.

விஜயநகர நாயக்கர் காலப் பகுதியில் வடமொழிக் கல்வி முக்கியத்துவம் பெற்றிருந்ததுடன், வடமொழி உயர்தரக் கல்விக்காக தாராளமாக வழங்கப்பட்ட நன்கொடைகள் நீண்ட சிலாசாசனங்களிற் பதியப்பட்டுள்ளன. சில விதிவிலக்குகள் இருந்த போதும் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சி பிராமணர்களின் தனியுரிமையாகவே இருந்தது. நன்கொடைகள் மூலம் சம்ஸ்கிருதக் கல்விக்கு ஊக்கமளிக்கப்பட்டது. நூல்களைப் பொறுத்தமட்டில் வடமொழியில் எழுதப்பட்டுள்ள தத்துவ நூல்கள் சாதாரண மக்களினால் புரிந்துகொள்ள முடியாதனவாகவே இருந்தன. ஆனால் அக்காலச் சமூக வரலாற்றுத் தேவைக்கேற்ற வகையில் வடமொழித் தத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த வகையில் நூல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. வடமொழி பகவத்கீதையைப் பட்டனார் தமிழில் மொழிப்பெயர்த்து 545 பாடல்களில் பாடியுள்ளார். இது **பரமார்த்த தரிசனம்** என்ற பெயரைப் பெறுகிறது. அத்துவைத தத்துவாசிரியரான ஆதிசங்கரரது வேதாந்தத் தத்துவக் கருத்துக்களைத் தத்துவராயர் தமிழ் அத்துவைதமாகப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டு இலக்கிய வரலாற்றிலும், தத்துவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றிலும் தத்துவராயருக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு. இக்காலப்பகுதியில் கிருஷ்ணதேவராயரின் அரசவைப் புலவரான ஹரிதாஸர் சைவம், வைஷ்ணவம் ஆகியவற்றை விளக்கும் '**இருசமயவிளக்கம்**' என்ற நூலை எழுதியமை குறிப்பிடத்தக்கது. 1633 ஆம் ஆண்டு அளவில் மதுரைத் திருவேங்கடநாதர் என்பவர் செய்யுள் வடிவில் அத்துவைத வேதாந்தத்தை விளக்கும் நூல் ஒன்றைச் செய்தார். இது '**மெஞ்ஞான விளக்கம்**' '**பிரபோதசந்திரோதயம்**' என்ற பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றது. இந்நூல் 48 காண்டங்களும் , 2019 செய்யுட்களும் கொண்டது.

வடமொழி அத்துவைத வேதாந்தம் அறிஞர்களின் வேதாந்தமாகவே இருந்து வந்துள்ள நிலையில், தமிழ் நாட்டில் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில், பொதுமக்கள் அத்துவைதத்தைத் தந்தவராக தத்துவராயரைக் கொள்ளலாம். இவருக்குப் பின் ஆவுடையக்காள் இத்தகைய வேதாந்தப் பாடல்களைப் பாடியதைக் காணலாம். அத்துவைத மதப்பிரசார நோக்கில் தாம் பாடிய நூல்களுக்குச் சைவசித்தாந்த நூற் பெயர்களையே பெரிதும் இட்டுள்ளார். தத்துவப்பிரகாஸம், தத்துவவிளக்கம், ஞானசாரம், வேதாந்ததீபிகை போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கன.

## தத்துவராயர் பேசும் அத்துவைதம்

பாடுதுறை எனும் நூலில் 138 தலைப்புக்களில் 1140 பாடல்கள் உள்ளன. தமிழ்ப் பக்தி இலக்கிய வகைகள் பலவும், அவற்றிலும் அகத்துறைசார் பக்தி இலக்கிய வகைகளும் இடம் பெறுகின்ற அகத்துறை சார் பாடல்களின் அடிப்படையில் சிறப்பாக அத்துவைதக் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சில பாங்கிக்குரைத்தல், தாய் வார்த்தை (தாய்க்கூற்று) தோழியுரைத்தல் (தோழிகூற்று) வரவுசாற்றல், அருமையுரைத்தல், நெஞ்சிற்கு உரைத்தல் என்பன அகப்பொருள் உரைப்பனவாக உள்ளன. மேலும் அருள்பத்து, குயில், அன்னைப்பத்து, அச்சோ, சாழல், அம்மானை, ஊசல், பிரார்த்தனை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருவுந்தியார் போன்றன திருவாசக அமைப்பில் பாடப்பட்டுள்ளன.

தத்துவராயர் அத்துவைதக் கருத்தை குறத்தி பாடல் மூலம் வெளிப்படுத்தும் திறம் சிறப்புக்குரியது. குறத்தி என்ற தலைப்பில் வரும் பத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களும், அரையர் சேவையில் வரும் குறத்தி தன்னைஅறிமுகம் செய்து கொள்ளும் இடத்திற் பாடும் பாடல்களைப் பின்பற்றியனவாகும். இந்த வகையில் குறத்தி பாடல் முலம் வெளிப்படுத்தும் அத்துவைதக் கருத்துக்களை முதலில் நோக்கலாம். தத்துவராயரது தத்துவக் கருத்துக்களை விளக்கும் அத்தகைய பாடல்களில் ஒன்று பின்வருமாறு அமைகிறது.

*கேடுபடும் உடல் தனக்கு கீழாய கிழங்கு கல்லிக்*
*காடும் மலையும் கருதியிடும் குறத்தியல்லேன்*
*பாடும் மறையிற் பரப்பிரமமும் நானும்*
*கூடும் வகை தேடிக் குனித்திடும் குறத்தியளே.*

இப் பாடலில் ஆன்மாவும் பிரமமும் ஒன்றென்பதையும் அவையிரண்டும் ஐக்கியமாவதையும் தேடும் குறத்தியாக குறத்தி தோன்றுகிறாள்.

சங்கரரது அத்துவைதத்திலே ஒன்றாகவுள்ள பிரம்மம் மாயை காரணமாக உலகமாகத் தோன்றுவதுடன் அவித்தை காரணமாக பல சீவர்களாகவும் தோன்றுகின்றது என்ற கருத்து அடிப்படைக் கோட்பாடாகவுள்ளது. சங்கரரது அத்வைதத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் அவர் பேசும் மாயை பற்றிய கருத்துக்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு அவரது தத்துவத்தில் மாயை முதன்மை பெறுவதன் காரணமாக அது "மாயாவாதம்" என்ற பெயரைப் பெறுகின்றது. சங்கரரது அத்துவைதத்தில் பொருள் ஒன்று என்ற கருத்தே அடிப்படையாக உள்ளதனால் பலவாகத் தெரிவதெல்லாம் தோற்றமே என்று அறியப்படுகின்றது. சங்கரர் உலகம் உண்மையல்ல அது ஒரு தோற்றம் என்பதனை விளக்க விவர்த்தவாதத்தை முன்வைக்கின்றார். விவர்த்தவாதம் என்பது ஒரு பொருள் மாறாமல் இருந்தபடியே மாறிவிட்டது போல் தோன்றுவது. கயிறு பாம்பாகத் தோன்றுதல் இதற்கு சிறந்த உதாரணம் ஆகும். இக்கருத்தை உணர்த்தும் வகையில் தத்துவராயர் பாடல் ஒன்று அமைகிறது. பகலில் கயிறாகவும் இருட்டில் பாம்பாகவும் ஒரே பொருள் தோன்றுவதுபோல் உலகம் மாயை என்பதை சங்கரரது உதாரணத்தின் மூலம் விளக்குகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்க்கில் உலகம் பழுதை காண் அம்மானை*
*பாராத போது பழுதை பாம்பு அம்மானை*
*ஆர்க்கும் அறிய அரிது காண் அம்மானை*
*அற்றது இறையடிகண் மற்றிலை அம்மானை*

அதாவது இறைவனது பாதங்களைப் பற்றுவதால் உலகம் பாம்பன்று, கயிறு என்ற ஞானம் கிட்டும் என்கிறார் தத்துவராயர். பாடுதுறையில் அமைந்த அம்மானைப் பாடல்களில் (2,1)

*மாயைக்கு வடிவுகொடுப்பார்காண் அம்மானை*
*மாயையால் உலகு அளப்பார் காண் அம்மானை*
*ஆயில் அறிவாய் இருப்பார் காண் அம்மானை*
*ஆயாதபோதுலகம் ஆவார்காண் அம்மானை.*

அத்துவைதக் கருத்துக்களில் முக்கியத்துவம் பெறும் மாயை பற்றி விளக்கும் போது மாயைக்கு வடிவு கொடுப்பவராகவும் மாயையால் உலகை அளப்பவராகவும் இறைவனே உள்ளார் என்பது ஆராய்ந்து பார்த்தால் புலனாகும். அந்த இறைவன் அறிவுவடிவாய் இருப்பவர். அதனை அவன் அருளால் அறிந்து தெளியலாம். ஆயாத போது உலகம் ஆவார்காண் அம்மானை என்று முடிக்கின்றார். பிரமத்தின் இயல்பு சத், சித், ஆனந்தம் என்பதாகும். 'சத்' என்பது உள்பொருளைக் குறிக்கும். 'சித்' என்பது (consciousness) அறிவு என்று பொருள்படும். பிரமத்தின் இயல்பு ஆனந்தமயமானது ஆகும். இவ்வாறு சங்கரர் கூறும் வேதாந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தத்துவராயர் அத்துவைத மரபை விளக்க முற்படுகிறார். இவ்வாறு விளக்கும்போது சங்கரர் கூறும் மோட்சத்திற்கு உரிய உயர் வழியான ஞான மாக்கத்துடன் தமிழ் சமூக அமைப்பில் முக்கியத்துவம் பெற்ற பக்தி மரபை இணைத்து சாதாரண மக்களும் பின்பற்றக் கூடிய வகையில் அத்துவைதத்திற்கு விளக்கம் தருகிறார் இவ்வாறு தமிழ்ச் சமூக அமைப்பிற்கேற்ற அத்துவைதம் தத்துவராயரால் விளக்கப்பட்டுள்ளது. இறைவனை இடையறாது நினைந்துருகும் பத்தியே மெய்த்தவம் என்று போற்றப்படுகின்றது. தத்துவராயர் பாடுதுறையும் பாங்கிக்குரைத்தலாய் அமைந்த நான்காம் பாடலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேண்டாமை எனும் விழுச்செல்வம் பெற்றோம்*
*வேண்டாம் என்னும் பிறவி வேரறப் பெற்றோம்*
*ஆண்டவன் என்றுருகும் அன்பினைப் பெற்றோம்*
*ஐயோ இது தவம் சொல்லாய் பெண்ணே.*

என்று மேற்கூறப்பட்ட கருத்து விளக்கப்படுகிறது.

தமிழ் அத்துவைதம் சிவன், திருமால் ஆகிய இரு தெய்வங்களையும் ஒன்றெனப் போற்றுவது. அந்த வகையில் ஆண்டாளின் வாரணமாயிரம் பாடல்களை உள்வாங்கித் தத்துவராயர் பாடிய பாடல் ஒன்று இறைவன் குருவடிவாக வந்து அருட்பார்வை செலுத்தி தம் திருவடிகளை ஆன்மாக்களின் சென்னிமீது வைத்துப் பிறவிப் பிணி தீர்த்தல் பற்றிப் பேசுகிறது.

*எங்கள் பெருமான் இணையடி சென்னிமேல் வைத்து*
*தங்கும்படி தந்து தாமரைக் கண்களால்*
*பொங்கும் பிறவிகள் போயகலப் பார்த்து*
*கங்குல் கழியக் கனாக் கண்டேன் தோழிநான்*

(பாடுதுறை கனாவுரைத்தல் பாடல் 05)

இறைவனது திருவடிநிழலை அடையும் போது ஆன்மா அறியாமை என்ற இருள் நிலையில் இருந்து விடுபடுகிறது. 'பொங்கும் பிறவிகள் போயகலப் பார்த்து கங்குல் கழியக் கனாக்கண்டேன் தோழிநான்' என்ற தலைவி கூற்றினூடாக உயர்ந்த தத்துவத்தை அழகாக எளிமையாக விளக்குகிறார்.

திருமூலர் தம் பாடல்களில்

*இருவினை நேரொப்பில் இன்னருட்சக்தி*
*குருவென வந்து குணம்பல நீக்கித்*
*தரும் என ஞானத்தால் தன்செயல் அற்றல்*
*திரிமலந் தீர்ந்து சிவனவனாமே*

என்று பாடுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிவனோடு இணையும் சாயுச்சிய முத்தியின் ஆன்மா மீண்டும் பிறவிக்குட்படாத பரமுத்தியைப் பெறுகின்றது. ஞானத்தின் மூலமே இது அடையப்படுவதாகும். " ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் நல்லாகமஞ் சொல்ல" என வரும் சிவஞான சித்தியார் பாடல் இவ்விடத்தில் கருத்திற் கொள்ளத்தக்கது.

பாடுதுறையில் அமைந்த பந்து (மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று) பாடல் 6இல் அத்துவைதக் கருத்து நன்கு வெளிப்படுத்தப்படுகின்றது. பிரம்மம் அகண்டாகாரமானது. எல்லைகளைக் கடந்தது. குருவின் திருவடிகள் தம் தலைமேல் வைக்கப்பட்டதால் ஞானம் பெற்று, தாமும் தம்குருவும் எல்லைகடந்து பிரமமானதாகத் தத்துவராயர் கூறுகிறார்.

*தேசிகனாரடி சென்னிமேல் வைத்துத்*
*தேசகாலங் கெடப் பந்தாடநின்றேன்*
*வாசியில்லா அறிவாயாவாயோ பந்தே*
*மாயமயமாகிப் போவாயோ பந்தே*

தத்துவராயர் பந்தைப் பார்த்து நானும் குருவும் பிரமமானோம். அந்த அறிவாக ஆவாயோ, அல்லது மாயமயமாகிப் போவாயோ பந்தே என்று கேட்கிறார்.

மாணிக்கவாசகரது திருவுந்தியாரைப் பின்பற்றித் தம் பாடுதுறையில் திருவுந்தியார் பாடல்களைத் தத்துவராயர் சேர்த்துள்ளார். அவற்றுள் ஒன்பதாம் பாடலில்

" வரவுபோக்கற்றோம் என்று உந்தீபற"

என்று பிறப்பிறப்பற்றோம் என்ற கருத்தை முன்வைக்கிறார்

மேலும் பாடுதுறையில் அமைந்த பாடல்களில் சாதி வேறுபாடின்றி மக்கள் அனைவரும் சமம். அதுவே அத்துவைதம் என்று சாதிய சமூக அமைப்பிற்கு எதிரான ஒன்றாக அத்துவைதத்தைத் தத்துவராயர் விளக்குவது கவனிக்கத்தக்கது. அதாவது பாடுதுறையில் அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுந்தியார் 4ஆம் பாடலில்

*முன் செய்த தவத்திலே முயன்ற அப் பெருமையால்*
*பின்சாதி கழிந்தோமென் றுந்தீபற*
*பிரமமேயானோம் என்றுந்தீபற*

என்று பாடுவது கவனிக்கத்தக்கது. பாடுதுறையில் அமைந்த பார்ப்பானும் பறைச்சியும் என்னும் பிரபந்தத்தில் இடம்பெறும் பாடற் கருத்துக்கள் தமிழ்நாட்டு அத்துவைதச் சிந்தனைக்குச் சிறந்த உதாரணங்களாக அமைகின்றன.

“இறைச்சியெலும்பு தோலன்றியெனக்குமுனக்கும் வேறுண்டோ
பறைச்சி போவென்னாண்டாய் பார்ப்பான் பண்டேநீ பேய் கொண்டாயதே”

என்ற 5ஆம் பாடலில் தன்னைத் தள்ளிப்போ, தூரப்போ என்று கூறிய பார்ப்பானைப் பார்த்து பறைச்சி ஒருத்தி எழுப்பிய வினா இப்பாடலிற் பதிவாகியுள்ளது. அதாவது உனக்கு அறிவு கெட்டுவிட்டதா? மனிதர் அனைவருக்கும் உடல், உயிர், இரத்தம் ஒன்றாக இருக்கும்போது அங்கு வேற்றுமைக்கு இடம் இல்லை என்று உயிர்கள் அனைத்தும் பிரமத்துடன் ஒன்றுபட்டவையே என்ற உயர்ந்த கருத்து விளக்கப்பட்டுள்ளது.

விஜயநகர நாயக்கர் கால சமய நெறிகளை நோக்கும் போது சைவம், வைஷ்ணவம், அத்துவைதம் போன்றன முக்கியத்துவம் பெறுவன. அந்தணர்கள் வைஷ்ணவம், அத்துவைதத்தைப் பின்பற்ற சைவம் சைவ வேளாளர்களது மதமாகப் போற்றப்பட்டது. சைவவேளாளர்களது மேலாண்மையை உடைக்க அந்தணர்கள் புதிய சமய மரபாக அத்துவைத மரபைக் கையில் எடுத்தனர். ஏற்கனவே செல்வாக்குப் பெற்றிருந்த சங்கரரது அத்துவைத மரபு ஸ்மார்த்த அந்தணர்களால் பொதுமக்கள் வேதாந்தமாக உருவாக்கப்பட்டது. இத்தகைய சூழலிற் தத்துவராயர் தமிழ் அத்துவைத மரபை உருவாக்கினார்.

மேலும் சைவத்தின் பரம்பொருளான சிவனையும், வைஷ்ணவத்தின் பரம் பொருளான விஷ்ணுவையும் இணைத்து சிவனும் விஷ்ணும் ஒன்றே என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவைதக் கொள்கை பேசப்பட்டது. இது மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. இவ்வாறு சைவத்தையும் வைஷ்ணவத்தையும் இணைத்ததுடன் அவற்றின் செல்வாக்கிற்கெதிராக அத்துவைத மதத்தைப் பொதுமக்கள் மதமாக வளர்க்க முற்பட்டனர் என்ற கருத்து ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டது. இது விஜய நகர நாயக்கர் காலப்பகுதியில் இஸ்லாமிய மதப் பரம்பலுக் கெதிராக வைதீக மதங்களை வளர்பதற்கு பெரிதும் உதவியது. அதாவது சிவனும் திருமாலும் ஒன்று என்ற கருத்து மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியது. இத்தகைய ஒரு நிலையில் கோயில் வழிபாட்டில் சிவனும் திருமாலும் இணைந்த ஹரிகரன், சங்கர நாராயணன் போன்ற வடிவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

## முடிவுரை

இவ்வாறு தமிழ்நாட்டு சமய மரபில் தமிழ் அத்துவைதம் தத்துவராயரால் முன்னெடுக்கப்படுகிறது. அறிஞர்களது வேதாந்தமாக இருந்த (Scholastic Vedanta) சங்கரரது அத்துவைதம் பொதுமக்களது வேதாந்தமாக உருவாக்கம் பெறுகிறது. தத்துவராயரது குருவான சொருபானந்தர் பொதுமக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் அத்துவைதத்தைச் செய்யுமாறு பணித்தமை தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆன்மாவும் பிரமமும் ஒன்று என்பதும் சாதி மதம் கடந்த அத்துவைதமாகக் காணப்படுவதும் சிவனும் விஷ்ணுவும் ஒன்று என்ற ஒருமை நோக்கு இடம் பெறுவதும் மோட்சத்துக்குரிய வழியாகிய ஞானத்திற்குப் பதிலாக பக்தியோடு இணைந்த ஜீவப்பிரம ஐக்கியம் பேசப்படுவதும் முக்கியத்துவம் பெறுவன.

## உசாத்துணை நூல்கள்


1. Champakalakshmi. B., **Vanisnava Iconography in the Tamil Country,** Madras, 1981.
2. Meenakshisundaran, T.P., **Advaita in Tamil** Madras,1974
3. அருணாசலம். மு., **தமிழ் இலக்கிய வரலாறு** சென்னை, 1969.
4. வெங்கட்ராமன். சு., **அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு,** சென்னை, 2004.
5. வெங்கட்ராமன். சு., **பட்டனாரின் பகவத்கீதை,** திருச்சி, 2002.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "தத்துவார்த்த அகமுரண்பாடுகளின் வெளிப்பாடாக சித்தர் சிவவாக்கியாரின் பாடல்கள்" ஒரு கண்ணோட்டம்

திரு. ச. முகுந்தன்

## அறிமுகம்

நவநாதசித்தர்மரபு, பதினெண் சித்தர்மரபு என இந்தியச் சித்தர்மரபு இருநிலைப்படுத்தி நோக்கப்படுகிறது. வட இந்தியாவிற்குரியதாக நவநாதசித்தர்களும் தென்நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டுக் குரியவர்களாக பதினெண்சித்தர்களும் அறியப்படுகின்றனர். நிசானந்தபோதம், பதினெண்சித்தர் பெரியஞானக்கோவை, அபிதானசிந்தாமணி, முதற்கொண்டு பல்வேறு அகராதிகள், சித்தர் பாடல் திரட்டுக்கள் வரையில் இப்பதினெண் சித்தர்களின் பெயர்கள், வரிசைக்கிரமம் தொடர்பில் கருத்தொருமிப்பைக் காண முடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் பதினெண்சித்தர்களைத் திருமூலர் முதற்கொண்டு குறிப்பிடுகின்ற ஒரு போக்கும், அகத்தியர் முதற்கொண்டு வரையறைசெய்கின்ற ஒரு முறையுமென இரண்டு செல்நெறிகளை இவற்றிடையே பொதுவாக அவதானிக்க முடிகிறது.

எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பதிப்பிக்கப்பட்ட பதினெண்சித்தர் ஞானக்கோவை எனும் நூலில் சிவவாக்கியரே பதினெண்சித்தர்களில் முதலாமவராக இடம்பெற்றிருக்கிறார். அதேவேளை சிவவாக்கியரைப் பதினெண்சித்தர்களுள் ஒருவராகக் குறிப்பிடாமலும் பல சித்தர் பனுவல் திரட்டுக்கள் வெளிவந்துள்ளன. எவ்வாறாயினும் சிவவாக்கியரின் பெயரில் இடம்பெற்றுள்ள ஐநூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் சித்தர் இலக்கியத்தில் சிவவாக்கியர் பெற்றுள்ள சிறப்பிடத்தினைப் பறைசாற்றுவனவாகவே அமையப்பெற்றுள்ளன.

## சிவவாக்கியர் பற்றி அறிய உதவும் மூலங்கள்

சிவவாக்கியரின் வாழ்க்கை வரலாறு பற்றித் தெளிவாக வரையறுத்துரைக்கவல்ல மூலங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. சிவவாக்கியர் வேதியர் குலத்தில் பிறந்தார் என்றும் குறவர்குலப்பெண்ணை மணந்தார் என்றும் கொங்கணச்சித்தருடன் கெழுதகமை பூண்டார் என்றும் **அபிதான சிந்தாமணி** குறிப்பிடுகிறது.[1]

சாம்பசிவம் பிள்ளையின் **மூலிகை அகராதி** சிவவாக்கியர் திருமூலர் கூட்டத்தாரில் செம்படவக் கன்னியின் கர்ப்பத்திற் பிறந்தவர் என்றும் சைவவிரோதக் கருத்துக்களைப் பரப்பியதனால் மதுரையை ஆண்ட மன்னனொருவனால் தண்டிக்கப்பட்டார் என்றும் சிலகாலம் நாத்திகவாதியாக விளங்கிய இவர் பின்னர் சித்தரானார் என்றும் குறிப்பிடுகிறது.[2]

**தமிழ்ப்புலவர் அகராதி** இவர் முதலில் சைவராக இருந்து பின்னர் வைணவராகித் திருமழிசை ஆழ்வார் ஆகினார் என்றும் இவர் சித்தர்களுள் காலத்தால் முற்பட்டவர் என்றும் கூறுகிறது.

திருமழிசையில் பிருகு முனிவருக்கும் தேவமங்கைக்கும் பிறந்த திருமழிசையானைத் திருவாளன் எனும் வேடன் வளர்க்க வளர்ப்புத்தந்தையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயமாகிய வைணவத்தினைத் தழுவிப் பின்னொருகாலத்தில் சைவத்திற்கு மாறிச் சிவவாக்கியர் ஆனார் என்ற கதையினைப் **பாவலர் சரித்திர தீபகம்** என்ற நூல் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை பார்கவ முனிவருக்குப் பிண்டமாகப் பிறந்து திருவாளன் எனும் குறவனால் வளர்க்கப்பட்டு பல்வேறு சமயங்களில் புகுந்துழன்று பின்னர் பேயாழ்வாரால் மீட்கப்பட்டு பத்திசாரர் (திருமழிசைஆழ்வார்) ஆனார் என்ற வைணவ சம்பிரதாயம் சார்ந்த ஐதீகமும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[3]

சிவவாக்கியரின் வாழ்க்கைவரலாறு பற்றிக் குறிப்பிடப்பட்ட மேற்கூறிய அனைத்து விடயங்களும் ஐதீகப்பண்புடையனவே அன்றி வரலாற்று ரீதியாக நிறுவப்பட்டவை அல்ல என்பதும் இவ்விடயத்தில் மனங்கொள்ளத்தக்கன.

## சிவவாக்கியர் காலம்

சித்தர்கள் வாழ்ந்த காலத்தை வரையறை செய்வதில் பொதுவாகவே எதிர்நோக்கப்படுகின்ற சிக்கல்கள் சிவவாக்கியர் காலத்தைத் துணிவதிலும் ஏற்படுகின்றன. ந. சி. கந்தையாப்பிள்ளை, ஞா. தேவநேயப்பாவாணர் ஆகியோர் கி.பி. 7–8 ஆம் நூற்றாண்டுக்குரியவராகச் சிவவாக்கியரைக் கருதுகின்றனர். ஆயினும் இது ஊகம் சார்ந்த காலக்கணிப்பே எனலாம். மு. அருணாசலம் என்பவர் தத்துவராயர், சிவஞானவள்ளல், மறைஞானசம்மந்தர் ஆகியோரினைத் தொடர்புபடுத்தியும் மெய்கண்ட சாத்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தொடர்களைச் சுட்டிக்காட்டியும் சிவவாக்கியரை கி.பி. 14ஆம் நூற்றாண்டின் கடைக்கூறிற்கும் 15ஆம் நூற்றாண்டின் முற்கூறிற்கும் இடைப்பட்ட காலத்திற்குரியவர் என நிறுவமுற்பட்டுள்ளார்.[4]

சிவவாக்கியர் தமது பாடல்களின் திரட்டுக்குச் சிவவாக்கியம் எனத் தாமே பெயர் சூட்டியுள்ளார் என்பதனை **அரியதோர் எழுத்தையுன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்**[5] என்ற சிவவாக்கியரின் கூற்றிலிருந்து அறியமுடிகிறது. சித்தர் சிவவாக்கியருடைய பாடல்களின் எண்ணிக்கை ஐநூற்றெட்டில் இருந்து ஐநூற்றைம்பது வரையில் பதிப்புக்குப் பதிப்பு மாறுபட்ட தொகை கொண்டதாக விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரையின் நோக்கம்

சிவவாக்கியர் யார்? அவர் பூர்வீகம் எது? அவர் வாழ்ந்தகாலம் எது? அவர் எந்தச் சமயத்தைச்சார்ந்திருந்தார் என்பவற்றில் நிலவுகின்ற குழப்பநிலை அவரது பாடல்களின் மெய்யியல் சார்ந்த பொருளமைதிவரையில் தொடர்கிறது. சித்தர்கள் சடங்குநிலை சார்ந்த சமயநெறிகளிற்கு அப்பாற்பட்டவர்கள் என்பது உண்மையே. ஆயினும் அவர்களின் மெய்யியற்றளம் ஸ்திரமானது, தெளிவானது, வரையறைப்படுத்தக்கூடியது. **சித்தர் சமயம்** என்பதனை துணிவது சிக்கலானது. ஆனால் **சித்தர் மெய்யியல்** என்பதனை வரையறுப்பது சாத்தியமானது. ஆனால் சிவவாக்கியரைப் பொறுத்தவரையில் அவர் சஞ்சரிக்கின்ற மெய்யியற்றளமும் மிகவும் சிக்கலானது அகமுரண்பாடுடையது. இம்முரண்பாடுகளைப் பற்றி ஆராய முற்படுவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு பற்றி ஆராயமுற்படும் சிவவாக்கியர் வைதிக தத்துவமரபுகளைச் சார்ந்தவராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளார். குறிப்பாகக் காரண காரியத்தொடர்புகளைச் சீர்தூக்கி விளக்கித் தன்னை ஒரு சத்காரியவாதியாகவும் எண்ண வைத்திருக்கிறார்.

*வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை*
*தச்சில்லாத மாளிகை சமைந்த வாறதெங்கனே*[6]

என்ற பாடல் அடிகள் கட்டடக் கலைஞன் இல்லாமல் கட்டடம் அமைய முடியாதது போல இச்சடப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் ஒரு காரணப் பொருளின் அவசியம் என்பதை வலியுறுத்துவனவாக அமையப் பெற்றுள்ளன.

இங்கே "தச்சில்லாத மாளிகை சமைந்தவாறு எங்கனே" என்ற எடுத்துக் காட்டு சைவசித்தாந்திகள் காரண காரியத் தொடர்பு பற்றி விளக்குமிடத்துப் பயன்படுத்தியுள்ள

*ஆரியன் குலாலனாய் நின்றாக்குவன் அகிலமெல்லாம்*[7]

என்ற குயவன், பானை உதாரணங்களை நினைவூட்டுவதாய் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிவவாக்கியர்,

*"அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூலமானோன் நீ "*[8]

என்ற பாடல்அடிகளின் மூலமும் ஏதோ ஒருவித வைதீக தரிசனச் சாயலுடைய காரணகாரிய சம்பந்தத்தையே வெளிப்படுத்தியுள்ளார் என்ற முடிவுக்கு வரத்தோன்றுகிறது.

ஆயினும் உயிரின் தோற்றம், உடலுக்கும் உயிருக்குமான தொடர்புகள் பற்றிய சிவவாக்கியரின் சிந்தனைகளில் முன்னைய தளத்திலிருந்து சடுதியான மாற்றங்களையும் முரண்பாடுகளையும் அவதானிக்க முடிகின்றது.

*"கருத்தரிக்கும் முன்னெலாம் காயம் நின்றது எவ்விடம்*
*உருத்தரிக்கும் முன்னெலாம் உயிர்ப்பு நின்றது எவ்விடம்*
*அருள்தரிக்கும் முன்னெலாம் ஆசை நின்றது எவ்விடம்*[9]

"கருப்பைக்குள் பதியப்பெற்று உருவமெடுத்து வருவதற்கு முன்பாக இந்த உடலும் உயிரும் எங்கே இருந்தன. அகவுணர்வு வந்த பின்னரே ஆசை தெரிந்தது. அவ்வாறாயின் அதற்கு முன் ஆசை எங்கிருந்தது?" என்ற ஐயங்களை மேற்கூறிய பாடலடிகளூடாக முன்னிறுத்திய சிவவாக்கியர் மீண்டும் முரண்படுகிறார். இவ்விடத்தில் முன்பு சத்காரிய வாதம் பேசிய சிவவாக்கியரைக் காணமுடியவில்லை; மாறாக ஈஸ்வரவாதத்தையே அவநம்பிக்கையுடன் நோக்குகின்ற ஒருவனின் வினாக்களாகவே இவை தொனிக்கின்றன. இதனை மேலும் உறுதிசெய்யும் வகையிலேயே பின்வரும் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன.

*"கருத்தரிக்கும் முன்னெலாம் காயம் நின்றது தேயுவில்*
*உருத்தரிக்கும் முன்னெலாம் உயிர்ப்பு நின்றது அப்புவில்*
*அருள்தரிக்கும் முன்னெலாம் ஆசை நின்றது வாயுவில்"*[10]

கருத்தரிப்பதற்கு முன் உடல் தீயிலும் (தேயு) உயிர் நீரிலும் (அப்பு) ஆசை வாயுவிலும் உறைந்திருப்பதாக விளக்கந்தருகின்ற மேற்குறிப்பிட்ட பாடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகள் உயிர் உடல் இணைப்பையும் உயிரின் தோற்றத்தினையும் பௌதீகசேர்க்கைகளால் இயல்பாகத் தோன்றி நடைபெறும் நிகழ்வாக (வெற்றிலை பாக்கு சுண்ணாம்பால் தோன்றும் சிவப்பாக) விளக்கமுறப்படுகின்ற பூதவாதத்தின் தத்துவச்சார்பையே உணர்த்தி நிற்கின்றன.

மேலேட்டமாக சத்காரிய வாதத்தின் சாயல் இதில் தெரிவது போல் தோன்றினாலும் உண்மையில் இது ஆரம்பவாதத்தின் கருத்துநிலை என்பது ஆழ்ந்து நோக்கின் புலனாகும். இக்கருத்தினை மேலும் அரண்செய்வதாகவே,

*"உடம்பு உயிர் எடுத்ததோ*
*உயிர் உடம்பெடுத்ததோ"*[11]

என்ற சிவவாக்கியரின் கேள்விகள் அமைந்துள்ளன. இந்த இரண்டு ஐயவினாக்களில் முதல்வினாவில் பூதவாதத்தின் செல்வாக்கு உறைந்துள்ளது. இரண்டாம் வினாவில் வேதாந்தம் சைவசித்தாந்தம் உள்ளிட்ட வைதீகத்தத்துவங்களின் சாயல் தெரிகின்றது. இப்பாடலில் இரண்டு அடிகள் பின்வருமாறு அமைகின்றன.

*"உடம்பு உயிர் எடுத்தபோது உருவம் ஏது செப்புவீர்*
*உடம்பு உயிர் இறந்தபோதும் உயிர் இறப்பதில்லையே "*[12]

அதாவது உடம்பே உயிரை எடுத்தது என்றே வைத்துக்கொண்டாலும் இவ்வுயிரை தனக்குள் எடுத்துக்கொள்வதற்கு முன் இந்த உடம்பின் இருப்பும் இயக்கமும் எவ்வாறு நிகழ்ந்திருக்க முடியும்? உடம்பை இயங்கவைப்பது உயிராயிற்றே? எனவே உயிரே உடம்பை எடுத்தது என்ற வகையில் தர்க்கபூர்வமான விவாதத்தைக் கட்டியமைத்துள்ள சிவவாக்கியர் சற்றுமுன் பேசிய பூதவாதத்தை ஒருநொடியில் தகர்த்துவிட்டு மறுபடியும் ஆஸ்தீக தரிசனவாதியாக ஆராயமுறப்படுகின்றார்.

*"உடம்பு உயிர் இறந்தபோதும் உயிர் இறப்பதில்லையே"*[13]

என உயிரின் நித்தியத்தன்மை பற்றி உறுதியான நம்பிக்கை கொண்ட வைதீக தரிசனவாதியாகவே தன்னை மீண்டும் அடையாளங்காட்டிக் கொண்ட சிவவாக்கியர் இப்பாடலின் இறுதி அடியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உடம்பு மெய் மறந்து கண்டுணர்ந்து ஞானம் ஓதுமே"*[14]

என உரைத்திருக்கிறார். உபநிடதங்கள் ஆன்ம விடுதலைக்கான படிநிலைகளாக எடுத்துரைக்கின்ற சிரவணம், மனனம், நிருத்தியாசனம் வரையில் பொருள் விளக்கம் தரவல்லதாக இப்பாடல் அடிகள் அமையப்பெற்றுள்ளன.

மேலும் அருவமான உயிருக்கு உள்ளே உடம்பு இல்லை என்பதனால் உயிருக்குள் உடம்பு புகுந்ததாகச் சொல்லமுடியாது உடலொன்று தாயின் கருப்பையில் உருவாகிக் காத்திருந்தால் ஒழிய உயிரால் உடம்பினுள் புக இயலாது. உடல் இல்லாதபோது உயிர் அருவமாய் இருக்கும் அவ்வுயிரானது தனது முன்வினைகட்கு ஏற்ப உடல் எடுத்துப் பிறக்கும். உயிரையும் உடலையும் இணைத்து வைப்பது பரம்பொருளே எனக் குறிப்பிடுகின்ற சிவவாக்கியர் ஐயந்திரிபுக்கு இடமின்றி ஆஸ்திகச் சார்புடைய தத்துவ நிலைப்பாட்டையே இப்பாடலினூடாக விளம்பியிருக்கிறார்.

ஆரம்பத்தில் சற்காரியவாதத்தை பேசிய சிவவாக்கியர் பின்னர் சற்காரிய வாதத்தை நிராகரிக்கின்ற ஆரம்பவாதமாகிய பூதவாதத்தின் கருத்தியல்களை அடியொற்றிச் செல்பவர் போலக் காட்சியளிக்கிறார். ஆனால் மறுகணமே பூதவாதத்தை நிராகரித்து ஈஸ்வரவாதிகளின் பக்கம் தாவிவிடுகிறார். விடயம் இத்துடன் முடிந்துவிடவில்லை.

*"உடம்பு உயிர் இறந்தபோது உயிர் இறப்பதில்லையே"*

என உயிரின் நித்தியத்துவத்தை ஏற்றுக்கொண்ட சிவவாக்கியர் வினைகளின் அடிப்படையில் உயிர்களுக்குரிய உடலை இறைவன் சேர்ப்பிக்கிறான் என்று ஏற்றுக்கொண்ட சிவவாக்கியார் கன்மம் மறு பிறப்பை நிராகரித்தும் பாடியிருக்கிறார்.

*"கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா*
*உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடல்புகா*
*விரிந்த பூவும் உதிர்ந்தகாயும் மீண்டும் போய் மரம்புகா*
*இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே "*[15]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் இயற்கையின் நிகழ்ச்சிகள், நியதிகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு சர்வநிச்சயமாக மறுபிறப்பை நிராகரிக்கின்ற சிவவாக்கியர் தனது கன்மம் மறுபிறப்பு பற்றிய முன்னைய நிலைப்பாட்டிலிருந்து நேர் எதிர் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார். கன்மம் மறுபிறப்புடன் தொடர்புடைய வகையில் ஆஸ்திக தத்துவ சிந்தனை மரபின் ஆப்தவாக்கியப் பிரமாணங்களாகிய பிரஸ்தானத்திரயங்களில் கையாளப்பட்ட பழையசட்டை, புதிய சட்டை, புல்லின் நுனியும் புழுவும், வண்டியில் கட்டப்பட்ட குதிரை ஆகிய எடுத்துக்காட்டுகளுக்கான எதிர் நிலை மாதிரிகளாகவே சிவவாக்கியரின் எடுத்துக்காட்டுகள் அமைந்துள்ளன. ஆகவே வைதிக மரபிற் தழைத்தோங்கிய ஆஸ்திக தத்துவங்களாகிய வேதாந்த சைவ சித்தாந்தக் கொள்கைகளால் ஆப்த வாக்கியப் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரஸ்தானத்திரயங்களின் வினைக்கொள்கை மறுபிறப்பு பற்றிய எடுத்துக்காட்டுக்களை மறுதலிக்கின்ற சிவவாக்கியரை வைதிக தரிசன மரபைச் சார்ந்தவராக ஏற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளன.

ஆயினும் பிறிதோரிடத்தில் சிவவாக்கியர் தன்னை உபநிடதச்சிந்தனை மரபிற் தோய்ந்த பழுத்த வேதாந்தியாகவே வெளிப்படுத்திக் கொண்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

> *"என்னகத்துள் என்னை நான் எங்கும் நாடி ஓடினேன்*
> *என்னகத்துள் என்னை நான் அறிந்திலாத தன்மையால்*
> *என்னகத்துள் என்னை நான் அறிந்துமே தெரிந்தபின்*
> *என்னகத்துள் என்னையன்றி யாதும் ஒன்றும் இல்லையே "*[16]

"அகம் பிரம்மாஸ்மி", "தத்துவம் அஸி" ஆகிய உபநிடத மகாவாக்கியங்களும் அத்வைதிகளின் அவச்சேதவாதமும் மேற்குறிப்பிட்ட பாடலின் உள்ளார்த்தமாக மிளிர்வதனை அவதானிக்க முடிகிறது.

சிவவாக்கியர் இறைஇருப்பை ஏற்றுக்கொண்ட ஈஸ்வரவாதியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். சைவ தத்துவமரபில் நின்று சிவப்பரம்பொருளையும் திருவைந்தெழுத்தின் பெருமைகளையும் அவர் பாடல்கள் அநேக இடங்களில் விவரித்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*அரியதோர் நமச்சிவாயம் ஆதிஅந்தம் ஆனதும்*
*ஆறிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்*
*சுரியதோர் எழுத்தை உன்னி சொல்வேன்சிவவாக்கியம்* "[17]

எனக் காப்புச்செய்யுளில் தன்னைச் சைவதத்துவவாதியாகவும் தனது வாக்கெல்லாம் சிவசம்பந்தமான வாக்குகளே எனவும் குறிப்பிட்டுள்ள இவர் சிவப்பரம்பொருளின் உருவநிலை, அருவநிலை, அருஉருவநிலை என மூன்று நிலைகள் பற்றி விவரித்துள்ளதுடன் அம்மூன்று நிலைகளோடும் திருவைந்தெழுத்துக்குள்ள தொடர்புபற்றியும் தமது பாடல்களில் விளக்கியுரைத்துள்ளார்.

"*நவ்விரண்டும் காலதாய் நவின்றமவ் வயிறதாய்*
*சிவ்விரண்டு தோளதாய் சிறந்தவவ்வு வாயதாய்*
*யவ்விரண்டு கண்ணதாய் அமர்ந்து நின்ற நேர்மையில்*
*செவ்வையொத்து நின்றதே சிவாயமஞ் செழுத்துமே* "[18]

என்ற பாடலை இவ்விதத்தில் வகைமாதிரியாகச் சுட்டிக்காட்டலாம்.

அண்டத்தின் உற்பவிப்பு பஞ்சாட்சர நாதத்திலிருந்து நிகழ்ந்ததாக வர்ணிக்கின்ற சிவவாக்கியர்

"*ஆன அஞ்செழுத்துள்ளே அண்டமும் அகண்டமும்*
*ஆன அஞ்செழுத்துள்ளே ஆதியான மூவரும்*"[19]

என மிக வெளிப்படையாக தன்னையொரு சைவவாதியாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். ஆயினும் திருவைந்தெழுத்தைப் போற்றிய இதே சிவவாக்கியர் வைணவ சம்பிரதாயத்தின் எட்டெழுத்தின் மகத்துவத்தையும் பிறிதோரிடத்தில் போற்றியிருக்கிறார்.

"எட்டெழுத்தும் ஓதுவார்கள் அல்லல் நீங்கி நிற்பரே "[20]

இதுமட்டுமல்லாமல் ஸ்ரீ வைணவ சித்தாந்தமரபினர் குறிப்பிடுகின்ற இருபத்தைந்து தத்துவங்களைச் சுட்டியும் திருமாலுக்குரிய அஷ்டாட்சரத்தைப் போற்றியும் சிவவாக்கியர் பாடல் புனைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டுமூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே
எட்டுமாய பாதமோ டிறைஞ்சி நின்ற வண்ணமே
எட்டெழுத்து மோதுவார்கள் அல்லல் நீங்கி நிற்பரே "[21]

மேற்கூறிய சிவவாக்கியரின் பாடலின் யாப்பு வடிவமும், பொருளமைதியும் திருமழிசையாழ்வாரின் பின்வரும் பாசுரத்துடன் பெரும்பாலும் ஒத்திசைவுற்றிருப்பதும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கது.

"எட்டு மெட்டு மெட்டுமா யொரேழு மேழுமாய்
எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற ஆதி தேவனை
எட்டியான பேதமோடி இறைஞ்சி நின்று அவன்பெயர்
எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே "[22]

சிவவாக்கியரின் பாடல்களில் வேறு பலவும் திருமழிசையாழ்வாரின் பாசுரங்களை ஒத்தனவாக அமைந்திருக்கின்றன.

கி.பி 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய "குரும்பரம்பரா ப்ரபாவம்" "ஆழ்வார்கள் வைபவம்" ஆகிய பனுவல்கள் சிவவாக்கியரைத் திருமழிசையாழ்வாரின் மறுப்பிறப்பாக விவரித்துள்ளமைக்கான காரணமும் இது குறித்ததாய் இருக்கலாம்.

இவைதவிர இராமநாமத்தினையும் சிவவாக்கியர் போற்றியிருக்கிறார்.

"நாடு நீ இராம ராம ராமவென்னும் நாமமே "[23]

சித்தர்கள் சமயமெய்யியலைக் கடந்தவர்கள். அந்தவகையில் சைவ, வைணவப் பிரிவுகளிடையே சமரசம் கற்பிக்கும் நோக்குடன் சிவவாக்கியர் இத்தகைய விடயங்களைப் பாடியிருக்கலாம் என்பதும் பொருத்தமே. ஆயினும் தான்சுட்டிய பரம்பொருள்

"அரியுமல்ல அயனுமல்ல அப்புறத்தில் அப்புறம்"[24]

என்றும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கம் ஒன்று ரூபம் வேறு தன்மையானவாறு போல்
செங்கண்மாலும் ஈசனும் சிறந்திருந்ததும்முள்ளே "[25]

என முன்னிலைப்பரவலாகச் சிவவாக்கியர் விவரித்துள்ள இடங்கள் சற்றுக் குழப்பத்தைத் தோற்றுவிக்கின்றன.

இங்கே சிவவாக்கியர் சுட்டவந்த பரம்பொருள் வைதிகஞ் சார்ந்த சைவ வைணவ பாரம்பரியங்களைக் கடந்ததா அன்றி வைதிக மரபையே மறுதலிக்க முற்படுகின்ற ஒருவர் சுட்டமுயன்ற பரம்பொருட்கொள்கையா என்பதும் ஆராயப்படவேண்டியதே.

சிவவாக்கியரின் பாடல்களில் பரவியிருக்கும் வைதிகச் சடங்காரங்களுக்கு எதிரான கடுமையான கண்டனங்களை மட்டும் கருத்திற்கொண்டு அவரை அவைதிக தத்துவங்களின் பேச்சாளராகக் கொள்வதும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் ஈஸ்வரவாதம், ஆன்ம இருப்புவாதம் ஆகியவற்றை சிவவாக்கியர் பல இடங்களில் ஏற்றுக்கொண்டே வந்திருக்கிறார். மேலும் பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம் இராமநாமம் ஆகியவற்றைப் போற்றியதோடு மட்டுமின்றி தத்துவநிலையில் அவைப்பற்றி விளக்கவும் முற்பட்டிருக்கிறார்.

எனவே தொகுத்து நோக்கும் போது சிவவாக்கியர் பாடல்களில் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தின் தத்துவ சஞ்சாரம் எத்தளத்திற்குரியது என்பதனை நிர்ணயம் செய்வது இயலாத விடயமாகவே தென்படுகிறது. ஔவையாரைப் போலவும் அகத்தியரைப் போலவும் அனேக சிவவாக்கியர்கள் தென்னிந்தியச் சித்தர்மரபில் இருந்திருந்தால் மட்டுமே இந்த ஐயங்களுக்கான விளக்கங்கள் சாத்தியப்படும். அவ்வாறாயின் சைவமெய்யியலுடன் முரண்பாடு கொண்ட ஒருவர் தனது பெயரைச் சிவவாக்கியராகக் குறிப்பிடுவது எதனைக் கருதியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. அபிதான சிந்தாமணி, ப, 665
2. நாராயணன். க, 2003, சித்தர் சிவவாக்கியர், ப, 46
3. பாவலர் சரித்திர தீபகம், பக், 223– 224
4. அருணாசலம். மு, தமிழ் இலக்கியவரலாறு 14ஆம் நூற்றாண்டு, பக், 421– 422
5. சிவவாக்கியர் பாடல்கள், பா. 1
6. மேலது, பா. 15
7. சிவஞானசித்தியார், சுபக்கம், பா. 38
8. சிவவாக்கியர் பாடல்கள், பா. 60
9. மேலது, பா, 165
10. மேலது
11. சிவவாக்கியர் பாடல்கள், பா. 87
12. மேலது
13. மேலது
14. மேலது
15. சிவவாக்கியர் பாடல்கள், பா. 46
16. மேலது, பா. 27
17. மேலது, பா. 01
18. மேலது, பா. 93
19. மேலது, பா. 02
20. மேலது, பா. 263
21. மேலது
22. திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம், பாடல். 77
23. சிவவாக்கியர் பாடல்கள், பா.114
24. மேலது, பா. 09
25. மேலது, பா. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர கால சிறுதெய்வ வழிபாடு

திருமதி. விக்னேஸ்வரி பவநேசன்

## சமூகம்

விஜயநகரப் பேரரசர் காலத்தில் நிலவிய சமூகம் கிராம அலகை முக்கியமானதாகக் கொண்டதாக விளங்கியது. இக்காலத்தில் கிடைக்கப் பெற்ற பல்வேறு கல்வெட்டுக்கள் அக்காலத்திலே திகழ்ந்த கிராமங்களின் பண்பாட்டை அறிவதற்கு உதவுகின்றன. T. V. மகாலிங்கம் என்பார் விஜயநகரப் பேரரசர் காலத்தினுடைய நிர்வாகமும் சமூக வாழ்க்கையும் பற்றிய தமது நூலிலே இவை பற்றி விரிவாகக் கூறியுள்ளார். அக்கால சமூகத்தில் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த மக்களும் தமக்கென ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களில் இல்லங்களை அமைத்து வாழ்ந்தனர். சமூகத்திலே கீழ்நிலையில் உள்ள பிரிவைச் சேர்ந்த மக்கள் குடியிருப்பில் இருந்து சற்றுத் தொலைவிலே வாழ்ந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அறியமுடிகின்றது. எனவே இத்தகைய ஒரு கிராமியச் சூழலிலே மக்கள் தமது நம்பிக்கை அடிப்படையிலான வழிபாட்டு முறைகளையும் பின்பற்றலாயினர். அவையே சிறுதெய்வ வழிபாடு அல்லது கிராமிய வழிபாட்டிற்கான அடிப்படையாகவும் அமைந்தன எனலாம்.

தமிழக வரலாற்றிலே அரசியலிலும் பொருளாதாரத்திலும் பல்வேறு சிக்கல்கள் நிலவிய ஒரு காலப்பகுதியாக இக்காலப் பகுதியைக் கொள்ளலாம். கோயில்கள் பலவாக வளர்ச்சியுற்றன. மன்னர்கள் வைணவர்களாக இருந்த போதிலும் பிறசமயங்களிடத்தில் அவர்களுக்கு வேறுபாடு இருக்கவில்லை. சைவசமயம் நாட்டின் சிறந்த சமயமாக இருந்தது. பௌத்தம், சமணம் என்பனவும் சிறு அளவில் இருந்தன. இஸ்லாமியப் படையெடுப்பால் இஸ்லாமிய சமயமும் மேல்நாட்டார் வருகையால் கிறிஸ்தவ சமயமும் மெதுவாகக் கால்கொள்ள ஆரம்பித்தன. எனினும் விஜயநகர மன்னர் காலத்தில் வைசவமும் வைணவமும் மேலோங்கின. இஸ்லாமியத்தைப் புகவிடாது தடுப்பதற்கென்றே இப்பேரரசு தோன்றியதால் கோயில் வளர்ச்சியில் இப்பரம்பரையினரும் மாராட்டியரும் கூட கண்ணும் கருத்துமாயிருந்தனர்.

இக்காலத்தில் சக்தி வழிபாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. சிறுதெய்வ வழிபாடுகளும் இக்காலத்திற் பெருகின. இத்தகைய ஒரு சூழ்நிலையில் சமூகத்தில் ஏற்பட்ட மாறுதல்களால், மக்களது வழிபாட்டிலும் மாறுதல்கள் தோன்றலாயின. மக்கள் தமக்கு எளிமையாக ஆற்றக்கூடிய வகையில் வீரையன், மாரியம்மன், பிடாரி, கங்கையம்மன், ஐயனார், சங்கிலிக்கருப்பன், காளி, பைரவர், அண்ணமார், மதுரைவீரன், கருப்பசாமி போன்ற பல கிராமதெய்வங்களை வணங்கினார். இத்தகைய கிராம மக்கள் உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் அவர்கள் வணங்கும் தெய்வ வடிவங்களிலும் வழிபாட்டு முறைகளிலும் உணர்ச்சியே முதன்மை பெறுகின்றது. கிராம மக்களுக்குப் பாதுகாப்பே முக்கிய தேவையாக இருப்பதனால் தங்களையும், தங்கள் பயிர்களையும், கால்நடைகளையும் காக்கப் பலதெய்வங்களை உருவாக்கிக் கொண்டனர். அதிகமழை, அதிகவெப்பம், கொடிய விலங்குகள், கள்வர் போன்றவற்றாலும் அம்மை, போதி, பேய், பில்லி, சூனியம், போன்றவற்றிலுமிருந்து தம்மைக் காக்க கிராமத்தெய்வங்கள் உதவுவதாக மக்கள் நம்பினர்.[4]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களில் பெரும்பாலோரும் கிராமங்களிலேயே வாழ்ந்து பயிர்த்தொழிலை நடத்தி வந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் புரோகிதன், குடியானவன், ஆசாரி முதலியோர் வாழ்ந்தனர். இவர்கள் யாவருக்கும் தமது உடைமையில் நிலம் சிறிதளவேனும் இருக்க வேண்டும் என்ற பேரவா இருந்தது. உழவர், தொழிலாளர் முதலியோரின் நிலை எளியதாகவே இருந்து வந்தது. பொதுவாகக் கிராமத்தில் வறுமை தாண்டவமாடியது.[5] தென்னிந்திய மக்களில் பெரும்பாலோரும் சைவத்தையே தழுவினர். இதற்கிடையே கிறிஸ்தவ மதமும் தென்னிந்தியாவில் பரவத் தொடங்கியது. ஏறத்தாழ பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரான்சிஸ்சேவியரின் முயற்சிகளால் தெற்குமனைக் கடலோர நாட்டில் வாழ்ந்திருந்த பரவமக்களில் அனேகர் கிறிஸ்தவராயினர். ஆனால் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் தென்னிந்தியாவிற்கு வந்தபின் பதினேழாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர் களிடையே போட்டி ஏற்பட்டு அவர்களது முயற்சிகளுக்கு ஒரு சிறு தடங்கல் தோன்றியது. தென்னாட்டில் இவ்விதம் பல மதங்கள் நிலவிய போதிலும் இந்துப்பொதுமக்களில் பெரும்பாலோரும் தொன்று தொட்டே வணங்கி வந்த கிராம தெய்வங்களையும் தேவதைகளையும் தொடர்ந்து வழிபட்டுவந்தனர்.[6] தீய சக்திகளிடமிருந்து வரக்கூடிய துன்பத்தை அகற்றுவதற்கு இது இன்றியமையாதது என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. மிருகபலியும் இவ்வழிபாட்டோடு சேர்ந்து செடில் குத்தல், நெருப்பு மேல் நடப்பது, நாவை அரிவாளால் வெட்டுவது போன்ற கொடிய செயல்களும் வழக்கத்திலிருந்தன.

## சிறுதெய்வ வழிபாடு சொல்விளக்கம்

சிறுதெய்வம் சொல் முதன்முதலாக "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்" என்று அப்பர் தேவாரத்தில் வருகின்றது. இதன்காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும். இதற்கு நேர்மாறாகப் "பெருந்தெய்வம்" என்ற சொல்வழக்கு புறநானூற்றிலேயே காணப்படுகிறது. புலவர் "இருபெருந் தெய்வமும்"[8] என்று பலராமனையும் திருமாலையும் பாடுகிறார்.

ஆய்வு நோக்கில் 'சிறுதெய்வம்', 'பெருந்தெய்வம்' என்ற சொற்களைத் தாழ்ந்தவை, உயர்ந்தவை என்ற பொருளில் எடுத்துக் கொள்ள இயலாது. உண்மையில் சிறுதெய்வங்கள் எனப்படுபவையே மிகப்பழைய நம்பிக்கை களையும், உணர்வுகளையும் பேணிநிற்பவையாகும். இங்கு சிறுதெய்வம் என்பது கிராமியத் தெய்வம் என்ற சொல்லாட்சியில் எடுத்தாளப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி 17ஆம் நூற்றாண்டில் குமரகுருபரர், "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்" என்று முருகனைக் குறிப்பிடுகின்றார். இப்பாடலில் செத்துப் பிறப்பனவாக அவர் குறிப்பிடுவது சிறுதெய்வங்களையே என்று கருதமுடிகின்றது.

சிறுதெய்வங்களின் முதற்பண்பு அவை பிராமணரால் பூசை செய்யப் பெறாதவை ஆகும். பிராமணப்பூசை இன்மையால் இவை இயல்பாகவே இரத்தப்பலி பெறும் தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் நாள்தோறும் ஆறுகாலப்பூசை பெறுவதில்லை. இத்தெய்வங்களின் திரு விழாக்களில் "சாமியாட்டம்" இடம் பெறும்.[9]

## வழிபடுவோரும் தெய்வங்களும்

சிறுதெய்வவழிபாட்டை பொதுவாக, பிராமணரல்லாத எல்லாச் சாதியினரும் மேற்கொண்டு வருகின்றனர். பிராமணரல்லாத சாதியினரிடமும், சிறுதெய்வவழிபாட்டில் ஈடுபட்டுள்ள புலாலுண்ணாத வேளாளரிடத்தில் சிறுதெய்வ வழிபாடு மிகக்குறைவாகவே உள்ளது. எனினும் நிலவுடமை அமைப்பில் பிற எல்லாச்சாதியினரும் சிறுதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டவரே ஆவர். நாட்டுப்புற மக்களின் அடிப்படைத் தொழில் உழவு ஆகும். பயிர் விளைந்து வளம்பெருகினால் தங்கள் சமூகவாழ்வு மேன்மையடையும் என்று இவர்கள் நம்புகின்றனர்.[10] கருவளம் வேண்டிப் பெண் சிறு தெய்வங்களை வழிபடுகின்றனர்.[11] நாட்டுப்புற மக்கள் இறந்தவர்கள் நினைவாகக் கொண்டாடி அவர்களை வணங்குகின்றனர். இறந்தவரைத் 'தருமர்' என்றும் பாடுவது இம்மக்களிடத்தில் வழக்கமாக இருந்து வருகிறது. சிறுவயதில் இறந்தவரையோ, தற்கொலை செய்து கொண்டவர்களையோ இவ்வாறு தெய்வங்களாகக் கொண்டாடும் வழக்கம் இவர்களிடையே இல்லை.

சமூக அநீதிகளுக்குத் தண்டனை உண்டு என்ற நம்பிக்கையின் வெளிப்பாடுதான் காளிவழிபாடு எனக்கருதலாம்.[12] கிராமத்தில் சமூகவாழ்வுக்கு எதிரான செயலைச்செய்தோரை அக்கிராமத்தின் பஞ்சாயத்தார்கள் முடிவுப்படி கொல்லங்குடிக்காளி கோயிலுக்கு அழைந்துவந்து காசுவெட்டிக் காளிக்கு போடச் செய்கின்றனர். தவறு செய்தவர் யார் என்று கண்டுபிடிக்க முடியாதபோது பாதிக்கப்பட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுவெட்டிப்போட்டுக் காளியை கேட்டுக்கொள்ளுமாறு வேண்டுவதோடு தலை முழுகிச் செல்வர்.

நீர்நிலையையும் ஊரினையும் ஐயனார் கண்காணித்து வருகிறார் என மக்கள் நம்புகின்றனர். தங்கள் காவல்தொழில் வாழ்க்கையில் வீரப்பண்பு குறையாமல் இருக்க வேண்டி நாட்டுப்புறமக்கள் சோனை, கருப்பையா, ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர்.[13] உருவமற்ற இந்த ஆண் சிறுதெய்வங்களின் இடத்தில் குத்துக்கல்லும் அரிவாளும் முறையே வைக்கப்பட்டுள்ள நிலையைக் காணும் போது, ஆடவர்கள் இந்த ஆண்சிறுதெய்வங்கள் மீது அதிக நம்பிக்கை கொண்டு இயற்பெயர்களையும் சூட்டிக்கொள்ளும் நிலையைக் காணும்போதும் இவை வீரத்தின் சின்னங்களாக வழிபடப்படுவதை அறியமுடிகின்றது. நாட்டுபுறச் சமூகவாழ்வில் பெண்களின் மனக்குறை தீர்ந்து நலம்பெருக வேண்டிப் பொன்னுமுனியாள், சங்கையா போன்ற சிறுதெய்வங்களை வணங்குகின்றனர். மாரந்தை, குமாரவேலூர் ஆகிய ஊர்களிலுள்ள பொன்னுமுனியா என்ற பெண் தெய்வத்தையும், திருவள்ளூர், தூதை ஆகிய ஊர்களிலுள்ள சங்கையா என்ற ஆண் தெய்வத்தையும் வழிபடுவதற்கு நாட்டுப்புறப் பெண்கள் குடும்பத்தோடு செல்வர்.

சிறுதெய்வக் கோயில்களின் அளவு மிகச்சிறியது. சில இடங்களில் அவை கட்டடமின்றி அமைத்தலும் உண்டு. இன்னும் சில இடங்களில் மரங்களும் புதருமே தெய்வமாகக் கருதி வழிபடப் பெறும். மரங்கள் பெரும்பாலும் வேம்பு, பனை, பூவரசு, ஆகியவையாக இருக்கும். பெண்தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கியும், ஒரு சில கிழக்கு நோக்கியும் ஆண்தெய்வக் கோயில்கள் கிழக்கு நோக்கியே அமைவதும் மரபாகும். ஒரு சிறுதெய்வக் கோயிலில் பெரும்பாலும் ஒரு தெய்வம் அல்லது மூன்றிலிருந்து இருபத்தொரு தெய்வங்கள் வரை வடக்கு, கிழக்கு, தெற்கு நோக்கி அமைந்திருக்கும்.[14]

சிறுதெய்வங்களின் பெயர்கள் பெருந்தெய்வங்களின் பெயர் களிலிருந்து தெளிவாகவே வேறுபட்டு நிற்கின்றன. ஆண் சிறுதெய்வங்களின் பெயர்கள் பொதுவாக அய்யா, அப்பன், அடியான், சாமி முதலிய விகுதிகளோடும் (கருப்பையா, இருளப்பன், பனையடியான், கருப்பசாமி) பெண்தெய்வங்களின் பெயர்கள் அம்மன், நாச்சி, கிழவி முதலிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகுதிகளோடும் (முத்தாலம்மன், பெரியநாச்சி, அரியாக்கிழவி) அமைந்திருக்கும். இச்சிறு தெய்வக்கோயில்கள் பொதுவாக ஊர்மாந்தை, ஊரின் எல்லை, குளங்கள், கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளில் வாசற்பகுதி இருந்த இடம், நெடுஞ்சாலை ஓரம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும். அந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே பெரும்பாலான சிறுதெய்வங்கள் காவல் தெய்வங்களாகக் விளங்குகின்றன.[15]

## சிறுதெய்வ நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தாற் பாதுகாக்கப்படுகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையாகத் தோன்றுவனவாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும், மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாதபொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

மனித சமுதாயத்திற்கிடையே பலவித நம்பிக்கைகள் என்று தோன்றியது? யாரால் உருவாக்கப்பட்டது? ஆதியும், அந்தமும் காணமுடியாததாகவே திகழ்கிறது. தொன்றுதொட்டு மக்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், தெய்வவழிபாடு இவற்றின் வாயிலாகவே நம்பிக்கைகள் வெளிப்படுகின்றன. காலங்கள் தோறும் ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவனுக்குப் பரவி சமூதாயத்தில் வேரூன்றி நின்று நிலைத்திருக்கும் பண்பினை நாட்டுப்புற நம்பிக்கைகள் பெற்றிருகின்றன.[16] காலங்காலமாகத் தலைமுறைகள் பலகண்ட நம்பிக்கைகள் மாறிவரும் அறிவியல் உலகின் நாகரிகத் தாக்குதலுக்குப் பலியாகாமல் படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களிடத்திலும் நின்று நிலவி தனது பழமையைத்தக்க வைத்துக்கொண்டு இருக்கிறது. தமிழ்ச்சமுதாயத்தில் நிலவி வரும் பல்வேறு நம்பிக்கைகளுள் தெய்வ நம்பிக்கையே மிகத்தொன்மை வாய்ந்தது. அனைத்து வகையான நம்பிக்கைகளுக்கும் தாயாகவும், ஜீவனாகவும் அடித்தளமாகவும் அமைந்திருப்பது தெய்வநம்பிக்கையே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுதெய்வ நம்பிக்கைகள் மக்களின் அன்றாட வாழ்வியல், தெய்வவழிபாடு, திருவிழா, பண்டிகை, சடங்குகள் முதலான பல்வேறு நிலைகளில் வெளிப்படுகின்றன. அவ்வாறு வெளிப்படும் சிறுதெய்வ நம்பிக்கைகள் பின்வருமாறு 6 பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு செய்யப்படுகின்றது.

1. வாய்மொழி வரலாற்றின்வழி தெய்வ நம்பிக்கைகள் அல்லது கதைவழி நம்பிக்கைகள்
2. வழிபாட்டின்வழி தெய்வநம்பிக்கைகள்
3. வழிபாட்டுச் சடங்கின்வழி தெய்வநம்பிக்கைகள்
4. நேர்த்திக் கடன்வழி தெய்வநம்பிக்கைகள்
5. குடும்பம் சார்ந்த அல்லது குல தெய்வநம்பிக்கைகள்
6. தெய்வம் சார்ந்த பலவகை நம்பிக்கைகள்

இங்கு வாய்மொழி வரலாற்றின் வழியான தெய்வநம்பிக்கைகள் என்பதில், சிறுதெய்வங்களின் பிறப்புப் பற்றிய கதைகள், தெய்வங்கள் தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காத்தது குறித்த கதைகள், மனித நிலையிலிருந்து தெய்வநிலைக்கு உயர்ந்தவர்களின் கதைகள் போன்றன நாட்டுப்புற மக்களின் வாய்மொழி வழக்காற்றில் நிலவி வருகின்றன. இத்தகைய கதைகள் மட்டுமல்லாது சிறு தெய்வங்களுக்குக் கோயில் எழுந்த வரலாற்றிலும் தெய்வத்தால் நன்மை தீமை அடைந்தவர்களின் உண்மை நிகழ்வுகளும் சிறுதெய்வ நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.[17]

வழிபாட்டின் வழி தெய்வநம்பிக்கைகள் என்பதில், தெய்வத்தை வழிபடுவதால் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், நோய் நொடிகள், இயற்கையின் சீற்றம் இவைகளிலிருந்து விடுபட்டு அமைதியான வாழ்க்கை வாழலாம் என்று நினைத்த மனித எண்ணத்தின் வெளிப்பாடே இறைவழிபாடாகும். இயற்கையின் அம்சம் தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச்சென்றதென்பது மானிடவியலாரின் கருத்தாகும். மனிதன் தன் ஆற்றல் ஓர் வரம்புக்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுட் கோட்பாடு உருவாகியது. தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டாத தவற்றின் மீது அச்சத்தின் காரணமாக மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய அச்ச உணர்வு அருளாக வளர்ந்தமையினையே வழிபாட்டு நிலைகள் தெரிவிக்கின்றன.

வழிபாட்டுச் சடங்கின்வழி தெய்வநம்பிக்கைகள் என்பதில், இவ்வகை வழிபாட்டுச் சடங்குகளாக காப்புக்கட்டுதல், கரகம் எடுத்தல், அலகு நிறுத்துதல், தீமித்தல், உயிர்ப்பலி கொடுத்தல், கத்தியேறுதல், கும்பம் கொட்டுதல், கூழ்ஊற்றுதல், மஞ்சள் நீர் ஆடல், காப்பவிழ்த்தல் எனும் சடங்கு முறைகளே பெருவாரியான சிறுதெய்வக் கோயில்களின் வழிபாட்டுச் சடங்குகளாக அமைந்துள்ளன. வாழ்க்கை வட்டச் சடங்குகளைப் போலவே வழிபாட்டுச் சடங்குகளில் இடம்பெறும் ஒவ்வொருபடி நிலைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன.

நேர்த்திக்கடன்வழி தெய்வ நம்பிக்கை என்பது, நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு நோக்கங்கள் அனைத்துமே தெய்வத்திடம் ஏதோ ஒருபலனை எதிர்பார்த்துச் செய்யும் செயற்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. தெய்வத்திடம் தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளையும் கூறி, நேர்ந்து கொண்டபடி கடவுளுக்குப் பிரதி உபகாரம் செய்து, நேர்ந்து கொண்ட தெய்வக் கடனைச் செலுத்தவில்லை என்றால் சாமி தண்டிக்கும், குடும்பம் விளங்காது, நோய்நொடி வரும் என்ற பயத்தின் காரணமாகவே பெரும்பான்மையான நேர்த்திக்கடன்கள் செய்யப்படுகின்றன. “யாரு கடன் நின்னாலும் மாரிகடன் ஆகாது” என்னும் கிராமியப் பழமொழி இதனை மெய்ப்பிக்கிறது.

குடும்பம் சார்ந்த அல்லது குலதெய்வநம்பிக்கைகள் என்பதை நோக்கினால், ஒவ்வொரு சாதியினருக்கும், இனத்தவருக்கும், ஒவ்வொரு குடும்பத்தவர்க்கும் தனித்தனி குலதெய்வங்கள் உண்டு. குடும்பம் செழிக்கவும் குடும்பதிலுள்ளவர் அனைவரும் நலமாய் வாழவும், தங்களுக்குரிய குலதெய்வங்களை ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது முறைப்படி வழிபாடு செய்து வருவது சிறந்தது என்ற நம்பிக்கை அனைத்துத் தரப்பினரிடமும் வேரூன்றி உள்ளது. காதுகுத்தல், திருமணம், பிள்ளைப்பேறு குறித்த நிகழ்ச்சிகளுக்கு முன்பாக குலதெய்வத்தை வழிபட வேண்டும். என்ற நியதி உள்ளது. புத்துப்பட்டு ஐயனார், மாரி புத்தூர் செல்லியம்மன், சேம்புலிவரம் மன்னர்சாதி, கூவத்தூர்அங்காளபரமேஸ்வரி, இடைக்கழிநாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையம்மன் என்னும் சிறுதெய்வங்கள் பல்வேறு குடும்பத்தின் குலதெய்வமாகத் திகழ்கின்றன.[18]

தெய்வம் சார்ந்த பொதுவான நம்பிக்கை என்பது பற்றி நோக்கின், கிராம தேவதைகள் இரவு நேரத்தில் தன்பரிவாரங்களுடன் ஊர் எல்லையைச் சுற்றி வருவர். அந்நேரத்தில் யார் எதிரில் வந்தாலும் பிழைப்பது கடினம் என்ற நம்பிக்கை நிலவியது. இத்தகைய வழக்கம் இன்றைய நிலையிலும் மக்களிடையே நிலவி வருவதனை நாம் அவதானிக்க முடிகின்றது. கிராம தேவதைக் கோயில்களுக்குக் காப்பு கட்டி திருவிழா செய்யும் காலங்களிலும் வெளியூர் சென்று தங்கக் கூடாது. அப்படித் தங்கினாலும் காப்பு அவிழ்க்கும் அன்று ஊருக்கு வந்துவிட வேண்டும். பிறகுதான் தங்கள் சொந்தஊருக்குப் போகவேண்டும். இந்நியதியை மீறினால் நோய் வரும் என அக்கால மக்கள் நம்பினர்.

## உருவ அமைப்பு

பெண் சிறுதெய்வங்கள் பீடத்தின் மேல் அமர்ந்த கோலத்தில் இரண்டு கைகளோடும் தலையில் வெவ்வேறு வகையான மகுடங்களுடனும் இருக்கும். கையில் வேல், வடிந்த காது. கழுத்தில் காறை, காலில் தண்டை ஆகியவற்றோடு அமர்ந்திருக்கும். ஒன்றிரண்டு தனித்த வேறுபாடுகளும் உண்டு. எடுத்துக்காட்டாக, உச்சினி (உஜ்ஜயின்) மகாகாளியம்மன் இடது உள்ளங்கையில் கபாலம் ஏந்தியிருக்கும். சில பெண் தெய்வங்கள் இடுப்பில் குழந்தை ஒன்றை வைத்திருப்பதாக நாட்டுப்புறபாடல்களிலும் வழக்கு மரபுகளிலும் செய்திகள் உள்ளன. ஆண்தெய்வங்கள் நின்ற கோலத்திலும் ஒரு காலை மட்டும் முழங்காலிட்ட கோலத்திலும் காணப்படும். ஒரு காலை முழந்தாளிட்ட நிலையில், ஒருகை (வலது) ஓங்கிய நிலையில் ஆயுதம் ஏந்தியிருக்கும். இத்தோற்றத்திற்குரிய தெய்வங்களை 'சப்பாணி' என வழங்குவர் இத்தகைய தெய்வ உருவங்கள் பெரும்பாலானவை கல்லிலும், சிறுபான்மை மண்ணாலும், அமைந்திருக்கும். கிடந்த கோலத்தில் ஒரே ஒரு தெய்வம் மட்டும் இதுவரை காணப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் மேற்பகுதியில், குமரி மாவட்டத்தின் சிலபகுதிகளிலும் காணப்படும் இத்தெய்வத்திற்கு 'வண்டிமலைச்சியம்மன்' என்று பெயர் வழங்கப்படுகின்றது. இவற்றை அடுத்து சிறுதெய்வமா, பெருந்தெய்வமா என்று உறுதியிட்டுக் கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதபடி மிகச்சிலதெய்வங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று 'காமாட்சி அம்மன்' ஆகும். தமிழ்நாட்டின் பழம்பெரும் கோயில்களில் ஒன்றான காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் ஒரு பெருந்தெய்வக்கோயிலாகும். ஆயினும் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் காமாட்சியம்மன் பிராமணப்பூசையின்றி பலிபெறும் சிறுதெய்வமாகவே காணப்படுகிறது.[19] எனவே காமாட்சியம்மன் முதலில் சிறுதெய்வமாக இருந்து இடைக்காலத்தில் பெருந்தெய்வமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

## உருவமற்ற சிறுதெய்வங்கள்

சிறுதெய்வக் கோயில்களில் உருவம் உடையன, உருவம் இல்லாதன என இருவகை உண்டு. மரங்களையே தெய்வங்களாக வழிபடுதல் ஒருவகையாகும். சில இடங்களில் கல்லாலான கழுமரங்களே வழிபடப் பெறுகின்றன. சில இடங்களில் பீடங்கள் மட்டும் உருவமின்றி வழிபடப்பெறுகின்றன. அழகர் கோயிலில் பதினெட்டுப் படிகளும், படிகளுக்கு முன்னமைந்த இரண்டு கதவுகளுமே தெய்வமாகக் கருதி வழிபடப் பெறுகின்றன. இன்னும் சில இடங்களில் நடப்பட்ட குத்துக்கற்களில் தெய்வம் உறைவதாக நம்பி வழிபடுவர். தெய்வங்கள் பந்தியாக அமைந்த கோயில்களில் முக்கியமான ஒன்றிரண்டு உருவங்களாகவும் பிற தெய்வங்கள் பீடங்களாகவும் வழிபடப்பெறுகின்றன. ஊரின் எல்லையிலோ, ஊருக்கு உள்ளேயோ குத்துக்கற்கள் அல்லது மரங்கள் மனித உருவத்திலும் பிற உயிரின் உருவத்திலும் அமையாமல் நடப்பட்டிருப்பது உருவமற்ற சிறுதெய்வங்கள் ஆகும். இவற்றில் நாட்டுப்புற மக்கள் குங்குமமும், மஞ்சளும் இட்டுப் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். இவை ஒரு மணிபீடத்தில் நடப்படுவது வழக்கம். விளைச்சல் பெருகவேண்டும் என்றோ குடும்பம் நலம்பெருக வேண்டும் என்றோ நாட்டுப்புற மக்கள் சிறுதெய்வத்தை வேண்டுகின்றனர். கிழக்கு இராமநாதமாவட்டத்து மக்கள் ராக்காச்சி, பூமாதேவி, முத்துநாச்சியார், பொன்னுமுனி, உடைய நாச்சி, நாக்கன்னி ஆகிய உருவமற்ற பெண் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர்.

## கடவுள் இயல்பு

உருவமுடைய சிறுதெய்வங்கள் எல்லாம், அவை ஆணாயினும் பெண்ணாயினும் ஆயுதங்களை ஏந்தியிருப்பது அவற்றின் பொதுப்பண்பாகும். எனவே சிறுதெய்வங்கள் அனைத்தும் வீரவழிபாட்டுத் தெய்வங்கள் எனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றன. தனது ஊரை, கால்நடைகளை, நீரை, பெண்களை, விளைந்த பயிர்களைக் காக்கின்ற சண்டையில் உயிர்நீத்த ஆண்கள் வீரவழிபாட்டிற்கு உரியவர்கள் ஆவர். இவர்களுக்குத் தனிப்பெயர் இருந்தாலும் வேடியப்பன், பட்டவன் என்ற பொதுப் பெயர்களில் வட மாவட்டங்களிலும், மதுரை, முகவை மாவட்டங்களிலும் மதுரை முதலான மாவட்டங்களில் கருப்பசாமி என்ற பொதுப்பெயர்களிலும் இத்தெய்வங்கள் அடங்கிவிடும்.[20]

பெண்தெய்வங்களில் பகைவரால் கொல்லப்பட்டோர், பாலியல் வன்முறைகயை எதிர்க்கும் முயற்சியில் இறந்தோர், தற்கொலைசெய்தோர், கணவனோடு உயிர்நீத்தோர் ஆகியோரே வீரவழிபாட்டிற்கு உரியவராவர். பொதுவாக வீரவழிபாட்டிற்கு உரியவர்கள் எல்லாம் தங்கள் இறப்பிற்கு உரியகாலமல்லாத காலத்தில் இறப்பைச்சந்திந்தவர்கள் ஆவர். வீரவழிபாட்டு நெறியில் இரண்டு சாரார் ஒரே தெய்வத்தை வழிபடுவதும் உண்டு. கொல்லப்பட்ட வீரனைச் சார்ந்த பிரிவினர் அவனது வீரத்தினையும் பிறவரங்களையும் வேண்டி வழிபடுவர். கொன்ற பிரிவினர் கொல்லப்பட்ட வீரனின் ஆவியால் தாங்கள் பழிவாங்கப்படக்கூடாது என்பதற்காக சாந்தித் சடங்குகள் செய்து (சமாதானம்) வணங்குவர்.

பொதுவாகப் பெண் தெய்வவழிபாடுகள் உடல்வளம், மனவளம், மகப்பேற்றுவளம், பயிர்வளம் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டு நடைபெறும். அதாவது மக்களையும் பயிர்களையும், நோய்வராமல் காத்தல், வந்த நோயிலிருந்து காத்தல், மனநலக்குறைவைச் சரி செய்தல், மகப்பேற்று வரந்தருதல், பயிரை நன்றாக விளையைச்செய்தல் ஆகியவையே பெண் தெய்வத்தின் கடமைகளாக அமைகின்றன.

## கோயில்களில் நடுகற்கள்

தமிழகத்தில் கோயில்களிலும் நடுகற்கள் நடப்பட்டுள்ளன. இறந்தவன் கடவுளுடன் ஐக்கியமாகிறான் என்பதாலும் நடுகல்வீரனையும் இறைவனையும் ஒரே இடத்தில் வழிபடும் வாய்ப்பு இருப்பதாலும் கிராமதேவதைகளுடன் ஒன்றாக வீரக்கல்வீரனை எண்ணுவதாலும் கோயில்களில் அமைத்துள்ளனர். இவ்வகையிலே சிவன், வீரபத்திரர், காளி, துர்க்கை ஆகிய சன்னதிகளுக்கருகில் வீரக்கற்கள் எடுக்கப்பட்டுள்ளன.[21]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சந்தர்ப்பங்களில் நடுகற்களைப் பெயர்த்துக்கொண்டு போய் கோயில்களில் வைப்பதுமுண்டு. வீரர்களுடைய நினைவுச் சின்னங்களிலும் விளக்குவைக்கவும், விழா பூசைகளுக்கும் என நிலங்கள் வழங்கப்பட்டன. நந்தாவிளக்கு, நந்தவனம், கிணறு ஆகியவை நீத்தோர் பட்டியாக வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய நடுகல் கோயிலைக் காக்கவே கலட்டூரில் ஒரு கல்வெட்டு உள்ளது.[22]

## விஜயநகர் பேரரசர்கால நடுகற்கள்

விஜயநகரப் பேரரசர்கள் செங்கோலோச்சிய காலத்தில் ஆந்திரமாநிலம் மட்டுமன்றி கருநாடகம் மற்றும் தமிழ்நாட்டில் பல நடுகற்கள் ஏற்படுத்தப்பட்டன. அரசர் பெயர், அரசமரபு இன்றி வெட்டப்பட்ட நடுகற்கள் ஆந்திரப்பிரதேசத்தில் மிகுதியாக உள்ளன. பெரும் பிரிவுகள் மூன்றிலும் இவர்களுடைய நடுகற்கள் காணப்படினும் இராயசீமையில் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள நடுகற்களை விரிவாக ஆய்வு செய்த இரா. சந்திரசேகரரெட்டி நடுகற்களின் வகைகளை வேறுபடுத்தி மூன்று பெரும்பிரிவுகளில் அந்நடுகற்களின் எண்ணிக்கையைப் பட்டியலிட்டதை அறிய முடிகின்றது. இவ்வாறு விஜயநகர அரசர்கால நடுகற்கள், பேரரசர்கள், அரசர்கள் மட்டுமன்றி அங்கிருந்த உள்ளூர் தலைவர்களையும் அடையாளம் காட்டுகின்றன. [23] விஜயநகர வேந்தனான கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியின் போது (கி. பி. 1516) வடபாரிசார நாட்டு வெள்ளாளவேந்தர் நயினார் மாலை ஆண்டான் என்பவன் புலியைக் கொன்று இறந்து நடுகல் வீரன் ஆயினான். வெள்ளாளரில் வேந்தர் என்ற கூட்டத்தைச் சேர்ந்தவனாக மாலை ஆண்டான் இருந்துள்ளான். மகாமண்டலேஸ்வரன் கிருஷ்ணராயற்கு செல்லாநின்ற தாதுவருடம் ஆவணி என்று காலம் குறிக்கப்படுகிறது.[24] இரா. கருணானந்தன் மேற்படி கல்வெட்டினைப் படியெடுத்து ஆய்வு செய்துள்ளார்.

நடுகல்வழிபாடு சிறுதெய்வவழிபாட்டில் அடங்கும். ஆடு, கோழி பலியிடுதலும் இதனை உறுதிப்படுத்தும். பல்லவர் காலத்திற்குப் பின் கிடைத்த நடுகற்கள் பற்றி நோக்கும் போது, மடிந்த தனிமறவர்க்கு நடுகல் எடுத்தல் என்பதைவிட இறந்த அரசகுடும்பத்திற்குப் 'பள்ளிப்படை' கட்டுதல் மிகுதியாறிற்று இறந்தோரை துஞ்சியோர் என்பது தமிழ் வழக்கு, துஞ்சிய இடத்தைப் 'பள்ளி' என்று சுட்டல் பிறிதொரு வழக்கு, துஞ்சியவர் பள்ளியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல் எனும் பொருளில் 'பள்ளிப்படை' என்னும் வழக்கு அறிமுகமாயிருத்தல் வேண்டும். இத்தகைய பள்ளிப்படைகள் அனைத்தும் வழிபடு கோயில்களாகவே உள்ளன.[25]

அரசமாதேவியர் இறந்து விடுகின்றபோது அரசர்களுக்கு எழுப்பப்பெற்ற பள்ளிப்படைக் கோயில்கள் பிற்காலத்தில் வழிபடும் தலங்களாக மாறியுள்ளன. இதற்குச் சான்று திருக்குடந்தைக்குப் பக்கத்தில் உள்ள பட்டீஸ்வரத்தில் அமைந்திருக்கும் பஞ்சவன்மாதேவி கோயிலாகும். பஞ்சவன் மாதேவி இறந்தபிறகு அவள் நினைவில் எழுப்பப்பட்ட பள்ளிப்படையே இக்கோயில் என்பது அங்குள்ள கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. முன்னோர் வழிபாட்டையும் பள்ளிப்படையையும் சேர்த்து நினைக்கின்றபோது அம்மன் கோயில்கள் ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்த பெண்டிரை மையமாக வைத்தும் எழுப்பப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.[26]

தமிழ்நாட்டில் உள்ள நடுகற்களை 9 வகையாகப் பாகுபடுத்தலாம்.[27]

i. நிரை கவரும் போதோ மீட்கும் போதோ இறந்தவர்க்கு எடுப்பவை.
ii. போர்க்களத்தில் போர்செய்து மடிந்த மறவர்க்கு எடுப்பவை.
iii. போர்க்களத்தில் போர்புரிந்து மடிந்த மன்னவர்க்கோ, இளவரசர்க்கோ, தளபதிக்கோ ஏனைய அரசியல் அதிகாரிகளுக்கோ எடுப்பவை.
iv. மானத்தின் காரணமாக வடக்கிருந்து உயிர் நீத்த மன்னவர்க்கு எடுப்பவை.
v. சண்டையிட்டு மடிந்த எவருக்கும் எடுப்பவை.
vi. உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த சமணமுனிவர்க்கு எடுப்பவை.
vii. மறப்பணி அல்லது மதிக்கும்பணி ஆற்றிய மகளிர்க்கு எடுப்பவை.
viii. மதிக்கும் பணியாற்றிய எவருக்கும் எடுப்பவை.
ix. இறந்தவர் அனைவருக்கும் எடுப்பவை.

## நவகண்டம்

ஆந்திரப் பிரதேசத்தில் வீரசைவர்கள் தங்களை இறைவனுக்குப் பலியிட்டுக் கொண்டுள்ளனர். பலநாடு என்ற பகுதியில் தலைப்பலிவீரர்கள் அல்லது நவகண்டவீரர்கள் வாழ்ந்து நற்பேறு பெற்றுள்ளார்கள். கி. பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'ஸ்ரீநாத' என்ற கவிஞர் வீரர்களைப் போற்றிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளார். சிலப்பதிகார காலந்தொடங்கியே அதிக அளவில் நவகண்டம் இடம்பெறுவதால் தமிழகத்தில் கி. பி. 15ஆம் நூற்றாண்டு தொடங்கி அதிக அளவில் நவகண்ட சிற்பங்களைக் காணமுடிகின்றது. தமிழ்மொழியிலே கலிங்கத்துப்பரணி தக்கயாகப்பரணி ஆகிய நூல்களில் நவகண்டம் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன.[28]

## விஜய நகர காலத்தில் வழிபடப்பெற்ற புராதன சிறு தெய்வங்கள்

***மதுரைவீரன் :*** மதுரை மக்கள் கொள்ளையர்களால் அடைந்த துன்பத்தை நீக்கியமையால், மதுரை மன்னர் திருமலை நாயக்கரிடத்தும் மதுரை மக்களிடத்தும் 'வீரையன்' என்னும் மதுரை வீரனுடைய புகழ், பெருகிப்பரவியது. இறந்தபின்னர் பிறமகளிரை விரும்பிய குற்றத்தையும் புறக்கணித்து ஒருதெய்வமாக மதிக்கப்பட்டு மக்களால் போற்றப்படும் நிலையினை 'வீரையன்' எய்துகிறான். வீரையன் வழிபாடு தொடக்கத்தில் மதுரையிலும் அதனைச்சார்ந்த பகுதியிலும் பரவிப் பின்னர் தமிழகத்தின் வேறு சில பகுதியிலும் கால் கொண்டது. இவ்வழிபாடு செல்வாக்கு மிக்க நிலையில் வழிபாட்டுத் தலைவன் பேரில் நாட்டுப்பாடல் தோன்றியிருக்க வேண்டும்.[29] இவ்வாறு மதுரைவீரனைத் தெய்வமாகக் கொண்டமையால் அத்தெய்வத் தன்மையை வலியுறுத்தும் வகையில் பற்பல தெய்வாம்சங்கள் வரலாற்றில் இடம் பெறலாயின.

வீரையன் காமவயப்பட்டு ஒரு பெண்ணைச் சிறையெடுத்த நிலையில் காவலர்களால் கைகால் வெட்டுண்டு பின்னர் மாண்டபோதிலும் அவன் தன்வீரத்தால் மதுரை நகருக்குச் செய்த பேருதவியை நினைத்து தெய்வமாக வழிபடப்படும் நிலை எய்துகிறான். குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளும் பாங்கில் வீரையனுடைய சிறுமை புறங்காத்து சீர்போற்றிச் சிறப்பித்தனர் தமிழர், இவ்வகையிலே வீரையன் நினைவில் ஒரு சிறுதெய்வம் உதயமமாகி தமிழகப்பகுதிகளில் அதன்வழிபாடு தழைக்கலாயிற்று இத்தகைய சிறுசிறு கோயில்கள் அனைத்தும் காமாட்சியம்மன் கோயில் போன்ற பெரிய கோயிலின் பரிவார தேவதையாக இடம் தந்தும் வீரையன் நினைவு போற்றப்பட்டலாயிற்று.[3]

**மாரியம்மன் :** கிராமங்களில் மாரியம்மன் கோயில் கேந்திரச்சிறப்புடையவை. மாரியம்மன் கோயில்கள் ஊர்ப்பெயரைச் சார்த்தியும், தெருப்பெயரைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்த்தியும் வேறு சில காரணங்களைச் சார்த்தியும் பல பெயர்களில் பல்லாயிரக்கணக்கில் தோன்றியுள்ளன. மக்களின் பக்தியையும் பூசைச்சடங்குகளையும் திருவிழாக்களையும் அவை பெற்று வாழ்வியல் நம்பிக்கையின் திருவிடங்களாக விளங்கி வருகின்றன.[31] ஆனால் மாரியம்மனைக் கண்ணகியின் திருவுருவம் என்பாரும், யமதக்னி முனிவரின் மனைவியும் பரசுராமனின் தாயுமாகிய இரேணுகாதேவியின் திருவுருவம் என்பாரும், மழைத்தெய்வமாகிய கார்த்தியாயினி அம்மனுடைய ஒருவகைத் திருவுருவம் என்பாருமாகப் பலர் தம் கருத்துக்களைக்கூறி வருகின்றனர். இது ஒருபுறமிருக்கச் சிற்றூர்ப்புற மக்கள் தம் மன அழுத்தமான நம்பிக்கைகளுடன் தம்முன்னோர்களின் வழியைப் பின்பற்றி கோயில்களில் மூலவரையும் உற்சவமூர்த்தியையும் தம்மாலியன்ற வழக்கப்படி வழிபாடு செய்து வருகின்றனர்.

விஜயநகரகாலத்து மாரியம்மன் வழிபாடு பற்றிய குறிப்புக்களைத் தஞ்சை மாராட்டியர் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. தஞ்சாவூர் – திருவாரூர் சாலையில் தஞ்சாவூரில் இருந்து 8 கி. மீ. தொலைவில் உள்ளது மாரியம்மன் கோயில் அக்கோயிலின் முன்மண்டபத்தின் முதல் இரு தூண்களில் இக்கல்வெட்டு (மாரியன்மன் கோயில் கல்வெட்டு) வெட்டப்பட்டுள்ளது. இக்கோயில் அமைந்துள்ள ஊருக்குப் 'புன்னைநல்லூர் என்பது பெயர். இன்று புன்னைநல்லூர் என்ற ஊர்ப்பெயர் மாறி மாரியம்மன் கோயில் பெயரே ஊருக்குப் அமைந்துவிட்டது.[32] 'சோழேந்திர விஜயம்' என்ற வடமொழிநூலில் இவ்வூர் குறிக்கப்பெறுவதாலும், இக்கோயிலின் இனாம் கிராமம் ஒன்றுக்கு 'அருண்மொழிப் பேட்டை' என்று பெயர் உள்ளதாலும் இக்கோயில் சோழர்காலத்திலேயே இருந்தது என்பர். துளசா (1763–1787), இரண்டாம் சரபோசி (1798–1832) காலங்களில் இவ்வூருக்கு 'மாரியம்மாள் புரம்' என்ற பெயர் வழங்கி வந்துள்ளது.

முதலாம் ஏகோசி இராமேசுவரம் யாத்திரைக்கு தமிழகம் வரும்போது ஒரு முறை சமயபுரத்தில் வழிபாடியற்றித் தங்கியதாகவும், அவர் கனவில் புன்னைநல்லூர் மாரியம்மன் தோன்றிப் புன்னை நல்லூரில் தனது ஆலயம் கட்டவேண்டும் என்றும், தஞ்சையில் அரசினைத் தொடங்கி நடத்த வாய்ப்பு வரும், அவர் வழியினருக்கெல்லாம் தான் அருள்பாலிப்பேன் என்றும் கூறியதாக ஒரு செவிவழிச் செய்தி வழங்கப்பெறுகின்றது. இதனால் இக்கோயிலை முதலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோசி கட்டியதாகவும் கூறப்படுகின்றது. இக்கோயில் பற்றிய மற்றொரு செவிவழிச் செய்தியும் கூறப்படுகின்றது. துக்கோசி (1729–1735) காலத்தில் இங்கு பெரிய புற்று மாத்திரம் இருந்து அதை மக்கள் வணங்கி வந்ததாகவும், ஒருநாள் பகலில் அந்தணச்சிறுமி வடிவில் இம்மாரியம்மன் துக்கோசிமுன் தோன்றி தான் புன்னைநல்லூர் மாரியம்மன் என்றும், தான் மராட்டிய அரச குடும்பத்துக்கு நம்மை செய்வதாகவும், அரசரின் மகள் கண் பார்வை மங்கிவருவதை நீங்குவதாகவும் கூறி மறைந்தாள் என்பர். அரசரின் மகள் மாரியம்மனை வணங்கியே கண்பார்வை கிடைக்கப் பெற்றாள். அரசர் துக்கோசி இக்கோயிலிற்குப் பல திருப்பணிகளைச் செய்தார் என்றும் கூறுவர். இக்கோயிலுக்கு மாராட்டிய அரசர்களால் நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் ஆதிசைவக்குருக்கள் பூசை செய்கின்றனர்.சதாசிவப் பிரம்மம் என்னும் ஞானியார் மாரியம்மனைப் புதியதாக ஸ்ரீசக்கர யந்திரப்பிரதிட்டையாகச் செய்வித்தார் என்று கூறப்படுகின்றது.[33]

**வீரபுத்திரசுவாமி கோயில் :** நாயக்கர் காலத் திருக்கோயில்களுள் வீரபத்திரசுவாமி கோயில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தஞ்சைக் கோட்டையின் கிழக்குவாயிலுக்கு எதிரில், அகழிக்கு வெளியே அதனை யொட்டி அமைந்துள்ள இரண்டு கோயில்களில் தென்பக்கம் உள்ளது. முதல் நாயக்கமன்னராகிய செவ்வப்ப நாயக்கர் காலத்தில் கோவிந்ததீட்சிதர் என்பவர் தஞ்சைக்கு வந்து முதல் மூன்று நாயக்கர் காலத்தில் வேந்தர்களுக்கும் அமைச்சராகவும் ஆசிரியராகவும் திகழ்ந்தார். இவரே இக்கோயில் ஏழக் காரணமாக இருந்திருக்கலாம்.[34] இவர் கும்பகோணம் பெரியமடம் என்னும் வீரசைவத் திருமடத்தில் அனந்தகல்யாண மண்பம் கட்டுவித்ததோடு அங்கு வீரபத்திரர் கோயில் ஒன்றையும் எடுப்பித்தார். தஞ்சாவூர் வீரபத்திசுவாமி கோயிலின் கர்ப்பக்கிருஹத்தில் சுவாமி வாளையும், கேடயத்தையும் ஏந்தியுள்ளார். இத்திருமேனி கர்நாடகப் பாணியில் அமைந்த ஒன்றாகும்.

இவ்வாறாக தெய்வங்களையெல்லாம் தொகுத்துச் சிந்தித்தால், மூர்த்திகரம் காரணமாகச் சிறுதெய்வங்களே மேம்பாடுகொண்டு பெருந்தெய்வங்களாகப் போற்றப்படும் நிலையினை எய்துகின்றன எனக் கூறலாம். எண்ணிக்கை நோக்கில் சிந்தித்தால் சிறுதெய்வங்களுள் ஆண் தெய்வங்களைவிடப் பெண்தெய்வங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் பத்தினித் தெய்வமான கண்ணகி வழிபாட்டிலிருந்துதான் கேரளத்தில் பகவதி வழிபாடு தோன்றியது. கண்ணகி வழிபாட்டில் பழந்தமிழர்களின் கொற்றவை வழிபாடு, இந்துசமயத்தாரின் காளிவழிபாடு, சமணர்களின் பத்மாவதி வழிபாடு, பௌத்தர்களின் தாராதேவி வழிபாடு ஆகியவை அனைத்தும் இணைந்து பகவதி வழிபாடாக உருவாயிற்று என்பது பி. எல். சாமியின் கருத்தாகும். அவரது இவ்வாய்வுக்கருத்து மிகப் பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.[35] மேலும் தமிழ்நாட்டின் மாரியம்மன் வழிபாடு, துர்க்கை அம்மன் வழிபாடு யாவும் கண்ணகி வழிபாட்டின் பின்னரே தோன்றின என்பது டாக்டர் மு. வரதராசனாரின் கருத்தாகும். சென்னையை அடுத்து திருவொற்றியூர் சிவன்கோயிலில் வட்டம்பாறையம்மன் சன்னிதி உள்ளது. அந்த அம்மன் கண்ணகியுடன் சார்த்திப் போற்றப்படுகிறார்.

**ஊர்காவல் தெய்வங்கள் :** மக்களின் நம்பிக்கைக்கேற்ப ஊர்காவல் தெய்வங்கள் ஊரின் எல்லைகளில் கோயிலுக்குள் வைத்து வழிபடப் படுகின்றன. சிதம்பரத்தில் பிரம்மராயர், தில்லைக்காளி என்பன காவல் தெய்வங்களாகவும் பட்டுக்கோட்டையில் நாடியம்மனும், ஐயனாரும் காவல் தெய்வங்களாகவும் வழிபாட்டில் உள்ளன.[36] இவ்வாறே பல திருத்தலங்களிலும் ஊர்காவல் தெய்வங்கள் உள்ளன. எனினும், பொதுவாக எல்லையம்மன், அங்காளம்மன், மாரியம்மன், ஐயனார், கருப்பன், சுடலைமாடன், முனீசுவரன் போன்ற தெய்வங்கள் கிராமதேவதைகளாகவும் வழிபடப்படுகின்றன. சில தெய்வங்களுக்குப் புராணப்பின்னணியும் உண்டு. குமரிமாவட்டத்தில் பெரும்பாலான ஊர்களிற் காணப்படும் சிறுகோயில்கள் 'சுடலைமாடன்' என்னும் தெய்வத்திற்குக் கட்டுப்பட்டவையாகக் கூறுவர். இத்தெய்வம் பற்றி ஏ. ஏகாம்பரநாதன், "இறந்தவர்களின் உடலை எரிக்கும் சுடலை – சிவனது ஓர் அம்சமே இத்தெய்வம் எனக்கருதப்படுகிறது. சில தனிக்கோயில்களில் சுடலைமாடனது கல்திருவுருவங்களும் நிறுவப்பட்டுள்ளன. பெரும்பாலான கோயில்கள் இக்கிராமத் தெய்வத்திற்கு ஈட்டி அல்லது அரிவாள் ஆயுதமாக வைவக்கப்பட்டுள்ளது."[37] என எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

**ஐயனார் :** சிற்றூர்ப்புறங்களில் காவல்தெய்வமாகப் போற்றப்படும் ஐயனார் கோயில்கள் தமிழ் நாடெங்கும் பல இடங்களிற் காணப்படுகின்றன. எனினும் தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பலவாகக் காணப்படுகின்றன. நகரத்தார் உள்ளிட்ட பல இனத்தவரும் ஐயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களைக் கட்டவும், திருவிழாக்களை நடத்தவும் பல உதவிகள் செய்து வருகின்றனர். கோயிற்கருவறையில் பெரும்பாலும் சுதை சிற்பமாகவே ஐயனார் சிலைகள் உள்ளன. ஐயனார் திருவுருவத்திற்கு முன்னர் பெரிய யானைகளும், குதிரைகளும் வீரர்களுமாகக் காட்சியளிப்பதை காணலாம். ஐயனார் கோயில்களில் 'புரவி எடுப்பது' என்னும் நேர்த்திக்கடன் மக்கள் பலராற் செய்யப்படுவதை இன்றும் காணமுடிகின்றது. ஐயனார் கோயில்களில் ஐயனார் அமைப்பும் சூழலும் பல கோணங்களில் காட்டப்பட்டுள்ளன. இதுபற்றி இராஜேந்திரன் எழுதுகையில், மதுரை வாடிப்பட்டி தாலுக்கா அய்யன் கோட்டை கிராமத்திலுள்ள ஐயனார் கோயிலில் மட்டும்தான் வேறு எங்குமில்லாத வழக்கமாக அய்யனார் தம்மனைவிகளான பூர்ணாதேவி, புஷ்களாதேவி ஆகியோருடன் அருள்புரியும் விதத்தில் அமைந்துள்ளது. இதில் மற்றொரு சிறப்பு கோயிலைச் சுற்றிலும் உள்ள பகுதியிலும் சோனை, சின்ன கருப்பு, பெரியகருப்பு, லாடசன்னாசி, பேச்சி, சந்தனக் கருப்பு, பத்திரகாளி, சிவன், வீரியப்பெருமாள், மதயானைக்கருப்பு, ராக்காயி உட்பட 21 தெய்வங்கள் உள்ளன. பொதுவாக சாட்டைக் கம்புடன் அமர்ந்திருந்து அருள்புரிவார். இங்கு ஐயனார் குதிரைச்சிலையிருந்து அருள்புரிகிறார்.[38] என விளக்குவது சிந்திக்கத்தக்கது.

பண்டைக்காலம் தொடக்கம் தமிழ்நாட்டில் சிறுதெய்வங்களுள் மிகவும் சிறப்புடையதும் காவல்தெய்வமாகப் பயபக்தியுடன் மக்கள் வழிபடக் கூடியதுமான எல்லைத் தெய்வம் ஐயனார் ஆகும். சிற்றூர்புறங்களில் ஐயனாருக்குத் துணையாகக் கருப்பசாமி எனும் கருப்பண்ணசாமியும் அமைந்திருக்கின்றது. ஐயனார் ஊர்மக்களைக் காப்பாற்றுவதற்காக, அதாவது தீயசக்கதிகளிலிருந்து காப்பாற்றும் நோக்கில் எப்போதும் நள்ளிரவில் குதிரைமீது சவாரி செய்து வருவதாக மக்கள் நம்புவர். மேலும், ஐயனாருக்குப் பூசைபோடும் நாளில் மழை பொழியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. எனவே பூசைபோடும் நாளில் மேகமெலாம் கழட்டிக்கிட்டு மழை பொழிவதால் 'கழட்டி ஐயனார்' என்ற பெயரும் அவருக்கு உண்டு.[39] தமிழ்நாட்டில் பல நோக்கங்களில் வீரஐயனார், கருப்பன் ஐயனார், சங்கிலி ஐயனார், பாதாள ஐயனார், கவிராயன் ஐயனார் முதலிய பல பெயர்களில் ஐயனார் மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கி அருள்பாலிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகாமுனீசுவரர் :** நாட்டுப்புறத் தெய்வங்களுள் பெண்தெய்வங்களே மிகுதி எனினும், ஆண்தெய்வங்களாக ஐயனார், மதுரைவீரன், சுடலைமாடன், முனீசுவரர், கருப்பண்ணசாமி, மாடசாமி, சங்கிலிகருப்பன், இடும்பன் முதலிய ஆண்தெய்வங்களும் மக்களிடையே கண்கண்ட தெய்வங்களாக விளங்கி வருகின்றன. பல சிற்றூர்களில் முனீசுவரர் அச்சுறுத்தும் தெய்வமாக விளங்கினாலும் அவர்களுள் நாமக்கல் மாவட்டம் சேடர் பாளையத்திற்கு அருகில் மகாமுனீசுவரர் ஆலயத்திலுள்ள முனீசுவரர் பெருஞ் சிறப்பினைக் கொண்டவர். மூலிகைத் தாவரங்களுடன் இயற்கைச் சூழலில் அமைந்துள்ள முனீசுவரர் வளாகத்தில் பலபிணிகளும் தீர்க்கின்றன.[40] இவ்வகையிலே மக்களின் பல குறைகளைத் தீர்க்கும் கண்கண்ட தெய்வமாக முனீசுவரர் விளங்கிவருகிறார்.

## கிராமிய தெய்வவழிபாடு காட்டும் பண்பாடு

கிராமியவழிபாடு மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாகும். இந்தியப் பண்பாட்டில் மிகப்பழங்காலந்தொட்டு கிராமிய மக்களால் கிராமியவழிபாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கிராமியவழிபாடு நாட்டுப்புறவழிபாடு எனவும் வழங்கப்படுகின்றது. எனவே இத்தகைய நாட்டுப்புறதெய்வங்கள் மக்களோடு ஒன்றிக் காணப்படும் வாழ்க்கைத் தேவையானவற்றைக் கொடுப்பதால் இத்தெய்வங்கள் கிராம மக்களுக்கு ஒரு பாதுகாவலாக வழிகாட்டியாக இணைந்து காணப்படுகின்றன. கிராமப்புறத் தெய்வங்கள் தங்களுக்கு முறையான வழிபாடுகளோ, வேண்டுதல்களோ நிறைவேறாத நிலையில் அம்மக்களுக்குத் துன்பங்களையும், இன்னல்களையும் ஏற்படுத்துவன என்று மக்கள் நம்புகின்றனர். மேலும் இத்தெய்வங்கள் தங்களுடைய விருப்பங்களையும் தங்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல்களையும் வேண்டுகின்றார்கள்.

பலி கேட்காத மிகவும் புனிதமான பூசைப்பொருள்களை ஏற்றுக்கொள்ளும் கிராமத்தெய்வங்களுக்குப் பிராமணர் பூசாரிகளாக உள்ளனர். அதாவது ஒரே தெய்வம் ஓரிடத்தில் புனிதப் பொருள்களைக் காணிக்கையாக ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில் அதேதெய்வம் வேறிடத்தில் மிருகபலியை ஏற்றுக்கொள்ளும். சிறுதெய்வவழிபாட்டிலிருந்து பெருந்தெய்வவழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது. சிறுதெய்வவழிபாடு ஒரு நிலையில் பெருந் தெய்வழிபாடாக மாறியுள்ளது.[41]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக்காரணம் சமூக பொருளாதார, அரசியல் பண்பாட்டுப் மாற்றங்களாகும்.

கிராமத்தெய்வ வழிபாட்டில் பூசை செய்வதற்கு என்று தனிச்சாதியினர் இல்லை. பல சாதியைச்சார்ந்தவர்களும் பூசாரிகளாகப் பணியாற்றுகின்றனர். கிராமமக்கள் தங்கள் கண்ணுக்குப் புலப்படாத தேவதைகளும் தங்களுக்குத் துன்பம் விளைவிக்கும் போது தங்களுக்கு உதவவும் காப்பாற்றவும் தாங்கள் வழிபடும் தெய்வமே துணை என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். கிராமிய மக்கள் அனைவரிடம் இந்த நம்பிக்கை வேரூன்றி உள்ளது. [42]

சிறுதெய்வவழிபாடு கிராமியமக்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற வழிபாடாகும். கிராமியமக்கள் ஆன்மார்த்தமாக கிரியைகளில் ஈடுபடுவதனால் அவர்களின் ஒழுக்கம் பேணமுடிகின்றது. இவ்வழிபாடு கிராமியக்கலைகளையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் சிறுதெய்வவழிபாடு சமூக ஒற்றுமையையும் சமூகநீதியையும், சமூக ஒழுங்கையும் பேணிவளர்ப்பதற்கு நிலைக்களனாக உள்ளது. அத்துடன் அனைத்து மக்களும் வழிபடக்கூடிய இலகுவான வழிபாட்டு முறைகளைக் கொண்டதாகவும் தமது விருப்பினை நிறைவேற்றக்கூடியதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். கிராமியமக்கள் ஆன்மாஈடேற்றம் பெற சிறுதெய்வவழிபாட்டிலேயே பெரிதும் ஈடுபடுகின்றனர் எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்:

1. மகாலிங்கம். தே. வே., **'விஜயநகரப் பேரரசில் நிலைபெற்று இருந்த பொருளாதர வாழ்க்கை வரலாறு'**, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. 1990, முகவுரை ப. 5.
2. **மேற்படி**, ப. 1
3. **மேற்படி,** பக்...5, 6
4. **இந்துக் கலைக்களஞ்சியம்**, தொகுதி IV, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1998, ப. 109.
5. பிள்ளை. கே. கே. டாக்டர்., தென்னிந்திய வரலாறு (இரண்டாம் பகுதி) சென்னை, 1960, ப. 67.
6. **மேற்படி**, ப. 70
7. **மேற்படி**, ப. 71
8. **புறநானூறு,** பாடல் : 58.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பரமசிவன். தொ. டாக்டர்., **தெய்வங்களும் சமூகமரபுகளும்**, சென்னை. 2005, ப. 140.
10. **நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்,** பதிப்பாசிரியர். தோ. லூர்து, நாட்டுப்புற பாடல்களில் வளமை நம்பிக்கையும் சடங்குகளும், சு. கிருட்டிணசாமி, ப. 171.
11. **மேற்படி**, பக், 178–179
12. **தகவல்:** கீரனூர் பாக்கியம், (கொல்லங்குடி கிராமம்) 10.1.1992.
13. **ஆராய்ச்சி** இதழ், 'கருப்பசாமி வழிபாடு' தொ. பரமசிவன், ப. 38.
14. பரமசிவன். தொ. டாக்டர்., **மு. கு. நூ.**, ப. 142.
15. **மேற்படி,** ப. 143.
16. **நாட்டுப்புறவியல் ஆய்வுத் தளங்கள்**, இராசேந்திரன், அ. டாக்டர், 'சிறுதெய்வ நம்பிக்கைகள்', ப. 29.
17. **மேற்படி**, ப. 32
18. **மேற்படி**, ப. 52
19. பரமசிவன். தொ. **மு. கு. நூ.** ப. 145.
20. **மேற்படி**. ப, 146
21. கிருஷ்ணமூர்த்தி. ச. **நடுகற்கள்,** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004. ப. 336
22. APAR 217/1965 – (விஜயநகரகாலக் கல்வெட்டு)
23. கிருஷ்ணமூர்த்தி, ச., **மு. கு. நூ.** ப. 345.
24. **மேற்படி** ப. 189.
25. அறவாணன், க. ப. **தமிழ்மக்கள் வரலாறு**, சென்னை, 2005, ப. 4.
26. **மேற்படி,** ப. 37.
27. **மேற்படி,** ப. 62
28. கிருஷ்ணமூர்த்தி. ச., மு. கு. நூ. ப. 349
29. **வீரையன் அம்மானை**, பதிப்பாசிரியர், டாக்டர். பரிமணம், அ. மா., 1979, ப. 11
30. **மேற்படி**, ப. 11
31. வைத்தியலிங்கன். செ. **சிற்பக்கலை**, சிதம்பரம், 2003, ப. 336
32. **தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்**, தஞ்சாவூர், கி. பி. 600 – 1850)
33. **மேற்படி**, ப. 126
34. குடவாயில் பாலாசுப்பிரமணியன், **தஞ்சாவூர்**, (கி. பி. 600 – 1850)
35. **"ஓம் சக்தி"** (திங்களிதழ்), பெப்ரவரி, 2002, ப. 37.
36. வைத்தியலிங்கன் செ. **மு. கு. நூ.** ப. 340.
37. ஏகாம்பரநாதன். ஏ. **கோயிலும் இறைவழிபாடும்**, பக். 84 – 85.
38. இராஜேந்திரன், **ஆலயங்களும் அபூர்வ தகவல்களும்**, ப. 43
39. வைத்தியலிங்கன் செ. **மு. கு. நூ.** ப. 343.
40. **மேற்படி**, ப. 344.
41. **உலகத்தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்**, 1 முனைவர், கா. கலியபெருமாள், மலேசிய, ப. 362.
42. **மேற்படி**, ப. 366.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்:


1. **உலகத்தமிழிலக்கிய வரலாறு**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, 2005.
2. இறையரசன். பா. **தமிழர் நாகரிக வரலாறு**, பூம்புகார்பதிப்பகம் ; 1993
3. **செந்தமிழ்ச்செல்வி** (திங்கள் வெளியீடு) 1925
4. இளவரசு. சோம, **பரணி இலக்கியம்**, மணிவாசகர் நூலகம் 1978.
5. பரமசிவன் தொ. **தெய்வங்களும் சமூகமரபுகளும்**, சென்னை, 2005.
6. சக்திவேல், சு. **நாட்டுப்புறஇயல் ஆய்வு**, தஞ்சாவூர் 1983.
7. கா. கலியபெருமாள். **உலகத்தமிழர் பண்பாட்டுக்களஞ்சியம்,** கலியபெருமாள். கா. மலேசியா 1997
8. கணபதிப்பிள்ளை க. பேராசிரியர், **ஈழத்துவாழ்வும் வளமும்**, சென்னை, 1962
9. தேவசேயப்பாவாணர். ஞா. **தமிழர்மதம்** சென்னை, 2000.
10. சண்முகசுந்தரம் சு. **நாட்டுப்புறவியல்**, சென்னை 2003.
11. குடவாயில் பாலசுப்பிரமணியன், **தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு**, தஞ்சாவூர், 1999.
12. **திருமலை நாயக்கர் செப்பேடுகள்**, சென்னை, 1994.
13. வைத்தியலிங்கன். செ. **சிற்பக்கலை**, 2003.
14. பரமசிவனாந்தம். அ. மு. **தமிழக வரலாறு**, சென்னை, 1995.
15. **தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்** இராசு. செ, 1995.
16. இராம, கிருட்டினன். ஆ. **தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்**, மதுரை, 2004.
17. **தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்** தொகுதி. 4, 1993, தஞ்சாவூர்.
18. நீலகண்டசாஸ்திரி. கே. எ. தென்னிந்திய வரலாறு பகுதி 1, சென்னை, 1973.
19. **இந்துக் கலைக்களஞ்சியம்**, தொகுதி 4. கொழும்பு, 1998
20. பழனியப்பன். ஆ. **பழந்ததமிழ் இலக்கியம் ஒர்ஒப்பாய்வு**, சென்னை, 2001.
21. கிருஷ்ணமூர்த்தி. செ. **தமிழ்நாட்டுச் செப்பேடுகள்**, சிதம்பரம் 2002.
22. **தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்**. சென்னை, 2004.
23. கிருஷ்ணமூர்த்தி. ச. **நடுகற்கள்**, சிதம்பரம், 2004.
24. Mahaligam. T. V., **Administration and Social Life Under Vijayanagar** part II, Madras, 1975.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயுமானவர்

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அந்நாடு இந்துப்பண்பாட்டின் தாயகமாகச் சிறப்படைந்ததோடு அப்பண்பாடு காலந் தோறும் வளம் பெறுவதற்கும் நிலைக் களனாக விளங்கி வந்துள்ளது. வேதகால ரிஷிகள் தொடக்கம் இற்றைக் காலம் வரை அப்பண்பாட்டை வளர்த்தெடுப்பதிலும் மறுமலர்ச்சியடையச் செய்வதிலும் ஞானிகளும் அநுபூதி மான்களும் அருளாளர்களும் சித்தர்களும் மற்றும் சமயப் பெரியார்களும் பெரும் பங்காற்றி வந்துள்ளனர். இத்தகையோர் தாமும் வளர்ந்து உலகையும் ஆன்மீகப் பாதையில் ஆற்றுப்படுத்திய பெருமைக் குரியவர்கள். அவ்வரிசையில் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் நாயக்க மன்னர் ஆட்சியில் தென்னகத்தில் பிறந்த அநுபூதிமானாகிய ஸ்ரீ தாயுமான' சுவாமிகளும் குறிப்பிடத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராவர். இவரது வாழ்வும் பணியும் ஆன்மீக மறுமலர்ச்சிக்குப் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடற்பாலது.[1]

தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டக் கடற்கரைப் பிரதேசத்தில் வேதாரண்யம் என்ற ஊரில் வாழ்ந்த கேடிலியப்ப பிள்ளை கெஜவல்லியம்மை தம்பதிகளுக்கு இரண்டாவது மைந்தனாகத் தாயுமானவர் விளங்கினார். பெற்றோர் மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி மீது கொண்ட பக்தி மற்றும் பிரார்த்தனை ஆகியவற்றின் பயனாய் இவர் பிறந்ததினால் அவருக்குத் தாயுமானவர் என்ற பெயரே சூட்டப்பட்டமை குறிப்பிடற்பாலது.

அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் விஜய சொக்கநாத நாயக்கர் ஆட்சி புரிந்து வந்தார். வேந்தர் கடலில் நீராடுதல் பொருட்டும் வேதாரண்யத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனாரைச் சேவித்தற் பொருட்டும் அவ்வூருக்கு யாத்திரை போவது வழக்கமாக அமைந்ததால் வேதாரண்யத்தில் கோவில் நிர்வாகம் பார்த்து வந்த கேடிலியப்ப பிள்ளைக்கு மன்னரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்படலாயிற்று. கேடிலியப்ப பிள்ளையின் நிர்வாகத் திறமையையும் கல்வியறிவிற் பெற்றிருந்த தேர்ச்சியையும் அவதானித்த மன்னர் அவரைத் திருச்சிராப்பள்ளிக்கு வந்து அரசாங்கத்தில் உயர் பதவியொன்றினை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டியதனால் கேடிலியப்ப பிள்ளை திருச்சிராப்பள்ளிக்குச் செல்ல நேரிட்டது. இதன் பயனாய் மன்னருக்கும் கேடிலியப்ப பிள்ளைக்கும் மேலும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டமை குறிப்பிடற்பாலது.

தொடர்ந்து வந்த நாயக்க ஆட்சியாளர்களுக்கும் கேடிலியப்ப பிள்ளை குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட நெருங்கிய தொடர்பு காரணமாக தந்தை வகித்த அதே உயர்பதவியை நாயக்கர் ஆட்சியில் தாயுமானவர் வகிக்கக்கூடிய சாதகமான சூழ்நிலை ஏற்பட்ட போதும் அரச சுக போகத்தில் அவரது மனம் நாட்டம் கொள்ளவில்லை. தாயுமானவர் மட்டுவார்குழலி அம்மையாருடன் இல்லற வாழ்வில் இணையும் பாக்கியம் கிடைத்து குழந்தைப் பேறு கிட்டிய போதும் காலப்போக்கில் அதிலிருந்து விடுபடும் சூழ்நிலை உருவாகியது. எனினும் இத்தகைய உலகவாழ்வியல் அனுபவம் பிற்காலத்தில் அவர் ஒரு சிறந்த தூய்மையான அநுபூதிமானாக விளங்க வழி வகுத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகத் துறையைப் பொறுத்த மட்டில் தாயுமானவர் பல்துறை சார்ந்த ஆளுமைமிக்கவராகச் சிறப்படைந்தார். சமயவாதியாக தத்துவ ஞானியாக, அனுபூதிமானாக வேதாந்த சித்தாந்த சமரசவாதியாக குருபக்திமிக்கவராக சமயசமரசவாதியாக யாவற்றிற்றுக்கும் மேலாக ஒரு சிறந்த ஆன்மீகத் துறவியாக அவர் விளங்கியமை அவரது பாடல்கள் மூலம் அறியலாம். சிறுவயதில் அவருக்கு திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சிற்றம்பல தேசிகர் முதல் ஆசானாக விளங்கியவர். தாயுமானவர் அறிவுத்திறன் மிக வாய்க்கப் பெற்றிருந்ததினால் கலைஞானமும் ஓங்கி வளர்ந்தது. அதன் பயனாய் தமிழ், சமஸ்கிருதம், கணித சாஸ்திரம், சோதிட சாஸ்திரம் ஆகிய துறைகளில் புலமைத்துவம் பெற்றார். சைவ நூல்களாகிய தேவாரம், மணிவாசகரின் திருவாசகம், சைவ ஆகமங்கள் அருணகிரிநாதரின் திருப்புகழ், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகியவற்றிலும் புலமைத்துவம் பெற்றார். வேதாந்த சித்தாந்த கோட்பாடுகளைச் சிறப்பாக அறிந்தார். சமயஞ் சார்ந்த வாதங்களில் எவரும் அவரை வெல்ல முடியாதவாறு தர்க்கத்தில் சிறந்த ஆற்றல் உள்ளவராகத் திகழ்ந்தார். திருவாசகத்தை உபநிடதத்தோடு தொடர்புபடுத்திக் கற்றுக் கொண்டார். அவரது பாடல்களில் திருவாசக சிந்தனைகளின் செல்வாக்கு காணப்படுகின்றமை குறிப்பிடற்பாலது. சுருங்கக் கூறின் அவரிடம் பட்டினத்தாரின் ஞான நிலை சார்ந்த மனநிலை, வேத கால ரிஷிகளிடம் காணப்பட்ட தெய்வீக உணர்வு, மணிவாசகரின் பக்திச் சிறப்பு, அப்பரின் பணிவு, சம்பந்தரின் உறுதியான தெய்வ நம்பிக்கை ஆகிய சிறப்பம்சங்கள் காணப்பட்டபடியால், அவரது உள்ளத்திலிருந்து ஆன்மீக நலஞ்சார்ந்த பாடல்கள் வெளிப்படலாயின. அவருக்கு அரச அரண்மனைத் தொடர்பும் செல்வவளமிக்க இல்லறவாழ்வும் வாய்க்கப் பெற்றிருந்தும் அவரது மனம் தனிமையை நாடியதோடு ஞான நெறியிற் செல்ல தலைப்படலாயிற்று. அவர் மலைக் கோட்டையிலுள்ள தாயுமானவர் கோயிலுக்குச் சென்று வழிபாட்டிலும் தியானத்திலும் ஈடுபட்டதன் பயனாய் மனம் படிப்படியாக ஆத்மீக நிலையில் பக்குவமடையலாயிற்று. அதன் வெளிப்பாடே அவரது ஆத்மீக நலம் பொருந்திய பாடல்கள். காலை முதல் மாலை வரை அவரது உள்ளம் ஏதோ ஒன்றை இடைவிடாது நாடியதோடு தன்னை ஆத்மீக ஞான ஒளியை நோக்கி ஆற்றுப்படுத்த ஏதோ ஒன்றின் உதவியைத் தேடிக் கொண்டிருந்தது. 'தமஸோ மா ஜ்யோதிர் கமய' – 'இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக' என்ற உபநிடத வாக்கியம் அவரது இந்நிலைக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமாக அமைந்தது. இதன் பயனாகவும் தெய்வீக உணர்வுமிக்க பாடல்கள் இயல்பாகவே அவரிடமிருந்து வெளிப்பட்டன.

தாயுமானவர் பாடிய பாடல்களில் தொகை 1452 ஆகும். அவை 56 தலைப்புக்களில் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| 1 முதல் 39 முடிய உள்ள பாடல்கள் | 587 |
| 40 முதல் 53 முடிய உள்ள கண்ணிகள் | 833 |
| 54, 55 அகவல், வண்ணம் | 02 |
| 56 ஆனந்தக் களிப்பு – கண்ணிகள் | 30 |
| | 1452 |

மௌனம், தியானம் ஆகியவற்றின் மூலம் எய்திய ஞான நிலை அவருக்கு இத்தகைய ஆத்மீக பலத்தை தந்தது எனில் மிகையில்லை.

ஒருவனுக்கு இத்தகைய ஆற்றல் வெளிப்படுவதற்கான தன்மை பற்றி நாம் சற்று விளக்குவதும் இங்கு பொருத்தமாகும். தகுதி, புகழ், சிறப்பு என்று இவை ஆற்றலுடன் வளத்துடனும் எழிலுடனும் உயர்ந்த பாங்கினில் வெளிப்படும்போது அதை தெய்விக மகிமை அல்லது 'விபூதி' என்பர். தெய்வீக குணங்கள், ஒளி, உயிர்த்துடிப்பு, செயல்ஊக்கம், சாந்தி, உன்னதம், ஆனந்தம், அருள் என்பவற்றுடன் யாரிடமாவது எந்த இடத்திலாவது எப்பொருளிலாவது வெளிப்பட்டுத் தோன்றினால் அது தெய்வீக மகிமை ஆகும். சுருங்கக் கூறின் சிறப்பாக விளங்கும் ஒவ்வொன்றும் கடவுளின் பெருமையே. விபூதி என்ற வகையில் கீதையில் கிருஷ்ணன் உயர்ந்து விளங்குபவற்றின் விபரங்களை உபதேசிக்கின்றார்.[2]

மேலும் திறமை, வல்லமை, சக்தி, நுண்ணறிவு, உயிர் ஒளி, அன்பின் பிரகாசம், சத்தியம், சாந்தம், அழகு, போன்ற இவை எங்கு எவரிடத்தில் விளங்குகின்றனவோ அப்போது அவை கடவுளின் பெருமைகள் ஆகின்றன. எவர் தன் மனதை உள்முகமாகத் திருப்பிக் கடவுளின் பெருமைகளை ஆழ்ந்து சிந்திக்கின்றாரோ திட்பம், நுட்பம், பூரணநிலை, சிந்தனைத் தெளிவு, தெளிவுற மொழிதல், செயல், ஆக்கம் இவற்றில் காட்டும் திறமையும் நளினமும் ஆகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் பெருமைகளை எவ்வளவுக்குத் தியானிக்கின்றாரோ அவ்வளவுக்கு அவர் அப்பெருமைக் குணங்களை அடைகின்றார்.[3]

மனிதமனம் ஒன்றைச் சார்ந்து அதன் வண்ணம் ஆகும் இயல்பினது. ஒருவர் எந்த ஒன்றைப் போற்றுகின்றாரோ, எந்த ஒன்றை உண்மையாக நேசித்து வணங்குகின்றாரோ, எந்த ஒன்றில் மனம் ஒன்றி முனைந்து ஈடுபடுகின்றாரோ அந்த ஒன்றை அவர் தம் வாழ்வில் வெளிப்படுத்துகிறார். அந்த ஒன்றாகவே அவர் ஆகிவிடுகின்றார். எதைப் போற்றுகின்றாரோ அதன் மூல முன்மாதிரியாகவே அவர் மாறுகிறார். தெய்வீகம் சார்ந்த இத்தகைய விளக்கங்களின் பின்னணியில் தாயுமானவரின் ஆத்மீக சாதனைகள் பற்றி நாமறிய முயல்வது பொருத்தமாகும்.

தாயுமானவர் தமது வாழ்வில் ஆழ்ந்து போற்றியது எதை? யாரை? என்பது போன்ற வினாக்களுக்கு விடை காணவும் அவர் போற்றிய பொருளின் விபூதியாக எப்படி ஆகின்றார்? என்று நாம் ஆராயவும் அவரது வாழ்வும் அவரது ஆத்மீக உணர்வுமிக்க பாடல்களுமே மூலங்களாக அமைகின்றன. தாயுமானவர் தமது அநுபூதி மகிமையினால் அநுபூதி நெறியாளர்களுள் உன்னதமான நிலையில் சிறப்படைந்தார்.

தத்துவங்களில் மிக உயர்ந்த தத்துவம் சரணாகதித் தத்துவமாகும். செயல், உணர்வு, பகுத்தறிவு ஆகிய இவற்றின் உச்சநிலை பிரபத்தி என்ற சரணாகதி ஆகும். 'சும்மா இரு' என்று கற்றுக் கொள்வதே அரிய முயற்சி, உரைகளுள் சிறந்த விளக்கவுரை மௌனம். இவை கைவரப் பெற்றால் அவற்றிலிருந்து உண்மை, அறிவு, ஞானம், அனுபூதி ஆகியவை வெளிப்படுத்துகின்றன. சரணாகதியில்தான் ஒருவனது அளப்பரிய ஆற்றல் இருக்கின்றது. முழுச் சரணாகதியைச் செயலில் கொண்டு வரும் அத்தகையவர்கள் தான் உலகில் உயர்ந்த ஆத்மஞானியாகப் போற்றப்படுகின்றனர். அத்தகையோரின் தாயுமானவர் குறிப்பிடத்தக்கவர்.

இந்தியாவில் காலங்காலமாக வந்துதித்த இத்தகையோரது வாழ்வும் சிந்தனைகளும் மனித குலத்திற்கு வழிகாட்டியாக இருந்து வருகின்றன. இதனால் இந்தியா ஞானபூமியாகச் சிறப்படைந்தது. இப்பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் மாத்திரமன்றி இந்திய எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளிலும் கடல் கடந்த மேற்குலக நாடுகளிலும் நன்கு உணரப்படலாயிற்று. மேலை நாட்டு அறிஞர் சிலரது கூற்றுக்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

பிரெஞ்சு நல்லறிஞர் ரோமாய் ரோலான் இந்தியாவுக்குத் தான் கடன்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, 'மனித இனம் வாழத் துவங்கிய ஆதி நாளிலிருந்து வாழும் மனிதர்களின் கனவுகள் எல்லாம் நிறைவேறும் நிலைக்களனாக ஓரிடம் இப்பூமியில் எங்காவது உள்ளது என்றால் அது இந்தியா தான் எனக் குறிப்பிட்டுள்ளமை கவனித்தற்பாலது. மண்ணிலே உள்ள உண்மையான விண்ணகம் இந்தியா என்று ஜெர்மன் நல்லறிஞர் மாக்ஸ் முல்லர் மனந்திறந்து குறிப்பிடுகின்றார். மேலும் அவர் கூறுமிடத்து 'இந்நிலவுலகில் மனித உள்ளம் முழுவளம் பெற்று வாழ்க்கையின் பெரும் பிரச்சினைகளை ஆராய்ந்துள்ள இடம் எது என்று என்னைக் கேட்டால் இந்தியாவையே காட்டுவேன். தத்துவ ஞானியராம் பிளேட்டோ, கான்ட் ஆகியோரைக் கற்றவரின் கவனத்தையும் இழுக்கவல்லதாய பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்ட மனித உள்ளம் இருக்கும் இடம் எது என்று கேட்டால் இந்தியாவையே நான் சுட்டிக்காட்டுவேன். ஐரோப்பியர்களாகிய நமது இக வாழ்வுக்கு மட்டுமின்றி நிலைத்த அமர வாழ்வுக்காகவும் நாம் முழு மனித வாழ்வு பெறும் வகையில் நம் அக வாழ்வை நிறைவாக்கவும் நமது மனக்கோணலை எந்த இலக்கியம் நிமிர்த்தி விடும் என்று என்னை நானே கேட்டுக் கொண்டால் மறுபடியும் இந்தியாவையே காட்டுவேன்' என்ற கூற்றும் சிந்தனைக்குரியவை என்பதோடு மாத்திரமன்றி எல்லா உயர் அம்சங்களிலும் இந்தியா தன் உயர் பண்பாட்டின் அழிக்க இயலாப் பதிவை உண்டு பண்ணியுள்ளது என்பதும் தெளிவாகின்றது. இந்தியா இந்த உயர்நிலையைப் பெற ஏனைய வளமான சமய இலக்கியங்கள் மாத்திரமன்றி தாயுமானவர் போன்றோரது ஆத்மீக வளம் கொண்ட பாடல்களும் ஆத்மீக மறுமலர்ச்சிக்குக் காரணமாயின எனில் மிகையில்லை.

ஆன்ம விரிவை நோக்கி முன்னேறும் சம உணர்வை ஆதாரமாகக் கொண்டது இந்திய உள்ளம் என்பதைக் கோவில்களிலும் அறநூல்களிலும் அருளாளர் தம் வாழ்க்கையிலும் புண்ணிய பூமியாகிய பாரதம் தந்த பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளிலும் நாம் காணமுடிகிறது. இந்நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அரசரும் சாமானியரும் தங்கள் வம்சத் தோற்றமானது என்றோ வாழ்ந்த ரிஷி ஒருவரிடமிருந்து வந்ததாகக் கொள்கின்றனர். ஆத்மீக தரிசனத்தின் மூலம் இந்த ரிஷிகள் வெளிப்படுத்திய ஆத்மீக சிந்தனைகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாக விளங்கி வருவனவற்றுள் தாயுமானவரின் பாடல்களும் உள்ளடக்கப்படத்தக்கவை என்பது அறிஞர் கருத்தாகும்.

தாயுமானவர் பாடற் தொகுதியில் மனிதப்பிறவியின் சிறப்பினையும் மனிதனது ஆணவம், மற்றும் அகங்கார மமகார குறைபாடுகளையும் எடுத்துக்கூறி, அவர் அவற்றிலிருந்து விடுபடும் வகையில் குருவின் துணைநாடி இறைவன் துணை நாடும் வரையில் பல விடயங்கள் வகுத்துக் கூறப்படுகின்றன. சமயம் பற்றிய அவரது சிந்தனையில் முதலிடம் பெறுவது பரம்பொருள் பற்றியதாகும். பரம்பொருள் மேன்மை பற்றியறிய பரசிவ வணக்கம், பரிபூரணானந்தம், பொருள் வணக்கம், கருணாகரக் கடவுள், ஆனந்தமான பரம், சுகவாரி, எங்கும் நிறைந்த பொருள், சச்சிதானந்த சிவம், தேஜோமயானந்தம், கல்ஆலின், சிற்சுகோதய விலாசம் போன்ற பகுதிகள் உதவுகின்றன. குரு மற்றும் சித்தர் மகிமை பற்றிய விடயங்களுக்கு சின்மயானந்த குரு, மௌன குரு வணக்கம், சித்தர் கணம், குருமரபின் வணக்கம் போன்ற பகுதிகள் விரிவான விளக்கங்கள் தருகின்றன. இறையடியார்கள் பற்றியும் தாயுமானவர் சிறப்பித்துக் கூறுகின்றார். அவர் தம் பெருமை பற்றி அடியார் வணக்கம், அன்பர்நெறி ஆகிய பகுதிகள் விவரிக்கின்றன. ஆத்மீக விடுதலை பெறுவதற்கு இடையூறாக விளங்குபவற்றை இனங்கண்டு அவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டி இறைவன் துணையை உள்ளன்புடன் வேண்டும் பாடல்கள் அடங்கிய தொகுதிகள் பல உள. பொன்னை மாதரை, ஆசை எனும், பாயப்புலி, உடல் பொய் உறவு, எடுத்த தேகம், திடம் உறவே, மாதர் மயக்கு அறுத்தல் போன்றவை முக்கியத்துவமுடையன. மேலும் தத்துவ முறைமை, தன் உண்மை, ஆனந்த இயல்பு, ஆனந்த களிப்பு ஆகிய பகுதிகள் அவரது தத்துவஞான கொள்கைகளுக்கு ஆதாரமாக உள்ளன. தனது ஆன்ம விடுதலைக்கு அம்பிகையின் அருள் வேண்டி நிற்கும் நிலையில் பாடிய பாடல்கள் மலைவளர் காதலி, அகிலாண்ட நாயகி, பெரிய நாயகி ஆகிய பகுதிகளில் உள்ளன. மற்றும் பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாள் கண்ணி போன்ற பகுதிகளில் சமய தத்துவ மற்றும் ஆத்மீகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த பல விடயங்கள் விரிவு பெறுகின்றன. இப்பாடல்களின் வழி தாயுமானவர் தன்னை ஆத்மீக நிலையில் பக்குவப்படுத்திக் கொண்டதோடு அவர் வாழ்ந்த காலத்து மக்களிடையேயும் உலகத்தாரிடையேயும் சமய தத்தவ மற்றும் ஆத்மீகஞ் சார்ந்த விடயங்களை தெளிவுப்படுத்தி அவர்களது சமய நம்பிக்கையை வளர்த்து ஆத்மீக மறுமலர்ச்சியை நோக்கி ஆற்றுப்படுத்த முயன்றுள்ளமை தெளிவாகின்றது.

## மானிடப்பிறவியின் மாண்பு.

மானிடப்பிறவியின் நோக்கம், மாண்பு பற்றித் தாயுமானவரின் சிந்தனை மிகத் தெளிவாக உள்ளது.

*'எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்*
*யாதினும் அரிது அரிது காண்;*
*இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?*
*ஏதுவருமோ? அறிகிலேன்;*[4]

என்ற பாடல் சித்தர்கணம் பற்றிய பிரிவில் இடம்பெறுகின்றது. மனிதன் ஆன்மீக நெறியில் மேனிலை அடைவதற்கேற்ற பிறவி மானிடப்பிறவியே. இப்பிறவி விழுவதற்கு முன் மனிதன் செய்ய வேண்டிய காரியம் யாது? அதனை எவ்வாறு எவ்வெவ் வழிகளில் மேற்கொள்ள வேண்டும்? போன்ற வினாக்களை மனதிலிருந்து இவ்வுலகில் உள்ளவர்களை உருக்கமாகக் தாயுமானவர் கூவியழைப்பது 'காடும் கரையும்' என்ற பிரிவில் உள்ளது.

*காகம் உறவு கலந்து உண்ணக்*
*கண்டீர்; அகண்டா கார சிவ*
*போகம் எனும் பேரின்ப வெள்ளம்*
*பொங்கிப் ததும்பிப் பூரணமாய்*
*ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ;*
*இன்புற்றிட நாம் இனி எடுத்த*
*தேகம் விழுமுன் புசிப்பதற்குச்*
*சேர வாரும் ஜகத்தீரே!*[5]

என்ற பாடல் வரிகள் உலகில் உள்ளோரை ஆன்மீக வாழ்விற்கு ஆற்றுப்படுத்தும் பாங்கில் அமைவது தாயுமானவரின் பிறர் நலம் பேணும் பரந்த மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இது போன்று தமது பாடல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி அநேக இடங்களில் மானிடப் பிறவியின் நோக்கத்தினை தாயுமானவர் எடுத்துக் கூறத் தவறவில்லை.

## குருபாரம்பரியமும் வழிகாட்டலும்

குருவின் மகிமை பற்றி இந்து சமய நூல்கள் சிறப்பாகப் போற்றிக் கூறுகின்றன. இறைவனே குருவாக விளங்குகின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை இந்து சமய மரபில் உள்ளது. வேத காலத்தில் ரிஷிகள் சமய குருவாக விளங்கி ஆத்மஞானம் பரவ உதவினர். உபநிடங்களிலும் பலர் ஞான குருவாக விளங்கிய சிறப்பு விளக்கப்படுகின்றது. இவர்கள் மூலம் வேத மறைஞான ஊற்றுக்கள் உபநிடத சிந்தனைகளாக விரிவடைந்து பரவின. வியாசமகரிஷி இந்து குருபாரம்பரியத்தின் ஆதர்ஷ புருஷராகப் போற்றப்படுபவர். ஆதிசங்கரர் இந்து சமயஞ்சார்ந்த ஷண்மத பிரதிஸ்தாபகராகவும் அத்வைதக் கோட்பாட்டை நிறுவிய தத்துவஞானியாகவும் ஆத்மீக குருவாகவும் விளங்கி இந்துகுரு பாரம்பரியத்தைச் சிறப்பித்துள்ளார். இவரைத் தொடர்ந்து ஸ்ரீஇராமானுஜர், மத்துவர் போன்றோர் சிறப்படைந்தனர்.

தென்னாட்டுச் சைவமரபில் நாயன்மார்கள் சமய குரவர்களாகவும் ஆழ்வார்கள் வைணவ ஆச்சாரியர்களாகவும் விளங்கி பக்தி நெறியை வளப்படுத்தினர். திருமூலர் சிறந்ததொரு சித்தர் மரபு சார்ந்த குருபாரம்பரியத்திற்கு வழியமைத்தவர். சந்தான குரவர்கள் சைவசமயமரபைத் தத்துவார்த்த ரீதியில் வளம்படுத்தினர். இவர்களது குருசீட பரம்பரை சிறப்புடையது. சித்தர்களும் மறைஞானிகளும் பிரமாணாதீத நிலையில் நின்று தமது அனுபவத்தின் மூலம் உணர்ந்த சமய தத்துவ மறைஞான சிந்தனைகளை உலக மக்களுக்காக உபதேசித்தனர். சைவ பாரம்பரியத்தில் இறைவனே தக்ஷணாமூர்த்தியாக கல்லால விருட்சத்தின் கீழ் வீற்றிருந்து சனகாதி முனிவர்க்கு குருவாக விளங்கி உபதேசிக்கும் மரபு குறிப்பிடத்தக்கது. இத்தகைய குருபாரம்பரியத்தின் வழி இந்து சமய ஆன்மீக நெறியில் இற்றைக்காலம் வரை எத்தனையோ ஞானிகள் உருவாகியுள்ளனர். இந்து சமயத்தின் தொன்மையான ஆத்மஞான சிந்தனைகளை உரிய விளக்கங்களோடு பாரெங்கணும் பரப்புவதில் பலர் தலைசிறந்து விளங்கினர். இத்தகைய குருபாரம்பரியச் சிறப்பினை தாயுமானவர் தமது வாழ்வில் நன்குணர்ந்திருந்தார். தமது பாடல்களில் பல்வேறு இடங்களில் இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான குருபாரம்பரிய மகிமையையும் வழிகாட்டலையும் போற்றத் தவறவில்லை. திருமூலர் திருமந்திரத்தில் 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' எனவும்,

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே* [6]

என்றும் குரு பாரம்பரியத்தின் தெய்வீக மகிமையைத் தெளிவுபடக் கூறுகின்றார். இம்மரபின் செல்வாக்கு தாயுமானவரின் வாழ்விலும் துலங்கியமை குறிப்பிடற்பாலது.

இது தொடர்பாக உபநிடத வாக்கியம் ஒன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். 'ஞானக் கனியாய் இலங்கும் குரு மூர்த்தி அரியருள் அரியராய் அமைகின்றார். அவரிடமிருந்து ஞானப்பேற்றினை ஏற்றுக் கொள்ளும் சிஷ்யன் திறமை மிக வாய்க்கப் பெற்றவன்' என்ற உபநிடத வாக்கியம் குருவுக்கும் சிஷ்யனுக்கும் இடையேயுள்ள இணக்கத்தின் சிறப்பைக் காட்டுகின்றது. இந்த உபநிடதக்கோட்பாடு தாயுமானவரைப் பொறுத்தமட்டில் முற்றிலும் பொருந்துவதாக அமைந்தது.

தாயுமானவர் சிறுவயதிலிருந்தே மலைக்கோட்டை தாயுமானவர் சிவன் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதும் திருவானைக்காவுக்குச் சென்று அகிலாண்ட நாயகியை வழிபடுவதும் நித்திய கடமையாகக் கொண்டவர். ஒரு நாள் இவர் மலைக்கோட்டையில் சிவனாரை தரிசனம் செய்துவிட்டு வரும்பொழுது இடைவழியில் சான்றோனாகிய முனிவர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவரை இளைஞராகிய தாயுமானவர் வீழ்ந்து வணங்கினார். தாயுமானவரை குருவடிவில் ஆட்கொள்ள வந்த பரமாச்சாரியரே அம்முனிவர். அவர் பேசுவது மிகக் குறைவு. ஆதலால் அவர் 'மௌன குரு' எனக் கருதி மாணாக்கர் அவருக்கு ஆட்பட்டார். அம்முனிவர் திருமூலர் மரபில் வந்தவர். ஆதலால் பிற்காலத்தில் தாயுமானவர் தமது பாடல்களில் அவரை "மூலன் மரபில் வரு மௌன குருவே"[7] எனப் போற்றுதலைக் காண்கிறோம். குருவினால் ஈர்க்கப்பட்ட தாயுமானவர் ஆத்ம சாதனங்களில் அதிவேக முன்னேற்றமடைந்தார். ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவது குருபக்தியுடன் நடந்து கொள்ளுதல் அவருக்குப் பக்திபூர்வமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளைச் செய்தல் ஆகியவற்றைத் தாயுமானவர் ஒழுங்காகக் கடைப்பிடித்ததனால் தமது குருவின் வழிகாட்டலில் சிறந்த ஆத்மசாதகனாக பரிணமிக்கும் வாய்ப்பேற்பட்டது. அவரது வாழ்வில் சிறிது காலம் குரு பிரிந்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால் தாயுமானவர் மனம் குழம்பியிருந்த வேளை குரு கூறிய உறுதிமொழி குரு தத்துவத்தின் மகிமையைக் காட்டி நிற்கின்றது. பிரிந்திருக்கும் இடைக்காலத்தில் சிஷ்யனாகிய தாயுமானவர் தனது பிராரப்த கர்மங்களின் பெரும் பகுதியைப் பூர்த்தி பண்ணியிருப்பார் என்றும் அதன் பிறகு அமையும் குருசிஷ்ய இணக்கத்தில் தெய்விகச் சிறப்பு வாய்த்திருக்கும் என்று குருமூர்த்தி உறுதிமொழி கூறி குழம்பியிருந்த சிஷ்யனை நோக்கி, "சும்மா இரு" என உபதேசித்து குருமூர்த்தி பிரிந்து சென்றார். இந்த உபதேச மொழி தாயுமான சுவாமிகளது பாடல்கள் பலவற்றிற்குப் பீஜ மந்திரமாக அமைந்திருக்கின்றது என்பது அவரது பாடல்களை ஊன்றிப்படிக்கும் போது தெளிவாகின்றது. தாயுமானவர் 'எந்நாள் கண்ணி' என்ற பிரிவில் தெய்வ வணக்கத்திற்கு அடுத்த படியாக குருமரபின் வணக்கத்தில் பன்னிரண்டு பாடல்களில் குருவருள் தனக்குக் கிட்ட வேண்டுமென காத்திருக்கும் பாங்கு தெரியவருகின்றது. பைங்கிளிக்கண்ணி என்ற பிரிவில்

*சிந்தை மருளைத் தெளிவித்து என்னை ஆள*
*வந்த குருநாதன் அருள் வாய்க்குமோ பைங்கிளியே!*[8]

என வரும் பாடலில் அவரது குருபக்தி புலனாகின்றது. 'மௌன குரு வணக்கம்' என்ற பிரிவில் இடம் பெறும் பத்து பாடல்கள் மூலம் குருவின் சிறப்பைத் தாயுமானவர் பல்வேறு நிலைகளில் எடுத்துக் கூறுகின்றார்.

கடவுள் வணக்கமும் குரு வணக்கமும் சாதகனுடைய கருத்தில் சம அந்தஸ்து பெறுகின்றன. ஏனெனில் குருவையும் கடவுளையும் அவன் வெவ்வேறாகக் காண்பதில்லை. இதனையுணர்ந்த தாயுமானவர் குருவை,

*ஞான நெறிக்கு ஏற்ற குரு; கருண்ணரி சித்தி முக்தி*
*தானம் தருமம் தழைத்த குரு – மானமொடு*
*தாய் எனவும் வந்து என்னைத் தந்த குரு; என் சிந்தை*
*கோயில் என வாழும் குரு'*[9]

எனப் போற்றுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுமானவரது குருதத்துவம் மற்றுமொரு சிறப்பினையும் கொண்டுள்ளது. உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் குருவினிடம் ஒப்படைப்பவனுக்கு மறுபிறப்பு இல்லை என்ற தத்துவத்தை விளக்கும் வகையில்,

*உன்னை, உடலை, உறுபொருளைத் தா எனவே*
*என்னை அடிமைக்கு இருத்தினான் – சொன்ன ஒரு*
*சொல்லை மறவாமல் தோய்ந்தால், நெஞ்சே! உன்னால்*
*இல்லை பிறப்பது எனக்கே.*[10]

என்ற பாடல் மூலம் குருவழிபாடு பிறவாநெறிக்குரிய வழியாகக் கூறப்படுகின்றது.

## மௌன உபதேசச் சிறப்பு

தாயுமானவர் அநேகமான பாடல்களில் தமது குருநாதராக விளங்கிய மௌனகுரு வழங்கிய உபதேசத்தின் சிறப்புப் பற்றி விபரித்துப் போற்றுகின்றார். தனது அகங்கார மமகார உணர்வுகள் நீங்கவும் நான் என்ற நிலை ஒழியவும், குரு உபதேசம் உதவியதாகத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். தனக்குச் 'சும்மா இரு' என்று மௌனத்தில் இருக்கும்படி உபதேசித்து சுகம் தந்த மௌன தேசிகனுக்குக் கைமாறாக நான் என்ற நிலை ஒழிந்து ஜீவபோதத்தை ஒடுக்குவதே நான் உனக்கு வழங்கும் குருதட்சணை எனத் தாயுமானவர் 'உடல் பொய்யுறவு' என்ற பகுதியில் தெளிவுபடக் கூறுகின்றார். இந்து சமய மரபில் குருவுக்கு குருதட்சணை வழங்கி ஆசி பெறுதல் மரபாகும். இதனையே தாயுமானவரது பாடல் உணர்த்துகின்றது.

*குறியும் குணமும் அறக் கூடாத கூட்டத்துள்*
*அறிவு அறிவாய் நின்றுவிட ஆங்கே – பிறிவு அறிவும்*
*சும்மா இருந்திச் சுகம் கொடுத்த மோன! நின்பால்*
*கைமாறு நான் ஒழிதல் காண்*[11]

தாயுமானவர் அருணகிரிநாதனுடைய பாடல்களில் கொண்ட ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் அவரது உபதேசம் தனது தத்துவக் கொள்கைக்கு ஏற்புடைத்தாக அமைவதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யான் தான் எனல் அறவே இன்பநிஷ்டை என்று அருணைக்*

*கோன் தான் உரைத்த மொழி கொள்ளாயோ!* [12]

என்ற பாடல் வரி காட்டுகின்றது. மோன குரு தந்த உபதேசத்தால் கிடைக்கும் பேறுகள் சுற்றியும் தாயுமானவர் குறிப்பிடுமிடத்து,

*தானம் தவம் ஞானம் சாற்றரிய சித்தி முக்தி*

*ஆனவை எல் லாம் தாமே ஆகுமே – மோனகுரு*

*சொன்ன ஒரு சொல்லால் சுகமா இரு மனமே!*

*இன்ன மயக்கம் உனக்கு ஏன்?* [13]

என்ற பாடல் மூலம் தமது ஆத்மஞான அனுபவத்தை வெளிப்படுத்துகின்றார். இதற்கு மேலாக தாயுமானவர் தமது குருவின் உபதேசத்தால் பெற்ற பெரும் பயன் மௌனம் ஆகும் என்பதை தெளிவுபடக் கூறுகின்றார். அந்த மௌனத்தைப் பேணும்போது கிடைப்பது உயர்நிலை ஆத்மிக ஞானம். அதனால் தேன் போன்ற சொற்களும் மௌனம்; செய்யும் கர்மங்கள் யாவும் மௌனமாகின்றன என்பதை,

*ஆனந்த மோன குரு ஆம் எனவே, என் அறிவில்*

*மோனம் தனக்கு இசைய முற்றியதால் – தேன் உந்து*

*சொல் எல்லாம் மோனம். தொழில் ஆதியும் மோனம்;*

*எல்லாம் நல் மோன வடிவே*[14].

'உடல் பொய்யுறவு' என்ற பகுதியில் வரும் பாடல் மூலம் தெளிவு படுத்துகின்றார்.

## தக்ஷணா மூர்த்தி மகத்துவம்

சைவசமய மரபில் சிவனது தக்ஷணாமூர்த்தி வடிவம் குருதத்துவத்தின் நிறைவடிவமாகத் திகழ்வதாகும். 'மோனம் என்பது ஞானவரம்பு' என்ற கோட்பாட்டை விளக்கி நிற்பது இவ்வடிவம். சின்முத்திரை காட்டிபேசாது பேசும் மொழியாக அவ்வடிவம் அமைகின்றது. அது மௌன உபதேசத்தின் மகிமையைக் காட்டுகின்றது. மௌன உபதேசம் பெற்ற தாயுமானவருக்கு தக்ஷணாமூர்த்தி மீது பக்தியும் ஈடுபாடும் ஏற்படுவது இயல்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாய் தாயுமானவர் தக்ஷணாமூர்த்தி பற்றியும் சனகாதி முனிவர்க்கு அவர் உபதேசிக்கும் சிறப்புப் பற்றியும் தமது பாடல்களில் சிறப்பாகப் போற்றுகின்றார்.

*குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்*
*கொழுந்து ஆகி அறுசமயக் கூத்தும் ஆடி*
*நின்றாயே! மாயை எனும் திரையை நீக்கி*
*நின்னை யார் அறிய வல்லார்? நினைப்போர் நெஞ்சம்*
*மன்றுஆக இன்பக் கூத்து ஆடவல்ல*
*மணியே என் கண்ணே மாமருந்தே! நால்வர்க்கு*
*அன்று ஆலின் கீழ் இருந்து மோன ஞானம்*
*அமைத்த சின் முத்திரைக் கடலே அமரர் ஏறே*[15]

என்ற பாடல் குறிப்பிடற்பாலது 'பன்மாலை' என்ற பிரிவில் அடங்கும் இப்பாடல் மூலம் தக்ஷணாமூர்த்தியின் பரத்துவத்தையும் சைவ சித்தாந்தம் போற்றும் சின்முத்திரையின் சிறப்பையும் கூறுகின்றார். பிறிதொரு பாடலிலே தக்ஷணாமூர்த்தியை 'சித்தாந்த முக்தி முதலே' எனச் சிறப்பிக்கின்றார். 'கல் ஆலின்' என்ற பிரிவில் வருமொரு பாடலில் இக்கருத்து இடம் பெறுகின்றது.[16]

## நடராஜர் மகிமையும் சிதம்பர ரகசியமும்

தாயுமானவரின் உள்ளன்பிற்கு உரியவராக விளங்கும் நடராஜரின் மகிமையை சமய தத்துவ உணர்வோடு அவர் நன்கு விளக்குகின்றார்.

*கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு*
*கருணாகரக் கடவுளே!*

என விண்ணப்பித்து பரம் பொருள் தத்துவத்தை நன்கு உணர்த்துகின்றார். தனது உயர் கதிக்கு கருணாகரக் கடவுளின் துணை வேண்டிநிற்பது இப்பாடல் வழி தெளிவாகிறது. சமய தத்துவ அறிவு விடயத்தில் தொன்மையான நூல்கள் தரும் விடயங்களுக்கு தாயுமானவர் குறிப்பிட்டு இறைவனிடத்தில் யாவுமே சரணாகதி எனக் குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எல்லாம் உன் அடிமையே; எல்லாம் என் உடைமையே;*
*எல்லாம் உன்னுடைய செயலே*
*எங்கணும் வியாபிநீ என்று சொலும் இயல்பு என்று*
*இருக்கு ஆதி வேதம் எல்லாம்*
*சொல்லால் முழக்கியது; மிக்க உபகாரமாச்*
*சொல் இறந் தவரும் விண்டு*
*சொன்னவையும் இவை, நல்ல குருவான பேரும்*
*தொகுத்த நெறி தானும் இவையே*
*அல்லாமல் இல்லை என நன்றா அறிந்தேன்*
*அறிந்தபடி நின்று சுகம் நான்*
*ஆகாத வண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்*[17]

உயிர்களெல்லாம் இறைவனுக்கு அடிமை என்பதிலும் அவனுடைய உடைமை என்பதிலும் உயிர்களின் செயல்கள் எல்லாம் இறைவனது செயல் என்பதையும் தமது இறைக்கோட்பாட்டில் தாயுமானவர் ஏற்றுக் கொள்ளுகின்றார். தூய மனமுடையவர்கள் வாய்விட்டு ஒன்றும் பேசாது விட்டாலும் அவர்களது தெளிந்த நிலை மற்றவர்களது உள்ளத்தில் அமைதியையும் நல்லறிவையும் ஊட்டுகின்றது. அதுவே நிறைஞானியரிடமிருந்து உலகத்தார் பெறுகின்ற ஒப்பற்ற பேறாகும். ஞானியர்களுக்கிடையில் பேச்சைக் கையாண்டவர்களும் நூல் இயற்றும் மரபைக் கையாண்டவர்களும் பலர் இருந்திருக்கின்றனர். அவர்கள் பேசிய பேச்சுக்களெல்லாம் பரம்பெருமைகளை விளக்குதற் பொருட்டேயாம். அவர்கள் இயற்றிய நூல்களெல்லாம் பரம்பொருளைச் சுவாநுபூதியில் அறிந்து கொள்வதற்குப் பயன்பட்டன. இக்கருத்துக்களை 'நல்ல குருவான பேரும் தொகுத்த நெறி தானும் இவையே' எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். தாயுமானவரது இவ்விளக்கம் அவரது வாழ்வுக்கும் அவர் இயற்றிய பாடல்களுக்கும் நன்கு பொருந்தும். ஆத்மீக விடயங்களில் நீண்டகாலமாக இருந்து வரும் மரபுக்கு அவர் அளிக்கும் மதிப்பு இதன் வழி தெரிகின்றது. தாயுமானவர் தமது பாடற் தொகுதியில் ஆகாசபுவனம் சிதம்பர ரகசியம் என்ற பிரிவில் அடங்கும் 33 பாடல்களில் சிதம்பரத்தின் பெருமைகளை எடுத்துரைக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுமானவர் சிதம்பரத்தோடு நெருங்கிய தொடர்பு பூண்டவர். தாயுமானவரின் குருநாதர் அவருக்கு வழங்கிய நல்லுபதேசத்தில்

'சிதம்பரம் செல்க; அங்கு நிறைவான தெய்விக உண்மையின் வடிவமாகிய நடராஜப் பெருமானைக் குறித்து தியானிக்குக – தெய்விகப் பாடல்கள் மூலம் அப்பெருமானை, வழிபடுக. அவர் உன்னை சிவோகம் என்ற நிலைக்கு வழிநடத்துவார் எனக் கூறியது தாயுமானவருக்குச் சிறந்ததொரு வழிகாட்டலாக அமைந்தது. சிதம்பரம் என்றவுடனேயே ஒருவரது உள்ளத்தில் ஆனந்தம் மேலிடுகின்றது. சிதம்பர தரிசனத்தில் தாயுமானவர் உன்னதமான ஆத்மசக்திமிக்க உணர்வுபூர்வமான பாடல்களைப் பாடினார். நடராசரது பூரணமான நிலையில் தானும் பூரணத்துவம் பெற்ற ஓர் அனுபவம் அவருக்கு ஏற்பட்டமை பற்றி அவரது பாடல்கள் உணர்த்துகின்றன. நடராசர் அனைத்து சமய வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர். எப்பொழுது ஒருவன் அனைத்தும் மௌனநிலைக்கு வருகின்றதோ அப்பொழுதே நடராசர் பற்றிய ஆத்மஞானம் அவருக்கு சித்திக்கும். நடராஜ தரிசனத்தின் பேறாக ஒருவனுக்கு எத்தகைய சமய வேறுபாடுகளும் ஏற்படுவதில்லை என்ற உலகியல் கடந்த ஞானநிலை அவருக்கு ஏற்பட்டது.

சைவத்தின் மேன்மையை தாயுமானவர் போற்றும் வகை தனித்துவமானது. நடராஜ தரிசனத்தோடு தொடர்புபடுத்துகின்றார். சப்தரிஷிகள். எண்ணரிய சித்தர்கள் மனு முதலிய அரசர்கள் வேதகால முனிவர்கள் அனைவரும் இந்த புனித இடம் மதிக்கத் தக்கதானதாக உள்ளது எனப்போற்றுகின்றார். தமது உறுதியான அறிவால் இச்சமயத்தில் அன்றோ சொல்வதற்கரியதான சித்தி முத்தி சேர்ந்தனர் எனக் குறிப்பிடுகின்றார்.

இயல்பு திரிபு படாதது வைதிகசைவம். எனவே அது "ராஜாங்கத்தில் அமர்ந்தது அழகு இது அந்தோ"[18] எனப் பாடிப் பரவுகின்றார். அத்துடன் செப்பறிய சமய நெறி எல்லாம் தத்தம் தெய்வமே தெய்வம் என்றும் யாது சமயமும் வணங்கும் இயல்புடையது வைதிக சைவம் என்னும் சிறப்பிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பகர்வு அரிய தில்லைமன்றுள் பார்த்தபோது அங்கு*
*எச் சமயத்தவர்களும் வந்து இறைஞ்சா நிற்பர்"*[19]

என சிதம்பர ரகசியத்தைப் போற்றுகின்றார்.

சைவத்தின் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து,

*சைவ சமயமே சமயம்*
*சமயாதீதப் பழம் பொருளைக்*
*கைவந்திடவே மன்னுள் வெளி*
*காட்டும் இந்தக் கருத்தை விட்டு*
*பொய் வந்து உழலும் சமயநெறி*
*புகுத வேண்டா முத்திதரும்*
*தெய்வச் சபையைக் காண்பதற்குச்*
*சேரவாரும் ஜகத்தீரே*[20]

என்ற இப்பாடல் மூலம் சைவசமயத்தின் மேன்மையையும் சித் அம்பரமாகிய மன்றத்தில் ஆடும் தில்லை நடராஜப் பெருமானின் மகத்துவத்தையும் அனைத்துச் சமயங்களுக்கும் அப்பால் சிறந்து விளங்கும் பழம் பொருளெனப் போற்றும் சிறப்பையும் எடுத்துக் கூறும் தாயுமானவர் அச் சமய நெறியைச் சார உலகில் உள்ளவர்களை ஒன்று சேரும் வண்ணம் அழைக்கின்றார்.

தாயுமானவரது பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன. சைவசித்தாந்தத்தில் சிறப்புப் பெறும் முப்பொருள்களில் பதிபற்றிய விளக்கம் பல பாடல்களில் இடம் பெறுகின்றது. திருவருள் விலாசம், பரசிவவணக்கம், சின்மயானந்த குரு, பரிபூரணானந்தம், எங்கும் நிறைந்த பொருள், சச்சிதானந்த சிவம், தேஜோமயானந்தம், பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி, போன்றவற்றில் குறிப்பாக இடம்பெறுகின்றது. தத்துவமரபில் வினாக்களை எழுப்பி விளக்கந் தேடும் முயற்சி தாயுமானவர் பாடல்களில் நாம் காணும் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். பரசிவ வணக்கத்தில் இடம் பெறும் முதற் பாடலே அவர் கையாளும் தத்துவ முறைமைக்கு எடுத்துக் காட்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி
அருளொடு நிறைந்தது எது? தன் அருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கு இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமய கோடிகள் எலாம்
தம் தெய்வம் எம் தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒருசித்து ஆகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்
கங்குல் பகல் அறநின்ற எல்லை உள்ளது எது? அது
கருத்திற் இசைந்தது அதுவே
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
கருதி அஞ்சலி செய்குவாம்.[21]

என்ற இப்பாடலில் இறைவனது பேராற்றல் தெளிவாகக் கூறப்படுகின்றது. இதனை யொத்ததாக "எங்கும் நிறைந்த பொருள்" என்ற பிரிவில் அடங்கும் மற்றொரு பாடலும் குறிப்பிடற்பாலது.

அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது எனும் பெரிய
ஆப்தமொழி ஒன்று கண்டாய்
அறிவு ஆவது எது? சில அறியாமை ஏது? இவை
அறிந்தார்கள் அறியார்கள் ஆர்?
மௌனமொரு இருந்தது ஆர்? என் போல் உடம்பு எலாம்
வாயாய்ப் பிதற்றுபவர் ஆர்?
மனது எனவும் ஒரு மாயை? எங்கே இருந்து வரும்?
வன்மையொடு இரக்கம் எங்கே?
புவனம் படைப்பது ஏன்? கர்த்தவ்யம் எவ்விடம்?
பூதபேதங்கள் எவ்விடம்?
பொய் மெய் ஹிதம் அஹிதமே வரு நன்மை தீமையொடு
.........................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எவர் சிறியர் எவர் பெரியர் எவர் உறவர் எவர் பகைஞர்*
*யாதும் உன்னை அன்றி உண்டோ?*
*இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர் ஆகி*
*எங்கும் நிறை நின்ற பொருளே*[22]

என்ற பாடல் மூலமாகவும் தாயுமானவர் இறைவனது இயல்பையும் பேராற்றலையும் போற்றுகின்றார். இத்தகைய வினாக்கள் எழுப்பி விடைகாண முயலும் தத்துவ மரபு இருக்கு வேதப் பாடல்களிலேயே தொடங்கிவிட்டமை குறிப்பிடற்பாலது.

மேலும் இறைவன் இயல்பை 'பொருள் வணக்கம்' என்ற பிரிவில் தாயுமானவர் விளக்கிக் கூறுகின்றார்.

*அருமறையின் சிரப் பொருளால் விண்ணவர் மா*
*முனிவர் சித்தர் ஆகி ஆனோர்*
*தெரிவரிய பூரணமாய்க் காரணம் கற்*
*பனை கடந்த செல்வம் ஆகிக்*
*கருதரிய மலரின் மணம் எள்ளில் எண்ணெய்*
*உடல் உயிர் போல் கலந்து எந்நாளும்*
*துரிய நடு ஊடு இருந்த பெரிய பொருள்*
*யாது? அதனைத் தொழுதல் செய்வாம்*[23]

தாயுமானவர் இப்பாடல் மூலம் பரம்பொருள் தத்துவத்தினைத் தெளிவுபடக் கூறுகின்றார்.

"ஆனந்தமான பரம்' என்ற பிரிவில் சைவ சித்தாந்தம் பேசும் ஆணவம் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

*கார் ஆகும் ஆணவக் காட்டைக் களைந்து அறக்*
*கண்டு அகங்காரம் என்னும்*
*கல்லைப் பிளந்து நெஞ்சுகமான பூமிவெளி*
*காணத் திருத்தி மேன்மேலும்*[24]

............. ஆகிய வரிகள் ஆணவம் பற்றியன. 'சச்சிதானந்த சிவம்' என்ற பிரிவில் கர்ம பந்தத்தினால் வரும் ஜன்ம பந்தம் பற்றிக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காயாத மரமீது கல்லேறு செல்லுமோ*
*கடவுள் நீ யாங்கள் அடியேம்*
*கர்ம பந்தத்தினால் ஜன்ம பந்தம் பெறக்*
*கற்பித்தது உன்னது அருளே*[25]

ஆகிய வரிகள் குறிப்பிடற்பாலன.

சைவ சித்தாந்த மரபில் திருவடிப் பெருமை போற்றப்படுவதற்கமைய, தாயுமானவர், 'பொன்னை மாதரை' என்ற பிரிவில் இறைவனது திருவடியே தனக்குத் துணை என்பதைக் குறிப்பிடுகின்றார்.

*இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறு என்னைத்*
*திரும்பிப் பார்க்க ஒட்டாமல் திருவடிக்*
*கரும்பைத் தந்து கண்ணீர் கம்பலை எலாம்*
*அரும்பச் செய் எனது அன்னை ஒப்பாமனே*[26]

என்ற வேண்டுகோள் மூலம் இறைவன் திருவடியைப் போற்றுகின்றார்.

தாயுமானவர் இல்லறத்தினூடாகத் துறவறம் மேற்கொண்டவர். எனவே அவரது வாழ்வியலில் தாம்பெற்ற அருள் அனுபவத்தை ஆசை எனும் பிரிவில் கூறுகின்றார். இல்லறம் துறவறம் இரண்டுமே அருள் செயலில் நிற்கும் போது மேன்மையே என்பது அவரது கோட்பாடு.

*சாட்டை இல் பம்பர ஜாலம் போல் எலாம்*
*ஆட்டுவன் இறை என அறிந்து நெஞ்சமே*
*தேட்டம் ஒன்று அற அருள் செயலில் நிற்றியேல்*
*வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே* [27]

என்ற குறிப்பின் மூலம் அவரது மனதின் சமநிலையை நாம் உணரலாம்.

இறைவன் அருள்நெறி சொல்லாலும் பொருளாலும் அளவையாலும் பற்றி முடியாதது என்பதை 'ஆசை எனும்' பிரிவில் தெளிவு படுத்துகின்றார்.

*சொல்லாலும் பொருளாலும் அளவையாலும்*
*தொடர ஒண்ணா அருள் நெறியைத் தொடர்ந்து நாடி*
*நல்லார்கள் அவையகத்தே இருக்க வைத்தாய்* [28]

எனக் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்தம் போற்றும் ஐந்தெழுத்தின் மகத்துவம் பற்றியும் தாயுமானவர் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

*ஓங்காரம் ஆம் ஐந்து எழுத்தால்*
*புவனத்தை உண்டு பண்ணிப்*
*பாங்காய் நடத்தும் பொருளே*
*அகண்ட பர சிவமே* [29]

எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் தத்துவமரபில் இடம் பெறும் கன்மம் பற்றியும் மூவினைகள் பற்றியும் தாயுமானவர் தமது பாடல்களில் விரிவாகக் கூறுகின்றார்.

தாயுமானவர் மௌன நெறியூடாகக் முக்தி பெற தம் வாழ் நாளை அர்ப்பணித்தவர் எனவே அத்தகையோர் சிறப்புப் பற்றியும் அவர்கள் நின்ற முக்திநெறி பற்றியும் "உடல்பொய்யுறவு" என்ற பிரிவில் குறிப்பிடுகின்றார்.

*மனத்தாலும் வாக்காலும் மன்ன ஒண்ணா மோக*
*இனத்தாரே நல்ல இனத்தார் – கனத்த புகழ்*
*கொண்டவரும் அன்னவரே கூறரியமுக்தி நெறி*
*கண்டவரும் அன்னவரே காண்* [30]

ஆகிய வரிகள் குறிப்பிடற்பாலன.

சைவசித்தாந்த தத்துவமரபில் போற்றப்படும் குருலிங்க சங்கமம் ஆகிய மூன்றில் குருவைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் போற்றிப் பாடிய தாயுமானவர், சங்கமம் ஆகிய அடியார் பெருமையையும் பாடிப்பரவத் தவறவில்லை.

## அடியார் பெருமை

"எந்நாள் கண்ணி" என்ற பிரிவில் அடங்கும் "அடியார் வணக்கம்" என்ற பகுதியில், முதற்கண் திருஞானசம்பந்தரின் அருள்நாடி நிற்கின்றார். வெவ்விய பிறவித் தளையை ஒழித்து 'உலகை ஆளும் வேந்தன்' எனப் புகழாரம் சூட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெம்பந்தம் தீர்த்து உலகு ஆள் வேந்தன் திருஞான*
*சம்பந்தனை அருளால் சாரும் நாள் எந்நாளோ* [31]

என்றும் அப்பரை மேன்மையுற்ற சிவபோகத்தைப் பெற்ற 'உழவாரம் கொள் செங்கையர் என்றும் தமிழில் வல்லவராகிய சுந்தரரைத் தமிழ்ச் சமர்த்தர்' என்றும் வாதவூரரை 'புத்தர் தமை வாதில் வென்ற வாதவூர் ஐயன்' என்றும் பட்டினத்தாரை, 'ஒட்டுடன் பற்று இன்றி உலகைத் துறந்த செல்வர்' என்றும் சிவவாக்கியரை 'அகண்டாகார சிவம் மெய் எனவே விண்ட சிவவாக்கியர்' என்றும் திருமூலரை 'சக்கரவர்த்தி தவராஜ யோகி என மிக்க திருமூலர்' என்றும் அருணகிரியை கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தை' என்றும் சித்தர்களை 'எண்ணரிய சித்தர்கள்' என்றும் சிறப்பாகக் குறிப்பிட்டு, அவர் தம் அருளை நாடி நிற்பதாக தாயுமானவர் குறிப்பிடுவதிலிருந்து அவர் போற்றும் அடியார் பெருமை தெளிவாகின்றது.

## வேதாந்த சித்தாந்த சமய சமரசம்

தாயுமானவர் வாழ்வில் அவர் போற்றிய சமய சமரசநிலை முக்கியத்துவமுடையது. தாயுமானவர் சமய நிலை நின்று பல்வேறு நிலைகளில் தமது சமயப் பற்றையும் ஆத்ம போதத்தையும் பாடல்கள்வழி வெளிப்படுத்திய போதும் அவர் சித்தராக மற்றும் ஞானியாக நின்று யாவும் கடந்த நிலையில் வேதாந்த சித்தாந்த சமரசம் பற்றியும் கூறுகின்றார். 'பரிபூரணானந்தம்' பகுதியில்,

*சந்தமும் எனது செயல் நினது செயல் யான் எனும்*
*தன்மை நினை அன்றி இல்லாத*
*தன்மையில் வேறு அலேன் வேதாந்த சித்தாந்த*
*சமரச சுபாவம் இதுவே*
*இந்நிலை தெளிய நான் நெக்கு உருகி வாடிய*
*இயற்கை திரு உளம் அறியுமே*[32]

எனக் குறிப்பிடுவது அவரது வேதாந்த சித்தாந்த சமரச உணர்வை வெளிப்படுத்துகின்றது. அவரது சமய சமரச கொள்கையை அவர் தக்ஷிணாமூர்த்தி குறித்துப் பாடிய ஒரு பாடல் மூலம் அறியலாம். 'சின்மயானந்தம்' என்ற பிரிவில், "சித்தாந்த முக்தி முதலே "என தக்ஷிணா மூர்த்தியை விளித்துக் கூறுமிடத்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சைவ முதல் ஆம் அளவில் சமயமும் வகுத்து மேல்*
*சமயம் கடந்த மோன*
*சமரசம் வகுத்த நீ*[33]
எனக் குறிப்பிடுகின்றார்.

## சித்தர் கணம்

தாயுமானவர் சித்தர் கணத்தின் மீது அளவற்ற நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர். சித்தர் கணம் பற்றிக் கூறுமிடத்து,

*வேதாந்த சித்தாந்த சமரசம் நன்னிலை பெற்ற*
*வித்தகச் சித்தர் கணமே*
எனப் போற்றுகின்றார்.

தாயுமானவர் தானும் முக்தி சித்தி எலாம் தோய்ந்த நிலையில் பாடிய பாடல்கள் 'சித்தர் கணம்' என்ற பிரிவில் சிறப்பிடம் பெறுகின்றன.

## மூர்த்தி தல தீர்த்தம்

தாயுமானவர் தமது வாழ்வில் எவற்றை நன்குணர்ந்து கூறினாரோ அதற்கேற்ப வாழ்ந்து காட்டிய சாதனையாளராகவும் திகழ்ந்தவர். மூர்த்தி, தல, தீர்த்த சிறப்பு, இறை வழிபாடு, பூஜையின் சிறப்பு, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதச் சிறப்பு, இறை தொண்டர்களுக்குப் பணி செய்யும் சிறப்பு, சிவஞானம் கைவரப்பெற்றவர் ஆற்றும் நற்கருமங்கள் ஆகியவை பற்றித் தெளிவாகக் கூறுகின்றார். பஞ்ச சுத்தியாகிய பூதசுத்தி, உடற்சுத்தி, திரவிய சுத்தி, ஆத்மசுத்தி, மந்திரசுத்தி ஆகியவை பற்றியும் கூறுகின்றார். இவற்றின் தூய்மை ஐம்பொறிகளைத் தூய்மைப்படுத்தும் பராபரக் கண்ணியில் அவர் கூறும் கருத்துக்கள் கருத்தாழமிக்கவை –

*அன்பர் பணி செய்ய எனை ஆள் ஆக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானே வந்து எய்துமே பராபரமே*
*மூர்த்தி தல தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கு ஓர்*
*வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே*
*விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்புமலர் காய் கனி போல் அன்றோ பராபரமே*[34]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய கண்ணிகள் தாயுமானவர் பாடல்களில் இடம்பெறும் வகையில் சைவஞ்சார்ந்த வழிபாட்டு முறைகளையும் மூர்த்தி தல தீர்த்தச் சிறப்புக்களையும் கூறுகின்றன. இவை சாதகனைச் சிறப்பாக ஆற்றுப்படுத்த வல்லன. முக்தி நலத்தை நாடும் எவரும் எளிதில் கைக் கொள்ளக் கூடிய சாதனங்கள் என்ற வகையில் தாயுமானவர் இவற்றைத் தமது பாடல்களில் முக்கியத்துவம் அளித்துள்ளார். 'தேன் முகம்' என்ற பிரிவில் தனக்கு சித்தி முத்தி கிடைக்க இறையருளை வேண்டுவதும் வேறுபல பாடல்களில் ஆத்ம விமோசனம் பெற வேண்டுவதும் அவரது ஆத்மீக தாகத்தை வெளிப்படுத்துவன.[35]

## தல யாத்திரை

தாயுமானவர் தனது பாடல்களில் கூறியது போன்று செயலில் காட்டிய ஞானியாவார். மூர்த்திதல தீர்த்த சிறப்புமிக்க தலயாத்திரை மேற்கொண்டவர். சான்றோர் சாதாரணமாகக் கையாளுகின்ற முறைப்படி தாயுமான சுவாமிகளும் தமிழ்நாட்டிலுள்ள சிவ புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். சிதம்பரம், காஞ்சிபுரம், திருவாற்றியூர், திருவாரூர், மதுரை போன்ற இடங்களைத் தரிசித்து தமது ஆத்மீக வாழ்வின் நிறைவில் இராமேஸ்வரம் சென்றடைந்தமை குறிப்பிடற்பாலது. இங்கு எழுந்தருளியிருக்கும் அன்னைக்கு பர்வதவர்த்தனி என்பது பெயர். மலை வளர் காதலிப் பெண் ஊமையே' என விளித்து இவர் பாடியுள்ள பாடல்கள் ஆத்ம சாதகர்களுக்கு அருள் விருந்தாகும். அவர் சமாதி அடைந்ததன் பின்னர் இராமநாதபுரத்திற்கு வெளியே அமைந்துள்ள லக்ஷ்மி புரத்தில் சமாதி வைத்துக் கோயில் எழுப்பப் பெற்றுள்ளமை அவரது ஆத்ம சாதனையின் பெறுபேறாகும்.

*"எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பது வே*
*அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே"*

என்ற பாடல் வழி அவர் தமது பரந்த உலகியல் கடந்த ஆத்ம ஞான அநுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## தாயுமானவரின் ஆத்மீக தரிசனச் சிறப்பு

தாயுமானவர் பாடல்கள் ஆத்ம சாதகர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகும். அவர் தம் புகழுக்காகப் பாடினாரில்லை. ஆத்மீக மறுமலர்ச்சிக்காகவே பாடியவர். அவற்றை மிகவும் மௌன நிலையில் எழுதியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனஞானியாகவே வாழ்ந்தவர். தம்மை தெய்விக அமைதியில் பண்படுத்திக் கொண்டவர். அவரது மானிடப் பிறவியின் நோக்கம் சீராக நிறைவேறியதை அவரது பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆத்மீக விழிப்புணர்வு பெறுவதற்காக அவர் இறைவனை நோக்கிப் பாடியுள்ளார். புலன்களிலிருந்து விடுபட்டு தியானத்தில் இருப்பவர்க்கு ஆத்மீக பலமும் ஞானமும் கைகூடும் என்பது அவரது அனுபவ வார்த்தைகள் மனித குலம் ஆத்மீக வாழ்வில் மேன்மைபெற அவரது பாடல்கள் என்றும் உதவக் கூடியன. சமயம், தத்துவம், ஆத்மிக ஞானம், ஆத்மீக மறுமலர்ச்சி போன்ற சிறப்பம்சங்களை அவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இவை யாவைக்கும் மேலாக சமய சமரசம் வேதாந்த சித்தாந்த சமரசம் கண்டவர். யோகி என்ற நிலையிலும் அவரது பாடல்கள் யோகம், ஞானம் ஆகிய துறைகளில் விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளன. சாதாரண மனிதர்களும் ஆன்மநலம் பெறத் தக்கதாக அவரது பாவடிவங்கள் அமைந்துள்ளன. பல பாடல்கள் மிக எளிய நடையில் அமைக்கப்பட்டுள்ளன. அவரது ஆக்கங்கள் காட்டி நிற்கும் ஆத்மீக தத்துவம் அவரது உலகளாவிய சமயக் கொள்கைக்குச் சான்றாக உள்ளன.

தாயுமானவர் சுவாமிகளின் மாணாக்கரில் ஒருவராகிய அருளையா என்பவர் தமது குருவைத் துதித்து ஏறக்குறைய 230 பாடல்களில் அவர்தம் ஆத்ம சாதனைகளை தெளிவாகக் கூறியுள்ளார். அருள்வாக்கிய அகவல் என்பது அவர் பாடிய பாடல்கள் ஆகும். தாயுமானவர் பற்றிய சிறந்ததொரு மதிப்பீடாகக் அவரது அகவலைக் கொள்ளலாம்.

தாயுமானவர் பற்றி டாக்டர் பி. நடராஜன் அவர்கள் சிறந்ததொரு மதிப்பீடு செய்துள்ளார். தாயுமானவரது ஆத்மீகஞ் சார்ந்த பாடல்கள் பற்றிய அவரது மதிப்பீடு இங்கு குறிப்பிடற்பாலது :

*"ஒவ்வொரு வரியும் ஒரு செய்தி; ஒவ்வொரு செய்தியும்*
*உண்மையின் தரிசனம்; ஒவ்வொரு உண்மையும்*
*உள்ளொளியின் ஒளிச் சிதறல்; ஒவ்வொரு உள்ளுணர்வும்*
*மாற்றியமைக்கு சக்தி"*

ஆகிய வரிகள் தாயுமானவரது ஆத்மீக தரிசனத்தில் மேன்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்பு

01. **ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்,** ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பாய்த்துறை, திருச்சி, 2008 – பக் – 1 – 14
02. சுப்பிரமண்யம், டாக்டர், கே. ஆங்கில மூலம், தமிழாக்கம், க.சு. சந்திரமோகன், **விவேகானந்தம்,** ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருபாய்த்துறை, திருச்சி, 1996, பக் V
03. மேற்படி, பக் – VI
04. ஸ்ரீ தாயுமான சுவாமி பாடல்கள், மு. கு. நூ., பாடல் 7.4
05. மேற்படி. 30.3
06. திருமந்திரம், I. 139
07. ஸ்ரீ தாயுமான சுவாமி பாடல்கள், மு. கு. நூ., பாடல் 5;1
08. மேற்படி, 44.23
09. மேற்படி, 28.82
10. மேற்படி, 28.71
11. மேற்படி, 28.80
12. மேற்படி, 28.65
13. மேற்படி, 28.70
14. மேற்படி, 28.73
15. மேற்படி, 16.8
16. மேற்படி, 4.1
17. மேற்படி, 6.3
18. மேற்படி, 14.10
19. மேற்படி, 14.12
20. மேற்படி, 30.2
21. மேற்படி, 1.1
22. மேற்படி, 10.1
23. மேற்படி, 3.8
24. மேற்படி, 8.6
25. மேற்படி, 11.8
26. மேற்படி, 18.24
27. மேற்படி, 24.3
28. மேற்படி, 24.24
29. மேற்படி, 27.9
30. மேற்படி, 28.20
31. மேற்படி, 45.3,1–9 வரை
32. மேற்படி, 2.5
33. மேற்படி, 4.4
34. மேற்படி, 43; 154–158
35. மேற்படி, 15.10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழியும் இலக்கியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர - நாயக்க மன்னர் காலத்து இலக்கண நூல்களின் போக்குகள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## முன்னுரை

கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கும் 18ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழில் எழுந்த இலக்கண நூல்களெனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம் : பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், மாறனலங்காரம், மாறன் அகப்பொருள், பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம். இந்நூல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் | சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் தோன்றிற்று என்ற நிலையில் தோன்றியவை | அலங்காரம் கூறுவன | பாட்டியல் கூறுவன | அகப்பொருள் கூறுவன | செய்யுள் இலக்கணம் |
|---|---|---|---|---|---|
| தொன்னூல் விளக்கம்<br><br>இலக்கண விளக்கம் | பிரயோக விவேகம்<br><br>இலக்கணக் கொத்து | மாறன் அலங்காரம் | பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல் வரையறுத்த பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் | மாறன் அகப்பொருள் | பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட் கோவை |

இவ்விலக்கண நூல்களின் போக்குகள் எவ்வாறு அமைந்தன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. தொல்காப்பிய மாதிரிகள்

ஐந்திலக்கணம் கூறும் மரபு தமிழிலக்கணத்தின் தனித்துவமான பண்பாகும். எமக்குக் கிடைக்கும் தமிழ் மொழியின் தொடக்க இலக்கண நூலாகிய தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து விடயங்கள் பற்றி இலக்கணம் கூறுகின்றது. இதனால்தான் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்'' என்று கூறினார்களோ என்பது சிந்திக்கற்பாலது. திரம் என்ற சொல்லுக்குத் திறன் என்னும் பொருளும் உண்டு. தொன்னூல் விளக்கமும் இலக்கண விளக்கமும் ஐந்திலக்கணம் கூறி, தொல்காப்பிய மரபினையே பின்பற்றிச் செல்லும் நெறியுடையனவாக அமைகின்றன.

பண்டைய ஐரோப்பிய கால இலக்கணங்கள் இலத்தீன் இலக்கண மாதிரிகளாகவே அமைந்தன. உலக மரபுவழி இலக்கண மரபிலே இத்தகைய போக்குக் காணப்படுகின்றது. ஆங்கில மொழிக்கு இலக்கணம் எழுத முயன்றபோது இலத்தீன் இலக்கணமே மாதிரியாகக் கொள்ளப்பட்டது. ஆங்கிலமொழியில் சொற்பாகுபாடு, வேற்றுமை அமைப்பு, சொல்லாக்கம் முதலியன பற்றி இலக்கணம் வகுக்கும்போது பிறசியின் (Priscian), வரோ குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Varro) போன்ற இலத்தீன் இலக்கண நூலார் இயற்றிய இலக்கண நூல்கள் மாதிரியாகக் கொள்ளப்பட்டன.

தொல்காப்பியம் எழுத்து, சொல், சொற்கள் தொடர்ந்து அமையும் தொடரியங்களால் அமையும் இலக்கியங்களின் பொருள், அவ்விலக்கியங் களின் வடிவமாகிய செய்யுள், செய்யுளுக்குரிய அணி ஆகிய ஐந்து பிரிவுகளின் இலக்கணங்களை விரிவாகக் கூறுகின்றது. விஜயநகர – நாயக்க மன்னர் கால இலக்கண நூல்களாகிய இலக்கண விளக்கமும் தொன்னூல் விளக்கமும் தொல்காப்பிய ஐந்திலக்கண மாதிரிகளாக அமைகின்றன. இலக்கண விளக்கத்தைக் குட்டித் தொல்காப்பியம் என்று கூறுவார். இந்நூலாசிரியரான திருவாரூர் வைத்தியநாத தேசிகர் (17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்) தன்னுடைய நூலுக்குத் தானே உரை எழுதியுள்ளார். நன்னூலாருடைய "பழையான கழிதலும்..." என்னும் சூத்திரத்தினை,

*பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்*
*வழுவல கால வகையி னான*

என்று மாற்றிக் கூறியுள்ளார். ஓரிலக்கணம், ஈரிலக்கணம் என்றெல்லாம் நூல்கள் எழத்தொடங்கின. இவ்வேளை, தொல்காப்பியத்தின் பின்னர் ஐந்திலக்கணம் கூறமுற்பட்ட வீரசோழியம் திசைமாறிச் சென்றபோது, ஐந்திலக்கணம் மொழிக்கேற்றபடி படைக்கப்பட வேண்டும் என எண்ணி இலக்கண விளக்கத்தை வைத்தியநாத தேசிகர் படைத்தார். இந்நூல் பின்வரும் அமைப்பினைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| எழுத்ததிகாரம் | : | எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் (158 நூற்பாக்கள், 22 தொல்காப்பியச் சூத்திரங்களும் 70 நன்னூற் சூத்திரங்களும் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. 27 புதிய சூத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.) |
| சொல்லதிகாரம் | : | பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், பொதுவியல் (214 நூற்பாக்கள். பாதிக்குமேல் தொல்காப்பிய நன்னூற் சூத்திரங்கள்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளதிகாரம் : அகத்திணையியல், புறத்திணையியல், அணியியல், செய்யுளியல், பாட்டியல் (596 நூற்பாக்கள்)

மொத்தமாக 941 நூற்பாக்களைக் கொண்டதாக இலக்கண விளக்கம் அமைகின்றது. இந்நூலில் சார்பெழுத்துக்கள் ஒன்பது என்று கூறப்பட்டுள்ளது. **தொல்காப்பியம்** சார்பெழுத்து மூன்று என்று கூற, நன்னூலார் அது பத்து வகைப்படும் என்றார். இலக்கண விளக்கத்தாரோ ஆய்தக் குறுக்கம் நீங்கலாக சார்பெழுத்து ஒன்பது என்றார்.

**தொன்னூல் விளக்கம்** வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. தமிழ் மரபினைப் பின்பற்றி ஐந்திலக்கணம் கூறுவதாக இந்நூலை அவர் அமைத்துள்ளார்.

## 2. தமிழ் மொழிக்கு மூலம் சமஸ்கிருதம்

தமிழ் மொழி சமஸ்கிருத மொழியிலிருந்துதான் தோன்றியது என்னும் கருத்தினை வடமொழி அறிஞர் சிலர் முன்வைத்து அதனைப் பலரும் நம்ப வைக்க முயன்றனர். இப்பிழையான கருத்துடைய ஓர் இலக்கணச் செல்நெறி விஜயநகர – நாயக்க மன்னர் காலத்தில் நிலவியது. அதனைப் பிரதிபலிப்பனவாக பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்தும் எழுதப்பெற்றன. இச்செல்நெறி திடீரென இக்காலத்திலே ஏற்பட்டதல்ல. இதற்குத் தொடக்கவிழா நடத்தியவர் தொல்காப்பிய உரைகாரராகிய சேனாவரையர் ஆவர். அவர் தன்னுடைய சொல்லதிகார உரையில் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்னும் கருத்தினை முன்வைத்துள்ளார். **வீரசோழியம்** எழுதிய புத்தமித்திரனாரும் அதற்கு உரை எழுதிய பெருந்தேவனாரும் அக்கருத்தினை முன்னெடுத்துச் சென்றனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்குதியில் வாழ்ந்த ஆழ்வார் திருநகரி சுப்பிரமணிய தீட்சிதரும், சுவாமிநாத தேசிகரும் முறையே தம்முடைய **பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து** என்னும் நூல்களால் அக்கருத்தினை நிலைநாட்ட முயற்சிசெய்தனர். **தமிழ் இலக்கண நூல்கள்** பதிப்பாசிரியர் ச.வே. சுப்பிரமணியம்.

வடமொழிச் சொல்லிலக்கணத்தோடு தமிழின் சொல்லிலக்கணத்தை ஒப்பிட்டு வடமொழி எழுத்துக்கள் ஐம்பத்தொன்றாகலின், அவ்வெண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு 51 பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையும் வடமொழி இலக்கண மரபுச் சொற்களை அமைத்து, உரைநூற் பாக்களும் எடுத்துக் காட்சிகளும் தந்து, உரையும் எழுதி இயற்றமிழ் நூலுக்கு, மற்றொரு இலக்கண நூலைத் தந்துள்ளார்.

வடமொழியும் தமிழும் தனித்தனி மொழிகள் அல்ல. ஒரு மொழி என்னும் மயக்கவுணர்வுடன், வடமொழியே தமிழ்மொழி மூலம் என்னும் மாறுபட்ட உணர்வும் கொண்டவர்கள் வாழ்ந்த காலத்தில் தோன்றிய நூல்களுள் இப்பிரயோக விவேகம் ஒன்று, இதன் முற்பகவு வீரசோழியம், தொடர் வரவு இலக்கணக்கொத்தும் பிறவும்''

என்று கூறியுள்ளதை நோக்கலாம்.

இத்தகைய கருத்து ஏற்பட்டதற்கான காரணம் என்ன? ஒரு மொழி பிற மொழிகளிலிருந்து பல்வேறு தேவைகளுக்காகச் சொற்களைக் கடன் வாங்குகின்றது. தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. சங்க காலத்திலிருந்தே தமிழில் பிறமொழிச் சொற்கள் இடம்பெற்று வந்துள்ளன. ஆனால், எம்முடைய புலவர்கள் தேவைக்கதிகமாக வடமொழிச் சொற்களைக் கடன் வாங்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக, தமிழில் மலையைக் குறிக்க 55 சொற்கள் இருக்கின்றன. இவற்றுள் 28 சொற்கள் தமிழ்ச்சொற்கள் ஏனைய 27 வடமொழிச்சொற்கள். 28 தமிழ்ச் சொற்கள் இருக்கும் வேளையில் இன்னும் 27 வடசொற்கள் ஏன் கடன் வாங்கப்பட்டன. கம்பன் போன்ற புலவர்கள் ஓசை நயத்துக்கும் சொல் நயத்துக்குமாகப் பல வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தினர். ''நாகமோடு நாகமேற...'' என்னும் பாடலிலே நாகம் நாகம் என்று பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லினைப் பயன்படுத்தியபோது மலையைக் குறிக்கும் நாகம் என்னும் வடமொழிச் சொல்லினையும் பயன்படுத்துகிறான். இவ்வாறு பெருந்தொகையான வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியிலே இருப்பதைக் கண்ட சில ஆசிரியர்கள் வட மொழியின் துணை இன்றித் தமிழ் மொழி இயங்காது என்னும் கருத்தினைக் கொண்டனர். தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய சேனாவரையர் தம் உரையில் வட பாடைக்கண் தமிழ் பாடை செல்லாமையானும் என்று எழுதியுள்ளார். தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்குச்சொற்கள் செல்வதில்லை என்னும் கருத்து 13ஆம் நூற்றாண்டில் இருந்தது. ஆனால் சேனாவரையர் போன்ற அறிஞர்கள் இத்தவறான கருத்தினைக் கொள்வதற்கான காரணம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்பத்துக்கும் திராவிட மொழிக் குடும்பத்துக்குமிடையே வாக்கிய அமைப்புத் தொடர்பாக ஒரு பெரிய வேறுபாடு உண்டு. முன்னையது எழுவாய் + வினை + செயப்படுபொருள் என்னும் அடிப்படையிலேயே வாக்கிய அமைப்பினைக் கொண்டுள்ளது (உ+ம் : He built the house 'அவன் கட்டினான் வீட்டை'). ஆனால் திராவிட மொழிகளில் எழுவாய் + செயப்படுபொருள் + வினை என்றே வாக்கியம் பெரும்பாலும் அமையும் (உ+ம் : அவன் வீட்டைக் கட்டினான்). சமஸ்கிருதம் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. எழுவாய் + வினை + செயப்படுபொருள் வாக்கிய அமைப்பினையே இம்மொழியும் பெரும்பாலும் கொண்டிருக்கவேண்டும். வேதங்களில் இத்தகைய வாக்கிய அமைப்புகளைக் காண்கிறோம்.

*அபாம ஸோம அமிர்தா பபூவ*
*அகன்ம ஜோதி அவிதாம தேவாம*
(குடித்துவிட்டோம் சோமபானத்தை; ஆகிவிட்டோம் அமரர்களாக;
அடைந்துவிட்டோம் ஒளியை; அறிந்துவிட்டோம் தெய்வங்களை.)

ஆனால், வேதங்களிலும் பிற்கால சமஸ்கிருத இலக்கியங்களிலும் எழுவாய் + வினை + செயப்படுபொருள் என்னும் வாக்கிய அமைப்புக்குப் பதிலாக எழுவாய் + செயப்படுபொருள் + வினை என்னும் திராவிட மொழியின் வாக்கிய அமைப்புப் பெருவாரியாகக் காணப்படுகின்றது. இது திராவிட மொழியின் செல்வாக்காலேயே சமஸ்கிருத மொழியில் ஏற்பட்டது என்பதனை பேராசிரியர் தொமஸ் பரோ போன்ற அறிஞர்கள் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளனர். வால்மீகி ராமாயணத்தில், ஒரு சுலோகம் வருமாறு :

*ராமம் தஸரதம் வித்தி*
*மாம் வித்தி ஜனகாத்மஜாம்*
*அயோத்யாம் அடவீம் வித்தி*

இந்த சுலோகத்தில் 'ராமம் தஸரதம் வித்தி' (ராமனைத் தசரதனாக நினை) என திராவிட வாக்கிய அமைப்பும் 'மாம் வித்தி ஜனகாத்மஜாம்' (என்னாக நினை ஜனகன் உயிரான சீதையை) என இந்தோ – ஐரோப்பிய வாக்கிய அமைப்பும் காணப்படுகின்றன. இத்தகைய அமைப்பு பிற்காலத்தில் முற்றாகத் திராவிட வாக்கிய அமைப்புக்கும் மாறிவிடுகின்றது. இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றிய ஹிந்தி, பெங்காளி, குஜராத்தி, மராட்டி, பஞ்சாபி, சிந்தி எனப்படும் இந்திய மொழிகளை நோக்கினால் இந்த உண்மை புலப்படும். ஹிந்தியிலே,

ராம் ஹிந்தி போல்தாஹே (ராம் ஹிந்திமொழி படித்தான்) என்னும் வாக்கியம் உதாரணமாகத் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு சமஸ்கிருத மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையே உள்ள ஒற்றுமைப்பாட்டினைக் கண்ட சேனாவரையர் போன்றோர் தமிழ் மொழியிலே பெருந்தொகையான சமஸ்கிருத மொழிச் சொற்கள் இருப்பதைப் பார்த்தவிடத்து சமஸ்கிருத மொழியிலிருந்தே தமிழ் மொழி கிளைத்திருக்க வேண்டுமென எண்ணினர். இதன் உச்சமான விளைவே விஜயநகர – நாயக்கர் கால **பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்தும்.** இலக்கணக் கொத்தில்,

*...... தமிழ்நூற்கு அளவிலை; அவற்றுள்*
*ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டோ?*
*அன்றியும் ஐந்து எழுத்தால் ஒருபாடை என்று*
*அறையவும் நாணுவர் அறிவுடையோரே*

என்று சுவாமிநாத தேசிகர் கூறுவதைக் காணலாம். இவருடைய வடமொழிப் பற்றினையும் தமிழை இகழ்வதனையும்,

*பலகாற் பழகினும் தெரியா உளவேல்*
*தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்*
*மூன்றினும் முழங்கும்; ஆண்டினும் இலையேல்*
*வடமொழி வெளிபெற வழங்கும் என்க*

**தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையாரை** விடத் தமிழில் வேறு நூல்கள் இல்லை என்ற கருத்துடனே இச்சூத்திரம் அமைகின்றது.

சுப்பிரமணிய தீட்சதர் **பிரயோக விவேகம்** நூலில் காரக படலம், சமரச படலம், தத்தித படலம், திங்ஙப் படலம் என வடமொழியை ஒட்டியே உட்பிரிவுகளை அமைக்கிறார். காரக படலத்தின் முதற் சூத்திரத்திலேயே 'வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இலக்கணம் ஒன்று... வடமொழிக்கு உரிய குறி எல்லாம் வடமொழிக்கேயன்றித் தமிழ் மொழிக்கும் உரியன" என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளார். எளிமையான தமிழ்ச் சொற்கள் இருக்கவும் சந்தம், வாதேசம், பேதம், அபேதம், சம்பந்தப் பொருள், தார்ப்பர்யப் பொருள், திஙந்த வினை, திங்ங போன்ற சொற்களைத் தன்னுடைய உரையிலே கையாளுகிறார். மேலும் விஜயநகர – நாயக்க மன்னர் காலத்தில் வடமொழிப் பயன்பாடும் பெருகியது. தென்கலை வைஷ்ணவம் பாசுரங்களைப் போற்ற, வடகலை வைஷ்ணவம் வடமொழியை நன்கு போற்றியது. மணிப்பிரவாள நடை இக்காலத்தில் பெரிதும் கையாளப்பட்டது. இதுவும் சுவாமிநாத தேசிகர், சுப்பிரமணிய தீட்சதர் போன்றோருடைய கருத்துக்கு உதவியிருக்கலாம்.

விஜயநகர – நாயக்க மன்னர் காலத்திலே தோன்றிய இந்த இலக்கணச் செல்நெறி பிற்காலத்தில் தமிழ் சமஸ்கிருத மொழியிலிருந்தே தோன்றியது என்னும் கருத்தை வலியுறுத்தப் பயன்பட்டது. சுவாமிநாத தேசிகர், சுப்பிரமணிய தீட்சிதர் ஆகியோருடைய கருத்துத் தமிழ் அறிஞர்களாலேயே மறுத்துரைக்கப்பட்டது. செங்கல்வராய பிள்ளையின் History of Tamil Prose (1928:33) என்னும் நூலிலும், சூரியநாராயண சாஸ்திரியாருடைய **தமிழ் மொழியின் வரலாறு** (1876) என்னும் நூலிலும், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரைப்பிள்ளையின் **சரித்திரம் பேசுகிறது** (1962:77) என்னும் நூலிலும் இவர்களுடைய கருத்து குறுகிய நோக்கமுடையதாகவும், தமிழைப் பழிப்பதாகவும், மொழி அடிப்படைகளை நன்கு விளங்கிக் கொள்ளாததாகவும் அமைகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

18ஆம் நூற்றாண்டின் பின்னர் மொழியியலாளர்கள் தமிழ் மொழியின் தனித்துவத்தினையும் திராவிடமொழிக் குடும்பம் பற்றியும் விரிவாக விளக்கிய பொழுது தமிழ் சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியது என்னும் கருத்து பிழையானது என உணரப்பட்டது. திருநெல்வேலி ஆயர் றொபர்ட் கால்ட்வெல் அவர்களுடைய **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** (1856) இத்தவறான கருத்தினை நன்கு விளக்கிக்காட்டியது. மேலும் பேராசிரியர்களான தொமஸ் பரோவும் எமனோவும் இணைந்து Dravidian Etymological Dictionary (திராவிட மொழிகளின் சொற்பிறப்பகராதி) என்னும் நூலினை 1961ஆம் ஆண்டில் வெளியிட்டனர். இந்நூலில் ஏறக்குறைய 300 தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருதத்துக்குச் சென்றன என்னும் தகவல் தரப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஐந்திலக்கணம் தனித்தனி இலக்கணமாயிற்று

ஐந்திலக்கணத்தின் கூறுகளைத் தனித்தனியாக விவரிக்கும் போக்கு கிபி. 7ஆம் நூற்றாண்டில் எழுந்த இறையனார் களவியலுடன் தொடங்கி விட்டது எனலாம். விஜயநகர – நாயக்க மன்னர் காலத்திலும் இப்போக்குக் காணப்பட்டது. அகப்பொருள் பற்றிய **மாறன் அகப்பொருளும்** யாப்பியல் தொடர்பாக **பாப்பாவினமும் சிதம்பரச் செய்யுட் கோவையும்,** அணியியல் தொடர்பாக **மாறன் அலங்காரமும்** தோன்றின. விஜயநகர – நாயக்க மன்னர் காலம் நிறைய புராணங்களும், பிரபந்தங்களும், பெருந்தொகையான தனிப் பாடல்களும் எழுந்த காலமாகும். எனவே இக்காலத்தில் பல பாட்டியல் நூல்களும் செய்யுள் இலக்கண நூல்களும் தோன்றின. புலவர்கள் தத்தம் வித்துவத்தை வெளிப்படுத்துவதற்காகச் சிலேடை, யமகம், திரிபு, மடக்கு, பல்வகை அலங்காரங்கள் ஆகியவற்றினைப் பயன்படுத்தினர். இப்போக்கு இக்கால இலக்கணப் போக்கினையும் பாதித்துள்ளது.

தொல்காப்பியம் போன்றொரு பாரிய ஐந்திலக்கண நூலொன்றினை இயற்ற முடியாத ஒரு காலமாக விஜயநகர – நாயக்க மன்னர் காலம் திகழ்கின்றது. பெருங்காப்பியங்கள் எழுந்த சோழர் காலத்திலேயே தொல்காப்பியம் போன்றொரு இலக்கண நூல் தோன்றவில்லை. விஜயநகர நாயக்க மன்னர் காலம் தனிப்பாடல்களும் சிற்றிலக்கியங்களும் தோன்றுகின்ற காலமாகவும் அமைந்துவிட்டது. இந்நிலையில் எல்லாவற்றையும் பிரித்துத் தனித்தனியாகப் பார்க்கும் போக்கு ஏற்பட்டது. இந்நிலையில் ஐந்திலக்கணம் தனித்தனியாக நோக்கப்படலாயிற்று. எனினும் எழுத்துக்குத் தனியாகச் சொல்லுக்குத் தனியாக தமிழிலே இலக்கணங்கள் எழுதப் படவில்லை. எழுத்தையும் சொல்லையும் மட்டும் கூறுவதாக நேமிநாதம் முதலிலே தோன்றியது. பின்னர் நன்னூல் (ஐந்திலக்கணம் என்று கூறப்பட்டாலும் எமக்குக் கிடைக்கும் பிரதி எழுத்தும் சொல்லுமே கூறுகின்றது) தோன்றுகின்றது. விஜயநகர – நாயக்க மன்னர் காலத்தில் இலக்கண விளக்கமும் தொன்னூல் விளக்கமும் ஐந்திலக்கண நூல்களாக அமையினும் அவை எழுத்தையும் சொல்லையும் விரிவாகக் கூறுமளவுக்கு ஏனைய பிரிவுகளை விரிவாகக் கூறவில்லை. இவை குட்டித் தொல்காப்பியங்களாகவே அமைந்தன. எனவே விரிவாகக் கூறப்படாத அப்பிரிவுகள் தனித்தனி நூல்களாக வெளிவந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குருகைப் பெருமாக கவிராயர் (கி.பி. 1548) அவர்களாலே 360 நூற்பாக்களுடையதாக **மாறன் அகப்பொருள்** இயற்றப்பட்டது. அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என 5 இயல்களைக் கொண்டது. மாறனலங்காரமும் இப்புலவராலேயே இயற்றப்பட்டது. தண்டியலங்காரம் 35 பொருணிகள் கூற, இந்நூல் 64 கூறுகின்றது. இதுவும் இக்காலத்தின் கோலத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இக்காலப்புலவர்கள் யாப்பு, அணி ஆகியவற்றில் எவ்வளவு ஈடுபாடுடையராக இருந்துள்ளனர். என்பதை மாறனலங்கார பொருளணியல் விரிவு காட்டுகின்றன. பாட்டியல் நூல்களும் அதனைக் காட்டுகின்றது. அந்நூல்கள் பற்றி அடுத்த பகுதியில் நோக்கலாம்.

## 4. பாட்டியல் நூல்கள்

பாட்டியல் என்னும் இலக்கண நூல் வடிவம் இக்கால இலக்கணச் செல்நெறிகளில் ஒன்றாக அமைகின்றது. 12ஆம் நூற்றாண்டில் எழுந்த **வெண்பாப் பாட்டியல்** முதல் முயற்சியாகும். யாப்பு, இலக்கிய வடிவங்கள் ஆகியனவற்றின் இலக்கணம் கூறுவதாக இவ்விலக்கண நூல் அமைகின்றது. விஜயநகர – நாயக்க மன்னர் காலத்தில் **பன்னிரு பாட்டியல்** என்னும் நூல் தோன்றியது. பன்னிரு புலவர்களாலே செய்யப்பெற்ற பாட்டியல் நூல் என்று பொருள்படவேண்டும். ஆனால், அகத்தியர், அவிநயனார், இந்திரகாளியர், கபிலர், கல்லாடர், கோவூர்க்கிழார், சீத்தலையார், செயிற்றியனார், சேந்தம்பூதனார், நற்றத்தனார், பாணர், பல்காயனார், பெருங்குன்றூர்க்கிழார், பொய்கையார், மாதபூதனார் என்னும் பதினைந்து புலவர்கள் இதனைப் பாடியதாகக் கொள்ளப்படுகின்றது. 360 சூத்திரங்களைக் கொண்ட இந்நூல் பின்வரும் அமைப்புடையதாக அமைகின்றது :

எழுத்தியல் : எழுத்துக்களின் பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் ஆகியன கூறப்படுகின்றன.

சொல்லியல் : சீர்க்கணம், மங்கலச்சொல், பெயர்ப்பொருத்தம்

இனவியல் : பாப்பொருத்தம், பாவினம் (சாதகம் தொடக்கம் கையறுநிலை ஈறாக 66 கூறப்பட்டுள்ளன).

நவநீத நடனார் 108 கலித்துறைச் செய்யுட்களாலே **நவநீதப் பாட்டியல்** என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் 63 வகைப் பிரபந்தங்கள் பால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில பாவினங்களைப் பற்றிக் கூறுவதாக **வரையறுத்த பாட்டியல்** நூல் அமைகின்றது. சம்பந்த முனிவராலே இது இயற்றப்பட்டதால் **சம்பந்தப் பாட்டியல்** எனவும்படும். பதினாறாம் நூற்றாண்டில் பரஞ்சோதியாரால் இயற்றப்பட்டது **சிதம்பரப் பாட்டியல்,** எழுத்து, சொல், பிரபந்தங்கள், புலவன், புரவலன், நல்ல பாட்டு, அல்ல பாட்டு என்பன பற்றிய இலக்கணம் கூறுவதாக இந்நூல் அமைகின்றது.

இப்பாட்டியல் நூல்களுடன் தொடர்புற்றவனாக இன்னும் இரு நூல்கள் இக்காலத்தில் தோன்றின. ஒன்று **பாப்பாவினம்** ஆகும். இது பாவின் வகைகளையும் பாவினங்களின் வகைகளை மட்டுமே 140 செய்யுட்களில் கூறுகின்றது. பா வகையில் ஆசிரியப்பாவை முதற் கூறுவதே வழக்கம். ஆனால் இந்நூலிலோ வெண்பாவே முதற் கூறப்பட்டுள்ளது. பரிபாடலுக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. குமரகுருபரராலே இயற்றப்பட்ட சிதம்பரச் செய்யுட்கோவை பாவுக்கும் பாவினங்களுக்குமுரிய இலக்கணங் களுக்கமைவான செய்யுட்களைக் கோவைப்படுத்தித் தருகின்றது.

## 5. மொழிக்கு வருண உரிமையும் பாலுரிமையும் வேண்டி நிற்கும் இலக்கண நூல்கள்

விஜயநகர – நாயக்க மன்னர் கால இலக்கண நூல்களின் இன்னொரு செல்நெறி மொழிக்கு வருண உரிமையும் பாலுரிமையும் வேண்டிநிற்பதாகும். வருணப்பாகுபாட்டுச் செல்வாக்கு தொல்காப்பியத்திலேயே ஏற்பட்டு விட்டது. ஆனால், சோழர் காலத்திலே மேலும் இந்நிலை கூர்மையடைந்தது. விஜயநகர – நாயக்க மன்னர் காலத்தில் இதனை இலக்கண நூல்களிலும் காணலாம். பன்னிரு பாட்டியல் எழுத்துக்கும் வருணமும் பாலும் கூறுகின்றது. உயிரிகளுக்கும் வருணமும் பாலும் கூறிப் பழகியவர்களும் உயிரிலிகளுக்கும் வருணமும் பாலும் கூறிப் பழகியவர்கள் உயிரிலிகளுக்கும் வருணமும் பாலும் கூற முற்படுகின்றனர். **பன்னிரு பாட்டியல்** எழுத்துக்களின் வருணம், பால் பற்றிய பாகுபாட்டினைப் பின்வருமாறு தருகின்றது.

வருணம் : அந்தணர்க்கு : 12 உயிரெழுத்துக்கள், க, ங, ச, ஞ, ட, ண

சூத்திரருக்கு : ழ, ள

ஏனைய எழுத்துக்கள் வணிகர்களுக்கும் மன்னர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்: ஆண்பால் : குறில்
பெண்பால் : நெடில்
அலிப்பால் : ஒற்றெழுத்து, ஆய்தம்.

**இலக்கண விளக்க** ஆசிரியரும் இக்காலச் செல்நெறிக்கேற்ப தன்னுடைய பொருளதிகாரப் பாட்டியலில் வருணப் பாகுபாடு கூறியுள்ளார்.

## 6. மேலை நாட்டாரின் தமிழ் இலக்கண முயற்சி

இத்தாலியிலிருந்து வந்த பெஸ்கி சுவாமிகள் வீரமாமுனிவர் எனத் தன் பெயரை மாற்றியமைத்துக்கொண்டு பல தமிழ்ப் பணிகளைச் செய்தார். தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூலை இயற்றித் தந்தார். செழுந்தமிழுக்கு இலக்கண நூல் தந்த வீரமாமுனிவர் கொடுந்தமிழுக்கு ஆங்கிலத்திலே இலக்கண நூலொன்றினை அமைத்துத் தந்துள்ளார். **A Grammar of the Common Dialect of the Tamil Language** என்னும் இத்தகைய இலக்கண நூல் தமிழ் மொழிக்குப் புதுமையானதாகும். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுக்கும் மரபுதான் நீண்ட காலமாக இருந்துவந்துள்ளது. பேச்சு வழக்குக்கு இலக்கணம் வகுப்பது பற்றி தமிழ் இலக்கணகாரர் எண்ணவில்லை. அப்படி எழுத முயன்றால் அது பெருகும் என சேனாவரையர் ஓரிடத்திலே குறிப்பிட்டுச் சென்றுள்ளார். மேலைத்தேய இலக்கண – மொழியியல் ஆய்வு முயற்சிகள் பற்றி அறிந்துள்ள வீரமாமுனிவர் கொடுந்தமிழ் இலக்கணம் கூறியது விந்தையல்ல.

மேலைநாட்டாரின் தமிழ்ப் பணிகளிலே ஒன்று அவர்கள் தொடக்கிவைத்த அகராதிப் பணியாகும். இலங்கையைச் சேர்ந்தவர்களாகிய லிநற், ஸ்போல்டிங், வின்ஸ்லோ, வைமன், கதிரைவேற்பிள்ளை, சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஆகியோருடைய தொடக்ககால அகராதி முயற்சிகள் குறிப்பிடற்பாலது. இம்முயற்சிக்குத் தோற்றுவாயமைத்தவர் **சதுரகராதி** படைத்த வீரமாமுனிவரேயாவர். நிகண்டுகள் மலிந்திருந்த காலத்திலே மேலைத்தேய அகராதி அமைப்பினை ஓரளவு பின்பற்றி சதுரகராதியினை வீரமாமுனிவர் அமைத்துத் தமிழுக்குத் தந்தார்.

## 7. நிறைவுரை

விஜயநகர – நாயக்க மன்னர் காலத்தில் பெருந்தொகையான பிரபந்தங்கள் தோன்றின. பல புதிய பா வடிவங்கள் தோன்றின. சிந்து, கண்ணி போன்ற பா வடிவங்கள் பெருமளவிலே பயன்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாவாரமில்லை தனக்கொரு வீடில்லை*
*தேவாரமேதுக்கடி – குதம்பாய்*
*தேவாரமேதுக்கடி.*

என்னும் குதம்பைச் சித்தர் பாடல்,

*தெள்ளுதமிழுக்குதவு சீலன் – திரு*
*வண்ணாமலைக்குதவு பாலன்*

என்னும் அண்ணாமலைப் ரெட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல் போன்று பல பாடல்கள் இக்காலத்திலே தோன்றின. எனவே, சித்தர்களுடைய பாடல்கள், குறம், குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகப் பாடல்கள் ஆகியனவற்றுக் கெல்லாம் இலக்கணம் கூறவேண்டிய தேவை இருந்தது. இக்கால இலக்கண நூல்கள் இப்பணியினையே செய்தன. தாம் வரித்த கோட்பாட்டை இலக்கியத்தால் மட்டுமன்றி இலக்கணத்தாலும் உணர்த்தலாம் என்பதற்கு இக்காலச் சில இலக்கண நூல்கள் சான்று பகிர்கின்றன. வடமொழி விருப்பினையும் அதீத ஈடுபாட்டினையும் உணர்த்துவதற்கு பிரயோக விவேகம் இலக்கணக் கொத்து போன்ற இலக்கண நூல்கள் இயற்றப்பட்டமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலக்கிய மறுமலர்ச்சிக்குரிய சிற்சிறு தோற்றுவாய்களும் இக்காலத்தில் ஏற்பட்டன. மரபுவழித் தமிழ் இலக்கணச் சிந்தனை மேலைத்தேய இலக்கண, மொழிச் சிந்தனையோடு தொடர்புறும் வாய்ப்பு இக்காலத்தில் ஏற்பட்டது. இதனால் தமிழ் மொழி வரலாறு பற்றியும், தமிழ் இலக்கண அமைப்புப் பற்றியும் புதிய சிந்தனைகள் உண்டாயின.

பேச்சு மொழிக்கு இலக்கணம் இக்காலத்திலேயே எழுதப்பட்டது. சார்பெழுத்துப் பற்றியும் தமிழ் வரிவடிவம் பற்றியும் புதிய கருத்துக்கள் எழுந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்

1. அரவிந்தன், மு.வை. **உரையாசிரியர்கள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1995 (மூன்றாம் பதிப்பு).
2. கால்டுவெல், றொபர்ட். (தமிழாக்கம் : புலவர் கா. கோவிந்தன்), **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்,** சென்னை, நான்காம் பதிப்பு 1992
3. சுப்பிரமணியம், சா.வே. (பதிப்பாசிரியர்கள்) **தமிழ் இலக்கண நூல்கள்,** மெய்யப்பன் பதிப்பகம், மதுரை.
4. சுயம்பு, முனைவர் பெ., **இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.
5. Beschi, C.J., **A Grammar of the Common Dialect of the Tamil Language,** Saraswathy Mahal Library, 1974.
6. Burrow, T.& Emeneau, M.B., **A Dravidian Etymological Dictionary,** Clarendon Press, Oxford, 1961.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகரப் பேரரசு நாயக்கர் கால சமஸ்கிருத இலக்கியம்

பேராசிரியர் வி. சிவசாமி

பொதுவாக கி.பி. 1336 தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதிவரையுள்ள காலப் பகுதியே தென்னிந்திய வரலாற்றிலே விஜயநகரப் பேரரசு – நாயக்கர் காலம் எனக் கொள்ளப்படுகின்றது. இக்காலப்பகுதியிலே விஜயநகரப் பெருமன்னரும், அவர்களின் ஆட்சிக்காலப் பிற்பகுதியிலேயே அவர்களின் இராணுவத் தேசாதிபதி களாகவும், பின்னர் அரசர்களாகவும் விளங்கிய நாயக்கர்களும் சிற்றரசர்களும் அவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தனர். இப்பேரரசின் தலைநகரம் இன்றைய கர்நாடக மாநிலத்தின் தென்பகுதியிலுள்ள துங்கபத்திரை ஆற்றங்கரையிலே விஜயநகர் (வெற்றித்திருநகர்) எனும் பெயருடன் நிறுவப்பட்டிருந்தது. இப்பேரரசின் பெரும்பகுதி சமகாலத்திலே திராவிட மொழிகள் நிலவுகின்ற தமிழ்நாடு, ஆந்திரதேசம், கர்நாடகம், கேரளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றின் பெரும் பகுதிகளையோ, குறிப்பிட்ட பகுதிகளையோ உள்ளடக்கியிருந்தது. எனவே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமாகிய திராவிடமொழிகள் இப்பேரரசிலே நிலவின. இவற்றுடன் இந்திய அறிவியல், பண்பாட்டுப் பொதுமொழியாகவும், இந்துக்களின் புனித மொழியாகவும் விளங்கிய வடமொழியும் இப்பேரரசிலே தொடர்ந்து ஆதரவு பெற்றிருந்தது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே முற்பட்ட பல்லவர் – பாண்டியர், சோழப் பெருமன்னர் காலச் சமய, பண்பாட்டுத் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் பொதுவாக இக்காலத்தில் காணலாம். இப்பேரரசிற்கு வடக்கே தக்கணத்தின் வடபகுதியிலே ஒரு முஸ்லிம் அரசும் பின்னர் சில அரசுகளும், தக்கணத்தின் வட கிழக்குப் பகுதியிலே இந்து அரசுகள் சிலவும் நிலவின.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டு முடிவிலும், 14 ஆம் நூற்றாண்டு முதற்கால் பகுதியிலும் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள இந்திய நிலப்பரப்பிலே சமகாலத்திலே வட இந்தியாவிலிருந்து ஆட்சிபுரிந்த முஸ்லிம் பேரரசர்களின் (தில்லி சுல்தான்களின்) ஆதிக்கம் சிறிதுகாலம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கிருஷ்ணா – துங்கபத்திரை ஆற்றிற்குத் தெற்கே இந்துப் பேரரசான விஜயநகர் 1336இலும் இதற்கு வடக்கே தக்கணத்தின் நடுப்பகுதி, வடபகுதியிலே பாமனி எனும் முஸ்லிம் அரசு 1347இலும் தோன்றின. இவ்விரு அரசுகளுக்கிடையிலே தொடர்ந்து கடும் போராட்டங்கள் சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு நடைபெற்றன. துங்கபத்திரை ஆற்றிற்குத் தெற்கே முஸ்லிம் ஆதிக்கம் ஏற்படாது விஜயநகரப் பேரரசு வெற்றிகரமாகத் தடுத்து வந்துள்ளது. இந்தியாவின் ஏனைய பகுதிகள் பல முஸ்லிம் ஆதிக்கத்திற்குட்பட்டதன் விளைவாக இந்து சமயமும், பண்பாடும் நலிவுற்றுச் சீரழிந்திருந்த காலப்பகுதியிலேயே விஜயநகரப் பேரரசு தோன்றி இந்துசமயமும் பண்பாடும் தென்னகத்திலே தொடர்ந்து பேணிப் போற்றி வளர வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிற்று. எனவே இப்பேரரசு ஒரு குறிப்பிட்ட காலத்தின் தேவையினை நிறைவேற்றும் வகையிலே தோன்றிச் செயல்பட்டதெனலாம்.

இப்பேரரசு சமகால மைசூரைச் சேர்ந்த சிருங்கேரியிலுள்ள சங்கரமடத் தலைவராகிய வித்தியாரண்யர், சாயணாச்சாரியார், அவரின் சகோதரர் மாதவாச்சாரியார் முதலிய இந்து சமய ஞானிகள், அறிஞர்களின் ஆசீர்வாதத்துடனும், இப்பிராந்தியத்தில் நிலவிய சில சிற்றரசர்கள், வாழ்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் முதலியோரின் ஆதரவுடனும் சங்கம எனும் சிற்றரசனின் மக்களாலே குறிப்பாக ஹரிகரன், புக்கன் முதலியோரால் நிறுவப்பட்டது. இவ்வாறு தோன்றிய அரசிலே இப்பிராந்தியத்திலே நிலவிய இந்துசமய, தத்துவப் பிரிவுகள், பண்பாடு மட்டுமின்றிப் பௌத்தம், சமணம் முதலிய அவைதிக சமயங்களும் வேறுபாடின்றி அரச ஆதரவு பெற்றிருந்தன. சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்துசமய பண்பாட்டு நிலைக்களமாக வடக்கேயிருந்த இஸ்லாமியரின் கடும் எதிர்ப்புகள் மத்தியிலும் இவ்வரசு குறிப்பிடத்தக்க வகையிலே செயலாற்றி வந்துள்ளது.

பொதுவாக வேற்று நாட்டவரின் ஆதிக்கம், சமயம், பண்பாடு ஆகியவற்றிற்கு எதிராகத் தற்பாதுகாப்பிலீடுபடும் ஒரு சமூகம் அல்லது நாடு தனது பாரம்பரிய மரபுகள், பெறுமானங்களில் புத்தாக்கம் பெற்று எழுச்சியடைந்து செயற்படுதல் இயல்பாகும். எனவே பழைய மரபுகளைப் பேணுதல், பழைய நூல்களைக் கற்றல், அவற்றிற்கு விளக்கம் அளித்தல், அவற்றை நன்கு கற்று ஆராய்தல், பாரம்பரியப் பெறுமானங்களை முன்னெடுத்தல், இவற்றின் மூலம் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை வெற்றிகரமாக முறியடித்தல், முன்னேறுதல் முதலியன இடம்பெறும். எனவே இந்து சமய புனிதநூல்களான வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், வழிபாட்டு மரபுகள், கலைகள், உலகியல் சார்பான இலக்கியங்கள் முதலியனவற்றில் ஈடுபாடு ஏற்பட்டது. சமய விழிப்புணர்வும், சமய மரபுகளைப் போற்றிப் பேணவேண்டும் எனும் உத்வேகமும் ஏற்பட்டன. இதன் விளைவாக பெருந்தொகையான பலதிறப்பட்ட சமய, தத்துவ நூல்கள் இக்காலத்திலே எழுந்தமையில் வியப்பில்லை. எனவே சமூகத்தில் உயர்மட்டத்தவர் மத்தியில் மட்டுமின்றி, சாதாரண மக்கள் மத்தியிலும் நிலவிய வழிபாட்டு மரபுகள், கலைகள் பிரபல்யமாயின. "தென்னகத்தின் இரண்டாவது பக்திக்காலம்" எனவும் இக்காலம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

விரூபாக்ஷ எனும் திருநாமம் கொண்ட சிவபிரானே இப்பேரரசின் குலதெய்வமாக, பெருந்தலைவராகப் போற்றி வழிபடப்பட்டார். அப்பெருமானின் திருநாமத்திலே, பேரரசர்கள் ஆட்சிபுரிந்தமை நன்கு குறிப்பிடற்பாலது. இப்பெருமன்னர்களின் கல்வெட்டுகளில் அரசர்களின் பெயரன்றி விரூபாக்ஷ எனும் சிவபெருமானின் திருப்பெயரே முத்திரையாகப் பெரும்பாலும் விளங்குகின்றது. இது ஒரு முக்கியமான அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பேரரசுகாலப் பிற்கட்டத்திலே இதற்குப் பதிலாகத் திருப்பதி வெங்கடேசப் பெருமானின் திருநாமம் இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு சமயம், பண்பாடு முதலியனவற்றில் வேறுபாடுகளுக்கு இடமளிக்கப்படவில்லை. முஸ்லீம் ஆதிக்கப்படர்ச்சியைத் தடுப்பதிலே பேரரசு கவனம் செலுத்தியது. ஆனால் பேரரசிலே முஸ்லீம்கள் வாழுவதற்குத் தடை விதிக்கப்படவில்லை. ஏனையோரைப் போல அவர்களும் வாழ்ந்தனர். ஆரம்பகால மன்னர்களில் ஒருவனான முதலாம் புக்கன் காலத்திலே வைஷ்ணவருக்கும் சமணருக்குமிடையிலே ஒரு தகராறு ஏற்பட்டது. பேரரசர் அதிலே தலையிட்டு இரு சாராரையும் இணக்கப்படுத்தி சமரசம் செய்தார். அரசனைப் பொறுத்த அளவில் எல்லாச் சமயமும் ஒரே பரம்பொருளையே கூறுகின்றன என வலியுறுத்தினார். பேரரசிலே நிலவிய மொழிகளில் மேற்குறிப்பிட்ட அமிசங்கள் பல்வேறு அளவுகளிலே காணப்படுகின்றன. இங்கு பலமொழிகள் நிலவின. குறிப்பிட்ட தொகையினர் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலே தேர்ச்சி பெற்றிருந்தனர். அரசர்கள், புலவர்கள் ஆகியோரும் இதற்கு விதிவிலக்காக இருந்திலர். இவர்கள் பல்வேறு வகையான ஆக்கங்களைச் செய்துள்ளனர். இக்கால இலக்கிய வளர்ச்சிக்கு அரசர்கள் மட்டுமன்றி சமயதத்துவம் சார்பான மடங்களும், அதீனங்களும் தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளன.

வடமொழியைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே குறிப்பிட்டவாறு இது ஒரு பொதுவான சமய, அறிவியல் மொழியாகும். ஏற்கனவே குறிப்பிட்ட நான்கு திராவிட மொழிகளுக்கும் இதற்குமிடையிலே பரஸ்பர உறவுகள் பல்வேறு அளவுகளில் வெவ்வேறு காலப்பகுதிகளில் ஏற்பட்டு வந்தன. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே சங்ககாலம் தொட்டு ஏற்பட்டுவந்த சமஸ்கிருத தொடர்புகள் இக்காலத்திலே பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளன. இக்கால வடமொழி இலக்கியம் பற்றிய விரிவான ஆய்வுகள் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இக்காலத்திலே வடமொழியிலே பல்வேறு வகையான இலக்கிய வடிவங்கள் பழைமை புதுமை வாய்ந்தனவாக எழுந்தன. சமயம், தத்துவம், பிற அறிவியல் சார்பான நூல்கள், பல்வேறு நூல்களுக்கான உரைகள் முதலியன தோன்றின. அரசர்கள் பொதுவாக வேறுபாடின்றி மொழிகளை ஆதரித்தனர். அவர்களில் பலர் புலவர்களை மட்டுமன்றித் தாமும் சிறந்த புலவராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினர். அரசர்கள் மட்டுமன்றி, அரச அதிகாரிகள், ஞானிகள் மற்றும் பிறரும் பல்வேறுவகையான இலக்கிய ஆக்கங்களைச் செய்துள்ளனர். ஆரம்பகால அரசர்களில் ஒருவனான 2ஆம் ஹரிஹரன் ராஜவியாஸ, ராஜவால்மீகி போன்ற விருதுப் பெயர்களைத் தரித்தான். விஜயநகரப் பேரரசர்களான 2ஆம் தேவராஜன், கிருஷ்ணதேவராயன் போன்றோரும், தஞ்சாவூர் நாயக்க மன்னரான ரகுநாதநாயக்கன், மதுரை நாயக்க மன்னனான திருமலை நாயக்கன் போன்றோர் தாமே பெரிய புலவர்களாகவும், புலவர்களை ஆதரிப்பவர்களாகவும் விளங்கினர். கிருஷ்ண தேவராயனின் சபையை அஷ்டதிக்கஜங்கள் எனும் எட்டுத் தெலுங்குப் புலவர்கள் மட்டுமின்றி, பேரரசில் நிலவிய ஏனைய மொழிப் புலவர்களும் அலங்கரித்தனர். இப்பேரரசரே தெலுங்கிலே **ஆமுக்தமால்யதா** எனும் பெருங்காப்பியம், வடமொழியிலே **ஜாம்பவதி கல்யாணம்** எனும் சிறந்த நாடகம் முதலியவற்றை இயற்றியவர். ஆமுக்தமால்யதா தமிழகத்திலே வாழ்ந்த தலைசிறந்த வைஷ்ணவ ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாள் (கோதை) பற்றியதாகும். விசிஷ்டாத்துவைத்துவ ஞானியும் கவிஞருமாகிய வேதாந்ததேசிகர் தமிழிலே 30 நூல்களும் வடமொழியிலே 90 நூல்களும் இயற்றியுள்ளார். சிவாத்துவைத ஞானியும் புலவருமாகிய அப்பையதீக்ஷிதர் 100 க்கும் மேற்பட்ட நூல்களையும், துவைத்தத்துவஞானியும் புலவருமான வாதிராஜதீக்ஷிதர் 60 நூல்களையும், ரத்னகேதஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் செஞ்சிநாயக்க மன்னனின் ஆதரவில் 18 நாடகங்களையும் 60 காவியங்களையும் இயற்றியுள்ளனர். இவர்களைவிடக் கங்காதேவி, ருத்ராம்பா போன்ற தலைசிறந்த அரச பெண்பாற் புலவர்களும் இக்காலத்திலே தரமான இலக்கிய ஆக்கங்களைச் செய்துள்ளனர். இவ்வாறு பலர் பெருந்தொகையான பல்வேறு நூல்களை பல்வேறு விடயங்கள் பற்றி இக்காலத்தில் எழுதியுள்ளனர்.

மேலும் முற்காலத்திற் போல இக்காலத்திய கல்வெட்டுக்களிலும் இலக்கியச் சிறப்புள்ள பகுதிகள் பல உள்ளன. வடமொழி இலக்கிய வரலாற்றினை எழுதுவதற்குச் சாசனங்களின் முக்கியத்துவம் பற்றிப் பிரபல தென்னிந்திய வரலாற்றாசிரியரான கே. எ. நீலகண்ட சாஸ்திரி "உண்மையாகவே சமஸ்கிருத இலக்கியத்தின் முழுமையான வரலாற்றைப் பார்க்க வேண்டுமானால் நூல்களில் நாம் செலுத்தும் கவனத்தைச் சிலாசானங்களிலும் செலுத்தியேயாக வேண்டும்" எனத் தமது **தென்னிந்திய வரலாறு** (ப.334) எனும் நூலிலே கூறியிருப்பது ஈண்டு கவனித்தற்பாலது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இக்காலத்திய வடமொழி இலக்கியம் பலதிறப்பட்டதாகவும், பெருந்தொகையாகவும் இருப்பதால் அவற்றுள் முக்கியமான ஒரு சில பற்றியே இச்சிறுகட்டுரையிலே சுட்டிக்காட்டப்படும்.

வடமொழி இலக்கிய மரபிலே இலக்கிய நூல்கள் (1) சிரவ்யகாவியம் – காதால் கேட்டு ரசிக்கும் நூல் (மகாகாவியம், சிறுகாவியம் என்பன) (2) திருஷ்யகாவியம் – கண்ணாற்பார்த்து ரசிக்கும் நூல் – (நாடகம்) என இருவகையாகக் கூறப்படும். ஆனால் இக்கால இலக்கிய நூல்கள் பலதிறப்பட்டனவாயிருந்ததால் அவற்றை அவற்றின் இலக்கிய வடிவம், கூறும் பொருள் ஆகியனவற்றின் அடிப்படையிலே பின்வருமாறு வகுத்துக் கூறலாம்.

1. இலக்கியம்
2. காவியவியல்
3. தர்மசாஸ்திரம்/நீதி
4. தத்துவம்
5. சில தொகுப்புகள்
6. இசை, நடனம்
7. மருத்துவம், வானியல், சோதிடம்
8. தமிழிலுள்ள நூல்களையொட்டி எழுந்த வடமொழி நூல்கள்
9. இலக்கணம்
10. நிகண்டு/அகராதி
11. உரைகள்

**1. இலக்கியம் :** இதனை மேல்வருமாறு மூன்றாக வகைப்படுத்தலாம்.

அ. மஹாகாவியமும் அது சார்பான நூல்களும்

ஆ. சிறுகாவியங்கள்

இ. நாடகங்கள்

### அ. மஹாகாவியமும் அது சார்பான நூல்களும்

இப்பகுதியிலே இவ்வகை நூல்களிலே பழைய கதைகள் மட்டுமன்றிச் சமகால நிகழ்வுகளையும் கூறும் சில ஆக்கங்களையும் குறிப்பிடலாம். மகாகாவியம் எனக்கொள்ளப்படும் வகையில் மிகப் பிரபல விசிஷ்டாத்துவைத தத்துவஞானியும் பெரும் புலவருமாகிய வேதாந்ததேசிகரின் (கி.பி. 1268–1368)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யதாவாப்யுதயம்** எனும் நூல் குறிப்பிடத்தக்கதாகும். இது 21 சர்க்கங்களிலே ஸ்ரீகிருஷ்ணபகவானின் வாழ்க்கை வரலாற்றை நன்கு சித்திரிக்கின்றது. இந்நூலாசிரியருக்குப் பின் வாழ்ந்த சிவாத்துவைத தத்துவஞானியாகிய அப்பையதீக்ஷிதர் இந்நூலிலே நன்கு ஈடுபாடு கொண்டு இதற்கொரு உரை எழுதியுள்ளார்.

சமகால நிகழ்வுகள், வரலாறு முதலியனவற்றைச் சித்திரிக்கும் நூல்கள் பெரும்பாலும் பெருங்காப்பிய மரபையொட்டி அவ்வக்கால சில அரசர்களின் சாதனைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன. அவற்றுள்ளே காலத்தால் முந்தியதொன்றாகக் கங்காதேவி தன் கணவனும் விஜயநகர அரசகுமாரனுமாகிய கம்பணன் மதுரையில் இடம் பெற்றிருந்த முஸ்லிமாதிக்கத்தை முற்றாக அழித்து அங்கு விஜயநகர ஆதிக்கத்தினை ஏற்படுத்தியதைச் சிறப்பித்துக் கூறும் **மதுராவிஜயம்** (மதுரை வெற்றி) நன்கு குறிப்பிடற்பாலது. அரசகுடும்பத்தைச் சேர்ந்த பெண்பாற் புலவராகிய நூலாசிரியை மகாகாவிய மரபிற்கேற்ப இந்நூலிலே பருவங்கள், காலை, மாலை மற்றும் இயற்கை அம்சங்கள் பற்றிய நீண்ட வருணனைகளை உள்ளடக்கியுள்ளார். வடமொழியிலே சிறந்த நடையாகக் கருதப்படும் வைதர்ப்பநடையினை நூலாசிரியர் நன்கு சிறப்பாகக் கையாண்டுள்ளார். அவருடைய சிந்தனைகள் தெளிவான ஆற்றோட்டம் போல எளிமையாக அமைந்து விளங்குகின்றன. இவர் கையாண்டுள்ள உவமை போன்ற அணிகள் பெரும்பாலும் இயற்கையிலிருந்து பெறப்பட்டவை. சொல்வளம் சிறப்பாக உள்ளது. பிற்காலப் புலவர்களின் இலக்கியப் படைப்புக்களை மாசுபடுத்தும் பகட்டான சிக்கலான அணிகள் போன்றவற்றை ஆசிரியர் தவிர்த்துள்ளார்; பெரும்பாலும் காளிதாசரைப் பின்பற்றியுள்ளார். மேலும் மதுரையில் முஸ்லிம் ஆதிக்கத்தினாலே பாதிக்கப்பட்ட கோவில்கள் திருத்தியமைக்கப்பட்டுப் பூசை வழிபாடுகள் முறைப்படி ஏற்படுத்தப்பட்டமை பற்றியும் இந்நூல் கூறுகின்றது.

தத்காவூரிலிருந்து ஆட்சிபுரிந்த ரகுநாதநாயக்கரைப் புகழ்ந்து அவருடைய சபைப்புலவரான ருத்ராம்பா என்பவர் **ரகுநாதாப்யுதயம்** எனும் காவியத்தை எழுதியுள்ளார். சாலுவநரசிம்மன் எனும் விஜயநகர மன்னனைப்பற்றி அவனுடைய அவைப் புலவரும் திண்டிம குடும்பத்தைச் சேர்ந்தவனுமான ராஜநாத என்பவர் **சாலுவாப்யுதயம்** எனும் அரசர் புகழ்மாலையினை இயற்றியுள்ளார். இது ஓரளவு வரலாறு சார்பான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியமாகும். வாமனபட்டபாணரின் **ரகுநாதசரித்திர காவியமும்** குறிப்பிடற்பாலது. மேற்குறிப்பிட்ட அரசனின் சபை புலவர்களில் ஒருவரான திருமலாம்பா என்பவர் **வரதாம்பிகாபரிணயம்** எனும் காவியத்திலே அச்யுதரின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுகிறார். இந்நூல் முடிவிலே வெங்கடாத்ரி முடிக்குரிய இளவரசனாகப் பட்டம் பெறுதல் கூறப்பட்டுள்ளது.

சாயணாச்சாரியரின் இளைய சகோதரரான போகநாதர் என்பவர் ராமாயணம், புராணங்கள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு முறையே **ராமோல்லாச, திரிபுரவிஜயம்** ஆகிய காவியங்களை இயற்றியுள்ளார்; ஆதிசங்கரரின் வரலாற்றினை **சங்கராப்யுதயம்** எனும் காவியமாக எழுதியுள்ளார். வேங்கடமஹி எழுதிய **சாஹித்யசாம்ராஜ்யம்** எனும் காவியம் இன்று கிடைக்கவில்லை.

ஆ. சிறுகாவியங்கள்

இவற்றை i. சந்தேசம் அல்லது தூதுப்பிரபந்தங்கள் ii. சதகம் iii. சம்பூ iv. வசனநூல்கள் v. தோத்திரம் vi. மஹாத்மியங்கள்/தலபுராணங்கள் vii. பிரசஸ்திகள் என வகுத்துக் கூறலாம்.

ஆ) i. **சந்தேசம், தூதுப்பிரந்தங்கள்:** இக்காலத்தில் தூதுப்பிரபந்தங்கள் இப்பேரரசில் நிலவிய மொழிகளில் எழுதப்பட்டன. வடமொழியில் எழுதப்பட்ட தூதுப் பிரபந்தத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக வேதாந்த தேசிகரின் **ஹம்ஸசந்தேசத்தினை**(அன்னம் விடுதூதினை)க் குறிப்பிடலாம். இது காளிதாசரின் மேகதூதத்தை முன்மாதிரியாகக் கொண்டதாகும். கேரளத்தில் எழுதப்பட்ட சந்தேசங்களில் உத்தண்டரின் **கோகில (குயில்) சந்தேசம்** (கி.பி.15ம் நூ.), உதயனின் **மயூர(மயில்) சந்தேசம்,** வாசுதேவனின் **பிருங்க (வண்டு) சந்தேசம்** போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

ஆ) ii. **சதகம்:** இது நூறு செய்யுட்களைக் கொண்டதாகும். இதற்கு எடுத்துக்காட்டுகளாக நரஹரியின் **சிருங்காரசதகத்தினையும்**, வேதாந்த தேசிகரின் **தயாசதகத்தினையும்** குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) iii. **சம்பூ:** இது செய்யுளும் வசனமும் கலந்த நடையிலமைந்துள்ள ஒரு சிற்றிலக்கிய வடிவம். எடுத்துக்காட்டுகளாக ராஜநாததிண்டிம என்பவர் எழுதி அச்யுதமஹாராஜாவுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள **பாகவதசம்பூ,** நீலகண்டதீக்ஷிதர் எழுதிய **நீலகண்ட விஜயசம்பூ** போன்றவற்றைக் குறிப்பிடலாம். ரத்னகேதஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் ருக்மிணி கிருஷ்ணன் திருமணம் பற்றிய **பைஷ்மீபரிண சம்பூ**வையும், வேங்கடாத்ரி **விஷ்வகுணாதர்சம்பூ**வையும் எழுதியுள்ளனர். **வரதாம்பிகா பரிணயசம்பூ** வரலாற்றுத் தன்மையுள்ளது. இதிலே அச்யுதராய எனும் விஜயநகர மன்னர் வரதாம்பிகையைத் திருமணம் செய்தமை கூறப்படுகின்றது. இவற்றைவிட ராமாநுஜதாசரின் **ஸ்ரீராமாநுஜசம்பு,** வேங்கடேசகவியின் **ஸ்ரீநிவாஸ விலாசசம்பூ** போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

ஆ) iv. **வசனநூல்கள்:** இக்காலத்திலே வசனநூல்களும் பல எழுதப்பட்டன. ரெட்டி அரசனான பெத்தகோமதிவேம என்பவரின் ஆதரவை பெற்றிருந்தவரும் வித்யாரண்யரின் மாணவருமான வாமனபட்டபாண என்பவர் அரசனைப்பற்றி **வேம்பூபாலசரிதம்** எனும் வசன காவியத்தை எழுதினார். இவரின் வசனநடை பிரபல வசன காவியப் புலவரான பாணரின் நடையை விஞ்சுவதுபோலக் காணப்படுகின்றது. வைத்தியநாதர் பாகவதபுராண சாரத்தைக் **கிருஷ்ணசரிதம்** என வசன வடிவில் எழுதியுள்ளார்.

ஆ) v. **தோத்திரங்கள்:** சமயங்கள் நன்கு போற்றப்பட்ட இக்காலத்திலே பல தோத்திரங்கள் வடமொழியில் இயற்றப்பட்டமையில் வியப்பில்லை. வேதாந்த தேசிகர் **ஹயகிரீவஸ்தோத்திரம், வரதராஜ பஞ்சாசத், அஷ்டபுஜாஷ்டகம், ஸூதர்ஸனாஷ்டகம்** முதலியனவற்றைப் பாடியுள்ளார். ஸ்ரீநிவாஸயஜ்வ என்பவர் **ஏகாம்ரேசஸ்தவ** எனும் பத்திமாலையை இயற்றியுள்ளார். அப்பையதீஷிதர், பத்துச்செய்யுட்களைக் கொண்ட **ஹரிஹர ஸ்தோத்திரங்களை** எழுதியுள்ளார். இதிலே தில்லையிலுள்ள நடராஜரும், கோவிந்தராஜரும் போற்றப்படுகின்றனர். ஜயதீர்த்த தீகாசாரியார் **ஸதாபராதஸ்தோத்திர**த்தினை எழுதியுள்ளார். கேரளத்தைச் சேர்ந்த நாராயணபட்டாரி குருவாயூரிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருமால் பற்றிப் பாடியுள்ள **நாராயணீயம்** சிறந்த தோத்திரமாகும். இதில் 1000 செய்யுட்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) vi. **மாஹாத்மியங்கள்/தலபுராணங்கள்:** குறிப்பிட்ட கோவில் அமைந்துள்ள இடம், அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன்/இறைவியின் திருவடிவம், அவ்விடத்திலுள்ள நீர்நிலை (தீர்த்தம், ஆறு, தடாகம்) முதலியவற்றின் சிறப்புக்களைக் கூறும் நூலே மஹாத்மியம் (மான்மியம்) அல்லது தலபுராணம் எனக் கூறப்படும். இத்தகைய நூல்கள் பல தமிழிலும் உள்ளன. இதிலே இறைவன்/இறைவியின் மகிமை, சமயப்பற்று, நாட்டுப்பற்று என்பன நன்கு வலியுறுத்தப்படும். எடுத்துக்காட்டாக, ததாச்சாரியார் எழுதியுள்ள **பாண்டுரங்க மஹாத்மிய**த்தினைக் குறிப்பிடலாம். இது மஹாராஷ்டிர மாநிலத்திலுள்ள பந்தல்புரத்திலுள்ள திருமாலின் சிறப்புக்களைக் கூறுகின்றது. சிவபிரான் மதுரையிலே புரிந்த 63 திருவிளையாடல்கள் பற்றித் தமிழில் இரண்டு திருவிளையாடற் புராணங்கள் (நம்பி, பரஞ்சோதி எழுதியவை) உள்ளன. வடமொழியிலே **ஹாலாஸ்ய மாஹாத்மியம்** இத்திருவிளையாடல்களைக் கூறுகின்றது. இலங்கையிலுள்ள இந்துசமயத் திருத்தலங்களை சிறப்பாகத் தென்கைலாசம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் திருகோணமலையினை மையமாக வைத்துத் **தக்ஷிண கைலாச மாஹாத்மியம்** எனும் நூல் சிறப்பித்துக் கூறுகின்றது. சிதம்பரம், காஞ்சி, திருவாரூர் முதலிய பல சிவஸ்தலங்கள் பற்றிய மாஹாத்மியங்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஆ) vii. **பிரசஸ்திகள்:** இதற்கு முந்திய காலத்திற் போன்று இக்காலத்திலும் மன்னர் பற்றிய வடமொழிப் பிரசஸ்திகள் அல்லது புகழ்மாலைகள் சாசனங்களிலே தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. இலக்கிய நூல்களிலே மன்னர் புகழ் விரிவாகக் கூறப்படும். ஆனால் சாசனங்களில் அது பொதுவாகச் சுருக்கமாகவே இடம்பெறும். எடுத்துக்காட்டாக விஜயநகரப் பெருமன்னான கிருஷ்ணதேவராயரின் ஹம்பே கல்வெட்டினைக் குறிப்பிடலாம்.

## இ) நாடகங்கள்:

இக்காலத்திலே வடமொழியிலே நாடகங்கள் பல இயற்றப்பட்டன. பிரபல விசிஷ்டாத்துவைத தத்துவஞானியாகிய வேதாந்த தேசிகர் எழுதியுள்ள நூல்களில் **சங்கல்பசூர்யோதயம்** எனும் விசிஷ்டாத்துவைத நாடகமும் ஒன்றாகும். இஃது ஒரு உருவக நாடகமாகும் (Allaegorical drama). இதிலே மனிதனின் தீய, நல்ல மனநிலைகளாக வெறுப்பு, அன்பு வேறுபாடுகளைக் காட்டும் தன்மை, அறியாமை முதலியன உருவகப்படுத்தப்பட்டு அரங்கிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தப்படும். இது கிருஷ்ணமிஸ்ரரின் **பிரபோத சந்திரோதயத்தை** முன்மாதிரியாகக் கொண்டுள்ளது. அது சங்கரருடைய அத்துவைத்திற்கு முக்கியமானதாக விளங்குவது போல இது விசிட்டாத்துவைதத்திற்கு முக்கியமானதாகும். விரூபாஷ அல்லது உதயகிரி வீரப்பகர்ண எனும் பலதிறப்பட்ட அறிவியலாளர் **நாரயணீய விலாச**மெனும் நாடகத்தை எழுதியுள்ளார்.

உத்தண்ட என்பவர் எழுதியுள்ள **மல்லிகாமாருதம்** எனும் நாடகம் பிரபல வடமொழி நாடகாசிரியரான பவபூதியின் மாலதீ மாதவத்தை முன்மாதிரியாகக் கொண்டதாகும். அருணகிரிநாதர் **சோமவல்லி பிரஹஸன** எனும் நகைச்சுவை நாடகத்தை எழுதியுள்ளார். விஜயநகர மன்னர் அவையிலிருந்த வாமனபட்ட என்பவர் **பாவ சிருங்காரபூஷணபீஷண** எனும் நாடகத்தை எழுதியுள்ளார். அது விஜயநகரப் பேரரசின் குலதெய்வமாக விளங்கும் விரூபாக்ஷரின் ஆண்டு விழாவின்போது நடிக்கப்பட்டு வந்துள்ளது. வாமனபட்டர் என்பவர் **பார்வதீ பரிணயம்** (5 அங்கங்கள் கொண்டது), **கனகலோக கல்யாண** (4 அங்கங்கள்), **உஷாபரிணயம்** (4 அங்கங்கள்) முதலிய நாடகங்களை யாத்துள்ளார். நீலகண்ட தீக்ஷிதர் **நளசரித** நாடகத்தினை இயற்றியுள்ளார். ரேசர்லா எனுமிடத்தைச் சேர்ந்த சர்வஞ்ஞ சிங்கண என்பவர் **நாடகபரிபாஷா** எனும் நூலை எழுதியுள்ளார். கிருஷ்ண தேவராயன் எனும் பெருமன்னன் **ஜாம்பவதி கல்யாணம்** எனும் சிறந்த நாடகத்தை இயற்றியுள்ளார். இது பேரரசின் குலதெய்வமான விரூபாக்ஷருக்கான வசந்த உற்சவத்தின் போது நடிக்கப்பட்டு வந்துள்ளது.

செஞ்சிநாயக்கரான சூரப்பநாயக்கரின் வேண்டுகோளின்படி அவரின் சபையிலிருந்தவரும் சத்திய மங்கலத்தைச் சேர்ந்தவருமான ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் **பாவனாபுருஷோத்தம** எனும் நாடகத்தை உருவாக்கியுள்ளார். யஜ்ஞநாராயணதீக்ஷிதர் **ரகுநாதவிலாச** நாடகத்தினை இயற்றியுள்ளார்.

## 2. காவியவியல் :

காவியம் என்பது கவிதையைக் குறிக்கும். எனவே இது பற்றிய அறிவியல் காவியவியல் எனப்படும். இஃது அலங்கார சாஸ்திரம் எனவும் அழைக்கப்படும். இதிலே கவிதை பற்றிய பல்வேறு கோட்பாடுகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களும், விமர்சனமும் இடம்பெறும். இது பற்றிய நூல்களில், இக்காலத்தின் தொடக்க கட்டத்தில் வாழ்ந்த சாயணாச்சாரியரின் **அலங்காரஸுதாநிதி** எனும் நூலினை முதலிற் குறிப்பிடலாம். இதிலே நூலாசிரியர் ரசம், குணம், த்வனி, அலங்காரம் முதலிய காவியவியற் கோட்பாடுகளை விளக்கியுள்ளார். பெத்தகோமடி என்பவர் மம்மடரின் காவிய பிரகாசத்தினையொட்டி **சாஹித்ய சிந்தாமணி** எனும் காவியவியல் நூலை எழுதியுள்ளார். ராஜகொண்ட எனுமிடத்தைச் சேர்ந்த சிம்மபூபால என்பவர் **ரசார்ணவஸுதாகர** எனும் நூலை எழுதினார். இது ரசம், நாடகவிதிகள் பற்றி விளக்குகிறது. அப்பையதீக்ஷிதர் 2ஆம் வேங்கடரின் வேண்டுகோளின்படி **குவலயானந்த** எனும் அணி நூலினை எழுதியுள்ளார். இவர் இலக்கிய விமர்சனம், இலக்கிய ரசனை பற்றிச் சித்திரமீமாம்சா, **லக்ஷணாவலீ** ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவரின் **விருத்திவார்த்திகா** கவிதைப் பயன்பாட்டில் சொற்களின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகின்றது.

யஜ்ஞநாராயணதீக்ஷிதர் ரகுநாதநாயக்கர் சபையில் இருந்தவர். **அலங்காரத்னாகர** எனும் நூலை இயற்றினார். ரகுநாதநாயக்கரின் சபையிலிருந்த ராமபதராம்ப என்பவர் சித்ர, பந்த, கர்ம, ஆசு ஆகிய புதுவித கவிதைகளை இயற்றுவதில் வல்லுநராக விளங்கினார். இவர் தமிழ், வடமொழியுடன் ஆறு பிராகிருத மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். ராஜகொண்ட எனுமிடத்தைச் சேர்ந்த பூபாலரின் (14ஆம் நூ.) சபையிலிருந்த விஸ்வேஸ்வர என்பவர் **சமத்காரசந்திரிகா** எனும் நூலினை யாத்துள்ளார். இது கவிதையின் அணிச்சிறப்புப் பற்றியதாகும்

### 3. தர்மசாஸ்திரம்/நீதி:

இக்காலத்தில் இந்து சமய தர்மசாஸ்திரம்/நீதி பற்றிய கருத்துக்களும் முன்னெடுக்கப்பட்டன. இவ்வகையில், வேதாந்த தேசிகரின் **சுபாஷிதநீவி** எனும் நீதிநூல் குறிப்பிடற்பாலது. இதில் 144 செய்யுட்கள் உள்ளன. இவை பெரும்பாலும் சிலேடையாக உள்ளன. ஹாரீத வேங்கடாச்சாரியார் (தோலப்பர்) **ஸ்மிருதிரத்னாகர** எனும் நூலினை எழுதியுள்ளார்.

### 4. தத்துவம்:

ஏற்கனவே குறிப்பிட்டவாறு இக்காலத்திலே பொதுவாக வைதிக சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பேரரசில் அக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிய i. அத்துவைதம் ii. விசிஷ்டாத்துவைதம் iii. சிவாத்துவைதம் iv. துவைதம் v. சைவசித்தாந்தம் ஆகிய சமய தத்துவங்கள் பற்றிய பல நூல்கள் வாதப்பிரதிவாதங்கள், பழைய நூல்களுக்கான உரைகள், இத்தரிசனங்களின் சாரங்கள் முதலியன எழுதப்பட்டன. இத்தத்துவப் பிரிவுகளுக்கிடையில் வாதப்பிரதிவாதங்கள், கண்டனங்கள் நிலவினாலும் அக்காலச் சூழ்நிலையில் அனைத்தையும் ஒன்றுசேர்த்து நோக்கும் சமரஸநிலை பற்றிய நூல்களும் எழுந்துள்ளன. இவை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

4. i.) **அத்துவைதம்:** ஆதிசங்கருக்குப் பின் அவருடைய சீடர்கள், அவர் போதித்த அத்துவைத தத்துவத்தினை முன்னெடுத்தனர். விஜயநகரப் பேரரசை நிறுவுவதில் ஒரு முக்கியமான பங்கினை வகித்தவரும், சமகாலச் சிருங்கேரி மடத் தலைவருமாகிய வித்யாரண்யர் (கி.பி. 14ம் நூ.) இயற்றியுள்ள **அனுபூதி பிரகாசிகா** உபநிஷதங்களுக்கான விளக்கமளிக்கின்றது. இதைவிட **ஐதரேயதீபிகா, தைத்திரீயதீபிகா, விவரண பிரமேய சங்கிரகம், பஞ்சதசி** முதலிய நூல்களை அவர் எழுதியுள்ளார். இதே காலப்பகுதியில் வாழ்ந்தவரும், விஜயநகரப் பேரரசனான புக்கனுடைய குலகுருவும் அமைச்சருமாகிய சாயணாச்சாரியரின் சகோதரரான மாதவாச்சாரியார் எழுதியுள்ள நூல்களில் ஒன்றான **ஜீவன் முக்த விவேகம்,** அத்துவைத வேதாந்தம் பற்றிய ஒரு முக்கியமான நூலாகும். இவர் வைதிக வேள்விகளைச் செய்த இல்வாழ்வாராவர்.

4.ii.) **விசிஷ்டாத்துவைதம்:** இக்காலத்திலே ராமாநுஜரின் விசிஷ்டாத்துவைதம் பற்றி எழுதியவர்களில் வேதாந்த தேசிகர் நன்கு குறிப்பிடற்பாலர். ஏற்கனவே இவர் விசிஷ்டாத்துவைதம் பற்றிப் பல நூல்களை எழுதியுள்ளார். ராமாநுஜரின் முக்கியமான சில நூல்களுக்கு இவர் உரையெழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் **ஸ்ரீபாஷ்ய உரை, அதிகரணசாராவலீ, தத்துவமுக்தகல்ய, பஞ்சராத்ரரக்ஷ, சத்சரித்ரரக்ஷ** முதலியன குறிப்பிடற்பாலன. பிற்கூறப்பட்ட இரு நூல்களில் பஞ்சராத்திர ஆகமங்கள் கூறும் வழிபாட்டின் மூலக்கோட்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் வேங்கடமன்னனின் ஆதரவினைப் பெற்றிருந்த ததாச்சாரியார் பிரபல அறிஞரும் வைணவசமயத் தலைவருமாவார். **பாண்டுரங்க மாஹாத்மியம்** எனும் நூலினை எழுதியவர். இவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாத்விகபிரமவித்யாவிலாசம்** எனும் தத்துவநூலை எழுதியவர். வைணவத்தைப் பல இடங்களிலும் பரப்புவதற்கு முயன்றவர்.

4. iii.) **சிரவாத்துவைதம்:** இதனை முன்னெடுத்தவர்களில் ஒருவரான அப்பைய தீக்ஷிதர் (கி.பி. 1521 – 1593) இளம் வயதிலேயே வேதங்கள், தத்துவங்கள், மற்றும் பிற அறிவியல்களில் வல்லுநராக, பல்கலை விற்பன்னராக விளங்கினார்; ஆழமான புலமையுடையவராக ஸ்ரீகண்டர் வலியுறுத்திய சிவாத்துவைதத்தை மீண்டும் முன்னெடுத்தார்; இதனால் ஸ்ரீகண்டமதபிரதிஷ்டாபனாசாரிய எனச் சிறப்பாக அழைக்கப்பட்டார். இவருடைய பல நூல்களில் **சிவார்க்காமணிதீபிகா** பிரமசூத்திரங்களுக்கு ஸ்ரீகண்டர் எழுதிய சைவபாஷ்யத்திற்கான உரையாகும். இதில் இவர் சிவபிரானையே முழுமுதற் கடவுளாகப் பரபிரமமாக வலியுறுத்தி அவரின் திருவருள் மூலமே விடுதலை ஏற்படுமென்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளார். இதில் இவர் மீமாம்சம், நியாயம், வியாகரணம், அலங்காரம் முதலியனவற்றின் முழுமையான அறிவினை வெளிப்படுத்தியுள்ளார். இதிலே அத்துவைதத்தினை நிராகரித்துத் தாம் போற்றும் சிவாத்து வைதத்தினை நிலைநாட்ட முயற்சிக்கிறார். **பரிமளம்** எனும் தமது பிறிதொரு நூலிலே சிவாத்துவைதத்தினை இவர் மிக வலுவாக வலியுறுத்தியுள்ளார். **சிவதத்துவவிவேகம்** எனும் நூலிலே சிவனே பிரபஞ்சத்தின் தலைவர் என்கிறார். மும்மூர்த்திகளில் சிவனே மேலானவர் என்பதைச் **சிவ கர்ணாமிர்த, சிகரிணிமாலா, சிவமஹிமா, சிவாத்துவைதநிர்ணய** எனும் நூல்களிலே நன்கு வலியுறுத்தியுள்ளார். இவருடைய கருத்துப்படி புராணங்கள் உபநிஷதங்களும் கூறும் சிந்தனைகள் வேறுபட்டன அல்ல; ஒன்றேயாம். சிவ வழிபாடு பற்றி இவர் எழுதிய நூல்களில் **சிவார்ச்சனா சந்திரிகா, சிவபூஜாவிதி, சிவத்யானபத்ததி** முதலியன குறிப்பிடற்பாலன. **ராமாயண தாத்பர்ய சங்கிரஹ, மஹாபாரததாத்பர்ய சங்கிரஹ** எனும் நூல்களில் இவர் சிவபிரானே பிரபஞ்சத்தலைவர் என நிரூபிக்க முயன்றுள்ளார்.

இவர் சிவாத்துவைதத்துவத்தினை மேம்படுத்திக் கூறினாலும் சிவபெருமானுக்கும் திருமாலுக்குமிடையில் வேறுபாடு கண்டிலர். **சிவதத்துவ விவேகம்** எனும் நூலில் சிவபிரான் திருமால் ஆகியோரின் ஒருமைப்பாட்டினை நிரூபிக்க முயன்றுள்ளார். திருமால் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரதராஜஸ்தவ** எனும் தோத்திரத்தினையும் இயற்றியுள்ளார். **சதுர்மத சங்கிரகம்** எனும் நூலிலே அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சிவாத்துவைதம் எனும் நான்கு தத்துவங்கள் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். பல்வேறு தரிசனங்களையும் சமரசப்பாங்குடன் இவர் நோக்கியுள்ளார். "சூத்திரங்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருப்பதால் அவற்றைப் பலவாறு பலரும் விளக்குவதை யார் தடுக்க முடியும்" என அவர் கூறியிருப்பதில் அவரின் மேற்குறிப்பிட்ட நோக்குப் புலப்படுத்துகின்றது.

4. iv.) **துவைதம்:** சொடேமடத்தைச் சேர்ந்த வியாசராஜரின் வாரிசான வாதிராஜத்தர் பிரபல அறிஞரும், தர்க்க ரீதியாகச் சிறப்பாகக் கருத்துக் கூறுபவருமாவார். இவர் ஒரு துவைத தத்துவஞானி; அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். அவற்றுள் **விவர்ணவிரணம், பாஷாண்ட கண்டனம், சக்ரமீமாம்ச, நியாயரத்ணாவலீ, யுக்திமல்லிகா** முதலியன குறிப்பிடற்பாலன. கடைசியாகக் குறிப்பிட்ட நூல் துவைத தத்துவ ஆசிரியரான மத்துவரின் நோக்கிலே பிரமசூத்திரக் கருத்துக்களை விரித்துக் கூறுகின்றது.

4. v.) **சைவசித்தாந்தம்:** சைவசித்தாந்தம் பற்றிய நூல்கள் தமிழில் மட்டுமின்றி வடமொழியிலுமுள்ளன. ஏற்கனவே பல்லவர், சோழப்பெருமன்னர் காலங்களிலே பல சைவாகமங்கள், பத்ததிகள் தொகுக்கப்பட்டன. அவற்றுட் சிலவற்றிற்கு உரைகளும் எழுதப்பட்டன. இவற்றின் தொடர்ச்சியினை முன்னையிலும் அதிக அளவில் இக்காலத்திற் காணலாம். விஜயநகரப் பேரரசு தோன்றுவதற்குச் சற்று முன்வாழ்ந்த உமாபதிசிவாச்சாரியார் தமிழில் மட்டுமன்றி வடமொழியிலும் சைவசித்தாந்தம் பற்றி எழுதியுள்ளார். எடுத்துக்காட்டுகளாக பல ஆகமங்களிலிருந்து தொகுக்கப்பட்ட நூறு செய்யுட்களைக் கொண்ட **சதரத்ந சங்கிரகம், பௌஷ்கராகமஞான பாதவிருத்தி** போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்காலத்திலே தமிழிலும், வடமொழியிலும் சைவசித்தாந்தம் பற்றிய நூல்களை எழுதியவர்களிலே சூரியனார் கோவில் ஆதீன முதல்வராக விளங்கிய சிவாக்ரயோகிகள் நன்கு குறிப்பிடற்பாலர். இவர் வடமொழியிலே **சைவபரிபாஷா, சைவசந்நியாஸபத்ததி, கிரியாதீபிகா,** முதலிய நூல்களை எழுதியுள்ளார். சர்வாத்மசம்பு சிவாசாரியார் **சித்தாந்த பிரகாசிகா** எனும் நூலை எழுதியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.சில தொகுப்புகள்

### 5 i.) தரிசனங்கள் பற்றிய தொகுப்புகள் :

இக்காலத்தில் நிலவிய தரிசனங்கள் அல்லது தத்துவங்கள் பற்றிய விளக்கங்களின் தொகுப்புகள், கண்டனங்கள் முதலியனவும் குறிப்பிடற்பாலன. இவற்றுள் ஒன்று மாதவரின் **சர்வதரிசன சங்கிரகம்**. இது எழுதப்பட்ட காலத்தில் (கி.பி. 14ம் நூ.) நிலவிய அல்லது அறியப்பட்ட பதினாறு தரிசனங்களை பௌத்தம் தொடக்கம் அத்துவைதம் வரையுள்ளன பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன. இவை கூறப்பட்டிருக்கும் விதத்தில் ஒரு படி முறை உள்ளது. அனைத்தையும் கூறி முடிவிலே கூறப்பட்டுள்ள அத்துவைதமே சிறந்ததெனக் கூறப்படுகின்றது. அப்பையதீக்ஷிதரின் **சதுர்மதசாரம்** அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், சிவாத்துவைதம், துவைதம் ஆகிய நான்கு தரிசனங்களின் சாரத்தைக் கூறுகின்றது.

**5 ii.) பழைய நூல்களின் தொகுப்புகள் சாரம் :** சாயணரின் **சுபாஷிதஸுதாநிதி** காப்பியங்கள், சாஸ்திர நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட் தொகுப்பாகும். இவருடைய **புருஷார்த்தாஸதாநிதி** புராணங்கள் கூறும் கருத்துக்களின் தொகுப்பாகும். வைத்திநாகர் மகாபாரதத்தைச் செய்யுள் நடையிலே சுருக்கி **பாலபாரதம்** எனப் பெயரிட்டுள்ளார். இது 21 சர்க்கங்கள் கொண்டதாகும்.

## 6. இசை, நடனம்

இக்காலத்தில் இசையும், நடனமும் அரசசபை, ஆலயங்கள் முதலியவற்றிலே நன்கு போற்றப்பட்டன. சாஸ்திரிய இசை, நடனங்கள் மட்டுமன்றிக் கிராமிய இசை நடனங்களும் நன்கு போற்றப்பட்டன. சாஸ்திரீய இசை நடனமாகியவற்றில் வடமொழியின் சாயல், பயன்பாடு பல்வேறு அளவுகளிலே காணப்படும். இசை நடனம் போற்றப்பட்டமைக்குச் சமகாலக் கோயில்களிலுள்ள சிற்பங்களும், அவற்றிலிடம்பெற்ற இசை நடன நிகழ்வுகளும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இக்காலத்திய இசை பற்றிய நூல்களிலே புகழ்பெற்ற வித்யாரண்யர் எழுதிய **சங்கீதசாரம்**, பெத்தகோமடிவேம எழுதிய **சங்கீத சிந்தாமணி**, ரேசர்ல எனும் இடத்தைச் சேர்ந்த சர்வஞ்ஞ சிங்கண என்பவர் எழுதிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கீதஸுதாகரம்** முதலிய நூல்களைக் குறிப்பிடலாம். லக்ஷ்மீநாராயண என்பவர் **சங்கீத சூர்யோதய** எனும் நூலை எழுதி கிருஷ்ண தேவராய எனும் பெருமன்னனுக்கு அதைச் சமர்ப்பணம் செய்தார். அச்சுதராயர் **தாளமகோததி** எனும் நூலினை எழுதியுள்ளார். குமாரகிரி எனும் ரெட்டி அரசர் **வசந்தராஜீய** எனும் நாட்டிய நூலை எழுதியுள்ளார்.

தஞ்சாவூரில் ஆட்சிசெய்த ரகுநாதநாயக்கர் சங்கீதத்திலும், சாஹித்தியத்திலும் (இலக்கியத்திலும்) சிறந்த புலமையாளர். வடமொழியிலும் தெலுங்கிலும் சிறந்த கவிஞர். இவர் **சங்கீதஸுதா** எனும் நூலினைத் தம்முடைய அமைச்சரான கோவிந்ததீக்ஷிதருடன் சேர்ந்து எழுதினார் எனக் கருதப்படுகின்றது. கோவிந்ததீக்ஷிதரின் மகனாகிய வேங்கடமகியென்பவரே கர்நாடக இசைக்குரிய முக்கியமான சாஸ்திர நூல்களில் ஒன்றான **சதுர்தண்டிபிரகாசி**காவை இயற்றினார்.

ஆனால் கர்நாடக இசைக்குரிய முன்னோடிக் கருத்துக்கள் இவருக்கு முற்பட்ட கால ராமாராயரின் ஆதரவு பெற்ற ராமாமாத்தியருடைய **ஸ்வரமேளகலாநிதி**, சோமநாதரின் **ராகவிபோதம்**. ஏற்கனவே குறிப்பிட்ட சங்கீதஸுதா முதலிய நூல்களில் வந்துவிட்டன. இந்நூல்கள் வடமொழியிலுள்ளன. நடனம் பற்றிய நூல்கள், குறிப்புகள் குறைவாகக் காணப்படுகின்றன. ஆனால் **அபிநயதர்ப்பணம், நாட்டிய சாஸ்திரம்** போன்ற நூல்கள் தொடர்ந்து கற்கப்பட்டன.

## 7. மருத்துவம், வானியல், சோதிடம்

சாயாணாச்சாரியார் ஆயுர்வேத வைத்தியம் பற்றி **ஆயுள் வேதஸுதாநிதி** எனும் நூலை எழுதியுள்ளார். 2ஆம் புக்கனின் சபையிலிருந்த லக்ஷ்மணபண்டித என்பவர் **வைத்தியராஜவல்லப** எனும் நூலினை இயற்றியுள்ளார்.

லொல்ல லக்ஷ்மீதரர் வானியல், சோதிடம், மந்திர சாஸ்திரம் பற்றி எழுதியுள்ளார். இவரின் **தைவஜ்ஞ விலாசம்** நன்கு குறிப்பிடற்பாலது. வேங்கடமகி என்பவர் சுல்வமீமாம்ச எனும் நூலினை எழுதியுள்ளார். இது வேதங்களிலே கூறப்படும் முக்கோணவியல் (trignometry) பற்றியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. தமிழிலுள்ள நூல்களையொட்டியெழுந்த வடமொழி நூல்கள்

வடமொழியிலுள்ள சில நூல்களையொட்டித் தமிழிலே நூல்கள் எழுதப்பட்டது போலத் தமிழ் நூல்களையொட்டித் தழுவலாகவோ சாரமாகவோ சில நூல்கள் வடமொழியில் இயற்றப்பட்டன. இவை சமயச்சார்பானவை.

சிவபெருமானின் 64 திருவிளையாடல்களைத் தமிழிலே நம்பியும், பரஞ்சோதியும் ஒவ்வொரு திருவிளையாடற் புராணமாக எழுதியுள்ளனர். இது கூறும் பொருள் **ஹாலாஸ்ய மாஹாத்மியம்** என வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. நீலகண்ட தீக்ஷிதரின் சிவலீலார்ணவமும் இவை பற்றியே 22 சர்க்கங்களிலே கூறுகின்றது.

பெரியபுராணம் கூறும் 63 சைவநாயன்மாரின் வரலாறு பவிஷ்யோத்தர புராணத்திலே **சிவபக்த மாஹாத்மியம்** என இடம் பெற்றுள்ளது. மேலும், இதே விடயம் பற்றி ஹரதத்தரும், உபமன்யுவும் **சிவபக்தவிலாசம்** எனும் பெயரில் ஒவ்வொரு நூல் எழுதியுள்ளனர். வைணவசமய ஆச்சாரியர்கள், ஆழ்வார்களின் வரலாற்றினை ஸ்ரீநிவாஸ என்பவர் **திவ்வியசூரிசரிதம்** எனும் நூலிலே எழுதியுள்ளார்.

## 9. இலக்கணம்

வடமொழியிலுள்ள மூலநூல்களைக் கற்றல், அவற்றுக்கான உரை எழுதல், புதிய நூல்களை எழுதுவதற்கு இலக்கண அறிவு அவசியமாகும். இவ்வகையில் சாயணாச்சாரியார் எழுதியுள்ள **தாதுவிருத்தி**, பட்டோஜி தீக்ஷிதரின் (கி. பி. 17ம் நூற்றாண்டு) **சித்தாந்த கௌமுதி** முதலியன குறிப்பிடற்பாலன. பின்னையது மிகப்பிரபலமான இலக்கண நூலாகும். சுந்தரேஸ்வர சாஸ்திரி பொதுவாக சொக்கநாதமகி என அழைக்கப்பட்டார். இவர் பெரிய இலக்கண நிபுணர். எனவே 'சாப்திக சார்வபௌம' எனச் சிறப்பாக அழைக்கப்பட்டார். இவர் **சப்தகௌமுதி, பாஷ்யரத்னாவலீ, தாது ரத்னாவலீ** ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

## 10. நிகண்டு / அகராதி

இலக்கியம், இலக்கணம், கற்கவும் பழைய நூல்களுக்கான உரைகள் எழுதப்பட நிகண்டுகள் அல்லது அகராதிகள் தொகுக்கப்பட்டன. 2ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிகரன் எனும் அரசனின் அமைச்சனான இருளப்பதண்டநாயக்க என்பவர் **நானார்த்தரத்னமாலா** எனும் நிகண்டினைத் தொகுத்தார். இவர் சமணர். ஆனால் அரசர் வைதிக சைவ சமயத்தவர். ராமாநுஜரின் குருவாகிய யாதவப்ரகாசர் வைஜயந்தி எனும் அகராதியைத் தொகுத்தார். வாமனபட்டபாண **சப்தரத்னாகர, சப்தசந்திரிகா** எனும் இரண்டு அகராதிகளைத் தொகுத்துள்ளார்.

### 11. உரைகள்:

இக்காலத்திலே வேதங்கள் தொடக்கம் சமகாலத்தில் எழுந்த பல நூல்கள் வரை உரைகள் எழுதப்பட்டமை நன்கு கவனித்தற்பாலது. மூல நூல்களில் சிலவற்றிற்கு ஏற்கனவே எழுதப்பட்ட சில உரைகளுக்கும் உரைகள் அல்லது விளக்கங்கள் எழுதப்பட்டன. பழைய பாரம்பரிய நூல்கள் நன்கு போற்றப்பட்டுக் கற்கப்பட்டமையாலேயே காலத்தின் தேவை குறித்து பல்வேறுபட்ட அறிவியல் நூல்களுக்கு உரைகள் எழுதப்பட்டன. இவற்றைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம்.

### 11. i) சுருதி அல்லது வேதங்களுக்கான உரைகள்

இவ்வகை உரை எழுதியவர்களில் மாதவாச்சாரியரும் அவரின் இளைய சகோதரர் சாயணாச்சாரியரும் குறிப்பிடற்பாலர். விஜயநகரப் பேரரசின் ஆரம்பகாலத்திலே வித்யாரண்யர், ஹரிகரன், புக்கன் முதலியோர் காலத்தில் இவர்கள் வாழ்ந்தனர். சாயணாச்சாரியாரே வேதங்கள் பலவற்றிற்கு உரையெழுதிய பிரபல உரையாசிரியர். சமகால விஜயநகர மன்னர் சிலரின் அரசறிஞர், அமைச்சராகவும் விளங்கியவர். இவர் 'வியாசரின் மறு அவதாரம்' எனவும் சிறப்பிக்கப்பட்டவர்; பல திறப்பட்ட நூல்களும், உரைகளும் எழுதியவர். இவர் இருக்கு, சாம, அதர்வ, சுக்லயஜுர் வேத, தைத்திரீய சங்கிதைகள், தைத்திரீய ஆரண்யகம் வம்சபிராமணம் ஆகியனவற்றிற்கும் பாஷ்யங்கள் உரைகள் எழுதியுள்ளார். ஆனால் இவ்வுரைகளை இவரும் மூத்தசகோதரராகிய மாதவாச்சாரியாரும் சேர்ந்து எழுதினர் எனவும் ஒரு சாரார் கருதுகின்றனர். மாதவதீர்த்த எனும் துவைத தத்துவஞானி இருக்கு, யஜுர், சாம வேதங்களுக்குத் தனது நோக்கில் உரை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ii) ஸ்மிருதி அல்லது தர்மசாஸ்திர உரைகள்

மேற்குறிப்பிட்ட மாதவாச்சாரியார் பராசரஸ்மிருதிக்கு **பராசராவ்யாக்யா** எனும் உரையினை எழுதியுள்ளார். இதில் இந்துக்கள் நாடோறும் பின்பற்ற வேண்டிய ஒழுக்கம், கிரியைகள் ஆகியன கூறப்பட்டுள்ளன. இதிலே வ்யவஹாரத்தையும் பிற்சேர்க்கையாக இவர் இணைத்து எழுதியுள்ளார். இதன் பின்னர் தருமம், அது எப்பொழுது செய்யவேண்டும்? அதன் விவரங்கள் பற்றி இவர் **காலமாதவீய** அல்லது **காலநிர்ணயம்** எனும் நூலிலே விளக்கியுள்ளார். வேங்கடாச்சாரியாரின் (தோலப்பர் கி.பி. 1450 – 1500) **ஸ்மிருதிரத்னாகரம்.** வைஷ்ணவசமய சட்டம் பற்றி விரிவாக விளக்குகிறது. வைத்தியநாத தேசிகரின் (17 ஆம் நூற்றாண்டு) **ஸ்மிருதிமுக்தா பலம்** எனும் நூலுக்கான உரை குறிப்பிடற்பாலது.

## 11. iii) இதிஹாஸங்களுக்கான உரைகள்

மஹாபாரதம், ராமாயணம் ஆகிய இதிஹாசங்களும் இக்காலத்திலே நன்கு பயிலப்பட்டன. தென்னிந்தியாவில் ராமாயணத்திற்கு இருபது உரைகள் வரையில் எழுதப்பட்டுள்ளன. மாதவியோகி ராமாயணத்திற்கு **கடக** எனும் உரையினை எழுதியுள்ளார். இது ராமாயண பாடாந்தரம் பற்றிய விமர்சனமாகவும் அமைந்துள்ளது. அத்துடன் ராமர் பிரமாவின் அவதாரம் எனவும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்வரதீக்ஷிதர் ராமாயணத்திற்கு **லகுடீகா** (சிற்றுரை), **பிருஷத்டீகா** (பேருரை) என இரண்டு உரைகளை எழுதியுள்ளார். இவற்றைக் கிருஷ்ணதேவராயரின் ஆதரவுடன் எழுதியுள்ளார். வாதிராஜா என்பவர் மஹாபாரதத்திற்கு உரை எழுதியுள்ளார். இந்நூல் ஒரு லட்சம் செய்யுட்கள் கொண்டதென்பதை இதில் உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

## 11. iv) மஹாகாவியங்களுக்கான உரைகள்

வித்யாரண்யரின் மாணவரான நாரண என்பவர் நைஷதியமெனும் பெருங்காப்பியத்திற்கு **நைஷதீய தீபிகா** எனும் உரையினை எழுதியுள்ளார். வித்யாமாதவ என்பவர் **குமாரசம்பவம் கிராதார்ஜுனீயம்** ஆகிய மஹாகாவியங்களுக்கு உரையினை யாத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11. v) நாடக உரைகள்

சாலுவதிம்ம எனும் அரசனின் நெருங்கிய உறவினரான கோப என்பவர் கிருஷ்ணமிஸ்ரரின் **பிரபோத சந்திரோதய** எனும் நாடகத்திற்கு உரை எழுதியுள்ளார்.

### 11. vi) சதகங்களுக்கான உரைகள்

கொண்டவீடு ரெட்டி அரசரான பெத்த கோமதிவேக காதல் பற்றிய நூறு சிறந்த பாடல்களைக் கொண்டுள்ள அமருவின் **அமருசதகத்திற்கும்** பிராகிருதமொழியிலே காதல்பற்றி ஹால என்பவர் எழுதிய 700 பாடல்கள் கொண்டுள்ள **காதாசப்தசதீ** எனும் நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு பாடல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

### 11. vii) தோத்திரங்களுக்கான உரைகள்

ஆதிசங்கரர் இயற்றிய **சௌந்தர்யலஹரீக்கு** அருணகிரிநாதர், லொல்ல லக்ஷ்மீதரர் ஆகியோர் உரைகள் எழுதியுள்ளனர். செருகூர் லக்ஷ்மீதரர் ஜயதேவரின் கீதகோவிந்தத்திற்கு **சுருத ரஜனி** எனும் உரையினை எழுதியுள்ளார். இக்காலப் பகுதியிலே வாழ்ந்த விசிஷ்டாத்துவைத தத்துவஞானியாகிய வேதாந்ததேசிகர் எழுதிய **பாதுகாசகஸ்ர** எனும் தோத்திரத்திற்கு அப்பையதீக்ஷிதர் எனும் சிவாத்துவைத தத்துவஞானி உரை எழுதியுள்ளமை குறிப்பிடற்பாலது. கோவிந்த தீக்ஷிதரின் ஒரு மகன் **சிவசஹஸ்ர நாமபாஷ்யம்** எழுதியுள்ளார்.

### 11. viii) சைவசித்தாந்த உரைநூல்கள்

இக்காலத்திய வடமொழிச் சைவசித்தாந்த நூல்களிலே, உரைகள் குறிப்பிடற்பாலன. குறிப்பாக முக்கியமான சைவசித்தாந்த நூலான சிவஞானபோதத்திற்கு சதாசிவாச்சியார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவாமி ஞானப்பிரகாசர், சிவாக்ரயோகி ஆகியோர் எழுதியுள்ள உரைகளைக் குறிப்பிடலாம். கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர் சிற்றுரையும், பேருரையும் எழுதியுள்ளார். இவர்கள் வடமொழியிலுள்ள ரௌரவாகமத்திலே காணப்படும் சிவஞானபோதத்திற்கே உரை எழுதியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இன்று கிடைத்துள்ள ரௌரவாகமத்தில் இப்பகுதி காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11. ix) இசை நூல்களுக்கான உரைகள்

கோபதிப்ப என்பவர் தாளம் பற்றிய நூலொன்றுக்குத் **தாளதீபிகா** எனும் உரையினையும், சோமநாதகவி **தாளமஹோததி**க்கான உரையினையும் எழுதியுள்ளனர்.

### 11. x) தர்க்க நூல்களுக்கான உரை

**தர்க்கபாஷா** எனும் நூலுக்கு மல்லிநாதரும், சென்னுபட்ட (14 ஆம் நூற்றாண்டு) என்பவரும் உரைகள் எழுதியுள்ளனர். பிரபல **தர்க்கசங்கிரகத்தையும்** (கி.பி 1627) அதற்கான **தீபிகை** அல்லது உரையினையும் எழுதியுள்ள அன்னம்பட்டர் குறிப்பிடற்பாலர்.

### 11. xi) நிகண்டு உரை

**நிருக்தத்திற்கு** தேவராஜ என்பவர் (கி.பி 15ஆம் நூற்றாண்டு) சிறந்த விளக்கவுரை எழுதினார். வேதங்கள் பற்றிய அறிவுப்புலமையில் இஃது ஒரு முக்கியமான கட்டத்தினைக் குறிக்கின்றது.

வடமொழி இலக்கியம் இவ்வாறு இக்காலத்திலே வளம் மிக்கதாகவும் பல திறப்பட்ட வகைகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர நாயக்கர் காலப் பண்பாட்டில் சமஸ்கிருதமொழிச் செல்வாக்கு

திரு.ம. பாலகைலாசநாதசர்மா

## அறிமுகம்

தென்னிந்திய வரலாற்றிலே கி.பி. 1336 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 1586 ஆம் ஆண்டு வரையும் விஜயநகர நாயக்கர்காலமாகும். தென்னிந்திய பண்பாடும், சமயங்களும், அரசியலமைப்புக் களும், பொருளாதார வளர்ச்சியும் அழுந்திடாது காத்த பெருமைக்குரிய பேரரசு விஜயநகர நாயக்கர் காலப் பேரரசாகும், துங்கபத்திரை தொடக்கம் கிருஷ்ணா நதிகளுக்கிடையில் காணப்பட்ட பரந்துப்பட்ட பிரதேசம் விஜயநகர நாயக்கர் காலத்திற்குரிய இடமாகும்[1].

பண்பாட்டின் பல்வேறுபட்ட அம்சங்களை அறிவதற்கு ஆதாரங்கள் முக்கிய காரணிகளாக அமைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டின் அம்சங்களான சமயம், தத்துவம், கலைகள், மக்களின் வாழ்க்கைமுறை, அரசியல், பொருளாதாரம், கல்விமுறை, சட்டம், ஒழுக்கமுறை, நீதி பரிபாலனம் என்பவற்றை முழுமையாக அறிவதற்கு குறிப்பிட்ட காலங்களில் காணப்பட்ட இலக்கியங்கள், தொல்பொருள் ஆதாரங்கள், அயல் நாட்டவர்களின் குறிப்புக்கள், வரலாற்றுப்பதிவுகள், கட்டட, சிற்ப, ஓவிய, நடன. நாடக, வளர்ச்சிகள் என்பவை ஆதாரங்களாக அமைகின்றன. அவ்வகையில் விஜயநகர நாயக்கர் காலப்பண்பாட்டில் சமஸ்கிருத மொழிச் செல்வாக்கு எவ்வாறு காணப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய கருப்பொருளாகும்.

## சமஸ்கிருத மொழி

இந்தியா முழுவதிலும் உயர் கலாசார மொழியாக விளங்கியது சமஸ்கிருத மொழியாகும். பல நூற்றாண்டு காலமாக அறிஞர்களும், கல்வியாளர்களும், சமயப் பெரியார்களும், சமயவாதிகளும் செய்த பல்வேறுபட்ட பணிகளால் இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் பெருந்தொகையான நூல்கள் ஆக்கப்பட்டு வெளிக்கொண்டு வரப்பட்டன. இவ்விலக்கிய பண்பாட்டின் செல்வாக்கை நன்கு நோக்கும்போது ஏனைய மொழிகளான தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் எழுச்சிப்பெற்ற இலக்கியங்களும் அவை சார்ந்த ஆசிரியர்களும் சமஸ்கிருத மொழியுடன் செல்வாக்குப் பெறுகின்றன.[2] இம்மொழிகளில் எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழிக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றன.

## சம்ஸ்கிருத மொழிச் செல்வாக்கின் தன்மைகள்

விஜயநகர நாயக்கர் காலப்பண்பாட்டில் சம்ஸ்கிருதம் மிகவும் உயர்நிலை பெற்று பல்வேறு தன்மைகளில் செல்வாக்குப் பெற்றிருந்தது. குறிப்பாக சமயம், தத்துவம், கவின்கலைகள், கல்வி, பக்தி, வரலாறு, சட்டம், ஒழுங்கு, கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், நடனம், நாடகம் மொழியியல், மொழித்தொடர்பு, மொழிக்கலப்பு, இலக்கண இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், உரைநூல்கள், செப்பேடுகள் போன்ற பல்வேறுபட்ட தன்மைகளால் சம்ஸ்கிருதமொழி குறிப்பிடத்தகுந்த செல்வாக்கை விஜயநகர நாயக்கர் காலப் பண்பாட்டிலே பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச அமைப்புக்களிலும் அரசியல் பரிபாலனத்திலும்

துங்கபத்திரை நதிக்கரையை வரலாற்றுச்சிறப்பு மிக்க புராணபெருமையான இடமென உணர்ந்த வித்யாரண்யர் அவ்விடத்தில் விஜயநகரத்தை அமைக்க ஏற்ற இடமாக கருதியிருந்தார்[4]. ஏனெனில் இராமாயணத்தில் வாலி, சுக்ரீவன், அனுமன் ஆகியோர் வாழ்ந்த கிஷ்கிந்தையே விஜயநகரம் அமையப்பெற்ற இடமாகும். மேலும் ராமன் சீதையைத் தேடிவந்தபோது பம்பாசரஸ் என்ற சுனையில் தங்கி சுக்ரீவன் அனுமன் ஆகியோருடன் நட்பு கொண்ட இடமாகவும் உள்ளது[5]. விஜயநகரத்தைச் சூழ்ந்த மலைகளுக்கு ரிஷியமுகபர்வதம், மதங்கபர்வதம் போன்ற சம்ஸ்கிருதத்தில் அமைந்த இதிகாச கதைகளின் இடப்பெயர்களும் சம்ஸ்கிருத செல்வாக்கைப் பெற்றிருந்தன.

இற்றைவரையும் சம்ஸ்கிருத மொழியில் உயர்ஸ்தானமாக விளங்கும் சிருங்கேரி மடத்தின் தலைவராக விளங்கிய மாதவ வித்யாரண்யரின் அருளாசி கிடைக்கப்பெற்று உருவான பேரரசு விஜய நகரப் பேரரசு எனவும் 1347 இல் சங்கம பிரபுக்கள் ஐவரும் சிருங்கேரி மடத்திற்கு கொடையளித்துள்ளனர் என்ற குறிப்பும் காணப்படுகிறது[6]. எனவே இக்கால சம்ஸ்கிருத மொழியின் பல்வேறுபட்ட வளர்ச்சிக்கு சம்ஸ்கிருத பீடமாக சிருங்கேரி மடம் துணை செய்திருக்கிறது.

## கல்வி நிலையில் சமஸ்கிருத மொழிச் செல்வாக்கு

கல்வியமைப்பைப் பொறுத்தவரையில் பொதுக்கல்வியிலும் பார்க்க சம்ஸ்கிருத மொழிக்கல்வியைப்பற்றி உறுதியான செய்திகள் காணப்படுகின்றன[8]. சம்ஸ்கிருத மொழியில் உயர்தரக் கல்விக்காக தாராளமாக வழங்கப்பட்ட வெகுமதிகளும் சிலாசனங்களிலே பதியப்பட்டுள்ளது. குறிப்பாக ஒவ்வொரு இடத்திலும் வாழ்ந்த மக்கள் பேசும் மொழி பேணி வளர்க்கப்பட்டது என்பதை சாசனங்களும் வடமொழியால் இயற்றப்பட்ட ஏராளமான இலக்கியங்களும் எடுத்துகாட்டுகின்றன.

அரசியல் பரிபாலனம் கல்வி ஆகிய துறைகளில் அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் மொழி எந்த விதத்திலும் புறக்கணிக்கப்படவில்லை. இக்காலத்தின் பிற்பகுதிகளில் மடங்களும் ஆதீனங்களும் பெருந்தொகையாகத் தோன்றி பிரதேசமொழிக் கல்விக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்திற்கும் பெரும் ஆதரவும் காட்டின[9]. மடங்களும் சமணப்பள்ளிகளும் புத்த விகாரைகளும் அவையவை அமைந்திருந்த இடங்களில் வாழ்ந்த மக்களுக்குக் கல்வி கற்பிப்பதில் பெரும் பங்கு வகித்தன.

இதன் பின்னணியில் வந்தப் பாரம்பரியங்களில் ஆரம்ப காலத்தில் சமஸ்கிருத மொழியில் அமைந்த புராண இதிகாசங்களை மனனஞ்செய்து அவற்றை விளங்க வைப்பதற்கு கோவில்களிலே தர்மச் சொத்துக்களும் எழுதி வைக்கப்பட்டன. எனினும் சம்ஸ்கிருதக் கல்விப் பயிற்சி இக்காலத்திலும் பிராணமர்களின் தனியுரிமையாக இருந்தது.[10] சிறப்பாக விஜயநகர அரசர்களின் விஷேசமான வெகுமதிகள் மூலம் மக்களின் ஆதரவுடன் சம்ஸ்கிருதக் கல்விக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

வேதம்(திரயீ வித்யா) பொருளியல் (வார்த்தா), தத்துவம் (ஆன்விட்சிகி), அரசியல் (தண்ட நீதி) என்ற நான்கு போதனைகள் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. இப்பிரிவுகள் அரசர்களுக்குப் பொருத்தமானவையாக அமைந்தன. சம்ஸ்கிருத இலக்கிய வளத்தில் இருந்த பதினெட்டு வித்தைகள் கற்பிக்கப்படன. நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் (சிட்க்ஷை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தஸ், ஜோதிடம்), வான சாஸ்திரம் கிரியை, புராணம், தருக்கம், வியாக்கியானம் (மீமாம்ஸை), சட்டம் (தரும சாஸ்திரம்), ஆயர்வேதம் (மருத்துவம்), தனுர் வேதம் (வில்வித்தை), கந்தர்வவேதம் (இசை), அர்த்த சாஸ்திரம் (அரசியல்) இவ்வாறாக பதினெண் வித்தைகள் சமஸ்கிருத மொழியில் கற்பிக்கப்பட்டன.[11]

## சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களின் சிறப்பு

சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் பெற்ற பிராமணர்கள் ராஜ சபைகளில் அரசர்களின் ஆசிரியர்களாகவும், மந்திர ஆலோசகர்களாகவும் இருந்தார்கள். நாடு முழுவதும் பரந்து வாழ்ந்து ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் மக்களின் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்தார்கள். சமஸ்கிருத பண்டிதர்கள் எங்கெல்லாம் தேவைப்பட்டார்களோ அங்கெல்லாம் அவர்கள் சென்று வாழவும், சம்ஸ்கிருத மொழியைக் கற்பிப்பதற்கும் ஏதுவாக அவர்களுக்கு நிலமும் வீடும் நன்கொடைகளாக விஜயநகர நாயக்கர் கால அரசர்களினால் வழங்கப்பட்டன.[12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்ஸ்கிருத மொழி பயிலுவதற்கு தொகுப்புக்கல்லூரிகள்

சம்ஸ்கிருதத்தை முழுமையாக கற்கவேண்டும் என்ற பேரார்வத்துடன் குரு சிஷ்ய பாரம்பரிய முறைகளில் பிரம்மபுரிகள் அல்லது கடிகைகள் என்று அழைக்கப்படும் தொகுப்புக் கல்லூரிகளை விஜயநகர அரசர்கள் அமைத்துக்கொடுத்தார்கள். பெல்கம் என்ற இடத்தில் ஒரு பிரம்ம புரியும் காஞ்சியில் ஒரு கடிகையும் இருந்தன. காஞ்சிபுரம் வடகலை வைணவத்தின் நிலைகளமாக வடகலை வைணவத்தின் வளர்ச்சிக்குரிய இருப்பிடமாக அமைவதற்குக் காரணம் இக்காலத்தில் சம்ஸ்கிருதமொழி பெற்ற செல்வாக்கேயாகும்[13].

"சலாத்துகி" என்ற இடத்தில் அமைந்த தொகுப்புக் கல்லூரியில் சம்ஸ்கிருதம் பயிலுவதற்காக பல்வேறு நாடுகளிலும் இருந்து மாணவசமூகம் விஜயநகர தேசத்திற்கு வருகை தந்து கல்விகற்றார்கள் என்பதையும் அறியமுடிகின்றது. இவர்களுக்கான கல்விசார் உதவிகளை அரசர்கள் மானியமாக வழங்கி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தியுள்ளார்கள்.

## சம்ஸ்கிருத கல்வி கற்ற மாணவர்களின் விபரம்

விஜயநகர நாயக்கர் காலத்தில் சம்ஸ்கிருதமொழி மேலும் வளர்ச்சி பெற்ற தென்னாட்டின் எண்ணாயிரம் எனும் இடத்தில் உள்ள ஒரு பெரிய கல்லூரியில் அதிகளவான மாணவர்கள் சம்ஸ்கிருத மொழியின் பல்வேறு பிரிவுகளை சிறப்பாகக் கற்றுள்ளார்கள். குறிப்பாக முந்நூறு மாணவர்களில் நாற்பது பேர் ரூபாவதாரம் என்ற நூலைப் பின்பற்றி ஆரம்ப இலக்கணத்தையும், பத்துப் பேர் போதாயனரின் சூத்திரங்களையும், எழுபது சிரேஷ்ட மாணவர்கள் வேதத்தையும், பத்துப் பேர் வேதாந்தத்தையும், இருபத்தைந்து பேர் வியாகரணத்தையும், மிகுதிப்பேர் பிரபாகர வியாக்கியானத்தையும் கற்றுள்ளார்கள். இங்கு பதினான்கு ஆசிரியர்கள் இருந்துள்ளார்கள். இதற்கு அண்மையிலுள்ள திரிபுவனி என்னுமிடத்தில் அமைந்த சம்ஸ்கிருத கல்லூரியில் இருநூற்று அறுபது மாணவர்களும் எழுபத்திரண்டு ஆசிரியர்களும் இருந்துள்ளார்கள்[14].

திருவாவடுதுறையில் ஒரு வைத்திய சாலையில் மருத்துவக் கலைக்காக அட்டாங்கிருதயம், சாரங்கத சங்கிதை என்பன போதிக்கப்பட்டன. திருவொற்றியூரில் பாணினியின் இலக்கணத்தைப் படிப்பதற்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியும் சட்டம் வானசாஸ்த்திரம் படிப்பவர்களுக்கு தேவகிரியில் ஒரு கல்லூரியும், நடாத்தப்பட்டன. இவர்களுடன் மானிய மனி நாட்டினரும், பாமினி அரசர்களும் சம்ஸ்கிருத மொழி விடுபடாது தொடர்ந்து பயிலுவதற்கும் தம்மாலியன்ற தாராளமான உதவிகளையும் ஆதரவையும் கொடுத்து சம்ஸ்கிருத மொழியை மேம்படுத்தினார்கள்.

## விளக்கவுரை நூல்கள்

தென்னிந்தியாவில் எழுதப்பட்ட விளக்கவுரை நூல்கள் அதிகமாக எழுச்சிபெற்ற காலம் விஜய நகர நாயக்கர் காலமாகும். சிறப்பாக விளக்கவுரை, பிருகத்விவரண உரை, தெளிவுரை, பாஷ்யங்கள், என்பன அதிக எழுச்சி பெற்றன.

மேற்குறிப்பிட்ட உரையமைப்பில் 1517ஆம் ஆண்டின் கிருஷ்ணதேவராயரின் பேராதரவில் எமகூடம் எனும் இடத்தில் இதிகாசங்கள் பற்றி ஈசுவர தீட்சிதர் எழுதிய உரை நூல்கள் மனங்கொள்ளப்பாலன. இராமாயணம் பற்றி இருபது விளக்கவுரைகளும் இக்காலத்திலேயே எழுதப்பட்டன. வாதிராசரின் இலட்சாபரணம் என்ற பாரத விளக்கவுரையும் விஜய நகர நாயக்கர் காலத்திலேயே எழுதப்பட்டது. ஆனந்தபூரண வித்தியாசாகரால் எழுதப்பட்ட வியாக்கியரத்தினாவளி எனும் விளக்கவுரை நூலும் சர்வஞ்ஞநாராயணர் எழுதிய ஒரு விளக்கவுரை நூலும் தென்னிந்தியாவில் எழுதப்பட்ட உரைகளுள் மிகப்பழமையானவையாகக் காணப்படுகின்றன.

## பாஷ்யங்கள்

மூலநூல்களான வேதங்கள், சூத்திரங்கள் இயற்றப்பட்டு பல ஆண்டுகளின் பின்னரே சம்ஸ்கிருத மொழி அறிஞர்கள் பாஷ்யங்களையும் விளக்கவுரைகளையும் எழுதினார்கள். சாயனர் என்பவரின் தலைமையில் இயங்கிய சம்ஸ்கிருத அறிஞர்களினால் சபை ஒன்று வேதங்களுக்கு மிகப்பெரிய வியாக்கியானம் எழுதியது. இது வேதப் பிரகாசம் எனப்படுகிறது. வேத நூல்களுடன் துணை நூல்களான பிராதிசாங்கியங்கள் (உச்சரிப்புக்கலை), கல்பசூத்திரங்கள் (கிரியைகள்) என்பனவற்றிற்கும் உரைநூல்கள் எழுதப்பட்டன. ஆபஸ்தம்பசிரௌதத்திற்கு கௌண்டயா சாரியன் (கி.பி 14) என்பரால் விளக்கவுரை எழுதப்பட்டது. எனினும் சாயனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களுக்கும் ஏனைய சிரௌத சூத்திரங்களுக்கும் பாஷ்யம் எழுதிப் பெயரும் புகழும் பெற்றார். சாயனரின் வேதபாஷ்ய விளக்கவுரை இக்காலத்தில் சம்ஸ்கிருத மொழி செல்வாக்குப் பெறுவதற்கு பெரிதும் உதவியது. சாயனரைப்போன்றே அரத்தர் என்பவரும் இக்காலத்தில் ஆஸ்வலாயனகிருஹ்ய சூத்திரத்திற்கு, அனாவிலா என்றும் ஆபஸ்தம்ப கிருஹ்ய சூத்திரத்திற்கு அனாகுலா என்றும் தர்மசூத்திரங்களுக்கு உச்சவலா என்றும் வழங்கும் உரை நூல்களை எழுதினார். புராணங்களுள் மிகச்சிறந்த புராணமான விஷ்ணு புராணத்திற்கும் உரைகள் எழுதப்பட்டன.

## திறனாய்வு நூல்கள்

வடகலை வைணவத்தின் வெளிப்பாடாக வெளிவரும் திறனாய்வு நூல்களான கோவிந்தராஜன் என்ற வைணவ ஆசிரியரினால் எழுதப்பட்ட பூஷணம் என்ற நூலும் மாதவயோகி எழுதிய கடகம் என்ற நூலும் திறனாய்வில் பல சுவையான தகவல்களை முன்வைக்கின்றன[15]. குமாரதாசனால் எழுதப்பட்ட ஜானகிகரணம் எனும் வடமொழி நூலுக்கு காணப்பட்ட சிங்களப் பொழிப்புரை கி.பி 16 இல் விஜய நகர நாயக்கர் காலத்தில் ராஜசுந்தரனால் பதினைந்து காண்டங்களில் சம்ஸ்கிருத மொழியில் திருப்பி மொழிபெயர்க்கப்பட்டு திறனாய்வு நூலாக எழுதப்பட்டது. அலங்காரசர்வஸ்வம், காவியம், பிரகாசம், பாலபிரகாசம் என்ற நூல்களும் கவிதைத்திறனாய்வுத்துறையில் சிறப்பிடம் வகிக்கும் நூல்களாகும்.

## வரலாற்று நூல்கள்

ஒரே குடும்பத்தைச்சேர்ந்த கவிஞர்கள் வித்தியா சக்கரவர்த்திகளாக இருந்து பாண்டியர்களாலும் தென்னாட்டு அரசர்களாலும் சம்ஸ்கிருத பண்டிதர் எனக் கணிக்கப்பட்ட அறிஞர் **கத்யகர்ணாமிர்தம்** எனும் நூலை இயற்றினார். 13ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் பாண்டியர்களுக்கும் ஒய்சாள மன்னனான இரண்டாம் நரசிம்மனுக்கும் நிகழ்ந்த போரைப் பற்றிக்கூறும் வரலாற்று உரைநடை நூல் இதுவாகும்.[16]

## காவியங்கள்

இரண்டாம் தேவராஜரும் சாளுவ நரசிங்கரும் சம்ஸ்கிருததில் சிறந்த கவிஞர்களாக இருந்தார்கள். புகழ்பெற்ற கிருஷ்ண தேவராயர் இயற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாம்பவதி கல்யாணம், உஷாபரிணயம் ஆகிய இரண்டு நூல்களும் தற்போது கிடைப்பவை. தஞ்சாவூர் ரகுநாதையர் சம்ஸ்கிருத பாண்டித்தியம் பெற்ற நளசரிதம், வால்மீகி சரிதம், கஜேந்திர மோக்ஷம் ஆகிய சிறுகாவியங்களை எழுதினார். அவரது புலமையையும் கற்பனைத்திறனையும் அவற்றில் மிகையாகக் காணலாம். இக்காலத்தில் அரசசபை அமைச்சர்கள்பலரும் கவிஞர்களாகவும், புலவர்களாகவும், நாடக ஆசிரியர்களாகவும் இருந்தார்கள். அமைச்சராக இருந்த நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய நளசரித நாடகமும் சிவலீலார்ணவும் சிறந்தவையாகும்.

## வடகலை, தென்கலை– சம்ஸ்கிருத மொழிச்செல்வாக்கு

விஷ்ணுவை முழுமுதற்கடவுளாகக் கொண்டு முதன்மைப்படுத்தி வழிபாடு செய்யும் மரபு வைஷ்ணவம் எனப்படும். தென்னகத்தைப் பொறுத்தவரையில் வழிபாட்டு மரபுகளில் பிரசித்தி பெற்ற வைணவம் இரு பாரம்பரியங்களாகப் பின்பற்றப்படுகின்றது. இது வைகாசனம், பாஞ்சாராத்திரம் என்னும் வைஷ்ணவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது. இவற்றைக் கொண்டே வடகலை தென்கலை வழிபாட்டு முறைகள் வைஷ்ணவ ஆகமங்களாகவும் பத்ததிகளாகவும் வெளிவந்தன.

விஜய நகர நாயக்கர் காலத்தில் இவ்வழிபாட்டுச் சிறப்புக்களும் அவை தொடர்பான சம்பிரதாயங்களும் முக்கியம் பெறத்தொடங்கின. குறிப்பாக ஸ்ரீரங்கத்தை நிலைக்களமாகக்கொண்டு தென்கலை வைணவமும், காஞ்சிபுரத்தை நிலைக்களமாகக்கொண்டு வடகலை வைணவமும் சிறப்புப் பெற்றன. சிறப்பாக தென்கலை வைணவத்திற்கு தமிழும், சம்ஸ்கிருதமும் இருகண்களாக இருந்தது போன்று வடகலை வைணவத்திற்கும் சம்ஸ்கிருதமும் தமிழும் இருகண்களாக இருந்தன. விஜயநகர நாயக்கர் காலங்களில் தான் இரு மொழிகளின் செல்வாக்கினால் மொழி இலக்கணம், யாப்பிலக்கணம், பக்திமயமான பாடல்களும், புராண கதைகளையொட்டிய நூல்கள், தத்துவக் கொள்கைகள் பற்றிய விவரணங்கள் சம்ஸ்கிருதத்தில் மிருதியாகத் தோன்றின[17].

## வடகலை சம்பிரதாயத்தில் வேதாந்த தேசிகர்

வேங்கடநாதர் அல்லது வேதாந்த தேசிகர் சமயத்துறையிலும் தத்துவஞானத்துறையிலும் எழுதிய நூல்கள் இவருக்குப் பெரும் புகழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்ததுடன் சம்ஸ்கிருத மொழியின் சிறப்பையும் எடுத்துக்காட்டின. விஜய நகர மன்னர்கள் இவரை விரும்பி அழைத்தபோதும் அவர் ஸ்ரீரங்கத்திலேயே தங்கியிருந்து சம்ஸ்கிருதத்திலும் தமிலும் பல அரிய நூல்களை இயற்றினார். கிருஷ்ண பெருமானின் வாழ்க்கையை ஒரு காப்பியமாக அமைத்த யாதவாப்யுதமும், விசிட்டாத்துவைத கொள்கையைத் தழுவிய சங்கல்ப சூர்யோதயம் என்ற தொடர் உருவான நாடகமும், அத்துவைதத்தின் குறைகளை விளக்கும் சதாதூஷணி என்ற நூல்களும் இப்பெரும் அறிஞரின் சம்ஸ்கிருத நூல்களாகும். காஞ்சிபுரத்தை பிறப்பிடமாகக்கொண்ட இப்பெரியார் வடகலை சம்பிரதாயத்தின் பிரதான ஆசிரியராவார். இருபத்தொன்பது ஸ்தோத்திர நூல்களையும் ஐந்து காவிய நாடகங்களையும் ஐம்பத்து மூன்று தத்துவ நூல்களையும் வடமொழியிலும், ஸ்ரீ தேசிக பிரபந்தம் என்ற நூலை தமிழிலும் எழுதியுள்ளார்[18].

## தென்கலைச் சம்பிரதாயத்தில் பிள்ளை லோகாச்சாரியார்

அஷ்டாதச ரகசியங்களை சம்ஸ்கிருதமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் ஓர் நூலாக எழுதி சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கை மேம்படுத்திய லோகாச்சாரியார் தென்கலை வைணவத்தில் பிரதான மூலவர் ஆவார்.

## அப்பய்ய தீட்சிதர் சம்ஸ்கிருத மொழிக்கு ஆற்றிய பங்களிப்பு

வேலூர் பகுதியை ஆண்ட பொம்ம நாயக்கரின் ஆஸ்தான வித்துவானாக திகழ்ந்த அப்பய்ய தீட்சிதர் இலக்கியம், தத்துவம், தருக்கம், இலக்கணம், விமர்சனம் என பல நூல்களை சம்ஸ்கிருதத்திலே இயற்றி புகழ் பெற்றார். சம காலத்தில் இருந்த பெரும் அறிஞர்களை சம்ஸ்கிருத வாதத்தில் வென்று தனது சம்ஸ்கிருத புலமையை வெளிக்காட்டினார். தஞ்சை, மதுரை நாயக்க மன்னர் இவரின் ஒப்பற்ற சம்ஸ்கிருத மொழித் திறனைக்கண்டு பாராட்டிக் கௌரவித்தார்.

சைவ வைணவ சம்பிரதாயங்களில் ஊறிய தீட்சிதர் சிவன், விஷ்ணு ஆகிய மூர்த்திகளைப்பற்றி ஸ்தோத்திரங்கள் பாடியுள்ளார். இவரின் அத்துவைதக் கொள்கையை விளக்கும் தனிநூல்கள் சிறப்பானவை. இவற்றுள் பரிமளம் எனும் வியாக்கியான நூல் ஒப்பற்றது. பாஷ்யவுரை, விரிவுரை, வேதாந்த தேசிகவுரை, அலங்கார சாஸ்திரங்கள், ஸ்துதிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்ததிகள், நாடகம், இலக்கணம், கண்டனம், நிர்ணயம் என 71 நூல்களை சம்ஸ்கிருத மொழியில் எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர் இக்காலத்தில் (கி.பி 1554– 1626) வாழ்ந்த அப்பய்ய தீட்சிதர் ஆவார்[19].

## தாத்தாச்சாரியார்

வைணவ பாரம்பாரியங்களில் வந்த ஓர் சிறந்த நியயாவாதி தாத்தாச்சாரியார். இவர் சாத்வீக பிரம்ம வித்யா ஸாரம் என்ற தத்துவ ஞான நூலையும் பந்தாப்பூர் வைணவ ஆலயத்தின் மாட்சிமை பற்றிய பாண்டுரங்க மகாத்மியத்தையும் இயற்றியவர். சிவஞான சித்தியார், சிவஞானபோதம் என்பவற்றுக்கு சம்ஸ்கிருத மொழியில் ஓர் விரிவுரையும் எழுதியுள்ளார். சிறப்பாக ஸ்ரீநிவாச தீட்சிதரின் பதினெட்டு நாடகங்களும், அறுபது இலக்கியங்களும் ஈண்டு குறிப்பிடத்தக்கன. ராஜசூடாமணி தீட்சிதரின் ருக்மணி கல்யாணம் என்ற காப்பியமும் ஆனந்த ராகவா என்ற நாடகமும் உயர்தரமானவை.

## சம்ஸ்கிருத இலக்கணநூல்கள்

மொழி இலக்கணம், யாப்பிலக்கணம் பற்றிய நூல்களும் இக்காலத்தில் எழுச்சிப்பெற்றன. அப்பய்ய தீட்சிதரின் சிலவை–சொற்கோப்புக்கலை என்ற நூலும், நாராயண பட்டதிரி என்ற நம்பூதிரி எழுதிய பிறக்றிஞாஸர்வஸ்வம் என்ற இலக்கண நூலும் சம்ஸ்கிருத இலக்கண மரபுக்குக் கைநூலாகும்.

## கவின் கலைகள்

குமரகிரி என்பவரின் நாட்டியக்கலைப்பற்றிய நூலும், லட்சுமிதரார் எழுதிய வானநூல், சோதிடம், தத்துவம் ஞானம், சட்டம் உள்ளிட்ட ஏனைய அறிவுத்துறைகளை எடுத்துக்காட்டும் நூல்களும் வெளிவந்தன. இதற்கு **தெய்வஞ்ஞ விலாஸம்** உதாரணமாகும்.

கவிஞர் லட்சுமி நாராயணர் இசைபற்றி எழுதிய நூல், **சந்திர சூர்யோதயம்** என்பதாகும். கட்டடக்கலைபற்றிய விடயங்களை அறிவதற்கு **தந்திர சமுச்சயம்** என்ற நூலை நாராயண நம்பூதிரி சிறப்பாக எழுதியுள்ளார். கட்டடம், சிற்பம், ஓவியம் பற்றிய சம்ஸ்கிருத நூல்களும் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி ததும்பும் விரிவுரை நூலாக நாயக்க அரசன் குமார கம்பண்ணனின் அரசி கங்காதேவி இயற்றிய மதுராவிஜயம் எனும் நூல் குறிப்பிடத்தக்கது. பாகவத சம்பு அச்சுதராயப்யுதயம், வரதாம்பிகை பரிணயம் ஆகிய நூல்களும் வடமொழியில் எழுந்தன.

ரசம், பேச்சுச்சுவை பற்றிய விடயங்களிலும் சம்ஸ்கிருத மொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. ரசாரணவசுதாகரம் என்ற நூல் ரசம் பற்றியும், சமத்கார சந்திரிகை பேச்சுக்கலைப்பற்றியும், சாலுவாப்யுதயம் என்ற நூல் யுத்தம் பற்றியும் கூறும் சம்ஸ்கிருத நூல்களாகும்[20].

## தர்க்க நியாயம் விளக்கவுரைகள்

தர்க்கபாஷை என்ற நூலுக்கு காவிய பாஷ்யகரான மல்லிநாதர் என்பவரும், சென்னுபட்டர் என்பரும் இரண்டு விளக்கவுரை நூல்களை எழுதினார்கள். அன்னம்பட்டரின் தர்க்க சங்கிரகமும் இக்காலப்பகுதியில் எழுதப்பட்டது. நியாயம் பற்றிய கங்காதர்மசிரரின் **நியாயாபரணம்** என்ற நூலும் குறிப்பிடத்தக்கது.

## ஜோதிடம் வானவியல்

நீலகண்ட சோமயாசி (கி.பி 1442– 1545) என்பவர் ஆரியப்பட்டியத்திற்கு எழுதிய பாஷ்யம் குறிப்பிடத்தகுந்தது. அச்சுதபிசாசோதி என்பவரின் வானநூல் கணிப்புக்கள் சம்பந்தமான காணோத்தமம் என்ற நூலும், கிரகணங்கள் பற்றி உபராகக்கிரியாகிரமம் என்ற நூலும் இக்காலத்தில் காணப்படுகின்றன.

## சிவாகம பத்ததி நூல்கள்

கோயில் வழிபாட்டிலும் கிரியைகளிலும் கேரளா ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. கேரளச் செல்வாக்கினால் இரவி எழுதிய 21 அத்தியாயங்கள் கொண்ட பிரயோக மஞ்சரியும், 18000 செய்யுட்கள் கொண்ட ஈசான குருதேவரால் இயற்றப்பட்ட ஈசானகுருதேவ பத்ததியும் குறிப்பிடத் தகுந்தவை.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் சிதம்பர மடத்தில் வாழ்ந்த சிவாகம பத்ததிகளின் தந்தையெனச் சிறப்பிக்கப்பட்ட அகோர சிவாசாரியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கையும் குறிப்பாக கிரந்த எழுத்துக்களின் தேவைப்பாட்டையும், பிரயோக முறைகளையும் முன்னிலைப்படுத்திய பெருமைக்குரியவர். வேதாகமங்கள், தாத்திரியங்கள் ஆகியனவற்றில் புலமையாளர். அவர் பிரதிஷ்டா விதிகள், வியாக்கியானங்கள், தீபிகை, விருத்தி, நாடகசாரம், யோதிகா என பதினாறு நூல்களுக்கும் மேல் இயற்றியுள்ளார். அவரின் பத்ததிகளின் அடிப்படையிலேயே ஆலய கிரியை மரபு செய்யப்படுகின்றன. இதேவரிசையில் சிவாகம பத்ததிகளின் ஆசிரியர்களையும் காணமுடிகின்றது. குறிப்பாக ஞானசிவத்தின் ஞானரத்னாவளி, ஈஸ்வர சிவத்தின் சித்தாந்த ரத்னாகரம் கோளகி மடத்தைசேர்ந்த திரிலோசன சிவாச்சாரியரின் சித்தாந்த சாராவளி, காஞ்சிபுர மடத்தைச்சேர்ந்த கச்சபாச்சாரியரின் பிரசாததீபிகை, சிவாக்கிரக யோகிகளின் சிவபரிஷா சிவாக்கிரக பத்ததி, சந்நியாச பத்ததி, மறைஞான தேசிகரின் ஆத்மார்த்த பூஜாபத்ததி சர்வாத்ம சம்புவின் சைவ சித்தாந்த தீபிகை, மிருத்யுஞ்சய சூரியின் தத்துவ சந்திரிகா, பஞ்சாக்ர குருவின் ஸ்நாபன சாராவளி என்பன குறிப்பிடத்தக்கன.

## சைவ சித்தாந்த நூல்களும் உமாபதி சிவாச்சார்யாரும்

கி.பி 14ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சிதம்பர மடத்தைச் சார்ந்த சம்ஸ்கிருத புலமைமிக்க ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் ஆவார். மெய்கண்ட சாஸ்திரம் பதினான்கு நூல்களுள் எட்டு நூல்களைத் தமிழிலும் ஏனைய ஆறு நூல்களை வடமொழியிலும் இயற்றியவர். இவர் சைவ சித்தாந்தக் கருத்துக்களை இனிய நடையில் தர்க்க ரீதியாக எடுத்துக்காட்டும் சிறந்த நூலாசிரியர் ஆவார். சம்ஸ்கிருத மொழியில் மிகவும் ஆழமான புலமை மிக்க உமாபதி சிவாச்சாரியார் பௌஷ்கராகமத்திற்கு சிறந்த உரை எழுதினார், வேதசிவாகமங்களில் இருந்து தத்துவக் கருத்துக்களையும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் தொகுத்துத் தரும் நூலாக இவரின் சதரத்தன சஸ்கரமும் விளங்குகின்றது. அத்துடன் பதஞ்சலி சூத்திரபாஷ்யம், நடராஜத்வனி மந்திரஸ்தவம், நடராஜ நாமாவளி, குஞ்சிதாங்கிரிஸ்தவம் முதலிய நூல்களையும் சம்ஸ்கிருத மொழியில் எழுதியுள்ளார்.

தமிழில் கோயிற்புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் ஆகியநூல்களையும் இயற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தத்துவஞானிகளின் ஒருவராகவும், சைவசித்தாந்த வளர்ச்சிக்கு மேலும் உறுதுணை செய்த புலமையாளராகவும் விளங்குகிறார்.

## ஆதீனங்களும் மடங்களும்

விஜய நகர நாயக்கர் காலத்தில் எழுச்சிபெற்ற ஆதீனங்களும் மடங்களும் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு சம்ஸ்கிருத மொழியை மேம்படுத்தின. குறிப்பாக தர்மபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், மதுரையாதீனம், திருவாவடுதுறையாதீனம், காஞ்சிபுர மடம், ஸ்ரீரங்க மடம், கோளகி மடம், சிதம்பர மடம், ஆகியன சம்ஸ்கிருதமொழி வளர்ச்சியை மேம்படுத்தின. இங்கிருந்து சம்ஸ்கிருத மொழியை குருசிஷ்ய முறையில் பயின்று பல்வேறு நூல்களை இயற்றிய நூலாசிரியர்கள் சிறப்பானவர்கள். ஆதீனங்களும் மடங்களும் வெளியிட்ட சம்ஸ்கிருத சைவசித்தாந்த நூல்களும் சிறப்பானவையாகும்.

## மணிப்பிரவாளநடை

சம்ஸ்கிருத மொழியும் தமிழ் மொழியும் கலந்த மணிபிரவாளநடையிலும் பல நூல்கள் இக்காலப்பரப்பில் எழுச்சிப்பெற்றன. சம்ஸ்கிருத மொழிச்செல்வாக்கு இக்காலகட்டத்தில் காணப்பட்ட ஏனைய மொழிகளிலும் செல்வாக்குச் செலுத்தியது. கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளிலும் சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கு பரந்துப்பட்டுக் காணப்படுகிறது. மணிபிரவாளநடை வளர்ச்சி பெறுவதற்கு தமிழ்பற்றும், பக்தியும், சைவசித்தாந்ததின் ஊக்கமும், வைணவ மறுமலர்ச்சியும் காரணிகளாக அமைகின்றன. குறிப்பாக கிருபானந்த தேசிகரின் சிவபிரகாச பெருந்திட்டை, பாகவதபுராணம், சிவதருமோத்திரம், சைவசன்னியாச பத்ததி, அத்துவைத வெண்பா, சதகத்திரயம் என்பன மணிபிரவாளநடையில் எழுந்த நூல்களாகும். வைஷ்ணவ சார்பாக மணிப்பிரவாள நடையில் திவ்ய பிரபந்தங்களும் திருவாய் மொழிகளும் உள்ளன. இவற்றிற்கு வடகலை தென்கலை சார்ந்த சம்ஸ்கிருதத் தமிழ்ப் புலவர்களும் சமயவாதிகளும் குறிப்பிடத்தகுந்தளவு பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

## முடிவுரை

தொகுத்து நோக்கும் போது விஜயநகர நாயக்கர் காலத்தில் தென்னாட்டில் சம்ஸ்கிருத மொழிச்செல்வாக்கு ஓங்கி வளர்ந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம், தத்துவம், கலை, இலக்கியங்கள், இலக்கணம், நாடகங்கள், அழகியற்கலைகள், வரலாறு என பல்வேறுப்பட்ட துறைகளில் சம்ஸ்கிருத மொழிச் செல்வாக்கு புலப்படுகிறது.

## அடிக்குறிப்புக்கள்

1. மங்கள முருகேசன் க.ந-இந்திய வரலாறு ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை 14, முதற்பதிப்பு 2002, ப, 309.
2. நீலகண்ட சாஸ்திரி K.A
**தென்னிந்திய வரலாறு** – தமிழ்மொழிபெயர்ப்பு,
இலங்கை அரசாங்கம் – முதற்பதிப்பு 1966, ப, 391.
3. மேற்படி நூல், ப, 392.
4. மங்கள முருகேசன் க.ந **இந்திய வரலாறு** ப, 322.
5. மேற்படி நூல், ப, 322.
6. மேற்படி நூல், ப, 323.
7. மேற்படி நூல், ப, 315.
8. நீலகண்ட சாஸ்திரி K.A
தென்னிந்திய வரலாறு, ப, 367.
9. மேற்படி நூல், ப, 368.
10. மேற்படி நூல், ப, 369.
11. சுப்ரமண்ய சாஸ்திரி P.S
**வடநூல் வரலாறு**, அண்ணாமலைநகர், 1948, ப, 176.
12. நீலகண்ட சாஸ்திரி K.A
தென்னிந்திய வரலாறு, ப, 369.
13. சுப்ரமண்யன். நா. **இந்திய சிந்தனை மரபு,** சவுத்ஏசியன் புக்ஸ், சென்னை.1996,ப, 242.
14. நீலகண்ட சாஸ்திரி K.A
**தென்னிந்திய வரலாறு,** ப, 369.
15. மேற்படி நூல், ப, 395
16. பரந்தாமனார் அ.கி, **மதுரை நாயக்கர் வரலாறு,** பாரதி நிலையம், சென்னை 01
இரண்டாம் பதிப்பு 1966, ப, 442–443.
17. பிள்ளை மு.மு **தமிழக வரலாறு**
**மக்களும் பண்பாடும்,** உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை 13, 2000, ப, 431
18. ஜகந்நாதராஜா மு.கு **வடமொழி வளத்திற்கு தமிழரின் பங்களிப்பு,** திருவல்லிக்கேணி, சென்னை 04, 1994, ப, 247–251.
19. மேற்படி நூல், ப, 172– 182
20. நீலகண்ட சாஸ்திரி K.A
**தென்னிந்திய வரலாறு,** ப, 404.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ குமர குருபரர் பிரபந்தங்கள்

வித்துவான்
திருமதி. வசந்தா வைத்தியநாதன்

**குமரகுருபரரின் வரலாறு என்று வழங்கும் செய்திகளை முதலில் நோக்குவோம்.**

பொய்யா வளமை பெருக்கும் பொருனை நதிக்கரையின் வடபால் அமைந்து விளங்குவது ஸ்ரீ வைகுந்தம் என்னும் திருப்பதி. அதன் ஒரு பகுதியாக விளங்குவது ஸ்ரீ கைலாசம். அங்கே தலைமுறை தலைமுறையாக செவ்வேட்ப் பரமனின் சேவடிமறவாச் சிந்தையராய் இலங்கும் வேளாண் குடியிலே சண்முக சிகாமணிக் கவிராயர்– சிவகாமசுந்தரி அம்மையார் தம்பதிகளுக்கு இறைவன் திருவருளால் அவதரித்த குழந்தையே குமரகுருபரன். அருந்தவத்தால் கிடைத்த மழலைச்செல்வம் ஆண்டு ஐந்தாகியும் பேச்சற்று ஊமையாய் இருந்தது. அதுகண்டு மனம் வெதும்பிய பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையைத் திருச்செந்திலாண்டவன் முன்விடுத்துத் தாமும் பாடு கிடந்தனர்.

கொள்ளித் தலையில் எறும்பாக மனம் மறுகிய பெற்றோர் மனம் மகிழுமாறு செந்திற்பெருமான் திருவருளால் குழந்தை பேசியது. பேசும் ஆற்றலோடு கல்வி நலமும் வாய்க்கப் பெற்ற குமரகுருபரர் கலிதீர்த்த கந்தனின் மீது "**கந்தர் கலிவெண்பா**" என்ற பிரபந்தத்தை முதன்முதலாக இயற்றி அருளினார்.

*திருமக ளகலாப் பரமவை குந்த*
*நன்னக ருதித்த செந்நெறிக் குரிசில்*
*ஐந்தெனும் பருவம் வந்துறு மளவும்*
*மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்*
*செந்திலம் பதிவாழ் கந்தன தருளால்*
*ஓதா துணர்ந்த போதனாய் முன்னர்க்*
*கலிவெண் பாவெனு மொலிபெறு மங்கலக்*
*குகன்றிரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்*
*பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி*
*மாலையீ றாகச் சால்பமை பிரபந்தம்*
*முந்நான் கியற்றித் தன்னாஞ் சமய*
*நிலையையுங் காட்டி யுலைவிலா தியாரும்*
*தீதெலா மொருவி நீதியே புரிய*
*நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலும்*
*இயற்றின னில்லறந் தியக்குறு நிலையென*
*இளமையிற் றுறந்து வளமைசேர் தருமை*
*மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்*
*பதமலர் பழிச்சுமற் புதகுண குமர*
*குருபர னெனும்பெயர் மருவிய முனியே"*

இச்சிறப்புப் பாயிரம் தேவர்பிரான் கவிராயர் என்பவரால் இயற்றப் பெற்றதாக அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரர் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், ஞான சாத்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார். மதுரையில் தங்கியிருந்த காலத்து மீனாட்சியின் மீது பிள்ளைத்தமிழ் பாடி மதுரை மன்னன் திருமலை நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். முத்தப் பருவத்தைப் பாடும் பொழுது அன்னை அங்கயற் கண்ணியே குழந்தையாக வந்து மன்னன் கழுத்திலிருந்த முத்துமாலையை குமரகுருபரருக்கு அணிவித்து மறைந்தாள். மதுரையில் இருந்த காலத்தில் "மதுரைக்கலம்பகத்தை" இயற்றினார். திருவாரூர் தியாகராஜப் பெருமானை வணங்கி மகிழ்ந்த காலத்தில் "திருவாரூர் நான்மணிமாலை" பாடிப் பரவினார்.

அக்காலத்தில் அவரது மனம் சிவஞான உபதேசம் பெற அவாவியது. அத்தாகம் நாளுக்குநாள் அதிகமாகியது. தகுந்த ஞான குருவைத் தேடினார். அப்பொழுது திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதினத்தில் நான்காம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கியவர் ஸ்ரீ–ல–ஸ்ரீ மாசிலாமணி தேசிகர். அவரை நாடிச் சென்றார் குமரகுருபரர். குருமணியவர்கள் குருபரரிடம் "ஐந்து பேரறிவும், கண்களே கொள்ள" என்ற பெரியபுராணப் பாடலிற்கு அனுபவப் பொருள் விளக்கம் கேட்க குமரகுருபரரின் வாக்குத் தடைபட்டது. வாக்குத் தடை படவே ஸ்ரீ மாசிலாமணி தேசிகரே தமது ஞான குரு எனத் தேர்ந்தார். தமக்குத் துறவுநிலையருள தேசிகரிடம் வேண்டி நின்ற பொழுது தலயாத்திரை செய்து வருவது ஆதீன மரபாதலின் காசியாத்திரை சென்றுவருமாறு கட்டளையிட்டார். காசியாத்திரை செய்துவர நெடுங்காலம் ஆகுமே என்ற கவலை உள்ளத்தே எழ, அதனை உணர்ந்த தேசிகர் சிதம்பரத் தலத்திற்கேனும் சென்று வரப் பணித்தார்.

அவ்வாறே குருநாதரின் ஆணையைச் சிரமேற் கொண்டு சிதம்பரத்திற்குச் செல்லும் வழியில் புள்ளிருக்கு வேளூரைக் கடக்கும் பொழுது, "என்னைப் பாட மறந்தனையோ" என்று வேளூர்க் குமரப் பெருமான் குமரகுருபரரை இடைமறித்து "பொன்பூத்த குடுமி" என்று அடி எடுத்துக் கொடுக்க **ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்** பாடினார்.

பின்னர் சிதம்பரம் சென்று ஆடும் கூத்தப் பிரானை வணங்கி "சிதம்பர மும்மணிக் கோவை" பாடினார். சிதம்பரத்தில் இருந்த தமிழறிஞர்கள் பலர் ஒன்று கூடி, குமரகுருபரர்பால் வந்து யாப்பருங்கலக்காரிகையிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் உதாரணச் செய்யுட்கள் பெரும்பாலும் சமணத் தொடர்பு உடையதாயிருத்தலின் அந்நூலில் இலக்கணங்களுக்கு உதாரணமாக ஞானமாநடராஜப் பெருமான் விஷயமாக செய்யுள் இயற்றியருள வேண்டும் எனப் பிராத்திக்க அவ்வண்ணமே **சிதம்பர செய்யுட் கோவை** இயற்றினார்.

மீண்டும் தருமபுரம் வந்து ஸ்ரீ–ல–ஸ்ரீ மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் துவராடையேற்றுத் துறவுநிலை பூண்டார். அது முதல் குமரகுருபர முனிவரென திருநாமம் தரித்தார். தமது குருநாதர் மீது **"பண்டார மும்மணிக்கோவை"** பாடித் துதித்தார். வடநாடு சென்றார். தில்லியை ஆண்ட முகலாய மன்னனின் பேரன்பைப் பெறுவதற்காக கலைமகளின் திருவருளை நாடி **சகலகலா வல்லிமாலை** பாடி ஹிந்துஸ்தானி மொழியறிவைப் பெற்று மன்னனிடம் உரையாடினார். முகலாய மன்னனும் சுவாமிகளின் விருப்பத்தின் வண்ணமே திருமடம் அமைப்பதற்கு கேதாரகட்டத்தில் இடம் உதவினான். சுவாமிகள் முகம்மதியர்களால் மறைத்துவைக்கப் பட்டிருந்த கேதாரலிங்கத்தை வெளிப்படுத்தி, ஆகம விதிப்படி நித்திய நைமித்தியங்கள் நடைபெறச் செய்தார்.

காசியில் குமரகுருபர முனிவர் தங்கியிருந்த திருமடத்திற்குக் குமாரசுவாமி மடம் என்று பெயர் வழங்கலாயிற்று. காசியில் இருந்த காலத்தில் **காசி துண்டி விநாயகர் பதிகமும் காசிக் கலம்பகமும்** இவரால் அருளிச் செய்யப்பெற்றன. காசித் துண்டி விநாயகர் பதிகம் கிடைக்கவில்லை. அது போன்றே சுவாமிகள் அருளிச் செய்த **கைலைக் கலம்பகத்**திலும் ஒரு சில பாடல்களே கிடைத்துள்ளன. காசியில் சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் தமது திருமடத்தில் புராணசாலை ஒன்றை ஏற்படுத்தியும் ஹிந்துஸ்தானியிலும், தமிழிலும் புராண பிரசங்கங்களை மக்களுக்கு ஆற்றியும் தொண்டு செய்து வந்தார். சுவாமிகளது பிரசங்கங்களை செவிமடுத்த துளசிதாசர் தாம் எழுதிய துளசி இராமாயணத்தில் கம்பராமாயணப் பாடல்கள் பலவற்றை அமைத்துக் கொண்டார் என்று கூறுவர்.

குமரகுருபரர் மீண்டும் ஒருமுறை தருமைக்கு வந்து தமது ஞானாசிரியரைத் தரிசித்துப் பின்னும் காசிக்கே சென்று தமது வாழ்நாளைத் தொண்டிற்கே அர்ப்பணித்து ஒரு வைகாசி மாத தேய்பிறை மூன்றாம் நாள் (திருதியைத் திதி) சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்து முக்தி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ குமர குருபரர் அருளிய பிரபந்தங்களின் சிறப்பு

சுவாமிகள் அருளிய நூல்கள் பொதுவாகப் பதினான்கு என்று கூறினும், காசித்துண்டி விநாயகர் பதிகம் கிடைக்கப் பெறவில்லை. கைலைக் கலம்பகத்தில் சில செய்யுட்களே கிடைத்திருக்கின்றன. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்னும் மூன்று பிரபந்தங்களும் சுவாமிகள் இயற்றியதாக அச்சுப் பிரதிகளிற் காணப்பட்டாலும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் பழமையான ஏட்டுப் பிரதிகளிலும், வேறு பழைய ஏட்டுப் பிரதிகளிலும் இம்மூன்று நூல்களும் காணப்படவில்லை. பரம்பரையாகப் பாடம் சொல்பவர்கள் இம்மூன்றையும் நீக்கியே பாடம் கூறினர்.

மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும், வேறு பல புலவர் மணிகளும் இம்மூன்று பிரபந்தங்களையும், குமரகுருபரர் திருவாக்காகக் கருதுவதில்லை. சொற்பொருள், பாநயம் இவை குமரகுருபரரின் மற்றைய பிரபந்தங்களினின்று வேறுபட்டு நிற்பதே அதற்குக் காரணமாகும்.

குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தத் திரட்டை 1889 இல் சிதம்பரம் ஈசான்ய மடத்தைச் சார்ந்தவரான ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் ஸ்ரீமான் பூண்டி அரங்க நாத முதலியார் அவர்களின் பொருளுதவியால் வெளியிட்டார். அதன்பின் டாக்டர் உ. வே. சா. அவர்கள் பெருமுயற்சி செய்து நாட்டின் பலபாகங்களுக்கும் சென்று திரட்டிய கைப்பிரதிகளில் திருத்தங்கள் செய்து ஸ்ரீ காஞ்சி மடத்து ஆதரவில் 1939 ஆம் ஆண்டு முதற்பதிப்பை வெளியிட்டார்கள். நான்கு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் பிரபந்தங்களாகக் கொள்ளப்படும் நூல்கள் (1) கந்தர் கலிவெண்பா (2) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (3) மதுரைக் கலம்பகம் (4) நீதிநெறிவிளக்கம் (5) திருவாரூர் நான்மணிமாலை (6) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் (7) சிதம்பர மும்மணிக்கோவை (8) சிதம்பர செய்யுட் கோவை (9) பண்டார மும்மணிக்கோவை (10) காசிக்கலம்பகம் (11) சகலகலாவல்லிமாலை (12) கைலைக்கலம்பகம் (13) காசித்தூண்டி விநாயகர் பதிகம் (12 –13 ஆகிய இவ்விரு நூல்களும் கிடைக்கப்பெறவில்லை.) மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று நூல்களும் ஆதீனப் பதிப்புக்களிலும் காணப்படவில்லை. அறிஞர்களாலும் சுவாமிகளது நூல்களாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆதலால் அவைகளை விடுத்து ஏனைய பதினாறு நூல்களின் சிறப்பை பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக ஒரு சிறிது ஆராய்வோம்.

## கந்தர் கலிவெண்பா

திருச்செந்திற்குமரனருளால் முதன்முதல் அருளப் பெற்ற நூல் கந்தர் கலிவெண்பா. கலிவெண்பா என்னும் பாவகையிற் செய்த இந்நூலுள் 122 கண்ணிகள் உள்ளன. மெய்கண்ட நூல்களின் பிழிவாகவும், கந்தபுராணச் சுருக்கக் கண்ணாடியாகவும் முருகன் திருவருளைப் பதிக்கும் பாராயண நூலாகவும், வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அருள் நூலாகவும் சிறந்து நிற்கின்றது.

இந்நூலின் தனிச்சிறப்பாக கண்ணிகள் (1–7 வரை) இறைவனது தன்னியல்பும், (8–17 வரை) இறைவனது பொது இயல்பும், (18–33) இறைவன் உயிர்களுக்கு வீடு அருள்வதும், (34–62 வரை) இறைவனது ஞான உரு, (63–64 வரை) விசுவரூபம், 65 இல் அட்ட மூர்த்தம், (66–74 வரை) இறைத் தசாங்கம், (75–86) வரை கந்தபுராணச் சுருக்கம் திரு அவதாரம், (87–92) வரை திருவிளையாடல், 93 இல் சுவாமிக்கு நாதன் ஆதல் 94. முதல் வெற்றி, (95–97 வரை) திருச்செந்தூரில் எழுந்தருளல், (98–101 வரை) போரில் வெற்றி, (102–103) பகைவனுக்கு அருளும் திறம், 104 இல் தேவர் குறையைத் தீர்த்தல் (105–108 வரை) திருமணங்கள், (109–110) திருப்படை வீடுகள் திருவெழுத்துக்கள், (111–122 வரை) வரம் வேண்டல் என்னும் அமைப்பிலே கந்தர் கலிவெண்பாவின் சிறப்பை நுகரலாம்.

கலிவெண்பா பஃறொடை வெண்பா என்னும் பெயர் கொண்டும் விளங்குகின்றது. இதனை உமாபதி தேவர் அருளிய போற்றிப் பஃறொடையில் உணரலாம்.

இறைவன் எல்லா பொருட்களிலும், உடலில் உயிர்போல ஒன்றாய்க் கலந்து அவைகளின் தன்மைகளைத் தான் அடைகின்றான் போலக் காட்டியபோதிலும், இத்தன்மைகளில் ஒன்றையும் தான் எய்தாது பொருள் தன்மையால், வேறேயாய் நிற்றலால், இவையெல்லாம் அவனுக்கு நடிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனே பல வேடங்களில் தோன்றுதல் போல்வன அன்றி, அவனது உண்மைத் தன்மைகள் அல்ல. அவனது உண்மைத் தன்மை இவை அனைத்திலும் வேறானது. இதனைக் குமரகுருபரர்

"*இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்*
*தந்திரத்திற் சாராது சார்வது போல்*"

என்ற கலிவெண்பா வரிகளில் கூறியுள்ளார்.

மேலும் அழகனது திருமேனியை முடிமுதல் அடிகாறும் (கேசாதிபாதமாக) வர்ணிக்கின்றார் குமரகுருபரர். அகத்தாமரையில் அவனை இருத்தி தியானிக்கும் பொருட்டு இக்கண்ணிகள் அமைகின்றன.

37. –மின்னுருவம்
தோய்ந்த நவ ரத்நச் சுடர்மணியாற் செய்த பைம் பொன்
வாய்ந்த கிரண மணி முடியும் – தேய்ந்த பிறைத்
38. துண்டமிகு மூன்றுநிரை தோன்றப் பதிந்தனைய
புண்டரம் பூத்த நுதற் பொட்டழகும் – விண்ட
39. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்(கு)
அருள் பொழியும் கண்மலரீ ராறும் – பருதி
40. பலவும் எழுந்து சுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும் – நிலவுமிழும்
41. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமதச் செவ்வாயும்
சென்ம விடாய் தீர்க்கும் திருமொழியும்

37. ஒளிமூழ்கிய ஒன்பது மணிகளால் செய்யப்பெற்ற பசும் பொற் கிரீடம் அமைந்த திருமுடியும் 38. பிறையாகிய திங்கட் பகுதியை வரிசையாக பதித்து வைத்தாற் போன்று இயங்கும் நெற்றியில், திருநீறுக் கீற்றுக்கள் மூன்றாய் இடம்பெற்று, அதில் தாமரை மலர் பூத்தாற்போல் விளங்கும் பொட்டின் அழகும், 39. உரிய பருவத்தில் மலர்ந்த செய்ய தாமரை மலர்கள் பன்னிரண்டு ஒருங்கே மலர்ந்தாற்போல் அருள்பொழியும் விழி மலர்கள் பன்னிரண்டும் 40. கதிரவன் பல எழுந்து ஒளிர்வதுபோல் விளங்கும் மகர குண்டலங்களும், 41. நிலவை வெளிப்படுத்தும் புன்னகை பூரிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாம்பல் மலர் போன்ற திருவாயும், அத்திருவாயில் பிறவி வெப்பத்தைத் தணிக்க எழும் அருள் மொழியும் உடையாய்!

42. வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ் சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும் – எவ்வுயிர்க்கும்
43. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் – சூழ்வோர்
44. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் – விடுத்தகலாப்
45. பாச இருள் துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் – நேசமுடன்
46. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கு முகமதியும் – தாகமுடன்
47. வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்

ஆறு திருமுகங்களின் அழகும் இயல்பும் கந்தர்கலி வெண்பாவில் திருமுருகாற்றுப்படையிற்போலவே கூறப்படுகின்றது.

(42) கலி:– அசுரர்கள் போற்றும் சூரபன்மனாதியோரை அழித்து பகைவர் உயிரைப் போக்கி வெகுளியோடு நின்ற திருமுகமும்;
திருமுருகு:– (திருமுருகாற்றுப்படை) செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கி கறுவுகொள் நெஞ்சமோடு களம் வேட்டன்றே ஒருமுகம்.

(43) கலி:– எல்லா உயிர்க்கும் அவற்றின் வினைகளைப் போக்கி ஞானத்தைக் கொடுத்து, என்றும் கெடாத பேரின்ப வாழ்வைத் தருகின்ற திருமுகமும்,
திருமுருகு:– ஒருமுகம் – எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் திங்கள் போலத் திசை விளக்குமே

(44) கலி:– உய்யும் வழியை ஆராய்கின்றவர்கள் அதன் பொருட்டுத் திருத்தமாக ஓதுகின்ற பழைய வேதங்கள், ஆகமங்கள் கூறுகின்ற சரியை, கிரியை, யோக வழிபாடுகளை நலமாக முடித்து வைக்கும் தாமரைத் திருமுகமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகு:– ஒருமுகம் மந்திர விதியின் மரபுளி வழா அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே;

(45) கலி:– உயிர்களை விலகியறியாத பாசம் என்றும் இருளை அகற்றிப் பல கதிர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒளி செய்வதுபோல் விளங்கும் வாச மலர் முகமும்;

திருமுருகு:– மாயிரு ஞாலம் மறுவின்றி விளங்கப் பல் கதிர் விரித்தன்று ஒருமுகம்;

(46) கலி:– விருப்புடன் கூடி இன்புறும் வள்ளியம்மைக்கும் தெய்வயானைக்கும் காதலை வழங்கும் முழுமதி போன்ற முகமும்

திருமுருகு:– ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே.

(47) கலி :– பெருவேட்கையுடன் வந்து தன் அடியை அடைந்த அடியார் அகமகிழுமாறு வரங்கள் பலவற்றை வழங்கியருளும் தாமரை மலர் போன்ற முகமும்;

திருமுருகு:– ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே;

**திருக்கரங்கள்:**– கொந்தவிழ்ந்த

48. வேரிக் கடம்பும் விரைக் குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் – ஆரமுதல்

49. தேவர்க் குதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் – ஓவாது

50. மாரி பொழிந்த மலர்கரமும் பூந்தொடையில்
சேர அணிந்த திருக்கரமும் – மார்பகத்தில்

51. வைத்த கரதலமும் வாமமருங்கிற் கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும் – மொய்த்த

52. சிறுதொடி சேர் கையும்மணி சேர்ந்த தடங் கையும்
கறுவு சமர் அங்குசம் சேர் கையும் – தெறு போர்

53. அதிர்கேடகம் சூழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்.

(48) கலி:– தேனொழுகும் கடம்பு மாலையும் குரா மலரும் பூத்து விளங்கும் திண்ணிய மலைபோலும் பன்னிரண்டு தோள்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(49) கலி:– வானவர்களுக்கு அரிய அமுதத்தை வழங்குகின்ற ஒரு கரமும், திருமுருகு:– விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை

கலி:– தெய்வ மகளிர் விரும்புதலால் அவர்களை அணைக்கும் ஒருகரமும்;

திருமுருகு:– ஒருகை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட;

(50) கலி:– ஒழிவின்றி மழைபொழியும் மலர்போன்ற கரமும்;

திருமுருகு:– ஒருகை நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய;

கலி:– அழகிய மாலையைத் தழுவி அமைந்த கரமும்;

திருமுருகு:– ஒருகை தாரொடு பொலிய

(51) கலி:– (மோனநிலையை அவாவினர்க்கு) மார்பில் சின்முத்திரையோடு விளங்குகின்ற ஒரு கரமும்;

திருமுருகு:– ஒரு கை மார்பொடு விளங்க

கலி:– இடப்பக்கத்து இடையில் வைக்கப்பட்ட ஒருகரமும்;

திருமுருகு:– உக்கம் சேர்த்தியது ஒருகை

கலி:– திருத் துடையில் (வலது) ஒருகரமும்

திருமுருகு:– நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசையியது ஒருகை;

(52) கலி:– ஒலிக்கும் மணிகள் நெருங்கிய சிறிய வீரவளை பொருந்திய ஒரு கையும்

திருமுருகு:– ஒரு கை கீழ் வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப;

கலி:– ஒலிக்கும் மணியை அடிக்கின்ற பெருமைக்குரிய கரமும்;

திருமுருகு:– ஒருகை பாடுஇன் படுமணி இரட்ட

கலி:– பகைவர் சினங்கொண்டு செய்யும் போரில் அங்குசம் விளங்கும் திருக்கரமும்;

திருமுருகு:– அங்குசம் கடாவ ஒருகை

(53) கலி:– பகைவரை அழிக்கும் போரில் அவர்கள் நடுங்குதற்கு ஏதுவான கேடகத்தைச் சுழற்றுகின்ற கரமும்

கலி:– ஒளி வீசும் வாளைக் கொண்டிருக்கும் கரமும்

திருமுருகு:– இரு கை ஐயிரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப (இரண்டு கரங்களின் செயல்களும் ஒரு தொடரில் அமைந்து காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுகோள்

சந்ததமும்

111. பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் – பல்கோடி

112. பாதகமும் செய்வினையும், பாம்பும் பசாசும் அடற்
பூதமும் தீ நீரும் பொருபடையும் – தீதகலா

113. வெவ்விடமும் துட்ட மிருகமுதலாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை எதிர்ந்தாலும் – அவ்விடத்திற்

114. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில் வேலும் – கச்சைத்

115. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா(று)
அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் – விரிகிரணம்

116. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர் தோன்ற – வந்திடுக் கண்

117. எல்லாம் பொடி படுத்தி எவ்வரமும் தந்துபுகுந்
துல்லாச மாக உளத்திருந்து – பல் விதமாம்

118. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும் சீர்ப்
பேசுமியல் பல்காப்பியத் தொகையும் – ஓசை

119. எழுத்துமுத லாமைந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து) – ஒழுக்கமுடன்

120. இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் – தம்மை விடுத்(து)

121. ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் – சேய

122. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின் றருள்.

கந்தர் கலிவெண்பாவில் ஆசிரியர் குமரகுருபரர் முருகனின் பல்வேறு ஆற்றல்களையும் அப்பெருமானுக்குரிய வேல், சேவற்கொடி, வள்ளி, தெய்வானையாகிய சக்திகள் முதலானவற்றையும் பாராட்டிப் புகழும் வரிகள் வியக்கத்தக்கன. அழகனின் ஆறுமுகம், பன்னிரு கரங்களின் சிறப்பையும், பிரணவ மந்திர உபதேசச் சிறப்பையும், சிவனே முருகன் என்று நிலைநிறுத்தும் வன்மையும் நினைந்து நினைந்து இன்புறத் தக்கன. எழுத்து முதலாம் ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்ற குமரகுருபர அடிகளின் தெய்வவாக்கான "கந்தர் கலிவெண்பா" சிறந்த பாராயணப் பயன்தரும் ஏற்றமிகு அருள் நூலாகும்.

## பிள்ளைத் தமிழ்:—

"குழவி மருங்கிலும் கிழவதாரும்" தெய்வங்களையும், மனிதரிற் சிறந்தாரையும் பிள்ளைப் பருவத்தில் அமைத்துப் பாடும் பிள்ளைத்தமிழ் தமிழில் எழுந்த பிரபந்த வகைகளுள் ஒன்று பக்தி இலக்கியம் ஓங்கிச் சிறப்புற்ற பல்லவர் காலத்தில் வைணவ அடியார்கள் தாங்கள் உள்ளத்தெழுந்த ஆரா அன்பு காரணமாகதிருமாலைப் பிள்ளையாகக் கருதிப் பாடினார்கள்.

சிவனுக்குப் பிறப்பு, இறப்பு இல்லாததால் பிறவாயாக்கைப் பெரியோனுக்குப் பிள்ளைத்தமிழ் இல்லை. மற்றைய தெய்வங்களுக்கு பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் உண்டு.

இன்று காணப்பெறும் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களில் காலத்தால் முற்பட்டது இரண்டாம் குலோத்துங்கன் மீது கி. பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக் கூத்தர் பாடிய பிள்ளைத்தமிழேயாகும். பதின் முன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொடிகொண்டான் பெரியன் ஆதித்த தேவன் என்பவன் கந்தன் உதயஞ் செய்தான் காங்கேயன் மீது காங்கேயன் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளான் என்பதை சாசன வாயிலாக அறிகின்றோம். தொடர்ந்து வரும் பிள்ளைத் தமிழ்ப் பாக்கள் பெரும்பாலும் பதினேழாம் நூற்றாண்டுக்கும் அதற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளுக்கும் உரியனவாகும்.

பிள்ளைத் தமிழ் பத்துப்பருவங்களைக் கொண்டது. பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களைக் கொண்டது. இதில் குறைந்தும் வரலாம். குழந்தை பிறந்த இரண்டாம் திங்களிலிருந்து பருவத்திற்கு இரண்டு மாதங்களாகக் கூட்டிச் செல்வர். இறுதிப் பருவங்கள் மூன்றும் ஐந்து ஆண்டு முதல் ஒன்பது ஆண்டுவரை நிகழும் செயல்களாகக் கொள்ளப்படும்.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்ற ஏழு பருவங்களும் ஆண்பால், பெண்பால் பிள்ளைத் தமிழ்களுக்குப் பொதுவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆண்பாற் பிள்ளைத்தமிழின் நிறைவுப் பருவங்களாகவும், கழங்கு, ஊசல், நீராடல், பெண்பாற் பிள்ளைத் தமிழின் நிறைவாகவும் கொள்ளப்படும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலும், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழிலும் பிள்ளைத் தமிழிலக்கண அமைதிகளைக் காணலாம். திருமால் முதலிய தெய்வங்கள் பாருடைத் தலைவராகிய குழந்தையைப் பாதுகாக்க வேண்டுமென்று அமைப்பது காப்புப் பருவம். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் முறையே திருமால், வெள்ளியம்பலவாணர், சித்திவிநாயகக் கடவுள், முத்துக்குமரன், பிரமன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சப்தமாதர்கள், முப்பத்து மூவர்கள் முதலியோரையும் முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழில் திருமால், வைத்தியநாதர், தையல் நாயகியம்மை, கற்பகவிநாயகக் கடவுள், பிரம தேவர் தேவேந்திரன், திருமகள், கலைமகள், சப்தமாதர், முப்பத்து முக்கோடி தேவர்கள் முதலியோரை வேண்டிக் காப்புப் பாடல்களாக 11 பாடல்கள் அமைந்து அழகு செய்கின்றன.

மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் இரண்டு நூல்களுமே. சொற்சுவை, பொருட்சுவை, சிறந்து கடவுள் உணர்ச்சியில் முக்குளிக்க வைப்பன.

## கலம்பகங்கள்

குமரகுருபரர் மூன்று கலம்பகங்களைப் பாடியுள்ளார். அவற்றுள் கைலைக் கலம்பகம் முற்றுமாகக் கிடைக்கவில்லை. மற்றைய கலம்பக நூல்களான மதுரைக் கலம்பகமும், காசிக் கலம்பகமும் கிடைத்துள்ளன.

கலம்பகம் என்பதற்கு பலவகை மலர்களும் கலந்தமைந்த மாலை (கலம்பகமாலை) என்று பொருள் கொள்வதே பொருத்தம் என்பர் அறிஞர். "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந் தொடையல் கொண்டு அடியிணை பணிவான்." (திவ்– திருப்பள்ளி–5) என்று தொண்டரடிப் பொடி யாழ்வாரின் கூற்று இதனை உறுதி செய்கின்றது. பலபூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை (பெரும்பாண் –174) என்பதையும் காணலாம். கதம்பமென்பதே திரிந்து கலம்பகம் என ஆயிற்று என்ற ஒரு கருத்தும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்புறத் துறைகளிற் பல்வகை யாப்புக்களும் விரவிக் கலந்தமையின் கலம்பகம் ஆயிற்று. கலம்பகம் பதினெட்டு வகையுறுப்புக்களைக் கொண்டது.

ஒரு போகுவெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முதற்கவி உறுப்பாக முதலில் கூறி, புயவகுப்பு, மதங்கு, அம்மானை காலம் சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் ஆகிய பதினெட்டு உறுப்புக்களும் பொருந்தும்படி மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத்துறை, வஞ்சிவிருத்தம், வஞ்சித் துறை, ஆசிரியத்துறை, வெண்டுறை முதலியவற்றால் இடையிடையே வெண்பா, கலித்துறையும் கலந்துவர மடக்குடைச் செய்யுளும், வண்ணம், சந்தம் முதலியனவும் பொருந்த அந்தாதித் தொடையால் இறுதியும், முதலும் மண்டலித்து வருமாறு கலம்பகம் பாடவேண்டும்.

வச்சணந்தி மாலை, இலக்கண விளக்கப் பாட்டியல் பன்னிருபாட்டியல் ஆகிய நூல்களில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் மடல், கொற்றியார், பிச்சியார், வலைச்சியார், இடைச்சியார் என்று மேலும் பொருட்களை அமைத்துப் பாடும் மரபும் ஏற்பட்டது.

மதுரைக் கலம்பகத்தில் இறைவனது திருவிளையாடற் செய்திகள் பேசப் பெறுகின்றன. இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடற் செய்தி தலைவி கூற்றிலமைத்து "கடம்பாடவி சுந்தரரே! தேவரீர் பால்மையலுற்று உமது கொன்றை மாலையை விரும்பிய எமக்கு நீர் கொடுக்கும் பரிசு பித்தேறிய வாழ்க்கை தானோ! இந்திரனின் பழியை நீர் தீர்த்தாலும், இப்பெண் பழி உம்மை விட்டுப் போகுமா? நான் படும் விரகவேதனை கூறும் தரமோ! (146)

தனது துன்பத்தை நீக்காத சொக்கநாதரைக் கடிந்து பேசுகின்றாள். "மதியும், தென்றலும், மன்மதனும் என்னைத் துன்புறுத்த, காமனை வென்றவர் என்ற சிறப்பு உமக்குத் தகுமோ? உமது செங்கோன்மை இருந்தவாறு நன்று என்று ஏசியும், பேசியும் நயக்கும் திறம் சிறப்பானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் முற்றி மீளுந் தலைமகன் மேகத்தைப் பார்த்து "உம்மைக் கண்டால் தலைவி இன்னும் யான் வரவில்லையென்று கருதிக் கண்ணீர் விடுவாள். ஆதலின் நீங்கள் மதுரைக்குச் செல்லாதீர்கள்.

நிறைவாக, தமிழின் சிறப்பைக் குறிக்கும் தீந்தமிழ்ப்பாடலொன்று

*தமரநீர்ப் புவனம் முழு தொருங் கீன்றாள்*
*தடாதகா தேவி யென்றொரு பேர்*
*தரிக்கவந் ததுவும் தனிமுத லொரு நீ*
*சவுந்தர மாறனா னதுவும்*
*குமரவேள் வழுதி யுக்கிரனெனப் பேர்*
*கொண்டதும் தண்தமிழ் மதுரம்*
*கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்*
*கொழி தமிழ்ப் பெருமையா ரறிவார்.*

காசிக்கலம்பகம் 101 பாடல்களைக் கொண்டது காசி அகிலேசருடைய கொன்றை மாலையைப் பெற விரும்பிய தலைவியை நோக்கி "நீ சண்டேசராகப் பிறந்தால் அதைப் பெறலாம். அவரையன்றி பிறர் பெறுதற்கு அரிது" என்று தோழியின் கூற்றாக ஒளிரும் பாடல் (639.) "பெற்றவர் தான், வீசுமழுவாற்றுணிய வெட்டுமவர்க் கல்லாது, வாசமலர்க் கொன்றை வழங்கீரோ (ஏகாம்பர உலா, 401-2) இக்கருத்து சிதம்பர செய்யுட்க்கோவையிலும் காணப்படுகின்றது.

அயலவர் சிலருக்குக் கொள்வதற்கென்று சரக்கறையையே திறந்து விட்டு அனந்த கோடிப் பிள்ளைகளைப் பெற்ற மனைவிக்கு குடும்பத்தைப் பாதுகாக்க இருநாழி நெல்மட்டுமே கொடுத்தது பெருமையாகுமோ (640) பழிப்பது போலப் புகழும் பாடல் இது.

கண்ணகன் ஞாலத் தெண்ணில் பல்கோடிப் பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்திக்கு, நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங் கெண்ணான் கறமு மியற்றுதி நீயென வள்ளன்மை செலுத்தும் ஒண்ணிதிச் செல்வ (463) என்ற சிதம்பர மும்மணிக்கோவையும் இத்துடன் ஒப்பநோக்கி இன்புறத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியில் பாவம் செய்தவர்க்கு யமதண்டனை இல்லையென்பதும் வயிரவர் தண்டனை மட்டுமே உண்டென்பதும் புராண நம்பிக்கை. இதனைத் தலைவியின் கூற்றாகப் பார்க்கலாம் (654)

*"ஆமோ வவிழுத்தத் தையரே பெண்பழிவீண்*
*போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ*
*தேமோது கொன்றைச் செழுந்தாம நல்காநீர்*
*தாமோ தருவீ ருமதுபரந் தாமமே."*

பரந்தாமம் – முக்தி; பரந்தாமம் – நறுமணமாலை – இச்சொற்களைக் கொண்டு தேவரீர் அணியும் தாமத்தைத் தராமல் நிற்கும் நீர் பரந்தாமத்தைத் தருவது எங்ஙனம் எனச் சிலேடையாக வினவுவது இன்பம் தருவதாகும்.

## நீதிநெறிவிளக்கம்

இந்நூல் அறத்தின் அரிய விளக்கம். திருக்குறட் கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. பெரும்புலவர் தியாகராசச் செட்டியார் அவர்கள் "திருக்குறள் பருவத்தில் பெற்ற பிள்ளை நீதிநெறி விளக்கம்" என்று பாராட்டுவார். சமயச் சார்பில்லாது அறநெறி கருத்துக்களை விதைத்துள்ளார் அடிகளார். இந்நூல் பள்ளிமாணவர்களுக்குப் பாடமாய் அமையத்தக்கது.

நீதிநெறி விளக்கம் முதல் எட்டுப் பாடல்களில் கல்வியின் உயர்வு கூறப்படுகின்றது. உயிர்க்கு உறுதுணை கல்வியே (207). காம இன்பத்தினும் கல்வியின்பமே கொள்வதற்குரியது. (208) கல்வி கவித்துவம் பாடங்கூறும் வன்மை, சொல்வன்மை என்பன 'ஒன்றைக்காட்டிலும் ஒன்று உயர்வுடையது. (209) புலவர்களைப் போலவே கலைமகளைத் தன்பாற்பெற்ற பிரமனது படைப்பு, புகழைப் பெறாமலே அழிந்து விடும். ஆனால் புலவர் படைப்போ புகழைப் பெறுவதோடு அழியாமலும் விளங்கும் என்றார் (212). கற்றவர்க்கு அணி வேறு தேவையில்லை. கல்வியே நல் ஆபரணமாகும் (218). செல்வத்துச் சிறப்பையும் பயனையும் பல பாடல்களில் கூறுகின்றார்.

வஞ்சனையால் ஈட்டும் பொருள் முடிவில் அழியும் என்று எச்சரிக்கின்றார். பிறரை வஞ்சித்து எளியாரது உடைமைகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வாரது செல்வம் மகளிர் நகில் போல், பெருத்தாலும் அவர்கள் இடைப் போலத் தேய்ந்து வரும் (268) என்கிறார்.

அரசனுக்கு அறிவுரை கூறுமிடத்து அரசனது வருவாய் சிறிது குறைந்தாலும் அவனுக்கு அது துன்பமாகாது. ஆனால் அது கொண்டு பலர் பயனடைவர்.

*"வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பின்*
*தூங்கும் களிறோ துயருறா – ஆங்கது கொண்டு*
*ஊரு மெறும்பிங் கொரு கோடி யுய்யுமால்*
*ஆருங் கிளையோ டயின்று.*

இச்செய்யுளிற் பயின்றுள்ளது 'நுவலாநுவற்சி' யென்றும் 'ஒட்டணி' என்றும் கூறுவர்.

நிறைவாக ஒரு பாடல் – யாவரும் அறிந்த பாடல். ஊக்கமுடைமைக்கு உதாரணம்

*"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் – செவ்வி*
*அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்*
*கருமமே கண்ணாயி னார்."*

## சிதம்பர மும்மணிக் கோவை

மூன்று மணிகளால் ஆன மாலையைப் போல, ஆசிரியப்பா– நேரிசை வெண்பா – கட்டளை கலித்துறை என்ற மூவகைப் பாமணிகளால் ஆனமாலை மும்மணிக்கோவை. அந்தாதித் தொடையாகப் பாடப்பட வேண்டும்.

சிதம்பரத் தலத்தைப் பற்றிய மும்மணிக் கோவை. நமது குருநாதராகிய மாசிலாமணி தேசிகரின் திருவருளைப் பெற்று அவர் பணித்த வண்ணம் சிதம்பரம் சென்று சிதம்பர மும்மணிக் கோவையும், சிதம்பர செய்யுட்க் கோவையும் இயற்றியருளினார். சிதம்பர மும்மணிக் கோவையில் சிதம்பரத்தின் பெருமை, கூத்தப் பெருமானின் சிறப்பு. தரிசன விசேடம் முதலியன பரக்கப் பேசப்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டார மும்மணிக்கோவை

36 பாடல்களைக் கொண்டது. பண்டார மும்மணிக்கோவையில் தனது ஞானாசிரியரின் திருவருட்டிதிறத்தைப் பல்வகையாலும் பாராட்டுகின்றார். மணிமந்திர ஔஷதங்களால் மீளாச் சென்மநோய் ஒரு மணியினாலே நீங்கியது. அதுவே ஐம்பொறிகளையும் அடக்கிய மாசிலா மணியாகும் என்கிறார்.

மேலும் நின்திருவருளால் என்னுடைய கரணங்கள் சிவகரணங்களாயின. திரிகரணங்கள் என்னும் தொடர் மூன்று காரணங்கள் என்று பொருள்படும். ஆனால் என்திறத்தில் அவை திரிந்த கரணங்களாகின. ஒரு பொருட் கிளவி இரு பொருட் கிளவி என்று பெயர் வகைகளைக் கையாண்டுள்ளார்.

*"வாக்கும் மனனும் யாக்கையு மொன்றாச்*
*சொற்றரு கரண மற்றிவை மூன்றும்*
*நின்புகழ் நவிற்றியு நினைத்துநின் றுணைத்தாள்*
*அன்புட னிறைஞ்சியு மின்பமுற் றனவால்*
*அவகர ணங்களே யல்லமற் றம்ம*
*சிவகர ணங்களாய்த் திரிந்தன வன்றே, அதனாற்*
*ஒரு பொருட் கிளவியெல் லோர்க்கும்*
*இரு பொருட் கிளவியா யிருந்ததின் றெனக்கே"* (587)

இதே கருத்தினை அடுத்துவரும் பாடலிலும் காணலாம்.

"எற்கமலஞ் செய்யு மெழின் மாசி லாமணிதன்
பொற் கமலஞ் சென்னி பொலிவித்தேன் – நற்கமலை
ஊரிற் குறுகினே னோர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின்."

இரண்டு மாத்திரை கொண்டு நெடிலாயிருந்த சீவன். ஞானாசிரியன் திருவடி சென்னியிற் பட்டவுடன் ஒரு மாத்திரையளவு குறுகி சிவனானது என்று தற்போதம் கழன்ற நிலையை அருமையாகச் சுட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரர் தம்மையாண்டருளிய ஞானாசிரியரின் திருநாமத்தின் சிறப்பைப் பலவகையாலும் புகழ்கிறார். மாசிலாமணிக் (குற்றமில்லாத மணி)க்கும் பிற மணிகளுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறார்.

கடலில் கிடைக்கும் சிந்தாமணி நாம் கருதியதையே கொடுக்கும். ஆனால் மாசிலாமணி ஒரு கடலையே பெற்று நமது சிந்தனைக்கு எட்டாததையும் தரும். (571) உலகிலுள்ள மணிகளை மிக முயன்று தான் பெறவேண்டும். ஆனால் இந்த மணியை 'சும்மா' இருந்தவர்களே பெற்றார்கள் (573)

அந்த மணிகள் தம்மைக் கைக்கொண்டவர்களுடைய பொருளாகும். ஆனால் இம்மணியோ கொண்டவரைத் தான் கொண்டு ஆளும் (574). மற்றைய மணிகள் பருத்திநூலிற் கோர்க்கப்படுவன. இது தமிழ் நூலில் கோர்க்கப்படுவது (579).

மற்றைய மணிகள் பாம்பின் முடிமேலே இருக்கும். இம்மணி தன் முடிமேற் பாம்பைக் கொண்டிருக்கும். (591) மற்ற மணிகள் பொன்கொடுத்துக் கொள்வன. இம்மணியோ உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுத்துக் கொள்வது (594) சிந்திக்க சிந்திக்கச் தமிழ்த்தேன் பிலிற்றும் பாடல்கள். சைவசித்தாந்தக் கருத்துக்கள் இவர் பாடலில் கைகட்டி சேவகம் செய்யும்.

## சிதம்பர செய்யுட் கோவை

இந்நூல் யாப்பிலக்கணச் செய்யுள் வகைகளுக்கு எடுத்துக் காட்டான பாடல்களைக் கொண்டது. பாடல்கள் இனியன. பொருளாழம் மிக்கன. தத்துவச் செறிவு கொண்டவை. எண்பத்து நான்கு பாடல்கள் வெண்பா விகற்பங்கள் அனைத்திற்கும் இலக்கண வகையால் பாடல்களை அமைத்தும் பலவிகற்ப ஐந்தடிக் பஃறொடை வெண்பா, ஒரு விகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா; பல விகற்பத்து ஆறடிப்பஃறொடை, ஒரு விகற்பத்து ஏழடி, பல விகற்பத்து ஏழடி, இன்னிசைச் சிந்தியல் வெண்பா; குறள் வெண்செந்துறை; குறள் வெண்டாழிசை; செப்பலோசையில் சிதைந்து வந்த குறள் வெண்தாழிசை; வெண்டுறை; மூன்றடி வெளிவிருத்தம், நான்கடி வெளிவிருத்தம்; ஆசிரியப்பாவின் விகற்ப வகைகள், வகைக்கொரு பாடல் அமைத்துள்ளார் ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாரூர் நான்மணி மாலை

வெவ்வேறான நான்கு மணிகள் கொண்டு (முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்) அமைக்கப்படும் மாலைபோன்று வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்பவை அந்தாதித் தொடையாய் அமையப் பாடப்படுவது நான்மணி மாலையின் இலக்கணம் ஆகும். 40 பாடல்கள் கொண்டதாக அமைக்கப்படல் வேண்டும்.

திருவாரூர் நான்மணிமாலை திருவாரூர் தியாகராசப் பெருமான் மீது பாடப்பட்ட சிறப்புடையது. அவர் நிகழ்த்திய திருவிளையாடல்களைக் கூறி மகிழ்வது.

தியாகேசர் பிரமதேவருடைய சிரங்களை சிரமாலையாகத் திருமுடியிலும், திருமாலின் சிரங்களைத் திருவடியிற் கிண்கிணியாகவும் அணிந்துள்ளார். இதனை அவர் நீக்க வேண்டும். ஏன் தெரியுமா? இருவருமே அடியையும் முடியையும் காண்பதற்குச் சென்று தோற்றனர். இப்பொழுது அவர்களது சிரங்களை அடியிலும் முடியிலும் அணிந்தால் நாங்கள் முன்னரே கண்டுவிட்டோம் என்று பொய்க்கரியுரைப்பர்.

*"வள்ளமுலைக் கலை மடந்தை*
*மகிழ்நர்தலை மாலைசிர மாலையாகக்*
*கொள்ளுவதும் மலர் மடந்தை*
*கொழுநர்தலை கிண்கிணியாக் கோத்துச் சாத்த*
*உள்ளுவது மொழிவதுமற்*
*றொழியாயே லடிமுடிகள் உணர்ந்தே மென்றே*
*கள்ளமொழி வான்புகிற்றென்*
*கமலேச வவர்க்கவையே கரியு மாமே."* (323)

திருவாரூர் வன்மீக நாதர் புற்றிடங்கொண்டவர். பாம்பைப் பூணாக அணிந்தவர். விடத்தையும் உண்டவர். இவ்வாறு அவர் பாம்பு முதலியவற்றோடு பழகுவது தமது பக்கத்தில் ஒரு மயில் (உமாதேவி) இருக்கும் துணிவு கொண்டேயாகும். (342)

தியாகேசருக்கு "இருந்தாடழகர்" என்ற திருநாமம் உண்டு. சாதாரண நாட்களில் அவரது திருவடியைத் தரிசிக்க முடியாது. அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் இரண்டு காரணங்களைக் காட்டுகின்றார். ஒன்று திருவடி எடுத்து நடனம் செய்தால் திருமால் தூக்கிய திருவடியைக் கண்டுவிட்டேனென்று, நான்முகனைப் போலக் பொய்ச்சூள் உரைப்பாரென்று கருதியோ - இரண்டாவதாக, திருவடி கண்டு யமன் அஞ்சுவார் என்று கருதியோ இருந்து ஆடுகின்றார். (325)

தியாகேசரும், உமையும், குமரவேளும் சேர்ந்துள்ள காட்சி திரிவேணி சங்கமத்தை ஒத்துள்ளதாகக் கூறுவார். சிவபெருமானின் வெண்ணீறு பூசிய திருமேனி வெண்மையும் தண்மையுமிக்க கங்கை, நீலநிற யமுனை உமையின் திருமேனி செய்ய நிறமுடைய குமரவேளே வாணிநதி - இவ்வாறாக திருமூர்த்திகளும் திரிவேணிப் புனிதப் புனலாக காட்சிதருகின்றனர்.

> "*தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா வரூரர்*
> *செம்மேனி கங்கைத் திருநதியே - அம்மேனி*
> *மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்*
> *தானே குடைவேந் தனித்து.*" (345)

மற்றொரு பாடல்

> "*தன்னொக்குஞ் செல்வக் கமலைப்பிரான் செஞ் சடாவிமற்*
> *றென்னொக்கு மென்னி னெரியொக்கும் கொன்றை யெரீயிலிட்ட*
> *பொன்னொக்கும் வண்டு கரியொக்கும் கங்கையைப் பொன் செய்விக்கும்*
> *பின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்லனொக்கு மவ்வெண் பிறையே*"
>
> (346)

கமலைப்பிரான் சடைக்காடு எரியும் நெருப்பு. கொன்றை நெருப்பிலிட்ட பொன். மலரை மொய்க்கும் வண்டுகள், நெருப்பிலிட்ட கரி. கங்கை ஆபரணம் செய்விக்கும் பெண். பிறை அதனைச் செய்யும் கிழத்தட்டான். குமரகுருபரர் ஒரு பொற்கொல்லனின் பட்டறையையே நம் கண்முன் நிறுத்துகின்றார்.

### சகலகலாவல்லி மாலை

கலைமகளைத் துதிக்கும் பாமாலை. குமரகுருபரர் தில்லி முகம்மதிய மன்னனிடம் உரையாடுவதற்கு இந்துஸ்தானி மொழிப் புலமை தந்தருளுமாறு கலைமகளை வேண்டிப் பாடிய பாடல். மன்னன் பொம்மைச் சிங்காசனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருக்க நாமகளின் அருளால் உண்மையான சிங்கத்தையே ஆசனமாகக் கொண்டு குமரகுருபரர் மன்னனிடம் நேருக்கு நேர் நின்று பாடி மன்னனின் மனத்தை வென்று காசி கேதார கட்டத்தைப் பெற்றார் என்பது ஐதீகம். இது ஒரு இனிய பாராயண நூல்.

*"மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்*
*பண்கண்டளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்*
*விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பில் உன்போல்*
*கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே"* (10)

கலைமகளிடம் இவர் பொன்னையோ பொருளையோ இரக்கவில்லை. தமிழ்ப் புலமையை இரந்துநிற்கிறார்.

*"நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்*
*பாடும் பணியில் பணிந்தருள் வாய்."*

*"பண்ணும் பரதமுங் கல்வியுஞ் தீஞ்சொற் பனுவலும் யான்*
*எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய்"*

*"பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்*
*கூட்டும் படிநின் கடைக்கணல்காய்"*

*"சொல்விற்பனமு மவதானமுங்கவி சொல்ல வல்ல*
*நல்வித்தையுந் தந் தடிமைகொள்வாய்"*

## முடிப்பு

குருவருளும், திருவருளும் ஒருங்கே அமையப்பெற்ற குமரகுருபரர் பாவகையில் தொடாத சிகரங்களே இல்லை எனலாம். அணிவகைகள், யாப்பு வகைகள், கற்பனை, மொழிவளம், சொல்வளம் அனைத்தையும் ஒருங்கே கொண்டு அமையப்பெற்றவை அடிகளாரின் பிரபந்தங்கள்.

குமரகுருபரர் பழுத்த செந்தமிழ்ப் புலவர். சுவாமிகளின் நூல்களை எடுத்துப் பாடும் பொழுதே இனிய ஆற்றொழுக்குப் போன்ற ஓசை நமது செவிகளில் மோதும். தெய்வங்களை நேரே தரிசிப்பது போன்ற ஓர் உணர்ச்சி உள்ளத்து எழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை செய்த நூல்கள்.


1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு.** – காசிமடத்துப் பதிப்பு.
2. **குமர குருபரர் பிரபந்தத் திரட்டு** – பேராசிரியர் அ. மாணிக்கம் M.A
3. **கந்தர் கலிவெண்பா** – மகாவித்வான் சி. அருணை வடிவேல் முதலியார் (தொண்டை மண்டல ஆதீனம்)
4. **கந்தர் கலிவெண்பா** – புலவர் இரா. இளங்குமரன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. **திருவிளையாடல் புராணம்** – திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடப் பதிப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர நாயக்கர்காலப் புராணங்களும் தலபுராணங்களும்

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

## 1. புராணங்கள்

'புராணம்' என்னும் இலக்கிய வடிவம் வடமொழிச் செல்வாக்கின் பயனாகத் தமிழுக்கு அறிமுகமாகியது. வடமொழியில் 'புராணம்' என்பதற்குப் பழமை, பழங்கதை, பழைய வரலாறு எனப் பல பொருள்களுள. வாயுபுராணம் 'புராதன காலந்தொட்டு நடைமுறையிலிருந்து வருவது' அல்லது 'கடந்தகால நிகழ்வுகளின் பதிவேடு' என்ற வகையில் புராணம் என்னும் சொல்லுக்குப் பொருள் தருகின்றது. 'வேதாகம புராண இதிகாசம்' என்னும் வடமொழி வழக்கு இந்து மரபில் வேதம், ஆகமம் என்பவற்றிற்கு அடுத்த நிலையில் புராணம் பெற்றிருந்த மதிப்பினை உணர்த்துகின்றது. சாந்தோக்கிய உபநிடதம் 'இதிகாச புராணானி பஞ்சமோ வேத உச்யதே' எனக் கூறுதலால் புராணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாசமும் ஐந்தாவது வேதம் எனச் சிறப்பிக்கப்பட்டு வந்த நிலையை உணரலாம்.

வடமொழி நூலார் புராணங்களை மகாபுராணங்கள் என்றும் உப புராணங்கள் என்றும் இரண்டாகப் பாகுபடுத்துவர். இவை தொகையளவால் தனித்தனியே பதினெட்டாகும். இவற்றுள் சிறப்புடையவை மகா புராணங்கள். பதினெண் மகாபுராணங்களையும் இயற்றியவர் வியாசர் எனக் குறிப்பிடப்பட்ட போதிலும் இவை யாவும் ஒரேகாலத்தில் ஒரே இடத்தில் ஒருவராலேயே செய்யப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்குச் சான்று ஏதுமில்லை. 'புராண பஞ்சலட்சணம்' என்பதற்கிணங்க சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானு சரிதம், மனுவந்தரம் எனும் ஐந்து இலட்சணங்களுக்குட்பட்டுப் பாடப்பட்டுள்ளன. இந்து சமயத்துக்கு ஆதரவான கடவுட்கோட்பாடு, தத்துவங்கள், வழிபாட்டு மரபுகள் என இன்னோரன்ன விடயங்களைத் தொகுத்து கூறுகின்ற படைப்புக்களாக இவை விளங்குகின்றன. புராணங்களில் அமைந்துவரும் பல கதைகள் வேதகாலத்திலேயே வழங்கி வந்துள்ளன என்பர்.[1] அதர்வண வேதம் தோன்றிய காலங்களிலேயே புராணங்கள் வடமொழியில் தனித்துவமான இலக்கியங்களாக வளரத் தொடங்கிவிட்டன. எனினும் கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் அதாவது குப்தப் பேரரசு காலப் பகுதியிலேயே அவை தொகுக்கப்பட்டு முழுமையடைந்தன.

## 2. தமிழில் புராணங்கள்

வடமொழியில் செல்வாக்குப் பெற்றிருந்த புராண இலக்கியங்கள் தமிழுக்குச் சங்க காலத்தின் பிற்பகுதி முதலாகவே அறிமுகமாகத் தொடங்கிவிட்டன. சங்க காலப் பிற்பகுதியில் தோன்றிய இலக்கியங்களில் புராணக் கருத்துக்களும் கதைகளும் பரவலாக இடம் பெறுவதைக் காணலாம். குறிப்பாக திருமுருகாற்றுப்படை, பரிபாடல் எனும் இலக்கியங்களில் ஒப்பீட்டளவிலே புராணக்கதைகள் அதிகம் பயின்று வந்துள்ளன. வடநாட்டுடன் தமிழ் நாட்டவர் கொண்டிருந்த வர்த்தகம், அரசியல் உள்ளிட்ட பலநிலைப்பட்ட உறவுகளும், ஆரியமயமாக்கச் சூழலும், இந்து சமயத்தின் செல்வாக்குப் பரம்பலும் புராணக்கதைகள் தமிழில் அதிகளவில் அறிமுகமாகக் காரணிகளாக அமைந்தன. பல்லவர் காலப்பகுதியில் அவைதிக மதங்களுக்கு எதிராகச் சைவமும் வைணவமும் தமது பிரசாரங்களை முன்னெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கட்டங்களிலே புராணக் கதைகளும் கருத்துக்களும் தாராளமாகத் தமிழ்நாட்டிலே பரவலடைந்தன. மக்களுக்குப் பக்தியுணர்வை ஊட்டவும், அவர்கள் சார்ந்திருக்கும் மதத்தின்பால் நம்பிக்கையை உண்டு பண்ணுவதற்கும், சமய எழுச்சி மனப்பான்மையை வளர்ப்பதற்கும் எனப் புராணக்கதைகள் அதிகளவில் எடுத்தாளப்பட்டன. பக்தி இயக்கத்தில் முன்னின்று அதனை வழிநடாத்திய ஆழ்வார்கள், நாயன்மார்கள் யாவரும் புராணக் கதைகளைத் தமது பாசுரங்களில் நயம்படக் கையாண்டுள்ளனர். இறைவனையே புராண வடிவினனாகக் காணும் மரபும் பக்தியியக்கத்தினர் மத்தியில் வளர்ந்துள்ளது.[2]

தங்கள் பதிகங்களைப் 'புராணம்' எனும் பெயரால் குறிப்பிடும் வழக்கமும் தென்னாட்டுப் பக்தியாளர் சிலரிடம் காணப்பட்டது. அப்பர் தேவாரத்துள் இருபதிகங்கள் புராணம் என்னும் பெயரினைக் கொண்டனவாக உள்ளன. 'தசபுராணம்', 'இலிங்க புராணக் குறுந்தொகை' என அமைந்து வரும் இப்பதிகங்களில் வடமொழிப் பதினெண் புராணக்கதைகள் பல அமைந்து வருதலைக் காணமுடியும். திருவாசகத்தின் முதல் அகவல் 'சிவபுராணம்' என்றே அமைந்து வருதல் நோக்கத்தக்கதாகும். திருமூலர் திருமந்திரத்தில் 'இலிங்க புராணம்' என ஒரு பகுதியை அமைத்துள்ளார்.

இங்ஙனம் தமிழில் அறிமுகமாகி வந்த புராணம் பற்றிய கருத்து நிலைகள் சோழர்காலத்திலும் அதற்கு பின்னரும் பல புராணங்கள் எழுதப்படுவதற்கு ஏற்ற நல்ல களத்தை உருவாக்கித் தந்தன.

### 3. நாயக்கர் காலம்:

தமிழ் இலக்கிய வரலாற்றிலே சோழப்பேரரசின் வீழ்ச்சிக்கும் ஐரோப்பியரின் வருகைக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை 'நாயக்கர் காலம்' எனக் குறிப்பிடுவார்கள்[3]. இது ஏறத்தாழ கி. பி. 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு வரையான நான்கு நூற்றாண்டுகளை உள்ளடக்கியிருந்தது. முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து ஆரம்பித்த சோழப்பேரரசின் சரிவு பின்வந்த மன்னர்கள் காலத்தில் மேலும் அதிகரித்துச் சென்றதை தமிழ்நாட்டு வரலாற்றை உற்றுநோக்குவோர் கண்டுகொள்வர். கி. பி. 1279 இல் மூன்றாம் இராஜேந்திர சோழன் வாரிசில்லாது இறந்து போனமையைத் தொடர்ந்து சோழராட்சி தமிழ்நாட்டிலிருந்து முற்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதொழிந்தது. சோழராட்சி தளர்வெய்திவந்த காலங்களிலே பாண்டியர்கள் தமிழ்நாட்டிலே தலையெடுத்தனர். முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (1251 – 1271) முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (1268 – 1310) எனும் பாண்டியர்கள் தமிழ்நாட்டில் தமது ஆட்சி எல்லையை விரிவுபடுத்தி பேரரசு ஒன்றைக் கட்டியெழுப்ப விழைந்தனர். எனினும், மேலே சுட்டப்பட்ட மன்னர்களைத் தொடர்ந்து வந்தோர் பொறுப்பற்று வாரிசுரிமைச் சண்டையில் ஈடுபட்டமை அப்பாண்டியப் பேரரசின் சிதைவுக்குக் காரணமானதோடு மதுரையில் சுல்தானியரின் ஆட்சி இடம் பெறவும் காரணமாயிற்று. கி.பி.1330 முதல் கி.பி.1378 வரை மதுரையில் முகமதியர் ஆட்சி நிலை பெற்றதாகத் தெரிகின்றது.

தமிழ்நாட்டு அரசியல் நிலவரம் இவ்வாறிருக்க தென்னிந்தியாவிலே அடிக்கடி நிகழ்ந்து வந்த முஸ்லிம் படையெடுப்புக்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு துங்கபத்திரையாற்றின் கரையிலே விஜயநகரம் எனும் இந்து அரசு ஒன்று உருவாக்கப்பட்டது (கி. பி. 1336). இவ்வரசு தென்மாநிலங்கள் நோக்கி நிகழ இருந்த முஸ்லிம் படையெடுப்புக்களைத் தடுத்து நிறுத்தியதோடு அதன் ஆளுகைக்கீழ் உள்ள பிரதேசங்களில் இந்துசமயமும் இந்து சமயப்பண்பாடும் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய ஆதரவுகளையும் நல்கிவந்தது. விஜயநகர மன்னர்கள் தமிழ்நாட்டின் மீதும் படையெடுத்து அங்கிருந்த சிறுசிறு பிரதேச ஆட்சியாளர்களை வென்று அப்பிரதேசங்களையும் தம் பேரசுடன் இணைத்துக்கொண்டனர்.

தமிழ்நாடு இங்ஙனம் விஜயநகரப் பேரரசுடன் இணைக்கப்பட்ட காலங்களில் அப்பேரரசின் பிரதிநிதிகளாகத் தமிழ்நாட்டை ஆண்டு வந்தவர்கள்தான் நாயக்க மன்னர்கள். மதுரை, செஞ்சி எனும் இடங்களில் இருந்து இவர்கள் தமிழ்நாட்டை நிர்வகித்து வந்தனர். விஜயநகரப் பேரரசு சிதைந்த பின்னருங் கூட இவர்களது ஆட்சி தமிழ்நாட்டில் நிலவியது. நாயக்க மன்னர்களால் இங்கனம் தமிழ்நாடு நிர்வகிக்கப்பட்டு வந்த காலப்பகுதியையே விஜயநகர நாயக்கர் காலம் என இலக்கிய வரலாற்றாசிரியர்கள் சுட்டுவர்.

நாயக்கர் காலப்பகுதியில் புராணங்கள், தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள், உரை நூல்கள் எனப் பலவகையான இலக்கியங்களும் தோற்றம் பெற்றுள்ளன. எனினும், இலக்கிய அந்தஸ்து ரீதியில் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தைப் பெறுபவை புராணங்களேயாகும். தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒப்பீட்டளவில் அதிகமான புராணங்கள் நாயக்கர் காலப்பகுதியிலேயே தோற்றம் பெற்றுள்ளதைக் காணமுடியும். அதிலும் குறிப்பாக 16ஆம், 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதியைத் 'தலபுராணகாலம்' என விதந்துரைக்கத்தக்க வகையில் ஏராளமான தல புராணங்கள் இக்காலப் பகுதியில் தோற்றியிருக்கின்றன.

இங்ஙனம் நாயக்கர் கால இலக்கியச் செல்நெறியில் மிக முக்கிய பங்கினை வகித்துள்ள புராணங்கள் பற்றிய பொது அறிமுகத்தையும் அதிகளவில் எழுந்த தலபுராணங்கள் குறித்த சிறப்புக் கண்ணோட்டத்தையும் இவ் ஆய்வு முன்வைக்க முயல்கின்றது.

## நாயக்கர் காலப் புராணங்கள்

நாயக்கர் காலப்பகுதியிலே தோன்றிய புராணங்களை அவை சார்ந்துள்ள சமயநெறியினை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பாகுப்படுத்தி நோக்க முடியும்.

4.1 வைணவ புராணங்கள்

4.2 சமண (ஜைன) புராணங்கள்

4.3 சைவ புராணங்கள்

## 4.1 வைணவ புராணங்கள்

வைணவ புராணங்கள் என்ற வகையில் குறிப்பிடத்தக்கனவாக ஐந்து புராணங்கள் இக்காலப் பகுதியில் எழுந்துள்ளன.

I. செவ்வைசூடுவார் அருளிய **ஸ்ரீபாகவதம்** அல்லது **இதிகாச பாகவதம்** (விண்டுபாகவதம்)

II. நெல்லிநகர் அருளாளதாசர் எழுதிய **மகாபாகவதம்** அல்லது **புராணபாகவதம்** (வாசுதேவர் கதை)

III. திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பாடிய **திருக்குருகை மான்மியம்.**

IV. **கூடற்புராணம்** – எழுதியவர் பெயர் தெரியவில்லை.

V. ஹரிதாசர் எழுதிய **இருசமய விளக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவே இவ் ஐந்துமாகும். இவற்றுள் முதலில் விதந்துரைக்கப்பட்ட ஸ்ரீபாகவதபுராணம், மகாபாகவதம் என்னும் இரு நூல்களும் வடமொழி பாகவதங்களின் மொழிபெயர்ப்புகளாகும். திருக்குருகை மான்மியம், கூடற்புராணம் எனும் இரண்டும் முறையே ஆழ்வார் திருநகரி, மதுரை கூடலழகர் கோயில் எனும் பிரசித்தி பெற்ற வைணவத் தலங்கள் மீது பாடப்பட்ட தலபுராணங்களாகும். ஹரிதாசர் எழுதிய இருசமய விளக்கம் என்னும் புராணம் சமயவாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. சைவசமயத்தை மறுதலித்து வைணவமே முழுமுதற் சமயம் என வாதிட முனைவது. இவையேயன்றி **அரிசமய தீபம்** (17) , வடிவழகிய நம்பிதாசர் பாடிய **குருபரம்பரைப் பிரபாவம்** (18), லோகஞ்ஜீயர் செய்த **இராமானுச திவ்யாச்சார்யா சரிதை** (19) எனும் அடியார் பெருமை சுட்டும் புராணங்களும் எழுந்துள்ளன. இவை உரைநடையில் எழுந்தவை என்பது நோக்கற்பாலது.

## 4.2 சமண [ஜைன] மத புராணங்கள்

ஜைன மதத்தவர்களும் தமக்கெனப் புராணங்களை இக்காலப்பகுதியில் எழுதியிருந்தனர். எனினும் அவை தொகையளவால் மிகக் குறைந்தனவாகும். சமணர்கள் கி. பி. 8ஆம் 9ஆம் நூற்றாண்டு காலங்களிலேயே சில புராண நூல்களை எழுதியிருந்தார்கள் என்பதை யாப்பருங்கல விருத்தியுரையாலும் புறத்திரட்டு என்னும் நூலாலும் அறியமுடிகின்றது. யாப்பருங்கல விருத்தியுரை 'புராண சாகரம்' எனப் பஃறொடை வெண்பாவாலான புராணம் ஒன்று சமணர்களிடத்திலிருந்தமை பற்றிச் சான்று பகர்கின்றது. இதன் காலம் ஏறத்தாழ கி. பி. 9ஆம் நூற்றாண்டாக இருத்தல் வேண்டும். அதேபோல் 'சாந்தி புராணம்' என்னும் புராண நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு எனும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. கி. பி. 8 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாக கருதப்படும் இப்புராணம் சாந்திநாதர் என்ற பதினாறாவது ஜைன தீர்த்தங்கரரின் வரலாற்றைக் கூறும் விரிந்த புராணமாக இருந்திருத்தல் வேண்டும்.

இவற்றைவிட ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கால எல்லையில் **மேருமந்தரபுராணம்** (14), **ஸ்ரீபுராணம்** (15), **திருப்புகழ்புராணம்** (16) எனும் நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. மேருமந்திர புராணத்தை எழுதியவர் வாமன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர். பதின்மூன்று சர்க்கங்களில் ஆயிரத்து நானூற்றுப் பத்து பாடல்களைப் பெற்றுவரும் இப்புராணம் மேரு, மந்தரர் என்னும் இரு அரசகுமாரர்களின் வரலாற்றினையும் அவர்கள் முக்தி பெற்ற தன்மையும் விரித்துரைக்கின்றது. மணிப்பிரவாள நடையால் ஆக்கப்பட்ட ஸ்ரீபுராணம் ஒரு ஜைனமத புராணமே. திருப்புகழ்ப் புராணம் மண்டல புருடர் என்பவரால் செய்யப்பட்டது அருகரின் வழியில் நின்ற தீர்த்தங்கரர் ஒருவருடைய புகழைப்பாடும் இப்புராணம் இன்று கிடைக்கவில்லை.

## 4.3 சைவ சமய புராணங்கள்

விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் மிக அதிகளவாக எழுந்த புராணங்கள் சைவ சமய புராணங்களாகும். அவற்றின் பொருள்மரபுக்கு ஏற்ப—

4.3.1 மொழிபெயர்ப்பு அல்லது தழுவற் புராணங்கள்

4.3.2 மெய்யடியார் வரலாறு கூறும் புராணங்கள்

4.3.3 விரதமகிமை கூறும் புராணங்கள்

4.3.4 தலபுராணங்கள்

எனப் பாகுப்படுத்தி நோக்கமுடியும். 'புராணம்' என்னும் ஈற்றோடு கூடியனவாகப் பிற்காலங்களில் எழுதப்பட்ட அங்கத இலக்கியங்களோ அல்லது சாதியடிப்படையில் எழுதப்பட்ட 'வன்னியர் புராணம்', 'செங்குந்தர் புராணம்', 'விசுவகர்மர் புரணம்' போன்றவையோ இப்பாகுப்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

### 4.3.1 மொழிப்பெயர்ப்பு அல்லது தழுவற் புராணங்கள்

வடமொழியில் உள்ள பதினெண்புராணங்களில் யாதேனும் ஒன்றை முழுமையாக அல்லது பகுதியாக தழுவியோ மொழிபெயர்தோ தமிழிற் செய்யப்பட்ட புராணங்கள் இப்பிரிவினைச் சேர்ந்தனவாகும். இவ்வகைப் புராணங்களை மேலும் மூன்று பிரிவுகளாகப் பகுத்து நோக்கமுடியும்.

I) வடமொழி சிவமகாபுராணங்களை முழுமையாகத் தழுவி தமிழில் செய்யப்பட்ட புராணங்களை முதற் பிரிவிலடக்கிக் கூறலாம். **கூர்மபுராணம்** (16), **இலிங்கபுராணம்** (16), **மச்சபுராணம்** (18) எனும் மூன்று புராணங்களும் இவ்வகை சார்ந்தவை.

II) வடமொழிப்புராணங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தழுவித் தமிழில் ஆக்கப்பட்ட புராணங்களை மற்றொரு பிரிவிலடக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறலாம். **உபதேசகாண்டம்** (15), **பிரமோத்தரகாண்டம்** (15), **வாயுசங்கிதை** (16), **காசிகாண்டம்** (16) முதலானவற்றை இவ்வகைசார் புராணங்களுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வடமொழிப் புராணங்களின் பகுதிகளே இப்புராணங்கள் என்பதை எடுத்துக்காட்ட இவற்றின் நூற்பெயரிலே 'சங்கிதை', 'காண்டம்' என்னும் தொடர்கள் இணைக்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்கதாகும்.

III) வடமொழிப் புராணங்களில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகளைத் தழுவிச் செய்யப்படுகின்ற அதேவேளை தமிழில் வழங்கி வரும் தெய்வபராக்கிரமம், லீலைகள், திருவிளையாடல்கள் சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கிக் கூறும் புராணங்கள் இன்னொரு வகையில் அடக்கிக் கூறத்தக்கன. **கந்தபுராணம்** (14), **விநாயகபுராணம்** (18) முதலானவற்றை வகை மாதிரியாக எடுத்தாளலாம்.

### 4.3.2 மெய்யடியார் வரலாறு கூறும் புராணங்கள்

தமிழ்நாட்டில் வாழ்ந்த சைவ அல்லது வைணவ நாயன்மார்களின் வரலாறுகளையும் அவர்களின் அருட்செயல்கள், பக்தித்திறன் போன்றவற்றையும் மக்கள் மனங்கொள்ளச் செய்யத்தக்க வகையிற் பாடப்பட்ட புராணங்கள் இவ்வகுப்பிலடங்கும். சைவ மெய்யடியார்களையும் வைணவ ஆழ்வார்களையும் தெய்வங்களாக அல்லது தெய்வத்தின் அம்சங்களாகக் கருதி வழிபடும் போக்கின் அடிப்படையிலேயே இப்புராணங்கள் எழுந்துள்ளன. சைவசமய மரபில் இதனைத் தொடக்கி வைத்தவர் சேக்கிழார். கி. பி. 12ஆம் நூற்றாண்டில் எழுந்த அவரது **'திருத்தொண்டர் புராணம்'** அல்லது 'பெரியபுராணம்' தமிழகத்தில் வாழ்ந்த அறுபத்து மூன்று மெய்யடியார்களின் வரலாற்றைப் பதிவுசெய்தது. பெரியபுராண வழியில் இக் காலப்பகுதியிலும் மெய்யடியார்கள் மீது புராணங்கள் எழுந்துள்ளன.

உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்ததாகக் கருதப்படும் **சேக்கிழார் புராணம்** (14), கடவுள் மாமுனிவரின் **திருவாதவூரடிகள் புராணம்** (15), **பட்டினத்தார் புராணம்** (14) என்பனவற்றை இவ்வகைசார் புராணங்களுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சேக்கிழாரின் பெரியபுராணக் கதையைச் சுருக்கி எண்பத்து மூன்று பாடல்களில் உமாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாசாரியார் அருளிச் செய்ததாகக் கருதப்படும் **திருத்தொண்டர் புராணசாரமும்** ஒருவழியில் இவ்வகை சார்ந்ததே.

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட காலப்பகுதிக்குப் பின்னதாகவும் மெய்யடியார்கள் வரலாற்றைக் கூறும் சில புராணங்கள் எழுதப்பட்டுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பட்டினத்துப்பிள்ளை புராணம், சடகோப திவ்ய சரிதம் என்பனவும் இருபதாம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் புராணம் (தண்டபாணி சுவாமிகள்), சேய்த்தொண்டர் புராணம் (வாளூர் சொக்கலிங்கம்பிள்ளை), கச்சியப்ப சிவாச்சியார் புராணம் (வாமதேவ முருக பட்டாரகர்), இராமலிங்க சுவாமி புராணம் (அவலாம்பிகையம்மை) முதலானவையும் தோன்றியதாக அறியமுடிகின்றது.

### 4.3.3 விரதமகிமை கூறும் புராணங்கள்

இந்து சமய வழிபாட்டில் முதன்மை பெறும் விரதங்கள் பற்றி அவற்றை அனுட்டிக்கும் காலம், அனுட்டிக்கும் முறை, அனுட்டிப்பதால் அடையக் கூடிய பலாபலன்கள் என்பவற்றை விளக்கி நிற்கும் புராணங்களே விரத புராணங்களாகும். தமிழகத்திலும் ஈழத்திலும் எழுந்த **சிவராத்திரி புராணங்கள்** (18), **ஏகாதசிப் புராணம்** (18), **பிள்ளையார் கதை** (18) என்பனவும் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சீமந்தனி புராணமும் (பூபாலபிள்ளை) இந்தவகையில் சுட்டிக்காட்டத்தக்கவை.

### ஏனைய புராணங்கள்

மேலே கூறப்பட்ட பகுப்புக்குள் அடங்காத ஏனைய சில புராணங்களும் இக்காலப்பகுதியில் எழுந்துள்ளன. இவற்றுள் கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவாசாரியாரால் அருளிச் செய்யப்பட்டதாகக் கருதப்படும் **திருமுறை கண்டபுராணம்** குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். நாற்பத்தாறு பாடல்களைக் கொண்ட இப்புராணம் நம்பியாண்டார் நம்பியால் சிதம்பரத் திருத்தலத்திலிருந்து தேவாரத் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட வரலாற்றை மிகச் சுருக்கமாகக் கூறுகின்றது.

16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியர் இயற்றியதாக நம்பப்படும் **மாகபுராணம்** ஒரு தீர்த்த மகிமையைக் கூறும் புராணமாகும். மாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்திலே புனித நீராடல் கிடைக்கக் கூடிய புண்ணியங்களை இப்புராணம் விபரித்துச் செல்கின்றது. தீர்த்தவிசேடம், ஏகாதசிவிரதம், சிவராத்திரி மகிமை, தருமம் செய்வதால் விளையும் புண்ணியபலன், தீமை செய்வதால் வரும் நரக அனுபவம், இல்லற ஆசாரங்கள், கற்பொழுக்கம் முதலான விடயங்களை 28 சருக்கங்களில் 1424 செய்யுள்களில் இப்புராணம் விரிவாகக் கூறுகின்றது. இப்புராணத்தைத் தழுவி இப்புராணம் எழுந்த நூறு ஆண்டுகளுக்குள் 'மாகஸ்நான புராண அம்மானை' என்றொரு இலக்கியத்தை மணவை வீரபத்திரன் என்பவர் செய்திருப்பதை நோக்கும்போது மாகபுராணம் ஒரு காலத்தில் பெற்றிருந்த மதிப்பினை உணரலாம்.

### 4.3.5 தலபுராணங்கள்

குறிப்பிட்ட ஒரு தலத்தினை மையப்படுத்தி அத்தலத்தின் மூர்த்தி, தீர்த்த விசேடங்களை விரித்துரைக்கும் புராணங்களே தலபுராணங்களாகும். இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட காலப் பகுதியில் மிக அதிக அளவில் எழுந்தவை தலபுராணங்களே. இத்தலபுராணங்கள் 'புராணம்' எனும் ஈற்றோடு மட்டுமின்றி 'மான்மியம்', 'மஹாத்மியம்', 'வரலாறு', 'வைபவம்' முதலான பல பெயர்களிலும் வழங்கி வருவதைக் காணலாம். இவை செய்யுள் வடிவிலோ அன்றேல் வசனநடையிலோ அமைந்துள்ளன.

காலத்தால் முந்திய தலபுராணங்களாக அறியக் கிடைப்பவை **கன்னிவன புராணம், அஷ்டாதச புராணம்** என்னும் இரண்டுமாகும். கி. பி. 12ஆம் நூற்றாண்டளவில் 'வீரைத் தலைவன் பரசமயகோளரி' என்பான் இவ்விரு புராணங்களையும் செய்தான் எனச் சாசனங்கள் வாயிலாக அறியமுடிந்தாலும் அந்நூல்கள் இன்று கைகளுக்குக் கிட்டவில்லை. கி. பி. 13ஆம் நூற்றாண்டில் பெரும்பற்றப்புலியூர் நம்பியால் செய்யப்பட்ட **திருவிளையாடற்புராணமே** இன்று கிடைக்கப்பெறும் முதலாவது தலபுராணமாகும். 'மதுரைப் புராணம்' எனவும் 'நம்பி திருவிளையாடல்' என்றும் சிறப்பிக்கப்படும் இப்புராணம் மதுரை சொக்கநாதரின் திருவிளையாடல்களைக் கூறும் முகத்தால் அத்தலச் சிறப்பினையும் விதந்துரைத்துச் செல்வதைக் காணலாம். இந்நூல் கி. பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 14ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவாசாரியர் செய்த **கோவிற் புராணமே** தலபுராணத்துக்குரிய பண்புநலன்கள் யாவும் ஒருங்கே அமைந்து வரும் நூலாகும். சிவதலங்களுக்கெல்லாம் தலைமை பூண்டுள்ள சிதம்பரத் திருத்தலத்தினை மையப்படுத்தி இத்தலபுராணம் செய்யப்பட்டுள்ளது. பாயிரம் உட்பட ஆறு சருக்கங்களையும் 415 பாடல்களையும் கொண்டு விளங்கும் இப்புராணம் தமிழ்த் தலபுராண வரலாற்றில் சுட்டிப்பேசத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இப்புராணத்துக்கு கி. பி. 16ஆம் நூற்றாண்டளவில் பொழிப்புரை ஒன்றும் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. கி. பி. 15ஆம் நூற்றாண்டில் திருப்புத்தூர் கோவிலில் மீது **'ஒங்கு கோவில் புராணம்'** எனத் தலபுராணம் ஒன்று பாடப்பட்டதாக அக்கோவிற் கல்வெட்டு வாயிலாக அறியமுடிகின்றது. மறைஞான சம்பந்தர் அவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள 'திருத்தளியாண்ட நாயனார்' என்னும் சிவபெருமான் செய்த திருவிளையாடல்களைத் தொகுத்து இப்புராணத்தை பாடினார் என அதே கல்வெட்டு விவரிக்கின்றது[4].

கி. பி. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் ஏராளமான தலபுராணங்கள் எழுந்தன எனக் கூறப்பட்டாலும் அவற்றுள் சிலவே இன்று அச்சுவாகனம் ஏறியுள்ளன பல ஏட்டு வடிவிலேயே இன்றும் சுவடிக் காப்பகங்களில் இருப்பதைக் காணமுடிகிறது. தேடலுக்குட்பட்ட வகையில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற முக்கியமான தலபுராணங்கள் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளன (அட்டவணை: 01). பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலும் தலபுராணங்கள் பல பாடப்பட்டுள்ளன. சிவஞானமுனிவர், கச்சியப்பர் என்போர் 18ஆம் நூற்றாண்டிலும் திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 19 ஆம் நூற்றாண்டிலும் அதிக தலபுராணங்களை எழுதியோரில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்களாவர். தமிழ் இலக்கிய வரலாற்றிலே அதிக தலபுராணங்களை இயற்றிய பெருமை மீனாட்சி சுந்தரம்பிள்ளக்கே உரியதாகும். அவர் பாடிய தலபுராணங்களின் எண்ணிக்கை பதினாறு. 20 ஆம் நூற்றாண்டிலும் தலபுராணங்கள் சில தோற்றம் பெற்றுள்ளன.

தலபுராண இலக்கியங்களின் வளர்ச்சிக்கு ஈழநாட்டின் பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்லும்படியானதாக அமைந்துள்ளது. ஈழத்தில் ஏறத்தாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்து நான்கு தலபுராணங்கள் எழுதப்பட்டதாக அறியமுடிகின்றது. இவற்றுள் பதினான்கு தலபுராணங்கள் ஈழநாட்டுத் திருத்தலங்கள் மீது பாடப்பட்டவை. ஒன்பது தலபுராணங்கள் தமிழ் நாட்டுத் திருத்தலங்களைப் போற்றுபவை. மன்னம்பாடியார் பாடிய **'தோன்றித் தலபுராணம்'** என்பது எத்தலம் பற்றியது என்பது தெரியவில்லை. ஈழநாட்டில் எழுந்த தலபுராணங்களையும் அவை விதந்து போற்றும் திருத்தலங்களையும் பின்னிணைப்பாகத் தரப்பட்டிருக்கும் அட்டவணை மிகத் தெளிவாகப் புலப்படுத்தும் (அட்டவனை – 02). இவற்றுள் **தட்சிணகைலாசபுராணம், திருக்கரசைப்புராணம்** எனும் இரண்டும் மட்டுமே விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் செய்யப்பட்டவை.

தலபுராணங்கள் சைவ, வைணவத் திருத்தலங்கள்மீது இயற்றப்பட்டுள்ள போதிலும் அவற்றுள் அதிகமானவை சைவசமயம் சார்ந்த புராணங்களே என்பது பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள அட்டவணையை உற்று நோக்கும்போது தெளிவாகும். **திருக்குருகைமான்மியம், கூடற்புராணம்** எனும் இரண்டும் மட்டுமே வைணவத் தலபுராணங்களாக விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் எழுந்துள்ளன. தலபுராணங்களில் சோழநாட்டுத் திருத்தலங்களே அதிகம் பாடப்பட்டுள்ளமை தெரிகின்றது. தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களான மலையாளம், ஆந்திரா என்பவற்றிலுள்ள திருத்தலங்கள் மீதும் காசித்திருத்தலம் மீதும் தலபுராணங்கள் பாடப்பட்டுள்ளன. தலபுராணங்கள் அதிகம் பெற்ற திருத்தலம் மதுரையாகும். அதைத் தொடர்ந்து திருவண்ணாமலை, காஞ்சி, சிதம்பரம் ஆகியனவும் அதிக புராணங்களைப் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

## I] தலபுராணங்கள் எழுந்த சூழலும் தேவையும்

தலபுராணங்களின் உற்பத்தியில் சமகால அரசியல், சமூக, பொருளாதாரக் காரணிகள் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருத்தலைக் காணமுடியும். அக்காரணிகளைத் தெளிவாக இனங்கண்டு கொண்டாலன்றித் தலபுராணங்கள் எழுதப்பட்டதன் நோக்கத்தினையும் அவை சமகால சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் புரிந்துகொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சோழர் காலத்துக்குப் பின்னதாக (கி. பி 1279) தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மை முஸ்லிம்கள் முதலானோரின் படையெடுப்புகளுக்குக் காரணமாகியது. இதன் தொடர்ச்சியாக கி. பி. 1330 முதல் கி. பி. 1378 வரை முகமதியர் ஆட்சி மதுரையில் நிலைபெற்றதாக அறியமுடிகின்றது. முகமதியர் படையெடுப்பும் அவர்களின் ஆட்சியும் தமிழ்நாட்டில் நிலை பெற்ற காலங்களிலே அங்குள்ள இந்து ஆலயங்கள் பல அழிக்கப்பட்டன; பல சூறையாடப்பட்டன. பல போற்றுவாரின்றிக் கைவிடப்பட்டன. விஜயநகர மன்னனான குமாரகம்பண்ணன் கி. பி. 1363 இல் தமிழ்நாடு நோக்கிப் படையெடுத்து வந்து மதுரையில் இருந்து முகமதியர் ஆட்சியை (1378) இல்லாமல் செய்ததைத் தொடர்ந்தே தமிழகத்தில் மீண்டும் வைதிக மதங்கள் வளரத் தொடங்கின. இச் சூழலிலே கைவிடப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக் கட்டியெழுப்பவும் அவற்றின் மீது மக்களைப் பக்தி கொள்ளச் செய்யவும் வேண்டிய தேவையெழுந்தது. இத்தேவையைக் கருத்திற் கொண்டே இக்காலப்பகுதியில் தலபுராணங்கள் அதிக அளவில் தோற்றம் பெற்றதைக் காணலாம்.

2. பல்லவர் காலப்பகுதியில் சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தினை முன்னெடுத்துச் சென்றபோது கோவில் வழிபாட்டிற்கு முன்னுரிமை தந்து வந்தனர். மக்கள் மத்தியில் பக்தியுணர்வினை வளர்ப்பதற்கும் வைதிக மதத்தின்பால் நம்பிக்கையை ஏற்படுத்து வதற்கும் ஊரூராகப் பயணம் செய்து வந்த அவர்கள், தாம் செல்லும் ஊர்கள் தோறும் இருந்த ஆலயங்களைப் பலவாறு புகழ்ந்தும் போற்றியும் வந்ததைக் காணலாம். எந்தெந்த ஊர்களுக்கு செல்கிறார்களோ அந்தந்த ஊரில் உள்ள தலங்களிலேயே ஆண்டவன் குடிகொண்டிருக்கிறான் எனப் பாடிவந்தனர். அந்தவகையில் தமிழகத்து ஊர்கள் பலவற்றிலிருந்த ஆலயங்களை மையப்படுத்தி அவ்வாலயத்தின் மூர்த்தி, தல, தீர்த்த மகிமைகளையும் ஆலயச் சுற்றுப்புறச் சூழல் அழகினையும் அவர்கள் பாடி வந்துள்ளனர். நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்திலேயே தலங்களைப் பற்றிய புராணக் கதைகள் பல உருவாகத் தொடங்கிவிட்டன. பல்லவர்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக இங்ஙனம் நாயன்மார்களால் வலுப்படுத்தப்பட்ட தல வழிபாடும் தலங்களை விசேடித்துப் பாடும் மரபும் பிற்காலங்களில், தலபுராணங்கள் தோன்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளன எனலாம்.

3. சோழர் காலத்தில் கோவில்கள் மிக முக்கியமான நிறுவனங்களாக வளர்ச்சி கண்டன. அவை தனித்து வழிபாட்டு நிலையங்களாக மட்டும் அமையாது கல்விநிறுவனங்களாக, மருத்துவநிலையங்களாக, ஆதுலர் சாலைகளாக, களஞ்சியங்களாக, நிதிநடவடிக்கையின் முக்கிய நிலையங்களாக, நீதிஸ்தலங்களாக, கலைகளை வளர்க்கும் மன்றுகளாக எல்லாம் செயற்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. இதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதற்குக் கோவில்களை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. மக்களின் பன்முகப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஆலயங்களும் பிரமாண்டமாகக் கட்டியெழுப்பப்பட்டன. சோழர் காலப் பொருளாதாரக் கட்டுமானத்தை 'கோவிற் பொருளாதாரம்' என விதந்து சுட்டத்தக்க வகையில் கோவில்களை மையப்படுத்தியே சோழர்கால சமூக, பொருளாதார, பண்பாட்டு நடைமுறைகள் யாவும் உருவாக்கப்பட்டிருந்ததைக் காணலாம். 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது முதலான கருத்துநிலைகள் இக்காலப்பகுதியில் தீவிரமடைந்தன. இங்ஙனம் சோழர் காலத்தில் கோவில்கள் பெற்ற முதன்மை தலங்களை மையப்படுத்தித் தலபுராணங்கள் தோன்ற வாய்ப்பளித்தன எனலாம்.

4. நாயக்கர் காலப்பகுதியில் பல மடங்களும் ஆதீனங்களும் உருவாக்கப்பட்டிருந்தன. இம்மடங்களின் பிரதான பணி சமய வளர்ச்சிக்குப் பங்காற்றுவதாகும். வைதிக சமயங்களின் குறியீடுகளாகவும் சமய வாழ்வின் முதுகெலும்புகளாகவும் விளங்கிய கோவில்களை விதந்து பாடுவதனூடாக மத வளர்ச்சியையும் மத நம்பிக்கையையும் ஏற்படுத்தலாம் என மடாலயத்தலைவர்களும் அம்மடத்துடன் தொடர்புபட்ட மாணவர் பரம்பரையினரும் சிந்தித்துள்ளனர். நாயக்கர் காலத்திலும் அதற்குப் பின்னரும் தலபுராணங்களை அருளிச் செய்தோரில் பலர் மடங்களோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புபட்டவர்களாகவே இருந்துள்ளனர். கமலை ஞானப்பிரகாசர் (தருமபுர ஆதீனம்), நிரம்ப அழகிய தேசிகர் (துழாவூர் ஆதீனம்), திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், ஆனந்தக் கூத்தர், ஞானக்கூத்தர், அளகைச் சம்பந்தர், சைவ எல்லப்ப நாவலர் (தருமபுர ஆதீனம்), சிவஞான முனிவர், கச்சியப்பர் (தருமபுர ஆதீனம்) திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை (திருவாவடுதுறை ஆதீனம்) போன்றோர் ஆதீனங்களுடன் தொடர்பு கொண்டவர்களாகவே விளங்கியுள்ளமை நோக்கற்பாலதாகும். இவர்கள் தலபுராணங்களை எழுதுவதற்கு வேண்டிய ஊக்குவிப்பையும் மடங்களே வழங்கியிருந்தன.

5. கோவில்கள் தலயாத்திரைத் தலங்களாக மாறிய காலங்களில் அவற்றின் பெருமை, சிறப்பு என்பவற்றைச் சுட்டிப் புராணங்கள் பாடப்பட்டுள்ளன. தமது கற்பனைத் திறத்தாலும் கவிச்சிறப்பாலும் வர்ணனை நயத்தாலும் பாட எடுத்துக்கொண்ட திருத்தலத்தைப் பூலோக சிவலோகமாக அல்லது வைகுண்டமாகக் காட்டும் திறன் தலபுராண ஆசிரியர்களிடமிருந்தது. ஒவ்வொரு புராணமும் அந்தத் தலமே வேண்டியதைத் தருவது, முக்தியளிப்பது என்றெல்லாம் வாயாரப் புகழ்ந்து பாடினர். திருவாரூர் பிறக்க முக்தி, தில்லை காண முக்தி, காசி இறக்க முக்தி, அருணை நினைக்க முக்தி, மதுரை கேட்க முக்தி, கேதாரம் நீராட முக்தி, இறையாச நல்லூர் (அரசவனம்) இருக்க முக்தி என்று பாடி பக்தர்களின் மனங்களில் இறை உணர்வை எழுப்ப முயன்றனர். இதன் வாயிலாகத் தலயாத்திரைக்கான உணர்வுந்து தலையும் தலயாத்திரையின் பயன்குறித்த நம்பிக்கையையும் மக்கள் உள்ளங்களில் பதிய வைக்க அவர்கள் முயன்றதைக் காணமுடிகின்றது. கோவில்கள் தலயாத்திரைத் தலங்களாக மாறிய சூழலில் அவை அங்கு வரும் பக்தர்களை உள்ளடக்கத் தக்கனவாக பிரமாண்டமான அமைப்புடன் வளர்ந்தன. கோவில்களைச் சூழ மடங்கள், தங்குமிடங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன உருவாகின.

6. வடநாட்டிலே 11 ஆம் நூற்றாண்டு தொடக்கமாக நிகழ்ந்து வந்த முஸ்லிம்களின் படையெடுப்பினால் அங்கிருந்த மிகப் பிரபலமான ஆலயங்கள் பல இடித்தழிக்கப்பட்டன. சோமநாதர் கோவில் உள்ளிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மதுரையிலிருந்த பல ஆலயங்களும் கன்னோஜி, காசி முதலான இடங்களிலிருந்த பெரும் ஆலயங்களும் அழிவினைச் சந்தித்த வேளையில் காஷ்மீரம், குஜராத், காசி முதலான பகுதிகளிலிருந்த பிராமணரும் பிற சமயக்கணக்கரும் தங்கள் ஏட்டுச் சுவடிகளுடன் தெற்கிலுள்ள தலங்களுக்கு வந்தனர். வடஇந்தியத் திருத்தலங் களுக்கான யாத்திரையும் (காசி, கன்னோசி, பத்ரி) இதனால் தடைப்பட்டது. இங்ஙனம் வடநாட்டில் வைதிக சமயம் சவால்களையும் அழிவுகளையும் முகங்கொடுத்து வந்த சூழலில் தென்னாடு "பூலோக சிவலோகம்" போலக் காட்சியளித்தது[5].

7. விஜயநகர நாயக்க மன்னர்களின் ஆட்சி தமிழ் நாட்டில் மக்களின் மனதைக் கவர்வதாக அமைந்திருக்கவில்லை. விஜயநகர மன்னர்களின் பிரதிநிதிகளாக ஆண்ட இத் தெலுங்கு மன்னர்கள் தமிழை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்ப் புலவர்களை ஆதரிக்க வேண்டும், வளர்க்க வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. மாறாக, எல்லையில் முஸ்லீம்களுக்கு எதிராக நிகழும் போர்களுக்குத் தேவையான பண உதவியை மக்களிடமிருந்து வரியாகப் பெற்று வழங்கி வருவோராகவே இவர்கள் விளங்கினர். மக்களின் பொருளாதார நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தப்படவேண்டிய வரிப்பணம் போரில் வீணடிக்கப்பட்டது. இதனால் நாட்டில் செழிப்புக் குன்றியது; வறுமை, சுரண்டல் என்பன தலை விரித்தாடத் தொடங்கின. இவ்வாறாக நாயக்க மன்னர்களின் வாழ்க்கையிலும் அவர்களது ஆட்சியிலும் சிறப்பேதுங் காணாத நிலையில் புலவர்கள் சமயம் சார்ந்த விடயங்களிலே அதிகம் அக்கறை காட்டினர். வறுமை, துன்பம், ஆதரவின்மை முதலானவை புலவர்களை நிர்க்கதிக்குள்ளாக்கிய நிலையில் அவர்கள் இறைவன்மீதும் இறைதலங்கள் மீதும் பற்றுக் கொண்டவர்களாயினர். நாயக்கர் காலப்பகுதியில் சமய ரீதியான படைப்புகள், தலபுராணங்கள் அதிக அளவில் தோன்றுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

"அரசுப்பற்றும், நாட்டுப்பற்றும் புலவர்களிடம் மறைந்து விட்டன. அதற்குப் பதில் கோயிற் பற்றும் ஊரின் பற்றும் ஏற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியனைப் பாட மனமின்மையால் தமது தமிழ்ப்புலமையைத் தாம் இருக்கும் தலத்தின் மீதும் இறைவன்மீதும் பயன்படுத்தினர்" என வே. கிருஷ்ணசாமி[6] குறிப்பிடுவது இவ்விடத்தில் பொருத்தி நோக்கத்தக்கதாகும்.

8. நாயக்கர் காலத்தில் இந்து சமயத்துக்கு முஸ்லிம்களின் அச்சுறுத்தலேயல்லாமல் மேலும் பல மதங்களும் தத்துவங்களும் சவால்களாக அமைந்திருந்தன. பல்லவர் காலத்தில் ஒன்றுபட்டு அவைதிக மதங்களை எதிர்த்த சைவமும் வைணவமும் சோழர்காலத்தில் தனித்தனியே பிரிந்ததுடன் அவற்றுக்கிடையே கருத்து மோதல்களும் வளர்ந்து வந்ததை இந்துமத வரலாற்றை உற்று நோக்குவோர் அறிந்து கொள்வர். இம்முரண்பாடு மேலும் முற்றுமுறுகி ஆழ வேர்விட்ட ஒரு காலப்பகுதியாக நாயக்கர் காலம் அமைந்துள்ளது. இக்காலப்பகுதியில் எழுந்த 'இருசமய விளக்கம்' என்ற நூல் சமகாலத்தில் காணப்பட்ட முரண்பட்ட சமயச் சூழலைத் தெளிவாக எடுத்துக்காட்டி நிற்பது நோக்கற்பாலதாகும். அதேபோல் இக்காலத்தில் வேகமாகப் பரவிவந்த வீரசைவத்தின் செல்வாக்கும் உலோகாயுதம், மாயாவாதம் என்பனவற்றின் நுழைவும், பாசுபதம், காபாலிகம் போன்றவற்றின் தாக்கமும் சைவசமயத்துக்குப் பெருஞ்சவால்களாக அமைந்தன. இன்னொரு புறத்தில் கி. பி. 16 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னதாக கிறிஸ்தவமும் இந்திய மண்ணில் கால்பதித்துத் தனது செல்வாக்கை விஸ்தரிக்கத் தொடங்கியிருந்தது. இவ்வாறான புறசமயப் போக்குகளில் நின்றும் சைவத்தினை மீட்டெடுக்க வேண்டிய கட்டாய தேவையில் சைவசமயத்தவர் இருந்தனர். மக்கள் மத்தியில் பக்தி உணர்வை வளர்த்தல், சைவசமயத்தின் பால் நம்பிக்கையினை ஏற்படுத்துதல், சைவதத்துவத்தினை எளியமுறையில் விளக்கம் செய்தல் என்பன கட்டாய தேவையாக இருந்தன. சைவசமய மக்களின் சமய வாழ்வு கோவில்களை மையப்படுத்தியதாக, அவற்றிலிருந்து பிரிக்க முடியாததாக இருந்த சூழலில் கோவில்களைப் போற்றிப் புராணங்களைப் பாடுவதனூடாக சமய நம்பிக்கையை ஏற்படுத்தப் புலவர்கள் முயன்றிருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் தலபுராணங்கள் தோற்றம் பெற்றமைக்கு மேற்போன்றவற்றை முக்கிய காரணங்களாக எடுத்தாளலாம்.

தமிழகத்தில் எழுந்த "தலபுராண அலையின்" பாதிப்பினால் ஈழத்திலும் தட்சிண கைலாசபுராணம், திருக்கரசைப்புராணம் எனும் இருதல புராணங்கள் ஏறத்தாழ இதே காலப் பகுதியில் தோற்றம் பெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் திருக்கோணேஸ்வரத் திருத்தலம் பெற்றிருந்த முதன்மையுமே அத்தலம் சார்ந்து தலபுராணம் எழக்காரணமாக அமைந்துள்ளன. அதேபோல மகாவலியாற்றங்கரையில் அமைந்துள்ள அகத்தியஸ்தாபனம் என வழங்கப்படும் திருக்கரசைத் திருத்தலம், சிறிதுகாலம் கைவிடப்பட்டதால் காடுகளால் குழப்படும் அபாயத்தைப் பெற்றிருந்தது. இங்ஙனம் அடிக்கடி அழிவுக்குள்ளாகும் இத்திருத்தலத்தின்மேல் மக்களைப் பக்தி கொள்ளச் செய்யவும் அத்தலத்தைப் புனரமைக்கத் தூண்டவுமே திருக்கரசைப்புராணம் பாடப்பட்டிருக்கவேண்டும்.

## தலபுராணங்களின் கட்டமைப்பு

தமிழில் எழுந்த தலபுராணங்களை நுனித்து நோக்குகின்ற போது அவை பொதுவான கட்டமைப்பொன்றின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. சிறப்புப்பாயிரம், பாயிரம், காப்புச்செய்யுள், கடவுள் வாழ்த்து, அவையடக்கம் எனும் அம்சங்களோடு ஆரம்பிக்கும் தலபுராணங்கள் தொடர்ந்து தலத்திலே எழுந்தருளியுள்ள மூர்த்தியின் பெருமைகளையும், தலம் தீர்த்தம் என்பனவற்றின் விசேடங்களையும் தனித்தனிச் சருக்கங்களிலோ படலங்களிளோ அல்லது அத்தியாயங்களிலோ விரித்துரைத்துச் செல்வதைக் காணலாம். தலபுராணத்தின் செய்யுட் தொகையைப் பொறுத்து படலத்தின், காண்டத்தின் அல்லது சருக்கத்தின் எண்ணிக்கை வேறுபாடுகள் அமைந்திருக்கும்.

புராணத்தைக் கூறத் தொடங்கும் விதத்தில் பெரும்பாலான தலபுராணங்கள் ஒரே தன்மையையே பிரதிபலிப்பதைக் காணமுடிகின்றது. 'என்றாவது ஒருநாள் சூதமுனிவர் நைமிசாரண்யத்திற்கு எழுந்தருளுவார்; அங்கு வாழும் இருடிகள் முனிவரைப் பணிந்து தமக்கு யாதேனும் ஒரு புராணத்தைக் கூறும்படி வேண்டுவர்; இம்முனிவரும் இருடிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோட்கிணங்க அவர்கள் விரும்பிய புராணத்தைக் கூறத் தொடங்குவார்' என்ற வகையில் தலபுராணங்கள் ஆரம்பிக்கின்றன. வடமொழிப் புராணங்களில் காணப்படும் புராணத் தொடக்க நெறியைத் தலபுராணங்களும் மாற்றமின்றிப் பின்பற்றியிருப்பதை இதனால் உணரலாம். தாங்கள் கூறும் புராணக்கதை பழமையானது எனக் காட்டுதற்கும், புராணமரபில் நின்றும் விடுபடாதது எனச் சுட்டுதற்கும், மக்களது மனதில் தமது புராணம் பற்றிய உயர்வான மனப்பதிவினை ஏற்படுத்துதற் பொருட்டுமே இவ்வாறாக – சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்கு உபதேசித்ததாக – புராணங்களை ஆரம்பிப்பது வழமையாகவுள்ளது.

எனினும் வடமொழிப் புராணங்களிலே காணப்படுவதுபோல் ஒரே சீராகக் கதையைச் சொல்லுகின்ற போக்குத் தலபுராணங்களில் காணப்படவில்லை. தலத்தின் பெருமை, தீர்த்தத்தின் மகிமை, மூர்த்தியின் பெருமை, தலவிருட்ச சிறப்பு என்பவற்றை விதந்து பேசும் கதைகளின் – அதுவும் சிறிய, சிறிய கதைகளின் – தொகுப்பே தலபுராணங்களாகும். தலபுராணத்தில் அமைந்து வரும் கதைகள் கூட ஒரே தன்மை கொண்டனவாகவும் வெவ்வேறு கட்டமைப்பினைக் கொண்டனவாகவும் அமைந்திருத்தலைக் காணலாம். மூர்த்தி, தல, தீர்த்த, விருட்ச மகிமைகளை மட்டுமன்றி சமய நம்பிக்கைகளையும், தத்துவக் கருத்துக்களையும், நீதிநெறிகளையும் கூறுதற்பொருட்டும் கதைகள் புனையப்பட்டு தலபுராணங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. துண்டு துண்டாக இங்ஙனம் அமைந்து வரும் கதைகளை பக்தி அல்லது சமய உணர்ச்சி என்ற மையப்புள்ளியில் சங்கமிக்க வைத்துக் கதைசொல்வதுதான் தலபுராண ஆசிரியரின் திறமையாக அமையும். தலபுராணங்களில் அமைந்து வரும் கதைகள்,

I) பதினெண் புராணங்களிலிருந்தும்

II) இதிஹாசங்கள் அவற்றின் உபாக்கியானங்கள் என்பவற்றிலிருந்தும்

III) குறிப்பிட்ட தலத்தோடு தொடர்புபட்ட கதைகள், பழமரபுக் கதைகள், வரலாறுகள், ஐதீகங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றிலிருந்தும்

IV) பிற இலக்கியக் குறிப்புகளிலிருந்தும்

V) நாயன்மார்களின் வரலாற்றோடு தொடர்புபட்ட கதைகளிலிருந்தும்

தொகுக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான தலபுராண ஆசிரியர்கள் தாம் கூறப்போகும் புராணக்கதை வடமொழியிலமைந்த மகாபுராணங்களிலுள்ள 'இன்ன சங்கிதையில் இன்ன கந்தத்தில்' உள்ளதெனச் சுட்டுவது வழமையாகும். ஒரு சில தலபுராணக் கதைப் பகுதிகள் வடமொழிப்புராணங்களிலிருந்து தெரிந்து தொகுக்கப்பட்டிருக்கக் கூடும்; எனினும் எல்லாக் கதைகளும் வடமொழிப் புராணங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன எனக் கொள்வது பொருந்தாது. தலத்துக்கும் தலத்திலே உறையும் மூர்த்திக்கும் பெருமைதர வேண்டிய வடமொழிப் புராணக் கதைகளைத் தொடர்புபடுத்திச் சொல்லும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். திருமால், பிரமன் முதலான தேவர்களால் திருத்தலமும் அங்கு கோவில் கொண்டுள்ள இறைவரும் வணங்கப்பட்ட சிறப்பு, பாவிகளும் இருடிகளும் மற்றோரும் திருத்தலத்திலுள்ள ஆண்டவரை வழிபட்டு அடைந்த கீர்த்தி அல்லது பாவவிமோசனம் என்பன பற்றியெல்லாம் வடமொழிப் புராணங்களிலிருந்து தெரிந்தெடுத்த கதைகளைத் தமது கற்பனைத் திறத்தாலும் கவிதா சாமர்த்தியத்தாலும் குறிப்பிட்ட தலத்துக்குரியதாக்கிய தலபுராண ஆசிரியர்களின் திறன் பாராட்டத்தக்கதாகும்.

அதேபோலவே மகாபாரதம், இராமாயணம் எனும் வடமொழி இதிஹாசங்களின் கதைகளுடனும் தலங்களைத் தொடர்புபடுத்தும் போக்குத் தலபுராணங்களில் அவதானிக்கப்படுகிறது. இதிஹாசங்கள் பண்டு தொட்டு மக்களால் படிக்கப்பட்டும் ரசிக்கப்பட்டும் வந்துள்ளன. இதனால் இதிஹாச கதாப்பாத்திரங்களும் அவர்களது குணவியல்புகளும் மக்கள் மனதிலே நீங்காத இடம் பிடித்துள்ளன. இங்ஙனம் மக்கள் மனங்கொண்ட 'இதிஹாச பாத்திரங்களான இராமன், இராவணன், அனுமான், அர்ச்சுனன், தருமன் முதலானோரால் பூசிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட திருத்தலம் இது' எனக் கூறுவதனூடாக மக்கள் மனதில் குறிப்பிட்ட திருத்தலம் சார்ந்த உயர்வான கற்பிதத்தை தலபுராண ஆசிரியர்கள் பதியவைக்க முயன்றனர். இதிஹாச கதாபாத்திரங்கள் குறிப்பிட்ட திருத்தலத்துக்கு வந்திராவிடினும் அவை வந்தவைபோல் புதிய கதை ஒன்றை – இதிஹாச கதைபோன்றே சிருஷ்டித்து – தலபுராண ஆசிரியர்கள் தந்துள்ளதைக் காணலாம். இதிஹாச உபாக்கியானங்களான சாவித்திரி உபாக்கியான, நளோபாக்கியானக் கதைகளும் தலபுராணங்களிலே அதிகம் இடம் பெறுவதுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட திருத்தலத்துடன் தொடர்புபட்டதான கதைகளைப் புனைந்துரைக்கும் பாங்கும் தலபுராணங்களில் தாராளமாகவே இடம்பெற்றிருப்பதைக் காணலாம். ஆலயத்தின் மகிமையை எடுத்துக் காட்டுவதற்காவும், அவற்றின் பழமையை நிரூபித்தற்காகவும், வரலாற்றிடை வெளிகளை இட்டு நிரப்புவதற்காகவும் கதைகளைப் புனைந்துரைக்கும் போக்கு பரவலாகவே தலபுராணங்களில் அவதானிக்கப்படுகின்றது. இப்புனைவுகளைத் தலபுராண ஆசிரியர்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் செய்திருக்கின்றனர். கவித்துவம் மிக்க இப்புனைவுகள் வெறுங்கதைகளாக மட்டும் தோற்றமளிக்காமல் பக்தர் தம் உள்ளங்களில் உண்மையில் நடந்த நிகழ்வுகள் போலவே மாயையை உண்டாக்கிவிடுதல் நோக்கற்பாலதாகும். தாம் புனையும் கதைகளின் உண்மைத்தன்மையை மேலும் வலியுறுத்தும் நோக்குடன் புலவர்கள் அவை பதினெண்புராணங்களிற் சொல்லப்பட்டன எனக் கூறுவிடுதலுமுண்டு.

குறிப்பிட்ட திருத்தலத்துடன் தொடர்புபட்ட ஐதீகங்களும், நம்பிக்கைகளும் கூட அழகிய கதைகளாக உருப்பெற்றுத் தலபுராணங்களில் இடம் பிடித்திருப்பதைக் காணமுடியும். குறிப்பாகத் தலத்தின் தோற்றம், தீர்த்த உற்பத்தி, விருட்ச மகிமை என்பனவற்றுடன் தொடர்புபட்ட பல ஐதீகங்கள் கதைகளாக மாற்றப்பட்டுள்ளன. அதேபோலவே குறிப்பிட்ட திருத்தலத்தினை வணங்குதலால் அடையும் பேறுகள், வணங்கியோர் அடைந்த பலன்கள், தீர்த்தத்தின் சிறப்புகள், தீர்த்தமாடியோரடையும் நன்மைகள் தொடர்பான நம்பிக்கைகளும் கதைகளாகப் பின்னப்பட்டுள்ளன. தலங்களுக்குப் பெருமதிப்பினையும் மக்கள் ஆதரவையும் திரட்ட வேண்டும் என்ற நோக்குடனேயே இத்தகைய கதைகளைப் புலவர்கள் இடையிடையே செருகி வந்துள்ளனர். உண்மையோ, பொய்யா என்ற ஆய்வு நிலைக்கப்பால் இக்கதைகள் அவை புனையப்பட்டதன் நோக்கத்தைப் படிப்பவர், கேட்பவர் உள்ளங்களில் பதியவைப்பதைக் காணமுடிகிறது. சைவ சமய வழிபாட்டில் தலயாத்திரை, தீர்த்த யாத்திரை என்பன முக்கிய இடத்தைப்பிடித்த காலங்களில் இந்நம்பிக்கைகள், ஐதீகங்கள் சார்ந்து எழுந்த கதைகள் முன்னிலைப்படுத்திப் பேசப்பட்டன. தங்களது நம்பிக்கைகளும் தாங்கள் இதுவரை காலமும் செவிவழியாக மட்டும் கேள்வியுற்ற செய்திகளும் உண்மை நிகழ்வுகள் போலச் சித்திரிக்கப்பட்ட நிலையில் ஊர்மக்களும் அதில் ஆனந்தமும், திருப்தியும் அடைந்திருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களை மையப்படுத்தி எழுந்த பழமரபுக் கதைகளும் தலபுராணக் கட்டமைப்பில் முக்கிய பங்காற்றியுள்ளன. வரலாற்றுணர்வும், புனைவும் நிறைந்த பழமரபுக்கதைகள் பெரும்பாலும் தலத்தின் தோற்றம், அங்குள்ள மூர்த்தியின் கீர்த்தி, தலத்தின் வழிபாடு நிகழ்த்தி நிலைபேறடைந்தோர் பற்றியனவாகவே அமைதல் நோக்கற்பாலதாகும். மக்கள் மத்தியில் உண்மைச் சம்பவங்கள் போலக் கருதப்பட்டு பக்திசிரத்தையுடன் மதிக்கப்பட்டு வந்த இப்பழமரபுக்கதைகளை கவித்துவம் செறிய தலபுராணங்களில் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். தலத்தின் தொன்மை பற்றியதும் அதன் மகிமை பற்றியதுமான உயர்ந்த மதிப்பீட்டை மக்கள் மத்தியில் நிறுத்த பழமரபுக்கதைகளும் உதவியுள்ளதைக் காணலாம்.

தலங்களுடன் தொடர்புபட்ட நம்பகத்தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் சம்பவங்களும் வரலாறுகள் என்ற வகையில் தலபுராணங்களில் பதிவாகியுள்ளன. ஆனால் இந்த வரலாறுகள் அப்படியே – அவற்றின் இயல்பு நிலை மாறாது – தலபுராணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன எனக் கூறமுடியாது. ஏனெனில் புலவர்கள் வரலாற்றுச் சம்பவங்களுக்கும் பக்தி முலாமும், அதியற்புத மோகனப் பண்பும் சேர்க்க விழைந்ததன் பயனாக அவற்றின் வரலாற்றுப் பெறுமானம் குறைந்துள்ளது. வரலாற்றுச் சம்பவங்களை உயிர்த்துடிப்புடையதாகவும் விறுவிறுப்படையதாகவும் மாற்றவேண்டி புலவர்கள் மேற்கொண்ட இம்முயற்சிகள் இன்றைய நிலையில் உண்மை வரலாறுகள் எவை? புனையப்பட்டவை எவை? எனப் பிரித்து அடையாளங் காணமுடியாத அளவுக்கு கலந்துள்ளமையைக் காணலாம். எனினும் 'பக்தியுணர்வை வளர்த்தல்' என்னும் ஆசிரியரின் உள்ளக்கிடக்கையை அவை சிறப்பாக நிறைவேற்றி நிற்பது கண்கூடு. தலபுராண ஆசிரியர்கள் தாம் கூறும் தலம் சார்ந்த செய்திகளின் நம்பிக்கைத் தன்மையை நிரூபிப்பதற்காக வரலாற்றுச் சம்பவங்களை ஒரேயிடத்தில் திணித்துக் கூறாமல் புராணத்தின் பல இடங்களிலும் செறியத் தந்து செல்வது நோக்கற்பாலது. சில புராணங்கள் பிறிதொரு தலத்துடன் தொடர்புபட்ட வரலாற்றுச் சம்பவங்களையுங் கூடத் தாம் பாட எடுத்துக்கொண்ட தலங்களின் கதைகளாகக் கூறிவிடுவதையுங் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலபுராணங்கள் தமிழில் எழுந்த பிற இலக்கியக் கருத்துக்கள், கதைகள் என்பவற்றையும் சைவசித்தாந்தத் தத்துவச் சிந்தனைகளையும் இடையிடையே வைத்துப் பின்னப்பட்டுள்ளன. தலபுராண ஆசிரியரின் பரந்த இலக்கியப் புலமையை எடுத்துக்காட்டும் இப்பகுதிகள் படிப்போருக்கு இலக்கிய இன்பத்தினையும் தத்துவத்தெளிவையும் பக்தி உணர்ச்சியையும் தரவல்லனவாயமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக நாயன்மார்களின் வரலாற்றுடன் தொடர்புபட்ட சம்பவங்களும் வரலாற்றுச் செய்திகளும் தலபுராணங்களில் கதைகளாக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். மாணிக்கவாசகரின் வரலாறு திருவிளையாடற் புராணத்திலும் பெரும்பற்றப் புலியூர் புராணம், பெருந்துறைப் புராணம், உத்தர கோசமங்கைப் புராணம், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம் முதலானவற்றிலும் அமைந்து வருதல் நோக்கற்பாலதாகும். அதுபோலவே சம்பந்தர், அப்பர் சுவாமிகளின் வரலாறுகளும் வரலாற்றுச் சம்பவங்களும் தலபுராணங்களில் கதைகளாக அமைந்து வருகின்றமை கவனித்தற்குரியது. குறிப்பாக, அடியவர்களுக்கு ஆண்டவன் எளியனாக வந்து அருள்பாலித்த செய்திகளைப் பக்திரசம் சொட்டச் சொட்டத் தலபுராண ஆசிரியர்கள் பாடியுள்ளனர். தாம் பாட எடுத்துக் கொண்ட தலங்கள் 'செயற்கரிய செய்து ஈடில்லாப் பெருவாழ்வை எய்திய நாயன்மார்களின் பாதங்கள் பதிந்ததால் புனிதப்படுத்தப்பட்டவை; அவர்களால் பாடப்பட்டதால் சிறப்புற்றவை' எனக் கூறிக் கொள்வதில் தலபுராண ஆசிரியர்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். அப்பெருமிதமும் சிறப்பும் மக்களுக்கும் தெரிய வேண்டும் என்ற நோக்குடன் அவர்கள், ஆண்டவன், அடியவர் பொருட்டு புரிந்த அற்புதங்களையும் அடியவர்கள் வருகை தந்து தலத்தினைப் புனிதப்படுத்திய செய்தியினையும் வாயாரப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

தலபுராணங்களின் கட்டமைப்பில் செல்வாக்குச் செலுத்திய மற்றொரு முக்கிய காரணி காவியங்களும் காவிய லட்சணங்களுமாகும். தலபுராணங்கள் அதிகளவில் தோற்றம் பெற்ற விஜயநகர நாயக்க மன்னர் காலத்திற்கு முன்னதாக சோழர் காலப்பகுதியில் தமிழிலே காவியங்களும் காவியலட்சணங்களும் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தன. பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் எனப் பல காவியப் படைப்புக்கள் இக்காலப் பகுதியில் தோற்றம் பெற்றதோடு காவியங்களுக்குரிய இலட்சணங்களைத் தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்களும் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாகத் தமிழ்நாட்டில் அறிமுகஞ் செய்திருந்தன. இதனால் வடமொழிக் காவியலட்சணங்களைத் தழுவித் தமிழில் காவியங்களைப் படைப்பதில் தமிழகத்தறிஞர்களும் ஆர்வங்காட்டினர். திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணி, காவிய இலட்சணங்களை முழுமையாகத் தழுவி எழுந்த காப்பியம் என விதந்து கூறப்படுகிறது. சீவகசிந்தாமணியின் கவிச்சுவையிலும் பொருட்சுவையிலும் ஈடுபாடு கொண்ட தமிழ்ப்புலவர்கள் அதற்கிணையான காவியங்களை காவியலக்ஷண முரண்பாடற்ற வகையில் படைத்து வரலாயினர். சிவனடியார்களின் வரலாற்றைப் பாடும் பெரியபுராணங் கூட அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளையும் பூவுலகில் அனுபவித்த தன்னிகரில்லாத் தலைவரான சுந்தரரின் வரலாற்றை முதலிலும் இடையிலும் கடையிலும் செருகி எழுதப்பட்டதை நோக்கும்போது வடமொழிக் காவிய லட்சணங்கள் தமிழில் ஆழக்கால் பதித்துள்ள தன்மை புலனாகும். கம்பராமாயணம், கந்தபுராணம் போன்ற படைப்புக்களிலும் காவியப் பண்புகள் துருத்திக் கொண்டு நிற்பதைக் காணமுடிகிறது. காவியங்களில் மட்டுமின்றிச் சோழர்காலத்தில் எழுந்த பிறபடைப்புக்களிலும் காவியத்தின் தாக்கம் உணரப்பட்டு வந்தமையை அவதானிக்கலாம்.

இங்ஙனம் சோழர்காலத்திலே செல்வாக்குப் பெற்ற காவிய லட்சணங்கள் பிற்கால இலக்கியப் படைப்புக்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தலபுராண இலக்கியமும் இக்காவிய தாக்கத்திற்குத் தப்பவில்லை என்றே குறிப்பிடவேண்டும். திருவிளையாடற்புராணம், காப்பியலட்சணங்களைத் தழுவியே தலபுராணங்கள் செய்யப்பட்டு வந்தன என்பதை

*"தன்னிக ருயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவனாக*
*முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கென முகமனன்றோ*
*அன்னது தனதேயாகு மண்ணிலே பாண்டி வேந்தாய்*
*இந்நகர்க் கரசனாவா னிக்கவிக் கிறைவனாவான்"*[7]

எனக் குறிப்பிடுகின்றது. தலபுராணங்களில் தன்னிகரில்லாத தலைமாந்தராய் வருபவர் சிவனே என்பதை மேற்போந்த வரிகள் வாயிலாக அறியலாம். திருக்குற்றாலத் தலபுராணமும் ஒரு பெருங்காவியமே என அக்காவியத்துப் பாயிரம் எழுதிய அருணாசல கவிராயர் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரிய பெருங் காப்பியத்தி னிலக்கணங்கட்
இலக்கியமீ தாமென் றோதற்
குரிய திருக் குற்றாலத் தலபுராணம்"[8]

என வருதல் காண்க. அறம் பொருள், இன்பம் வீடு என்னும் நாற்பொருளுரைத்தலும் வருபொருளுரைத்தலும் நாட்டுவர்ணனை, நகர வர்ணனை, ஆற்றுவர்ணனை, பருவவர்ணனை சூரிய சந்திரோதய வர்ணனை என்பவற்றை அமைத்தலும் நன்மணம், புதல்வரைப் பெறுதல் முதலானவற்றைப் பேசுதலும் தலபுராணங்கள் பலவற்றில் அமைந்துவரல் கண்கூடு. மேற்படி பகுதிகள் காவிய இலட்சணங்களுக்கமைவாகவே புலவர்களால் தலபுராணங்களிற் சேர்க்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். இவற்றை விட திருநாட்டுச் சர்க்கம், திருநகரச் சருக்கம், நைமிசாரண்யச் சர்க்கம், புராண வரலாற்றுச் சர்க்கம், திருநதிச் சர்க்கம், தல மகிமைச் சர்க்கம், மூர்த்தி விசேடச் சர்க்கம் என்பன காவிய லட்சணங்களின் செல்வாக்குடன் தல புராணங்களிலே பயின்று வருகின்றன. திருவிளையாடற்புராணம், சேதுபுராணம், திருவாரூர்ப்புராணம், அருணாசலபுராணம், சிதம்பரபுராணம். திருத்தணிகைப்புராணம், காஞ்சிப் புராணம் முதலான பாரிய தலபுராணப் படைப்புக்களில் இக்காவிய நலன்கள் மிகத்தெளிவாக வெளிப்பட்டு நிற்பதைக் கண்டு கொள்ளமுடியும்

## தலபுராணங்களின் பங்களிப்பு

தமிழகத்திலும் ஈழத்திலும் தலபுராணங்கள் அதிகளவில் எழுதப்பட்டு வந்துள்ளமையை நோக்குகின்றபோது அவற்றின் பங்களிப்பு இந்து மக்கள் மத்தியில் எந்தளவு தூரம் இருந்துள்ளது என்பது புலனாகும். முன்னர் விபரிக்கப்பட்டமை போன்று சோழர் காலத்தின் பின் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மை படையெடுப்புக்கள், போர்கள், முஸ்லிம்களின் ஆட்சிப் பரம்பல் என்பன இந்து சமயத்துக்கும் இந்து சமய வழிபாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தன. மக்களின் சமய நம்பிக்கையின் சின்னங்களாக அமைந்த ஆலயங்கள் அழிவுக்கும் கைவிடப்படும் நிலைக்கும் உள்ளாகின. இந்நிலையில் மக்களுக்குப் பக்தியுணர்வை ஊட்டி அவர்களது மனதில் சமய நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் நோக்கிலும் ஆலயங்கள்பால் அவர்களது கவனத்தைத் திருப்புவதற்கென்றுமே தலபுராணங்கள் எழுதப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவடைந்த அல்லது கைவிடப்பட்ட ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யத் தூண்டுதலும் புனருத்தாரணம் செய்த ஆலயங்கள் மீது மக்களைப் பக்தி கொள்ளத் தூண்டுதலும் தலபுராணங்களின் முக்கிய பணியாக இருந்தது. இப்பணியினை ஆரம்பகாலத் தலபுராணங்கள் சாத்தியப்படுத்தியதன் பின்னணியிலேயே பக்தி உணர்வை மக்கள் உள்ளங்களில் தொடர்ந்து தக்கவைக்கும் நோக்கில் தலபுராணங்கள் பாடப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

ஊர்கள் தோறும் உள்ள ஆலயங்களைச் சிறப்பிக்கும் வகையில் தலபுராணங்கள் பாடப்பட்டு வந்துள்ளன. தத்தம் ஊர்களிலுள்ள கோவில்களின் வரலாறுகளைத் தலபுராணங்களில் அமைத்துப் பாடுதல் வேண்டும் என்னும் வேட்கையுடன் மக்கள் புலவர்களை அணுகியுமுள்ளனர். இவ் வேட்கையும் புலவர்களின் பக்தியுணர்வும் ஒரு தலத்துக்கு இரண்டு மூன்று எனப் புராணங்கள் பாடப்படவும் காரணமாகியுள்ளன. திருவண்ணாமலை, திருவையாறு, மதுரை, திருவாரூர் முதலான தலங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட புராணங்களைப் பெற்றன. புலவர்களும் தாம் பாடவிழைத்த ஊர்களையெல்லாம் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி வர்ணித்துப் பாடியுள்ளனர். மக்களுக்குத் தமது ஊர்பற்றிய பெருமிதமும் ஆவ்வூரில் உள்ள ஆண்டவர் மீது நம்பிக்கையும் வரவேண்டும் என்னும் நோக்கு இத்தகைய உயர்வான வர்ணனைகளில் ஊடுருவுவதைக் காணமுடியும். தாம் பாடும் ஊர் சிற்றூராக இருப்பினும் அதனை 'இந்திரலோகம்', 'சந்திரலோகம்' எனப் பாராட்டிப் புலவர்கள் கவி செய்ய விழைந்தனர். பட்டி தொட்டிகளையும் கொட்டில் குடிசைகளையும் மாடமாளிகை, கூட கோபுரம் என்று பாடினார்கள்.[9] தங்கள் கற்பனைத் திறத்தினால் பூமியைப் 'பூலோககைலாய'மாக மாற்றிக் காட்டினர். தலபுராணங்கள் ஊர்கள் தோறும் உள்ள தலங்கள் மீது செய்யப்பட்ட காலங்களில் உருவாகிய ஊர்ப்பற்று, நகரம், நாடு, இனம், மொழி என்ற அளவிலும் பரவியதைக் காணமுடிகிறது. இதனால் பரந்த மனப்பாங்கும் ஒற்றுமையுங் கொண்ட சமுதாயங்கள் உருவாகத் தொடங்கின.

தலங்களில் மகிமைகளை விதந்துரைக்கும் அதேவேளையில் அத்தலங்கள் தேவாதி தேவர்களாலும் முனிவர்களாலும் இருடிகளாலும் நாயன்மார்களாலும் வழிபடப்பட்ட சிறப்பினையுடையன என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயங்களும் அற்புதங்களும் நிறைந்தன என்றும் பாடி வைத்தனர். அது தொடர்பான கதைகளையும் மிகுந்த கவிநயத்துடன் கூறிச்சென்றனர். அக் கதைகளில் மக்களுக்கு நம்பிக்கையும் பற்றுணர்ச்சியும் ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தாம் கூறுகின்ற கதைகள் வடமொழியில் பிரமாண்டத்தில் அல்லது ஸ்காந்தத்தில் அல்லது பவிஷ்யோத்தர புராணத்தில் உள்ளது என்று கூறி வைத்தனர். மக்களின் மனங்களை சரியான முறையில் இனங்கண்டு இத்தகைய புனைவுகளைப் புராணங்களின் இடையிடையே மிக இலாகவமாகச் சேர்த்த புலவர்களை உண்மையில் மிகச்சிறந்த மனோதத்துவ நிபுணர்கள் என்றே கூறவேண்டும்.[10]

பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளில் முகமதியரின் அச்சுறுத்தலுக்கும் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவத்தின் பரம்பலுக்கும் முகங்கொடுக்க வேண்டிய சூழலிலே இந்துமதம் இத்தடைகளை உடைத்து முன்னோக்கிப் பயணிப்பதற்கு 'மிண்டு' கொடுத்து வந்தவை தலபுராணங்களே எனக் கூறினும் தவறில்லை. தலபுராணங்கள் அவை பாடப்பெற்ற தலங்களில் மட்டுமல்லாது ஏனைய தலங்களிலும் பக்திசிரத்தையுடன் பாராயணம் செய்யப்பட்டும் படனம் செய்யப்பட்டும் வந்துள்ளன. படன மரபில் உரைவிளக்கத்துடன் புராணங்கள் படிக்கப்பட்டபோது பக்தர்கள் அதனைப் பக்திசிரத்தையுடன் கேட்டுத் தமது பக்தியுணர்வையும் ஆன்மீகத்தேட்டத்தையும் வளர்த்துக் கொண்டனர். மக்கள் உள்ளங்களில் பக்தி உணர்வைக் குன்றாது பேணும் சாதனங்களாக இப்புராணங்களும், புராணக்கதைகளும் அமைந்திருந்ததைக் காணலாம். தலபுராணங்கள் மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்தில் சேர்க்கப்பட்ட காலங்களில் அவை மேலும் பாதுகாக்கப்பட்டு கையளிக்கப்பட வாய்ப்புகள் ஏற்பட்டன.

தலபுராணங்களினூடாக ஓரளவு நாட்டு, நகர, ஊர் வரலாறு களையும் தலவரலாற்றினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. தலபுராணங்களில் விபரிக்கப்படுகின்ற வரலாறுகள் யாவும் உண்மையானவை என ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அவற்றில் தலபுராண ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்டுள்ள புனைவுகளும், மிகைப்படுத்தல்கள், சேர்க்கைகளும் அநேகமுள்ளன. எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கமான ஆய்வின் பயனாக புனைவுகள், மிகைப்படுத்தல்கள் என்பனவற்றையும் தாண்டி உண்மையான வரலாற்றினை ஓரளவுக்குக் கட்டமைத்துக்கொள்ள முடியும். குறிப்பாகப் பிற கல்வெட்டாதாரங்கள், இலக்கியக் குறிப்புகள் என்பவற்றுடன் தலபுராணம் தரும் தகவல்களை ஒப்பிட்டாராயும்போது உண்மையான வரலாறு துலக்கம் பெறும் என்பதில் ஐயமில்லை. இப்புராணங்கள் தரும் வரலாற்றுத் தகவல்களுள் பல பிற ஆதாரங்களால் திரட்டப்பட முடியாத முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது கவனிக்கத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக திருவிளையாடற்புராணம் தரும் திருவாதவூரடிகள் பற்றிய வரலாற்றுத் தகவல்களும் அரிமர்த்தன பாண்டியன் பற்றிய செய்திகளும் மிக முக்கியமானவை. அதேபோல சங்கரநாராயண சுவாமி கோவிற்புராணம் உக்கிரபாண்டியனைப் பற்றியும் பேரூர்ப்புராணம் கரிகால் பெருவளத்தான் பற்றியும் திருக்குருகை மான்மியம் நம்மாழ்வார் வரலாறு பற்றியும் தரும் தகவல்கள் கருத்திற்கொள்ளத்தக்கன.

தலபுராணங்கள் கோவிலைப் பற்றிய பல செய்திகளையும் வெளிப்படுத்தியிருத்தலைக் காணமுடிகிறது. கோவிலின் அமைப்பு, அங்குள்ள மூர்த்தியின் வடிவங்கள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், விரதங்கள் முதலான இன்னோரன்ன பல விடயங்கள் அவற்றில் அமைந்து வருதல் கண்கூடு. குறிப்பிட்ட திருத்தலத்துக்கேயுரிய துதிப்பாடல்களும் தோத்திரங்களும் தமிழ் அர்ச்சனை மந்திரங்களும் கூட தலபுராணங்களில் அமைந்துள்ளன.

தலபுராணங்களில் சொல்லப்பட்ட செய்திகளை வைத்துக் கொண்டு சிற்பங்களையும், ஓவியங்களையும் உருவாக்கிவந்துள்ளனர். இதனால் இவை ஒருவகையில் தலங்களில் கலைகள் வளர்ச்சியடையவும் காரணமாகியுள்ளன. தலபுராணங்களிலே கூறப்பட்ட கதைகளை மையமாகக் கொண்டு நடனங்களும் ஆடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.[11] இப்புராணங்களின் இடையிடையே புலவர்கள் சேர்த்துள்ள தோத்திரப்பாடல்கள் இசையுடன் பாடத்தக்க சிறப்புடையவையாக உள்ளமையும் கவனித்தற்பாலது. தலபுராணங்களில் விபரிக்கப்பட்ட கதைகள், சம்பவங்கள், செய்திகள் என்பன பிற்காலங்களில் எழுதப்பட்ட சிற்றிலக்கியங்கள் பலவற்றின் கருப் பொருள்களாகக் கூட அமைந்ததுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலபுராணங்கள் படிக்கப்பட்டும் பாராயணம் செய்யப்பட்டும் வந்த காலங்களில் இலக்கிய வளர்ச்சியும் இன்னொரு புறத்தில் ஏற்பட்டது. கவித்துவம் மிக்க விற்பனர்களால் செய்யப்பட்ட புராணங்கள் மீண்டும் மீண்டும் படிக்கப்பட்டபோது அதனைக் கேட்பவரும் படிப்பவரும் இலக்கியச்சுவையினால் தூண்டப்பட்டனர். செய்யுளமைப்பு, புராணக் கட்டமைப்பு, சந்தங்களின் ஒழுங்கமைப்பு என்பனவற்றோடு தொடர்புபட்ட புலமையும், மொழியறிவும் இலக்கிய அறிவும் அவர்களுக்கு இதனால் ஏற்படக் கூடியதாக இருந்தது. புராணங்களும் பொருள் விரித்துரைக்கப்பட்ட சர்ந்தர்ப்பங்களில் உரை கூறும் அல்லது எழுதும் திறனும் வளர்ச்சியடைந்தது. புதிய கவிதைகளை அல்லது பிரபந்தங்களை இயற்றக் கூடிய திறன் படைத்த பலர் இதனால் உருவாகினர்.

சோழர் காலத்தின் பிற்பகுதியில் வளர்ச்சி கண்டிருந்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள், சமயவழிபாட்டு நடைமுறைகள், சடங்காசாரங்கள் குறித்தும் தலபுராணங்கள் பலவிடயங்களைச் சுவைபடக் கூறியிருந்தன. இதனால் மக்கள் எவ்வித கஷ்டமுமின்றி அவற்றைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. சைவசித்தாந்தக் கருத்துக்கள் இனிய கதைகளாக எடுத்து விளக்கப்பட்டபோது அவை மக்களின் மனதில் நீங்காமல் நிறைந்து கொண்டன. அதேபோல விபூதி, உருத்திராக்கம், குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் குறித்த செய்திகளும் உபதேசங்களாகக் கதைகளுக்கிடையில் தரப்பட்டபோது அவை படிப்போர் மனதில் பதிந்து பக்தியுணர்வை வளர்த்தன.

தலபுராணங்கள் இலட்சிய பூர்வமான வாழ்க்கை ஒன்றையும் சிருஷ்டித்துக் காட்டின. புலவர்கள் தாம் கண்ணால் கண்டதை மட்டும் பாடாமல் கற்பனையில் ஒரு நாடு, ஒரு நகரம், ஒரு தலம், அங்கு வாழும் மக்கள் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று எண்ணினார்களோ அதனையே புராணங்களில் பதிவு செய்துள்ளனர். சிறந்த குறிக்கோள்களையும் வாழ்வியல் இலட்சியங்களையும் கொண்டனவாக அவர்கள் சித்திரிக்கும் சமுதாயம் அமைந்தது. தலபுராணங்களில் சிருஷ்டித்துக் காட்டப்படும் நாட்டு, நகர வர்ணனைகள் இந்த வகையில் மனங்கொள்ளத்தக்கவை. தலபுராணங்களைக் கேட்போரும் படிப்போரும் இந்த இலட்சிய சமுதாயங்களில் விருப்புக்கொண்டு தமது வாழ்க்கையை உயர்ந்த நெறியில் ஒழுங்குபடுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள் எனத் தலபுராண ஆசிரியர்கள் எண்ணியுள்ளனர். இதனால் இலட்சிய கதாமாந்தர்களையும் தர்மவழியில் நின்ற இதிஹாச பாத்திரங்களையும் கதையில் தாராளமாக அவர்கள் உலாவவிட்டிருப்பதைக் காணலாம். ஒழுக்கம் மிக்க உயர்ந்த வாழ்வியலைச் சமயத்தளத்திலிருந்து கட்டமைத்துக் காட்டுவதில் அவர்கள் செலுத்திய ஆர்வம் பாராட்டுதற்குரியதாகும்.

தலபுராணங்கள் தரும் முக்கிய செய்தி 'கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம் கிடைக்கும்' என்பதாகும். ஒருவன் எந்தளவு பாவம் செய்தாலும் அவன் தன் பிழையை உணர்ந்து ஆண்டவனைப் பணிவானாயின் அவனுக்கும் இறையருள் சித்திக்கும் எனத் தலபுராணங்கள் கூறின. பாவங்களைக் கழுவிக் கொள்ள நீராட வேண்டிய தீர்த்தங்கள் பற்றியும் அகங்குழைந்து வணங்க வேண்டிய திருத்தலங்கள் பற்றியும் தலபுராணங்களில் விரிவான விளக்கங்கள் உண்டு. மக்கள் மனந்திருந்தி வழிபட்டு நன்னெறியில் தம்மை நிறுத்தற்பொருட்டு பாவிகளாயிருந்து இறையருள் பெற்றோரின் வரலாறுகளைப் புனைந்தோ, பழமரபுக்கதைகளில் அல்லது புராணங்களில் இருந்து தெரிந்தெடுத்தோ இவை விரிவாகக் கூறுகின்றன. இறையருளை நாடவிரும்பும் ஆன்மாக்களுக்கு இதன் மூலம் மனோதிடத்தையும், நம்பிக்கையையும் தலபுராணங்கள் தரமுற்படுவதைக் காணமுடிகின்றது. இதன் மூலம் இந்து சமயத்தின் இளகிய தன்மையையும், பரந்த பார்வையையும் தலபுராணங்கள் எடுத்துக்காட்ட விழைந்தன. அவைதிக மதங்கள், பிறதத்துவங்கள், கிறிஸ்தவம் போன்றன தமது பிரசாரங்களை முன்னெடுத்த காலங்களில் தலபுராணம் முன்னெடுத்த 'கடையருக்கும் கடைத்தோற்றம்' எனும் இக் கொள்கை காலத்தின் தேவையையும் பிரதிபலித்ததைக் காணலாம். 'ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் என்று எவருமேயிலர் ஆண்டவனின் சந்நிதியில் அனைவரும் சரிசமன்' என்ற கருத்துப்பிரசாரமும் தலபுராணத்தின் மேற்போந்த கோட்பாட்டினூடாக முன்வைக்கப்படுவது கவனித்தற்குரியதாகும்.

## முடிவுரை

தமிழில் தனித்துவமான இலக்கிய வடிவங்களாகத் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற தலபுராணங்கள் மக்கள் மத்தியில் பக்தி உணர்ச்சியையும், உயர்ந்த வாழ்வியலையும், சிறந்த குறிக்கோள்களையும் கட்டிக்காப்பதில் பெரும் பங்காற்றியுள்ளன. விஜயநகர நாயக்கர் காலத்தில் மட்டுமல்லாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் காலத்திலும் இருபதாம் நூற்றாண்டிலுங் கூட மக்கள் உள்ளங்களில் பக்தியுணர்வைக் குன்றாது இவை வளர்த்து வந்துள்ளதைக் காணலாம். வைதிக மரபில் பக்தி வைராக்கியத்தைக் கட்டிப் பாதுகாத்த இத் தலபுராணங்களின் இன்றைய நிலையோ மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது. ஒரு காலத்தில் ஆர்வத்தோடு பெருமுயற்சியுடன் எழுதப்பட்ட பல தலபுராணங்கள் இன்று கிடைக்காமலே போய்விட்டன; சில முழுமையாகக் கிடைக்கப்பெறவிலை; சில அச்சுவாகனம் ஏறாமல் ஏட்டு வடிவிலேயே உள்ளன; சில அச்சுவாகனம் ஏறியும் கவனிப்பாரற்று அழிவுற்றுவிட்டன; சில அச்சிடப்பட்டும் புரட்டிப் பார்க்கப்படாமலுள்ளன. தலபுராணங்கள் பற்றிய நீண்ட ஆய்வினைச் செய்த டேவிட் சூல்மன் என்பார் ஏறத்தாழ 2000 தலபுராணங்கள் அளவில் தமிழில் எழுந்தன என்பார்.[12] இவற்றுள் பல அழிந்தும் சிதைந்தும் போயினும் எஞ்சியிருக்கும் புராணங்களை அச்சேற்றி, மீள்பதிப்புச் செய்து பேணவேண்டியது சைவ சமயிகளினதும் சைவசமய நிறுவனங்களினதும் கடமையாகும். அச்சிடுவதுடன் மட்டும் அமையாது அவற்றை ஏற்றவகையில் பாராயண மரபிலோ படன மரபிலோ பிரசித்தப்படுத்த நடவடிக்கை எடுப்பதும் அவசியமானதாகும். அங்ஙனம் செய்யும் பட்சத்தில் தான் தலபுராணங்களின் நோக்கமும் இலட்சியமும் சரியான வகையில் நிறைவுறும்; சைவம் தளிர்க்கும்.

## அடிக்குறிப்புகள்

1. கோபாலகிருஷ்ண ஐயர், ப., இந்துப் பண்பாட்டில் கருவூலமான பதினெண் புராணங்கள், **இந்துப் பண்பாட்டு மரபுகள்**, வித்யா வெளியீடு, யாழ்ப்பாணம், 1992, ப.61
2. சுப்புரெட்டியார், ந., **வைணவ புராணங்கள்**, சுரா புக்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2003, பக். 4–5.
3. செல்வநாயகம், வி., **தமிழ் இலக்கிய வரலாறு**, ஸ்ரீ லங்கா வெளியீடு, கொழும்பு, 1973 (ஐந்தாம் பதிப்பு), ப. 185
4. அருணாசலம், மு.**தமிழ் இலக்கிய வரலாறு** – பதினைந்தாம் நூற்றாண்டு, The Parker Publication, சென்னை, 2005, பக். 306 –307
5. பத்மநாதன், சி., **ஈழத்து இலக்கியமும் வரலாறும்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2004, பக். 141
6. கிருஷ்ணசாமி, வே., **தமிழில் தலபுராண இலக்கியம்**, கிருஷ்ணா அச்சகம், நாகர் கோவில், 1974, பக். 8–9
7. **திருவிளையாடற் புராணம்,** நகரப் படலம், 108.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. **திருக்குற்றாலத் தலபுராணம்,** பாயிரம்.

9. அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு – பதினாறாம் நூற்றாண்டு** முதல் பாகம், The Parker Publication, சென்னை, 2005, ப. LXV

10. அருணாசலம், மு., மு.கு.நூ., (2005), ப. XXIII

11. அருணாசலம், மு., மு.கு.நூ.,(2005), ப. LXVII

12. பத்மநாதன், சி., மு.கு.நூ.,(2004), எடுத்தாள்கை ப, 142

## பின்னிணைப்பு:

## அட்டவணை 1:

### தமிழ்நாட்டிலெழுந்த சைவசமயம் சார்ந்த முக்கியமான தலபுராணங்கள் [17 ஆம் நூற்றாண்டு வரை]

| தலபுராணம் | பாடியவர் |
|---|---|
| 1 திருமழவாடிப் புராணம் | கமலை ஞானப்பிரகாசர் |
| 2 திருவானைக்காப் புராணம் | கமலை ஞானப்பிரகாசர் |
| 3 திருப்பரங்கிரிப் புராணம் | நிரம்பவழகிய தேசிகர் |
| 4 சேது புராணம் | நிரம்பவழகிய தேசிகர் |
| 5 திருவையாற்றுப் புராணம் | நிரம்பவழகிய தேசிகர் |
| 6 வேணுவன புராணம் | நிரம்பவழகிய தேசிகர் |
| 7 திருவாரூர்ப் புராணம் | அளகைச் சம்பந்த முனிவர் |
| 8 திருவொற்றியூர்ப் புராணம் | திருவெற்றியூர் ஞானப்பிரகாசர் |
| 9 திருக்காளத்திப் புராணம் | ஆனந்தக் கூத்தர் |
| 10 திருவையாற்றுப் புராணம் அல்லது செப்பேச புராணம் | ஞானக்கூத்தர் |
| 11 அருணாசல புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| 12 திருவிரிஞ்சைப் புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| 13 தீர்த்தங்கிரிப் புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| 14 திருவெண்காட்டுப் புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| 15 திருச்செங்காட்டங்குடிப் புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| 16 செவ்வந்திப் புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| 17 சிதம்பர புராணம் | புராணத் திருமலைநாதர் |
| 18 இறைவாச நல்லூர்ப் புராணம் | புராணத் திருமலைநாதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 19 கமலாலய புராணம் | மறைஞான சம்பந்தர் |
| 20 அருணகிரிப் புராணம் | மறைஞான சம்பந்தர் |
| 21 சுந்தரபாண்டியம் | அனதாரியப்பப் புலவர் |
| 22 திருப்பட்டீச்சுரப் புராணம் | ரேவண சித்தர் |
| 23 திருவலஞ்சுழிப் புராணம் | ரேவண சித்தர் |
| 24 திருமேற்றளிப் புராணம் | ரேவண சித்தர் |
| 25 திருவாஞ்சிய புராணம் | களந்தைக் குமரன் |
| 26 திருவாப்பனூர் புராணம் | கந்தசாமிப் புலவர் |
| 27 திருப்பூவணப் புராணம் | கந்தசாமிப் புலவர் |
| 28 பழனித்தல புராணம் | பாலசுப்பிரமணியக் கவிராயர் |
| 29 திருக்கழுக்குன்றப் புராணம் | அந்தகக்கவி வீரராகவ முதலியார் |
| 30 வேதாரணிய புராணம் | அகோரதேவன் |
| 31 திருக்கானப்பேர்ப் புராணம் | அகோரதேவன் |
| 32 கும்பகோணப் புராணம் | அகோரதேவன் |
| 33 திருச்செந்தூர்ப் புராணம் | வென்றிமாலைக் கவிராயர் |
| 34 திருக்கூவப் புராணம் | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 35 கும்பகோணப் புராணம் | சொக்கப் புலவர் |

அட்டவணை 2:

## ஈழத்திலெழுந்த இந்துமத தலபுராணங்கள் [இருபதாம் நூற்றாண்டுவரை]

### I] ஈழத்துத் திருத்தலங்கள் மீது பாடப்பட்டவை

| | |
|---|---|
| 1 தட்சிண கைலாச புராணம் | சிங்கைச் செகராசசேகரன் |
| 2 கோணாசல புராணம் | மாசிலாமணி முத்துக்குமாருப் புலவர் |
| 3 திருக்கரசைப் புராணம் | ஆசிரியர் பெயர் தெரியாது |
| 4 நகுலகிரிப் புராணம் | கா. அப்பாசாமி ஐயர் |
| 5 நகுலாசல புராணம் | மாதகல் ஏரம்பையர் |
| 6 திருக்கேதீச்சரப் புராணம் | பண்டிதர் ச. இராமச்சந்திரன் |
| 7 திருக்கேதீச்சரப் புராணம் | வைத்தீஸ்வரக் குருக்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 8 ஈழத்துச் சிதம்பர புராணம் | இளமுருகனார் |
| 9 சித்தாண்டிக் தலபுராணம் | ஆறையூர் ந. அளகேச முதலியார் |
| 10 நல்லூர் கைலாச புராணம் | சிவசுப்பிரமணிய சிவாசாரியார் |
| 11 தென்கோவிற் புராணம் | சிவசுப்பிரமணிய சிவாசாரியார் |
| 12 இளந்தாரி புராணம் | இணுவை சின்னத்தம்பிப் புலவர் |
| 13 கதிர்காமப் புராணம் | சி. நாகலிங்கம் பிள்ளை |
| 14 வல்லிபுரத்தான் தலபுராணம் | கு. பெரியதம்பி, முருக. வே. பரமநாதன் |

## II] தமிழகத் திருத்தலங்கள் மீது பாடப்பட்டவை

| | |
|---|---|
| 1 புலியூர்ப் புராணம் | சிவானந்தையர் |
| 2 சிதம்பர சபாநாத புராணம் | சபாபதிநாவலர் |
| 3 திருக்கழிப்பாலைப் புராணம் | சிவப்பிரகாச பண்டிதர் |
| 4 திருநெல்வாயிற் புராணம் | வதிரி நாகலிங்கம்பிள்ளை |
| 5 திருத்திலதைப்பதிப் புராணம் | வதிரி நாகலிங்கம்பிள்ளை |
| 6 இளசைப் புராணம் | கணேச பண்டிதர் |
| 7 கோட்டாற்றுப் புராணம் | அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் |
| 8 திருவைகற் புராணம் | (?) |
| 9 தேவகோட்டைப் புராணம் | ஆறுமுக நாவலர் (?) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசயநகர நாயக்கர் காலக் குறவஞ்சி

கலாநிதி செல்வரஞ்சிதம்
சிவசுப்பிரமணியம்

## முகவுரை

விசயநகர மன்னரும் நாயக்க மன்னரும் தமிழ்நாட்டை ஆண்ட காலப்பகுதி தமிழிலக்கிய வரலாற்றில் விசயநகர நாயக்கர் காலம் என அழைக்கப்பட்டது. விஜயநகர அரசு ஏற்பட்டதும் தமிழகம் அதன் பகுதியாக்கப்பட்டது. விஜயநகரத்தினுடைய நிர்வாக அமைப்பின்வழி தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி தோன்றியது. மதுரை, தஞ்சை, வஞ்சி, வேலூர் ஆகிய பகுதிகளில் நாயக்கர் ஆட்சி நிலவியது. முஸ்லிம்களின் படையெடுப்பினால் சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக அரசுக்கு, சமூகத்தையும் சமூக மரபுகளையும் பேணவேண்டிய தேவை ஏற்பட்டது. சமய வாழ்விலும் பெருமாற்றம் உண்டாகியது. இந்து சமயம் புதிய வளர்ச்சியைப் பெற்றது. விசய நகர நாயக்க மன்னர்கள் கலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தையும் வளர்த்தனர். இரண்டும் ஒன்றிணைந்து வளர்ந்தன. விசய நகர நாயக்க மன்னர்கள் தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமைபெற்ற அறிஞர்களை ஆதரித்தனர். புலவர்களுக்கும் அரசர்களுக்குமிடையே நெருங்கிய உறவு இருந்தது. இறைவன், மன்னன், மக்கள், தலம், என்பவற்றை மையமாகக் கொண்டு இலக்கியங்கள் எழுந்தன. பள்ளு, குறவஞ்சி என்ற இலக்கியங்கள் சாதாரண குடிமக்களை மையமாகக் கொண்ட இலக்கியங்களாகும். விசய நகர நாயக்கர் காலத்தில் எழுந்த குறவஞ்சி இலக்கியங்களைப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

## குறவஞ்சி– என்பதன் பொருள்

குறவஞ்சி என்ற சொல்லுக்குக் குறப்பெண் என்று பொருள் கூறப்படுகின்றது. குறப்பெண்ணுக்குரிய குறவர்குடி குறிஞ்சிக்குரியது. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்ததுமான இடம். குன்றவர் என்பதே குறவர் ஆவார். குறவர் பெண்ணுக்கு (குறவஞ்சிக்கு)த் தலைமை கொடுத்துக் கூறப்பட்டதால் இந்த இலக்கியம் குறவஞ்சி எனக் கூறப்படுகின்றது.

## இலக்கண நூல்களில் குறவஞ்சி என்பதன் விளக்கம்

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாக குறவஞ்சியை பாட்டியல் நூல்கள் குறிப்பிடவில்லை. ஆயினும் குறத்திப்பாட்டு என்னும் இலக்கிய வகையை 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாக பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

குறத்திப் பாட்டின் இலக்கணம் குறவஞ்சிக்கும் பொருந்தக் கூறியதாக அமைகின்றது.
பன்னிரு பாட்டியல்

*“இறப்பு நிகழ வெதிர் வென்னு முக்காலமும்*
*திறம்பட வுரைப்பது குறத்திப்பாட்டு”*[1]

*“குறத்திப் பாட்டும் அதனோரற்றே”*[2]

எனக் குறத்திப்பாட்டு இலக்கணம் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று காலமும் நோக்கி குறி சொல்லுதல் அமைகின்றது. குறவஞ்சியும் குறத்திப்பாட்டும் அமைப்பு நிலையில் வேறாயினும் பொருள் கூறும் நிலையில் ஒன்றாகவே உள்ளன.

*"குறத்திப் பாட்டே கூறும் இலக்கணம்*
*தலைவன் உலாவரத்தையவர் காமுறல்*
*மோகின வரவு மொழிதல் உலாவர*
*தலைவனைக் கண்டு தான் மயங்குதல்"*[3]

எனக் குறத்திப் பாட்டிற்கு இலக்கணம் கூறுகின்றது.

## குறவஞ்சி இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி

குறி சொல்லும் மரபு சங்க காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. குறி கேட்டல் என்பது நடக்க போவதை அறிவதற்காகப் பின்பற்றும் ஒரு முறை. அதாவது குறத்தி வாயிலாக கேட்டறிதல், வேலன் வெறியாட்டு அதில் கழங்கு பார்த்தல் என்பது செயற்முறை. தலைவிக்கு வேறுபாடு எதனால் நிகழ்ந்தது என்று செவிலி முதலியோர் அறிய விரும்புகின்றனர். கட்டினும் கழங்கினும் என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இதனைச் சொல்கின்றது. கட்டு என்பது கட்டுவிச்சியை அழைத்து அவளைக் கொண்டு குறிபார்த்தல். கட்டுச் சொல்லும்முறை சங்க இலக்கியங்களில் அழகாகச் சொல்லப்படுகின்றது. குறிசொல்லவல்ல ஒரு பேதை புலமை பெற்றுச் சங்க நூல்களில் பாடல் பாடி (நற்றிணை 357, புறநானூறு 157) குறமகள் குறி எயினி என்று பெயர் பெற்றிருக்கிறாள். திருமங்கையாழ்வார் தமது சிறிய திருமடலில் கட்டுவிச்சி குறி கூறும் முறைமைச் சொல்லுகிறார். இவ்வாறு குறி செல்லும் மரபு நீண்டகாலமாக தமிழ் இலக்கியத்தில் இருந்து வந்த மரபு. இதனைப் பின்பற்றி குறம், குறவநாடகம், குறவஞ்சி என்பன வளர்ச்சி பெற்றன. கலம்பகத்தில் ஒரு உறுப்பாக குறம் வந்திருக்கின்றது. பின்னர் குறம் தனிப்பிரபந்தமாக வளர்ச்சியடைந்தது. **மீனாட்சி குறம்** இதற்கு தக்க சான்றாகும்.

## குறவஞ்சி இலக்கியத்தின் சமூகப்பின்னணி

விசயநகர வேந்தர்களின் மாநில ஆளுனர்களாக இருந்து சுதந்திர அரசர்களான மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர் நாயக்கர்களும் தங்களது பேரரசர்கள் தொடக்கி வைத்த பணியைத் தத்தம் பகுதிகளில் விரிவாக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனர். விசயநகரப் பேரரசு கலைகளை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டது.

இந்து சமயத்தைப் பரப்புவதற்குக் கலை ஒரு வடிவமாகப் பயன்பட்டது. குறவஞ்சி இலக்கியத்தின் தோற்றம் இதனை வெளிப்படுத்துகின்றது. சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை என்பன ஆலயத்தை மையமாகக் கொண்டு வளர்ந்தன. சமயத்தினூடாக கலைகள் வளர்க்கப்பட்டன. வடமொழிக் கோட்பாடுகளும் தமிழ்நாட்டு பிரதேச வழமைகளும் இணைந்து வளர்ந்த வடிவமாகக் குறவஞ்சி அமைகின்றது. சமயம், கலை, அரசனின் ஆதரவு, பல்வேறு மொழிகளின் செல்வாக்கு என்ற காரணிகளின் தாக்கங்களும் குறவஞ்சி தோற்றம் பெறக் காரணங்களாகின்றன.

சிற்றரசுகளின் பெருக்கத்தினால் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இறைவனையும் மன்னர்களையும் கதாபாத்திரமாகக் கொண்டு இலக்கியம் படைத்தனர். சாதாரண மக்களான உழவர், குறவர், பள்ளர் போன்றோரும் இலக்கிய கதாபாத்திரங்களாக அமைகின்றனர். மக்கள் இலக்கியம் தோற்றம் பெறுகின்றது.

விசயநகர பேரரசு தென்னாட்டில் இந்துப்பேரரசாக இருந்த காலப்பகுதியில் அரசவையில் கன்னடம், தெலுங்கு சிறப்பிடம் பெற்றன. ஆந்திராவில் தெலுங்கு மொழியில் கொறவஞ்சி என்ற இலக்கிய வடிவம் இருந்தது. தெலுங்கு மொழியில் 20 குறவஞ்சிகள் இருந்ததாகத் தெரிகின்றது. இப்பொழுது அவை இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நாயக்கர்கள் தெலுங்குக் கலையைத் தமிழ்நாட்டில் பரப்பக் காரணமாயிருந்தார்கள். தெலுங்கு நாட்டில் அக்காலத்தில் யட்சகானம் என்னும் இசைநாடகங்கள் பிரபலமாக வழங்கி வந்தன. இந்தப் பின்னணியும் குறவஞ்சி இலக்கியம் தோற்றம் பெறக் காரணமாகின்றது. நாயக்க மன்னர் இந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்திய பொழுது இசை நாடகங்களை அமைத்துத் தருமாறு புலவர்களைத் தூண்டினர். இதன் விளைவாகவும் குறவஞ்சி தோற்றம் பெறுகின்றது.

## நாயக்கர் காலத்தில் எழுந்த குறவஞ்சிகள்

நாயக்கர் காலத்தில் எழுந்த குறவஞ்சி பற்றிக் கூறும்பொழுது ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. சிலர் திருக்குற்றாலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறவஞ்சிதான் முந்தியது என்பர். பொதுவாகக் குற்றாலக் குறவஞ்சியையே நாயக்கர் காலக் குறவஞ்சி எனச் சொல்வர். கீழ்க் குறிப்பிடப்படும் குறவஞ்சிகள் நாயக்கர் காலத்திற்கு உரியனவே. அவை கால அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பாவநாச முதலியார், கும்பேசர் குறவஞ்சியைப் பாடினார். முதன்முதலாக தஞ்சையை ஆண்ட ஏகோஜி மன்னன் காலத்தில் தோன்றியது. இந்நூல் கி.பி. 1676 இல் எழுதப்பட்டது. முத்துக்கவிராயர் தியாகேசர் குறவஞ்சியைப் பாடினார். இது திருவாரூர்த் தியாகேசப் பெருமான் மீது பாடப்பெற்றது. தஞ்சையில் ஆட்சி புரிந்த இரண்டாம் சகாஜி மன்னன் (1684– 1712) ஆதரவில் இந்நூல் இயற்றப்பெற்றது. இதன் காலம் 17ஆம் நூற்றாண்டாகும். மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரால் இயற்றப்பெற்றது திருக்குற்றாலக் குறவஞ்சி. இந்நூல் கி.பி. 1718 ஆம் ஆண்டில் இயற்றப்பெற்றது. கோவிலில் இக்குறவஞ்சி நடிக்கப்பெற்றதைக் கண்டு மகிழ்ந்த மதுரை நாயக்க மன்னரான முத்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர் நூலாசிரியருக்கு நிலதானம் செய்து செப்புப்பட்டயம் வழங்கியதாகக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

இரண்டாம் சகாஜி மன்னன் மீது( 1684– 1712) சகசிராசன் குறவஞ்சி பாடப்பட்டது. இந்நூலைப் பாடியவர் முத்துக்கவிராயராவார். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோசியின் புகழைப் பாடுவதற்காகப் பாடப்பட்ட நூல் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி. இதனை சிவக்கொழுந்து தேசிகர் இயற்றினார். இது கி.பி. (1800–1832) ஆம் ஆண்டில் இயற்றப் பெற்றது. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நந்தம் என்னும் பகுதியை ஆண்டு வந்த குமாரலிங்கம் நாயக்கர் மீது பாடப்பட்டது. குமாரலிங்கம் குறவஞ்சி (கி.பி. 1529–64) ஆண்டளவில் எழுதப்பட்டது.

குறவஞ்சி இலக்கியங்கள் பெயரிடப்படுகின்றது பொழுது இறைவன் மன்னன் பெயரால் அமைவதைக் காணலாம். இறைவன் பெயரால் எழுந்த குறவஞ்சிகளாக கும்பேசர் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி என்பன காணப்படுகின்றன. தலத்தின் பெயரால் எழுந்த குறவஞ்சி குற்றாலக் குறவஞ்சி என்பதாகும். மன்னரின் பெயரால் அமைந்த குறவஞ்சிகளாக குமாரலிங்க குறவஞ்சி , சகசிராசன் குறவஞ்சி, சரபேந்திர பூபால குறவஞ்சி என்பன காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறவஞ்சி – இலக்கியவடிவம்

வடமொழி நாட்டியம் என்னும் சொல் நாடகத்தைக் குறிக்கும். தென்னிந்தியாவில் நாடகங்கள் அனைத்தும் இசை, நடனம் ஆகியவற்றுடன் சேர்ந்தே நடைபெற்று வந்திருக்கின்றன. கூத்து என்ற பெயர் நடனம், நாடகம் ஆகிய இரண்டிற்க்குமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பழைய நாடகங்கள் இசைநாடகங்கள் என்ற பெயரைப் பெற்றன. இசை நாடகங்கள் இசையும் நடனமும் இல்லாமல் நடிக்கப்படுவதில்லை.

## குறவஞ்சி இலக்கியத்தின் நாட்டிய, நாடகத் தன்மை

"நாட்டிய நாடகம் (நிருத்திய நாடகம்) என்பதில் சாகித்தியம், இசை, நடிப்பு, நாட்டியம் என்னும் நான்கும் சேர்த்து ஒருங்கே சுவையை உண்டாக்கும். நாட்டியம் இதில் இன்றியமையாத அம்சமாகும்"[4] ஆட்டி வைப்பவர் விறுவிறுப்பான சொற்கட்டுக்களை இடையிடையே சொல்லுவார்.

தமிழகத்தில் நடிக்கப் பெற்ற நாடகங்களில் கணபதி வணக்கம், கட்டியக்காரன் வருதல், மோகினி வருதல் முதலியன ஆரம்ப நிகழ்வாக அமைகின்றன. அம்முறையைப் பின்பற்றியே குறவஞ்சி நாடகமும் தொடக்கப்படுகின்றது. கும்பேசர் குறவஞ்சி, குமாரலிங்கர் குறவஞ்சி ஆகிய குறவஞ்சிகளில் காப்புச் செய்யுளைத் தொடர்ந்து தோடயம் அமைகின்றது.

சகசிராசன் குறவஞ்சியில் கட்டியக்காரன் நாடகத்தைத் தொடங்கி வைப்பதோடு அவனது பங்கு முடிவடைகின்றது. இந்நாடகத்தில் சூத்திரதாரன் நாடகத்தை அறிமுகம் செய்து, விளக்கம் கொடுத்து, நாடகத்தை நடத்துகின்றான். கட்டியக்காரனையும் ஏனைய பாத்திரங்களையும் கதை நிகழ்ச்சிகளையும் நடத்திச் செல்கின்றான். இந்நாடகத்தின் தலைவியாக இராச கன்னிகை வருகின்றாள். சகி தலைவியின் (இராச கன்னியின்) உயிர்த்தோழியாக வருகின்றாள். குறத்தியை குறி சொல்ல அழைத்து வருகின்றாள். சிங்கன் குறவஞ்சியின் கணவன். சிங்கன்– சிங்கியைத் தேடி சகசிமன்னன் இடத்திற்கு வருகின்றான். நாடக பாங்கில் உரையாடல்கள் அமைகின்றன.

தியாகேசர் குறவஞ்சியில் கட்டியக்காரன் வருகை இடம்பெறவில்லை. தலைவன் உலா வரும் நிகழ்ச்சியைத் தலைவி பார்த்தல் நிகழ்ச்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறவில்லை. தலைவியை நேரடியாகப் படைத்த அவள் தலைவன் மீது காதல் கொள்வதாக ஆசிரியர் கூறுகிறார். சிங்கன் வருகை கூறும் நாடகப் பிற்பகுதியிலும் சில கூறுகளை ஆசிரியர் குறிப்பிடவில்லை. ஏனைய நிகழ்ச்சிகளையும் ஆசிரியர் சுருக்கமாகவே குறிப்பிடுகின்றார்.

தியாகேசர், இராசமோகினி குறவஞ்சி, சகசி மன்னன் ஆகிய பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரங்களாக அமைகின்றன. சிங்கன், குறவன், சகி ஆகிய மூவரும் துணைப்பாத்திரங்களாக இடம்பெறுகின்றனர். குறத்தியை காணாத சிங்கன் குளுவனுடன் சேர்ந்து பல இடங்களிலும் தேடி வருகின்றான். அவளை இறுதியில் கண்டு ஊடல் கொள்கிறான். இறுதியில் ஊடல் நீங்க மகிழ்ச்சியுடன் இருவரும் இருக்கின்றனர் என நாடகக் கதை முடிவடைகின்றது.

சரபேந்திரபூபால குறவஞ்சியில் நாடகத் தொடக்கத்தில் கட்டியக்காரன் அவை முன் தோன்றுகின்றான். அவனே கதை மாந்தர்களையும் கதை நிகழ்ச்சிகளையும் சபையோர்க்குக் கட்டியம் கூறி அறிமுகம் செய்கிறான். சரபேந்திரன் உலாவரும் பொழுது மதனவல்லி காதல் கொள்கிறாள். குறத்தி குறி கூறும் பொழுது தலைவனை சேர்வாய் என்று கூறுகிறாள். அதனைக் கேட்ட தலைவி பரிசுகள் பலவற்றை குறத்தியிடம் கொடுத்து மகிழ்வடைகிறாள். நாடகத்திற்குத் தேவையான பாத்திரங்களாக சரபோசி, மதனவல்லி, குறவஞ்சி, சிங்கன், குறவன், பாங்கியர் ஆகியோர் இடம்பெறுகின்றனர். குறவஞ்சியில் நாடக அறிமுகம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து பகுதிகளும் அமைகின்றன.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் நாடகத் தொடக்கத்தில் கட்டியக்காரன் அவை முன் தோன்றுகின்றான். திரிகூடநாதர் பவனி வருதலைக் கட்டிய காரன் சபையோர்க்கு அறிமுகம் செய்கிறான். திருகூட நாதர் பவனி வரும் பொழுது பவனியைக் காணப் பெண்கள் வருவதை ஆசிரியர் காட்டுவார்.

வசந்தவல்லி பந்தாடும் நிகழ்ச்சி அபிநயத்துடன் கூடிய ஆட்டம் சிறப்பாக அமைகின்றது.

வசந்தவல்லி திரிகூட நாதரைக் கண்டு தன்னை மறக்கின்றாள் தன் நாமம் கெடுகின்றாள் என் ஆசிரியர் கூறுகின்றார். வசந்தவல்லி சந்திரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மதனைப் பழிக்கின்றாள். குறத்தி குறி சொல்லல், சிங்கன் குறத்தியைத் தேடிவருதல். சிங்கன் சிங்கியை மகிழ்வித்தல் எனக் கதை மகிழ்வாக முடிகிறது. நாடகம் தொடக்கம், வளர்ச்சி உச்சம், முடிவு என்ற வகையில் நாடகம் செல்கின்றது. திரிகூட நாதர், வசந்தவல்லி, தோழிமார், பாங்கி, குறத்தி, சிங்கன், தூதுவன் போன்ற பாத்திரங்கள் நாடகப் பாத்திரங்களாக வருகின்றன. உரையாடல் கதைக்கு ஏற்றவகையில் சிறப்புற அமைகின்றது.

கும்பேசர் குறவஞ்சியில் கட்டியகாரன் வருகையோடு நாடகம் தொடங்குகின்றது. கும்பேசர்மீது மோகினி காதல் கொண்டு விரகதாபத்தால் துன்பமடைகின்றாள். நிலவையும் தென்றலையும் மன்மதனையும் வெறுத்துப் புலம்புகின்றாள். குறத்தி தனது நாட்டு வளத்தையும் மலை வளத்தையும் சொல்லிக் குறி கூறுகின்றாள். கும்பநாதர் உனக்கு அருள் செய்வார் என்று கூறுகின்றாள். குறத்தியின் நாயகன் அவளைத் தேடி வருகின்றான். குறத்தியும் குறவனும் சேர்ந்து கும்பேசரைத் துதிக்கின்றார்கள். இதனுடன் நாடகம் முடிவடைகின்றது. கென்மோகினி, கும்பேசர், சகி, குறத்தி, சிங்கன் என்ற பாத்திரங்கள்.

குமாரலிங்கர் குறவஞ்சி நாடகம் கட்டியக்காரன் வருகையோடு தொடங்குகின்றது. குமாரலிங்கர் மீது விரகமோகினி காதல் கொள்கிறாள். சந்திரன் தென்றல் குயில் என்பவற்றைத் தலைவி பழிக்கின்றாள். தலைவி குறத்தியை அழைத்து சாதி, வாசல், கல்வி, நாடு, மலை, ஐம்பத்தாறு தேசம் ஆகியவற்றின் பெருமைகளைச் சொல்லும்படி கேட்கின்றாள். குறத்தி அவற்றின் வளங்களையெல்லாம் எடுத்துரைக்கின்றாள். பின்னர் தலைவிக்கு குறி கூறுகின்றாள். சிங்கன் சிங்கியைத் தேடி வருகின்றான். இருவரும் மகிழ்ச்சியாக உரையாடுகின்றனர் என நாடக முடிவு அமைகின்றது. பாத்திரங்கள் கதைக்கு ஏற்றவாறு அமைகின்றன.

குறவஞ்சிகளின் மொழிநடை, பாத்திரங்களுக்கு ஏற்ப இயல்பாக அமைந்துள்ளன. நாடகப் பாத்திரங்களின் பண்புக்கு ஏற்ப செந்தமிழும் சேரிமொழியும் கலந்து மொழிநடை அமைகின்றது. குறவஞ்சிகளில் தலைவன், தலைவி, தோழி, குறமகள், சிங்கன், தோழன், ஆகியோர் முக்கியமான பாத்திரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் சிறப்பு உடையவனாகவே படைக்கப்படுகின்றான். தலைவனின் பெருமைப் பற்றி குறவஞ்சி ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தலைவன் மேலாற்றல் உள்ளவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.

தலைவி மங்கையர்களுள் சிறப்புடைய பாத்திரமாக சித்திரிக்கப் படுகிறாள். உடல், அழகுள்ளவளாகவும் உயர் பண்பு உள்ளவளாகவும், மெய்யான காதல் உணர்வு உள்ளவளாகவும், விளையாடி மகிழும் தன்மை கொண்ட பெண்ணாகவும் படைக்கப்படுகின்றாள்.

குறமகள்( சிங்கி– குறவஞ்சி) உணர்ச்சித் துடிப்புடன் விறுவிறுப்பாக செயற்படும் திறன் கொண்டவள். பரந்துபட்ட அறிவும் குறிசொல்லும் திறனும், இடத்திற்கேற்ப செயல்படும் ஞானமும், அன்பு உணர்வும், துணைவனைத் தேடிப் பேணும் தன்மையும் கொண்டவளாகக் குறவஞ்சிகள் படைக்கப்படுகிறார்கள். குறவஞ்சி இலக்கியங்களில் குறமகளே தலைமைப் பாத்திரமாக இடம்பெறுகின்றாள். குறிசொல்லும் பெண்ணின் பெயராலே இலக்கியத்தின் பெயர் அமைகின்றது. சிங்கன்(குறத்தியின் காதலன்) அறிவில் குறைந்தவனாகவும் உடல் வல்லமை பெற்றவனாகவும் படைக்கப் பெறுகின்றான். வேட்டையாடுவதில் வல்லவன். சிங்கியை(குறத்தியை) அன்புடன் விரும்புகின்றவனாகவும், அவளது பிரிவால் அளவில்லாத துன்பம் உறுபவனாகவும் அமைகிறான். சிங்கனின் குணநலன்கள் குறவஞ்சிகளில் காட்டப்படுகின்றது.

## நாட்டியம்

நாட்டியசாஸ்திரத்தில் கூறியபடி "கரணம், அங்கஹாரம், ஜதி, யதி போன்ற முறைகளைக் கொண்டு பல பாத்திரங்கள் ஏதேனும் ஒரு கதையைச் சுவைபட இசையுடன் எழில் மிக அபிநயித்துக் காட்டுதல் நாட்டியமாகும்..."[5]

நாட்டிய முறைகளாக மார்கி, நாட்டிய தர்மி, லோகதர் மிதேசி என்பன அமைகின்றன. மார்கியும் லோகதர்மியும் கலந்து உருவாகிய நிருத்திய முறைகள் தேசியாகும். குறவஞ்சி யக்ஷகானம் போன்றவை இத்தகைய தேசி நெறியைச் சேர்ந்த நாட்டிய நாடகங்களாகும். பரதநாட்டியசாஸ்திர விதிமுறைகள் தவறாமல் கரண அங்கார ரேசக விந்யாசங்களுடன் நிருத்தம் செய்தல் மார்கி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பகுதியில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் அவர்களது எண்ணங்களை வெளிப்படுத்த அவர்கள் இயற்கையாகச் செய்யும் அங்க அசைவுகள் போன்றவற்றை நன்கு உணர்ந்து கொண்டு சாஸ்திர விதிக்கு மாறுபடாமல் தான் கற்ற கல்விக்கு மெருகூட்டும் வகையில் இயற்கையாகச் செய்யும் அபிநயம் லோகதர்மி எனப்படும்.

இக் குறவஞ்சிகளின் செய்யுட்கள் சிந்து, கீர்த்தனை ஆகிய இசைப்பாக்கள் அமையும் நிலையில் இயற்றப் பெற்றுள்ளன. எல்லாக் குறவஞ்சிகளிலும் பண்கள் சிறப்பாக அமைந்துள்ளன. இசையிலும் நடனத்திலும் நாடகத்திலும் நல்ல தாடனம் பெற்றவர்களாலே தான் இக்குறவஞ்சிகளைப் படைக்க முடியும்.

குறவஞ்சி இலக்கியங்கள் நாடகத் தன்மையும் நாட்டியத் தன்மையும் பெற்றதனால் நாட்டிய நாடகம் என அழைக்கப்படுகின்றன. இன்று தமிழகத்திலும், ஈழத்திலும் நடைபெறும் நடன நிகழ்ச்சிகளில் குறத்தி நடனம் என்பது தவிர்க்க முடியாத ஒரு நடனமாக விளங்குகின்றது.

## நாட்டாரியற் பண்புகள்

நாட்டாரியல் பண்புகள் குறவஞ்சியில் மிகுந்து காணப்படுகின்றது. குறச்சாதியரின் பழக்கவழக்கங்கள் குறவஞ்சி இலக்கியங்களால் அறியப்படுகின்றது. குறத்தி மாத்திரைக் கோலும் வற்றாப் பாத்திரமான பளுங்குறக் கூடையும் வைத்திருப்பாள் எனவும் கைக்குறிகளையும் மெய்க்குறிகளையும் பார்த்துப் பலன் கூறுவாள் எனவும் கூறுவதற்கு முன் பல தெய்வங்களையும் வேண்டுவாள் எனவும் கூறப்படுகின்றது. இந்த நிகழ்ச்சியை எல்லாக் குறவஞ்சிகளுமே குறிப்பிடுகின்றன.

கவுளி சொல்லும், பல்லியின் காதலும், இரு ஆந்தைகள் சேர்த்து பொந்திற்குள் செல்வதும் நல்ல சகுனத்திற்குரிய பலன்கள் என தியாகேசர் குறவஞ்சி குறிப்பிடும்.

மகளிர் அணிகின்ற பல்வகை அணிகலன்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அணிகலன்கள் பெண்களின் வசதிக்கும் தகுதிக்கும் ஏற்ப அணிந்திருக்கின்றமையை குறவஞ்சியில் முத்துக்கவிராயர் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரி, அட்டி, அரம், இரத்தினச்சிட்டி, ஒட்டியாணம், கலை, கரடு, கண்டசாரம், கல் சிலம்பு, சுட்டி, செம்பொன், நவமணி, பசுங்குழை, பொன்னாபரணம், பொன்னின்மணி, தண்டை, தங்கக்கட்டி, முத்துக் கொண்டை, ஆகிய அணிகள் பயன்படுத்தப்பட்டன (சகசிராசன் குறவஞ்சி). ஆடை, துகில் எனும் சொற்கள் ஆடையைக் குறிப்பவையாக இடம்பெறுகின்றன. சேலையில் தங்கச் சேலை பூம்பட்டு, நாறு, பொற்சரிகைச் சேலை ஆகியவற்றை மகளிர் அணிந்திருக்கின்றனர். இவ்வாறு ஆடைகள், அணிகலன், பற்றி விரிவாக குறவஞ்சி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பல பழமொழிகள் இக்குறவஞ்சி இலக்கியங்களில் கையாளப்படுகின்றது.

"உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்வாராள்டோ" குமார. கு. 76
"தான் திருடன் பிறரை நம்பான்" குமார. கு. 76
" விளக்கிருக்கத் தீத்தேடி"
" மடியில் கனமில்லார்க்கு வழியில் பயமேது"
" குற்றமுள்ள நெஞ்சனுக்கு குறுகுறுப்பாய்த் தோணும்"
" கள்ளருடை மனதில் அச்சம் காடு கொள்ளாது"
" புலி பசித்தாலென்ன புல்லைப் புசிப்பதுண்டோ" தியாகேசர்.65.

இவ்வாறு பல பழமொழிகள் குறவஞ்சி இலக்கியத்தில் எடுத்தாளப்படுகின்றது.

## குறவஞ்சி இலக்கியத்தின் மொழி

நாயக்கர் காலத்தில் வடமொழி, தெலுங்கு, கன்னடம், மராட்டி, ஆகிய மொழிகளின் செல்வாக்கு மக்களிடையே காணப்பட்டது. இம்மொழிகள் இக்காலப் புலவர்களையும் பாதிக்கின்றது. குறத்தி, சிங்கன், குறவன், ஆகியோர் பேசும் பேச்சுக்களில் சேரி மொழிச் சொற்கள் ஆசிரியரால் பயன்படுத்தப்படுகின்றது. ஆச்சுது, அம்மே, அடா, அடி, யக்கா, நாலு, மனிசா, யண்ணே, வயத்து, வவுத்து எனப் பல சொற்கள் குறத்தி, சிங்கன், என்ற பாத்திரங்கள் வாயிலாகப் பேசப்படுகின்றன. அக்கால வழக்கில் இருந்த சொற்கள் பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றை ஆசிரியர் ஏற்றவகையில் கையாண்டிருக்கின்றார். இச்சொற்கள் மொழியியல் நோக்கில் ஆய்வு செய்வதற்குப் பயன்படதக்க வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறவஞ்சி இலக்கியங்களில் இசைப்பாடல்களுக்கு ஏற்ப யாப்பு அமைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்*
*கானவர்கள் விழியெறித்து வானவரை யழைப்பர்*
*கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்*
*தேனருவி திசை எழுப்பி வானின்வழி ஒழுகும்*
*செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும்*
*கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரன்*
*குற்றாலத் திரிகூடமலை எங்கள் மலையே"*[5]

குற்றாலக் குறவஞ்சியில் வரும் மலைவளம் வருணிக்கும் போது அதன் கவிதைச் சுவை, சந்த நலம், கற்பனை அழகு, செந்தமிழ் மொழி வளம் என்பன அழகுற அமைந்துள்ளன. அழகுணர்ச்சியுடன் பாடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கற்பவர்களின் மனம் நெகிழும் வண்ணம் அமைந்துள்ளது.

## முடிவுரை

குறவஞ்சி இலக்கியங்கள் நாட்டிய நாடக வகையைச் சேர்ந்தன. குறவஞ்சி இலக்கியங்கள் சிறிய இலக்கியங்களாக இருந்தாலும் அவற்றின் இலக்கியத் தரம் மிக உயர்ந்ததாகும். குறவஞ்சி இலக்கிய கர்த்தாக்களான முத்துக் கவிராயர், சிவக்கொழுந்து தேசிகர், பாவநாச முதலியார், திரிகூடராசப்பக் கவிராயர் என்போர் இலக்கிய ஆளுமை படைத்த கவிஞர்களாவர். இவர்கள் பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்கள். குறவஞ்சி இலக்கியத்தில் மொழி அழகியல் உணர்வுடன் கையாளப்படுகின்றது. குறவஞ்சி ஆசிரியர்கள் நாட்டிய நாடக வடிவத்தைக் கையாளுவதிலும் கைதேர்ந்தவர்கள். நாட்டாரியற் பண்புகள் இதனூடாக வெளிவருகின்றன. நாயக்கர் கால இலக்கியங்களுள் குறவஞ்சி இலக்கியம் மிக முக்கியமான இலக்கிய வடிவமாக அமைகின்றது.

## அடிக்குறிப்புக்கள்

01. பன்னிரு பாட்டியல் நூ.பா. 217
02. மேற்படி நூ.பா. 218
03. பிரபந்த தீபம் 10
04. கலைக்களஞ்சியம் தொகுதி 6. ப. 334
05. திருக்குற்றாலக் குறவஞ்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைத்தமிழ் இலக்கியவளர்ச்சியில் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

## அறிமுகம்

தமிழிலுள்ள பிரபந்த வகைகளுள் 'பிள்ளைத்தமிழ்' என்பதும் ஒன்றாகும். பிள்ளைத்தமிழ் என்பது விரும்பும் தலைவன் அல்லது தலைவியை[1] குழந்தை நிலைக்கு உரியவராக்கி காப்பு முதலான பத்துப் பருவங்களில் வைத்துப் பாடுவதாகும்.

விஜயநகர நாயக்கர் காலப் பகுதியில் (கி. பி. 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு வரை) பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பல எழுந்தன. அந்த வகையில் அக்காலத் தவரான குமரகுருபரர் இயற்றிய 'முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தம் பற்றி நோக்குவதாக இந்த ஆய்வு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரபந்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை வெளிக்கொணர்வதும் குமரகுருபரரின் புலமைத் திறனை மதிப்பீடு செய்வதும் இவற்றினூடாக பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இந்நூலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதுமே இந்த ஆய்வின் நோக்கங்களாகும்.

பிள்ளைத்தமிழ் இலக்கியமானது பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு, பிள்ளைப்பிரபந்தம், பிள்ளைத்திருநாமம், பிள்ளைமை இன்பம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. கி. பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பன்னிரு பாட்டியல் பிள்ளைப் பாட்டிற்குரிய இலக்கணம், ஆண்பாற் பிள்ளைப் பாட்டிற்கு பெண்பாற் பிள்ளைப் பாட்டிற்குமுரிய பருவங்கள், காப்பிற்குரிய கடவுளர், (திருமால்), பயன்படுத்தத்தக்க யாப்பு வடிவங்கள் முதலான பல விடயங்களைக் குறிப்பிடுகின்றது. பிள்ளைப்பாட்டு என்பதற்குப் பின்வருமாறு இலக்கணங்களைக் குறிப்பிடுகின்றது.

> "*பிள்ளைப் பாடே தெள்ளிதின் கிளப்பின்*
> *மூன்று முதலா மூவேழ் அளவும்*
> *ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே*" (இனவியல் : 17)

குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இரண்டு மாதங்களுக்கு ஒரு பருவம் வீதம் 21 மாதங்கள் வரை பாடப்படுவது பிள்ளைப் பாட்டாகும் என்பது மேற்குறித்த செய்யுளின் பொருளாகும். எனினும் பதினாறு ஆண்டுகள் வரை ஆணுக்கும், பூப்பு நிகழும் வரை பெண்ணுக்கும் பிள்ளைத்தமிழ் பாடலாம் என இந்திரகாளியம் கூறுகின்றது.[2]

> "*காப்பொடு செங்கீரை தால்சப் பாணி*
> *யாப்புறு முத்தம் வருகஎன் றல்முதல்*
> *அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்*
> *நம்பிய மற்றவை சுற்றத் தளவென*
> *விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்*" (இனவியல் : 18)

என்னும் செய்யுள் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியனவற்றை ஆண்பாற் பிள்ளைத்தமிழிற்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவங்களாகக் கூறுகின்றது. அது போல பெண்பாற் பிள்ளைத்தமிழிற்குரிய பருவங்களையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"திருந்திய பெண்மக வாயின் விரும்பிய
பின்னர் மூன்றும் மன்னுநீ க்கென்றார்" (இனவியல் : 19)

என்பதில் ஆண்பாற் பிள்ளைத்தமிழிற்குரிய பருவங்களில் இறுதி மூன்று பருவங்களையும் (சிற்றில், சிறுபறை, சிறுதேர்) நீக்க வேண்டும்[3] எனக் கூறும் பன்னிரு பாட்டியல், அடுத்து வரும் நூற்பாவில் சேர்க்கப்பட வேண்டிய பருவங்களைக் குறிப்பிடுகின்றது.

"*சிற்றில் இழைத்தல் சிறுசோ றாக்கல்*
*பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்*
*ஆண்டீ ராறதில் எழிற்காமன் நோன்பொடு*
*வேண்டுதல் தாமவை விளம்பினர் புலவர்*"

பெண்பாற் பிள்ளைத் தமிழிற் பாடப்படக் கூடிய பருவங்களாக சிற்றில் இழைத்தல், சிறுசோறாக்கல், ஊசல், பன்னிரண்டு வயதில் காமன் நோன்பு ஆகியன குறிப்பிடப்படுகின்றன. ஆயினும் அம்மானை, நீராடல், கழங்கு முதலானவும் பெண்பாலுக்குரியவனவாகக் கொள்ளப்படுகின்றன. குமரகுருபரர் தனது மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழில் அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பருவங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் பாடுவதற்குரிய யாப்புகளாக ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கட்டளைத்கலித்துறை, நெடுவெண்பாட்டு ஆகியன குறிப்பிடப்படுகின்றன. தந்தை, தாய், பாட்டன், பாட்டி முதலானோர் விளித்துக் கூறுவதாகப் பெரும்பாலும் செய்யுள்கள் அமையும். பாட்டுடைத் தலைவரைப் புகழ்ந்து பாடுவதே பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முதன்மை நோக்கமாகும்.

## பிள்ளைத்தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் :

"*குழவி மருங்கினும் கிழவதாகும்*" (தொல்காப்பியம் : பொருள் : புறத்திணையியல் : 24) எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இதற்கு "குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும் பாராட்டுமிடத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கீரையும் தாலும் சப்பாணியும் முத்தமும் வரவுரைத்தலானும் அம்புலியும் சிற்றிலும் சிறுதேரும் சிறுபறையுமெனப் பெயரிட்டு வழங்குதலானும் என்பது' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்துள்ளார்[4]. பிள்ளைத்தமிழிற்குரிய பருவங்களாகப் பிற்காலத்தில் வழக்குப் பெற்ற காப்பு, சிறுதேர், கழங்கு முதலானவை குறித்து சங்க இலக்கியங்களில் சான்றுகளைக் காணலாம். 'பிற்காலத்தில் அரும்பப் போகும் பல பிள்ளைத்தமிழ்க் கூறுகளுக்குச் சங்க இலக்கியம் தாய்வீடு' என செளந்தர பாண்டியன் குறிப்பிடுவார்[5] (சில உதாரணங்கள் வருமாறு:)

சிலப்பதிகாரத்தில் அம்மானைவரி, ஊசல்வரி ஆகியன இடம்பெற்றுள்ளன. மணிமேகலையிலும் ஊசல், சிறுதேர் இழுத்தல் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பல்லவர் காலத்தில் குறிப்பாக கி. பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்களைத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இனங்காண முடிகின்றது. ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியில் சிற்றிற் பருவத்திற்குரிய பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்று வருமாறு:

> *"நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா நரனே உன்னை*
> *மாமிதன்மகனாகப் பெற்றல் எமக்கு வாதை தவிருமே*
> *.............................. எங்கள் சிற்றில் வந்து சிதையேலே"* (11ம் பாடல்)

குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழியில் மன்னு புகழ்ப் பகுதியிலுள்ள பத்துப்பாடல்கள், தாலப் பருவத்திற்கு முன்னோடியாய் அமைவன. உதாரணம் வருமாறு:

> *"மன்னுபுகழ்க் கௌசலையின் மணிவயிறு வாய்த்தவனே*
> *தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்*
> *கன்னி நன்மாமதில் புடைசூழ் கணபுரத்தென் கருமணியே*
> *என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ"* (பெ. தி. 8:1)

கி. பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரியாழ்வார் இயற்றியது பெரியாழ்வார் திருமொழியாகும். பிள்ளைத் தமிழிற்குரிய பல பருவங்கள் இந்நூலில் உள்ளன. இதனால் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்திற்கு இந்நூலினையே பலர் ஆதாரமாக எடுத்துக் காட்டுவர். தாலாட்டு, அம்புலி அழைத்தல், செங்கீரையாடுதல், சப்பாணி கொட்டல், தளர்நடை, அச்சோப் பருவம், புறம்புல்கல் அழைத்தல், அப்பூச்சி காட்டுதல், அன்னமுண்ண அழைத்தல் முதலான பல பகுதிகள் பிள்ளைத்தமிழ் அமையக் காரணமாயின. இப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் பத்துப் பத்துப் பாடல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பின்வரும் பாடல் பெரியாழ்வாரின் திருமொழியிலுள்ள தாலாட்டுப் பாடலாகும்.

"*மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி*
*ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்*
*பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்*
*மாணிக் குறளனே தாலேலோ வையம் அளந்தானே தாலேலோ*"

(பெ. தி. 1,4,1)

திருஞான சம்பந்தர் குறித்துப் பாடுகையில்

"*காமருதா எம்பெறுதற் கொற்றுவதும் காட்டுவது போல்*
*தாமரைச்செங் கைகளினால் சப்பாணி கொட்டினார்*"

என பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடுவதும் நோக்குதற்குரியது.

தமிழின் முதற் பிள்ளைத்தமிழ் ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழாகும். கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்குரியதான இந்நூல், பல சிறப்புக்களையுடையது. தொடர்ந்து கொடிக்கொண்டான் பெரியான் இயற்றிய காங்கேயன் பிள்ளைத்தமிழ் (13ஆம் நூற்றாண்டு), தத்துவராயர் இயற்றிய சொரூபானந்தர் பிள்ளைத் திருநாமம் (16ஆம் நூற்றாண்டு) ஆகியன எழுந்தன.

கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் அதிகளவான பிள்ளைத் தமிழ் இலக்கிய நூல்கள் இயற்றப்பட்டன. அத்துடன் இந்நூற்றாண்டிலிருந்து கடவுளரையும் பாட்டுடைத் தலைவராகக் கொள்ளும் முறையினையும் காண முடிகின்றது. குறிப்பாகப் பெண் தெய்வங்களையும் பாடும் மரபு தோன்றியது.

இந்நூற்றாண்டில் குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமர சுவாமி பிள்ளைத்மிழ் என்பனவும் அந்தகக்கவி வீரராகவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியாரின் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் மற்றும் பொன்னாயிரங் கவிராய மூர்த்திகளின் சங்கர குமார பிள்ளைத்தமிழ் என்பனவும் தோன்றின.

18ஆம் நூற்றாண்டில் எழுந்த பிள்ளைத்தமிழ் இலக்கியங்களுள் பகழிக் கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், அருணாசலக் கவிராயரின் அனுமார் பிள்ளைத்தமிழ், சிவஞான முனிவரின் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சவ்வாதுப்புலவரின் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் ஆகியன குறிப்பிடத்தக்கன.

19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார், ஆழ்வார்களின் மீதும் காந்தி, காமராஜர், ராஜாஜி, மறைமலையடிகள், கம்பர், சேக்கிழார் முதலானோர் மீதும் பிள்ளைத்தமிழ் பாடப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அநேக நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், திருவெண்காட்டுப் பெரியநாயகி பிள்ளைத்தமிழ், திருவாடுதுறை அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ், என்பன குறிப்பிடத்தக்கன. இக்காலப் பகுதியில் எழுந்த நூல்களுள் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய வள்ளி நாயகி பிள்ளைத்தமிழ், சென்னை முருகன் பிள்ளைத்தமிழ் ஞானபிரகாச சுவாமிகளின் செங்குந்தர் பிள்ளைத்தமிழ், காஞ்சி சபாபதி முதலியாரின் திருக்குடந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், அப்பாலையரின் திருநந்திதேவர் பிள்ளைத்தமிழ் ஆகியனவும் குறிப்பிடத்தக்கன. 20ஆம் நூற்றாண்டில் எழுந்தனவற்றுள் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். சொக்கலிங்கம் ஐயாவின் திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், சொக்கலிங்கம் செட்டியாரின் காந்தி பிள்ளைத்தமிழ், பிரான்சிஸ்பிள்ளையின் கிறிஸ்துநாதர் பிள்ளைத்தமிழ், ஆரியநாவலரின் நாகூர்ப் பிள்ளைத்தமிழ் ஆகியன.

## பிள்ளைத்தமிழின் பருவங்கள் :

### காப்புப்பருவம்:

பாட்டுடைத் தலைவனையோ தலைவியையோ காக்குமாறு தெய்வங்களை வேண்டிப் பாடுதாக அமைவது காப்புப் பருவமாகும். குழந்தையின் மூன்றாம் மாதத்தில் இது நிகழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. காப்பிற்குரிய கடவுளராக திருமால், அரன், பிரம்மன், விநாயகர், முருகன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன், இந்திரன், குபேரன், திருமகள், முப்பத்து மூன்று தேவர்கள் முதலானோர் அமைவர்.

காப்புப் பருவத்தில் வரக்கூடிய முதற் கடவுளாக திருமால் குறிப்பிடப்படுகின்றனார்.[6] முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் முதலில் விநாயகர் வணக்கம் இடம் பெறுகின்றது. அதனையடுத்து வரும் காப்புப் பருவத்தில் முதலில் வேண்டப்படும் தெய்வமாகத் திருமால் அமைந்துள்ளார். தொடர்ந்து வைத்தியநாதர் (சிவபெருமான்), தையல் நாயகி அம்மை, கற்பக விநாயகக் கடவுள், நான்முகன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், சப்தமாதர்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோரை நோக்கி பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு வேண்டிப் பாடுவதாக இதிலுள்ள பாடல் அமைகின்றன.

### செங்கீரைப் பருவம்:

இது பிள்ளைத்தமிழின் இரண்டாவது பருவமாகும். ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலை நிமிர்ந்து உடல் அசைய ஆடுவது இப் பருவமாகும். இது ஐந்தாம் மாதத்தில் நிகழும். இப் பருவத்திற்குரிய பாடல்கள் 'செங்கீரை ஆடியருள்க', 'ஆடுக செங்கீரை' என்னும் சொற்களை ஈற்றிலே பெற்றிருக்கும்.

### தாலாட்டுப் பருவம்:

இது பிள்ளைத்தமிழின் மூன்றாவது பருவம். தால் என்பது நாக்கு, நாவினை அசைத்துப் பாடுதல் தாலாட்டு ஆகும் இது ஏழாம் மாதத்தில் நிகழும். குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுதலை இது குறிக்கும். 'தாலோ தாலேலோ' என்னும் முடிவுகளை இச் செய்யுள்கள் பெற்றிருக்கும்.

### சப்பாணிப் பருவம்:

பிள்ளைத்தமிழின் நான்காவது பருவமாக இது அமைகின்றது. குழந்தையின் ஒன்பதாம் மாதத்தில் இது நிகழும். குழந்தை உட்காரத் தொடங்கிய பிறகு பெற்றோரும் மற்றோரும் தம் கைகளைச் சேர்ந்த்துத் தட்டிக் காண்பித்து குழந்தையையும் அவ்வாறே செய்ய வேண்டுவதே இப் பருவமாகும். குழந்தையும் அதற்கேற்ப தன் கைகளைத் தட்டுவது 'சப்பாணி' ஆகும்.[7] "கொட்டுக சாப்பாணி' 'சப்பாணி கொட்டியருளே' முதலான முடிவுகளைப் பெற்றனவாய் இப் பருவத்துச் செய்யுள்கள் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முத்தப் பருவம்:

குழந்தையின் பதினோராம் மாதத்தில் நிகழ்வது. பிள்ளைத்தமிழின் ஐந்தாம் பருவத்தில் நிகழ்வது. குழந்தையாகிய பாட்டுடைத் தலைவனிடம் அல்லது தலைவியிடம் முத்தம் தருமாறு தாய் தந்தையர் வேண்டுவதாக இப்பருவம் அமையும். 'தருக முத்தமே', 'முத்தமே அருளே', 'முத்தம் தருகவே' என்னும் முடிவுகளை இச்செய்யுள்கள் பெற்றிருக்கும்.

### வருகைப் பருவம்:

இது பிள்ளைத்தமிழின் ஆறாவது பருவம். பதின்மூன்றாம் மாதத்தில் நிகழ்வது. தளர்நடையிட்டுத் தத்திதத்தி வரும் குழந்தையை அருகில் வருமாறு அழைத்தல் இப் பருவத்தில் நிகழும். 'வருகவே', 'வருகவே' என்னும் முடிவுகளை இச் செய்யுள்கள் பெற்றிருக்கும்.

### அம்புலிப் பருவம்:

பிள்ளைத்தமிழின் ஏழாவது பருவமான இப்பருவம், பதினைந்தாம் மாதத்தில் நிகழ்வது. விண்ணிலுள்ள சந்திரனைக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைப்பது இப்பருவத்திற்குரியது. இவ்வாறு அழைக்கும் போது சாம, பேத, தான, தண்ட முறைகளினைப் பயன்படுத்துவது இப் பருவத்திற்குரிய சிறப்பியல்பாகும்.

அதவாது பாட்டுடைத்தலைவர்க்கும் சந்திரனுக்கும் ஒப்புமை கூறி விளையாட அழைப்பது சாம உத்தியாகும். வேறுபாடுகளைக் கூறி விளையாட அழைப்பது பேத உத்தியாகும். கொடைகளைப் பெறலாம் எனக் கூறி விளையாட அழைப்பதுதான் உத்தியாகும். வராவிடின் பெறக் கூடிய தண்டனைகளைக் கூறி விளையாட அழைப்பது தண்ட உத்தியாகும். 'அம்புலீ ஆடவாவே', 'அம்புலீ ஆடவாவே', 'ஆடவாவே அம்புலியே' என்ற முடிவுகளை இச் செய்யுள்கள் பெறும்.

### சிற்றில் பருவம்:

இது ஆண்பாற் பிள்ளைத்தமிழின் எட்டாவது பருவமாகும். பதினேழாம் மாதத்தில் நிகழ்வது. சிறுமியர் கட்டிய சிற்றிலை (சிறு வீடு) ஆண் குழந்தை சிதைக்கும்போது அவ்வாறு செய்ய வேண்டாமெனச் சிறுமியர் வேண்டுவதாக இப் பருவம் அமைகின்றது. பெற்றோரும் பெரியோரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவதாகப் பிள்ளைத்தமிழின் ஏனைய பருவங்கள் அமைந்திருக்க இப் பருவம் மட்டும் சிறுமியர் பாடுவதாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 'சிறியேம் சிற்றில் சிதையேலே' 'சிற்றில் அழியேலே' என்னும் முடிவுகளைப் பெற்றனவாக இச் செய்யுள்கள் அமையும்.

## சிறுபறைப் பருவம்:

இது ஆண்பாற் பிள்ளைத்தமிழின் ஒன்பதாவது பருவம். பத்தொன்பதாம் மாதத்தில் நிகழ்வது. குழந்தையிடம் சிறுபறை முதலான கருவிகளைக் கொடுத்து முழக்குமாறு செய்வதாக இப்பருவம் அமையும். 'சிறுபறை முழக்கியருளே', 'முழக்குக சிறுபறையே', 'சிறுபறை கொட்டியருளே' என்னும் முடிபுகளை செய்யுள்கள் பெறும்.

## சிறுதேர்ப் பருவம்:

இது ஆண்பாற்பிள்ளைத்தமிழின் பத்தாவது பருவம். இருபத்தோராம் மாதத்தில் நிகழ்வது. மரத்தாலான சிறுதேரினை உருட்டி மகிழுமாறு குழந்தையை வேண்டுவது. 'சிறுதேர் உருட்டியருளே', 'சிறுதேர் நடத்துகவே' என்னும் முடிபுகளைப் பெற்றனவாக இச் செய்யுள்கள் அமையும்.

பின்வருவன பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய இறுதி மூன்று பருவங்களாக அமையக் கூடியவை.

## அம்மானை:

மூன்று காய்களைக் கொண்டு அம்மானையாடுதலை இது குறிக்கும்.

**நீராடல்**

புதுவெள்ளத்தில் நீராடுமாறு வேண்டுதல்.

**ஊசல்**

ஊஞ்சலில் அமர்ந்து ஆடுதலைக் குறிக்கும்.

**கழங்கு**

கழற்சிக் காய்களைக் கொண்டு விளையாடுதல்.

மேற்குறித்த அனைத்துப் பருவங்களின் ஊடாகப் பாட்டுடைத் தலைவரின் சிறப்புக்கள் புகழ்ந்துரைக்கப்படுவதைப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் யாவற்றிலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

புள்ளிருக்கு வேளூர்ச் சேனாபதிப் பெருமாள் பிள்ளைத்தமிழ், புள்ளிருக்கும் வேளூர்க் குமாரதேவர் பிள்ளைக்கவி, முத்தையன் பிள்ளைத்தமிழ் என்னும் பெயர்களாற் சிறப்பிக்கப்படுகின்ற முத்துக்குமார சுவாமிப் பிள்ளைத்தமிழ் குமரகுருபரரால் இயற்றப்பெற்றது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டினரான குமரகுருபரர் ஸ்ரீவைக்குண்டம் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தவர். முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழைத் தவிர காசிக்கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை இரண்டைமணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, கந்தர் கலிவெண்பா ஆகிய பிரபந்தங்களையும் இவர் இயற்றியுள்ளார்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், வைத்தீஸ்வரன் கோயிலில் (புள்ளிருக்கும் வேளூர்) எழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசுவாமி (முருகப் பெருமான்) மீது பாடப்பட்டதாகும். பாட்டுடைத் தலைவனைக் குழந்தைப் பருவத்திற்குரியவராக்கி காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்களில் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் அமைத்துப் பாடியுள்ளார் குமரகுருபரர்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் முருகப் பெருமானின் சிறப்புக்கள் விவரிக்கப்பட்டுள்ளன. சிவபெருமான், உமையம்மை முதலானோரும் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தலச் சிறப்பு, புராண இதிகாச நிகழ்வுகள் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றினூடாக குமரகுருபரரின் கவித்துவச் சிறப்பினையும் காண முடிகின்றது.

பாட்டுடைத் தலைவனாகிய முத்துக்குமாரரின் சிறப்புக்கள் வெளிப்படும் இடங்களாகப் பின்வருவற்றைக் குறிப்பிட முடியும்.

## முருகப்பெருமானின் சிறப்புக்கள்

குரா மலர், வெட்சி மலர்களால் ஆகிய மாலையை அணிந்த மார்பினன், பேய்க் கூட்டமானது குரவைக் கூத்தாடி அசுரர்களுடைய நிணத்தைச் சுவைக்கும்படி செய்கின்ற கூர்மையான வேற்படையை ஏவிய குமரன், பார்வதி மைந்தன், வேதத்தின் உரையை விளக்கமாகச் சொல்வோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று செருக்கோடு கூறிய நான்முகனது தலையிற் குட்டியதால் கைத் தழும்பு பெற்றவன். சூரபதுமனாதியர் சிறையடைத்த தேவர்களுடைய குறையை நீக்கிய சேனாதிபதி எனச் சிறப்பிக்கின்றார் குமரகுருபரர். இதனைப் பின்வரும் பாடல் வரிகளிற் கண்டு தெளியலாம்.

*"குரவு செச்சையொடு நறவு யிர்ப்பவிரி*
*தேனாறு வட்டெழு மார்பனைப் பேய்த்திறள்*
*குரவை யிட்டு அவுணர்தடி சுவைத்திட ஓர்*
*கூர்வேல் விடுத்த குமாரனைப் பார்ப்பதி*
*குமர னைச்சமரில் உருமுக கக்குளிறு*
*காலா யுதக்கொடி யாளனைக்................*
*...................................................... சாற்றிய*
*செழும றைப்பொருளின் உரைவி ரித்தும் எனும்*
*வேதா முடித்தலை மோதுகைக் காய்ப்பொடு*
*............................................................. பூட்டிய*
*சிறைவி டுத்தமார் குறைமு டித்துதவு*
*சேனாபதிப் பெருமாள்தனைக் காக்கவே"*

இமயமலையிற் பிறந்த உமையம்மை என்னும் இளம்பிடி பெற்றேடுத்த இளங்களிறு எனவும் இளமை பொருந்திய இடபம் எனவும் திருமாமனாகிய திருமாலுக்கென்று சிறப்புடன் விளங்கும் மணி எனவும் முக்கண்ணனாகிய சிவபெருமான் என்னும் கனியிடத்துத் தோன்றிய பழுத்த சுவை எனவும் சங்கத் தமிழின் தலைமைப் புலவன் எனவும் தாலாட்டுப் பருவத்தில் புகழப்படுவதை காணலாம். இதனைப் பின்வரும் பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

*"மால்இ மயத்து மடப்பிடி பெற்று*
*வளர்த்த இளங்களிறே*
*மழவிடை யேதிரு மாமடி கட்கென*
*வைத்த கவுத்துவமே*
*..............................................................*
*முக்கட் கனிகனியும் சுவையே தனி*
*சங்கத் தமிழின் தலைமைப் புலவா*
*தாலே தாலேலோ* **(26)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முருகப் பெருமான், மாணிக்கமெனத் திகழ்பவனாக அருளாகிய ஒளிக்கதிரை வீசும் இளஞ்சூரியனாக உண்மையாகிய அறிவினால் புலன்களை வென்றமைந்த உளமாகிய வீட்டினை விளங்கச் செய்யும் ஞான விளக்கின் ஒளியாக சித்தரிக்கப்படுகின்றான்.

*"உள்நெகிழ் தொண்டர் உளத்திருள் சிந்திட*
*ஒளிவிடு முழுமணியே*
..........................................................................
*விண்ணொடு மண்ணை விழுங்கி அருட்கதிர்*
*விரியும் இளஞ்சுடரே*
*மெய்ப்புலன் மேய்ந்து சமைந்ததோர் வீட்டை*
*விளக்கும் விளக்கொளியே"* **(28)**

என்னும் பாடலில் இதனைக் காணலாம்

முருகப் பெருமானின் நாவன்மை, வேல், கொடி ஆகியன வருமாறு சிறப்பிக்கப்படுகின்றன. இதனை 26ஆம் செய்யுளிற் காணலாம். "தோலாத முத்தமிழ் நாவா' என்பதில் வளர்கின்ற முத்தமிழிழை பயிற்றுவித்தவன் (அகத்தியனுக்கு) எனச் சிறப்பிக்கப்படுகின்றார். வேலைக் குறிப்பிடும்போது சூரபதுமனின் ஆணவத்தை வேருடன் அழித்த வேல் என்கிறார் புலவர். "ஒவாதே கூவும் காலாயுதக் கொடி வீரா" என்பதில் இடைவிடாமற் கூவுகின்ற சேவற்கொடியையுடையவன் எனச் சிறப்பிக்கப்படுவதைக் காணலாம்.

நான் எனது என்று எண்ணுகின்றவர்களுக்கு அரிதானவனாக இருக்கும் முருகப்பெருமாள் (செய்யு : 30), உருகும் அன்பரது உள்ளத்தில் அருள் வெள்ளம் பெருகத் ததும்பும் அருட்கடலாக விளங்குகின்றமையைக் குறிப்பிடுகின்றார் புலவர் (செய்யுள் : 90), அத்துடன் பருவமழை போன்று கைம்மாறு கருதாது வழங்கும் வள்ளலாகவும் (செய்யுள் : 49) அறியாமை இருளகற்றும் சூரியனாகவும் தொன்மையான வேதங்கட்கெல்லாம் ஒப்பற்ற முதல்வனாகவும் (செய்யுள் : 90), சிறப்பிக்கப்படுகின்றான்.

*"அறிவுள் அறிவை அறியும் அவரும்*
*அறிய அரிய பிரமமே"* **(59)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் அறிவுக்கு அறிவாயிருப்பதை அறிகின்ற ஞானிகளும் அறிவதற்கு அரிதான ஞானபிரம்மாகப் பாட்டுடைத்தலைவன் சிறப்பிக்கப்படுவதைக் காணலாம். அவனது சாயல், அழகு, முதலானவற்றைச் சொல்லில் வடிக்க முடியாதெனவும் தன் ஆற்றாமையைப் புலவர் வருமாறு வெளிப்படுத்துகின்றார். 'இயலும் நடையும் வடிவம் அழகும் எழுத அரியன்' (செய்யுள் : 60) என்னும் வரிகள் இதனை உணர்த்துகின்றன.

## திருத்தலச் சிறப்பு

கந்தபுரி, வேளூர், சடாயுபுரம், பரிதிபுரம், வேதபுரி எனப் பலவாறு சிறப்பிக்கப்பெறும் இத்திருத்தலம் இயற்கை வளமும் தெய்வ கடாட்சமும் நிரம்பப்பெற்றதென்பதைப் பல்வேறு பாடல்களில் குமரகுருபரர் எடுத்தியம்பியுள்ளார். அப் பாடல்கள் அவரது கவித்துவச் சிறப்பினையும் கற்பனையாற்றலையும் வெளிப்படுத்துவனவாயும் அமைவது குறிப்பிடத் தக்கதாகும். குமரகுருபரரின் கற்பனைத் திறத்தையும், கவித்துவச் சிறப்பையும் எடுத்துக் காட்டுவனவாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

*"பைங்காற் கமுகு செம்பழுக்காய்ப்*
*பவளம் உதிர்ப்பக் கதிர்ச்செந்நெல்*
*பனிமுத் துகுக்கும் சோணாட்டின்"* **(5)**

என்பதில் சோழ நாட்டின் வளம் சிறப்பிக்கப்படுகின்றது. அங்கு கமுக மரங்கள் பழுத்த காய்களாகிய பவளங்களை உதிர்க்கின்றன: செந்நெற் கதிர்கள் குளிர்ந்த முத்துக்களைச் சிந்துகின்றன: இங்கு உருவக அணி பயன்படுத்தப்பட்டிருப்பதனையும் காணலாம். அடுத்து வரும் பாடலின் பின்வரும் வரிகளும் புலவரின் கவி நயத்திற்குச் சான்றாய் அமைவன.

*"பால்நாறு செந்நெற் பசுங்கதிர் கறித்துமென்*
*பைங்குவளை வாய்குதட்டும்*
*பணைமருப்பு எருமைமடு மடிமடை திறந்ததீம்*
*பாலாறு பங்கயச்செந்தேன்ஆறு டன்*
*கடவுள் வான் ஆறு எனப் பெருகும்"* **(6)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்பிடித்த செந்நெல்லின் இளங்கதிர்களைக் கடித்து, மென்மையான குவளை மலர்களை மெல்லும், பருத்த கொம்பினையுடைய எருமைகள் தமது காற் சுவடுகளாகிய மடுக்களின் மடை திறந்ததனால் உண்டாகிய இனியபால் ஆறானது தாமரை மலர்களிலிருந்து பிறக்கும் செந்தேன் ஆற்றுடன் கலந்து தெய்வத் தன்மையுள்ள ஆகாய கங்கை போலப் பெருகுகின்றன.

முத்துக்குமரன் வாழும் கந்தபுரியின் சிறப்பினை இவ்வாறு பாடுகின்றார் புலவர்:.

*"மழலை வண்டுதட மலர்கு டைந்துபுது*
*மதுஅ ருந்தி நறு மல்லிகைச் சேக்கையின்*
*வடிப சுந்தமிழின் இசைபயின்றபெடை*
*யொடுது யின்று நெடு வைகறைப் போய்ச்செழு*
*மலர்இ லஞ்சிதொறும் உலவு கந்தபுரி" (3)*

அதாவது சோலைதோறும் இளவண்டுகள் தடாக மலர்களிலுள்ள புதிய தேனையுண்டு மல்லிகை மலர்களாலாகிய படுக்கையில் இனிய பசுந்ததமிழின் இசையைப் பழகின பெண்வண்டுகளோடு உறங்கியும் இனிய செவ்வழிப் பண்ணினை வீணை வாசித்தலை நன்கு பழகின பாணர்களும் மயங்கும்படி பாடியும் வைகறைப் பொழுதில் எழுந்து சென்று செழித்த மலர்களையுடைய குளங்களில் உலவுகின்றதுமான கந்தபுரி என்பதே அதன் பொருளாகும்.

*"காலை இளங்கதி ருக்கு எதிர்முதிரும்*
*கதிர்செம் பவளமுடன்*
*கதிர்முத் திட்டுவ ணங்கக் கன்னல்கொல்*
*கமுகுகொல் என வளரும்*
*சாலி வயல்தமிழ் வேளூர் (26)*

என்பதில் வயலின் செழுமை கூறப்படுகின்றது. காலையில் தோன்றும் இளஞ்சூரியனுக்கு எதிராகத் தோன்றுகின்ற முதிர்ந்த நெற்கதிர்களாகிய செம்பவளங்கள் என உருவகித்தும் கரும்போ கமுகோ எனக் கண்டவர் வியப்புறும் வண்ணம் அவை வளர்ந்திருப்பதாகவும் சிறப்பிக்கப்படுவதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தலத்திலுள்ள மாளிகைகள் பசும்பொன்னினாற் செய்யப்பட்டவை: உயர்ந்த பளிங்கினாற் செய்யப்பட்ட நிலா முற்றத்தினை உடையவை; அவற்றின் உயர்ந்த சிகரத்தில் மரகதத்தின் ஒளி வீசுவதால் விண்ணுலகத்தில் வாழும் தெய்வ பசுக்கள் அவற்றை ஆகாய கங்கையின் கரையில் செழித்திருக்கும் பசும்புல் என நினைத்து தமது நாவால் அவற்றை வளைக்கின்றன. அத்தகைய சிறப்புடைய செல்வபுரி என வேளூர் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

"..................................................

*ஓங்கும் பளிங்கு நிலா முற்றத்து*
*உயர்சூளிகையின் மரகதத்தின்*
*ஒளிகால் வீசத் தெளிவிசும்பில்*
*பல்கும் சுரபி தரங்கநெடும்*
*பாகீ ரதியின் கரைக்கிளைத்த*
*பசும்புல் எனச்செந் நாவளைக்கும்*
*பைம்பொன் தலங்கள் பலகோடி*
*மல்கும் செல்வக் கந்தபுரி*" *(21)*

மருத நிலத்துப் பெண்கள் குரவைப் பாட்டுப் பாடுகின்ற சத்தத்தினால் மேகங்கள் ஓரிடத்திற் சேரத் துள்ளிக்குதிக்கின்ற வாளை மீன்கள், விண்ணகத்திலுள்ள ஈன்றணிமையுடைய செந்நிறப் பசுவின் மடியில் முட்டுகின்றன. தனது கன்று முட்டுவதாக எண்ணுதலால் பசுவின் பெரிய மடியாகிய மடை திறந்து ஒழுகும் பால், கற்பக மலர்களிலிருந்து வழியும் தேனுடன் கலந்து கால்வாய்களையும் ஏரிகளையும் நிறைக்கின்றன. அதனால் பயனுறும் நெல் வயல்கள் தெய்வ மணம் பெறுகின்றன (செய்யுள் : 46).

புராணச் செய்திகளையும் தன் பாடல்களினூடே குமரகுருபர் குறிப்பிட்டுச் செல்கின்றார். குறிப்பாக முருகப் பெருமானின் திருவிளையாடல்கள், அவரது திருமணம், சூரபதுமனை வெற்றி கொண்டமை, இராமன், இலக்குமணன், சடாயு, சம்பாதி போன்றோர் பற்றிய செய்திகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. சில உதாரணங்கள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"கைக்கு எட்டும் எட்டுக் களிற்றைப் பிடித்துஅக்
களிற்றோடு முட்டவிட்டுக்
ககனவட்டத்தினொடு பருதிவட் டத்தைவளை
திகரிவட் டத்திலிட்டு
முக்கண் திருத்தாதைக் கோதண்டம்.."* (13)

என வரும் பாடலில் கைக்கு எட்டுகின்ற அளவில் விளங்குகின்ற எட்டுத் திக்கு யானைகளைப் பிடித்த அவற்றினை மோத விட்டு பின் ஆகாய மண்டலம், சூரிய மண்டலம், உலகு ஆகியவற்றை வளைத்திருக்கின்ற சக்கரவாளமலை ஆகியவற்றில் இட்டமை, மேருமலையைத் தண்டாயுதமாக ஏந்தி வான்முகட்டையும் திரிகூட மலையையும் மோதியமை, மற்றும் சூரபதுமனைக் கொல்லும் பொருட்டு சேனாதிபதியாகச் சென்றமை ஆகியன குறிப்பிடப்படுகின்றன.

*"மீன்ஏறு குண்டுஅகழி தீவாய் மடுத்ததனி
வில்லியார்..."* (15)

என்பதில் சேதுபந்தன காலத்தில் கடலில் அணை கட்ட வருணன் உதவாததால் இராமபிரான் அக்கினியாஸ்திரத்தை ஏவிக் கடலினை வற்றச் செய்தமையும் பின்னர் வருணன் குறையிரக்க தம் செயலை விலக்கிக் கொண்டமையும் ஆகிய செய்திகளைப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் முருகப்பெருமானின் சிறப்புக்களைப் புகழ்ந்துரைப்பதனை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டதாயினும் முழு முதற் கடவுளான சிவபெருமானையும் மற்றும் உமையம்மை, தெய்வானை, வள்ளிநாயகி ஆகியோரின் சிறப்புக்களையும் பொருத்தமான இடங்களில் குமரகுருபரர் வெளிப்படுத்தியிருப்பதனையும் உணர முடியும். குமரனின் தந்தை என்ற நிலையில் வர்ணிக்கப்படும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சிவபெருமானின் புகழ் மேலோங்கி நிற்பதைக் காணலாம். செருக்குற்ற திருமால், பிரமன் ஆகியோரால் அடிமுடி காண்பதற்கு அரிதானவனாயினும் தன் திருவடிகளை சம்பாதி, சடாயு ஆகிய கழுகுப் பறவைகள் பார்த்துக் களிக்கச் செய்தவன் (செய்யுள் : 27) என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"சுருதிக்கும் எரிசுடர்ப் பருதிக்கும் இரவிகுல*
*தோன்றற்கும் இளவலுக்கும்*
*சம்பாதி யொடுநற் சடாயுவுக் கும்பெருந்*
*தவமுனிவர் எழுவருக்கும்*
*தண்ணளி சுரந்திட்ட தீராத வினைதீர்த்த*
*தம்பிரான்" (12)*

என்னும் பாடல் வரிகளிற் குறிப்பிட்டுள்ளார் புலவர்.

மேலும் சந்த விருத்தங்கள் அமைந்திருப்பது இந்நூலின் இன்னுமோர் சிறப்பாகவும் அமைகின்றது. பாட்டுடைத்தலைவனைக் காக்குமாறு சப்த மாதரை வேண்டும் பகுதியினை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

*"பயில்தரு முதுமறை நூலைத் தெரித்தவள்*
*பகைதெரி புரமெரி மூளச் சிரித்தவள்*
*பனிவரை பகநெடு வேலைப் பணித்தவள்*
*படுகடல் புகையெழ வார்வில் குனித்தவள்*
*எயிறுகொடு உழுதெழு பாரைப் பெயர்த்தவள்*
*எறிதரும் குலிசம் விடாமல் தரித்தவள்*
*இடுபலி கொளுமொர் கபாலக் கரத்தினள்"* (9)

இச்செய்யுளில் குறிப்பிடப்படும் சப்த மாதரும் வருமாறு:

தேவநூலை உணர்த்தியவள் – அபிராமி; திரிபுரங்களில் நெருப்பு மூண்டு எழும்படி நகைத்தவள் – மகேஸ்வரி; கிரவுஞ்சகிரி பிளவுபடும்படி நெடுவேலை ஏவியவள் – கௌமாரி: கடலில் புகை எழும்படி நெடிய வில்லை வளைத்தவள் – நாராயணி; தன்கொம்புகளினால் ஏழுலகங்களையும் பெயர்த்தவள் – வராகி; வச்சிராயுதப் படையைத் தரித்தவள் – இந்திராணி; கபாலத்தை ஏந்திய திருக்கரத்தினையுடையவள் – காளி.

முத்துக்குமரனை பாதாதிகேசமாகப் புலவர் வருணித்துள்ளமையைப் பின்வரும் செய்யுளிற் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"செம்பொன் அடிச்சிறு கிண்கிணி யோடு*
*சிலம்பு கலந்தாடத்*
*திருவரை அரைநாண் அரைமணி யொடும் ஒளி*
*திகழ்அரை வடமாடப்*
*பைம்பொன் அசும்பிய தொந்தியொ டும்சிறு*
*பண்டி சரிந்தாடப்*
*பட்ட நுதல் பொலி பொட்டொடு வட்டச்*
*சுட்டி பதிந்தாடப்*
*கம்பி விதம்பொதி குண்டல மும்குழை*
*காதும் அசைந்தாடக்*
*கட்டிய சூழியும் உச்சியும் முச்சிக்*
*கதிர்முத் தொடுமாட*
*அம்பவ ளத்திரு மேனியுமாடிட*
*ஆடுக செங்கீரை" **(16)***

அம்புலிப் பருவத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள்களில் தத்துவக் கருத்துக்களை அதிகம் காண முடிவதுடன் குமரகுருபரரின் புலமைத் திறனையும் உணர முடிகின்றது. சாம, பேத, தான, தண்ட முறைகளினை மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார் புலவர். எல்லா உலகங்களும் போற்றுதற்குரிய வடிவமாயுள்ளமை, ஆகாய கங்கையைத் தாங்கிய சிவபெருமானிடத்துத் தோன்றியமை, உயிர்கள் தழைக்க அருள் செய்கின்றமை ஆகிய பண்புகளால் முருகப்பெருமானை ஒத்திருப்பதால் அவனுடன் விளையாட வருமாறு அழைக்கின்றார் (செய்யுள் : 61). அடுத்துப் பேதம் கூறுகையில் கங்கையைத் திருமுடியில் தாங்கிய சிவபெருமானுக்கு நீ (அம்புலி) ஒரு கண்ணாக இருக்கின்றாய், ஆனால் குமரனோ அக் கண்ணின் மணியாக இருக்கின்றான். என்றும் வளர்வதும் தேய்வதும் உனக்குண்டு ஆனால் குமரனோ கலைகள் குறைவற அறிந்தவன் (செய்யுள் : 63) என்றும் குறிப்பிடுவதைக் காணலாம்.

இச்செய்யுளில் 'அடியவர் எவர்க்கும் இரவினை (அறியாமை என்னும் இருள்) ஒழித்தவன்', 'எவ்வுயிரும் வாழச் செய்தான்', 'புத்தி முத்தியும் அளித்தான்' என வருந் தொடர்கள் இறைவனின் அருளினை உணர்த்துகின்றன. அதே போல தான உத்தியைப் பயன்படுத்துகையில் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி சேர்ந்தவர்க்கு பிறவித் துன்பத்தினை நீக்குபவன் எனவும், அருவமாய் உருவமாய் அருவுருவமாய் மூன்று நிலைகளில் அடியவர்க்கு அருள் புரிவோனின் பாதக் கமலங்களைப் பற்றுவோர்க்கு தளையில்லையெனவும் குமரகுருபரர் சைவசித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்கின்றார்.

> *"சந்நிதி அடைந்தவர்கள் பையுள் நோய் முற்றும்*
> *தவிர்ந்து அகம்மகிழ்ந்து.......................................*
> *...........................................................................*
> *அரு வென்ன உருவென்ன அன்றென்ன நின்றவனொடு"* (85)

என்னும் வரிகள் இதனை உணர்த்துகின்றன

இவ்வாறு பிள்ளைத்தமிழ் இலக்கிய வரிசையில் பல்வேறு சிறப்புக்களை உடையதாய் விளங்கும் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் அது எழுந்த காலத்து இலக்கிய மற்றும் சமயப் போக்குகளை வெளிப்படுத்தும் பிரபந்தமாகவும் தமிழ் இலக்கிய வரலாற்றில் புகழ் பெறுகின்றது.

## அடிக்குறிப்புக்கள்:

1. அவர்கள் மானிடராகவோ அன்றேல் கடவுளராகவோ இருக்கலாம்
2. *"தோற்ற முதல்யாண் டீரெட்டளவும்*
   *ஆற்றல் சான்ற ஆண்பாற்குரிய"*
   *"காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்*
   *பூப்பு நிகழ்வனவும்"* –இந்திரகாளியம்
3. முதல் ஏழு பருவங்களும் இரு பாலாருக்கும் பொதுவானனை
4. கடவுள் காக்க என்று கூறியது பிள்ளைத்தமிழில் வரும் காப்புப்பருவத்தைக் குறிக்கின்றதெனவும் செங்கீரை முதலியன அதில் வரும் ஏனைய பருவங்கள் என்றும் சி. கணேசையர் உரைவிளக்கத்தில் கூறுவார்.
5. சௌந்தரப்பாண்டியன் : 1989: *தமிழில் பிள்ளைத்தமிழ் இலக்கியம்* : ஸ்டார் பிரசுரம் : சென்னை: பக். 5)
6. பன்னிருபாட்டியல் : இனவியல் : 23, 24
7. பாணி என்பது கைகளைக் குறிக்கும் எனவே 'சப்' என்னும் ஒலி உண்டாகும்படி கைகளைத் தட்டுவது சப்பாணி ஆயிற்றென்பர்.
8. இது வாரானைப் பருவம் எனவும் அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்:

1. கிருட்டிணமூர்த்தி. சா, ச. சிவகாமி, சிராஜ் உன்னிசா நாசர், லா. ஆ, உமாமஹேஸ்வரி, அபிதா சபாபதி (ப–ர்): 2005: **தமிழக்கிய வகைமையியல் 2:** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் : சென்னை.

2. குமரகுருபர் : **முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்:** பதிப்பு : 2003. வெளியீடு : சிட்டு நூலகம், தி. நகர்: சென்னை.

3. சௌந்தரபாண்டியன். எல் : 1989 : ***தமிழில் பிள்ளைத்தமிழ் இலக்கியம்*** ஸ்டார் பிரசுரம் : சென்னை.

4. **தொல்காப்பியம் : பொருளதிகாரம் : முதற்பாகம் :** முன் ஐந்து இயல்கள் : நச்சினார்க்கியம் : (உரைவிளக்கம் சி. கணேசையர்) :1948 : திருமகள் அச்சகம் : சுன்னாகம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர நாயக்கர்காலச் சிற்றிலக்கியங்களின் சார்பு நிலை

கலாநிதி வ. மகேஸ்வரன்

தமிழ் இலக்கியச் சூழலில் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்ற பதங்கள் இடைக் காலத்திற் பெரிதும் பேசப்பட்டன. இப்பெயர்கள் அவற்றின் தகுதிநிலை பற்றியதன்று. அவற்றின் அளவுநிலை பற்றியே அமைந்தன எனலாம். எனினும் அவற்றுள் ஒரு விதமான தராதரநிலையும் இருந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. பேரிலக்கியங்கள் பல்துறைப் பண்புகளின் சங்கமாக விளங்க, சிற்றிலக்கியங்கள் ஒருதுறை குறித்தனவும் சுருங்கிய தன்மை கொண்டனவுமாக விளங்குகின்றன. குறிப்பாக உலா என்ற சிற்றிலக்கியம் பேரிலக்கியங்களில் ஒரு கூறாக விளங்கி வந்ததைக் குறிப்பிடலாம். எனினும் சிற்றிலக்கியங்கள் என அடையாளப் படுத்தப்பட்ட பலவற்றுள் பரணி, உலா, பிள்ளைத்தமிழ் முதலிய வடிவங்கள் பெற்ற முக்கியத்துவத்தையும், பிரபலத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும்போது அவை தம்மளவில் தனித்துவ அடையாளங் கொண்ட இலக்கியங்களாக விளக்கியுள்ளன என்பதை மறுக்கவியலாது.

தமிழ் இலக்கிய வரலாற்றுச் சூழலில் இலக்கியங்கள் ஆரம்பகாலத்தில் சிறு வடிவினவாகவே தோற்றம் பெற்றன அல்லது உதிரி வடிவங்களாகவே அவை வெளிவந்தன. சங்க இலக்கியங்களில் தொகை நூல்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். எனினும் இவ்வாறான உதிரி இலக்கியங்கள் விரிவாக்கம் பெற்றபோது அவை பாட்டு நூல்களாயின. பாட்டு நூல்களை சிற்றிலக்கியங்கள் என்ற வரையறைக்குட்படுத்த முடியும். இதுபோலவே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் சிலவும் சிற்றிலக்கியம் என்ற வரையறைக்கு உட்படுத்தக் கூடியனவே. பல்லவர் காலப் பக்தி இலக்கியகாரர்களான நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் இந்தப் பண்பாடு பெருவளர்ச்சி பெற்றது. மேலும் அக்காலத்தில் எழுந்த நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம், திருக்கைலாய ஞானஉலா என்பவை இவ்வாறான இலக்கியங்களின் வளர்ச்சிப் போக்கைச் சுட்டி நின்றன. பெரியாழ்வாரின் பெரிய திருமொழி பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முதற் நிலையைச் சுட்டியது. இவ்வாறு படிப்படியாக இலக்கியமும் அதன் பாடு பொருளும், அளவும் விஸ்தாரம் பெற்றுவந்த சூழலிலேதான் பேரிலக்கியம் என்ற கருத்துநிலை சார்ந்த இலக்கியங்களின் பிரவேசம் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தேறியது.

சோழர் காலத்து பேரரசு காலச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் பேரிலக்கியம் என்ற பெருங்கதையாடலைச் சிருஷ்டித்தன. பேரிலக்கியம் என்பது வாழ்வின் ஒரு கூறை மட்டும் குறிப்பிடாது வாழ்வின் சகல கூறுகளையும் குறிப்பிட்டது. அதாவது வாழ்வின் முழுமையையும் அது கூற விழைந்தது. இதன் பயனாக அதுவரை நிலவி வந்த சிற்றிலக்கியச் செல்நெறிகள் யாவும் உள்வாங்கப்பட்டு அவை பேரிலக்கியங்களின் உப கூறுகளாயின. பெருங்கதையாடல் என்ற பெருவட்டமான பொதுமைக்குள் உப பண்பாட்டுக் கூறுகள்யாவும் உள்வாங்கப்பட்டு பொதுப்பண்பாடாக மாற்றம் பெற்றன. இது காலத்தின் தேவையாக இருந்தது. அக்கால அரசியல் பண்பாட்டு நிலைகள் அவ்வாறான இலக்கியத் தோற்றப்பாட்டைக் கட்டமைத்தன. எனினும் சோழர் காலத்து இறுதிப்பகுதியில் பொதுப்பண்பாடு கட்டுடைந்து சிறுபண்பாட்டுக் கூறுகள் தலையெடுக்கத் தொடங்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் கால இறுதிப்பகுதியின் சிற்றிலக்கியத் தோற்றப்பாடுகளின் தொடர்ச்சியை விஜயநகர நாயக்கர் காலத்தில் அவதானிக்கலாம். இக்காலகட்டத்தில் எழுந்ததாகப் பல்வேறு சிற்றிலக்கிய வடிவங்கள் குறிப்பிடப்படுகின்றன. பேராசிரியர் செல்வநாயகம் முதல் மு. அருணாசலம் வரை இவற்றைப் பட்டியற்படுத்தித் தந்துள்ளனர். மேலாகச் சென்னைப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஏட்டுச் சுவடிகளில் இருந்த பல சிற்றிலக்கிய வடிவங்களையும், அச்சில் கொண்டுவந்துள்ளது. மடல் திரட்டு, அந்தாதிக் கொத்து, கலம்பகக் கொத்து, பிரபந்தமரபியல் எனப் பல்வேறு தொகுதிகளாக அவை வெளிவந்துள்ளன. மேலும் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரது சிற்றிலக்கியச் சொற்பொழிவு வரிசைகளும், அவற்றின் வெளியீடுகளும் அக்காலத்தே நிலவிய சிற்றிலக்கியச் சூழலை விரிவாகச் சுட்டி நிற்கின்றன. இவ்வாறான அளவுக்கதிகமான சிற்றிலக்கியங்களின் தோற்றப்பாடுகளுக்கு இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் அரசியல் மாற்றங்களையும், சமயச்சார்பு நிலையையும், பழைமை போற்றுதல் என்ற பண்பையும் தத்துவச்சார்பு என்ற பொதுமைப் பண்பையும் குறிப்பிடுவர்.[3] இந்த வரையறைகள் மட்டும் இவ்வாறான இலக்கியத் தோற்றப்பாடுகளுக்குப் போதுமானவையா? என்ற வினாவினை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை அக்கால (விஜயநகர நாயக்கர்) இலக்கியங்களின் சார்புத் தன்மைபற்றி நோக்குகின்றது.

மேற்குறித்த வினாவிற்கான விடைதேடும் முயற்சியில் முதலில் நோக்க வேண்டிய அம்சம் அக்கால அரசியல் நிலைப்பாடாகும். தமிழகத்தில் சோழரது ஆட்சி அஸ்தமித்த பின்பு இரண்டாம் பாண்டியப் பேரரசின் எழுச்சி, அதன் பின் மதுரையில் சுல்தான்களின் ஆட்சி எனப் பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்த பின்பே விசயநகரப் பேரரசின் ஆட்சி தமிழகத்தில் நிலவியது. துங்கபத்திரை நதிக்கரையில் ஹம்பி என்ற இடத்தில் உருவான விஜயநகரப் பேரரசின் தமிழக ஆட்சியதிகாரம் மகாமண்டல ஈஸ்வரர்கள் என்று பட்டமளிக்கப்பட்ட அரசியல் அதிகாரிகளிடமே தங்கியிருந்தது. இவர்களுக்குக் கீழே நாயக்கர் என்போர் ஆட்சி அதிகாரிகளாக இருந்தனர். இந்த நாயக்கர்களது ஆட்சி, அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்கள் 'நாயக்கஸ்தானங்கள்' எனப்பட்டன. இவை 'அமர நாயன் கார' என்றும் அழைக்கப்பட்டன. பண்டாரவாடை, அமரம், மான்யம், இனாம் என்ற வகையில் கிராமங்கள் அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நாயக்கஸ்தானங்கள் அக்காலத்தில் 400 இற்கும் மேற்பட்டவை இருந்தன என்று காரசீமா குறிப்பிடுகின்றார்.[4] அக்காலத்தில் தமிழகத்துக்கு யாத்திரை வந்த நானிஸ் என்பவரும் இதுபற்றிக் குறிப்பிடுகின்றார்.[5] இந்த நாயக்கத் தானங்களை நிலமானிய சமூக அமைப்பின் நிலையங்களாக / நிலைகளாக (Feudatary vessals) கிருஷ்ணசாமி குறிப்பிடுகின்றார்.[6] இந்த நாயக்கஸ்தான அமைப்பு முறை பிரபுத்துவப் பண்பு கொண்டு காணப்பட்டது என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.[7] இந்த அமைப்பு முறை இரு பிரதானமான பக்க விளைவுகளைத் தமிழகத்தில் ஏற்படுத்தியது.

தமிழகத்தில் காணியாளராக இருந்த பலர் காணியற்றவர்களாக மாற வேண்டிய சூழலை ஏற்படுத்தியது. வேளாண் மக்களிடமிருந்து வரிகள் அதிகமாக அறவிடப்பட்டன. பெருநிலங்கள் பண்ணை முறைக்கு மாறின. உழுகுடி மக்கள் நிலமற்ற விவசாயிகளாயினர். நிலப்பிரபுக்கள் காணியாளர்களாயினர். இவர்களுக்கு இடையே பண்ணைக்காரன் என்ற இடைத் தரகன் நுழைவு ஏற்பட்டது. இதனால் தமிழகமக்கள் ஆட்சியதிகாரத்தினின்றும் அந்நியப்பட்ட சூழல் ஒன்று உருவாகியது.

இந்த நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த கைலாசபதி இதனை ஜனநாயகமற்ற சூழல் எனக் குறிப்பிடுகின்றார்.

> சோழர்காலத்து ஜனநாயக முறையிலான ஊராட்சி முறைகள் அற்றுப் போய்விட்டன. சோழர் கால நிலமானிய அமைப்பில் மிகத் தாழ்ந்தவருக்குக் கூட சமுதாய – சமய – பொருளாதார உத்தரவாதம் இருந்தது. இது நாயக்கர் ஆட்சியில் தலைகீழ் ஆகியது. நாயக்கர், ஆயக்காரர், பாளையக்காரர் ஆதிக்கம் செலுத்தினர். முன்பின் தெரியாதவர்கள், ஊரவர்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள், வரி வசூலிப்பது ஒன்றையே பிரதானமான நோக்கமாகக் கொண்டவர்கள், தெலுங்கு மொழி பேசுபவர்கள் ஆகியோர் ஆட்சிக்கு வந்ததும் பழைய ஊராட்சி மன்றங்களில் குடி கொண்டிருந்த புராதன ஜனநாயகப் பண்பு மறைந்தது. ஒற்றுமையுணர்வு குன்றி மோசமான பொருளுறவுகள் தலைதூக்கின. நிலமானிய அமைப்பின் கேடு கெட்ட அம்சங்கள் அத்தனையும் இக்காலப் பகுதியில் வெளித்தோன்றின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்திந்தியாவிற்கும் பொருத்தமான இம்மாற்றம் தென்னிந்தியாவிலே துலக்கமாகத் தெரிந்தது.[8]

சோழர் காலத்து நிலமானிய அமைப்புப் பற்றிய கைலாசபதியின் கூற்றுக்களை முழுமையாக ஆதரித்து ஏற்றுக்கொள்ள முடியாது போயினும் விஜயநகர நாயக்கர் காலம் தொடர்பான கூற்றுக்கள் உண்மையானவை. நாயக்கஸ்தானங்களின் செயற்பாடுகளையும் பாளையப்பட்டுக்களின் செயற்பாடுகளையும் கல்வெட்டுச் சான்றுகளுடன் ஆராயப்புகும் ஒருவர் இவ்வாறான இடைவெளிகளை மிகத் துலாம்பரமாகக் கண்டு கொள்வர்.

இவ்வாறான ஒரு தேக்கநிலையிலேதான் முன்குறித்த சிற்றிலக்கியங்களும் தோன்றின. இவற்றை ஒரு தேக்க நிலைச் சமூகத்தின் வெளிப்பாடாக இனங்காணும் கேசவன், இவற்றின் தோற்றப்பாடு பற்றிக் குறிப்பிடும் போது இவற்றைக் கலாசார ஏமாற்று என்று குறிப்பிடுவது நுனித்து நோக்கத்தக்கது.[9] இரட்டைப் புலவர்கள், காளமேகப்புலவர் ஆகியோரது பாடல்களை நுனித்து நோக்குவோர் இலக்கியத் தேக்கநிலையின் யதார்த்தத்தை உணர்வர்.

தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் சமயச்சார்பு என்பதும் இவ்விடத்தில் நோக்குவது அவசியமானது. சோழ, பாண்டியப் பேரரசுகளின் சமயப் பின்புலமும் வளர்ச்சியும் யாவரும் அறிந்ததொன்று. அவற்றை அடுத்த காலத்தில் அதன் வீழ்ச்சியும் யாவரும் அறிந்ததொன்று. கோயில் ஒழுகு, மதுராவிஜயம் முதலிய ஆவணங்கள் இந்துமதம் அடைந்த கீழ்நிலையை நிரல்பட விபரிக்கின்றன. இந்துமத மீள் எழுச்சியின் தூல வடிவமாகவே விசயநகரப் பேரரசு கட்டமைக்கப்பட்டது. அதன் தமிழகம் தழுவிய வியாபகம் இந்து அரசு என்ற கருத்தியலூடாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தப் பின்புலத்தில் நோக்கும் போது இந்து சமய மீள் எழுச்சி, ஆலயங்களின் மீள் கட்டுமானம், அவற்றின் பெருமைகளின் மீட்டெழுப்பு என்ற வகையில் இக்காலத்து எழுந்த சமயச் சார்புடைய சிற்றிலக்கியங்களைக் கட்டமைக்க முடியும்.

அக்காலத்தில் கோயில் பெற்ற முக்கியத்துவத்துக்கு இன்னோர் காரணமும் உண்டு. வடக்கே சுல்தான்களின் ஆட்சி நிலவிய காரணத்தினால் இந்து இராச்சியமான விஜயநகரப் பேரரசின் ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப் பரப்பிலுள்ள தக்கணமே இந்து சேத்திரங்களின் முதன்மை ஸ்தானமாக விளங்கியது. வடநாட்டிற்குத் தலயாத்திரை செல்ல முடியாத சூழலில் தக்கணக் கோயில்களுக்கு யாத்திரை மேற்கொண்டனர். இதனால் இக்கோயில் பிராந்தியங்கள் நகரமயமாயின.[10] சைவ, வைணவத் தலங்களுடன் முருகத் தலங்களும் பிரசித்தமாயின. அதாவது தமிழகப் பிராந்தியங்களிலுள்ள பாடல் பெற்ற தலங்களும், மங்களா சாசனம் பெற்ற தலங்களும், ஊர்த்தலங்கள் பிறவும் முதன்மை பெறத் தொடங்கின. தமிழகத்தின் உபபண்பாட்டுக் கூறுகள் வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற கட்டமைப்பின் வழி, தமிழகத்துக் கோயில்கள் பலவற்றின் மீது தலபுராணங்களும், வேறு பிரபந்தங்களும் பாடப்பட்டன. கிராமியத் தெய்வ வழிபாடு மீள் எழுச்சி பெற்றது. முருக வழிபாடு மிகுந்த உத்வேகத்தோடு மீட்டெடுக்கப்பட்டது. பெண் தெய்வ வழிபாடும், குலதெய்வ வழிபாடுகளும் தோற்றங்கொண்டன. இவ்வாறானதொரு சமயஞ்சார் சூழலிலே கோயிற்புராணங்களும், கோயிற் பிரபந்தங்களும் எழுவது தவிர்க்க முடியாததொன்றாகும். எனவே அவற்றின் சார்பு சமயமாக இருந்ததில் வியப்பில்லை.

இனி இச் சிற்றிலக்கியங்களின் பொதுமக்கட் சார்பு நிலை பற்றியும் நோக்குவது அவசியமானதாகும். தமிழ் இலக்கியப் பாடுபொருளில் உள் ஈர்க்கப்படாத அடிநிலை மக்கள் (பொதுமக்கள்?) இக்காலத்து இலக்கியங்களில் பரவலாக இடம் பெறுகின்றனர். அடிநிலைமக்கள், அவர்களது வாழ்க்கை, தொழில், மொழி என்பன இவற்றிலே பதியப்பட்டுள்ளன. எனவே இவை பொதுமக்கட் சார்புடையனவாகவும் இருந்தன என்று பொதுவில் வாதிடுவோர் உண்டு. அடிநிலை மக்களான பள்ளள் குறவர், இடைச்சியர், வலைச்சியர், பரத்தையர் எனப் பலதரப்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களும் பாடுபொருளாக உள்வாங்கப் பட்டமையும், அவர்களது பலதரப்பட்ட உற்பத்தி முறைகளும், தொழில் முறைகளும், வாழ்வு முறைகளும் விபரிக்கப்பட்டமையும், உதாரணமாக வித்துவகை, மாடுகளின் பெயர்கள், புழக்கத்திலுள்ள உபகரணங்களின் பெயர்கள், விவசாய, பறவைக்கு கண்ணிவைக்கும் தொழில் முறைகள் மேலாக அவர்களுடைய வாழ்வியற் கோலங்கள் – குடும்ப உறவுகள், குடும்ப சண்டை சச்சரவுகள், என்பன அவர்களது பண்பாட்டுக் கோலங்களுடன், பெரும்பாலும் அவர்களது மொழியால் பேசப்பட்டது என்பதனால் அவற்றைப் பொதுமக்கள் சார்புடையது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாய் பாடாகக் குறிப்பிடுவது மரபாயிற்று. எனினும் இவற்றை நுனிந்துநோக்குவோர் பின்வரும் அம்சங்களையும் அறிந்து கொள்ளலாம்.

* குறிப்பிட்ட சில சிற்றிலக்கியங்கள் நேராகவே மேல்நிலையாக்கம் பெற்ற கடவுளர்/ கோயில்கள் பற்றி விஸ்தாரமாகப் பேசுகின்றன.

* சில சிற்றிலக்கியங்களில் கிராமியக் கடவுளர் பேசப்படுகின்றனரே எனினும், அக்கடவுளர்கள் தன்மை உறைநிலையிலேயே பேணப்பட்டதை அவதானிக்கலாம்.

* குறம், குறவஞ்சி முதலான இலக்கியங்கள் செவ்வியற் காதலின் நீட்சியாகவே காணப்படுகின்றன. குறத்தி/சிங்கி, சிங்கன் ஆகியோர் தேவை கருதிய இடைச் செருகல்களாகவே சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

இனி – இவ்வாறான அம்சங்சங்களுக்குப் புறம்பாக சித்திரிக்கப்பட்ட பாத்திரங்களின் பண்புகளும் கேலிக்கிடமாகவே உள்ளன. பள்ளு இலக்கியம் சித்திரிக்கும் குடும்பன் காமுகனாகவும், ஏமாற்றுக் காரனாகவும், பலதார மணமுள்ளவனாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளான். பள்ளிகளின் சக்களத்திச் சண்டைகள் விஸ்தாரமாக இடம்பெறுகின்றன. சிங்கனும் சிங்கியும் அநாகரிகமாக ஏசி உரையாடுகிறார்கள். பரத்தைப் பெண்கள் நோய் காவிகளாகவும் காசு பறிப்போராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

> கலம்பகம், பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்கள் எளிய மக்களைப் பாடுவது போன்ற தோற்றமளிப்பினும் அவர்களைப் பெருமைப்படுத்துவனவாக இல்லை. இறைவனைப் பெருமையாகப் பேசும் நிலையில் இவை எளிய மக்களின் காதல் உணர்வுகளையும் தொழில் முயற்சிகளையும் நகைப்புக்கு இடமாகச் சித்திரிக்கின்றன... பள்ளு நூலில் வேளாண் கூலியின் மதுப்பழக்கம், சக்களத்தியர் ஏசிக் கொள்ளுதல்... குறவஞ்சியில் மேட்டுக்குடியினரின் காதல் ஒரு வகையாகவும் எளிய குடியினரின் காதல், பிரிவுத்துன்பம் இன்னொரு வகையாகவும் காட்டப்பெறுகின்றன.[11]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கூற்று இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது. இவ்வாறான சித்திரிப்புக்களை நோக்கும்போது இவை பொதுமக்களை இலக்கியத்துள் இழுத்து அவர்களையும் மனிதர்களாகக் கருதிய செயற்பாடா? அல்லது அவர்களை அவர்கள் நடத்தைகள் சார்ந்து கீழ்மைப்படுத்தும் மேட்டுக்குடி மனோபாவத்தின் வெளிப்பாடா? என்று சந்தேகம் கொள்ளச் செய்கின்றது.

மேலாக இவ்வாறான இலக்கியங்களில் குறிப்பாக பள்ளு இலக்கியத்தில் ஆண்டான் அடிமைச் சமூகச் சித்திரிப்பும் அவர்களுக்கு இடையேயான உறவு நியாயப்படுத்தப்படுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. ஆண்டான் குடும்பனைத் விலங்கிற் போடுவதும், அவனைச் சாட்டையால் அடிப்பதும், அடிப்பட்ட குடும்பனே 'அடியாத மாடு படியாது' என்று மேலாதிக்கத்தின் அராஜகத்துக்கு வக்காலத்துவாங்குவதுமாக – மேட்டுக்குடிகளின் அதிகாரத் தனங்களை நியாயப்பாடுத்தும் தன்மையில் அமைந்ததுமாக அச்சித்திரிப்புகள் காணப்படுவதால் பொதுமக்கட் சார்பு என்பதன் கருத்து வடிவத்தையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் அவை அமைந்திருப்பதனை அவதானிக்கலாம். பிரபுத்துவ கலாசாரம் பொதுமக்களை எந்தவகையில் மதிப்பீடு செய்து வைத்திருக்கின்றது என்பது இதனாற் புலப்படும்.

மேற்குறித்த கருத்தாடல்களின்வழி அக்காலத்து எழுந்த சிற்றிலக்கியங்கள் தனித்துவமான அடையாளங்களைக் கொண்டிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

* பெருங்கதையாடல்களுள் உள்வாங்கப்பட்டு சுவடுகள் அழிந்துபோன உப பண்பாட்டு மரபுகளை மீட்டெடுத்து வெளிச்சம் போட்டுக் காட்டியமை.

* பிராந்தியங்களும் அவற்றின் வாழ்வியலும் நுண்மையான முறையில் வெளிக் கொணரப்பட்டமை.

* பிராந்தியங்களின் பலதரப்பட்ட மாந்தர்களும் அவர் தம் பண்பாடுகளும் இலக்கியப் பாடு பொருளாக அமைந்தமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிறப்பு அம்சங்களுக்குப் புறம்பாக அவற்றின் சார்புத்தன்மை பெரும்பாலும் சமயம் சார்ந்ததாகவே இருந்தது. ஆயின் இந்தச் சமயச் சார்புத்தன்மையின் அடிப்படையாக அமைந்தது பிரபுத்துவ கலாசாரத்தின் மேலாதிக்கமே எனலாம். அதிகாரவர்க்கமான பிரபுத்துவ ஆட்சி முறை தமது இருப்புக்கு ஏதுவாகச் சமயத்தைச் சார்ந்தே நிற்கும். அந்தச் சமயத்தின் வழி அல்லது அதன் ஆதரவுடன் தனக்கேற்றவாறான சமூகச் செயற்பாட்டையும், இலக்கியச் செயற்பாட்டையும் நிர்ணயிக்கும் என்பதற்கு விஜய நகர நாயக்கர் கால இலக்கியங்கள் சிறந்த உதாரணங்களாகும்.

## அடிக்குறிப்புகள்

1. மகேஸ்வரன். வ. (2008) 'சோழர் காலச் சிற்றிலக்கியங்களும் அவற்றின் பின்புலமும்', **சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும்.** இந்து கலாசார திணைக்களம். கொழும்பு–ப.
2. செல்வநாயகம். வி. (2003) மீள் அச்சு, **தமிழ் இலக்கியவரலாறு,** குமரன் புத்தக இல்லம், சென்னை, கொழும்பு. பக் 118–120.
3. மேலது – ப. 110
4. Karashima Noboru (1992) **towards a new formation - South Indian Society under Vijayanagar Rule,** Oxford university Press Madras. PP 35-38
5. Vide - Krishnaswamy ( ) **Tamil Nadu under Vijayanagar Rule.** Annamali University. Annamali. PP. 176-195
6. Ibid P. 178
7. Karashima Noburu OP Cit . P. 129
8. கைலாசபதி க. (1970) **அடியும் முடியும்,** பாரி நிலையம் சென்னை. பக். 307–310
9. கேசவன். கோ. (1981) **பள்ளு இலக்கியம். ஒரு சமூகவியல் பார்வை,** அன்னம், சிவகங்கை. பக் 53–54
10. பத்மநாதன் சி. (1982) **தமிழ்ப்புராணங்கள்** இந்து தர்மம். பேராதனைப் பல்கலைக்கழகம். பக் 01–02.
11. பாலசுப்பிரமணியம். கு. வே. (2006) சிற்றிலக்கியங்கள் காட்டும் பண்பாடு. **உலகத் தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்.** சென்னை. ப–321–22.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாலாயிரத் திவ்விய பிரபந்த வியாக்கியானங்களின் மொழிநடை - மணிப்பிரவாளம் -

கலாநிதி சுபதினி ரமேஷ்

I

நீண்ட நெடிய வரலாறு உடைய தமிழிலக்கிய பாரம்பரியத்தில் விஜயநகர காலத்தில் எழுந்த இலக்கியங்கள் சமயம், தத்துவம் சார்ந்தவையாகவும், பழமை போற்றும் பண்புகளைக் கொண்டவை யாகவும் விளங்குகின்றன. சோழர்கால இலக்கியங்களையும், நாயக்கர்கால இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராயும் போது அக்காலப் புலவர்களின் பாடல்கள் கவித்துவச்சிறப்பு உடையனவாக அமைவதற்கு ஆட்சிச்சிறப்பு ஒரு காரணமாக இருந்தது எனலாம். நாயக்கர் காலத்து இலக்கியங்கள் கல்வி அறிவுடையோர் மட்டுமே ஆய்ந்து கற்கும் பண்புடையதாகக் காணப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியின் இலக்கிய கூறுகளில் பக்தி இலக்கியங்கள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். தமிழ்மொழி பக்தி இலக்கிய வகையில் உலக இலக்கியங்களிடையே உயர்ந்த இடம் பெற்றிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பக்தி இயக்க காலத்திய சைவ சமயாசாரியர்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றியிராவிட்டால் தமிழ்மொழியின் சிறப்பு உலகமெலாம் பரவ வாய்ப்புண்டாகியிருக்காது. மிகப்பழங்காலம் முதலே தமிழர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கடவுளை உரியவர் ஆக்கி வழிபட்டார்கள். சைவர் தொழும் முருகன் குறிஞ்சிக் கடவுளாகவும் வைணவர் வணங்கும் திருமால் முல்லை முதல்வனாகவும் விளங்கினார்கள். இலக்கிய உலகத்தில் இவ்விரண்டு சமயச்சார்புள்ள தமிழ்நூல்களைப் போன்று சமய நூல்கள் தோன்றவில்லை. தோன்றிய சிலவும் விளக்கம் பெறவில்லை.

ஆழ்வார்களும், சைவசமயசாரியர்களும் தாம் வாழ்ந்த காலத்தில், தங்களது வாழ்க்கையின் மூலமாகவும் அருளிய உபதேசங்களின் மூலமாகவும் மக்களை நல்வழிப்படுத்தினார்கள். வைணவ ஆழ்வார்கள் பாடிய திருப்பாடல்களைத் தமிழ்மக்கள் தமிழ் வேதம் எனப் பாராட்டுகிறார்கள். வேதங்களைப் போலவே ஆழ்வார்களின் பாடல்களும் திருக்கோயில்களில் ஓதப்பட்டு வருகின்றன ஆழ்வார்கள் என்னும் சொல்லுக்குப் பூர்வாசிரியர்கள் 'எம்பெருமானுடைய மங்கள குணங்களில் ஆழங்கால்படுபவர்கள்' என்று கூறியருளினார்கள். இன்னொருவகையில் ஆழ்வார் என்ற சொல் வைணவ சமயத்தோடு தொடர்புடைய திருமாலைப்பற்றிப் பாடிப்பரவிய பன்னிரு அடியார்களைக் குறிக்கின்றது. சென்னைத் தமிழ்பேரகராதி 'ஆழ்' என்னும் வினையடியாகப் பிறந்த ஆழ்வார் என்னும் சொல்லுக்கு "பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்" என்று பொருள் தருகின்றது.

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர் என வழங்கப்படுகின்றனர். இவர்கள் அருளிய பிரபந்தங்களும், திருவரங்கத்து அமுதனார் அருளிய இராமானுச நூற்றந்தாதியும், அடங்கியதாக ஸ்ரீ நாலாயிரத் திவ்விய பிரபந்தம் அமைகிறது. இப்பிரபந்தங்களை அவதார முறைப்படி அமைக்காமல், பிரபந்தங்களின் சீர்மையை ஒட்டித் திருப்பல்லாண்டு முதலாக, இராமானுச நூற்றந்தாதி ஈறாக முறைப்படுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழ்நிலையில் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றி பதினாலாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வாழ்ந்த வேதாந்த தேசிகர் வைணவ சமயத்தில் ஒரு பெரும் பிரிவாகி வடகலை வைணவத்தை வளர்த்து வந்த பெருமை வாய்ந்தவர். இவர் செய்த வைணவநூல்கள் தென்மொழி நூல்கள் என மிகப்பல. இதே காலத்தில் பிள்ளைலோகாசாரியார் மூலமும் அவர் தம்பி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் மூலமும் பின்னர் அப்பரம்பரையில் உதித்த மணவாளமாமுனிகள் மூலமும் வளர்ந்த வைணவ சம்பிரதாயம் தென்கலைச் சம்பிரதாயம் என்று பெயர் பெறுவதாயிற்று. வைணவ சம்பிரதாய நூல்கள் 12 ஆசாரியர்களே தமிழில் வடமொழியை அதிகமாகக் கலந்து நூல் செய்தார்கள். மணிப்பிரவாள நடை என்ற இரு மொழிக்கலப்பான நடை இக்காலத்தில் மிகவும் அதிகமாக ஆட்சியிலிருந்தது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் நூலாசிரியர்களுக்குச் சமமாக உரையாசிரியர்கள் இடம்பெற்றுள்ளனர். ஒரு நூலுக்கு குறிப்புரை தோன்றிய பின் காலம் செல்லச் செல்ல அந்நூலைப் பற்றிய கருத்துக்கள் வளர்ந்தன. குறிப்புரை மெல்ல மெல்ல விரிவடைந்து விளக்கவுரை ஆயிற்று. உரை இவ்வாறு ஒரு நூலுக்குச் சிறிய அளவில் தோன்றிய குறிப்புரை காலப்போக்கில் விளக்கவுரை ஆயிற்று. இத்தகைய வளர்ச்சியைத் தெளிவாக எடுத்துக்காட்டும் சிறந்த சான்றுகளாக நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி உரைகள் வழங்குகின்றன. திருவாய்மொழிக்கு முதல் உரையாக 6000 படி தோன்றியது. அவ்வுரை பின்னர் 9000 படி ஆயிற்று. பின்னர் 24000 படி ஆயிற்று. பிறகு 36000 படியாக வளர்ந்தது. இத்தகைய வளர்ச்சி நிலையை எல்லா உரைகளின் வரலாற்றிலும் தெளிவாகக் காண முடிகின்றது. இவற்றுள் நம்மாழ்வார் பாடியுள்ள திருவாய்மொழிக்கு பலர் உரை வகுத்துள்ளனர் அவ்வாறு அதனைக் காத்தருளிய உரைகாரர்தம் பெருமையினைப் பின்வரும் வெண்பா வெளிப்படுத்துகின்றது.

*"பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை*
*தெள்ளார் வடக்குத் திருவீதிப்–பிள்ளை*
*மணவாளயோகி திருவாய்மொழியைக் காத்த*
*குணவாளர் என்று நெஞ்சே கூறு"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளான் ஆறாயிரப்படியையும், நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியையும், வாதிகேசரி அழகிய மணவாளசீயர் பன்னீராயிரப்படியையும், பெரிய வாச்சான்பிள்ளை இருபத்துநாலாயிரப்படியையும், வடக்குத்திருவீதிப்பிள்ளை முப்பத்தாறாயிரப்படியையும் இயற்றினர். ஆண்டாள் பாடியுள்ள திருப்பாவைக்கு அவர் வகுத்துள்ள வியாக்கியானம் மூவாயிரப்படி என்று குறிப்பிடப்பெறும்.

## II

சங்க காலந்தொடக்கம் வடமொழியாளரும் பாகத மொழியாளருமாகிய பிராமணர், சமணர், பௌத்தர் என்போர் தமிழ் நாட்டிற் குடியேறித் தமிழ் மக்களோடு கூடி வாழ்ந்து வந்திருக்கின்றனர். வெவ்வேறாய் பலதிறப்பட்ட மொழிவழக்குகளை பேசும் மக்கள் வாழும்போது, ஒரு மொழியில் கையாளப்படும் சொல், வேறொரு மொழியிற் சென்று கலத்தல் இயற்கையாகும். வடமொழி பேச்சு வழக்கற்ற மொழியாதலின், தமிழ்ச் சொற்கள் அம்மொழியிற் பெருந்தொகைச் சென்று கலத்தல் சாத்தியமற்றதாகி விட்டது. பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டில் வடமொழி சிறப்பாகப் பாராட்டப்பட்டு வந்தது. இதற்கு காரணமாக அக்கால அரசர்கள் வடமொழியையும், வடமொழியாளர்களையும் போற்றி வந்தமையை முதன்மையாகக் குறிப்பிடலாம். எனவேதான் தமிழ்மொழியோடு வடமொழிச் சொற்களையும், சொற்றொடர்களையும் கலந்து எழுதும் மரபு அக்காலத்தில் ஆரம்பமாயிற்று. இதற்குச் சான்றுகளாக அக்காலத்து சாசனங்களையும், அப்போது எழுந்த தேவாரம் முதலிய பக்திப்பாடல்களிலும் வடமொழிச் சொற்கள் தமிழ்நடைப்பாங்கிற்கு இயைந்த உருவத்தில் அமைக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். இதிலிருந்து விருத்தியடைந்ததே மணிப்பிரவாள நடையாகும். இங்ஙனம் சிறிது சிறிதாக வடமொழிச்சொற்கள் தமிழ்மொழியோடு கலக்கத்தொடங்கியதன் விளைவாகத் தமிழில் மணிப்பிரவாளநடை உண்டாயிற்று.

ஸ்ரீபுராணம் முதலிய நூல்கள் எழுந்த காலம் தொடக்கமாக உரையாசிரியர்கள் காலம் ஈறாக மணிப்பிரவாள நடை தமிழ் நாட்டில் நிலவிற்று எனத் தெரிகின்றது. அந்நடையினை ஆரம்பித்து வைத்தவர்கள் சமணர்களெனினும் அதனைப் பிற்காலத்தில் வளர்த்து வந்தவர்கள் வைணவர்கள் என்பதற்கு அவர்கள் நாலாயிரப் பிரபந்தத்திற்கு எழுதியுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாக்கியான உரைகள் சான்றாக விளங்குகின்றன. நாலாயிரப் பிரபந்தத்தைத் தேடிப்பெற்று வகுத்தவர் நாதமுனிகள் என்பர். அவருக்குப்பின் வைணவப் பெருந்தலைவராக விளங்கிய இராமானுசர் 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். அவர் காலத்திற்குப் பின் வைணவ ஆசாரிய பரம்பரையில் வந்த திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவர் திருவாய்மொழிக்கு மணிப்பிரவாளநடையில் ஆயிரப்படி என்னும் உரையொன்றை வகுத்தார். அவருக்குப் பின் நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை ஆகியோர் முறையே ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்னும் உரைகளை மணிப்பிரவாள நடையிலே வகுத்தனர். அவர்கள் வாழ்ந்த காலம் 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகள் எனக் கூறப்படுகின்றது. திருவாய்மொழிக்கு மட்டுமின்றி, நாலாயிரப் பிரபந்தத்திலுள்ள ஏனைய பிரபந்தங்கள் சிலவற்றிற்கும் அந்நடையில் அக்காலத்தில் உரைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வுரைகள் தவிர வைணவ ஆசாரியர்களுடைய வரலாற்றைக் கூறும் குரும்பரம்பரைப் பிரபாவம் என்னும் நூலும் பின் அழகிய பெருமாள்சீயரால் அக்காலத்தில் மணிப்பிரவாள நடையில் இயற்றப்பட்டுள்ளது. அந்நடை மிகச்சிறப்பாகக் கையாளப்பட்ட காலத்தில் வடமொழி தமிழ்நாட்டிலே பலராலும் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை நாம் வில்லிபாரதம், திருப்புகழ் முதலியவற்றைக் கொண்டு அறியலாம்.

12ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இராமானுசர் நியமனத்தின் மேல் திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழி வியாக்கியானம் ஆறாயிரப்படி எழுதத் தொடங்கியது முதல், தமிழ் வசனத்தில் மணிப்பிரவாளநடை வழங்கத்தொடங்கிவிட்டது. வைணவரே அதிகமான மணிப்பிரவாள நூல் செய்தனர்; அநேக நூல் சமணர்கள் செய்துள்ளனர்; சைவர் செய்தது, ஒன்றே: 16 ஆம் நூற்றாண்டில் சிவாக்கிரயோகி செய்த சிவஞானசித்தியார் உரை ஒன்றுமே, இவ்வாறு விளைந்த தென்மொழி வடமொழி கலப்பை, இக்காலப்பகுதியில் பெருகக்காணலாம்.

வடமொழி (செய்யுளில்) விரவின் அது மணிப்பிரவாளமாம்; அதற்கு எதுகையில்லை என்பது வீரசோழியம் (180), சரித்திரக் கண்கொண்டு பார்க்கும் போது, இந்நூல் செய்யப்பெற்றது, வீரராசேந்திரசோழன் காலம் (கி. பி. 1063–1076) இவருக்கு முந்திய வைணவ ஆசாரியர் வடமொழியிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் செய்தார்கள். பின்னர்தான் இருமொழி கலந்த நடை மிகுதியாயிற்று. சமணர்கள் மணிப்பிரவாளநடை நூல் இக்காலத்துக்கு முன் செய்திருந்தால், அது இப்போது கிடைக்கவில்லை. ஆதலால், பேச்சு வழக்கில் அக்காலத்தே வழங்கிய இருமொழிக்கலப்பையும், சோழப்பேரரசருடைய கல்வெட்டுக்களில் வடமொழியும் தென்மொழியும் பயின்றிருப்பதையும் கருத்தில் கொண்டு, இருமொழிக்கலப்புக்கு வீரசோழியமுடையார் இவ்வாறு ஓர் அமைதி காட்டினாரோ என்று கருதும்படியுள்ளது.

இவ்வியாக்கியான ஆசிரியர்களுக்கிருந்த சிறப்பு இரண்டு; ஒன்று பகவானுடைய சமஸ்த கல்யாண குணங்களிலும், அவற்றை எடுத்துப் பேசுகின்ற ஆழ்வார் பிரபந்தங்களிலும், அளவின்றித் தோய்ந்திருத்தல், ஆகவே, பிரபந்தத்துள் ஒரு சொல்லை எடுத்தாலும் கூட, இவ்வளவு அநுபவமும் தோய்வும் அச்சொல் வழியே வெளிப்படுத்துகின்றது. வெளிப்படுவது அச்சொல்லின் பொருள் மாத்திரம் அல்ல; சகல அநுபவமும், மற்றது: வடமொழியில் அளவில்லாத பயிற்சி. அக்காலத்து வாழ்ந்த பிராமணர் அனைவருமே, வடமொழிதான் தங்களை நேரே பரமபதத்தில் கொண்டு போய்ச்சேர்க்கும் என்ற அடிப்படை நம்பிக்கை உள்ளவர்கள். காரணம் அவர்கள் தமிழ்ப்பற்றில் குறைவில்லை; மூல ஆசாரியரான இராமானுசர் தமிழில் ஒரு நூல் கூடசெய்ததில்லை; எல்லாம் வடமொழியில்தான் செய்தார். ஆகவே, வியாக்கியானம் செய்த ஆசாரியர்கள் தங்கள் குரு காட்டிய வழியில் சென்று, வடமொழியில் நூல் செய்தார்கள். புது நூல் செய்யாமல், தமிழ் நூலுக்கு உரை செய்யப் புகுந்தவர்கள் ஆதலால், தங்கள் சொல்லிய வடமொழியோடு கூட, கொஞ்சம் தமிழையும் கலந்துகொண்டார்கள்.

இராமானுசர் ஏன் வடமொழியில் நூல் செய்தார் என்பது கேள்வி, வடமொழி அதிகம் பயின்று அதிலே பெற்றிருந்த பாண்டித்தியமும், தாம் வடமொழிச்சாத்திரங்களையே உரை செய்ய எடுத்துக்கொண்டமையும் என்றுதான் இதற்கு விடை கூறவேண்டும்.

அன்றியும், அக்காலத்தில், தமிழ் மக்களிற்கு வடமொழியைக் காட்டினால் அது தேவபாஷை எனக்கருதி அதில் அதிகம் ஈடுபடுவார்கள். சைவரை வைணவராக்க இதுவும் ஒரு நல்ல சாதனம் என்றும் அவர் கருதியிருக்கலாம். எப்படியும் மனித இயல்பு, எந்தக்காலத்திலுமே, புரியாததில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மயக்கம் கொள்ளுதல்; நல்ல தமிழிலே சொல்லிவிட்டால், சைவ மக்கள் நன்கு புரிந்து கொள்ளுவார்கள்; தங்கள் சமய தத்துவங்களை விட இவர் சொல்லுவதில் சிறப்பில்லை என்பது நன்கு விளங்கிவிடும்; நன்கு புரிந்து கொள்ளாத வடமொழியில் சொன்னால் மயங்கிவிடுவார்கள் என்பதே இதன் கருத்து, எப்படியோ, இந்த வடமொழி மோகம் வைணவ வியாக்கியானக்காரர்களிடம் நிலைத்துவிட்டது. இதன் விளைவே மணிப்பிரவாளம் இவ்வியாக்கியானங்களை நாம் பயிலும் போது, மொழியை மறந்து, பொருளில் தோய்ந்தோமானால், மிகவும் சிறப்பான தெய்வ அநுபவத்தை பெறுவது உறுதி என அருணாசலம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (1970:245).

III

திவ்விய பிரபந்தம் நாலாயிரத்திற்கும் சிறப்பான வியாக்கியானம் எழுதி அதன் பெருமையாலும், சிறப்பாலும் "வியாக்கியான சக்கரவர்த்தி" என்று புகழ் பெற்றவர் பெரியவாச்சான்பிள்ளையவர்கள் இவர் பகவானையும் பிரபஞ்சத்தையும் ஆன்மாவையும் இவர்களுக்குள்ள தொடர்பையும் பற்றிப் பேசும் பொழுது பெரிதும் வடசொற்றொடர்களைக் கொண்டு எழுதுகிறார். ஆனால் இயற்கை வருணனை போன்றவை கூறுமிடங்களில், தம்மை மறந்து இனிதாகத் தமிழ்ச் சொற்களாலேயே விளக்கமும் கதைகளும் சொல்லிக்கொண்டு போகிறார். பகவத் விஷயத்தைச் சொல்லும் போதுதான் தமிழ்மொழி இவருக்கு போதாததாகி வடமொழியை அதிகமாகக் கையாளுகிறார். இம்மணிப்பிரவாள நடைகளைப் பயிலும் போது தமிழ் வளம் பெறுகின்றது என்பதில் கருத்து வேற்றுமை இருக்கவியலாது பல புதிய சொல்லாட்சிகள், சொற்பொருள்கள், அழகிய தொடர்கள், உவமைகள், பழமொழிகள், வரலாறுகள், மரபுகள், விளக்கங்கள் எல்லாம் அளவின்றிக் கிடைக்கின்றன. வடமொழிக்கலப்பிருக்கிறதே என்று மருண்டால் இத்தனையையும் இழக்க வேண்டியிருக்கிறது. (அருணாசலம் மு, 1970 ; 275)

வைணவத்தின் இரு உட்பிரிவுகளில் வடகலையார் வடமொழி நூல்களாகிய பிரம்மசூத்திரம், பகவத்கீதை முதலியவற்றிக்கு முதன்மை கொடுப்பது போல, தென்கலையார் திவ்விய பிரபந்தத்திற்கு முதன்மை தருகின்றனர் என சுப்புரெட்டியர் தனது வைணவ இலக்கியம் என்னும் நூலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார். எனவே பெரியவாச்சான்பிள்ளையும் தென்கலை வழியையே பின்பற்றியுள்ளாரென்பது இதிலிருந்து புலனாகின்றது. மேலும் பேராசிரியர் ஜெகதீசன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். "He (Preavachan Pillai) has the unique reputation of having commented upon all the four thousand hymns of the Alwars. He was a master of the mani pravala style. His commentary largely follows Nanjiyar's and draw liberally on the Ramayana for the philosophical interpretations" (History of Sri Vaishnavism in the Tamil country; 100)

பெரியவாச்சான் பிள்ளையவர்களின் வியாக்கியானத்தில் உள்ள சிறப்புக்களைக் குறிப்பிடும் போது, இங்கு வடமொழிச் சுலோகங்களும், புராண மரபுச் செய்திகளும் நிறைந்து விளங்க காணலாம். திவ்விய பிரபந்தவுரைகள், சாதாரணமாகத் தமிழில் காணப்பெறும் இலக்கிய உரைகள் போன்றவை அல்ல என சுப்பிரமணிய ஐயர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். வைணவசமயத்தின் சொரூபம், சம்பிரதாயங்கள், விஷ்ணுவின் அவதார மாண்புகள், விசிஷ்டாத்வைதத்தின் தத்துவ நுட்பங்கள் ஆகியவை எல்லாம் வேதங்கள், உபநிடங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளிலிருந்து எடுக்கப்பெற்ற ஏராளமான மேற்கோள்களோடு, விளக்கப்பட்டிருப்பது மட்டுமன்றிப் பாடல்களின் உள்கருத்தென்றும், தத்துவார்த்தம் என்றும், பல அரிய விஷயங்களை நுண்ணிய அறிவுப்பாங்குடன் உரையாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். மேலே குறிப்பிடப்பெற்றவை தமிழும், வடமொழியும் கலந்து விளங்கும் நடையினவாக விளங்கினாலும் பக்திப்பாடல்களில் பொருளாழத்தையும், பலவகை நயங்களையும் விளக்குவதில் நிகரற்றவனவாக விளங்குகின்றன.

பிரபந்த வியாக்கியானங்களில் நடைச்சிறப்புக்களைப் பார்க்கும் போது பெரும் காப்பியங்களுக்கு எழுதப்பட்ட உரைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நடைத்தன்மை (Unique style) கொண்டவையாகக் காணப்படுகின்றன. இங்கு அஃதென்னென்னில், என்கிறபடி தோற்றும்படி என்கை, இன்றிருகே, அன்றிக்கே போன்ற பல அரிய சொல்லமைப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வமைப்புக்களுக்கு வடமொழி நூற்பகுதிகளையும் ஆழ்வார்களின் பாடல் அடிகளையும் சான்று காட்டிச்செல்லும் பாங்கினைக் காணலாம். அதுமட்டுமின்றி நல்லதமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையினையும் ஆங்காங்கே சிறுசிறு உரைப்பகுதிகளில் காணக்கூடியதாக இருக்கிறது. மேலும், மிக நீண்ட தொடர்களை எழுதுவது இவரின் இயல்பாகும். இருப்பினும் ஆங்காங்கே சின்னஞ்சிறு தொடர்களும் அவருடைய பேருரையில் பயின்று வராமல் இருப்பதில்லை.

"இக்குலத்துக்கு மங்கள தீபமானவளே, பெண் பிறந்தார்க்கெல்லாம் த்ருஷ்டியான விளக்கே என்னவுமாம்" (திருப் பெரிய பக் 231)

வைணவ சமுதாயத்திற் பயின்று வழங்கும் பல சொல்லாட்சிகள் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களில் காணக்கூடியதாக உள்ளது. வேறு இலக்கிய உரைகளிலே காணவியலாத புதிய சொல்லாட்சிகள் இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதாவது இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள இடைச்சொற்கள் புதியனவாகக் காணப்படுகின்றன.

**இறே, ஆய்த்து**

"பன்னிருதிங்கள் கொண்டவிறே" (திருப் பெரிய பக் 343)

"திருவுலகளந்தருளிய சர்வேச்வரனைக் கண்ட அநுகூலர் பட்டது படாநிற்கு மாய்த்து இவை" (திருப் பெரிய. பக். 65)

இறே (அன்றோ), ஆய்த்து (ஆயிற்று) என்னும் பொருளில் இவை கையாளப்பட்டிருக்கலாம் இவற்றைவிட 'அங்குத்தை' 'இங்குத்தை' போன்ற சொற்களை அவர் அவ்விடத்து, இவ்விடத்து என்னும் பொருளிலும் அவர்களோட்டை, இவர்களோட்டை என்ற சொற்களை அவர்களுடைய இவர்களுடைய என்ற பொருளிலும், அத்தை, இத்தை, எத்தை என்பவற்றை அதனை, இதனை, எதனை என்ற பொருளிலும் வழங்கியிருக்கின்றார். இவற்றைவிட அதுக்கு, இதுக்கு போன்ற சொற்களை அதற்கு, இதற்கு என்ற சொற்களின் திரிபு வடிவங்களாகவும், வேண்டும் என்னும் வினைமுற்று வடிவத்தை வேணும் எனவும் இருந்தாற் போல என்ற தொடரை இருந்தாற்போல என்ற வடிவத்தின் திரிபாகவும் வழங்கப்பட்டமைக்கு சான்றுகள் பல காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணற்ற வடசொற்களை அதிகமாகக் கலந்து எழுதும் போக்கினை பெரியவாச்சான்பிள்ளையிடம் கண்டாலும் தனித்தமிழ்ச் சொற்களையும் அவர் கையாண்டுள்ளார் என்பதையும் திருப்பாவை உரையில் காணப்படும் எடுத்துக்காட்டுகள் உணர்த்துகின்றன. தலைஎடுத்தல், மேனாணிப்பு, தமப்பன், இட்டீடு, ஆழங்கால்பட்டு, தட்டில்லை, பொசியாதபடி எனப்பலவாறுள்ளன. (திருப். பெரிய. பக். 50, 90, 140, 132, 335........) மேலும் இவரது வியாக்கியானங்களில் புதிய சொல்லாட்சிகள் (அகம்படியார், படுக்கைப்பற்று, நீர்மை, சிலுக்கிடாதே........) போன்ற வகைகளையும், பெறுகை, போகை, என்கை, சொரிகை, கலக்குகை போன்ற பல சொற்களையும் அடிக்கடி பயன்படுத்துவதுடன் ஏன்? என்ன? என்னென்ன? போன்ற வினாச் சொல்வடிவங்களையும் அடிக்கடி பயன்படுத்துகின்றமையும் இங்கு நோக்கத்தக்கது. "வியாக்கியானங்கள் பேச்சு நடையில் அமைந்துள்ளன. கொச்சைமொழிகள் விரவியுள்ளன. இவற்றிலும் ஒருவகை அழகும் ஆற்றலும் வெளிப்படுகின்றன." என இவ்வுரைநடை குறித்து மு. வை. அரவிந்தன் அவர்கள் கருத்துரைக்கின்றார்.

பெரியவாச்சான்பிள்ளை திருப்பாவை மூவாயிரப்படி உரையில் விளக்கங் கருதியும், ஒப்பீடு கருதியும், வைணவ சமய ஈடுபாடு கருதியும், வடமொழிச் சுலோகங்களை முழுவதுமாகவோ, தொடராகவோ, மேற்கோள் காட்டி விளக்குகிறார். வட மொழிச் சொற்களை மட்டுமல்லாமல் வடமொழிப் பாடலடிகளையும் அவர் எடுத்துக்காட்டுவதன் மூலம் அவரின் வடமொழிப்பயிற்சி நன்கு வெளிப்படக்காணலாம். இதிலிருந்து வடமொழிச்செல்வாக்கு வைணவ மரபிலே எற்தளவிற்கு ஆழமாக வேரூன்றி இருக்கின்றது என்று உணர முடிகின்றது.

பெரியவாச்சான் பிள்ளையின் பேருரையினைப் படிக்கும் போது அவருக்கு மூல நூலாசிரியராகிய ஆண்டாள்பால் எவ்வளவு ஆழமான பற்று இருந்தது என்பது நன்கு புலனாகின்றது. அதன் விளைவுதான் அவரைத் திருப்பாவைக்கு மிக நீண்ட அவதாரிகை எழுதும் வண்ணம் தூண்டியது எனலாம். வான்மீகி இராமாயணம், மகாபாரதம், விஷ்ணுபுராணம், உபநிடதங்கள் போன்றவற்றிலிருந்தும், நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலிருந்தும் மூல நூலாசிரியரின் எண்ணங்களிற்கு வலுவூட்டும் தொடர்களையும், கருத்துக்களையும் பெரியவாச்சான் பிள்ளை எடுத்துக்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளார். இதிலிருந்து திருப்பாவையின் உயர்வைக் காட்டுவதே இவரின் நோக்கமாக அமைந்துள்ளது என்பது கண்கூடு.

மேலும் இவர் தம்முடைய மூவாயிரப்படி உரையில் சொற்பொருளை விளங்கும் போதும், ஒரு சொல்லுக்கு பல பொருளைக் குறிப்பிடும் போதும், அவதாரிகையினை உரைக்கும் போதும், உவமைகளைக் கூறிக் கருத்துரைக்கும் போதும் அவருடைய உரைத்திறன் நன்கு வெளிப்பட்டு நமக்கு வியப்பை ஏற்படுத்துகின்றது. இதிலிருந்து அவர் தம் உரையில் தாம் வாழ்ந்த காலத்துப் பண்பாட்டையும் இணைத்துச் சொல்லும் பாங்கினையும் காண முடிகின்றது.

## துணை நின்ற நூல்கள்:


1. அருணாசலம் . மு. (1970) **தமிழ் இலக்கிய வரலாறு** – பதின்மூன்றாம் நூற்றாண்டு, தி. பார்க்கர், சென்னை.
2. மோகன். இரா. இ. சொக்கலிங்கம். ந (2003) **உரைமரபுகள்** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
3. லட்சுமிநாராயணன். கே. சி. (2005) **வேதங்களை ஏற்றிப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்**, எல். கே. எம். பப்ளிகேசன், சென்னை.
4. செல்வநாயகம் வி. (1957) **தமிழ் உரைநடை வரலாறு**, கும்பகோணம்.
5. தாமோதரனார் .கு (1981) **திருவாய்மொழித்திறன்,** பாரிநிலையம், சென்னை.
6. **நாலாயிரத்திவ்விய பிரபந்தம்** பாகம் 1, பாகம் 2 (1984) தி. லிட்டில் பிளவர் கம்பனி சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர, நாயக்கர்கால இலக்கியங்களில் பெண்கள்

கலாநிதி செ. யோகராசா

## 1. விஜயநகர, நாயக்கர்கால சமூகநிலையில் முக்கிய இடம் பெற்றுள்ள பெண்கள்

### 1.1 தேவதாசிகள்:

பரத்தையர், பதியிலார், காமக்கிழத்தியர், கணிகையர், வரைவின் மகளிர் முதலான பல பெயர்களில் சங்ககாலம் தொடக்கம் படிப்படியாக முக்கிய இடம்பெற்று வந்துள்ள இவ்வகுப்பினர் சோழர் காலத்தில் நிறுவன ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற நிலையை எய்தியிருந்தனர்.[1] சோழர்காலத்தில் முக்கியமான நிறுவனமாகத் திகழ்ந்த கோயில்களுடன் தொடர்புபட்டுச் சமூகத்தின் நன்மதிப்புப் பெற்றிருந்த இவர்கள், அந்நிறுவனமுறை தளர்ச்சி காணத்தொடங்கிய இக்காலப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மைச் சமூகத்தினரது இழிவான பார்வைக்குட்பட்டனர். இவர்களது இக்கால வாழ்க்கை முறை பற்றி விரிவாக எடுத்துரைக்கின்ற இருநூல்கள் இக்காலப்பகுதியில் எழுந்துள்ளன. இவற்றுளொன்று **கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது.**[2] மற்றொன்று **பணம் விடு தூது.**[3]

கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது'வின் உள்ளடக்கம் பற்றி சுருக்கமான முறையில் இவ்வாறு எடுத்துக்காட்டலாம். பாட்டுடைத்தலைவன் புகழ்ச்சி – 'அவதானி' தன் வரலாறு கூறல் – மதுரைநகர் தாசி பற்றி ஞானியர் கூறுதல் – மதனாபிஷேகம் வளர்ந்த வர்ணனை – பருவக்குறி நிலைகண்டு மகிழல் – தாய்க்கிழவி போதித்தல் – தோழியர் பிரதாபம் – மதுராநகர் தாசி – மோகமுற்றவர் சீரழிந்தமை – ஆதி ஐயன் அவதியுற்றமை – சந்திப்பு – மயல் கொள்ளல் – தோழியின் சூழ்ச்சி – வனிதையின் வரவேற்பு – தாய்க்கிழவி தந்த வரவேற்பு – பள்ளியறைச் சிறப்பு – பள்ளியறைவரிசை – விடிந்த பின் மயக்கம் – மருந்து கலந்திடல் – திருவிழாக்காண அழைத்தல் – திரும்புகையில் செய்த மோசம் – கிழவி புலம்புதல் – கடன் தீர்த்த படலம் – கப்பல் கவிழ்ந்தது – மகனை ஏசுதல் – வம்பு வந்திடல் – ஏசிப்பேசுதல் – பஞ்சாயத்தார் பசப்புதல் – கிழவி சாட்டும் குற்றம் (பழையனூர் நீலி கதை கூறல்) – தீர்ப்பு – ஆதிஐயன் மதுரைவிட்டுப் புறப்படுதல் – வருந்துதல் – ஞானியர் தந்த தேறுதல்.

மேலுள்ள உள்ளடக்கப் பகுதிகளில் 'தீர்ப்பு' வரையிலான பகுதிவரை, மதனாபிஷேகம்' என்ற தாசியின் வாழ்க்கை முறை விரிவாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இங்கு சுருக்கம் கருதி தாய்க்கிழவி போதித்தமை பற்றிய ஒரு பகுதி மட்டும் எடுத்தாளப்படுகின்றது. அது வருமாறு: [4]

*''மானே என் கண்ணே! மயிலே! குயிலே! செந்*
*தேனே! மதனாபி ஷேகமே – மீன் ஈன்ற*
*குஞ்சுக்கு நீச்சும் கொடும்பாம்பின் குட்டிக்கு*
*நஞ்சும் கொடுத்தவரார் மங்கையே........*
*உன் புத்தி என்புத்திக் கோரிட்டி யாகிலும் என்*
*தன் புத்தியும் மகளே! சற்றே கேள் – ஒன்பதூர்க்*
*கொஞ்சு பரிநகுலன் கூளேந்த்ரன் பன்றி மலை*
*மஞ்சள் குமரியை மறவாதே – மஞ்சள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மணம் காட்டி, ஆள் பிடிக்கும் கோலம் – இணங்கிய பொன்*
*உத்தரியம் சற்றே ஒரு பால் தெரியவிட்டுக்*
*குத்துமுலைச் செம்பொற் குடங்காட்டி – முத்துநகை*
*காட்டிவகை காட்டி நடை காட்டி இடை காட்டி நயம்*
*காட்டி இளை யோர்க்கு ஆசை காட்டுவாய் – கோட்டு முலை*
*சாய்ந்தால் முகந்திரைத்தால் சல்லிக்காசு ஒன்று முனக்கு*
*ஈந்து ஆதரிப்பவரார்; ஏந்திழையே – ஆய்ந்த பஞ்சுப்*
*பெட்டிபோலே நரைத்த பெண்கள் கையில் என்ன வரும்!*
*சட்டி சுறண்டவரும் தையலே – கட்டழகின்*
*வாலிபத்தே தேட்டில் மனம் வைத்தால் பொன்*
*தகட்டால் வேலி இட்டுக் கட்டலாம் வீடு எல்லாம் – காலைப்*
*பிடிப்பார்! முழுப் புரட்டும் பேசி இலை கறி*
*மடிப்பார்! தருவார்! வருவார்! – படுக்கைவிதம்*
*காட்டுவேன் என்பர் அக் கள்ளவண்டர் தங்களை உள்*
*வீட்டில் அழையாதே மெல்லியலே – வீட்டில் வந்து*
*வாயில் புகட்டு மயல்பூட்டும்! – நீ ஒருத்தர்க்கு*
*ஆசை வைத்தால் பின்னொருத்தர் அண்டார்! உடன் ஒத்த*
*வேசையர்க்கெல்லாம் நகைப்பாம் மெல்லியலே – காசு பணம்*
*குப்பல் குப்பலாகக் குவித்தாலும் வாலிபத்தில்*
*வைப்பிருக்கச் சுற்று மனம் வையாதே – செப்பு*
*முலையைக் கசக்கிவிட்டு முட்டாள் சரசத்து*
*அலையவிடும் பேரை அழையாதே – சிலை நுதலாய்!*
*முன்பின் அறியார் முடிப்பாகப் பொன் எழுநூற்று*
*ஒன்பது தந்தாலும் மனம் ஒவ்வாதே ––––"*

'பணம் விடு தூது' நூலின் நோக்கம் தூதுப் பொருளான பணத்தின் முக்கியத்துவம் பற்றிப் பாடுவதாகும். எனினும், நமது கவனத்திற்குரிவை, இப்பிரபந்தத்திலே ஆங்காங்கே இடம் பெறும் "கணிகையர் வாழ்க்கை; கலவிக்கரண வருணனை" என்பன பற்றிய விடயங்களாம். கணிகையர் தாமே வலியச் சென்று தேடிவந்தார் நாடும் இன்பத்தை வழங்குவது பற்றி கவிஞர் பின்வருமாறு விவரிக்கின்றார்.[5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"------------------------------------------

------------- நாயகிமார்

*கூச்சமுமாய், சற்றே குணலையுமாய், கொஞ்சுதலைப்*

*பேச்சுமாய், போர்த்த பிடவையுமாய் – வாய்ச்சதொரு*

*பாடகமும் காலுமாய், பாக்கு ஒதுக்கும் கையில்*

*இட்ட சூடகமும் கொங்கை குலுக்குமாய் – ஆடகப்பொற்*

*கட்டிலின் கீழ் வந்து கவிழ்ந்து நிற்பதோ? களப*

*வட்ட முலை காட்டி மறைப்பதோ? – பெட்டிதனில்*

*வாடைப் பொடி எடுக்கும் மார்க்கம் போல் மெள்ளக்*

*கூடிக் கலந்திருந்து கொள்ளவதோ? – வேடிக்கை*

*பாக்குக் கொடுக்கும் அந்தப் பாசாங்கோ? – செம்பவள*

*வாய்க்குள்ளே புன் சிரிப்பின் மார்க்கமோ? – நோக்கமாய்ச்*

*சேலை ஒரு தட்டுடுக்கும் தீவிரமோ? பூங்குழலின்*

*மாலை குலைத்திடும் மாயமோ! – சாலம் என்ன சொல்லுவேன்!..............*"

எனினும், தொ. மு. சி. ரகுநாதன் குறிப்பிடுவதுபோல[6] "தந்தி விடு தூது ஆசிரியரைப் போல், இந்த விஷயத்தை உப்புச்சப்பற்றதாக ஆக்கிவிடாமலும், விறலி விடு தூது ஆசிரியர்களைப்போல் இந்த விஷயத்திலே மனமிழந்து நின்று அனமிதமாக பாடி வருணிக்காமலும், அளவோடும் நிதானத்தோடும் செய்திருக்கிறார் பணம் விடு தூது ஆசிரியர்."

தனிப்பாடல்கள் சிலவற்றிலும் தேவதாசிகள் இடம்பெற்றுள்ளனர். மேற்கூறிய இரு நூல்களிலும் இடம்பெற்றுள்ள தேவதாசிகள் பற்றிய விவரங்கள் தவிர வேறு விடயங்கள் சிலவும் அவற்றிற் காணப்படுகின்றன. தேவதாசியொருத்தி பாடுவது கேலிக்குள்ளாகின்றது.[7] புலவரிடம் கதைகேட்கும் ஆர்வமுள்ள தாசியர் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.[8] தேவதாசிகள் கோயில்களில் செய்த சிறுசிறு குற்றங்கள் பேசப்பட்டுள்ளன.[9] வசைக்கவிகளால் தண்டனைகள் பெற்ற – இறந்த – தாசிகள் பற்றி அறியமுடிகின்றது.[10] தாசியொருத்திக்கு 'பொட்டுக்கட்டிய' நிகழ்ச்சி பற்றிய தகவலும் இடம்பெறுகின்றது.[11]

ஈழத்தில் ஏறத்தாழ இக்காலப்பகுதியிலெழுந்த நூலான 'கண்ணகி வழக்குரை'யிலும் தேவதாசிகள் பற்றி பல விடயங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[13] கோவலன் மதுரைக்குச் சென்று சிலம்பு விற்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்படுகின்றபோது, மதுரை நகரத்துத் தேவதாசிகளும் அதனை வாங்கிக் கொள்ள ஆசைப்படுகின்றனர். அவர்களது ஒழுக்கமற்ற வாழ்க்கை காரணமாக, தான் அவர்களுக்கு விற்க முடியாதென்று பலபட விளக்கியுரைக்கும் கோவலன் கூற்றாகவுள்ள பல பாடல்களுளொன்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்டலாம். தேவதாசிகள் ஆடவர்களை மயக்குகின்ற மருந்தினைச் செய்யும் முறை பற்றி விளக்கும் அப்பாடல் பின்வருமாறு.[14]

*"பச்சோந்திப் பித்துங் கழுகின் நிணமும்*
*பசுங்குன்றி வேருடன் ஆனைப்பால் ஊட்டி*
*சிச்சிற்குருவி நிணத்தையும் கூட்டி*
*சொல்லையில் வாதயிர் தாமுங் கூட்டி*
*உச்சிப் பொழுதே சேர்ப்பித்து வைத்து*
*உள்ளிச் சரக்குடன் போயத்தில் மானும்*
*பிச்சிப் பித்த மருந்திடும் பெண்காள்*
*பெய்வளையீர் சிலம் பாகா நுமக்கே"*

இக்காலத்திலெழுந்த நீதி நூல்களுள் தேவதாசிகள் ஒழுக்கத்தை அதிகளவு கண்டிக்கின்ற நூலாக 'விவேகசிந்தாமணி' விளங்குகின்றது.[12] (இது பற்றி பின்னர் கூறப்படும்). அதே வேளையில் எமது கவனத்திற்குரிய சுவாரஸ்யமான ஒரிரு பாடல்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றுளொன்று பற்றி இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமானது.

"வேசி தன்தோழியை வினவுதல்" என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள பாடலின் ஈரடிகள், இவை:

*"என்னையே வுணர்வோர் ரெனக்குமோ ரின்ப நல்கிப்பொன்னையுங் கொடுத்துப் பாகப் போதினில் வீழ்வதேனோ" (ப – 15)*

அதற்கான விடை, அடுத்த பாடலில் இவ்வாறமைகின்றது.

*"செம்மையிலறஞ் செய்யாதார் திரவியஞ் சிதற வேண்டி நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகம் படைத்தவாறே"* (ப – 16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது (மேற்கூறிய ஈரடிகள் பொருள்) 'செவ்வையாகத் தருமஞ் செய்யாதவர்கள் பொருள்... சிதறுதலடையும் பொருட்டே தம்போன்ற வேசியரையும் கள்ளையும் சூதாடுதலையும் பிரமதேவன் படைத்திருக்கிறான்' என்ற விதத்திலான தோழியின் சிந்தனை எமது கவனத்தை ஈர்க்கிறது.

இக்காலப் புலவர்களுக்கும் தேவதாசிகளுக்குமிடையிலான உறவு பற்றியும் இவ்விடத்திற் குறிப்பிடவேண்டியுள்ளது. புலவர் தேவதாசிகளுக்கு கிடையிலான உறவு சுமுகமான நிலையிற் காணப்பட்டதாக ஊகிக்க முடிகின்றது. முற்குறிப்பிட்ட இரு தூதுக்களிலும் தாய்க்கிழவி தன் மகளுக்குத் தாசித் தொழிலின் சூட்சுமங்களைப் போதிக்கும் கட்டத்தில், தாசிக்கும் புலவருக்கும் இருக்க வேண்டிய உறவு முறைகள் பற்றி பேசுகிறாள்.

*"------------------ பாடிக்*
*கடுக்கன் அலைக்கும் கவிப்புலவர் வந்தால்*
*துடுக்காய் ஒரு வார்த்தை சொல்வார் கொடுக்க என்றால்*
*ஐந்து பணமும் வாங்கார்; அரைப்பணமே போது மென்பார்*
*சிந்தை அவர் மகிழச் செய்திடலும் – நந்தம்*
*இசைபாடுவார்! கூடாதென்றால் கொடிய*
*வசை பாடுவார்! கெடுமே வாழ்வு"*

என்று 'விறலி விடு தூது'ம்[15]

*"------------------ மானரசே*
*பொல்லாக் குணத்துப் புலவன்மார் வந்தக்கால்*
*எல்லாரையும்போல எண்ணாதே! – மெல்ல நயம்*
*பாடி, நிதம் பத்துப் பணம் வேண்டும் என்பார்; அந்தச்*
*சாடை அறிந்து தழுவி விடு"*

என்று சேதுபதி விறலிவிடு தூதும்[16] குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கன.

## 1.2 பள்ளியர் [உழத்தியர்] :

பள்ளியர் வாழ்க்கையை விரிவுபடப் பேசுகின்ற பள்ளு இலக்கியங்கள் முதன் முதலாக இக்காலப் பகுதியிலேயே தோற்றம் கொள்கின்றன. இத்தகைய இலக்கியங்களின் சிறப்புப் பற்றி நா. வானமாலை ஓரிடத்தில் இவ்வாறு கூறுவார்;[17]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உழவர்களது வாழ்க்கை அனுபவங்களில் ஒன்றிப்போன கவிஞர்கள் தமிழ் மக்களின் சிறந்த பண்புகளை உழைக்கும் சேரி மக்களிடம் கண்டார்கள். உழைக்கும் பள்ளனைக் காவியத் தலைவனாக்கி, உழைக்கும் பள்ளியரைக் காவியத் தலைவியாக்கி, பண்ணையாரை இராவணனாகவும் இரணியனாகவும் ஆக்கிக் கேலி செய்து, பிரபந்தம் செய்தார். இக்கருப்பொருளைக் கொண்ட பாட்டே பள்ளுப் பாட்டு"

மேற்குறித்த பள்ளுப்பாட்டு ஆகிய பள்ளுப் பிரபந்தங்களிலே பொதுவாக பின்வரும் பகுதிகள் பள்ளியர் பற்றி விவரிப்பனவாகவுள்ளன:

"மூத்த பள்ளி, இளைய பள்ளி, குடும்பன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, .இளையவளை அவன் உரப்பல்... மூத்த பள்ளி முறையீடு... மூத்த பள்ளி அடிசிற் கொடுவரல், அவளோடு கூறல், அவள் அவளை மன்னித்தல் கேட்க வேண்டல், அவள் மறுத்தல்... பள்ளிகள் புலம்பல்... நெல் அளத்தல், மூத்த பள்ளி முறையீடு, பள்ளிகள் ஏசல்.."

மேற்கூறியவற்றுள் இரு எடுத்துக்காட்டுகள் இங்கு இடம்பெறு கின்றன. பின்வருவது, மூத்த பள்ளி பற்றிய வர்ணனை:[18]

*"நெற்றியிலிடும் மஞ்சனைப் பொட்டும்*
*மற்றொரு திருநாமப் பொட்டும்*
*நெகிழ்ந்த கடுங் கொண்டை ரெண்டாய்*
*வகிர்ந்த வகுப்பும்*
*பற்றிய கரும்பொற் காப்பும்*
*வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய*
*வாக்கும் ஒரு சுருளும் கொடுக்கால*
*நிக்கும் இதழும்.....*
*....பட்டாங்குமிலங்க*
*திரு முக்கூடற் பள்ளி தோன்றினாளே"*

பள்ளன் – பள்ளியர் காதல் வாழ்வுச் சித்தரிப்பு இது.[19]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குறுவையறு தாளடியையும் பள்ள*
*பரவி உழுத தடியையும்*
*குழப்பி பரம்பு தடவிக் காவிட*
*குழம்பிச் சம்பா நடச் செய்தே*
*மறுகி மறுகிச் சருவக் குடும்பன்*
*மச்சினி கூழைப் பிச்சியை*
*வாவென்றான் அவள் போவென்றாள் இவன்*
*மறித்தான் அவள் பின் பிரித்துப் போய்*
*தறுகி அருகங் கொடியிலே அடி*
*தட்டி விழுந்த மட்டிலே*
*தலையைத் தாங்குறாப் போலவே குத்து*
*முலையைத் தாங்குறான் பள்ளிரே*

## 1.3 குறத்தியர்

பள்ளுப் பிரபந்தங்கள் போன்றே இக்காலத்திலிருந்த குறவஞ்சி இலக்கியங்களிலே குறத்தியர் வாழ்க்கை இடம் பெறுகின்றது; குறத்தி வரவு '(குறவன்)' குறத்தியைக் காணுதல், குறத்தியின் அணி முதலியவற்றைக் கண்டு ஐயுற்று வினவுதல், குறத்தி பதிலுரைத்தல் முதலான பகுதிகளில் குறத்தி பற்றிய விபரிப்புக் காணப்படுகின்றது; சிங்கனும் சிங்கியும் உரையாடுகின்ற பகுதியின் ஆரம்பம் பின்வருமாறமைகிறது. [20]

*இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்*
*எங்கே நடந்தாய் நீ சிங்கி*
*கொத்தார் குழலார்க்கு வித்தார மாகக்*
*குறி சொல்லப் போனனடா சிங்கா*
*பார்க்கில் அதிசயந் தோணுது சொல்லப்*
*பயமா இருக்குதடி சிங்கி!*
*ஆர்க்கும் பயமில்லைத் தோணின காரியம்*
*அஞ்சமாற் சொல்லடா சிங்கா*
*காலுக்கு மேலே பெரிய வீரியன்*
*கடித்துக் கிடப்பானேன் சிங்கி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேலத்து நாட்டிற் குறி சொல்லிப் பெற்ற*
*சிலம்பு கிடக்குதடா சிங்கா!*
*சேலத்தார் இட்ட சிலம்புக்கு மேலே*
*திருகு முறு கென்னடி சிங்கி!*
*கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை*
*கொடுத்த வரிசையடா சிங்கா!*
*நீண்டு குறுகியும் நாங்கூழுப் போல*
*நெளிந்த நெளிவென்னடி சிங்கி!*
*பாண்டியனார் மகள் வேண்டும் குறிக்காகப்*
*பாடக மிட்டதடா சிங்கா!*
*..................................................................."*

## 1.4 ஏனைய பெண்கள்:

தனிப்பாடல்களுள் சில, தமது 'அலைவு உலைவு' வாழ்க்கையில் புலவர்கள் கண்டுகொண்ட பல்வேறு வாழ்க்கை நிலைப்பட்ட பெண்கள் சிலர் பற்றிய தகவல்களையும் பதிவு செய்துள்ளன.

குயவன் மனைவியின் செயல் பற்றி ஒரு பாடல் இவ்வாறு குறிப்பிடும்.[21]

*ஆண்டி குயவா அடா உன் பெண்டாட்டிதனைத்*
*தோண்டி ஒன்று கேட்டேன் துரத்தினாள் வேண்டியிரு*
*கைக்கரங் கேட்டேன் நான் காலதனைத் தூக்கியே*
*சக்கரத்தைக் காட்டினாள்தான்."*

மோர் விற்கும் பெண்கள் பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன.[22]

*"காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது*
*நீரென்று பேர்படைத்தாய் நெடுத்தரையில் வந்ததன்பின்*
*வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததன்பின்*
*மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பெண்கள் குறித்த பார்வைகள்

### 2.1 வெறுப்பு

சமயக் குறிக்கோள்களை எய்துவதற்கு பெண்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் பெண் இனத்தை வெறுக்கின்ற போக்கு முன்னைய கால இலக்கியங்களில் வெளிப்பட்டிருப்பினும் அதன் உச்சம் என்று கூறத்தக்க விதத்தில் அவ்வுணர்ச்சி இக்காலச் சித்தர்களது பாடல்களிலே முதன்மை இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த எடுத்துக்காட்டாக, பாம்பாட்டிச் சித்தரது பின்வரும் பாடல் அமைகிறது.[23]

*"வட்ட முலை யென்று மிக வற்றுந் தோலை*
*மகா மேரு என உவமை வைத்துக் கூறுவார்*
*கெட்ட நாற்றமுள்ள யோனிக் கேணியில் வீழ்ந்தாற்*
*கெடுவர் என்று துணிந்து ஆடுபாம்பே!"*

பலருமறிந்த, பட்டினத்தாரது பாடலொன்றும் இவ்வேளை எடுத்தாளத்தக்கது.

*"பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசம்*
*கண்ணால் வெருட்டி முலையால் மயக்கி கடிதடத்துப்*
*புண்ணாங் குழியிடைத் தள்ளி எனப் போகப்பொருள் பறிக்க*
*எண்ணா துனைமறந்தேன் இறைவா கச்சி ஏகம்பனே"*

பட்டினத்தார் போன்ற சித்தர்கள், அருணகிரிநாதர் போன்ற அடியார்களது பெண்களுடன் தொடர்புபட்ட இளமைக்கால வாழ்க்கை அனுபவங்களும் மேற்குறிப்பிட்டவாறு பெண் வெறுப்பு மிகுதியாக வெளிப்பட வழிவகுத்துள்ளன என்று கூறுவதிலும் தவறில்லை.

### 2.2 விரசம்

விரச உணர்வு இழையோடும்படியாக, பெண்கள் பற்றிய வர்ணனைகள் முற்பட்ட கால இலக்கியங்களில் ஆங்காங்கே வெளிப்பட்டு வந்துள்ளமை நாமறிந்ததே. அவ்வுணர்வு இக்கால இலக்கியங்களில் உச்ச நிலையை எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகவுள்ளன. இக்காலத்திலெழுந்த தனிப்பாடல்கள், புலவர்கள் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலேடைத்திறனை வெளிப்படுத்த பெண்களது உடலுறுப்புக்களையும் காமச் செயற்பாடுகளையும் பயன்படுத்துவது மனங்கொள்ளத்தக்கது

*கட்டித் தழுவுதலால் கால் சோர ஏறுதலால்*
*எட்டிப் பன்னாடை இழுத்தலால் – முட்டப்போய்*
*ஆசை வாய்க்கள்ளை அருந்துதலால் அப்பனையும்*
*வேசை எனலாமே விரைந்து.* (செ. 227)

உ+ம் : 2

*பாரத் தலைவிரிக்கும் பன்னாடை மேல் சுற்றும்*
*சோர இளநீர் சுமந்திருக்கும் – நேரே மேல்*
*ஏறி இறங்கவே இன்பமாம்; தென்னை மரம்*
*கூறும் கணிகை என்றே கொள்.* (செ. 112)

இக்காலத்திலேயே, வடமொழியில் கொக்கோக முனிவர் செய்த காமநூலான ரதி ரகசியம் என்ற நூலை வரதுங்கராமர் தமிழில் கொக்கோகம் என்ற பெயரில் மொழிபெயர்ப்புச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இந்நூல் அரசாங்கத்தால் தடைசெய்யப் பட்டிருந்ததாகவும் அறியமுடிகின்றது)

## 2.3 ஒழுக்கவியல்

சங்கமருவிய காலத்திற்குப் பின்னர் இக்காலத்திலேதான் நீதி நூல்கள் அதிகமெழுந்துள்ளன. விவேகசிந்தமாணி, தினகர வெண்பா, நீதிநெறி விளக்கம், ஔவை குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நீதிவெண்பா, நல்வழி என்றவாறு நீண்டு செல்லும் இப்பட்டியலிலடங்கும் நூல்கள் அனைத்தும் விஜயநகர நாயக்கர் கால சமூக, அரசியல் சூழலில் பெண்களது ஒழுக்கத்தை முதன்மைப்படுத்தி வற்புறுத்தவது வியப்பிற்குரிய தன்று.

இவ்வேளை மூன்று எடுத்துக்காட்டுக்களை மட்டும் குறிப்பிடலாம். நீதிவெண்பா பெண்களுக்குரிய இலக்கணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்*
*பொன்னின் அழகும் புவிப்பொறையும் – வன்னமுலை*
*வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்*
*பேசில் இவை யுடையாள் பெண்* (செ. 19)

'நல்வழி' பிறர்மனை நயவாமை பற்றி இவ்வாறு வற்புறுத்தும்:

*நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங் காலத்திற்*
*கொண்ட கருவளிக்கும் கொள்கை போல்*
*போதம் தனம் கல்வி யொன்றவரும் காலம் அயல்*
*மாதர் மேல் வையார் மனம்* (செ. 27)

உண்மை அன்பினை முதன்மைப்படுத்தும் தினகர வெண்பா:

*வாரொன்று கும்பமுலை மங்கை மனம் வேறானால்*
*சேர்வதங் கென்ன தினகரா – பார்தனிலே*
*உள்ளன்பி லாதாரை ஊடுதல் ஊன்கவர்ந்த*
*வெள்ளெலும்பை நாய்கவர்ந் தற்று* (செ. 31)

மேற்குறிப்பிட்ட நூல்களுள் தேவதாசிகளின் செயற்பாடுகளைக் கூடுதலாகக் கண்டிக்கின்ற அதிக பாடல்கள் கொண்ட நூலாக விவேக சிந்தாமணி காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

விவேகசிந்தாமணியின் கருத்து வெளிப்பாட்டு முறை தனித்துவமானது. பொதுவாக ஒவ்வொரு பாடலிலும் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிக்கருத்துக்கள் இடம்பெறும். அவற்றுளொன்று பெண்கள் பற்றியதாகவிருக்கும்.

உ+ம்

*நற்குணமுடைய வேந்தை நயந்து சேவித்தலொன்று*
*பொற்புடை மகளிரோடு பொருந்தியே வாழ்தலொன்று*
*பற்பலரோடு நன்னூல் பகர்ந்து வாசித்தலொன்று*
*சொற்பெறு மிவைகள் மூன்று மிம்மையிற் சொர்க்கந்தானே* (செ. 74)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி பழமொழிகள், கதைகள், உவமைகளைப் பயன்படுத்தியும் போதனைகள் கூறப்படுகின்றன.

எவ்வாறாயினும் நீதி நூல்களில், போதனைகள் நேரடியாக வெளிப்பட, இக்காலக் காவியங்கள் (உ+ம் : சீறாப்புராணம்), பிரபந்தங்கள் (உ+ம் : நைடதம்) முதலானவற்றில் கதை நிகழ்ச்சிகள், பாத்திரங்களின் செயற்பாடுகள், கிளைக்கதைகளூடாக அவை வெளிப்படுவது கவனத்திற்குரியது. பக்திப் பாடல்களில் (உ+ம் : திருப்புகழ்) தன் அனுபவச் சார்புடன் வெளிப்படுவதும் மனங்கொள்ளத்தக்கது.

மேற்கூறிய வெவ்வேறு வகை நூல்கள் அனைத்திற்கும் உதாரணம் தருவதை விரிவஞ்சித் தவிர்த்துக்கொண்டு சீறாப்புராணத்தை மட்டும் கவனத்திற்கெடுப்போம். இவ்வழி ஆய்வாளர் அல்காஜ்பேகம் குறிப்பிடும் பின்வரும் விளக்கத்தை நோக்குவதே போதுமானது.[25]

இஸ்லாமிய மகளிரின் சில சிறப்பு நெறிகளை அவர் உணர்த்தியுள்ளார். அவை: கற்பு, நாணம், அச்சம், மடம், மனையுறை வாழ்க்கை, தற்கொண்டான் பேணுதல், சொற்காத்தல், சோர்வு இன்மை, பொறை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல், அடக்கம், தற்புகழ், இன்மை, எளிமை, இரவலர்க்கு ஈதல் இறைவனைத் தொழுதல். எனும் பதினேழு நெறிகளைத் தமிழ் இலக்கியப் பொது நெறிகள் எனலாம். சீறாவின் மகளிர் இரு நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தனர் என்பதை இக்காப்பியத்தில் தெளிவாகக் காணலாம்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் (குறள். 55) போன்ற இசுலாத்திற்கு எதிர்நிலையான சில நெறிகளும் தமிழ் மகளிர் ஒழுக்கங்களில் உண்டு. பொது நெறிகள் தவிர்த்து இசுலாமியப் பெண்களுக்கென்று சில சிறப்பு நெறிகளும் உண்டு அவை:

1. கைம்மை மறுத்த மறுமண நெறி
2. மகர் எனும் மண உரிமம்
3. கொள்கைக்காக உயர் தியாகம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பெண்களது பன்முக ஆளுமை வெளிபாடுகள்

### 3.1 வீரம், துணிவு, எதிர்ப்புக்குரல்.....

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன் முதலாக கதைப்பாடல்கள் பல உருவாகின்ற அல்லது கிடைக்கின்ற காலமாக விஜயநகர, நாயக்கர் காலம் காணப்படுகின்றது. இத்தகைய கதைப்பாடல்களுள் சில, வியத்தகு ஆளுமைகள் பெற்றுள்ள பெண்கள் சிலரை அறிமுகப்படுத்துவது கவனிக்கத்தக்கது.

மேற்கூறிய கதைப்பாடல்களுள் அல்லி அரசாணி மாலை விதந்துரைக்கதக்க ஒன்றாகும். புராணச் சார்புள்ள இக்கதைப் பாடலில் இடம்பெறுகின்ற அல்லி பாண்டியர்களிடம் கப்பம் வாங்க வருகின்ற நீள்முகம் என்பானை ஏழு வயதிலே அடக்குகின்றாள்! கிருஷ்ணன் துணையுடன் தன்மீது மாயவிலங்குகள் ஏவிய அருச்சுனன், சேனைப் பெண்களால் பிடிக்கப்பட்ட நிலையில் அவனுக்குத் தண்டனை வழங்குகின்றாள்! பின்னர் அல்லிக்கும் அருச்சுனனுக்கும் போர் தொடர்கின்ற நிலையில் அருச்சுனனுக்குக் கிடைத்த கிருஷ்ணனது உதவி காரணமாக அப்போர் வெற்றியும் தோல்வியுமாக நீண்டு செல்கின்றது. பல்வேறு சதிகள், தந்திரங்களுக்குப் பின்னே அருச்சுன் அல்லியை வெல்லுவதுடன் திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது!

அல்லி அருச்சுனனது அழகையும் அவனது திருமணச் செயற்பாடுகளையும் விமர்ச்சிக்கின்றாள்.[26]

*அழகு வேண்டும் மென்று சொல்லி யாரடி காத்திருந்தாள்*
*மாப்பிள்ளை வேண்டுமென்று மயங்கினவர் யாரடி*
..............................
*மண்ணாண்ட ராசாத்தி மனையாட்டியாயிருந்தால்*
*பூமியாண்ட ராசாத்தி பெண்சாதியாயிருந்தால்*
*கண்டார் நகையாரோ கலியுகத்தார் ஏசாரோ*

அல்லியின் ஆற்றலை அருச்சுனனே ஒரு தடவை பவளக்கொடியிடம் எடுத்துரைக்கின்றான்.[27]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி மங்கை நல்லாள்*
*அல்லி யவளுடைய ஆண்மையுனக் கில்லையடி*

'வேறொருத்தி வாசலுக்குப் போனால் வெட்டிப் போட்டுவிடுவேன்' என்று அல்லி கூறியது கேட்ட அருச்சுனன் அச்சமடைகின்றான்.[28]

*வெட்டத் துணிவாளே வீரியத்தைச் செய்வாளே*
*கணவனென்றும் பாராளே கண்டித்தும் போட்டிடுவாள்*
............
*உயிரிருந்தனாக்கால் உப்புவிற்றும் உண்ணலாம்*

ஒரு தடவை தன்னிடம் சிக்கிக் கொண்ட துரியோதனனைத் தண்டிக்கும் காட்சி[29]

*அல்லி சவுக்கெடுத்துச் சாளடுகிறாள் ஆனமட்டும்*
*வஞ்சம் தெளியுமட்டும் வாழ்வரசி சாடுகிறாள்*

என்றவாறு விவரிக்கப்படுகின்றது!

இவ்விடத்தில் ஆய்வாளரொருவர் மேற்குறிப்பிட்ட கதைப் பாடல் பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது நினைவுகூரத்தக்கது.[30]

> "இந்து சமய புராணக் கதை ஒரு பெண்ணின் ஆளுமையைப் புலப்படுத்துகின்றது. பெண்ணின் அதிகாரம், அந்தஸ்து என்பன பெண்ணின் உயர்ச்சியைப் போற்றுகின்றது. பெண் மீதான ஆண்களின் அத்துமீறல் களுக்குத் தண்டனை அளிப்பதையும் அதை எதிர்த்துக் குரல் கொடுப்பதையும் இவ்வரலாறு காட்டுகின்றது..."

### 3.2 புலமை

நீதி நூல்கள் இயற்றிய ஔவையார் முதலான நன்கறியப்பட்ட புலவர்கள் தவிர, நன்கறிப்பட்டாத புலவர்கள் சிலரும் இக்காலப்பகுதியில் வாழ்ந்து தமது அபாரமான புலமைதிறனால் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே முதன்மை இடம் பெறக்கூடியவர்களாக் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிப்பிட்ட புலவர்கள் வரிசையில் மூவர் மிக முக்கியமான வர்களாகின்றனர். இவர்களுள் ஒருவர் உத்தர நல்லூர் நங்கை. இவரியற்றிய நூல் **'பாய்ச்சாலூர்ப் பதிகம்'** தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர் மு. அருணாசலம் கூறுவதுபோன்று,[31] "இப்பாடல்களில் உத்தர நல்லூர் நங்கை சாதியினால் உயர்வு தாழ்வு கூறுவது இயற்கைக்கு முரண் என்றும். பண்பினால் ஒத்துத் தாங்கள் இருவரும் மணம் செய்து கொள்வதைச் சாதி பற்றித் தடுத்தல் தகாதென்றும் வலியுறுத்திக் கூறுவது வெளிப்படை" எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன பின்வரும் பாடல்கள்.[32]

*சந்தனம் அகிலும் வேம்பும் தனித்தனிக் கந்தம் நாறும்*
*அந்தணர் தீயில் வீழ்ந்தால் அவர் மணம் வீசக் காணோம்*
*செந்தலைப் புலையன் வீழ்ந்தால் தீமணம் வேறதாமோ?*
*பந்தமும் தீயும் வேறோ பாய்ச்சலூர்க் கிராமத்தாரே.*

*ஒருபனை இரண்டு பாளை ஒன்று நுங்கு ஒன்று கள்ளு*
*அறிவினில் அறிந்தவற்கு அதுவுங்கள் இதுவுங்கள்ளே*
*ஒருகுலை உயர்ந்த தேனோ ஒரு குலை தாழ்ந்ததேனோ*
*பறையனைப் பழிப்பதேனோ பாய்ச்சலூர்க் கிராமத்தாரே*

இப்பாடல்கள் நாட்டார் பாடல்கள் போன்று மக்கள் மத்தியில் பாடப்பட்டு பேணப்பட்டு வந்திருப்பதாகவும் அறிய முடிகின்றது!

மற்றொரு புலவர் காளிமுத்து என்ற தாசியாவாள். இவள் நாகைபட்டிகத்துச் செல்வனும் வள்ளலுமான வருணகுல ஆதித்தன் காத்தான் என்பவன் மீது மடல் பிரபந்தம் பாடியுள்ளார். **வருணகுலாதித்தன் மடல்** என்பது அதன் பெயர். இந்நூலின் சிறப்புப் பற்றி பின்வருமாறு கூறுவார் மு. அருணாசலம்.[33]

"இம்மடல் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகுந்த சிறப்புடையது. வருணகுலாத்தித்தன் மடலைப் போல ஓர் மடலும் முக்கூற் பள்ளுக்கு இணையான ஒரு பள்ளும் குற்றாலக் குறவஞ்சியை ஒத்த ஒரு குறவஞ்சியும் தமிழில் இல்லை என்பது ஒரு பழமொழி. இந்த உலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடலின் சிறப்பை இது நன்கு விளக்கும். சொல், நயம், அடுக்கு, எதுகை, மோனை, தொடை, நயம் முரண் தொடை மடக்கு முதலிய எல்லாவிதமான செய்யுள் நலன்களையும் இதில் நன்கு காணலாம். இவ்வாசிரியரிடத்து "வருணனையின் பொருட்டும் சந்த ஓசையின் பொருட்டும் தமிழ்மொழி இன்னவிதம் தான் ஏவல் செய்கிறது என்பதைச் சொல்லுதல் அரிது..."

இந்நூலில் வரும் மடக்குச் சொல் நயத்திற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலைத் தருகின்றார் மு. அருணாசலம்.[34]

*தாதளவும் செய்ய இதழ்த் தாமரைக் கண்ணாரைக்*
*காதளவும் தாவடிபோம் கண்ணாரை – சீதமுலைச்*
*சூதாரை எல்லையற்ற சூதாரை வள்ளை எனும்*
*காதாரைச் சுற்றும் இரங் காதாரைப் – போதகம்*
*செய்யாரை மிக்க மறம் செய்தாரைக் காந்தளெனும்*
*கையாரை என்னளவிற் கைத்தாரை – வெய்யமயல்*
*தத்தாரைப் பூங்குழலின் தாராரை மாவளிக்க*
*வந்தாரைக் கொங்கையின்மேல் வாராரை – சிந்தை வெறும்*
*கல்லாரை மன்மத நூல் கற்றாரை மைப்புரவ*
*வில்லாரை ஏழுலகும் விற்பாரை...*

இக்காலத்தில் விமர்சனத்திறன் உட்பட கவி ஆற்றலில் சிறந்து விளங்கிய பிறிதொரு புலவர் 'வரதுங்கராம பாண்டியர் மனைவி' என்று பலராலும் குறிப்பிடப்படும் சிவகாம சுந்தரியாவார். இவர் பாடியனவாக மூன்று பாடல்களே வழங்குகின்றனவாயினும் (முன்னைய புலவர்கள் எழுதிய பிரிவுணர்ச்சிப் பாடல்கள் கற்பனை சார்ந்தவை) உண்மையாக புலவரது பிரிவாற்றாமையை அவை வெளிப்படுத்துகின்றனவாதலின் தமிழ் இலக்கியவரலாற்றிலேயே அவ்விதத்திலான முதல் வெளிப்பாடுகளாகின்றன என்பதையும் அவ்விதத்தில் எமது கவனத்திற்குரியவனாகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒரு பாடல் இங்கு தரப்படுகின்றது.[35]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னையவர் அறமறந்தும் யானவரை*
*மிக நினைந்திங் கிருந்து வாட*
*முன்னை வினைப் பயன்தானோ, இப்பிறப்பிற்*
*செய்த தவம் முடிந்த வாறோ*
*கன்னன் மதன் அபிராமன் வரதுங்க*
*ராமனியற் காசி நாட்டில்,*
*அன்னவயற் குருகினங்காள், இனியெவ்வாறு*
*உயிர் தரித்திங் காற்று மாறே*

## 4. வாழ்க்கை வரலாறு சார்ந்து வழங்கிவரும் கதைகள்:

### 4.1 ஆண்டான் கவிராயர் பற்றி[36]

காளமேகப் புலவரை விஞ்சும் வண்ணம் வசைபாடி மக்களின் வெறுப்பிற்கும் அச்சத்திற்குமுட்பட்ட ஆண்டான் கவிராயன் பற்றி அண்மையில் அறிப்பட்டுள்ளது. இவனது வசைப்பாடலுக்குட்பட்டு இறந்தும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டும் காணப்பட்டோர் பட்டியலில் பெண்களும் அடங்குகின்றனர். இவ்வழி பின்வருவோர். கவனிப்பிற்குரியவராகின்றனர்.

தன் மனைவி கள்ளக் காதலனுடன் உறவாடுகிறாள் எனச் சந்தேகித்து அதற்காக காதலனும் வீடும் அழிய வசை பாடியமை.
கோயில்களில் சிறு குற்றங்கள் செய்த கணிகையர் மீது வசை பாடியமை.
ஏளனம் செய்த கணிகை ஒருத்தியை எமபுரம் அனுப்பியமை.
தன்னை இகழ்ந்த பெண் ஒருத்தியின் மகனைக் கொண்றமை.
கன்றிற்கு சிறிதேனும் பால்விடாது ஒட்டக் கறந்த பெண் மீது வசைபாடியமை.
காமக்குறிப்பை வெளிபடுத்திய பார்ப்பனப் பெண் மீது வசைபாடியமை.

### 4.2 வரதுங்கராம பாண்டியர் மனைவி பற்றி[37]

நைடதம் பாடி முடித்த அதிவீரராமபாண்டியர் தன் தமையனான வரதுங்கராமரிடம் அந்நூல் பற்றி அபிப்பிராயம் கேட்டபின் அவர் மனைவியாரிடமும் அது பற்றிக் கேட்டார். அன்னார் அந்நூலில் 'சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்ந்திறுதல்' குற்றம் கண்டுவிட்டு 'இது நாய் வேட்டைக்கு விரைந்து ஓடிச்சென்று இரைக்க இரைக்க இளைத்து நின்றாற் போன்ற தன்மையுடையது' என்று கூறி அனுப்பினார் என்பது உட்பட பல கதைகள் உலாவந்திருப்பதாக அறியப்படுகின்றது.

### 4.3 அருணகிரிநாதர் பற்றி[38]

இவரது வாழ்விலிடம் பெற்றுள்ள முக்கியமான சம்பவங்களுளொன்று (இக்காலக் கவிஞரொருவரது கூற்று வழி) பின்வருமாறு:

*பரத்தையர் வீட்டுக்குக்*
*கூட்டிச் செல் என்று*
*கூடப் பிறந்தவளுக்குத்*
*தொல்லைகள் தந்தார்.*
*தொல்லைகள் ஓர் நாள்*
*எல்லையைத் தாண்டவே*
*தம்பியின் தொல்லைக்குத்*
*தீர்வொன்று காணவே –*
*மிருகத்தின் கீழாக*
*நின்றதன் தம்பியிடம்*
*உன் தசைப் பசியை*
*என்னிடம் தீர்த்திடு*
*அவர்களைப் போலவே*
*அழகும் இளமையும்*
*அமையப் பெற்றுள்ள*
*நானுமோர் பெண்தான்*
*நீ கேட்கும் இடத்துக்கு*
*நீ செல்லும் தேவைக்குக்*
*கூட்டிச் செல்லும்*
*நோக்கில் நானில்லை*
*கூட்டிச் செல்லத்தக்க*
*நிலையிலும் நீ யில்லை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.4 பட்டினத்தடிகள் பற்றி [39]

இவரது வாழ்க்கையிலிடம் பெற்ற சம்பவங்களுள் முக்கியமான தொன்று பற்றி இவ்வேளை நினைவு கூர்வது அவசியம் அது இதுதான் (இக்காலக் கவிஞர் கூற்றுவழி)

*பட்டினத்தடிகளின்*
*பற்றிலாச் செயல் கண்டு*
*எரிந்தார்– வெந்தார்*
*அடிகளின் அக்கா*

..................................

*எண்ணி இருந்ததை*
*எளிதினில் செயலாக்க*
*சுறுசுறுப்புடனவள்*
*செயலிலிறங்கினாள்*
*ஓட்டப்பம் சுட்டதில்*
*நொடியினில் கொன்றிடும்*
*கொடுவிடம் கலந்தை*
*எடுத்துச் சென்றவள்*
*வீதியில் வந்த தன்*
*தம்பியை அழைத்தாள்*

...................................

*அப்பத்தைத் தந்தாள்!*

..................................

*அப்பத்தில் கொடுவிடம்*
*கலந்துள்ளது என்பதைத்*
*திருவருட் திறத்தினால்*
*தெளிந்து கொண்டவர்*

..........................................

*தன்வினை தன்னைச்சுடும்*
*ஓட்டப்பம் வீட்டைச்சுடும்*
*என்றுரைத் தவராக*
*அப்பத்தைச் சுருட்டி*
*அருகிலிருந்த – தனது*
*அக்காவின் வீட்டின்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூரையுள் சொருகினார்*

*.........................................*

*தீப்பற்றிக் கொண்ட*

*அக்காவின் பெருமனை*

*கண்ணொடிப் பொழுதில்*

*சாம்பர் மேடானது*

*.....................................”*

## 4.5 உத்தர நல்லூர் நங்கை பற்றி

நந்தனார் குலத்திலே பிறந்த இவள் சிறு பிராயம் தொட்டு அந்தணச் சிறுவனொருவனுடன் பழகி வந்தாள். அவனிடமிருந்து வேதத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. புலமை பெருகியது; நட்பு காதலாக மாறியது; ஊரிலுள்ளவர்கள் அவளது குடிசைக்குத் தீவைக்கச் சேரிக்கு வந்தார்கள். அந்தண இளைஞன் கோழையாயிருந்தாலும் அவள் வந்தவர்களைத் தடுத்து நல்லறிவு புகட்டினாள்.

வேறுபல அடியார்கள், புலவர்கள் வாழ்வுடன் தொடர்புபட்டுள்ள பெண்கள் பற்றி கதைகள் பலவிருப்பினும் விரிவஞ்சி மேற்கூறியவை மட்டுமே இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. இக்கதைகளுள் ஆண்டான் கவிராயருடன் தொடர்புபட்டுள்ள கதைகள் அவனது வசைக்கவிகளால் தண்டனை பெற்ற பெண்கள் பலர் இருந்தமையை வெளிப்படுத்துவதனூடாக அன்றைய கால ஆணாதிக்கச் செயற்பாடுகளின் கொடுமையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

வரதுங்கராம பாண்டியர் மனைவி பற்றிய கதை அன்னாரது புலமைத்திறனின் பிறிதொரு முகத்தை எடுத்துக்காட்டுகின்றது.

அருணகிரிநாதரின் கதை, அன்னாரது சகோதரியின் துணிவையும் மதிநுட்பத்துடன் தம்பியைத் திருத்த முற்பட்டதையும் புலம்படுத்துகின்றது.

பட்டினத்தடிகளின் கதை, குலப்பெருமை பாராட்டியதனூடாக அனாவசியமாக இன்னலுற்ற பெண்ணொருத்தியை அறிமுகஞ் செய்கின்றது.

உத்தர நல்லூர் நங்கையின் கதையூடு அவளது துணிவு, புலமை என்பன துலக்கமுறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்:

1. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க:

   யோகராசா செ, நூல்: சோழப் பேரரசும் சமயப் பெறுநெறிகளும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 2009 பக் 101 – 112
2. இந்நூலின் ஆசிரியர் சுப்ரதீபக்கவிராயர்
3. இந்நூலின் ஆசிரியர் யாரென்று அறியப்படவில்லை
4. சிரஞ்சீவி (பதிப்பாசிரியர்), **கூளப்ப, நாயக்கன் காதலும் கூளப்ப நாயக்கன் விறலி விடு தூதும்**, சென்னை 1958
5. ரகுநாதன், தொ. மு. சி. பணம் விடு தூது, நூல் : சமுதாய இலக்கியம், ஸ்ரார் பிரசுரம் சென்னை, 1958'
6. மு.கு.நூ, பக் 101– 102
7. மாணிக்கம், அ. புலவர் (உரையாசிரியர்), **தனிப்பாடல் திரட்டு** – முதற்பகுதி, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 4ம் பதிப்பு 1996, ப. 48
8. மே.கு.நூ.,ப 32
9. தசரதன், ஆ, டாக்டர், **தமிழில் வசைப்பாடல்கள்** (ஆண்டான் கவிராயன் தனிப்பாடல்கள், தமிழ் கலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை, 2ம் பதிப்பு, 1996, ப. 37
10. மே.கு.நூ.,ப. 18
11. மு.கு.நூ,ப, 19
12. இந்நூற் பிரதி சிதைந்த நிலையில் கிடைத்துள்ளமையால் மேலதிக விவரங்கள் பற்றி அறிய முடியாதுள்ளது.
13. வீ. கந்தையா, வி. சீ, வித்துவான், பண்டி.B.O.L., (பதிப்பாசிரியர்), **கண்ணகி வழக்குரை**, மட்டக்களப்பு இலங்கை. மு.ப., 1968
14. மே.கு.நூ., ப 276
15. மே.கு.நூ., ப 104
16. மு.கு.நூ., ப 105
17. வெங்கடாசலபதி, மு. டாக்டர் (தொகுப்பாசிரியர்), பேராசிரியர் நா.வா.வின் **நாட்டுப்புறக் கலையியல்**, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, டிசம்பர். 2001, ப. 39
18. மே.கு.நூ, பக். 40–41
19. மே.கு.நூ, ப. 88
20. புன்னைவன நாத முதலியார், பு.சி.,திரு; இராமசாமிப்பிள்ளை செ.ரெ, செல்லூர்க்கிழார் (இணை உரையாசிரியர்கள்) **மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாக் குறவஞ்சி**, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, சென்னை, மறு பதிப்பு 1926 ப.க உரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மாணிக்கம், அ., புலவர், மு.கு.நூ.,ப.

22. மே.கு.நூ. ப.112

23. சிதம்பரனார், சாமி. **சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்,** தத்துவம், இலக்கிய நிலையம், சென்னை. 3ம் பதிப்பு 1969 ப. 59.

24. மே.கு.நூ. ப. 72

25. அல்தாஜ் பேகம்,ஹ, **உமறுப்புலவர் காட்டும் மகளிர் பண்பாட்டு நெறிகள்,** ஆய்வுக்குகோவை., இந்தியப் பல்கலைக்கழக தமிழ் ஆய்வு மன்றம், திருச்சி 2004 பக். 63 – 64

26. மேற்கோளாக இடம்பெற்றுள்ள நூல்:

இரயாகரன்,பி, **ஆணாதிக்கமும் பெண்ணியமும்,** கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை. 2001. பக்.237

27. மே.கு.நூ; ப.238

28. மு.கு.நூ; ப.238

29. மு.கு.நூ; ப.238

30. மு.கு.நூ; ப.239

31. அருணாசலம், மு, **தமிழ் இலக்கிய வரலாறு:** 15ஆம் நூற்றாண்டு, தஞ்சை 1969 பக் 309–310

32. மே.கு.நூ. பக். 308 – 309

33. மு.கு.நூ; ப. 308 – 309

34. மு.கு.நூ; ப. 251 – 252

35. மு.கு.நூ; ப. 34

36. பார்க்க: தசரதன், ஆ. டாக்டர், மு.கு.நூ;

37. அருணாசலம் மு.கு.நூ; ப. 33

38. முருகு, **சரித்திரத்திலே சகோதரிகள் ஐவர்.** யாழ்ப்பாணம் 2008 பக். 39 – 40

39. மே.கு.நூ. பக். 22 – 23

40. அருணாசலம் மு, மு.கு.நூ; ப. 308 – 309



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர நாயக்கர் காலத்தனிப் பாடல்களில் பெண்மை

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

## 1. முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றைக் காலப் பாகுபாடு செய்வதில் பல அறிஞர்கள் முயன்றுள்ளனர். தமிழில் எழுந்த இலக்கியங்களின் பின்னணியை ஆராய்ந்து பாகுபாடுத்தி அவற்றிற்குப் பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்று கால வகுப்புப் பற்றிய தகவல்களை பேராசிரியர். கா. சிவத்தம்பியின் "தமிழில் இலக்கிய வரலாறு" எனும் நூல் பின்னிணைப்பாக தந்துள்ளது. அதில் 22 அறிஞர்களுடைய கால வகுப்பு அடக்கப் பட்டுள்ளது. கால்டு வெல் (1956) தொடக்கம் ந. சுப்பிரமணியம் (1981) வரையான அறிஞர்களின் வகுப்பு நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுள் வி. செல்வநாயகத்தின் காலப் பாகுபாட்டில் மாத்திரமே "நாயக்கர் காலம்" என ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. எனவே இக்காலப்பகுதி நாயக்கர் மன்னருடைய ஆட்சி செல்வாக்குப் பெற்றிருந்தமையைச் சுட்டுவதாகக் காணப்படுகின்றது. வி. செல்வநாயகத்தின் "தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூல் 1951 இல் வெளிவந்தது. சி. பாலசுப்பிரமணியம் எழுதிய "தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூல் 1959இல் வெளிவந்தது. இந்நூலில் "நாயக்கர் காலம்" என்ற ஒரு காலப் பாகுபாடு சுட்டப்பட்டுள்ளது. இந்நூலில் நாயக்கர் காலம் கி. பி. 1350–1750 என வரையறை செய்யப்பட்டுள்ளது.

வரலாற்று நிலையிலே தென்னகத்தில் சோழப்பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் பாண்டியர் ஆட்சி நடைபெற்ற போது முகம்மதியர் படையெடுப்பு நடந்ததை அறிய முடிகின்றது. பாண்டியர் வலி குன்றியிருந்தமையால் அதனைப் பயன்படுத்தி மாலிக்கபூர் தென்னகத்தின் மீது படையெடுத்து வெற்றி பெற்றுச் செல்வங்களையும் எடுத்துச்செல்ல முடிந்தது. இச் சமயத்தில் துங்கபத்திரா நதிக்கரையில் அரிகரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்களால் ஓர் இந்துப்பேரரசு தோற்றுவிக்கப் பெற்றது. அதுவே விஜயநகரப் பேரரசின் தோற்றமாகும். இந்துக்களை முகம்மதியர் பிடியிலிருந்து காப்பாற்றுவதே இவ்வரசின் நோக்கமாகவும் இருந்தது. இவ்வேளையில் கி. பி. 1538இல் குமார கம்பணன் முகம்மதியரை வென்று மதுரையில் நாயக்கர் ஆட்சிக்கு அடிகோலினான். இதன் பின்னர் விஜயநகர நாயக்கர் ஆட்சி ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் தென்னிந்தியாவில் நிலை பெற்றிருந்தது. இக்காலத்தில் ஆந்திரதேசம், தமிழ்நாடு, மைசூர் முதலிய மாநிலங்களும் இலங்கை, பர்மா ஆகியவற்றின் சில பகுதியும் விஜய நகரப்பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இக்காலகட்டம் தமிழக வரலாற்றில் ஒரு சிறந்த காலப்பகுதியாகக் கருதப்படுகிறது.

பிற நாட்டவரது அரசியல் செல்வாக்கிலிருந்து தென்னாட்டைப் பாதுகாத்த பெருமை நாயக்க மன்னர்களையே சாரும். இதனை இந்திய சிற்பக்கலை நிபுணரான ஜேம்ஸ் பெர்கூசன் கூற்றும் விளக்கியுள்ளதென மு. ஆரோக்கியசாமி குறிப்பிட்டுள்ளார்.

> "பழங்காலப் பேரரசர்கள் என நாம் போற்றும் பாண்டியர், சோழர், பல்லவர் ஆண்ட நாட்டை விட அதிக பரப்புள்ளது நாயக்கர் அரசின் கீழிருந்த நாடு..... நல்ல வளமான நிலையில் இருந்ததென்றே கொள்ளவேண்டும். இந்திய சிற்பக்கலை நிபுணர் ஜேம்ஸ்பெர்கூசன் என்பார் கூறுவது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாட்டின் கலைச் செல்வங்கள் பல நாயக்கர்களால் ஆனவையே........ மதுரையில் நாம் இன்று காணும் திருக்கோயிலும் ஆயிரங்கால் மண்டபமும் திருமலை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டவையே. இந்த ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டுவதற்கு மட்டும் 1623 முதல் 1645 வரை 22 ஆண்டுகள் பிடித்தனவென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது......... வைணவர்கள் முதல் இடம் தந்து போற்றும் ஸ்ரீரங்கக் கோயில் நாயக்கர் காலத்தில் எழுந்ததே. பேரூரில் நாம் காணும் கோயிலின் தற்போதைய நிலை நாயக்கர் காலத்தில்தான் அடைந்தது.[1]

நாயக்கர் காலத்தில் வைணவசமயம் சிறப்புற்றிருந்த போதும் பிற மதங்களும் ஆதரிக்கப்பட்டன. முகம்மதியர்களுக்கும் மானியம் வழங்கப்பட்டது. மதுரையில் இக்காலத்தில் கிறித்தவசமயம் பரவத் தொடங்கியது. சைவ, வைணவ சமயங்களைப் பேணுவதற்குப் பல மடங்கள் அமைக்கப்பட்டன. கோயில்கள் பல புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. புதிய கோயில்களும் கட்டப்பட்டன. கோயில்களைப் பற்றிய பல புராணங்கள் பாடப்பட்டன. பள்ளு, உலா, கலம்பகம், தூது, குறவஞ்சி போன்ற பிரபந்தங்கள் பல எழுந்தன. சமயத்தின் உட்பொருளை விளக்குகின்ற தத்துவக் கருத்துக்களும் தோன்றி வளர்ந்தன. பல சித்தர்கள் தோன்றித் தனிப் பாடல்களை இயற்றினர். பல புலவர்கள் தனிப்பாடல்களை இயற்றினர்.

சங்ககாலத்தில் தனிப் பாடல் போன்ற பாடல்கள், தொகுப்பாக அன்றித் தனிப் பாடல்களாகக் காணப்பட்டபோதும் அவை தனிப்பாடல்கள் எனப் பெயர் சூட்டப் பெறவில்லை. சங்கப்பாடல்கள் தொகுக்கப்பட்ட போது அத்தொகுதிக்கு "எட்டுத்தொகை" எனப் பெயரிடப்பட்டது. பிற்காலத்தில் எழுந்த தனிப்பாடல்கள் தொகுக்கப்பட்டபோது அதற்குத் தனிப்பாடற்றிரட்டு எனப் பெயர் சூட்டப்பெற்றுள்ளது. புறத்திரட்டு, புறத்திரட்டுச்சுருக்கம், பன்னூல்திரட்டு, சின்னூல்திரட்டு எனப் பல நூல்கள் இவ்வகையில் உண்டு. தமிழ் நாவலர் சரிதை, பெருந்தொகை. தனிச் செய்யுட் சிந்தாமணி போன்ற தனிப்பாடல் தொகுப்புகளும் உண்டு. எனவே இத்தகைய தொகுப்புக்களுக்கு அவை தொகுக்கப்பட்ட காலத்தின் தேவை ஒன்று இருந்திருக்க வேண்டும். கா. சுப்பிரமணியபிள்ளை 1939இல் இருதனிப்பாடல் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். முதலாம் தொகுதி 17ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய தனிப்பாடல்களைக் கொண்டதாகும். அவற்றுள் விஜயநகர நாயக்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தனிப்பாடல்கள் பற்றிய ஒரு நுண் ஆய்வாகவே இக் கட்டுரை அமைகின்றது.

## 2. விஜயநகர நாயக்கர் காலத் தனிப் பாடல்களின் வகைப்பாடு

இக்காலப்பகுதியில் எழுந்த தனிப்பாடல்களை 1939இல் "தனிப்பாடற்றிரட்டு" எனும் தொகுப்பாகக் கா. சுப்பிரமணியபிள்ளை வெளியிட்டுள்ளார். தொகுப்பினுடைய தன்மைபற்றி அவர் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தனிப்பாடற்றிரட்டுக்கு உரைகள் பல விரும்பினும் அதன்கணுள்ள பாடல்களை வரலாற்று முறைக்குத் தக்கபடி வரிசைப்படுத்தி பாடல்களின் பொருளை நன்கு தெளிவுபடுத்திக் காட்டும் விளக்கவுரை இன்றியமையாததா யிருப்பதைக் கருதி இந்நூலானது அத்தேவையை நிறைவேற்றும் நோக்கத்தோடு இயற்றப் பெற்றுள்ளது. இதன் கண்சரித்திர முறைக் கேற்றவாறு புலவர்களின் வரிசை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. புலவர்கள் பாடல்கள் திருத்தம் பெற வேண்டிய விடயங்களில் திருத்தமான பாடபேதங்களே தழுவப் பெற்றுள்ளன. யாவரும் எளிதில் வாசிக்கத் தக்கவிதமாய் இதனையமைக்க கருதினமையால் விரிவான குறிப்புக்கள் சேர்க்கப்படவில்லை. பாட்டின் நோக்கத்திற்கும் பொருள் விளக்கத்திற்கும் அவசியமான குறிப்புக்கள் ஆங்காங்கே சுருக்கமாகவும் தெளிவாகவும் சேர்க்கப்பட்டுள்ளன." [2]

இரண்டு தொகுதிகளாக கா. சுப்பிரமணியபிள்ளை செய்திருக்கும் தனிப்பாடற்றிரட்டு காலத்தால் முந்தியது. முதற்றொகுதியில் கி. பி. 17ஆம் நூற்றாண்டு வரை திகழ்ந்த புலவர்களின் பாடலும் இரண்டாம் தொகுதியில் அதற்குப் பிற்பட்ட புலவர்களின் பாடல்களும் கோவைப்படுத்தப்பட்டுள்ளன.

அ. மாணிக்கம் என்பவரும் 'தனிப்பாடல் திரட்டு' என இரு தொகுதிகளை 1977இல் வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பு ஏறக்குறைய கா. சுப்பிரமணியபிள்ளையின் தொகுப்பைப் பின்பற்றியதாகவே உள்ளது. பாடல்களுக்குப் பதவுரையன்றிப் பொழிப்புரையே அமைக்கப்பட்டிருப்பது இத்தொகுப்பினை வேறுபடுத்திக் காட்டும் அம்சமாகும். நூலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரையில் தனிப்பாடல் திரட்டுகளின் வரலாறு பற்றிய சில குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன.[3]

"தனிப்பாடற்றிரட்டு" என்னும் நூல் தொகுப்பிற்கு முன்னரேயே "புறத்திரட்டு" என்னும் நூல் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தோன்றியிருக்கலாமென எஸ். வையாபுரிப்பிள்ளை கருதுகிறார். திரட்டு என்ற பெயரில் வெளிவந்த நூல்கள் வருமாறு அட்வணைப்படுத்தக் கூடியவை.

| நூற்பெயர் | குறிப்பு |
|---|---|
| புறத்திரட்டு | 5ஆம் நூற்றாண்டு |
| புறத்திரட்டுச் சுருக்கம் | சுருக்க நூல் |
| தமிழ் நாவலர் | 300 ஆண்டுக்கு முற்பட்டது |
| தனிப்பாடல் திரட்டு | சரஸ்வதி மகால் நூலகத்தில் எட்டு நூல்கள் |
| பன்னூல் திரட்டு | பாண்டித்துரைத் தேவர் |
| பன்னூற்பா | அரசு கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்திலுள்ளது |
| சின்னூல் திரட்டு | அரசு கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்திலுள்ளது |
| தனிப்பாடல் | அரசு கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்திலுள்ளது |
| பெருந்தொகை | மு. இராகவையங்கார் |
| தனிப்பாடல் திரட்டு | சந்திரசேகர கவிராச பண்டிதர் தொகுப்பு |
| தனிச் செய்யுட் சிந்தாமணி | வள்ளல் சண்முகம் செட்டியார் |
| தனிச் செய்யுட் சிந்தாமணி | மு. ரா. கந்தசாமிக்கவிராயர் |
| தனிப்பாடல் திரட்டு | க. இராமசாமி நாயுடு |
| வண்ணத்திரட்டு | புலவர் பாடிய வண்ணங்களில் தொகுப்பு |
| மேற்படி தகவல்கள் இலக்கிய மணிமாலை நூலிற் பெறப்பட்டவை | |

இக்கட்டுரையில் கா. சுப்பிரமணியபிள்ளையின் 'தனிப்பாடல் திரட்டு' என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்களே ஆய்வுக்குட் படுத்தப்படவுள்ளன. ஏறக்குறைய 22 புலவர்கள் விஜயநகர நாயக்கர் காலத்துப் புலவர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காணட்பட்டுள்ளனர். அவர்கள் பாடிய பாடல்களின் தொகை ஏறக்குறைய 650 ஆகும். கீழ்வரும் அட்டவணை ஒரு பார்வையில் புலவர் பெயர்களையும் பாடிய பாடல் தொகையையும் காண உதவும்.

| | |
|---|---|
| 1. காளமேகம் | 187 பாடல் |
| 2. பொய்யாமொழிப் புலவர் | 08 பாடல் |
| 3. ஒப்பிலாமணிப்புலவர் | 27 பாடல் |
| 4. இரட்டையர் | 12 பாடல் |
| 5. சத்திமுத்தப்புலவர் | 02 பாடல் |
| 6. வரதுங்கராம பாண்டியன் | 03 பாடல் |
| 7. பட்டணத்துச் சுவாமிகள் | 01 பாடல் |
| 8. சிவப்பிரகாச சுவாமிகள் | 16 பாடல் |
| 9. அந்தக்கவி வீரராகவ முதலியார் | 20 பாடல் |
| 10. படிக்காசுத்தம்பிரான் | 21 பாடல் |
| 11. சொக்கநாதப்புலவர் | 40 பாடல் |
| 12. பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் | 64 பாடல் |
| 13. காளிமுத்துப் புலவர் | 20 பாடல் |
| 14. நமசிவாயப்புலவர் | 23 பாடல் |
| 15. மதுரகவிராயர் | 13 பாடல் |
| 16. சவ்வாதுப்புலவர் | 03 பாடல் |
| 17. இராம கவிராயர் | 03 பாடல் |
| 18. நையாண்டிப் புலவர் | 04 பாடல் |
| 19. சுப்பிரமணியப்புலவர் | 01 பாடல் |
| 20. கடிகைமுத்துப்புலவர் | 107 பாடல் |
| 21. நாகூர் முத்துப்புலவர் | 50 பாடல் |
| 22. இராமச்சந்திரக் கவிராயர் | 27 பாடல் |

இப்பாடல்கள் பல்வேறு பாடுபொருள்களை உள்ளடக்கியுள்ளன. எனவே அவற்றின் பொருள் நிலைக்கேற்ப வகைப்படுத்தி ஆராய்வது தெளிவைத் தரும். வகைப்பாடுகள் வருமாறு சுருக்கமான விளங்கங்களோடும் சான்றுகளோடும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 : 1 சிலேடைப்பாடல்கள்

இப்பாடல்களில் இரு விடயங்களுக்கு ஒற்றுமை காணும் முயற்சி நடைபெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு பாடலை நோக்கலாம்.

*'வாரிக் களத்தடிக்கும் வந்த பின்பு கோட்டை புகும்*
*போரிற் சிறந்து பொலிவாகும் – சீருற்ற*
*செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்*
*வைக்கோலு மால் யானையாம்.*[5]

இப்பாடல் வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடையாகப் பாடப்பட்டுள்ளது. வைக்கோல் வயலிலிருந்து எடுக்கப்பட்டு நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும். பிற்பாடு புரியாகத் திரிக்கப்பட்டு நெற் கோட்டையைச் சூழ்ந்திருக்கும். பெரிய குவியலாகக் குவிக்கப்பட்டு மலைபோல உயர்ந்து தோன்றும். பெரிய யானை யுத்தகளத்தில் சேனைகளை நிலத்தில் தாக்கிக் கொல்லும், யுத்தம் முடிந்த பின்பு அரசன் கோட்டைக்குள்ளே செல்லும். சண்டை செய்வதில் மற்றப் படைகளைப் பார்க்கிலும் மேம்பட்டுப் பொலிவாக நன்கு விளங்கும். ஆதலால் வைக்கோல் கூடத் தொழிற்பாட்டில் யானைக்குச் சமமாகும்.

இவ்வாறு இருவிடயங்களிலும் பொதுமைப் பண்பு கண்டு பாடல் இயற்றுவதில் காளமேகப் புலவர் புலமை பெற்றவர். அவருடைய பாடல்களில் பின்வரும் விடயங்கள் பற்றிச் சிலேடையமைக்கப்பட்டுள்ளது.

1. ஆமணக்கும் யானைக்கும்
2. பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும்
3. பாம்புக்கும் எள்ளுக்கும்
4. பாம்புக்கும் எலுமிச்சம் பழத்திற்கும்
5. முகுந்தனுக்கும் முறத்திற்கும்
6. சந்திரனுக்கும் மலைக்கும்
7. நாய்க்கும் தேங்காய்க்கும்
8. மீனுக்கும் பேனுக்கும்
9. பனை மரத்துக்கும் வேசைக்கும்
10. தென்னைமரத்திற்கும் அரசனுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வெற்றிலைக்கும் வேசைக்கும்
12. கண்ணாடிக்கும் வேசைக்கும்
13. கூத்தியாருக்கும் குரங்குக்கும்
14. குதிரைக்கும் காவிரியாற்றுக்கும்
15. கீரைப்பாத்திக்கும் குதிரைக்கும்
16. கதவுக்கும் ஆட்டுக்கும்
17. குதிரைக்கும் ஆட்டுக்கும்
18. துப்பாக்கிக்கும் ஓலைச்சுருளுக்கும்
19. வான வில்லுக்கும் விஷ்ணுவுக்கும் வெற்றிலைக்கும் (மூன்று பொருள்)
20. பூசணிக்காய்க்கும் பரமசிவனுக்கும்
21. ஓடத்திற்கும் நிதம்பத்திற்கும்
22. கரண்டகத்திற்கும் பெண்குறிக்கும்
23. விநாயகர், முருகர், பரமசிவன் மூவருக்கும்

சிலேடைப்பாடல்கள் வெண்பா யாப்பில் அமைந்தவை. இலகுவில் பொருள் விளங்கும் வண்ணம் பாடப்பட்டுள்ளன. ஒப்பீடு செய்து காட்டும் புலமைச் செருக்கும் இப்பாடலில் மிகுந்தோங்கியுள்ளது.

## 2 : 2 வசைப்பாடல்கள்

பிறர் மீது வெறுப்புத் தோன்றும் போது வசை கூறுவது இன்று வரையும் வழக்கிலுள்ளது. காளமேகப்புலவர் எதிர்பாராமல் பெருமழை பெய்து திகைக்கவைப்பது போல பல நிகழ்ச்சிகளின் போது ஆசுகவிகள் பாடி வியப்படையைச் செய்தமையால் 'காளமேகம்' எனச் சிறப்புப் பெயர் பெற்றவர். இதனால் காலப்போக்கில் அவருடைய இயற்பெயரே மறைந்து விட்டது. இவர் புலவர்களை மதியாமல் புலமைச் செருக்குடன் இருந்த புலவர்களின் செருக்கை அடக்கப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

கும்பகோணத்தில் காளமேகம் பந்தியிலிருந்து உணவு உண்ணும் போது அவருக்கு எதிரிலிருந்து உணவு உண்ட சோழியப் பிராமணனின் குடுமி அவிழ்ந்து இலையில் விழுந்தது. அவன் அதை எடுத்து உதறினான். அப்போது எச்சில் சாதம் காளமேகத்தினுடைய இலையில் விழுந்தது. காளமேகம் அவன் மீது பெருவெறுப்புக் கொண்டு பின்வரும் பாடலை உடனே பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்*
*பொருக்குலர்ந்த வாயா புலையா – திருக்குடந்தைக்*
*கோட்டானே நாயே குரங்கே யுனை யொருத்தி*
*போட்டாளே வேலையற்றுப் போய்"*[6]

கட்டு அவிழ்ந்த முன் குடுமியை உடைய சோழியப் பிராமணனே! சோற்றுப் பற்றுக் கழுவாது காய்ந்து கிடக்கின்ற வாயையுடையவனே! கீழ் மகனே! கும்பகோணத் திருப்பதியிலுள்ள ஆந்தையே, நாயே, குரங்கே! ஒரு பெண் வீணாக உன்னைப் போன்ற இழிவானவனைப் பெற்றுக் போட்டாளே.

காளமேகம் சிலபாடல்களைப் பாடும்போது வசையுடன் நகைச் சுவையையும் பொதிந்து பாடியுள்ளார். வெண்பா யாப்பில் பாடல்களைப் பாடியதால் மக்கள் இலகுவில் அவற்றை விளக்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. 'வசை பாடக் காளமேகம்' என்ற சிறப்புப் பெயரையும் அவர் பெற்றிருந்தார். எண்ணியவுடன் கவிபாடும் வல்லமை யுடையவர்களை 'ஆசுகவி' எனச் சிறப்பாக அழைக்கும் மரபு இருந்தது. காளமேகம் ஆசுகவிகள் பாடிப் புகழ்பெற்றவர். 'ஆசுகவியால் அகில மெலாம் வீசுபுகழ்க் காளமேகம் எனப் பாராட்டையும் பெற்றவர்.

## 2 : 3 நிந்தாஸ் துதிப்பாடல்கள்

ஒருவரை இகழ்வது போலப் புகழ்ந்துபாடுதல் நிந்தாஸ்துதிப் பாடல்கள் என அழைக்கப்பட்டது. சுந்தரருடைய தேவராங்களில் இத்தகைய பாடல்கள் உள விஜயநகர நாயக்கர் காலத்திலும் பல புலவர்கள் நிந்தாஸ்துதிப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவை தனிப்பாடல் திரட்டிலே இடம் பெற்றுள்ளன. இறைவனைப் பாடும் போது இத்தகைய மரபு பின்பற்றப்பட்டுள்ளது. காளமேகப் புலவரது பாடல் ஒன்றை எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

*"அப்ப னிரந்துண்ணி யாத்தாள் மலைநீலி*
*ஒப்பரிய மாம னுறி திருடி – சப்பைக்கால்*
*அண்ணன் பெருவயிற னாறுமுகத் தானுக்கிங்*
*கெண்ணும் பெருமை யிவை"*[7]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகக் கடவுளுக்குத் தந்தையாகிய சிவபெருமான் பிச்சையெடுத்து உண்பவன். தாயாகிய பார்வதி மலையரசன் புதல்வியாய் நீலநிறமுடையவள். உவமையற்ற மாமனாகிய திருமால் ஆய்ச்சியர்கள் உறியிலுள்ள வெண்ணெயைக் களவு செய்தவன். சப்பையா குறுகிய தடித்த கால்களையுடைய தமையனான விநாயகப் பெருமான் மகோதரம் போன்ற பெரிய வயிற்றையுடையவன். இவையே அவரைப்பற்றிக் கருதக் கூடிய பெருமைகளாகும் எனக் காளமேகம் சுட்டிக்காட்டுகிறார்.

## 2:4 வினா விடைப்பாடல்கள்

இரட்டையர் என அழைக்கப்பட்ட இருபுலமையாளர் வினாவிடைப் பாடல்கள் பாடுவதில் சிறப்புப் பெற்றிருந்தனர். உடற்குறை காரணமாக இவ்விரு புலவர்களும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். ஒருவர் குருடர், மற்றவர் முடவர், குருடரின் தோளிலே முடவர் ஏறிச்செல்வார். முடவர் காட்டிய வழியில் குருடர் நடந்து செல்வார். இளஞ்சூரியர், முதுசூரியர் என இருவரும் முறையே அழைக்கப்பட்டனர். நான்கு அடிகள் கொண்ட வெண்பாவில் ஒருவர் முதல் இரு அடிகளையும் பாட மற்றவர் அதே உணர்ச்சியுடனும் கற்பனை ஆற்றலுடனும் பின் இரு அடிகளையும் பாடி முடிப்பார். இதனால் பல பாடல்கள் வினாவிடை அமைப்பிலே காணப்படுகின்றன. பின்வரும் பாடல் எடுத்துக்காட்டாய் அமையும்.

*"குன்றுங் குழியுங் குறுகி வழிநடப்ப*
*தென்று விடியுமெமக் கென் கோவே – ஒன்றும்*
*கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறில்*
*இடாதோ நமக்கிங் கிடி"* [8]

உயந்த மலைகளையும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளையும் கடந்து வழிச் செல்வது என் தலைவனே எமக்கு எப்போது ஒழியும். என்பது ஒருவர் தொடுக்கின்ற வினாவாகும். ஒன்றும் கொடாதானைக் காமதேனுவென்றும் கற்பகச் சோலை என்றும் புகழ்ந்தால் இங்ஙனம் படும்பாடு நமக்கு நேரிடாதோ என்று மிகுந்த துன்பத்துடன் மற்றவர் விடை கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2:5 தன்னுணர்வுப் பாடல்கள்

கடவுளர்களிடம் தமது உள்ளக்கருத்தைப் புலப்படுத்தப் புலவர்கள் பல பாடல்களைப் பாடியுள்ளனர். பல பட்டடை சொக்கநாதப் புலவர் பாடிய பாடல் ஒன்றை எடுத்துக் காட்டாக காட்டாக தரலாம்.

*"எப்படி யெப்படிச் சொன்னாலு நானிரங்கேனெனவே*
*அப்படி யப்படி நீ யிருக்கின்ற வதிசயத்தை*
*இப்படி யிப்படி யென்றாகிலு மெனக்கே தெரியச்*
*செப்படி செப்படி யம்மா மதுரைச் சிவாநந்தியே"* [9]

மதுரையில் வீற்றிருக்கும் சிவானந்த வடிவானவளே எந்தெந்த முறைகளில் என் குறைகளைக் கூறினாலும் நான் தயவு வைக்கமாட்டேன் என்றே சொல்வதற்கெல்லாம் சும்மாயிருக்கின்ற அற்புத காரணத்தை இன்ன இன்ன முறையில் என்று விவரமாகவாவது எனக்காவது தெரியும் படி தாயே நீ விரைவாகக் கூறியருள்வாயக. இப்பாடல்களில் ஒரு நெருக்கமான உணர்வு தென்படுவதைக் காணலாம். பெரும்பான்மையான பாடல்களில் பத்தியுணர்வே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2:6 புகழ்ச்சிப்பாடல்கள்

கொடை கொடுக்கின்றவர்களைப் புகழ்ந்து பாடிய பாடல்களும் தனிப்பாடற்றிரட்டிலே இடம் பெற்றுள்ளன. புதுச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையின் கொடையை சவ்வாதுப்புலவர் புகழ்ந்து பாடிய பாடலை எடுத்துக் காட்டாகத் தரலாம்.

*"பானு கிரணம் பார்க்கும் பங்கேருக நிலவு*
*தானும் வரப் பார்க்குஞ் சகோரங்கள் – வானமரும்*
*மையைப் பார்க்கும் மயில்கள் மாவிசயானந்தரங்கன்*
*கையைப்பார்க்கும் புலவோர்கண்"* [10]

தாமரையானது பகலவனுடைய கதிர்களை எதிர்பார்த்திருக்கும், சக்கரவாகப் பறவைகள் சந்திரனொளியை எதிர்பாத்திருக்கும். மயில்கள், வானிலுள்ள மழைமேகத்தை விருப்பத்தோடு நோக்கியிருக்கும். புலவர்களுடைய கண்கள் பெரும்புகழையுடைய ஆனந்தரங்க வள்ளிலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைப் பரிசுக்காக எதிர்நோக்கியிருக்கும். புலவர்களின் புலமையைப் போற்றிப் பொருட்கொடை செய்த வள்ளல்களைப் புலவர் பாடும் பண்டைய மரபு விஜயநகர நாயக்கர் காலத்திலும் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

### 2 : 7 கூற்று நிலைப்பாடல்கள்

அகப் பொருள் மரபிலே கையாளப்பட்ட கூற்றுநிலைப் பாடல்களும் தனிப்பாடற்றிரட்டிலே தொகுக்கப்பட்டுள்ளன. நாகூர் முத்துப்புலவர் பாடிய பாடல்களில் நற்றாயிரங்கல், செவிலியிரங்கல், தலைவியிரங்கல், செவிலி கூற்று, தலைவி கூற்று, தோழிதூது போன்ற பாடல்கள் உள்ளன. இப்பாடல்களில் காமச்சுவை மிகுதியாக உள்ளமை கவனத்திற்குரியது. சங்க இலக்கியங்களில் உள்ளுறையாகப் பேசப்பட்ட விடயங்கள் இப்பாடல்களில் வெளிப்படையாகவே பேசப்படுகின்றன. அகநிலை மாந்தர் அனைவரும் இப்பண்பு நிலையில் பெரிதும் ஒத்துள்ளனர்.

## 3. பெண்மை பற்றிய பதிவுகள்

இங்கு இக்கட்டுரையின் தரவாகக் கொள்ளப்பட்ட தனிப்பாடல்களில் பெண்மை பற்றிய பதிவுகள் தொகுக்கப்பட்டு நுண்ணாய்வுக்குட்படுத்தப்படும். முன்னர் வகைப்பாடு செய்யப்பட்ட பகுதிகளில் பெண்மை பற்றிய பதிவுகள் தொகுக்கப்பட்டுப் பின்வரும் நிலைகளில் ஆராயப்படும்.

### 3 : 1 தெய்வ நிலையில் பெண்மை

தனிப்பாடல்களில் தெய்வநிலையில் பெண்மை பற்றிய கருத்துக்கள் பதிவாகி உள்ளன. காளமேகப் புலவரின் தனிப்பாடல்களில் மதுரை மீனாட்சியம்மன் பற்றிய நிந்தாஸ்துதிப் பாடல்களும் இணைக்கப்பட்டுள்ளன. மீனாட்சியம்மன் அன்னவாகனத்தில் ஏறிவருவது பற்றிய பாடல் வருமாறு அமைந்துள்ளது.

*மாயனார் போற்றும் மதுராபுரிச் சொக்க*
*நாயனார் பித்தேறி னாரென்றே – நேயமாம்*
*கன்னன் மொழி அங்கயற் கண் காரிகையா ளையையோ*
*அன்ன மிறங் காலிலை வாள்."* [11]

திருமால் வழிபடுகின்ற மதுரைப்பதியில் சொக்கநாதப்பெருமான் பித்துக் கொண்டார் எனக் கருதி அவரிடத்தில் அன்புடைய கரும்பின் சாறுபோலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லையுடைய அழகிய கயல்மீனைப் போன்ற கண்களையுடைய மீனாட்சி அம்மன் சோறு உட்கொள்ளாமல் (அன்னத்தைவிட்டு இறங்காமல்) திரிவாள். (வீதியில் எழுந்தருளுவாள்) இது என்ன பரிதாபம்.

இதேபோன்று சிதம்பரத்திலே சிவகாமியம்மையாரைக் கண்டு பாடிய நிந்தாஸ்துதிப் பாடலையும் சான்று காட்டலாம்.

*மாட்டுக்கோன் றங்கை மதுரைவிட்டுத் தில்லை நகர்*
*ஆட்டுக் கோனு க்குப் பெண்டாயினாள் – கேட்டிலையோ*
*குட்டி மறிக்க வொரு கோட்டானையும் பெற்றாள்*
*கட்டி மணிச் சிற்றிடைச்சி காண்* [12]

பெண்ணே! நீ இந்தச் செய்கையைக் கேட்கவில்லையா? மாடுகளைக் காக்கும் கோபாலனுடைய தங்கையாகிய பார்வதி தான் அங்கையற் கண்ணியாகத் தோன்றி வளர்ந்த மதுரையின் நீங்கி தில்லைப்பதியாக சிதம்பரத்தில் நடனம் செய்யும் கூத்தப் பெருமானுக்கு மனைவியானாள். மேகலையாடையை அரையில் கட்டிய ஒடுங்கிய இடையையுடைவளாகிய அவள் நாம் தலையிலே குட்டிக் கொண்டு வணங்கும்படி ஒரு கொம்பையுடைய ஆனைமுகக் கடவுளையும் பெற்றாள்.

மதுரை மீனாட்சியைத் தரிசித்தபோது பாடியசிலேடைப் பாடல் ஒன்று வருமாறு:

*விள்ளப் புதுமையொன்றுண்டால வாயினின் மேவு தென்னன்*
*பிள்ளைக் கொருகுலை மூன்றே குரும்பை பிடித்ததிலே*
*கொள்ளிக் கணன்றிட்டி யாலோர் குரும்பை குறைந்தமிர்தம்*
*உள்ளிற் பொதிந்த விரண்டிள நீர்கச் சுறைந்ததுவே* [13]

மதுரையில் சொல்லக் கூடிய ஒரு அதிசயம் உள்ளது. சிறப்புப் பொருந்திய மலையத்துவசனுடைய குமாரத்தியாகிய தடாதகைக்கு ஒரு வரிசையில் தென்னங் குரும்பை போன்ற மூன்று தனங்கள் தோன்றி அவற்றிலே நெருப்புக் கண்ணையுடைய சிவபெருமானது பார்வையால் ஒருதனம் மறையைப் பெற்று உயிர்களைக் காப்பாற்றும் அமுதம் தம் உள்ளடக்கிய இரண்டு இளநீர்க் காய்கள் ரவிக்கைக்குள் தங்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சியில் காமாட்சியம்மானைப் பணியும் போது பாடிய பாடல் வருமாறு:

*"மாக்கைக் கிரங்குங் குருகும் வளர் சக்ர வாகப்புள்ளும்*
*தாக்கச் சரபங் குழைந்த தெவ்வாறு சகதலத்தை*
*ஆக்கிப் பெருக்கித் திருவறச் சாலையி லன்னமிட்டுக்*
*காக்கைக் கொரு கொக்கின் கீழேயிருக்குங் கருங்குயிலே"* [14]

நினது பெருமை பொருந்திய கைகளில் ஒலிக்கும் வளையலும் வளர்கின்ற சக்ரவாகப் பறவை போன்ற ஸ்தனங்களும் அழுத்தமாகப் பொருந்தியவிடத்து சிங்கத்தைத் தாக்கும் வலிமையுடைய சிம்புள் வடிவம் எடுத்த சிவபெருமான் திருமேனி எப்படி இளகி மெல்லியதாயிற்று. உலகத்தைப் படைத்து வளர்த்து அழகிய அறம் வளர்த்த மண்டபத்திலே எல்லோருக்கும் உணவளித்து பிறவியில் நின்று உயிர்களைக் காப்பாற்றுவதன் பொருட்டு ஒரு மாமரத்தின் கீழே தவம் இருக்கும் கரிய நிறமுடைய குயில் போன்ற குரலையுடைய அம்மையே கூறுக.

குமரக்கடவுள் குறத்தியை மணந்தாரென்று வருந்தியதற்கு வேடிக்கையாய்ப் பாடிய பாடல் வருமாறு:

*மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை மணந்தா னென்றே*
*உருகியர னஞ்சுண்டா னுமையவளுந் தவம் புரிந்தா ளுயர்மான்மேனி*
*கருகி மிக மண்டின்றான் கமலமுக நாலானான் கடவுளோர்கள்*
*இருவிழியு மிமையா லிரவுபக லுறங்கம லிருக்கின் றாரே* [15]

வாசனைச் செடிகள் வளரும் வேளூரிலே வைத்தியநாதரது புதல்வராகிய முருகக்கடவுள் குறப்பெண்ணை குலமுறை தவறிக் கலியாணம் செய்து கொண்டார் என்று மனம் வருந்தி வைத்தியநாதர் விடத்தைத் தின்றார். உமாதேவியார் இமயமலையில் தவமியற்றினாள். உயர்ந்த திருமால் தனது உடம்பு மிகவும் கருநிறமாகப் பெற்றுப் பூமியை விழுங்கினார். பிரம்மா திருமுகம் தொங்கப் பெற்றான் அல்லது நான்கு முகமுடையவனானான். தேவர்கள் இரண்டு கண்களும் இமை கொட்டாமல் இரவும் பகலும் தூங்காமல் இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்யாமொழிப்புலவர் காஞ்சிபுரம் காமாட்சி அம்மையின் தன்மைகளை வேறு விதமாகப் பாடியுள்ளார். புலவர்களிடையே இருந்த கற்பனைப் பார்வை வேறுபாட்டை இப்பாடல் தெளிவாய்க்காட்டுகிறது.

*கஞ்சி குடியாளே கம்பன்சோ றுண்ணாளே*
*வெஞ்சினங்க ளென்றும் விரும்பாளே – நெஞ்சதனில்*
*அஞ்சுதலை யாவருக்கு காறுதலை யாவாளே*
*கஞ்சமுக காமாட்சி காண்.*

தாமரை போன்ற திருமுகமுடைய காமாட்சியம்மன் காஞ்சிபுரத்தில் குடியிருப்பவள். (அல்லது கஞ்சி குடிக்கமாட்டாள்.) ஏகம்ப வாணனுக்கு அன்னம் நிவேதிக்காமல் தானுண்ணமாட்டாள். (அல்லது கம்பம் புல் சாதம் உண்ணமாட்டாள்) கொடிய கோபதாபங்களை எப்போதும் விரும்பமாட்டாள். (அல்லது காய்கறி பதார்த்தங்களை விரும்பமாட்டாள்.) உள்ளத்தில் பயம் உடையவர்களுக்கு ஆறுதலையளிப்பவள். (ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமானுக்குத் திருவுள்ளத்தில் திருப்தியுண்டாக்குபவள்)

அந்தக்கவி வீரராகவ முதலியார் அம்பிகை மீது பாடியபாடல் ஒன்று வருமாறு அமைந்துள்ளது.

*வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க்கு அம்மியின் மீது வைக்கக்*
*கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்குக் கவுணியர்க்குப்*
*பால் கொடுத்தாய் மதவேளுக்கு மூவர் பயப்படச் செங்*
*கோல் கொடுத்தாய் அன்னையே யெனுக்கேதுங் கொடுத்திலையே."*

அன்னையே! தாயாகிய உமையம்மையே நீ திருச்செந்தூரிலிருக்கும் முருகப் பெருமானுக்கு வேற்படையை அளித்தாய். உனது கணவருக்குத் திருமணக் காலத்தில் அம்மியின் மீது தூக்கி வைப்பதற்கு உன்காலினை ஈந்தாய். திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பால் அளித்தாய். மன்மதனுக்கு மும்மூர்த்திகளும் பயப்படும்படியாக நீ அதிகாரம் அளித்தாய். எனக்கு யாதும் தரவில்லையே.

பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் மீனாட்சியம்மையைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கின்றனர். மீனாட்சியம்மை திருக்கல்யாணம், மீனாட்சியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கினால் யமபயமில்லை. சொக்கநாயகிக்கு மனமிளகாத காரணம், மீனாட்சியை வணங்கியமையால் மனக் கவலை தீர்ந்தமை, உமாதேவியார் உள்ளமிரங்காமை, மதுரைச் சொக்கநாயகியின் மூக்குத்தி, கூடற்பிராட்டி மீது வைத்த அன்பின் பெருக்கு, சொக்கநாயகியைத் தரிசிக்கும் பலன், மீனாட்சி ஆதரவு வேண்டல், மீனாட்சியை வணங்குவதால் ஏற்படும் பயன், மீனாட்சி திருவடி தொழுவதால் ஏற்படும் பலன், மதுரை மனோன்மணி, கடம்பவனவல்லி, மதுரைச்சிவாநந்தி, மீனாட்சியை வழிபடல், சிவகாமசுந்தரி எனப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அம்பிகைமீது பாடிய நிந்தாஸ்துதிப்பாடல் ஒன்று குறிப்பிடத்தக்கது.

*அந்தக் கரும் பள்ளி பாசாங்கு சத்தி கண்ணம்படைச்சி*
*நைந்த விடைச்சி குறத்திக்கு மாமி நவில் வலைச்சி*
*சந்தம் புகழுக்கச்சி பாம்பணையோனுக்குத் தங்கச்சியாம்*
*இந்தப் பரச்சியையோ சிவகாமி யென்றேத்துவதே.* [11]

அழகிய கரும்பு வில்லைக் கையில் கொண்டவளும் (அல்லது முடிவா இருண்ட நிறத்தையுடைவளும், பாசமும் அங்குசமும் திருக்கையில் உடையவளும் (அல்லது பசிய நிறமுடைய குசத்தியும்) நுண்ணிய இடையையுடையவளும் (அல்லது தளர்ந்த இடைச்சியும்) வள்ளி நாயகியாகிய குறத்திக்கு மாமியும் வலைவீசிய கடவுளுக்கு மனைவியென்று கூறப்பட்ட வலைச்சியும் சந்தனம் புனுகு சேர்ந்த கச்சணிந்தவளும், பாம்பின் மேல் பள்ளி கொள்ளும் பெருமாளுக்குத் தங்கையுமாகிய இந்தப் பராசக்தியையோ சிவகாமியென்று எல்லோரும் வழிபடுவது.

### 3 : 2 உறவு நிலை

உறவு நிலையில் தாய், நற்றாய், தலைவி, தோழி, செவிலி, பாங்கி என்ற அகப்பொருள் மரபான உறவுநிலையில் பாடப்பட்ட பாடல்களே மிகுதியாக உள்ளன. நமச்சிவாயப் புலவர் பாடிய பாடலொன்று சீதக்காதிப்பிரபு இறந்த போது தாய் பழித்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

*மாகத் தத்தும் புகழான் பகை வேந்தர் மகுடம் பொடி*
*ஆகத் தத்தும் பரியான் சீதக்காதி யணி மலரின்*
*ஏகத் தத்தும் பியிசை பாடு மார்பனி லென் மகட்கோர்*
*மோகத் தத்துண்டென்று சொன்னா ரிலைமுன் மொழிந்தவரே.* [15]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தை யளாவுகின்ற கீர்த்தியை யுடையவனும் எதிர் மன்னருடைய கீரீடம் தூளாகும்படி பாய்ந்து செல்கின்ற குதிரைகளையுடையவனும், சூடிய பூமாலையினிடத்தே ரீங்காரம் செய்யும் வண்டானது இசைப்பாடல் பாடும் மார்பையுடையவனுமாகிய சீதக்காதி யென்பவனாலே என் மகளுக்கு ஆசைப்பட்டு இறக்கக்கூடிய கண்டம் அல்லது அபாயம் இருக்குமென்று அவள் எதிர்காலத்தைப் பற்றிப் பேசிய சோதிடர்கள் முன் கூறனாரில்லையே.

தாய் கூற்றாக அமைந்த பாடல்கள் மகளின் காதல் நிலையைப் பற்றிக் கூறுவனவாக உள்ளன. எடுத்துக் காட்டாகக் கடிகமுத்துப்புலவரின் பாடலொன்று வருமாறு.

*பொன்னிலங்கை ராவணனை வென்றவிடை*
*யாட்கள கம்புளகக் கொங்கை*
*தென்னனை நேராயிருக்குஞ் சொல் வார்த்தை*
*கண்டு பயந்தேன் மகாவிற்*
*பன்னிவடி வீர்கணிதம் பம்மரம்பை*
*யாமிவட் பரிந்து சேர்வாய்*
*சொன்னமொழி தவறாத குமராவெட்ட*
*ராசேந்திர சுகுண மாலே.*

கூறிய வார்த்தை தப்பாமல் நிறைவேற்றுபவனாகிய குமரா எட்ட பெருஞ் செல்வ நற்குணப் பெரியோனே! நையக்கூடியதென்று கூறத்தகும் நுண்ணிய இடையையுடைய பெண்ணுக்கு கையானது இலக்குமியின் வீடாகிய கமலம் போன்றது. குழலானது இருள்நிறமுடையது. மயிர்ச் சிலிப்புடையமுலைகள் நொங்கின் குரும்பை போலிருக்கும். கூறுகின்ற மொழியானது கற்கண்டு, பால், தேனுங் கலந்தாற் போலிருக்கும். மிகுந்த கல்வி ஞானமுடையவள். வடிவம் தெய்வ மகளிர் திருமேனி போலுள்ளது. துடை வாழைத்தண்டு போலிருக்கும். கண் அரம் போற் கூர்மையானது. அல்குலானது பாம்பின் படம் போலிருக்கும். தயவு கூர்ந்து இவளைத் தழுவுவாயாக அடுத்து நற்றாய் கூற்றாக வரும் பாடல் ஒன்று வருமாறு அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செருத்தாக்கு மதப்புலியே திருமலை வேலப்பா நின் செவ்வாயூறல்*
*அருத்தாக்கு மரிக்கமுதங் கசப்பாகு மணைவேண்டாளை யோவாழைக்*
*குருத்தாக்கு மதை விரித்துக் கிடத்தினுஞ் சுடெனவெழுந்து கொள்வாள் காமக்*
*கருத்தாக்குமுத நாதன் கங்குல் வரக் கண்டுமுனைக் கண்டிலாளே"*

சண்டையில் எதிரிகளை அடிக்கின்ற வீரப்புலி போன்றவனே திருமலையிலிருக்கும் வேலப்ப வள்ளலே உன்னுடைய சிவந்த வாயிலுள்ள தேன் போன்ற நீரை பருகும்படி செய், ஐயோ! இளம் மாதுக்கு அமிர்தமும் கைத்திருக்கும். படுக்கையை இச்சியாள். பரிதாபம்! வாழைக் குருத்தினால் செய்யப்பட்ட படுக்கையைப் பரப்பி அதில் படுக்கவைத்தாலும் அது வெப்பமாய் இருக்கிறதென்று சொல்லி அதிலிருந்து கிளம்பிவிடுவாள். காதல் எண்ணத்தினால் செவ்வல்லி மலர்க்கு நாயகனாகிய சந்திரன் உதிப்பதைப் பார்த்தும் உன்னைப் பார்க்க அவளுக்குக் கிடைக்கவில்லையே.
அடுத்து தலைவி கூற்றாக அமைந்த பாடல் ஒன்று வருமாறு அமைந்துள்ளது.

*திரிந்தலரி கலையடக்குங் கிளுவை மருதப்ப செயசிங்க மென்னைப்*
*பொருந்தலரிதா யிருந்தாற் பூத்தானஞ் செய்யானோ போர்வேளையோ*
*வருந்தலரி குளையலரி மாவலரி பூவலரி மாதர்கீழ்பால்*
*இருந்தலரி வாரா முன்னிரவிதனின் மதியம் வந்தா லென் செய்வேனே*

பகைவர் முரண்பாட்டை ஒழிக்கும் கிளுவை மருதப்பராகிய வெற்றித்தலைவன் என்னை வந்து அணைதல் இல்லாமற் போனால் சண்டையிடும் மன்மதன் என்னைக் கொலை செய்யமாட்டனா? தோழியர் துன்பப்படமாட்டார்கள். புழி தூற்றுகின்ற வல்லமையுடையவர்கள் பகைப்பதில் வல்லவர். அழகிய கீழ்திசையில் இருந்து சூரியன் உதயம் செய்வதற்கு முன்னே இராப் பொழுதாக இருக்கின்ற இந்நேரத்தில் சந்திரன் உதயமானால் நான் என்ன செய்யக்கூடும்.

அடுத்துத்தோழி கூற்றாக அமைந்த பாடல் ஒன்று வருமாறு அமைந்துள்ளது. இதனை நாகூர்முத்துப் புலவர் பாடியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தந்துகந்து கந்தாகந் தணிக்கும் நீர்த் தட மருங்கு தனமல் குற்றையலே*
*முந்து கந்தா கணப் போழ்திலுன் மோகத்தூது மொழிவனனென்றே வந்தேன்*
*வந்து கந்தா கந்தா கழுகாசல வாசகவென வாழ்த்து முன்பாகட்டுங்*
*கந்து கந்து கந்தாகப் புரட்டுங் கடாசலா வெங்கடேசுரெட்டேந்த்ரனே"*

விரும்பிப் போய் கந்தனே! கழுகுமலையில் வாழும் பெருமானே என்று துதிக்கின்ற முதலாளியே தான் கட்டப்பட்ட தறியானது துண்டு துண்டாகும்படி பிடுங்கி எறிகின்ற மதமலை போன்ற யானையையுடையவனே! வேங்கடேசுவர எட்டேந்திரனே நூலிழை இடையாகவும் கந்து முலையாகவும் நல்ல தண்ணீர்ப் பொய்கை கடிதடமாகவும் மாதாவாவனவள் முன்னாக ஆசைப்படுவதால் அதற்கு ஆதரவாக கணநேரத்தில் உன்பால் அவளுக்குள்ள மையலைக் கூறுவதற்காகத் தூது வந்தேன்.
அடுத்த செவிலி கூற்றாக வரும் பாடல் வருமாறு அமைந்துள்ளது.

*இருபந் தந்தமெனும் பொற்பயோதர*
*மென்னசொல் லரதிக் கெண் மடங்கியவள்*
*சொருபந் தந்தச் சிவிகையில் வந்தனள்*
*சொந்த மாகவு வந்தணை வாய்சுடர்*
*தருபந் தந்தமனிய வெற் புப்பெற்றித்தாய்த்*
*துலங்கித் தனை நம்புவோர்க் கெலாம்*
*நிருபந் தந்த மனதின்படிக் கருணேசனே*
*வெங்க டேசுரெட் டேந்திரனே.*

ஒளியுள்ள தீவர்த்தி பொன்மலை யென்னும் இயல்பினனாய் தன்னை நம்பி வருகிறவர்களுக்கெல்லாம் அவரவர் விருப்பத்தின்படி கருத்தைக்குறிக்கும் எழுத்துக் கொடுத்தருளும் அபிமானமுள்ளவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே, அழகின் வடிவென்று சொல்லும்படியான பொன்னிறமான முலை இரண்டு பந்துகள் போலிருப்பன. அவளழகை யென்னென்று கூறுவது. இவளுடைய வடிவழகு ரதிதேவியின் அழகிலும் எட்டுப்பங்கு சிறந்தது. யானைத்தந்தத்தால் செய்த பல்லக்கில் வந்தாள். உன் சொந்தப் பொருளாக வந்து பாராட்டி மகிழ்ந்து கூறுவாயாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துப் பாங்கின் கூற்றாக வரும் படல் பின்வருமாறு

*அரமியந் சேர்த்திள வாழைக்குருத்தை விரித்து கிடத்தவுஞ் சூடா*
*கரமியங் கொள்ளா தெழுந்து தரையில் விழுந்தாளதனைக் கண்டு தாய்மார்*
*சரமியங்குதோ விலையோவென மூக்கிற் கையை வைத்தார்சத்ய வாய்மைத்த*
*திரமியங்குங் கிளுவை மருதப்பனுக்குச் செய்தி சொல்லித் தெளிவிப்பீரே!.*

நிலாப்பரப்பிலே கொண்டு போய் வைத்து இளசான வாழையிலையைப் போட்டு அதன்மேல் படுக்கும்படி செய்யவும் அது வெப்பமாகத் தோன்றினமையால் சுகப்படாமல் கிளம்பி வெறு நிலத்திலே விழுந்தாள். அதனையறிந்த அன்னைமார் சுவாசம் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு அவளுடைய மூக்கில் தங்கள் கையை வைத்துப்பார்த்தார்கள். நிலைத்த உண்மை உறுதியாகப் பயிலுகின்ற கிளவையூரில் இருக்கும் மருதப்ப பூபதிக்கு இச்சங்கதியைத் தெரிவித்து உண்மையை விளக்குவீராக.

மேற்படி உறவுநிலைப் பதிவுப்பாடல்கள் பல உளவேனும் விரிவஞ்சிச் சில பாடல்களே எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளன.

## 3 : 3 பொது மகளிர் நிலை

தனிப்பாடற்றிரட்டில் பொது மகளிர் நிலையான பாடல்கள் அதிகம் உள்ளன. ஏறக்குறைய விஜயநகர நாயக்கர் காலப்புலவர்கள் எல்லோரும் பொதுமகளிர் பற்றிய பதிவுகளைத் தமது பாடல்களில் மேற்கொண்டுள்ளனர். எனவே கட்டுரையில் முன்னரே அட்டவணைப்படுத்திக் காட்டிய புலவர்களின் சிறப்பாகச் சிலருடைய பாடல்களின் பதிவுகளை இங்கு சான்றாகத் தருகின்றோம்.

காளமேகப் புலவருடைய சிலேடைப் பாடல் பனைமரத்தையும் வேசையையும் குறித்துப் பாடப்பட்டுள்ளது.

*“கட்டித் தழுவுதலாற் கால்சேர வேறுவதால்*
*எட்டிப் பன்னாடை இழுத்தலாற் – முட்டப்போய்*
*ஆசைவாய்க் கள்ளை யருந்துதலா லப்பனையும்*
*வேசையென லாமே விரைந்து.”*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைமரமும் வேசையும் பற்றிய பாடல்

*பாரத் தலைவிரிக்கும் பன்னாடை மேற்சுற்றும்*
*சோர இளநீர் சுமந்திருக்கும் – நேரே மேல்*
*ஏறியிறங்கவே யின்பமாம் தென்னமரம்*
*கூறுங் கணிகை யென்றே கொள்.*

வெற்றிலையும் வேசையும் பற்றிய பாடல்.

*கொள்ளுகையா னீரிற் குளிக்கையான் மேலேறிக்*
*கிள்ளுகையாற் கட்டிக் கிடக்கையால் – தெள்ளுபுகழ்ச்*
*செற்றலரை வென்ற திருமலை ராயன் வரையில்*
*வெற்றிலையும் வேசையாமே.*

கூத்தியாரும் குரங்கும் பற்றிய பாடல்.

*ஓட்டம் கடியதாலுள்ளவரை மேவுதலால்*
*சேட்டை யெவரிடத்துஞ் செய்தலால்*
*காத்திரத்திற் குட்டியுறக் கட்டுதலாற் றெட்டுதலால்*
*கூத்தியர்க்கு நேராங் குரங்கு.*

மதுரையிலிருக்கும் கூத்தாள் என்னும் தாசியையும், அவள் தமக்கையையும், தாயையும், பாட்டியையும் சிறப்பித்துப்பாடியது.

*கூத்தாள் விழிகணெடுங் கூர்வேலாங் கூத்தாள் தன்*
*மூத்தாள் விழிகண் முழுநீலம் – மூத்தாள் தன்*
*ஆத்தாள் விழிக ளரவிந்த மாத்தாள் தன்*
*ஆத்தாள் விழிகளிரண் டம்பு*

இப்பாடலில் காமவயப்பட்ட மக்களுக்கு ஒரு அறிவுரையும் இணைந்திருக்கும். அக் காலத்துச் சமூகத்திலிருந்த பரத்தமை பற்றிய அங்கீகாரத்தை நன்கு அறிய முடிந்தது. பொது மகளிர் தொடர்பு ஆண்கள் மத்தியில் பிரபலமடைந்த காலமும் என்பதால் பரத்தமையுறவு பற்றிய செய்திப்பதிவுகளை இலக்கியமாக மாற்றும் முயற்சியும் நடைபெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 : 4 தொழில் நிலை

தொழில் நிலையில் பெண்கள் பற்றிய பதிவுகளில் காளமேகப்புலவர் பாடிய இரு பாடல்கள் சான்றாக அமைவன. ஒன்று கீரைக்காரச் சிறுமியைப் பற்றிப் பாடிய பாட்டு.

*வெள்ளை யானேறும் விமலரடி பணியும்*
*பிள்ளையான் வாழும் பெருந்தெருவில் – வள்ளை*
*இலைக் கறிவிற் பாண்மருங்கு லிற்றுவிடு மென்று*
*முலைக் கறிவிப் பாரிலையே முன்*

வெண்ணிறமாகிய காளைமீது எழுந்தருளும் குற்றமற்ற சிவபெருமானுடைய திருவடிகளைப் பணிகின்ற குழந்தையாகிய நான் குடி இருக்கின்ற பெரிய வீதியில் வள்ளைக் கொடிக் கீரையை கறி சமைப்பதற்காக விற்கின்றவளுடைய இடையானது (மேலிருந்து அழுந்தினால்) ஒடிந்து விடும் என்று அவளுடைய தனங்களுக்கு முன்னாகத் தெரிவிப்பார் இல்லையே.

அடுத்து மோர் விற்கும் இடைச்சியைப்பற்றிய பாடல் வருமாறு.

*காரென்று பேர் படைத்தாய் ககனத் – துறும்போது*
*நீரென்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்*
*வாரொன்று மென்முலையா ராச்சியர்கை வந்ததற்பின்*
*மோரென்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.*

இடைச்சியின் மோரே வானத்தில் இருக்கும் மேகம் என்று பேர் பெற்றாய். நீண்ட நில உலகத்தில் நீ வந்த பிற்பாடு நீர் என்ற பேரினை உடையாய். கச்சணிந்த மெல்லிய தனங்களையுடைய இடைச்சியர் கையில் சேர்ந்த பிற்பாடு மோர் என்று பேர் பெற்றாய். இவ்வாறு கார், நீர் மோர் என்ற மூன்று பெயரும் உடையை ஆனாய்.

அடுத்து உணவிடும் ஒரு பெண்ணைப் பற்றிப் பாடியது.

*நீச்சாற் பெருத்திடு காவேரியாற்றை நிலை நிறுத்திச்*
*சாய்ச் சாளிலைக் கறிச் சாற்றையெல்லாமது தானுமன்றி*
*காய்ச்சாப் புளியும் நற் கல்லுடன் சோறுங் கலந்து வைத்த*
*ஆச்சாளை யான் மறவேன் மறந்தான் மன மாற்றிடுமோ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்தும்படியாக வெள்ளமாப் போகின்ற காவேரி ஆற்றினைத் தடுத்து கீரைச்சாற்றினில் அதன் நீரைச் செலுத்தினாள். அது வல்லாமல் காய்ந்து போன புளியையும் அக்கீரைச் சாற்றினில் சேர்த்தாள். நல்ல கற்களோடு சோற்றையும் சேர்த்துச் சமைத்தவளாகிய அந்த அம்மாளை நான் மறவேன். மறந்தாலும் என் மனம் கேட்குமா?

## 3 : 5 பண்பாட்டு நிலை

பண்பாட்டு நிலை தொடர்பாகவும் தனிப்பாடல்களில் பெண்மை பற்றிய பதிவுகள் உள்ளன. அவை கூறும் செய்திகளில் சில சமூக மரபு நிலைக்கு மாறானவையாக உள்ளன. எனவே அவற்றைத் தனித்துவமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

*எட்டி குளத்தி லிருந்து சரக்கு விற்கும்*
*குட்டி செட்டி தன் மகளைக் கொண்டு போய் – நொட்டுதற்கே*
*ஆயிரம் யானை யெழுநூறு கூன்பகடு*
*பாயும் பகடென்பத் தைந்து.*

எட்டிகுள வியாபாரியாகிய குட்டி செட்டி மகளை மணந்து புணர்வதற்காகக் கொடுக்கப்பட்டவை. யானை ஆயிரமும், ஒட்டகை எழுநூறு, எண்பத்தைந்து பாய்ந்து செல்லும் எருதுகளுமாம்.

தெலுங்குத் தேவடியாளிடம் பட்டபாட்டைக் கூறும் பாடல்.

*ஏமிரா வோரியென்பா ளெந்துண்டி வஸ்தி யென்பாள்*
*தாமிராச் சொன்ன வெல்லாந் தலைகடை தெரிந்ததில்லை*
*போமிராச் சூழஞ் சோலை பொரு கொண்டைத் திம்மி கையில்*
*நாமிராப் பட்டபாடு நமன் கையிற் பாடுதானே*

திம்மி என்னும் தெலுங்குத் தேவடியாள் என்னடா அடே என்பாள். நேற்று இரா அவள் பேசிய மொழிகள் எல்லாவற்றிலும் முதல் முடிவு என்னவென்று தெரியவில்லை. இருள் அடர்ந்த சோலையைப் போன்ற குடுமியை உடைய அவளிடத்தில் நாம் இராத்திரி அனுபவித்த சங்கடம் எமன் கையில் அகப்பட்டால் படும் துன்பமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காடு என்னும் ஊரிலுள்ள ஒரு வேளாளன் மருமகனுக்குத் தன் மகளை அன்பின் பெருக்காற் கூடியதைக் குறித்து இரட்டையர் பாடிய பாடல் வருமாறு.

*மாங்காட்டு வேளாளன் மகளை மருமகன் பால்*
*போங் காட்டி லின்பம் புணர்ந்தானே – ஆங்காணும்*
*மக்கள் மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்*
*சொற் கேட்ட லின்பம் செவிக்கு*

மாங்காடு என்னும் ஊரில் குடியிருந்த வேளாளன் சிறுமியாகிய தன் புதல்வியை மருமகனிடத்தில் கொண்டு விடுவதற்குப் போகும் பொழுது வழியிலுள்ள காட்டில் (குழந்தை போல) எடுத்தணைத்து இன்புற்றான். அது பொருத்தமே. (ஏனெனில்) (திருவள்ளுவர் கூறியபடி) புதல்வர்கள் தமது உடம்பைத் தொடுதல் பெற்றோருக்கு இன்பம் அளிப்பது. மேலும் அவர்களுடைய மொழியைக் கேட்பதும் பெற்றோர்களுடைய காதுக்கு இன்பந் தருவதாகும்.

வேசை கதை சொல்லச் சொன்னபோது சொல்லியதான பாடல்

*சோமன் புறப்படத் தென்றலும் வீசத் துயிலொழிய*
*யாமங்க டோறுங் குயில்வந்து கூவி டந்நேரத்தில்*
*நாமும் பிழைத்து மனிதர் முன் பேசிட நாமு முண்டாய்க்*
*காமக் கலகஞ் தெளிந்தபின் நானுங் கதை சொல்வனே*

திங்கள் உதயமாகவும், தென்றற் காற்று வீசவும் தூக்கம் இல்லாமற்போய் ஒவ்வொரு சாமத்திலும் குயில் எழுந்து கூவவும் அந்த வேளையில் நாம் உயிர் தப்பி மனிதர்களுக்கு முன்னே பேசுவதற்கு உரிய உணர்ச்சி நமக்கு ஏற்பட்டு காதற்போர் முடிந்தது தெளிவடைந்த பிற்பாடு நீ மாத்திரமல்லாமல் நானுங் கூடக் கதை சொல்லுவேன்.

## 4 பெண்மை பற்றிய ஆய்வு நோக்கும் மதிப்பீடும்

மேற்காட்டிய பெண்மை பற்றிய பதிவுகளை ஆய்வு நோக்கிலே நுணுகிப் பார்க்கும் போது சில மதிப்பீடுகளைச் செய்ய முடிகின்றது. காலத்தின் சூழ்நிலையும் இத்தகைய பதிவுகளைச் செய்வதற்கு மிகவும் வாய்ப்பாக உள்ளது. பெண்களைப் பற்றிய சிந்தனையில் முதற் காலத்திலே தோன்றிய இலக்கியப் பதிவுகளை மனதில் கொண்டு புலவர்கள் இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களைப் பாடியதை உணரமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் பரத்தமையொழுக்கமும் காம உணர்வுநிலைகளும் பாடல்களிலே ஒரு நயக்கத்தக்க நாகரிமான முறையிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இக்கப்பாடல்களில் அவை அநாகரிகமான முறையிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலேடைப் பாடல்களில் பரத்தையரை ஏனைய பொருட்களுடன் இணைத்துப் பாடுகின்ற பாடல்களில் பெண்மை பற்றிய ஒரு காழ்ப்பு உணர்வே மிக்கோங்கியுள்ளது. ஆண் மொழியில் பேசப்படும் விடயங்கள் இழிந்த குணப்பண்பை வெளிப்படுத்துவதிலே முனைப்பாகச் செயற்பட்டதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

இதற்கு முக்கியமான காரணம் பரத்தமையுருவிற்குக் கொடுக்கப்பட்ட சமூக அங்கீகாரமே. இந்த அங்கீகாரம் புலவர்களைப் பாடத் தூண்டியுள்ளது. பெண்களுடைய உறுப்புக்களைப் பற்றிக் கேவலமான முறையிலே அறிமுகம் செய்யும் புதிய செல்நெறி ஒன்று இக்காலத்தில் தோன்றி வளர்ந்துள்ளது. உதாரணமாக ஒரு சிலேடைப் பாடலைக் காட்டலாம்.

*இட்டிட்டு வாங்குதலா லின்பவெள்ளை தோன்றுதலால்*
*மட்டிட்டு மூடி மறைத்தலால் – முட்டத்*
*தெருண்டோர்கள் போற்றுந் திருமலைராயன் சீர்க்*
*கரண்டகமும் பெண்குறியுங் காண்.*

சுண்ணாம்பு வைக்கும் சிமிழில் அதிலுள்ள சுண்ணாம்பு விரலினால் அடிக்கடி எடுக்கப்பட்டு மீண்டும் அதிலேயே வைக்கப்படுவதாலும் வெற்றிலைக்கு இனிய சுவைதரும் வெண்ணிறச் சுண்ணாம்பு உடைமையாலும் ஒரு அளவில் சுண்ணாம்பு இடப்பட்டு அது மூடிவைக்கப்பட்டதாலும் பெண்குறியானது புணர்ச்சி செயலுக்கு உள்ளதாலும் சுகத்திற்கு ஏதுவாகிய வெண்ணீர் தோன்றுவதாலும் அளவான அரை மூடியிட்டு மறைக்கப்படுவதாலும் நிரம்பத் தெளிந்தோர் துதிக்கும் திருமலைராயனது சிறந்த கரண்டகமும் பெண்குறியும் ஒப்பென்றறிக.

இவ்வாறு பெண்குறியைப் பற்றி விஸ்தாரமாக வர்ணிப்பது புலவருடைய மனநிலையில் ஏற்பட்ட ஒரு வக்கிரமான உணர்வின் தூண்டலாகவே உள்ளது. இக்காலத்துப் பெண் பாற் புலவர்களின் பாடலில் இத்தகைய வெளிப்பாட்டைக் காணமுடியவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் தலைமுறைகளையே காணும்போது அவர்களுடைய உறுப்புக்களைப் பாடும் மனநிலை அக்காலப் புலவர்களுக்கு இருந்துள்ளது. மதுரையில் இருக்கும் கூத்தாள் என்னும் தாசியையும் பாட்டியையும் வர்ணிக்கும் பாடல் ஒன்றைக் காளமேகப் புலவர் பாடியுள்ளார். இப்பாடல் கட்டுரையில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வர்ணனையைப் பின் வருமாறு சுட்டிக்காட்டலாம்.

*கூத்தாள் விழி – நெடுங்கூர்வேல்*
*கூத்தாள் மூத்தாள் விழி – நீலோற்பலம்*
*மூத்தாள் ஆத்தாள் விழி – அரவிந்தம்*
*ஆத்தாள் தன் ஆத்தாள் விழி – இரண்டு அம்பு*

இவ்வாறு தாசிகளது தலைமுறை பற்றிய பதிவைப் பாடலில் காளமேகப் புலவர் செய்யும் போது பரத்தமையுறவில் மூன்று தலைமுறையினர் ஈடுபட்டிருப்பதையும் குடும்பத்திலுள்ள எல்லாப் பெண்களும் இதனைத் தொழிலாகக் கொண்டிருப்பதையும் பதிவு செய்ய முற்பட்டுள்ளனர். ஆனால் அதே வேளையில் மூன்று தலைமுறையினரையும் ஆண் அனுபவிப்பதையும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனைக் கிழத்தாசியிடம் சென்றவர் நிந்தித்துப் பாடிய பாடல் மூலமும் உறுதி செய்துள்ளார்.

*இந்து முடிக்குஞ் சடையா ளரிக்குந் தொண்டைவள நாட்டிற்*
*சிந்து படிக்கக் கவி படிக்கத் தெரியாமடவா யுன்றனுக்குக்*
*கெந்தப் பொடியேன் பூமுடியேன் கிழமாய் நரைத்து முகத்திரைந்தும்*
*இந்து முறுக்கேன் வீறாப்பேன் எடுப்பேனுன்னைக் கெடுப்பேனே"*

திங்களைச் சூடிய சடைமுடியை உடைய சிவபெருமான் கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற வளம் பொருந்திய தொண்டை மண்டலத்தில் நொண்டிச் சிந்துகளும், சிறந்த பாடல்களும் படிக்கத் தெரியாத அறிவிலியே உனக்கு வாசனைப் பொடி எதற்கு? மலர் முடிப்பது எதற்கு? வயது முதிர்ந்தது நரை திரை உன்முகத்தில் உண்டான பிற்பாடு இவ்வகையான கெம்பீரம் எதற்கு? இறுமாப்பு எதற்கு? கிளர்ச்சி எதற்கு? உன்னை இழக்கத் தயாராய் இருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் மூலம் தாசியிடம் செல்லும் ஆண்களின் எதிர்பார்ப்புக்களும் புலப்படுத்தப்பட்டுள்ளன. அழகு, இளமை, ஆடல், பாடல், காமம் என்பவற்றை அனுபவிக்க விரும்பும் ஆண்களின் மனோநிலையைக் காளமேகம் உணத்தியுள்ளார். விஜயநகர நாயக்கர் காலத்தில் தாசிகளின் பெருக்கத்திற்கும் ஆண்களே காரணம் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். பொருள் காரணமாகப் பெண்கள் இத் தொழிலை மேற்கொண்டனர் என்ற செய்தி ஒரு புறமிருக்க அத்தகைய பெண்களைத் திருமணம் செய்து குடும்பம் நடத்த ஆண்கள் முன்வரவில்லையென்ற உண்மையும் இங்கு வெளிப்படுகிறது.

புலவர்களின் மனப்பாங்கிலே ஏற்பட்ட வரட்சி நிலையும் பொருளாதாரச் சீர்கேடும் தெய்வங்களையே கேலி செய்து பாடும் மனநிலையை ஏற்படுத்தியது. 'வசைக்கவி' என்ற புதியதொரு கவிதையமைப்பிலே தனது மனப் பதிவுகளைப் புலவர் மேற்கொண்டுள்ளனர். பெண்களை விளித்துப் பாடுவது போலமைந்த பாடல் ஒன்றை இங்கு சான்றாக்க் காட்டலாம்.

*கண்டிரோ பெண்காள் கடம்ப வனத்தீசனார்*
*பெண்டிர் தமைச் சுமந்த பித்தனார் – எண்டிசைக்கும்*
*மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்*
*அக்காளை யேறினாராம்*

கடம்பவனத் திருப்பதியாகிய மதுரையில் வீற்றிருக்கும் சிவபெருமான் கங்கையாகிய பெண்ணைத் தலையிலும் உமையம்மையை இடப்பாகத்திலும் சைத்துச் சுமந்த பைத்தியக்காரர். எட்டுதிசையிலும் மிகுதியாகப் புகழ்ந்து பேசப்படுவதாகிய அழகிய திருக்கரத்தின் மீது அக்கினியை வைத்திருப்பவர். கீர்த்திபெற்ற அந்த நந்திவாகனத்தின் மீது வீற்றிருப்பாரே.

இக்கட்டுரை பெண்மை பற்றிய இத்தகைய பதிவுகள் எதிர்காலப் புலமையாளரால் களையப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கின்றது. பல்வேறு சமூகத்தளங்களிலும் பெண்மையின் பங்களிப்பு முனைப்புப் பெற்றுவரும் போது இத்தகைய இழிந்த எடுத்துரைப்புக்கள் மனித மனங்களை மாசுப்படுத்திவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள் விபரம்

1. ஆரோக்கியசாமி : நாயக்கர் காலம், மதுரைத்தமிழ்ச் சங்க பொன் விழா மலர், ப. 29, 40, 41.
2. சுப்பிரமணியபிள்ளை : பல வித்துவான்கள் பாடியதனி பாடற்றிரட்டு, முதற்பாகம், முன்னுரை, B. இரத்தினநாயக்கர் கலன்ஸ், சென்னை, 1939.
3. மாணிக்கம் . அ. : தனிப்பாடல் திரட்டு, முன்னுரை, ப. 3–6 பூம்புகார் பிரசாரம் சென்னை, 1977.
4. வையாபுரிப்பிள்ளை. எஸ். : இலக்கியமணிமாலை, ப. 31–36, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1954.
5. தனிப்பாடல் திரட்டு : தொகுப்பு. சுப்பிரமணியபிள்ளை, ப. 99
6. தனிப்பாடல் திரட்டு : மேலது. ப. 125.
7. மேலது : ப. 130.
8. மேலது : ப. 199.
9. மேலது : ப. 296.
10. மேலது : ப. 308.
11. மேலது : ப. 127.
12. மேலது : ப. 136.
13. மேலது : ப. 162.
14. மேலது : ப. 167.
15. மேலது : ப. 171.
16. மேலது : ப. 194.
17. மேலது : ப. 229
18. மேலது : ப. 275
19. மேலது : ப. 297
20. மேலது : ப. 330
21. மேலது : ப. 333
22. மேலது : ப. 332
23. மேலது : ப. 370
24. மேலது : ப. 368
25. மேலது : ப. 332
26. மேலது : ப. 103
27. மேலது : ப. 104
28. மேலது : ப. 104
29. மேலது : ப. 105
30. மேலது : ப. 131
31. மேலது : ப. 134
32. மேலது : ப. 178
33. மேலது : ப. 173
34. மேலது : ப. 149
35. மேலது : ப. 179
36. மேலது : ப. 198
37. மேலது : ப. 173
38. மேலது : ப. 110
39. மேலது : ப. 135
40. மேலது : ப. 1308.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயநகர - நாயக்கர் கால நாட்டுப்புறக் கலை இலக்கியங்கள்

பேராசிரியர் இருளாண்டி முத்தையா

## 1.0 முன்னுரை:

பின்நவீனத்துவச் சிந்தனைகளும் பின்காலனியச் சிந்தனைகளும் இந்தியச் சமூகத்தில் அதுவும் குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தில் அதிர்வுகளையும் அசைவு களையும் ஏற்படுத்தத் தொடக்கிய 20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து சமூகம், பண்பாடு, வரலாறு பற்றிய பெருங்கருத்தாடல்கள் கட்டவிழ்ப்புச் செய்யப்பட்டு வருகின்றன. ஒற்றைத்தன்மை (Homogeneity), நேர்கோட்டுத் தன்மை (linearity), சாராம்சம் (Essence), ஒழுங்கமைப்பின் மேலாதிக்கம் (Hegemony of Rationalisation) ஆகிய நவீனத்துவச் சிந்தனைகள் பின் நவீனத்துவச் சிந்தனையாளர்களால் பன்மைத்தன்மை (Hererogeneity), நேர்கோடற்ற தன்மை (Non-Linearity), கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கம் (Collectiveness), ஒழுங்கமைப்பின் சமத்துவம் (Equality of Rationalisation) போன்ற கருத்தாடல்களால் கட்டவிழ்ப்புச் செய்யப்படுகின்றன. தமிழ்ச் சூழலில் சமூகம், பண்பாடு, வரலாறு ஆகிய அனைத்துமே மேட்டுக்குடி மக்களின் அல்லது சமூக மையமாகக் கருதப்படும் மக்களின் சமூகம், பண்பாடு, வரலாறாகவே முன்மொழியப்பட்டுள்ளன. விளிம்பு நிலை மக்களுக்கு சமூகம், பண்பாடு, வரலாறு இருப்பதை நவீனத்துவம் கவனத்திற் கொள்ளவில்லை. அதாவது சமூகத்தின் மையத்திற்குள் அனுமதிக்கவில்லை. அங்கீகரிக்க வில்லை. இதைப்போன்ற பொருளாதார ஒடுக்குமுறைக்கு உட்படும் தொழிலாளர்கள், பாலின ஒடுக்குமுறைக்கு உட்படும் பெண்கள், மூன்றாம் பாலினத்தவரான அரவாணிகள், வாழிட அடையாளமற்ற சாட்டையடிக்கார்கள், பூம்பூம் மாட்டுக்காரர், மணியாட்டிக்காரர் போன்ற நாடோடி மக்கள் ஆகியோரின் சமூகம், பண்பாடு, வரலாறு போன்றவற்றையும் நவீனத்துவம் கவனத்தில் கொள்ளவில்லை. அவர்கள் விளிம்புநிலைக்கும் விளிம்பு நிலையில் கவனிப்பாரற்றுப் புதைந்து போயிருந்தனர். நவீனத்துவச் சிந்தனையாளர்கள் ஒற்றைச் சமூகம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை வரலாறு என்ற கட்டமைப்பிலேயே கவனம் செலுத்தினார்கள். இத்தகைய கட்டமைப்புகள் பின்நவீனத்துவச் சிந்தனையாளர்களால் தலைகீழாக்கப்பட்டன. விளிம்புநிலை மற்றும் அடித்தள மக்களின் சமூகச் செயற்பாடுகளும் பண்பாட்டு நடவடிக்கைகளும் அவர்களைப் பற்றிய வரலாற்றுக் கட்டமைப்புகளும் பின்நவீனத்துவச் சிந்தனையாளர்களால் முன்னிலைப் படுத்தப்பட்டன. அவற்றின் சிறப்புக்கள் முன்மொழியப்பட்டன.

பின் நவீனத்துவச் சிந்தனையாளர்களைப்போன்றே பின்காலனியச் சிந்தனையாளர்களும், காலனியச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை விமர்சித்துக் கட்டவிழ்ப்புச் செய்கின்றனர். ஒருமுகப்பட்ட இந்தியா (Pan India), இந்துசமயம், இந்துதத்துவம் (Hinduism), இந்துசமயச் சடங்குகள், சாதி இந்துக்கள் (Caste Hindus), அட்டவணைச் சாதிகள் (Scheduled Castes & Tribes) போன்ற காலனியக் கருத்துருவங்கள் கட்டவிழ்ப்புச் செய்யப்பட்டன. ஒருமுகப்பட்ட இந்தியா எனும் காலனியக் கருத்து பின்காலனியச் சிந்தனையாளர்களால் மறுக்கப்பட்டுப் பன்முக இந்தியா எனும் கருத்து முன்மொழியப்படுகிறது. அதைப்போலவே காலனிய ஆய்வாளர்கள் நாட்டுப்புற மக்களின் தெய்வங்களையும் அவை தொடர்பான வழிபாட்டு முறைகளையும் இந்துசமயம் சார்ந்தவையாகக் குறிப்பிட, பின்காலனிய ஆய்வாளர்களோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புற மக்களின் பன்மைத் தன்மையுடைய தெய்வ வழிபாட்டு முறைகளை ஒற்றை இந்துசமயத்திற்கு மாற்றாக முன் வைத்தார்கள்.

இதைப்போன்றே காலனிய வரலாற்று வரைவியலும் கட்டவிழ்ப்புச் செய்யப்பட்டது. ஒரு நாட்டின் வரலாற்றை ஆளுவோரின் வரலாறாக எழுதுவதற்கான வழிமுறைகளை விளக்கும் காலனிய வரைவியல் மறுக்கப்பட்டு ஆட்சி அதிகாரத்தாலும் சமூகப் பண்பாட்டு ஒடுக்குமுறைகளாலும் பொருளாதார அடக்குமுறையாலும் அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களின் வரலாறை எழுதுவதற்கான மாற்று வரைவியலைப் பின்காலனியச் சிந்தனையாளர்கள் முன்மொழிந்தார்கள். எழுத்துப் பதிவுகளையே வரலாறு எழுதுவதற்கான தரவுகளாகக் கொள்ள வேண்டும் என்ற காலனிய அறிவுஜீவுகளின் அதிகார அறிவுரையை மாற்றி வாய்மொழித் தகவல்களையும் தரவுகளாகப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகளை வகுத்தனர். வாய்மொழித் தரவுகளாக இருந்தாலும் எழுத்துப் பதிவுத் தரவுகளாக இருந்தாலும் இரண்டிலும் விளிம்புநிலை மற்றும் அடித்தள மக்கள் தொடர்பான வரலாற்றுத் தகவல்களும் இடம் பெற்றிருக்கும் என்றாலும் பின்காலனிய வரலாற்று ஆய்வாளர்கள் முதலாம் பிரிவினரின் வரலாற்றை வெளிப்படுத்துவதற்கான தகவல்களுக்கே முன்னுரிமை கொடுத்தனர். மேலும் விளிம்பு நிலை மற்றும் அடித்தள மக்கள் ஆளும் வர்க்கத்தினரால் ஒடுக்கப்பட்ட முறை பற்றி விளக்குவதற்கும் ஆர்வம் காட்டினர்.

ஆக, பின்நவீனத்துவச் சிந்தனையாளர், பின்காலனியச் சிந்தனையாளர்களின் கட்டவிழ்ப்பு முறையியலைப் பயன்படுத்தி இந்தக் கட்டுரையில் விஜயநகர நாயக்கர் கால நாட்டுப்புற இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

### 1.1 இலக்கிய அரசியல்

இலக்கியத் திறனாய்வாளர்களாக இருந்தாலும் இலக்கியங்களைத் தங்கள் ஆய்வுக்குத் தரவுகளாகப் பயன்படுத்தும் பிறதுறை ஆய்வாளர்களாக இருந்தாலும் அவர்களுடைய இலக்கியத் தேர்வுக்கான அரசியலைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்ச் சூழலில் எழுத்துப்பதிவு இலக்கியங்களுக்குச் சங்கக் கவிதைகளில் தொடக்கி இக்கால ஹைகூ கவிதை வரை ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. இதைப்போன்றே நாட்டுப்புறக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை, தொன்மம், கதைப்பாடல், தொழிற்களப் பாடல், வாழ்வியற் சடங்குகள் தொடர்பான பாடல், தாலாட்டுப் பாடல், விடுகதை என வாய்மொழி இலக்கியத்திற்கும் மிக நீண்ட பழைமையான பாரம்பரியம் உண்டு. இவை தவிர ஒரு வகையில் வாய்மொழித் தன்மையுடையதாகவும் இன்னொரு வகையில் எழுத்துப்பதிவுப் பனுவல்களாகவும் விளங்கும் திரைப்படப் பாடல்களுக்கும் நூற்றாண்டுப் பாரம்பரியம் உண்டு. இம்மூன்று வகை இலக்கியப் பிரிவுகளுள் முதற் பிரிவே இலக்கியமாக, செவ்விலக்கியமாக மேட்டுக்குடி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களின் ஏற்பே சமூகத்தின் ஏற்பாகவும் ஆக்கப்பட்டது. வாய்மொழி இலக்கியம் என்பது பாமர இலக்கியம், பாமரர் பாடல், நாட்டுப்பாடல், காற்றில் மிதந்த கவிதை, ஏட்டில் எழுதாக்கவிதை, கட்டுக்கதை எனப் பல பெயர்களில் குறிப்பிடப்பட்டு அவை இரண்டாம் தர இலக்கியமாகக் கருதப்பட்டது. அறுபதுகளுக்குப் பிறகு நா. வானமாமலையின் சமூக வரலாற்று முக்கியத்துவத்தை வெளிப்படுத்திய பின்னரும் கூட அவை சங்கக் கவிதைகளுக்குச் சமமான தகுதியைப் பெறவில்லை. நாட்டுப்புற இலக்கியங்களை வரலாற்றுக்கான தரவுகளாகப் பயன்படுத்துவது குறித்த வரலாற்று ஆய்வாளர்களிடையே ஒருமித்த கருத்து நிலவவில்லை என்பதும் அதே நேரத்தில் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகிய எழுத்துப்பதிவு இலக்கியங்களைத் தரவுகளாகப் பயன்படுத்துவது குறித்த தயக்கம் வரலாற்று அறிஞர்களிடையே இல்லை என்பதும் இலக்கியம் தொடர்பான அதிகார அரசியலை வெளிப்படுத்துகிறது.

**1.1.1** வரலாற்று ஆய்வாளர்கள் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தோன்றிய எழுத்துப்பதிவு இலக்கியங்களை, அதாவது செவ்விலக்கியங்களைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார்கள். கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி **(1973 : 63–67)**, ஏ. கிருஷ்ணசுவாமி **(1975 :429–444)**, கே. கே. பிள்ளை **(2000 : 431–440)**, அ. கி. பரந்தாமனார் **: (1981 : 439–425)**, கே. ராஜய்யன் **(2005 : 189–190)** , ஜி. சேதுராமன் **(1997 : 306–312)** ஆகிய அறிஞர்கள் விஜயநகர நாயக்கர் கால இலக்கியங்கள் தொடர்பான தகவல்களைத் தொகுத்துத் தந்துள்ளனர். இவர்கள் அனைவரும் எழுத்துப்பதிவு இலக்கியங்கள் தொடர்பான தகவல்களையே தந்துள்ளனர். இவர்களுள் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் நாயக்கர் காலத்துத் தமிழ் இலக்கியங்களை விடத் தெலுங்கு மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள் தொடர்பான தகவல்களையே அதிகம் தந்துள்ளனர். அவற்றுள்ளும் தேர்வு செய்த இலக்கியங்கள் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களையே தந்துள்ளார். அவர் எடுத்துக்காட்டியுள்ள இலக்கியங்களுள் பிறநூல்களும் சைவ வைணவ சமயம் தொடர்பானவையாகவும் தத்துவம் மற்றும் தர்க்கம் தொடர்பானவையாகவும் உள்ளன.

ஏ. கிருஷ்ணசுவாமி அவர்களும் சமயம் மற்றும் தத்துவம் தொடர்பான சமஸ்கிருத மற்றும் தெலுங்கு இலக்கியங்களை அதிகமாகக் குறிப்பிட்டுவிட்டுச் சில தமிழ்ப் புலவர்களைச் சுட்டிக்காட்டி அவர்களுடைய படைப்புக்கள் பற்றியும் விவரித்துள்ளார். விஜயநகர காலத்தில் வாழ்ந்த முதுசூரியர், இளஞ்சூரியர் ஆகிய புலவர்களைக் குறிப்பிட்டு அவர்களுடைய இலக்கியங்களான ஏகாம்பரநாதர் உலா, தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர் கலம்பகம் ஆகியவற்றையும், வில்லிபுத்தூராரின் பாரதத்தையும் வேதாந்த தேசிகரிகன் 25 பிரபந்தங்களோடு திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், கப்பல்கோவை ஆகியவற்றையும் அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி ஆகியவற்றையும் சுட்டிக்காட்டியதோடு காளமேகம், அதிமதுரம், புராண திருமலை நாதர் ஆகிய படைப்பாளர்களையும், சிதம்பரப் பாட்டியலின் ஆசிரியர் பரஞ்சோதியார், பாகவத புராணத்தைத் தமிழில் மொழிபெயர்ந்த செவ்வைச்சூடுவார், இருசமய விளக்கம் என்ற நூலை எழுதிய ஹரிதாசா, சூடாமணி நிகண்டு தயாரித்து வெளியிட்டுள்ள மண்டலபுருடர் ஆகியோரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் பல சைவ, வைணவ சமயங்கள் தொடர்பான இலக்கியங்களாகவும் சில தத்துவம், மொழி சார்ந்தவையாகவும் உள்ளன. கூளப்பநாயக்கன் காதல் போன்ற இலக்கியங்களும் நாயக்கர் காலத்தில் படைக்கப்பட்டுள்ளன என்ற போதிலும் சாஸ்திரியாரும் ஏ. கிருஷ்ணசாமியும் அவை தொடர்பான தகவல்களைத் தரவில்லை. இலக்கிய அரசியல் வரலாற்றாய்வாளர் கே. கே. பிள்ளை அவர்கள் தம்முடைய நூலில் ஏ. கிருஷ்ணசுவாமி அவர்கள் தந்துள்ள தகவல்களோடு புதிய தகவல்களையும் தந்துள்ளார். இவர் குறிப்பிடுகின்ற இலக்கியங்களில் பெரும்பாலானவை சைவ சமயம் சார்ந்தவையாக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அருணகிரிநாதரின் திருப்புகழ், கச்சியப்ப சிவாச்சாரியரின் கந்தபுராணம், 14ஆம் நூற்றாண்டு அவ்வையின் விநாயகர் அகவல், கடவுண் மாமுனிவரின் திருவாதவூரர் புராணம், காழிக் கண்ணுடைய வள்ளல் என்னும் சைவ முனிவரின் ஒழிவில் ஒடுக்கம், குமரகுருபரரின் மீனாட்சி பிள்ளைத்தமிழ், வில்லிபுத்தூரரின் பாரதம் ஆகிய நூல்களுள் பெரும்பாலானவை சைவ சமயம் சார்ந்தவையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. கி. பரந்தாமனார் நாயக்கர் காலத்துத் தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள் தொடர்பான தகவல்களைச் சற்று விரிவான முறையில் தந்துள்ளார். "திருமலை நாயக்கர் தெலுங்கு மொழியை ஆதரித்தாரே யன்றித் தமிழ் மொழியை ஆதரிக்கவில்லை" (1981–439) எனக் குறிப்பிட்டுவிட்டுக் குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர் (விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் ஆதரவு பெற்றவர்), அழகன் பெருமாள் என்ற அதிவீரராமபாண்டியர், வரதுங்கராம பாண்டியர் (இருவரும் விசுவநாத நாயக்கர் காலத்தவர்), பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், சுப்ரதீபக் கவிராயர் (திருமலை நாயக்கர் காலத்தவர்), வீரமாமுனிவர் (விஜயரங்க சொக்கநாதர் மற்றும் அரசி மீனாட்சி காலத்தவர்), உமறுப்புலவர் (சொக்கநாத நாயக்கர் காலத்தவர்), தாயுமானவர் (விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தவர்) ஆகிய தமிழிலக்கியப் படைப்பாளர்களைப் பற்றியும் அவர்களுடைய படைப்புக்கள் பற்றியும் தகவல்கள் தந்துள்ளார். இவர் குறிப்பிட்டுள்ள இலக்கியங்களும் சமயம் தொடர்பானவை என்றாலும்., இவருக்குக் குறிப்பிட்ட சமயச் சார்பு இருப்பதாகத் தெரியவில்லை. மாறாகத் தமிழ் மொழிச் சார்பு இவரிடம் காணப்படுகிறது.

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், ஏ. கிருஷ்ணசுவாமி, கே. கே. பிள்ளை ஆகியோர் கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களைக் குறிப்பிடாததற்குத் தகவல் கிடைக்காமை என்பதைக் காரணமாகச் சொல்வதற்கு வாய்ப்பில்லை. அவர்கள் இந்துசமயச் சார்புடைய இலக்கிய அரசியலை இவ்வாறு வெளிப்படுத்தியிருக்கிறார்கள் எனலாம். வரலாற்று ஆய்வாளர் ஜி. சேதுராமன் முன்னோடி ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தையும் தொகுத்துத் தந்துள்ளார்.

ஆக மொத்தத்தில் விஜயநகர–நாயக்கர் காலத்து எழுத்துப்பதிவு இலக்கியங்கள் தொடர்பான தகவல்களைச் சிற்சில வேறுபாடுகளுடன் வரலாற்று ஆய்வாளர்கள் தொகுத்துத் தந்துள்ளனர். இவ்வாறு தொகுப்பளிப்பதிலும் கூட அவரவர் சார்புநிலை முகங்காட்டுவதைப் புரிந்து கொள்ளலாம். மேலும் அவர்கள் இலக்கியநூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார்களே தவிர அவற்றின் உருவம், உள்ளடக்கங்களுக்கும் விஜயநகர நாயக்கர் காலச் சமூக, பாண்பாட்டு அரசியல் நிலைமைகளுக்கும் என்ன தொடர்பு என்பதை விளக்கவில்லை. மன்னர்கள் ஆதரவு பெற்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளர்கள் பற்றிய தகவல்களை அ. கி. பரந்தாமனார் போன்ற அறிஞர்கள் சுட்டிகாட்டியுள்ளனர். ஆனால் அத்தகைய தொடர்பின் சமூகவியல் பற்றியோ வரலாற்றுக்கான அதன் பங்களிப்பு பற்றியோ கருத்துரைக்கவில்லை. இதுமட்டுமல்லாமல் நாட்டுப்புற இலக்கியம் என்ற ஒன்று இருப்பதாகவே அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை.

வரலாற்று ஆய்வாளர் கே. ராஜய்யன் தம் வரலாற்று நூலில் (K. Rajayyan: 2005: 212–215) நாயக்கர் கால அரசியலோடு தொடர்புடைய நாட்டுப்புறக் கதைப்பாடலான ராமப்பய்யன் அம்மானையைக் குறிப்பிட்டு மதுரைநாயக்க மன்னன் முத்து கிருஷ்ணப்பனின் ஆட்சிக் காலத்திலிருந்து கிழவன் சேதுபதி என்று அழைக்கப்படுகின்ற ரகுநாத தேவரின் ஆட்சிக் காலம் வரை நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளையும் ஆட்சியாளர்களுக்கு இடையிலான முரண்பாடுகளையும் போர் நிகழ்வுகளையும் அதிலிருந்து எடுத்துக்காட்டி விளக்குகிறார். மேலும் நாயக்க ஆட்சி தொடர்பான வரலாறை எழுதுவதற்குத் தேவையான எழுத்துத் தரவுகள் பற்றி குறிப்பிடும்போது கல்வெட்டுகள், இலக்கியங்கள், சேசுசபையினரின் கடிதங்கள், அரசவைப் புலவர்களின் குறிப்புக்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விட்டு கதைப்பாடல்களையும் குறிப்பிட்டுள்ளார். நாயக்கர் ஆட்சியோடு தொடர்புடைய, ஆனால் நாயக்க ஆட்சி காலத்திற்குப் பின் தோன்றியனவாகக் கருதப்படும் "இராமப்பய்யன் அம்மானை", "நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்" ஆகிய கதைப்பாடல்கள் எழுத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதால்தான் அவற்றைத் தரவுகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதுவும் எழுத்துப் பதிவுகளாக வெளிவந்துள்ள ஒரே கதைப் பாடலின் திரிபு வடிவங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆய்வை மேற்கொள்ளவில்லை. ஏனெனில் ஐரோப்பிய வரலாற்று வரைவியல் தகவல்களில் வேறுபாடுகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்ளாது. இவரைத் தவிர பிற மூத்த வரலாற்று ஆய்வாளர்கள் நாட்டுப்புற இலக்கியங்களைக் கவனத்தில் கொள்ளவேயில்லை என்பதிலிருந்து இலக்கியம் பற்றிய அவர்களுடைய மதிப்பீட்டைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## 1.2 நாட்டுப்புற இலக்கியங்கள் பற்றிய கருத்தாடல்

நாட்டுப்புற இலக்கியங்கள் என்ற சொல்லாட்சியை இன்றைய நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்து வருகின்றனர். வாய்மொழி நிகழ்த்துதல் (Verbal Performance) என்ற சொல்லாட்சியைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துகின்றனர். எழுத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நாட்டுப்புறக் கதை, கதைப்பாடல், தொன்மக்கதை, வாய்மொழிப் பாடல், விடுகதை ஆகிய பனுவல்களுக்கும் வாய்மொழியாக நிகழ்த்தப்படும் பனுவல்களுக்கும் வேறுபாடு உண்டு. நிகழ்த்துநர், பார்வையாளர், நிகழ்த்துதல் மொழி, நிகழ்த்துதல் வெளி, காலம், பண்பாட்டுச் சூழல் ஆகியவை சேர்ந்துதான் நிகழ்த்துதல் பனுவலைத் தீர்மானிக்கும். இத்தகைய அம்சங்கள் மாறும்போது நிகழ்த்துதல் பனுவலும் வேறுபட்டுக் கொண்டே இருக்கும். ஒரு தொன்மக் கதையை, கதைப்பாடலை எழுத்திற் பதிவு செய்துவிட்டால் அது நிரந்தரத் தன்மையைப் பெறுகிறது. கல்லாகச் சபிக்கப்பட்ட அகலிகை போன்றது எழுத்துப் பனுவல். அகலிகை சாப விமோட்சனம் பெற இராமரின் தீண்டுதலுக்காகக் காத்திருந்ததைப் போல எழுத்துப் பதிவுப் பனுவல் மனித நிகழ்த்துதலுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த இடத்தில் நிகழ்த்துதலுக்கும் வாசிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். நிகழ்த்துதல் என்பது சமூகத் தன்மை வாய்ந்தது. வாசிப்பு என்பது தனிமனிதத் தன்மை வாய்ந்தது. சமூகத் தன்மை வாய்ந்த நிகழ்த்துதல் ஒற்றைப் பொருண்மையை வெளிப்படுத்தும். தனிமனித வாசிப்புக்களில் பன்மைப் பொருண்மைகள் வெளிப்படும். தனிமனித வாசிப்பு என்பதை அந்நிய வாசிப்பு எனச் சொல்லாம். ஒரு கதைப்பாடலின் வட்டாரத்தோடும் அதன் வரலாற்றோடும் பண்பாட்டுச் சூழலோடும் தொடர்பில்லாத ஒருவர் தம் வாசிப்பின் மூலம் அதில் பதிவான வரலாற்றையோ அதன் பண்பாட்டுப் பொருண்மையையோ புரிந்து கொள்ள இயலாது. நாட்டுப்புறக் கதை, கதைப்பாடல், தொன்மக்கதை போன்ற பனுவல்கள் சமூக நிகழ்த்துதலுக்கு உரியவை. எழுத்தில் அவை பதிவு செய்யப்பட்ட போதிலும் கூட சமூக நிகழ்த்துலுக்கே உரியவை.

பல வேறுபட்ட வட்டாரங்கள் அல்லது பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அந்தந்த வட்டாரங்களில் அல்லது பகுதிகளில் ஒன்றுகூடி வாய்மொழிப் பனுவலை நிகழ்த்தும்போது சமூகப் பொருண்மை உயிர்க்கின்றது. அதாவது அது ஒரு சமூகம் நிகழ்த்துதல் காலங் காலமாகத் தொடரும்போது அந்தந்த காலச் சமூகப் பண்பாட்டு அரசியல் நிலைமைகளுக்கேற்பப் பனுவல்களின் சில புதிய தகவல்களோ நம்பிக்கை சார்ந்த அம்சங்களோ சேர்ந்து கொண்டே வருகின்றன. தொன்மக்கதை, கதைப்பாடல் போன்றவற்றை நிகழ்த்தும்போது அவை கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால அரசியல் வரலாற்றையும் சமூக, பண்பாட்டு வரலாற்றையும் நிகழ்காலப் புரிதலுக்கு உட்படுத்துகிறது. ஆதிக்க வரலாறாக இருந்தாலும் அடித்தள மக்கள் வரலாறாக இருந்தாலும் அவற்றைச் சமூக நிகழ்த்துதலாக்கி நிகழ்கால நகர்வில் பயணப்பட வைப்பதின் மூலமே அவற்றோடு தொடர்ந்து உரையாடல் நடந்து முடிகிறது.

இந்த வகையில் நாட்டுப்புற மக்கள் விஜயநகர–நாயக்கர் கால வரலாற்றையும் அவர்கள் காலத்துச் சமூகப் பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்துதல் வாயிலாக அவற்றை நிகழ் காலப் புரிதலுக்கு உட்படுத்துகிறார்கள். சடங்குகள், திருவிழாக்கள், நிகழ் கலைகள், கதைப்பாடல் நிகழ்வுகள் போன்ற பல்வேறு சமூக நிகழ்த்துதல்கள் மூலம் விஜயநகர–நாயக்கர் கால வரலாறு நாட்டுப்புற மக்களிடம் கொண்டு செல்லப்படுகிறது. மதுரையில் தை மாதம் பூசம் நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் தெப்பத் திருவிழாவானது திருமலைநாயக்கர் ஆட்சிக் காலத்தில் தெப்பக்குளம் கட்டப்பட்ட வரலாறை ஆண்டுதோறும் மக்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறது. பங்குனி மாதம் மதுரையில் கொண்டாடப்படும் கோடை வசந்தம் எனும் திருவிழாவானது திருமலை நாயக்கர் காலத்துப் பண்பாட்டு நிகழ்வுகளை ஒவ்வோராண்டும் நினைவு படுத்திக் கொண்டிருக்கிறது. கோடை வசந்தம் சடங்கு விழாவிற்காக மதுரையிலிருந்து 12 மைல்கள் தூரத்தில் உள்ள திருப்புவனம் எனும் ஊருக்கு மீனாட்சி கோவிலிருந்து சொக்கநாதர் மற்றும் மீனாட்சி தெய்வங்களைப் பல்லக்கில் சுமந்து சென்று இரவில் மீண்டும் கோயிலுக்கு கொண்டு வரும் வழக்கம் இருந்த சூழலில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் வைகை ஆற்றில் பெரும் வெள்ளம் வந்ததினால் தெய்வங்களை மீண்டும் கோயிலுக்குக் கொண்டு வர இயலாத நிலை ஏற்பட வெள்ளத்தைக் கடந்து தெய்வங்களைக் கோயிலுக்குக் கொண்டு வந்தால் நன்கொடை தருவதாகத் திருமலை நாயக்கர் அறிவிக்க பக்கத்து ஊர்க்காரர்கள் மிகுந்த முயற்சியில் தெய்வங்களைக் கோயிலுக்குக் கொண்டு வந்து சேர்த்ததினால் அந்தக் கிராமத்தினர்க்குச் சாமிநத்தம் எனும் கிராமத்தை நன்கொடையாகக் கொடுத்த வரலாற்றையும் ஒவ்வோர் ஆண்டும் மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இதே போன்றே வைகாசி மாதம் கொண்டாடப்படும் வசந்த விழாவும் கலைநயமிக்க புதுமண்டபத்தைத் திருமலை நாயக்கர் உருவாக்கிய வரலாறை ஒவ்வோராண்டும் எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட வரலாறை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்ற நிகழ்கால மக்களுள் ஒரு பிரிவினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களைச் சுமந்து வந்த கிராமத்து உழைப்பாளிகளின் உழைப்பும் புதுமண்டபத்தைக் கட்டுவதற்காகப் பாடுபட்ட உழைப்பாளிகளின் உழைப்பும் நிலவுடைமைச் சமூக அதிகாரத்தால் சுரண்டப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டிருக்கலாம். எவ்வாறாயினும் சடங்குகள், திருவிழாக்கள் போன்றவை நாட்டுப்புற மக்களுக்கு ஒவ்வோராண்டும் சமூகப் பண்பாட்டு அரசியல் வரலாறை எடுத்துரைத்துக் கொண்டிருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

1.2.1 சடங்குகள், திருவிழாக்களைப் போன்றே நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் நிகழ்த்தப்படுபவையே. விஜயநகர–நாயக்கர் ஆட்சிக் காலத்தில் நிகழ்த்தப்பட்ட கதைப்பாடல்கள் எனச் சுட்டிகாட்ட முடியாவிட்டாலும் அந்த ஆட்சி அதிகாரத்தோடு நேரடியாகத் தொடர்புடைய, ஆனால் சற்று பிற்காலத்தில் படைக்கப்பட்டு இன்று வரை நிகழ்த்தப்பட்டு வருகின்ற கதைப்பாடல்களாக ஐவர் ராசாக்கள் கதை, வீணாதி வீணன் கதை ஆகிய தொடர்புடைய கதைப்பாடல்களையும், ராமப்பையன் அம்மானை, ரவிக்குட்டிப்பிள்ளை போர் ஆகியவற்றையும் மதுரை வீரன் கதைப்பாடலையும் குறிப்பிடலாம். இவை தவிர விஜயநகர நாயக்கர் கால ஆட்சிக் காலத்துச் சமூக பண்பாட்டு, அரசியல் நிலைமைகளைக் கவனப்படுத்துகின்ற பொன்னிறத்தாள் கதை என்ற கதைப்பாடலையும், மகாபாரதச் சார்புடைய அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் தூது, பாண்டவர் வனவாசம், வைகுந்தக் கும்மி ஆகிய கதைப்பாடல்களையும் முத்துப்பட்டன் கதைப்பாடல், சின்னத்தம்பி கதைப்பாடல், பலவேசஞ் சேர்வைக்காரன் கதைப்பாடல், கௌதல மாடன் கதை, தாதுவருஷ பஞ்சக் கும்மி ஆகியவற்றையும் விஜயநகர, நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தோன்றியவையாக வெங்கலராசன் கதை, ஒட்டன்கதை, தம்பிமார் கதை, எட்டுவீட்டுப் பிள்ளைமார் கதை, ஆகிய ஒன்றுக்கொன்று தொடர்புடைய கதைப்பாடல்களையும், காத்தவராயன் கதையையும் அண்ணன்மார்சாமி கதை, பொன்னழகர் அம்மானை, கள்ளழகர் அம்மானை ஆகிய ஒன்றுக்கொன்று தொடர்புடைய கதைப்பாடல்களையும் குறிப்பிடலாம். இக்கதைப்பாடல்கள் பல்வேறு வட்டாரங்களில் நிகழ்த்தப்பட்டதால் அவை வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகின்றன. ஐவர்ராசாக்கள் கதையின் வட்டார வடிவங்களாகப் பஞ்சபாண்டியர் கதை, உலகமுழுதுடையாள் கதை, மாலையம்மை கதை, கன்னடியான் படைப்போர், வெட்டும் பெருமாள் கதை ஆகியவை வழங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2.1.1 க. சி. கமலையா என்ற ஆய்வாளரின் இராமப்பய்யன் அம்மானை பற்றிய கருத்து இங்குக் கவனத்திற் கொள்ளத்தக்கது.

"இராமப்பையன் அம்மானை வரலாற்றுக் குறிப்புகளடங்கிய நூல் என்றாலும் நாட்டுப் பாடல்களின் கீழ் வரும் இவ்வம்மானையில் இலக்கிய நயங்கள் பலவற்றைக் காணலாம். கற்றோருக்காக எழுதப்பட்ட நூல் அல்லவெனினும் பாடலின் ஆற்றொழுக்கு போன்ற அமைப்பும் சொல்லாட்சியும் படையெடுப்பு நிகழ்ந்த காலத்திலோ அல்லது அதையொட்டியோ இராமப்பையன் அம்மானை பாடப்பட்டது எனலாம்" (க. சி. கமலையா: 1980:35).

இதே கருத்தைத் தஞ்சை சரசுவதி மகால் "இராமய்யன் அம்மானை" என்ற பெயரில் பதிப்பித்த நூலுக்குப் பதிப்புரை வழங்கிய சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்

"இது சரித்திரத் தொடர்பு கொண்ட ஒரு சிறந்த நாட்டுப் பாடல், நாட்டுப்புறங்களில் உடுக்கை அடித்துக்கொண்டு பாடும் முறையில் எழுதப்பட்டது" என்கிறார் (1984:4). முதலில் எழுதப்பட்டுப் பின் பாடப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு நிகழ்த்தப்பட்டமையால் தான் அதற்கும் திரிபு வடிவங்கள் உள்ளன. இது பற்றிய சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

"இராமப்பையன் சரிதம் கூறும் பிரதிகள் மூன்று இப்போது கிடைத்திருக்கின்றன. ஒன்று தஞ்சை மகாராசா சாபோஜி மன்னர் அருமையாகத் தொகுத்து வைத்திருக்கும் சரசுவதி மகால் நூலகத்தின் பிரதி ஆகும். இதில் 300 அடிகள்தான் உண்டு. இதில் சரிதம் முடிவு பெறவில்லை. மற்ற இரண்டு பிரதிகளும் சென்னை அசியலார் கைப்பிரதிச் சாலையில் இருக்கின்றன. சரிதமும் பூர்த்தியாக இருக்கின்றது. தஞ்சைப் பிரதிக்கும் சென்னைப் பிரதிக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. சில சொற்றொடர்களும் அடிகளும் ஒத்து இருக்கின்றன. ஆனால் பெரும்பான்மைச் சொற்றொடர்கள் வேறு ஆகும். படித்துப் பார்த்தால் இரண்டும் வெவ்வேறு புலவர்கள் செய்திருக்கலாம் என்று நினைக்கக் கூடியதாக இருக்கின்றன" (1978:5).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இராமப்பையன் அம்மானையும் வட்டாரத்திற்கேற்ப வேறுபாடுகளுடன் வழங்கியதை அறிந்து கொள்ள முடிகிறது. இரவிக் குட்டிப்பிள்ளை போர் தொடர்பான கதை தமிழிலும் மலையாளத்திலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. மலையாளத்தில் கணியாங்குளம் போர் எனக் குறிப்பிடப்படுகிறது. இரவிக்குட்டிப் பிள்ளையும் திருமலை நாயக்கரின் தளபதியான இராமப்பையனும் கணியான் குளம் எனும் இடத்தில் போரிட்டதால் அந்தப் பெயரில் சில வேறுபாடுகளுடன் நிகழ்த்தியிருக் கிறார்கள். மதுரை வீரன் கதைப்பாடல் பல்வேறு பெயர்களில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு வழங்கி வருகின்றன. வீரையன் அம்மானை (1935), மதுரை வீர சுவாமி கதை (1869), மதுரை வீர நாடகம் (1870), ஸ்ரீ மதுரை வீர சுவாமி பராக்கிரமம் (1913), மதுரை வீரய்யன் நாடகம் (1928), மருதை வீரன் சரித்திரம் (1952), கோடாங்கி மாலை (?) எனப் பல்வேறு வட்டாரங்களில் நிகழ்த்தப்பட்டவையே. இதைப்போன்றே பிற எழுத்துப்பதிவுப் பனுவல்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் பல்வேறு வட்டாரங்களில் நிகழ்த்தப்பட்டவையே. இதைப்போன்றே பிற எழுத்துப்பதிவுக் கதைப்பாடல்களும் நிகழ்த்தப்பட்டவை அல்லது நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பவையே. அதனால்தான் அவற்றிற்கு வாய்மொழி நிலையிலும் எழுத்துநிலையிலும் பல திரிபு வடிவங்கள் உள்ளன. இவ்வாறு கதைப்பாடல்களை நிகழ்த்துவதின் மூலம் விஜயநகர, நாயக்கர் ஆட்சி பற்றியும் அக்காலச் சமூகப் பண்பாட்டு நிலைமை பற்றியுமான வரலாறை அந்தந்தக் காலப் புரிதலுக்கேற்ப நாட்டுப்புற மக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் ஆட்சியாளர்கள் பற்றியவையாக இருந்தாலும் மேட்டுக்குடி மக்களைப் பற்றியவையாக இருந்தாலும் அவை அடித்தள மக்கள் சார்பாகவே சொல்லப்படுகின்றன. அம்மக்களின் வரலாறு எப்போதும் அதிகாரத்திற்கு எதிரானதாகவே வெளிப்படுகிறது.

ஐவர் ராசாக்கள் கதைப்பாடல் நிகழ்த்தப்பட்டதின் காரணமாகவே அதற்குப் பல திரிபு வடிவங்கள் உள்ளன. இக்கதைப் பாடலின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து நா. வானமாமலை அவர்கள் விரிவாக ஆய்வு செய்துள்ளார். கன்னட அரசன் தன்னுடைய மகள் மணக்க விரும்பிய பாண்டிய மன்னன் குலசேகரனைப் போரில் வென்று அவனைத் தன் நாட்டிற்குக் கொண்டு செல்லும் வழியில் திருமணத்திற்கு மறுப்புத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துத் தன்னைத் தானே கத்தியாற் குத்தியோ அல்லது விஷம் அருந்தியோ உயிர் துறந்ததை ஐவர் ராசாக்கள் கதைப்பாடலும் அதன் திரிபு வடிவங்களும் சில வேறுபாடுகளுடன் கதையாடுகின்றன. நா. வானமாமலை அவர்கள் தான் பதிப்பித்த ஐவர் ராசாக்கள் கதைப்பாடல் நூலுக்கு எழுதிய முன்னுரையில் தன்னை மாய்த்துக் கொண்டதாகக் கதைப்பாடல் குறிப்பிடும் குலசேகர பாண்டியன் தொடர்பான வரலாற்று நிகழ்வுகளைக் கல்வெட்டுச் சான்றுகளையும் பிற சான்றுகளையும் பயன்படுத்தி விரிவாக ஆய்வு செய்துள்ளார். அவருடைய கருத்துக்களை முதலில் தெரிந்து கொள்ளலாம்.

1. குலசேகரன் பராக்கிரம பாண்டியன்தான் நரச நாயக்கனால் தோற்கடிக்கப்பட்டவன் என்றும் இந்தக் குலசேகரனுக்கும் கதைப்பாடல் குறிப்பிடும் குலசேகரனுக்கும் தொடர்பில்லை என்றும் தெளிவுபடுத்துகிறார்.

2. சாசனம் குறிப்பிடும் மானபூஷணம் பஞ்ச பாண்டியர்களுள் ஒருவன் என்ற கருத்து இருப்பதைச் சுட்டிக்காட்டி அனையும் மறுக்கிறார்.

3. 1544இல் விஜய நகர மேலாதிக்கதை எதிர்த்து வந்த வேணாட்டு ஆட்சியாளர்களை அடக்குதற்காக விஜயநகர மன்னன். சாளுவ நரசிம்மனின் படைத் தளபதியாகிய நரச நாயக்கன் வெளியிட்ட சாசனம் ஒன்று "சேர சோழ பாண்டியர்களையும் மானபூஷணனையும் கொடுந்துருக்களையும் வென்றதாக" குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டி இதில் குறிப்பிடப்பட்டுள்ள சோழன், பாண்டியன், மானபூஷணன் ஆகிய இவர்கள் யார் என்பதைத் தெளிவுப்படுத்தும் முயற்சியை முதலில் மேற்கொள்கிறார்.

4. நரச நாயக்கனால் தோற்கடிக்கப்பட்ட சோழ மன்னன் காடவர் குலத்தைச் சேர்ந்த கோனேரி ராஜன் என்கிறார்.

5. 1480இல் ஆட்சி செய்த ஜடாவர்மன் தாசிவராயன் அனுப்பிய படைத்தளபதி வித்தலராயனை வெங்கலராசன் எனக் கதைப்பாடல் குறிப்பிடுவதைச் சுட்டி இந்த வெங்கலராசன் கயத்தாறு எனும் இடத்தில் கோட்டைகட்டி ஆட்சி செய்துவந்த வெட்டும் பெருமாள் எனும் மன்னனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிட்டதாகக் கதைப்பாடல் குறிப்பிடுவதையும் சுட்டி இந்நிகழ்வை கயத்தாறுக்கு அருகேயுள்ள இளவேலங்கால் என்னும் ஊரில் உள்ள 1547 ஆம் ஆண்டு கல்வெட்டுத் தெரிவிக்கிறது என்பதையும் குறிப்பிட்டு வெங்கலராசனாகிய வித்தலராயனோடு போரிட்டு மரணமடைந்த வெட்டும்பெருமாள் பஞ்ச பாண்டியர்களுள் ஒருவன் என்றும் இவனைப் பற்றிய கதைப்பாடலே "வெட்டும் பெருமாள் கதை" என்றும் குறிப்பிடுகிறது என்றும் தெளிவுபடுத்துகிறார்.

6. அடுத்து பஞ்சபாண்டியர்களுள் ஒருவனும் ஐவர்ராசாக்கள் கதையின் தலைவனுமாகிய குலசேகரன் வள்ளியூரில் கோட்டை கட்டி ஆட்சி செய்து வந்ததாகவும், அவனுக்கு முத்தும் பெருமாள் என்ற நான்கு சகோதரர்கள் இருந்ததாகவும் குறிப்பிட்டு விஜயநகரத் தளபதியின் முதல் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது என்றும் குலசேகரன் தன் தளபதியாகிய காளிங்கராயனை நம்பி ஆட்சியை ஒப்படைத்துவிட்டு மதுரை சென்றதால் அவனுடைய ஆட்சி சீர்குலைந்து பலமிழந்ததாகவும், முறைப் படையெடுப்பில் வள்ளியூர் கோட்டையைக் கைப்பற்றியதோடு ஐவர் ராசாக்கள் கதையும் அதன் பிற திரிபு வடிவங்களும் குறிப்பிடும் கன்னடியன் வேறு யாருமல்ல விஜயநகர மன்னர் சதாசிவராயரின் மேலும் பஞ்சபாண்டியர்கள் மீது விஜய நகர மன்னர் படையெடுத்ததற்கான காரணங்களையும் குலசேகரனின் இறப்புக்கான பின்புலத்தையும் பின் வருமாறு விளக்குகிறார் நா. வானமாமலை.

"கன்னடியன் மகளது திருமண ஆசை விஜயநகர மன்னர்களது சிந்தனைகளின் உருவமேயாகும். அவர்கள் முஸ்லீம் படையெடுப்பைத் தடுக்கத் தென்னாட்டை அமைதியான முறையிலேயே ஒன்றுபடுத்த முயன்றார்கள். திருமண உறவுகள் மூலமாகவும், அரசியல் மூலமாகவும், அரசியல் உறவுகள் மூலமாகவும் தென்னாட்டுச் சிற்றரசர்களையெல்லாம் ஒன்றுபடுத்தித் தங்களது தலைமையில் முஸ்லீம் படையெடுப்பைத் தடுக்க முயன்றார்கள். இவ்வாறு ஒன்றுபட்ட எதிர்ப்புக்குக் பாண்டியர்களது சிந்தனை மாறாக இருந்தது. பாண்டியன் வலிமை குன்றியிருந்ததும் வலிமை மிக்கவர்களோடு சேர்ந்து ஒன்றுபட்ட எதிர்ப்பினால் பொது எதிரியை எதிர்க்க முன்வராத பழம் பெருமைச் சிந்தனையில் மூழ்கியிருந்த குலசேகர பாண்டியன் கரைபுரண்டு வந்து புது வெள்ளமான தென்னிந்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களது ஒற்றுமை, தென்னிந்திய சாம்ராஜ்ஜிய இணைப்பு ஆகிய சரித்திர தேவைகளுக்கும் புதிய வளரும் சாம்ராஜ்ஜிய சக்திகளுக்கும் எதிராக நின்றதால், சோக பாத்திரமானான்." (நா. வானமாமலை; 108–109).

நா. வானமலையின் மேலே எடுத்துக்காட்டப்பட்ட கருத்து ஆச்சரியத்தை அளிப்பதாக உள்ளது. முஸ்லீம் படையெடுப்பைத் தடுப்பதற்காகவும் இந்து சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்காகவும் தென்னாட்டை ஒருங்கிணைப்பதற்காகவும் விஜயநகர மன்னர்கள் தமிழ்நாட்டுச் சிற்றரசர்கள் மீது படையெடுத்தது சரியானதுதான் என வாதிடுவதும் அவர்களது நல்ல நோக்கத்திற்காக குலசேகரன் போன்ற சிற்றரசர்கள் ஒத்துழைப்புத் தராமல் இருந்ததற்காக வருந்துவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கது இல்லை. இரு பிரிவினருமே நிலவுடைமைச் சமூக அமைப்பின் ஒடுக்குமுறையாளர்கள்தான். சுரண்டல் வாதிகள்தான். ஆனாலும் அடித்தள மக்கள் மனம் பெரும் அதிகாரத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் எதிராகவே நிற்கும். எதிராகவே குரல் எழுப்பும் என்பதையே ஐவர் ராசாக்கள் கதைப்பாடல் உணர்த்துகிறது.

இராமப்பையன் அம்மானை என்ற கதைப்பாடல் திருமலை நாயக்கரின் அதிகாரத்திற்கு எதிராகக் கதையாடுகிறது. நாயக்கரின் தளபதி இராமப்பையன் பெயரில் கதைப்பாடல் அமைந்துள்ளது என்றாலும் இக்கதைப்பாடலில் இராமநாதபுரம் தளவாய்ச் சேதுபதி என அழைக்கப்படும் இரண்டாம் சடைக்கத் தேவனின் (1635–1645) மருமகனும் தளபதியுமான வீர வன்னியத்தேவனே சிறப்பித்துப் பேசப்படுகிறான். இன்னும் சொல்லப்போனால் இராமப்பையன் தெலுங்குப் பார்ப்பனன் எனக் குறிப்பிட்டு இழிவாகப் பேசப்படுகிறான்.

*கெட்டானோ பார்ப்பான் கீழ்திசையை நோக்கிவந்து*
*பஞ்சாங்கஞ் சொல்லவேறு பாரிலிடமில்லையோ*
*பூசைபண்ணித் தான் பிழைக்க பிள்ளையார் தானில்லையோ*
*ஆசை கொண்டு வந்தானோ அறியாமல் பார்ப்பான்*

எனவும் (சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் ப. ஆ. 1978: 27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்ப்பானைக் கொன்றால் பாவம்வந்து சூழுமென்று*
*பின்குடுமி தன்னிலே பேருலகம் தானறிய*
*தேங்காயைக் கட்டிக் சிதற வடிப்பேனான்*

எனவும் (1978: 37–38) இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத்தேவர் திருமலை நாயக்கரின் அதிகாரத்தையும் இராமப்பையனின் சாதி அதிகாரத்தையும் எதிர்த்துக் குரல் கொடுப்பதைப் போன்றே அவனுடைய தளபதி வன்னியத் தேவனும் "மார்பிலிடும் பூணூல் பரித்து மாட்டு வடம் போட்டிடுவேன்" எனச் சாதி அதிகாரத்திற்கு எதிராகக் குரல் எழுப்புகிறான். அதாவது சடைக்கத் தேவர், வன்னியத் தேவர் ஆகிய கதைப் பாத்திரங்களை முன்னிறுத்திப் பாடகர்கள் தங்களுடைய அதிகார எதிப்புணர்வை வெளிப்படுத்துகிறார்கள். இதற்குக் காரணம் இருந்திருக்கலாம். இராமப்பையன் சாதி மற்றும் சமய வெறியுள்ளவனாக இருந்தான் என்பதைப் பழனியாண்டவர் கோயில் தலவரலாற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

"பழனியாண்டவர் கோயிலில் வழிபாடு செய்த சித்தர் பரம்பரையைச் சேர்ந்த பூசாரியிடமிருந்து பிரசாதம் வாங்க மறுத்து பூசைசெய்யும் உரிமையை ஆதிசைவக் குருக்களிடம் தந்து பூசை செய்வித்துப் பிரசாதம் பெற்றுக் கொண்டதாகவும் இந்த உரிமையை நிலைநாட்ட ஒரு செப்பேடு தந்ததாகவும் தல வரலாறு குறிப்பிடுகிறது" (சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் (ப. ஆ) : 1978 : 110).

இவ்வாறு சாதி, சமய வெறி உடையவராக இராமப்பையன் விளங்கியதை நாட்டுப்புறப் பாடகர்களும் மக்களும் தெரிந்திருக்கலாம். அதன் விளைவு கதைப்பாடலில் சாத அதிகாரத்திற்கு எதிரான குரலாக வெளிப்படுகிறது எனலாம்.

கதைப்பாடல் முழுவதும் இப்படிப்பட்ட குரல் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. மன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் உயர்ந்த சாதியினரின் ஒடுக்குமுறை எவ்வாறு இருந்தது என்பதையும் அந்த ஒடுக்குமுறைக்கு எதிராக குரல்கள் எப்படிப்பட்ட சூழலில் வெளிப்பட்டன என்பதையும் கதைப்பாடலில் வழி அறிந்து கொள்ள முடிகிறது. இராமப்பையன் போரில் வெற்றி பெறுவதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டுவதாகவும் அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரம் கடலில் அணைகட்டுவதும் ஒன்று என்றும் விவரித்த பிறகு அணைகட்டுவதற்கு இராமப்பையன் பயன்படுத்திய சமூகத்தினர் பற்றிய செட்டியார் சமூகத்தவரையும் குறிப்பிடுகிறது. இந்தச் சமூகத்தினர் பற்றிய அடித்தள மக்களின் பார்வையைக் கீழ்வரும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

*ஏலோலோ பாடி யெடுத்தார்கள் செட்டியெல்லாம்*
*செட்டியார்கள் கல்சுமக்க சித்தாசைப் பயலொருவன்*
*சிங்கியடித்து சிரித்தான் காண் செட்டியரை*
*பிச்சைக்கு வந்தாலும் பின்னே வா என்பீரே*
*அப்பிச்சி என்றாலும் அரைக்காசு மீயீரே*
*சிற்றப்பா என்றாலும் செருப்பா லடிப்பீரே*
*சாகிறோம் என்றாலும் சாப்பாடும் போடீரே*
*காசு கணக்கிட்டதெல்லாம் கைமேல் பலித்ததென்று*
*பண்ணிய பாவம் பலித்ததே செட்டியாரே*

இந்தப் பாடல்வரிகள் (1978; 60) மேட்டுக்குடி மக்கள் பற்றிய அடித்தள மக்களின் விமர்சனமாக அமைகின்றன.

மன்னர் திருமலை நாயக்கரும் இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத் தேவரும் நிலவுடைமைச் சமூகத்தின் ஒடுக்குமுறையாளர்கள் மற்றும் சுரண்டல்வாதிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அடித்தள மக்கள் மனம் அதிகாரத்தில் உயர்ந்து நிற்பவர்களுக்கு எதிராகவே நிற்கிறது. போரில் உதவி செய்வதற்காகத் திருமலை நாயக்க மன்னரின் கட்டுப்பாட்டில் உள்ள பாளையக்காரர்களான மண்டூர் பாப்பய்யன், நத்தத்து லிங்கய்யன், கோடப்பநாயக்கன், வீரமலை நாயக்கன், எட்டப்ப நாயக்கன், தொட்டப்ப நாயக்கன், இருவப்ப நாயக்கன், பூச்சி நாயக்கன், முத்தைய நாயக்கன், தென்காஞ்சி மூக்கன், சிவிலி மாறன், முருக்கு நாட்டு மூவரையன், குற்றால தேவன், தென்மலை வன்னியன், சின்னணைஞ்சாத்தேவன், கட்டபொம்ம நாயக்கன், ஊற்றுமலையான், மேல்முகத்துத் தும்பிச்சி நாயக்கன், பொம்ம நாயக்கன், அப்பச்சி கவுண்டன், பொம்மண நாயக்கன், முத்தப்ப நாயக்கன், ஆய்க்குடி கொண்டைய நாயக்கன், இலப்பையூர் காமாட்சி நாயக்கன், விருப்பாட்சி நாயக்கன், கன்னிவாடி நாயக்கன், லிங்கம நாயக்கன், பெத்தண நாயக்கன், வாலப்ப நாயக்கன், வெங்கம நாயக்கன், செல்வப் பொட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கன், திருமலை பூச்சியன், சொக்கலிங்க நாயக்கன், விசுவப்ப நாயக்கன், மணலூர் நாயக்கன், வேலப்பநாயக்கன், மருதப்ப தேவன், கோடங்கி ரெட்டி, குன்னத்துரெட்டி, மறுநாத்து நாயக்கன், மலையாள ராசா, கொளும்பினில் ராசா என 72 பாளைக்காரர்கள் அழைக்கப்படுகிறார்கள். ஆனால் சடைக்க தேவருக்குப் புதுக்குடிக்கோட்டை, போகலூர்க் கோட்டை, இளையான்குடிக் கோட்டை, அரியாணிபுறக் கோட்டை ஆகியவற்றின் குறுநில மன்னர்களே உதவிக்கு வருகிறார்கள். அதனால்தான் அடித்தள மக்கள் சடைக்கத்தேவரையும் அவனுடைய தளபதி வன்னியத் தேவரையும் அனுதாபத்துடன் நோக்குகிறார்கள். போரின் நடுவே வன்னியத்தேவர் அம்மைநோயால் பாதிக்கப்பட்டு இறக்க நேர்ந்ததால் தான் இராமப்பையன் வெற்றி பெற முடிந்தது என வன்னியத்தேவர் சார்பாகவே கதைப்பாடலில் கதையாடப்படுகின்றது. ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் இராமப்பையனே போரின் நடுவே நோயுற்று இறந்ததாகவும் இதனால் அவருடைய மருமகன் சிவராமய்யர் போருக்குத் தலைமையேற்று சடைக்க தேவனையும் வன்னியத் தேவனையும் குறிப்பிடுகிறார்கள். இதனைச் சில வரலாற்று ஆய்வாளர்கள் சான்றுகளுடன் மறுப்பதாக சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் குறிப்பிடுகிறார். (1978: 13)

இரவிக் குட்டிப்பிள்ளை போர் என்ற கதைப்பாடல் திருமலை நாயக்கருக்கும் திருவிதாங்கூர் மன்னருக்கும் இடையில் நடந்த அதிகார மற்றும் செல்வக் கொள்ளைக்கான போர் நிகழ்ச்சிகளைப் பற்றி கதையாடுகிறது. திருமலை நாயக்கர் வேணாட்டின் மீது படையெடுத்துத் திறை கொண்டு வருமாறு வேலய்யன் என்ற படைத்தளபதியை அனுப்புவதாகவும் வேணாட்டு அரசன் தன் அமைச்சர்களை அழைத்து மதுரை நாயக்கர் படைக்கொதிராகப் படை திரட்டிச் செல்லுமாறு ஆணையிட இரவிக்குட்டிப் பிள்ளை மீது பொறாமையிலிருந்த பிற அமைச்சர்கள் அவனைப் போரைக் காரணமாகக் கொண்டு பழிவாங்க எண்ணி இரவிக்குட்டிப் பிள்ளையைப் படைக்குத் தலைமையேற்று நடந்துமாறும் அதற்குத் தாங்களும் தங்களுடைய துணைப்படைகளும் பக்கபலமாகச் செல்லும் என்றும் மன்னனிடம் சொல்லுவதாகவும் மன்னன் இரவிக்குட்டிப் பிள்ளையை வேண்ட அதற்குச் சம்மதித்துப் போருக்குத் தலைமையேற்றுச் சென்றதாகவும் இராமப்பையன் தலைமையிலான படையோடு பொருது கொண்டிருக்கும்போது பிற அமைச்சர்கள் தலைமையிலான துணைப்படைகள் திட்டமிட்டபடி ஒதுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து கொள்ள இரவிக்குட்டி இறுதி வரை வீரத்துடனும் தீரத்துடனும் போராடுவதாகவும் இறுதியில் அவன் இராமப்பையனால் கொல்லப் படுவதாகவும் கதையாடுகிறது.

இந்தக் கதைப்பாடலிலும் அதிகாரத்திற்கு எதிரான குரலே எழுந்துள்ளது. திருமலை நாயக்கர் தன் ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்தும் நோக்கத்திலும் வேணாட்டின் மீது போர் தொடுக்குமாறு இராமப்பையனை ஏவுகிறார். வேணாட்டு மன்னனும் மக்களைச் சுரண்டி ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்தி வந்தவன்தான் என்ற போதிலும் படைபலமும் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பை விரிவுபடுத்த வேண்டும் என்ற வெறியும் செல்வக் களஞ்சியத்தை வளப்படுத்த வேண்டும் என்ற பேராசையும் சேர்ந்து திருமலை நாயக்கரை அண்டை நாடுகளின் மீது போர் தொடுப்பதற்குத் தூண்டியதால் அம்மன்னனின் அதிகாரத்திற்கு எதிராக அடித்தள மக்கள் கதைபாடலின் வழி குரல் எழுப்புகிறார்கள். இது அடித்தள மக்களின் பொதுவான சமூகநீதி மனம் அழுத்தமாகப் பரவியுள்ளது.


மதுரைவீரன் கதைப்பாடல் இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இப்படி ஒவ்வோராண்டும் நொண்டிசாமி கோயில், சப்பாணி கோயில், மதுரைவீரசாமி கோயில் ஆகியவை தொடர்பான வழிபாட்டுச் சடங்குச் சூழல்களில் மதுரைவீரன் கதையை நிகழ்த்துவதின் மூலம் நாயக்க ஆட்சியின், குறிப்பாக, திருமலை நாயக்கர் காலத்து அரசியல் பண்பாட்டு வரலாறு கட்டவிழ்ப்பு செய்யப்படுகிறது. அதாவது மேலே உள்ளது கீழும் கீழே உள்ளது மேலுமாகவும் மாற்றப்படுகிறது. சமூகத்தின் மையமாகவும் தெய்வமாகவும் கருதப்படுகின்ற (திருவுடை மன்னனைக் காணிக் திருமாலைக் கண்டேன்) திருமலை நாயக்கர் சாதாரண மனிதராகவும் சமூகத்தின் விளிம்புநிலை மனிதனான மதுரை வீரன் தெய்வமாகவும் கட்டவிழ்க்கப் படுகிறார்கள். காசி விசாலாட்சி தெய்வமே நேரில் வந்து கருவுற்றிருக்கும் காசிநாட்டு அரசி கற்பூரவல்லிக்கு மகப்பேறு மருத்துவம் பார்த்து மதுரைவீரன் பிறப்புக்கு உதவியதாக புனைவு செய்யப்பட்டுச் சக்கிறீயர் மாதிகனின் மகன் காசிநாட்டு அரசனின் தெய்வமகனாகக் கட்டவிழ்ப்புச் செய்யப்படுகிறான். வீரையன் அம்மானை என்ற கதைப்பாடல் நிகழ்த்துதலில் ஓர் உழைப்பாளியின் மகனான மதுரை வீரன் சிவனின் வியர்வையில் பிறந்த வீரபத்திரனாகக் கட்டவிழ்க்கப்படுகிறான். ஸ்ரீமதுரை வீரசுவாமி பராக்கிரமம் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பாடல் திருச்சி ஆளுநர் விஜயரங்க சொக்கலிங்கத்தின் சேர்வைக்காரனான மதுரை வீரனை முருகக் கடவுளின் தளபதியான வீரபாகுவாகக் கட்டவிழ்ப்பு செய்கிறது. நாட்டியக்காரி வெள்ளையம்மாளைக் கோட்டைக்குள்ளிருந்து தூக்கிச் செல்ல முயற்சி செய்தபோது பிடிபட்ட மதுரை வீரன் கொல்லப்பட, இதனைக் கேள்வியுற்ற திருமலை நாயக்கர் மதுரை வீரனைத் தெய்வமாக வழிபடுவதோடு தன் மகனுக்கு மதுரை வீரன் நினைவாக வீரப்பன் எனப் பெயரிடுவதாகவும் மேல் கீழ் கட்டவிழ்ப்பு நிகழுகிறது. மதுரைவீரன் கதைப் பாடலின் திரிபு வடிவங்கள் அனைத்தும் கட்டவிழ்ப்பின் மூலம் அதிகாரத்திற்கு ஏதிரான வரலாற்றையே உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையும் பண்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசயநகர - நாயக்கர் காலக் கட்டடக்கலை

பேராசிரியர் கு. சேதுராமன்

விசயநகர – நாயக்கர் ஆட்சிக்காலம் தமிழகத்துக் கலைவரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்திருந்தது. தொடர்ந்து வந்த கட்டடக்கலை மரபில் புதிய தொழில்நுட்பங்களும், காலத்திற்கேற்ற, தேவைக்கேற்ற கட்டடங்களும் புகுத்தப்பட்டன. முதல் முறையாக, தென்னகத்தில், வைதிகக் கோயில்களைச் சூறையாடி, சிற்பங்களை உடைத்து இன்னல் விளைவித்தோரிடமிருந்து இந்து சமுதாயத்தையும், வைதிக இந்து கோயிற் கலையையும் காப்பதற்காகத் தோன்றிய பேரரசு விசயநகரப் பேரரசாகும். எனவே, இந்து கோயிற்கலை மற்றும் கட்டடக் கலையை அவர்கள் வளர்த்தனர். பெருஞ்செல்வத்தை அதிற் செலவிட்டனர். பழைய கோயில்களைப் புதுப்பித்தனர், விரிவுபடுத்தினர், புதியவற்றைக் கட்டினர். பேரரசின் மாநில ஆளுநர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும், சுதந்திரப் பிரகடனங்களைச் செய்தபின்னும், நாயக்கர்களும் தங்களது பேரரசர்களின் கலைப்பணியைத் தத்தம் பகுதிகளில் தொடர்ந்தனர். குறுகிய காலமே தமிழகத்தை ஆண்ட விசயநகர மன்னர்கள் தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் முந்தைய மன்னர்கள் கட்டி வைத்துச் சென்ற கோயில்கள் அனைத்தையும் கோயில் வளாகங்களாக்கினர் (Temple Complexes). கோயில் வளாகங்களாய் இருந்தவற்றைக் கோயில் நகரங்களாக்கினர் (Temple Cities). இதற்குக் காரணம் தொடர்ந்து ஆண்டு முழுவதும் நடைபெற்ற விழாக்களாகும். விசயநகரப் பேரரசு என்னும் ஒரே அரச வம்சம் தென்னிந்தியா முழுவதையும் – ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் மற்றும் கேரளத்தின் பகுதிகளை ஆண்டதால் அவர்களது கலைப்பாணி பல கலைக்கூறுகளையும் உள்ளடக்கிய கூட்டுக் கலைப்பாணியாக இருந்தது[1]. தென்னிந்தியாவின் கலை மற்றும் கட்டடக்கலை பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலர் கி. பி. 11–12 ஆம் நூற்றாண்டினைத் தாண்டிச் செல்லவில்லை. அக்காலகட்டம் ஹொய்சாளர் மற்றும் சோழர்களின் உன்னத நிலையைக் காட்டுவதாகும். இதற்குப் பின்பு வந்த விசயநகர – நாயக்கர் கலை மற்றும் சின்னங்கள் பற்றி ஆய்வது பயனுடையதல்ல என்று கருதினர்[2]. பலர் இக்கலைப் பாணியை திரும்பத் திரும்ப வருவதெனவும், எந்த சலனத்தையும், கலை உணர்வுகளையும் ஏற்படுத்துவன அல்ல என்றும் கருதினர். இது அவர்களது முருகியல் உணர்வில் ஏற்பட்ட குறையெனலாம். ஒரு கலையை ஆராயும்போது அது அமைக்கப்பட்ட காலச் சூழல், கலைப்பொருள் உருவாக்கப்பட்ட சாதனம், சமுதாயக் காரணிகள், பொருளாதாரச் சூழல், அரசியல் திரத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த அரசவம்சத்துக் கலைப் பொக்கிசங்களைப் பலர் பாராமலிருந்தாலும் அவை பற்றி வேறு பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஜேம்ஸ் பெர்குஷன், ராபர்ட் பெல்லோவ்ஸ் சிசாம், டி. ஏ. கோபிநாதராவ், ஆர். என். சேல்டர், ஜார்ஜ் மிச்சல், டல்லபிக்கொலா, கே. வி. இராமன் போன்றோராவர்.

விசயநகரப் பேரரசர்கள் தங்களது அரசின் வடபகுதியில் பிற்காலச் சாளுக்கியர், காகாத்தியர், ஹொய்சாளர் ஆகியோரின் கலைக் கூறுகளைப் பின்பற்றினர். தென்பகுதியில் அவர்கள் பல்லவர், சோழர், பாண்டியர் வளர்த்த மரபினைப் பின்பற்றினர் என கே. ஆர். சீனிவாசன் கருதுகின்றார்[3]. இருப்பினும் தமிழகத்தில் தங்களுக்கென ஒரு கலைப் பாணியையும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கத் தவறவில்லை. அவர்கள் தெற்கே தங்களது சின்னங்களை உருவாக்க கடினமான கருங்கல்லைப் பயன்படுத்தினர். இதனையே தங்களது பேரரசு முழுவதும் பின்னாளில் பயன்படுத்தினர். இக்காலத்தில் கோயிலின் வெளிவட்டாரப் பகுதிகள் மன்னர்களின் கவனத்தை ஈர்த்தன. அவர்களது முக்கிய கலைக்கூறுகளாவன: அலங்காரங்களுடன் கூடிய மண்டபங்கள் – அதாவது கல்யாண மண்டபங்கள், ஊஞ்சல் மண்டபங்கள், வசந்த மண்டபங்கள், வாகன மண்டபங்கள், ரங்க மண்டபங்கள், கண்ணாடி மண்டபங்கள் – அமைத்தலும், இம்மண்டபத் தூண்களில் பல கூறுகளையும் உள்ளடக்கிய அலங்காரங்களைச் செதுக்குதலும், அதாவது பூவேலைப்பாடுகள், கருக்குப்பட்டி வேலைகள், சிற்றுருச் சிற்பங்கள் அமைத்தல் போன்றவை – அணிவொட்டுத் தூண்கள் – தூணில் ஆளுயரச் சிற்பங்களையோ அல்லது யாளிகளையோ செதுக்குதல் – அமைப்பதும், வாயில்களில் உயரமான, பதினொரு தளங்களுக்கும் மேலான, ராய கோபுரங்களை அமைத்தலும், இன்னபிறவுமாகும். கோயிற் கலையே அன்றி சமயம் சாராத பொதுக் கட்டிடங்கள் பலவற்றையும் அவர்கள் கட்டினர். அரண்மனைகள் கட்டினர். இராணுவத் தொடர்பான பாதுகாப்பு அரண்களை அமைத்தனர். தென்னகத்து, குறிப்பாகத் தமிழகத்துக் கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள் தங்கி, இளைப்பாறிச் செல்வதற்கு வசதியாக ஆங்காங்கே மண்டபங்கள் கட்டினர். துலாபார மண்டபமும் கட்டப்பட்டது. இதற்கு உதாரணமாகக் கும்பகோணத்து துலாபார மண்டபத்தைச் சொல்லலாம்.

இவர்களது கோயில் விமானங்கள் பிரஸ்தரம் வரை அல்லது கபோதம் வரை கருங்கல்லாலும் அதற்கு மேலுள்ள தளங்கள் செங்கல்லாலும் கட்டப்பட்டன. விமானம் மற்றும் கோபுர மேற்றளங்களுக்குச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக அவர்களது சிற்பக்கலை அமைப்பைக் கூறலாம். அதாவது, கருங்கல்லில் சிறுசிறு சிற்பங்கள் அமைப்பதும் கடினமாயிருந்ததால் செங்கல்லைப் பயன்படுத்தி கருவறையின் மேல் தளங்களிலும், கோபுரங்களிலும் அளவற்ற சிற்பங்களை உருவாக்கியுள்ளதைக் காணலாம். அவர்தம் கலைக்கூறுகளில் பல முன்னமே பாண்டியர்களால் துவக்கப் பெற்ற போதிலும் அவை விரிவடைந்து முழுமை பெற்றது இக்காலத்திலேதான். அவர்களது தூண்களில் போதிகைகள் இதுகாறும் சற்று மேல் நோக்கியிருந்த நிலையிலிருந்து மாறி கீழ் நோக்கிச் சற்றுக் கவிழ்ந்த தாமரை மொட்டுப்போல் அமைக்கப்பட்டு அவற்றில் புஷ்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிகையானது. நாயக்கர் காலத்தில் இப்புஷ்ப போதிகை மேலும் வாழைப்பூ போன்று கீழ்நோக்கித் தொங்கத் துவங்கியது[4]. விசயநகரப் பாணியையே நாயக்கர்களும் பின்பற்றியதோடு அவற்றை விரிவுபடுத்தவும் செய்தனர். கோயில் முன் மண்டபங்களின் மேற்பகுதியில் நாடகச் சட்டங்கள் போல் பிரித்து இராமாயண, மகாபாரதக் கதைச் சிற்பத் தொகுதிகளை அமைப்பது இவர்தம் கட்டடக் கலைக்கூறுகளில் ஒன்றாகும்.

விசயநகர – நாயக்கர் காலத்து ஒற்றைக்கல் பெருந்தூண்களின் அடிப்பகுதிகளனைத்திலும் இராணுவ வீரர்கள் மற்றும் பிற சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும். தூண்களின் நடுப்பகுதியில் யாளி அல்லது மனித உருவங்கள் அல்லது கடவுள் உருவங்கள் ஆளுயரத்தில் இருக்கும் என முன்னமே கண்டோம். சில கோயில்களில் பாய்ந்து செல்லும் பெரிய குதிரையும் அதன் மீது வீரனும் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகைத் தூண்கள் திருவரங்கம் கோயில் குதிரை மண்டபத்திலும், வேலூரிலும், காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலிலும் காணப்படுகின்றன. அக்காலத்தில் அதிகமான பணம் செலவழித்து இராணுவப் பயனுக்காக வெளிநாடுளிலிருந்து குதிரைகள் வருவிக்கப்பட்டன. இக்காலத்தில் கொங்கன் துறைமுகங்கள் வழியாக ஆயிரக்கணக்கான குதிரைகள் வந்திறங்கின[5]. ஆனால் தமிழ்நாட்டுக் கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள இம்மாதிரிக் குதிரைத் தூண்கள் தலைநகரிலேயே இடம்பெறவில்லை. விசயநகர ஆட்சிக் காலத்து சாதாரணத் தூண், ஒரு அடித்தளத்தையும், மூன்று சதுரங்களையும் (square parts) இரண்டு கட்டுகளையும் (polygonal) கொண்டு அதன்மீது போதிகையும் அமைந்திருக்கும். இதன் பெரிய அளவிலான விரிவாக்கமே அணிவொட்டுத் தூண்கள். பாண்டியரின் பிற்காலத்தில் சிறிதாகத் தூண்களில் இடம்பெற்ற நாகபந்தம் விசயநகர் காலத்தில் பெரிதானது. முதலாம் இராசராயன் காலத்தில் கோயிற் சுவர்களில் இடம்பெறத் துவங்கிய கும்பபஞ்சரங்கள் இக்காலத்தில் பெரிதும் விரிவுப்படுத்தப்பட்டன. கும்பத்திலேயே மலர்த் தோரணமும் அமைக்கப்பட்டது. இவர்களது கூடுகளில் சிம்ம முகத்தலைப்பு இருந்திருப்பினும் அவற்றின் உள்ளே உருவங்கள் வைக்கப்படவில்லை. அதிட்டானத்தில் ஜகதிக்கு மேல் இரு வளைவுகளைக் கொண்ட பத்மம் இடம் பெறுகின்றது. இது சோழர்களின் பாணியாகும். இவர்களது கோயில்களில் கபோதப் பகுதியே இரு மடங்காக விரிவுப்படுத்தப்பட்டு பெரும் கொடுங்கை என்ற பெயரைப் பெற்றது. ஒவ்வொரு கோயிலிலும் பல தூண்களைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சுற்றுப் பிரகாரங்கள் அமைக்கப்பட்டன. இவை பழைய கட்டிடங்களையும் புதியனவற்றையும் இணைக்கின்ற ஓர் நுணுக்கமான கட்டடக்கலை யுத்தியாகும். கருவறை மற்றும் பிற சன்னதிகளைச் சுற்றி பக்தர்கள் நிற்கவோ அல்லது அமரவோ திருச்சுற்றுப் பாதைகளும் அமைக்கப்பட்டன. வெளிப்பிரகாரங்களில் கடைகளும், மக்கள் வசிப்பிடங்களும் இருந்தன. இதற்குத் திருவரங்கம் கோயிலும், திருச்சி மலைக் கோட்டையும் நல்ல உதாரணங்களாகும். விசயநகர் காலத் தூண்களில் பல்லவர் தூண்களினடியில் அமைக்கப்பட்ட சிம்மங்கள் இடம் பெற்றன. இவர்கள் காலத்தில் அம்மன் கோயில்கள் தென்மேற்கு மூலையில் அமைக்கப்பட்டன. இவர்களது அதிட்டானங்களில் ஒவ்வொரு பத்ர மற்றும் கர்ண மடிப்பிலும் வெவ்வேறு வகை அதிட்டானக் கூறுகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் இவ்வகை அதிட்டானங்களை இன்றைய ஸ்தபதிகள் "வர்க்க பேத அதிட்டானங்கள்" (மாறுபட்ட பாகங்களைக் கொண்டவை) என்று கூறுகின்றனர்[6]. மேற்கூறப்பட்ட கலைக்கூறுகள் விசயநகர – நாயக்கர் காலத்து எந்தெந்த கலைச்சின்னங்களில் எல்லாம் இடம்பெற்றுள்ளன என்பதைக் காண்பது அவசியமாகும்.

## மண்டபங்கள்

விசயநகர காலத்தில் கோயில்களின் பகுதிகள் விரிவுப் படுத்தப்பட்டன என்று முன்னமே கூறியுள்ளோம். குறிப்பாக, பல்வேறு மண்டபங்களும், தூண்களுடைய மண்டபங்களும், முகப்புகளும் இக்காலத்தில் உருவாயின. இவை 100 தூண்கள் முதல் 1000 தூண்கள் வரை கொண்ட பெரிய மண்டபங்களாகக் கட்டப்பட்டன. இம்மண்டபங்கள் உயர்ந்த மேடை மீது அமைக்கப்பட்டன. பக்தர்கள் கூடுவதற்காகத் திறந்த வெளிப் பிரகாரங்களும் இவற்றில் இடம் பெற்றன. இதற்குக் காரணம் இக்காலத்தில் பெருகிய சடங்குகளும், விழாக்களும் என்று கருதப்படுகின்றது[7]. பகட்டான பெரும் விழாக்கள், அதாவது நவராத்திரி, வசந்தோற்சவம், துலாபாரம் போன்றவை நடைபெற்றதால் மக்கள் கூடுவதற்கும், இறையுருவங்கள் அவர்களது பார்வையில் வைக்கவும் பெரும் பரப்பான இடம் தேவைப்பட்டது. இதனால் இக்காலத்தில் மண்டபங்கள் பல பொது விழாக்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இறைவனுக்கும் இறைவிக்கும் நடத்தப்படும் திருமண வைபவமும் இங்குதான் நடக்கும். வேறு விழாக் காலங்களில் இறையுருவங்கள் பெரும்பாலும் இங்குதான் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு உதாரணமாக மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெறும் வைபவங்களைக் கூறலாம். இங்கு இன்றும் சித்திரை மாதத்தில் (ஆண்டு தோறும்) நடைபெறும் திருக்கல்யாண வைபவம் வெளிப் பிரகார வெளியில் தான் நடைபெறும். இவ்வைபவம் முடிந்ததும் இறைவனும், இறைவியும், கல்யாண மண்டபத்தில் தான் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றனர். பெரும்பாலான கோயில்களில் நவராத்திரி விழாக் காலங்களில் இம்மண்டபங்களில் கொலு வைக்கப்படும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்வதோடு இசைக் கருவிகளை இசைத்து இறைவனையும், இறைவியையும், உற்ற பக்தர்களையும் மகிழ்விப்பர். விசயநகர – நாயக்கர் காலத்துக் கல்யாண மண்டபங்கள் ஏராளமான தூண்களையுடையன (பொதுவாக 100 கால் மண்டபங்கள்). கோயில்களில் வடகிழக்குப் பகுதியில் இவை அமைந்திருக்கும். நடுவில் ஒரு மேடை அமைக்கப்பட்டிருக்கும். அம்மேடையே சில இடங்களில் ஒரு சிறு மண்டபம் போன்று அலங்கரிக்கப்பட்டிருக்கும். இது "குறடு" என அழைக்கப்படுகின்றது. இதன் தூண்கள், ஒன்றோடு ஒன்று பொருத்தப்பட்ட பொருத்துத் தூண்களாகவும் (composite pillars) அணிவொட்டுத் தூண்களாகவும் அமைந்திருக்கும். கல்யாண மண்டபங்களுக்குத் தரையிலிருந்து படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கும். இவை யாளி அல்லது கஜயாளிகளால் அலங்கரிக்கப்பட்ட கைப்பிடிகளைக் (balustrade) கொண்டிருக்கும்.

இவ்வமைப்புகளைப் பெரிதும் கொண்ட விசயநகர– நாயக்கர் கல்யாண மண்டபங்கள் தமிழகத்துக் கோயில்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை காஞ்சி வரதராசப்பெருமாள் கோயிலிலும், வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிலிலும் உள்ளன. வரதராசப் பெருமாள் கோயில் மண்டபம் உயரமான மேடை மீது அமைக்கப்பட்டுள்ளது. 575 சதுர மீட்டரில் 96 தூண்களைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது[8]. இதன் அதிட்டான பீடம் இரண்டு மீட்டர் உயரமானது. இதன் உயர் வெட்டுப்பிரிவில் யானைவரி, குதிரைவரி, ஹம்ஸவரி, இராமாயணச் சிற்பத் தொகுதிகள், நாட்டியப் பெண்டிர் சிற்பங்கள் ஆகியவை நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத் தூண்கள் ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டவை. இவற்றில், வேலூர், திருவரங்கம், விரிஞ்சிபுரம் ஆகிய கோயில்களில் உள்ளது போன்று வீரர்கள், வேட்டையாடுவோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை வீரர்கள், யாளி போன்ற விசயநகரக் கலைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சில தூண்களில் ஆளுயரத்தில் இரதி, மன்மதன் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. விசயநகர அரசர்களைத் தொடர்ந்து நாயக்க மன்னர்களும் இத்தகைய சிற்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர். சில தூண்களில் ஐரோப்பிய இராணுவ வீரர்களின் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இவர்கள் பெரும்பாலும் விசயநகர இராணுவத்தில் இடம் பெற்ற போர்த்துக்கீசிய வீரர்களாக இருக்கலாம் என கே. வி. இராமன் கருதுகின்றார். வரதராசப்பெருமாள் கோயில் கல்யாண மண்டபத்தில் அணிவொட்டுத் தூண்களும், அலங்கரிக்கப்பட்ட கைப்பிடிகளைக் கொண்ட படிக்கற்களும், கல் வளையங்களுடன் கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும் கற்சங்கிலியும் குறிப்பிடத்தகுந்த கலை நுட்பங்களுடன் கூடிய சின்னங்களாகும். இக்கற் சங்கிலிகளின் கண்ணிகள் அனைத்தும், கபோதத்தின் கல்பகுதி உட்பட ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இதனைக் கட்டியவர் இக்கோயில் அலுவலர்களில் ஒருவரான அழகிய மணவாள ஐயர் ஆவார். இது கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பின்பாதியில் கட்டப்பட்டதெனத் தெரிகிறது. இந்தக் கல்யாண அல்லது உற்சவ மண்டபங்கள் யாவும் கடினமான பாறைகளில் செதுக்கப்பட்ட அழகானதும் சிக்கலானதுமான வேலைப்பாடு நிறைந்த தூண்களுக்குப் பெயர் பெற்றவை. இவற்றில் சில தூண்களில் முதன்மையான தூணை ஒட்டி அதே கல்லில் சிறிய தூண்களாக பெரிய விலங்குகளின் சிற்பங்களோ அல்லது பிற உருவங்களோ செதுக்கப்பட்டுள்ளன[10]. இவையே முன்னர் குறிப்பிட்ட அணிவொட்டுத் தூண் வகையைச் சேர்ந்தவையாகும்.

கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக்கு முன்னரே வேலூர் விஜயநகரப் பேரரசின் முக்கிய நகராக விளங்கி வந்தது. அக்காலத்தில் ஹீல்ஸ்டினைச் சேர்ந்த மேண்டலஸ்கோ என்பவர் அந்நகருக்கு விசயம் செய்துள்ளார்[11]. வேலூரில் பேரரசர் இரண்டாம் வேங்கடரின் ஆட்சிக் காலத்தில் கல்யாண மண்டபம் கட்டப்பட்டது. இது அரவீடு வம்சத்தின் முக்கிய கட்டடக் கலைச் சின்னமாகும். இதன் வெளிப்புறத் தூண்களில் பாயும் மிருகங்கள், யாளிகள், குதிரைகள், செதுக்கப்பட்டுள்ளன. இதன் விதானத்தில் பெரிய தாமரையும், பறவைகளும், மனித உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. நாட்டியக் குழுவினரின் சிற்பங்களும் காணப்படுகின்றன. இதன் தூண்களின் உச்சியிலுள்ள போதிகை விசயநகர ஆட்சிக் காலத்தின் இறுதிக்கட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளது. கிருஷ்ணதேவராயர் காலத்துப் போதிகையில் நாநுதலிலிருந்து வெளிவரும் பூமுனை ஒரு சிறு மொட்டாக இருந்தது. அதன் பின் அச்சுதராயர் காலத்து போதிகை பருத்திருந்தது. இரண்டாம் வேங்கடரின் காலத்தில் அதன் முனை கூர்மையாக அமைக்கப்பட்டது. இதற்கு உதாரணமாக அமைவது வேலூர் கல்யாணமண்டபத் தூண்களில் உள்ள போதிகைகள் ஆகும். இதனை துப்ரயில் தவறாகப் புரிந்துகொண்டு மதுரை நாயக்கரின் கலைக்கூறுகளில் ஒன்றே இந்தக் கூர்மைப்படுத்தப்பட்ட போதிகை என்று குறிப்பிட்டுள்ளதை ஆர். என். சேல்டர் சுட்டிக் காட்டியுள்ளார்[12]. விசயநகரப் பேரரசர்கள் தங்களது பிரதான ஆட்சிப் பகுதிகளில் அமைந்த மண்டபங்களில் வட்டவடிவமான தூண்களை எழுப்பவில்லை. ஆனால் தமிழகத்துக் கோயில் மண்டபங்கள் சிலவற்றில் அத்தகையத் தூண்களைக் கட்டியுள்ளனர். இதற்கு உதாரணமாக வேலூர் கல்யாண மண்டபத்தையே கூறலாம். இத்தூண்களைக் காண்பவர்களுக்கு மாமல்லபுரத் தூண்கள் நினைவுக்கு வருவது இயல்பே. ஏனெனில் இங்குள்ள தூண்களின் அடிப்பகுதி சதுரமாக அமைந்துள்ளது. அதன் மீது பாயும் சிம்மத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிம்மத்தின் அமைப்பு மாமல்லபுரத்திலிருந்து சற்று வேறுப்பட்டிருப்பினும், பல்லவர்தம் கலையின் தாக்கம் இங்கு உணரப்படுகிறது. வேலூரில் உள்ள கல்யாண மண்டபத் தூண்களின் இரட்டைப் பூமுனைப் போதிகைகள் அமைந்துள்ளன. அடிப்பாகம் சதுரமாக உள்ளது. இந்த வட்டவடிவத் தூண்கள் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் இராயகோபுரத்து அரைத்தூண் அமைப்பிலும் இடம்பெற்றுள்ளன. இங்கு தூண்களின் அடியில் விசயநகர கலைப்பாணியின் முக்கிய கூறுகளில் ஒன்றான டிராகனின் வாயிலிருந்து ஒரு கட்டியான வில் புறப்பட்டு குதிரையின் வாயில் நுழைவது போன்றுள்ள சிற்பம் செதுக்கப்பட்டுள்ளன. இதனையொத்த அமைப்பு விசயநகர அரசர்களின் தலைநகரான ஹம்பியில் உள்ள விட்டலசாமி கோயிலிலும் காணப்படுகிறது. ஒரு தூணில் மூன்று சிறிய பூதகணங்கள் இரண்டு குதிரை வீரர்களைத் தாங்கிக் கொண்டிருப்பது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. இம்மண்டபத்தின் விதானத்தின் நடுவில் நேர்த்தியான வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அழகான தாமரையும், கீழே தொங்குவது போன்ற கிளிகளும் அதனைச் சுற்றிலும் நடனக் காட்சிகளும், சிற்றுருவ இறையுருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன[13].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலூரிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விரிஞ்சிபுரம் மார்க்கபந்து கோயிலில் மேற்கு மூலையில் இரண்டு கல்யாண மண்டபங்களும் உள்ளன. அவை விசயநகரத்து அரசவீடு வம்சத்தவர்களின் கலைப் பணியாகும். இவற்றின் தூண்கள் வேலூர் கோயிலைப் போன்றே உயரமான தூண்களையும், ஆளுயர யாளி உருவங்களையும் குதிரை வீரர்களின் உருவங்களையும் கொண்டுள்ளன. சதுரமான அடிப்பாகத்தின் மேல் அமர்ந்துள்ள சிம்மத்தின் உருவம் உள்ளது[14]. திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் இரண்டாவது பிரகாரத்தின் தென் மேற்கு மூலையில் கல்யாண மண்டபம் ஒன்று கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்டது. இதன் வடக்குச் சுவரின் நடுவில் மூன்று இடைவெளிகளைக் கொண்ட முகப்பும் அலங்காரமான வேலைப்பாடுகளைக் கொண்ட தூண்வரிசைகளும் உள்ளன. இரண்டு பக்கங்களிலும் உள்ள சுவர்களும் மிருகங்கள் மற்றும் மனித உருவங்கள் செதுக்கப்பட்ட உயரமான பீடங்களின் மேல் கட்டப்பட்டுள்ளன. அச்சுவர்களில் விசாலமான கோட்டங்களும் (மாடங்கள்) அலங்கரிக்கப்பட்ட கபோதமும் அமைந்துள்ளன. இம்மன்னர் காலத்தில் கி.பி. 1516வாக்கில் இக்கோயிலில் கட்டப்பட்ட மற்றொரு மண்டபம் நான்காவது பிரகாரத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபமாகும். இதன் தெற்குப் பார்த்த முகப்பில் ஒரே வரிசையில் முப்பத்துநான்கு தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. தூண்களின் பாயும் குதிரையில் அமைந்துள்ள வீரர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உட்பக்கம் அமைந்துள்ள தூண்களின் மிருகங்களின் உருவங்களைக் காணலாம்[16].

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலின் கிழக்குப் பிரகாரத்திலுள்ள கல்யாண மண்டபம் விசயநகர் காலத்தில் தோன்றிய சீரிய படைப்பாகும். பல தூண்களையுடைய இந்த மண்டபத்தின் முகப்பு வரிசைத் தூண்களில் மிக நேர்த்தியாகச் செதுக்கிய சிற்பத் தூண்கள் உள்ளன. ஒரே கல்லாலான அச்சிற்பத் தூண்களில் ஆளுயர, முழுமையான வடிவில், போர் வீரர்களைத் தாங்கியுள்ள பாயும் குதிரைகள், பரிவாரங்கள், பிற வேட்டை மிருகங்கள் போன்ற சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. திருவண்ணாமலையில் இரண்டாவது சுற்றுப் பிரகாரத்தின் தென் மேற்கு மூலையில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கல்யாண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இதன் தூண்களும், சுவர்களும் அலங்கார வேலைப்பாடுகளையும், சிற்பங்களையும் கொண்டவையாகத் திகழ்கின்றன[15].


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண மண்டபங்களைத் தவிர குதிரை மண்டபங்கள் (horse court), வசந்த மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் ஆகியனவும் விசயநகர் ஆட்சிக்காலத்திலும், நாயக்கர் காலத்திலும் கட்டப்பட்டன. விசயநகர் காலத்து குதிரை மண்டபங்கள் திருவரங்கம் அரங்கநாதர் கோயில், காஞ்சி வரதராசர் கோயில், வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் ஆகியவற்றில் காணப்படுகின்றன. அவற்றில் உயரமான, பாய்ந்து செல்லும் குதிரைகளையும், வீரர்களையும் காணலாம். திருவரங்கத்தில் நான்காம் பிரகாரத்தின் கிழக்குப் பக்கத்தில் வெள்ளைக் கோபுரத்திற்கு அருகில் உள்ள குதிரை மண்டபம் சேஷராயர் மண்டபம் என அழைக்கப்படுகின்றது. இதன் முகப்பில் உள்ள எட்டுத் தூண்களில் வீரர்களைத் தாங்கும் உயரமான, பாயும் குதிரைகள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் கீழ்ப் பகுதியில் பயமறியாத வீரர்கள் வேட்டையாடும் காட்சி உள்ளது. வீரர்கள் மிருகங்களுடன் மோதுகின்றனர். தவிர, இசைக் கலைஞர்களின் சிற்பங்களும் நாட்டுப்புறக் கலைச் சிற்பங்களும் இத்தூண்களில் காணப்படுகின்றன. இம்மண்டபத்தில் குதிரைகள் சுமார் ஒன்பது அடி உயரத்திற்கு முன்கால்களை உயர்த்திக் குதித்துப் போருக்குச் செல்வதைப் போல் காட்சி அக்காலப் போர் நடவடிக்கையைக் காட்டுகிறது எனலாம்.

மேற்கூறப்பட்ட மண்டபங்கள் தவிர காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயிலிலும், திருப்பருத்திக்குன்றம் சமணக் கோயிலும் இவர்கள் காலத்தில் மண்டபங்கள் கட்டப்பட்டன. இம்மண்டபத் தூண்களுடன் கட்டப்பட்ட இணைப்புத் தூண்கள் வட்டவடிவமாக அமைக்கப்பட்டன[18]. இரண்டாம் புக்கரின் ஆட்சிக் காலத்தில் திருப்பருத்திக்குன்றத்தில் கட்டப்பட்ட சமண மண்டபத்தின் தூண்கள் அலங்காரமின்றி எளிமையாகக் கட்டப்பட்டன. இவை அடியில் சதுரமாகவும் மேற்புறம் எண் பட்டையாகவும் அமைக்கப்பட்டன. பிற்காலச் சோழர் மற்றும் பிற்காலப் பாண்டியர் காலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெறத் தொடங்கிய நாகபந்தம் இங்குள்ள தூண்களின் சதுரத்திற்கு மேல் நான்கு முனைகளிலும் தெளிவாக இடம்பெறத் தொடங்கியது. இது பின்னாளில் மேலும் வளர்ச்சியடைந்தது. இதனைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்த அலங்காரம் மிக்க நாகபந்த அமைப்பினை விசயநகரத்தில் உள்ள கடலே கல்லு கணேசர் கோயிலில் காணலாம்[19]. இரண்டாம் ஹரிஹர மன்னரின் அமைச்சர் இருகப்பார் என்பார் திருப்பருத்திக்குன்றத்து வர்த்தமானர் கோயிலில் சங்கீத மண்டபம் கட்டினார்[20]. கிருஷ்ணதேவராயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம் கோவிந்தராசப் பெருமாள் கோயிலில் சோழர் பாணியைப் பின்பற்றி ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இதில் வட்ட வடிவத் தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன[21]. மதுரை சுந்தரேசுவரர் ஆலயத்தின் மகாமண்டபம் கி.பி. 1452 இல் கட்டப்பட்டுள்ளது [22].

விசயநகர ஆட்சிக்காலத்தில் துலாபார விழாவுக்கென மண்டபங்கள் கட்டப்பட்டன. விசயநகரப் பேரரசர் அச்சுதராயர் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலில் முக்த துலாபாரம் நடத்தினார். அதற்கென அங்கு துலாபார மண்டபம் கட்டினார்[23]. இதுபோன்ற துலாபார மண்டபங்கள் கும்பகோணம், திருப்பதி, ஹம்பி போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன. இக்காலத்தில் கோயிலின் மத்தியிலோ அல்லது ஏதேனும் ஒரு பக்கத்திலோ தெப்பக்குளங்கள் வெட்டப்பட்டன. அவற்றின் நடுவில் ஒரு மண்டபமும் கட்டினர். அது நீராழி மண்டபம் எனப்படுகிறது. இதற்கு நல்ல உதாரணமாக வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் தெப்பக்குளத்தைக் குறிப்பிடலாம். இதனை இவ்வரசர்களுக்குப் பின்வந்த நாயக்க மன்னர்களும் பின்பற்றினர் என்பதற்கு ஆதாரமாக அமைவது மதுரையில் திருமலை நாயக்கரால் வெட்டப்பட்ட தெப்பக்குளமும் அதன் நடுவில் உள்ள மண்டபமும் ஆகும். வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிலிலும் இதனைக் காணலாம்.

மேற்குறிப்பிட்ட விசயநகர காலத்து மண்டபங்கள் மந்திரமன்றி நாயக்கர் காலத்திலும் பலமண்டபங்கள் பல எழுப்பப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்கனவே வசந்த மண்படங்கள் ஆகும். இவ்வகை மண்டபங்கள் அழகர்கோயிலிலும், மதுரையில் புதுமண்டபம் என்ற பெயரில் உள்ளன. அழகர் கோயிலில் வசந்த மண்டபத்தின் சுவர்களில் இராமாயண ஓவியங்கள் உள்ளன. மண்டபத்தின் நடுவில் வசந்த காலத்தில் (கோடைகாலம்) இறைவனை எழுந்தருளச் செய்வதற்காக நான்கு தூண்களையுடைய மேடை (கல்குறடு) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேடையைச் சுற்றிப் பள்ளம் வெட்டப்பட்டுள்ளது. இங்கு நீர் பரப்பி குளிர்ச்சியை உண்டாக்கச் செய்வது வழக்கம். மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குக் கீழ்புறம் புதுமண்டபம் என்னும் வசந்த மண்டபம் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது. இங்குள்ள தூண்களின் யாளிகள், ஓடும் குதிரை, இறையுருவங்கள், நாயக்க மன்னர்களின் உருவங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இன்று கடைகளைக் கொண்டுள்ள இம்மண்டபத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் கஜசம்ஹார மூர்த்தியாக அமைந்துள்ளமை சிறப்பான சிற்பக்கலைக்கான உதாரணமாகும். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் சுமார் கி.பி. 1600 இல் ஆயிரங்கால் மண்டபம் (985 தூண்கள்) நாயக்க மன்னர்களின் அமைச்சராயிருந்த அரியநாத முதலியாரின் மேற்பார்வையில் கட்டப்பட்டது. நாயக்கர்களின் கட்டடக்கலையழகிற்கு இம்மண்டபம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இப்பெரும் மண்டபம் ஏறக்குறைய சதுர அமைப்புக் கொண்டதாகும். (240X 250அடி)[24]. இங்குள்ள தூண்கள் அளவற்ற அலங்காரங்களுடனும், சிற்பங்கள் மற்றும் யாளிகளுடனும் திகழ்கின்றன. கிருஷ்ண வீரப்ப நாயக்கர் (1572 –1595) காலத்தில் மதுரைக் கோயிலில் ஆயிங்கால் மண்டபமும், கம்பத்தடி மண்டபமும் கட்டப்பட்டது. ஆயிரங்கால் மண்டபத்தின் மத்தியில் சபாபதி சன்னதியும், ஒரு பகுதியில் இசைத்தூண்களும் அமைந்துள்ளன. திருப்பணி விவரமும், திருப்பணி மாலையும் இது கிருஷ்ண வீரப்ப நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன. அவர் காலத்தில் கட்டப்பட்ட கம்பத்தடி மண்டபம் பற்றி அங்குள்ள கல்வெட்டு ஒன்றிலும், தளவாய் அக்ரகாரம் செப்பேடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஞானசம்பந்தர் கோயில் மண்டபமும் இவரால் கட்டப்பட்டதெனத் தெரிகிறது[25]. கம்பந்தடி மண்டபத்தில் கொடிக்கம்பத்தைச் சுற்றி சிவபெருமானின் பல்வேறு உருவ அமைப்புகளைக் காட்டும் சிற்பங்கள் அமைந்துள்ளன. மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக் கோலமும் இங்கு சிற்பமாக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் பல்வேறு உருவமைதிகள் பற்றி ஆராய முற்படுவோருக்கு இம்மண்டபத் தூண் சிற்பங்கள் சிறந்த சான்றாதாரங்களாகும். இவ்வாறு தமிழகத்தின் பெருங்கோயில்கள் அனைத்திலும் இவர்தம்கால மண்டபங்கள் பலவற்றைக் காண முடிகிறது. அவை பயன்பாடு கருதியே அமைக்கப்பட்டன என்பதில் ஐயமில்லை.

## கோபுரங்கள்

இந்தியப் பண்பாட்டின் துவக்ககாலத்தில், குறிப்பாக ஆரியர்களது காலத்தில் கிராமத்திற்கு வெளியே நுழைவாயிலில் சிறிய தோரணங்கள் கட்டி வந்தனர். பின்பு மௌரியப் பேரரசர் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் பாடலிபுத்திரத்திலும் மற்ற இடங்களிலும் மரத்தால் கட்டப்பட்ட அரண்மனையின் நுழைவாயிலில் தோரணவாயில் அமைக்கப்பட்டது. இதன் பின்பு பௌத்தர் கலை வளரத் தொடங்கியது. பௌத்தர்களது ஸ்தூபங்களுக்கு வெளியே தோரண வாயில்கள் எழுப்பப்பட்டன. இவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியே பிற்காலத்தில் அமைக்கப்பட்ட கோபுர வாயில்கள் ஆகும். தமிழகத்தில் முதன் முதலில் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் கோபுரங்கள் எழுப்பப்பட்டன. இம்முறை தொடர்ந்தது. ஆனால் சோழர்களின் துவக்க காலத்திலும் அதற்குச் சற்றுப் பின்பும் விமானத்தினைவிட சிறியதாகவே கோபுரங்கள் எழுப்பப்பட்டன. இரண்டாம் இராசராசன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விமானத்தை விட உயரமாக கோபுரங்களை எழுப்பினர். இக்காலத்துப் பாண்டியர்களும் உயரமான கோபுரங்களை எழுப்பினர். ஆனால் இந்துக் கோயில் கலை வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தைச் சேர்ந்த விசயநகர – நாயக்கர் ஆட்சிக் காலத்தில் வானளாவிய கோபுரங்களை, (9 முதல் 11 தளங்கள்) எழுப்பினர். விசயநகரப் பேரரசின் வடபகுதியான கர்நாடகத்தில் இதுவரை கோபுரங்கள் கட்டப்பட்டதில்லை. தமிழகத்தின் கோபுரக் கலைப்பாணி இப்போது விசயநகர மன்னர்களால் தம் வடவெல்லைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஹம்பி விருபாக்ஷர் கோயிலிலும், விட்டலராயர் கோயிலிலும் கோபுரங்கள் கட்டப்பட்டன.

தமிழ் நாட்டில் இக் காலத்தில் கட்டப்பட்ட கோபுரங்களில் குறிப்பிடத்தக்கவை. காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில் வடக்கு கோபுரம், காளகஸ்தி கோயில் ஆகியனவாகும். இவை விசயநகரப் பேரரசர்களில் சிறந்தவரான கிருஷ்ணதேவராயர் காலத்தில் எழுப்பப்பட்டவையாகும்[26]. இக்காலத்தில் சேர்ந்த பிற கோபுரங்கள் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் கிழக்கு கோபுரம், ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவப்பெருமாள் கோயில், திருப்பதி கோவிந்தராச சுவாமி கோயில், வேலூர் ஜலகண்டசுவரர் கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் தெற்கு மற்றும் வடக்குக் கோபுரங்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயி கோயிலின் பதினோரு தளங்களையுடைய கோபுரம், திருவரங்கக் கோயில் கோபுரங்கள் போன்ற எண்ணற்றவையாகும். திருவண்ணாமலையில் உள்ள உயரமான கிழக்கு கோபுரமும் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலின் உயரமான தெற்கு வெளிக்கோபுரமும் நாயக்கர் காலத்துப் படைப்பாகும். சிதம்பரம் கோயில் வடக்குக் கோபுரம் சோழர் காலத்து அடித்தளத்தையும், விசயநகர் காலத்து மேல்பகுதியையும் கொண்டு விளங்குகிறது. காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் கோபுரம் முதலாம் வெங்கடபதி தேவரின் ஆசிரியரான குமரதட்டச்சார்யாவால் கட்டப்பட்டது. இது கடினமான கருங்கல் பாறையால் கட்டப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர் தியாகேசர் கோயிலில் மேற்கு வாயிலாகத் திகழும் மேற்கு இரண்டாம் கோபுரம் விசயநகர மன்னர் இரண்டாம் தேவராயர் காலத்தில் (கி. பி. 1422-1446) தெட்சிண சமுத்திராதிபதி லக்கன்ன தன்னநாயக்கன் என்பான் பெயரில் நாகராசர் என்பவரால் எடுப்பிக்கப்பட்டதென இக்கோபுர வாயிலில் அமைந்துள்ள தமிழ் மற்றும் கன்னட கல்வெட்டுக்கள் கூறுகின்றன[27]. இக்கால கோபுரங்களின் அடித்தளம், பிரஸ்தரம் வரை கருங்கல்லால் ஆனவையாகும். இவற்றின் மீது அமைந்துள்ள செங்கற் கட்டடம் பல அழகான சிற்பங்களைக் கொண்டுள்ளது. இவ்வாயிலின் நிலை இரண்டு பெரிய ஒற்றைக் கற்களையும், இரண்டு சிறிய ஒற்றைக் கற்களையும் கொண்டு விளங்குகின்றன. வாயில் கதவு மரத்தாலானது. வடநாட்டுக் கோயில்கள் பலவற்றில் வாயிலின் இருபுறமும் நிலைக்கல்லிலும் அதன் பக்கத்துப் பகுதியிலும் (door jamb) அழகான சிற்பங்கள் செதுக்கப்பட்டன. இக்காலக் கோயில்கள் சிலவற்றில் மரத்தாலான கதவு சிறுசிறு சதுரம் மற்றும் நீள்சதுரங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலே பெரும்பாலும் இறையுருவங்களும் இராமாயண மகாபாரதக் கதைச் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றினை அழகர் கோயில் பிரதான வாயிலிலும் பிரம்மதேசம் மற்றும் கல்லிடைக்குறிச்சி இலட்சுமிவராஹர் கோயிலிலும் காணலாம்[28]. கோபுரத்துக் கூரையிலும் சிறுசிறு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. விசயநகரின் சின்னமான வராஹர், சங்கு, சக்கரம் மற்றும் ஸ்ரீவத்ஸம், வாள் ஆகியவற்றைக் கோபுரத்தின் உத்திரத்திலோ அல்லது சுவரிலோ காணலாம். இதற்கு உதாரணமாக அழகர்கோயிலில் முடிவு பெறாதுள்ள மொட்டைக் கோபுரத்தைச் சொல்லலாம். இது முடிவு பெறாததற்கான காரணம் தெரியவில்லை. இம்மாதிரி முடிவுறாது விடப்பட்ட கோபுரங்கள் இராமேசுவரம், மதுரை போன்ற கோயில்களில் உள்ளன. இக்கால கோபுரங்களிலுள்ள அரைத்தூண்கள் மெல்லியனவாகவும், நுண்ணிய வேலைப்பாடு கொண்டனவாகவும் அமைந்திருந்தன. பிரமிடு போன்ற முகப்புகள் சிறிது சிறிதாக மாற்றப்பட்டு குவிந்த மாதிரியாக அமைக்கப்பட்டன. விசயநகரத்தில் உள்ள விருபாக்ஷர் மற்றும் பம்பாதி கோயில்களின் கோபுரங்களின் முகப்பு வளைந்து குழிந்து காணப்படுகின்றது. ஆனால் தமிழகத்தில் இவர்களால் எழுப்பப்பட்ட கோபுரங்களின் முகப்புகள் நேர்கோட்டில் அமைந்துள்ளன. இதனைக் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலையில் காணலாம்[29].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை கோயிலின் தெற்குக் கோபுரம் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டதாகும். இக்கோபுரத்தின் அனைத்துச் சுவர்களின் அரைத்தூண்களின் அடிப்பகுதியிலும் விசயநகரக் கலைப்பாணியான அமர்ந்த நிலையான சிம்மம் வைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரத்தின் மேல்பகுதி குவிந்த நிலையில் கட்டப்பட்டுள்ளதால் இக்கோயிலின் பிறகோபுரங்களை விட இது அழகாகத் தோன்றுகிறது. இதன் வடக்கு கோபுரம் கிருஷ்ண வீரப்ப நாயக்கர் காலத்தில் (16 –17 நூற்றாண்டு) கட்டப்பட்டுள்ளது. ஆனால் இது பிரஸ்தரத்திற்கு மேல் முடிவு பெறவில்லை. தவிர, திருமலை நாயக்கர் காலத்தில் (கி.பி. 1623– 1659) புது மண்டபத்திற்குக் கிழக்கில் 200X 120 அடி அளவிலான அடிப்பாகத்தைக் கொண்ட இராயகோபுரம் ஒன்று கட்டப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அது பாதியில் நின்றுவிட்டது. அதற்கான காரணங்கள் பல சொல்லப்பட்டிருப்பினும் சரியான காரணம் எதுவும் தெரியவில்லை. முடிக்கப்பட்டிருந்தால் இது தென்னிந்தியாவின் மிகப்பெரிய கோபுரங்களில் ஒன்றாக இருந்திருக்கும். இதன் தூண்கள் ஒவ்வொன்றும் 50 அடி உயரமும், அலங்கார வேலைப்பாடுகளும் கொண்டவை ஆகும். மீனாட்சி அம்மன் சன்னதியைச் சேர்ந்த சித்திர கோபுரம் அமைச்சர் அரியநாத முதலியாரின் மகன் காளத்தி முதலி என்பவரால் கி.பி. 1570இல் கட்டி முடிக்கப்பட்டது. மதுரையில் அம்மன் சன்னதிக்கும், சுவாமி சன்னதிக்கும் இடையில் நடுக்கட்டு கோபுரம் ஒன்று இக்காலத்திற் கட்டப்பட்டது. ஐந்து நிலைகளையுடைய இக்கோபுரம் செவந்தி மூர்த்தி என்பவரால் கட்டப்பட்டது. (கி.பி. 1559) [30].

## அம்மன் கோயில்கள்

தமிழ்நாட்டில் அம்மனுக்கு என்று, கோயில் வளாகத்திற்குள் தனிக்கோயில் அமைக்கப்பட்டது முதலாம் இராசேந்திரசோழன் (1012 – 1044) காலத்திலாகும். இதனைத் தொடர்ந்து தாராசுரம் கோயிலிலும், திரிபுவனம் கோயிலிலும் அம்மனுக்குத் தனிக்கோயில்கள் கட்டப்பட்டன. பிற்காலப் பாண்டியர் கோயில்களில் பிரதான கருவறைக்கு முன்னால் வடகிழக்குப் பகுதியில் தெற்குப் பார்த்து அம்மன் கோயில்கள் கட்டப்பட்டன. இதற்கு உதாரணமாக திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் உள்ள விஸ்வநாதர் கோயிலைக் குறிப்பிடலாம். விசயநகர–நாயக்கர் ஆட்சிக்காலத்திலும் அதன் பின்னும் தென்மேற்கு மூலையில் அம்மனுக்கு கோயில்கள் கட்டப்பட்டன. முதலாம் இராசேந்திரனால் தொடங்கப்பட்ட இம்முறை விசயநகர–நாயக்கர் ஆட்சிக் காலத்திலேதான் அனைத்துக் கோயில்களிலும் அம்மன் கோயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணி செய்யப்பட்டு அதற்கு விமானமும் கட்டப்பட்டது. தஞ்சை பிரகதீசுவரர் கோயிலிலும் அம்மன் சன்னதி ஒன்று தனியாகக் கட்டப்பட்டு அதற்கு அங்குள்ள பிரதான கடவுளின் பெயராலேயே பிருகந்நாயகி என்றும் பெயரிடப்பட்டது[31]. அது மட்டுமின்றி பிரதான கருவறைத் தெய்வமான பிருகதீசுவரரைப் போன்றே, அம்மன் கோயிலிலும் பூசைகளும், சடங்குகளும் நடத்தப்பட வேண்டுமென முறைமை செய்யப்பட்டது. இது போன்றே மதுரையில் சுந்தரேசுவரர் கோயிலின் தென்மேற்கில் மீனாட்சி கோயில் கட்டப்பட்டது. இக்கோயிலின் மகாமண்டபமும், முதல் பிரகாரமும், பள்ளியறையும் கி.பி. 1452 இல் விசயநகரப் பேரரசர்களின் சிற்றரசர்களான திருமாலிருஞ்சோலை மாவலியால் கட்டப்பட்டதென "**திருப்பணி விவரமும்**", "**திருப்பணி மாலையும்**" கூறுகின்றன [32]. எனவே அம்மன் கோயில் இதற்குச் சற்று முன்பே, அதாவது விசயநகர ஆட்சியின் முதல் பாகத்திற்குள் கட்டப்பட்டிருக்க வேண்டும். மதுரைக் கூடலழகர் கோயில் மதுர வல்லித்தாயார் சன்னதி இக்காலத்திலேதான் கட்டப்பட்டது. மதுரை மாவட்டம் மேலத்திருமாணிக்கத்தில் உள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் தென்மேற்கு மூலையில் அம்மன் சன்னதி இக்காலத்தில் எழுப்பப்பட்டதாகும். சென்னையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் வேதவல்லித் தாயார் கோயில் ஒன்று சதாசிவராயர் காலத்தில் தனிநபர் ஒருவராற் கட்டப்பட்டது[33]. அம்மன் கோயில்கள் இது போன்று பல இடங்களில் கட்டப்பட்டதால்தான் திருமண உற்சவங்களும் தவறாமல் நடத்தப்பட்டன. உற்சவங்களுக்காகத் திருமண மண்டபங்களும் கட்டப்பட்டன. பள்ளியறைகளும் அமைக்கப்பட்டு அதற்கென ஒரு வைபவமும் ஒவ்வொரு நாளும் நடத்தப்பட்டது. இதனால் கோயில்களுக்கு மக்கள் வருகை பெருகியது. மறைமுகமாக சமய வளர்ச்சிக்கு வழிகோலப்பட்டது.

## பிரகாரங்கள்

கோயிற்கலையின் தொடக்கத்தில் ஒரு கருவறை விமானமும், அதனைச் சேர்ந்த மண்டபமும் கட்டப்பட்டன. பின்பு இத்தோடு மகாமண்டபமும் சேர்த்துக் கட்டப்பட்டது. பிற்காலச் சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் சுற்றுப்பிரகாரம் அமைத்து வெளித் திருச்சுற்றுச் சுவரின் வாயிலில் கோபுரமும் அமைக்கப்பட்டன. பின்பு, ஒரு கோபுரம் அமைக்கப்பட்ட நிலை மாறி இரண்டும் அதற்கு மேற்பட்டும் கட்டப்பட்டன. விசயநகர் – நாயக்கர் ஆட்சிக் காலத்தில் திருச்சுற்றுக்களின் எண்ணிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகின. இதனைத் தொடர்ந்து நான்கு திசை வாயில்களிலும் உயரமான கோபுரங்கள் எழுப்பப்பட்டன. முன்னமே குறிப்பிட்டதுபோல் கோயில்கள் கோயில் வளாகங்களாகவும், கோயில் வளாகங்கள் கோயில் நகரங்களாகவும் வளர்ந்தன. இதில் விசயநகர்–நாயக்கர் காலத்து முக்கிய சாதனையானது, மேலே கூரையால் மூடப்பட்ட பிரகாரங்களை அமைத்திருப்பதாகும். இப்பிரகாரங்களின் விளிம்புகளில் தூண்கள் எழுப்பப்பட்டன. சில வைணவக் கோயில்களில் இவையே இராப்பத்து, பகற்பத்து மண்டபங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இதனைத் திருநெல்வேலி மாவட்டத்து நவதிருப்பதிகளிற் காணலாம். இக்காலத்தில் பிரகாரங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போனது. பெரும்பாலும் மூன்று பிரகாரங்கள் அமைக்கப்பட்டன. இதற்கு உதாரணமாக இராமேசுவரம் கோயிலைக் குறிப்பிடலாம். மதுரை மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயிலில் மூன்றுக்கும் மேற்பட்ட பிரகாரங்கள் உள்ளன. இங்கு இரண்டு பிரதான கருவறைகளைச் சுற்றி மட்டும் இரண்டிரண்டு பிரகாரங்கள் உள்ளன. கடைசியாக உள்ள பிரகாரம் திறந்தவெளியாக உள்ளது. இதுவே கோயில்வளாக அமைப்பில் நன்கு தேர்ந்த ஒரு கலைக் கூறாகும். இதற்கடுத்து பல திறந்தவெளிப் பிரகாரங்களைக் கொண்டவை கோயில் நகரங்களாகியுள்ளன. உதாரணமாக, திருவரங்கம் கோயிலில் ஏழு பிரகாரங்கள் உள்ளன. அவற்றில் திறந்தவெளிப் பிரகாரங்கள் சிலவற்றில், மக்கள் வசிப்பிடங்களும் அமைந்துள்ளன. இங்கு திறந்தவெளிப் பிரகாரங்களுக்குள்ளேயே வீடுகளும் அமைந்திருப்பதால் இதுகோயில் நகரமானது. இதைப் போன்ற இக்கால அமைப்பே திருச்சிராப்பள்ளியில் மலைக்கோட்டையில் அமைந்துள்ள தாயுமானவர் கோயில் பிரகாரங்களாகும். இங்கு கடைசியில் உள்ள பிரகாரப் பகுதியில் வசிப்பிடங்கள் உள்ளன. இது போன்று, பல கோயில்களிலும், அதாவது, திருவண்ணாமலை, திருவானைக்கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் போன்றவற்றிலும் பிரகாரங்கள் அமைத்துள்ளனர்.

விசயநகர – நாயக்கர் ஆட்சிக்காலத்தில் அவர்களது பேரரசின் பிற்பகுதிகளில் புதிய கோயில்கள் பல எழுப்பப்பட்டன. அவற்றைக் கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் காணமுடிகின்றது. ஆனால் தமிழகத்தில் அவர்கள் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த கல்யாண மண்டபங்கள், உற்சவ மண்டபங்கள், துலாபார மண்டபங்கள், யாளி மண்டபங்கள், பிரகாரங்கள், கோபுரங்கள் என்பவற்றை அமைத்தனர். தனிக்கோயில்கள் எழுப்பியதற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் அவர்களது ஆளுநர்களான நாயக்கர்களே தத்தம் ஆட்சிப் பகுதியில் கோயில்களை விரிவுப்படுத்தியதோடு புதிய கோயில்களையும் எழுப்பினர். தொடக்கத்தில் அவர்களுக்கு மேற்பட்ட விசயநகர அரசர்களின் பெயராலேயே சில கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. முழுமையான தனிக்கோயில்களைக் கட்டாவிடினும் விசயநகர வேந்தர்கள் காலத்தில் கோயில் வளாகங்களில் தனிச் சன்னதிகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. உதாரணமாகத் திருவரங்கம் கோயிலுக்குள்ளேயே அத்தகைய சன்னதிகள் எழுப்பப்பட்டுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாகக் குழலூதும் பிள்ளை அல்லது வேணுகோபாலர் சன்னதியைக் குறிப்பிடலாம். இச்சன்னதி யார் காலத்திற் கட்டப்பட்டது என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. இரா. நாகசாமி இது ஹொய்சாளரின் படைப்பு என்கிறார்[34]. ஆனால் கே. ஆர். சீனிவாசன் வேறொரு இடத்தில் கிடைத்த கல்வெட்டின் அடிப்படையிலும், கல்வெட்டறிக்கை மூன்றின் துணைகொண்டும் அது ஏற்புடையதல்ல என்கிறார். ஹொய்சாளர் அரசி உமாதேவி என்பவரால் குடமுழுக்கு செய்விக்கப் பெற்ற ஹலேபேட்டிலுள்ள திருக்குழலூதினபிள்ளை கோயிலின் பொறுப்பிலிருந்த குருத்தூர்புரம் வைணவ ஆச்சாரியார், தமது திருவரங்க விசயத்தின்போது, அங்கு வேணுகோபால சுவாமி கோயில் கட்டுவதற்கு காரணமாயிருந்தார் என்று சிலர் கூறுகின்றனர். இச்சன்னதி அதன் சுவர்களில் அற்புதமான சிற்பங்களுடனும், நயமான கட்டிடக் கூறுகளுடனும் அக்ர மண்டபத்தின் விதானத்தில் அமைந்த எழில்மிக்க ஓவியங்களுடனும் அற்புதமாகக் கட்டப்பட்டுள்ளது. இது சன்னதி எனினும் இரண்டு தளங்களைக் கொண்ட தனிக்கோயிலாகவே அமைந்துள்ளது. இதன் கட்டடக்கலை அமைப்பும், சிற்பக் கலையின் வனப்பும் விசயநகரப் பேரரசின் கலைச் சின்னம் என்றே கருதத் தோன்றுகிறது. ஒருவேளை இக்கோயில் ஹொய்சாளர் ஆட்சியின் இடைக்காலத்தில் தோன்றி, பின்னர் விசயநகர ஆட்சிக் காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறன்றி முன்னர் குறிப்பிட்ட கல்வெட்டு அறிக்கைகளின் அடிப்படையில், அறிஞர்கள் சிலர் கூறுவது போல, ஹொய்சாளர் பாணி கோயில் என்று இதனைக் கொள்ள முடியாது என்று கே. ஆர். சீனிவாசன் உறுதிபட வாதிடுகிறார். தவிர, திருவரங்கத்திற்கு அருகில் உள்ள கண்ணனூர், திருவானைக்கா, செம்பத்தூர் போன்ற இடங்களில் உள்ள ஹொய்சாளர் கலைமரபுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விசயநகர–ஹொய்சாள கலைக்கூறுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் வேறுபாடுகளைக் கொண்டு வேணுகோபாலர் சன்னதி விசயநகரத்துக் கலைப்பாணியில் கட்டப்பட்டதெனத் தெளிவாக அறியலாம் என்றும் கருதுகிறார்[35]. இவரது கருத்து வேணுகோபாலர் கோயிலின் கலைக் கூறுகளை பிற விசயநகரக் கோயில்களுடன் ஒப்பிடும் போது சரியெனத் தோன்றுகிறது.

திருவரங்கம் கோயிலின் விமானக் கூரை தங்கத் தகடுகளால் அலங்கரிக்கப்பட்டது விசயநகர மன்னர் இரண்டாம் ஹரிஹரரின் மகன் விருப்பண்ண உடையார் காலத்திலாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் திருவரங்கக் கோயிலில் எந்தத் தடையுமின்றி கலை வளர்ந்தது. இக்கோயில் வளாகத்தில் புதிய சன்னதிகளும், மண்டபங்களும், கோபுரங்களும் தங்கு தடையின்றி எழுப்பப்பட்டன.

இது தவிர, சென்னையில் திருவல்லிகேணி பார்த்தசாரதி கோயிலில் தாயார்சன்னதி இக்காலத்திலே கட்டப்பட்டது. காஞ்சிபுரத்திற்கு வடக்கே 25 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வீரமநல்லூரில் உள்ள சிவன் கோயிலில் அம்மன் சன்னதி 15ஆம் நூற்றாண்டிற் கட்டப்பட்டுள்ளது. இது இரண்டு தளங்களையும் வட்ட வடிவ சிகரத்தையும் சோழர் கலைப்பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டிருக்கிறது[36]. வந்தவாசித் தாலுகா, நெடுங்குளத்தில் உள்ள இராமச்சந்திரப் பெருமாள் கோயில் விசயநகர மன்னர்கள் காலத்திலே கட்டப்பட்டது[37]. விசயநகர மன்னர் அச்சுதராயர் கி. பி. 1539இல் சிதம்பரம் கோயிலில் கோவிந்தராசர் சன்னதியைக் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார். தென்மேற்கு மூலையில் உள்ள சன்னதியில் விஷ்ணு அனந்தசயனத்தில் உள்ளார்[38].

செஞ்சியில் உள்ள வெங்கடரமணர் கோயில் நாயக்கர் காலத்தைச் சேர்ந்ததாகும். பெரியதும், சிறப்பாகத் திட்டமிட்டு கட்டப்பட்டதுமான இக்கோயில் ஒரே காலத்திற் கட்டப்பட்டதாகும். இதில் குறைவான அளவிலேயே சிற்பங்கள் காணப்படுகின்றன. செஞ்சியிலிருந்து நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஸ்ரீமூஷ்ணம் பூவராஹர் கோயில் இவர்கள் காலத்தைச் சேர்ந்ததாகும். இது இரண்டாம் கிருஷ்ணப்பரால் கட்டப்பட்டதெனக் தெரிகிறது. கும்பகோணம் மகாமகம் குளத்திற்கு அருகே பதினாறு சிறிய மண்டபங்கள் நாயக்கர் காலத்திற் கட்டப்பட்டன. இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சை இரகுநாத நாயக்கரின் தலைமை அமைச்சரான கோவிந்த தீட்சிதரால் கட்டப்பட்டதெனக் தெரிகிறது. கும்பகோணம் சாரங்கபாணி கோயிலும், திருவிடை மருதூர் கோயிலும் இக்காலக் கலைப்பாணியைக் கொண்டுள்ளன [39].

மதுரை நாயக்கர் கிருஷ்ணப்பரால் திருநெல்வேலிக்கு அருகே கிருஷ்ணாபுரம் என்ற ஊர் நிர்மாணிப்பட்டு விஷ்ணு கோயில் ஒன்றும் கட்டப்பட்டது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், பக்கவாட்டில் ஒரு முன்மண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மகாமண்டபத்திலும், முன்மண்டபத்திலும் பிரமாண்டமான அணிவொட்டுத் தூண்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஆளுயரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. செஞ்சியில் (தென்னாற்காடு) வெங்கடரமணர் கோயிலும், அதன் கோபுரம், நான்கு தூண்களையுடைய மண்டபம் ஆகியனவும் செஞ்சி நாயக்கர்களால் கி. பி. 16 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்டன. நான்கே தூண்களையுடைய இம் முன் மண்டபத்தின் மூலைகளில் கற்சங்கிலிகள் தொங்குகின்றன. இக்கோயிற் கோபுரத்திலும் விமானத்திலும் சுதையுருவங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் வளாகத்தில் தாயாருக்கும், இராமானுசருக்கும் தனிச் சன்னதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள குன்று ஒன்றின் மீது கட்டப்பட்டுள்ள ரெங்கநாதர் கோயிலும், தூண்களையுடைய மண்டபமும் இவர்களது பணியேயாகும் [40].

தஞ்சையில் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்திற்குள்ளேயே பிரதான கோயிலுக்கு வடமேற்கு மூலையில் சுப்ரமணியர் கோயில் ஒன்று தஞ்சை நாயக்கர்களாற் கட்டப்பட்டுள்ளது. இது அலங்காரங்களுடன் கூடிய ஒரு கோயில். இது நாயக்கர் கலையின் ஓர் நன்முத்தாகும். பெரிய கோயில் வளாகத்திற் கட்டப்பட்டுள்ளதால் பெரிய கோயிலின் தரத்திற்கு ஈடு செய்ய முயற்சியெடுக்கப்பட்டுள்ளதாகக் கருதலாம். நன்கு மெருகூட்டப்பட்ட கருங்கல்லாற் கட்டப்பட்ட இக்கோயிலின் அதிட்டானத்திலும், சுவரில் உள்ள அரைத்தூண்களிலும் அழகுவேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மிக அற்புதமான கும்ப பஞ்சரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருவளைவுகளைக் கொண்டுள்ள கபோதம் மெல்லியதாகவும், மிகவும் அழகுடையதாகவும் அமைந்து, அதன் அடிப்பக்கத்தில் வரிவரியாக உள்ள, தாங்குகின்ற மேற்சட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பினைக் கொண்டுள்ளது. சதுரமான விமானத்தின் கிரீவமும் சிகரமும் ஆறுபட்டை உடையனவாக அமைந்துள்ளன. இவை கருவறைக்குள் உள்ள இறையுருவான ஆறுமுகனுக்கு ஏற்புடைத்தாற் போல் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்[41]. இங்கு மேற்றளங்களில் உள்ள கர்ண கூடுகளும் ஆறுபட்டைகளையுடையனவாகும்.

இவற்றைத் தவிர திருவரங்கத்தின் வெளிப்பிரகார நுழைவாயிலில் அண்மையிலே கட்டி முடிக்கப்பட்ட பிரமாண்டமான கோபுரத்தின் அடித்தளம் நாயக்கர்களின் படைப்பேயாகும். நாயக்கர்கள் மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் சிறு கோயில்களையும் அவற்றின் அர்த்த மண்டபங்களையும் கட்டுவதற்கு மெருகூட்டப்பட்ட கருங்கல்லைப் பயன்படுத்தியிருப்பது அவர்களது சாதனைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### சமயம் சாரா கட்டடங்கள்

பல்லவ, பாண்டிய, சோழர் காலங்களில் சமயம் சாராக் கட்டிடங்கள் அரண்மனைகள் போன்றவை கட்டப்பட்டிருப்பினும் விசயநகர் காலத்தில் இவ்வகைக் கட்டடங்களின் கலை அமைப்பு உன்னத நிலையை அடைந்தது என்பதில் ஐயமில்லை. இவ்வரசர்கள் தங்களது தலைநகரான விசயநகரத்தில் அமைத்த, நகர் வளாகம், தெருக்கள் மற்றும் வீடுகளின் அமைப்பு, அரண்மனைகள், கோட்டைகள், அமைச்சக இருப்பிடங்கள், வணிக வளாகங்கள், பொழுதுபோக்கு மண்டபங்கள், நாடகக் கூடங்கள், பொதுக்குளியலறைகள், குடிநீர் வசதிகள், நீர்ப்பாசன வசதிகள் போன்றவை அவர்களின் உன்னதமான சமயச் சார்பற்ற கட்டடக்கலை நுணுக்கங்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இதன் சிறப்பை பாரசீகத்துத் தூதுவர் அப்துல் ரஷாக் (கி. பி. 1443) சிறப்பாக எடுத்துரைக்கின்றார்[42]. விசயநகரத்தில் உள்ள தாமரை மஹால் அரசவைப் பெண்களுக்காகக் கட்டப்பட்டதெனத் தெரிகிறது.

பிற்கால விசயநகர மன்னர்கள் காலத்து அரண்மனைகளும் பிற பொதுக்கட்டிடங்களும் சந்திரகிரி, செஞ்சி, பேனுகொண்டா ஆகிய நகரங்களில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. செஞ்சியில் விசயநகர மன்னர்களால் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட கோட்டைகள் பின்னாளில் தொடர்ந்து வந்த நாயக்க மன்னர்கள், அடில்சாகிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மராத்தியர், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இங்கு தனித்தனியாக மூன்று மலைக்கோட்டைகள் அமைந்துள்ளன. அவற்றைச் சுற்றி இயற்கையான கருங்கல் அரண்கள் உள்ளன. இக்கோட்டைகளில் உள்ள கட்டடங்களில் குறிப்பிடத்தக்கவை தானியக் களஞ்சியம், காவல் கோபுரங்கள், கோயில்கள் போன்றவைகளாகும். இக்கோட்டைகளைச் சுற்றி அகலமான மற்றும் ஆழமான அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அழகுமிகு வாயில்கள் அமைந்திருக்கின்றன. இவர்கள் காலத்தில் வேலூரில் அரண்மனையும், பாதுகாப்பு அரண்களும் அமைக்கப்பட்டன. தஞ்சை நகரின் மத்தியில் அரண்மனை கட்டப்பட்டது. அது பிற்காலத்தில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மதுரையில் திருமலை நாயக்கர் காலத்தில் பிரமாண்டமான அரண்மனை கட்டப்பட்டது. அதில் ஒரு பகுதி மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. எஞ்சியுள்ள பகுதி சுவர்க்க விலாசம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளாகும். இது 235 அடி நீளமும், 105 அடி அகலமும் கொண்டதாகும். இதன் மேற்குப் பகுதியில் அரசர் தர்பார் மாளிகையும், வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அமரும் இடங்களும் உள்ளன. இப்பகுதியில் உள்ள தூண்கள் ஒவ்வொன்றும் சுமார் 40 அடி உயரமானவை. இதன் கட்டடக்கலை நுணுக்கங்கள் இந்தோ – இஸ்லாமிய கலைக்கூறுகளின் கலப்புக் கலையினைக் கொண்டவையாகும். தூண்கள் மிகவும் கனமானவை. அவை கற்களாற் கட்டப்பட்டு செட்டிநாட்டுப் பூச்சுக் கலவையால் பூசப்பட்டவையாகும். இப்பூச்சு மிகவும் வழுவழுப்பாக அமைந்துள்ளது. அரண்மனையில் கூரைப்பகுதி ஏராளமான இஸ்லாமியர் பாணியிலான குவிகை மாடங்களைக் கொண்டுள்ளன. இவ்வரண்மனைக்குள் அமைந்துள்ள அருங்காட்சியகக் கலைக்கூடம் தேர்ந்த வெளிநாட்டுக் கட்டடக்கலை நிபுணர்களின் ஆலோசனைப்படி கட்டப்பட்டதெனத் தெரிகிறது. இவ்வரண்மனையின் தூண்கள் மற்றும் குவிகை மாடங்களின் அமைப்பு கர்நாடகத்தில் பாமினி சுல்தான்களில் ஒருவகையினரான பீதார் சுல்தான்களின் அரண்மனையின் அமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளது. மதுரையில் உள்ள தமுக்கம் மைதானம் திருமலை நாயக்கர் மற்றும் இராணி மங்கம்மாள் காலத்தில் கட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது[43].

இவ்வாறு விசயநகர – நாயக்கர் மன்னர்கள் முன்னமே தமிழகத்தில் கட்டப்பட்டிருந்த கோயில்களை விரிவுபடுத்தினர். அவற்றில் கல்யாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபங்கள், உற்சவ மண்டபங்கள், துலாபார மண்டபங்கள், யாளி மண்டபங்கள், வசந்த மண்டபங்கள் ஆகியவற்றைக் கட்டினர். அவர்களது தூண்கள் முந்தைய தூண்களின் அமைப்பிலிருந்து மாறுபட்டன. சாதாரண ஒற்றைத் தூணில், அடிப்பகுதியும் (ஓமா), மூன்று சதுரங்களும், இரண்டு கட்டுக்களும், புஷ்ப போதிகையும் அமைக்கப்பட்டன. அணியொட்டுத் தூண்களில் ஒற்றைத் தூண்களோடு குதிரை வீரர்கள், யாளிகள், இறையுருவங்கள், அரசர்களின் சிற்பங்கள் ஆகியவை சேர்க்கப்பட்டன. ஆனால் இவையனைத்தும் ஒரே கல்லில் ஆனவையாகும். பிரகாரங்கள் மூடிய கூரைகளையுடையனவாக அமைக்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை கூடின. கடைசிப் பிரகாரம் வெளிப்பிரகாரமாக இருந்தது. கோபுரவாயில்களை அமைத்தனர். விமானங்களும், கோபுரங்களும், பிரஸ்தரம் வரை கருங்கல்லாலும், மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டன. புதிய கோயில்கள் கட்டப்பட்டன. சமயம் சாரா அரண்மனைகள் கட்டப்பட்டன. இதற்கு உதாரணமாக வேலூர் கோட்டையையும், செஞ்சிக் கோட்டையையும், மதுரை திருமலை நாயக்கர் மஹால், காந்தி மண்டபம் ஆகியவற்றையும் குறிப்பிடலாம். இவர்களோடு இந்தியக் கோயிற் கலை வரலாற்று ஏடுகள் முற்றுப் பெற்றன எனக் கொள்ளலாம்.

## அடிக்குறிப்புகள்

1. K. V. Raman, Architecuture in the Vijayanagar Period, **South Indian Studies,** 1990, p.664.
2. George Michell, **Architecuture and Art of South India,** Cambridge, 1995, p.2.
3. K. R. Srinivasan, **Temples of South India,** New Delhi, 1972, Re.1991,p.167.
4. இம்முறையினை இன்றும் மக்களிடையே நிலவி வரும் திருமண மற்றும் பிற முக்கிய மங்கள விழாக்களில் வாயிலில் அமைக்கப் பெறும் வாழை மரத் தோரணத்தில் காணலாம். வாழை மரமும் அதில் தொங்கும் வாழைப்பூ மற்றும் வாழைக்காய் ஆகியவை ஒட்டு மொத்தமாக விசயநகர மன்னர்களின் தூண்களைப் போன்றும் போதிகையைப் போன்றும் தென்படுவதைக் காணலாம். இதில் எது முந்தியது என்பது மேலும் ஆய்வுக்குரியதாகும்.
5. J. C. Harle, **Art and Architecture of the Indian Subcontinent**, Penguin Books, 1990,p.330.
6. கு.சேதுராமன், தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, மதுரை, 1997, பக்.315–316.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. K. V. Raman, முன்னது, ப,665.
8. K. V. Raman, **Sri Varadarajaswami Temle** - Kanchi, Delhi, 1975, p.156.
9. George Michell, முன்னது, பக்81–82.
10. K. R. Srinivasan, முன்னது, ப181.
11. R.N. Saletore, Vijayanagara Art, Delhi, 1982,p.4.
12. மேலது, ப.62.
13. George Michell, முன்னது, ப,84.
14. மேலது, பக்,83–84.
15. மேலது, பக்,79
16. மேலது, பக்,78–79.
17. K. R. Srinivasan, முன்னது, ப.184.
18. K. R. Srinivasan, முன்னது, ப.6.
19. மேலது, ப.61
20. T. N. Ramachandran, **Tiruparuttikundram and its Temples**, 1934, pp.27-30.
21. R. N. Saletore, முன்னது, ப.33.
22. D. Devakunjari, Madurai Through the Ages, Chennai, 1979,p.230.
23. K. V. Raman, முன்னது, ப.1990, ப,665.
24. D. Devakunjari, முன்னது, ப.242.
25. மேலது, பக். 237–242.
26. K. R. Srinivasan, முன்னது, ப.181.
27. குடவாயில் பாலசுப்பிரமணியம், திருவாரூர் திருக்கோயில், Heritage of the Tamil Temple Arts, Madras, 1985, p.75.
28. சில இடங்களில் கங்கையும், யமுனையும் இவ்வாறு வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடிப் பெண்கள் அல்லது கங்கை, யமுனை வைக்கும் வழக்கமானது பௌத்தக் கலையின் தாக்கமாகும். முற்கால பௌத்தத் தோரணங்களில் இவற்றைக் காணலாம்.
29. R. N. Saletore, முன்னது, ப.70.
30. D. Devakunjari, முன்னது, ப.224–226.
31. K. R. Srinivasan, முன்னது, ப.150.
32. D. Devakunjari, முன்னது, ப.223.
33. கு. சேதுராமன் முன்னது, ப.320.
34. இரா. நாகசாமி, ஓவியப்பாவை, சென்னை, 1979, பக்.51–52.
35. K. R. Srinivasan, முன்னது, பக். 186–187.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. George Michell, முன்னது, பக்.78.
37. George Michell, முன்னது, பக்79.
38. என். சேதுராமன், இராமர் கோயில்களும், கல்வெட்டுச் செய்திகளும், Heritage of the Tamil Temple Arts, Madras, 1985, ப.67.
39. George Michell, முன்னது, பக். 84–85.
40. K. V. Raman, முன்னது, பக் 676.
41. K. R. Srinivasan, முன்னது, பக்186.
42. மேலது, ப.185.
43. D. Devakunjari, முன்னது, பக்.326–333.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசயநகர நாயக்கர் காலச் சிற்பக்கலை

கலாநிதி வெ. வேதாசலம்

தமிழக வரலாற்றில் விசயநகர வேந்தர், நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலமானது அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை அதிக அளவில் ஏற்படுத்திய காலமாகும். தொன்றுதொட்டு வந்த பழையமரபுகள் பல முற்றிலுமாக மாற்றம் பெற்றன. காலவரலாற்றில் தமிழ்நாட்டிற்கு வெளியிலிருந்து வந்த கன்னட, தெலுங்கு நாயக்க மரபினர் புதிய மரபுகளைத் தோற்றுவித்தனர். படையெடுப்புகளாலும், மாற்று மதத்தவராலும் பின்னடைவைக் கண்ட வைதிக மதங்கள் மீண்டும் இக்காலத்தில் மறுமலர்ச்சி பெற்றன. பாழ்பட்ட கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. தடைப்பட்டு நின்ற வழிபாடுகள் மீண்டும் நடைபெற வழிவகுக்கப்பட்டது.கோயிற் கலாசாரத்தில் புதிய வேகம் பிறந்தது. கோயில்களில் தொன்றுதொட்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமரபுகளோடு தங்களது கலை மரபுகளையும் நாயக்க மன்னர்கள் வளர்த்தெடுக்க உதவினர்.

தமிழ்நாட்டில் இக்காலத்தில் கோயில்களில் பெருமளவில் சமய, சமூதாய சடங்குகள் நடைபெற்றன. பெருந்திருவிழாக்கள் நிறைந்த கோயில் நகரங்களாக பல ஊர்கள் மாறின. திருவிழாக்கள் நடத்தவும் சமயச் சடங்குகளை விரிவாகச் செய்யவும் இக்காலத்தில் கோயில்களில் இடம் வேண்டியிருந்தது. இதனால் கோயில்கள் பொருங்கோயில்களாக இக்காலத்தில் விரிவுப்படுத்தப்பட்டு பல திருச்சுற்றுக்களைக் கொண்டனவாக மாறின. வைதிக சமயத்தின் எழுச்சியையும் நாயக்க மன்னர்களின் ஆளுமையையும் வெளிப்படுத்தும் வகையில் வானுயர்ந்த பெருந்தோற்றத்துடன் கம்பீரமான கோபுரங்கள் இக்காலத்திற் கட்டப்பட்டன. கோபுரக்கலை வளர்ச்சி இக்காலத்தில் உச்சக்கட்ட வளர்ச்சியை எட்டியது. மேலும் பல்வேறு தேவைகளுக்காக கோயில்களில் ஏராளமான மக்கள் கூடுகின்ற முறையில் பெரிய மண்டபங்களும் இக்காலத்திலேயே உருவாயின[1]. அவற்றில் மக்கள் கண்டு களிக்கும் வகையிலும் அவர்களது ஆன்மிக வாழ்விற்குத் துணைசெய்யும் முறையிலும் ஏராளமான சிற்பங்கள் இவற்றில் வடிக்கப்பட்ன.

அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் எடுத்துக்காட்டாய் விளங்கும் சிற்பங்கள் இவற்றில் செய்விக்கப்பட்டன. கலைச்சிறப்பு வாய்ந்த சிற்பங்கள் நிறைந்த கலைக்கூடமாய் இம்மண்டபங்கள் திகழ்ந்தன. கி.பி. 1400 இற்கும் 1700 இற்கும் இடைப்பட்ட விசயநகர, நாயக்கர் ஆட்சியில் எடுப்பிக்கப்பட்ட சிற்பங்கள் நிறைந்த மண்டபங்கள் தமிழ்நாட்டில் இன்று பல இடங்களில் உள்ளன. இவற்றில் உள்ள சிற்பங்கள் இக்காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் அக்காலச் சமுதாயத்தின் போக்கைப் படம் பிடித்துக் காட்டுகின்றவையாய்த் திகழ்கின்றன. தொடக்க காலத்தில் விசயநகர வேந்தர்கள் கி.பி 15 ஆம் நூற்றாண்டிலும் அதன்பின்னர் வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை முதலிய இடங்களை மையமாகக் கொண்ட நாயக்க மன்னர்கள் கி.பி 16, 17 ஆம் நூற்றாண்டுகளிலும் சிற்பக்கலைக்குத் தங்களால் முடிந்த பங்கினைச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் எடுப்பிக்கப்பட்ட மண்டபங்கள் ஆறுகால் மண்டபம், (ஆறுகால் பீடம்), பதினாறுகால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், கொலு மண்டபம், ஊஞ்சல் மண்டபம், நந்தி மண்டபம், கருட மண்டபம், கம்பத்தடி மண்டபம், சிறுகுரடு, வசந்த மண்டபம், சங்கீத மண்டபம், இராபத்து மண்டபம், பகல்பத்து மண்டபம், உற்சவர் மண்டபம், உற்சவ மண்டபம், திருக்கண் மண்டபம், குதிரை மண்டபம், எழுத்து மண்டபம், திருச் சுற்று மண்டபம், திருமஞ்சன மண்டபம், என்று இவை அழைக்கப்பட்டன. கருவறையைத் திருத்தியமைத்த போது அவற்றின் முன்பாக சிற்பங்கள் நிறைந்த அர்த்த மண்டபம், மகா மண்டபம், முன் மண்டபங்கள் இக்காலத்தில் எடுப்பிக்கப்பட்டன. இக்காலத்தில் மண்டபங்களுக்கும் கோபுரங்களுக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் விமானங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் நாயக்க மன்னர்கள் புகழ்பெற்ற சமயச்சிறப்பு வாய்ந்த பழமையான கோயில்களின் சிறிய விமானங்களை முற்றிலுமாக அகற்றிவிட்டுப் பெரியதாகக் கட்டினர். அவற்றில் கீரிவம், தளங்கள், சுவர், அதிட்டானம் ஆகிய இடங்களில் ஏராளமான சிற்பங்களைச் செய்வித்தனர்[2].

கோபுரக்கலையின் எழுச்சிமிக்க இக்காலத்தில் ஏராளமான கோபுரங்களை நாயக்க மன்னர்கள் எடுப்பித்தனர். அவற்றின் மேலே நூற்றுக்கணக்கான சுதைவுருவங்களை வடித்தனர். கோபுரத்தின் அடித்தளச் சுவர்களிலும் கோபுர நுழைவாயிலின் உட்புறத்திலும் அழகிய சிற்பங்களைப் படைத்தனர். இவைதவிர சிற்றாலயங்களிலும் பல்வேறு தெய்வங்களுக்கென்று உருவங்களை வடித்து வைத்தனர். நாயக்க மன்னர்கள் காலத்திலேதான் மைய மண்டபத்துடன் கூடிய மிகப் பெரிய தெப்பக்குளங்கள் உருவாயின. தெப்பக்குளத்தின் மையமண்டபமும் அதன் சுற்றுச் சுவர்களும் ஏராளமான சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள சைவ, வைணவ கோயில்களில் விசயநகர நாயக்கர் சிற்பக் கலையை வெளிப்படுத்தும் விமானங்கள், மண்டபங்கள், கோபுரங்கள், சிற்றாலயங்கள், தெப்பக்குளங்கள் பல ஊர்களில் உள்ளன. தென்தமிழ்நாட்டில் நாங்குனேரி (வானமாமலை பெருமாள் கோயில்) திருக்குறுங்குடி (நின்றநம்பி கோயில்) ஸ்ரீ வைகுண்டம் (வைகுண்ட நாதர் கோயில்), ஆழ்வார்திருநகரி (ஆதிநாதர் கோயில்) திருக்கோளூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வைத்தமாநிதிப் பெருமாள் கோயில்) கிருஷ்ணாபுரம் (திருவேங்கட நாதன் கோயில்), திருநெல்வேலி (நெல்லையப்பர் கோயில்) சேரன்மாதேவி (பக்தவத்சலர் கோயில்), மன்னார்கோயில் (இராசகோபால சுவாமி கோயில்) பிரமதேசம் (சிவன் கோயில்), திருவிடைமருதூர் (நறும்பூநாதர் கோயில்), குற்றாலம் (குற்றாலநாதர் கோயில், சித்திரசபை), ஸ்ரீவில்லிபுத்தூர் (வடபத்திரசாயி ஆண்டாள் கோயில், வைத்தியநாத சுவாமி கோயில்), மதுரை (மீனாட்சி சுந்தரேசுவரர்கோயில், கூடலழகர் பெருமாள் கோயில்), திருமோகூர் (காளமேகப் பெருமாள் கோயில்), அழகர் கோயில் (கள்ளழகர் கோயில்), திருப்புவனம் (புஷ்பவன நாதர் கோயில்) திருப்பத்தூர் (திருத்தளி நாதர் கோயில்), நத்தம் (கயிலாச நாதர் கோயில்), திருக்கோஷ்டியூர் (சௌமிய நாராயணப் பெருமாள் கோயில்), திரு மெய்யம் (சத்தியகிரிநாதர் கோயில்), தாடிக்கொம்பு (சௌந்தரராசப் பெருமாள் கோயில்) முதலிய இடங்களில் இவை உள்ளன.

சோழநாட்டில் திருவரங்கம் (திருவரங்கநாதர் கோயில்) திருவானைக்கா கோயில் (சிவன் கோயில்), திருச்சி (மலைக்கோட்டை தாயுமான சுவாமி கோயில்), தஞ்சாவூர் (பெருவுடையார் கோயில், தஞ்சை நகர் பகுதியிலுள்ள பெருமாள் கோயில்), கும்பகோணம் (சாரங்கபாணிகோயில், சக்கரபாணி, இராமசாமி கோயில், கும்பேசுவரர் கோயில், மகாமகக்குள துலாபுருட மண்டபம்) திருவாரூர் (தியாகேசர் கோயில்), பட்டீசுவரர் (தேனுபுரீஸ்வரர் கோயில்), மன்னார்குடி (இராஜகோபால சுவாமி கோயில்), வைத்தீஸ்வரன் கோயில் (வைத்தியநாத சுவாமி கோயில்), சிதம்பரம் (நடராசர் கோயில்) முதலிய இடங்களில் உள்ளன. வடதமிழ்நாட்டில் திருவோத்தூர் (சிவன் கோயில்), காஞ்சிபுரம் (ஏகாம்பரநாதர் கோயில், வரதசராசப்பெருமாள் கோயில், ஜுரஹரேசுவரர் கோயில்), வேலூர் (ஜலகண்டேசுவரர் கோயில்), விரிஞ்சிபுரம் (சிவன்கோயில்), திட்டைக்குடி (சிவன் கோயில்), விருத்தாசலம் (சிவன் கோயில்), படவேடு(வரதராசப் பெருமாள் கோயில், படவேட்டம்மன் கோயில்), திருவண்ணாமலை (அருணாசலேசுவரர் கோயில்) சின்னையன் பேட்டை(தெப்பக்குளம்) தருமபுரி (அதியமான்கோட்டை கோயில்) சின்னையன் பேட்டை (தெப்பக்குளம்), தருமபுரி (அதியமான்கோட்டை கோயில்),முதலிய இடங்களில் உள்ளன. கொங்கு நாட்டில் பேரூர் (சிவன் கோயில்), தாராபுரம் போன்ற இடங்களில் உள்ளன. இக்காலத்தில் சமணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களிலும் விசயநகர நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் வடதமிழ்நாட்டிலுள்ள சித்தாமூர், கரந்தை, திருப்பருத்திக்குன்றம் சமணர் கோயில்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

கோயில்களிற் காணப்படும் விசயநகர வேந்தர் நாயக்கர் காலச் சிற்பங்களை அவை இருக்கும் இடங்களை அடிப்படையாகக் கொண்டு தொகுத்து கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி ஆய்வு செய்யலாம்.

1. விமானச் சிற்பங்கள்
   **I.** அதிட்டானம் **II.** சுவர் **III.** பிரஸ்தரம் **IV.** தளங்கள் **V.** கீரிவம்
2. மண்டபச் சிற்பங்கள்
3. கோபுரச் சிற்பங்கள்
4. சிற்றாலயச் சிற்பங்கள்
5. தெப்பக்குளச் சிற்பங்கள்
6. கிராமக் கோயில் சிற்பங்கள்

மற்றொரு வகையில் இச்சிற்பங்களை இவற்றின் தன்மை, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பகுத்து ஆய்வு செய்யலாம்.

1. இதிகாசச் சிற்பங்கள்
   **I.** இராமாயணம் **II.** மகாபாரதம்
2. சிவ வடிவங்கள் – சைவசமயப் புராணச் சிற்பங்கள்
3. வைணவ வடிவங்கள் – வைணவசமயப் புராணச் சிற்பங்கள்
4. விநாயக சிற்பங்கள்
5. முருகன் சிற்பங்கள்
6. அம்மன் சிற்பங்கள்
7. பிறதெய்வச் சிற்பங்கள்– பரிவார ஆலயச் சிற்பங்கள்
8. நாட்டுப்புற தெய்வச் சிற்பங்கள்
9. நாட்டுப்புற கதைமாந்தர் சிற்பங்கள்
10. உருவச்சிலைகள்
11. ஆடற்கலை, இசைக்கலை சிற்பங்கள்
12. பாலியல் சிற்பங்கள்
13. வாழ்வியல் சிற்பங்கள்
14. சமண சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. இதிகாசச் சிற்பங்கள்

இந்தியாவில் இராமாயணமும் மகாபாரதமும் நீண்ட நெடுங்காலமாகச் சமயங்களைக் கடந்து மக்களின் மனதில் ஆழமாக இடம்பெற்று வரும் இதிகாசங்களாகும். இவற்றிற் காணப்படும் கதை மாந்தர்களும், அவர்கள் வரலாறு தரும் படிப்பினைகளும் மக்கள் வாழ்வை நெறிப்படுத்த உதவும் என்ற முறையில் இவற்றை மக்கள் போற்றி வந்தனர். தமிழ்நாட்டில் சங்க காலத்திலிருந்து அண்மைக் காலம் வரை மக்கள் மனதில் இவை இடம் பெற்று வந்துள்ளமைக்கு இலக்கியச் சான்றுகளும், வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. தமிழ்நாட்டுக் கோயில்களில் பாரதம் படிப்பதற்காக நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்லவர், சோழர், பாண்டியர் காலத்துக் கோயில்களில் இவ்விதிகாசங்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. விசயநகர வேந்தர் காலத்தில் இம்மரபு பெருவழக்கில் இருந்தது. இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் கருவான நிகழ்வுகளை விளக்கும் கதைத் தொடர் சிறு சிற்பங்களும், இதிகாசங்களில் வரும் முக்கிய கதைமாந்தர் வரலாற்றை எடுத்துக் காட்டும் சிற்பங்களும் பெரும்பாலும் வைணவக் கோயில்களிற் காணப்படுகின்றன[3]. சமயங்கடந்து இச்சிற்பங்கள் நாயக்கர்காலச் சிவன் கோயில்களிலும் வடிவமைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராமன், இலக்குவணன், சீதை, அனுமன், வாலி, சுக்ரீவன் ஆகியோரது பேருருவச் சிற்பங்கள், தனித்த நிலையில் மண்டபத்தூண்களில் தமிழ்நாட்டு வைணவக் கோயில்களிற் காணப்படுகின்றன. அருகில் பரதன், குகன், சத்ருகன் உருவங்களும் இவற்றில் இடம் பெற்றுள்ளன. கும்பகோணத்தில் தஞ்சை நாயக்க மன்னன் இராகுநாத நாயக்கனால் கட்டப்பட்ட இராமசாமிகோயில் கருவறையில் மூலத் திருவுருவமாக இராமர் பட்டாபிஷேகக் காட்சி இடம்பெற்றுள்ளது. மதுரை கூடலழகர் கோயில் முதல்தளத்தில் இராமாயணக் கதைத் தொடர் சிற்பங்கள் உள்ளன.

மகாபாரதத்தின் கதை மாந்தர்களான அர்ச்சுனன், கர்ணன், வீமன், தருமன், திரௌபதி, சாத்தகி, பிருகன்னளை, உத்திரை, புருஷாமிருகம் ஆகியோரது சிற்பங்கள் தென்தமிழ்நாட்டு வைணவக் கோயிகளிலும் சிவன் கோயில்களிலும் மண்டபத்தூண் சிற்பங்களாக பெரிய அளவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்விக்கப்பட்டுள்ளன. இராமாயணம், மகாபாரதக் கதைமாந்தர் சிற்பங்கள் இடம்பெற்ற தூண்களின் பக்கவாட்டில் அவர்களின் வரலாற்றை விளக்கும் சிற்பங்களும் காணப்படுகின்றன.

### 2. சிவ வடிவங்கள்— சைவ சமய புராணச் சிற்பங்கள்

சிவனது அருட்கோல வடிவங்களும் (அனுக்கிரக மூர்த்திகள்) அசுரர்களை அழித்த வடிவங்களும் (சம்காரமூர்த்தி) நாயக்கர் கால மண்டபங்களில் இடம் பெற்றன. திரிபுராந்தகர், இராவண அனுக்கிரகமூர்த்தி, ஊர்த்துவ தாண்டவர், கஜசம்காரமூர்த்தி, வீரபத்திரர், பிட்சாடனர், சலந்தரன், ரிஷபவாகனர், கார்த்தவீரியன் போன்ற சில சிவ வடிவங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டன. இவற்றில் வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், காலசம்காரமூர்த்தி சிற்பங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டுள்ளன. மதுரை போன்ற இடங்களில் சிவனது திருவிளையாடல்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. பஞ்சமுகலிங்கம், சகஸ்ரலிங்கம் போன்ற இலிங்க வடிவங்கள் இக்காலத்தில் வடிக்கும் வழக்கம் இருந்தது. சிவனது வாகனமான நந்தியைப் பெரிதாகச் செய்து வைக்கும் மரபு நாயக்கர் காலத்தில் ஏற்பட்டது. இதற்கு சான்றாக தஞ்சைப் பெரியகோயில் நந்தி உள்ளது.

விநாயகருக்கும் முருகனுக்கும் இக்காலத்தில் தனிச்சிறப்பு அளிக்கப்பட்டு அவர்களது பல்வேறு கோலங்களை எடுத்துக்காட்டும் சிற்பங்கள் சிற்றாலயங்களிலும், மண்டபத்தூண்களிலும் வடிக்கப்பட்டன.

### 3. விநாயகர்

விநாயகரது உருவத்தைப் பேருருவமாக செய்து தனித்தநிலையில் வழிபடும் மரபு இக்காலத்திற் பெருகியது. பல தலைகளுடன் சிம்மத்தின் மீது அமர்ந்த ஹேரம்பகணபதி, பஞ்சமுககணபதி, பத்துக்கரங்கள் கொண்ட வீரகணபதி, சக்தியுடன் காணப்படும் வல்லபை கணபதி, உச்சிஸ்டகணபதி மற்றும் நர்த்தன கணபதி வடிவங்களை இக்காலத்திற் காணலாம். தனித்தநிலையில் மிகப்பெரிய விநாயகரது உருவங்கள் இக்காலத்தில் வடிக்கப்பட்டுள்ளமை விநாயகர் வழிப்பாட்டிற்குத் தந்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. கணபதியின் உருவத்தை வடிக்கும்போது அவரது வாகனமான பெருச்சாளி (முஞ்சிறு) உருவத்திற்கும் முக்கியத்துவம் தரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org.

கணபதியைப் பெண்வடிவிலும் இக்காலத்தில் சிற்பமாக வடிக்கும் வழக்கம் காணப்படுகிறது.

## 4. முருகன் சிற்பங்கள்

முருகனுக்குத் தனியாலயங்கள் இக்காலத்திற் பெருகின. அருணாகிரிநாதரின் திருப்புகழ் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. சிவன் கோயில்களில் சிறியதாக இருந்த முருகனது ஆலயங்களுக்கு முக்கியத்துவம் தந்து அவை பெரியதாக இக்காலத்திற் கட்டப்பட்டன. மேலும் முருகனை ஆண்டியாகச் சித்திரிக்கும் பழனியாண்டவர் வழிபாடு இக்காலத்திற் பெருகியது. முருகனை மணக்கோலத்திலும், வள்ளி, தெய்வானையுடனும், மயில்வாகனத்துடன் தனித்த நிலையிலும் எடுப்பாக விளங்கும் தோற்றங்களுடன் சிற்பங்களாகப் படைத்தனர். தேவிகாபுரத்தில் முருகனது வரலாற்றை உணர்த்தும் கந்தபுராணச் சிற்பங்கள் உள்ளன.

## 5. வைணவ வடிவங்கள் – வைணவ சமய புராணச் சிற்பங்கள்

திருமாலின் பெருமையையும் அவரது அவதாரத்தையும் எடுத்து விளக்கும் ஏராளமான சிற்பங்கள் இக்காலத்திற் செய்விக்கப்பட்டன. சைவத்தினைவிட வைணவ சமய வடிவங்களுக்கு இக்காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டு வைணவக் கோயில்களில் கருவறையிற் காணப்படும் திருமாலின் நின்ற, அமர்ந்த, கிடந்த கோலங்களைக் காட்டும் திருவுருவங்கள் பெரும்பாலும் இக்காலத்திற் செய்யப்பட்டவை ஆகும்.

வைணவக்கோயில்களில் ஆழ்வார்களுக்கும், ஆச்சாரியர்களுக்கும் தனிச்சன்னதிகள் ஏற்படுத்தி அவற்றில் அவர்களின் திருவுருவங்களைச் சிற்பமாக வடித்து வைக்கும் வழக்கத்தைத் தமிழ்நாட்டு வைணவப் பெருங்கோயில்களில் இக்காலத்திற் காணமுடிகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர்கோயில் போன்ற பெரிய வைணவக் கோயில்களில் திருமாலின் பத்து அவதாரங்களைத் தனிச்சன்னதியில் வைத்து வழிபட்டுவரும் முறையைக் காணலாம்.

திருமாலின் அவதாரங்களை விளக்கும் பேருருவ சிற்பங்களை நாயக்கர் கால மண்டபத்தூண்களில் செய்வித்தனர். இவற்றில் நரசிம்ம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரத்திற்கும் அடுத்து திருவிக்கிரமர்க்கும், கிருஷ்ணர்க்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. அருட்செயல்களை எடுத்துக்காட்டும் பாகவத புராணத்தின் காட்சிகள் வைணவக் கோயில்களில் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. காளியமர்த்தனம், புள்வாய்கீண்டது, பூதகியை அழித்தது. கோபியரின் ஆடைகளைக் கவர்ந்தது போன்ற காட்சிகள் நாயக்கர் கால மண்டபங்களிற் காணப்படுகின்றன.

திருமாலின் பெரிய திருவடி, சிறிய திருவடி என்று அழைக்கப்பட்ட கருடன், அனுமன், ஆகியோர்க்கு மிகுந்த முக்கியத்துவம் தந்து அவர்களுக்கென்று தனிச் சன்னதிகள் நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டன. மிகப்பெரிய கருடனது உருவத்தைக் கொண்ட சன்னதி ஸ்ரீரங்கத்தில் உள்ளது. இராமனின் அருகில் வாலைச் சுருட்டிக் கொண்டு மிகப்பணிவுமிக்க அடியானாகக் காட்டப்பட்டு வந்த அனுமன் இக்காலத்திலிருந்து தனித்த நிலையில் மிகப்பெரிய தோற்றத்துடன் அவனது வீரத்தினைப் புலப்படுத்தும் வகையில் சிற்பமாகப் படைக்கப்பட்டான். நாமக்கல்லில் இக்காலத்தைச் சேர்ந்த மிகப்பெரிய அனுமனின் சிற்பமுள்ள தனிக்கோயில் உள்ளது. வாலி, சுக்ரீவன் போன்ற வானரப்படைத் தலைவர்களை மண்டபத்தூண்களில் ஆளுயர அளவில் உருவங்களாகச் செய்து வைக்கும் வழக்கமும் இக்காலத்தில் காணப்படுகிறது. சிவன்கோயில்களில் சண்டிகேசுவரர் போன்று பெருமாள் கோயில்களில் விசுவக்சேனரின் வழிபாட்டிற்கும் இக்காலத்தில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

## 6. சிற்பங்களின் சமய முரண்பாடு ஒற்றுமை

நாயக்கர் காலச் சிற்பங்களில் சைவ, வைணவ முரண்பாட்டையும் ஒத்துப்போகும் இணக்கத்தையும் காணமுடிகிறது. திருமால், பிரம்மனை விட சிவபெருமான் உயர்ந்தவர் என்பதைக் காட்டும் ஏகபாதமூர்த்தியைச் சைவர்கள் இக்காலத்திற் படைத்தனர். இதில் சிவன் நடுநாயமாக ஏகபாதமூர்த்தியாகக் காட்சிளிக்க அவரது உடலின் பக்கவாட்டில் பக்கத்திற்கு ஒருவராக திருமாலும், பிரம்மனும் காட்டப்பட்டுள்ளனர். மீனாகவும், ஆமையாகவும், அவதாரம் எடுத்த திருமாலை சிவன் அழிப்பது போன்ற சிற்பங்கள் இக்காலத்திற் படைக்கப்பட்டன. ஆமையாக அவதாரம் எடுத்த திருமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்த சிவனைக் கூர்மாந்தகசிவன் அல்லது கச்சபேசர் என்று அழைத்தனர். திருமாலை மைய உருவமாகக் கொண்ட திருமாலின் தன்னிகரற்ற தன்மையை வெளிப்படுத்தும் ஏகபாதமூர்த்தியை சைவத்திற்கு எதிராக வைணவர்கள் இக்காலத்தில் சிற்பமாகப் படைத்துள்ளனர். சில வேளைகளில் சிவனும் திருமாலும் ஒன்றாக சமசக்தியுடன் விளங்கும் ஹரிஹரர் சங்கரநாராயணன் உருவத்தையும் நாயக்கர்காலக் கோயில்களிற் காணமுடிகிறது.

## 7. அம்மன் சிற்பங்கள்

நாயக்கர் காலத்தில் சைவக் கோயில்களிலும் வைணவக் கோயில்களிலும் அம்மனுக்குத் தனித்துவம் தந்து அவளுக்கு திருச்சுற்றுடன் கூடிய பெரிய கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன. சக்தி வழிபாடு இக்காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்று வளர்ச்சியடைந்தது. சைவக் கோயில்களில் பார்வதிக்கு ஆளுயர அழகிய திருவுருவங்கள் செய்விக்கப்பட்டன. இதேபோன்று நடராசர் சன்னதியில் நடராசர்க்கு அருகில் சிவகாமியின் உருவம் எடுப்பான முறையில் செய்து வைக்கப்பட்டது. அஷ்ட சக்திகளுக்கு முக்கியம் தந்து அவற்றிற்கென்று பெரிய மண்டபங்கள் அம்மன் சன்னதி வாயில்களில் மதுரை போன்ற இடங்களில் எடுப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றோடு கஜலெட்சுமி, மகாலெட்சுமி, சரஸ்வதி, சப்தமாந்தர் திருவுருவங்கள் சிவன்கோயில் திருச்சுற்று மண்டபங்களில் வைத்துக் கலைப்படைப்புகளில் இடம் பெற்றன.

சிவனோடு போட்டியிட்டு ஆடும் காளியின் மிகப்பெரிய உருவங்களை இக்காலத்துக் கோயில் மண்டபங்களில் மக்கள் வழிப்படும் முறையில் வடிக்கப்பட்டுள்ளன. இக்காலத்து சமயமரபுகளில் ஒன்றாக இது இருந்தது. மகிசாசுரமர்த்தினி, அஷ்டலட்சுமி ஆகியோரின் வடிவங்களும் நாயக்கர் காலத்துக் கலைப்படைப்புகளில் இடம் பெற்றன.

வைணவக் கோயில்களில் இலட்சுமிக்கும் ஆண்டாளுக்கும் தனிச்சன்னதிகள் விரிவான முறையில் அமைக்கப்பட்டன. இவற்றில் இலட்சுமி சன்னதிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. ஆண்டாளைப் பூமிதேவியின் அவதாரமாகக் கருதி ஆண்டாளுக்கென்று வைணவக் கோயில்களில் தனிச்சன்னதி ஏற்படுத்தும் மரபு இக்காலத்தில் தோன்றியது. இவற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையானதாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் விளங்குகிறது. விசயநகர வேந்தர் காலத்தில் அவர்களுக்குக் கட்டுப்பட்டு ஆண்ட வாணாதிராயர் என்ற சிற்றரச மரபினர் ஆண்டாள் கோயிலை விரிவுப்படுத்திக் கட்டியுள்ளனர். கிருஷ்ணதேவராயர் போன்ற விசயநகரவேந்தர் ஆண்டாளின் வரலாற்றை இலக்கியமாகப் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 8. பிறதெய்வச் சிற்பங்கள்

சைவ, வைணவ தெய்வமரபுகளில் சைவமரபில் அதிகமாகவும், அதனையடுத்து வைணவமரபில் பல தெய்வ உருவங்கள் வழிப்பாட்டிற்கு வந்தன. மண்டபங்களின் விதானங்களிலும் தனித்து நிலையிலும் நவக்கிரகங்களின் உருவங்கள் செய்விக்கப்பட்டன.

நவக்கிரகங்களுக்கென்று தனிச்சன்னதி ஏற்படுத்தப்பட்டு இவ்வழிபாடு இக்காலத்தில் அதிகமாயிற்று. தமிழ்நாட்டில் இன்று சிவன் கோயில்களிற் காணப்படும் நவக்கிரக உருவங்கள் உள்ள சன்னதிகள் நாயக்கர் காலத்தில் உருவானவையே. கோபுரங்களிலும் மண்டபங்களிலும் எண்திசைக் காவலர்களைச் செய்விக்கும் வழக்கமும் இக்காலத்தில் இருந்துள்ளது.

நாயக்கர் காலத்தில் சைவ, வைணவக் கோயில்களில் முக்கியத்துவம் தந்து அழகுறப் படைக்கப்பட்ட சிற்பங்களில் இரதி, மன்மதன் உருவங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். கங்கை, யமுனை, போன்ற புண்ணிய நதிகளைத் தெய்வமாகக் கருதும் முறையில் கங்காதேவியையும், யமுனாதேவியையும் கோயில்களின் நுழைவாயிலில் குறிப்பாகக் கோபுரங்களின் நுழைவாயிலின் உட்புறம் இருப்புறத்திலும் அமைக்கும் வழக்கமும் இக்காலத்திற் காணப்பட்டுள்ளது.

## 9. நாட்டுப்புறத் தெய்வங்கள்

நாட்டுப்புறப் பெண்தெய்வ வழிபாடு இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுப் பெருகியது. மாரியம்மன், முத்தாரம்மன், அங்காளம்மன், சௌடம்மன், எல்லையம்மன், சீதலம்மன், திரௌபதியம்மன், பிடாரியம்மன், இசக்கியம்மன், பேய்ச்சியம்மன், இராக்காயியம்மன் போன்ற பல பெண் தெய்வங்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லில் உருவங்கள் வடிக்கப்பட்டுக் கோயிலில் வைத்து நாட்டுப்புற மக்களால் வழிபடப்பட்டன.

கணவனை இழந்த பெண்கள் தீக்குளித்து மாய்ந்து பின்னர் அவர்களுக்கு உருவங்கள் செய்து தீப்பாய்ந்த அம்மன் என்ற பெயரில் வழிபடப்பட்டனர். இதேபோன்று வீரமுடன் இறந்த வீரர்கள் நடுகல் சிற்பங்கள் எடுக்கப்பட்டு வழிபடப்பட்டனர்.

இக்காலத்தில் அய்யனார், கருப்பணசாமி, மதுரைவீரன், சுடலைமாடன், முத்தையா, லாடசன்னியாசி, விருமாண்டி, சப்பாணி, சோணையா, இருளாண்டி, முனியாண்டி, பொன்னர் சங்கர் போன்ற தெய்வங்களுக்குக் கற்சிற்பங்கள் செய்து வழிபாடுகள் நாட்டுப்புற மக்களால் நடத்தப்பெற்றன.

## 10. நாட்டுப்புறக் கதைமாந்தர் சிற்பங்கள்

விசயநகர நாயக்கர் கால கோயில்களிலுள்ள நாட்டுப்புற மக்களின் மண்டபத் தூண்களில் மக்கள்மனத்தில் ஆழமாகப் பதிந்த கதைமாந்தர்களும், நாட்டுப்புற மக்களின் வாழ்வில் இடம்பிடித்த மாந்தர்களும் சிற்பங்களாகச் செய்து காட்சிப்படுத்தப்பட்டனர். காட்டுமக்களின் மாந்தர்களாக விளங்கிய வேடன், வேட்டுவிச்சி, மலைவாழ் மக்களின் கதைமாந்தர்களாக விளங்கிய வேட்டையாடும் குறவன், குறிசொல்லும் குறத்தி, நாடோடிப் பெண், நாடோடிகள் என்று பல நாட்டுப்புற மக்களின் சிற்பப் படைப்புகள் சைவ, வைணவ கோயில்களில் அதிகம் இடம்பெற்ற காலம் விசயநகர நாயக்கர் காலமேயாகும். கிராமப் புறங்களில் திருவிழாக்காலங்களில் நடைபெற்ற நாடகங்கள் மூலம் மக்களின் மனங்கவர்ந்த கோமாளி, அல்லி, அரிச்சந்திரன், சந்திரமதி முதலிய பாத்திரப்படைப்புகளுக்கும் முதன் முதலாக இக்காலத்து கோயில் மண்டபச் சிற்பங்களில் முக்கிய இடமளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 11. உருவச்சிலைகள்

நாயக்கர் கால சிற்பக் கலையின் முக்கிய பண்புகளில் ஒன்று கோயில்களை உருவாக்கியவர்களுக்கும் கோயிலுக்கு வழிபடவந்த சமூகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களும், சமயத்தலைவர்களும் உருவச்சிலை வடிப்பதாகும். இவர்களில் அரசன், அரசி, அதிகாரி என்று பலர், என்றும் இறைவனை வழிபட்டுக் கொண்டே நிற்கும் நித்தியசேவைக் கோலத்தில் (சதாசேவை) கோயில்களில் கோபுரம், மண்டபம், திருச்சுற்று என்று பல்வேறு இடங்களிலுள்ள தூண்களில் சிற்பங்களாகக் காணப்படுகின்றனர். சிலவேளைகளில் இவர்களது உருவங்கள் கோயிற் படிக்கட்டுகளிலும், நடைபாதையிலும் கருவறை முன்பாக சன்னதி வாயில்களின் தரைப்பகுதியிலும் கீழே விழுந்து வணங்கிய நிலையில் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன.

## 12. ஆடற்கலை இசைக்கலை

நாயக்கர் கால மண்டபங்கள் கோபுரங்கள், விமானப் பகுதிகள், தூண்கள், சுவர்கள் ஆகியவற்றில் பல்வேறு நாட்டியக் கரணங்களை வெளிப்படுத்தும் செவ்வியல் நடனக் காட்சிகளும், நாட்டுப்புற மக்களின் எளிய நடனங்களும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று இவர்களுக்கு அருகில் பல்வேறு இசைக்கருவிகளை ஏந்தி இசை முழக்குவோரின் சிற்பப்படைப்புகளும் காணப்படுகின்றன. இத்தகைய சீரிய சிற்பப் படைப்புகள், மதுரை, திருநெல்வேலி, வேலூர் போன்ற இடங்களிற் காணப்படுகின்றன.

## 13. வாழ்வியற் சிற்பங்கள்

நாயக்கர் கால சிற்பக் கலைஞர்கள் முந்தைய காலக் கலைஞர்களைக் காட்டிலும் சுதந்திர உணர்வுடன் நடத்தப்பட்டிருக்கின்றனர் எனத் தோன்றுகிறது. ஏனெனில் கொடையாளர்கள் விருப்பத்திற்கு இலக்கண ரீதியாகச் சிற்பங்களுக்கு வடிவம் கொடுத்த அதே வேளையில் அவர்கள் தமது கற்பனையை அச்சிற்பங்களில் வெளிப்படுத்த இடமளிக்கப்பட்டுள்ளனர். மேலும் தமது வாழ்விற் கண்ட பல்வேறு முக்கிய காட்சிகளையும் பல்வேறு சமூக மக்களின் வாழ்வியற் காட்சிகளையும் மண்டபத்தூண்களில் அலங்கரிக்கும் முறையில் படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசவாழ்வைப் புலப்படுத்தும் குதிரை வீரர்கள், காலாட்படை வீரர்களின் அணிவகுப்பு, அரசனின் வீதிவலம், போருக்குச் செல்லும் காட்சி, போர்க்காட்சிகள், மற்றும் கோமாளிகளின் கூத்து, குச்சியில் நடக்கும் நாட்டுப்புற கலைஞர்களின் சாகசம், பனையேறுவோர், மீன்பிடிக்கும் மீனவர், ஆடுமாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்க்கும் இடையர், வலையர், பாம்பாட்டிகள், உழவர், வேடுவர் ஆகியோரின் செயல்கள் ஆகியவற்றை நாயக்கர் காலச் சிற்பிகள் சிறப்பான முறையில் சிற்பங்களாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளனர்[4]. சிதம்பரம் வடக்குக் கோபுரத்தில் கிருஷ்ணதேவராயரின் சிற்பத்தின் அருகில் கோயிலை உருவாக்கிய சிற்பிகளின் உருவச்சிலைகள் அவர்களது பெயருடன் காணப்படுகின்றது.

## 14. பாலியற் சிற்பங்கள்

நாயக்கர் கால சிற்பக்கலையின் குறிப்பிடத்தக்க பண்புகளில் ஒன்றாக உடல் உறவையும், காமவுணர்வுகளையும் காட்டும் இயல்பான அல்லது மிகைப்படுத்தப்பட்ட பாலியற் சிற்பங்கள் காணப்படுகின்றன. பொருந்தாத காமவுணர்வுகளையும் இக்காலச் சிற்பங்கள் காட்டுகின்றன. திருவண்ணாமலைப் பகுதியிலுள்ள சின்னையன்பேட்டை என்ற ஊரிலுள்ள நாயக்கர் காலக் குளத்தில் அதிக அளவில் பாலியல் தொடர்பான காட்சிகளைச் சிற்பமாக வடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டிற் காணும் விசயநகர நாயக்கர் காலச் சிற்பங்களை அவை காணப்படும் இடங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யலாம். தொடக்கக் காலத்தில் தமிழ்நாட்டுப் பகுதியை நேரடியாக தனது மண்டலாபதிகளைக் கொண்டு ஆட்சி நடத்திய விசயநகர வேந்தர்கள் பின்னர் மதுரை, தஞ்சை,செஞ்சி,வேலூர் என்று நான்கு பகுதிகளில் நாயக்கர்களை அமர்த்தி அவர்களைக் கொண்டு தமிழ்நாட்டு நிருவாகத்தை மேற்கொண்டனர். இவர்களே மதுரை நாயக்கர் (கி.பி 1529 – 1736 ) தஞ்சை நாயக்கர் (1532 – 1674), செஞ்சி நாயக்கர் (1526– 1649), வேலூர் நாயக்கர் (1526– 1604) என்று அழைக்கப்பட்டனர்.[5] இவர்கள் தங்கள் தலைமையிடங்களிலும் தங்கள் ஆட்சி பொறுப்பில் இருந்த சமயச் சிறப்பு வாய்ந்த கோயில்களிலும் பல திருப்பணிகள் செய்து அவற்றில் அவர்களது சிறப்பையும் பெருமையையும் வெளிப்படுத்தும் வகையில் பல சிற்பங்களைச் செய்துவித்துள்ளனர்.

## மதுரை நாயக்கர் காலம்

மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வெலி, தூத்துக்குடி, திருச்சி, கோவை மாவட்டங்களில் உள்ள சைவ, வைணவ கோயில்களில் இக்காலத்துச் சிற்பங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் பெரும்பகுதி மதுரை நாயக்கர் காலத்தில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள சுந்தரேசுவரர் கோயில் விமானம் மதுரைநாயக்கர் ஆட்சியின் தொடக்க காலத்தில் திருத்திக் கட்டப்பட்டுள்ளது. இதனை எட்டுத் திசை யானைகள் தாங்குகின்ற முறையில் கட்டியுள்ளனர். திசையானைகளை நேரில் காணுவது போன்ற தோற்றத்தில் செய்வித்துள்ளனர். சுந்தரேசுவரர் சன்னதி மகா மண்டபத்தில் உள்ள வெள்ளியம்பலத்தில் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த கால்மாறி ஆடும் பெரிய நடராசர் திருவுருவம் உள்ளது. இதன் முன்புறம் சிவகாமி, வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகியோரது உருவங்கள் உள்ளன. சுந்தரேசுவரர் சன்னதியின் முன்மண்டப அதிட்டானத்தில் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த பல ஆடற்கலைச் சிற்பங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

சுந்தரேசுவர் சன்னதியிலுள்ள கம்பத்தடி மண்டபத்தினைச் சுற்றியுள்ள மண்டபம் பதினாறாம் நூற்றாண்டில் வீரப்பநாயக்கனால் எடுப்பிக்கப் பட்டதாகும்.[6] இதன் கீழ்ப்புறம் நாயக்கர் காலச் சிற்பக்கலையின் சிகரமாய் விளங்கும் அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவதாண்டவர், நடனமிடும் காளியின் மிகப் பெரிய உருவங்கள் உள்ளன. அண்ணாந்து பார்த்து மலைக்க வைக்கும் தோற்றத்துடன் இவை படைக்கப்பட்டுள்ளன. சுவாமி சன்னதியின் தென்புறம் முக்குறுணி பிள்ளையார் என்று அழைக்கப்படும் மிகப்பெரிய விநாயகரின் உருவம் உள்ளது. இதனைச் செய்வித்தவர் திருமலை நாயக்கர் ஆவார். கிழக்கு இராஜகோபுரத்திற்கும் கம்பத்தடி கிழக்குக் கோபுரத்திற்கும் இடையில் அமைந்துள்ள நாயக்கர் கால ஆயிரங்கால் மண்டபம், வீரவசந்தராயர் மண்டபங்களில் ஆளுயரத்தூண் சிற்பங்கள் காணப்படுகின்றன. வீரவசந்தராயர் மண்டபத்தின் கீழ்பகுதியில் உள்ள தூண்களில் காலசம்காரமூர்த்தி, சிவன், காளி, பெண்ணைத் தூக்கி செல்லும் ஆண் முதலிய சிற்பங்கள் உள்ளன.

ஆயிரங்கால் மண்டபத்தின் முன்பாகவும் உட்புற வரிசைகளிலும் உள்ள தூண்களில் மதுரை நாயக்கர் காலச் சிற்பக்கலையின் செழுமையை வெளிப்படுத்தும் பெருஞ்சிற்பங்கள் அழகிய தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன. இம்மண்டபத்தின் வெளிப்புறம் உள்ள தூண்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கோலத்தில் உள்ள சிவபெருமான், கண்ணப்பர், பிச்சாடனர், குதிரைச் சேவகர் (சிவன்) அரிச்சந்திரன், குறவன்,குறத்தி சிற்பங்கள் உள்ளன. ஆயிரங்கால் மண்டபத்தின் உட்புறம் கிழக்கு மேற்காக அமைந்த தூண்களில் திரிபுராந்தகர், வல்லபையைச் சுமந்து ஒன்றை காலில் நடனமிடும் கணபதி, மயில்மீது அமர்ந்த முருகன், பாணன், யாழ் கொண்டு இசைமீட்டும் விறலி[7] ஆகியோரது உருவங்கள் உள்ளன. ஆயிரங்கால் மண்டபத்தின் வடக்கு தெற்காக அமைந்த தூண்களிலும் கலைச்சிறப்பு வாய்ந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பேடியாக விளங்கும் அரிச்சுனன், அர்ச்சுனனிடம் பாடம் கற்ற உத்திரை, பெண்ணைத் தூக்கிச் செல்லும் ஆண், தக்கன், தக்கனை வதை செய்யும் வீரபத்திரர், இரதி, மன்மதன், வீமன், புருசாமிருகம், கர்ணன், அர்ச்சுனன், பிச்சாடனர், மோகினி ஆகியோரது உருவங்கள் காணப்படுகின்றன.

இராஜகோபுரத்திற்குக் கிழக்கே உள்ள திருமலை நாயக்கர் எடுப்பித்த புதுமண்டபம் எனப்படும் வசந்த மண்டபம் உள்ளது. நாயக்கர் காலச் சமயம், சமுதாயம், அரசியல் ஆகியவற்றைப் புலப்படுத்தும் சிற்பக்கூடமாக இது திகழ்கின்றது. இதில் இராவண அனுக்கிரகமூர்த்தி, திரிபுராந்தகர், கஜசம்காரமூர்த்தி, ஏகாபாதமூர்த்தி, ஊர்த்துவதாண்டவர், நடனமிடும் காளி, மீனாட்சி திருமணம், பிரம்மன், அர்த்தநாரி, உடலெல்லாம் கண்ணுடன் காட்சியளிக்கும் இந்திரன், மூன்று தனங்களுடன் மீனாட்சி, மீனாட்சியுடன் போருக்கு எதிர்கொண்டு நிற்கும் சிவபெருமான், பதஞ்சலி, வியாக்கிரபாதர் உருவங்கள் காணப்படுகின்றன. மேலும் மதுரை திருவிளையாடற் புராணத்தில் வரும் சிவபெருமான் பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது, புலிக்குட்டிக்குப் பால் கொடுத்தது, கருங்குருவிக்கு அருளியது, கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது போன்ற திருவிளையாடல்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. புதுமண்டபத்தின் இருபுறமும் குதிரைமீது அணிவகுத்து நிற்கும் குதிரை வீரர் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் மேற்குப்புற வாயிலில் திருமலைநாயக்கரும் அவரது தம்பி முத்தியாலு நாயக்கனும் குதிரையில் அமர்ந்த தோற்றத்தில் காட்சியளிக்கின்றனர். புதுமண்டபத்தின் உட்புறம் அமைந்துள்ள பெரிய தூண்களில் திருமலை நாயக்கரும் அவருக்கு முன்னர் ஆண்ட, நாயக்க மன்னர்களும் திறம்பட சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளனர். நாயக்கர்கால ஒப்பனைக் கலையை அறிந்து கொள்ள இச்சிற்பங்கள் மிகுந்த துணைபுரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சி சன்னதியின் கீழ்ப்புறத்தில் இராணிமங்கம்மாள் அவளது பேரன் முத்துவிசய சொக்கநாத நாயக்கன் உருவச்சிலைகள் உள்ள நகரா மண்டபம் உள்ளது. இதனைக் கடந்து சன்னதிக்குள் நுழையும் இடத்தில் அஷ்டசக்தி மண்டபம் உள்ளது. இதில் பக்கத்திற்கு நால்வராக உயரமான தோற்றத்துடன் கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலெட்சுமி (தென்புறத்தூண்கள்) யக்ஞாரூபிணி, சியாமளா, மகேசுவரி, மனோன்மணி (வடபுறத்தூண்கள்) உருவங்கள் உள்ளன. இதுபோன்ற அஷ்டசக்தி மண்டபம் தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லை. அஷ்டசக்தி மண்டபத்தில் திருமலைநாயக்கர் அவரது அரசியர், அதிகாரிகள் உருவச்சிலைகள் உள்ளன.

அஷ்டசக்தி மண்டபத்தினை அடுத்து அமைந்துள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் வேடன், வேட்டுவிச்சியாக வந்த இறைவன், இறைவியரது வேலைபாடுமிக்க சிற்பங்கள் உள்ளன[9]. மீனாட்சி நாயக்கர் மண்டபத்தை அடுத்துள்ள முதலிப்பிள்ளை மண்டபத்தில் தம்பட்டம் வாசிப்பவர், தருகாவனத்து ரிஷி, ரிஷிபத்தினிகள், பிட்சாடனர், மோகினி ஆகியோரது உருவங்கள் தூண்களில் செய்விக்கப்பட்டுள்ளன. பொற்றாமரைக் குளத்தின் மேற்புறம் உள்ள கிளிக்கூட்டு மண்டபத்தில் அர்ச்சுனன், கர்ணன், சகாதேவன், நகுலன், வீமன், புருஷாமிருகம், வாலி, சுக்ரீவன், வேடன், நடனமாது ஆகியோரது நெடுந்தூண் பெருஞ்சிற்பங்கள் காணப்படுகின்றன. திருமலைநாயக்கர் காலத்தில் திருத்திக் கட்டப்பட்ட மீனாட்சியம்மனின் கருவறைச் சுவர்களிலும் அதிட்டானத்திலும் அதைச் சூழ்ந்த பகுதிகளிலும் ஏராளமான சிறு சிறு சிற்பங்கள் உள்ளன. திருப்பரங்குன்றத்தின் முன்புறம் உள்ள குதிரை மண்டபம் இராணிமங்கம்மாள் காலத்திற் கட்டப்பட்டது. இதில் அவர் தனது பேரனுடன் முருகன் தெய்வயானை திருமணத்தை வணங்கி நிற்பது போன்ற சிற்பம் உள்ளது.

பதினாறாம் நூற்றாண்டிற் கட்டப்பட்ட மதுரை கூடலழகர் பெருமாள் விமானத்தில் இராமாயணச் சிற்பங்கள், பாகவதச் சிற்பங்கள், திருமால் அவதாரச் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதே காலத்தில் திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில் முன்பண்டத்தில் இரதி, மன்மதன், இராமர், இலக்குவன், சீதை சிற்பங்கள் செய்விக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய நகர உள்கோட்டை வாசல்



விஜய நகர விட்டல சுவாமி கோயில் மாடக்குழிச் சிற்பங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய நகர விட்டல சுவாமி கோயில் மகா மண்டபம் - இசைத் தூண்கள்




விஜய நகர யானைப்பந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பத்ம மஹால் (அந்தப்புரம்)




விஜய நகர விட்டலசுவாமி கோயில் தூண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யானைப் பந்தி முகப்புத் தோற்றம்.



விட்டல சுவாமி கோயில் வளாகம்.
துலாபாரத் தோரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஜய நகர மகாநவமி மண்டப அதிஷ்டானம்



அதிஷ்டானச் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய நகர அங்காடித் தெருவின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பருத்தி குன்றம் வர்த்தமானர் கோயில்
ஒரு புறத்திலிருந்து கோயிலின் முழுமையான தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பருத்தி குன்றம் வர்த்தமானர் கோயில் சங்கீத மண்டபம்




திருப்பருத்தி குன்றம் சங்கீத மண்டபத்து விதானத்தின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதம்பரம்
கோபுரத்து
அதிஷ்டானம்



சிதம்பரம் தெற்குக் கோபுரம் ஆசாரிகளின் பிரதிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தஞ்சை நாயக்கர் மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காஞ்சிபுரம் காமாக்ஷியம்மன் கோயில் மண்டபம்




காஞ்சிபுரம் காமாக்ஷியம்மன் கோயிற் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிற் திருச்சுற்று மாளிகை




காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன் கோயில் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவண்ணாமலைக் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாக்ஷியம்மன் கோயில்
மேற்குக் கோபுரம்
மேற்பகுதி



மதுரை மீனாக்ஷியம்மன் கோயில் வடக்குப் பிரகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாக்ஷியம்மன் கோயில்
தெப்பக் குளம்



மதுரை மீனாக்ஷியம்மன் கோயில் மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபம்



மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில் கிழக்குக் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
மேற்குக் கோபுரம்



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
வடக்குக் கோபுரம்
(சுந்தரபாண்டியன் கோபுரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில் சிற்பத் தூண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
சந்திரமதி சிற்பம்



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
விறலி சிற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
குறத்தி சிற்பம்



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
ஆடல் மகள் சிற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
சுப்பிரமணியர் சிற்பம்



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
ரதி சிற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
வல்லப கணபதி (1)



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
வல்லப கணபதி (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
நடராசர்



மதுரை
மீனாக்ஷி அம்மன் கோயில்
திரிபுராந்தகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பரங்குன்றம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகர் கோயில் கல்யாண மண்டபத்தில் மதுரைக் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் காணப்படுவது போன்று கலைச்சிறப்பு வாய்ந்த தூண் சிற்பங்கள் உள்ளன. இரணியனை வதம் செய்யும் நரசிம்மர், கருடன் மீது நாராணயன், வராகர், திரிவிக்கிரமர், எட்டுக்கரத்துடன் வேணுகோபாலர், அனுமன், கருடன் ஆகியோர் சிற்பங்களோடு நாயக்கர் கால உருவச்சிலைகளும் இங்கு உள்ளன.[10] அழகர்கோயில் வெளிப்புறம் உள்ள மண்டபத்திலும், உள்பிரகாரத்திலும் திருமலைநாயக்கர் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள தாடிக்கொம்பு பெருமாள் கோயில் இரங்கமண்டபத்திலும் கலைநயமிக்க பெருந்தூண் சிற்பங்கள் உள்ளன. அனுமன், அர்ச்சுனன், வைகுண்டநாதர், எண்கர வேணுகோபாலன், கருடவாகனத்தில் நாராயணன், திரிவிக்கிரமர், கார்த்தவீரியன் சிற்பங்கள் இங்கு காணப்படுகின்றன. திருக்கோஷ்டியூர் பெருமாள் கோயிலில் இரணியனோடும் சண்டையிடும் நரசிம்மர் மற்றும் இரணியனை வதம் செய்த நரசிம்மரின் இருபெருஞ் சிற்பங்கள் உள்ளன.

தென்பாண்டி நாட்டில் நெல்லையப்பர் கோயிலில் நந்தி மண்டபத்தினைச் சுற்றி அர்ச்சுனன், கர்ணன், அல்லிஅரசாணி, வேட்டுவன், குறவன், குறத்தி சிற்பங்கள் தூண்களில் உள்ளன. இங்குள்ள தெற்குப் பிரகாரத்தில் கலைநுட்பத்துடன் வடிக்கப்பட்ட நாயக்கமன்னர்களின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. தெப்பக்குளத்தில் மேல்புறமுள்ள மண்டபத்தில் பீமன், புருஷாமிருகத்தின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

தாமிரபரணி கரையிலுள்ள நவதிருப்பதிகள் பலவற்றில் நாயக்கர் கால பெருந்தூண் சிற்பங்களும், சிறு சிற்பத் தொடர் சிற்பங்களும் உள்ளன. ஸ்ரீ வைகுண்ட நாதர் கோயில் திருவேங்கடநாதர் மண்டபத்தில் இராமர், சீதை, வாலி, சுக்ரீவன், குறவன், குறத்தி போன்றோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. திருக்குறுங்குடி பெருமாள்கோயிற் கோபுரத்தில் நாயக்கர் காலத்துச் சிற்பங்கள் ஏராளமாக உள்ளன. இக்கோயில் வீரப்பநாயக்கர் மண்டபம், இரதி மண்டபத் தூண்களில் வாலி, சுக்ரீவன், அர்ச்சுனன், கர்ணன், வீமன், திரௌபதி ஆகியோரது சிற்பங்கள் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்லிவேலிக்கு தெற்கே உள்ள கிருஷ்ணாபுரம் பெருமாள்கோயில் மண்டபத்திலுள்ள தூண் சிற்பங்கள் மதுரைக் கோயில் சிற்பங்களைப் போன்று நாயக்கர் கால மாட்சிமையை எடுத்துக் காட்டுகின்றவையாய் விளங்குகின்றன. இக்கோயிற் கோபுரத்தைக் கடந்து வடபுறம் காணப்படும் வீரப்பநாயக்கன் மண்டபத்தில் நாடோடிப் பெண் ஒருத்தி ஆணைத் தூக்கிச் செல்லல், ஆண் பெண்ணைத் தூக்கி செல்லல், அர்ச்சுனன், கர்ணன், நடமாடும் பெண்கள், சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளனர். இச்சிற்பங்கள் உள்ள தூண்களில் பக்கவாட்டில் நாயக்கர் கால வாழ்வியல் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் குறத்திப் பெண்ணொருத்திக்குக் குறிசொல்லும் நிகழ்ச்சி அழகுறக் காட்டப்பட்டுள்ளது. வீரப்பநாயக்கன் மண்டபத்தினை அடுத்துள்ள அரங்க மண்டபம் (யாளி மண்டபம்). இதிலும் வீரபத்திரர், கொப்பும் கத்தியும் கொண்டு விளங்கும் வீரன், இரதி, மன்மதன், புருஷாமிருகம், வீமன். தருமன், நடனமாது ஆகியோரது உருவங்கள் மிகுந்த வேலைப்பாடுடன் மண்டபத்தூண்களில் வடிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள்கோயில் கம்பத்தடி மண்டபம் அதற்கு வடபுறமுள்ள மண்டபம் ஆகியவற்றிலுள்ள தூண்களில் நாடகப் பாங்குடன் வடிக்கப்பட்டுள்ள பெருந்தூண் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இராமர், சூர்ப்பனகையின் மூக்கையும், மார்பையும் அறுக்கும் இலக்குவன், சாத்தகி, குகன், அர்ச்சுனன், கர்ணன், வேணுகோபாலன் ஆகியோரது சிற்பங்கள் காணப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை கோயிலில் உள்ள மண்டபங்களில் வல்லபைகணபதி, இராவணன், மகிசாசுரமர்த்தனி, சங்கரநாராயணன், வீரபத்திரர், திருமால், ரதி, மன்மதன், கண்ணப்ப நாயனார், நரசிம்மர், இராமன், மோகினி, கல்கி, கூர்மர், வீபீடணன் ஆகியோரது தூண் சிற்பங்கள் உள்ளன.[11] திருமயம் பெருமாள் கோயிலில் உள்ள முன்மண்டபத்தை தூண்களில் நாயக்க காலப் பெருந்தூண் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ ரங்கம் அரங்கநாதர்கோயில் மதுரைநாயக்கர் ஆட்சியில் இருந்தபோது பல வளர்ச்சிப் பணிகளைக் கண்டுள்ளது. இங்கு கருட மண்டபத்தில் முன்புறத்தூண்களில் நாயக்க மன்னர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளின் உருவச்சிலைகள் நுட்பமான வேலைபாடுகளுடன் வடிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் கோயிலின் வடபுறமுள்ள சேஷராயர் மண்டபம் எனப்படும் குதிரை மண்டபம் நாயக்கர் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட குதிரைமண்டபங்களில் தலைசிறந்தது. குதிரைகளின் மீது அணிவகுத்து நிற்கும் வீரர்கள், காலாட்படைவீரர் உருவங்கள் காண்பவரை வியக்கவைக்கும் வேலைபாட்டுடன் செய்விக்கப்பட்டுள்ளன. இத்தூண்களில் இராமாயண, பாகவத நிகழ்ச்சிகளை விளக்கும் சிறு சிற்பங்களும் உள்ளன. இம்மண்டபத்தில் உட்புறம் உள்ள தூண்களில் தூணுக்கு ஒன்றாக திருமாலின் பத்து அவதாரக் கோலங்கள் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் வேணுகோபாலன் கருவறையைச் சுற்றியுள்ள அழகுமிக்க சிற்பப் படைப்புகளை விசயநகர காலத்தினைச் சார்ந்ததா அல்லது போசளர் காலத்தினைச் சார்ந்ததா என்ற கருத்து முரண்பாடு உள்ளது.

## தஞ்சை நாயக்கர் காலம்

தஞ்சை நாயக்கரின் சிற்பப் படைப்புகள் தஞ்சை, பட்டீசுவரம், கும்பகோணம் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. தஞ்சைக் கோயிலில் காணப்படும் சுப்பிரமணியர் கோயில் தஞ்சை நாயக்க மன்னரால் மிகுந்த வேலைப்பாடுடன் கட்டப்பட்டுள்ளது. இதில் சிறு சிற்பங்களும் பெருஞ்சிற்பங்களும் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. தஞ்சைக்கோயிலில் தற்போது காணப்படும் நந்திமண்டபமும் அதிற் காணப்படும் மிப்பெரிய நந்தியின் சிற்பமும் தஞ்சை நாயக்கர் கலைப்படைப்பாகும். இதன் முன்னர் உள்ள தூண்களில் தஞ்சை நாயக்க மன்னரின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன.

தஞ்சை நகரில் அமைந்த கோயில்களில் தஞ்சை நாயக்கர் காலச் சிற்பங்கள் உள்ளன. தஞ்சை கலியுக வேங்கடேசப் பெருமாள் கோயிலில் இராமாயணச் சிற்பங்களும், தசாவதாரச் சிற்பங்களும், பாகவத சிற்பங்களும் காணப்படுகின்றன. இதேபோன்ற சிற்பங்கள் தொப்பாரங்கட்டிய பிள்ளையார்கோயில், இராமசாமி கோயில், நீலமேகப் பெருமாள்கோயில் போன்ற கோயில்களில் நாயக்கர் காலச் சிற்பங்கள் உள்ளன. இராமசாமி கோயிலில் தஞ்சை நாயக்கர் காலச் சிற்பங்கள் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சை நாயக்கரின் உருவச்சிற்பங்கள், திருவாரூர், கும்பகோணம், மன்னார்குடி, வைத்தீஸ்வரன் கோயில் போன்ற பல இடங்களிற் காணப்படுகின்றன. கும்பகோணம் இராமசாமிகோயில் இரகுநாத நாயக்கனால் (கி.பி 1600–1645) கட்டப்பட்ட கோயிலாகும். இக்கோயில் முன்மண்டபத்தில் பல அழகிய நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இரகுநாத நாயக்கர் தன் தேவியுடன் காணப்படும் சிற்பம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## செஞ்சி நாயக்கர்

திருக்கோயிலூர்க்கு அருகிலுள்ள ஸ்ரீமுஷ்ணம் கோயிலும், ராஜகிரியிலுள்ள கல்யாணமண்டபமும் செஞ்சி நாயக்கன் துப்பாக்கி கிருஷ்ணப்பனால் கட்டப்பட்டதாகும். சிதம்பரத்திலுள்ள கோவிந்தராஜப் பெருமாள் கோயிலில் செஞ்சி நாயக்கரின் திருப்பணிகள் உள்ளன. செஞ்சி நாயக்கர் காலச் சிற்பங்கள் விருத்தாசலம் கோயிலிற் காணப்படுகின்றன. இங்கு அவர்களது உருச்சிலைகள் உள்ளன.

## வேலூர் நாயக்கர்

வேலூர் நாயக்கரின் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிற் சிற்பங்கள் உள்ளன. இக்கோயில் கோபுரம், கல்யாண மண்டபம், நடராசர் சன்னதிகளில் வேலைப்பாடு மிக்க அழகிய சிற்பங்கள் உள்ளன. கோபுரத்தில் விசயநகர அரசர் சதாசிவதேவராயர் மற்றும் அவரது தளபதி சின்னபொம்மு நாயக்கர் உருவச் சிற்பங்கள் உள்ளன[13]. இக்கோயிலில் உள்ள கல்யாணமண்டபத்திலும் முருகனை வணங்கி நிற்கும் இவரது உருவம் உள்ளது. வேலூர் கல்யாண மண்டபம் குதிரைவீரர்கள் அணிவகுத்து நிற்கும் சிற்பக் கூடமாக விளங்குகிறது. இம்மண்டபத்திலுள்ள தூண்களிலும் விதானத்திலும் ஏராளமான சிற்பங்கள் காணப்படுகின்றன. இலிங்கோத்பவர், ஊர்த்துவதாண்டவர், ரிஷபாரூடர், வீரபத்திரர், ஆறுமுகன், விநாயகர், நர்த்தனகணபதி, சித்தி விநாயகர், கஜேந்திர மோட்சம், நரசிம்மர், இராமர், புருஷாமிருகம், கிருஷ்ணனின் திருவிளையாடல்களை விளக்கும் பாகவதக் காட்சிகள் இங்கு சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் கோமாளி, பாம்பாட்டி, காலில் முள்ளெடுக்கும் பெண், ஆயர்மகள் சிற்பங்களும் பாலியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சிற்பங்களும் இங்கு காணப்படுகின்றன. இக்கோயில் நடராசர் மண்டபத்தில் இரதி, மன்மதன், ஆடல் கோலம் கண்டபேருடப் பறவை, இரணியவதம், கருடநாராயணன் சிற்பங்கள் உள்ளன. வேலூருக்கு அருகிலுள்ள விரிஞ்சிபுரத்திலுள்ள கோயில் மண்டபமும் வேலூர் கல்யாண மண்டபம் போன்று வேலைபாடுடன் சிற்பங்கள் நிறைந்து காட்சியளிக்கிறது.

## காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் ஜுரஹரேஸ்வரர் கோயில், வரதராசப் பெருமாள் கோயில் ஆகியவற்றில் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. ஏகாம்பரநாதர் கோயிற்கோபுரத்தினைக் கட்டியவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். ஏகாம்பரநாதர் கோயில் மண்டபத்தூண்களிலும் சிற்றாலயத்திலும் நாயக்கர் காலச் சிற்பங்கள் உள்ளன. தெப்பக்குளத்திற்கு மேல்புறம் உள்ள ஆலயத்தில் சிறுதொண்டர் கதை சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. காஞ்சி, வரதராசப் பெருமாள் கோயிலில் உள்ள கல்யாண மண்டபம் நாயக்கர் சிற்பக் கலையின் காட்சிக்கூடமாக விளங்குகிறது. இங்கு நாயக்கர் உருவச்சிலைகளும் குதிரை வீரர் தோற்றமும், இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் காட்சிகளும், தசாவதாரமும், நாட்டுப்புற ஆடல்கள், ஆழ்வார், ஆச்சாரியார் உருவங்களும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன[14].

## பேரூர்

கோவை மாவட்டத்தில் அதிக அளவில் நாயக்கர் காலக் கலைப்படைப்புகளைக் கோயில்களிற் காணமுடியவில்லை. ஆனால் இக்குறையைப் போக்குகின்ற முறையில் பேரூர் சிவன்கோயில் நடராசர் மண்டபத்தூண் சிற்பங்கள் திகழ்கின்றன. இம்மண்டபத்தூண்களில் நாயக்கர் கலைக்குரிய வேலைப்பாடு கொண்ட வீரபத்திரர், கஜசம்காரமூர்த்தி, விநாயகர், ஆறுமுகன், காளி, ஊர்த்துவதாண்டவர் சிற்பப்படைப்புகள் காண்பவரைக் கவரும் வண்ணம் செய்விக்கப்பட்டுள்ளன.

## சமணசமயச் சிற்பங்கள்

தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள சித்தாமூர், கரந்தை, திருப்பருத்திக்குன்றம் முதலிய இடங்களிலுள்ள தீர்த்தங்கரர் கோயில்களில் விசயநகர, நாயக்கர்கால கலைப்படைப்புகள் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பருத்திக்குன்றம் சங்கீத மண்டபம் விசயநகர வேந்தர் காலத்தில் கட்டப்பட்ட ஓவியம் உள்ள மண்டபம் ஆகும். இரண்டாம் புக்கர் கட்டிய இம்மண்டபத்தில் அவரது உருவச்சிலை உள்ளது. இங்குள்ள தூண்களின் அடிப்பகுதியில் சமணம் தொடர்பான சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. திருப்பருத்திக்குன்றம் கோயிலில் நாயக்கர் கால தீர்த்தங்கரர்கள், இயக்கி, இயக்கன் உருவங்கள் உள்ளன. கரந்தைக் குந்துநாதர் ஆலயத்திலும் இது போன்று சமண, சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள சித்திரகூடமண்டபத்திலும் அலங்கார மண்டபத்தூண்களிலும் சமண சமய தீர்த்தங்கரர், இயக்கர், இயக்கியர் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

### விசயநகர நாயக்கர்கால சிற்பங்களின் பண்புகள்

விசயநகர நாயக்கர் காலத்தினைச் சார்ந்த சிற்பப் படைப்புகள் தமிழகமெங்கும் காணப்படுகின்றன. காஞ்சிபுரம், வேலூர், கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, கிருஷ்ணாபுரம் போன்ற இடங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலையின் மையங்களாக இருந்துள்ளன. அரசன் முதல் ஆண்டிவரை அனைத்து மக்களின் வாழ்வையும் சைவ, வைணவ, சமண சமயங்களின்திருவுருவங்களையும் சமயக் கோட்பாடுகளையும், முரண்பாடுகளையும் விசயநகர நாயக்கர் காலச் சிற்பப் படைப்புகளில் காணமுடிகிறது. அரசன், அரசி, ஆடல் மகளிர், நாட்டுப்புறக் கலைஞர்கள் ஆகியோரது ஆடை, ஆபரணங்களையும், ஒப்பனைகளையும், நுட்பமாகவும் விரிவாகவும் இக்காலச்சிற்பங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. நாயக்கர் கால யாளித்தூண்களும் தூணின் மேற்ப்பகுதியிலுள்ள சிம்மங்களும் எடுப்பாகவும் நேர்த்தியாகவும் இக்காலத்தில் வடிக்கப்பட்டுள்ளன. குதிரைக்கும் குதிரைவீரர்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் இக்காலச் சிற்ப படைப்பில் அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் சக்தி வழிப்பாட்டிக்கும் நாட்டுபுறக் கலைஞர்களுக்கும் இக்காலச் சிற்பங்களில் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. எவ்வகைச் சிற்பமானாலும் அவற்றின் உள்ளார்ந்த முகபாவங்களைவிட உடற்கூறுகளுக்கும் ஆடை, ஆபரணப் புனைவுகளுக்கும் முதலிடம் தரப்பட்டுள்ளது. தேவைக்கு அதிகமான அளவில் ஆபரணங்களும், ஆடைகளில் புனைவுகளும் இக்காலச் சிற்பங்களிற் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவர், முற்கால பாண்டியர், சோழர் காலங்களின் சிற்பங்களைப் போன்ற நளினமான, மெல்லிய இயல்பான தோற்றத்துடன் பல்வேறு முகபாவனைகளுடன் தேவையான ஆடை ஆபரணப் புனைவுகளுடன் சிற்ப சாத்திரங்களில் சொல்லப்பட்ட அளவுகளில் விசயநகர நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படவில்லை. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வந்த சிற்பக்கலை மரபின் தேய்வை இவை காட்டுவனவாக உள்ளன என்னும் ஜெ.சி. ஹாலின் கருத்தை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ள இயலாது[16] பேருருவங்களைச் செய்வது இக்காலமரபாக இருந்தது எனக் கொள்ளவேண்டும். அளவில் இவை பெரியதாக இருந்தாலும் உடற்கூறு அமைப்பில் கூடுதலாகவோ குறைவாகவோ இவை இல்லை. நாயக்கர் கால மக்களின் இரசனையைப் புரிந்து கொண்டு சிற்பக்கலைஞர்கள் ஓரளவு சுதந்திரவுணர்வுடன் நாடகப் பாணியில் மிகைப்படுத்தி, காலத்தின் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் சிற்பங்களைப் படைத்திருக்கின்றார்கள் என்றே செல்ல வேண்டும். அக்காலப் பொதுமக்களின் வாழ்வியலை மண்டபங்களில் உள்ள தூண்களில் சிறு சிறு சிற்பங்களாக தொடர் காட்சிகளாகச் சித்திரிக்கும் முறை பல்லவர், பாண்டியர், சோழர் சிற்பங்களிற் காணமுடியவில்லை என்று கூற வேண்டும். நாயக்கர் காலத்தில் சிற்பக்கலை மரபு அழிவை நோக்கிச் சென்றது என்று கூறுவதை அது காலச் சூழலில் அடிப்படையில் மாற்றமடைந்து காணப்படுகின்றது என்றே சொல்ல வேண்டும். எந்தவொரு கலைப்படைப்பையும் உயர்ந்தது, தாழ்ந்தது என்று கூறக்கூடாது. அந்தந்தக் காலச் சூழலின் அடிப்படையிலேயே அவற்றை நோக்க வேண்டும் என்பதே பொருத்தமாக உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. K.R. Srinivasan, **Temples of South india,** National book Trust, New Delhi, 1991, PP. 180- 181
2. கு. சேதுராமன், **தமிழ்நாட்டு சமூதாயப் பண்பாட்டு கலை வரலாறு,** ஜெ. ஜெ. பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1997, பக். 324–325.
3. எல். மணிவண்ணன், **பாண்டியநாட்டு வைணவக் கோயில்களில் கலையும் கட்டடக்கலையும்,** ஜெ.ஜெ. பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1999, பக் 108–120.
4. இராசு. காளிதாசு, ஆ. வேலுச்சாமி சுதந்திரன், அ. சந்திரகுமார், **சிந்தைக்கினிய சிற்பக்கலை,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 1995, பக். 116


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. A. Krishnaswami, **The Tamil Country under Vijayanagar,** Annamalai University, 1964, PP 246-273.

6. ARE. 35/1908

7. D.Devakunjari, **Madurai thorugh the Ages,** SAHER, Chennai, 1979, இச்சிற்பத்தை இந்நூலாசிரியர் சரஸ்வதி என்று கருதுகின்றார்.

8. இரா. நாகசாமி, **ஓவியப்பாவை,** தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை. 1979, பக். 62 இங்குள்ள நாயக்கர் அரசர் உருவங்களை திருமலைநாயக்கரின் அதிகாரிகளாகவும் அவற்றில் ஒன்று நாயக்கரின் தம்பியாகவும் இருக்க வேண்டும் என்று இந்நூலாசிரியர் கருதுகின்றார்.

9. A.V Jeyachandran, **The Madurai Temple Complex,** Madurai Kamaraj University, Madurai, 1995, P. 295

10. G. Sethuraman, **Facts of indian Art and Culture,** J.J. Publication, Madurai, 1995 P. 41-44.

11. சொ. சாந்தலிங்கம், **குடுமியான்மலை,** தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை, 1987, பக். 78-89.

12. குடவாயில் பாலசுப்பிரமணியன், **சோழமண்டலத்து வரலாற்று நாயக்கர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1981 பக். 205-271.

13. ஏ.கே. சேஷாத்திரி, **வரலாற்றில் வேலூர் கோட்டை,** சேகர் பதிப்பகம், சென்னை 1994, பக். 99-101.

14. K.V Raman, **Sri Varadaraja Perumal Temple-** Kanchi, Abhinav Publication, New Delhi, 1975, PP. 168-172.

15. ஏ.ஏகாம்பரநாதன், **தொண்டைநாட்டுச் சமணக்கோயில்கள்,** ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1991 பக். 91, 92, 120, 121, 122, 146-148.

16. J.C. Harle, **The Art and Architecture of Indian Sub continent,** Penguin Books, 1990, P. 337.

17. கு. சேதுராமன், **தமிழ்நாட்டுச் சமுதாயப் பண்பாட்டு கலை வரலாறு** பக். 325.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகப் புகழ்பெற்ற ஹம்பி நகரின் அழிபாடுகளும், நினைவுச் சின்னங்களும்

திருமதி. சாந்தி. கேசவன்

## அறிமுகம்

கர்நாடக மாநிலத்தில் விஜயநகரப் பேரரசர் காலத்தில் கோநகராகத் திகழ்ந்த பெருமை பெற்ற நகரம் ஹம்பி. யுனெஸ்கோவினால் உலகப்புகழ்பெற்ற பாரம்பரிய நினைவுச்சின்னங்களைக் கொண்ட நகரமாக 1989இல் தேர்ந்தெடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. விட்டலர் கோயில், விரூபாக்ஷர் கோயில், லட்சுமி நரசிம்மர் சிற்பம், கற்றேர், ஹாசார இராமர் கோயில், அரண்மனைகள், அரசிகுளிக்குமிடம், தாமரைமஹால், அருங்காட்சியகம் போன்ற இன்னோரன்ன நினைவுச் சின்னங்களைக் கொண்டுள்ள நகரமே ஹம்பி. இன்று இந்திய அரசாங்கம் ஹம்பி நகரை நினைவு கூருமுகமாக "ஹம்பி நகர திருவிழா" (Hampi Festival) என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 3ஆம் திகதியை பிரகடனப்படுத்தி, கொண்டாடிவருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த வகையில் உலகப் புகழ் பெற்ற ஹம்பி நகரின் அழிபாடுகளையும், நினைவுச் சின்னங்களையும் வெளிக்கொணர்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஹம்பி – பதவிளக்கம்.

இங்கு பாயும் பம்பா நதி காரணமாக அது **'பம்பா க்ஷேத்திரம்'** என்றும் **'பம்பா'** என்றும் அழைக்கப்பட்டு **'ஹம்பே'** எனத் திரிந்து இன்று ஹம்பி என அழைக்கப்படுகின்றது.

இராமாயண காலத்தில் இது 'கிஷ்கிந்தா' வனமாக அறியப்பட்ட இடமாகும். வாலியும் சுக்கிரீவனும் ஆட்சி செய்த இடமே இந்த கிஷ்கிந்தா. இவ் வனத்தில்தான் ராமர், சீதையைத் தேடி வந்தபோது சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டார். இவ்வாறு அறியப்பட்ட நகரமே இன்று ஹம்பி நகரமாகும். விஜயநகர பேரரசின் 18ஆவது மன்னராக முடிசூடப்பட்ட கிருஷ்ண தேவராயர், போர்த்துக்கீசர், அரேபியர்கள், பாரசீகர்கள், சீனநாட்டினர் ஆகிய அயல் நாட்டவரை மகிழ்ச்சியுடன் வரவேற்று தமது நாட்டில் வாணிபத்தைப் பெருக்கினார்.

இவர் தமது அரசின் நிர்வாகத்தை மிகச் சிறந்த அறநெறிகளுடன் நடத்தினார். கிருஷ்ணதேவராயர் தெலுங்கு, வடமொழிகளில் மிகுந்த புலமை உள்ளவர். இவர் தெலுங்கில் படைத்துள்ள "ஆமுக்தமால்பதா" என்ற நூலில் திருவில்லிபுத்தூர் நங்கை ஆண்டாளின் பெருமைகளை புகழ்ந்து எழுதியுள்ளார். அவரது அரசவையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய பல மொழிகளிலும் சிறந்த அறிஞர்களை அமர்த்தி ஆதரவளித்தார்.

ஓவியக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, போன்ற பல்வேறு கலைகளையும் ஊக்கமளித்து வளர்த்த இவர் ஒரு வைணவர் என்ற போதிலும் சைவம், சமணம் ஆகிய சமயங்களையும் வேறுபாடு கருதாது ஆதரித்தவர். கிருஷ்ணதேவராயர் காலமே விஜயநகர காலத்தின் பொற்காலம் என்பதை வரலாறுகள் பறைசாற்றுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமர், சாளுவர்கள், துளுவர்கள் முதலிய வம்ச மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட நகரமே விஜயநகரம். விஜயநகரை வெளிநாட்டின் "பிஸ்நகா" என்றனர். இதற்கு விருபாக்ஷபுரம் "ஹொஸபட்டணம்", "வித்தியாநகரம்" என்று பலபெயர்கள் வழங்கப்பட்டு வந்தது.

சங்கமா வம்சத்தைச் சேர்ந்த 2ஆம் ஹரிஹரன் பம்பாநதி சலசலக்கும் அடர்வனத்தில் நவீன நகரை அமைத்து ஆட்சி செய்ய திட்டம் தீட்டினான்.

2ஆம் ஹரிஹரன் தீட்டிய திட்டங்களை "விஜயநகரம்" என்று பெயரிட்டு செயலாக்கிய பெருமை புக்காவைச் சாரும். இவனது காலத்தில் கலைகள் அபரிமிதமாக எழுந்தன.

கி. பி. 1509இல் விஜயநகர மன்னனாக, துளுவமன்னனான கிருஷ்ணதேவராயன் பதவியேற்றான். இவன் காலமே விஜயநகர காலத்தின் பொற்காலமாகத் திகழ்ந்தது என்பது வரலாற்றாய்வாளர்களது கருத்தாகும். கிருஷ்ணதேவராயன் 1529இல் தனது மகன் அச்சுதராயனுக்கு முடிசூடினான். கிருஷ்ணதேவராயன் தனது மகளை இராமராயனுக்கு கட்டிக் கொடுத்தான். இவன் அச்சுதராயனுக்கு பல சூழ்ச்சிகளை செய்து ஆட்சியை கைப்பற்றினான். குறுநில பிரதேசங்களை ஆட்சி செய்து கொண்ட சுல்தான்களை இராமராயன் பகைத்துக் கொண்டதன் காரணமாக அவர்கள் ஒன்று சேர்ந்து விஜயநகரை படையெடுத்து அழித்தார்கள்.

ஹுஸைன் நிஜாம் ஷா என்பவனே இராமராயனை போரில் வென்று பல விதத்திலும் சிறப்பான நிலையில் இருந்த விஜயநகரை அழித்தவன். தனது படைவீரரார்கள் உதவியுடன் தீவைப்பு, கற்பழிப்பு, சூறையாடுதல் போன்ற வன்முறைகளுடன் செயல்பட்டான் ஹுஸைன் நிஜாம் ஷா. விஜயநகர மன்னர்கள் சாய்ந்தனர். மக்கள் துன்பத்தில் ஆழ்ந்தனர். கோயில் கோபுரங்கள், சிற்பங்கள் சிதைக்கப்பட்டன. விலைமதிப்புள்ள பொருள்கள் சூறையாடப்பட்டன. விஜயநகரம் அழிந்த நகரமாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறநாட்டார் குறிப்புகள் மூலம் விஜயநகரத்தின் சிறப்புக்கள்

விஜயநகரகாலத்தில், ஐரோப்பாவில் ஸ்பெயின் முதலிய நாடுகளில் நடைபெற்று வந்த மதப்பூசல்களையும், கொடுமைகளையும் கண்டிருந்த ஐரோப்பிய பிரயாணிகள் விஜயநகர சமுதாயத்தில் நிலவிய அமைதியை மிகவும் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்காலத்தில் இத்தாலிய நாட்டு தேசசஞ்சாரியான "நிகோலோ கான்டி' என்பவர் விஜயநகரத்துக்கு 1420இல் விஜயம் செய்தார். அந்நகரம் 60 மைல் சுற்றளவு என்றும் அந்நாட்டு மன்னரே இந்திய அரசர்களுள் மிக வல்லவர் என்றும் அரசரின் அந்தபுரத்தில் 12000 மகளிர் இருந்தனர் என்றும் கூறுகின்றார்.

"விஜயநகர மன்னனாகிய கிருஷ்ணதேவராயரது ஆட்சியின் போது தென்இந்தியாவிற்கு வருகை தந்து போர்த்துக்கேய யாத்திரிகர்கள் மூலம் விஜயநகரத்தின் கட்டட, சிற்பக்கலைச் சிறப்புகளை அறியமுடிகின்றது. விஜயநகரர்களது தலைநகராகிய ஹம்பியில் இந்துசமயம் தொடர்பான மிகச் சிறந்த கட்டங்களும் சிற்பங்களும் இருந்தன. முஸ்லீம்களது படையெடுப்பால் அவையனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டன" என பேயஸ் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலி நாட்டு காஸியோ பெடெரிசி "பொறாமைப்படத்தக்க அளவில் மக்கள் வாழ்ந்து வந்த விஜயநகரத்தில் இன்று வெறும் இடிபாடுகளையும் அவற்றில் ஆங்காங்கே குடியேறி இருந்த காட்டு விலங்குகளையும் கண்டேன்" என்கிறார்.

"விஜயநகரத்தின் கடைத் தெருவின் எஞ்சிய பகுதியின் தற்போதைய பெயர் ஹம்பி. அங்கு நுழைந்ததும் செவ்வாய்க் கோளை கண்டறிய விண்வெளியில் பயணிப்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. வெகுநாட்களுக்கு முன் மக்கள் வாழ்ந்த, வளர்ச்சி கண்ட, நம்பமுடியாத அளவு அதிசயங்களைக் கண்ட ஒரு இடம் சிதிலமடைந்துள்ளதைக் கண்டேன்" என்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹம்பி நகரின் அழிபாடுகளும் நினைவுச் சின்னங்களும்

### 1. லட்சுமி நரசிம்மர் (Lakshmi narasimha)

தென் ஹம்பியில் பெரிய தனிக் கருங்கல்லினாலான (Monolithic narasimha) லட்சுமி நரசிம்மர் வடிவம் (Lakshmi narasimha) அற்புதமான, பிரமாண்டமான சிறப்பினை உடையது. இச்சிற்பம் யோகநிலையில் உள்ளது. கிருஷ்ணர் கோயிலுக்கும் வீரபத்திர சுவாமி கோயிலுக்கும் இடையில் இச்சிற்பம் அமைந்திருக்கிறது. இச்சிற்பம் விஷ்ணுவின் அவதாரத்தைக் காட்டி நிற்கின்றது (Avatar of Vishnu). இச்சிற்பமானது 1528இல் கிருஷ்ணதேவராயர் அல்லது அவர் காலத்து செல்வ வணிகர் ஒருவரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இச்சிற்பம் இருபத்தொரு அடி உயரமுடையது. அமர்ந்தநிலையில் உள்ள இச்சிற்பத்தின் இடது மடியின் மேல் லட்சுமியின் உருவம் இருந்திருக்கின்றது. நரசிம்மர் ஏழு தலைகளுடன் படமெடுத்தாடும் பாம்புக் குடையின் கீழ் அமர்ந்துள்ளார். படமெடுத்தாடும் நாகத்தின் மேல் மகர தோரணத்துடன் கூடிய தூண்களுடன் சிங்கத்தின் முகம் செதுக்கப் பட்டுள்ளது. இச்சிற்பத்தில் காணப்படும் சிற்ப வேலைபாடுகள் அழகானவை. தலை, மகுடம் (Crown) நேர்த்தியாக உளியால் செதுக்கப்பட்டுள்ளன. பெரிய கண்களுடன் விளங்கும் இச்சிற்பம் உக்கிர வடிவத்துடன் காணப்படுகின்றது என தவறுதலாக இது பற்றி கூறுகின்றனர். ஆனால் இச்சிற்பமானது அமைதியான சலனமற்ற நரசிம்மருக்குரிய பிரதிமாலட்சணத்துடன் கூடிய நிலையிலேயே காணப்படுகின்றது. 1565இல் இச்சிற்பத்தின் பலபாகங்கள் பாமினியர்களால் லட்சுமி, சுவாமியிடமிருந்து பிரித்து தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். இவ் லட்சுமி சிற்பம் இன்று கமலாபுரம் அருங்காட்சியகத்தில் (Museum at Kamalapuram) வைக்கப்பட்டுள்ளது (படம் – 1).

அரவத்தின் மேல் இருந்த அச்சத்தின் காரணமாக விடப்பட்டதோ இந்த ஆதிசேஷனின் இருக்கை பகைவரால் பாழ்படுத்தப்படாமல் விட்டதோ என்னவோ? எனினும் பாமினி சுல்தானியர்கள் சிற்பத்தின் கரங்களை உடைத்துள்ளனர். கால்களும் வெட்டப்பட்டு முடமாக்கப்பட்டுள்ளன. 500


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளாக வெயிலில் வாடியும், காய்ந்தும், மழையில் நனைந்தும் கூட இன்றும் இச்சிற்பம் அதன் மெருகு குன்றாமல் காணப்படுகின்றது.

அண்மையிலேயே இச்சிற்பம் பாதுகாக்கப்பட்டும் உடைந்த பகுதிகள் சீரமைக்கப்பட்டும் வருகின்றன. இச்சிற்பமானது இன்று சிதைந்த நிலையில் காணப்பட்டாலும் ஹம்பியின் புகழ்பெற்ற அடையாளச் சின்னமாக விளங்குவதுடன் இச்சிற்பம் ஆராய்ச்சியாளர்களை கவர்ந்த ஒன்றாக மாறிவிட்டது. மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கு அல்லது பார்வையாளர்களும் இச்சிற்பமானது பிரமிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக விளங்குகின்றது எனலாம்.

## 2. சசிவேகலு கணேசர்– கடலேகலு கணேசர் (Sasivekalu and Kadalekalu Ganesha)

**சசிவேகலு கணேசர்:** ஹம்பியில் ஹேமகுட்டா எனும் மலைப்பிரதேசத்தில் (Hemakuta hill) சசிவேகலு கணேசரும், கடலேகலு கணேசரும் இரண்டு பெரிய தனிக் கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் அழகிய சிற்பங்களாகும். சசிவேலு கணேசர் ஆலயம் நான்கு புறமும் சதுரத் தூண்களைக் கொண்ட பெரிய திறந்த மண்டபத்தை கொண்டுள்ளது. இதில் சசிவேகலுகணேசர் வீற்றிருக்கின்றார். இவ் ஆலயம் 14ஆம் நூற்றாண்டு அல்லது 15ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களது கருத்தாகும்.

சசிவேகலு என்பதன் பொருள் – கடுகு (Mustard). ஆனால் கடுகு விநாயகர் 9 அடி உயரமுள்ளவர். கடுகு விநாயகரின் கீழ் இடது கரமும், தும்பிக்கையும் உடைக்கப்பட்டுள்ளன. இவரது வலது கரம் அங்குசத்தை ஏந்தியுள்ளது மேல் இடதுகரம் பாசத்தை ஏந்தியுள்ளது. உடைந்த தந்தத்தையும் கொண்டுள்ளார். அர்த்தாசனத்தில் வீற்றிருக்கும் இக்கணேசர் சிற்பத்தின் தொப்பை தரையைத் தொடுகின்றது.

## 3. கடலேகலு விநாயகர்

கடலேகலு விநாயகர் என்பதன் பொருள் வேர்க்கடலை (Ground nut) கடலேகலு விநாயகரும் சசிவேகலு விநாயகர் போன்றே அமர்ந்த நிலையில் தனிக்கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ள பெரிய சிற்பமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. விருபாக்ஷா கோயில் (Virupaksha Temple)

ஹம்பியில் உள்ள மிகவும் புகழ் பெற்ற புனிதமான சிவன்கோயில் விருபாக்ஷா கோயிலாகும் (படம் –2). இக்கோயில் ஹம்பியில் உள்ள அமைதியான வணக்கஸ்தலமாகும். இது தெற்கே துங்கபத்ரா நதிகளையும், வடக்கே ஹேமகுட்டா மலைகளையும் கொண்ட கண்ணைக்கவரும் சூழலில் அமைந்துள்ளது. சிறிய கோயிலாக இருந்த இக்கோயில் விஜயநகர காலத்தில் விரிவுபடுத்தப்பட்டது. இக்கோயிலில் வீற்றிருக்கும் சிவன், பம்பாபதி அல்லது விருபாக்ஷர் என அழைக்கப்படுகிறார். பிரமாவின் மகளான பம்பா தேவியை திருமணம் செய்ததால் சிவன் பம்பாபதியானார் என்பது ஐதீகம் இவருடைய மனைவி பம்பா துங்கபத்ரா நதியுடன் அடிக்கடி இணைக்கப்படுகின்றாள்.

விருபாக்ஷா ஆலயமானது பல நூற்றாண்டுகளாக ஹம்பியின் புனித தலமாகக் கருதப்படுகின்றது. சிறிய அளவிலிருந்த பிற்காலச் சாளுக்கிய மாதிரிக் கோயிலை விரிவுபடுத்தியதாக இக்கோயில் விளங்குகின்றது. பெரிய நீள்சதுரமாகக் காணப்படும் முற்றத்திற்குள்ளே இவ்வாலயத்தின் பல பகுதிகள் காணப்படுகின்றன. மிகப் பெரிய கோயிலான இது இன்றும் வழிபாட்டு நிலையிலுள்ளது என்பது பெருமைக்குரியது விடயமே. பெறப்பட்ட தகவலின் படி இவ்வாலயம் சாளுக்கியரதும், ஹொய்சாலர் எனும் வம்சர்களதும் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டிருந்தாலும் அதிகமான கட்டடங்கள் விஜயநகர காலத்திற்குரியனவாக கொள்வதற்குரிய சான்றுகள் காணப்படுகின்றன. அத்துடன் 2ஆம் தேவராயனால் இந்த வீதியில் தேர்த்திருவிழா முதன் முதலாக தொடங்கி வைக்கப்பட்டது. தேர்த்திருவிழாவில் விருபாக்ஷரையும் கணபதியையும் சுமந்து தேர்கள் ஓடின. நிகோலே கான்டி எனும் ஐரோப்பிய சுற்றுலாப்பயணி இத்தேர்த்திருவிழாவைப் பற்றி, அதன் சிறப்புப் பற்றி விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலில் மிகவும் உயரமானதும் உள்ளீடற்றதுமான முதன்மைக் கிழக்கு கோபுர வாயில் 50அடி உயரமுடையது. செங்கல்லாற் கட்டப்பட்டுள்ளது. இது விஜயநகர கோபுரங்களில் மிகவும் பெரியது. இக்கோயிலில் உள்ள சிறப்புத்தூண் வரிசைகளும், மேல் விதானத்தில் உள்ள ஓவியங்களும் மிகவும் பிரசித்தி பெற்றவை. இக்கோயிலில் உள்ள மூலமூர்த்தி லிங்க வடிவில் காட்சி தருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முக்கிய கோபுரம் 52 மீற்றர் உயரமுடையது 9 பெரிய தளங்களைக் கொண்டது. விருபாக்ஷா கோயில், அங்காடி வீதியை நோக்கியவாறு காணப்படுகிறது. முதல் இரு தலங்களும் அலங்கார வேலைப் பாடுகளைக் கொண்டது. 2ஆவது கோபுரம் 3 தளங்களைக் கொண்டது. இது கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது.

## ரங்க மண்டபம் (Rangamantapa)

ரங்க மண்டபம் விஜயநகரத்தில் மிகவும் சிறந்த நன்கு அலங்கரிக்கப்பட்ட கலைப்படைப்பை உணர்த்தி நிற்கின்றது. கி. பி. 1510இல் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இது ஐந்து பக்கப் பகுதிகளைக் கொண்ட மண்டபங்களுடன் வெவ்வேறான வகைகளையுடைய கலவையான தூண்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. 16 தூண்களை உடைய செவ்வக வடிவத்தின் மத்தியில் அளவு கடந்த திறனால் 'யாளி' (Yalis) என்ற தொடர் சிற்பங்களின் துதிக்கைகள் தொங்கவிடப்பட்ட நிலையிலும் மகரங்கள் (Magaras) அவற்றின் முதுகில் பாத அடியிலும், சவாரி செய்பவர்கள் அவற்றின் முதுகில் இருப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தூண்களின் அடிப்பகுதியில் சுண்ணச்சாந்திலான முன்னைய கால வடிவங்களின் வேலைப்பாடுகளையும் ஓவியங்களையும் இன்று காணலாம். இவற்றை இராமாயண, மகாபாரத கதைகள் அணிசெய்கின்றன. பிரபலமான எண்ணற்ற விஜயநகரச் சித்திரங்கள் இங்கு வரிசையாக உள்ளன. இங்கு காணப்படும் தெளிவாக வரையப்பட்டுள்ள வடிவங்களில் வித்தி யாரண்ணியர் பவனி செய்தல் அர்ச்சுனன் மச்ச யந்திரைச் செலுத்தி வெற்றி பெற்று திரௌபதையை மணத்தல், தசாவதராக் காட்சிகள், திசைப்பாலகர்கள், திரிபுராரி, கல்யாணசுந்தரனார் ஆகிய வடிவங்கள் சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

## அர்த்தமண்டபம்

ரங்க மண்டபத்தின் மேற்கு பக்கத்திலிருக்கும் அர்த்த மண்டப நுழைவாயிலின் வலது, இடது பக்கங்களில் சிறப்புடைய அழகான, பிரமாண்டமான கல்லினால் செதுக்கப்பட்ட நான்கு கைகளையுடைய துவார பாலகர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இது 2.7 அடி உயரத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. மத்திய உட்கூரையின் மையத்தில் தாமரைப் பூ இதழ் விரிந்து காணப்படுவதை நாம் அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றுக்கால் மண்டபம்

இக்கோயிலில் நூற்றுக்கால் கொண்ட கல்யாண மண்டபம் ஒன்று உண்டு. கல்யாண மண்டபம் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. கருவறையின் வாயிலின் இரு மருங்கிலும் துவாரபாலகர்கள் படைக்கலன்களுடன் 8' அடி உயரத்துடன் காணப்படுகின்றனர். இங்கு கல்யாணோற்சவம் (Kalyanotsava) நடைபெறும். விருபாக்ஷருக்கும் பம்பாதேவிக்கும் நடைபெறும் இத் திருமண விழா(Marrage Festival) சிறப்பானதாகும். தேர்த்திருவிழா மாசிமாதத்திலும், திருமணவிழா மார்கழியிலும் நடைபெறும் இதனை பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு வருடமும் பார்த்து மகிழ்வர். இங்கு மூன்று தலையுடைய நந்தியின் சிற்பமும் பார்வையாளர்களைக் கவர்ந்த ஒன்றாகும்.

## புகழ் பெற்ற ஓவியம்

விருபாக்ஷா கோயிலின் பெரிய முன்மண்டபக் கூரையில் சிறந்த ஓவிய வரிசை உள்ளது. ஹரிஹரபுக்கரால் நிறுவப்பட்ட விஜயநகரப் பேரரசுக்கு காரணமாயிருந்த, சங்கராச்சாரியாரின் மரபில் வந்தவரும் சிருங்கேரி மடத்தின் தலைமைப் பீடாதிபதியுமான வித்யாரண்ய சுவாமிகளைக் குறிக்கும் இங்குள்ள ஓவியம் ஒரு தலை சிறந்த படைப்பு. அரசமரியாதைகளுடன் பரிவாரங்கள் சூழ ஊர்வலமாக பல்லக்கு ஒன்றில் விருபாக்ஷா கோயிலுக்கு அழைத்துச் செல்வதாக இவ் ஓவியம் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியம் மிகவும் ஆழ்ந்து மனதில் பதியத்தக்க காட்சிகளுள் ஒன்று.

## 5. ஹசார இராமர் கோயில் (Hazara Rahma Temple)

ஹசார இராமர் கோயில் அரச குடும்பத்திற்கே உரிய பிரத்தியேக ஆலயமாக இருந்தது என நம்பப்படுகிறது. இது அடக்கமான ஆனால் பூரணமான கலைச்சிறப்புடைய கோயிலாகும். இக்கோயில் 2ஆம் விருபாக்ஷனால் கட்டப்பட்டிருக்கக்கூடும். எனினும் முன்னர் கட்டப்பட்ட இக் கோயிலை கிருஷ்ணதேவராயனே நிறைவு செய்தான் என்பது வரலாற்றுண்மை. பிரதான விஷ்ணு கோயிலுடன் அம்மனுக்கு ஒரு கோயிலும், ஒரு கல்யாண மண்டபமும், பல துணைக் கோயில்களும் உள்ளன. இவை இருபத்திநான்கு அடி உயரமான சுவரினாற் சூழப்பட்ட ஒரு மட்டத்திற் கட்டப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்த கோபுரங்கள் இக்கோயில் ஆரம்பகாலத்தைச் சேர்ந்தது என்பதைப் பறைசாற்றுகின்றன. விமானத்தின் கீழ்பகுதி கல்லாலும் மேற்பகுதி செங்கற்காளாலும் கட்டப்பட்டுள்ளன. இது இப்போது சிதைந்திருந்த போதிலும் பார்ப்போரின் மனதைக் கவரும் வகையில் அமைந்திருக்கிறது. இதன் உயரம் 50 அடி மட்டுமே. மைய விமானத்தின் முன்பக்கத்தில் உள்ள மகாமண்டபம் சாளுக்கியரின் நவரங்க மாதிரியில் உள்ளது. இதன் நான்கு மையத்தூண்களும் நன்கு பளபளப்பாக உள்ள கருங்கற்களால் ஆனவை.

கோவிலின் உட்சுவர்களில் அழியாத இராமாயணக்காட்சிகள், கதைகள் புடைப்புச் சிற்பங்களாக உண்மையான படக்கூடமாகக் காட்சிதருகின்றன (படம் –3 ). இது இக்கோயிலினை தரிசிக்கும் மக்களை ஈர்க்கும் முக்கிய விடயம் எனலாம். இங்குகாணப்படும் இராமாயண புடைப்புச் சிற்பங்களில் புத்திரகாமேஷ்டியாகம் (Putra Kamashthiyaha), சீதாசுயம்வரம் (Sitas Suyamwara)– இராமர் சிவதனுசு என்ற வில்லினை உடைக்கும் காட்சி என்பன குறிப்பிடத்தக்கன. இராம அவதாரத்தைக் குறிப்பிடும் சிறிய புடைப்புச்சிற்பங்கள் மூலஸ்தானத்திற் காணப்படுகின்றன.

## அக்ரமண்டப சிற்பங்கள்

இக்கோயிலின் மேற்கு, வடக்கு, கிழக்குச் சுவர்கள் உட்பக்கத்தில் குதிரைகள், யானைகள், நடனமாதர் உருவங்கள், ராமாயணக்கதைகள் – லீலைகள் ஆகியவற்றை எடுத்துக்கூறும் கிளைக்கதைகள், நாட்டுப்புறத் திருவிழாக்கள் ஆகியவற்றை விளக்கும் ஒப்பனை பட்டைகளாக உள்ளன.

## அம்மன்சந்நிதானத்துச் சிற்பங்கள்

இக்கோயிற்சிற்பங்கள் கிருஷ்ணதேவராயன் காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிரகாரங்களில் ஏராளமான சிற்பவரிசைகள் அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் ஆடல், பாடல், திருவிழாக்கள் ஆகியவற்றை விளக்குவனவாக உள்ளன. இக்கோயிலின் நான்கு மையத்தூண்கள் சதுரமாக அமைந்து பளபளப்பான கருங்கல்லாலான சிற்பங்களைக் கொண்டுள்ளன. எஞ்சிய தூண்கள் சாம்பல் நிறக் கரும்பாறைக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. விட்டல நாதர் கோயில் (Vittala Temple)

அதி சிறப்பு வாய்ந்த ஹம்பியின் நினைவுச் சின்னம் விட்டலர் கோயில். துங்கபத்ரா நதியின் தென்கரையில் அமைந்து விளங்கும் இக்கோயில் கி. பி. 1406இல் முதலாம் தேவராயனால் கட்டப்பட்டது. பின் 1509இல் அரியனை ஏறிய கிருஷ்ண தேவராயன் காலத்திலும் அவருக்குப்பின் அரசாண்ட அச்சுதராயன் காலத்திலும் இது அழகு வேலைப்பாடுகளைக் கொண்டதாகவும், பிரம்மாண்ட கட்டிடங்களைக் கொண்டதாகவும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. கோயிலைச் சுற்றி 500அடி நீளமும் 310அடி அகலமுடைய நீள்சதுர முற்றம் உண்டு.

மிகவும் அபரிமிதமாக அலங்கரிக்கப்பட்ட சிற்ப நுட்பங்களுடைய நினைவுச் சின்னம் விட்டலநாதர் கோயில். இக் கோயிலை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை எனலாம். விஜயநகர மன்னர் காலத்தில் அறிவியல் (விஞ்ஞானம்) வளர்ச்சிக்கு உதாரணமாகத் திகழும் உயிரோட்டமுள்ள ஆலயமாக இது உள்ளது. இந்த ஆலயம் சுற்றுச் சுவருடனான பதுங்கிப் பாயும் நிலையில் உள்ள யாளி வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. பல மண்டபங்களை உடைய பார்வையாளர் தொகுதி உண்டு.

இக்கோவில் விட்டலர் என அழைக்கப்படும் விஷ்ணுவின் நாமத்தில் அழைக்கப்படுகின்றது விஷ்ணுவின் இந்த அம்சம் ஆநிரைக் கூட்டத்தில் வணங்கப்படுகின்ற ஒரு கலாசாரத்தை சேர்ந்த ஒன்றாக உள்ளது. தொடர்ந்து வந்த அரசர்கள் இந்த ஆலயத்தை மெருகூட்டியுள்ளார்கள். இங்கு பல அழிபாடுகளைக் காணலாம்.

இக்கோயில் இந்தியாவின் கலைப்பொக்கிஷம் என்று கூறலாம். கற்களில் சரிகை சித்திர வேலைபாடுகளை வெளிக்காட்டும் உன்னத அரிய கோயிலாகும். கோயிலின் பெரும் பகுதி விசாலமான சுவரற்ற கட்டடங்களாகக் காணப்படுகிறன. ஆங்காங்கே தூண்களைக் காணலாம். ஒவ்வொரு தூணிலும் பிரதான கல்லொன்று காணப்படும். அதில் சிக்கலான சித்திர வேலைகளைக் காணலாம். அமெரிக்காவில் கலிபோர்னியாவைச் சேர்ந்த ஜான் ஹாக் என்பவர் **"பட்டு குஞ்சல வேலைசெய்யும் நான் என்னுடைய வேலையுடன் இந்த நளினமான கலையை ஒப்பிட்டுப் பார்க்கையில் என்வேலை செப்பமற்றதாகத் தோன்றியது"** என்றார். அவரது கூற்றின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஹம்பியில் உள்ள கலையின் உன்னதத்தன்மையை எம்மால் உணரமுடிகின்றது.

## கருவறை

கருவறையின் உள்ளே விக்கிரகம் எதுவும் இல்லை. ஒடுக்கமான ஒளியேற்றப்படாத நடைபாதை உள்ளே உள்ள கருவறையை சூழ உள்ளது. கருவறையின் வெளிச்சுவர் தாமரைப்பூ, கும்பபஞ்சரம் போன்றவற்றைக் கொண்டதாக சிறப்பாக அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## பிரதான மண்டபம்

விட்டலர் கோயிலுக்கு முன்னே உள்ளது பிரதான மண்டபம் இம்மண்டபம் பகுதிகளாகச் சேதப்பட்டிருந்தாலும் இன்றும் அது மக்களை கவர்ந்திழுக்கக் கூடிய ஆற்றல் மிக்கதாக உள்ளது. பல படிகளில் யானையின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இப்படிகள் மகாமண்டபம் என்று அழைக்கப்படுகின்ற திறந்த மண்டபத்திற்கு இட்டுச் செல்கின்றது. கிழக்கு மேற்கு மண்டபம் உள்ள பிரகாரங்களில் மிகவும் இராட்சத சிங்கமுக யாளியின் சண்டை– யானைகளுடன் போரிடும் இராட்சத உருவ சிங்கயாளிகளைக் காணலாம்.

மேடையில் அலங்கரிக்கப்பட்ட சிற்பங்களுடைய மகாமண்டபம் அமைந்துள்ளது. மகாமண்டபம் நான்கு(4) திறந்த மண்டபங்களை உள்ளடக்கியுள்ளது. தெற்கு, வடக்கு, கிழக்குப் புறங்களிலுள்ள மண்டபங்கள் இன்றும் கட்டுக்கோப்பாக உள்ளன. மத்தியில் உள்ள மேற்கு மண்டபம் தகர்ந்துள்ள தோற்றப்பாட்டில் உள்ளது. மண்டபத்தின் மத்தியிலுள்ள பிரதான பகுதி கவர்ந்திழுக்கும் தாமரை மலர்களாற் செதுக்கப்பட்டுள்ளது. மேற்பகுதி இரண்டு பக்கமும் மூடப்பட்ட பிரகாரங்களைக் கொண்டுள்ளது.

## வைபவரீதியான கல்யாணமண்டபம்

தென்கிழக்கில் உள்ள மண்டபத் தூண்களால் சூழப்பட்ட சுற்றுச் சுவரில் உள்ள சிற்பம் பார்வையாளனை பிரமிக்கச் செய்கின்றது. யானையின் தலையும் எருதின் தலையும் இணைந்துள்ள வடிவமே அது, இதில் இடப்புறம் எருதும், வலப்புறம் யானையும் காணப்படுகின்றன. தூண்களின் கீழ்ப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை வரிசை உள்ளது. அதில் பயிற்றுவிப்பாளர்கள், வர்த்தகர்கள் காணப்படுகின்றார்கள்.

## தென்பகுதி மண்டபம்

புராணக்கதையில் வரும் யாளிகள் (படம் 4) அதிகம் நிரம்பிய தூண்களில் உள்ள ஒவ்வொரு முக்கிய பகுதியும் தாமரை மொட்டுக்களில் முடிவடைகின்ற அலங்காரங்களை உடையதாக உள்ளது.

## வடக்குப்பகுதி மண்டபம்

பல தூண்களால் சூழ்ந்த இம்மண்டபத் தூண்களில் நரசிம்மர் – விஷ்ணு அவதாரம் சிற்பத்தைக் கரும்பொருளாகக் கொண்டது மிகவும் குறிப்பிடத்தக்கது. இரண்ய கசிபுபை தனது மடியில் வைத்து வதம் செய்யும் காட்சியாக உள்ளது. பிரகலாதன் இதன் அடியில் அமர்ந்திருந்து வணங்கிக் கொண்டிருக்கும் காட்சி மனதைக் கவருகின்றது.

## இசைத்தூண்கள்

மகாமண்டபத்தின் பிரதானமான கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய சந்தேகத்திற்கிடமில்லாத விடயம் என்னவென்றால், ஒற்றைக்கல்லினாலான சிறப்பாக செதுக்கப்பட்டுள்ள இராட்சதத் தூண்கள். இதன் வெளிப்புறத் தூண்கள் பிரசித்தி பெற்ற இசைத்தூண்களாகச் சொல்லப்படுகின்றன. இங்கு ஐம்பத்தி ஆறு சங்கீதத்தூண்கள் உண்டு. இவ்விசைத்தூண்களிலும் மண்டபத்திலுள்ள ஏனைய தூண்களிலும் இசை வாணர்கள், நடனக்கலைஞர்கள், தாளவாத்தியகாரர்களது சிற்பங்களையும் காணலாம். மத்தியில் நடைபெறும் நடன நிகழ்ச்சிகள் எதிரொலிக்கும் வண்ணம் இவ் இசைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1.5 கிலோமீற்றர் தூரம் இவ்விசை ஒலியைக் கேட்கலாம். மெல்லிய இந்த இசைத்தூண்கள் தட்டும்போது இசை நாதத்தை எழுப்புகின்றன. அதாவது கல்லிலே தட்டும் போது தூண்கள் **ஸரிகமபதநி** பாடும். இசைதூண்கள் ஆரோகணம் அவரோகணத்துடன் கூடியதாக காணப்படுகின்றன. வித்தியாசமான இசைநாதங்களை வெளிக்கொணரும் கல்லினால் ஆன இசைக்கருவிகளைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. (படம்–5) அதாவது மிருதங்கம் (Mridangam), டோலக் (Dolak), வீணை (Veena), கடம் (Ghatam), தபேலா (Tavla)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இசைக்கருவிகளை கற்களில் அமைக்க எப்படி முடிந்தது என்பதையிட்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

விஜயநகர காலம் விஞ்ஞானம் அபிவிருத்தியடைந்திருந்த காலம் என்பதற்கு விட்டலர் கோயில் ஒரு வாழும் எடுத்துக்காட்டாகும். பார்வையாளர்கள் அல்லது சுற்றுலாப் பயணிகளின் ஆர்வம் இந்த இசைத் தூண்களைப் பாதிப்படையச் செய்ததால் இன்று இசைத்தூண்களை ஒலிக்கச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. தலைநகரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஊடுருவிய பாமினி சுல்தான்களால் ஏற்பட்ட நெருப்பினாலும் இம் மண்டபத்தில் உள்ள இசைத்தூண்கள் தம் சோபயை இழந்தன எனலாம். எனினும் மக்கள் மனதில் துயர் நீங்கும் வண்ணம் இவ்இசைத்தூண்கள் இன்னும் இசைத்துக்கொண்டு தான் இருக்கின்றன.

## கற்றேர் (Stone Chariot)

ஹம்பியில் மிகவும் குறிப்பிடத்தக்க புகழ்மிக்க சமயசின்னம் விட்டலர் கோயிலின் கல்யாண மண்டபத்திற்கருகே மகாமண்டபத்தை நோக்கியவாறு காணப்படும் கடவுளின் தேர் அல்லது இரதம். இது கருடனின் சந்நிதியாக (Garuda Mandapa) விளங்கியிருக்கிறது. கருடவாகனம் கோயிலில் எழுந்தருளியுள்ள விஷ்ணுவின் வாகனமாகக் கொள்ளப்படுகின்றது. கல்லிலான இத்தேர் பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் நிலையில் இருக்கின்றது. இக்கற்றேர் கிட்டத்தட்ட **15** அடி உயரமுடையது (படம் **– 6**).

இக்கற்றேர், ஒற்றைக் கற்றேர் போலத் தெரியும். ஆனால் இது பெரிய கருங்கல் துண்டுகளைக் கொண்டு தேராக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள இணைப்புகள் நுட்பமாக மறைக்கப்பட்டு அலங்காரங்களைக் கொண்டுள்ளன. இத்தேர் நீள் சதுரவடிவ உயர்ந்த மேட்டுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மேட்டுப்பகுதி புராணக்கதைக் காட்சிகளால் செதுக்கப்பட்டுள்ளது. இதில் பூட்டப்பட்ட சக்கரங்களே மிகவும் உயரமான மாபெரும் அமைப்பாகும். இதனை விரல்களால் தொட்டவுடன் நகர்ந்து உருண்டோடிவிடுமோ என எண்ணத்தோன்றும் படி அமைக்கப்பட்டுள்ளது. நான்கு சில்லுகளிலும் காணப்படும் மலர்களாலான அலங்கார சரிகை வேலைப்பாடுகள், செடி கொடிகள் அற்புதமானவை. சக்கரத்தின் மத்தியில் புடைத்துக்கொண்டிருக்கும் பகுதி தாமரை மலரைப்போல் உள்ளது. இச்சக்கரங்களை தாங்கியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்களில் வேட்டையாடும் காட்சிகள் உள்ளன. ஓவிய எச்சங்களும் இத்தேரின் இடுக்குகளில் உண்டு. இத்தேரின் மையப்பகுதி தங்கநிற கற்களால் ஆனது. பிரமாண்டமான இத்தேர் மரத்தினாலான தேரைப்போல் மிகவும் அழகான சித்திர வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றது.

இக்கற்றேரின் முன்பக்கத்தில் இரு கல்யானைகள் தேரை இழுப்பது போலவும் அல்லது தும்பிக்கைகளை தூக்கியவாறு காவல் புரிவது போலவும் காணப்படுகின்றன. இந்த யானைகள் உயிருள்ளவை போலக் காணப்படுகின்றன. இது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக இருக்கலாம். உண்மையில் யானைகளுக்குப் பதில் இரு குதிரைகள் இருந்திருக்கலாம். ஏனெனில் குதிரையின் வாலும் கால்களும் எச்சங்களாக யானையின் பின்புறத்தே காணப்படுகின்றன. இரு யானைகளினதும் நடுவில் கல்லாலான ஏணி ஒன்று தேரில் ஏறுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 7. நிலத்தின் அடியில் உள்ள சிவாலயம் Under Ground Siva Temple

பிரசன்னா ஆலயம் என்றும் அழைக்கப்படுகின்ற பிரபல்யமான இவ் ஆலயம் நிலத்தின் கீழ் உள்ள சிவாலயமாகும். இதன் சிகரம் நில மட்டத்திலுள்ளதால் இது இவ்வாறு அழைக்கப்படுகிறது. இக்கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், அந்தராளம், மகாமண்டபம் போன்ற பிரதான மண்டபங்களைக் கொண்டது.

### மகாமண்டபம்

தூண்களை உடைய பிரகாரத்தை உடையது. தூண்களையுடைய மகாமண்டபத்தோடு இணைந்துள்ளது. இது முற்பகுதியில் உள்ள முன்மண்படத்தோடு உள்ளது. முன்மண்டபத்தில் கொடித்தம்பம் உள்ளது. இதில் உள்ள தூண்கள் வேலைப்பாடின்றி உள்ளன. கல்வெட்டின்படி கிருஷ்ண தேவராயன் தன்னுடைய பெற்றோராகிய நரசநாயக்க (Narsa Nayaka) நாகஜி தேவி (Naggaji Devi) ஆகியோரின் முக்திக்காவும், இந்த ஆலயத்தில் வணங்கி பூசை நடத்துவதற்காகவும், தானங்களை செய்வதற்காகவும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. என்பது ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சில காலங்களில் இக்கோயிலின் கீழ்ப்பகுதி வெள்ளத்தால் சூழப்பட்டு செல்ல முடியாத நிலையும் இருந்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பட்டாபி ராமர் கோயில்

அச்சுதராயரால் (கி.பி. 1530 – 1542) கட்டப்பட்ட பெரிய கோயிலாகும். இக்கோயில் பிரமாண்டமான அளவினால் பெயர் பெற்றது.

## 9. அச்சுதராயர் கோயில்

ஹம்பியில் காணப்படும் பெரிய கோயில்களுள் இதுவும் ஒன்று. கி.பி.1539இல் கட்டப்பட்டுள்ளது. இதன் கோபுரங்கள் அமைந்த இரட்டைப்பிரகாரம், அம்மன் சந்நிதி, சுற்றுப்பிரகாரங்கள், மண்டபங்கள் விட்டலர் சுவாமி கோயிலைப் போன்று கட்டப்பட்டவை என்றாலும் மிகச்சிறந்த படைப்பான விட்டலர் கோயிலுடன் இதனை ஒப்பிட முடியாது. எனினும் இக்கோயில் தூண்களின் அழகையும், அற்புதமான சிற்பங்களையும் போற்றாமல் இருக்க முடியாது.

துங்கபத்திரா நதியினுடைய குறுகிய கால்வாய் பகுதி கோயிலின் மேல் மட்டத்தில் உள்ள சமமான தளத்தில் ஓடி கோயிலின் மடைப்பள்ளிக்குள் இறங்கி இறுதியாக வெளியில் உள்ள முற்றத்தின் ஊடாக வெளியேறுகின்றது.

## 10. கோதண்ட ராமன் கோயில் (Kodandarama Temple)

விருபாக்ஷர் கோயிலுக்கு இட்டுச் செல்கின்ற வழியின் இறுதியில் உள்ளது. இது புனித நகரத்தின் மத்தியில் உள்ள கோயிலாகும். (படம் – 7) இராமர் சுக்கிரீவனுக்கு முடி சூட்டிய இடமே இக்கோயில் என்பார். இராமர், இலட்சுமணன், சீதை ஆகியோருடைய உருவங்கள் ஒற்றைக் கற்பாறை ஒன்றில் செதுக்கப்பட்டு கருவறையில் வைக்கப்பட்டுள்ளன. (தற்போது இக்கோயில் பயன்பாட்டில் உள்ளது).

## 11. சுக்கிரீவன் குகை (Sugrivan Cave)

குரங்குகளின் அரசனான சுக்கிரீவனின், இருப்பிடமே இக்குகை என்பார். இது இயற்கையான குகையாகும். இங்கே இராமன் சுக்கிரீவனையும், இக்குகை யாத்திரிகர்களுக்கு வழிகாட்டக் கூடியதாக நிறந்தீட்டப்பட்ட குறியீடுகளை உடையதாக உள்ளது.

## 12. வெற்றி வளாகம் (House of Victory)

ஒரிசா மன்னனை வெற்றி கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்டது. பேயஸ் என்பவர் ஒரிசாவில் கிருஷ்ண தேவராயரின் வெற்றியைத் தொடர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வளாகம் அமைக்கப்பட்டதாகக் கூறுகின்றார். இவ் வெற்றி இல்லம் அழகான அதிஷ்டானத்திற்கிடையே உள்ள அழகான செதுக்கல் வேலைகளைக் கொண்டது. இவ்வாலயத்தில் உள்ள உயர்வான சிம்மாசனத்தில் இருந்துதான் விஜயநகரப் பேரரசன் ஒன்பது நாள் தசரா விழாவினை கண்டு களிப்பார்.

### 13. புரந்தரதாசர் மண்டபம் (Purandra Dasar Mantapa)

கற்றேருக்கு அருகில் புரந்தரதாச மண்டபம் உண்டு. இதுவும் பாதுகாக்கப்பட் வேண்டிய நினைவுச் சின்னமாக பிரகனப்படுத்தப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் ஒரு பகுதி நதிக்குள் உள்ளது. இம் மண்டபம் பெரிய கறுப்புக் கற்களைக் குடைந்து கட்டப்பட்டதாக உள்ளது.

### 14. உயர் அதிகாரிகள் மாளிகை (Noble Men's Palace)

இது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அரச வைத்தியர், உயர்நிலை அதிகாரிகள் தங்கிய இடம் என நம்பப்படுகின்றது.

### 15. அரசு தராசு (King's Balance)

ஹம்பியில் ஆச்சரியப்படத்தக்க விடயங்களை உள்ளடக்கியதான இடங்களில் இதுவும் ஒன்று. இது கற்றூண்களால் செதுக்கப்பட்டுள்ளன. இது துலாபாரஞ் செய்யப்படும் தராசு ஆகும். ஆனால் இன்று உட்கார எடைபோடும் பாத்திரத்தைக் காணவில்லை. அரச எடைக்கேற்ப மறுபக்கம் போடப்பட்ட தானியம், தங்கம், பொன் போன்றவை ஏழைகளுக்குத் தானமாக பகிர்ந்தளிக்கப்பட்டதாக கூறப்படுகின்றனது.

### 16. அரசி குளிக்குமிடம் அல்லது புஷ்கரணி (Queens Bath or Pushkarani)

நீர்த்தடாகம் 50அடி நீளம் 6 அடி அகலம் கொண்ட இத்தடாகம் வளைவான நடைபாதையையும் வெளித்தள்ளப்பட்ட மேல்மாடத்தின் முகப்பினையும் கொண்டது. படிகளோடு கூடிய ராணியின் குளியலறை ராணி ஸ்நானம் செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைப்பு என நம்பப்படுகின்றது. தாமரை வடிவத்தில் அமைந்து செயற்கை ஊற்றுக்களால் ஆனது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. தாமரை மஹால் (Lotus Mahal)

தாமரை பூ வடிவத்தில் அமைந்த சிகரங்களைக் கொண்ட இருமாடிக் கட்டடம் இது. இது கேத்திர கணித ரீதியில் வளைவுகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அரசிகள் வெயில் காலத்தில் கழிப்பதற்காக குளிர்மை பொருந்திய மாளிகையாக அமைக்கப்பட்டுள்ளது. கீழ்தளத்தில் இசைக்கச்சேரிகள் நடாத்துவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் இசைநிகழ்ச்சிகளை அரசவம்ச பெண்கள் மேல் தளத்தில் இருந்து பார்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (படம் – 8)

## 18. யானைப் பந்தி

நீளமான வளைந்து செல்லும் கற்சுவர்களைக் கொண்ட கட்டடமொன்று யானைகளைக் கட்டுமிடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. வட்ட வடிவ கூரைகளைக் கொண்ட ஒவ்வொரு பெரிய வட்ட அறைகளிலும் ஒவ்வொரு யானை அரசாண்டது போலும் (படம் – 9).

## முடிவுரையாக

"ரோம் நகரைக் காட்டிலும் அழகான ஒரு பேரரசின் தலைநகரமாகத் திகழ்ந்த அந்த இடிபாடுகளுக்கிடையே திகைப்பளிக்கக் கூடிய கட்டடங்களின் அழகை ஊகித்துக்கொண்டே....." இவ்வாறு ஹம்பி நகரைக்கண்ட மேலை நாட்டுப் பயணியின் பயண நூலில் இருந்து ஹம்பியின் அழிந்த நகரை நினைத்துப் பார்க்க முடிகின்றது. அத்துடன் விஜய நகரம் வீழ்ந்த பின்பும், அழிந்த பின்பும் வெற்றி கொண்டிருக்கும் இந்த உன்னத ஹம்பி நகரம் நாம் அனைவரும் சென்று பார்க்க வேண்டியது என்பதை இக்கட்டுரை உணர்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## உசாத்துணை நூல்கள்:


1. Fritz J.M **"New light on Hampi Recent Research at vijayanagara,** Performing Arts mumbai – 2001.
2. **Hampi travel guide** (2003) New Delhi: Good earth publication. Department of Tourism India..
3. Karmarkar, A.P (1947) **Cultural history of Karnataka:** Ancient and medival. OCLC 822/605.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. Macke, Alexandra (2001) **The temple district of vithalapura in John M.**

5. Satyan T.S, **Hampi: The fabled capital of the vijayanagara empire,** Gov of Karnataka, - 1995.

6. சுப்பிரமணியன். ந., **இந்திய வரலாறு நியூ,** செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004

7. பத்மநாதன். சி., **நடனங்களும் ஓவியங்களும்,** இந்துகலாசார திணைக்களம்.

8. ஜான் ஹாக், **இந்திய தரிசனம்** – 2009

## Web Sites

9. Hampi/world Heritage site vijaynagar/ Lotus mahal – Karnataka.com.

10. http!//www.indianetzone.com/42/temples vijayanagara.htm

11. http!//www. Indianetzone.com/sculpture vitthala temple.htm.

12. http!//www.hotelkarnataka.com/html/virupaksha temple.htm.

13. http//www.hampi/ vittala temple.htm


14. http:// en. Wikipedia. Org / wiki / vijayanagar.

15. http:// www. Our Karnataka. Com./

16. http!//www.hampi online.com/ hampi history and tourism.htm




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(படம் – 1)
லட்சுமி நரசிம்மர்



(படம் – 2)
விரூபாக்ஷா கோயில்




(படம் – 3)
ஹஸார ராமர் கோயிற்
புடைப்புச்சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(படம் – 4)
தூண் சிற்பம் – விட்டலர் நாதர் கோயில்



(படம் – 5)
இசைத்தூண் – விட்டல நாதர் கோயில்



(படம் – 6)
கற்தேர் – விட்டலர் நாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(படம் – 7)
கோதண்ட ராமர் கோயில்



(படம் – 8)
தாரை மஹால்



(படம் – 9) யானைப் பந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



oolaham Foundation.
| aavanaham.org



"தென்னிந்தியாவிலே தோன்றி, நிலைபெற்ற இராச்சியங்களில் விஜயநகர இராச்சியம் அளவிலே பெரியது. அது கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பேரரசாகும். அதன் இராசதானி விஜயநகரத்தில் அமைந்திருந்தமையால் இராச்சியமும் அதன் பெயரால் விளங்கியது. வித்யாரண்ய மகரிஷியின் ஆலோசனைப்படி விஜயநகரம் அரண்செய்யப்பட்டு இராசதானியாக அமைக்கப்பட்டது. இந்திய துணைக் கண்டத்திலே விந்தியமலைக்குத் தென்பால் அமைந்த நகரகங்களில் விஜயநகரமே மிகப் பெரியது; சாலவுஞ் சிறந்தது. விஜயநகரத்திற்குச் சென்று, அதனை நேரிலே பார்த்து அவதானித்த இத்தாலியர், போர்த்துக்கேயர், அராபியர் முதலான வெளிநாட்டவர்கள் அதன் சிறப்புகளை வியந்து பாராட்டியுள்ளனர். கீழைத்தேய உரோமாபுரி என்று அதனை ஐரோப்பியர் சிலர் வர்ணித்துள்ளதை விஜயநகரத்திலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் அரண்மனைகள், அரண்கள், மாளிகைகள், ஆலயங்கள், அங்காடித்தெருக்கள் என்பன வனப்பு மிகுந்த கோலத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தன. நீர்பாசனவசதிகளை ஏற்படுத்துவதற்கும் கோட்டைகளை பலமுடையனவாக நிர்மாணிப்பதற்கும் விஜயநகரராயர்கள் போர்த்துக்கேய பொறியியலாளரின் உதவிகளைப் பெற்றனர். இந்திய மன்னரில் விஜயநகர ராயர்களே முதன்முதலாக ஐரோப்பியருடன் நிலையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியவர்கள். அந்த உறவுகள் வர்த்தக நலன்களையும் பாதுகாப்புத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. அவர்களின் ஆட்சிக் காலத்திலே தென்னிந்தியாவில் உற்பத்தியான பொருட்களிற் கணிசமான பகுதி ஐரோப்பிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகியது."

9 789559 233176

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org